# இந்தியாவின் முதல் விடுதலைப் போர்-1857

(The first war of Indian Independence-1857)

க. மோகன்ராம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த.பா.நி. (க.வெ.) வரிசை எண்—402

# இந்தியாவின்
# முதல் விடுதலைப் போர்—1857

ஆசிரியர்
கா. மோகன்ராம், எம்.ஏ.,
துணைப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
I.A.S., I.P.S. போன்ற அனைத்திந்தியப் பணித்துறைகளுக்கான
முன் தேர்வுப் பயிற்சி நிலையம்,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—January, 1973

T.N.T.B.S. (C.P.) No. 402



# The First War of Indian Independence - 1857

K. MOHANRAM

Price Rs. 9-35

'Published by the Tamil Naud Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
The United Printers,
3/27, Broadway,
Madras-1.

# அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும், அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும், மன நிறைவுந் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்தியாவின் முதல் விடுதலைப் போர் - 1857' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 402 ஆவது வெளியீடாகும். இது வரை 437 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல், மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

# அறிமுகம்

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்—அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன் :
வெந்து தணிந்தது காடு—தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

—பாரதி.

அன்று 1857 மே 10ஆம் நாள் மீரத்தில் மூண்ட அவ் 'வடவைத் தீ'யை அணைக்க இரண்டாண்டுகளாயின. அப் பெரும் புரட்சியின் உண்மை யாது? தன்மை யாது? அங்கு நாம் காண்பது என்ன? கற்பது என்ன? மூன்று நூற்றாண்டுகள் முப்பத்தியோராண்டுகள் இந்தியத் துணைக் கண்டத்தை வென்றுண்ட மொகலாயர் டெல்லி செங்கோட்டையிலிருந்து அகற்றப் பட்ட கதைதான், இப் பெரும் புரட்சி! மராத்தியப் பேரரசை உயிர்ப்பிக்க முயன்ற இறுதி பேஷ்வா நேப்பாளத் 'தேரை'க் காடுகளுக்கு விரட்டப்பட்ட கதைதான், இப் பெரும் புரட்சி! கடல்கள்தோறும் கலங்கள் அனுப்பி, கண்டங்கள்தோறும் படைகள் அனுப்பி, தன் வேலியை நகர்த்திக் கொண்டிருந்த பிரிட்டானியப் பேரரசு அதிர்ச்சி மருத்துவம் பெற்ற கதைதான், இப் பெரும் புரட்சி! இது வேடிக்கையும் வேதனையுங் கலந்த கதை.

ஓதுமின் குரானை! ஊதுமின் சங்கை! உருவுமின் வாளை! எறியுமின் ஈட்டியை! தீன்! தீன்! ஹரஹர மஹாதேவா! என்றெல்லாம் ஆங்கிலேயருக்கெதிராகப் போர்க்குரல் அங்கு ஒலிப்பினும், இந்தியரின் ஒன்றிணைந்த இயக்கமென்று அதைக் கூற முடியாது. அங்கே இழந்ததைப் பறிக்க இந்தியரும், கைப் பற்றியதைக் காப்பாற்ற ஆங்கிலேயரும் போரிடுகின்றனர். தெற்கில் திராவிடனும், கிழக்கில் வங்காளியும் அசையாமல் நிற்க, வடக்கிலிருந்து கூர்க்காவும், மேற்கிலிருந்து சீக்கியனும் ஆங்கிலேயருக்கு ஆதரவாக வருகின்றனர். அங்கே ஏதேதோ காரணங்களுக்காக யார்யாரோ கிளர்ச்சி செய்கின்றனர். அங்கே போர் நெறிகள் புதைக்கப்படும்! தர்மங்கள் மிதிக்கப்படும்

துரோகங்கள் பரிசு பெறும்! தியாகங்கள் மறக்கப்படும்! அங்கே தீர்க்க வேண்டிய கணக்குகள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றைத் தனக்கே உரிய முறையில் ஆங்கிலேயன் தீர்க்கின்றான். ஆங்கிலேயனின் அரச சூழ்ச்சியில் பச்சை மரங்களே (ஐரோப்பிய அரசியல்) பற்றி எரியும்போது, பசையற்ற மரங்கள் (இந்திய அரசியல்) என்ன வாகும்?

கடந்த பல ஆண்டுகளாக இப்பெரும் நிகழ்ச்சி, வெறும் சிப்பாய்க் கலகமா? அல்லது இந்தியாவின் முதல் விடுதலைப் புரட்சியா? என்பதில் கருத்து வேறுபாடுகள் பெருகி விட்டன. ஆங்கிலேயர்—இந்தியர் என்ற இரு வேறு இனங்கள் இங்குப் போரிட்டதாலும், ஆங்கிலேயர் ஆள்பவர்களாகவும், இந்தியர் ஆளப்படுபவர்களாகவும் இருந்ததாலும், பிரிட்டானியப் பேரரசானது, ஆதிக்க மேன்மையில் இருந்ததாலும், நடந்தவற்றைப் புரட்சியில் பங்குபெற்ற இந்தியர்கள் மூலமாக அறியும் வாய்ப்பு மிகக் குறைவாக இருப்பதாலும், சிறுமைக்குள்ளாகியிருந்த இந்தியர்களின் சீற்றத்தாலும் இக் கருத்து முரண்பாடுகள் கூர்மையாயின. எனவே, இப்பெரும் புரட்சியின் உண்மையை அறிய முற்படும் நாம், இன, மத எல்லைகளுக்கப்பால் நிற்க வேண்டும் என்பது இன்றியமையாத ஒன்று.

நூலின் முதல் பகுதியில் புரட்சிக்கு முந்தைய ஒரு நூற்றாண்டு கால வரலாறு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. குறிப்பாக ஆங்கில ஆட்சிக்குப் பலரால், பல தருணங்களில் எதிர்ப்புகள் கொடுக்கப்பட்டன. அரசின் சீர்திருத்த முயற்சிகள் அத்தனையும் இந்தியர்களால் அநீதிகளாகக் கருதப்பட்டன. இவைகளோடு இந்தியச் சிப்பாய்ப் படையின் கட்டுப்பாடு தளர்வதும் ஆகியவற்றைச் சற்று விரிவாகக் கூறியிருக்கிறேன். ஏனெனில், அப்பின்னணியில்தான் புரட்சியின் தொடக்கத்தையும், தன்மையையும் நாம் அறிய முடியும். நூலின் இரண்டாம் பகுதியில் பெருங் கிளர்ச்சியின் நிகழ்ச்சிகள் முடிந்த வரை கோவையுடன் தரப்பட்டுள்ளன. குறுகிய காலத்தில், ஏறத்தாழ ஒரே நேரத்தில், பல்வேறு இடங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதால் காலக் கோவையை விட்டு, அவ்வப்பொழுது கதையில் பின்னோக்கிச் சென்று திரும்புவதைத் தவிர்க்க இயலாது. நிகழ்ச்சிகளின் கோவை விடுபடாமலிருக்க வரைபடத்தில் குறித்துள்ள பல ஊர்களையும், நதிகளையும் ஒன்று விடாமல் பொறுமையுடன் கடந்து செல்லுவதுதான் நலன் பயக்கும்! நூலின் மூன்றும் பகுதியில் புரட்சியின் தன்மைகள் ஆராயப்பட்டுள்ளன. புரட்சி திட்டம், புரட்சித் தலைவர்கள், பங்கு பெற்ற பிற பிரிவினர்,

மத உறவுகள் ஆகியவை இப் பகுதியில் முக்கியமானவை. நூலின் இறுதியில், இது சிப்பாய்க் கலகமா? அல்லது விடுதலைப் போரா? என்பனவற்றை ஆராய்ந்தறிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

பெரும் புரட்சியைப் பற்றி எழுதிய எண்ணிறந்த நூலாசிரியர்களில் கீழ்க்கண்ட சிலர் மட்டும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். புரட்சியின்போது வாழ்ந்த J. W. கே, G. B. மேலெசன் ஆகிய அதிகாரிகள் இருவர் எழுதிய 6 பாகங்களைக் கொண்ட பெரும் நூலே, பிற ஆசிரியர்களுக்கு ஆதார நூலாக இருக்கிறது. எதிர்பார்க்கும் இந்திய வெறுப்புக் காணப்படினும், ஆயிரக்கணக்கான ஆதாரங்கள், நினைவுக் குறிப்புகள், நிகழ்ச்சியில் பங்கு பெற்றவர்களின் வாக்குமூலங்கள், அரசாங்க ஆவணங்கள் ஆகியவற்றைக் கொண்டு எழுதப்பட்ட மாபெரும் நூல் இது என்பதை, நூலின் சுமார் 2,500 பக்கங்களிலுங் காண முடிகிறது. சென்ற நூற்றுண்டின் இறுதியிலும், இந் நூற்றுண்டின் தொடக்கத்திலும் இதைப்பற்றி எழுதியவர்களில் சிறப்பானவர்கள் T. R. E. ஹோம்ஸ், G. W. ஃபாரஸ்ட், சார்லஸ் பால் ஆகியோர் ஆவர். சொல்லழகும், கருத்தாழமும் மிக்க இவ் வரலாற்றறிஞர்களின் நூல்கள், பெருங் கிளர்ச்சியைப் பற்றி அறிய வேண்டும் என்ற வேட்கையைப் பலருக்கும் ஏற்படுத்தின. இதே சமயத்தில்தான் இந்திய விடுதலைப் போர் முழு உருவம் பெற்று விளங்கி வந்தது. விடுதலையை வன்முறையில் அடையத் துடித்த பலருக்குத் தூண்டு கோலாகவும் அமைந்தது. V. D. சாவர்க்கர் இப் பெரும் புரட்சியைப் பற்றி எழுதிய நூல். அது ஐரோப்பாவில் அச்சடிக்கப்பட்டு, இந்தியாவில் இரகசியமாக விநியோகிக்கப்பட்டது. ஏனெனில், '1857 பெரும் புரட்சியை இந்தியாவின் முதல் விடுதலைப் போரென' வருணித்து, ஆங்கில வெறுப்பை அதிகரிக்கும் வகையில் அந்நூல் அமைந்திருந்தது. அந்நூலில் விடுதலை இலட்சியத்திற்கு முரண்பாடான ஆதாரங்கள் பலவற்றை அவர் ஒதுக்கிவிட்டார். ஏனெனில், அவரது காலம் விடுதலை வெறி ஏறத் தொடங்கிய ஒன்று. அவரும் வெள்ளை அரசால் தொடர்ந்து விரட்டப்பட்டவர்.

விடுதலைப் போராட்டஞ் சூடு பிடித்ததும், இப்பெரும் புரட்சியைப் பற்றிக் கருத்து வேறுபாடுகளும் பெருகத் தொடங்கின. அந்நிய ஆதிக்கம், சுதேசி மனப்பான்மை, தன்மானம், இன வெறுப்பு, இந்திய வெறுப்பு, ஏகாதிபத்தியத் திமிர் ஆகியவைகள் 1957 பெரும் புரட்சியின் உண்மையை மறைத்தன. இந்தியர், ஆங்கிலேயர் ஆகிய இரு இனங்களுக்கும் உள்ள உறவு,

விடுதலைக்குப் பின்பு மாறிவிட்டதால், ஒருவர்மேல் ஒருவர்க்கிருந்த கசப்புணர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை ஆகியவை மறைதல் நலம். உணர்ச்சி வசப்படாமல் உண்மையை ஆராய வரலாற்றறிஞர்கள் முன்வருதல் வேண்டும். அண்மையில் (1957–பெரும் புரட்சியின் நூறுவது ஆண்டு) அதைப் பற்றிய இரண்டு பெரும் இந்திய வரலாற்றறிஞர்களின் நூல்கள் வெளிவந்துள்ளன. இந்திய அரசாங்கத்தின் சார்பாக வெளிவந்த சுரேந்திரநாத் சென் அவர்களின் நூலில் பழைய குழப்பங்கள் பலவுந் தெளிவு பெறுகின்றன. R. C. மஜூம்தாரின் நூல் பல ஆணித்தரமான கருத்துகளைக் கொண்டுள்ளது. நுண்மாண் நுழைபுலம் மிக்க இவ்வரலாற்றறிஞர்களின் அரும் நூல்களே என்னுடைய இந்நூலுக்கும் பெருமளவில் பின்னணியாக அமைந்துள்ளன.

ஆசிரியர்

# பத்தொன்பதாம் நூற்றாண்டில் செய்தி - போக்குவரத்துத் தொடர்புகள்

## கப்பல் போக்குவரத்து

1825-இல் முதல் நீராவிக் கப்பல் நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவிற்கு விடப்பட்டது. இங்கிலாந்திலிருந்து கல்கத்தாவிற்கு வந்துசேர, அக்காலத்தில் 113 நாட்களாகும். 1838-இல் செங்கடல் மார்க்கம் மேற்கொள்ளப்பட்டது. பம்பாயி லிருந்து புறப்படுங் கப்பல் செங்கடல் முகத்துவாரம் வரையில் செல்லும். அதன் பிறகு, அலெக்ஸாண்ட்ரியா வரை தரை வழி யாகப் பயணம் தொடரும். அலெக்ஸாண்ட்ரியாவிலிருந்து புறப் படுங் கப்பல், இங்கிலாந்து வரை சென்று தன் பயணத்தை முடிக் கும். இதற்கு முப்பத்தைந்து நாட்களாயின. 1843-க்குப் பிறகு தான் இப் புதிய மார்க்கத்தில் நிலையான போக்குவரத்து ஒன்றை 'பெனின்சுலார் அண்டு ஓரியண்டல் நிறுவனத்தால்' (Peninsular and Oriental Steam Navigation Company) மேற்கொள்ளப் பட்டது. பயணிகளுக்குங் கடிதங்களுக்கு மட்டுமே இது பயன் படுத்தப்பட்டது. சரக்குகளைக்கொண்ட கலன்கள் நன்னம்பிக்கை முனை மார்க்கத்திலேயே சென்றன. (1869-இல் சூயஸ் கால்வாய் திறக்கும்வரை இந்நிலை நீடித்தது.)

## நெடுஞ்சாலைகள்

முக்கிய நகரங்களை இணைக்க நெடுஞ்சாலைகள் அமைக்கும் முயற்சி 1840-க்குப் பின்னரே மேற்கொள்ளப்பட்டது. அதற்கு முன்பு கல்கத்தா டெல்லி பயணம் ஒரு மாத காலமாகும். அலகா பாத் வரையில் அதிகாரிகள் செல்லும் பல்லக்கைக் கூலிகள் சுமந் தனர். அங்கிருந்து கான்பூர் வரையில் பாதை நன்றாக இருந்த தால் வண்டிகளை இழுக்கக் குதிரைகள் பயன்படுத்தப்பட்டன. கான்பூரிலிருந்து டெல்லி வரையில் மீண்டும் கூலிகளே பல்லக் கைச் சுமந்தனர். இக் கூலிகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பு, அஞ்சல்துறையிடமே இருந்தது. கல்கத்தா, டெல்லி, சென்னை, பம்பாய் ஆகிய நகரங்களுக்கு ஆண்டு முழுவதும் அகன்ற நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்ட பின்னர்தான் குதிரை பூட்டிய சாரட்டுகள் பயணத்திற்குப் பயன்படுத்தப்பட்டன.

## இருப்புப் பாதைகள்

1853-இல் மணிக்கு 24 மைல் வேகத்தில் செல்லும் இரயில் பம்பாயிற்கும் தாணுவிற்கும் (71 மைல்) இடையே விடப்பட்டது. பெரும் புரட்சி நடந்த காலத்தில் சுமார் 200 மைல் நீள இருப்புப் பாதை போடப்பட்டிருந்தது. கல்கத்தா இராணிகஞ்ச் 120 மைல்; பம்பாய், கல்யாண் 33 மைல்; சென்னை, அரக்கோணம் 39 மைல்களாகும். (1869-இல் சுமார் 4,000 மைல்களுக்கு இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டன.)

## செய்தித் தொடர்பு

### அஞ்சல்

பெருங் கிளர்ச்சிக்குச் சிலவாண்டுகள் முன்பு வரை தொடர் பயணத்தின் மூலம் மனிதர்களே கடிதங்களைக் கொண்டு சென்றனர். அதுவும் அரசாங்கக் கடிதங்களே பெரும்பாலும் இவ்வாறு கொண்டு செல்லப்பட்டன. பம்பாயிலிருந்து கல்கத்தாவிற்குப் பதினேரு நாட்களும், கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு ஒன்பது நாட்களும் பிடித்தன. 1854-க்குப் பின்பு சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு விரைவும் ஒழுங்குந் தரப்பட்டன. பின்னர் இதைப் பொதுமக்களும் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

### தந்தி

முதன் முதலாக 1854-இல் கல்கத்தாவிலிருந்து ஆக்ரா வரையில் 800 மைல் நீளத்திற்குத் தந்திக் கம்பிகள் இழுக்கப்பட்டன. மறு ஆண்டிலேயே கல்கத்தா, அட்டாக், ஆக்ரா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களை 3,000 மைல்கள் நீளத்தளவு தந்திக் கம்பிகள் இணைத்தன. அரசாங்கம் இவ்வரிய வசதியைப் பெற்றிருந்ததால் உடனுக்குடன் செய்திகளைப் பரிமாறிக் கிளர்ச்சியை அடக்கத் துணை செய்தது. தங்கள் திட்டங்கள், முயற்சிகள் அனைத்தும் பாழானதற்கு இத்தந்தி முறையே காரணம் என்று கருதிய சிப்பாய்கள் இத் தந்தியைத் தங்கள் கழுத்தை 'நெரிக்குங் கம்பி' (strangling wire) என அழைத்தனர்.

# பொருளடக்கம்

## முதற் பகுதி



## இரண்டாம் பகுதி

## மூன்றும் பகுதி

## வரைபடங்கள்

முதற் பகுதி

# 1. ஔரங்கசீப்பிலிருந்து டல்ஹௌசி வரை

1707-ல் ஔரங்கசீப்பின் பிணத்தோடு, அம் மாபெரும் மொகலாயப் பேரரசும் இடுகாட்டிற்கு அடியெடுத்து வைத்து விட்டது! அடுத்த அரை நூற்றாண்டில் எவ்வளவோ மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன. அயோத்தியிலும் (Oudh), வங்காளத்திலும், தக்காணத்திலும் பேரரசின் மாநில ஆளுநர்களாக பணிபுரிந்தவர்கள், மைய ஆட்சியுடன் தங்களைப் பிணைத்த கட்டுகளைத் தளர்த்திக்கொண்டனர். நாதிர் ஷாவின் படை எடுப்பு (1739) மொகலாயரின் முடிவுக்குச் சாவுமணி அடித்து விட்டது! இதற்கிடையில் பல நூற்றாண்டுகளுக்குப் பின் ஓர் இந்துப் பேரரசு மராத்தியரால் உருவாக்கப்பட்டுவிட்டது. மொகலாயப் பேரரசை வெகுவேகமாய் விழுங்கிய மராத்தியர் வலிமைமிக்க, நிலையான ஒரு மைய ஆட்சியை ஏற்படுத்தத் தவறிவிட்டார்கள். இதனால், இந்துஸ்தானத்தின் வாரிசாவதற்கு மராத்தியர் பெற்ற வாய்ப்பை ஆங்கிலேயர் பறித்துக் கொண்டனர். வணிகர்களாக வந்த அவர்கள் தக்காண, வங்காள நவாபுகளின் வாரிசுரிமைப் போட்டிகளில் சிலருக்கு நண்பர்களாகவும், நாளடைவில் அனைவர்க்கும் நடுவர்களாகவும் மாறினர்!

ஆங்கிலேயரின் இவ் வெற்றியில் சில உண்மைகள் வெளிப்பட்டன. முதலாவதாக, ஓர் ஐரோப்பியப் படையின் திறமைக்கும் கட்டுப்பாட்டிற்கும் பெரும் இந்தியப் படைகளால் ஈடு கொடுக்க முடியாது என்பது; இரண்டாவதாக, ஐரோப்பிய வணிக நிறுவனங்கள் இந்தியரைத் தங்கள் படைகளில் சேர்த்துக் கட்டுப்பாட்டையும், பயிற்சியையும் அவர்களுக்கு

அளித்து, அவர்களை வைத்தே இந்திய அரசுகளை முறியடிக்கலாம் என்பது. மூன்றாவதாக, வாரிசுரிமைப் போட்டிகளில் எவர் பக்கமாவது சேர்ந்து வணிக, அரசியல் சலுகைகளை எளிதில் பெற முடியும் என்பது. நல்ல தருணத்தில் இந்திய அரசியலைச் சுவைத்துப் பார்த்த ஆங்கிலேயர் தொடர்ந்து பல வெற்றிகளைப் பெற்றனர். அவர்களின் தொடக்கமே நன்கு அமைந்துவிட்டது. முதல் மூன்று கர்நாடகப் போர்களில் (1746–63) ஆர்க்காட்டு நவாபின் கைகளைப் பிணைத்து, பிரெஞ்சுக்காரர்களைப் பாண்டிச்சேரியில் முடக்கி, தென்னகத்தின் அரசியலில் தாங்கள் ஒதுக்க முடியாதவர்கள் என்பதை நிரூபித்தனர். இச் சமயத்தில் வங்காளத்தினரது அவசர வேண்டுகோளின்படி அங்குச் சென்ற இராபர்ட் கிளைவ் பிளாசிப் போரில் (1757), ஆங்கில ஆட்சிக்கு அடிக்கல் நாட்டினர். ஆங்கிலேயரின் வாணிகத்திற்கும் அரச சூழ்ச்சிக்கும் வங்காளம் செழிப்பான மண்! அடுத்த ஏழே ஆண்டுகளில் மொகலாய மன்னனையும், அயோத்தி நவாபையும் தோற்கடித்து ஆங்கிலேயர் (பக்ஸார் போர்), அங்கே வேரூன்றினர். பின்னர், வங்காளம் ஊட்டிய உரத்தால்தான் இந்தியா முழுவதும் விழுதுவிட்டனர்!


கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் இவ் விரிவாக்கத்தை ஹைதர் அலி எதிர்த்தான். ஆனால், இறுதி இரண்டு மைசூர்ப் போர்களில் (1790–99), திப்புசுல்தான் தோல்விக்குப்பின், தென்னகத்தில் தங்களை எதிர்க்க எவருமில்லை என்பதை அவர்கள் நிலைநாட்டினர். இதைத் தொடர்ந்து வெல்லெஸ்லியின் காலத்தில் (1798-1805), சீரான விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டது. அவருடைய 'துணைப்படைத் திட்டம்' பல மாயங்களைப் புரிந்தது. அதில் சேரும் சுதேசி மன்னர்கள் நிறுவனப் படையொன்றால் பாதுகாக்கப்படுவார்கள். அதற்கான செலவை அவ் வரசர்களே தரவேண்டும்! ஆங்கில நிறுவனத்தின் அனுமதியின்றிப் போரிலும், வெளிநாட்டு உறவிலும் அவ் வரசர்கள் ஈடுபடக்கூடாது. ஆங்கிலேயரின் தலைமையையும், பயிற்சியையும் பெற்ற ஒரு சுதேசிப் படை, ஒரு சுதேசி மன்னனைப் பாதுகாக்கும்; அதுவும் அவனுடைய செலவில்! தன் இச்சைப்படி அம் மன்னன் வெளி உறவு கொள்ளக்கூடாது. இந்த ஆங்கிலச் சூழ்ச்சியில்தான் சுதேசி மன்னர்களின் சிறகுகள் ஒடிக்கப்பட்டன. பேஷ்வாவின் ஆக்ரமிப்பிலிருந்து தப்ப நினைத்த நிஜாம்தான் இத் திட்டத்தில் முதன் முதலில் சேர்ந்தவன் (1798). சில ஆண்டுகளில பேஷ்வாவும் கெய்க்வாரும் சேர்ந்தனர். இவ் வரசர்கள்

ஒருவருக்கொருவர் அஞ்சி, அனைவருமே ஆங்கில நிழலுக்கு ஓடினர். ஒருவனை வைத்து மற்றொருவனை அடக்கி முடிவில் அனைவரையும் கை கட்டி நிற்கச் செய்தனர் ஆங்கிலேயர்!

இத் துணைப்படைத் திட்டத்தின் வழியே, ஆங்கிலேயரின் பிற்கால அரசியலும் அமைந்தது. 1815-ல் கூர்க்காக்களை வென்று, பின் நேப்பாளத்தை நண்பனாக்கிக் கொண்டார்கள். மூன்றும் மராத்தியப் போருக்குப்பின் (1813), பேஷ்வாவிற்கு ஓய்வுப் பணம் அளித்துக் கான்பூருக்கருகில் அமர்த்தினர். குவாலியர் சிந்தியாவும், இந்தூர் ஹோல்காரும், நாக்பூர் போன்ஷ்லேயும் ஆங்கிலப் பாதுகாப்பை நாடிச் சென்றனர். தற்காப்பு, நட்பு, பாதுகாப்பு, ஒத்துழைப்பு என்ற பெயர் களில் இராஜபுத்திர சிற்றரசர்களும் வரிசையாக நின்றனர். ஆம்! பெருமைமிக்க இராஜபுத்திரர்களும் ஆங்கிலேயர் முன் துண்டு இறக்கினர்! போரை எப்பொழுது நிறுத்துவது? என்பதையும் ஆங்கிலேயர் அறிந்திருந்தனர். தோற்கடித்த அரசுகளையெல்லாம் இணைத்துக்கொள்ள அவர்கள் விரும்ப வில்லை. யாருடைய எதிர்ப்பில் தங்களுக்கு ஆபத்து இருக்கிறது என்பதையும் புரிந்திருந்தார்கள். அதனால்தான், தோல்வி பெற்ற பல மன்னர்களைத் தூக்கி நிறுத்தித் தங்களுக்குக் 'கீழ்ப்படிந்த' நண்பர்களாக்கிக் கொண்டனர். ஐம்பத்தேழு பெருங் கிளர்ச்சியின்போதுதான் இக் கொள்கையின் நற்பயன் வெளிப்பட்டது.

சில காலங்களில் அவ் வணிக நிறுவனத்தின் எல்லைகள் விரிவடைந்தன. இரண்டு பர்மியப் போர்களில் (1826, 1852) கிழக்கிலும், இரண்டு சீக்கியப் போர்களில் (1846, 1849) மேற்கி லும் ஆங்கிலக் கரங்கள் நீண்டன. இவ் விரிவாக்கத்திற்குக் காரணமான டல்ஹௌசி (1848–1856) ஒரு முற்போக்குவாதி; வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் எல்லையை நகர்த்த விரும்பிய அவர் நாடிழக்கும் கொள்கையை முழுமையாகச் செயல்படுத் தினர். அக் கொள்கையின்படி ஆங்கிலேயரால் உருவாக்கப் பட்ட, பாதுகாக்கப்பட்ட அரசர்கள் தங்களுக்கு நேர் வாரிசு இல்லாது போனால், இச்சைப்படி தத்தெடுத்த வாரிசுகளை அரியணையில் அமர்த்தக்கூடாது. இவ் வரசர்கள் பல உடன் படிக்கைகளால் ஆங்கில அரசுடன் பிணைக்கப்பட்டிருந்தனர். இந்த நாடிழக்கும் கொள்கையின் சட்ட நுணுக்கங்களையும், தர்ம நியாயங்களையும் நாம் ஆராயத் தேவையில்லை. ஆங்கி லேயரின் நெடுங்கால நட்பு நாடுகள்கூட இதனால் பாதிக்கப் பட்டன! சிவாஜியின் வழியினரால் ஆளப்பட்ட சதாரா

இணைக்கப்பட்டது. மற்றொரு பெரும் மராத்தியக் குலமான போன்ஷ்லேக்களால் ஆளப்பட்ட நாக்பூர் இணைக்கப்பட்டது. சாம்பல்பூர், ஜெய்ப்பூர், பாகத், உதய்பூர், ஜான்சி போன்ற சிறு நாடுகளும் இணைக்கப்பட்டன. இத்துடன் முன்பே தோற்




கடிக்கப்பட்ட, ஆனால், அரச பட்டத்தையும் உதவிப் பணத்தையும் மட்டுமே பெற்று வந்த பேஷ்வா, கர்னாடக நவாப், தஞ்சாவூர் மன்னன் ஆகியோரும் நேர்வாரிசு இல்லாததால் பாதிக்கப்பட்டனர். ஏன்? மொகலாயப் பேரரசனையே இக்கதிக்கு ஆளாக்க டல்ஹௌசி முயன்றார். அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல், எந்த நெறியுமின்றி, எத்தவறும் புரியாத அயோத்தியையும் அநியாயமாக டல்ஹௌசி இணைத்தார். இக்கொள்கையின் தவறு ஒருபுறமிருக்க, அது செயலாக்கப்பட்ட

முறையும் சிறிதுகூடக் கண்ணியமில்லாதது. வாரிசின்றி இறந்த மன்னர்களின் பட்டத்து யானைகளும் புரவிகளுங்கூடச் சந்தையில் ஏலம் போயின. இந்த இழிவைப் பார்ப்பதைவிட அரண்மனையை எரித்துச் சாம்பலாக்கவும் நாக்பூர் அரசகுல மூதாட்டி முன்வந்தாளாம்! தங்கள் மன்னர்களுக்கு இழைக்கப் பட்ட அநீதியை மக்களும் பார்த்தனர்; மனம் குமுறினர். டல்ஹௌசியின் சனிப்பார்வை அடுத்து எங்கு விழுமோ என்று சிற்றரசர்கள் நடுங்கினர்! மலடிகளான அரசிகள் பலர் டல்ஹௌசியின் காலத்தில் விதவைகளானதும் ஒரு வியப்பொற்றுமையே! தத்தெடுக்கவும் வழியின்றி, தங்கள் நாடுகளை ஆங்கிலேயருக்குத் தாரைவார்க்கும் நாளை அனைவரும் அச்சத்துடன் எதிர்பார்த்தனர்!

# 2. ஆங்கில ஆட்சிக்கு எதிர்ப்பு

[அரசியல் காரணங்கள்—பாதுக்காக்கப்பட்ட சுதேசி அரசுகள்—பொருளாதாரக் காரணங்கள்—சமயகாரணங்கள்—பழங்குடிகள்.]

கிழக்கிந்திய நிறுவனம் தன் எல்லைகளை விரிவாக்கிக் கொண்டே, பழைய இந்தியாவையும் மாற்றிக் கொண்டிருந்தது. நிறுவன அரசின் படையும், ஆட்சி முறையும் பலவித எதிர்ப்புகளைப் பல தருணங்களில், பல உருவங்களில் சந்திக்க வேண்டியதாயிற்று. அரசியல், பொருளாதார, சமய காரணங்களுக்காகத் தோன்றிய இவ்வெதிர்ப்புகளைத் தனித்தனியாகப் பார்ப்போம்.

**அரசியல் காரணங்கள்**

**1780**—வாரணாசி மன்னன் செய்த் சிங் ஆங்கிலேயருக்கு ஒழுங்காக நிதியளித்து வந்தான். வாரன் ஹேஸ்டிங்ஸ் பணத்திற்காக அவனைக் கசக்கிப் பிழியத் தொடங்கியதுடன், பணந்தர இயலாத அவனைக் காவலிலும் வைத்தான். தப்பிய செய்த் சிங்கும், அவன் மக்களும் திரெண்டெழுந்தனர். ஹேஸ்டிங்ஸ் தப்பி ஓடினான். இந்தக் கிளர்ச்சி காசியிலிருந்து அயோத்திக்கும், பீஹாருக்கும் பரவியது.

**1799**—அயோத்தியில் நவாப் அஷாபதுல்லா இறந்தபின் வாசீர் அலி என்பவன் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய பிறப்பு இழிந்தது என்றுகூறி அவனுடைய உறவினன் சாதத் அலி, நவாப் பதவிக்கு உரிமை கொண்டாடியபோது வெள்ளையரசு அதை மறுத்துவிட்டது. ஆனால், நவாப் வாசீர் அலியின் சுதந்திரப் போக்கும், செயலும் விரைவில் வெள்ளையருக்கு வெறுப்பை ஏற்படுத்தின. அயோத்தியின் துணைப்படை எண்ணக் கொள்கையை உயர்த்திக்கொள்ள அவனை நெறியாளர் குழுக் கட்டாயப்படுத்தியது. அவன் மறுக்கவே தலைமை

ஆளுநர் சர்ஜான் ஷோர், வாசிர்அலியை நீக்கிவிட்டுத் தங்கள் நிபந்தனைகளுக்கு ஒத்துவந்த சாதத் கானை நவாபாக நியமித்தார். ஒய்வுப் பணமும், ஆதரவாளர்களும் நிறைய அளவில் பெற்றிருந்த வாசிர்அலி காசியில் வாழ்ந்தான். இச் சமயத்தில் காபூல் மன்னன் ஜமன் ஷா இந்தியாவின்மேல் படையெடுக்கப் போகிறானென்றும், அதற்கு வாசிர்அலி இரகசிய உடந்தையாக இருக்கின்றான் என்றும் வெள்ளையரசு நம்பியதால், வாசிர் அலியைக் காசியிலிருந்து கல்கத்தாவிற்கு அகற்றத் தீர்மானித்தது. அதை நிறைவேற்றப் பணிக்கப்பட்ட வாரணாசியின் நிலையர் செர்ரி (Chery) வாசிர் அலியால் கொல்லப்பட்டான். இதைத் தொடர்ந்து வெள்ளையருக்கெதிராக ஒரு கிளர்ச்சி நடந்தது. சில வெள்ளையர்கள் கொல்லப்பட்டனர். அடக்குவதற்கு வெள்ளைத் துருப்புகள் வந்ததும் நேப்பாளத்திற்குத் தப்பியோடிய வாசிர் அலி அங்கிருந்து இராஜபுதனம் சென்றான். ஜெய்ப்பூர் மன்னன் அவனை வெள்ளையரிடம் ஒப்புவித்தான். வாசிர் அலியின் இரகசியக் கடிதங்களிலிருந்து வெள்ளையருக்கெதிராகக் காபூல் மன்னன் ஜமன் ஷா, சிந்தியா, திப்பு சுல்தான் ஆகியோர் ஒன்றிணையச் சூழ்ச்சிச் செய்தனர் என்று நம்பப்படுகிறது. வாசிர்அலிக்கு நல்ல ஆதரவும் இருந்தது. டாக்கா நவாபின் சகோதரன் வாசிர் அலிக்கு ஆதரவு அளித்தான்; வங்காளத்திலும், பீஹாரிலும் பல முக்கியமானவர்கள் வாசிர்அலிக்கு ஆதரவு அளித்தனர்.

1792—திப்பு சுல்தானிடமிருந்து ஆங்கிலேயர் கைப் பற்றிய மலபார் பகுதியிலிருந்த சில சிற்றரசர்கள் சுமார் ஆறு ஆண்டுகள் வரை இவ் வாதிக்கத்தை எதிர்த்தனர். பிச்சே ராஜா (Pyche Raja) என்றழைக்கப்பட்ட கோட்டயத்தைச் சார்ந்த கேரளவர்ம ராஜா பெரும் கிளர்ச்சியிலீடுபட்டான். இவனை அடக்க வெள்ளையர்கள் பல சலுகைகளை அவனுக்கு அளிக்க வேண்டியதாயிற்று.

1798—கஞ்சம் பகுதியில் கிமேதி ஜமீன்தார் வரி கட்டுவதில் குறை ஏற்பட்டதால் ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டான். அவனுடைய கிளர்ச்சியைத் தொடர்ந்து அப் பகுதியில் பெருங் கலவரந் தோன்றியது. மேலும், சில ஜமீன்தார்கள் அப் பகுதியில் பல தருணங்களில் எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

1800—மைசூர் வீழ்ச்சிக்குப்பின் சிதறிய சிப்பாய்களைச் சேர்ந்த துந்தியா வாக் (Dhundia Wagh) என்ற மராத்திய

வீரன் அப் பகுதியிலிருந்து வெள்ளையரை அகற்ற மிகவும் கடின முயற்சி எடுத்தான். ஆர்தர் வெல்லஸ்லி (வெலிங்க்டன் கோமகன்) அவனைத் தோற்கடித்துக் கொன்றான். உரிய தருணத்தில் இது நடந்திராவிட்டால், அவன் மற்றொரு ஹைதர் அலியாக விளங்கியிருப்பான் என்று தோன்றியது.

**1805**—இரண்டாவது மராத்தியப் போருக்குப்பின் ஆங்கிலேயர் அபகரித்த பண்டேல் பகுதியின் சீமான்கள், தங்கள் கோட்டைகளிலிருந்து கொண்டு அந்நிய ஆட்சியை எதிர்த்தார்கள். அஜாய்கர், கலன்ஜார், கில்லேதார்கள் இவ் வெதிர்ப்புக்குத் தலைமை தாங்கினார்கள். அஜாய்கர்த் தலைவன் இலட்சுமண் தாவா தான் சரணடைய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதும், ஆங்கில அதிகாரிகளிடம் தன்னைப் பீரங்கியால் சுட்டுத் தள்ளும்படி கேட்டுக்கொண்டானாம்! கல்கத்தாவிற்கு அவன் கொண்டுசெல்லப்பட்டதும், தன்மானத்தை நிலைநாட்ட அவனுடைய அன்னை, மனைவி, மக்களைக் கொன்றுவிட்டு அவனுடைய மாமாவும் தற்கொலை செய்துகொண்டான். அதே பண்டேல்கண்டில் வெள்ளையராட்சியில் தன் நிலங்களை இழந்த கோபால் சிங் என்பவனும் நான்கு ஆண்டுகள் கடும் எதிர்ப்பைக் கொடுத்தான்.

**1813**—பத்து ஆண்டுகளுக்குமுன் ஷஹாரன்பூர் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இராஜாராம் தயாள் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களை இழந்தான். அங்கிருந்த குஜார் இனத்தார்கள் கிளர்ச்சியிலீடுபட்டனர். அது அப்பொழுது அடக்கப்பட்டாலும், 1842-ல் பிஜாய்சிங் என்ற ராம் தயாளின் உறவினன் மீண்டும் ஒரு பெருங் கலகத்திலீடுபட்டான். அவனுடன் கொள்ளையர் தலைவன் கால்வாவும் சேர்ந்துகொண்டான். கடின முயற்சிக்குப் பின்னரே அவர்கள் அடக்கப்பட்டனர்.

தென்னிந்தியாவில் நாயக்கர் காலத்திலிருந்தே விடுதலை உணர்வுடன் வாழ்ந்து வந்த பாளையக்காரர்கள் வெள்ளை ஆட்சிக்குத் திரமிக்க எதிர்ப்பு அளித்தனர். திருநெல்வேலி, பெல்லாரி, அனந்தப்பூர், கடப்பா, கர்நூல், வடஆர்க்காடு மாவட்டங்களில் இவர்கள் காட்டிய வீரம் ஆங்கில ஆசிரியர்களாலும் புகழப்பட்டிருக்கிறது.

**1819**—வடகொங்கணத்தின் சவன்த்வாடி, ஆங்கிலேய ஆட்சியின் பாதுகாப்பிற்கு வந்தது. 1830; 1832, 1836 ஆகிய ஆண்டுகளில் இங்கு ஏற்பட்ட கிளர்ச்சிகளைத் தொடர்ந்து ஆங்கில அரசு அதன் நிர்வாகம் முழுவதையும் மேற்கொண்டது.

1844-ல் அருகிலிருந்த கோலாப்பூர் நாட்டில் கிளர்ச்சி தோன்றியது. சவன்த்வாடியின் வாரிசுரிமை கொண்ட அன்ன சாகேப் தன் விடுதலையைப் பிரகடனம் செய்து, தன் பகுதியில் வரியும் வசூல் செய்ய ஆரம்பித்தான். விரைவில் இக் கிளர்ச்சியும் அடக்கப்பட்டது. (1858-ல்—வடஇந்தியாவில் பெரும் புரட்சி தோன்றியதும்—அதைப் பயன்படுத்திச் சமன்த்வாடியிலிருந்து கானராவரை எழுச்சி நடந்தது. 1859-ல் அது அடக்கப்பட்டது.)

1824—பீஜப்பூர் மாவட்டத்தில் திவாகர் தீக்ஷீத் என்ற பிராமணன் தன் ஆதரவாளர்களைத் திரட்டி, இப் பகுதிகளைக் கைப்பற்றிச் சில நாள்கள் தன் தனியாட்சியை நிலைநாட்டினான்.

1824—பெல்காம் மாவட்டத்தில் கிட்டூர்த் தலைவன் சிவலிங்க ருத்திரன் இறந்ததும், அவனுடைய வளர்ப்பு மகனை ஆங்கிலேயர் வாரிசாக ஏற்க மறுத்தனர். ஒரு மாபெரும் கிளர்ச்சியில் பல வெள்ளை அதிகாரிகள் கொல்லப்பட்டு, ஆங்கில ஆட்சி அகற்றப்பட்டது. கிட்டூரை விடுதலை அரசாக ஏற்கும்படி அவர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால், அவ் வெழுச்சி அடக்கப்பட்டது. 5 ஆண்டுகளுக்குப்பின் அவ் வளர்ப்பு மகனின் சார்பில் மீண்டும் ஓர் எழுச்சி தோன்றி அடங்கியது.

1826—29—தக்காணத்திலும் மராத்தியத்திலும் பேஷ்வாவின் வீழ்ச்சிக்குப்பின் வேலையிழந்த ரமோசியர் (Ramosis) என்ற காவல் வீரர்கள் பல இடங்களில் கொள்ளையடித்து ஆங்கில ஆட்சிக்குப் பல இடையூறுகளை விளைவித்தனர். 1825-ல் தோன்றிய பஞ்சமும் இதற்குக் காரணமாகும்.

மராத்திய ஆட்சிக் காலத்தில், கோலாப்பூர் பகுதியில் காட்காரிகள் (Gad Karis) என்ற போர்வீரர்கள் தங்களின் படைச் சேவைக்கு நிலங்களைப் பெற்றிருந்தனர். ஆங்கில ஆட்சி தொடங்கியதும் நிலத்தீர்வை முறைகளால் இவர்களும் பாதிக்கப்பட்டதால் வெள்ளை அதிகாரிகளைத் தங்கள் கோட்டைகளில் இருந்துகொண்டு தாக்கினார்கள். அதனுடன் அப் பகுதியில் ஆங்கிலேயருக்கு ஓர் இணையரசையே தோற்றுவித்தனர்.

1833—விசாகப்பட்டினம் மாவட்டத்தில், விஜயநகர ராஜா விஜயராம் ராவ்ஜியின் சிறுபடையையும் மற்றச் சீமான்கள் மேல் அவனுக்கிருந்த செல்வாக்கையும் வெள்ளையரசு அகற்றத் தீர்மானித்தது. அவன் தன் வீரர்களுடன் இதை எதிர்த்து, தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். அவனுடைய மகன்

நாராயண் ராவ்ஜி மீண்டும் ஆயிரக்கணக்கான வீரர்களை ஒன்றுதிரட்டி, தன் சுயாட்சியை அங்கே நிலைப்படுத்தினன். ஆனுல், பின்னர் வெள்ளை அரசுடன் இணக்கமாகிவிட்டான். அதே பகுதியில் 1830-33-ல் வீரபத்ர ராவ்ஜீ என்பவனும், ஜெகநாத் ராவ்ஜி என்பவனும் கிளர்ச்சி செய்தனர். பல் கொண்டா என்ற இடத்திலும் ஒரு பெருங்கலவரம் நடந்தது.

**1840**—நிஜாமின் பகுதியிலிருந்து சில அராபிய வீரர்களைத் திரட்டிய, நரசிம்ம தாத்ரேயன் என்ற பிராமணன் பாதாமி கோட்டையைக் கைப்பற்றி மராத்திய சாஹுவின் கொடியை ஏற்றினன். அதனுடன் ஆங்கில அரசாங்கக் கருவூலத்தைக் கைப்பற்றினன். தன்னை மன்னன் என்று பிரகடனப்படுத்திக் கொண்டான்.

### ஆங்கிலேயரால் பாதுகாக்கப்பட்ட சுதேசி அரசுகளின் எதிர்ப்புகள்

**1804**-ஆங்கிலேயரின் பாதுகாப்புப் பெற்றிருந்த திருவாங் கூர் நாட்டில் அம் மன்னனின் சேவையிலிருந்த சில ஆயிரம் நாயர் வீரர்கள் தங்களுக்களிக்கப்பட்டு வந்த தினப்படி குறைக் கப்பட்டதால், அவர்கள் நாட்டில் ஆங்கிலேயர்களின் தலையீட்டை எதிர்த்துக் கிளர்ச்சிச் செய்தனர்.

**1808**-திருவாங்கூர் திவான் வேலுத்தம்பி தளவாய் 20,000 படை வீரர்களைக்கொண்டு வெள்ளையரின் ஊடுருவலையும், செல்வாக்கையும் அங்கிருந்து அகற்றப் போரிட்டான். கொல் லத்திற்கும், கொச்சிக்கும் தன் படையைச் செலுத்தினன். திருவாங்கூர் சரணடைந்தாலும், வேலுத்தம்பி பணியவில்லை. எங்கெங்கோ துரத்தப்பட்டு இறுதியில் ஓர் கோயிலில் அவன் தற்கொலை செய்துகொண்டான்.

பரோடா கெய்க்வாரிடம் மேற்கொண்டிருந்த ஒப்பந்தப் படி, ஆங்கிலேயர் கட்ச் விவகாரத்தில் தலையிட்டபோது, கத்தியவார் எங்கும் வெள்ளையருக்கெதிராக எதிர்ப்புகள் தோன்றின. இரண்டாவது இராவ் பார்மால் என்பவன் தன் னுடைய அராபியத் துருப்புகளைக்கொண்டு எதிர்த்துப் போராடித் தோற்ருன்.

### பொருளாதாரப் பின்னணியில் தோன்றிய கிளர்ச்சிகள்

எதிர்ப்புகளில் அதிகமானவை பொருளாதாரக் காரணங் களுக்காக ஏற்பட்டவை தாம். அதிக நிலத்தீர்வை, நிலக் கிழார்கள் நிலங்களைப் புதுச் சட்டங்களுக்குக்கீழ் விற்க

வேண்டிய நிலை, அரசாங்கம் நிலங்களை ஏற்றுக்கொள்ளல் ஆகியவை முக்கியக் காரணங்களாகும்.

1770—வங்காளத்தில் ஆங்கில ஆட்சியின் தொடக்கத்திலேயே ஜமீன்தார்கள் எதிர்த்தனர். ஜகநாத் தாஸ் என்ற ஜமீன்தார் சௌர்கள் என்ற பழங்குடிகளைச் சேர்த்துத் தன் பகுதியில் வெள்ளையரை உள்ளே வரவிடாமல் தடுத்தான். பல முயற்சிகளுக்குப் பின் பல உயிர்களையிழந்து இறுதியில் வெள்ளையர் அவனை அரசனாக அப் பகுதிக்கு ஏற்றுர்கள்.

1783—வாரன் ஹேஸ்டிங்சின் கொடூரப்பிடியில் சிக்கிய தேவி சிங்கின் சார்பில் ரங்பூர் விவசாயிகள் வெள்ளையரை எதிர்த்தனர்.

1783—திருநெல்வேலி மாவட்டத்தில் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரன் கட்டபொம்மன், ஆங்கிலேயருக்கு வரி செலுத்த மறுத்துக் கலகத்திலீடுபட்டான். 1783 ஆகஸ்டு மாதம் கர்னல் ஃபுல்லார்டன் (Col. Fullarton) கடும் முயற்சிக்குப் பின் அக் கோட்டையைக் கைப்பற்றினுன். அங்கே ஏராளமான துப்பாக்கிகளும், கருமருந்தும் கைப்பற்றப்பட்டன. அதன் பின் சிவகங்கைப் பாளையக்காரர்களை மிகுந்த எதிர்ப்புக்குப் பின் ஃபுல்லார்டன் அடக்கினுன்.

1789—வரி வசூல் கொடுமையின் காரணமாக விஷ்ணுபூர் மக்களால் வெள்ளையாட்சி சில காலம் அகற்றப்பட்டது.

1799—வங்காள எல்லைகளில் வாழ்ந்த அந்த சௌர்கள் இம்முறை பயங்கரமான கலகத்தில் இறங்கினுர்கள். மதாப் சிங் (பாராபூம் ராஜாவின் சகோதரன்) சௌர்களுக்குத் தலைமை தாங்கினுன். ஜீரையா ஜமீன்தார் மோகன் சிங், துல்மாத் தலைவன் இலட்சுமண் சிங் ஆகியோர் தீரத்துடன் வெள்ளையரை எதிர்த்தனர்.

1802—அதிக நிலத் தீர்வையின் காரணமாக மலபாரில் எடச்சன்ன குங்கன் என்பவனின் தலைமையில் கலகக்காரர்கள் கொடூரத்தில் ஈடுபட்டனர். வயநாடு மாவட்டத்தில் பனமாரம் கோட்டையை அவர்கள் பிடித்தனர். வெள்ளைத் துருப்புகளுக்கு எதிராக அப் பகுதியில் பல இடங்களில் கலகக்காரர்கள் ஆயுதம் ஏந்தினர்.

1816—ரோகில்கண்ட் பகுதியிலிருக்கும் பெரெய்லியில் மஃப்டி மொகமது அய்வாஸ் (Mufti Mhommad Aiwaz) என்ற

முகமதிய மகானின் தலைமையில் பெருங் கலவரந் தோன்றியது. ஏற்கெனவே நிலவிய வரிக்கொடுமைகளுடன், ஊர்க்காவலுக்காக விதிக்கப்பட்ட ஒரு வரியை எதிர்த்து இது தோன்றியது. முகமதிய மக்களின் அன்புக்கும் பக்திக்கும் உரிய இம் மகானின் கீழ் அவர்கள் திரண்டெழுந்தனர். அம் மகானுக்கேற்பட்ட சிறு காயம் வெள்ளை எதிர்ப்பை மேலும் கடுமையாக்கியது. இதைத் தொடர்ந்து பிலிபித், ஷாஜகான்பூர், ராம்பூர் ஆகிய ஊர்கள் கொந்தளித்தன. வெள்ளைத் துருப்புகள், 300 பேரைக் கொன்று இக் கிளர்ச்சியை அடக்கினர்.

**1817**—அலிகார் பகுதியிலிருந்த ஜமீந்தார்கள் தங்கள் நலனைக் காக்க, தயாரம் என்ற தாலுக்தாரனின்கீழ்த் திரண்டெழுந்தனர். தங்கள் மாளிகைகளைக் கோட்டைகளாக்கி, பதிக் (Badhiks)), மேவாட்டி போன்ற கொள்ளைக்காரர்களை உடன் வைத்துக்கொண்டு வெள்ளையரை அவ்வப்போது எதிர்த்து வந்தனர்.

**1817**—ஒரிசாவில் குர்தா சிற்றரசன் மக்களின் பக்திக்குரியவன். அவனுடைய படையில் சேவை புரியும் 'பைக்குகள்' (Paiks) மன்னனின் நிலத்தை உழுதும் வாழ்ந்தார்கள். வெள்ளை ஆட்சிக்குப்பின் உயர்ந்த நிலத்தீர்வை முறையினால் பாதிக்கப்பட்டனர். அங்குள்ள ஜமீந்தார்கள், ஆங்கிலேயருக்கு எதிராகச் சூழ்ச்சியில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குர்தா ராஜாவின் நிலங்கள் பறிக்கப்பட்டன. நிலத்தை இழந்த 'பைக்'குகள், தங்கள் முன்னாள் தளபதியான ஜெகபந்து வித்யாதர் என்பவரின்கீழ் வெள்ளையருக்கு எதிராகப் போராடினர். இப் பெருங் கிளர்ச்சியில் வெள்ளை அதிகாரிகள் ஓடி உயிர்தப்பினர். வெள்ளை ஆட்சி சில காலம் அங்கே மறைந்தது.

**1842**—பண்டேல்கண்ட் சாகர் நிலக்கிழார்களும் கிளர்ச்சி செய்தனர்.

**1852**—காண்டேஷ் பகுதியில் எரன்தால் குடியானவர்களும், பொதுமக்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்தனர். அதிகாரிகளைச் சிறைபிடித்தனர். அஞ்சல் பைகளை வழிமறித்துப் பறித்தனர். தங்கள் வண்டிகளை அரசாங்க உபயோகத்திற்குத் தர மறுத்தனர். வெள்ளையருக்குப் போட்டியாக ஓர் இணையரசே அங்கே உருவாக்கப்பட்டது. வரி வசூல், நிர்வாகம், நீதித்துறை அத்தனையும் சில காலம் செயல்பட்டது.

**சமய காரணங்களுக்காகத் தோன்றிய கிளர்ச்சிகள்**

வங்காளத்தில் ஆங்கில ஆட்சி வேரூன்றத் தொடங்கிய திலிருந்தே 'சந்நியாசி'களின் எதிர்ப்பும் உருவாயிற்று. இந்து சந்நியாசிகளும், முஸ்லிம் பக்கிரிகளும் 1763-ல் இருந்து வங்காளத்தில் அவ்வப்பொழுது ஊடுருவி வந்தார்கள். செல்வாக்கு இழந்த நிலக்கிழார்களும், பணியிலிருந்து நீக்கப்பட்ட வீரர்களும், பட்டினி கிடக்கும் குடியானவர்களும் இவர்களுக்கு ஆதரவாக நின்று இலாபந் தேட முற்பட்டனர். 1770-ல் தோன்றிய கடும் பஞ்சத்திற்குப்பின் இந்தச் சந்நியாசிகளின் கூட்டத்தில் ஆயிரக் கணக்கானோர் சேர்ந்தனர். வங்காளத்தின் மேற்குப் பகுதியிலும் பீஹாரிலும் வெள்ளைத் துருப்புகளுக்கு இச் சந்நியாசிகள் சரியான எதிர்ப்புக் கொடுத்து வந்தார்கள். சந்நியாசிகளின் கிளர்ச்சி நாளடைவில் அடக்கப் பட்டதால், பின்னர் மராத்தியருடன் சேர்ந்து இவர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்தனர் என்று தெரிகிறது. சமயத்தின் போர்வையில் பிற குறைகளும் இக் கிளர்ச்சிக்குக் காரணமாயிருந்தன.

1804-ல் ஷரியத்துல்லா என்பவனால் ஃபரய்தி (Faraidi) என்ற சமயப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. நாளடைவில் அரசியல் இலட்சியத்தை இது கருக்கொண்டது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குக்கீழ் உள்ள பகுதியைத் தார்-உல்-ஹார்ப் (Dar-ul-harb) என்று இவ் வியக்கம் அறிவித்தது. அதாவது, அப் பகுதிகளில் ஒரு முகமதியன் வாழ்வது கூடாது; வாழத் தகுதியற்றது என்று பொருள். ஷரியத்துல்லாவின் மகன் தூதுமியான் (Dudhumian), இந்த ஃபரய்தி இயக்கத்தை முழு அரசியல் இயக்கமாக்கினான். கிழக்கு வங்காளத்தில் ஜமீன் தார்கள் பிடியில் அகப்பட்டுத் தத்தளித்த குடியானவர்களை அவன் ஒன்றுசேர்த்தான். 1838-ல் இவ் வியக்கம் கிளர்ச்சியில் ஈடுபடத் தொடங்கியதும் டாக்காவிலிருந்த ஆங்கிலத் துருப்புகள் இதை அடக்கச் சென்றன. ஆங்கிலேயரை வெளியேற்றுவதுடன், முகம்மதிய ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவதே இதன் குறிக்கோள் என்று தோன்றியதால் இந்துக்கள் இக் கிளர்ச்சியில் அதிக ஆர்வஞ் செலுத்தியிருக்கமாட்டார்கள்.

அராபிய வஹாபி மதப் பிரிவு, சையத் அஹமத் என்பவனால் 1820-ல் பெரெய்லியிலும் தொடங்கப்பட்டது. தீவிர முகமதியப் பிரிவான இவ் வஹாபி இயக்கம் வெகுவிரைவில் பல இடங்களுக்கும் பரவி, பின் மதச் சீர்திருத்தத்திலிருந்து அரசியல் இலட்சியத்திற்கு மாறிக்கொண்டது. இந்தியாவின் வடமேற்கு

எல்லை மாநிலத்தில் சித்தானு என்ற இடத்தைத் தலைமையக மாகக் கொண்டு வெள்ளையரை வெளியேற்ற அறிக்கைகளை வெளியிட்டது. 1827-ல் சையத் அஹமத் சீக்கியருக்கெதிராகத் தன் இயக்கத்தைத் திருப்பினான். பின்னர், சீக்கியரைத் தோற்கடித்த வெள்ளையரால் மேலும் இவ் வியக்கம் பரவியது. 1850-லிருந்து இவ் வஹாபியரை அடக்க ஆங்கிலேயர் பலமுறை படைகளை அனுப்பினர். இவ் வியக்கம் மிகத் திறமையான நிர்வாகத்தையும் பெற்றிருந்தது. 1857–பெரும் புரட்சியில் பாட்னாவிலிருந்த சில வஹாபியர்கள் ஓரளவு பங்கு கொண்டனர் என்பது உண்மையென்றாலும், பொதுவாக இப் பெரும் ஆங்கில எதிர்ப்புப் பிரிவான வஹாபியர் தம் முழு ஆதரவை அமைதியாகவே புரட்சிக்கு அளிக்கவில்லை. புரட்சிக்கு இவர்கள் முழு ஆதரவு அளித்திருந்தால், வடமேற்கு வெள்ளையருக்குப் பெருந்துன்பம் விளைவித்துக் கவனத்தை ஈர்த்திருக்கலாம். பெரும் புரட்சிக்குச் சில ஆண்டுகளுக்குப் பின் இதே பகுதியில் புரட்சி செய்த அவர்கள் அச் சமயத்தில் புரட்சிக்கு ஆதரவு ஏன் அளிக்கவில்லை? வஹாபியர் ஒரு முழு முகமதிய எழுச்சியைத்தான் ஆதரிப்பார்கள்; இந்துக்களுடன் சேர்ந்து செயலாற்ற விரும்பமாட்டார்கள். இதன் காரணமாக இருந்திருக்கலாம்.

1831–வங்காளத்தில் தித்து மீர் (Titu Mir) என்ற வஹாபியர் தலைவன் இந்துக்களைக் கொடுமைப்படுத்தினான். ஆங்கிலேயருக்கு அங்கே ஆட்சி செய்ய உரிமையில்லை என்று பிரகடனப்படுத்திப் போரிட முன் வந்தான். 1831-ல் அவன் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான்.

1810-ல் சூரத்தில் அப்துல்ரஹ்மான் என்பவனும், 1799-ல் சில் ஹெறத்தில் ஆகா முஹமத் ரெஸா என்பவனும் இந்துக்களுக் கெதிராகவும், ஆங்கிலேயருக் கெதிராகவும் கலகம் செய்தனர்.

### பழங்குடிகளின் எதிர்ப்பு

நினைவிற் கப்பாற்பட்ட காலந்தொட்டுச் சுதந்திரமாக வாழ்ந்துவரும் பழங்குடி மக்கள் ஆங்கிலேயரின் ஊடுருவல்களை அவ்வப்பொழுது எதிர்த்து வந்தனர். இவர்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டபொழுதும், ஆங்கிலச் சட்டங்களுக்கு அவர் கள் உட்படுத்தப்பட்டபோதும் கிளர்ந்தெழுந்தனர்.

1783–89 காசிக்கள் (Khasis) என்ற மலைவாசிகள் கலகம் செய்தனர். அஸ்ஸாம் பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றிய

சமயம் இவர்களின் கொடூரம் இன்னும் அதிகமாகியது எல்லைப் புறத்திலிருந்த ஊர்களில் புகுந்து காவல் நிலையங்களைக் கைப்பற்றுவதும், தங்களை அடக்கவரும் ஆங்கிலேயர்களைக் கொல்லுவதும் இவர்களுக்கு மிகச் சாதாரணம்.

காண்டேஷ் பகுதி 'பில்'கள் (Bhils)—(1818—19, 20, 31, 46) கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

**1820**–இராஜபுதனத்தில் மெய்ர்கள் நீண்ட நாள் ஆங்கிலேயரை எதிர்த்தனர்—1820-ல் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது.

**1820**—சிங்பும் பகுதியில் கோல் இனத்தவர் ஆங்கிலேயரை மட்டுமன்றிப் பிற இந்தியக் கிராமவாசிகளையுங் கொன்றார்கள்.

**1824**—ஹரியானாவிலிருந்த 'ஜாத்'கள் 1809-ல் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தனர். 1824-ல் மீண்டும் ஒரு முறை ஜாத், மேவாட்தி, பாத்தி (Bathis) ஆகியோர் ஒன்றுசேர்ந்து அரசாங்க உடைமைகளை அழித்தனர்.

மேற்கு மலைகளுக்கும் கட்ச் எல்லைக்கும் இடையிலிருந்த 'கோலி'க்கள் (Kolis) 1824-ல் கிளர்ச்சி செய்தனர். பேஷ்வாவின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட மூன்று பிராமணர்கள் இவ் வாதிவாசிகளைப் பயன்படுத்தி வெள்ளையருக்கு எதிர்ப்புக் கொடுத்தனர். இந்த கோலிக்கள் 1844-ல் ஒரு முறை கிளர்ச்சிச் செய்தனர்.

**1846**-ஒரிஸ்ஸாவில் 'கோண்டு'கள், அவர்களிடம் நிலவி வந்த மனித உயிர்ப் பலி, பெண் குழந்தைக் கொலை ஆகிய பழக்க வழக்கங்களைத் தடைசெய்ய ஆங்கிலேயர் முற்பட்டபோது, எதிர்ப்பில் ஈடுபட்டனர். இரண்டாண்டுகள் கடுமையான எதிர்ப்புக் கொடுத்துப் பின்னரே அடங்கினார்கள்.

நிரந்தர நிலத்தீர்வைக்குப் பின் (permanent settlement) ஜமீன்தார்கள் விவசாயிகளை நெருக்கத் தொடங்கியதால் 'சந்தாலர்கள்' தங்கள் கிராமங்களைவிட்டுப் பெயர்ந்து ராஜ் மஹால் மலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடியேறினார்கள். அதிக வட்டிக்குப் பணம் கொடுத்து அவர்களைக் கடன்காரர்கள் பிழிந்தார்கள். ஆங்கிலேயர்கள் அவர்களைப் பல சிறுமைகளுக் குள்ளாக்கினார்கள். குறிப்பாக அவ்வப்பொழுது சந்தால இளம் பெண்களை ஆங்கிலேயர்கள் கெடுத்து வந்தது அவர்களுக்குப் பெரும் அவமானமாக இருந்தது. இதற்கெல்லாம் முடிவுகட்ட

சிந்து, கன்ஹு என்ற இரு சகோதரர்களின் தலைமையில் 10,000 சந்தாலர்கள் 1755-ல் ஒன்றுதிரண்டனர். விரைவில் ஆயிரக் கணக்கானோர் ஒன்றுசேர்ந்து பாகல்பூர், ராஜ்மஹால் பகுதியிலுள்ள அஞ்சல், இரயில் தொடர்புகளைத் துண்டித்தனர். பல வெள்ளையரைக் கொன்றனர். தங்கள் பகுதியைச் சுதந்திரமாக்கிக் கொண்டார்கள். ஆங்கில இராணுவம் பல முயற்சிகளை எடுத்தது. பல உயிர்களையிழந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அவர்களை அடக்கியது. கைது செய்யப்பட்ட ஆயிரக் கணக்கான சந்தாலர்களை மிகக் கொடூரமாக ஆங்கிலேயர் சித்ரவதை செய்தனர்.

ஆங்கிலேயர் சந்தித்த இவ் வெதிர்ப்புகள் அனைத்தும் ஒரே காரணத்தின் விளைவுகளால் உண்டாயின என்பதை அறிந்தோம். அவர்களின் ஊடுருவலால் இந்தியாவின் பல்வேறு துறைகளும், பல்வேறு வர்க்கங்களும் வெவ்வேறு அளவுகளில் பாதிக்கப்பட்டன. அப் பின்னணியை விரிவாக அறிவது நம் அடுத்த பணி.

# 3. சீர்திருத்தங்கள்? அநீதிகள்?

[ஐரோப்பிய புதுமைகள்—இந்திய எதிர்ப்பு—ஆங்கில மொழி—மேலைக்கல்வி—சிதை ஏறல்—விதவை மறுமணம்—பெண் சிசுக்கொலை—கிறித்துவமத ஊடுருவல்—மதமாற்றம்—ஆள்வோர், ஆளப்படுவோர் பிரிவு—ஆங்கிலச் சட்டம்—பொருளாதாரக் குறைகள்.]

பத்தொன்பதாம் நூற்றூண்டின் தொடக்கத்திலிருந்து தான் ஆங்கிலேயரின் ஆட்சி விழதுவிடத் தொடங்கியது. 50 ஆண்டுகளில் பெரும் மாறுதல்கள் தோன்றி 1857 புரட்சியைத் தோற்றுவித்தன. எல்லைகள் விரிவாயின; இந்தியர்களின் பதவிகள் பறிபோயின; இந்து முஸ்லீம் போட்டியில் முடிவு தெரிவதற்குள் கிறித்துவம் நுழைந்து விட்டது! அரசுகள் மாறுவது இந்துக்களுக்குப் பழகிப்போன ஒன்று. வங்காளத்தைப் பொருத்தவரையில் பல நூற்றூண்டுகளாக முஸ்லீம்களுக்குக் கீழிருந்த இந்துக்கள், வெள்ளையர் வருகையைப் பெரிதுபடுத்தவில்லை. அங்கே ஆட்சி இந்துக்களிடமிருந்து பறிக்கப்படவில்லை. முஸ்லீம்களிடமிருந்துதான் பறிக்கப்பட்டது. இங்கிலையில் அரசியல் அதிகாரங்கள் ஆங்கிலேயரிடங் குவிந்தது கண்டு இந்துக்களைவிட முஸ்லீம்களே பொருமினுர்கள். சிறிது காலத்தில் இரு மதத்தினரும் ஆங்கிலேயனின் உயர்வையும், ஆட்சியையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. ஐரோப்பியர்கள் வாணிபத்தை மட்டும் மேற்கொண்டு, அதைக் காப்பாற்ற மட்டும் (படைபலத்தைக் கொண்டு) ஆட்சிச் செய்திருந்தால் விளைவுகள் வேறுவிதமாயிருந்திருக்கும். திட்டமிடப்படாத விரிவாக்கந்தான் பிரிட்டானிய இந்தியப் பேரரசு, உபகண்டச் சூழ்நிலைகள், ஐரோப்பியரின் சூழ்ச்சிக்கும், துப்பாக்கிக்கும் இடமளித்து, பின்ஞெரு பேரரசையும் அளித்தது!

ஃபிரஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து (1789) இதே நூற்றூண்டில் ஐரோப்பாவிலும் சமுதாய எழுச்சித் தோன்றியது.

மனித சுதந்திரம் பாராளுமன்றங்களிலும், போர்க்களங்களிலும் பெறப்பட்டது. அறிவியல் புரட்சியின் (Scienctific Revolution) பலன்கள் கைமேல் கிடைத்தன. இதனுலெல்லாம், தங்கள் நாகரீகமே உயர்ந்ததென்று ஐரோப்பியர் கருதத் தொடங்கினர். வேறுபட்டப் பண்பாடெனினும், பொறுத்துக் கொள்ளும் அளவில் இந்தியரின் பழக்கங்கள் சில அமைந்திருக்கவில்லை. அறிவும், மனிதாபிமானமுமிக்க எவரும் ஏற்றுக் கொள்ள முடியாத கொடுமைகள் சில இங்கே நிரம்பியிருந்தன. இந்து மன்னர்களோ, முஸ்லீம் ஆட்சியோ இக் கொடுமைகளை நீக்கவில்லை. மாறுக, மதத்தின் பெயரால் அனுமதிக்கப்பட்டும், ஆதரிக்கப்பட்டும் வந்தன. இச் சமுதாயக் கொடுமைகளை நீக்கவும், தான் பெற்றிருந்த நன்மைகளைப் பங்கிட்டுக் கொள்ளவும் ஆங்கில ஆட்சி முயன்றது. சில முற்போக்கு இந்துக்களும் இதை ஆதரித்தனர். புகுத்தப்படும் புதுமைகள், தம் ஆட்சிக்குப் பலத்தைத் தரும் என்ற சுயநலம் ஆங்கிலேயரிடம் இல்லாமல் இல்லை. இருப்பதில் தவறெதுவுமில்லை! நல்லெண்ணத்தால் புகுத்தப்பட்ட அவற்றை இந்தியர்கள் தவறுக எடுப்பதிலும் வியப்பில்லை! இந்து, முஸ்லீம் போர்கள் இருவரின் மத்தியிலும் மதப்பற்றைக் கூர்மையாக்கியிருந்தன. பன்னெடுங்காலம் அனுபவித்த உரிமைகளும், பாதுகாப்பும் ஆங்கிலேயரின் சீர்திருத்தங்களால் பறிக்கப்படும் என்று பயந்த பழமை வாதிகள் இவற்றை எதிர்த்தனர். நல்லெண்ணத்தில் இவை மேற்கொள்ளப்படவில்லை என்று இந்து, முஸ்லீம் பழமைவாதிகள் நம்பியதற்குக் காரணம் 1813-க்குப்பின் பெருகிய கிறித்துவ மதப்பிரச்சாரமே. அதற்குமுன் ஆங்கில ஆட்சி மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களையும், மேலைக்கல்விப் புகுத்தப்படுவதையும் பார்ப்போம்.

### (அ) ஆங்கில மொழியும்—மேலைக் கல்வியும்

இந்திய வாள்கொண்டு பிரிட்டானிய இந்தியப் பேரரசு உருவாக்கப்பட்டதென்றுல், ஆங்கில கல்வி கொண்டு இந்தியர் விடுதலைப் பெற்றனர் என்று கூறுவது மிகையாகாது. இந்தியரின் எழுச்சி 19-ஆம் நூற்ருண்டில் தோன்றியதற்கு முழுமுதற் காரணம் ஆங்கிலக் கல்வியும், மேற்கிந்தியக் கருத்துகளும், கலாச்சாரமுமே ஆகும். 18ஆம் நூற்ருண்டிலே நிர்வாகம், வாணிகம் ஆகியவற்றிற்காக இந்தியர்கள் சிலர் ஆங்கில மொழியைக் கற்றனர் என்பது உண்மை. ஆனுல், 19ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் அம் மொழியைக் கற்கவேண்டும் என்ற ஆவல் வங்காள இந்துக்களுக்கு

ஏற்பட்டு விட்டது. இதன் விளைவாக 1817-ல் கல்கத்தா பள்ளி நூற் கழகம் (C. S. B. S.) ஒன்றும், இந்து கல்லூரி ஒன்றுந் துவக்கப்பட்டது. 1835-ல் கல்கத்தாவில் மட்டும் 25 பள்ளிகள் தனிப்பட்டவர்கள் முயற்சியாலும், ஆங்கிலேயரின் ஒத்துழைப்பால் ஒரு சிலவுந் தோன்றின. கிறித்துவப் பிரச்சாரகர்களாலும் சில பள்ளிகள் தொடங்கப்பட்டன. இப் பள்ளிகளில் ஆங்கில இலக்கண இலக்கியங்களைத் தவிர பிற அறிவியல்களும், கலையியல்களும் கற்பிக்கப்பட்டன.

தங்களுடைய நிர்வாகத்திற்குத் தேவையான எழுத்தர்களை உருவாக்க ஆங்கிலேயர்கள்—தான் ஆங்கில மொழியை இந்தியாவில் புகுத்தினர்கள் என்ற தவறான கருத்து நிலவுகிறது. சுதந்திரக் கருத்துகள், புது அறிவு, கலைகள் வளர வேண்டும், அதனால், நாட்டின் மூடப்பழக்கங்கள் அழிய வேண்டும் என்று இந்தியர்களில் சிலர் விரும்பினர். கல்கத்தாவில் பிஷப் ஹீபர் (Bishop Heber) மூலமாகத் தலைமை-ஆளுநர் ஆம்ஹெர்ஸ்ட் (Amherst) பிரபுவிற்கு, ராம்மோகன் ராய் 1823-ல் அனுப்பிய வேண்டுகோள் ஒன்று குறிப்பிடத்தகுந்தது. நிறுவன அரசு இந்து பண்டிதர்களைக் கொண்டு ஒரு வடமொழிப் பள்ளியைத் தொடங்க நினைத்தபோது ராம்மோகன்ராய் இதை எதிர்த்தார். 'இப் பள்ளியில் சேரும் மாணவர்கள் வாழ்வின் முக்கிய ஒரு பகுதியைச் சமஸ்கிருத இலக்கண நெளிவுகள், தத்துவங்கள், மீமாம்சா, நியாய சாத்திரங்கள் ஆகியவற்றைப் படித்து வீணாக்குவார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அறியப்பட்டவைகளை இப்பொழுதும் இம் மாணவர்கள் அறிவதில் பயனில்லை. மேலும், ஏற்கனவே பல இடங்களில் இக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இந் நாட்டை அறியாமையிலேயே வைப்பதற்குச் சமஸ்கிருத கல்வியே போதும். அரசாங்கம் நினைத்தால், மக்களின் மறுவாழ்வில் அக்கறைச் செலுத்த விரும்பினால், ஐரோப்பியக் கல்வி முறை இங்கே கொண்டுவரப் படவேண்டும்" என்ற ராம்மோகன்ராயின் கருத்தைப் பல இந்தியர்கள் ஏற்றனர். 10 ஆண்டுகளுக்குப் பின் சுதாகர் என்ற வங்காளப் பத்திரிகை இதைக் கோடிட்டது. "அரசாங்கம் பல இலட்சம் ரூபாய்களைக் கல்விக்காகச் செலவிடுகிறது. பிராம்மணர்கள் மட்டும் அனுமதிக்கப்படும் கல்லூரிக்கும் பள்ளிகளுக்கும் செலவிடும் பணத்தால் பொதுமக்களுக்குப் பயன் எதுவும் விளையப் போவதில்லை. அக் கல்வி சாஸ்திர நெறிகளைத் தவிர வேறு பயன் எதுவுந் தராது. அரசின் அக்கறையின்றியே சமஸ்கிருதம் கற்கப்படுகிறது. இனிமேலும் கற்கப்படும். நிர்வாகத்திற்கும், அறியாமையை அகற்றுவ

தற்குப் பயன் தரும் ஆங்கிலக் கல்வியை ஒவ்வொரு கிராமங்களிலும் அரசாங்கம் தொடங்க வேண்டும்".

மேற்கண்ட கருத்துகளின் மூலம் அறியப்படுவது அறியாமையை அகற்றும் சுதந்திரக் கல்வியின் பயனையும், நிர்வாகத்தில் பங்கு பெறும் வாய்ப்பையும் எதிர்பார்த்து இந்தியர் சிலர் ஆங்கிலக் கல்வியை விரும்பினர்; என்பதே சுதந்திரக் கல்வியை இந்தியர்கள் பெறச் சம்மதித்தால், மத மாற்றம் எளிதாக்கப்படும் என்று கிறித்துவப் பிரசாரகர்கள் கொக்கைப்போல் தவமிருந்தனர். மெக்காலே இதை வேறு முறையில் குறிப்பிட்டார். 'நம் கல்வி திட்டம் மட்டும் வெற்றி பெற்றால் 30 ஆண்டுகளில் சிலை வணங்குபவன் எவனும் உயர் இந்து சமூகத்தில் இருக்கமாட்டான்.........ஐரோப்பிய மொழிகளில் இக் கல்விக் கற்பிக்கப்பட்டால் இந்தியர்கள் வெகுவிரைவில் ஐரோப்பியப் புதுமை நிறுவனங்களையும் வேண்டுவர். அத்தகைய காலம் வந்தால் இங்கிலாந்து வரலாற்றில் இது ஒரு பெருமையான நாளாகும்'.

இதே காலத்தில் இந்துக் கல்லூரியில் 1826-லிருந்து மூன்று ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்ற டிரோசியா (Henry Louis Vivian Derozio) என்ற இளைஞர், மாணவர்களிடையே ஒரு எழுச்சியை உருவாக்கி வந்தார். அரசியல், சமுதாயப் பொருளாதாரக் கொள்கைகளில் புரட்சிக் கருத்துகளை அவருடைய மாணவர்கள் பெற்றனர். சிந்தனைக்கே அவர் முதல் இடங் கொடுத்தார். வால்டேர் (Voltaire), லாக் (Locke), பேகன் (Bacon), ஹ்யூம் (Hume), டாம் பெய்ன் (Tom Pain) ஆகியோரின் நூல்களைப் படிக்கும் ஆவல் அவ் வாசிரியரால் மாணவர்களுக்கு எழுந்தது. சனாதானிகள் தூண்டுதலில் அவ் வாசிரியர் வேலை நீக்கஞ் செய்யப்பட்டார். இந்த இந்து கல்லூரி மாணவர்கள் பழமைக் கருத்துகளை உடைத்தெறிந்தனர்.

பதினெட்டாவது நூற்றாண்டில் ஆங்கிலேயர் பலர் கீழ்த்திசை இலக்கியங்களில் ஆர்வம் கொண்டிருந்ததால் இந்து, முகமதிய சட்டம், இலக்கியம், மதம் ஆகியவற்றைக் காப்பதில் அக்கறை கொண்டிருந்தனர். 1813லிருந்து 1823வரை எந்தக் கல்வி நோக்கமும் அரசு மேற்கொள்ளவில்லை. கீழ்த்திசை ஆர்வமே ஆங்கிலேயரிடம் மேலிட்டிருந்தது என்பதை 1823-ல் சமஸ்கிருதப் பள்ளி கல்கத்தாவில் தொடங்க எண்ணியதிலிருந்தே தெரிகிறது. ஆனால், இங்கிலாந்தில் ஜேம்ஸ் மில்லின் (James Mill) பயன்படுத்துவதற்கு (Untilitarian) செல்வாக்குப்

பெருகத் தொடங்கியதால் அரசாங்கத்தின் எந்தத் திட்டத்திலும் பயன் ஒன்றையே கருத வேண்டும் என்பதைப் பலர் ஏற்றனர். இங்கிலாந்தில் இக் கருத்துகள் பரவி, நிறுவனத்தின் மேலதிகாரிகளைச் சிந்திக்க வைத்த அதே தருணத்தில் இந்தியாவிலும் மேல்கல்வி வேண்டுமென்று சிலர் விரும்பினர். தலைமை ஆளுநர் பெண்டிங்க், ஜேம்ஸ் மில்லனின் நண்பர். எனவே, பயன் ஒன்றைக் கருதியே இந்தியாவில் செயல்படத் தொடங்கினர். அதிலும், இந்தியாவில் கல்வியறிவு மிக மிக அவசியம் என்பதை உணர்ந்தார். மெக்காலேயும் இதை அழுத்தந் திருத்தமாகக் கூறினர்.

அதன் பின்னரே, ஆங்கிலக் கல்வி முறையும், ஆங்கில மொழியும் இங்கே புகுத்தப்பட்டன. இந்திய முற்போக்குவாதிகளின் முயற்சியாலும், இங்கிலாந்தில் பரவிய கருத்துகளும் இணைந்ததால்தான் மேலைக் கல்வி முறை இங்கே புகுத்தப்பட்டது. ஆட்சிக்கு அதனல் பயன் கிடைக்கும் என்ற சுயநலம் அரசாங்கத்திடம் இருந்தால் அது வியப்பில்லை. நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், ஆங்கில மொழியோ, மேற் கிந்தியக் கல்வியோ வெள்ளையர்களால் திட்டமிடப்பட்டு இங்குக் கொண்டுவரப்பட்டதல்ல. திட்டமிட்டு நாடு பிடிக்கவில்லை! கிடைத்த நாட்டில் திட்டமிட்டு மொழியையோ, மதத்தையோ புகுத்தவில்லை! எல்லை விரிவாக்கம், மேலைக் கல்வியின் நுழைவு, கிறித்துவ மதப் பிரசாரம் ஆகிய அனைத்தும் ஒரே சமயத்தில் ஆனல், அரசாங்கத்தின் சூழ்ச்சி எதுவுமின்றி மேற்கொள்ளப்பட்டவையே ஆகும்.

### (ஆ) சிதை ஏறல் தடுப்பு

பல நூற்றுண்டுகளாக இந்துக்களிடம் நிலவிய வழக்கம் இது. உயர்ந்த தத்துவங்களும், பண்பாடும் போற்றப்பட்ட அக் காலத்திலிருந்தே அனுமதிக்கப்பட்ட ஒன்று. இந்தியச் சமுதாயத்தில் பெண் என்பவள் பிள்ளை பெறும் இயந்திரம்; கணவனின் வேலைக்காரி என்ற ஆணவம் பிடித்த ஆண் சாதியளித்த கொடுமையானத் தண்டனை இது. 'கணவன் இறந்தால் மனைவி ஒரு நடைப்பிணம்; சமுதாயத்தில் அவளுக்கு இடமில்லை; அவள் இறப்பதே மேல்; சிதையேறிய அவள் மறு உலகில் கணவனுடன் நன்மை பெறுவாள்; இதன் மூலம் கணவனின் குடும்பத்தினருக்கு மூன்று தலைமுறைப் பாவங்கள் நீங்கும். சிதையேருதவள் மறுபிறப்பில் விலங்கினமாய்ப் பிறப்பாள்'. இந்த நம்பிக்கையுடன் அந்நியப் படையெடுப்பு

களின்போது மானபங்கத்திற்கு அஞ்சியும், குடும்பத்தில் விதவை ஒரு சுமை என்றும் நினைத்து இப் பழக்கம் வளர்ந்திருந்தது.

முஸ்லிம் மன்னர்கள் பலர் இவ் வழக்கத்தைத் தடுத்திருக்கின்றனர். பேஷ்வாபாஜிராவ் இதைக் கண்டித்திருக்கிறார். ஆனால், நடைமுறையில் அவர்களால் இதை ஒழிக்க முடியவில்லை. போர்த்துக்கீசியர் கோவாவில் இதைத் தடுத்தனர். சிராம்பூரில் டேன்களும், சின்சுராவில் டச்சுக்காரர்களும், சந்திரநாகூரில் ஃபிரெஞ்சுக்காரர்களும் இப் பழக்கத்தைத் தடுத்தனர். ஆனால், இவ்வூர்களுக்கு வெளியே இது நீடித்து வந்தது. கல்கத்தாவின் சுற்றுப்புறங்களில் மட்டும் ஆண்டுக்கு சுமார் 300 சிதையேறல்கள் நடந்தன. வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய இடங்களில் இது பரவலாக நிலவியது ஆங்கிலேயர் தொடக்கத்தில் இந்து, முஸ்லிம் மத உணர்வுகளைப் பங்கப்படுத்த மறுத்து ஒதுங்கியிருந்தனர். 1789-ல் மாவட்ட வெள்ளையதிகாரிகள் இக் கொடுமையைத் தடுக்கக் கோரியதற்கு நிறுவன அரசு மறுத்துவிட்டது.

சிதையேறுவதற்கு உண்மையாக, உளமாற சம்மதிப்பவர்கள் குறைவாகவே இருந்திருப்பார்கள். பெரும்பாலோர் இதை விரும்பவில்லை என்றே தெரிகிறது. குடும்பத்தின் பெயரைக் காப்பாற்றவும், விதவையின் சொத்துகளைப் பறிக்கவும், சுமையைக் கழற்றி எறியவும், அவளுடைய உறவினர்களால் வற்புறுத்தப்பட்டு, விருப்பமின்றி உடன் கட்டை ஏறியவரே அதிகமிருப்பர். விதவைகள் தங்கள் முடிவை மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. மயக்க மருந்து கொடுத்தோ, மூங்கில்களால் அமுக்கிப் பிடித்தோ பலர் சிதையிலே எரிக்கப்பட்டிருக்கின்றனர். பாதி எரிந்து தப்பியப் பெண்கள் உறவினர்களால் பிடித்து மீண்டும் எரிக்கப் பட்டனர். ஜுகி (Jugi) இனத்தவர் (வங்காளத்திற்கருகில்) விதவைகளை உயிருடன் புதைத்தும் வந்தனர்! மிகுந்த சிந்தனைக்குப் பின் அரசு இதில் தலையிட முடிவெடுத்தது. அதன் பின்னர், பலவந்தமாய்ச் சிதையேற்றுதல் தடுக்கப்பட்டது. கர்பிணிகளுங் குழந்தைகளைக் காப்பாற்ற எவருமில்லாத விதவைகளும் சிதையேற்றப்படக் கூடாது என்று அரசு தடை செய்தது. சிதை எரிப்புக்கு முன் காவல் நிலையத்திற்குச் செய்தி கொடுக்க வேண்டும் என்று சட்டம் வந்தது. தலைமை ஆளுநர்கள் ஹேஸ்டிங்ஸும், ஆம்ஹெர்ஸ்ட் பிரபுவும் சதி ஒழிப்பு, சிப்பாய்கள் மத்தியில் அதிர்ப்தியை ஏற்படுத்தும் என்று பயந்தனர். மேலைக் கல்வி

விரைவில் பரவினால் இந்தியர்களே சதி ஒழிப்பிற்கு ஆதரவு அளிப்பார்கள் என்று கருதினார்கள். இச் சமயத்தில் ராஜாராம் மோகன்ராய் தோன்றினார். முழுவதும் ஒழிக்கப்படாத நிலையிலேயே பழமைவாதிகள் அரசின் தலையீட்டைக் கண்டித்து 1818-ல் அரசுக்கு விண்ணப்பங் கொடுத்தனர். ராம்மோகன் ராயும், அவருடைய ஆதரவாளர்களும் பழமை வாதிகளை எதிர்த்து விண்ணப்பங் கொடுத்தனர். சாத்திரங்களால் இது அனுமதிக்கப்படவில்லை யென்று அவர் வாதாடினார். ராம்மோகனின் பிரசாரத்தைக் கண்டு பயந்தனர், ராஜா ராதாகாந்த தேவ் தலைமையிலிருந்த பழமைவாதிகள் ராம் மோகனின் உயிருக்கே ஆபத்து உண்டாகும் முயற்சி இருந்தது. ஆனால், ராம்மோகன் அரசின் அவசரச் சட்டத்தால் இதைப் போக்க விரும்பவில்லை. மறைமுக அழுத்தத்தில், காவலர்களின் நெருக்கடியில் இது மெதுவாக ஒழிக்கப்படல் வேண்டும் என்றே கருதினார். ஆனால், பெண்டிங்க் இதில் தீவிரமாய் இருந்தார். இங்கிலாந்தில் சுதந்திர உணர்வலைகள் மேலெழுந்த காலம் அது. அதில் பற்றுகொண்ட பெண்டிங்க் இதிலும் வேகமுடையவரானார். சதி ஒழிப்புச் சிப்பாய்களின் எதிர்ப்பைத் தராது என்பதைப் படை அதிகாரிகள் மூலம் அறிந்தே அவர் செயல்பட்டார். 1829 டிசம்பர் 4ஆம் நாள் வங்காள மாநிலத்தில் சதி, தடை செய்யப்பட்டது. உடன் கட்டையேறத் தூண்டுவதோ, உடந்தையாக இருப்பதோ மரணதண்டனை ஈட்டும் குற்றமாக்கப்பட்டது. சென்னை மாநிலத்தில் 1830-லும், பின் பம்பாயிலும் இச் சட்டங் கொண்டு வரப்பட்டது.

பண்டிதர்களும், உயர் சாதியினரும், ஜமீன் தார்களும் அடங்கிய 800 பேர்களும் இச் சட்டத்தை எதிர்த்துப், பெண்டிங்கிடம் விண்ணப்பங் கொடுத்தனர்! தலைமை--ஆளுநருக்கு நன்றி கூறி, ராம் மோகன்ராயும், பிற 300 பேரும் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பழமை வாதிகளும், புதுமை வாதிகளுந் தொடர்ந்து போரிட்டனர். இம்மோதல் பிரிவுகவுன்சிலுக்கே கொண்டு செல்லப்பட்டது. ராம் மோகன் லண்டன் சென்றார். அங்கே பழமை வாதிகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. பழமை வாதிகளுக்கு இது பெருத்த அடி. பழமையும், புதுமையும் வங்காளத்தைப்போல் வேறெங்கும் மோதிக் கொண்டது இல்லை! ஆங்கில இனம் ஆட்சிச் செலுத்துவதால் இந்த நன்மை கிட்டுகிறது என்று பலர் கருதத் தலைப்பட்டனர். அவர்களின் ஆட்சி நீடித்தால் இன்னும் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் நினைத்தனர்.

(இ) விதவை மறுமணம்

சிதை ஏறுதல் தடுக்கப்பட்டு, பெண் கல்வி வலியுறுத்தப் பட்டு, அதன் தொடர்ச்சியாக மற்றொரு பெரும் சீர்திருத்தப் புயலும் வீசியது. பண்டைய காலத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த விதவை மறுமணம் இடைக் காலத்தில் தடுக்கப்பட்டு விட்டது. குறிப்பாக 'உயர்' சாதி இந்துக்கள் இதில் பிடிவாதமாக இருந்தனர். இதை மாற்ற ஆங்கிலேயரின் ஆட்சிக்கு முன்பே சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. சிராஜ்-உத்-தெளலாவின் காலத்தில் டாக்காவிலிருந்த ஒரு முக்கிய அரசியல் தலைவர் ராஜா ராஜ்பல்லபா என்பவர், தன்னுடைய விதவை மகளுக்கு மறுமணம் செய்விக்க ஆசைப்பட்டு, இந்தியாவிலிருந்த பெரும் பண்டிதர்களையெல்லாம் கலந்தாலோசித்தார். முதல் கணவன் இறந்துவிட்டாலோ, சாதி விலக்கம் பெற்றுவிட்டாலோ, சந்நியாசி ஆகிவிட்டாலோ ஒரு மனைவி மறு மணஞ் செய்துகொள்ளலாம், என்று ஸ்மிருதிகள் அனுமதிப்பதாக அப் பண்டிதர்கள் எடுத்துக்கூறி ராஜாவின் விருப்பத்தை ஏற்றனர். மதம் அனுமதித்தது! ஆனால், நூற்றாண்டுகள் நிலவிய சம்பிரதாயம் தடுத்தது! ராஜ் பல்லபாவின் ஆசை நிறைவேறவில்லை.

சதி ஒழிப்புச் சட்டம் தந்த வெற்றியுடன் வங்காள சீர்திருத்த வாதிகள் பலர் விதவை மறுமணத்தை ஆதரித்தனர். 1837-ல் பெண் கல்விக்கு ஆதரவு தோன்றியது. அத்துடன், விதவை மறுமணமும் ஆதரிக்கப்பட்டது. பம்பாயிலும் இந்தப் பிரசாரம் வலுத்தது. எண்ணிக்கையில் மிகச் சிலரே சீர்திருத்தங்களை ஆதரிப்பர். அன்றும் சரி! இன்றும் சரி! சில இந்தியர்கள் விதவைகளை மணந்து வழி காட்டினர். ஆனாலும், ஆதரவு போதவில்லை. அச் சமயத்தில் கல்கத்தா சமஸ்கிருத கல்லூரியின் முதல்வராக இருந்த வேதவல்லுநர் பண்டிட் ஈஸ்வர் சந்திரவித்யாசாகர் இதில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். பத்திரிகை வாயிலாகவும், மேடைகளிலும் தீவிரமாக முழங்கினார். இந்திய அரசிற்கு 987 பேர்களின் கையெழுத்துக் கொண்ட விண்ணப்பங் கொடுத்து, விதவை மறு மணத்தைச் சட்டபூர்வமாக்கக் கேட்டுக் கொண்டார். பழமை வாதிகள் கொதித்தெழுந்தனர். 36,763 பேர் இதை எதிர்த்துக் கையெழுத்திட்டு அரசுக்கு விண்ணப்பம் அனுப்பினர்! வித்யாசாகரின் உயிரே ஆபத்திலிருந்தது. ஆனால், அவர் அயரவில்லை; அவருடைய விடாமுயற்சி பயனளித்தது. கொடுமைப் பழக்கங்களைத் தடுக்க அரசாங்கமும் தயாராக இருந்தது. முடிவில் 1856, ஜூலை 26-ல் இந்து விதவை மறுமணம் சட்டமாகக்

கொண்டு வரப்பட்டது. மறுமணத்தினால் பிறக்குங் குழந்தைகளுக்கும் சம உரிமைகள் தரப்பட்டன. சட்டப்பூர்வமாக ஆக்கப்பட்டதே யொழிய, மனப்பூர்வமாக இதை மக்கள் ஏற்கவில்லை!

பிராம்மணர் அல்லாத பல இனத்தவர் மறுமணஞ் செய்தனர். ஆனால், பிராம்மணரும், பிற 'உயர்' சாதி இந்துக்களும் இச் சட்டம் தங்கள் மதத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி என்று கருதினர். இச் சட்டம் மறுமணஞ் செய்து கொள்ளும்படி யாரையும் வற்புறுத்தவில்லை! அதை விரும்பும் சில விதவைகளுக்கு உரிமையளித்தது. இதைப் பொறுக்கப் பழமை வாதிகளால் முடியவில்லை. சில அயோக்கியர்களின், மத விரோதிகளின் வரட்டுக் கூச்சலைப் பயன்படுத்தி இந்து மதத்தை ஒழித்து, கிறித்துவ மதத்தைப் புகுத்தவே அரசு இச் சூழ்ச்சியைச் செய்திருக்கிறது என்றே கருதினார்கள்.

(ஈ) பெண் சிசு கொலை

மதத்தின் பின்னணி இல்லையெனினும், வேறு சமூகத் தொல்லைகளில் இப்பழக்கம் வாரணசி, குஜராத், ஜெய்ப்பூர், ஜோத்பூர் இராஜ புத்திரர்களாலும், ஜாத், மீவாட்டி இனங்களாலும் மேற்கொள்ளப்பட்டது. பெண் குழந்தை, குடும்பத்தின் பாரம் என்று இவர்கள் கருதினார்கள். பிறந்த சில நாட்களில் பால் கொடுக்காமலோ, முலைக் காம்பில் அபினியைத் தடவியோ, நதிகளில் வீசி எறிந்தோ பெண் குழவிகள் கொல்லப்பட்டன. 1,25,000 ஜாரிஜா என்ற குஜராத் இராஜபுத்திர குடும்பங்களில் மட்டும் ஆண்டுக்கு 20,000 குழந்தைகள் கொல்லப்பட்டனர் என்று தெரிகிறது. இரகசியமாக நடைபெற்று வந்ததால் இதைத் தடுப்பதற்கு முடியவில்லை. ஆங்கில ஆட்சிப் பகுதிகளில் 1795-லும், 1804லிலும் இது கொலை குற்றமாக எடுக்கப்பட்டது. சுதேசி அரசர்களை இதைத் தடுத்துக் கண்காணிக்குமாறு அரசு வற்புறுத்தியது. தீவிர முயற்சிக்குப்பின் இப் பழக்கங் குறைந்தது. (1870-ல் தான் இதற்குச் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் பிறப்புப் பதிவு முறை வந்தது. பெண் குழந்தைகள் உயிரோடு இருக்கின்றனவா என்பதை இப் பழக்கம் நிலவிய பகுதிகளில் சில ஆண்டுகளுக்கு அதிகாரிகள் கண்காணித்தனர்).

(உ) கிறித்துவ மத ஊடுருவல்

பதினாறாவது நூற்றாண்டில் இந்தியாவில் வேர்விட ஆரம்பித்த போர்த்துகீசியர் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்த கிறித்

துவர்கள். ஐரோப்பாவில் தோன்றிய சமய சீர்திருத்த இயக்கத்தால் புது வெறிகொண்டு எதிர்ப்பவர்களைக் கொடூரமாகக் கத்தோலிக்க அரசுகள் தண்டித்துக் கொண்டிருந்தன. போர்த்துக்கீசியர் தங்களின் கத்தோலிக்க கிறித்துவ மதத்தை இந்தியாவின் மேலைக்கரைகளில் தீவிரமாகப் பரப்பினர் அல்லர்; புகுத்தினர். அவர்களுக்குப் பின் வந்த டச்சுக்காரர்களும் (ஹாலந்து) ஆங்கிலேயரும், ஃபிரெஞ்சுக்காரர்களும் தொடக்கத்தில் மதப் பரப்புதலைப் பொருட்டாகக் கொள்ளவில்லை. கீழைக் கடற்கரையில், தரங்கம்பாடி என்ற கையளவு இடத்தைப் பெற்றிருந்த டென்மார்க்கினர் 18-வது நூற்றாண்டின் தொடக்கத்தில், வாணிகத்தில் முன்னேறாமல், மதத்தைப் பரப்புவதிலும் தோல்வியடைந்தனர். 1793-ல் வங்காளத்திற்கு வந்த வில்லியம் கேரே (William Carey) இப் பணியில் ஈடுபட்டபோது இவருடைய முயற்சிகளுக்குத் தலைமை ஆளுநர் வெல்லெஸ்லி பிரபு தடையிட்டார். எனவே, வில்லியம் தன் தோழர்களுடன் டென்மார்க்குக்காரர்களுக்குச் சொந்தமான செராம்பூருக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அங்கும் மத மாற்றம் பலனளிக்கவில்லை. எனினும், கல்வியைப் பரப்புவதில் ஓரளவு வெற்றி கண்டார்.

இவ்விதம் நிறுவன அரசு மதப் பிரசாரத்திற்கு ஆதரவு அளிக்காததற்குக் காரணம் அதற்குத் தரப்பட்டிருந்த வாணிக சாசனத்தில், மதப் பிரச்சாரகர்கள் இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்படுவது தடுக்கப்பட்டிருந்ததுவேயாகும். 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் இந்நிலைக்கு எதிர்ப்புத் தோன்றியது. 'ஆசியாவிலுள்ள கிறித்துவரல்லாத நாடுகளில்கூட நமது மதப் பிரசாரம் அனுமதிக்கப்படும் போது கிறித்துவ பிரிட்டிஷ் ஆட்சி நடக்கும் பகுதிகளில் அனுமதி மறுப்பது முறையல்ல' என்று பலர் தங்கள் அரசைக் கண்டித்தனர். இக் கண்டனத்தை வேறு சிலர் எதிர்த்தனர். 'இதுவரை நம்மாட்சி பொறுக்கப்படுகிறது. அவர்களுடைய மதத்தில் கை வைத்தால் இந்துஸ்தானத்தின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை கொதிப்பு ஏற்படும். அக் கொடிய நாளில் 50 மில்லியன் மக்கள் நம்மைப் பாலைமணல் காற்றால் சிதறடிக்கப்படுவதுபோல, அங்கிருந்து விரட்டுவார்கள்'; இங்கிலாந்திலிருந்த கிழக்கிந்திய நிறுவனத்தின் தலைவருக்கு ட்வின்னிங் (Twinning) என்ற தேயிலை வணிகர் எழுதிய கடிதம் இது. இக் கடிதத்தையொட்டி இந்தியாவில் கிறித்துவ மதப் பிரசாரம் வேண்டுமா, வேண்டாமா? என்ற வாக்கு வாதம் இங்கிலாந்தில் தோன்றியது. இச் சமயத்தில் 1813-ல்,

நிறுவனத்தின் சாசனம் புதுப்பிக்கப்படுவதற்காகப் பாராளும் மன்றத்தில் வைக்கப்பட்டது. தீவிர வாக்குவாதத்திற்குப் பிறகு, மத வாதிகள் வென்றனர். இந்துக்களின் மூடப் பழக்க வழக்கங்கள் மறைய, கொடுமைகள் களையப்பட கிறித்துவ மதப் பிரச்சாரம் அங்கே தேவை என்று வாதிட்டனர். இவ் விதம் புதுப்பிக்கப்பட்ட சாசனத்தில் மதப் பிரசாரம் அனு மதிக்கப்பட்டது. ஆளவந்தவர்கள் திட்டமிட்டு மதமாற்றம் சூழ்ச்சியில் ஈடுபடவில்லை என்பதை நாம் நோக்க வேண்டும்!

உடனே வெள்ளம்போல் இங்கிலாந்திலிருந்தும், அமெரிக் காவிலிருந்தும் பிரச்சாரகர்கள் இந்தியாவிற்கு வந்தனர். அப் பொழுதெல்லாம் இந்து, முஸ்லிம் கோயில்களும், அறநிலையங் களும் அரசின் மேற்பார்வையிலிருந்தன. இந் நாட்டின் மத உணர்வை மதித்து சில உரிமைகளும், கௌரவங்களுங்கூட அரசால் அனுமதிக்கப்பட்டிருந்தன. அலுவலகங்களில் பிள்ளை யார் பூஜைகூட அனுமதிக்கப்பட்டிருந்தது. சில பதவிகளுக்கு உயர் சாதியினரை அனுமதிக்கப்பட்டு மகிழ்விக்கப்பட்டனர். அரசாங்க அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் இந்து முஸ்லிம் விழாக்களில் கலந்துகொண்டனர். இராணுவ இசைக் குழுவும் இவ் விழாக்களின் ஊர்வலங்களில் பங்கு பெற்றது. இவ் விழாக்களைக் கௌரவிக்கும் முறையில் பீரங்கி குண்டு முழக்கமும் அரசால் ஏற்பாடு செய்யப்பட்டது.

காட்டுமிராண்டிப் பழக்கங்களை மறைமுகமாக இவ்விதம் அரசு வளரவிடுவதைக் கண்டித்து 1839-ல் பிரசாரகர்கள் பம்பாய் அரசிற்கு விண்ணப்பித்தனர். இத்தகைய விண்ணப் களும், இங்கிலாந்தில் தோன்றிய கண்டனங்களும் நிலைமையை மாற்றின. நிறுவன இயக்குனர் குழு இப் பழக்கவழக்கங்களை உடனே நிறுத்திவிடும்படி இந்திய அரசுக்கு ஆணையிட்டது. எனவே, அறநிலையங்கள் மீண்டும் அந்தந்த மதத்தாரிடமே ஒப்படைக்கப்பட்டன. திருவிழாக்களில் ஒழுங்கை நிலைநாட்ட மட்டும் காவற்படை சென்றது. குண்டு முழக்கம் நிறுத்தப் பட்டது!

அரசின் ஆதரவுக் கரம் விலகியதும், மதப் பிரசாரம் மிக வேகமாய்ப் பரவியது. அரசு அலுவலர்களும் இயேசு போதனை களை எடுத்துக் கூறுவது தங்களின் பணிகளில் ஒன்றாகக் கருதி விட்டனர். ராம்மோகன் ராயும், சர் சையது அகமதும் இவற் றைக் கண்டித்திருக்கின்றனர். ஆளும் இனம் என்ற தெம்பில், அல்லது திமிரில் புயல் வேகத்தில் பிரசாரம் நீடித்தது. ஏழை

எளியவர்கள் பாதுகாப்பை நாடியும், தாழ்த்தப்பட்ட இனத்தவர் தங்களின் சாதிகளை மறைக்கவும் கிறித்துவ மதத்திற்கு மாறினர். பெரும்பாலும் இயேசுவின் பொன்மொழிகளால் கவரப்பட்டு இவர்கள் மாறியிருக்க முடியாது. ஆனால், கிறித்து போதனையைச் சிலர் உளமறிய விரும்பினர். ஆங்கிலக் கல்வியால் மேலைக் கருத்துகளை அறியும் வாய்ப்பைப் பெற்ற இவர்கள், தங்களின் இந்து மதம் மூடப்பழக்கங்களையும், கொடுமை வழக்கங்களையுங் கொண்டிருக்கிறதென்று உணர்ந்து சாதியற்ற மதம், கிறித்து மதம் என்றறிந்து அதைத் தழுவினர். உயர் சாதி இந்துக்களான மதுசூதன் தத்தாவும், K. M. பானர்ஜீயும் இவ்விதம் கிறித்துவர்களாக மாறினர். பிரம்ம சமாஜமும் இந்து மதத்தின் பல கொடுமைகளைக் கண்டித்து, அதே சமயத்தில் கிறித்துவ மதத்திற்கு மாறிவிடாமல் கற்றறிந்த பலரைத் தடுத்தது.

அரசின் நிழலில் கிறித்துவ மதவெறி, எல்லைகளைத் தாண்டியது! கடைத் தெருக்களில், கோயில் வாசல்களில், மசூதி சுவற்றருகில் இப் பிரசாரகர்கள் நின்றுகொண்டு, இந்து மதத்தைப் பற்றி மிகவுங் கேவலமாகத் தாக்கத் தொடங்கினர்! இந்துக் கடவுள்களைப் பழித்தும், விழாக்களைக் கேலி செய்தும், தங்கள் மதத்தின் பெருமையைத் தூக்கி நிறுத்தினார்கள்! அதைக் கேட்டால் உணர்வற்ற கட்டையுஞ் சிறிது அசையும். 1830 லிருந்து 63 வரை இந்தியாவில் தங்கிக் கல்விக்காகவும் சமுதாயச் சீர்திருத்தங்களுக்காகவும் பாடுபட்ட அலெக்சான்டர் டஃப் (Rev. Alexander Duff) போன்றவர்கள்கூட மிகவும் அநாகரிகமாக எழுதினர். பிரம்ம சமாஜத்தின் செய்தி இதழான 'தத்வபோதினி பத்திரிகா' இதை வன்மையாகக் கண்டித்தது. பலவந்த மதமாற்றங்களில் கல்கத்தா கொதித்தது! தேவேந்திர தாகூர் கிறித்துவர்களின் இச் செயல்களை எதிர்த்துத் தீவிரமாகப் பிரசாரஞ் செய்தார். இதன் விளைவாக அவர்கள் நடத்தும் பள்ளிகளில் தங்கள் பிள்ளைகள் கல்விப் பெறுவதைத் தடுக்க, 1845-ல் ஒரு பள்ளித் தொடங்கப்பட்டு, 1000 இந்துக்களுக்கு இலவசக் கல்வி தர வசதி செய்யப்பட்டது.

ஆதிவாசிகளும், இந்துக்களில் தாழ்ந்த வகுப்பினருந் தீண்டத்தகாதவர்களும் கிறுத்துவத்தால் அணைக்கப்பட்டனர். மறு உலகின் விமோசனத்தைவிட இவ்வுலகின் பயன்களைப் பெற தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறதென்றெண்ணியே இவர்கள் கிறித்துவத்தைத் தழுவினர். இவ்விதஞ் சாதி

இந்துக்களின் வெறுப்பிற்குக் கிறித்துவம் இலக்காகிவிட்டது. அவர்களே 1857 புரட்சியில் தலைமைப் பூண்டனர்!

இந்தப் பிரசாரகர்களுடன் காவலர்களும் சில சமயம் இருந்ததால், அரசே மறைமுகமாக மதமாற்றத்தில் ஈடுபடுகிறது என்று நம்பப்பட்டது. இராணுவத்தில் சில பாதிரிகள் இருந்ததையும் அரசாங்கச் செலவில் அவர்கள் இருந்ததையும் சில சிப்பாய்கள் கவனித்தனர்.

ஓர் இந்துவாவது கிறித்துவின் போதனையை ஏற்றுக் கொள்வான். ஆனால், முஸ்லிம் ஒருவன் ஒரு காலும் தன் மதத்தை இழிவுபடுத்த அனுமதிக்கமாட்டான். கிறித்துவரின் பள்ளிகளில் மட்டுமின்றி சில அரசாங்கப் பள்ளிகளிலும் விவிலியம் போதிக்கப்பட்டது. சில அதிகாரிகளின் மிதமிஞ்சிய மதத்தாகம் கடமையிலிருந்து அவர்களை இழுத்துச் சென்றது. அவர்களின் முயற்சியில் சிலச் சிறைச் சாலைகளிலுங்கூட விவிலிய விளக்கம் நடந்தது; மத மாற்றங்கள் நடந்தன. மதம் மாறியவர்களுக்கு வெகுமதிகள் அளிக்கப்பட்டன. இராணுவத்தில் கிறித்துவம்; சிறைச் சாலையில் கிறித்துவம்; பள்ளிகளில் கிறித்துவம்; இதைக் கண்டு எவரும் சந்தேகிக்காமல் இருக்க முடியாது. நிர்வாகமும், நிர்வாகிகளும் ஏதோ சூழ்ச்சியிலிருந்தனர் என்பதில் ஐயமில்லை!

இந்தச் சூழ்நிலையில் 1850இல் ஒரு புதுச் சட்டம் வந்தது. இதன்படி மதம் மாறியவர்களுக்கும் சொத்துரிமை உண்டு என்று முடிவாகியது. கிறித்துவ மதத்திற்கு மாறியவர்களுக்கும், மாற விரும்புகிறவர்களுக்கும் அளிக்கப்படுஞ் சலுகை என்று இதை இந்துக்களும், முஸ்லிம்களும் கருதினர். பிறரைத் தங்கள் மதத்திற்கு மாற்றும் இயக்கம் இந்துக்களிடம் இல்லை: வேற்று மதத்தினரின் உடமைகளைச் சுவீகரிக்க முஸ்லிம் மதம் அனுமதிப்பதில்லை. எனவே, இரு மதத்தினரும் இப் புதுச் சட்டம் தங்களுக்குப் பயனளிக்காது என்று எண்ணியதில் தவறில்லை. தங்களின் சொத்துகள் மதத்துரோகிகளுக்குச் செல்லும் வாய்ப்புத் தோற்றுவிக்கப்படுகிறது என்று இவர்கள் பொறுமினர். மேலும் முஸ்லிம் மதத்திலிருந்தும் பலர் கிறித்துவத்திற்கு மாற்றப்பட்டனர் அல்லது மாறினர். ஃபதேபூரில் Rev. கோபிநாத் நந்தி 24 பேரை மதம் மாற்றினார். அதில் 10 பேர் முஸ்லிம் மதத்திலிருந்து மாறியவர்கள். இதனால், முஸ்லிம்கள் இச் சட்டத்தைக் கண்டு வெதும்பினர். இந்துக்களுக்கு இதனால் ஏற்பட்ட தீமைகள் இரண்டு, தன் மகன் மதம் மாறியும் பரம்பரைச் சொத்தில் பங்கு பெறுகிறான்.

இது இவ்வுலகில் ஏற்படும் சொத்து நட்டம்! தான் இறந்தால் மகன் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகள் நடைபெறாமல் போய்விடும்; இது மேலுலகத்தில் ஏற்படும் ஆத்ம நட்டம்! இவ்வுலகில் மகன் இல்லை! மறுவுலகில் சாந்தியில்லை!

இந்த நிலையில் 1855-ல் கல்கத்தாவிலிருந்து எட்மண்ட் (Edmand) என்பவர் அரசாங்க அலுவலர்கள் பலருக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். "ரயில் வண்டியும், மேலைக் கல்வியும் இந்நாட்டை இணைத்து விட்டன. இனி எல்லோரும் ஒரே மதத்தைப் பின்பற்றுவதே நல்லது" என்று அவர் அதில் கூறியிருந்தார். அதனால் ஏற்பட்டப் பயத்தைப் போக்குவதற்கு அரசு பல உறுதிமொழிகள் அளிக்கவேண்டியதாயிற்று. எட்மண்ட்டின் கருத்துக்கு அரசாங்கம் பொறுப்பல்ல என்றுங் கூறப்பட்டது. ஆனால், அவருடைய செயலால் நேரப்போகும் விளைவுகளுக்கு யார் பொறுப்பு?

(ஊ) மதமாற்றம்—சாலையோரக் கோயில்கள்—மருத்துவ மனைகள்—அனாதைகள்

அரசாங்கம் மதமாற்றத்தில் ஈடுபட்டிருக்கிறதென்று மக்கள் நம்பிக்கை தவறாகப் பெருகியச் சூழ்நிலையில், பொதுப் பணி வேலைகளும் சதித் திட்டங்களாகத் தோன்றின. பெருஞ் சாலைகளும், வீதிகளும் அமைக்கப்படும் பொழுது ஒன்றிரண்டு கோயில்கள் அகற்றப்பட்டன. முஸ்லிம் ஆட்சியை நினைவூட்டும் இந் நிகழ்ச்சிகள் மக்களால் தவறாகக் கருதப்பட்டன. இன்றும் அரசாங்கம் இதிலீடுபட்டால் எதிர்ப்புகளைச் சந்திக்கிறது என்பதை நாம் அறிவோம்.

மருத்துவ மனைகளில் யாவரும் சமமாகப் பாவிக்கப்பட்டனர். 'பர்தா' முறையை மருத்துவ மனையில் அனுமதிக்க முடியாது. சாதிகளுக்கேற்ப அங்கே விதிகள் ஏற்படுத்துவது முடியாத காரியம். இந் நடவடிக்கைகளைக்கூட மக்கள் தவறாகக் கருதினர். 1837-ல் தோன்றிய கொடிய பஞ்ச காலத்தில் அநாதையான குழந்தைகள் கிறித்துவ அரசாங்க விடுதிகளில் பேணப்பட்டன. அந்த அநாதைகள் கிறித்துவ மதத்திற்கு மாற்றப்பட்டன என்பது உண்மையே. இச் செயல்கள் மக்களின் வெறுப்பை மேலும் வளர்த்தன.

(எ) இரயில் பெட்டியில் சாதி

பொதுப்பணிகள் பலவற்றை ஐயத்துடன் மக்கள் நோக்கினர். 1853-ல் இரயில் வண்டிகள் ஓடத் தொடங்கின.

ரயில் பெட்டிகளில் சாதிகளுக்கேற்றவாறு இருக்கைகள் பிரிக்கப்படவில்லை! சாதிப்பிரிவு அவ்வளவு குறுகியது என்று எண்ணவே கூச்சமாயிருக்கிறது. 'தாழ்ந்த' சாதியினன் அருகில் 'உயர்' சாதி பிராமணனும் அமர வேண்டியதிருந்த தால் பயணங்களின்போது வழக்கமாக உணவு உட்கொள்ளும் முன் செய்யும் சில்லரைச் சடங்குகளைச் செய்வது அப் பிராமண னுக்குக் கடினம். இதைவிடப் பட்டினிகிடப்பது மேல் என்று அவன் சாப்பிடாமலேயே பயணஞ் செய்தான். மிலேச்சகர்கள் ஆட்சிபுரியும் கலியுகத்தில் சாதிகள் பேணப்படா என்ற மேல் சாதியினரின் அச்சத்திற்கு இவையெல்லாம் முன்னோடியாக இருந்தன.

(ஏ) **ஆள்வோர்—ஆளப்படுவோர் உறவு**

பொதுமக்கள் பெரும்பாலும் ஆங்கிலேயரை அதிகம் விரும்பவில்லை. மாநிலத் தலைநகரங்களில் மேற்கத்திய கல்வி யைப் பெற்ற சிறுபான்மையினரும், தீவிர சீர்திருத்த வாதிகள் சிலருந்தான் ஆங்கிலேயரிடம் நெருங்கிப் பழகினர். இவர்கள் தான் அரசின் சமூக சீர்திருத்தங்களை ஆதரித்தவர்கள் ஒரு வட நாட்டுச் சாமான்யன், 'கல்கத்தா பாபுக்கள் வழக்கறிஞராக இருப்பதற்கும், ஆங்கில இலக்கிய ஆசிரியராக இருப்பதற்கும் மட்டுமே தகுதியானவர்கள்' என்று கேலி செய்தான் உண்மை யில் மேலைக் கல்வி பெற்றவர்களும், ஆளும் இனத்தவருடன் மிக நெருங்கிப் பழகிவிடவில்லை. ஏதோ ஒரு திரை, இரு இனத் திற்கும் இடையே தொங்கியது. மாற்றான் ஆள்கின்றான் என்பதை எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. பொது மக்களுடைய கண்களில் ஒரு பரங்கி என்றாலே தண்டனை வழங்கும் நீதிபதியாகவோ, வரி வாங்கும் அதிகாரியாகவோ தான் தோற்றமளித்தான். எனவே, விருப்பமில்லா வேலை களில்-தான் பாமரர்க்கு வெள்ளையனிடம் வேலையே இருந்தது! மக்களில் பெரும்பாலோர் வெள்ளையனைப் பார்த்ததுகூட கிடையாது! எந்தப் புதுமைக்கும் தங்களை உட்படுத்திக் கொள்ளாது அந்த எளிய கிராமவாசிகள் பலருக்கு வெள்ளை யன் ஒரு சாத்தானாகத் தோன்றியது நியாயமே.

மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள ஆங்கிலேயர், கடலைப் போன்ற ஒரு இனத்தைக் கட்டி ஆளமுடிகிறது என்ற உண்மை ஒரு உயர்வு மனப்பான்மையைத் தோற்றுவிக்கும். எந்த இனமும் வெற்றி மகிழ்ச்சியில், இப்பிடித்தங்களைக் கருதிக் கொள்வது வழக்கந்தான். ஓரிரண்டு தலைமுறைகளுக்குமுன்

வெள்ளையருக்கும், இந்தியருக்கும் நிலவிய சமூக உறவு இப்பொழுது ஏனோ முறிந்துவிட்டது. தான் ஆள்பவன் என்ற மமதையும், தாய் நாட்டுடன் ஏற்பட்ட விரைவுத் தொடர்பும் அவனை இழுத்துப் பிடித்தன. பல இந்திய அதிகாரிகளும், ஊர்ப் பெரிய மனிதர்களும் வெள்ளையர் முன் அச்சத்துடனும், பயபக்தியுடனுந்தான் நின்றனர். இரு இனங்களுக்கிடையே ஆங்காங்கே நல்ல நட்பும் நிலவாமல் இல்லை. ஆனால், சந்தேகச் சூழ்நிலையில் நடைபெறும் நல்ல செயல்கள் மக்கள் மனதைக் கவருவதில்லை. அவன் எதிரி.........எப்பொழுதும் தீங்கே இழைப்பான்.........என்று மக்கள் காத்திருந்தனர். 'நம் இனத்தைக் கண்டு பலர் பயப்பட்டதாகத் தெரியவில்லை. அனைவரும் வெறுக்கிறார்கள் என்றே தெரிகிறது. அவ்விழியின் மொழியை யார் சந்தேகிக்க முடியும்?' இவ்வாறு காசிக்குச் செல்லும்போது தான் கண்ட காட்சியை ரஸ்ஸல் என்ற டைம்ஸ் பத்திரிக்கை நிருபர் எழுதினார்.

நிர்வாகத்தில் துணை கலெக்டர் பதவியும், நீதித் துறையில் சதர் அமின் பதவியும், படையில் சுபேதார் பதவியுந்தான் இந்தியர்கள் பெற முடிந்த உயர்ந்த பதவிகள். ஒரு காலத்தில் விருதுகள் பெற்றவர்களும், மாநிலங்களை நிர்வாகித்தவர்களும், படைகளை நடத்தியவர்களும் இக் கீழ்நிலைக்குத் தாங்கள் தள்ளப்பட்டதை எண்ணிப் பெருமூச்சு விட்டனர்!

## (ஐ) ஆங்கிலச் சட்டம்

இந்தியச் சீமான்கள், இந்து வென்றாலும், முஸ்லீம் என்றாலும் ஒன்றைக் கண்டு மட்டும் மிகவும் பொருமினார்கள். வெள்ளையன் சட்டத்திற்குமுன் சீமானும், ஏழையும் ஒன்று. தேவைபட்டால், உயர்குடி மக்கள் வழக்கு மன்றத்திற்கு நேரடியாக வந்தாக வேண்டும். பல்லாண்டு அனுபவித்த இவ்வுரிமையும் பறிக்கப்பட்டது; அவனைக் குடைந்தது. லக்னோவின் வாலி (Birjie Qadr) தன்னுடைய பிரகடனத்தில் இதையே கோடிட்டு குறிப்பிட்டான் 'எல்லா' இந்துக்களுக்கும், முகமதியர்களுக்கும் விரும்பிய தேவைகள் நான்குண்டு. முதலாவது மதம்; இரண்டாவது கௌரவம்; மூன்றாவது உயிர்; நான்காவது சொத்து. சுதேசி ஆட்சிகளில் இந்நான்கும் பாதுகாக்கப்பட்டன. இந்து, முஸ்லிம் உயர் சாதியினரும், மேற் குடியினரும் முந்தைய ஆட்சிகளில் கௌரவத்துடன் நடத்தப்பட்டனர். ஆனால், இப்பொழுது வெள்ளையராட்சியில் சாமான்யர்களுக்குச் சமமாக உயர் குடியும் அமிழ்த்தப்பட்டு விட்டது. 'இப்பிரகடனம் இந்தியாவின் அன்றைய நிலை

மையை எடுத்துக் காட்டுகிறது. நொந்து விட்ட உயர் குடியின் உள்ளத்திற்கு விடுக்கப்பட்ட அழைப்பு இது. தங்களின் இழந்த கௌரவத்தை நிலைநாட்ட, என்றென்றும் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் நிலைக்க, இவ்வழைப்பை ஏற்று அவர்களும் புரட்சியில் குதித்தனர். எசமானர் இறங்கிய பாதையில் வேலைக்காரனும் இறங்கினுன். சுயநலக் கும்பலுக்குப் புரட்சிச் சரியான விருந்து! இல்லை! சுயநலக் கும்பல் தான் அதை உருவாக்கியது! சமநீதி ஆங்கிலேயன் கொடுத்த பரிசே!

ஆனுல், இச் சட்ட முறைகள் ஏழைகளுக்குப் பயன் தர வில்லை. ஆங்கிலச் சட்டத்தின் சுற்று வளைவுகளை ஏழை இந்தியனுல் புரிந்து கொள்ள முடியவில்லை. நீதி மன்றங்களில் கீழ் மட்டத்திலிருந்த (சுதேசி) அதிகாரிகளும், காவலர்களும், ஏழைகளின் அறியாமையைப் பயன் படுத்திக் கையூட்டு வாங் கினர். லேவா தேவிக்காரர்களிடமிருந்து எளியவர்களால் தப்ப முடியாமல் நீதி மன்றத்தின் துணையை நாடினுல், கையூட்டுக் கொடுக்கப் பணமில்லை. சாட்சிகளை விலை கொடுத்து வாங்கும் சக்தி எதிரிகளிடமே இருந்தது. உயர் அதிகாரிகளே இதில் பங்கு பெறுகிருர்கள் என்று மக்கள் தவருக நம்பினர். எனவே, ஆங்கில நீதிமுறை புதிராக இருந்ததுடன், தமக்கு எதிராகவும் இருப்பதைக் கண்டு மக்கள் ஆத்திரமடைந்தனர்!

(௫) பொருளாதாரக் குறைகள்

மக்களின் வெறுப்பை அதிகப்படுத்திய அரசாங்க நட வடிக்கைகளில் நில விற்பனைச் சட்டம் ஒன்ருகும். இதுவரை ஒரு நிலக்கிழார் கடன் பட்டாலோ, வரி பாக்கி வைத்திருந் தாலோ அவனைக் கைது செய்யலாம். அவனுடைய உறவி னர்கள் பாக்கியைக் கட்டி அவனை மீட்டுச் செல்லலாம். பணத்திற்குப் பதில் தானியமாகவே அவர்கள் கொடுத்து வந்தார்கள். இது மிகவும் தொல்லையான முறை என்று கருதி அரசு வேறு எளிதான புது முறையைப் புகுத்தியது. நிலத்தில் வருமானம் சரியில்லை யென்ருல், கடன்களையும் பாக்கிகளையும் அவன் கட்ட முடியவில்லை யென்ருல், நிலத்தை விற்கலாம் என்று புதுச் சட்டங் கூறியது. நிலத்தை இழப்பதற்கு அவன் மனஞ் சம்மதிக்காது. தன் கௌரவத்தின் சின்னமாக நிலத்தை அவன் பேணியதால், நிலத்தை விற்று கௌரவத்தை இழக்க அவன் விரும்பவில்லை. நிலத்தை விற்க வேண்டிய சூழலுக்குப் பலர் தள்ளப்பட்டனர். நிலத் தீர்வையை நிர்ணயம் செய்ய அனுப்பப்பட்ட அதிகாரிகள் அரசின் நன்மதிப்பைப் பெறவும்,

பதவி உயர்வு பெறவும் நிலக்கிழார்களை நெருக்கித் தீர்வையை நிர்ணயித்தனர். அறுவடை நன்றாக இருந்தால் அவன் தப்பித்தான். பருவநிலை தவறினால், அரசுக்குச் செலுத்த வேண்டியதைச் செலுத்த முடியாது. தன் நிலையை விளக்கி விண்ணப்பம் அனுப்புவதற்கும் அதிகச் செலவாகியது. நெருக்கடியிலிருந்து மீள, அவமானத்திற்கு உள்ளாகாமல் இருக்க, ஒரு பகுதி நிலத்தையோ, குடும்ப நகைகளையோ, பிரியமான குதிரைகளையோ அவன் விற்றுத்தான் ஆக வேண்டும். இவர்களுக்கெல்லாம் புரட்சி வரப்பிரசாதமாக இருந்தது! தாலுக்தார்களிடமிருந்து நிலத்தைப் பெற்று ஜமீன்தார்கள் அனுபவித்தனர். அந்த ஜமீன்தார்களும் நெருக்கடிக்காளானதால் தாலுக்தார்களும் இன்னல்களுக்கு உள்ளாயினர்.

லேவாதேவிக்காரர்களும் நீதி மன்றத்தின் உதவியில் தங்களிடம் கடன்பட்ட விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்தனர். விவசாயி நிலத்தை விற்றுக் கடனை அடைக்க வேண்டும் அல்லது கடன்காரர்களுக்கு நிலத்தைக் கொடுத்து விட வேண்டும். இவ்விதம் நிலக்கிழார்களும், விவசாயிகளும் நில விற்பனைச் சட்டத்தின் மூலம், தங்கள் கடனை அடைப்பதற்கு நிலத்தை விற்றே ஆக வேண்டும், என்ற நிலைக்குக் கொண்டு வரப்பட்டனர். இந்த இரு வர்க்கத்தினரும், நூற்றாண்டு காலமாகப் பிணைக்கப்பட்டிருந்தனர். இருவரின் நிலையும் அபாய எல்லையைத் தொட்டதால், இருவருமே புரட்சிக்கு ஆதரவு அளித்தனர்! ஜமீன்தாரருக்குக் கீழ் பல இன்னல்களைக் குடியானவன் இதற்கு முன் அனுபவித்திருந்தாலும், அபாய காலத்தில் ஓரளவு பாதுகாப்பும் பழைய முறையில் பெற்றிருந்தான். வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் மக்களிடம் வேறு பிணைப்பு எதுவும் பெற்றிருக்கவில்லை, முதல் தேறவில்லை, என்ற காரணங்களால் பலருடைய நிலங்களையும் இப்புது வர்க்கத்தினர் அபகரித்தனர். அரசின் இம் முறைகள் இன்றைய நிலையில் நல்ல சீர்திருத்தங்களே ஆகும். ஆனால், பல காலம் நிலவிய பொருளாதார — விவசாய — சமூகக் கட்டுக்கோப்பு இதனால் உடைக்கப் பட்டது. நன்மைக்காக எனினும் அன்றைய சூழலில் எதிர்ப்புகளை அது உருவாக்கி விட்டது.

ஈராயிரம் ஆண்டுகளாக நிலவிய வர்க்கப் பிரிவினையைச் சாதிப் பிரிவினையை அழியவிடாமல் காப்பதற்காகத்தான் முயற்சிகள் நடந்தன. இதோ ஆஸம்கர் புரட்சித் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கை 'ஜமீன்தார்களே! ஆங்கில ஆட்சியில் உங்கள் நிலங்கள் அதிகத் தீர்வை பெறுகின்றன.

இதனால் நீங்கள் அழிந்தீர்கள். ஒரு இழிந்த தொழிலாளியோ, வேலைக்காரன், வேலைக்காரியோ உங்கள் மேல் வழக்குத் தொடர்ந்தால் எந்த விசாரணையுமின்றி நீங்கள் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவமானத்திற்குள்ளாகிறீர்கள். நீங்கள் ஏதாவது வழக்குத் தொடர வேண்டுமானால் பத்திரக் கட்டணம் (Stamp paper), நீதிமன்றக் கட்டணம் (Court fee) என்று செலவுகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்கள். சாலைகளுக்கும், பள்ளிகளுக்கும் வரி செலுத்த வேண்டியிருக்கிறது. வியாபாரிகளே! ஆங்கிலப் பொய்யர்கள் இலாபமளிக்கும் இண்டிகோ, அபினி, துணி ஆகிய வாணிகத்தை அவர்களே எடுத்துக் கொண்டு சாதாரணப் பொருட்களையே உங்களின் வாணிகத்திற்கு விட்டிருக்கிறார்கள். ஜமீன்தாரர்களைப்போல நீங்களும் அவதிப்படுகிறீர்கள். இழிந்த மக்களின் வழக்குகளில் நீங்கள் அவமானப்பட்டுச் சிறையிலிடப்பட்டு இன்னலுக்கு உள்ளாகின்றீர்கள். அரசாங்க ஊழியர்களே! நீங்கள் எவ்வளவு முயன்றாலும் இராணுவத்தில் சுபேதார் பதவிக்கும், நீதித் துறையில் சதர் அமின் பதவிக்குந்தான் உயர முடியும். தொழிலாளர்களே! ஐரோப்பியர் தங்களுக்குத் தேவையான பலவற்றைத் தங்கள் நாட்டிலிருந்து பெறுகிறார்கள். சிறிதளவு தான் உங்களிடம் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்து பண்டிதர்களே! முஸ்லிம் மௌல்விகளே! ஆங்கிலேயர் உங்கள் மதத்தின் எதிரிகள். எங்களுடன் சேர்ந்து இறைவனின் திருவருளைப் பெறுங்கள். இல்லையேல் நீங்கள் பாவிகள் ஆவீர்கள்!'

இவ்விதம் நிலச்சுவான்தார்களும், விவசாயிகளும் நிலங்களை இழந்தனர். தலையாரிகள் வேலைகளை இழந்தனர். அதிகாரிகள் பெரும் பதவிகளை இழந்தனர். சீமான்கள் கௌரவத்தை இழந்தனர். இன்னல்களில் அழுத்தி மதமாற்றத்திற்கு இரையாக்கப்படுவோம் என்று அனைவரும் பீதியடைந்தனர். மதமாற்றத்தைத் தவிர்க்க, இழந்த பதவிகளையும், தகுதிகளையும், கௌரவத்தையும் பெற, கடனிலிருந்து தப்பிக்கச் சாதி வேறுபாடுகளை மீண்டும் பேண முடிந்தால், அகப்பட்டதைச் சுருட்டப் பலரும் புரட்சியில் பங்கு கொண்டனர்.

# 4. இந்தியப் படையின் வரலாறு

[படையின் தோற்றம்—சுதேசி அதிகாரிகள் ஒதுக்கப்படல்—படையில் சாதித் தோற்ற மாற்றம்—வேலூர்க் கலகம்—மாறிய உறவுகள்—கடல் கடக்க மறுப்பு—அதிகாரிகள், சிப்பாய்கள் பிரிவு — வடமேற்குப் போர்கள் — படையின் அமைப்பு — ஆப்கானியப் போர்—பாட்னைசதி—போலாரம் நிகழ்ச்சி—பொதுப்படைச் சட்டம்—ஊதியமும், ஒப்புப் பணமும்.]

ஒரு காலத்தில் ஆங்கிலேயரின் இந்தியப்படையில் மூவாயிரம் வீரர்களே இருந்தனர். அதில் ஆங்கில வீரர்களின் எண்ணிக்கை மிகவுங் குறைவு. இங்கிலாந்தின் மக்கள் தொகையோ, இந்தியாவின் வருவாயோ முழுதும் ஆங்கில வீரர்களான ஒரு படையை ஏற்படுத்த முடியாது. இந்தியச் சிப்பாய்கள் மிகுந்த நம்பிக்கைக்குரியவர்கள், விசுவாசம் மிக்கவர்கள் என்பதில் ஆங்கிலேயருக்கு ஐயமெதுவுமில்லை. 'முணு முணுப்பு எதுவுமின்றி இடர்ப்பாடுகளைத் தாங்குவதிலும், பயம் சிறிதுமின்றி மரணத்தைத் தழுவுவதிலும் யாருக்கும் அவர்கள் பின் தங்கியவர்களல்ல. தன்னை நடத்தும் தளபதிகள் வேற்று இனத்தவராக—வெள்ளை இனத்தவராக இருந்தும், அவர்களை மதித்துத்தான் நேசித்தார்கள். ஆங்கில வீரமும், திறமையும் தோல்வியடைந்த இடங்களில், இந்திய வீரர்கள் தன் அணியின் கொடியை நாட்டியிருக்கிறார்கள் (சர். J. W. கே). அத்துடன் அவ் வப்பொழுது போர்த்தேவைகளுக்கு ஏற்ப தன் எளிய சேமிப்பையும் இந்திய சிப்பாய்கள் தந்து உதவியிருக்கிறார்கள். எனவே, ஒரு நூற்றாண்டின் வரலாறு இந்தியருடைய விசுவாசத்தை நன்கு வெளிகாட்டும்.

### படையின் தோற்றம்

ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரர்களும் கர்நாடகத்தில் போரிட்ட காலத்தில்தான் (18ஆம் நூற்றாண்டின் நடுவில்) இந்திய வீரர்கள் ஐரோப்பியரால் எடுத்துக் கொள்ளப்பட்டனர். துணைபுரிய சேர்க்கப்பட்டு, பின், தகுதியுடைய

வர்கள் என்று கருதப்பட்டு, பின்னர் பெரும் அளவில் பயிற்சி யளிக்கப்பட்டனர். ஆர்க்காட்டிலும், கடலூரிலும் அவர்கள் காட்டிய வீரமும், சிறந்த ஃபிரெஞ்சுக்காரர்களை எதிர்த்தத் துணிவும் அவர்களுக்கு நன்மதிப்பைத் தேடித் தந்தன. பல தருணங்களில் இந்தியப் படை அதிகாரிக்குக் கீழ் ஆங்கில வீரன் போர் புரிவது அவமானமாகக் கொள்ளப்படவில்லை. அப்பொழுது தெல்லாம் கருப்புத் தளபதி உயர்ந்த தகுதியில் இருந்தான்.

வங்காளத்தின் 'இருட்டறை துயர நிகழ்ச்சி'ச் சென்னை ராபர்ட் கிளைவின் உதவியை எதிர்பார்த்தது. வங்காளக் கருப்பர்களைப் பழிவாங்க, கிளைவ் தம் வெள்ளை வீரர்களுடன் சென்னையிலிருந்த 14 சுதேசி அணிகளில் இரண்டையும் அழைத்துச் சென்றார். (அப்பொழுது வங்காளத்தில் எந்தச் சுதேசிப் படையும் தோற்றுவிக்கப்படவில்லை.)அங்கே தேவைக் கேற்ப வங்காளிகளையும் படையில் சேர்த்தார். கிளைவின் ஆங்கில வீரர்களும், சென்னை வங்காள சுதேசி வீரர்களும் தோளுடன் தோள் நின்று 1757 விளாசிப் போரில் எதிரிகளை முறியடித்தனர். அடுத்த எட்டு ஆண்டுகளில் வங்காளம் ஆங்கிலேயர் வசமானதுடன், ஒன்றிலிருந்து 19ஆக வங்காள அணிகள் பெருகின. இவ் விதம், சென்னை சுதேசி அணி களுக்குப் பின் வங்காள சுதேசி அணிகளும் பெருகின.

எந்தத் தொல்லையுந் தராத அவ்வீரர்களின் பழக்க வழக் கங்களில் வெள்ளைப்படைத் தளபதிகள் குறுக்கிடுவ தில்லை. அச் சிப்பாய்கள் வித விதமான மொழிகள் பேசினர்; வெவ் வேறு மதங்களைச் சார்ந்தனர்; பலவிதமாய் உடுத்தினர். தங்கள் கிராமங்களில் சாதிக் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்ததைப் போல படையிலும் அக் கட்டுப்பாடுகளைப் பேணிக் காத்தனர். தங்களுக்கான குடிசைகளில் தனித் தனியாகவே சமைத்து உண்டனர். அவர்களின் புறத்தோற்றமோ, மதக் கோட் பாடுகளோ அப்பொழுதெல்லாம் ஆங்கிலேயருக்குப் பிரச்சனை யாக இல்லை. அவைகளைப் பற்றி அவர்கள் கவலைப் படவும் இல்லை. வீரர்களும், உப்பீட்டவருக்கு நன்றியுடன் நடக்க வேண்டும் என்பதை வாழ்வின் நெறி என்று கொண்டிருந் தார்கள். ஆனால், அனுமதிக்கப்பட்டச் சலுகைகள் குறைக்கப் பட்டால் முரண்டு செய்யுங் குணம் மட்டும் அவர்களிடம் இருந்தது. அத்துடன் படையின் ஒழுக்கம் மீறப்பட்டால் கடுமையான தண்டனை கிடைக்கும் என்பதையும் விரைவில் தெரிந்து கொண்டார்கள்!

**சுதேசி அதிகாரிகள் ஒதுக்கப்படல்**

கிழக்கிந்திய நிறுவனத்தின் வாணிகம் பெருகியதும், எல்லைகள் விரிந்ததும் இங்கிலாந்திலிருந்து பலர் இங்கே வரத் தொடங்கினர். இவர்களின் வரவால் படையில் சில மாறுதல்கள் தோன்றின. பல அணிகளில் சுதேசி அதிகாரிகளின் இடத்தை வெள்ளையர்கள் ஆக்ரமித்தனர். ஆங்கிலேயரின் தொடக்கக்கால வெற்றிகள் பல அதிகாரிகளுக்கு இறுமாப்பை வளர்த்தன. இந்தியர்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று நம்பினார்கள். எனவே, படையிலிருந்த உயர் பதவிகள் அனைத்தும் அவர்களுக்கே அளிக்கப்பட்டன.

தனிப்பட்ட வீரச் செயல்களுக்குப் பாராட்டும், அதனால் கிடைக்கும் அதிகாரமும் இனி இந்தியர்களுக்குக் கிடைக்காது என்று தெரிந்ததால், போர்த்தொழிலைப் பெருமையாகக் கொண்டவர்களும், உயர் மட்டத்தினரும் ஆங்கிலேயரின் படையில் சேர்வதை நிறுத்திப் பிற சுதேசி அரசர்களுக்குக் கீழ் பணிபுரிய விரும்பிச் சேர்ந்தனர். எனவே, சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் உள்ளவர்களைப் படையில் சேர்க்க ஆங்கிலேயர் ஆரம்பித்தனர்.

**படையில் சாதி**

இவ்விதம் படையில் பல ரகத்தினர் இருந்தனர். பிராமணனும், தாழ்த்தப்பட்டவனும் ஒன்றாகப் பயிற்சிப் பெற்றனர்—போரிட்டனர்—ஆனால், சில குடியிருப்பு வரிசைகளில் அவ் விருவருக்கிடையே அப் பழந்திரை......சாதித்திரை......... கிழியாமல் தொங்கியது! கர்நாடகத்தை விட வங்காளத்தில் 'உயர்' சாதியைச் சார்ந்தவர்கள் சுதேசிப் படையில் அதிகம் இருந்தனர். வங்காளப்படை என்று அழைக்கப்பட்டாலும் அது முழுவதும் வங்காளிகளால் ஆன படையல்ல. முஸ்லிம்களின் படை யெடுப்புகளின்போது ரோகில் கண்ட், அயோத்தி ஆகிய பகுதிகளிலிருந்து வந்து, வங்காளத்தில் போர்த் தொழிலில் ஈடுபட்ட ஜாத்கள், இராஜ புத்திரர்கள், பதான் முஸ்லிம்கள், பிராமணர்கள் ஆகிய பல இனத்தவர்கள் அதில் இருந்தனர்.

**படையில் மாற்றங்கள்**

இந்தச் சுதேசிப்படைகளை நடத்தியவர்கள் ஆங்கில வீரர்களிலேயே சிறந்த அதிகாரிகள்தான். வீரர்களின் பழக்க வழக்கங்களை, மொழிகளை, உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்கள்.

ஆனால், இத்தகையச் சிறந்தவர்களை மட்டும் பொறுப்பிலிருத்தும் முறை, நாளடைவில் மறைந்தது. ஆங்கிலேயர் எண்ணிக்கையில் அதிகமானதும், கூடுதல் சேவை காலத்தை (Seniority) கணக்கிட்டு அவர்களையே சுதேசிப்படையின் அதிகாரிகளாக நியமிக்கும் பழக்கம் மேற் கொள்ளப் பட்டது. இதனால், திறமையற்ற—பொறுமையற்ற—பலர் சந்தர்ப்பம் பெற்றனர். இதே காலத்தில் ஆங்கிலேயரின் ஆட்சி விரிவடையத் தொடங்கியது. படை பலம் அதிகமாகியது. போர்களும் அடிக்கடி நிகழ்ந்தன. சூழ்நிலைக் கேற்பப் பல மாறுதல்களைப் படையின் ஒழுக்கத்திலும், நிர்வாகத்திலும், தோற்றத்திலும் செய்ய வேண்டியதாயிற்று.

### தோற்ற மாற்றம் சென்னைப் படையில்

முதலாவதாக ஐரோப்பிய முறையில் போர்ப்பயிற்சி அளிக்கப் பட்டது. அதற் கேற்றவாறு சில அணி கலன்களையும் அலங்காரத்தையும் நீக்கவேண்டிய நிர்ப்பந்தம் தொடர்ந்தது. சென்னைப்படைக்கும் கீழ்க்கண்ட கட்டளை கொடுக்கப் பட்டது. ‘சிப்பாய்கள் தங்களின் சாதியைக் காட்டுங் குறிகளை' நெற்றியில் விட்டுக் கொள்ளக் கூடாது. படை, சீருடையில் இருக்கும் போது காதணிகளைக் கழற்றிவிட வேண்டும். கடமையிலிருக்கும் போது எல்லா வீரர்களும் தங்களின் முகத்தை நன்கு மழித்திருக்க வேண்டும். முடிந்த வரையில் மீசையின் அளவும், உருவமும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். இத்துடன் வட்டத் தொப்பியும், தோலால் செய்யப்பட்ட அடையாள சூட்டும் (Cockade) அணிந்திருக்க வேண்டும்.' அது தலைப் பாகையல்ல, தொப்பி என்பதைச் சிப்பாய் அறிந்தான். தொப்பிக்காரன் என்றால் அவர்கள் மொழியில் வெள்ளைக் காரன் என்று பொருள்! வெள்ளைப் பழக்க வழக்கங்கள் என்றால் சாதியைக் கெடுப்பவன் என்றும் பொருள்! முஸ்லிம்களுக்குத் தாடி ஒரு மதச் சின்னம். இந்துக்களுக்குத் திருநீறும், நாமமும் மத அடையாளங்கள். இருவருக்கும் தொப்பிகள் மாடு அல்லது பன்றித் தோலால் ஆனவை என்ற சந்தேகம்! அதிர்ச்சிக்குக் காரணங்கள் இவை போதுமே !

### வீரர்களின் பீதி

**1806**-ல் தொடக்கத்தில் சிப்பாய்கள் இம்மாறுதல்களை விரும்ப வில்லை என்று தெரிந்தது. இந்து-முஸ்லிம் சிப்பாய்கள் கிறித்துவ எசமானனின் போக்கைச் சந்தேகித்தனர். அக் கோடைகாலத்தில் அணிவகுப்புகள் அடிக்கடி நடைபெறுவ

தில்லை. ஆதலால், வீரர்களுக்கு ஓய்வும், கூடிப்பேசச் சந்தர்ப்பங்களும் அதிகம் கிடைத்தன. என்ன பேசியிருப்பார்கள்? 'என் சொந்தக்காரர்கள் என்னை ஏதோ சந்தேகத்துடன் பார்க்கின்றனர்' என்பான் ஒருவன்! 'நீறில்லா நெற்றிப் பாழ் என்று என் அம்மா திட்டுகிறாள்' என்பான் மற்றொருவன்! 'தாடியில்லாத நீ ஒரு முஸ்லிமா? என்று தன் தந்தை திட்டினார்' என்பான் மற்றொருவன்! இவ்வாறு 'மிலேச்சர்கள்' ஆகிவிட்டோமோ என்ற அச்சம் சிப்பாய்களைப் பற்றியது. மாலையில் கடை வீதியில் என்ன பேசுகிறார்கள்? என்று உன்னிப்பாய் ஒவ்வொரு சிப்பாயுங் கேட்பான்; இரவில் தன் ஓலைக் குடிசையில் படுத்துக்கொண்டு வெகு நேரம் கூரையைப் பார்ப்பான்; காலையில் தன் தோழர்களிடம் இதைப் பற்றிப் பேசுவான்!

இதே சமயத்தில் தென்னகத்தின் பல இடங்களில் மர்ம முஸ்லிம் துறவிகள் உலவினார்கள். அவர்களின் கண்டனங்களும், தீர்க்க தரிசனங்களும் உணர்ச்சியைத் தூண்டின. 'நாட்டைப் பறித்தவன் மதத்தையும் பறிக்கக் காத்திருக்கிறான். நாமெல்லாம் கிறித்துவர்கள் ஆக்கப்படுவோம். மிலேச்சர்கள் ஆவோம்' என்றெல்லாம் பேசியிருப்பார்கள்! ஊர்ச்சுவர்களில் கண்டன அறிக்கைகள் சில மாயமாய்த் தோன்றி மறைந்தன. திருவிழாக்களில் பொம்மலாட்டங்கள் புதுக் கதைகள் கூறின. (மொகலாயருக்கு நேரும் அவமானத்தையும், பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரைத் தோற்கடிப்பதையும் இக் கதைகள் கூறின.) நாட்டுப் பாடல்களில் இரகசியமாய் கருத்துகள் மறைந் திருந்தன. குறிப்பாக, படைகள் குவிக்கப்பட்டுள்ள ஊர்களில் ஏதோ நடக்கக் காத்திருக்கிறது; என்ற உணர்வு சூழ்ந்து விட்டது. (இந்த அளவு சூழ்நிலை உருவாகியிருந்ததா? என்ற ஐயம் தோன்றுகிறது. ஆங்கிலேயரின் பிரதிநிதிபோல் அப்பொழுது மைசூரிலிருந்த மார்க் வில்க்ஸ் (Mark Wilks) என்ற தென்னிந்திய வரலாற்று ஆசிரியர் இச் சூழ்நிலையைப் புரட்சியின் முன்னோடியாக எடுக்க வேண்டியது இல்லை யென்றும், ஆங்கில அதிகாரிகளின் ஐயம் தேவையில்லாத கற்பனைக்கு இழுத்துச் சென்றிருக்கிறது என்றுங் கூறி ஒதுக்குகிறார்.)

சிப்பாயின் புறத்தோற்ற மாறுதல்கள் வெறுக்கப்பட்டன; என்றால், வெள்ளையர்களின் நடத்தை அதை மேலும் வளர்த்தது. எப்பாடு பட்டாலும் சுபேதார் பதவிக்கு மேல் இந்தியனால் உயர முடியாது. வெள்ளையதிகாரியைக் கண்டதும்

கடமையிலிருக்கும் சிப்பாய் மரியாதை செலுத்தும் போது ஒரு சாதாரண வெள்ளை வீரன் படைவணக்கங் கூட செலுத்துவது இல்லை; என்ற நிலைக்கு வந்து விட்டது. அனுபவமும், வயதும் மிக்க சுதேசி அதிகாரிகளைக்கூட எல்லோருடைய முன் னிலையில் நேற்று வந்த இளம் வெள்ளையதிகாரி திட்டுவது வழக்கமாகி விட்டது. சுதேசி அதிகாரிகள் போர் முகாங்களில் கூட சிப்பாய்களின் கூடாரங்களில்தான் தங்க வேண்டும். அதி காரி என்பதற்குரிய வசதிகள் எதுவுந் தரப்படவில்லை. இந்தியா விற்கு வந்ததும் தாங்கள் கற்கும் கெட்ட வார்த்தைகளில் பணி யாட்களைத் திட்டுவது சில வெள்ளை அதிகாரிகளுக்குப் பழக்க மாகிவிட்டது. சிப்பாய்களுக்கு இன்னும் என்னென்னவோ குறைகள்! ஒரு சுதேசி அதிகாரிக்கு ஆங்கிலேயரின் காமக் கிழத்திகளைவிட குறைந்த வருமானம்! ஆங்கிலச் சீமானின் வேலைக்காரனும் தோட்டக்காரனும் சிப்பாயை விட அதிகம் பெறுகிறான். நாட்டில் கிடைக்கும் அழகு மிக்கப் பெண்களை அவர்கள் பெறுகிறார்கள். அவர்களைப் பார்ப்பதுங் கூட ஒரு குற்றம். அத்துடன், ஜெனரல் ஆர்தர் வெல்லெஸ்லி போரில் காயமடைந்த வீரர்களைச் சுட்டுக் கொல்லும்படி இரக்க மின்றி உத்திரவிட்டிருந்தார். ஏற்கனவே மனம் வெதும்பிய சிப்பாய்களுக்கு இப்புறத்தோற்ற மாறுதல்கள் பெரிடியாகத் தோன்றின. வசதிகளும், உரிமைகளும், பதவி உயர்வுகளும் நிராகரிக்கப் பட்டதால் அவர்கள் கிளர்ந்தெழவில்லை. புதுத் தோற்றம், புது மதமாற்றச் சின்னம் என்று தவறாக எண்ணி அதிர்ச்சி அடைந்தார்கள்! எதை இழந்தாலும் மதத்தை இழக்க அவர்கள் தயாராயில்லை. இதற்கு என்ன செய்வது? குழம்பிக் கிடந்த சிப்பாய்களுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது.

## வேலூர் கலகம்

சீரங்கப்பட்டினத்தில் தோற்று, கொல்லப்பட்ட திப்புச் சுல்தானின் குடும்பம், ஆங்கிலேயரின் பராமரிப்பில் அப் பொழுது வேலூர் கோட்டையில் இருந்து வந்தது. படையில் முஸ்லிம்கள் அதிகம் இருந்ததால் மீண்டும் ஒரு முஸ்லிம் அர சைக் கொண்டு வருவது சாத்தியப் படலாம். குழம்பிக்கிடந்த படை வீரர்களைத் திப்புவின் குடும்பத்தினர் பயன்படுத்தினர்.* 'வேலூர் கோட்டைக்குள் விந்தை மனிதர்கள் வந்து போயி னர்'. என்கிற வதந்தி பரவியிருந்தது. ஏதோ சதி உருவாகி யிருந்தது போலும். 1806 ஜூலை 10ஆம் நாள் இரவு இரண்டு

* ஒரு சூழ்ச்சி உருவாக்கப்பட்டதா என்பதைப் பற்றி கருத்து வேறு பாடுகள் உண்டு.

மணிக்கு திட்டப்படி, சிப்பாய்களின் துப்பாக்கிகள் வெடித்தன. திப்புவின் மூன்றாவது மகன் அவர்களை உற்சாகப் படுத்தினன். 'தீன்! தீன்!' என்ற குரலெழும்பியது. சிப்பாய்கள் மூர்க்கதனமாய்ப் பாய்ந்தனர். தூங்கிக் கொண்டிருந்த ஆங்கில அதிகாரிகள், காவலிலிருந்த வீரர்கள் பலர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். மைசூர் திப்புவின் புலிக் கொடி கோட்டையில் ஏற்றப் பட்டது. விடிந்ததும், ஆர்க்காட்டுப் படைகள் கர்னல் கிலிஸ்பியின் (Gillespie) தலைமையில் வந்தன. தீப்பொறி பறக்க கோட்டைக் கதவுகள் உடைக்கப்பட்டு உள்ளே நுழைந்த இப்படைகள் கண் மண் தெரியாமல் பழி வாங்கின. வேலூர், மிரட்சியுடன் இக் கோர நாடகத்தைப் பார்த்தது!

வேலூர் கலகத்தைத் தொடர்ந்து, ஹைதராபாத், நந்திதுர்க் (பெங்களூர் அருகில்), பாளையங் கோட்டை வாலாஜாபாத் ஆகிய படைத்தளங்களிலும் அபாய நிலை தோன்றி மறைந்தது. 6 மாதங்களுக்குப் பின் சென்னை அரசாங்கம் ஓர் அறிக்கை வெளி யிட்டது. ஆங்கில அரசுக்கு மத மாற்றத்தில் சிறிதும் தொடர்பில்லை என்பதைத் தெளிவாகக் கூறிய அவ் வறிக்கை இந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் நாட்டின் எல்லா வீரர்களும் அறியும்படி அனுப்பப்பட்டது. திப்புவின் குடும்பம் வேலூர் கோட்டையில் இருந்ததற்கும், சிப்பாய் புறத்தோற்ற மாறுதல்கள் புகுத்தப்படுவதற்கும் சரியாக இருந்தது போலும்! மக்களோ எல்லா வதந்திகளையும் நம்பினர். புதிதாகக் காய்ச்சப்பட்ட உப்பிலே பன்றியின் இரத்தத்தையும், பசுவின் இரத்தத்தையும் பரங்கியர் தெளித்திருக்கிறார்கள் என்று உப்பைப் பலர் பயன்படுத்த மறுத்தனர். சிங்களத்தீவில் எல்லா ஊர்களிலும் கிறித்துவ ஆலயங்கள் கட்டப்படுவதற்கு முயற்சிகள் நடக்கின்றன என்று பலர் நம்பினர். (உண்மையில் ஆங்கிலேயர் மதத்தைவிட வாணிகத்தை, இலாபத்தை, அரசியலைத்தான் அதிகம் விரும்பினர். தொட்டால் சிணுங்கியாக இந்தியர்கள் இருந்ததால் அரசின் எந்தச் செயலும் மிரட்சியை உண்டாக்கியது.)

**மாறிய உறவுகள்**

வேலூர் கலகத்திற்குப் பின் சிப்பாய்களின் மேல் ஆங்கில அதிகாரிகளுக்குச் சிறிது நம்பிக்கைக் குறைந்தது. அவர்களுக்குச் சிப்பாய்களின் சிரிப்பிலே ஏளனம் தொனித்தது! தோள்களின் குலுக்கலிலே அபாயம் தெரிந்தது! பரங்கியரின் கரங்கள் துப்பாக்கியிலும், வாளிலும், தூங்கும்போதுங்கூட

இருந்தன. ஆண்டுகள் சில கழிந்ததும் இப்பயமும் தெளிந்தது. வெள்ளை அதிகாரிகளும், இந்திய சிப்பாய்களும் மீண்டும் முன் போல பழக ஆரம்பித்தனர். குறித்த நாட்களில் கூலியும், ஓய்வு ஊதியமும் தவறாமல் கிடைத்ததால், பழைய நினைவுகள் மெல்ல மறைந்தன. அப்பொழுது, சிப்பாய் தன் சமுதாயம் உயர்ந்த நிலையில் இருப்பதாகக் கருதினான். ஆங்கிலச் சிப்பாய்கள், இங்கிலாந்தில் பிற துறைகளில் தோல்வியடைந்து வேறு வழியின்றி போர்த் தொழிலை ஏற்று இந்தியாவிற்கு வந்தனர். இந்திய வீரனின் நிலை அப்படியல்ல. சமுதாயத்தின் பிணைப்பை அறுத்துக் கொண்டு அவன் வரவில்லை. ஆங்கில அரசின் வீரனாக இருப்பது அவனுடைய குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிப்பதாக இருந்தது. விடுமுறை காலங்களில் வீடுநோக்கிச் செல்லுவான். ஒரே குடும்பத்தில் போர் வீரனாக ஓய்வு பெற்ற தாத்தாவும், படையில் தற்பொழுது பணிபுரியும் தந்தையும், படையில் சேரத்துடிக்கும் மகனும் இருப்பார்கள். ஆலமரத்தின் நிழலில், கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொண்டு, தான் சர் அயர் கூட்டின் படையில் பணியாற்றியதை, பிரெஞ்சுக்காரர்களோடு போரிட்டதை, ஹைதர் அலியை எதிர்த்ததை, திப்புவைத் தோற்கடித்ததைத் தாத்தா கதை கதையாய்ச் சொல்லுவார். இளைய வெல்லெஸ்லியைத் தந்தை புகழ்வான். கர்னல் துரை தங்களுடன் சேர்ந்து சுண்டல் தின்ற வியப்பான நிகழ்ச்சியைத் தந்தை கூற, மகன் இவற்றை யெல்லாங் கேட்டுத் தனக்கும் விரைவில் அப்போர் பணி கிட்டாதா! என்று ஏங்குவான். சிப்பாயாக இருப்பது குடும்பத்திற்கும், கிராமத்திற்கும், சமூகத்திற்கும் பெருமை தருந் தொழில் என்றே அக்காலத்தில் கருதப்பட்டது. யார் சார்பில், யாரை எதிர்த்து, போர் புரிகிறான்? என்பதெல்லாம் அவனுக்கு விளங்காது. நிலையான வருமானம் நீடிக்கும் பெருமை இதுவே என்பது அவன் மகிழ்ச்சிக்குக் காரணம். அம்மகிழ்ச்சி நிலைக்க ஆங்கிலேயரின் ஆட்சியும் நீடிக்க வேண்டும்!

சிப்பாயும், அவனுடைய வெள்ளை அதிகாரியும் மிக நெருக்கத்துடன் பழகினர். அதிகாரியும் வேறு எதன் மேலும் அக்கறை செலுத்தவில்லை. தன் வீரர்களுடன் பழகுவதையும், அவர்களின் குறைகளை அறிவதையும், முடியும்மட்டும் அவற்றைப் போக்குவதையுந்தான் தன் வாழ்வாகக் கொண்டிருந்தான். தாய் நாட்டுடன் தொடர்புகள் எதுவுமின்றி, ஆங்கிலப் பெண்களின், இலக்கியங்களின் சுவைகளையறியாமல், தன் கடமையிலும், படையிலுந்தான் அவன் நாட்டந் திருப்பப்பட்

டிருந்தது. சுதேசி அதிகாரி அடிக்கடி வெள்ளை மேலதிகாரியின் வீட்டுக்குச் செல்லுவான். படை வரிசையிலும், கடை வீதியிலும் உலவுகின்ற செய்திகளை ஆர்வத்துடன் அதிகாரி கேட்பான். வரப்போகும் போரில், தங்கள் படை அடுத்து எங்கே முகாமிடும்? என்பதைப்பற்றி யெல்லாம் அதிகாரி சொல்லுவான். இச்சந்திப்புகள்—உரையாடல்கள் இருவருக்குமே பிடித்தவை.

ஆனால், இந் நிலையும் வெகு நாட்களுக்கு நீடிக்க வில்லை. படை அமைப்பிற் சில மாறுதல்கள் நிகழ்ந்தன. சிப்பாய்களுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்த இவ் வாங்கிலேய அதிகாரியின் அதிகாரங்கள் தற்பொழுது குறைக்கப்பட்டன. முன்பெல்லாம் ஒரு அணியின் தலைவனை வெள்ளை அதிகாரியே நேரடியாக சிப்பாய்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதும், தண்டிப்பதும், வழக்கமாக இருந்தது. அந்த அதிகாரிகளின் பெயர்களைச் சொல்லித்தான் அவ்வணிகளை அழைப்பது வழக்கம். பல வெற்றிகள் தேடித் தந்த அவ்வீரத் தளபதியின் அணியில் தானும் இருப்பதை ஒவ்வொரு சிப்பாயும் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் சொல்லிக் கொள்ளுவர். இப் பொழுது அதிகாரங்கள் யாவும் மையத்தில் குவிக்கப்பட்டதால், தலைமையகத்தின் கட்டளைகளைத்தான் இவ்வதிகாரிகள் நிறைவேற்ற வேண்டியவர்களானார்கள். முன்பு மிக்க அதிகாரம் பெற்றிருந்த அத் தளபதிகளின் கைகள் பிணைக்கப்பட்டிருப்பதைச் சிப்பாய்கள் கண்டார்கள். அதனால், அதிகாரிகளின் மேலிருந்த நம்பிக்கையும், பயமும் அற்று விழத் தொடங்கின. தங்கள் தலைவனால் நன்மை செய்யமுடியாது, கண்டிக்கவும் முடியாது என்பதைச் சிப்பாய்கள் தெரிந்து கொண்டனர். அதிகாரமிழந்த அவ்வதிகாரிகளும் முன்பு போல் படையின் முன்னேற்றத்தில், சிப்பாய்களின் மகிழ்ச்சியில் அதிக அக்கரை செலுத்தவில்லை. இவ்விதம் சிப்பாய்களுக்கும், அவர்களின் தளபதியாக விளங்கும் ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் இடைவெளி ஏற்பட்டது. புதிதாக ஆங்கிலேயருக்குக் கிடைத்த தாய் நாட்டுச் சுவை இவ்விடை வெளியை மேலும் விரிவாக்கியது.

ஐரோப்பாவின் தொடர்பு விரைவாக்கப்பட்டு, விரிவாக்கப்பட்டது. ஆங்கில நூல்களும், செய்தித் தாள்களும் பெண்களும், இந்தியாவிற்கு அதிக அளவில் வரும் வாய்ப்புகள் ஏற்பட்டன. ஐரோப்பாவில் நடக்கும் நிகழ்ச்சிகள் ஒரே மாதத்தில் இந்தியாவை எட்டின. நெருங்கிப் பழகி வந்த சுதேசி அதிகாரியின் இடத்தை வெண்ணிற ஆங்கில

மங்கையர் பெற்றனர். கேளிக்கைச் சுவை குன்றத் தொடங்கியது! பல ஆங்கிலேயர்கள் இந்தியப் பெண்களிடம் பிணைப்பிலா 'உறவு' கொள்வது அதுவரை பரவலான வழக்கம். இதனால், அப் பெண்களிடம் உடலின்பம் பெற்றதுடன், இந்தியரின் உணர்வுகளையும், பழக்கங்களையும், மொழிகளையும் நன்கு அறிய வாய்ப்பு இருந்தது. மேலைப் பெண்களின் வருகையால் இவ்வுறவும் துண்டிக்கப் பட்டது. ஆங்கில மங்கையர்கள் மனைவிகளானார்கள். இனக் கலப்புக் குறைந்தது. சிப்பாயின் உள்ளத்திலிருந்து வெள்ளையதிகாரி வெகு தூரம் விலகிச் சென்று விட்டான்! மேலும் ஆங்கில ஆட்சியின் எல்லைகள் விரிவடைந்ததால், அப் பகுதிகளை நிர்வகிக்கப் போதிய அதிகாரிகள் இல்லாததால், அப்பணிக்குப் படையதிகாரிகள் அனுப்பப் பட்டனர். பண்போடு பழகி, கனிவோடு உரையாடி, அனுபவம் மிகப் பெற்ற பல அதிகாரிகள் இவ் விதஞ் சிப்பாய்களை விட்டுப் பிரிந்தனர்.

இவ்விடைவெளி விரிவாகிய அந் நேரத்தில் சிப்பாய்களும், மக்களும் தங்களின் அவல நிலையினை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளத் தொடங்கினர். வெளிப்படையாக இக்கோபங் காட்டப் படவில்லை யென்றாலும், மனக் கசப்பிருந்ததென்பதைக் கீழ்க்கண்ட நிகழ்ச்சிக் குறிக்கிறது. 1822 தொடக்கத்தில் ஆர்க்காட்டுக் குதிரைப் படை வரிசையிலிருந்து கடிதமொன்று கைப்பற்றப் பட்டது. 'கிறித்துவர்களுக்கு அடிமையாகி இஸ்லாமிய மதத்தைக் காக்கத் தவறி விட்டோம். இறைவன் இதைப் பொறுக்காமல் காலரா போன்ற கொடிய நோய்களால் நமக்குத் தண்டனை யளிக்கிறான். இந் நாட்டு மக்களின் ஜாகீர்களையும், இனாம்களையும் வெள்ளையன் பறித்து விட்டான். போர்ப் பணியிலும் நம் பதவிகளையும் பறித்துக் கொண்டான். புது அதிகாரிகள் இன்னும் ஆறு மாதங்களில் இங்கு வந்த பின் நம்மை வேலையில் இருந்து நீக்கிவிடுவார்கள். எனவே, ஒன்று படுவோம்......வெள்ளையனை விரட்டுவோம் சுபேதார்கள் இதை ஜமேதார்களிடங் கூறட்டும்! ஜமேதார்கள் சிப்பாய்களிடங் கூறட்டும்! சென்னையும் சித்தூரும், வேலூரும், பிற இடங்களும் நம் சைகை கிடைத்ததும் ஒரு நாளில் திரண்டெழட்டும்! 1822, மார்ச் 17ஆம் தேதி ஞாயிறு அன்று பத்து பத்து சிப்பாய்களாகப் பரங்கியரின் வீடுகளில் புகுந்து படுக்கையிலேயே அவர்களைக் கொல்லுவோம்' என்ற செய்தி அதில் காணப் பட்டது. இது போன்ற மற்றொரு கடிதமும் ஒரு கர்னலின் கையில் கிடைத்தது. உடனே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

எதிர்பார்த்த நாளும் வந்தது. எதுவும் நடக்கவில்லை. சில நாட்களுக்குப்பின் சென்னை ஆளுநர் மன்ரோவிற்கு ஒரு கடிதம் வந்தது. 'நாங்கள் போரிட்டுப் பெற்ற பகுதிகளை வெள்ளையர்கள் ஆளுகின்றனர். முஸ்லிம்களின் ஆட்சியில் வெற்றிக்குப் பின்னால் சிப்பாய்களுக்கு ஜாகீர்கள் வழங்கப்பட்டன. சிப்பாய்க்கென்று எதுவுமே இப்பொழுது கிடைப்பதில்லை' என்ற தொனியில் அக்கடிதம் இருந்தது. இவ்விரு கடிதங்களும் வெள்ளையர் மேலிருந்த வெறுப்பை வெளிகாட்டின.

ஆனால், 16 ஆண்டுகளுக்கு முன்னே நிலவிய வேற்றுமை இப்பொழுது இல்லை. அதிகாரிகளும், சிப்பாய்களும் ஓரளவு நன்கு பழகினார்கள். இருப்பினும் அதிகாரிகளிடம் அந்த அளவு பயம் மட்டும் அப்பொழுது இல்லை. 1824, மே 6ஆம் நாள் மூன்று மாநிலப் படைகளிற் சில அமைப்பு மாறுதல்கள் மேற்கொள்ளப் பட்டன. இதுவரை ஒரு ரெஜிமெண்ட்டில் இரண்டு பெட்டாலியன்கள் (Battalcan) இருந்தன. அப்பொழுது ஒவ்வொரு பெட்டாலியனும் தனித் தனி ரெஜிமெண்ட்டாக மாற்றப்பட்டன. அதனால், அதிகாரிகளும் மாற்றப் பட்டனர். ஒற்றை எண் அதிகாரிகள் முதல் ரெஜிமெண்ட்டிற்கும், இரட்டை எண் அதிகாரிகள் இரண்டாவது ரெஜிமெண்ட்டிற்குமாக மாற்றப் பட்டனர். நீண்ட காலம் பழகிய அதிகாரிகளை இப்போதும் சிப்பாய்கள் பிரிய நேரிட்டது. புது அதிகாரிகளிடம் அவர்களால் எளிதில் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளமுடியவில்லை.

### கடல் கடக்க மறுப்பு—பரக்பூர் அணி

இதே சமயத்தில் அரசு பர்மியப் போரில் ஈடுபட்டது: சிப்பாய்கள் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் போரிடுவதை விரும்பினார்கள். ஆனால், வேற்று நாடான பர்மாவிற்குச் செல்ல அவர்கள் முன் வரவில்லை. வங்காளப் படையில் 'உயர்' சாதி வீரர்கள் அதிகம் இருந்ததால் கடல் கடந்து பர்மாவில் போரிட மறுத்து விட்டார்கள். சென்னை வீரர்களிடையே அந்த வேற்றுமைகள் அதிக அளவில் இல்லாததால், அவர்கள் கட்டளையை ஏற்றுக் கொண்டு புறப்பட்டனர். ஆனால், மேலும் சில வங்காள அணிகள் அப் போருக்குத் தேவைப்பட்டன. கல்கத்தாவிலிருந்து ரங்கூனுக்குக் கப்பலில் செல்வதே எளிது. வங்காள வீரர்கள் கப்பலேறி கடல் கடந்து போரிடமாட்டோம் என்ற நிபந்தனையில்தான் படையில் சேர்ந்திருந்தனர். எனவே, வங்காள அணிகள் தரை வழியாக இந்திய எல்லைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கிருந்தும் தரை வழியாகவே

பர்மாவிற்குச் செல்ல முடிவு செய்யப் பட்டது. மேலும் பரக்பூரிலிருந்த அணிகளும் அங்கே செல்ல கட்டளை யிடப் பட்டது. சிப்பாய்களை ஏற்றிச் செல்ல போதுமான வண்டிகள் கிடைக்க வில்லை. கிடைத்தவை அனைத்தும் எல்லைக்கு அனுப்பப் பட்டு விட்டன. பர்மாவில் ஆங்கிலப் படைகள் தோற்கடிக்கப் பட்டன. வண்டிகளைத் திரும்பப் பெருவதுங் கடினமாகி விட்டது. சிப்பாய்களே வண்டிகளுக்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்; என்று புதிதாக உத்திரவிடப் பட்டது. அவர்களாலும் எளிதில் இவைகளைப் பெற முடியாது போயிற்று. நெருக்கடியில் அரசு என்ன செய்யும்? வண்டிகள் கிடைக்காததால் நில வழியாக அனுப்ப முடியாத சிப்பாய்களைக் கடல் வழியாக அனுப்ப அரசு முடிவு செய்து விட்டது; என்று வதந்தி காற்ருய்ப் பரவியது. சிப்பாய்கள் மருண்டனர். சாதி கெடுமோ என்று அஞ்சினர். என்ன நேர்ந்தாலும் கடலைக் கடப்பதில்லை என்று முடிவு செய்து விட்டனர். நவம்பர் முதல் நாள் நடந்த அணி வகுப்பில் சிப்பாய்களின் நடத்தை அவர்களின் ஆத்திரத்தை வெளிப்படுத்தியது. தலைமை தளபதி சர் எட்வர்ட் பேகாட் (Sir Edward paget) இதைக் கேள்விப்பட்டு, தானே பரக்பூருக்கு வந்தார். சிப்பாய்களின் இந்த ஒழுங்கீனத்தை, ஆணை மறுப்பை அவரால் பொறுக்க முடியவில்லை. இதற்கு முடிவு காண ஆங்கில வீரர்களுடன் பீரங்கிகளோடு அங்கே வந்தார். பர்மாவிற்குச் செல்ல வேண்டும் அல்லது ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு வெளியேற வேண்டும் என்று சிப்பாய்களுக்கு ஆணையிட்டார். சிப்பாய்கள் சம்மதிக்க வில்லை. மறுக்கணமே பீரங்கிகள் வெடித்தன! சிப்பாய்கள் பிய்த்து எரியப்பட்டனர். பலர் ஓடியும், நதியில் நீந்தியும் தப்பினர். பலர் மூழ்கி இறந்தனர். அதன் பின் அகப்பட்ட சிப்பாய்கள் தூக்கிலிடப்பட்டனர். 47 வது அணியின் பெயர், படை வரிசையிலிருந்து நீக்கப் பட்டது. ஒரு கலகம் தவிர்க்கப் பட்டாலும், இத்தண்டனை, படை வீரர்களின் மத்தியில் அச்சத்தையும், வெறுப்பையும் அதிகமாக்கியது. இப்படு கொலைகள் வங்காள வீதிகள், கிராமங்கள் தோறும் பேசப்பட்டன. பரங்கியரைப் பழிவாங்க இந்திய மனம் தீர்மானித்து விட்டது!

இக் கொடூரத்திற்குப் பிறகும் பிறிதொரு அபாயம் தளிர் விட்டது. வங்காளத்திற்குக் கிழக்கே அரகான் பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றியதும், அங்கே படைத்தளங் கட்டும் வேலை மேற்கொள்ளப் பட்டது. படை வீரர்கள் அனைவரும் இதற்கு அழைக்கப் பட்டனர். வெள்ளை வீரர்களும் சென்னை வீரர்களும் பணியில் உடனடியாக ஈடு பட்டனர்.

வங்காள சிப்பாய்கள் மட்டும் பிராமணனும், இராஜ புத்திரனும் கூலிகளைப் போன்று நடத்தப்படவேண்டுமா? என்று கேள்வி கேட்டனர். கேப்டன் பிலிப்ஸ் அவர்களைச் சமா தானப் படுத்தி நல்ல முறையில் எடுத்துக் கூறிய பின்னரே அவர்களும் கட்டிட வேலையில் ஈடுபட்டனர்.

### அதிகாரிகள்—சிப்பாய்கள் பிரிவு

சிப்பாய்கள் இவ்விதம் வெளிப்படையாகத் தங்கள் குறைகளைக் காட்டி வந்தனர். அப்போது, அவர்களின் குறை களைத் தீர்க்கும், ஆங்கில அதிகாரிகளிட மிருந்து அவர்கள் பிரிக்கப்பட்டு விட்டனர். சிப்பாய் அணிகளின் அவ் வதி காரிகள் மற்றொரு அவமானத்திற்கும் உட்பட்டார்கள். இரா ணுவச் செலவுகளைக் கட்டுப் படுத்தத் தலை நகரிலிருந்து குறிப் பிட்ட தூரத்திற்கு அப்பால் பணி புரியும் சிப்பாய் அதிகாரி களின் படிச் செலவு குறைக்கப் பட்டது. இதனால், அவர்கள் தங்கள் வீரர்களிடம் காட்டிய சிறிதளவு அக்கரையையும் குறைத்துக் கொண்டனர். சிப்பாய்களும் தாங்கள் காட்டி வந்த ஓரளவு மரியாதையையுங் குறைத்துக் கொண்டனர். இதற்குச் சிகரம் வைத்தாற் போன்று ஒரு புதுச் சட்டம் வந்தது. சிப்பாய்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கசையடி தண்டனை படை முழுவதிலும் நீக்கப்பட்டது. சாட்டை ஒரு கையிலும், படையின் ஒழுங்கை மறுகையிலும் வைத்துக் காப் பாற்றிய அதிகாரியின் கரம் வலுவிழந்தது! சிப்பாயின் நெஞ்சம் பயமிழந்தது! (10 ஆண்டுகளுக்குப் பின் ஹார்டிஞ்ச் (Harduige) இதை மீண்டுங் கொண்டு வந்தார்) வேலூர் கலகத் திற்குப் பின் சரிப்பட்ட சிப்பாய்—அதிகாரி உறவு மீண்டும் சீர் குலைந்தது. 25 ஆண்டுகளில் சிப்பாய்களும்—அதிகாரி களும் பல மாற்றங்களால் வெகு தூரம் பிறிந்து விட்டனர். பரக்பூர் கலகம் சிப்பாயின் மனங் கொதிப்பையும், அரசாங்க இரும்புக் கரத்தின் வலிமையையுங் காட்டிற்று.

### வடமேற்குப் போர்கள்

1839-ல் ஆப்கானியப் படையெடுப்பை அரசு மேற் கொண்டது. பர்மியப் போரில் ஆங்கிலப் படை முதலில் தோல்வி யடைந்தது. அதுபோல் இப்பொழுதும் ஆப்கானிய பனிச் சரிவுகளில் ஆங்கிலேயரின் திமிர் அடக்கப் பட்டது. தங்களின் துரைமார்கள் அவமானப்பட்டுத் தோல்வி பெற்றார் கள் என்பதைச் சிப்பாய்கள் அறிந்தனர். பரங்கிப் படைகள்

வெல்ல முடியாதது என்ற நம்பிக்கை பொய்த்து விட்டது! அடுத்து 1843-ல் சிந்து கைப்பற்றப்பட்டது. அந்த எல்லைப்புற பலூச்சி முஸ்லிம்களை முறியடித்துச் சிப்பாய்கள் வெற்றி கண்டார்கள். இப்புதுப் பகுதியைப் பரது காக்கச் சில அணி களை அங்கே நிறுத்த வேண்டியிருந்தது. அதைச் சிப்பாய்கள் விரும்பவில்லை. மனைவி, மக்களைப் பிரிந்து, ஊர் உறவை விட்டுக் கேள்விப்படாத பாலை வெளிகளில், நதிக் கரைகளில் தான் பணி புரிய நேரிடும் என்பதை இந்திய சிப்பாய் கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை! இதைவிடக் கொடுமை யாதெனில்? அவனுக்குச் சேரவேண்டிய கூடிய ஊதியம் அப்பொழுது மறுக்கப்பட்டு விட்டது. 1838-ல் சிந்து நதியைக் கடந்து, காந்தகாரிலும், காபூலிலும் போரிடச் செல்பவர்க ளுக்கு இச் சிறப்புப் படி அளிக்கப்பட்டது. நெருக்கடி நிலைமை தீர்ந்ததும், சிப்பாயின் பணி பழைய நிலைக்கு வந்ததும் அவ் வதிகப்படி நிறுத்தப்பட்டது. மீண்டும் ஆப்கானிஸ்தானில் போர் தொடங்கியதும் அவ் ஊதியம் அளிக்கப்பட்டது. முடி வில் 1843 ஜூலை முதல் நாளிலிருந்து (சிந்து கைப்பற்றப் பட்டதும்) அவ் ஊதியம் நிறுத்தப்பட்டது. போருக்கு முன் அந்நியப் பகுதியாக இருந்தது; இப்பொழுது ஆங்கிலப் பகுதி யாகி விட்டதால், தனிச் சலுகையை இனியும் நீடிக்க வேண்டிய தில்லை யென்பது அரசின் வாதம். வெற்றிக்குப் பின் பலனை எதிர்பார்ப்பவன் வீரன்; கொடுக்கப்பட்டதும் குறைக்கப் பட்டதால் சிந்து பகுதியில் பணி புரிய மறுத்து விட்டான்! 1844 ஃபிப்ரவரியில் வங்காள சிப்பாய்கள் பாதி வழியில் பெஃரோஸ்பூரில் மறியல் செய்தனர். அபாய நிலை உரு வெடுத்தது. உடனடியாக லூதியானாவிற்கோ, மீரத்திற்கோ அவ்வணிகளை நடத்தி, ஐரோப்பிய வீரர்களை வைத்துக் கொண்டு கலைத்து விடலாம். ஆனால், வெள்ளை வீரர்களும் சிப்பாய்களின் வேண்டுகோளுக்கு ஆதரவு கொடுத்தனர். தலைமை—ஆளுநர் எல்லன் பரோ (Ellenborayh) நிலைமையைச் சமாளித்தார்.

இதுபோல் 1843-ன் இறுதியில் ஆர்க்காட்டிலிருந்து ஒரு குதிரைப்படை ஜபல்பூருக்கு அனுப்பப்பட்டது. தற்காலிக மாக என்று அழைக்கப்பட்டதால், தங் குடும்பத்தினரை விட்டு விட்டுச் சிப்பாய்கள் மட்டுஞ் சென்றனர். (வெகு தூரப் பயணஞ் செல்லும் போது மனைவி, மக்களுடன் செல்லும் வழக்கம் சென்னை சிப்பாய்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந் தது) ஜபல்பூரில் நீண்டகாலந் தங்க வேண்டும் என்பதையும், தூர இடங்களில் எதிர்பார்க்கப்பட்ட அதிக ஊதியம் இல்லை

என்பதையும் அறிந்த ஆர்க்காட்டு முஸ்லிம் சிப்பாய்கள் கட்டளைக்கு அடிபணியாமல் வெறுப்பைக் காட்டினார்கள்.

மற்றொரு முறை வங்காளச் சிப்பாய்கள் சிந்து பகுதிக்குச் செல்ல மறுத்துப் பாதி வழியில் கிளர்ச்சிச் செய்ததால், அவர்களுக்குப் பதில் சென்னை வீரர்களை அனுப்ப முடிவெடுக்கப்பட்டது. மாநிலத்திற்கு வெளியே பணிபுரியும் போது கூடுதல்படி வழங்கப்படுவது வழக்கம். அதன்படி இப்பொழுதும் அளிக்கப்படும் என்று சென்னை ஆளுநர் கூறியிருந்ததால், சிப்பாய்கள் கப்பலேறி பம்பாய் சென்றனர். (அங்கிருந்தும் கப்பலில் கராச்சிக்குச் செல்ல வேண்டும்) சிந்து செல்பவர்களுக்குக் கூடுதல்படி கிடையாது; என்ற மேலிட முடிவிற்கு மாறாக இது நடந்து விட்டது. (சென்னை அதிகாரிகள் தெரியாமல் தவறு செய்திருக்கலாம்) தலைமை—ஆளுநர் உடனே அவசரச் செய்தி அனுப்பிப் பம்பாயிலேயே சென்னைச் சிப்பாய்களை நிறுத்தி விடும்படி உத்திர விட்டார். (1844-ஃபிப்ரவரி) வெகு தூரம் செல்லவேண்டி யிருந்ததால் சம்பளத்தின் பெரும் பகுதியைக் குடும்பத்தின் செலவுகளுக்குச் சிப்பாய் ஏற்கனவே அளித்து விட்டு வந்திருக்கிறான். இப்பொழுது நடுவழியில் பயணந் தடைப்பட்டு விட்டது. கையில் பணமும் இல்லை. உணவிற்கும் வழி யில்லை. இதனால், பசியால் வாடிய அவன், உணவின்றி அணி வகுப்பில் கலந்து கொள்ள முடியாது என்று முரட்டுத்தனமாகப் பதிலளித்தான். பிறகு ஓரளவு முன் பணங் கிடைத்தது. நிலைமையுஞ் சரியாயிற்று. (கூடுதல் படியைப் பற்றி அரசாங்கமும், இராணுவமும் நீண்டகாலங் கருத்து வேற்றுமை கொண்டிருந்தது. தலைமை—ஆளுநர் எல்லன் பரோவிற்கும், தளபதி நேப்பியருக்கும் இதனால் பிணக்குத் தோன்றி நேப்பியர் பதவியை விட்டே விலகினார்.)

மேற்கண்ட நிகழ்ச்சிகள் 1844 வரை சிப்பாய்களின் படை ஒழுங்கு எப்படி மாறி வருகிறது என்பதைக் காட்டுகின்றன. ஆங்கிலத் தோற்றம், கடல் கடத்தல், கூடுதல்படி ஆகிய காரணங்களுக்காகக் கிளர்ச்சிகளில் சிப்பாய் அவ் வப்பொழுது ஈடுபடுகிறான் என்பதைக் கண்டோம். 1848-ல் டல்ஹௌசி தலைமை ஆளுநர் ஆனபின்பு, சிப்பாய்களின் நடை பிறழ்வதைக் காண முடியவில்லை. சில அதிகாரிகள், படையின் ஒழுக்கங் கெடாமல் இருக்கப் பல கருத்துகளைத் தெரிவித்தனர். அவர்களின் எச்சரிக்கைகள் எடுபடவில்லை. இந்தியச் சிப்பாய்களின் விசுவாசம் மிக உயர்ந்தது என்றுதான் பலரும் நம்பினர். ஆனால், அவர்களின் மனங் கொதித்துக் கொண்டிருந்ததை

எவராலும் உணர முடியவில்லை. சில ஆண்டுகளில் சிப்பாய்களும் நடந்தவற்றை மறந்தனர்.

பொதுவாக சிப்பாயின் மனநிலை புதிரானது தேவையில்லாமல் கற்பனை செய்து அச்சமடைவதுதான். சிப்பாய் சிறு குழந்தையைப்போல பல சமயங்களில் நடந்து கொள்ளுவான். வெள்ளையனின் தோற்றமே அவனுக்கு விசித்திரமாக இருந்தது. படை வரிசைக்குள் தன் மேலதிகாரி வந்தால், உளமாற, பல்லெல்லாம் தெரியச் சிரிப்பான். அந்த இளிப்பில் பயம், அன்பு, மரியாதை அத்தனையும் உண்டு! தன் தளபதி நோய்வாய்ப் பட்டால் ஒரு பெண்ணைப்போல் அருகிலிருந்து பணிவிடை செய்வான். துரையின் குழந்தைகளோடு பங்களாவின் தாழ்வாரத்தில் விளையாடுவான். சிப்பாய்களின் காவலில் வெள்ளைப் பெண்டிர் பெரிதும் திருப்தி அடைவர். அவனுடைய துணையில் வெள்ளைப் பெண்மணி பயமின்றி எங்குஞ் செல்லுவாள். ஆனால், இவன் வயிறு எரிந்தால் என்ன நடக்கும்? என்பதை நினைவு கூற வெள்ளையர் மறந்து விட்டனர்!

### படையின் அமைப்பு

படையில் உயர்ந்த குலத்தோரை மட்டும் எடுப்பதா, பிறரையும் கலப்பதா என்ற விவாதம் நீண்டகாலமாக இருந்து வந்தது பிராமணர், இராஜபுத்திரர், பத்தானியர் ஆகியோர் சிறந்த ஆற்றலும், உடல் அமைப்பும், பண்புகளும் பெற்றிருந்ததால் அவர்களை மட்டுமே எடுப்பது நல்லது என்று சிலர் கருதினார்கள். வங்காளப்படை இதற்கு நற்சான்றாக நின்றது. ஆனால், உணர்ச்சி வசப்பட்டுப் படை ஒழுங்கை மீறுபவர்களும் அவர்களே. எனவே, பிறசாதிகளும் படையில் கலக்கப்படல் வேண்டும் என்றனர் சிலர். வங்காளப் படையைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க 'தாழ்ந்த' வகுப்பினரையுஞ் சேர்க்க வேண்டும் என்ற கருத்து நாளடைவில் ஏற்கப்பட்டுச் செயலாக்கப்பட்டது. சாதியைப் பற்றி ஆங்கிலேயன் கவலைப்படவில்லை யென்றாலும், இந்தியன் மறப்பதாயில்லை. 'தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த ஒரு சிப்பாய் அதிகாரி பணி நேரத்திற்கப்பால் ஒரு சாதாரண பிராமணச் சிப்பாயைக் கண்டால் கூட விழுந்து வணங்குவதை நான் அடிக்கடி கண்டிருக்கிறேன். இத்தகைய அணியில் ஒழுங்கை எப்படி நிலை நாட்டுவது இயலும்' என்று மேஜர் ஜெனரல் பர்ச் (Birch) கூறியிருக்கிறார். சென்னை, பம்பாய் படைகளில் "உயர்" சாதி வீரர்கள் குறைவாக இருந்ததால் அங்கே இவ்வளவு சாதி வேற்றுமை காண

முடியவில்லை. 'கீழ்'ச் சாதி அதிகாரிகளும் பதவிக் கேற்ப மரியாதைகள் பெற்றனர். வங்காளப்படை, பணியில் சிறந்திருந்தாலும் ஒழுக்கத்தில் சீர் குலைந்தது!

ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக அணிகள் அமைக்கலாம் என்று கூட யோசிக்கப்பட்டது. அவ்விதம் கூர்க்காப் படை, பத்தான் படை, மராத்தியப்படை, சீக்கியப் படை என்று ஒவ்வொரு நாட்டு வீரர்களும் வெவ்வேறு அணிகளாகப் பிரிக்கப்பட்டு ஒரே இடத்தில் வைக்கப்பட்டால் இன உணர்வுகள் கிளர்ச்சிகளைத் தோற்றுவிக்கும் என்றெண்ணி அதற்குப் பதில் வட்டார வாரியாக அணிகளை அமைக்கலாம். அந்தந்த வட்டாரங்களில் மட்டும் அவர்கள் பணியாற்றலாம். இதனால், நெருக்கடி நேரங்களைத் தவிர பிற சமயங்களில் ஒரே இடத்தில் நீண்ட நாள் அணிகள் தங்குவதில் சில நன்மைகள் சிப்பாய்களுக்குக் கிடைக்கும். ஆனால், மாற்றமில்லாத நிலைத்த அணிகள், அவ் வட்டார சூழ்ச்சிகளுக்கு இரையாகி, கிளர்ச்சிகளைத் தோற்றுவிக்கும். எனவே, பல விடங்களுக்கு அவ்வப் பொழுது அணிகள் மாற்றப்படுவதே நல்லது; என்று முடிவு செய்யப்பட்டது. இந்தச் சீர்திருத்தங்கள் சிந்திக்கப்பட்டன. செயல் படுத்தப்படவில்லை; இருந்த அமைப்பே தொடர்ந்தது.

வங்காளப் படையின் சிப்பாய் தன் மனைவி மக்களைக் கிராமங்களில் விட்டு விட்டுத் தான் மட்டும் படைத்தளத்தில் வசித்தான். விடுமுறை காலங்களில் வீட்டுக்குச் சென்று வருவான். தன் சம்பளத்தை ஒழுங்காக வீட்டிற்கு அனுப்பி விடுவான். இதில் தவறுபவன் அணியில் கெட்ட பெயர் வாங்குவான். இது தொல்லை இல்லாத முறை என்று கருதப்பட்டது. சென்னைப் படையின் சிப்பாய் தன் குடும்பத்துடன் படைத்தளத்திலேயே வாழ்ந்தான். தூர இடங்களில் அதிக நாட்கள் தங்க நேரிட்டாலும் மனைவி மக்களுடன் தான் செல்லுவான். இதனால், அவனுக்குச் செலவுகள் அதிகமாயின. மனைவி, மக்கள் அருகிலிருப்பது சிப்பாயின் நேர்மையான பணிக்கு உதவி செய்யும்; தன் குடும்பத்தினரைக் கருதியாவது கலகத்திலீடுபட அவன் தயங்குவான். அதிகாரிகள் மற்றொரு காரணத்திற்காக இவ் வமைப்பை விரும்பினர். மனைவி, மக்களின் உயிரும், மானமும் வெள்ளையர் தயவிலிருப்பது சிப்பாய்களின் நன்னடத்தைக்கு உத்திரவாதமளிக்கும். பம்பாய்ப் படையில் இவ் விரு அமைப்புகளும் ஏற்க்கப்பட்டிருந்தன. இந்த அமைப்புகளிலும் அரசாங்கம் மாறுதல்களைச் செய்ய விரும்பவில்லை.

ஒரு ரெஜிமெண்ட்டில் 1000 வீரர்கள் இருந்தனர். அத்தகைய ஒவ்வொரு சுதேசி காலாட்படை ரெஜிமெண்ட்டிலும் ஒரு சுபேதார் மேஜர், 10 சுபேதார்கள், 10 ஜமேதார்கள் இருந்தனர். பணியில் சேர்ந்த காலத்தைப் பொருத்துப் பதவி உயர்வு கிடைத்ததால் சிறப்பாகப் பணியாற்றத் தேவையில்லை என்று பலர் நினைத்தனர். ஆனால், இதே முறை சுதேசிகளுக்குப் பிடித்தமானதாக இருந்தது; என்றும் கூறப் பட்டது. தனக்குக் கிடைக்கப் போகும் பதவி உயர்வு வேறு தவறுகளைப் புரியா வண்ணம் அவனைத் தடுத்துவந்தது; என்றும் கூறப் பட்டது. இப்பிரச்சனையைப் பற்றி எப்படி அணுகுவது? என்பது அரசாங்க அதிகாரிகளுக்கும் விளங்கவில்லை.

சுதேசி அணி ஒவ்வொன்றிலும் ஒரு கர்னல், ஒரு லெப்டினென்ட் கர்னலி, ஒரு மேஜர், 6 கேப்டன்கள், 10 லெப்டினெட்டுகள், 5 என்சைன்கள் எனப் பல ஆங்கில அதிகாரிகள் இருந்தனர். டல்ஹௌசி காலத்தில் ஐரோப்பாவின் தொடர்பு அதிகமாயிற்று. நீராவிக் கப்பல் போக்குவரத்து அதிகமாகிய தால் தாய் நாட்டுச் சுவைகள் இவர்களுக்கு அதிகமாகக் கிடைத்தன.

வேலூர் கலகத்திற்குப் பின் சென்னை அரசு வங்காள அரசிற்கு வெள்ளை வீரர்களை அனுப்பும்படிக் கேட்டுக் கொண்டது. சுதேசி வீரர்களுடன், ஆங்கில வீரர்களை வைத்து அவர்களின் நம்பிக்கையைச் சோதிப்பதும், காவல் காப்பதும் தவறென்று அவர்கள் பதிலனுப்பினர்கள். இவ்விதம், நீண்ட நாட்கள் நீடித்தன. மொத்தம் 300,000 வீரர்களில் சுமார் 42,000 ஆங்கிலேயர். அவ் வெள்ளை வீரர்களில் மூன்றில் ஒரு பகுதி இந்தியாவில் பணி புரிவதற்காகவே எடுக்கப்பட்டவர்கள். எஞ்சிய இரண்டு பகுதி இங்கிலாந்து அரசுப் படையினர். தாயக அரசு தன் விருப்பப்படி இப் படை வீரர்களை இங்கே அனுப்பி வைக்கும். இவர்களின் சம்பளமும் இந்திய வருமானத்திலிருந்தே கொடுக்கப்பட்டது. 1852-ல் இங்கிலாந்து அரசப் படையினர் 28,000 பேர் இருந்தனர். 1856-ல் 23,000 பேர் இருந்தனர். இவ் வைந்து ஆண்டுகளில் புதுப் பகுதிகள் இணைக்கப் பட்டிருந்தன. ஆனால், இங்கிலாந்து கிரிமியாப் போரில் ஈடுபட்டிருந்ததால் சுமார் ஐந்தாயிரம் ஆங்கிலேயரைத் திரும்ப அழைத்துக் கொண்டது.

அப்போர் தொடங்கியதும், இந்தியாவிலிருந்த இவ் வீரர்கள் வெளியேறியதானது இங்கிலாந்தின் வலிமை யின்மை

யைக் காட்டிற்று. அத்துடன் ருசியர்களைப் பற்றியும், அவர்களின் வெற்றியைப் பற்றியும் வதந்திகள் இங்கும் வந்தடைந்தன. ருசியாவால் தோற்கடிக்கப்பட்டு இங்கிலாந்து அரசியே ஓடிவிட்டார்; என்று கூட இங்கே பேசப்பட்டது! இதனால், இந்தியப் படைகளை நம்பித் தான் இங்கிலாந்தின் வெற்றி இருக்கிறது; என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. அத்துடன் இணைக்கப்பட்டப் புதுப்பகுதிகளுக்கேற்ப நிறுவன அரசின் படை பலம் வளர்க்கப்பட வில்லை. புதுப் பகுதிகள் இணைக்கப்படுவதால் எதிரிகள் குறைவர். எனவே, படைப்பலம் பெருக்கப்படத் தேவையில்லை என்றும் பலர் கருதினர்.

### ஆப்கானியப் போர்

ஒரு சுபேதாரின் பேரனும், ஒரு சுபேதாரின் மகனுமான சர்தார் பகதூர் ஹிதாயத் அலியும், ஒரு சுபேதார் நன்றி மிகுந்த நம்பிக்கைக்குகந்தவன். அவன் புரட்சியின் காரணங்களைப் பற்றி விவரிக்கும் போது, முதல் ஆப்கானியப் போர் நடவடிக்கைகளே அதற்குக் காரணம் என்கிறான். அவனுடைய கருத்துப்படி 'வேற்று நாட்டில் போரிடச் சிப்பாய் மறுத்தான். குறிப்பாக இந்து சிப்பாய்கள் வெகு தொலைவில் வேற்று நாட்டில் முஸ்லிம்களிடமிருந்துதான் உணவை விலை கொடுத்து வாங்க வேண்டி யிருந்தது. போர்க் கைதிகளாக்கப் பட்டப் பல இந்து சிப்பாய்கள் முஸ்லிம் மதத்திற்கு மாற்றப் பட்டனர். திரும்பி வந்த அவர்களை ஏற்றுக் கொள்ள உறவினர்களும், கிராமத்தினரும் மறுத்து விட்டனர். சக சிப்பாய்களும் அவர்களை ஏளனமாகப் பார்த்தனர்.'

சீதாராம் என்ற இந்து சுபேதாரும் இதையே கூறினார். சீதாராமின் சிற்றப்பனும், சுபேதாராக இருந்தவன். சீதாராமின் மகனும் அப்பொழுது சிப்பாயாக இருந்திருக்கிறான். ஆப்கானியப் போரில் ஈடுபட்டிருந்த சீதாராம் தன் அவல நிலையைக் கூறுகிறான்:—சிந்து நதியைக் கடப்பது இந்துஸ்தானத்தையும், இந்து மதத்தையுந் தாண்டிச் செல்லுவதாகும் என்று சிப்பாய்கள் பலர் பயந்தனர். சாதி விலக்கம் ஏற்படுமோ! என்றும் அவர்கள் அஞ்சினார்கள். காந்தகாரை நோக்கிப் பாலை வெளிகளிலே வீரர்கள் செல்லும் போது ஒரு இந்து இறந்தால் அவனை எரிப்பதற்கு விறகு கூட இல்லாமல் தவித்தார்கள். காபூலில் தோல்வியடைந்த சிப்பாய்கள் எதிரிகளால் பிடிக்கப்பட்டு அடிமைகளாக விற்கப்பட்டனர். (சீதாராம் 500 ரூபாய் கொடுத்துத் தப்பி வந்தான்) திரும்பி வந்த

பின் படை வரிசைகளில் சக சிப்பாய்கள் என்னைக் கேலி செய்தனர். தூய்மை இழந்தவனென்றார்கள். என்னுடன் பழகவே மறுத்து விட்டனர். மீண்டும் பரிகாரம் செய்து சுத்தப்படுத்திக் கொண்டால்தான் எனக்கு அங்கே இடமுண்டு. 'நான் மதம் மாறியவன்,' என்று பிராமணர்களால் பழிக்கப் படுகிறேன். முஸ்லிம்களுடனும், கிறித்துவர்களுடனும், மட்டுமே நான் பழக முடிந்தது. என் கிராமத்திலும், இது நிகழ்ந்தது. என்னைப் பற்றிய செய்திகள் அங்கேச் சென்றிருந்ததால் என் தந்தையின் வீட்டில்கூட நான் தங்க முடியவில்லை. என் தந்தை கொடுத்தப் பணத்தில் என் களங்கத்தைச் சடங்குகளால் கழுவிய பின்னரே என்னை ஏற்றுக் கொண்டனர்.

இந்த ஆப்கானியப் போரில் சில உண்மைகள் வெளிப்பட்டன. போர்த் தொழில் பெருமை யளிப்பதா யிருப்பினும் மதமாற்றத்திற்கும், சாதி விலக்கத்திற்கும் இழுத்துச் சென்று விடும் என்பதே அது. அத்துடன், ஆங்கிலப் படைகளை ஆசியப் படைகள் தோற்கடிக்க முடியும் என்பது ஆப்கானிஸ்தானத்தில் வெளிச்சமாகியது. முன்பு பரத்பூரிலும் நேப்பாளத்திலும் இது ஓரளவு நடந்ததுதான் என்பதை நினைவு கூறச் சந்தர்ப்பங் கிடைத்தது. மராத்திய ஆட்சியில் பலவந்தமாக முஸ்லிம் மதத்திற்கு மாற்றப்பட்ட போர்க் கைதிகள் திரும்பிய பின் மீண்டும் இந்து மதத்திற்குள் சேர, மன்னனே உதவியுஞ் செய்தான். ஆனால், ஒரு கிறித்துவ ஆட்சி, முஸ்லிமாக்கப்பட்ட ஒரு இந்துவிற்குத் தன் மதத்திற்குத் திரும்பி வருஞ் சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தர முடியாது. அந்நியர் ஆட்சி இதில் தலையிடுவது இயலாத தொன்றாகும். ஏனெனில்? இதனால் வேறு சிக்கல்கள். வேறு இடங்களிலிருந்து அவ்வாட்சிக் கெதிராக உருவாகலாம்.

## பாட்னா சதி

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை தினமுங் கொடுக்கப்பட்டது. தனக்குத் தேவையான பொருட்களை அங்கேயே பெற்றுத் தனித் தனியாகச் சமைத்து உண்ணும் பழக்கம் தொடக்கத்திலிருந்து வந்தது. சமைப்பதற்கென்று செல்பவர்கள் அதிலேயே நேரத்தைப் போக்கி வேலை செய்யாமல் தப்பித்து வந்தனர். இந்த நிலைமையை மாற்றிக் கைதிகளைப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொருவன் என்ற முறை வைத்துச் சமைக்க உத்திரவாயிற்று. இம்

முறையில் கீழ்ச் சாதியினர் சமைத்தால் மேல் சாதியினர் உண்ணத் தயங்குவார்கள்! தங்களின் சாதிப் பிரிவுகளை உடைத் தெறிய வேண்டுமென்றே அரசாங்கம் சூழ்ச்சிச் செய்கிறதென்று கைதிகள் முணு முணுக்கத் தொடங்கினர். ஹிதாயத் அலியின் கூற்றுப்படி — விடுவிக்கப்படும் இந்து கைதிகளை வீட்டில் விலக்கி வைத்து விடுவார்கள். சிறை விதிகள் இந்துக்களுடன் இஸ்லாமியர்களையும் பாதித்தது. சிறைக்குள் நுழைந்ததும், மதச் சின்னமான தாடி, மீசை எடுக்கப்படுவது அவர்களுக்கு இழைக்கப்படும் அவமானமாகப் பட்டது.

அரசு சீக்கியப் போரில் தன் நாட்டத்தை முழுவதும் செலுத்தியிருந்த போது ஒரு வதந்தி பரவியது. சிறைச் சாலைகளில் இருக்கும் பொது உணவு முறை, படைகளிலும் அமுல் படுத்தப்படும் என்று பேசிக் கொண்டார்கள். ஏற்கனவே குமைந்து கிடந்த அவர்களின் உள்ளங்களில் கிளர்ச்சி வித்துகள் ஊன்றப்பட்டன. பாட்னு படை வரிசைகளில் வெளியாட்கள் சிலர் இரகசியமாய்ப் புகுந்து வதந்திகளைப் பரப்பினர். 'கிளர்ச்சி ஒன்று தோன்றப் போகிறது; அச் சமயத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவு தராமல் சிப்பாய்கள் இருக்க வேண்டும்; என்பதற்காக டெல்லி மன்னர் இந்தியச் சிப்பாய்கள், அதிகாரிகள் யாவருக்கும் ஒரு மாதச் சம்பளம் தருவார்,' என்றும், நிலக்கிழார்கள், விவசாயிகள், நகரமக்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளுவார்கள்; என்றும் உறுதி கூறப்பட்டதாகத் தெரிகிறது. இச் சதியைப் பிராமண ஜமேதார் ஒருவன் அதிகாரிகளிடம் அறிவித்து விட்டான். விசுவாச மிக்க இச் சிப்பாய்களின் மூலம் இது நிரூபிக்கப்பட்டது. சிலருக்குப் பணங் கொடுக்கப்பட்டது உண்மையே. இச் சதியின் முக்கியத் தலைவர்கள் கோஜா ஹசன் அலி என்பவனும், ஒரு புத்தக விற்பனையாளனுமாம் என்றுங் கூறப்பட்டது. சோன்பூர் சந்தையில் இக் கோஜாஹசன் அலி பலரைத் தம் வலையில் இழுத்ததாகத் தெரிகிறது. ஒரு பெருங் கிளர்ச்சிக்கு ஆயத்தமானார்கள்; என்பது மறுக்க முடியாத உண்மை. இதில் சம்பந்தப்பட்ட சிலர். இராணுவ விசாரணைக்குப் பின் மரண தண்டனை பெற்றார்கள். வேறு அசம்பாவிதம் எதுவும் நடக்க வில்லை; என்றாலும், கிளர்ச்சிக்குத் துணியும் மனப் பக்குவமும், மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியும், தங்களுக்குப் பெரும் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையும் வீரர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது என்பது விளங்கும்.

ஹைதராபாத்—போலாராம் நிகழ்ச்சி

மொஹரம் பண்டிகை முஸ்லிம்களின் ஒரு முக்கியப் பண்டிகை. சுன்னிப் பிரிவினர் சிலரும், இந்துக்கள் சிலருங் கூட, சில சமயங்களில் இதில் கலந்து கொள்ளுவார்கள். 1855 செப்டம்பர் 23ஆம் நாள் இப் பண்டிகைக்கான ஏற்பாடுகள் ஹைதராபாத்திற்கருகில் போலாராம் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கு மூன்று நாட்களுக்கு முன் அங்கு இராணுவ அதிகாரியாக இருந்த கர்னல் மெக்கன்ஸி ஒரு உத்திர விட்டார். பண்டிகைக்கு முதல் நாள் சனிக்கிழமை இரவு 12 மணியிலிருந்து மறு நாள் ஞாயிறு இரவு 12 மணி வரை ஊர்வலமோ, இசையோ, கூச்சலோ ஊரில் நடக்கக் கூடாது என்பது அந்த உத்திரவு. அதைக் கண்ட முஸ்லிம் சிப்பாய்கள் ஆத்திரமடைந்தனர். மொஹரம் பண்டிகை நாளான அந்த ஞாயிற்றுக் கிழமை கிறித்துவர்களுக்கும் முக்கிய நாள் ஆனதால்தான் வேண்டுமென்றே முஸ்லிம் பண்டிகை தடுக்கப்படுகிறது என்று இஸ்லாமியர்கள் சந்தேகித்தனர். (இத் தடை உத்திரவு வெள்ளிக் கிழமைக்கு மாற்றப்பட்ட செய்தி பலருக்குத் தெரியாது. உத்திரவை எதிர்த்து 23ஆம் நாள் ஞாயிறன்று குதிரைப் படையினர் தடை விதிக்கப்பட்ட பாதையில் ஊர்வலம் சென்றனர். அதே பாதையில் தான் கர்னல் மெக்கன்ஸியின் வீடும் இருந்தது. சில அதிகாரிகளுடனும், வெள்ளைப் பெண்களுடனும் அவர் தம் வீட்டின் முன்னிருந்த புல் வெளியில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தார். அழு குரலுடன், இசைக் கருவிகளின் ஓசையுடன் வரும் ஊர்வலத்தைக் கண்டு சினமடைந்த கர்னல் வீட்டுக்கு வெளியேவந்து அவர்களைக் கலைந்து செல்லும்படிக் கத்தினார். அவர்கள் மறுத்ததால் அவர்கள் ஏந்தியிருந்த சமயக் கொடிகள் இரண்டைப் பறித்தெறிந்தார்! கலைந்து சென்ற அக் கூட்டஞ் சிறிது நேரத்தில் திடீரென அங்கே குழுமி மெக்கன்ஸியைத் தாக்கியது. மாலை உலாவச் சென்றுகொண்டிருந்த பிற ஆங்கிலேயரையும், அவர்கள் தாக்கினார்கள். வீரர்களின் புகாரின்படி அவ் வதிகாரி பின்னர் விசாரிக்கப்பட்டார். அவருடைய நடத்தைத் தவறானது என்று வெளிப்படையாகக் குற்றஞ் சாட்டப்பட வில்லை. தலைமை ஆளுநர் டல்ஹௌஸி கர்னல் நடந்து கொண்ட முறை சரியில்லை என்பதை உணர்ந்தார். இருந்தும், தாக்குதல் செய்த அக் குதிரைப் படையின் அதிகாரிகள் வேலை நீக்கஞ் செய்யப்பட்டனர். கலகஞ் செய்தவர்களை எதிர்த்துப் போரிடாத குற்றத்திற்காக கர்னலின் வீட்டில் காவலிலிருந்த இரண்டு இந்து அதிகாரிகளும் வேலை

நீக்கஞ் செய்யப்பட்டனர். சமய உணர்வுகள் மதிக்கப்பட வில்லை. கவனத்துடன் அணுகப்பட வில்லை. என்பதை இந் நிகழ்ச்சி இன்னுந் தெளிவாக எடுத்துக் காட்டியது. இத் துடன் சமயத்திற்காக உயிரையும் விட வீரர்கள் தயாராக இருக்கின்றனர் என்பதையுங் காட்டிற்று. அரசு இன்னும் இதைப் புரிந்து கொள்ளவில்லை!

### பொதுப் படைச் சட்டம்—1855

வங்காள சிப்பாய்கள் மட்டுங் கடலைக் கடந்து பணி புரிய மாட்டோம் என்ற நிபந்தனையில் படையில் சேர்ந்திருந்தனர். 1824-ல் ஒரு முறையும், 1852-ல் மறு முறையும் பர்மியப் போருக்குக் கடல் கடக்க அவர்கள் மறுத்து விட்டனர். பிற படைகளில் சிப்பாய்களுக்கு ஆரம்பத்திலிருந்தே இச் சலுகை யில்லை. வங்காளப் படையின் இவ் வுரிமையைப் பறிப்பது கிளர்ச்சியில் தான் முடியும். அதே சமயத்தில் இனி மேலும் இத் தகைய நிபந்தனைகளைச் சிப்பாய்கள் விதிப்பதை அரசு அனுமதிக்க முடியாது. எனவே, ஏற்கனவே பணியில் இருக் கும் சிப்பாய்களுக்கு மட்டும் இச்சலுகையை அனுமதித்து, இனிமேல் புதிதாகப் படையில் சேர்ப்பவர்களுக்குத் தலைமை—ஆளுநர் கேனிங் சலுகை தர மறுத்து விட்டார். தன் சாதியின் புனிதத்தை மேலெனக் கருதுபவன் படையில் சேரவேண்டிய தில்லை என்பது அந்த உத்திரவின் சாரம்.

'தனக்கு இச் சலுகையிருக்கிறது; அதனால் சாதியைக் காப்பாற்றிக் கொள்ள முடிகிறது; ஆனால், தன் மகன் போர்த் தொழிலில் ஈடுபடுவது இப் புது உத்திரவால் தடுக்கப்படு கிறதே.' என்று சிப்பாய் அஞ்சினான். சாதியும் வேண்டும்! வேலையும் வேண்டும்! என்ற அவன் வரதம் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. ஆனால், அவனோ போர்ப் பணியை மட்டும் நம்பி வாழ்பவன். இவ் வேலை இல்லை யென்றால் அவன் பாடு திண் டாட்டந் தான். தன் சிக்கலை நன்கு அறிந்தே அரசாங்கம் மறை முகமாக இப் புது உத்திரவைத் தன் பரம்பரைமீது திணிக்கிறது; மதமாற்றத்திற்கு இதுவும் ஒரு வழியே, என்று சிப்பாய் எண்ணினான்! போர் வீரனாக வேண்டும்......அதற்குத் தன் சாதியை இழக்க வேண்டும்......சாதியை இழந்தால் மானத்தையுந் தகுதியையும் இகபரலோகங்களின் பயனையும் இழக்கவேண்டும்......இதை நினைக்க நினைக்க சிப்பாய்க்குத் தாள முடியவில்லை!

சிப்பாயின் ஊதியமும், ஓய்வுப் பணமும்

காலாட்படை சிப்பாய்க்கு மாத ஊதியம் ரூபாய் 7. குதிரை வீரனுக்கு ரூபாய் 27. ஆனால், அவனே குதிரைக் கொண்டு வரவேண்டும். இந்த வருவாயில் தன் குடும்பத்தைப் பராமரிப்பது சிப்பாய்க்கு கடினமாகத் தான் இருந்தது. அவன் புரியும் அதே பணிக்கு, வெள்ளை வீரர்கள் அதிக ஊதியம் பெறுகிறார்கள். மூன்று லட்சம் வீரர்களைக் கொண்ட அரசாங்கப்படைக்கு ஆகும் மொத்தச் செலவு 98 இலட்ச ரூபாய் அப் படையிலிருக்கும் 51 ஆயிரம் வெள்ளை வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கு மட்டும் 56 லட்ச ரூபாய்கள் செலவாயின. மொத்தச் செலவில் பாதிக்கும் மேல் ஆறில் ஒரு பகுதியான ஆங்கிலேயருக்கே செலவிடப்பட்டது. இந்த விகிதங்களும் வித்தியாசங்களும் இந்தியச் சிப்பாய்களுக்குச் சரியாக விளங்கவில்லை யென்றாலும், உழைக்கும் தனக்கு—உயிரைக் கொடுக்கும் தனக்குப்—போதிய ஊதியமும், பதவி உயர்வுங் கிடைக்கவில்லை; என்று அவன் ஏங்குகிறான். பொதுவாக சிப்பாயின் ஊதியம் மிகவும் குறைந்ததெனக் கூறவும் முடியாது. சேமித்து வைக்க முடியாவிட்டாலும் தன் தேவைகளை ஓரளவு அவனால் பூர்த்தி செய்துகொள்ள முடிந்தது. பணியில் சேர்ந்த புதிதில், ஓரிருமாத ஊதியத்தை டிரில் ஹவில்தாருக்கும், சார்ஜெண்டிற்கும் (ஆங்கிலேயன்) அவன் கையூட்டுக் கொடுக்க வேண்டியதாயிருந்தது. தேவையான சீருடையை அவன் செலவிலேயே தைத்துக் கொள்ள வேண்டும். படைத்தளத்தில் உள்ள கடை வீதியில் உணவுக்கு வேண்டிய பொருட்களை அவன் கடனாகப் பெற்றுக் கொள்ளுவான். ஊதிய நாளன்று இக் கடனை அடைத்தது போக அவனிடம் மிஞ்சுவது! ஒரு ரூபாயோ அல்லது ஓரிரு அணைக்களோ தான். பதவி உயர்வு பெறும் வரை அவனுடைய ஊதியம் 9 ரூபாயைத் தாண்டாது.

பதவி உயர்வும் பல ஆண்டுகளுக்குப் பின்புதான் கிடைக்கும். அவனுடைய ஆற்றலும், அறிவும் மங்கத் தொடங்கும் வயதில் கிடைக்கும், பதவி உயர்வால் என்ன பயன்? சீதாராம் என்பவன் 48 ஆண்டுகள் சிப்பாயாகப் பணி புரிந்து 65-வது வயதில்தான் சுபேதாராக உயர்த்தப்பட்டார்! இதற்கு மேல் இந்தியன் உயரமுடியாது. படிக்கவும், எழுதவும் தெரியாமலே பல சுபேதார்கள் இருந்தனர். பெரும்பாலான சிப்பாய்களுக்குச் சுய புத்தியே இருக்க முடியாது. தன் மேலதிகாரிக்குப் பிடித்தமான பதிலைச் சொல்லுவதில் தான் அவன் மகிழ்ச்சியடைங்

தான். சிப்பாய்களைப் பற்றி பல உண்மைகளை அதிகாரிகள் அறிய முடியாமல் போனதற்கு இது ஒரு காரணம்.*

வெள்ளை வீரர்களுக்கு அதிகமாய்ச் செலவழிக்க வேண்டியது இருப்பதால் இந்திய வீரர்களை மதம் மாற்றினால் குறைந்த செலவிலேயே கடல் கடந்து நாடுகளைக் கைப்பற்றலாம் என்று திட்ட மிட்டே அரசாங்கம் தங்கள் மதமாற்றத்திற்கு ஆளாக்குகிறது என்ற வதந்திகளையெல்லாம் சிப்பாய் நம்பத் தொடங்கி விட்டான். சிப்பாய்ப்படையின் நூற்றாண்டு வரலாறு, 1857-ல் பெருங் கிளர்ச்சியின் பின்னணியாகும். ஒரு சிறு பொறி விழுந்தால் கூட உடனே பற்றி எறியும் அளவிற்குச் சூழ் நிலை உருவாகி விட்டது. அத் தீப் பொறி தான் கொழுப்புக் குண்டு!

* From Sepoy to Subadar; Being the life and adverleires of a Native officer of the Bengal Army—S. N. Ser.

## இரண்டாம் பகுதி

# 1. கொழுப்புக் குண்டுகள்—பரக்பூரில் பொறி!

[என்! ஃபீல்டு துப்பாக்கி—கொழுப்புக் குண்டு வதந்தி—எதிர்ப்பும் அரசாங்கத்தின் முடிவும்—வதந்தி பரவுகிறது—பர்ஹாம்பூர் சிப்பாய்கள் மறுப்பு—பரக்பூரில் அதிருப்தி—மங்கள் பான்டே தனிக் கலகம்—பர்ஹாம்பூர் அணி கலைக்கப்படல்—அம்பாலாவில் தலைமைத் தளபதி—அயோத்தி அணி ஆயுதப் பறிமுதல்—பரக்பூர் அணி கலைக்கப்படல்—மக்களின் பீதி.]

1850 வரை பிரௌன் பெஸ் (Brown Bess) என்ற துப்பாக்கிகளே படையில் பயன்படுத்தப்பட்டு வந்தன. 1852-ல் இங்கிலாந்திலுள்ள என்ஃபீல்டு (Enfield) என்ற இடத்தில் சில பரிசோதனைகளுக்குப் பின் புது வகை துப்பாக்கிகள் உருவாக்கப் பட்டு, மறு ஆண்டில் கிரிமியாப் போரில் கையாளப்பட்டதிலிருந்து இவற்றில் நல்ல பலன் இருப்பது தெரிந்தது. 1856–ல் இந்தியப் படையின் உபயோகத்திற்கு இவை அனுப்பப் பட்டன. இங்கிலாந்திலிருந்து இத் துப்பாக்கிகளுடன் சிறிதளவு குண்டுகளும் வந்தன. அதிகத் தேவையைக் கருதிக் கல்கத்தா, டம் டம், மீரட் ஆகிய இடங்களில் இந்தக் குண்டுகள் செய்யப் பட்டன. பல அணிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் இப் புதிய துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சிப் பெற டம் டம், அம்பாலா, சியால்கோட் ஆகிய இடங்களுக்கு அனுப்பப் பட்டனர்.

இத் துப்பாக்கிகளுக்கான குண்டுகளின் முனை வழுக்கிச் செல்லும் தன்மையுடன் இருக்க வேண்டும் என்பதற்காக கொழுப்பு அதில் தடவப்பட்டிருக்கும். துப்பாக்கியில் பொருத்தும் முன் குண்டின் அம்முனையைப் பல்லால் கடித்து நீக்க வேண்டும். ஆரம்பத்தில் எவ்வித தவறும் ஏற்படவில்லை. டம் டம் தொழிற் சாலையில் மிருகங்களின் கொழுப்பையே

குண்டுகளுக்குப் பயன்படுத்துகின்றனர்; என்ற செய்தி ஒரு கீழ்ச் சாதி தொழிலாளியின் மூலம் ஒரு பிராமணனுக்கு எட்டியது. உடனே இச் செய்தி காட்டுத்தீ போல் பரவியது. அதிகாரிகளுக்கும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. 1857 ஜனவரி 22ஆம் நாள் லெப்டினென்ட் ரைட் (Wright) டம் டம் வெடி மருந்து ஆயுதச் சாலை அதிகாரிக்கு இதை அறிவித்தார். அன்றே அணி வகுப்பு நடத்தப்பட்டுச் சிப்பாய்களின் குறை என்ன? என்று வினவப்பட்டது. பல சிப்பாய்கள் முன் வந்து குறைகளைக் கூறினர். குண்டுகளில் தடவப்படும் கொழுப்புத் தங்களின் மதப்பழக்கங்களுக்குப் புறம்பானதென்றும், மிருகக் கொழுப்பை நீக்கி, மெழுகு எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்தலாம் என்றும் தங்கள் கருத்தைக் கூறினர். உரிய மரியாதையுடன் தங்களின் அச்சத்தை வெளிப்படுத்தினரேயன்றி ஆத்திரம் கொள்ளவில்லை.

இந்தக் கொழுப்புக் குண்டுகள் இப்பீதியை ஏன் எழுப்ப வேண்டும்? அது வெறும் மிருகக் கொழுப்பல்ல. இந்துக்களால் புனிதமாகக் கருதப்படும் மாடுகள், முஸ்லிம்களால் சுத்தமற்றது என்று ஒதுக்கப்படும் பன்றிகள், ஆகியவற்றின் கொழுப்புக் கலவையே குண்டுகளில் தடவப்பட்டிருக்கிறது; என்ற ஐயம் — என்ற அச்சம் தோன்றிவிட்டது. ஆயுதச் சாலைக்கு இவற்றைத் தரும் ஒப்பந்தக்காரர் ஒரு வங்காள பிராமணர். இவர் இதைத் தெரிந்தே அளித்தாரா? 1857, ஃபிப்ரவரி மாதத்தில் இலண்டன் இதழ் தி டைம்ஸ் (The Times) நிருபரின் செய்தியாவது 'அரசாங்கம் ஆட்டுக் கொழுப்பைக் கேட்டிருந்தது. இலாபத்தைக் கருதிய ஒப்பந்தக்காரர்கள் பன்றி, மாட்டுக் கொழுப்புகளைக் கொடுத்து விட்டார்கள். இது உண்மையல்ல ஆட்டுக் கொழுப்புத்தான் வேண்டுமென்று அரசாங்கம் அவர்களைக் குறிப்பாகக் கேட்கவில்லை. அது போல மாடு, பன்றி ஆகியவற்றின் கொழுப்பைத்தான் அனுப்ப வேண்டும் என்றும் உத்திரவிடவில்லை.

சிப்பாய்கள் கல்கத்தா வில்லியம் கோட்டை அதிகாரியிடம் உயர்ச் சாதி இந்து ஒருவனையும் முஸ்லிம் ஒருவனையும் குண்டுகள் தயாரிப்பை மேற்பார்வையிட அனுமதித்தால் தங்களுக்குத் திருப்தியளிக்கும் என்று கூறினார்கள். இதனால், குழப்பம் தீருமென்றால் அதன்படிச் செய்யலாம் என்று அவருங் கூறினர். ஆனால், தளவாட அதிகாரி இதற்கு இசையாததால் சிப்பாய்களின் மேற் பார்வை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறது, இரகசியம் இருப்பதால்

தான் ஒரு அதிகாரி கொடுத்த அனுமதியை மற்றவர் மறுத்து விட்டார்; என்று சிப்பாய்கள் சந்தேகித்தனர்! அவர்களின் பார்வையில் இது நியாயமான சந்தேகந்தான்.*

ஜனவரி 22ஆம் நாள் சிப்பாய்களின் முதல் எதிர்ப்புக் கண்ணியமாகத் தெரிவிக்கப்பட்டதைப் பார்த்தோம். 28ஆம் நாள் அரசாங்கம் தன் கருத்தை அறிவித்தது. சிப்பாய்கள் அவர்களுக்குப் பிடித்த முறையில் மெழுகையோ, வேறு எதையோ குண்டுகளில் அவர்களாகவே தடவிக் கொள்ளலாம் என்று கூறிவிட்டது. இவ்வளவு விரைவில் இதற்கு முடிவெடுக்கப் பட்டு விட்டது. ஆனால், அதை விடக் கடும் வேகத்தில் கொழுப்புக் குண்டுக் கதை பரவி விட்டது. தன்னைக் கிறித்துவனாக்க அரசு திட்டமிட்டுச் சதிச் செய்கிறது. கொழுப்பைத் தொட்டு—அது தன் வாய்பட்டுச்—சாதியை நாம் இழக்கும்படி செய்வதற்கே இந்தச் சதி என்று சிப்பாய்கள் நிச்சயமாக நம்பி விட்டனர். இதற்கிடையில் மீரட், அம்பாலா, சியால் கோட் ஆகிய நகரங்களுக்குக் கொழுப்புக் குண்டுகளைச் சிப்பாய்களுக்குத் தரவேண்டாம் என்ற அரசாங்க உத்திரவு சென்றது. அதற்கு முன் வதந்தியும் அங்கே போட்டியிட்டுச் சென்றது.

கொழுப்புக் குண்டுகளைச் சிப்பாய்கள் உபயோகிக்கத் தேவையில்லை என்று தலைமைத் தளபதியே ஒரு அறிக்கையை இராணுவம் முழுவதும் அறியும்படி வெளியிட வேண்டும்; என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால், மற்றொரு அதிகாரி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அவர் கூற்றுப்படி மினி (Minie) துப்பாக்கிகளை ஏந்துஞ் சிப்பாய்கள் சில காலமாக வேறு வகைக் கொழுப்புக் குண்டுகளைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். தலைமைத் தளபதி அறிக்கை வெளியிட்டால், தங்களை அறியாமலே அக் குண்டுகளைப் பயன்படுத்தியவர்கள் இப்பொழுது அதை அறிந்து ஆத்திரமடைவார்கள். அரசாங்கம் தங்களை ஏமாற்றி விட்டது; என்று கூக்குரலிடுவார்கள். இக்கருத்து வேறுபாடுகளில் தலைமைத் தளபதியின் அறிக்கை வெளியாகவில்லை. சிப்பாய்களின் ஐயம் நீடிப்பதற்கு இவ்வமைதி வழி செய்து விட்டது. இது ஒரு பெருந் தவறு

* இரண்டு ஆண்டுகளுக்கு முன் இக் குண்டுகள் பரிசோதிக்கப் பட்டன. சிப்பாய்களுக்குத் தெரிந்தால் எதிர்ப்புத் தோன்றும். எனவே, இங்குள்ள ஐரோப்பிய வீரர்களுக்கு மட்டுமே இவை அளிக்கப்பட வேண்டும். என்று கர்னல் டக்கர் (Tucker) ஒரு முறை எச்சரித்திருந்தார். ஆனால், அப்பொழுது இதை யாரும் பொருட்படுத்தவில்லை.

கொழுப்புக் குண்டுகளைத் தடுக்க நினைத்த அரசு தன் எண்ணத்தைச்—செயலைச்—சிப்பாய்களும், பிறரும் அறிவதற்கு வழி செய்யத் தவறி விட்டது. புறம்பான கொழுப்புக் கலக்கப் படவில்லை என்று அரசு துணிந்து மறுக்க வில்லை. அப்படிக் கலந்திருந்தாலும், தவறு நடந்து விட்டது உடனே அதைத் தடுக்கிறோம். என்று அரசு முன் வந்திருந்தால் குழப்பந் தவிர்க்கப் பட்டிருக்கும். நிலையான கருத்தும், உறுதியான நடவடிக்கையும் தொடராததால் அரசின் போக்கு ஐயத்தை நிச்சயப் படுத்திற்று! அச்சத்தை வளர்த்தது! ஆத்திரத்தைத் தூண்டியது!

தொற்று நோயைத் தடுக்கலாம்; வதந்தியைத் தடுப்பது கடினம். புதுக் கதைகள் பரவின. குண்டுகள்மேல் சுற்றப் படும் காகிதங்கள் இப்பொழுதெல்லாம் பளபளப்பாக இருக் கின்றன. கொழுப்பு அதிலும் தடவப்பட்டிருக்கிறது. இது ஒரு கதை! ஆட்டா மாவில், அரசும் எலும்புத் தூளைக் கலந்து விட்டது; கிணற்று நீர் களங்கப்படுத்தப் பட்டிருக் கிறது; களங்கமானவற்றைத் தீண்டவும், உண்ணவும், அருந்த வும் ஒவ்வொரு இந்துவும், முஸ்லிமும் அரசால் நெருக்கப்படு கிறார்கள். ஆதாரமில்லா இக்கதைகளுக்குக் கடை வீதிகளி லும், கிணற்றடியிலும், ஆற்றங் கரையிலும் கண், மூக்கு, காதுகள் வைக்கப்பட்டன! ஒரு பயங்கரம் நடப்பதாக மக்கள் நம்பினார்கள். அவர்களுடைய அச்சத்திற்கு ஆதாரந் தரும் வகையில் படையில் சில அதிகாரிகளின் நடத்தை இருந்தது. பரக்பூரில் இருந்த கர்னல் வீலர் (Wheler) மதப்பற்று மிகுந் தவர். சிப்பாய்களுக்கும், பிறருக்கும் அடிக்கடி பைபிள் போதனை செய்து வந்தார். மேலிடம் காரணம் வினவிய போதும் இயேசு போதனையை எடுத்துச் சொல்ல வேண் டியது தம் தலையாய கடமை என்று தயங்காமல் கூறினார். கர்னல் வீலர் 34வது படைப்பிரிவின் ஒரு அதிகாரி. அவ்வகை நடத்தைக்கு அவரும் ஒரு காரணமாயிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இதனால், கல்கத்தாவிற்குச் சற்று வடக்கே பரக் பூரிலும். ராணிகஞ்சிலும் சிறு குழப்பங்கள் மிகுந்தன.

கல்கத்தாவிற்கு நேர் வடக்கே வங்காள நவாப்பின் இருப் பிடம் முர்ஷிதாபாத் இருக்கிறது. இதற்கருகிலிருந்த ஹாம் பூரில் 19வது அணி கர்னல் மிட்சலின் (Mitchell) தலைமையி லிருந்தது. அவசர நிலையை முன்னிட்டுப் பரக்பூரிலிருந்து 34வது அணியின் இரண்டு பிரிவுகள் பர்ஹாம்பூருக்கு அனுப் பப்பட்டன. இதற்கு முன்பே வதந்தி. அங்கே சென்று

விட்டது. புது நண்பர்களின் வருகையானது அவர்களுடைய கதைக்குவலுவளித்தது. மறுநாள் குண்டுகளைத் தொடுவதற்கு வீரர்கள் மறுத்தனர். கர்னல் மிட்சல் நிலைமையைப் புரியாமல் அவர்களுக்கு ஆத்திரமூட்டும் வகையில் பேசினர். ஓராண்டுக்குள் செய்யப்பட்ட இக் குண்டுகளைத் தொட மறுத்தால் விரைவிலேயே சைனவிற்கோ, பர்மாவிற்கோ வீரர்கள் அனுப்பப் படுவார்கள்; என்று கோபத்தில் கத்தினர். கல்கத்தாவிற்கு அண்மையில் தளவாடங்கள் வந்ததைச் சிப்பாய்கள் அறிவார்களாகையால் பழைய குண்டுகளுடன் புது குண்டுகள் கலக்கப் பட்டிருக்கும் என்று சந்தேகித்தனர். கர்னலின் எச்சரிக்கை, நிலைமையை மேலும் மோசமாக்கியது. மறுநாள் அணி வகுப்புக்கு முன் ஆயுதந்தாங்கியிலிருந்த துப்பாக்கிகளைப் பறித்துக் கொண்டனர். கர்னல் மிட்சல் கோழை யல்ல; அவரிடம் வெள்ளை வீரர்கள் இல்லை யென்றாலும், ஒரு சுதேசி குதிரைப் படையையும், பீரங்கிப் படையையும் அழைத்துக் கொண்டு ஒழுங்கை மீறிய காலாட்படை வரிசைக்குச் சென்றார். வழியில் பிற சுதேசி அதிகாரிகள், கர்னலுக்கு அறிவுரை கூறினர்கள். அச்சத்தினல் சிப்பாய்கள் ஒழுங்கு மீறி நடந்தார்களே யன்றி, எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல. அவர்களைத் தண்டிக்க படையுடன் சென்றால் நிலைமை விபரீதமாகலாம்; என்று அவர்கள் கூறியதால், கர்னலும் அதைச் செவிமடுத்த தால் அன்றைய அபாயம் தவிர்க்கப் பட்டது.

படையின் அபாயம் தவிர்க்கப்பட்டது; உண்மை. ஆனல், ஒரு படையின் ஒழுங்கு மீறப்பட்டிருக்கிறது. அதற்கென்ன செய்வது? ஐரோப்பியர்கள் இதில் மிகவும் கண்டிப்பானவர்கள். கட்டுப் பாட்டை ஒருமுறை மீறியவர்க்கு அவ்வளவு எளிதில் படையில் மீண்டும் பணிபுரிய அனுமதிக்க மாட்டார்கள். பர்ஹாம்பூரில் சுதேசி காலாட் படை மட்டுமே கட்டுப்பாட்டை மீறியது. அவர்களின்மேல் நடவடிக்கை எடுக்க சுதேசி குதிரைப் படையையோ! பீரங்கிப் படையையோ! பயன்படுத்துவது நல்ல தல்ல. எனவே, வெள்ளைப் படையை அருகே வைத்துக் கொண்டுதான் தண்டனை அளிப்பது நல்லது; என்று அரசு முடிவு செய்தது. அதன்படி இரங்கூனிலிருந்த வெள்ளைப் படையைக் கொண்டு வந்தனர். அவ் வீரர்கள், சின்சுராவில் முகாமிட்டிருந்தனர். கர்னல் மிட்சல் ஒழுங்கை மீறிய 19வது அணியைப் பர்ஹாம்பூரிலிருந்து, பரக் பூருக்கு அரசு உத்திரவின் பேரில் கொண்டு வந்தார். குண்டு

களை வாங்க மறுத்தோம் என்ற பெருமிதம் அவ் வீரர்களுக்கு இருந்தது. ஆனால், வழியில் அவர்கள் எந்த வித கிளர்ச்சியி லும் ஈடுபட வில்லை.

பர்ஹாம்பூர் செய்தி இதற்குள் எங்கும் பரவி விட்டது. சுமார் ஒரு மாதத்திற்குப் பின் அதன் உண்மையான விளைவு வெளிப் பட்டது. சிப்பாய்கள் எந்த அளவிற்கு ஆங்கிலே யரின் நடவடிக்கையில் கலவரம் அடைந்திருந்தார்கள் ; என் பதை அப்பொழுதுதான் அறிய முடிந்தது. மார்ச் மாதக் கடைசி வாரத்தில் ஏதோ சதியில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப் பெற்று, பீரங்கிப் படையைச் சார்ந்த 2 சிப்பாய் களுக்கு 14 ஆண்டுகள் கடின உழைப்புத் தண்டனை அளிக்கப் பட்டது. கொழுப்புக் குண்டுகளை எதிர்த்து நடந்ததற்காக ஜமேதார் சாலிக்கிராம்சிங் இராணுவ விசாரணைக்குப் பின் பதவி நீக்கஞ் செய்யப் பட்டான். இச்செய்திகளும் எங்கும் பரவி சிப்பாய்களின் உணர்ச்சியைத் தூண்டின.

பர்ஹாம்பூரின் சிப்பாய்கள் (19-வது அணி) தண்டனை பெறப் போகிறார்கள்; பர்மாவிலிருந்து இறங்கியுள்ள வெள்ளை வீரர்கள் நதி வழியே பரக்பூருக்கு வந்து குவிகிறார்கள் ; இந்த வெள்ளை வீரர்கள் துப்பாக்கி முனையிலே நம்மை அடக்கி, கொழுப்புக் குண்டுகளை ஏற்குமாறு வற்புறுத்தப் போகிறார் கள் ; இதை எதிர்ப்பதற்கு ஆளில்லையா ?என்று சிப்பாய்கள் பலர் நெஞ்சங் குமுறினார்களே யொழிய துணிவுடன் எதிர்க்க முன் வரவில்லை. அவர்களுள் 34வது அணியில் ஒரு பிராமண வீரன் இருந்தான். மங்கள் பான்டே என்பது அவர் பெயர். நன்னடத்தைக் கொண்டவன். அனைவருக்கும் அச்சத்தை அளித்த அச்சூழ்நிலை அவனுக்கு மட்டும் ஆத்திரத்தை அளித் தது. மார்ச் 29ஆம் நாள் ஞாயிறு பிற் பகல், ஐரோப்பிய வீரர்கள் நதிக் கரையில் வந்திறங்கி முகாமிடுகிறார்கள் ; என்று சிலர் பேசிக் கொண்டார்கள். சில நாட்களாக வெள்ளைப் பரங்கியின் சூழ்ச்சியை மங்கள் பான்டே சிந்தித்திருப்பான் போலும்! வெள்ளை வீரர்களின் வருகை யானது அவன்பால் வெறியை உண்டாக்கியது. தன் வாளை எடுத்து மாட்டிக் கொண்டான். துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு படை வரிசையிலிருந்த தன் குடிசை யிலிருந்து அவசரமாக வெளி யேறினான். 'கொழுப்புக் குண்டை கடிக்க விரும்பாதவர்கள் அனைவரும் வெளியே வாருங்கள் ;' என்று தன்னுடைய தோழர்களை நோக்கிக் கத்தினான். காவல் சதுக்க அதிகாரி யிடம் (Quarter Gaurd) குழலை ஊதி அழைப்பு விடும் படிக் கூவினான். யாரும் அசையவில்லை. மங்கள் பான்டே

அடுத்து, அந் நேரம் அப் பக்கம் வந்த ஆங்கில சார்ஜெண்ட் மேஜரை நோக்கிச் சுட்டான். குறி தவறி விட்டது. சுதேசி வீரர்களும், அதிகாரிகளும் இதை வேடிக்கைப் பார்த்தனர். யாவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. இதை அறிவிக்க ஒரு சிப்பாய் லெப்டினென்ட் பாக்கின் (Baugh) வீட்டிற்கு ஓடினன். அவனும், உடனே தன் வாளையும், கைத் துப்பாக்கியையும் மாட்டிக்கொண்டு குதிரையிலேறி தளத்திற்கு உள்ளே நுழைந்ததும், மங்கள் பான்டேயின் துப்பாக்கி வெடித்தது. இம் முறையுங் குறி தவறியது!' அடுத்த குண்டு குதிரையின்மேல் பட்டதும், லெப்டினென்ட் பாக் குதிரையுடன் சரிந்தான். விரைந் தெழுந்த லெப்டினென்ட் மங்கள் பான்டேயை நோக்கிச் சுட்டான்...குறி தவறியது! உடனே தன் வாளை உருவி அவனை நெருங்கினன். பான்டேயும் தன் கத்தியையுருவி அதிகாரியைத் தாக்கினன். அதிகாரியின் உதவிக்கு சார்ஜண்ட் மேஜர் ஓடி வந்தான். எதிரிக்கு உதவி கிடைத்ததைக் கண்ட பான்டே வெறி கொண்டு வாளைச் சுழற்றினன். காயமடைந்த இரு அதி காரிகளும் இரத்தஞ் சொட்டச் சொட்ட அவனை நெருங்கினர். அச் சமயத்தில் ஷேக் பால்ட்டு என்ற முஸ்லிம் சிப்பாய் பான்டேயைக் கட்டிப் பிடித்துச் சண்டையை நிறுத்தினன். அவன் தடுத்திராவிட்டால், வெள்ளை அதிகாரிகள் இருவருங் கொல்லப்பட்டிருப்பார்கள். இதற்குள் வெடியோசையைக் கேட்டு குடியிருப்பு வரிசைகளிலிருந்து சிப்பாய்கள் தளத்திற்கு விரைந்தனர். சீருடையில் சிலரும், பாதி உடையில் பலரும் அங்கே வந்து குழுமினர். ஆனல், ஒருவராவது அதிகாரிகளின் உதவிக்கு ஓடிவர வில்லை. அது மட்டுமல்ல, அதிகாரிகளையே தாக்குவதற்குஞ் சிலர் முயன்றனர். மங்கள் பான்டே மது போதையிலிருந்தாலும் கலகக்காரனல்ல; புரட்சி வீரன்; என்பதைப் பிற சிப்பாய்களின் நடத்தையே காட்டி விட்டது. ஷேக்பால்ட்டுப் பான்டேயை அழுத்திப் பிணைய சிப்பாய்களின் உதவியைக் கோர, சிப்பாய்களோ! அவனை விடுவிக்கா விட்டால் உம்மையே சுடுவோம்; என்று அச்சுறுத்தினர்! எப்படியோ ஷேக் பாலட்டுச் சிறிதுநேரம் மங்கள் பான்டேயைத் தன் பிடியில் வைத்திருந்ததால், இரு வெள்ளை அதிகாரிகளும் தப்பி ஓடி உயிர் பிழைத்தனர். அணி வகுப்புக் காலத்தில் அமளி ஏற்பட்டிருக்கிறது; என்ற செய்தி இதற்குள் ஜெனரல் ஹியர்சேக்கு (Hearsey) எட்டியது. படை முழுவதும் கலகத்திலிறங்கி விட்டது, என்றெண்ணி தளபதி ஹியர்சே தம்மிரு புதல்வர்களுடன் புரவிகளில் ஏறி தளத்திற்கு விரைந்தார். அங்கே, ஒரே கூட்டம் குழுமி இருந்தது. சிப்பாய்களின் மத்தியில் சில ஆங்கில அதிகாரிகளும் இருந்தனர். மங்கள்

பான்டே இரத்தஞ் சொட்டும் வாளுடன் இங்கும், அங்கும் நடந்து கொண்டே இரைந்து கத்திக் கொண்டிருந்தான். 'என்னைப் பின் பற்றுங்கள்; எதிரியைக் கொல்லுங்கள்; மதத்தைக் காப்பாற்றுங்கள்; தயங்குபவர்கள் துரோகிகள்; கோழைகள்!' என்று இரைந்து கத்திக் கொண்டிருந்தான். சிப்பாய்கள் அசைய வில்லை. அவன் உரைத்தது நியாய மானதே என்று அவர்களுக்குப் பட்டது. ஆனால், களத்தில் இறங்கப் பயந்தார்கள். மங்கள் பான்டேயுடன் வாளெடுக்கத் தயங்கியதில் தங்கள் மதத்திற்கும்; அவனை வளைத்துப் பிடிக்கத் தவறியதில். அரசுக்கும் அச் சிப்பாய்கள் அன்று துரோக மிழைத்தனர்! உணர்ச்சிமிக்க இந்த ஓரங்கக் காட்சிக்கிடையே தளபதி ஹியர்சே தம் புதல்வர் இருவருடன் நுழைந்தார்!

அனைவரும் திகிலுடன் தளபதியின் நடவடிக்கையைக் கவனித்தனர். சுழல் துப்பாக்கியில் (Revolver) ஒரு கையை வைத்துக் கொண்டு, மங்கள் பான்டேயை நோக்கித் தம் குதிரையைச் செலுத்தினார். அவனுடைய துப்பாக்கியும் தளபதியை நோக்கி நிமிர்ந்தது. தளபதியின் நெஞ்சுரத்தைக் கண்டு சிலர் அவரைப் பின் தொடர்ந்தனர். மங்கள் பான்டே, தன்னை அபாயம் நெருங்குவதைக் கண்டான். இனி தப்ப முடியாது! திடீரெனத் தன் துப்பாக்கியைத் தலைக்கீழாகத் தரையில் வைத்தான். கால் பெரு விரலை விசையில் நுழைத்து அழுத்தினான்...மறுகணமே தரையில் துள்ளி விழுந்து புரண்டான்...தற்கொலையிலும் அவன் குறி தப்பி விட்டது! படை மருத்துவர் ஓடி வந்தார் மங்கள் பான்டேயின் உயிர் காப்பாற்றப்பட்டது...! அன்று இந்திய வெஞ்சினத்தின் குறி தவறி விட்டாலும், இலக்கு எது வென்று' அனைவருக்கும் புரிந்து விட்டது.

ஜெனரல் ஹியர்சே மனச்சுமையுடன் அஞ் ஞாயிறு மாலை வீடு வந்தார். பர்ஹாம்பூரிலிருந்து கொண்டுவரப் பட்டிருக்கும் 19வது அணியைக் கலைக்க வேண்டிய கட்டளை அவருக்குக் கிடைத்து விட்டது. நாளை மறு நாள் கட்டளை நிறைவேற்றப் பட வேண்டும். அதற்குள் இங்கே மங்கள் பான்டே புது அச்சத்தைத் தோற்றுவித்து விட்டான். நாளை மறுநாள் என்ன நடக்குமோ? மார்ச் 31ஆம் நாள் அதி காலையில் 19வது அணி அருகிலிருந்த பரக்பூருக்குத் தம் இறுதிப் பயணத்தை மேற்கொண்டது. பரக்பூர் படைத்தளத்திற்குள் நுழைந்த போதே பரங்கி வீரர்களும், பிற சிப்பாய்களும் ஆயுதமேந்தி நின்றிருப்

பதைக் கண்டனர். அவர்களை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது......செய்யும் எண்ணமும் அவர்களுக்கு இல்லை! தளபதி ஹியர்சே அணி கலைப்புக் கட்டளையை வாசித்தார். மிக அமைதியாக சிப்பாய்கள் துப்பாக்கிகளை உரிய இடத்தில் வைத்தார்கள். அடுத்துத் தங்கள் இடுப்புப் பட்டைகளைக் (Belt) கழற்றித் துப்பாக்கியின் முனையில் மாட்டினார்கள். சிறிது தூரம் நடத்தப்பட்டு பின் பாக்கி நின்ற தங்கள் கூலியைப் பெற்றனர். தளபதி ஹியர்சே உரையாற்றினார், 'சுமார் ஒரு மாதத்திற்கு முன் படை ஒழுங்கை மீறி பாஹாம்பூரில் அதிகாரிகளுக்கெதிராக ஆயுதங்களை நீட்டிய மன்னிக்க முடியாத குற்றத்திற்காக இந்திய இராணுவத்தின் 19வது அணி கலைக்கப்படுகிறது. ஆனால், நீங்கள் தவறை உணர்ந்ததாலும், வேறு கலகங்களில் ஈடுபடாததாலும், சீருடையைக் களையும் அவமானத்தை அரசு உங்களுக்கு அளிக்க விரும்ப வில்லை. இராணுவ சீருடையுடன், அரசின் செலவிலேயே நீங்கள் தத்தம் இல்லங்களுக்குச் செல்லலாம்.' என்று படித்துக் காட்டினர்.

சிப்பாய்கள்......மாஜி சிப்பாய்கள்......துக்கந் தாளாமல் அழுதே விட்டனர். அணி கலைப்பு என்பது அத்தகைய அவமானம்! சீருடையைக் களையாமல் விட்ட அரசின் பெருந்தன்மை அவர்களை நெகிழச் செய்தது. 34வது அணியின் தூண்டுதலினால் சிறிதும் அறியாமல் தவறு செய்தோமே என்று மனம் புழுங்கினர். அதில் ஒருவன் 'போகுமுன் 10 நிமிடங்களுக்கு எங்கள் ஆயுதங்களைத் தாருங்கள். என்று கத்தினன். 34வது அணியுடன் எங்கள் கணக்கைத் தீர்த்துக் கொள்ளுகிறோம்' என்றான். இந்த அளவிற்குத் தங்கள் தவற்றை உணர்ந்திருந்தனர். ஜெனரல் ஹியர்சே அடுத்துப் பிற அணிகளுக்கு ஒரு உரையாற்றினார். 'உங்களை மதம் மாற்ற அரசு நிச்சயம் விரும்ப வில்லை. இதோ கலைக்கப் பட்டிருக்கும் இவ்வீரர்கள் தங்கள் விருப்பம் போல் எந்தக் கோயில்களுக்குஞ் செல்லலாம்; ஒழுங்கு தான் படையில் முக்கியம். அதை வெளிப்படுத்தவே இவ்வணி கலைப்பு மேற்கொள்ளப்பட்டது. அரசுக்கு எவ்வித தவறான எண்ணமுங் கிடையாது. என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்.' உண்மையில் பர்மாவிற்கோ, சீனாவிற்கோ 19வது அணியை அனுப்ப முயன்றால் கிளர்ச்சித் தோன்றும்; என்று கருதிய அரசு வேலை நீக்கமே சிறந்ததெனக் கருதி இவ்வாறு செயல்பட்டது. ஆனால், கலைக்கப்பட்ட அவ்வணியின் 400 பிராமணர்களும் 160 ராஜ புத்திரர்களும் எத்தனைய கிளர்ச்சிக்கு வித்திடுவார்கள்! என்பதை யாரும் எதிர்பார்க்க வில்லை!

அணி கலைப்பு நாளன்று பெருங் கிளர்ச்சி நடைபெறும் என்பதற்கும் ஆங்கில அதிகாரிகள் கொல்லப்படுவார்கள் என்ற அச்சத்திற்கும் இடமில்லாமல் போய் விட்டது. 19வது அணி அமைதியாக கலைக்கப் பட்டது. ஏப்ரல் 6ஆம் நாள் மங்கள் பான்டே இராணுவ விசாரணை செய்யப் பட்டான். 8ஆம் நாள் பரக்பூர் சிப்பாய்களின் கண்முன் தூக்கிலிட்டுக் கொல்லப் பட்டான். காவல் சதுக்கத்திலிருந்து கொண்டு அதி காரிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தவறிய குற்றத்திற்காக ஜமேதார் ஈஸ்வர் பான்டேவுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்ட போதிலும் சட்ட நுணுக்கங் காரணமாக அது உடனே நிறைவேற்றப்பட வில்லை. இதற்கு முன் அந்த ஜமேதார் தன் தவறை உணர்ந்தான்.

மேற் கண்ட நிகழ்ச்சிகள் நடை பெறுவதற்குச் சற்று முன் மார்ச்சு 3வது வாரத்தில் தலைமைத் தளபதி ஆன்சன் (Anson) கல்கத்தாவிலிருந்து ஓய்விற்காக சிம்லாவுக்குச் சென்றார். செல்லும் வழியில் அம்பாலாவில் தங்கினர். அம்பாலா, டெல் லிக்கு நேர் வடக்கே இமயமலை அடிவாரத்தில் இருக்கும் படைத்தளம். இங்கே 36வது அணியும் நிறுத்தப்பட்டிருந்தது. இங்கும் புதிய துப்பாக்கிகளைப் பயன்படுத்தும் முயற்சிப் பல அணிகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சிப்பாய்களுக்கே அளிக்கப்பட்டு வந்தது. கொழுப்புக் குண்டுகளைப் பயன் படுத் தும் அளவிற்குப் பயிற்சி இன்னும் முன்னேற வில்லை. குண்டு களைப் பற்றியும், அவைகளைச் சுற்றப் பட்ட காகிதத்தைப் பற்றியும் வதந்தி பரவி விட்டதால், பயிற்சியின் வேகங் குறைக்கப்பட்டிருந்தது. 36வது அணியின் இரு அதிகாரிக ளான ஹவில்தார் காசிராம் திவாரியும், நாயக் ஜீவ்லாலும் அங்குப் பயிற்சிப் பெற்றுக் கொண்டிருந்தனர். ஒரு நாள் இவர் களிருவரும் தங்கள் அணியின் சுபேதாரைக் காணச் சென் றிருந்தார்கள். கொழுப்புக் குண்டுகளைத் தொட்டு மதத்திற்குத் துரோகம் இழைத்து விட்டீர்கள்; என்று அந்தச் சுபேதார் இவர்களைத் திட்டினராம். அவ் விருவரும் அழுது கொண்டே தங்கள் பயிற்சியாளர் லெப்டினென்ட் மார்ட்டினேவிடம் இதை முறையிட்டனர். ‘எங்கள் சுபேதாரே ஏசும் பொழுது, உறவினர்களும், ஊர் மக்களும் எப்படி நகைப்பார்களோ? ஜாதியை இழப்பது தான் எங்கள் விதியா? என்று அழுதனர். லெப்டினென்ட் மார்ட்டினே தலைமைத் தளபதியிடம் இதை அறிவித்தார். தலைமைத் தளபதி துப்பாக்கிக் கிடங்கைப் பார்வையிட்ட பின் சிப்பாய்களுக்கு ஒரு உரை நிகழ்த்தினர். தளபதி ஹியர்சேயைப் போல் இந்தியில் தெளிவாக அவரால்

சொற்பொழிவாற்ற முடியவில்லை. அரசுக்கு எவ்விதத் தவருன எண்ணமுங் கிடையாது என்பதை மட்டும் உறுதியாகக் கூறினார். தலைமைத் தளபதியே தங்களுக்கு உரையாற்றியதை நினைத்துச் சிப்பாய்கள் நெகிழ்ந்து விட்டார்கள். லெப்டினென்ட் மார்டினோ மூலம் தலைமைத் தளபதிக்குத் தங்கள் நிலையை அவர்கள் விளக்கினார்கள். அரசின் நடவடிக்கைகளில் நாங்கள் பெரும் நம்பிக்கை வைத்திருக்கின்றோம். எங்கும் பரவியிருக்கும் வதந்திகளை நாங்கள் நம்ப வில்லை. ஆனல், இந்துஸ் தானத்தில் ஒருவன் நம்பினுலும், அது பதினுயிரம் பேர்கள் நம்பியதற்கு ஈடாகும். படைத் தளங்களுக்கு மட்டுமின்றி எங்கள் கிராமங்களுக்கும், இல்லங்களுக்கும் இது பரவி விட்டது. அரசு ஆணை யிட்டால் போர் புரிய நாங்கள் எவ் விடுயிலுங் தயாராக யிருக்கிறோம். படை ஒழுக்கத்திற்குக் கட்டுப்படுவதால் சாதி விலக்கத்திற்கு ஆளாவோமா! என்று தான் அஞ்சுகின்றோம். சாதி இழந்தால், இவ்வுலகில் ஈடு செய்ய முடியாத இழப்பிற் குள்ளாவோம். இதையும் நீங்கள் தயை கூர்ந்து கவனிக்கவும். முறையான, கண்ணியமான விண்ணப்பம் இது. ஏப்ரல் 16ஆம் நாள் சுபேதாரின் ஏச்சு முறை தவறியது, என்று மேல் அதிகாரிகள் கருதுகின்றார்கள் என்பது பிற சிப்பாய்களுக்குத் தெரிந்தது. ஏச்சுக்குள்ளான அவ்விரு பயிற்சியாளர்களும் தங்கள் தோழர்களிடம் செய்தியைப் பரப்பியதும் தவறு. ஏனெனில்? ஒவ்வொரு பயிற்சியாளனும் தான் திரும்பச் சென்றால் தன் அணியிலும் அவமானத்திற்குள்ளாவான்; என்று நினைத்தான். இவ்விரு பயிற்சியாளர்களும் இதற்க்காகக் கண்டிக்கப்பட்டனர்.

இதற் கிடையில் இலக்குப் பார்த்துச் சுடும் பயிற்சியை இனியும் ஒத்திவைக்கத் தேவையில்லை; என்று தலைமை ஆளுநர் கானிங் கட்டளை இட்டுவிட்டார். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. ஒத்தி வைப்பது அரசின் பலவீனத்தைக் காட்டும். மேலும் பிப்ரவரி மாதத்திலேயே மீரத்திலிருந்து லெப்டினென்ட் கர்னல் ஹாக் (Hogge) ஒரு மாற்று யோசனை கொடுத்திருந்தார். அதன் படி கொழுப்புக் குண்டின் முனையைக் கடிக்காமல் விரலால் கிள்ளி எறிந்து விட்டால் போதுமானது; மார்ச் 5ஆம் நாளே, குண்டு முனையைக் கடிக்க வேண்டியதில்லை; என்ற அரசாங்க உத்திரவு எல்லாத் தளங்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டது. ஆனல், சிப்பாய்களுக்கு இது அறிவிக்கப்பட வில்லை.

இப் புது உத்திரவின்படி அம்பாலாவில் இலக்குப் பார்த்துச் சுடும்பயிற்சி மேற் கொள்ளப்பட்டது. பயிற்சி

யாளர்கள் குண்டுகளை தேன்மெழுகில் அழுத்தி எடுத்துப் துப்பாக்கியிலிட்டுப் பயிற்சியைப் பெற்று வந்தனர். பயிற்சி பெறும் சிப்பாய்களைப் பிற சிப்பாய்கள் ஏளனஞ் செய்து வந்தனர். அவ்விரு பிரிவினரும் தங்களுக்குள் பகைமையை ஓரளவு வளர்த்துக் கொண்டனர். சில நாட்களாக ஒருவருடைய குடிசையை இன்னொருவர் தீக்கிரையாக்குவதும் வழக்கமாகியது. இவ்வாறு ஏப்ரல்மாதத்தில் பாதி கழிந்து விட்டது.

அயோத்தி, அண்மையில் வெள்ளையராட்சியில் இணைக்கப் பட்டது. அங்குள்ள வீரர்கள் புது ஆங்கில அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களல்ல. இந்த நிலையில் லக்னோ படைத்தளத்தில் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி நடந்தது. 7வது காலாட் படை சிப்பாய்கள் குண்டுகளைக் கடித்து உப யோகிக்குமாறு வற்புறுத்தப் பட்டிருக்கிறார்கள். இந்தியர்களுடன் நெடு நாள் பழகிய ஸர் ஹென்றி லாரன்ஸ் அங்கே முதல் ஆணையாளராக இருந்தும் இத் தவறு நடந்து விட்டது. 7வது அணி சிப்பாய்கள் குண்டுகளை வாங்கவோ, பயன் படுத்தவோ மறுக்கவில்லை. ஆனால், அதைக் கடித்துப் பயன்படுத்த மறுத்து விட்டனர். அதிலும் கடிக்கத் தேவையில்லை என்று இரண்டு மாதங்களுக்கு முன்பே உத்திரவு வந்தும், லக்னோ அதிகாரிகள் இத் தவற்றை ஏன் எப்படிச் செய்தனர்? என்று புரியவில்லை. பலவந்தப் படுத்தினால் ஆங்கில அதிகாரிகளைக் கொன்றுவிட வேண்டும் என்று தங்களுக்குள் பேசிக்கொண்டதுடன், அணி வகுப்புத் தளத்தில் மிக மூர்க்கத்தனமாகவும் நடந்தார்கள். அதிகாரிகள் சற்று மேலும் அழுத்தி யிருந்தால் அன்று இரணக் களமாயிருக்கும். மே 3 ஆம் நாள் இச் செய்தி யறிந்த ஹென்றி லாரன்சு ஆங்கில வீரர்கள் அனைவரையும், பிற சுதேசி வீரர் களையுஞ் சேர்த்துக் கொண்டு படைத்தளத்திற்கு விரைந்தார். இருட்டிய பின் அங்கே ஆயுத மேந்திய படை வந்து நிற்கக் கண்ட சிப்பாய்கள் பீதியடைந்தனர். அவ் விருட்டில் திடீரெனத் தோன்றிய தீப் பொறி அபாயத்தை அறிவித்தது. விழுந்தடித்துக்கொண்டு சிப்பாய்கள் சிட்டாய்ப் பறந்தனர். எஞ்சிய சுமார் 120 வீரர்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தனர்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன் மங்கள் பாண்டேயின் 'அத்து மீறிய அக்ரமத்தைப்' பார்த்துக்கொண்டிருந்த—தாக்கப்பட்ட தன் அதிகாரிகளைக் காக்க மறந்த—இந்தப் பரக்பூர் 34வது அணிக்கு முடிவு இப்பொழுது நெருங்கியது. நீண்ட ஆலோசனைக்குப் பின் தலைமை ஆளுநர் இவ் வணியைக் கலைக்க முடி

வெடுத்தார். மே 4ஆம் நாள் அதிகாலையில் அவ் வணி கலேக் கப்பட்டது. 19வது அணியை விட இவ் வணியின் அமைதி அபாயக் குறியாகும். எனவே, இராணுவச் சீருடையையும் சேர்த்துப் பறித்தனர். ஒரு சிப்பாயின் கேவலமான முடிவு என்பது இதுதான். இதற்காக அவர்கள் கவலைப்பட வில்லை. மதமே 'பெரிது' அதைப் பறிக்க நினைத்தால் வெகுண்டெழு வேன்' என்பது போல் தங்கள் தொப்பிகளைத் தரையிலெறிந்து காலால் மிதித்துச் சென்றனர். இவ் வணிக்கலைப்பு இந்தி யாவிலிருந்த எல்லாப் படைத்தளங்களுக்கும் அறிவிக்கப் பட்டது. கலைந்து சென்ற சிப்பாய்கள் அவமானத்திற்கு உள்ளாக வில்லை. மாருக மதத்திற்காக தொழிலை உதறி யெறிந்த தியாகிகளாக்கப்பட்டனர். இப்பிராமண, இராஜ புத்திர வீரர்கள் ஒவ்வொருவரும் ஒரு கிராமத்தைத் தூண்டி விடுவர்........அரசுக் கெதிராக தீட்டப்படுந் திட்டங்களுக்குத் துணை புரிவர்.

கொழுப்புக் குண்டுகளைப் பற்றிய பீதி எல்லாப் படைத் தளங்களுக்கும் பரவிய அதே சமயத்தில், வேறு சில நிகழ்ச்சி களும் நடந்தன. 57ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்தே பல வடக்கிந்திய கிராமங்களில் மாயச் சப்பாத்திகள் தோன்றின. ஒவ்வொரு ஊருக்குஞ் சிலச் சில சப்பாத்திகள் அனுப்பப் பட்டன. அவ்வூர் மக்களும் அது போல சப்பாத்திகள் செய்து பிற கிரா மங்களுக்கும் அனுப்பினர். இச் சப்பாத்திகள் எங் கிருந்து வருகின்றன? ஏன் வருகின்றன? என்பது யாருக்கும் அன்றும், இன்றும் சரியாகத் தெரிய வில்லை. தொற்று நோய் களை ஊரை விட்டு ஓட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட மதச் சடங்கா? புரட்சி வருகிறது; அனைவரும் தயாராகுங்கள் என் பதின் அறிகுறியா? (இதைப் பற்றி இறுதியில் தனியாக ஆராய் வோம்) அன்றையச் சூழ் நிலையில் இச் சப்பாத்தி இரகசிய மாகப் பலரிடையே பரபரப்பை ஏற்படுத்தி யிருந்தது. பல ருக்கு இதுச் சாதாரணமாகத் தோன்றியது. எதற்கோ! சிலர் காத்திருந்தனர் போல் தோன்றியது. ஏப்ரல் மாதத்தில், மீரத்தில் இதற் கேற்ற சூழ்நிலை உருவாகி விட்டது. மீரத்தில் என்ன நடக்கிறது? என்று அனைவரும் எதிர்பார்ப்பது போல் தோன்றியது. இச் சமயத்தில் கான்பூரில் ஆட்டா மாவின் விலை ஏறியிருந்தது. மீரத் வியாபாரிகள் சிலர் அரசாங்கப் படகுகளை வாடகைக்கு அமர்த்தி அங்கிருந்து மைதா மூட்டை களை லக்னேவிற்குக் கொண்டு சென்றனர். குறைந்த விலையில் விற்கப் பட்ட இம் மாவைப் பலரும் கான்பூரில் வாங்கினர். ஆனல், சில நாட்களில் நகரே அமளிக்குட்பட்டது! அரசாங்க

மேற்பார்வையில் மாடு, பன்றி எலும்புகளைப் பொடி செய்து மாவில் கலந்திருக்கிறார்கள் என்ற வதந்திப் பரவியது. மக்கள் உணர்ச்சி வசப்பட்டனர். கிணற்றில் இறைச்சித் துண்டுகள்! உப்பிலும், சர்க்கரையிலும் எலும்புப் பொடி! பரங்கியரின் சதியைப் பார்த்தீர்களா! இதை உடனே எதிர்க்க வேண்டும்; யார் எதிர்ப்பது? பூனைக்கு மணி கட்டுவது' யார்?

---

# 2. மீரத்தில் நெருப்பு !

[மீரத்தில் ஒரு பக்கிரி—தளபதி ஸ்மித்—அணி வகுப்பு—குண்டுகளை வாங்க மறுப்பு—85 சிப்பாய்களுக்குத் தண்டனை—கிளர்ச்சி—ஆங்கிலேயர் கொல்லப்படல்—அட்டூழியம்—சிப்பாய்கள் டெல்லிக்கு ஏகுதல்.]

டெல்லிக்கு வட கிழக்கே மீரட் இருக்கிறது. நிறுவன ஆட்சியின் முக்கியப் படைத் தளங்களில் இதுவும் ஒன்று. படையின் சில தலைமை யகங்களும், தளவாடக் கிடங்குகளும் இங்கு இருந்தன. மொகலாயத் தலை நகருக்கு அருகாமையில் இது இருந்ததால், இங்கு நடக்கும்—அல்லது—நடக்க இருக்கும்—நிகழ்ச்சிகள் முக்கியமாகக் கருதப் பட்டன. பிற தளங்களை விட இங்கே ஓரளவு அதிகமாகவே வெள்ளையர்கள் இருந்தனர். ஏப்ரல் மாதத்தில் ஊர் சுற்றும் பக்கிரி ஒருவன் இங்கு எதற்கோ? அடிக்கடி வந்து சென்றான். அவனுடைய ஒவ்வொரு வருகைக்குப் பின்னும் கடைத் தெருக்களிலும், படை வரிசைகளிலும் பரபரப்புக் காணப் பட்டது. யானைமேல் அமர்ந்து வரும் அப் பக்கிரியைத் தொடர்ந்து பல ஆதரவாளர்கள் உடன் வருவர். மக்கள் உணர்ச்சி வயப்பட்டிருக்கும் இவ் வேளையில் இவனுடைய வருகை ஆட்சியாளர்களுக்குப் புது அச்சத்தைக் கிளறியது. சிப்பாய்கள் பலர் அடிக்கடி இவனைச் சந்தித்து வருகின்றனர்; என்பதும் தெரிய வந்தது. எனவே, காவலர்கள் தடுப்பு நடவடிக்கையாக, இவனையும், இவன் கூட்டத்தையும் ஊரை விட்டுச் செல்லும்படி வேண்டினர். வெளியேறியதைப் போன்று வேட மிட்டு அந்த பக்ரி சிப்பாய்களுடன் இரகசிய உறவு கொண்டான்; என்று சொல்லப்படுகிறது. மீரத்தில் காற்று வேறு விதமாக வீசுகிறது; என்பதை ஆட்சியாளர்களும் மக்களும் புரிந்து கொண்டார்கள். தொலை தூரத்திலிருந்த மக்கள்கூட மீரத்தில் என்ன சேதி என்று ஒருவரை

யொருவர் கேட்டுக் கொண்டனர். பத்திரிகைகளில் மீரத்துச் செய்தியைத் தேடினார்கள். ஏதோ ஒரு விபரீதம் நிகழ இருக்கிறது என்றும், அதுவும் இரகசிய திட்டத்தில் நடைபெறும் என்பதும் ஓரளவு விளக்கியது.

கர்னல் கார்மைகேல் ஸ்மித் (Carmichael Smyth) மீரட்டின் 3-வது குதிரைப் படையின் தளபதி, சிறிது பிடிவாத குணம் படைத்தவர், சிப்பாய்களின் அன்புக்குரியவர் அல்ல. அவர்களின் மாறிய போக்கையோ, உள்ளக் கிடக்கையையோ அவன் அறிந்தவனாகத் தெரியவில்லை. பல்வேறு அணிகளைச் சார்ந்த 90 சிப்பாய்களுக்குப் புதுத் துப்பாக்கிப் பயிற்சி யளிக்க ஏப்ரல் 23ஆம் நாள் ஸ்மித் முடிவு செய்திருந்தார். குண்டுகளைக் கடிக்காமல் துப்பாக்கியில் எப்படிப் புகுத்திச் சுட வேண்டும்? என்பதை விளக்குவதற்காகவே இப்பயிற்சியும் அன்றைய அணிவகுப்பும், அவருக்குக் கீழிருந்த குதிரை வீரர்கள் பெரும் பாலோர் முஸ்லிம்கள், பிற இடங்களில்கூட முஸ்லிம்களே குதிரைப் படையில் அதிகம் இருந்தார்கள். இதுவரைக் கொழுப்புக் குண்டுகள் பற்றியதில் உயர்சாதி இந்துக்களே எதிர்ப்புத் தெரிவித்துத் தண்டனையும் அனுபவித்திருந்தனர். முஸ்லிம்கள் அதை எதிர்க்க மாட்டார்கள் என்று அதிகாரிகள் சிலர் நம்பியது தவறாகி விட்டது.

புதிய சூழ் நிலையில் எதிர்ப்பும், விளம்பரமும் அதிமாகி வரும் நேரத்தில் சிறு தவறும் ஆபத்தை விளைவிக்கும். சிப்பாய்கள் வேறு மன நிலையிலிருந்தார்கள். கர்னல் ஸ்மித்தின் நம்பிக்கைக் குரிய அவர் இல்லத்திலேயே தன் நேரத்தைப் போக்கும் ஒரு கீழ்ச்சாதி சிப்பாய் கொழுப்புக் குண்டைப் பயன் படுத்தி விட்டான்; என்று பேசிக் கொண்டார்கள். (அவன் ஒரு முறை படையில் திருடியதற்காக நீக்கப்பட்டவன். இப்பொழுது வேறு பெயரில் குதிரைப் படையில் சேர்ந்திருந்தான்.) தன் செய்கையை அவன் ஒப்புக் கொண்டதுடன், ஒவ்வொரு சிப்பாயும் கொழுப்புக் குண்டைப் பயன்படுத்தத்தான் போகிறான்; அதில் சிறிதுஞ் சந்தேகமில்லை' என்று இறுமாப்புடன் தன் சக சிப்பாய்களுக்குப் பதில் கூறியிருக்கிறான், இதற்குச் சவால் விடுவது போல் 'அதைத் தொடுவதில்லை' என்று குதிரை வீரர்கள் சபதம் எடுத்தனர். இதைத் தொடர்ந்து படை வரிசை கலகலத்தது. 'பலவந்தம் எதிர்ப்பை உருவாக்கும்; குண்டுகளைத் தரவேண்டாம்' என்று முதல் நாளில் அதிகாரிகளிடம் சிப்பாய்கள் பலர் கூறினர். 'கொடுத்தால் வெகுண்டெழுவோம்' என்று மனதிற்குள் சிலர் கருவி

ஞர்கள். கிளர்ச்சிக்கான அறிகுறிகள் அன்றிரவு படை வரிசையில் நன்கு புலப்பட்டது. கேப்டன் கிரெய்கி (Craigie) நடக்க இருக்கும் பயிற்சியை உடனே தள்ளி வைக்கும்படிக் கர்னல் ஸ்மித்திற்கு அவசரச் செய்தி அனுப்பினார். ஸ்மித் பிடிவாதக்காரர். கலகம் ஏற்படும் என்பதை அவர் உணராமலில்லை. மிரட்டலுக்கு அஞ்சி பயிற்சியைத் தள்ளி வைப்பது கோழைத்தனம்; என்று அவர் கருதினார். இந்த நெஞ்சுறுதியை நாம் பாராட்டலாம். அதுவும் ஆங்கிலேயர் பலர் மீரத்தில் இருக்கும் போது அஞ்சத் தேவையில்லைதான். ஆனால், கலகத்திற்கான வாய்ப்புகள் இருப்பதை அறிந்தும் அதை அவர் மேலிடத்திற்கு அறிவிக்கவில்லை.

மறு நாள் காலை அணி வகுப்பில் பயிற்சிப் பெற 90 பேர்கள் வந்திருந்தனர். புதிய மாறுதலை விளக்கி விட்டுக் குண்டுகளை ஸ்மித் விநியோகித்தார். 5 பேரைத் தவிர மற்றவர்கள் வாங்குவதற்கு மறுத்து விட்டனர்! அவருடைய உத்திரவு அவர்களின் செவிகளில் புகவில்லை. அணி வகுப்புக் கலைக்கப் பட்டது. மே 6ஆம் நாள் இராணுவ விசாரணை நடத்தப் பட்டது. ஆங்கிலேயர் ஒருவரின் சட்ட நுணுக்கத் துணையில் இந்திய நீதிபதிகளே விசாரணைக்கு அமர்த்தப் பட்டனர். அவர்களில் ஒருவரைத் தவிர 14 பேர்களின் தீர்ப்பும் ஒரே விதமாக இருந்தது. 85 சிப்பாய்களுக்கும் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது. அவர்களின் சேவையையும், வயதையும், நியாயமான அச்சத்தில் ஒழுங்கை மீறினார்கள் என்ற காரணத்தாலும் தண்டனையைக் குறைக்கச் சிபார்சு செய்யப் பட்டது. ஆனால், 11 பேர்களுக்குத் தண்டனை குறைக்கப் பட்டது. இத்தண்டனை மே 9ஆம் நாளிலிருந்து தொடங்க வேண்டும்.

அன்று அதிகாலையில் மீரத் படை முழுவதும் தளத்தில் குழுமியது. ஒழுங்கை மீறிய 85 பேரும் வரிசையாக நிறுத்தப் பட்டனர். சுற்றிலும் துப்பாக்கிகளை ஏந்திய ஆங்கில வீரர்கள் நின்றிருந்தனர். பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருந்தன. அதிகாரி ஒருவர் கைதிகளின் குற்றத்தையும், தண்டனையையும் உரக்கப் படித்தார். குற்றவாளிகளின் சீருடைகள் களையப்பட்டன...... கொல்லர்கள் வந்தனர்......கைகளிலும் கால்களிலும் விலங்குகளை மாட்டிப் பொருத்தினர்! நெடு நேரம் தம் தோழர்களின் முன்னால் நிறுத்தப் பட்டுச் சிறுமைக்குள்ளாக்கப் படுவதை எண்ணி மனம் வெதும்பி தம் இருண்ட காலத்தை எண்ணி நொந்து, இறுதி முறையாக கைதிகள் தளபதியிடம் மன்னிப்புக் கோரினார்கள். அதுதான் முடியாதே! ஆத்தி

ரத்தில் சுற்றி நின்ற தன் தோழர்களைத் திட்டினார்கள். பிற சிப்பாய்கள் யாரும் அசையவில்லை. பளிச்சிடும் வாட்களும். குறி பார்த்து நின்ற பீரங்கிகளும்; வெள்ளை வீரர்களின் மிடுக்கும் அவர்களை எச்சரித்தன.

படைத்தளத்திற்கப்பால் இரண்டு மைல் தூரத்திலிருந்த சிறைக்குக் கைதிகள் கொண்டு செல்லப் பட்டனர். அங்கே சுதேசி சிப்பாய்கள்தான் காவலுக்கு நிறுத்தப் பட்டிருந்தனர். குதிரை வீரர்கள் சிலர் இறுதி முறையாகச் சிறைக்குச் சென்று தம் நண்பர்களைப் பார்த்தனர். இருண்ட சிறைகளில் அக் கைதிகளின் எதிர்க் காலம் பிணைக்கப் பட்டது. தம் உற்றார் உறவினருக்கும், குடும்பத்தினருக்கும் விடுக்க முடிந்த செய்திகளை — இறுதி ஆசைகளை அக் கைதிகள் சொல்லச் சொன்னபோது தத்தம் கண்களில் நீர்மல்க தோழர்கள் கேட்டுக் கொண்டனர். நன்றி கெட்டு நான் நடந்தேனு? அரசுக்கு ஆபத்து நேர்ந்த போதெல்லாம் எத் தகையத் துணிவுடன் நான் போரிட்டிருக்கிறேன்? நான் என்ன தவறிழைத்தேன்? குண்டுகளைத் தொட மறுத்தது கூட பிறர் பழிப்பார்களே, சாதி விலக்கம் நேருமே என்று எண்ணி என் சாதியைக் காக்க நினைத்தது, அரசுக்குப் புரியும் துரோகம் ஆகுமோ? என் எதிர்ப்புக்கு உதவி செய்ய யாரும் ஏன் முன் வரவில்லை? ஏன்? ஏன்?—கைதிகள் அழுதனர்.

அந்தச் சனிக்கிழமை மாலை சிறைச் சாலையில் 85 கைதிகளும் மனங் குமைந்த இருட்டில் குப்புறப்படுத்தனர். மீரத் நகருக்குள் புது அச்சந் தோன்றி விட்டது. வெள்ளையர் அட்டூழியத்தின் தொடக்கந்தான் இது; எந் நேரத்திலும் நகருள் புகுந்து அனைவரையுங் கொல்லப் போகின்றனர்; சிப்பாய்களைத் தண்டிக்க இரண்டாயிரம் விலங்குகள் தயாராகின்றன. இவ்வாறு ஊர் குமறியது.* படை வரிசைகளில் சிப்பாய்கள் பரபரப்புடன் காணப் பட்டனர். நாளை காலையில் நாமும் விலங்கிடப் பட்டால்.........இதற்கு முடிவு தேட வேண்டும். நாம் தீட்டிய திட்டங்களை நிறைவேற்ற இதுவே நல்ல தருணம்! விடியட்டும். முடிவெடுப்போம்...சிப்பாய்கள் கறுவினர்கள்.

---

* மறுநாள் மீரத்தில் வழக்கம் போல் கடைத் தெருக்கள் சுறு சுறுப்பாக இருந்தன. படைத்தளத்தில் நடந்தவற்றைப் பற்றி மக்கள் அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை என்று S. N. சென் கூறுகின்றார். ஊர் கிளர்ச்சிக்கு ஆயத்தமாயிற்று; கயவர்களும் திருடர்களும் கத்திகளைத் தீட்டினர்; கிளர்ச்சிக்குப் பெரும் ஏற்பாடே நடந்தது என்று J. W. கே கூறுகிறார்.

கூட்டங் கூட்டமாகப் பேசினர்கள். ஆனல், ஆங்கிலக் குடியிருப்புகளில் வாழ்க்கை வழக்கம் போல் நடந்தது. உலாச் சென்று திரும்பியவர்கள் உற்சாகத்துடன் கதைகளைப் பேசினர். கைதிகளை அமைதியான முறையில் சிறைக்கு அனுப்பி விட்டோ; என்று நிம்மதியோடு கூடிய பெருமூச்சில் எல்லாவற்றையும் மறந்தனர். ஊரும், படையும் மாறி இருப்பதை அவர்கள் உணரவில்லை; ஏன்? மீரத்தின் அமைப்பைப் பார்த்தால் காரணம் விளங்கும். இந்தியாவிலேயே மிகப் பெரும் படைத் தளம் மீரத்திலிருந்தது. 5 மைல் சுற்றளவு கொண்ட அது இரண்டாகப் பிரிக்கப் பட்டிருந்தது. வடக்குப் பாதியில் ஐரோப்பியப் படை வரிசையும், அதிகாரிகளின் இல்லங்களும், ஒரு மாதா கோயிலும் இருந்தது. தெற்குப் பாதியில் சிப்பாய்களின் வரிசைகள் இருந்தன. அதற்குத் தெற்கே அருகிலேயே ஊர் இருந்தது. சிப்பாய் குடிசைகளுக்கும், ஊருக்கும் இடையில் சிறைச் சாலை இருந்தது. வடக்கே இருந்த ஆங்கிலேயர்கள் தெற்கே நடப்பதை அறிவது கடினம்.

ஞாயிறு காலை புலர்ந்தது. மீரத் நகர் வழக்கமாக இயங்கத் தொடங்கியது. வெள்ளையர் இல்லங்களில் மட்டும் சில பணிகள் தடைப் பட்டன. சுதேசிப் பணியாட்கள் பலரைக் காணேம். காவல் புரியும் சிப்பாய்கள் சிலரைக் காணேம். அக் கோடை வெய்யலில், வெள்ளையர் நடமாட்டம் அதிகம் இல்லை. அன்று பகற் பொழுது மெல்லக் கழிந்தது. மாலைக் கதிரவன் கீழ் வானில் இறங்கிக் கொண்டிருந்தான். பிரார்த்தனைக்காக வெள்ளை இந்தியக் கிறித்துவர்கள் மாதா கோவிலை நோக்கி மெதுவாக நடந்து கொண்டிருந்தனர். இன்னும் பலர் இல்லங்களிலிருந்து வெளிக் கிளம்ப வில்லை. பிரார்த்தனை நாட்களில் சிறு ஆலய அணி வகுப்பு ஒன்று நடத்த வெள்ளை வீரர்கள் வரிசையாகப் புறப்பட்டனர். தெற்கே வெகு தூரத்தில் சிப்பாய்ப் படை வரிசைகளில் ஏதோ சத்தங் கேட்டது. சிப்பாய்கள் பரபரப்புடன் இங்கும் அங்கும் ஆயுதந் தாங்கி ஓடிக் கொண்டிருந்தனர்! குதிரைகள் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து கொண்டிருந்தன! அவ்வப்போது ஊது குழலின் ஒலி கேட்டது. ஆங்காங்கே தீப் பிழம்புகள் தென்பட்டன! வெள்ளையர்களுக்கு ஒன்றும் விளங்க வில்லை. கலகம் ஒன்று நடக்கிறது என்பதுதான் தெரிந்தது.

ஆலய அணிவகுப்புக்குப் புறப்பட்ட வெள்ளை வீரர்களைக் கண்டு அச்சத்தில் சமையற்காரன் ஒருவன் தலை தெறிக்க சிப்பாய் வரிசைக்குச் சற்று முன்னுக ஓடினன்! விலங்கிட்டுச்

சிறையில் தள்ள வெள்ளையன் வருகிறான்; என்று அவ னிட்ட கூக்குரலைக் கேட்டுக் குதித் தெழுந்தனர் சிப்பாய் கள். இப்படி நடக்குமென்று எதிர்ப்பார்த்திருந்ததால், தாங் கள் எப்படி நடக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்ததால், தாங்கள் எப்படி நடக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந் தார்கள் போலும்! குதிரைப் படை சிலிர்த்தெழுந்தது. திமு திமு வென்று குடிசைகளுக்கு ஓடினர்......துப்பாக்கிகளையும், கத்திகளையும் தூக்கினர்...கண நேரத்தில் குதிரைமேல் தாவி னார்கள்...குதிரைகள் சிறைச் சாலைக்குப் பாய்ந்தன! காலாட் படையினர் குண்டுகளை நிரப்பி, வாட்களை உயர்த்தினர். கலகத்தில் சேர மறுத்த சிப்பாய்களின் குடிசைகளில் நெருப்பு வைக்கப் பட்டது. சில நிமிடங்களில் சிறைச் சாலை சூழப் பட்டது. அங்கே, காவல் புரிந்த சிப்பாய்கள் மனமுவந்து கிளர்ச்சியில் கலந்தனர். இரும்புக் கதவுகள் உடைக்கப் பட் டன. 85 கடுங்காவல் கைதிகள் வெளியே கொண்டு வரப் பட்டனர். அவர்களால் அழைத்து வரப்பட்ட ஒரு கொல்லன் அவசர அவசரமாக கைதிகளின் விலங்குகளைத் துண்டித் தான். அறுந்த சங்கிலிகளுடன் தோழர்களின் குதிரைகளில் கைதிகளுந் தாவி ஏறினார்கள்! என்ன காரணத்தாலோ? சிறை அதிகாரியான ஆங்கிலேயரும், அவர் குடும்பமும் தப்பினர்! இதற்குள் படை வரிசைகளில் ஆரவாரங் கொழுந்து விட்டது. ஆங்கில அதிகாரிகள் படை வரிசைக்குப் புறப்பட துரிதமாக இயங்கினர். கர்னல் ஃபின்னிஸ் (Finnis) தம்முடைய அணி கிளர்ந்து விட்டதைப் பார்த்துத் தளத்திற்கு நெருங்கி வந்தார். சிப்பாய்களின் அன்புக்குரிய அதிகாரியான தம்மால் நிலைமை யைக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்பி, துணிவுடன் தம் வீரர்கள் மத்தியில் குதிரையைச் செலுத்தினார். வீரர்கள் தங்கள் அதிகாரியைக் கண்டு ஒரு கணம் அசைவற்று நின்ற னர். அவர்களுடன் அவ் வதிகாரி உரையாடிக் கொண்டிருக் கும் போதே 20வது அணியின் வீரன் ஒருவன் சுட, குண்டு அவருடைய குதிரையின் காலில் பாய்ந்தது. நிலை குலைந்த குதிரை மிரண்டு திரும்பியது. அச் சிப்பாயின் மற்றொரு குண்டு கர்னலின் முதுகில் பாய்ந்ததும் அவர் சரிந்து விழுந்தார். அவருடல் சிறிது அசைந்தது. அடுத்த வினாடி சர சர வென்று குண்டுகள் உடலைத் துளைத்தன! 20வது அணி வழி காட்டி விட்டது. 11வது அணி கிளர்ச்சியில் கலந்து கொண்டது!

கர்னல் ஃபின்னிஸின் குருதியில் விழாத் தொடங்கி விட்டது! மீரத் சிப்பாய்கள் அனைவரும் அவ் விழாவில் பங்கு கொண்டனர். குதிரைப் படையும், காலாட் படையும்

கொடியை ஏற்றிவிட்டன. இந்துவும், முஸ்லிமும் கை குலுக்கினர்! இருளத் தொடங்கியது......பிரிட்டானியரின் இந்தியப் பேரரசிலுந்தான்! அந்த இரவில் நடந்த ஊழிக் கூத்தை இனி காண்போம்!

கட்டவிழ்ந்து சென்ற சிப்பாய்கள் இரத்த வெறி கொண்டு அலைந்தார்கள். மாலை உலாச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த வெள்ளையர்கள் ஆங்காங்கே கொல்லப் பட்டனர். குதிரை வீரர்கள் சூறாவளியென ஊரைச் சுற்றினர். கடைக் கதவுகள் இழுத்து மூடப் பட்டன. கர்னல் ஃபின்னிஸ் கொல்லப் பட்ட செய்தி எங்கும் பரவியது. இந்த ஆரவாரத்தில் கர்னல் ஸ்மித்தைக் காணவில்லை. தம் அணி, கிளர்ச்சியில் ஈடுபட்டதென்று அறிந்ததும் அவர், அங்கே சென்றிருக்க வேண்டும். இறுதி வரை முயன்றும் பலனளிக்க வில்லை என்றால் தான், அவர் வெளியேற வேண்டும். ஆனால், கர்னல் ஸ்மித் தம் அணியின் இருப்பிடத்திற்கே செல்ல வில்லை. ஆணையர் வீட்டிற்குச் சென்றார்! தளபதியின் வீட்டுக்குச் சென்றார்! பிரிகேடியரின் வீட்டிற்குச் சென்றார்! அவர்களைக் காணாமல் இராணுவத் தலைமை யகத்தில் பாது காப்புடன் அவ் விரவைக் கழித்தார்! கேப்டன் கிரெய்கி தம் உதவியாளர், மெல்வில் கிளார்க்கையும் (Milville Clarke) சில வெள்ளைக் குதிரை வீரர்களையும் அழைத்துக் கொண்டு சிறைச் சாலைக்குச் சென்றார். அவர்கள் செல்லும் முன்னரே 85 கைதிகளும் தப்பி விட்டனர். மீரத் தளத்தின் தளபதி பிரிகேடியர் ஆர்ச்டேல் வில்சன் (Archdale Wilson) செய்தி கிடைத்ததும் குதிரையிலேறி அணி வகுப்புத் தளத்திற்கு விரைந்தார். இதற் கிடையில் ஜெனரல் ஹெவிட்டும் (General Hewit) அங்கு வந்து சேர்ந்து விட்டார். உடனே, கச்சேரியிலிருக்குங் கருவூலத்தைக் காப்பாற்ற சில வீரர்கள் அனுப்பப் பட்டனர். பிற அதிகாரிகளும் தெற்கு நோக்கி விரைந்தனர். ஆனால், அணி வகுப்புத் தளத்திலோ, சிப்பாய்களின் வரிசைகளிலோ எவருஞ் செல்ல வில்லை; கலகக்காரர்கள் எங்கு சென்றார்கள்? என்பதுந் தெரியவில்லை; அடுத்து என்ன செய்வது? என்பது யாருக்கும் விளங்கவில்லை. உடனடியாக முடிவெடுத்துக் கலகக்காரர்களைப் பழிவாங்க எதுவும் மேற்கொள்ளப் படவில்லை; திகைத்து நின்ற அவர்களால் இயங்கவே முடிய வில்லை. அன்று வேலூரில் தோன்றிய கிளர்ச்சியைக் கொடூரமாகப் பழி வாங்கிய கர்னல் கிலிப்ஸியைப் போன்ற ஒருவரை இப்பொழுது இங்குக் காண முடியவில்லை. இக் கால

தாமதம், இவ் வியலாமை எல்லா அழிவிற்குங் காரணமா யிற்று! இதுவே, வட இந்தியாவை ஒரு பெரும் நில நடுக்கத் திற்குள்ளாக்கியது.

சில மணி நேரத்தில் கோரத் தாண்டவங் தொடங்கி விட்டது. சுற்றுப் புறத்திலிருந்து குஜார் என்ற கொள்ளை இனத்தார்கள் ஊருக்குள் புகுந்து விட்டனர். இருண்ட சந்து களிலிருந்து பெயர்போன கயவர்களும் நுழைந்து விட்டனர். இந்தியக் கிறித்துவர்களும், வெள்ளையர்களும், கண்ட கண்ட இடங்களில் குத்திக் கொல்லப் பட்டனர். இந்திய வணிகர் களும், வழிப் போக்கர்களும் கொள்ளைக்கும், கொலைக்கும் ஆளா யினார்கள். வெள்ளை குடியிருப்புகளில் சிப்பாய்கள் திமு திமு வென்று நுழைந்தார்கள். வீடுகள் சூறையாடப் பட்டன. நாற் காலிகள் உடைக்கப் பட்டன. அழகான ஆங்கில நாட்டுப் பொருள்கள் நொறுக்கப் பட்டன. பால், பருவ வேறு பாடுகள் பார்க்கப் படவில்லை. வெண்ணிறப் பெண்களும், குழந்தை களும் சுட்டுக் கொல்லப் பட்டனர். தூரத்தில் இக் கூச்சலைக் கேட்டப் பலர் குலை நடுக்கங் கண்டு தப்பி யோடினர். தீப்பந் தங்கள் விசிறி எறியப் பட்டன. அழகான மாளிகைகள் குபு குபுவெனப் பற்றி எரிந்தன...கனத்த மரச் சாளரங்கள் சரசர வெனச் சாய்ந்தன...இந்த இடிபாடுகளில் உயிர்த் தப்பிய குழந்தைகள், வீறிட்டு அலறின.. கொட்டகைகளில் கட்டப் பட்டிருந்த குதிரைகள் மிரண்டு கனைத்தன; தப்பிக்க முடி யாமல் அவைத் தீயிலேயே கருகி இறந்தன. சாளரத்தில் பாய்ந்து இறங்கியவர்களும், மாடியிலிருந்து குதித்துத் தப்பிய வர்களும், ஊளையிட்டுத் -துரத்தி வந்த சிப்பாய்களின் கத்திக்கும் வேட்டுக்கும் இரையானார்கள்!

இதற்கிடையில் கயவர்களும், திருடர்களும், குஜார்களும் தங்கள் தங்கள் மனம் போல் கொள்ளை யடித்தனர். ஒரு வங் காளியின் மதுக் கடை சூறை யிடப் பட்டது. பல கடைகளில் கல்லாப் பெட்டிகள் உடைக்கப் பட்டன. அந்த நடு இரவில் சுற்றுப்புற பாமரர்கள் சிறைச் சாலையைத் தாக்கித் திறந்து 839 கைதிகளை விடுவித்தனர். பயங்கரக் குற்றங்களைப் புரிந்து சிறையிலிடப் பட்டிருந்த பல கைதிகள் வெறி கொண்டு சூறையில் பங்கு கொண்டனர். விடுவிக்க வந்த மக்களில் பலர், கைதிகளின் உறவினர்களாக இருந்திருக்கலாம்.

கேப்டன் கிரெய்கியின் வீடும், அட்ஜிடன்ட் சேம்பர்ஸின் வீடும் அருகருகே இருந்தன. திருமதி சேம்பர்ஸ் அண்மையில் தான் இங்கிலாந்திலிருந்து வந்திருந்தாள். அப்பொழுது அவள்

நிறைமாதக் கர்ப்பிணி! தங்கள் வெறியாட்டத்தை முடித்துக் கொண்டு இப் பகுதிக்குக் கயவர்கள் சிலர் வந்தார்கள். சேம் பர்ஸின் வீட்டிற்குள் அவர்கள் நுழைவதைக் கண்டதும் தன் பணி யாட்களை விரைந்து சென்று உதவுமாறு திருமதி கிரெய்கி கூறினாள். அந்த ஆரவாரத்தில் என்ன நடந்த தென்றே தெரியவில்லை? திருமதி சேம்பர்ஸ் இரத்த வெள் ளத்தில் அலங்கோலமாகப் பிணமாகி விட்டாள். அவள் வயிறு கிழிக்கப்பட்டிருந்தது. அவளுடைய கோரக் கொலை ஆங்கி லேயர்களை மிகவும் உலுக்கி விட்டது!

வெள்ளையர்கள் பலர் கொல்லப் பட்டாலும், சிப்பாய் களில் சிலராவது கடமையுணர்வும். ஈர நெஞ்சமும் பெற்றிருந் தனர். கொடூரம் மிகுந்த 20 வது அணியின் இரண்டு சிப்பாய் களும், ஒரு அதிகாரியும் லெப்டினென்ட் காவ்வைப் (hough) பாது காப்புடன் பீரங்கித் தளத்திற்குக் கொண்டு வந்து விட் டனர். அவர்களைத் தன்னுடன் தங்கும்படி லெப்டினென்ட் வேண்டினர். அவர்களோ தங்கள் அதிகாரிக்கு இறுதி யாகப் படை வணக்கஞ் செலுத்தி 'எங்கள் பணி இத்துடன் முடிந்தது. இனி, எங்கள் தோழர்களுடன் வாழ்விலோ, மரணத்திலோ இணைந் திருப்பதே எங்கள் கடமை. எங்களை மன்னியுங்கள்' என்று வீரத்திற்கும் கடமைக்கும் இலக் கணம் வகுத்துப் பிரிந்தனர்!*

11வது அணியோ, 3வது குதிரைப் படையோ தங்கள் அதி காரிகளை எதுவுஞ் செய்ய வில்லை. இரவு முழுவதுங் கொள்ளை நடந்தாலும், பெரும் பாலான சிப்பாய்கள் ஈனத்தனமாக அதில் ஈடுபடவில்லை. வெள்ளையர்களின் இல்லங்களை எரிப்ப திலும், அவர்களைக் கொல்லுவதிலுந்தான் ஈடு பட்டார்கள். இவ்வாறு துணைக் கலெக்டர் உசிர் அலிகான் கூறியுள்ளார்.

ஆணையர் கிரேட் ஹெட்டும் அவர் மனைவியும், சில வெள்ளைப் பெண்டிரும் சிப்பாய்களின் இரைச்சலைக் கேட்டு மாடியில் ஒளிந்து கொண்டார்கள். காவலிலிருந்த ஜமேதார் குலாப்கான் மிகுந்த விசுவாசங் கொண்டவன். தன் எச மானன் அங்கு இல்லை என்று சிப்பாய்களை நம்ப வைத் தான். சிப்பாய்கள் இல்லத்திற்கு நெருப்பு வைத்தனர். தீப்பந்தங்களுடன் சுற்றிலும் ஆட்டம் ஆடினார்கள். குபு குபு

---

*புரட்சி முடிந்த பின் (இரண்டாண்டுகளுக்குப் பின்) தன் நன்றியைத் தெரிவிப்பதாக, லெப்டினென்ட் காவ் அயோத்தியில் அலைந்து, தன்னைக் காப்பாற்றிய அச் சுதேசி அதிகாரியின் வீட்டை மட்டுங் கண்டுபிடித்தார். ஆனால், அவருடைய கதி என்ன ஆயிற்று என்பது காவ் அறியவில்லை?

வென்று தீக் கொழுந்து விட்டெரிந்தது. தூரத்து வைக்கோல் போரில் ஒளிந்திருக்கிறார்கள் என்று குலாப்சிங், சிப்பாய்களைத் திசைத் திருப்பினான். சிப்பாய்கள் மறைந்ததும், ஆணையரும், பிறரும் நெருப்பிலிருந்து மீண்டு, தீப்புண்களுடன் தப்பிச் சென்றனர். பகத்வார் சௌகிதார், தன் உயிரைப் பணயம் வைத்துப் போராடியும், திருமதி மெக்டொனல்டின் உயிரைக் காப்பாற்ற முடிய வில்லை. ஆனால், அவருடைய குழந்தைகளை ஒரு ஆயாவின் உதவியால் கடத்திக் காப்பாற்றினர். குதிரைப் படை வீரர் சிலர் திருமதி கோர்ட்னேயைக் காப்பாற்றினார்கள். நீண்ட நாள் பழகிய நட்பு, எசமான் விசுவாசம் ஆகியவைக் கோரத் தாண்டவத்திலும் சில ஈர நெஞ்சங்களை வெளிக் காட்டின.

சிப்பாய்கள் நள்ளிரவுக்குச் சற்று பின் ஓய்ந்து விட்டார்கள். தங்களுடைய தோழர்களின் முழு ஆதரவில் அவர்களுக்கு நம்பிக்கை யில்லை. மீரத்தில் 1500 வெள்ளையர்கள் ஆயுதப் பலத்துடன் இருக்கின்றனர். காலந் தாழ்த்தினால், என்ன நடக்குமென்று? சொல்ல முடியாது! அடுத்து என்ன செய்வதென்றும்? அவர்களுக்குத் தெரியவில்லை. சிலர் ரோகில் கண்டுக்குச் செல்ல நினைத்தனர். சிலர் டெல்லிக்குச் செல்ல விரும்பினர். முடிவில் தங்கள் பெண்டு பிள்ளைகளை ஆதரவின்றி மீரத்தில் விட்டு விட்டுத் தத் தம் மனம் போன வழியே சென்றனர். சிலர் ஹபூர் சாலையிலும், சிலர் பாக்பட் சாலையிலும், சிலர் கர்கோவன் திசையிலுஞ் சென்றனர். இலட்சியத்திலும், திட்டத்திலும், நம்பிக்கை கொண்ட பெரும் பகுதி சிப்பாய்கள் மட்டும், டெல்லி நோக்கிச் சென்றனர். தண்டனைக்குத் தப்ப எண்ணி, தவறிழைக்காத அரசு ஊழியர்கள் பலர்; வேறு வழியின்றி இக் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டனர். 'பொருள்களையும், ஆயுதங்களையும் வீசி எறிந்து விட்டு, அவசரத்தில் சிப்பாய்கள் ஓடுகிறார்கள்' என்று வழியிலிருந்த கிராமவாசிகள் கூறினார்கள்.

காலை புலர்ந்தது ... மீரத்தில் மயான அமைதி குடிகொண்டது...வெள்ளையர் இல்லங்கள் இன்னும் புகைந்து கொண்டே இருந்தன ... இடிபாடுகளுக்கிடையே சிதைந்து கிடந்தன பல பிணங்கள்...பெற்றோரை இழந்து உயிர் தப்பிய குழந்தைகள் கதறிக் கதறி மயங்கி விழுந்திருந்தன! மீட்பு வேலைகள் மேற்கொள்ளப் பட்டன. பிணங்கள் பலவும் புதைக்கப் பட்டன.

இரவோடு இரவாகக் கலகக் காரர்களைத் துரத்திச் சென்று பழி வாங்காதது மாபெருந் தவறு. ஆங்கிலேயரின் இராணுவ வரலாற்றில் இது பெரும் இழுக்கு! இந்த இயலாமை, இயங்

காமை ஏன் நிகழ்ந்தது? என்று தெரியவில்லை. இரண்டு நாட்களுக்குப் பின் நிறை கர்ப்பிணி திருமதி சேம்பர்ஸைக் கொன்ற கொலையாளியை மீரத் நகர சந்து ஒன்றில் கைது செய்தான் ஒரு வெள்ளை அதிகாரி. ஒரு சிறு விசாரணைக்குப் பின், அக்கயவனின் பிணம் ஒரு மா மரத்தில் தொங்கவிடப் பட்டது. அதன் பின், சில தற்காப்பு ஏற்பாடுகளை மட்டும் அவர்கள் மேற்கொண்டனர்.

# 3. டெல்லியில் பகதூர் ஷா

[ஊரின் அமைப்பு—பகதூர் ஷாவின் கதை—உதவிப் பணமும் சலுகைகளும்—அரசி ஜீனத் மஹால்—வாரிசுரிமைப் போட்டி—ஃபக்ருதீன், வாரிசு?—கேனிங் தலைமை—ஆளுநர் ஆகுதல்]

இதுதான் டெல்லி! ஏழு மைல் சுற்றளவும், ஏழு நுழை வாயில்களுங் கொண்ட, கனத்த புற மதிலைக் கொண்ட அவ் வூரில் சுமார் நூற்று எழுபதினுயிரம் மக்கள் வாழ்கின்றனர். சாந்தினிசௌக் என்ற நீண்ட அகன்ற அழகிய கடை வீதி நகரை இரண்டு பகுதிகளாப் பிரிக்கிறது. ஊரின் வட கிழக்கே, யமுனை நதியைக் கடப்பதற்குப் படகுகளால் அமைக்கப் பட்ட பாலம் ஒன்று இருக்கிறது. அந்த நதிக் கரையை ஒட்டி, மொகலாயப் பேரரசர் ஷாஜஹானுல் கட்டப் பட்டதும், புகழ்ப் பெற்றதுமான செங்கோட்டை நிற்கிறது. ஒன்றரை மைல் சுற்றளவு கொண்ட அக்கோட்டை மதிலின் கீழ் ஆழ்ந்த அகழியொன்றும் உண்டு. அரசனைச் சார்ந்த சுமார் 12,000 மக்கள் கோட்டைக்குள் வாழ்கின்றனர்.

அந்தச் செங்கோட்டையில் தான் விரிந்த இந்துஸ்தானத்தை ஆண்ட தைமூர் குலத்தின் இறுதி வேந்தர் இருக்கின்றார். 1837ல் அரசெய்திய அவர் பெயர் மொகமத் சிராஜ்ஜுதீன் பகதூர்ஷா காஜிஜாபர் என்பது. அப்பொழுது அவருடைய வயது 82. மெலிந்த உடல் தளர்ந்திருந்தாலும், நீண்ட வெண் தாடி, அழகிய முகம், ஒளிவிடும் கண்கள், கூறிய மூக்கு, ஆகிய அழகிய இவ் வுருப்புகளால் அவரது தோற்றத்தில் கம்பீரங் குடி கொண்டிருந்தது. அங்க அசைவுகளில் குல மிடுக்குத் தென் பட்டது. மொத்தத்தில், வாழ்ந்து கெட்ட குலத்தின் வாரிசு அவர்; என்பதை அவருடைய வாழ்க்கையே காட்டிற்று.

பகதூர் ஷாவின் ஆட்சி செங் கோட்டைக் கப்பால் செல்ல வில்லை. கோட்டையில் மட்டுமன்றி, அந்தப்புறத்திலுங் கூட ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தின் மறைமுகக் கண் காணிப்பு இருந்தது. அவர் அறியணை ஏறியதும், பாதுஷா (பேரரசர்), காஜி (புனித வீரன்) என்ற விருதுகளைத் தம் மூதாதையர்களைப் போலச் சேர்த்துக் கொண்டார். நாடில்லாதப் பேரரசுப் பதவி, போரில் ஈடுபடாத வீர விருது ஆகியவை மக்களுக்குப் புதியன அல்ல. நீண்ட காலமாகவே இத்தகைய மன்னர்களே மொகலாய அரியணையை அலங்கரித்தனர். செல்வத்திலும், சிற்றின் பத்திலும் வளர்க்கப் பட்ட பகதூர்ஷா சாதனைகள் புரிவதற்குச் சந்தர்ப்பமே பெற வில்லை. பல்லிழந்த மொகலாயப் புலி, புல்லைத் தின்னத் தொடங்கிப் பல காலமாகி விட்டதே, இதற்குக் காரணம்! சூழலின் காரணத்தால், களத்தில் புகுஞ் சந்தர்ப்பமோ! சத்தியோ! பெற்றிராத மன்னர்; கவிதை புனைவதில் தங் கருத்தைச் செலுத்தினர். அவருக்குத் தொழில் கவிதை இயற்றுவது; இவர் உருது இலக்கியத்தில் நிலைத்த இடம் பெற்ற கவி காலிப் (Galib) மன்னரின் நண்பரும் ஆவர்.

மன்னர் பகதூர்ஷாவிற்கு ஒரு குறிப் பிட்டத் தொகையை ஆண்டு தோறும் கிழக்கிந்திய நிறுவன அரசு கொடுத்து வந்தது. அரசு மரியாதைகள் அத்தனையும், அவருக்கு அளிக்கப் பட்டு வந்தன. வெளித் தோற்றத்தில் நிறுவனம், மன்னருக்குக் கப்பங் கட்டுவது போல் தோன்றியது. இக்கேலிக் கூத்தை, நிறுவனமும் பேணிக் காத்தது. தலைமை ஆளுநர் டெல்லி வழியாகச் செல்ல நேர்ந்தால், அவருடைய பிரதிநிதிகள் திவானி காஸ் அரசவைக்கு வருவதும், காலணிகளைக் கழற்றி விட்டு மன்னர் முன் பணிந்து வணங்கி, தங்களின் மரியாதையையும், அன்பையும் வெளிக்காட்டத் தங்க நாணயங்களைப் பரிசளிப்பதும், அதை ஏற்று அவர்களைக் கௌரவிக்க மன்னர் சால்வை போர்த்துவதும் அருமையான காட்சிகள்! சில சுதேசி அரசுகளில் இன்னும் பேரரசனின் பெயரில் நாணயங்கள் பழக்கத்திலிருந்தன, பழம் பெருமையின் நினைவுச் சின்னமாக அவரையே இந்தியரில் பலர் 'மன்னர் மன்னனாக' நினைத்தனர். சட்டப் பூர்வமாகவும் இதுவே உண்மையாக இருந்ததால், நிறுவனம் அவரிடம் தயக்கத்துடனும், பணிவுடனும் நடந்து கொண்டது; அல்லது, நடப்பது போல் நடித்தது! ஆங்கிலேயருக்கு இவ்வபாயம் புரியாமல் இல்லை. இந்தியாவின் பெரும் மன்னர் குலங்களை அவர்கள் ஏற்கனவே தூக்கி எறிந்து விட்டனர். அவ் வரச வாரிசுகள், தலை நகரங்களையும், தாயகங்களையும் விட்டுப், பற் பல இடங்களில் ஆங்கிலேயரின் பராமரிப்பில், பாதுகாவலில்

வாழ்ந்து வரும் போது, பகதூர்ஷா மட்டும், மொகலயாத் தலை நகரில்; அதுவுஞ் செங் கோட்டையில் இன்னும் வாழ அனுமதிக்கப் பட்டிருக்கின்றார். டெல்லியின் மொகலாய அரசு, அரசியல் லாபமற்றதாக மாறியிருந்தாலுஞ் சட்ட ரீதியாக நிலைத்த அதன் தலைமை ஆங்கில நிறுவனத்திற்குச் சிறிது அச்சத்தை மேலும் தந்து வந்தது. தோல்வியடைந்த—செல்வாக் கிழந்த—அரசர்களையும், அவர்களுடைய வாரிசுகளையும் தொலை தூரத்திற்கு அனுப்பி, அவர்களின் நினைவையே மக்களிடமிருந்து அகற்றுவதுதான் ஆங்கிலேயர்கள் மேற்கொள்ளும் ஆட்சிக் கலை. மாவீரன் நெப்போலியனை இறுதிவரை பேரரசனாக ஏற்றுக் கொள்ள மறுத்து. வாட்டர்லூ (Waterloo) தோல்விக்குப் பின் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் ஹெலினா தீவில் காவல் வைத்தவர்கள் அவர்கள்! சட்டத்தின் சந்துகளிலும், உடன் படிக்கையின் உட் பொருள்களிலும் நுழைந்து பல பேரரசுகளை உலுக்கியவர்களும் அவர்களே! பழம் பெரும் அரச குலத்தின் வாரிசாகப் பகதூர்ஷா இருப்பதும், இந்துஸ்தானத்தின் இதிகாசத் தலை நகரில் அவர் இன்னும் வாழ்வதும், இந்திய அரசுகள் பல அவரை மன்னர் மன்னனாக ஏற்பதும், சட்டரீதியான உண்மைகளே. 'செப்புக் காசென்றாலுஞ் செல்லும் காசே' இதைச் செல்லாமல் ஆக்க ஆங்லேயரும் பல முறை முயன்றனர்; பல ஆண்டுகள் வரை காத்திருந்தனர்.

பல வந்தத்தால் இதை என்றோ மாற்றி யமைத்திருக்க முடியும். ஆனால், அவருடைய விழியை அவருடைய விரல்களாலேயே குத்துவதைத்தான் ஆங்கிலேயர்கள் அதிகம் விரும்பினர். ஆங்கில நிறுவனத்திற்குக் கடுகளவும் தீமை புரியும் எண்ணமோ, சக்தியோ இல்லாதவர் பகதூர்ஷா. உதவிப் பணத்தை உயர்த்த வேண்டுமென்று. தம் தந்தையைப் போல, அவரும் அடிக்கடிக் கேட்டு வந்தார். அரச தர்பாரையும், செங் கோட்டை அரண்மனையையும் விட்டு, டெல்லிக் கருகில் குதுப் மாளிகையில் வாழச் சம்மதித்தால், உதவியை அதிகரிப்பதாக நிறுவனம் நிபந்தனை இட்டதுடன், அதை நிறைவேற்றப் பல வழிகளிலும் ஈடுபட்டது. இச் சிறுமையை ஏற்க மறுத்ததுடன், தலை நகரில் இருக்கும் பெருமையை நீட்டிப்பதற்குப் பகதூர்ஷா முற்பட்டார். இந்த நிலையில் மொகலாயருக்கே உரித்தான வாரிசுரிமைப் போட்டி இந்துஸ்தானப் பரப்பிலிருந்து செங்கோட்டை அளவிற்கு அப்போது சிறுத்திருந்து விட்டது.

1849-ல் பட்டத்து இளவரசர் தாராபக்த் (Dara Bakht இறந்து விட்டார். மொகலாய மன்னர்கள் பலருக்கும் அரச மரியாதைகளும், உரிமைகளும், உதவிப் பணமும் அது வரை

நீடித்து வந்தது. பல ஆங்கில உயர் அதிகாரிகள் அது வரை இதில் மாற்றஞ் செய்ய விரும்ப வில்லை. எல்லை விரிவாக்கத்தை உயிர் மூச்சாகக் கொண்ட தற்போதைய தலைமை ஆளுநர்-டல் ஹௌசி பிரபுவிற்கு இந்தப் பொம்மலாட்டம் பிடிக்காததில் வியப் பில்லை. சட்டத்தின் பாது காப்பைப் பெற்றிருந்த இவ்வுண்மையைப் பட்டத்து இளவரசர் மறைந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு மாற்றிவிட முயன்றார். இங்கிலாந்து மேலிடம் அவ்வளவு எளிதில் இதற்கு இணங்கிவிடவில்லை. அரசப் பதவியையும், அரண்மனையையும் துறப்பதற்குப் பகதூர்ஷா ஏற்கனவே மறுத்து விட்டார். அவர் இறக்கும் வரை நிலைமை நீடிக்கும். எனவே, ஆங்கிலேயரின் உரவை விரும்பும், ஆங்கில ஆதிக்கத்தை ஏற்கும் மனம் படைத்த இளவரசர் ஃபக்ருதீனை (30 வயது) அடுத்த வாரிசாகத் தலைமை-ஆளுநர் விரும்பினார். மன்னர் பகதூர்ஷா அதை எதிர்த்தார். காரணம், அவருடைய அன்புக்குரிய இளையராணி அழகுராணி ஜீனத் மஹால் (Zinat Mahal) மூலம், முதிர்ந்த வயதில் தமக்குப் பிறந்தப் பதினொரு வயது சிறுவன் ஜவான் பக்தை (Jawan Bakht) வாரிசாக்க அவர் விரும்பினார். (ஃபக்ருதீனை அவர் ஏற்க ஏன் மறுத்தார்? என்பதற்கு ஒரு விந்தையான காரணம் இருந்தது. தைமூரின் காலத்திலிருந்து தங்கள் குலத்தில் அரியணை ஏறுபவர்கள் எவருக்கும் அங்கஹீனம் இருக்கக் கூடாது; என்பது வழக்கம். ஆகவே, ஃபக்ருதீனுக்குச் சுன்னத்துச் செய்யப் பட்டிருந்ததால் அவர் பட்டத்திற்கு வரக் கூடாது என்று மன்னர் வாதித்தார். (Kaye-History of the Indian Mutiny Vol II Page 18) அதேப் பக்கத்தில் காணப்படும் மற்றொரு குறிப்பு:- பகதூர்ஷாவின் இவ்வாதம் சரியல்ல. ஏனெனில்? ஹுமாயூன் காலம் வரை மொகலாய மன்னர்கள் சுன்னத்துச் செய்து கொண்டனர். ஹுமாயூனுக்குப் பின் ஒரு விசித்திரக் காரணத்திற்காக இச்சடங்கு பொதுவாக அவ்வரச குலத்தில் மேற் கொள்ளப்படவில்லை, என்று மௌல்வி சையத் அகமத் C.S.I. நூலாசிரியர் J. W. K. யிடங் கூறியிருக்கிறார். ஆனால், உடல் நிலை காரணமாக ஃபக்ருதீனுக்கு இச் சடங்கு செய்யப் பட்டது. இதைப் பகதூர்ஷாவும், ஜீனத் மஹாலும் பெருங் காரணமாகச் சுட்டிக் காட்டினர்.)

இந்த இருமுனைப் போட்டி ஆங்கிலேயருக்கு நல்ல சந்தர்பத்தை அளித்தது. அவர்களின் தயவால்தான், தம் தந்தையின் விருப்பத்திற்கு மாறாகப் பகதூர்ஷா மன்னரானார். அன்றும் அவர்களின் தயவு தேவைப் பட்டது. ஏனெனில்? படியளப்பது பரங்கியரே, ஆட்சிக்குத்தான் நாதில்லை. அரண்

மனை வாழ்வாவது கேடில்லாமல் நீடிக்க வேண்டுமென்று மன்னர் முயற்சிச் செய்தார். மாறாக டல்ஹௌசியின் நிபந்தனைக்கு இளவரசர் ஃபக்ருதீன் உடன் படுவார். கோட்டை வாழ்வை விட, குலத்தின் தலைமைப் பதவியும், உதவிப் பணத்தின் பெரும் பகுதியும் அவருக்கு இனிக்கும். இனிக்காமலா போகும்! ஆங்கிலெயர்கள் வலி தெரியாமல் முள்ளை எடுத்தனர். இளவரசர் ஃபக்ருதீனும், நிறுவனத்தின் டெல்லிப் பிரதிநிதி சர் தாமஸ் மெட் காஃப்பும் (Sir Thomas Metcalfe) ரகசியச் சந்திப்பில் உடன் பாட்டிற்கு வந்தனர். பகதூர்ஷா இறந்ததும் ஃபக்ருதீன் தான் மன்னர்; செங்கோட்டையை விட்டு வெளியேறி அவரும் அரச குடும்பமும் வாழ வேண்டும்; உரிய உதவிப் பணம் தொடர்ந்து நீட்டிக்கப் படும்; ஃபக்ருதீன் அரச விருதுகளையும், சில வெளி அடையாளங்களையும் மேற் கொள்ளலாம்; இந்த ஒப்பந்தம் உரிய முறையில் சாட்சிகளுடன் எழுதப் பட்டு, இரு தரப்பினராலும் கையெழுத்திடப் பட்டது. ஆங்கில நிறுவனம் மகிழ்ந்தது; அரண்மனை குமுறியது; கண்ணீர் விட்டது; இளையராணி ஜீனத்மஹால் புகைந்தாள்!

ஏமாற்ற மடைந்த அரசரும், அரசியும் ஆண்டுகள் சிலவற்றைக் கழித்தனர், 1856 ஜூலை 10-ம் நாள், பட்டத்து இளவரசர் ஃபக்ருதீன் திடீரென வாந்தி எடுத்து, மயக்கமடைந்து, மரண மடைந்தார். உணவில் நஞ்சு கலக்கப் பட்டது; என்று பலர் பேசிக் கொண்டனர். இளைய ராணிக்குத் தான் அந்த உண்மை தெரியும்! முதலைக் கண்ணீர் வடித்தது; அந்தப்புரம் கிசுகிசுத்தது! மறுநாள் ஜவான் பக்த்தை வாரிசாக ஏற்கும் படியான தம் கோரிக்கையை மன்னர், நிறுவனப் பிரதிநிதியிடம் புதுப்பித்தார். எட்டு இளவரசர்களின் ஒப்புதலை எழுத்து மூலமாக மன்னர் வாங்கிக் கொடுத்தார். மூத்தவன் மிர்ஜா முகமது குரேஷ் (Mirza Mohamad Korash) மட்டும், உரிமை தமக்கே என்று வாதித்தார். 'நான் மூத்தவன்; மெக்கா விற்குப் புனித யாத்திரைச் சென்றவன்; என்னுடைய பிற தகுதிகளை ஒரு நேர்முகப் போட்டியில் பரிசோதித்துக் கொள்ளலாம்'! என்று மிர்ஸா குரேஷ் தெரிவித்தார். உடன் பிறந்தவர்களின் குருதியில் விரல் நனைத்துச் செங்கோல் ஏந்திய மொகலாய மன்னர்கள் இன்றைய தலை முறையானது, நேர் முகத் தேர்விலே ஆங்கிலேயருக்குப் பதில் சொல்லும் அளவிற்கு வந்து விட்டது!

இதற்கிடையில் கேனிங் பிரபு தலைமை ஆளுநராகப் பதவியேற்று விட்டார். இந்தச் சிக்கல்களை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் அவருக்குச் சிறிது கால மாயிற்று.

1857-ம் ஆண்டும் துவங்கியது. ஆங்கில ஆதிக்கத்திற்கெதிராக சூழ் நிலைகளும் உருவாகி விட்டன. மன்னர் பகதூர்ஷா பாரசீக நாட்டின் இரகசிய உதவியை நாடுகிறார்; என்று பலர் நம்பினர். ஆங்கில ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சித் தோன்றும்; என்று பலர் நம்பினர். தம் குலத்திற்கும், தகுதிக்கும், நேர்ந்த இழிவை எண்ணி மனம் நொந்து, உதவிப் பணம் உயரும் என்று நம்பி ஏமாந்து, தம் செல்வ மகனை வாரிசாக்க முயன்று, அதிலும் தோல்வி அடைந்து, மன்னர் பகதூர்ஷா ஒதுங்கி விட்டார். கவிதை எழுதி, காலிப்புடன் அளவளாவி நாட்களைக் கழித்தார். இளையராணி ஜீனத் மஹால் தன் மகனை வாரிசாக்க இன்னும் சூழ்ச்சிகள் பலவுஞ் செய்தாள். எப்படியோ? பெருமைக்குரிய மொகலாய குலத்தின் ஆயுட் காலம் எண்ணப் பட்டு வருகிறது! இன்றோ? நாளையோ? ஆனால், வெகு விரைவில் ... அது நிச்சயம்.

———

# 4. டெல்லி வீழ்ச்சி


[மீரத் சிப்பாய்களின் வருகை—மன்னனின் அதிர்ச்சி—ஆங்கிலேயர் கொலை— அரண்மனைக்குள் சிப்பாய்கள்—ஆயுதக் கிடங்கு தகர்க்கப் படல்—கொன்லேக் கூட்டத்தார்—மருத்துவர் ஆஷானுல்லா—மன்னனின் அறிக்கை—பிற அரசர்களுக்குக் கடிதம்—இந்து-முஸ்லிம் உறவு—மன்னனின் ஓலம்— மே மாத நிலைமை.]

மே 11ம் நாள் காலே. உதிக்கின்ற செங்கதிரோனையும், சல சலக்கும் யமுனை நதியையும் அரண்மனை மேல் மாடத்தின் கிழக்குச் சாளரத்தின் வழியாக மன்னன் பகதூர்ஷா பார்த்துக் கொண்டிருக்கின்றார்; காலம் நகர்வதை அக் கவிதை யுள்ளம் அறிய வில்லை. வடகிழக்கே படகுப் பாலத்தின் மேல் குதிரைக் குளம்படிகள் இடி முழக்கஞ் செய்தன. கரத்தில் இரத்தக் கறையுடனும், மனதில் வெள்ளையர்கள் தன்னைப் பழிவாங்கப் பின் தொடர்கிறார்களோ என்ற அச்சத்தாலும், மீரத் கலகக் காரர்கள் அரண்மனையின் பின் மதில் சுவர் அடியில் கூடினர். மன்னர் திடுக்கிட்டார். அவர்களின் கூச்சல் அவருக்கு விளங்க வில்லை. சிறிது நேரத்தில் புரட்சியைப் பற்றிய செய்தி மதிலைத் துளைத்து ஊருக்குள் சென்று விட்டது.

அதிர்ச்சி யடைந்த மன்னருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை? கொட்டைக்காவலர்களின் தலைவன் கேப்டன் டக்ளஸை (Dugles) உடனடியாக வரவழைத்தான். மன்னர் தடுத்தும் கேளாமல் டக்ளஸ், சிப்பாய்கள் குழுமிய இடதிற்கு விரைந்தார். மன்னருக்குத் தொல்லை தராமல் கலைந்து செல்லும்படி உரக்கக் கூவினர். அவர்களும் வடக்கேயிருந்த கல்கத்தா வாயிலுக்குச் சென்றனர். அது மூடப்பட்டிருந்ததால் இராஜ காட் வாயிலுக்குச் சென்றனர். கேப்டன் டக்ளஸ் நிலைமையைச் சமாளிக்கப் புறப்பட்டார். அதற்கிடையில் ராஜ்காட் வாயில் திறக்கப்பட்டு விட்டது. யமுனையில் நீராடச் செல்லும் இந்துக்களாலோ, புரட்சியை எதிர் பார்த்திருந்த சிப்பாய்களாலோ

அவ் வாயிற் கதவுகள் திறந்து விடப் பட்டன. ஊருக்குள் சிப்பாய்கள் நுழைந்து விட்டார்கள், என்ற செய்தி காட்டுத் தீ

# டெல்லி




போல் பரவி விட்டது. எங்கெங்கிருந்தோ மக்கள் கடை வீதி

களில் கூடிவிட்டார்கள். பதரி யடித்துக் கொண்டு கடைக் கதவுகளை வணிகர்கள் மூடினர். தீன்! தீன்! என்று புனிதப் போர் முழக்கம் ஒலித்தது. கண்ணில் தென்பட்ட வெள்ளையர் கள் எல்லோருஞ் சுட்டுக் கொல்லப் பட்டனர்! இந்தியக் கிறித்துவர்கள் துரத்திக் கொல்லப் பட்டனர்! ஊருக்குக் காவ லாயிருந்த சிப்பாய்கள் மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர். அண் மையில் பர்மாவிற்குக் கடல் கடந்து போர் புரிய மறுத்துப் புகழ் பெற்ற 38வது அணி வீரர்களே அவர்கள். மீரத் வீரர்களுடன் டெல்லி சிப்பாய்களுஞ் சேர்ந்து கொண்டனர். கிடைத்தற் கரிய சமயங் கிட்டிய தென்று சந்து பொந்து களிலிருந்து, ஊர் நடுங்கும் போக்கிரிகளும், கொலை யாளிகளும், கள்ளர்களும் இதில் கலந்து கொண்டனர். தர்யா கஞ்சிலிருந்த வெள்ளையர் இல்லங்கள் புகைந்தன! எரிந்தன! கடைகளும் கல்லாப் பெட்டி களும் சூறையாடப் பட்டன. என்ன நடக்கிறது தென்று? யாருக்கும் புரிய வில்லை. கேப்டன் டக்ளஸ் படைத் தளத் திலிருந்த ஆணையர் பிரேசன் (Frasen) உடனே சாரட்டில் கோட்டையை நோக்கிப் பறந்தார். துரத்தி வந்த சிப்பாய்கள் சுடத் தொடங்கி விட்டனர். பள்ளத்தில் தூக்கி யெறியப் பட்டுக் காவலர் சிலர் கைகொடுக்க டக்ளஸ் கோட்டைக்குள் புகுந்து விட்டார். ஆணையர் பிரேசும், டெல்லி கலெக்டர் ஹட் சின்சனும் (Hutchinson) கோட்டைக்குள் புகுந்து விட்டனர்.

கோட்டை வாயிலுக்கருகில் காவல் தலைவன் டக்ளஸின் இருப்பிடம் இருந்தது. அந்த நேரத்தில் அந்த மாடியில் ஜென்னிங்ஸ் என்ற பாதிரியும் (Rev. Jennings) அவர் மகளும், அவளுடைய தோழியும் இருந்தனர். அபாயத்தை உணர்ந்த ஜென்னிங்ஸ் கீழே இறங்கி வந்தார். கேப்டன் டக்ளஸும், கலெக்டர் ஹட்சின்சனும் சுதேசி காவர்களின் உதவியால் மாடிக்குக் கொண்டு செல்லப் பட்டனர். மாடிப் படிகளுக்குக் கீழே கையில் வாளுடன் ஆணையர் பிரேசர் நின்று கொண்டார். துரத்தி வந்த கூட்டத்தைக் கலைந்து செல்லும்படிக் கத்தினர். கண்ணிமைக்கும் நேரத்தில் காவல் அதிகாரி ஒருவன் அவருடைய முகத்திலுங் கழுத் திலுங் கத்தியால் குத்தி விட்டான். வெறி கொண்ட பிறரும் தங்கள் கத்திகளைப் பாய்ச்சினர்கள். ஃபிரேசரின் உடல் சிதைந்து விழுந்தது! சிப்பாய்கள் திமு திமு வென்று படிகளில் ஏறினர்கள். அங்கே கேப்டன் டக்ளஸ், கலெக்டர் ஹட்சின் சன், பாதிரி ஜென்னிங்ஸ், அவர் மகள், அவள் தோழி அனை வரும் கோரமாகக் கொல்லப் பட்டனர். மீரத் சிப்பாய்கள் ஊருக்குள் நுழைவதற்கு நகர்புற மதிலைக் காவல் புரிந்த

சிப்பாய்கள் வாயிற் கதவுகளைத் திறந்தனர். இவ் விருவருக்கும் அரண்மனைக் காவலர்கள் உதவி செய்தனர். ஊருக்குள் நுழைந்தவர்கள் அப்பொழுதே செங் கோட்டைக் குள்ளும் நுழைந்து விட்டனர்.

நண் பகலுக்குள், கலகக்காரர்களின் மற்றொரு பிரிவு ஜும்மா மசூதிக் கருகிலிருந்த பெரிய வங்கியைக் கொள்ளையடித்தது. வங்கிக் காப்பாளரான பெரஸ்போடு (Beresford) தன் மனைவி மக்களுடன் மொட்டை மாடிக்குச் சென்று ஈட்டிக் கத்திகளுடன் தற்காப்புக்குத் தயாரானார். சிப்பாய்களும் கயவர்களும் நாற்புறமும் ஏறிச் சூழ்ந்து அவர்களைக் கொன்றனர். வங்கிக் கொள்ளையடிக்கப் பட்டுக் கொளுத்தப் பட்டது. டெல்லி கெஜட் அச்சு அலுவலகமும் தாக்கப் பட்டது. மீரத் நிகழ்ச்சிகளை அச்சுக் கோர்த்துக் கொண்டிருந்தவர்கள் அனைவருங் கொல்லப் பட்டனர். அடுத்து எங்கே? அதோ! கிறித்துவத் தேவாலயம்! ஆலயத்தின் கதவுகள் கோடாரிகளால் பிளக்கப்ப ட்டன! வண்ணக் கண்ணாடிச் சாளரங்கள் நொறுக்கப் பட்டன! புனித பீடம் கொளுத்தப் பட்டது! சிலுவையில் இயேசு உருவம்-தூள் தூளாகியது. (உச்சியை நோக்குங்கள்! ஒவ்வொரு மாலைப் பொழுதும் அந்த மணியோசை கிறித்துவத்தைப் பரப்ப வில்லையா?) என்று நான்கைந்து சிப்பாய்கள் மேலே ஏறினார்கள். ஒரே வெட்டில் சரசர வென்று அந்த மாதா கோயில் மணி பெருத்த ஓசையுடன் கீழே விழுந்து உடைந்தது. கோடிக் கணக்கான மக்களின் உள்ளங்களைக் நெகிழ வைக்கும் அச் சோகக் காட்சியிலிருந்து டெல்லி வெள்ளையர்களால் தங்களைப் பாது காத்துக் கொள்ள முடியவில்லை. டெல்லிக்குள் ஒரு உடன்பாடு காரணமாக வெள்ளைப் படை நிறுத்தப்பட வில்லை. ஊருக்கு இரண்டு மைல் வடக்கே இருந்த நீள் வரை மேட்டுக்கு (Ridge) அப்பால் நிறுவனத்தின் படைத் தளம் இருந்தது. அங்கே, ஆங்கில வீரர்களாலான அணி ஒன்று கூட இல்லை. ஊர் படை, நிர்வாகப் பணியிலீடுபட்டிருந்த சிலநூறு ஆங்கிலேயர்களால் ஆயிரக்கணக்கான வீரர்களின் எதிர்ப்பையும், வன் முறையையும் கட்டுப் படுத்த முடியாது போனதில் வியப்பில்லை. அன்று காலைதான், பரக்பூர் ஜமேதார் ஈஸ்வர பான்டேயின் இராணுவ விசாரணையின் முடிவை டெல்லி வீரர்களின் அணி வகுப்பின் போது அறிவிக்கப் பட்டது. சூடான இச் செய்திப் புரட்சியிலீடுபட அவர்களைத் தூண்டியது. தாங்களாக ஈடுபட வில்லை யெனினும், வந்திருக்கும் மீரத் புரட்சி வீரர்களுக்கு உதவி செய்ய அதுத் தூண்டு கோலாயிற்று. வெள்ளை அதிகாரிகள் கலகத்தை அடக்கும்படி

ஆணையிட்டபொழுது, அச் சிப்பாய்கள் அதிகாரிகளையே சுட்டுக் கொன்றுவிட்டு, ஊரை நோக்கி வந்தனர். சொல்லி வைத்தாற் போல் ஊரின் புறக்காவல் பணியிலிருந்த சிப்பாய்களும், அதிகாரிகளைக் கொன்றனர். கர்னல் ரிப்ளே (Ripley] உருத் தெரியாமல் சிதைக்கப் பட்டார்!

பிற்பகலில் டெல்லி நகரையே உலுக்கும் ஒரு ஓசை கேட்டது! செங் கோட்டைக்குச் சற்று தூரத்தில் மிகப் பெரிய வெடி மருந்துக் கிடங்கு ஒன்று இருந்தது. லெப்டினென்ட் ஜயார்ஜ் வில்லபி (Lieutenant George Willoughby) அதைப் பாது காக்கும் பொறுப்பிலிருந்தார். ஒன்பது ஆங்கிலேயர்களும், பல சுதேசிகளும் அங்கேப் பணி புரிந்தனர். மீரத் வீரர்கள் ஊருக் குள் வந்ததும், வில்லபி தன் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தொடங்கி விட்டார். படை தளத்திலிருந்து உதவி வரும் என்று எதிர்பார்த்தார். ஏமாற்ற மடைந்தார். உச்சி வேளைக் குள் மீரத்திலிருந்து வெள்ளைப் படைகள் தொடர்ந்து வரும் என்ற நம்பிக்கையும் தகர்ந்து விட்டது. எவ் விநாடியும் புரட்சி வீரர்கள் இடங்களைக் கைப்பற்ற வருவார்கள். கரு மருந்து முழுவதும் அவர்களுக்குக் கிடைத்தால் எவ்வளவு வலிமை? அவர்கள் பெறுவார்கள்; என்று சொல்ல வேண்டிய தில்லை. இதற்குள்ளாகவே அரண்மனைக்குள் சிப்பாய்கள் புகுந்து விட்டார்கள். அங்கு என்ன நடந்ததென்று கூட தெரிய வில்லை? வெடி மருந்துக் கிடங்கை ஒப்படைத்து விட்டுச் சரணடையும்படி மன்னன் பெயரால் சில சிப்பாய்கள் வந்து கேட்டனர். வில்லபி மறுத்து விட்டார். அவர் எதற்குந் துணிந் திருந்தார். காப்பது கடினமென்றால், அழிப்பதே மேல் என்று உறுதி பூண்டார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித் திருந்தார். சிறிது நேரத்தில் பல ஏணிகளுடன் ஒரு பெருங் கூட்டம் அங்கே வந்தது. சுதேசிப் பணியாட்களும் தங்கள் வேடத்தைக் களைந்து விட்டுச் சிப்பாய்களுக்கு உத வினர். வெள்ளையர்கள் எதிர்த்துச் சுட்டனர். நூற்றுக் கணக் கான சிப்பாய்கள், பெருங் கூச்சலிட்டுக் கிடங்கை நாடினர். ஒன்பது வெள்ளையர்களும் தீரத்துடன் போரிட்டனர். கலகக் காரர் கையில் கரு மருந்து கிடைப்பதா? திரியில் வைத்த தீ நெடுகப் பரவி நொடிப் பொழுதில் கிடங்கை அடைந்தது. நில நடுக்கத்தைப் போல் கிடங்கு வெடித்தது. தூக்கி எறியப் பட்ட வெள்ளையர்களில் மூவர் பிய்த்தெறியப் பட்டார்கள். நூற்றுக் கணக்கான சிப்பாய்கள் கருகி மாண்டனர். தெறிப்புகளில் தாக்கப் பட்டனர். (தப்பிய சில ஆங்கிலேயர்கள் பின்னர் விக்டோரியா சிலுவை விருது பெற்றனர்.) தப்பிய வில்லபி

ஊரின் புறத்தே கிராம வாசிகளால் கொல்லப் பட்டார். உயிர் கொடுத்தாவது தங்கள் ஆட்சியை, இனத்தைப் பாது காக்க வேண்டும் என்பதை அந்த ஒன்பது வெள்ளையர்களும் தங்களின் துணிவால் எடுத்துக் காட்டினார்கள். இந்நிகழ்ச்சி வெள்ளையர்களுக்கு உறுதியையும், நெஞ்சுரத்தையும் ஊட்டி யது. இதைப் போன்ற தீரச் செயல்கள் தான் புரட்சியை அடக்குவதற்கு முதற் காரணமாயிருந்தன. என்பதில் சிறி தும் ஐயமில்லை;

அரண்மனைக்குள் புகுந்த சிப்பாய்கள் மன்னரைப் புரட் சியில் சிக்கவைக்க முயன்று கொண்டிருந்தனர். அச் சமயத்தில் நகரெங்கும் கொடுமை தாண்டவமாடியது. சிறைக் காவலன் லாலா தக்கூர்தாஸ் கைதிகளை விடுவித்தான். அடங்கிக் கிடந்த மிருகப் பண்புகளுக்கு எதிர்ப்பாராத விடுதலை கிடைத்து விட்டது. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நிகழ்ச்சிகளுள் எதில் பங்கெடுப்பதென்றே அவர்களுக்குப் புரியவில்லை. அவர் களுக்குச் சளைத்தவர்கள் நாங்கள் அல்ல, என்பது போல ஊரில் குண்டர்கள் அவ் விழாவில் பங்கெடுத்தனர். டெல்லியில் பெயர் பெற்ற 'கேடி' காமா பயில்வான் கொள்ளையிலும் கொலையிலும் முன்னணியில் நின்றான். நாங்களும் குறைந் தவர்கள் அல்லர் என்று டெல்லியின் சுற்றுப் புறத்தில் தலை முறை, தலைமுறையாக வழிப் பறியிலும், கூட்டுக் கொள்ளை களிலும், கொலைகளிலும் வாழ்வு நடத்திய குஜார், ரங்கார், மேவாளி (Gujar, Rangar, Meuali) இனத்தவர்களும் ஊருக்குள் புகுந்து விட்டனர். வெள்ளையர்களைத் தேடும் பாவனையில் இக் கயவர்கள் வீடுகளிலும், கடைகளிலும் சூறையாடினார்கள்.

நகரின் தந்தி அலுவலகமும் தாக்குதலுக்குத் தப்ப வில்லை. ஆனால், செய்திகள் மட்டும் தப்பி விட்டன. அங்கிருக்த இரு ஆங்கிலோ இந்தியப் பணியாளர்கள் கிளர்ச்சியை அம்பாலா, லாகூர், ராவல்பிண்டி, பெஷாவர் ஆகிய ஊர்களுக்கு அறி வித்து விட்டனர்.

அன்று காலையிலிருந்தே மன்னர் கலங்கி விட்டிருந்தார். தம் மருத்துவர் ஹகீம் அஷானுல்லாவின் அறிவுரைப்படி, ஆக்ராவிலிருந்த ஆங்கிலேயரின் தலைமை இடத்திற்கு மீரட் கலகத்தைப் பற்றியும், டெல்லியின் நிலையைப் பற்றியும் செய்தி அனுப்பினார். கலகக்காரர்களைத் தொடர்ந்து மீரட்டி லிருந்து வெள்ளை வீரர்கள் வருவார்கள்; என்று அங்கிருந்த வெள்ளையர்களைப் போன்று மன்னரும் எதிர்ப் பார்த்து ஏமாற்ற மடைந்தார். வினாடிக்கு வினாடி வன்முறையும், கொள்ளையும்

அதிகரித்து விட்டன. நிலைமை கட்டுக் கடங்குவதாகத் தெரிய வில்லை. மாருக மன்னர் தான் தங்களை ஆதரித்துப் புரட்சிக்குத் தலைமை தாங்கவேண்டும் என்று சிப்பாய்கள் அவரை வற்புறுத்தத் தொடங்கி விட்டார்கள். அரண்மனைக் காவலர் களும் அவர்களோடு சேர்ந்து விட்டனர். மன்னர் பகதூர்ஷா அறிந்த வரையில், அரண்மனையின் புனிதம் இதுவரை கெட்ட தில்லை. பாரசீக சீமான்களும், ஆப்கானியத் தளபதிகளும், இராஜ புத்திரத் தலைவர்களும் பணிவுடன் நடந்து சென்ற அழகிய அறைகளில், அகன்ற தாழ்வாரங்களில், அன்று மூர்க்கத்தனமான கடைநிலைச் சிப்பாய்களும், கயவர்களும் ஆடி ஓடினர்; விருப்பம்போல் விழுந்து புரண்டனர்; ஏறிக் குதித்தனர்!

அவ் வேனிற் கால முன்னிரவில் டெல்லி இருண்டு கிடந் தது. ஆங்காங்கே சில இடங்களில் தீப்பற்றி எறிந்து கொண் டிருந்தன. மக்களில் பலருக்கும், கயவர்களில் சிலருக்கும் இனம் புரியா மகிழ்ச்சி! அந்த நேரத்தில் எவர் கண்ணுக்கும் படாமல் உடலை நன்கு போர்த்திய வெள்ளை யுருவங்கள் பல புறமதில் களைத் தாண்டி, புதர்களில் ஒளிந்து, வயல்களின் வரப் போரம் ஓடிச் சென்று தப்பித்தன. அந்த நில வொளியில் மறைந்து செல்வது அவ்வளவு எளிதன்று. நாய்களின் குரைப் புச் சிலரைக் காட்டிக் கொடுத்தது! குழந்தைகளின் அழு குரலும் சிலரைக் காட்டிக் கொடுத்தது! முரட்டுக் கிராமத் தாரின் கத்திகளுக்கு அவர்கள் இரையானூர்கள். இனவெறி மிகுந்த அந்த வேளையிலும், ஈர நெஞ்சங்கள் சில இருந்தன. பல பாமரர்கள் வெள்ளை அகதிகளை மறைத்து வைத்துப் பல நாட்கள் அவர்களைப் பேணிக் காத்தன!

பகதூர்ஷாவின் நிலைமை மிகவும் சிக்கலாகி விட்டது. மன்னர், மனம் பேதலித்தார். வெள்ளைப் படைகள் வருவ தாகத் தெரியவில்லை. வந்தால் என்ன நடக்கும்? கலகத்திலீடு பட்ட சிப்பாய்கள் பழி வாங்கப் படுவார்கள்! அதனுல், நமக் கென்ன பயன்? உதவிப் பணமும், உரிமைகளும் அதிகரிக்கவா போகின்றன! பலனில்லாமல் வெள்ளைப் படையை ஏன் எதிர்பார்க்க வேண்டும்? மாருக, கிளர்ச்சியை நாம் ஆதரித் தால்?......ஆதரித்தால்......குலப்பெருமையை மீண்டும் நாம் நிலை நாட்டலாம் என்று நினைத்தது அவரது உள்ளம்.

புரட்சித் தோல்வி யுற்ருல், இழப்பதற்கு மன்னனிடம் ஏதுமில்லை. வெற்றி பெற்ருல்! விரிந்த இந்துஸ்தானத்தை உண்மையாகவே ஆளலாம். நினைக்கவே இனிக்குங் காட்சி

அது. மன்னர் முடிவாகவே தீர்மானித்து விட்டார். நள்ளி ரவில் 21 குண்டுகள் முழங்கின. மொகமத் சிராஜ்தீன் பகதூர் ஷா ஜாபர் இந்துஸ்தானத்தின் பேரரசர் எனப் பிரகடனப் படுத்தப்பட்டார்!

மறுநாள், மே 12ஆம் நாள், திவானிடம் தர்பாரில் பேரரசர் பகதூர்ஷா ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் இந்துக் களையும், இஸ்லாமியர்களையும் தம்முடன் ஒத்துழைக்கும்படிக் கேட்டுக் கொண்டார். டெல்லியின் முக்கிய முஸ்லிம் சீமான் களை அழைத்துப் போர்க் காலக் குழுவொன்றை அமைத்தார். நகரில் சட்டத்தையும், அமைதியையும் நிலை நாட்டுவதற்குப் புது அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். ஃபய்ஸ் உல்லா கான் ஊரைக் காக்க கொத்தவாலாக நியமிக்கப் பட்டார். இளவரசர் பலருக்கு உயர் பதவிகள் அளிக்கப் பட்டன. இளவரசர் மீர்ஸா மொகல் தலைமைத் தளபதியாக்கப் பட்டார். மன்னர் யானை மீதேறி நகர் வலம் வந்தார். கடைகளைத் திறக்கும்படி வணிகர்களைக் கேட்டுக் கொண்டார். வழக்கம்போல் பணி களில் ஈடு படும்படி மக்களையுங் கேட்டுக் கொண்டார். கள்ளர் களை ஒழிக்க ஆட்களை ஏவினர். எனவே, இச் சீரமைப்புப் பணி களில் சில நாட்கள் கழிந்தன.

மீரத் சிப்பாய்கள் ஊருக்குள் நுழைந்த அன்று பல வெள்ளையர்கள் கொல்லப் பட்டனர், பலர் தப்பிப் பறந்தனர். தர்யாகஞ்ச் பகுதியில் வாழ்ந்த வெள்ளை வாணிகக் குடும்பங்கள் சில மொத்தமாகச் சிப்பாய்களின் கையில் சிக்கின. ஆங்கிலே யர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் அடங்கிய அக் கூட்டத் தில் மொத்தம் 49 நபர் இருந்தனர். சில ஆண்களைத் தவிற மற்றவர்கள் எல்லாம் பெண்களும் குழந்தைகளுமாகவே இருந் தனர். மன்னரின் தலையீட்டால் அவர்களின் உயிர்கள் அன்று தப்பின. அரண்மனையில் ஒரு சிறிய அறையில் இவர்கள் அடைக்கப் பட்டிருந்தனர், பீர்ஸா மொகல் போன்றவர்கள் இவ் வகதிகளை உயிரோடு விட விரும்ப வில்லை போலும். மே 16ஆம் நாள் இந்த 49 நபர்களும் நீண்ட கயிற்றால் கட்டப் பட்டுக் கோட்டைக்குள் ஒரு சதுக்கத்திற்குக் கொண்டு செல் லப் பட்டனர். இந்தக் கோரக் கோலையைக் காண்பதற்கு ஊரே கூடி விட்டது. தளபதி மீர்ஸா மொகல், மேல் முற் றத்திலிருந்து அக் கோரக் காட்சியை வேடிக்கைப் பார்த்தார். சில நிமிஷங்களில் நிராயுத பாணிகளான அவர்கள் வேதனை யில் அலற, அலற சிப்பாய்களின் கொடு வாள்கள் தத்தம் பணியைச் செய்து முடித்தன! சுற்றி நின்ற மக்கள் கர வொலி

எழுப்பிக் கூச்சலிட்டு மகிழ்ந்தனர். அம் மனிதத் துண்டங்கள் வண்டிகளில் ஏற்றப் பட்டு, யமுனையில் கொட்டப் பட்டன.*

அதுவரை மன்னன் ஆங்கிலேயரின் வரவை எதிர்பார்த்த தாகத் தெரிகிறது. மன்னரின் ஆலோசகரும், மருத்துவருமான அஷானுல்லா ஆங்கிலேயப் படை எந்த நேரமும் உள்ளே வரலாம் என்று நம்பினர்; வரவேண்டும் என்றும் விரும்பினர். எதுவும் சாத்திய மில்லை. இவ்வளவு நடந்த பின்—நடக்க அனுமதித்த பின்—மன்னரின் குற்றத்தை மாற்ற முடியாது. இளவரசர்களும், சிப்பாய்களும் மன்னருக்குத் துணி வளித்தனர். அத் துணிவைத் துணையாகக் கொண்ட மன்னர், படைகளுடன் உதவிக்கு வரும்படி பாட்டியாலா, ஜோத்பூர், ஜெய்ப்பூர், பிக்கானிர், ஜிந்த், காஷ்மீர், ஆகிய சுதேசி அரசர்களுக்குச் செய்தி அனுப்பினர், எதிர்க்கவோ! தப்பிக்கவோ வழியில்லை. என்பது, அவருக்குத் தெளிவாகி விட்டது. ஆனல், யாரும் உதவிக்கு வரவில்லை. அவசரப் பட்டு ஆங்கிலேயரைப் பகைத்துக் கொள்ள—அழிவைத் தழுவ—அவர்கள் விரும்ப வில்லை போலும்.

மன்னனின் இந்த நடவடிக்கைகளால் நிலைமை சீர்பட வில்லை. மீரத்திலிருந்து இன்று வரை புரட்சியில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்பது, எவருக்கும் விளங்க வில்லை. இலட்சியமும், தலைமையும் தொடக்க காலத்தில் இல்லாததால், நடப்புகளில் தவறுகள் நிகழ்ந்தன. ஏதோ ஒரு வெறியில் புரட்சிக் கொடியை உயர்த்தி விட்டனர். சில வெற்றிகளால் ஊக்குவிக்கப் பட்டனர். இப்பொழுது ஜும்மா மசூதியில், இந்துக்களுக்கும் எதிராக ஜெஹாத் தொடுத்தனர். சில முஸ்லிம் வெறியர்களின் இச் செயலைக் கேட்டதும், மன்னர் பகதூர்ஷா அதைக் கண்டித்தார். இந்துக்களைப் பகைத்தால் கிறித்துவர்களே வெற்றி பெறுவார்கள்; என்பதை அவர் உணர்ந்திருந்தார். எனவே, இப் புரட்சியில் இந்துக்களும், முஸ்லிம்களும் சமம் என்று அறிவித்தார். மன்னரின் அச் சிறந்த செயல், பெரும் அபாயத்தைத் தவிர்த்தது.

---

*அக் கோர நிகழ்ச்சிக்குச் சற்று முன்பு தான் நன்றி மிக்க முஸ்லிம் நண்பர்கள் சிலரின் உதவியால் பர்தா அணிந்து தன் மூன்று குழந்தைகளுடன் திருமதி அல்ட்வெல் (Aldwell) என்ற பெண் தப்பிச் சென்றுள். என்றும், மன்னன் தங்களுக்கு ஒரு வேளை நல்ல உணவு அளித்த தாகவும், அக் கொலைகளுக்கு மன்னன் பொறுப்பல்ல வென்றும் பிற்காலத்தில் அப் பெண் சாட்சி கூறினுள்.

மன்னருக்கு நிம்மதி தோன்றவில்லை. நகரின் நிலைமையை இன்னும் சரி செய்ய முடியவில்லை. அறியாச் சிறுவர்களை நம்பித் தவருக அடி எடுத்து வைத்தோமே, என்று மனம் நொந்தார். அதைவிட, மன்னர் என்ற பெயரில் மக்களுக்குத் தன்னல் பாதுகாப்பு அளிக்க முடியவில்லையே, என்று உண்மையில் வருந்தினர். நாட்கள் பத்துக் கடந்தும் சிப்பாய்களின் நடத்தை சீரடையவில்லை. மன்னர் பகதூர்ஷா, தளபதி மிர்ஸா மொகலுக்கு எழுதிய கடிதம் இந் நிலையைக் காட்டுகிறது. மன்னரின் கூற்றுப்படி சிப்பாய்கள் அத்து மீறிப் பல இடங்களில் திருடுகிருர்கள். காசு கொடுக்காமல் கடைகளில் பண்டங்களைப் பறிக்கிருர்கள். செங்கோட்டையினுள் புனித இடங்கள் பலவற்றிலிருந்து, பல ஆணைகளுக்குப் பின்பும் சில சிப்பாய்கள் வெளியேறவில்லை. நாதிர்ஷா, அகமத்ஷா, அப்தாலி போன்றவர்களும் ஏன்? பிரிட்டானியத் தலைமை-ஆளுநர் கூட குதிரை மீது செல்லத் துணியாத இடங்களிலெல்லாம் சாதாரண சிப்பாய்கள் வலம் வருகிருர்கள். ஆங்கில நிறுவனத்தின் உயர் அதிகாரிகளுங் கூட குதிரையிலிருந்து கீழிரங்கித் தான் தர்பாருக்குநடந்து வருகின்றனர். இச் சிப்பாய்களோ, திவானி—காஸ்வரை குதிரையைச் செலுத்து கின்றனர். நடத்தையில் கண்ணியம் இல்லை. பண்பு இல்லை. மரியாதை இல்லை. வெள்ளை அதிகாரிகளுங் கூட இம் மாதிரி நடந்ததில்லை. ஊருக்கப்பாலும் நிலைமை சரியில்லை. அங்குள்ள மக்களையும் இவர்கள் துன்புறுத்து கின்றனர், கருவூலத்தில் பணம் இல்லை. கடனளிக்கத் தகுதி வாய்ந்த செல்வந்தர் வீடுகள் சிப்பாய்களால் சூறையிடப் பட்டு விட்டன. டெல்லியின் நிலைமை கட்டுப் பாட்டுக்குள் இல்லை. இந் நிலையில் நான் தலைமை தாங்குவதை விரும்பவில்லை. பட்டத்தைத் துறந்து விட்டு மெக்காவிற்குப் புனித யாத்திரைச் செல்லுவதே நலமெனப் படுகிறது. பொறுப்பு நம்மிடமிருக்கிறது. மக்களுக்கும், ஆண்டவனுக்கும் நாம் பதில் சொல்ல வேண்டும். சிப்பாய்களால் தான் கொலைகளுக்கும், வழிப் பறிகளுக்கும் மக்கள் ஆளாகின்றனர். மிக்க வருத்தத்துடன் கூறுகிறேன்; நிலைமை உடனே மாற்றப் பட வேண்டும்; குற்றம் புரியும் சிப்பாய்க்குத் தண்டனைக் கொடுக்க வேண்டும். திட்டங்களுக்கு உட்பட விரும்பாதவர்கள் நம் பணியில் ஈடுபடவும். சட்ட வேண்டாம். நிபந்தனைகளுக்கு உட்பட்டுப் பணி நடக்கவில்லையெனில், நான் விலகிக் கொள்கிறேன்' என்ருர் மன்னர்.

மே மாதம் முழுவதும் நிலைமை கடினமாகவே இருந்தது. தானியம் அளிக்கும்படி நிலக் கிழார்களையும், பணம் அளிக்கும்படி வங்கி யாளர்களையும் மன்னர் கேட்டுக் கொண்டார்.

இவ்விதம் சிப்பாய்களுக்குக் கூலி கொடுக்க ஒரு இலட்சம் ரூபாய் திரட்டப் பட்டது. அதைக் கொண்டு என்ன செய்ய முடியும்? கொள்ளை யடித்த பணம் டெல்லி சிப்பாய்களுக்கு அதிகமாகக் கிடைத்து விட்டது. என்று மீரத் சிப்பாய்கள் மனம் வெதும்பினர். இதற்கிடையில் புரட்சித் தலைவர்களை நம்புவதும் கடினமாக இருந்தது. மருத்துவர் அஷாநுல் லாவும், பேகம் ஜீனத் மஹாலும் இரகசியமாக ஆங்கில அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகச் சிப்பாய்கள் பலர் சந்தேகித்தனர்.

கட்டுப் பாடில்லாத வீரர்கள்! தடுமாறும் மன்னனர்! ஆற்றலற்ற தளபதி! ஐயத்திற் குள்ளாகும் அரசி! விளங் காத வருங்காலம்! இவைதான் மே மாத இறுதியில் மொகலாயத் தலைநகர் அளித்த காட்சி!

———

# 5. டெல்லியைக் கைப்பற்ற...

[தலைமைத் தளபதி ஆன்சன் அம்பாலா வருதல்—கல்கத்தாவில் பதட்டம்—கேனிங்கின் அமைதி—நம்பிக்கை ஊட்டும் செய்தி கள்—தற்காப்பு ஏற்பாடுகள் எடுத்தல்—பஞ்சாப் ஆணையர் சர் ஜான் லாரன்ஸ் தலைமைத் தளபதிக்கு எழுதிய கடிதம்—ஆன்சன் இறப்பு—பர்னுட் தலைமைத் தளபதியாதல்—ஹிண்டன் போர்—பட்லி-கி-செராயில் வெள்ளைத் துருப்புகள் முகாமிடுதல்.]

இமயமலைச் சாரலில், சிம்லாவின் குளுமையில், கோடைக் காலத்தைக் கழிக்கத் தலைமைத் தளபதி ஆன்சன் சென்றிருந் தார். ஏற்கனவே உடல் நலங் குன்றியிருந்த அவருக்குக் கிளர்ச்சி அதிர்ச்சியை அளித்தது. மே 12-ம் நாள் டெல்லி, மீரத் செய்திகள் அம்பாலாவிலிருந்து தளபதிக்கு அனுப்பப் பட்டன. சில மணி நேரங்களில் தொடர்ந்து வந்த செய்தி கள், அபாய நிலையை அவருக்கு அறிவித்தன. உடனே, தலைமை - ஆளுநர் கேனிங்கிற்குச் செய்தி அனுப்பி உத்திரவை எதிர் பார்த்தார். அத்துடன் சிம்லாவை விட்டுப் புறப்படத் தாமுந் தயாரானார். மே 15-ம் நாள் தெற்கேயுள்ள அம்பாலா படைத் தளத்திற்கு வந்து சேர்ந்தார்.

மீரத் கிளர்ச்சியும், டெல்லி வீழ்ச்சியும், ஆங்கில ஆட்சியின் தலைநகரான கல்கத்தாவில் கலவரத்தை உண்டாக்கும் என்று எதிர் பார்ப்பது நியாயமே. அந் நகரில் ஆயிரக்கணக்கான ஐரோப்பியர்கள் தங்கி இருந்தனர். அதிகப் பணி யாட்களைவிட வணிகர்களும், பாதிரிகளும், அதிகமாகவே யிருந்தனர். அருகே யுள்ள பரக்பூரின் சுதேசிப் படைகள் ஒரே ஒரு இரவுப் பயணத்தில் கல்கத்தாவை இடு காடாக்கி விடும்! தங்களைப் பாதுகாக்கப் போதிய அளவு வெள்ளைப் படைகள் இல்லை; என்பதை அறிந்ததால் அச்சம் அவர்களைப் பற்றியது. எவ் வினாடியும் எதுவும் நடக்கலாம்; என்ற நிலை இருந்ததால் ரிவால் வரும் கையுமாகவே அவர்கள் வெளியே உலவினார்கள். இரவில் உறங்கும் பொழுதும், முழு உடை தரித்துத் துப்பாக்கியை

அருகில் வைத்துக் கொண்டே உறங்கினர். வெடி மருந்து கிடங்குகளும், பீரங்கிப் பட்டறைகளும், துப்பாக்கிக் கிடங்குகளும், குண்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும், நாணயச் சாலையும், பல வங்கிகளும் நிரம்பிய அந் நகர், ஆங்கில இந்தியாவின் உயிர் நாடியாகும். டெல்லியின் கதி கல்கத்தாவிற்கு நேர்ந்தால்! அதை நினைக்கும் பொழுதே வெள்ளையர்களுக்குப் பதட்ட மேற்பட்டது. அவர்களின் பதட்டத்தை அலட்சியஞ் செய்வது போலிருந்தது, தலைமை - ஆளுநரின் அமைதி. அவரின் அசைவுகளில், உணர்வுகளில் எந்த மாற்றமும் தென் படவில்லை. அவர் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லையே என்று பலர் பொருமினர். ஆனால், உண்மை வேறு.

டெல்லி வீழ்ச்சிப் பேரரசின் மரணத்திற்குக் கொடுக்கப் பட்ட முதல் அடி! உருவாகும் சூறவளிக்கு ஒத்திகை! எனவே, தற் காப்புக்கே முதலிடம் அளிக்க வேண்டும் என்று மேலதிகாரிகள் சிலர் கருதினர்கள். டெல்லி மீட்சியானது வெள்ளை வெஞ் சினத்தின் எடுத்துக் காட்டு! எனவே, தாக்குதலே முதலிடம் பெற வேண்டும் என்று வேறு சிலர் கருதினர்கள். அவர்களில் தலைமை ஆளுநரும் ஒருவர். டெல்லியை உடனே கைப்பற்றி விட்டால், கிளர்ச்சியை முளையிலேயே கிள்ளி எறியலாம். வரலாறும், வழக்கமும், சட்டமும், மரபும், டெல்லிக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளித்திருந்தன. இந்த அரசியல் காரணத் தோடு, வேறு சில உண்மைகளும் இருந்தன. வேண்டு மளவு வெள்ளைப் படைகள் இல்லாமையே, எல்லா விடங்களுக்குந் தற்காப்பு அளிக்க இயலாமையை உண்டாக்கி விட்டது. அத்துடன் முக்கியத் தளங்களிலிருந்து நம்பிக்கை ஊட்டும் தந்திச் செய்திகள் மே 19, 20ல் வந்தன. அயோத்தியில், நிலவரம் நன்றாக உள்ளது என்று சர் ஹென்றி லாரன்சு தந்தி கொடுத்தார். பரபரப்பு அதிகம் இல்லை யென்று கான்பூரிலிருந்து சர் ஹியூக் வீலர் செய்தி கொடுத்தார். அலகாபாத்திலிருந்தும் செய்தி அப்படியே வந்தது. வடமேற்கு மாநிலங்களில் எல்லாம் நிலைமை சரியே என்று லெப்டினெண்ட் கவர்னர் கால்வின் நம்பிக்கை யூட்டினர். இந்த ஊட்டத்தில் எல்லாம் கேனிங் திருப்த்தி அடைந்து மிதமாகி விட வில்லை. டெல்லியின் மீட்சிக்கும், பேரரசின் தற்காப்புக்கும் தேவையான நடவடிக் கைகளை எடுத்தார்.

கிழக்கே வங்காளத்தின் பரக்பூரிலிருந்து, 750 மைல் தொலைவிலுள்ள ஆக்ரா வரை, தானபூர் (Danapur) என்ற ஒரே படை தளத்தில் தான் ஆங்கிலேய அணி ஒன்று இருந்

தது. கல்கத்தாவில் வில்லியம் கோட்டைக்குள் ஓர் அணியும், அண்மையில் இரங்கூனிலிருந்து வரவழைக்கப் பட்டு, சின்சுரா வில் நிறுத்தப் பட்டிருந்த பிறிதொரு அணியும் ஆக இரண்டே ஆங்கில அணிகள் தான் வங்காளத்தில் இருந்தன. பேரரசின் முதுகெலும்பான கங்கை நதியின் வழிப் பகுதியில் ஓர் அணி யும், தலையான வங்கத்தில் இரண்டு அணிகளும், ஒன்று சேர்ந்து, பொங்கி யெழும் பெருங் கிளர்ச்சியை அடக்க முடி யுமா? கலகத்தில் இறங்க வில்லை யெனினும், சுதேசிப் படை களை இனியும் நம்புவது கூடாது! தலைமை ஆளுநர் எங்கெங் கிருந்தோ வெள்ளைப் படைகளைக் கொண்டு வந்து குவிக்க முற் பட்டார். அவசரச் செய்திகள் பறந்தன. பர்மா விலிருந்தும், பாரசிகத்தி லிருந்தும், சென்னையி லிருந்தும், இலங்கை யிலிருந் தும் வெள்ளைப் படைகள் பறந்தன. இவைகள் வந்து சேரச் சில நாட்களோ! வாரங்களோ! ஆகலாம். அதற்குள் டெல் லியைக் கைப்பற்றியாக வேண்டும். இல்லையேல் வட கிழக்கு இந்தியாவிழித் தெழுந்து விடும்; என்று அவர் எண்ணினர்.

டெல்லிக்கு விரையுமாறு தலைமை - ஆளுநர், தலைமைத் தளபதியைத் துரிதப்படுத்தினர். பஞ்சாபிலிருந்து கொண்டு ஆணையர் சர் ஜான் லாரென்ஸ் தார்க்குச்சி போல் தளபதியை முடுக்கினர். தளபதிக்கு அவர் எழுதிய நீண்ட கடிதத்தின் சுருக்கம் ஒன்று பிரிட்டானிய மேன்மையையும், அரசியல் பாரம் பரியத்தையும், அதன் பழுத்த அனுபவத்தையும் சூழ்ந்த நோக்கையும் புலப்படுத்தும்.

'நம் இந்திய வரலாற்றைப் பாருங்கள். துணிவுடன் செயல் பட்டு எப்போது நாம் தோற்றிருக்கிறோம்? மருட்சியுடன் செயல் பட்டு எப்போது நாம் வென்றிருக்கிறோம்? 1200 வீரர் களோடு துணிவுடன் மறுப்பை மீறிச்சென்று, 40,000 வீரர் களைக் கிளைவ் வெல்ல வில்லையா?' துணிவுடனும், முடிவுட னும் செயல் பட்டிருந்தால் காபூரில் அழிவைத் தவிர்த்திருக்க லாம். கூலிக்காகப் போரிடுஞ் சுதேசிகள் நமக்காக எல்லாத் தியாகங்களும் புரிவார்கள்; என்று எப்படி நாம் எதிர் பார்ப் பது? நம்மை உயர்வாக அவர்கள் இதுவரையில் மதிக்கக் கார ணம்; நாம் இறுதியில் வென்று கொண்டே இருப்பதால் தான். இதில் ஒரு மாற்றுக் குறைந்தாலும், சுதேசி சிப்பாய் நம்மை. விட்டு விலகி விடுவான். தன்னைக் காபபதில் தான் குறியாய் இருப்பான். பஞ்சாப் பிலிருந்து சிப்பாய்கள் அங்கே வருகின் றனர். நம்முடன் தோளோடு தோளாக இணைந்து நின்று, எதி ரிகளை முறியடிக்க உணர்ச்சியுடன் விரைந்து வருகின்றனர். நம்

வெள்ளை வீரர்கள் செயலில் பின் தங்கி யிருப்பதை அவர்கள் காண நேரிட்டால், நமது வெற்றியில் நம்பிக்கை இழந்து விடுவார்கள். அவ் வெண்ணம் தாக்குதலுக்குத் தேவையான ஊக்கத்தைத் தராது. நாம் அசையாமலிருக்கும் ஒவ்வொரு விநாடியும், கிளர்ச்சியின் தூதுவர்கள் பற்பல அணிகளைத் தூண்டி விடுவார்கள். படை யெடுப்பைத் தொடங்க மேலும் பல நாட்களாகும் என்று போர்த் தளவாடத் துறை கூறுவதை ஏற்க முடியாது. இன்னும் ஓரிரு நாட்களில் படைகள் டெல்லிக்கு விரைய வேண்டும்.'

இதற்குத் தெளிந்த நோக்குக் கொண்ட சர்ஜான் லாரன்ஸ் போன்றவர்கள் தான், பிரிட்டானியப் பேரரசின் தூண்களாக இருந்தனர்.

தலைமை ஆளுநரும், பஞ்சாப் ஆணையரும், அரசியல் தேவையைக் கருதி தலைமைத் தளபதியை விரைவு படுத்தினர். அவ் விரைவிற்கு இராணுவம் ஈடு கொடுக்க முடியாது. ஆங்கிலேயரிட மிருந்து நன்கு பயிற்சி பெற்ற சிப்பாய்கள் ஆயிரக்கணக்கில் டெல்லியிலிருக்கின்றனர். அவர்கள் கருமருந்துக் கிடங்கைக் கைப்பற்றி யிருப்பார்கள். கனத்த மதில் களால் சூழப்பட்ட அக் கோ நகரை முற்றுகை இடுவதும், மீட்பதும் அவ்வளவு எளிதல்ல. பல நாட்களுக்குத் தேவையான, உணவுப் பொருட்கள், கூடாரங்கள், வண்டிகள், தாக்குதல் தளவாடங்கள், ஆகியவைகளைச் சேர்க்கப்பட்ட பின்னரே முற்றுகையைத் தொடங்கலாம். அவசரத்தில் படை எடுத்து, ஆங்கிலப் படை தோற்றால்...நாடெங்கும் உள்ள வெள்ளை ஆதிகாரிகள் நிலை குலைந்து புரட்சிக்கு வழி விடுவார்கள். டெல்லியின் வீழ்ச்சியில் தான் இங்கிலாந்தின் பெருமை, ஆட்சி நீடிப்பு அத்தனையும் இதில் அடங்கி யிருக்கின்றன. அவசரத்தில் அம்பின் குறி தவறக் கூடாது!

அம்பாலாவிலிருந்து மே 23ஆம் நாள் தலைமைத் தளபதி ஆன்சன் தலைமை ஆளுநருக்குத் தன் ஆயத்தங்களையும், புறப்பாட்டையும் தெரிவித்துக் கடிதம் எழுதினார். அன்றே, மீரத் தளத்தின் ஜெனரல் ஹெவிட்டிற்கும் செய்தி சென்றது. பிரிகேடியர் ஹாலிபாக்ஸ், (Halifax) பிரிகேடியர் ஜோன்ஸ் ஆகியோர், தலைமையில் ஆங்கில வீரர்களும், சில சுதேசி அணிகளும், தெற்கே நகர்ந்தனர். மே 25 ம் நாள் ஜெனரல் ஆன்சன் எஞ்சிய படையுடன் அம்பாலாவை விட்டுப் புறப்பட்டார். மறுநாள், கர்காலே (Karnal) (புகழ் பெற்ற பானிபட்

அருகில்) அடையும் போதே அவருடைய உடல் பல வீனமாகி விட்டது. அம்பாலாவிலிருந்து தெற்கே டெல்லி வரையில் எந்த எதிர்ப்பும் இல்லை. இப் பகுதியில் பாட்டியாலா, ஜிந்த் (Jhind) மன்னர்களும், கர்நூல் நவாப்பும் ஆங்கிலேயருக்கு நல்ல உதவி செய்தனர். கோடைக் கொடுமையில் துருப்புகள் பகற் போதில் ஓய் வெடுத்து இரவுப் போதில் நடந்தன. மே 27ஆம் நாள் கர்நாலில், வாந்தி பேதி நோய்க்குத் தளபதி ஆன்சன் பலியானார். அவர் அன்றிரவு இறக்கும் முன்னர், சர் ஹென்றி, பர்னாட் (Sir Henry Barnad) முகாமிற்கு வந்திருந்தார். அவரே தலைமைத் தளபதியின் பொறுப்பை ஏற்றார். துருப்புகள் தொடர்ந்து தெற்கே டெல்லியை நோக்கி முன்னேறின.

அதே மே 27ஆம் நாள் திட்டப்படி மீரத் படைகளும் டெல்லியை நோக்கி முன்னேறின. பிரிகேடியர் ஆர்ச்டேல் வில்சன் (Archdale Wilson) அதை நடத்தினார். சிவில் அதிகாரியாக ஹெர்வி கிரேட் ஹெட்டும் (Hervey Greathed) உடன் வந்தார். டெல்லி மதில்களுக்குக் கீழேதான் போர் நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், மே 30ஆம் நாள் டெல்லிக்குக் கிழக்கே ஹிண்டான் நதிக் கருகில் காஜுதீன் நகரில் புரட்சி வீரர்கள் தென் பட்டனர். மீரத் கிளர்ச்சிக்கு 20 நாட்களுக்குப் பிறகு இன்றுதான் இரு இனங்களும் எதிரிகளாகக் களத்தில் சந்திக்கின்றன. முதல் போரிலேயே வெள்ளையர் வெற்றிப் பெற்றனர். தோல்வி யுற்ற சிப்பாய்கள் பீரங்கிகளை விட்டு விட்டு டெல்லியை நோக்கி ஓடினார்கள். இதற்கிடையில் பர்னாட் தலைமையில் புறப்பட்ட அம்பாலாப் படை ஜுன் 5 ஆம் நாள் டெல்லிக்கு வடக்கே அலிப்பூரில் வந்து மீரத் படைகளுக்காகக் காத்திருந்தது. மீரத் படை யமுனையைக் கடந்தது. பாக்பட்டில் இரு படைகளும் ஜுன் 7ம் நாள் இணைந்தன. முதல் நாள்தான் 'முற்றுகைத் தளவாடத் தொடரும்' (Siege train) வந்து சேர்ந்தது. இணைந்த இரு படைகளும் மறுநாள் பட்லி-கி-சாராய் என்ற இடத்திற்கு வந்தன. இனி டெல்லிக்கு ஆறே மைல்கள் தான் இருக்கின்றன.

டெல்லிப் புரட்சி வீரர்களை வெள்ளைப் படைகள் முற்றுகை யிடப் போகும் அதே நேரத்தில், கான்பூரில் வெள்ளையர்களைப் புரட்சி வீரர்கள் முற்றுகை யிட்டனர். புரட்சிக் கதையின் பெரும் பகுதி கங்கைக்குக் கிழக்கேதான் நடந்தது. அத் தொடர் கதைக்கு எவ்விதத் தடங்கலும் ஏற்படாமல்

இருக்க ரோஹில் கண்டிலும், பஞ்சாப்பிலும், இராஜபுதனத்திலும் நடந்தவற்றை நாம் முதலில் பார்ப்போம். ஏனெனில்? வடகிழக்கே நடந்த நிகழ்ச்சிகளுடன் இப் பகுதிகளில் நடந்த நிகழ்ச்சிகள் நெருங்கிய இணைப்புக் கொண்டிருக்க வில்லை, என்பதால் தான் என்க.

# 6. ரோஹில் கண்ட்-கான் பகதூர் கான்

[முன் கதை, தலைநகர் பெரெய்லி, ஆணையர் அலெக்ஸாண்டர்—கர்னல் காலின் ட்ரூப்—மீரத் செய்தி—பெரெய்லி கிளர்ச்சி—கான் பகதூர்கான் தலைமை—இந்து-முஸ்லிம் மோதல்கள்—பியூடோன், பிஜில்புரேட் வில்லியம் எட்வர்ட்ஸ் — பிஜ்னௌர்—சர் ஸயத் அகமத் கானின் ஆட்சிப் பொறுப்பு - மொராதாபாத் - கொள்ளை இனங்கள்—ஷாஜஹான்பூர் — அகதிகள் கான்பூரை நோக்கிச் செல்லல்.]

வட மேற்கு மாநிலங்களில் ஒன்று தான் ரோஹில்கன்ட். இங்கே பெரெய்லி, மொராதாபாத், ஷாஜஹான்பூர், பியூடோன், பிஜ்னௌர் ஆகிய ஐந்து வட்டங்கள் இருந்தன. டெல்லிக்குக் கிழக்கே, நைனிடாலுக்குத் தெற்கேயுள்ள இப் பகுதியில் கங்கையும், ராம கங்கையும் பாய்கின்றன, ஒரு காலத்தில் கதேரியா (Katheria) இரஜபுத்திரர்கள் வாழ்ந்த பகுதி. 17வது நூற்றாண்டின் இறுதியில் தான் 'ரோகில்லா'க்கள் என்ற ஆப்கானிய இஸ்லாமியர்கள் அதைத் தாயகமாகக் கொண்டார்கள். அயோத்தி நவாபின் வேண்டுகோளின்படி 40 லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு, ஆங்கிலத் துருப்புகள் 1774-ல் ரோஹில்லாக்களின் கடைசி மன்னன் ஹஃபீஸ் ரஹமத்தைத் (Hafiz Rahmat) தோற்கடித்துக் கொன்றூர்கள். 1801-ல் அயோத்தி நவாப் ரோகில் கண்டை ஆங்கிலேயருக்கே கொடுக்க வேண்டியதாயிற்று. அதன் பின்பு அப்பகுதி நிறுவனத்தின் வடமேற்கு மாநிலங்களில் ஒன்றாக ஆளப் பட்டது.

அங்கிருந்த 5 வட்டங்களுக்கும் பெரெய்லி தான், ஆணையர் அலெக்ஸாண்டருக்கு அது தலைமை யகமாக இருந்தது. நைனிடாலுக்கு நேர் தெற்கே ராம் கங்கா நதியருகில் இவ்வூர் இருந்தது. அப் படைத் தளத்தில் 8-வது குதிரைப் படையும், பிற இரண்டு காலாட் படைகளும், ஒரு பீரங்கிப் படையும் இருந்தன. இவை யாவும் சுதேசி வீரர்களால் ஆன

வையே. பிரிகேடியர் சிப்பால்ட் (Sibbald) தளபதியாக இருந்தார். யுரேசியர்களையும் சேர்த்து மொத்தமாகக் கிறித்துவர்களே சுமார் 100 பேர் தான் அவ்வூரில் இருந்தனர். பிரிகேடியர் சிப்பால்டுக்கு அடுத்த படியாக கர்னல் காலின் ட்ரூப் இருந்தார்.

கொழுப்புக் குண்டுகளைப் பற்றிய பீதி, ஏப்ரல் மாதத்தில் வீரர்களையும் பற்றியது. அத்துடன் பீரங்கிகளின் இருப்பிடத்தை அதிகாரிகள் மாற்றியமைத்தது, வீரர்களிடையே அச்சத்தையும் விளைவித்தது. மே 14ஆம் நாள் மீரத் செய்தியோடு பெரெய்லிக் கருகிலிருந்த முராதாபாத் சிப்பாய்களின் அமைதி யின்மையும் அங்கே எட்டியது. பிரிகேடியர் சிப்பால்ட் ஆய்வுச் சுற்றுக்குச் சென்றிருந்ததால், கர்னல் காலின் ட்ரூப் படைப் பொறுப்பிலிருந்தார். மதியூகமும், ஆற்றலும், அனுபவமும் மிக்கவர் ட்ரூப். தம் படைகளில் 8-வது குதிரைப் படை மேல் அவர் பெருத்த நம்பிக்கை வைத்திருந்தார். அக் குதிரைப் படை நெடுங் காலம் நாணயத்திற்கும், திறமைக்கும் பெயர் பெற்றிருந்தது. 5 ஆண்டுகளுக்கு முன்பு கடல் கடந்து பெகு (Pegu) விற்குச் சென்று போரிட ஒரு அணி மறுத்த போது, இந்த 8 வது குதிரைப் படை தான் அதற்கு முன் வந்தது. கடல் கடந்து திறமையுடன் போராடி ஆங்கில அதிகாரிகளிடம் பாராட்டும் பெற்றது. இப்படையை நடத்தும் அதிகாரி கேப்டன் அலெக்ஸாண்டர் மெக்கன்ஸூம், (Alexander Mackenz) எந்த அபாயத்தையும் சமாளிக்க அவரது குதிரைப் படை இருப்பதைக் கண்டு வெள்ளையதிகாரிகள் நிம்மதியும், மகிழ்ச்சியுங் கொண்டதில் வியப்பில்லை.

மே 14 ஆம் நாள் மீரத் செய்தி எட்டியதும், கர்னல் ட்ரூப் விழிப்படைந்தார். விடுமுறையில் சென்ற அதிகாரிகளை உடனே வரவழைத்தார். ஐரோப்பிய பெண்டு பிள்ளைகளை, மலை மேலிருக்கும் நைனிடாலுக்கு அனுப்பினார். அணி வகுப்பு ஒன்று நடத்தி வீரர்களுக்கு நம்பிக்கை ஊட்டினார். கொழுப்புக் குண்டுகள் நிச்சயமாகப் பயன்படுத்தப் பட மாட்டாது என்று உறுதி மொழியுங் கொடுத்தார். மே 16 ஆம் நாள் வீரர்களின் அச்சத்தைப் போக்க பீரங்கிகளைப் பழைய இடங்களுக்கே நகர்த்தினார். கர்னல் ட்ரூப்பின் உறுதி மொழிகளில் அவர்கள் மயங்குபவர்கள் அல்ல. துர்க்காதாஸ் பண்டோ உபாத்தியாய என்ற இராணுவ எழுத்தரின் கூற்றுப்படி வீரர்களின் நடத்தையில் மாறுதல் இரண்டு மாதங்களுக்கு முன்பே தோன்றி விட்டது. மார்ச் திங்களிலே வீரர்களுடைய பேச்

சுக்களில் இரகசியமும், நடத்தையில் முரட்டுத் தனமும் காணப் பட்டது. அப்பொழுது மீரத் கிளர்ச்சி, அவர்களைப் பதட்ட நிலையில் வைத்து விட்டது. கடந்த சில நாட்க ளாகவே, பெரெய்லியில் ஒரு நடுக்கம் இருந்தது!

மே 19ஆம் நாள் மொராத பாத்தில் கிளர்ச்சி நடந்தது. அன்று தான் பிரிகேடியர் சிப்பால்ட் பெரெய்லிக்கு வந்தார். கர்னல் ட்ரூப் எடுத்த நடவடிக்கைகளைச் சரி பார்த்தார். இரண்டு நாட்கள் கழித்துச் சிப்பால்ட்டும், ஆணையர் அலெக் ஸாண்டரும் நம்பிக்கை யளிக்குஞ் சொற் பொழிவு நிகழ்த்தி ஞர்கள். சிப்பாய்களின் மதத்திற்கு எந்தத் துரோகமும் அர சாங்கம் இழைக்காது; என்று உத்திர வாதம் அளித்தார்கள். சில நாட்கள் அமைதியாகக் கழிந்தன. மே 29ஆம் நாள் காலை கர்னல் ட்ரூப்பின் இல்லத்திற்கு மூச்சிரைக்கச் சுதேசி அதிகாரி ஒருவன் ஓடி வந்தான். 'காலையில் ஆற்றுக்குக் குளிக்கச் சென்றிருந்த சிப்பாய்கள் நதியிலேயே உறுதி மொழி எடுத்திருக்கிறார்கள். மறு நாள் பிற் பகலில் 2 மணிக்குக் கிளர்ந் தெழுந்து ஆங்கிலேயர்களைக் கொல்லுவதே அவர்களின் திட் டம்' என்று பட பட வென்று பேசி முடித்தான். கர்னல் ட்ரூப் பிற அதிகாரிகளைத் துரிதப் படுத்தினார். 8-வது குதிரைப் படை மேல் அவருக்கு இன்னும் நம்பிக்கை இருந்தது. மறு நாள் எதிர் பார்த்தபடி எதுவும் நடக்க வில்லை. அந்த இரு பகல்களும், இரவுகளும் பீதியுடன் கூடிய அமைதியில் கழிந்தன...ஒவ்வொரு விநாடியும் திகலுடன் நகர்ந்தது.. மே 31ஆம் நாள் வந்தது! ஞாயிறு காலைப் போது மெதுவாக ஊர்ந்தது...; 11 மணியை அறிவிக்கும் ஓசை கேட்டதும் துப்பாக்கிகள் படை தளத் தில் வெடித்தன! வீரர்களின் ஆரவாரம் துல்லியமாய்க் கேட் டது. வீரர்கள் பிய்த்துக் கொண்டு வெளியேறினர். வெள்ளை யர் இருப்பிடங்களை நோக்கி ஓடினர். ஆபத்தை எதிர் நோக் கிய வெள்ளையர்கள் தங்கள் தங்கள் குதிரைகளைச் சேணங் களுடன் தயாராகவே வைத்திருந்தனர். அனைவரும் 8-வது குதிரைப் படையின் தளத்திற்குள் வந்து சேரத் திட்டமிட் டிருந்தனர். அத் தளத்திற்குச் செல்லும் வழியிலேயே புரட்சி வீரர்கள் பல வெள்ளையரை மறித்துச் சுட்டு வீழ்த்தினர். பிரிகேடியர் சிப்பால்டின் நெஞ்சிலே குண்டு பாய்ந்தது. சிறிது தூரஞ் சென்று அவர் விழுந்து இறந்தார். பெரெய்லி நகரின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வெள்ளை அதிகாரிகளும், அலுவலர்களும் குதிரைப் படைத் தளத்திற்கு விரைந்து வந்தனர். ஆனால், அக் குதிரைப் படை அவர்களை ஏமாற்றி விட்டது! உற்சாகத்துடன் எதிர்ப்பைச் சமாளிக்க அனை

வரும் அணி வகுக்கவில்லை. அப் படையின் அதிகாரி மெகன்ஸி இறுதி வரை அதைத் தான் நம்பி யிருந்தார். ஆனால், கர்னல் ட்ரூப் மட்டும் இதையும் எதிர் பார்த்திருந்தார். இதற்குள் காலாட் படையினர், அங்கே வந்து விட்டனர். அவர்களின் வீரமொழிகளும், அப்பொழுது தான் ஏற்பட்ட இஸ்லாமியப் பச்சைக் கொடியும் கண நேரத்தில் அக் குதிரை வீரர்களின் மனதை மாற்றி விட்டன. இனியும், நம்பிப் பயனில்லை; என்று கருதிய கர்னல் ட்ரூப்பும், பிற அதிகாரிகளும் தங்கள் தங்கள் குதிரைகளைத் தட்டிக் கொடுத்துப் பறந்தனர். சிறிது தூரம் பின் தொடர்ந்து சென்ற சிப்பாய்களில் பலர் இடையில் நின்று விட்டனர். 22 பேர்களே வெள்ளை யதிகாரிகளுடன் தம் பயணத்தைத் தொடர்ந்தனர். 22 மணி நேரத்தில் 66 மைல் தொலைவிலிருந்த நைனிடாலை அவர்கள் அடைந்தனர். சுதேசி அதிகாரிகள் சிலர் தத்தம் மனைவி, மக்கள், மற்றும் எல்லா வற்றையும் இருட்டில் விட்டு விட்டுத் தம்முடைய எதிர் காலத் தையும் எண்ணிப் பாராமல் கடமை உணர்வால் தத்தம் அதி காரிகளுடன் சென்றனர்.

இராணுவ எழுத்தர் துர்க்கா தாஸ் பண்டோ உபாத்யாய வின் கூற்று வேறு விதமாக இருக்கிறது. வெள்ளை அதிகாரி கள் நகரை விட்டு வெளியேறியதைக் கண்டு, நம்பிக்கைக் குகந்த ரிசால்தார் மேஜர் முகமது சஃபி தன் வீரர்களுடன் உதவி செய்யத் தொடர்ந்தான். இவர்கள் தங்களைக் கொல் லத்தான் வருகின்றனர்; என்று கருதிய வெள்ளை யதிகாரிகள், குதிரைகளை மேலும் விரட்டி ஓட்டினர். ரிசால்தார் தம் சிவப்புத் துணியை ஆட்டியும் சைகை காட்டியும், அவர்கள் நிற்காமல் விரைந்து சென்று விட்டார்கள். தன்னுடன் இருந்த வீரர் களுக்குக் கூலிதர இயலாததால் முகமது சஃபியும், புரட்சிக் காரர்களுடன் சேர்ந்து கொண்டான். துர்க்கா தாஸ் இந்நிகழ்ச் சியை முகமது சஃபியிடமிருந்தே கேட்டிருக்கிறார். இதை எந்த அளவுக்கு நம்புவதென்று தெரியவில்லை.

பெரெய்லி, புரட்சிக்காரர்களின் வசமாயிற்று. புரட்சிப் படைக்குப் பகத்கான் என்ற சுபேதார் தளபதி யாக்கப் பட் டார். கான் பகதூர் கான் மொகலாயப் பேரரசின் பெயரில் ரோகில் கண்டின் பிரதி நிதியாக மாறினார். அக் கிழவர்-தான் இறுதி சுதந்திர ரோகில்லா மன்னர் ஹஃபிஸ் ரஹமத் கானின் பேரர். இடைப்பட்ட ஆங்கில ஆட்சி முடிந்ததால், அன்று அப் பகுதிக்கு உரிமை பெறவேண்டியவர் அவரே தான். ரோகில்லா மன்னரின் வாரிசு என்பதால், 100 ரூபாய் உதவிப் பணமும்,

ஆங்கில ஆட்சியில் நீதித் துறையில் பணி யாற்றியதால், அதற் கொரு உதவிப் பணமும், அவர் நீண்ட காலம் பெற்று வந்தார். ரோகில் கண்டின் சுதந்திர ஆட்சியை அவரை விட வேறு எவ ரும் வரவேற்க முடியாது. அக் கிழவரின் உடல் நிலையோ, உள் ளத்தின் நிலையோ இப் புதுச் சவாலுக்குப் பொருந்த வில்லை. உண்மையிலேயே அவர் பெரெய்லி கிளர்ச்சியைத் தூண்டிய வர்தானு? என்றுங் கூற முடிய வில்லை. இக் கிளர்ச்சிக்கு முதல் நாள் கூட ஆணையர் அலெக்ஸாண்டரிடம் கை குலுக்கி விட் டுச் சென்ருர். உங்கள் 'உயிரைக் காத்துக் கொள்ளுங்கள்' என்ற அறிவுரையோ, எச்சரிக்கையோ கொடுத்து விட்டுச் சென்ருலலை. எப்படியும் தற்போது புரட்சியில் சேர அவர் தயங்க வேண்டிய தில்லை. கோலோச்சும் உரிமை மீண்டும் கிடைக்கின்ற தென்ருல் யார் அதைப் புறக் கணிப்பார்? மேலும் கான் பகதூர் கான் மறுத்தால், தலைமைப் பதவியைப் பறிக்க, 'பதான்' இனத்தைச் சேர்ந்த மற்ெருரு தலைவன் முபாரக் ஷா காத்திருந்தான். பகதூர் கான் ஆட்சிக்கு வந்ததும் பல வெள்ளை யதிகாரிகளில் தப்பிக்கத் தவறியவர்கள் படு கொலை செய்யப்பட்டனர். பரங்கியருக்கு அபயம் அளிப்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப் படும் என்றும் அவர் அறிவித் திருந்தார்.

பெரெய்லியில் இந்து - முஸ்லிம் பகைமை முன் பிருந்தே நிலவியது. தம் ஆட்சி நிலைக்க இந்துக்களை, குறிப்பாக இராஜ புத்திர தக்கூர்களைத் தம் பக்கம் இழுக்க கான் பகதூர் நினைத் தார். முதலில், மொகலாயப் பேரரசின் அதிகாரத்தைத் தம் ஆட்சிக்குப் பெற்றுக் கொண்டார். ஜெய்மல்சிங் என்ற இராஜ புத்திர தக்கூரைத் தொடர்ந்து பல தலைவர்கள் அவ ருடைய ஆட்சியை ஏற்றுக் கொண்டனர். சோபாராம் என்ற மற்ெருரு இந்து வணிகர் திவாஞக நியமிக்கப் பட்டார். நிர் வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதில் 6 முஸ்லிம்களும் 2 இந்துக்களும் நியமிக்கப் பட்டனர். இந்துக்களின் மனம் நோகத்தக்க பசுக் கொலையைத் தடை செய்தார். (டெல்லிப் பேரரசரும் பசுக் கொலையைத் தடுத்துத் தடை விதித் திருந்தார்) ஆனுல், மத வெறி கொண்டு சில முஸ்லிம்கள் புரிந்த செயல்களை அவரால் தடை செய்ய முடிய வில்லை. சோபாராம் நிதி வசூலிக்கும் அதிகாரம் பெற்றிருந்ததால் பலரின் வெறுப்புக் குள்ளானர். குறிப்பாக, முஸ்லிம்கள் அவரை வெறுத்தனர். மற்ெருரு இந்துவான பல்தேவ்—கான் பகதூரின் உறவினஞன ஆலாம்கானுல் தாக்கப் பட்டார். அவருடைய குடும்பத்தினரும் அச்சுறுத்தப் பட்டனர். தற்

காப்பிற்காக, ஆலாம்கானை பல்தேவ் கொன்றார். விசாரணையில் பல்தேவ் விடுவிக்கப் பட்டார். ஆனால், ஆலாமின் சகோதரன் பல்தேவைக் கொன்று பழி வாங்கினான். பல்தேவின் கொலையாளிக்குத் தண்டனை அளிக்கப் படாததால், இந்துக்கள் பகதூர் கானின் ஆட்சியை வெறுத்தனர். புது ஆட்சியில் வணிகர்கள் நிதி கேட்கப்பட்டுப் பாதிக்கப் பட்டனர். ஆட்சிக்கு எதிரான பல வணிகர்களின் செல்வம் பறிக்கப் பட்டது. பைஜ்நாத் என்ற வணிகன் இரகசியமாக நைனிடாலில் வெள்ளையர்களுடன் தொடர்பு கொண்டிருந்தான். (அவன் பணியைப் பாராட்டிப் பிற் காலத்தில் நல்ல வெகுமதியும், ராஜா, என்ற பட்டமும் ஆங்கிலேயரால் அவனுக்குக் கொடுக்கப் பட்டது. பெரும் நிலக் கிழாராகவும் அவன் மாறினான்.)

பியூடோன், பெரெய்லிக்குத் தென் மேற்கே 30 மைல் தொலைவில் கங்கா-ராம், கங்கா நதிகளுக்கிடையே இருக்கிறது. அங்கே, இராணுவம் எதுவுங் கிடையாது. இவ் வூர் மாஜிஸ்ட்ரேட் வில்லியம் எட்வர்ட்ஸானவர் அங்கிருந்தச் சில சிப்பாய்கள் கிளர்ச்சிச் செய்ததும், அவர்களிடம் தப்பித்துக் கொண்டு தென் கிழக்கே கங்கைக் கரையிலிருந்த பதேகருக்கு ஓடினார். அவர் அங்குந் தங்காமல், தரம்பூர் ஜமீன்தார் ஹரிதேவ் பக்ஷ்ஷின் உப சரிப்பில் சில காலம் இருந்து, பின் பல கிராமங்கள் வழியாக 3 மாதங்களுக்குப் பிறகு கான்பூரை அடைந்தார். அவ் வூரை நோக்கியே தான் தப்பி ஓடிய பல வெள்ளையர்களும் பயணம் செய்தனர். அவர்களுக்கு நேர்ந்த முடிவைப் பின்னால் பார்ப்போம்.

பிஜ்னோர், முராதாபாத்திற்கும், மீரத்திற்கும் இடைப் பட்ட பகுதியில் கங்கை நதிக் கருகில் இருக்கிறது. அதன் தூரம் மீரத்திலிருந்து 40 மைல். அங்கே, ஷேக்ஸ்பியர் என்பவர் மாஜிஸ்டிரேட்டாக இருந்தார். மீரத்திலிருந்தும், அதற் கருகிலிருந்தும் கிளர்ச்சிச் செய்திகள் மே 13ஆம் நாள் தான் அங்கு எட்டியது. மாஜிஸ்டிரேட் எச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்தார். மே 19-ல் முராதா பாத் சிறைச் சாலை உடைக்கப் பட்டதால், அங்கிருந்த பயங்கர குற்றவாளிகள் வெளியேறினர். ரூர்க்கி என்ற இடத்தில் கிளர்ச்சிச் செய்த வீரர்களும் பிஜ்னோருக்கு வந்தார்கள். மே 21ஆம் நாள் அங்கிருந்த சிறைச் சாலையும், உடைத்துத் திறக்கப் பட்டது. பிஜ்னோரைச் சுற்றிலும் புரட்சிக்காரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் 'நஜிபாபாத் நவாப் முகமது கானை'த் தலைவராகக் கொண்டிருந்தார்கள்.

மாஜிஸ்ரேட் ஷேக்ஸ்பியர், தம் பொறுப்பிலிருந்த கருவூலத்தைக் காப்பாற்ற நினைத்தார். சிறிதளவு பணத்தை மட்டும் வைத்துக் கொண்டு, மீதிப் பணத்தை மூட்டைகளாகக் கட்டிக் கருவூலத்திற் கருகிலிருந்த கிணற்றில் அமிழ்த்தினர். அதை எடுக்க முயல்பவர்களைச் சுட்டுக் கொல்ல அருகிலிருந்த கட்டிடத்தின் மேல் பீரங்கிகளைப் பொருத்தினர். நவாப் முகமத் கான் பணத்தையும், ஆட்சியையும் கைப்பற்ற முனைந்தான். புரட்சி வீரர்களின் துடிப்பையும், ஆங்கில அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருந்த அபாயத்தையுங் கண்ட நீதித் துறை அதிகாரி ஒருவர், சமரசத்திற்கு முன் வந்தார். அவர்தான் பிற்காலத்தில் புகழ்ப் பெற்ற சர் சையத் அஹமத்கான் (1817—1898). அவருடைய தலையீட்டினால்தான் ஆபத்தின்றி ஆங்கிலேயர்கள் வெளியேற புரட்சிக்காரர்கள் அனுமதித்தனர். பிஜ்நோரின் நிர்வாகம், நவாப் முகமது கானுக்குத் தரப்பட்டது. ஷேக்ஸ்பியர் சில நிபந்தனைகளுடன் இதற்கு ஒப்புக் கொண்டார். இந்த மாற்றத்தை இந்து ஜமீன்தார்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. தேஜ்பூர் சீமான் பார்தப் சிங்கின் தலைமையில் நவாபின் ஆட்சி எதிர்க்கப் பட்டது. நவாப் பிஜ்நோரைக் கைவிட வேண்டியதாயிற்று. ஆனால், இந்து – முஸ்லிம் மோதல்கள் நீடித்தன. வெற்றித் தோல்வி மாறி மாறி ஏற்பட்டன. முடிவில் செப்டம்பரில் இந்து ஜமீன்தார்கள் தோற்றனர். (இதற்கிடையில் உதவி மாஜிஸ்ட்ரேட், முகமது ரஹமத் கானின் துணையுடன், சையத் அஹமத் கான் ஆங்கில அதிகாரிகளின் ஆணைப்படிச் சிறிது காலம் நிர்வாகஞ் செய்தார்.) ஏப்ரல் மாதத்தில் ஆங்கிலேயர் மீண்டும் பிஜ்நோரைக் கைப் பற்றினர்.

மொராதாபாத், ரோகில் கண்டின் வட பகுதியில் கங்கைக்குக் கிழக்கே இருக்கிறது. புரட்சித் தோன்றியதும் இப் பகுதியிலிருந்த குஜார், மேவாட்டி, ஜாத் இன வாசிகள் தங்களின் குலத் தொழிலான கொள்ளை யடிப்பதைப் புதுப்பித்துக் கொண்டார்கள். ஆங்கில ஆட்சியில், நீண்ட காலம் அடக்கப்பட்டிருந்த உணர்வுகள் தலை எடுத்தன. 'இதைப் போன்ற தருணம் அவர்களை இன்பப் புரிக்கே இழுக்கும்' அப் பகுதி முழுவதும் வழிப் பறியும், கொள்ளையும், கொலையும் பரவலாக நடந்தன. மொராதாபாத்தின் சுதேசிப் படை பெரும் நம்பிக்கையைப் பெற்றிருந்தது. கொள்ளைக்காரர்களை அடக்குவதிலும், பிற இடங்களில் கருவூலத்தைக் கைப் பற்றிப் பண முடிப்புடன் பறந்து செல்லும் புரட்சி வீரர்களைப் பிடிப்பதிலும், இப் படை சிறந்த பணி புரிந்தது. ஆனால், பெரெய்லியில்

நடந்த கிளர்ச்சிக்குப் பின் இவ் வீரர்களும் கடமையை மறந்தனர். விடுதலைக்குத் துடித்தனர். அப்படியிருந்தும், தங்கள் அதிகாரிகளைக் கொல்லாமல் விட்டதால், அவர்கள் மீரத்திற்குப் பாதுகாப்புடன் சென்றனர். ஆங்கிலேயரின் சார்பில் ராம்பூர் நவாப் அப் பகுதியின் நிர்வாகத்தைக் கவனித்தார்.

பெரெய்லிக்குத் தென் கிழக்கே 47 மைல் தொலைவில் ராம் கங்கா நதிக்குக் கிழக்கே, ஷாஜஹான்பூர் இருக்கிறது. அங்கே ஒரே ஒரு சுதேசிப் படை தான் இருந்தது. மீரத் செய்தி மே 15ஆம் நாள் அவ் ஊரை அடைந்தது. அப் பகுதி மக்கள் முரட்டுத்தனமானவர்கள். சிப்பாய்களை விட அவர்களே அஞ்சத்தக்கவர்கள். ஆங்கில அதிகாரிகள் வழக்கம போல் தங்கள் சுதேசிப் படையை நம்பினார்கள். ஆனால், பல இடங்களைப் போல் இங்கும் சிப்பாய்களின் இதய இரகசியம் தெரியவில்லை. ஓரளவு இரகசியத் தொடர்ப்பும் முன்னேற்பாடும் இருந்தது; என்று நாம் நம்பும்படி இந் நிகழ்ச்சிகள் இருக்கின்றன.

பெரெய்லியில் கிளர்ச்சி நடந்த அதே மே 31 ஞாயிறு அன்று ஷாஜஹான்பூரிலும் கிளர்ச்சி நடந்தது. அன்று பல ஆங்கிலேயர்கள் தங்கள் குடும்பத்தினருடன் மாதா கோயிலில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். திடீரென ஆலயத்திற்கு வெளியே ஆரவாரம் எழுந்தது. வெளியே சிப்பாய்கள் சூழ்ந்து நின்றார்கள். ஏசுவின் கருணையை நம்பி ஒரு பாதிரி பரபரக்க வாசல் கதவிற்கு ஓட்டமும் நடையுமாக வந்தார். பேச வாயெடுக்கு முன் சிப்பாயின் வாள் அவர் கையைத் துண்டித்தது. பைபிள் எகிறி விழுந்தது......இரத்தம் பீரிடப் பாதிரி ஓடினார்...ஆனால், குடியானவர்கள் அவரைப் பிடித்துக் கொன்றார்கள். மேஜிஸ்ட்ரேட் ரிக்கட்ஸ் (Ricketts) நீண்ட நாட்களாக மக்களின் வெறுப்புக் குள்ளானவர். அந்த ஆரவாரத்தில் அவரும் ஓட ஓடக் குத்திக் கொல்லப் பட்டார். வாசலருகில் நின்ற இன்னும் பல பரங்கியர்களும் கோரமாகக் கொலை யுண்டனர்.

புரட்சி வீரர்களிடம் துப்பாக்கிகள் இல்லை. வேல், வாள், கட்டாரி ஆகியவற்றுடன் மட்டுமே வந்திருந்ததால் கைக்கெட்டாமல் பல பரங்கியர்கள் தப்பி ஓடினர். ஆலயத்தின் கதவுகள் மூடப்பட்டன. ஆங்கில அதிகாரி ஒருவர் மட்டும் துப்பாக்கி வைத்திருந்தார். அவர் அதை நீட்டியதும் புரட்சி வீரர்கள் பின் வாங்கினர். இச் சமயத்தில், வெள்ளையரின் பணியாட்கள் எசமானர்களின் வீடுகளுக்குச் சென்று துப்பாக்கிகளைக்

கொண்டு வந்தனர். மீண்டும் கதவுகள் திறக்கப் பட்டன. அதற்குள் வெளியே சிக்கிய வீரர்கள் உதவிக்கு வந்து குழுமி விட்டனர். இதற்கிடையில் படைத் தளத்தில் இருந்த பரங்கியர்கள் பலர் புரட்சி வீரர்களால் கொலை செய்யப் பட்டனர். அதில் டாக்டர் பௌலிங்கும் ஒருவர். அவர் மனைவி வெட்டுக் காயத்துடன் உயிர்த் தப்பிக் கோயிலுக்குள் வந்தாள். இனியும், மாதா கோயிலில் முடங்கிக் கிடப்பது ஆபத்து. எனவே, அயோத்தி எல்லையிலிருந்த போவைய்ன் (Powain) சிற்றரசனிடம் அடைக் கலந் தேடி அன்று மாலையே வெள்ளையர்கள் அங்குச் சென்றடைந்தனர். ஆனால், அம் மன்னர் அவர்களுக்குப் புகலிடம் அளிக்க இயலாது என்று கூறி விட்டதால், அங்கிருந்து முகமதிக்குச் செய்தி அனுப்பினார்கள். அங்கிருந்து வண்டிகள் வந்ததும் வெள்ளையர்கள் இரண்டு நாட்களில் உடலும், உள்ளமுஞ் சோர்ந்து, களைத்து முகம்தியை அடைந்தனர். அயோத்தியிலும் புரட்சித் தொடங்கி விட்டதால் இவ் வகதிகள் பெரும் ஆபத்தில் சிக்கினர். அவ்வளவு இன்னல்களையும், அபாயங்களையுங் கடந்து கான்பூரை அடைய அவர்கள் விதிக்கப் பட வில்லை. அவரங்காபாத் அருகில் தொடர்ந்து வந்த புரட்சி வீரர்களால் கோரமாகக் கொலை செய்யப் பட்டனர்.

# 7. பஞ்சாப்-சர் ஜான் லாரன்ஸ்

[சீக்கிய-பூர்பிய சிப்பாய்கள்—முஸ்லிம்களின் வெறுப்பு—ஆயுதப் பறிமுதல்—மிபான்மிர்—அமிர்தசரஸ், ஃபெரோஸ்பூர், பட்டிபாலா மன்னர், கிராமவாசிகள் அரசுக்கு உதவி—ஜலந்தர் மக்களும் அட்டூழியத்தில் இறங்குதல்—கங்ரா, முல்தான் ஆயுதப் பறிமுதல்—பெஷாவர், மலைச்சாதியர், எட்வர்ட்ஸ் — ஆயுதப் பறிமுதல், ஹோதி மர்தான், கர்னல் நிக்கல்சன், சீக்கியரின் உதவி—பெஷாவர் ஆயுதப் பறிமுதல்—இராவல் பிண்டி, ஜீலம் - கிராமவாசிகள் ஆங்கிலேயருக்கு உதவி— சியால் கோட்—ராபர்ட் பாண்ட் கோமரி—பெரோஸ்பூர், பெஷாவர் — மலைவாசிகள் எதிர்ப்பு]

1849 ல் பஞ்சாப் ஆங்கில ஆட்சியுடன் இணைக்கப்பட்டது. வீரமிக்க பஞ்சாப்பியர்கள் வெள்ளையருடன் கடும் போர் புரிந்து தங்கள் சுதந்திரத்தை இழந்தார்கள். ஆனால், அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. இனத்தோடு இனத்தை மொதவிட்டு, மதத்தோடு மதத்தையும் எதிர்க்கச் செய்து அந்தப் பிளவுகளில், பிரிவுகளில் தங்கள் வேர்களை ஊன்றியவர்களே ஆங்கிலேயர்கள். பஞ்சாப்பைக் கவர்ந்த பின்பு பிரித்தாள்வதிலும், தந்திரத்திலும் தங்களின் ஊடுருவுதலையும் மேற்கொண்டே தங்களின் ஆட்சியை நிலை நிறுத்தினார்கள். அனுபவமிக்க, ஆற்றல் மிக்க மிகச் சிறந்த ஆங்கில அதிகாரிகளே பஞ்சாப்பில் நியமிக்கப் பட்டனர். எல்லைப் புறப் பகுதி என்பதால், எதிர்ப்பின் விளை நிலமானதால், அதன் பாதுகாப்பும், உறுதியும் ஆங்கிலேயருக்கு மிகவும் தேவையான ஒன்றாகும். அயோத்தியிலிருந்து சேர்க்கப் பட்ட பூர்பியா (Purbiah) இன வீரர்கள் பஞ்சாப்பில் மிக அதிகம் இல்லை. 60,000 வீரர்களில் 36,000 இந்துஸ்தானி வீரர்களும், மீதி ஆங்கில பஞ்சாபி வீரர்களுமாக இருந்தனர். சீக்கிய வீரர்களுக்கும். பூர்பியா வீரர்களுக்கும் என்றும் பிணைப்பு இணையாது. இந்து மதத்தைச் சேர்ந்த பூர்பியா வீரனும், சீக்கிய மதத்தைச் சேர்ந்த பஞ்சாபி வீரனும் ஒருவரை யொருவர் எதிரிகளாகக் கருதியே வந்தனர்

அவ் வேற்றுமைகளைப் பயன் படுத்திக் கொண்டு, ஒருவரை ஒழிக்க மற்றொருவரைப் பயன் படுத்தும் அரச தந்திரம் ஆங்கிலேயருக்குக் கைவந்த கலை. பஞ்சாபிலிருந்த பூர்பியா சிப்பாய்கள், தாங்கள் ஒரு அந்நிய நாட்டில் வாழ்வதாகவே கருதி வந்தனர். சீக்கியரோ முஸ்லிம்களைப் பழி வாங்கக் கறுவிக் கொண்டிருந்தார்கள். மொகலாயரின் கொடூரத்திற்கு நெடுங் காலம் பலியான சீக்கியர்கள், டெல்லியின் வீழ்ச்சியை எதிர் நோக்கியிருந்தனர். ஆங்கில ஆட்சி 100 ஆண்டுகளுக்குப் பிறகு மறையும் என்று நம்பப் பட்டதைப் போல, மொகலாயத் தலைநகரும் ஒரு நாள் தங்கள் காலடியில் விழும் என்ற மற்றொரு ஆருடத்தை மெய்ப்பிக்கச் சீக்கியர்கள் காத்திருந்தனர்.

மீரத் கலவரமும் டெல்லி வீழ்ச்சியும் தந்தி மூலம் பஞ்சாப்பிற்கு அறிவிக்கப் பட்டது. மே 12ஆம் நாள் காலைப் பொழுதே லாகூருக்குச் செய்தி எட்டியது. பஞ்சாப்பின் முதல் ஆணையர் சர்ஜான் லாரன்ஸ் (Sir Johon Lawrance) அப்பொழுது வட மேற்கே வெகு தூரத்தில் ராவல் பிண்டியில் இருந்தார். எனவே, நீதித் துறை ஆணையர் ராபர்ட் மாண்ட் கோமரி (Robert Mont gomery) தாமே பொறுப்புகளை ஏற்றார். அருகிலிருந்த மியான் மிரில்தான் (Mian Mir) படைத்தளம் ஒன்று இருந்தது அன்றிரவு படைத் தளத்தில் ஆங்கில நடனம் ஒன்று ஏற்பாடாகி யிருந்தது. நிகழ்ச்சியை ரத்து செய்தால் சந்தேகத்திற்கு இடமாகும்; என்று கருதி அதிகாரிகள் அதில் பங்கெடுத்துக் கொண்டனர். மறுநாள் காலை அணிவகுப்பு நடந்தது. பரக்பூர் 34வது சுதேசி அணியின் ஆயுதப் பறிமுதல் அறிக்கையை வெளியிடவே அணிவகுப்பு ஏற்பாடாகி யிருந்ததாகத் தெரிகிறது. அணி வகுப்பு முடிந்ததும் 600 வெள்ளை வீரர்கள் துப்பாக்கி யேந்திச் சூழ்ந்து நிற்க, ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு, சிப்பாய்களுக்கு ஆணையிடப் பட்டது. உணர்ச்சி வசப் பட்டுத் தவறான பாதையில் சிப்பாய்கள் இறங்குவதைத் தடுக்கவே ஆயுதங்கள் வாங்கப் படுகின்றன; என்று அதிகாரிகள் சமாதானங் கூறினார்கள். 2500 சிப்பாய்களும் தயக்கத்திற்குப் பின் அமைதியாக ஆயுதங்களைக் கீழே வைத்தனர்.

லாகூருக்குக் கிழக்கே ராவி, பியாஸ் நதிகளுக் கிடையில் அமிர்தசரஸ் இருக்கிறது. அதற்கருகில் கோவிந் காரில் ஒரு படைத் தளம் உண்டு. 12ம் நாள் இரவே கேப்டன் சிக்ஸ்டர் (Chichester) ஒரு படையுடன் லாகூரிலிருந்து புறப்பட்டு, மறுநாள் காலை அங்கு வந்து சேர்ந்தார். எவ்வித எதிர்ப்புமின்றி பறிமுதல் பணி முடிந்து விட்டது. அமிர்த சரஸ் அபாயம் நீங்கி விட்டது.

அமிர்த சரஸிற்கு தெற்கே இருந்த ஃபெரோமஸ்பூரில் அவ்வளவு எளிதாக முடிய வில்லை. பிரிகேடியர் இன்ஸ் (Ins) அமைதியைக் காக்கும் பொறுப்பிலிருந்தார். 57, 45-வது அணிகளைத் தனித் தனியே பறிமுதல் செய்யத் திட்ட மிட்டார். 57வது அணி ஒழுங்காகத் தன் தளத்திலிருந்தது. 45வது அணியினர் வெள்ளையரின் சதியைப் புரிந்து கொண்டனர். பறிமுதலை எதிர்பார்த்துச் 'சதி நடக்கிறது' என்று கூறினர். அவ்வகையில் 200 வீரர்கள் கிளர்ச்சிக்குத் தயாரானார்கள். மே 15ஆம் நாள் சில இடங்களில் கிளர்ச்சி நடக்கும் என்று எதிர் பார்க்கப் பட்டது. ஆனால், 45வது அணியில் 130 பேர் மட்டும் தளத்தை விட்டுத் தப்பினார்கள். அவர்கள் துரத்தப் பட்டனர். சிலர் மட்டும் பாட்டியாலா அரச எல்லைக்குள் நுழைந்து சிறைப் பட்டனர். பலர் டெல்லிக்குச் சென்றனர்; பலரைக் கிராம வாசிகள் பிடித்துக் கொடுத்தனர்.

ஜலந்தர் பிரதேசம், பியாஸ், சட்லஜ் நதிகளின் இடைப் பகுதியில் இருக்கிறது. அங்கிருந்த சிப்பாய்கள் மீரட், லக்னோ ஆகிய இடங்களில் முன்பு இருந்தவர்கள். ஆங்கில வெறுப்பை ஏற்கனவே பெற்றிருந்தார்கள். இங்கு வந்த பின்பும், தங்களுடைய பழைய நண்பர்களுடன் தொடர்பு கொண்டார்கள். இங்கே, இரு முறை ஆயுதப் பறி முதல் ஒத்தி வைக்கப் பட்டது. முடிவில் ஜூன் 7ஆம் நாள், பரங்கியரின் சதியில் சிக்குவதற்கு முன்பே அவர்கள் புரட்சிக் குரலெழுப்பினார்கள். உடனடியாக லூதியானாவிற்குச் சென்று, அங்கிருந்து டெல்லிக்குச் சென்றனர். இவர்களின் எழுச்சியைக் கண்ட அம்மக்களில் பலர் ஆங்கில ஆட்சி முடிவடைந்தது; என்று கருதினார்கள்போலும், 'எரிகின்ற வீட்டிற் பிடுங்கியது லாபம்' என்று கருதிப் பலர் கொள்ளை, கொலை, வழிப்பறி ஆகியவற்றில் இறங்கினார்கள்.

வடக்கே கங்ரா (Kangra) படைத் தளத்தில் பணி சுலபமாக முடிந்தது. ஜூன் 15ஆம் நாள் புரட்சிக்குக் குறிப்பிடப் பட்டதாக வதந்தி உலவியது. அப்படி இருந்தும், 13ஆம் நாள் அதிகாரிகளின் ஆணைக்குக் கட்டுப் பட்டுக் காங்ரா வீரர்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தனர்.

மேற்கே இருந்த முல்தான் (Multan) முக்கிய இடமாக இருந்தது. அங்கிருந்து 2,000 பூர்பியா சிப்பாய்களின் ஆயுதங்களை 60 வெள்ளையர்கள் பறிப்பது அவ்வளவு எளிதல்ல. துணைக்கிருந்த பிற ஆயிரம் வீரர்களையும் நம்புவதற்கில்லை.

அங்குத் தோன்றிய சல சலப்பு அமிழ்ந்து விட்டது. ஆனால், ஜூன்7ஆம் நாள் ஜலந்தரில் நடந்த கிளர்ச்சியை யொட்டி விபரீதம்நிகழும் என்று எதிர்பார்க்கப் பட்டது. சீக்கிய வீரர்கள் தேவையான அளவு வந்து சேர்ந்ததும், ஜூன் 9ஆம் நாள் ஆயுதப் பறிமுதல் தொடங்கியது. குதிரைப் படையையும், பீரங்கியையும் காவல் காக்க ஆணையிடப் பட்டது. மயிரிழை அசைந்தால் உயிர்ப் போகும். ஆயுதங்கள் பறிக்கப் பட்டன. முல் தான் ஓரளவு காக்கப் பட்டது.

பெஷாவர் பகுதி இந்திய ஆப்கானிய எல்லை யிலிருக்கிறது. இந்தியாவின் வட மேற்கு எல்லை நகரம் அது. சில காலங்களுக்கு முன்பு ஆப்கானியப் பகுதியாக இருந்தது. அது சீக்கிய மன்னன் ரஞ்சித் சிங்கால் தோஸ்து முகமது விட மிருந்து கைப்பற்றப் பட்டது. டெல்ஹௌசிப் பிரபு காலத்தில் பஞ்சாப்புடன் பெஷாவரும் சேர்த்துக் கொள்ளப் பட்டது. தோஸ்து முகமது வெள்ளையர் வலையில் சிக்கி யிருப்பினும், இந் நெருக்கடி நிலையில் பெஷாவரைக் கவர முயற்சிக்கலாம். பெஷாவரின் ஆணையர் கர்னல் ஹெறாபெர்ட் எட்வர்ட்ஸ் (Herbert Edwards) இதைத் தவிர்க்க வேண்டும். அது மட்டு மல்ல, அப் பகுதிகளில் புரட்சித் தோன்றாமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமாயினும், மேலும் ஒரு அபாயம் அங்குண்டு. பெஷாவரைச் சுற்றியுள்ள மலைகளி லும், பள்ளத் தாக்குகளிலும் சில நாடோடி மலைவாசிகள் இருந்தனர். அப்ரிடி (Apridi) கடாக் (Khadak) மோமந்த் (Momand) இனம், மொழி, கலாச்சாரத்தில் ஆப்கானியரை ஒத்தவர்கள் அவர்கள். அவர்களுக் கிடையே ஒற்றுமை கிடையாது. அவர்களின் தொழில், கொள்ளை அடிப்பது ஒன்றே. அப் பகுதிகளில் உழைப்புப் பயன் தருவதில்லை. அவர்களும் உழைத்துப் பழக்கப் பட்டதில்லை. பல நூற்றாண்டுகளாகக் கொள்ளை யடித்தனர். அலெக்ஸாண்டர் முதல் மொகலாயர் வரை அம் மக்களால் துன்பப் பட்டிருக்கின்றனர். அவர்களை அடக்கவோ, ஆட்கொள்ளவோ எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளித்ததில்லை. ஆங்கிலேயரின் போர்த் திறனும் அங்குப் பலிக்க வில்லை. சிப்பாய்களின் கிளர்ச்சி அவர்களின் நெஞ் சங்களில் கிளுகிளுப்பை ஏற்படுத்தும். இதைப் போன்ற தருணங்கள்தான் கொள்ளையருக்கு ஏற்றவை. இத்தகைய முரட்டு இனங்கள் தோஸ்து முகமதுவுடன் சேர்வதைத் தவிர்ப்பதோடு, முடிந்தால் அவர்களின் போர்த் திறமையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே, எட்வர்ட்ஸ்ஸின் திட்டம்.

கர்னல் எட்வர்ட்ஸ்ஸிடம் 3,000 ஆங்கில வீரர்களும், 10,000 பூர்பியா வீரர்களும் இருந்தனர். அத்துடன் சீக்கிய வீரர்கள் பலர் அங்கிருந்தனர். எல்லைப்புற தளமாதலால் பெஷாவர் படைகள் வேறு முறைகளில் வைக்கப் பட்டிருந்தன. அப் பகுதிகளில், அமைதியை நிலைநாட்ட எட்வர்ட்ஸ் பல நடவடிக் கைகள் எடுத்தார். முதலில், அதிகாரிகள் பலரைக் கொண்ட ஒரு குழு அமைத்தார். பெஷாவரின் உதவி ஆணையர் கர்னல் நிக்கல்சன், இராணுவ அதிகாரி பிரிகேடியார் சிட்னி காப்டன், ஜெனரல் ரீட் (Reed) கர்னல் நெவில் சேம்பர் லெய்ன் போன்ற வர்கள் அதில் இருந்தனர். இயங்கு படை ஒன்று உடனடியாக அமைக்கப் பட்டது. நம்பிக்கை யற்ற அணிகளின் ஆயுதங் களைப் பறி முதல் செய்ய முடிவெடுக்கப் பட்டது. மே 16ஆம் நாள் முதல் ஆணையர் அலுவலகம் பெயரில் ராவல் பிண்டிக் குச் சென்று விட்டு, மே 21ம் நாள் எட்வர்ட்ஸ் திரும்பி வந்தார். சுதேசித் துருப்புகளைக் கலைப்பது அவசியம் என்று நன்கு புலப்பட்டது. அணிகளின் சுதேசி அதிகாரிகள் தங்கள் வீரர் களின் நடத்தையில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். மே 22 ஆம் நாள் அணி வகுப்பிற்காக வீரர்கள் வந்தனர். தளத் தைச் சுற்றி நீட்டிய துப்பாக்கிகளுடன் துருப்புகள் நிறுத்தப் பட்டிருந்தன. அதிர்ச்சி யடைந்த 3,000 பேர்களும் தங்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தனர். அவர்களின் அதி காரிகள் இதை அவமானமாகக் கருதித் தங்கள் வாட்களை உருவித் தளத்தின் நடுவில் விட்டெறிந்தனர்! தங்களின் விசு வாசத்தில் நம்பிக்கை யில்லை என்று எண்ணவே, அவர்களின் உடல் குறுகியது. ஒரு குண்டு கூட வெடிக்காமல் இப் பணி நடந்தேறியது. ஒரு அணி மட்டும் இரவில் தப்பி ஓடியது. எட்வர்ட்ஸ் மலைவாசிகளைத் தம் பக்கம் இழுத்துக் கொண் டார். தப்பிய வீரர்களின் தலைகளுக்கு விலை வைக்கப் பட்டது. அது வறிந்த மலைவாசிகள் குதூகலத்துடன் வேட்டையாடிச் சிப்பாய்களைச் சிறை பிடித்துக் கொண்டு வந்தனர். அவர் களுக்குக் கடுந் தண்டனை விதிக்கப்பட்டது,

ஹோதி மர்தான் பகுதி, (Hoti Mardan) பெஷாவருக்கு வட மேற்கே சற்று தூரத்திலிருக்கிறது. அங்கிருந்த 55 வது சுதேசித் துருப்பு, அது வரை அமைதியாகவே யிருந்தது. பெஷாவரிலிருந்து துருப்புகள் அங்கே வருவதை அறிந்ததும் அப் படையும் பீதியுற்றது. கர்னல் நிக்கல்சன் அரசியல் அதி காரியாக அங்கு வந்தான். மே 24ம் நாள் 55 வது படையின் சுதேசி அதிகாரிகள், தங்கள் உயர் அதிகாரியைக் கண்டு நேரப் போகும் நிகழ்ச்சிக்கு விளக்கங் கேட்டனர். அவர் எது

வுஞ் சொல்ல வில்லை. அவர்கள் சென்ற பின்பு அவ்வதிகாரித் தற்கொலை செய்து கொண்டார்! அபாயம் சூழப் போகிறது என்றஞ்சிய 55வது அணி வீரர்கள் உடனே மர்தானை விட்டு ஓடினார்கள். ஆனால், கர்னல் நிக்கல்சன் வேட்டை நாயை போல் விரட்டி 100 க்கும் மேற் பட்டவர்களைக் கொன்று 100 க்கும் மேற் பட்டவர்களைச் சிறைப் பிடித்துக் கொண்டு வந்தான். அனைவரையும் தூக்கிலிட ஆணையர் ஜான் லாரன்ஸ் விரும்ப வில்லை. நம்மைக் கண்டு அஞ்சும் அளவுக்குப் பலரைத் துரத்திக் கொன்று விட்டோம். இனி, பிற கைதிகளைத் தூக்கிலிட வேண்டியதில்லை என்று அவர் கருதினார்.

இவ் விதம் 6 பூர்பியா அணிகள் கலைக்கப் பட்டன. 64வது படையிலிருந்த சில பிரிவுகள் மட்டும் கர்னல் நிக்கல்சனால் எதிர்ப்பு எதுவு மின்றிக் கலைக்கப் பட்டு விட்டன. சிதறிய இப் புரட்சி வீரர்களை நசுக்குவதற்கு ஒருபுதுப் படை உருவாக்க எட்வர்ட்ஸ் முனைந்தார். எல்லைப் புற மலைச் சாதி மக்களைத் தன்னுடன் அவர் சேர்த்தது துணிவு மிக்கச் செயலாகும். அவ் வீரர்களின் சுதந்திரமும், அட்டூழியங்களும் வெள்ளையர்களின் ஊடுருவலில் சிறிது தடை பட்டு விட்டது. எனவே, வெள்ளையர்களை அவர்கள் வெறுத்தனர். ஆனால், இந்துஸ்தானத்தின் செல்வத்தைக் கேட்டு நாக்கில் நீர் சொட்ட சொட்ட காலத்தைக் கழித்து வந்தனர். அங்கெல்லாம் பாதுகாப்புடன் செல்லலாம்; செல்வத்தைக் கவரலாம்; என்ற ஆசை அவர்களை உந்தியது. இதனால், பகைமையை மறந்து வெள்ளையர்களைப் புது எஜமானர்களாக ஏற்க அவர்கள் தயங்கவில்லை. தங்கள் மலைப் பகுதிகளில் தங்கித் தொல்லைகள் கொடுத்த அவர்களைப் படையில் சேர்த்து அவர்களின் துணிவையும், வீரத்தையும் பயன்படுத்த எட்வர்ட்ஸ் எடுத்த முயற்சிச் சிறந்ததே. அது மட்டு மன்றிப் போட்டியின் தன்மை இப்பொழுது வெள்ளையர்களால் திசை திருப்பிவிடப் பட்டது. முஸ்லிம், முஸ்லிம்மல்லாத இந்துஸ்தான் புரட்சி வீரர்களுக் கெதிராகப் பஞ்சாபி முஸ்லிம்களும், சீக்கியர்களும் கோஹத் (Kohat), யூசுஃப் சாய், (Yusufsai) மலைச் சாதி வீரர்களும் ஒன்று சேர்ந்தனர். முன்பு நடந்த வடமேற்கு எல்லை புறப் போர்களின் நினைவுகளைத் திருப்பிய பிரதி பலிப்பே இன்றைய காட்சி!


ஆங்கிலேயரை எதிர்த்துப் பஞ்சாப் சிங்கம் ரஞ்சித் சிங்கின் மகன் இப்பொழுது தாய் நாட்டில் இல்லை. சீக்கியர்களைப் புரட்சிக்கு இட்டுச் செல்ல ஒரு நல்ல தலைவனும் இல்லை.

சீக்கிய அரச குடும்பம் சிதைந்திருந்தாலும், மற்ற சர்தார் சீமான்கள் ஆங்கில ஆட்சியில் பாதுகாப்பும், செல்வமும் பெற்றிருந்ததால், அவர்கள் வெள்ளையரை எதிர்க்கத் துணியவில்லை. மேலும் வெள்ளையருக்கு உதவி புரிவது தங்களின் நலனுக்கு உகந்தது; என்று கருதிச் செயல்பட்டனர். இவ்விதம் சீக்கிய வீரர்கள் பெரும்பாலோர் பரங்கிப் படைக்குப் பெரும் உதவி புரிந்தனர். வட இந்தியா முழுவதும் இச் சீக்கியவாள்கள் ஆங்கிலேயரைப் பாதுகாத்தன. சில சீக்கிய தலைவர்களும், வீரர்களும் புரட்சிக்கு உதவினர் என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

சீக்கிய வீரர்களின் உதவியைப் பெற்ற பின்பு, ஜூன் முதல் நாள், முதல் ஆணையர் சர்ஜான் லாரன்ஸ் இந்துஸ்தான் வீரர்களுக்கு ஓர் அறிக்கை விடுத்தார், 'உங்களின் நம்பிக்கையையும், விசுவாசத்தையுங் காட்ட இதுவே நல்ல தருணம்; கிளர்ச்சிக்குத் துணிபவர்கள் தங்கள் எதிர்காலத்தை அழித்துக் கொள்பவர்களே ஆவார்கள். நன்றி யுடன் நடப்பவர்கள் வெகுமதிகள் பெறுவார்கள். பூர்பியா சிப்பாய்கள் இத் தருணத்தை நழுவ விட்டால், மீண்டும் அது கிட்டாது. அரசாங்கத்தின் வலிமைச் சாதாரணமானது அல்ல. ஒரே மாதத்தில் பஞ்சாப்பில் மட்டும் 50,000 வீரர்களைச் சேர்க்க முடியும். சிப்பாய்களுக்கு இங்கிலாந்தின் பலம் தெரியாது. ஏற்கனவே பல்வேறு இடங்களிலிருந்து இந்தியாவிற்குள் ஆங்கிலத் துருப்புகள் வந்து கொண்டிருக்கின்றன' என்பது தான் அவ்வறிக்கையின் வாசகம். இவ் வறிக்கை பயன் தர வில்லை. புரட்சிப் பாதையில் அடியெடுத்து வைத்தபின் பயணத்தைத் தொடர வேண்டியது தான். மன்னிப்புக் கிடைக்கும் என்று எதிர் பார்க்க முடியாது. துணிந்தபின்பு கிட்டுவது விடுதலையா என்பதைப் பார்த்து விடலாம்; என்று கருதி விட்டனர் போலும். ஆனால், பஞ்சாப்பில் ஊசலாடிய பலரின் மனதை இவ் வறிக்கை நிலைப் படுத்தி யிருக்கும். பூர்பியா வீரர்களை நம்பி, ஒரு மொகலாய மன்னரின் மேன்மைக்காக, மீட்சிக்காக, நாம் ஏன் போரிட வேண்டும்; என்று சீக்கியர்கள் கருதினால், அது தவறில்லை. தங்கள் குருக்கள் பட்ட கொடுமைகளை மறந்துவிட முடியுமா? இஸ்லாமியர்கள் பகதூர்ஷாவிற்காக, இந்து மராத்திய நானா சாகிப்பிற்காகச் சீக்கிய பஞ்சாபி ஏன் போரிட வேண்டும்?

பெஷாவரிலும், நௌஷேரா (Naushera) விலும் இன்னுஞ் சில பூர்பியா அணிகள் இருந்தன. அவர்கள் புரட்சி எதுவுஞ் செய்ய வில்லை. ஆனால், முன்பு 55வது அணி தப்புவதற்கு அனு

மதித்தாலும்; தப்பியவர்களை விரட்டிப் பிடிக்க உற்சாகத்துடன் முன் வராததாலும், இவ் வணிகளும் கலைக்கப்பட வேண்டும். ஜூன் 29ஆம் நாள் இரு இடங்களிலும் பறி முதல் நடந்தது. பறிக்கப் பட்டது ஆயுதங்கள் மட்டுமல்ல. அன்



சர் ஜான் லாரன்ஸ்

றிரவு அவ் வீரர்களின் குடியிருப்புகளில் உள்ள பொருட்கள் அணிகலன்கள் அனைத்தும், சிருடைகளைத் தவிர மற்றெல்லாம் பறிக்கப் பட்டன. சீக்கிய வீரர்கள், பூர்பியா வீரர்களின் சோதனையை உற்சாகத்துடன் செய்தனர். அவ் வீரர்கள் சிந்து நதியின் அக் கரைக்குக் கொண்டு செல்லப் பட்டனர். அங்கு, ஆளுக்கு 4 ரூபாய்கள் கொடுத்துத் தங்களுக்குத்

தெரிந்த வழிகளில் ஊருக்குப் போகும்படி அனுப்பப் பட்டார்கள். அது மட்டும் அல்ல, அவர்கள் எங்கு சென்றாலும் கண்காணிக்கப் படுவார்கள்; புரட்சியிலீடு பட்டால் அவர்களின் விதி முடிக்கப் படும் என்றும் எச்சரிக்கப் பட்டார்கள்.

அடுத்து ராவல்பிண்டியிலும், ஜீலத்திலும் பறிமுதல் நடக்க வேண்டும். அபாயத்தைத் தவிர்க்கப் படைகள் பிரிக்கப் பட்டன. ஜூலை 7 ஆம் நாள் ராவல் பிண்டியில், அணிவகுப்பு நடத்த ஏற்பாடாயிற்று. தளத்திற்கு ஆங்கிலத் துருப்புகள் வருவதைக் கண்டதும் சிப்பாய்கள் ஓடினார்கள். ஒரு அணி, ஆயுதங்களைக் கீழே வைத்தது. 14 வது பிரிவு வீரர்கள் நகரை நோக்கி ஓடினார்கள். குதிரை வீரர்கள் அவர்களைத் துரத்திப் பிடித்தனர். தப்பித்த வீரர்களின் தலைகளுக்கு விலை விதிக்கப் பட்டது. கிராமவாசிகள் கொய்த தலையுடன் வந்து வெகுமதிகள் பெற்றனர்.

எவ்வளவோ இரகசியமாகத் திட்டங்கள் தீட்டியும் ஜீலம் தப்பித்து விட்டது. கர்னல் எல்லிஸ் (Ellice) பறிமுதலுக்காக அங்கே வந்தார். என்ன நடக்கப் பொகிறது? என்று அவருடைய கீழதிகாரிகள் கூட அறிந்திருக்க வில்லை. வெள்ளை வீரர்களின் திடீர் வருகைகளைத் தொடர்ந்து பறிமுதல் நடப்பது வழக்கமாகி விட்டது. சிப்பாய்கள் இதைப் புரிந்து கொள்ளாமல் இல்லை. பயிற்சி தளத்தில் துருப்புகளைக் கண்டதும் சிப்பாய்கள் ஆயுதங்களை நீட்டிச் சுட ஆரம்பித்தனர். அன்று முழுவதும் சுதேசி வீரர்களுக்கும், வெள்ளைப் படைகளுக்குங் கடுமையான போர் நடந்தது. தப்பிக்கும் வழியும் இல்லை, ஜீலம் நதியிலிருந்த படகுப் பாலம் உடைந்து விட்டது. படகுகளிலேறித் தப்பித்தவர்கள் மறுகரையில் கொல்லப் பட்டனர். புரட்சி செய்த 500 வீரர்களில் 50 பேர் கூடத் தப்ப வில்லை. 150 வீரர்கள் போரில் கொல்லப் பட்டனர். 180 பேர் கைதி செய்யப் பட்டனர். 120 பேர் காஷ்மீர் எல்லைக்குள் புகுந்து சிறை பிடிக்கப் பட்டு வெள்ளையர்களின் வசம் ஒப்புவிக்கப் பட்டனர். இவ்விதம் 14 வது சுதேசி படை நாசமாயிற்று,

சியால் கொட்டிலிருந்த குதிரைப் படைக்கு, முன் கூட்டியே செய்தி பரவி விட்டது. ஜீலத்தில் நடந்த கிளர்ச்சியும், நிக்கல்சன்னின் பறி முதல் பணியும் அங்கே வரக்கூடிய அபாயத்தை அறிவித்து விட்டன. பறிமுதலுக்கு இடமளிக்காமல் வெள்ளையனை முந்திக் கொண்டு குதிரைப் படை புரட்சியிலிறங்

கியது. அன்று ஜுலை 9ஆம் நாள் அதிகாரி நான்கு மணிக்குக் குதிரை வீரர்கள் படைத்தளப் பகுதியில் காற்றுய்ச் சுற்றினர் கள். ஆங்கில ஆடையணிந்த ஒவ்வொருவருஞ் சுட்டுக் கொல் லப் பட்டனர். 46 வது அணி விசுவாசத்துடன் நடந்து கொண் டது. தங்கள் அதிகாரிகளையும் குடும்பத்தினரையும் பாது காப்பாகக் கோட்டைக்குள் கொண்டு சென்றனர். ஒரு பெண் மணி தன்னிடம் ஒரு காசு கூட கிடையாது என்று அழுவதைக் கேட்டு, வீட்டுக்கு அவளை அழைத்துச் சென்று, தன் உடமை களை எடுக்கும் வரை காத்திருந்து திரும்ப அழைத்துக் கொண்டு வந்தார்கள். இந்தியர் உடையிலிருந்த பாதிரியும், பெண்களும், குழந்தைகளும் தப்பித்தனர். குதிரை வீரர்கள் பொதுவாகப் பெண்களையும், குழந்தைகளையும் கொல்ல வில்லை; என்பது குறிப்பிடத் தக்கது. மாலை 4 மணிக்குள் புரட்சி வீரர்கள் ஹோஷியார் பூர்க்குச் (Hoshiarpur) சென்றனர்.

மறுநாள் நிக்கல்சன் அமிர்தசரஸ் துருப்புக்களின் ஆயு தங்களைப் பறிமுதல் செய்து விட்டு முன்னேறினர். சியால் கோட்டிலிருந்து தப்பி வந்த குதிரை வீரர்களை மடக்கி வட கிழக்கே குர்தாஸ் பூருக்கு (Gurdaspur) 11 ஆம் நாள் சென்றார். 10 மைல் மேற்கே ராவி நதிக்கரையில் திமர் காட்டில் (Timmer Ghat) புரட்சி வீரர்கள் இருப்பதை அறிந்து அங்கே சென்றார். நதியைக் கடக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்ட பொழுது, திடீரென நதியில் வெள்ளம் வரவே அவர்கள் ஒரு திட்டில் நிற்க வேண்டியதாயிற்று. இதனால், நிக்கல்சன் புரட்சி வீரர் களை அழிப்பது எளிதாயிற்று. விசுவாசம் என்பது ஏற்கப் படுவதில்லை. எவ்வளவு நல்ல அணி யென்றாலும் வெள்ளையர் கள் இனி நம்பத் தயாராயில்லை. இந்திய வீரர்கள் அனைவரும் சந்தேகத்திற் குரியவர்களே! ஆயினர்.

காங்ரா வீரர்கள் எவ்வித எதிர்ப்பு மின்றி, மனமுவந்து தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தனர். நுர்பூர் (Nurpur) வீரர்கள் மேலும் ஒரு படி சென்று மேஜர் வில்கி (Wilkie) யின் வீட்டிற்கே ஆயுதங்களைக் கொண்டு சென்று சமர்ப்பித் தார்கள். இவ் விதம், பஞ்சாபிலிருந்த பூர்பியா சிப்பாய்கள் அனைவரும் ஆயுதப் பறிமுதலுக்கு உள்ளானர்கள். சில அணி கள் பறிமுதலைப் பெரிது படுத்த வில்லை. சில அணிகள் அவ மானமாகக் கருதின. சில அணிகள் சூழ்ச்சி என்றும் நம்பின.

ஆயுதப் பறிமுதல், ஆபத்தைக் குறைத்ததே தவிர, தவிர்க்கவில்லை. ஆயுதமில்லாத வீரர்கள், அவமானப் பட்ட வீரர்கள், அச்சத்திற்குட்பட்ட வீரர்கள் என்ன செய்வார்கள்? அவர்களால் கூண்டுக்குள் எவ்வளவு நாள் அடைபட்டிருக்க முடியும்? ஜூலை 30 ஆம் நாள் மியான்மீர் வீரர்கள் இதற்கு முடிவெடுத்தனர், கட்டாரிகளும், கத்திகளுமே அவர்களிடம் இருந்தன. ஆனால், அவர்களின் எண்ணிக்கை அதிகம். அதனால் உந்தப்பட்டு வெளியேறினார்கள். மேஜர் ஸ்பென்சரின் இடத்திற்கு ஓடினார்கள். அவரையும் அவருடைய உதவியாளரையுங் குத்திக் கொன்றார்கள். சீக்கிய வீரர்கள் சுட ஆரம்பித்தனர். புரட்சி வீரர்கள் சிதறிப் போயினர். அந்த நேரத்தில் கடும் புழுதிப் புயல் வீசி தோற்றத்தை மறைத்தது. புரட்சி வீரர்கள் புயலில் தப்பித்து மறைந்தனர். மறுநாள் கிராமவாசிகள் அவர்களின் நடமாட்டத்தை அஜ்நாலா (Ajnala) தாசில்தாருக்கு அறிவித்தார்கள். காவல் படையினர் விரட்டிச் சென்று சிப்பாய்களை ஓட ஓடச் சுட்டனர்.

அமிர்த சரஸிலிருந்து துணை ஆணையர் ஃபிரெடெரிக் கூப்பர் (Frederic Cuper) அங்கே வருவதற்குள் 150 வீரர்கள் பிணமாகி விட்டார்கள். ராவி நதியைக் கடக்க முயன்றவர்களைக் கிராமவாசிகள் பிடித்திழுத்து வந்தார்கள், பலர் சுடப் பட்டனர். சிலர் ஆற்றில் குதித்துத் தப்பினர். பிடிபட்ட 282 வீரர்கள் அஜ்நாலாவிற்கு அனுப்பப் பட்டனர். அவர்களைத் தூக்கிலிடத் துணை ஆணையர் கூப்பரால் தேவையான கயிற்றைப் பெற முடிய வில்லை. எனவே, சுட்டுக் கொல்ல முடிவாயிற்று. 150 பேர் சுட்டுக் கொல்லப் பட்டனர். சிறையில் அடைப் பட்டிருந்த எஞ்சிய கைதிகள் கொலைக் களத்திற்கு வர மறுத்ததாகத்தெரிந்தது. சிறைக் கதவைத் திறந்ததும் தப்பிக்க முயல்வார்கள் என்றெண்ணி பலத்த காவலுடன் கதவுகள் திறக்கப் பட்டன. எதிர்ப்புக்கு இட மில்லை. கூப்பர் அதிர்ச்சி அடைந்தார். சிறைப்பட்டிருந்த கைதிகள் இட நெருக்கடியில், இருட்டில், பசியில், மூச்சுத் திணறி இறந்து கிடந்தனர். கூப்பரின் ஆற்றலை, கோரக் கொலைகளை லாரன்சும் பஞ்சாப்பின் நீதித் துறை ஆணையரான (Judicial Commissioner) ராபர்ட் மாண்ட் கோமரியும் மெச்சினர்.

இக் கொடுரத்தில் எல்லோரும் பயந்து விடவில்லை. 10வது குதிரைப் படையின் ஆயுதங்கள் பறி முதல் செய்யப் பட்டிருந்தன. அவர்களின் நடத்தையில் இது வரை எந்த சந்தேக

முங் கிடையாது முன்னேற் பாடாகத் தான் அது நடந்தது. அத்துடன், நிலைமை சரியானதும் அவர்களுக்குத் தான் ஆயுதங்கள் முதலில் திருப்பிக் கொடுக்கப்படும், என்று உறுதிமொழி கொடுக்கப் பட்டிருந்தது. அவர்களிடமிருந்த குதிரைகள் பறிக்கப் படவில்லை. ஏனெனில்? குதிரைகள் வீரர்களின் சொந்த சொத்து. ஆனால், அரசாங்கத்திற்குக் குதிரைகள் தேவைப் பட்டதால், ஆரம்பத்தில் சில குதிரைகளும் அவர்களிடமிருந்து பெறப் பட்டன. ஆகஸ்ட் மாதத்தில் பிற குதிரைகளையும் பெறும்படி ஆணை வந்தது. பிரிகேடியர் இன்ஸ் (Inus) குதிரைகளைப் பறித்தால், மேலும் அவமானத்திற்குள்ளாவார்கள் என்று, உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறினர். ஆனல், ஆகஸ்ட 18-ல் முடிவான ஆணை கிடைத்ததால், குதிரைகளை எடுத்துக் கொள்ளும் பணி தொடங்கியது. உடனே வீரர்கள் ஆயுதச் சாலையில் புகுந்து துப்பாக்கிகளைக் கவர முயற்சித்தனர். முடியாமல் போகவே, சிலரைத் தவிர எல்லா வீரர்களும் குதிரைகளுடன் தப்பித்து ஓடினர்.

ஃபெரோஸ்பூர் நிகழ்ச்சி, பெஷாவரிலும் எதிரொலித்தது. அங்கே, பறி முதலுக்குள்ளான வீரர்களின் குடியிருப்புகள் சோதனை இடப்பட்டன. ஆயுதங்கள் மறைக்கப் பட்டிருக்குமோ என்ற ஐயம் தான் இதற்குக் காரணம். ஆகஸ்ட் 28 ஆம் நாள் காலையில் சோதனைத் தொடங்கியதும் வீரர்கள் கொதித்தெழுந்தனர். 2 நாட்கள் கடுமையான போர் நடந்தது. 870 வீரர்களில் 70 பேர் தப்பித்தனர். பிறர் கொல்லப் பட்டனர். தப்பித்தவர்களில் 19 பேர்களே அருகிலிருந்த மலைகளில் மறைந்தனர்.

பஞ்சாப்பில் பூர்பியா சிப்பாய்களின் அபாயம் நீங்கி விட்டது. ஆனல், வெள்ளையருக்குத் துணை புரியும் புது வீரர்களின் நடத்தை முழு நம்பிக்கைக்குகந்தது அல்ல. பஞ்சாபி முஸ்லிம்களும், சீக்கியர்களும், முல்தானிகளும், மலைவாசிகளும் இப்பொழுது ஒன்று சேர்ந்து எதிர்த்தால், வெள்ளையரின் ஆட்சி ஆட்டம் கண்டு விடலாம். பரங்கியர்களின் ஆட்சியில் செல்வங் குவித்த வணிகர்கள், இப்பொழுது முழு மனதோடு நிதியளிக்கவில்லை, வெள்ளையரின் பிடிச் சிறிது தளர்ந்தாலும், அவர்கள் ஒன்று பட்டு எதிர்க்கலாம்.

மலைவாசிகளில் சில இனங்கள் இவ்வெதிர்ப்பைக் காட்டின. செப்டம்பர் முதல் நாள் அவர்கள் முரி (Muree) என்ற இடத்தில் வேள்ளையர்களைத் தாக்கித் தோல்வி அடைந்தனர்.

9

முல்தான் மாவட்டத்தில், அகமத்கான் என்பவரின் தலைமையில், அவ் வீர இனத்தவர்கள் வெள்ளையரை எதிர்த்தனர். மேஜர் சாம்பர்லெய்ன் முடக்கப் பட்டார்; லாகூர் இணைப்புத் துண்டிக்கப் பட்டது. செப்டம்பர் 28 ஆம் நாள் ஜான் லாரன்ஸ் ஒரு குதிரைப் படையை அனுப்பி அவரை விடுவித்தார். அகமத்கான் இறந்த பின்பு மிர் பஹவல்ஃபத் வானு (Mir Bahavualfat-Wanah) வின் தலைமையில் மீண்டும் அவர்கள் போராடினார்கள். ஆனால், வெள்ளைப் படைகள் அவர்களைச் சூழ்ந்து மலைகளுக்குத் துரத்தின.

சர் ஜான் லாலன்ஸ் பஞ்சாப்பைப் பாதுகாத்து விட்டார். இந்தியா நழுவி விடுமோ! என்று அஞ்சப்பட்ட அந் நேரத்தில் துணிகரமாக லாரன்ஸ் செயல் பட்டார். பஞ்சாப்பிலிருந்த அத்தனை ஆங்கில வீரர்களையும் டெல்லியை மீட்க அனுப்பினார். சீக்கியர்களைப் படையில் சேர்த்துக் கொண்டு அவர்களையும் இந்துஸ்தானத்திற்குள் அனுப்பினார். ஆப்கானிய எதிர்ப்புக்கஞ்சித் தான் பெஷாவர் பலமாக காவல் காக்கப் பட்டது. பெஷா வரை மீண்டும் தோஸ்து முகமதுவுக்கே கொடுத்து விட்டால், அபாயத்தைக் குறைத்து, அவருடைய உதவியையும் பெறலாம் என்று திட்ட மிட்டார். ஆனால், ஹெர்பர்ட்ஸ் இத் திட்டத்தைப் பலமாக எதிர்த்தார். லாரன்ஸ் செய்ய விருந்தத் தியாகந் தடுக்கப் பட்டது; ஆனால், லாரன்ஸ் அனுப்பிய சீக்கிய வீரர்கள், இந்துஸ்தானத்தைக் அந்நியனுக்காகக் காப்பாற்றினார்கள்.

———


# 8. இராஜபுதனம்—சர் ஜ்யார்ஜ் லாரன்ஸ் - மாளவம்

[முன் கதை, ஆணையர் சர்ஜ்யார்ஜ் லாரன்ஸ்—நாடுகளுக்கிடையே அடிக்கடிப் போர் —சிற்றரசர்களின் மோதல்—நீசா படைத்த னம்—ஆஜ்மீர் ஆணையர் டிக்சன் — நீமக்கிளர்ச்சி — சிப்பாய்கள் டெல்லிக்குச் செல்லுதல்.]

அப்போதைய இராஜபுதனத்தில் 18 நாடுகள் இருந்தன, (உதய்பூர் (மேவார்), ஜெய்ப்பூர், ஜோத்பூர் (மார்வார்), பண்டி கோட்டா, ஜலாவார், டோங்க், கரௌலி, கிஷன்கர், தோல் பூர், பரத்பூர். ஆள்வார், பிக்கானிர், ஜெய்சால்மர், சிரோஹி. டோங்கர்ப்பூர், பன்ஸ்வாரி, பிரதர்பகர்). இவற்றில் 17 நாடு கள் இராஜபுத்திரர்களாலும், டோங்க் என்ற நாடு மட்டும் ஒரு முஸ்லிமாலும் ஆளப்பட்டன. நிறுவனத்தின் அரசியல் பிரதிநிதிகள் இந்நாடுகளில் பலவற்றில் நியமிக்கப் பட்டிருந் தனர். ஆனால், இராஜபுதனம் முழுவதற்கும் தலைமை ஆளு நரின் பிரதிநிதியாக (Governer General's Agent) உயர் அதிகாரி ஒருவர் இருந்தார். அவர்தான் சர் ஜ்பார்ஜ் லாரன்ஸ் (Sir George Lawrance) அயோத்தியின் முதல் ஆணையர் சர் ஹென்றி லாரன்ஸ், பஞ்சாப் ஆணையர் சர் ஜான் லாரன்ஸ் ஆகியோரின் அண்ணன். ஒரு லட்சம் சதுர மைல் பரப்பும், ஒரு கோடி மக்கள் தொகையுங் கொண்ட இராஜ புதனம், பல அரசர்க ளால் ஆளப்பட்டாலும், அவர்களனைவரும் ஆங்கில ஆட்சியின் மேன்மையை ஏற்றுக் கொண்டவர்களே ஆவார்கள். இந் நாடுகளுக்கு மத்தியில் பழம் பெருமை மிக்க 'ஆஜ்மீர்' கிழக் கிந்திய நிறுவன அரசுக்குச் சொந்தமானப் பகுதி ஆகும்.

சூரிய, சந்திர குலங்களைச் சார்ந்தவர்கள் என்று பெருமை பெற்றிருந்த இராஜ புத்திரர்களனைவரும், அன்று ஆங்கில ஆட்சியின் நிழலில் வாழ்ந்தனர். பல நூற்றாண்டுகள் இஸ்லாமியர்

# பஞ்சாப் — இராஜபுதனம்




களுடன் போரிட்டுக் களைத்து, மராத்தியருடன் போரடித் துவண்டு, பிண்டாரிகளின் கொடுமைகளுக்கு ஆளாகிக் கடந்த நாற்பது ஆண்டுகளில் ஆங்கிலேயரின் தலையீட்டால்தான்

ஓரளவு அமைதியுடன் அவர்கள் இருந்தனர். போரிடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள்; போர் நெறியை உயிரினும் மேலாகக் கொண்டவர்கள்; புறமுதுகுக் காட்டி அறியாதவர்கள்; மானமும், வீரமுமே வாழ்க்கை நெறி என்று வகுத்தவர்கள். அந்த இராஜ புத்திரர்களின் எதிர்ப்பிலே பேரரசை அமைக்க முடியாது என்றறிந்த ஆங்கிலேயர்கள், அவர்களிடம் மட்டும் வாலாட்டுவதில்லை. கிழடானாலும் அதுச் சிங்கம் சிங்கம் தான். சீண்டினாலும் அபாயம், எனவே தான், எச்சரிக்கையுடன் தங்கள் கண் காணிப்பை அங்கே வெள்ளையர்கள் வைத்திருந்தார்கள்.

அந்நாடுகளுக்கு வேறு எதிரிகள் இல்லாததால், தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொள்ளுவது பொழுது போக்காயிற்று. அவற்றுள், சில நாடுகளைப் பற்றிச் சிறிது பார்ப்போம். தெற்கில் உதய்பூரைத் தலைநகராகக் கொண்ட மேவார் மன்னர் மகாராணா சருப்சிங் (Maharana Sarup Singh) பெரும் இராஜ புத்திர குலங்களில் ஒன்றான, சிசோதியா (Sisodia) குலத்தவர்கள்: ஒரு காலத்தில் பெருமையும், வலிமையும் மிகுந்திருந்த குலம் அது. கிழக்கே யிருந்த ஜெய்ப்பூரின் மன்னன் ராம் சிங், கச்வா (Kachhwa) குலத்தவர். இக் குலத்தின் ஒரு கிளை அதற்குங் கிழக்கே ஆள்வாரில் ஆட்சிச் செய்தது. ஜெய்ப்பூர் மன்னர் ராம்சிங் ஆங்கிலேயரின் கண்காணிப்பில் வளர்ந்து, கற்று மன்னனானார். எனவே, வெள்ளையரின் பாது காப்புத் தனக்கும், தன் நாட்டிற்கும் இன்றியமையாதது என்பதை உணர்ந்திருந்தார். ஜோத்பூரைத் தலைநகராகக் கொண்ட மார்வார் நாட்டு மன்னர், தாக்த்சிங் ரதோர் (Rathor) குலத் தலைவர். 1843 வரை தன் நாட்டுச் சீமான்களின் நட்பையோ, மதிப்பையோ அவர்ச் சிறிதும் பெற்றிருக்க வில்லை. ரதோர் குலத்தின் பிரிதொரு கிளை 'பிகானீரை' ஆண்டது. 'டோங்க்' என்ற சிற்றரசு, முஸ்லிம் ஒருவரால் ஆளப்பட்டது. கடந்த தலை முறையில் இராஜ புதனத்திலும், மாளவத்திலும் இந்தூரின் மராத்தி மன்னர் ஹோல்காருடன் சேர்ந்து கொண்டு, கொடூரங்கள் புரிந்து வந்த பிண்டாரிக் கொள்ளையர் தலைவன்; அமீர்கானின் (Amirkhan) வழி வந்தவன்; இந்த டோங்க் சிற்றரசன். பொதுவாக 'இராஜ புதனம்' தொன்றுதொட்டு இந்து மதத்தின் உயிர் நாடியாகவும், வீரத்தின் விளை நிலமாகவும் இருந்து வந்திருக்கின்றது. இராணா, சங்கா போன்ற இராஜ புத்திரர்கள் இல்லாததால் இந்து மதத்தின் வேதனைக் குரலைக் கேட்க அங்கு எவரும் இல்லை. மதத்தைக் காக்க அவர்கள் மட்டும் புறப்பட்டிருந்தால், இராஜ புதனத்தில் பரங்கியர்களின் சுவடு இல்லாமல்

போயிருக்கும். இராஜ புத்திர பாமர மக்கள் கூட தங்கள் மன்னர்களைத் தெய்வமாகவும், மதத்தை உயிர் மூச்சாகவும் கருதினார்கள். அத்தகையவர்களும் இப்பொழுது ஒதுங்கி நின்றது வெள்ளையருக்கு மிகவும் அனுகூல மாயிற்று.

இராஜபுதனத்தில் அரசுப் பிரதிநிதியாக இருந்த கர்னல் ஜியார்ஜ் லாரன்ஸ் தம்முடன் பிறந்த மற்ற இரு லாரன்ஸ்களைப் போலத் திறமையும், ஆற்றலும் மிக்கவர். ஆப்கானிஸ்தான், பஞ்சாப் போன்ற இடங்களில் மெச்சத் தகுந்த சேவை புரிந்தவர். இதற்கு முன்பு மேவாரில் பிரதிநிதியாகப் பணிபுரிந்திருந்தார். 1857 மார்ச் மாதத்தில் இராஜபுதனத்தில் பிரதிநிதியாக இருந்த சர் ஹென்றி லாரன்ஸ் பதவி உயர்வு பெற்று அயோத்தியின் ஆணையராக நியமிக்கப் பட்டதும், அப்பொழுது தம்பியின் பதவியில் ஜியார்ஜ் லாரன்ஸ் அமர்த்தப் பட்டார். அவர் பதவி யேற்ற போது, எவ்வித குழப்பமோ, அபாயமோ, இராஜபுதனத்தில் இல்லை. கோடையின் வெம்மையைக் கழிக்க ஏப்ரல் மாதம் அபு மலைக்கு ஜியார்ஜ லாரன்ஸ் சென்றிருந்தார். மீரத் கலவரச் செய்தி மே 19 ஆம் நாள் அவருக்குக் கிடைத்தது. பர்ஹாம்பூர், பரக்பூர் நிகழ்ச்சிகளின் கோர்வையே மீரத் என்பதையும், சிப்பாய்கள் மனம் நொந்து கிடக்கின்றார்கள் என்பதையும் ஓரளவு அவர் புரிந்திருந்தார். மீரத்தைத் தொடர்ந்து விபரீதம் எங்கு, எப்படித் தொடரும்? என்பதைக் கணிக்க முடியாது. எனவே, அவரும் உடனடியாக முன்னெச்சரிக்கையாகத் தக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

பிற இடங்களைக் காட்டிலும், இராஜ புதனத்திற்கு விரைந்து செயல்பட வேண்டிய அவசியம் அவருக்கு இருந்தது. ஏனெனில்? அப்பரந்த நாட்டில் 5,000 வீரர்களே, அதுவும் சுதேசிச் சிப்பாய்களே படையில் இருந்தனர். சுமார் 50 ஆங்கில அதிகாரிகளைத் தவிர வேறு ஆங்கில வீரர்கள் எவரும் ஆங்கில்லை. அருகிலிருந்த பம்பாய் மாநிலத்தில் தீசா (Disa) என்ற இடத்தில் தான் ஒரு ஆங்கிலப் படை நிறுத்தப் பட்டு இருந்தது. அத் தளமும் அபுவிலிருந்து 150 மைல் தொலைவிலும், ஆஜ்மீரிலிருந்து இன்னும் வெகு தொலைவிலும் இருந்தது.

ஆஜ்மீர் ஆங்கிலேயரின் ஆட்சிப் பகுதி, சுற்றிலும் இருந்த பிற இராஜபுத்திர நாடுகளைக் கடந்தால்தான், அடுத்த ஆங்கிலப் பகுதியுடன் தொடர்பு கொள்ள முடியும். ஆஜ்மீரில் இருந்த பாழடைந்தப் பழங் கோட்டையொன்றில் ஏராளமான யுத்தத் தளவாடங்கள் வைக்கப் பட்டிருந்தன. இதைக் காவல்

புரிபவர்களோ! சுதேதி வீரர்கள்; அதுவும் புரட்சி மாயத்தில் மயங்கியிருப்பவர்கள்; மீரத் செய்தி கேட்டு உள்ளங் குளிர்ந் தவர்கள்; உடலில் சூடு ஏறியவர்கள்; பாலுக்குப் பூனை காவல் காப்பது போலவே நிலைமை இருந்தது. இந்தத் தளவாடங் களைப் பாது காப்பதே தன் முதற் பணி என்று ஜியார்ஜ் லாரன்ஸ் சரியாகக் கருதினார். அபுவிலிருந்து கொண்டு, தீசா விலிருந்த ஆங்கில வீரர்களை அனுப்புமாறு அவசர, இரகசிய வேண்டுகோள் ஒன்று அனுப்பினார்.

ஜியார்ஜ் லாரன்ஸ் ஈடுபட்டிருந்த அதே பணியில் ஆஜ் மீரின் ஆணையர் லெப்டினன்ட் கர்னல் டிக்சன் (Dixon) அதே தருணத்தில் ஈடுபட்டிருந்தார். சுதேசி வீரர்கள் தளவாடங் களைக் காவல் புரிவது சரியல்ல என்பதை அவரும் எண்ணினார். ஆனால், மாற்றுவதற்குக் கைவசம் வெள்ளை வீரர்கள் இல்லை. ஒரே வழிதான் அப்போழுது அவருக்குப் புலப்பட்டது. அர சாங்கத்தின் சுதேசிப் படையில் பிராமண வீரர்களும், 'உயர்' சாதி இந்துக்களும் அதிக அளவில் இருப்பதால்தான் அதிர்ப்தி ஏற்பட்டு, ஆபத்துச் சூழ்ந்திருக்கிறது. ஆஜ்மீர் ஆணையருக்குக் கீழ் தனியாக ஒரு சிறுபடை இருந்தது. இப் படை முழுவதும் 'கீழ்'ச் சாதியைச் சார்ந்த மெயர்வாரா (Mair wara) பழங்குடிக ளால் ஆனது. இந்த மெயர்வாரா வீரனுக்குக் கொழுப்புக் குண்டுகளோ, மாட்டிறைச்சியோ எந்த வேறுபாட்டையுந் தோற்றுவிக்க வில்லை. இந்து மதத்திற்கும், இஸ்லாமிய மதத் திற்குஞ் சூழ்ந்திருக்கும் அபாயத்தைப் பற்றி அவனுக்குக் கவலை யில்லை. ஏனெனில்? இந்துஸ்தானத்தின் எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் அவன் பங்கு பெற்றவனும் அல்ல! பங்கு கேட்ப வனும் அல்ல! எனவே, வெள்ளையரின் விசுவாசத்துடன் அவன் நடந்து வந்தான். இந்த மெயர்படை உடனடியாக ஆஜ்மீருக் குக் கொண்டு வரப்பட்டுத் தளவாடங்களைக் காவல் காக்க நிறுத்தப் பட்டது.* ஏற்கனவே காவல் காத்தச் சுதேசிச் சிப் பாய்கள் ஆஜ்மீருக்கு அருகிலிருந்த நசிராபாத் (Nasirabad) என்ற அவர்களுடைய படை தளத்திற்கே திரும்ப அனுப்பப் பட்டனர்.

கர்னல் டிக்சனின் இம் முன்னெச்சரிக்கைப் பாணியை அறிந்த ஜியார்ஜ் லாரன்ஸ் மகிழ்ந்து பிற பணிகளில் கவனத் தைச் செலுத்தினார். இராஜ புத்திர மன்னர்களனைவருக்கும்

*இவர்களின் சேவையைப் பாராட்டிப் பல சலுகைகள் பிற் காலத் தில் ஆங்கிலேயர்கள் இவர்களுக்கு அளித்தார்கள்.

அறிக்கைகள் அனுப்பினர். மேன்மை மிகு பிரிட்டானிய அர சின் பாதுகாவல் அவர்களுக்கு இன்றியமையாதது என்றும், இராஜபுத்திர-ஆங்கிலக் கட்டுக் கோப்பிற்கு ஊறு விளைவிக்கும் சிப்பாய்களின் முயற்சியை முறியடிக்க உடனே தன்னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும், சுதேசி அரசர்கள் உடனே தங்கள் படைகளைக் கொடுத்து உதவ வேண்டும் என்றும் லாரன்ஸ் மன்னர்களைக் கேட்டுக் கொண்டார். அத்துடன் பாரசிகத்திலிருந்து பம்பாய் திரும்பும் ஆங்கில வீரர்களை உட னடியாக இராஜ புதனத்திற்கு அனுப்பும்படியும் பம்பாய் அர சுக்குச் செய்தி அனுப்பினர்.

இராஜ புதனத்தில் நசிராபாத், நீமக் என்ற இடங்களில் சுதேசிப் படைகள் நிறுத்தப்பட்டிருந்தன. கொழுப்புக் குண்டு களும், எலும்புத் தூள் மாவும் என்ற செய்தி இங்கும் சிப்பாய் களிடையே விஷ வேர்களை ஊன்றி இருந்தன. மீரத் கலவரம் நசிராபாத் சிப்பாய்களை உணர்ச்சிக் குள்ளாகியது. வாளை உருவத் துடித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஆஜ்மீர் காவலிலிருந்து எடுக்கப்பட்டுப் படைத் தளத்திற்கே அனுப் பப்பட்டது. அவமானத்துடன், அச்சத்தையும், அவநம்பிக் கையையும் விளைவித்தது. தீசாவிலிருந்து வெள்ளை வீரர்கள் வருமுன்னரே, உதவி கோரி ஆணையர் இரகசியச் செய்தி அனுப்பியது சிப்பாய்களுக்குத் தெரிந்து விட்டது. விளக்கம் இன்னும் தேவை யில்லை. வெள்ளைப் படை வருவதற்கு முன்பே புரட்சி வெடிக்க வேண்டியதே!

மே 28 ஆம் நாள் பிற்பகல் 3 மணிக்குப் படை தளத்தில் குண்டுகள் நிரப்பப் பட்டத் துப்பாக்கிகளைச் சிப்பாய்கள் திடீ ரெனப் பாய்ந்து எடுத்துச் சுட்டனர். வெடியோசை கேட்டு ஓடிவந்த வெள்ளை யதிகாரிகள் பலர் இச் சூட்டுக்கு இரை யானர்கள். அக் கணமே முன்னேற்பாடாக வெள்ளைக் குடும் பங்கள் நசிராபாத்தை விட்டு வெளியெறி விட்டன. நம்பிக்கை மிகுந்த பம்பாய்ப் படையும் கலகத்தை அடக்கத் துணிய வில்லை. நிலைமை முற்றியதும் அதிகாரிகள் வெளியேறி தங்கள் தங்கள் மனைவி மக்களை அடையச் சென்றனர்.

நசிராபாத்திற்குத் தெற்கே 150 மைல் தொலைவில் நீமக் (Nimach) இருந்தது. இப் படை தளத்திலும் சந்தேகத்திற் கிடமளிக்கும் பல நிகழ்ச்சிகள் நடந்தன. வீடுகள் திடீரென தீப்பிடிக்கும்; அடையாளம் தெரியாத புது மனிதர்கள் அடிக் கடி ஆங்காங்கே காணப்பட்டனர். ஆங்கில அதிகாரிகளின் சங்

தேகம் வலுப்பட்டது. ஜூன் மாதம் 2 நாள் கர்னல் ஆபட், (Abbot) சிப்பாய்கள் அனைவரையும் விசுவாசப் பிரமாணம் எடுக்கச் சொன்னார். சிப்பாய்கள் திருக்குரான் மேலும், புனித கங்கை மேலும் ஆணையிட்டு உறுதி மொழி எடுத்தனர். அத்துடன், அதிகாரிகளும் தங்களின்மேல் உள்ள நம்பிக்கையை வலுப்படுத்தி உறுதிமொழி எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். கர்னல் ஆபட்டும் அதுபோலவே பைபிளின் மேல் ஆணையிட்டார். மறுநாள் நசிராபாத் செய்தி வந்தது. தீசாவிலிருந்து வெள்ளை வீரர்கள் வருஞ் செய்தியுங் கிடைத்தது! அன்றிரவே துப்பாக்கிகள் வெடித்தன. கொள்ளையும், கொலையுந் தொடங்கியது. தயங்கிய வீரர்களும் கொள்ளையடிக்கும் ஆசையில் கலந்தனர். ஒரு சார்ஜென்டின் மனைவியும், மூன்று குழந்தைகளும் கொல்லப் பட்டனர். அவர்களால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த கோட்டைக்குள் விரைந்து வர முடியவில்லை. மற்ற அதிகாரிகளும், குடும்பங்களும் உதய்பூருக்குத் தப்பியோடினர் நீமச் சிப்பாய்கள் வழியெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு, ஆக்ரா வழியாக டெல்லியை நோக்கிச் சென்றனர்!

அபு மலையிலிருக்கும் ஜியார்ஜ் லாரன்ஸிற்கு நசிராபாத் கிளர்ச்சி ஜூன் முதல் நாள் எட்டியதும், அவர் அஜ்மீருக்கு விரைந்தார். அங்கு வருமுன், தலைமையிடத்திலிருந்து அவசரச் செய்தி ஒன்று கிடைத்தது. ஜியார்ஜ் லாரன்ஸ் பிரிகேடியர் ஜெனரலாக இராஜபுதனப் படைகளுக்கு நியமனஞ் செய்யப் பட்டிருக்கிறார்; என்ற செய்தி தான் அது. சுதேசிப் படை வீரர்கள் கிளர்ச்சிச் செய்து கலைந்து விட்டார்கள். ஜூன் 12ஆம் நாள் தீசா வெள்ளை வீரர்கள் வந்து சேர்ந்தனர். உடனே ஆஜ்மீர் கோட்டையைப் பலப்படுத்தித் தளவாடங்களின் காவலை ஜியார்ஜ் அதிகப் படுத்தினார். அங்கிருந்து அடிக்கடி நகருக்குள்ளும், நசிராபாத்திற்கும், அருகிலிருந்த பியாவாருக்குஞ் சென்று வந்தார். அங்கெல்லாம் ஐயத்திற்கிடமான மனிதர்கள் உலவினார்கள்.

அடுத்து நீமச்சிற்கும் படையனுப்பிப் பாது காத்தார். பெரும் அபாயம் எதுவும் நிகழாதபடி ஜியார்ஜ் லாரன்ஸ் தடுத்து விட்டார்; என்பது உண்மை தான். ஆனால், இராஜபுத்திர மன்னர்களின் விருப்பம் போல், அவர்களின் வீரர்கட்கு விருப்பம் இல்லை. பிரிட்டானிய நிழல், மன்னர்களின் அரியணைகளைக் காக்குமே தவிர, மத மாற்றமும், சாதி விலக்கமும் பாமர மக்களுக்கல்லவா நேரிடும். எனவே, அம் மன்னர்

களின் சிப்பாய்கள் புரட்சி வீரர்களை, அடக்க முன் வர வில்லை. அத்துடன், அவர்களும் புரட்சிப் புல்லரிப்பைக் கருவூலக் கொள்ளையை அனுபவிக்கத் துடித்தனர். இராஜபுத்திர மன்னர்களும், வீரர்களும், மக்களும் ஒன்றாகக் கிளர்ந் தெழுந் திருந்தால், லாரென்ஸ்களும், காம்பெல்களும், நீல்களும், நிக்கல்சன்களும் அவ்வளவு எளிதில் வெற்றி பெற்றிருக்க முடியாது.

## (அ) ஒரு நாடோடி இளவரசன்

[இளவரசர் ஃபெரோஸ் ஷா மாண்டிசோர் மன்னனாதல்—இள வரசர்களுக்குச் சுற்று மடல் அனுப்புதல்—படை திரட்டி நீமக் கிற்கு அனுப்புதல்—சர் ஹென்றி துராண்ட்.]

கிளர்ச்சியாளர்கள் வெளியேறி யிருப்பினும், ஆங்கிலேய ரின் பாதுகாப்பு இருப்பினும் நீமக்கிற்கு அபாயம் நீங்க வில்லை. இளவரசன் ஃபிரோஸ் ஷா (Firoz Shah) மொகலாய அரச குலத்தவன். 1855-ல் டெல்லியை விட்டுச் சென்று மெக்கா போன்ற பல இடங்களுக்குப் பயணஞ் செய்தான். ஏற் கனவே, அவ் விளைஞனின் நெஞ்சத்தில் ஆங்கிலேயரின் எதிர்ப் புக் கனல் மூண்டிருந்ததால், 1857 மே திங்களில் பம்பாய் வந்தடைந்தான். எதையுஞ் சாதிக்கும் ஆற்றலும், அறிவும் அவனிடம் இருந்தன. சூழல் மட்டும் நன்றாக அமைந்தால் ஒரு நாட்டையே கைப் பற்றும் திறமும், பல்லாயிரம் மக்களைக் கவர்ந்திழுக்கும் சக்தியும் பெற்றிருந்தான்; என்பதில் ஐயம் சிறிது மில்லை. ஆனால், அன்றையச் சூழலில், அவனின் இயக்கம் விழலுக் கிறைத்த நீராயிற்று! மேற்கு ஆசியப் பயணத்தில், கிறித்துவர்கள் மேற் கொண்ட வெறுப்புக் கூடி யிருந்தது. ஜூன் மாதத்தில் மாளவத்தில் ஃபிரோஸ் ஷாவின் நடமாட்டம் தென் பட்டது. நீமக்கிற்குத் தெற்கே யிருந்த 'மாண்டிச் சோர்' இளவரசனின் முக்கியக் களமா யிற்று. அங்கே, இஸ்லாமியப் பச்சைக் கொடியை ஏற்றியதால், மாண்டிச் சோரின் ஆளுநர் இளவரசன் ஃபிரோஸ் ஷாவை, நகரை விட்டு வெளி யேற் றினான். அதன் பின்பு இளவரசன் ஒரு மசூதியில் தஞ்சம் புகுந் தான். படையை நடத்தும் ஒரு இளவரசனைக் காட்டிலும், துறவிக் கோலத்தில் அவன் பயங்கர மானவன். வெகு விரை வில் ஃபிரோஸ் ஷாவின் குரலுக்குப் பலர் விழித் தெழுந்தனர். ஆப்கான், மெக்ரானி இஸ்லாமியர்கள் ஆயிரக் கணக்கில் அங்கே வந்து சேர்ந்தனர். அடுத்து, அப் புரட்சிப் படை மாண்டிச் சோரைக்கைப் பற்றி, ஆளுநரைக் கைது செய்து,

ஃபிரோஸ் ஷாவை அதற்கு மன்னராக்கியது. அடுத்துப் பிரதாப்கர், ஜாவ்ரா, சிதாமு, ரத்லம், சலும்பார் ஆகிய இளவரசர்களுக்குத் தம்மை மன்னராக ஏற்கும்படி அவர் ஒரு சுற்று மடல் அனுப்பினர். ஜாவ்ராவின் அப்துல் சாத்தார் கானைத் தவிர, மற்றவர்கள் மறுத்தனர். செப்டம்பர் திங்களுக்குள் 18,000 வீரர்கள் சேர்ந்த ஃபிரோஸ் ஷா தம்பரில் வடக்கே நீமக்கிற்குப் படைகளை அனுப்பினன். கிளர்ச்சிச் செய்து டெல்லிக்கு நீமக் வீரர்கள் சென்றதும், அப் படைத் தளம் ஆங்கிலேயரால் பாதுகாக்கப் பட்டு வந்தது ஃபிரோஷ் ஷாவின் வீரர்கள் நீமக் கோட்டையை முற்றுகையிட்டனர். சர் ஹென்றி துராண்ட் அங்கேச் சரியான தருணத்தில் வராமல் இருந்திருந்தால் ஃபிரோஸ்ஷா வெற்றியடைந்திருப்பான்.

## (ஆ) இந்தூர் ஹோல்கார் துக்கோஜி

[இந்தூர் மன்னன் இரண்டாம் துக்கோஜி—நிறுவனப் பிரதிநிதி ஹென்றி துராண்ட்—மோ படைத் தளம்—இந்தூரில் கிளர்ச்சி—சிப்பாய்கள் ஆக்ராவிற்குச் செல்லல்—கேப்டன் ஹங்கர் ஃபோர்டு].

ஹென்றி மேரியன் துராண்ட் (Henry Marion Durand) வங்காளப் பொதுப் பணித் துறையில் பணி யாற்றியவர். முதல் ஆப்கானியப் போரில் பங்கு பெற்றவர். 1842-ல் எல்லன்பரோ பிரபுவின் அந்தரங்கச் செயலாளராகப் பதவி யேற்றவர். அவர், இரண்டாஞ் சீக்கியப் போரில் ஆற்றிய சிறந்த பணியைக் கருதி குவாலியரிலும், பின்பு போபாலிலும் அரசியல் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டார். இந்தூரில் அரசியல் பிரதி நிதியாக இருந்த சர் ராபர்ட் ஹேமில்டன் விடுமுறையில் சென்றிருந்ததால், அவருடையப் பதவியில் துராண்ட் அமர்த்தப் பட்டார்.

மத்திய இந்திய ஏஜென்ஸி என்றழைக்கும் பகுதியில் 6சுதேசி அரசுகள் அடங்கி யிருந்தன. குவாலியர், இந்தூர், தார், திவாஸ் ஆகிய நான்கும் ஒரு காலத்தில் பேஷ் வாக்களின் மராத்தியப் பேரரசில் அடங்கி யிருந்தன. தற்பொழுது அவை மராத்திய சிற்றரசர்களால் சுதந்திரமாக ஆளப் பட்டு வந்தன. இந் நான்கில் தாரும், திவாஸும் மிகச் சிறந்த நாடுகள். மீதி இரண்டு நாடுகளான போபாலும், ஜாவ்ராவும் இஸ்லாமிய அரசுகள் ஆகும். முன்பு மராத்தியத் தலைமையை ஏற்றவை; அதில்ஜாவ்ரா ஒரு முஸ்லிம் வீரனுக்கு மராத்தியர்களால் அளிக்கப்பட்ட பகுதியே அது. குவாலியரைப் பற்றி

நாம் ஏற்கனவே அறிந்தோம். இனி, இந்தூரைப் பார்ப்போம். மத்திய இந்திய ஏஜென்ஸியில் அடங்கி யிருந்த சிற்றரசுகளைக் கண் காணிக்க இந்தூர் தான் தலைமை யகமாகச் செயல் பட்டது.

இந்தூர் மன்னன் இரண்டாம் துக்கோஜ் ராவிற்கு 21 வயது. நிறுவனப் பிரதி நிதி சர் ராபர்ட் ஹாமில்டனின் கண் காணிப்பில் வளர்ந்து, அவன் தயவில் அரசனாகி, அவன் அறிவுரையின்படி ஆட்சி செய்து வந்தான் துக்கோஜி. துக்கோஜியும், ஹாமில்டனும் கருத்து வேறுபாடுகளுக்கு இடம் வைத்துக் கொள்ள வில்லை. ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொண்டவர்கள். ஹாமில்டன் வெறுப்பதைத் துக்கோஜி விரும்ப வில்லை. ஆனால், தற்போது பிரதி நிதியாக இருந்த துராண்ட் இவ் விணக்க நிலையைப் புரியாததுடன், துக்கோஜியின் நடத்தையின் கண் குற்றங் காண்பதில் விழிப்பும், மகிழ்ச்சியும் கொண்டார். இந்தூர் அரசவை அளிக்கும் மரியாதைகள் கூட, ஆங்கில அரசின் பெருமையை உகந்த முறையில் வெளிக் காட்டுவதாக இல்லை யென்றே கருதினார். குவாலியர், சிந்தியாவுடன் மெக்பெர்சன் கொண்டிருந்த இணக்கத்திற்கு நேர் மாறாக இந்தூர் ஹோல்காருடன் துராண்ட் இணக்கங் கொண்டிருந்தார்.

இந்தூரிலிருந்து 13 மைல்களுக்கப்பால் உள்ள மோவில் (Mhow) ஆங்கிலத் துருப்புகள் நிறுத்தப்பட்டிருந்தன. (இந்த மோவிலிருந்துதான், சர் ஹ்யூக்ரோஸ் ஜான்ஸியை அடக்கப் புறப்பட்டார்) இப் படை தளத்தில் சுதேசி சிப்பாய்கள் பெருமளவில் இருந்தனர். ஆனால், பீரங்கிப் படை, ஆங்கிலத் துருப்புகளால் ஆனதால், சுதேசி சிப்பாய்களின் எண்ணிக்கையைக் கண்டு பயப்படத் தேவையில்லை. 7500 வீரர்களைக் கொண்ட ஹோல்காரின் தனிப் படையைத் தலைநகரில் ஒருமித்து வைக்கப்பட்ட வில்லை. அதன் ஆற்றலிலும், நாணயத்திலும் அரசருக்கே நம்பிக்கை யில்லை. மோவிலிருக்கும் சுதேசி வீரர்களின் விசுவாசத்தில் துராண்ட்டுக்கும் நம்பிக்கை யில்லை. ('57) ஏப்ரலிலேயே ஒரு சிப்பாயின் நடத்தையில் சந்தேகந் தோன்றி யிருந்தது. *அத்துடன் குவாலியரிலும் ஜுன் இரண்டாவது

*ரேவா தர்பாருக்குச் சதிச் செய்தி கொண்டு போனதாக ஒரு சிப்பாய் ஏப்ரல் 15-ஆம் நாளில் பிடிக்கப் பட்டான். துராண்ட் விழித்துக் கொண்டார். மீரத் செய்தி அதை உறுதியாக்கியது. T. Rice Holmes Page 475.

வாரத்தில் புரட்சித் தொடங்கி விட்டது சுதேசி மன்னர்களின் வீரர்களும் புரட்சியில் நாட்டங் கொண்டவர்கள் தான், என்பதை அது வெளிப்படுத்தி விட்டது. எனவே, இந்தூரில் மட்டும் அமைதியை எதிர்பார்க்க முடியாது. இங்கும், வெள்ளையர்களின் மேல் ஐயமும், அச்சமும் வீரர்களின் மத்தியில் தோன்றி விட்டன. சுதேசி குதிரைப் படை, காலாட் படையைத் தூண்டியதாகத் தெரிந்தது. இரு படைகளுமே, ஆங்கிலப் பீரங்கிப் படையானது தங்கள் மத்தியில் இருப்பதைக் கண்டு தயங்கின. பம்பாயிலிருந்து, மத்திய இந்தியாவிற்குக் கர்னல் உட்பர்ன் (Woodburn) தலைமையில் வரும் படையைத் துராண்ட் ஆவலோடும், வீரர்கள் அச்சத்துடனும் எதிர்பார்த்தனர். தங்களைத் தண்டிக்கத் தான் அப்படை வருகிறது, என்று வீரர்கள் நினைத்தார்கள். ஆனல், உட்பர்ன் வரவில்லை. ஹைதராபாத்தின் ஆணையர், நிஜாமின் பகுதியில் வேண்டிய பாது காப்பு ஏற்படுத்த உட்பர்னின் தம் படையை நிறுத்திக் கொண்டார்.

மோவிலிருக்குஞ் சுதேசி சிப்பாய்கள் கிளர்ச்சியில் ஈடுபட இன்றோ, நாளையோ என்றிருந்தார்கள். எதிர்பார்த்தத் தருணம் வந்து விட்டது. ஜுலை முதல் நாள் இந்தூர் நிலையகந் தாக்கப்பட்டது. தாக்கியவர்கள் ஆங்கிலப் படையைச் சேர்ந்த மோ...தளச் சிப்பாய்களல்ல; ஹோல்காரின் தனிப் படை வீரர்கள்தான்; ஹோல்காரின் குதிரைப் படைத் தலைவன் சாதத்கான், நிலையர் மாளிகையைக் காவல் காத்த வீரர்களிடம் மன்னனே அம் மாளிகையைத் தாக்கி, வெள்ளையர்களைக் கொல்லும்படி ஆணை யிட்டிருப்பதாகக் கூறினர். துராண்ட் தம் கைவசமிருந்த மாளவத்தின் பில் (Bhil) படையையும், போபால் அணியையும் ஏவினர். ஆனல், எதிர்பார்த்தப்படி ஒன்றும் நிகழவில்லை; போபால் வீரர்கள் தங்கள் அதிகாரிகளை நோக்கியே துப்பாக்கிகளைத் திருப்பினர்கள்! காட்டுவாசிகளான பில் சிப்பாய்களுக்கு இனப் பற்றோ, நாட்டுப் பற்றோ, மதப் பற்றோ, இருக்க நியாய மில்லை. ஆனல், அவர்களும் வெள்ளையர்களின் ஆணையை அன்று மதிக்கவில்லை. அம் மாளிகையிலிருந்த 39 கிறித்துவர்கள் கொல்லப் பட்டனர். துராண்டிற்கு என்ன செய்வதென்றே! விளங்க வில்லை. ஹோல்காரின் தூண்டுதலில் கிளர்ச்சி நடக்கிறதோ என்ற ஐயம் அவருக்குத் தோன்றியது. மோவிலிருந்து ஒரு அவசர உதவிப் படை விரைந்து வந்தது. அவர்கள் வரும் வரை நிலையரங்கத்தில் தங்கி யிருக்க முடியாது. சில மணி நேரங்கள் தாமதித்தாலும் ஆங்கிலக் குடும்பங்கள் சாக வேண்டியதுதான். சீக்கிய வீரர்களும், சில

போபால் வீரர்களும் கூறியபடி, இந்தூருக் கப்பால் உள்ள சிஹோருக்குத் துராண்ட் தப்பிச் சென்றார். அது ஹோல் காரின் எல்லைக் கப்பால் இருந்தது.

S. N. சென்னின் கூற்றுப்படி 'ஹோல்கார் கிளர்ச்சியைத் தூண்டியிருக்க முடியாது. தன்னுடைய தனிப் படையே நம் பிக்கைக்கு உரியதன்று என்று துராண்ட்டிடம் ஏற்கனவே மன்னன் கூறியிருந்தான். ஹோல்காரைப் போன்ற மராத்திய அன்னிய மன்னர்கள், மாளவ மக்களின் ஆதரவை முழுவதும் பெறமுடியாது.' சாதத்கான் நிலைய ரங்கத்தைத் தாக்கி விட்டு இரத்தக் கறைகளுடன் நேரே ஹோல்காரின் தர்பாருக்குச் சென்று, முடித்த பணிக்குப் பங்கு கேட்டான். இதனால்தான், ஹோல்கார், கிளர்ச்சியில் இணைந்துள்ளார் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அவரால் ஒன்றுஞ் செய்ய இயல வில்லை. சாதத்கானைக் கைது செய்தால், தம் அரண்மனைப் பெண்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று மன்னன் உணர்ந்திருந்தான். குவாலியர், சிந்தியா, கிளர்ச்சிச் செய்த வீரர்களுக்கு ஊதியமளித்து இழுத்துப் பிடித்திருந்ததைப் போல, இந்தூர் ஹோல்காரும் செய்திருக்கலாம். ஆனால், சிந் தியாவும், மெக்பர்சனும் இணைந்த கருத்தைக் கொண்டிருந்த தைப் போல, ஹோல்காரும், துராண்டும் கொண்டிருக்க வில்லை.'

இந்தூரில் புரட்சித் தோன்றிய சில மணி நேரத்தில் மோவி லும் புரட்சித் தோன்றியது. மூன்று வெள்ளை யதிகாரிகள் சுட்டுக் கொல்லப் பட்டனர். 'கேப்டன் ஹங்கர் ஃபோர்டு' பீரங் கிகளின் உதவியால் கோட்டையைக் காத்தார். மறு நாள் மோ புரட்சி வீரர்கள் இந்தூருக்குச் சென்று அங்கிருந்து குவாலியருக்கு விரைந்து சென்றனர். நீமக்கை முற்றுகை யிட்டுத் தோற்ற இளவரசர் ஃபிரோஸ் ஷா, குவாலியரில் சாதத்கானிட மிருந்து தலைமைப் பதவியைப் பெற்றுப் புரட்சி வீரர்களை நடத்தினர்; என்று தெரிகிறது. குவாலியர் வீரர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ள இந்தூர் வீரர் கள் முயன்றனர். பலனளிக்காததால், அவர்கள் மட்டும் வடக்கே ஆக்ராவை நோக்கிச் சென்றார்கள். வழியில் சாம்பல் நதியை, மட் பானைகளைக் கவிழ்த்துப் படகுகள் செய்து, அதிலூர்ந்து கடந்தனர். நதியைக் கடந்த பிறகு, தோல்பூரில் (Dhlpur) நீண்ட ஓய்வு பேற்றனர். புரட்சிப் படை ஆக்ராவை யடைந்த போது டெல்லி யிலிருந்து வந்த கிரேட்ஹெட்டின் (Great hed) படை அதை எதிர்க்க அங்கே காத்திருந்தது.

இந்தூரிலிருந்து பிரதிநிதி துராண்ட் வெளியேறி விட்டார். புரட்சி வீரர்கள் ஆக்ராவிற்குச் சென்று விட்டனர். ஹோல்கார்தான் கிளர்ச்சிக்குக் காரணமா யிருந்தார்; என்ற வதந்திப் பரவியது. இந்தூருக்கு அருகி லிருந்த பகுதிகள், அமைதியையுங் கட்டுப் பாட்டையும் இழந்தன. சில ஆங்கிலேயர்கள் புகலிடந் தேடி அங்கு மிங்குமாக ஓடினர். அவர்களுக்குச் சில சிற்றரசர்கள் அபயம் அளித்தனர். அதைச் சில அராபிய வீரர்கள் எதிர்த்தனர். இந்தூர் நகர் கலவரப் பட்டது. இந் நிலையில், மோவில் கோட்டையைக் காத்த கேப்டன் ஹங்கர் ஃபோர்டு நெருக்கடியைக் கருதி, இராணுவப் பணியுடன், அரசியல் பணியையும் மேற்கொண்டார். கல்கத்தா நடுவரசின் அனுமதி யின்றியே, பம்பாய் மாநில ஆளுநர் எல்பின்ஸ்டன் பிரபு இச் செயலுக்கு ஒப்புதல் தெரிவித்தார். துராண்ட், இராணுவ அதிகாரியின் இந்த நடத்தையைக் கண்டித்தார். ஹங்கர் ஃபோர்டு உடனடியாக ஹோல்காருடன் தொடர்பு கொண்டார், கிளர்ச்சியில் பங்கு பெற்றிருக்கின்றீர்களா? இல்லை யெனில், உங்களின் நிலை என்ன? என்பதை நேரடியாக வந்து செய்தியை விளக்கும்படிக் கேட்டார். வெள்ளை துரைக்குத் தன் மேல் ஐயந் தோன்றி விட்டது; என்றறிந்ததும், ஹோல்கார் விழுந்தடித்துக் கொண்டு தன் அமைச்சனை ஒரு பதில் கடிதத்துடன் அவரிடம் அனுப்பி வைத்தார்.

ஹோல்கார் அனுப்பிய பதிலின் சாரம் இதுதான் ;— இந்தூரில் நடந்த கிளர்ச்சியை எண்ணி இவ்வுலகத்தில் என்னைத் தவிர யாரும் அதிக அளவு வருந்த முடியாது. நிறுவன சிப்பாய்களின் தூண்டுதலில், என் வீரர்களும் கொலை பாதகங்களில் இறங்கி விட்டார்கள். நிலையரங்கத்தைத் தாக்கி, பலரைக் கொன்று, கொள்ளையடித்தும் விட்டனர். என்றால், மறைத்து வைக்கப்பட்டிருந்த சில ஆங்கிலேயர்களைத் தரும்படிப் புரட்சி வீரர்கள் கேட்டார்கள். என்னைக் கொன்றுதான் என் மாளிகையிலிருக்கும் வெள்ளையர்களை அவர்களால் தொட முடியும். இக்கதையை விரிவாக என் தூதுவர்கள் கூறுவார்கள். ஆங்கில அரசின் நட்பு, விசுவாசத்திலிருந்து கனவில் கூட நான் விலகியது கிடையாது. எப்பணியையும் என்றும் புரியக் காத்திருக்கும் நம்பிக்கைக்குரிய என்னைச் சந்தேகிக்கும் முன்பு ஆங்கில அதிகாரிகள் சற்று சிந்திக்க வேண்டும். சில அபாயங்களை மனிதன் கட்டுப் படுத்த முடியாது! இந்தூரில் நடந்ததும் அத்தகைய ஒன்றே யாகும்.'

ஹோல்காரின் பதிலில்தான் என்ன பணிவு! என்ன மரியாதை! என்ன குழைவு! 'மலை எலி' தோற்றுவித்த மராத்தியப் பேரரசு எப்படி மண்டியிட்டு விட்டது? ஹங்கர்ஃபோர்டு இப் பதிலில் திருப்தி அடைந்தார். நிலைமையை மேலிடத்திற்கு எடுத்துக் கூறி விட்டார்.

## (இ) துராண்ட் — மாண்டிசோர் — பெரோஸ் ஷா

[துராண்ட், பம்பாய்ப் படையின் உதவியால் மோவை மீட்டல்—தாரைக் கைப் பற்றல்—மாண்டிசோர் படை யெடுப்பு—ஃபெரோஸ் ஷா தோல்வி — ராபர்ட் ஹாமில்டன் மீண்டும் பிரதி நிதியாகுதல்.]

இந்தூரை விட்டு வெளியேறிய பிரதி நிதி துராண்ட் மாளவத்திற்குப் படையுடன் வரும்படித் தக்காணத்திலிருந்த உட்வர்னை மீண்டும் வற்புறுத்தினர். நர்மதை நதிக்குத் தெற்கே புரட்சிப் பரவாமலிருக்க வேண்டிய முயற்சிகள் எடுக்க ஆரம்பித்தார். ஜெனரல் உட்பர்ன் உடல் நலமின்றி பதவியி லிருந்து விலகினர். ஜுலை 12 ஆம் நாள் புறப்பட்ட பிரிகேடியர் ஸ்டூவர்ட்டின் பம்பாய் அணி 22 ஆம் நாள் புகழ் பெற்ற அசீர்கருக்கு வந்தது. துராண்ட் அங்கே அப் படையுடன் இணைந்தார். நர்மதை நதியைக் கடந்த அப் படை, இந்தூரை நோக்கிச் சென்றது. ஆகஸ்ட் 2 ஆம் நாள் மோ... மீட்கப் பட்டது. மழைக் காலந் தொடங்கி விட்டதால் துராண்ட் அங்கேயேத் தங்க வேண்டிய தாயிற்று. ஹோல்காரின் நடத்தையை ஐயமற தெளிவு பெறும் வரை அவருடன் தொடர்பு கொள்ளத் துராண்ட் விரும்ப வில்லை.

மழைக் காலம் முடிந்ததும், துராண்ட் தம் படைகளை இந்தூருக்குத் தென் மேற்கே 32 மைல்களுக் கப்பால் இருந்த 'தாரை' நோக்கிச் செலுத்தினர். இந்தத் 'தார்' ஒரு மாரத்திய சிற்றரசு. அம் மன்னனின் அராபிய, ஆப்கானிய கூலிப் படையானது இந்தூர்க் கிளர்ச்சியைத் தொடர்ந்து, வெள்ளையரை எதிர்த்தது. மாளவத்தில் பொதுவாக, அயல் நாட்டுக் கூலிப் படை வீரர்களே, புரட்சியில் முன்னின்ருர்கள். மன்னன் தக்க வயதடைய வில்லை யாதலால், அவனுடைய அன்னையும், மாமாவும் புரட்சியைத் தூண்டி யிருப்பார்கள்; என்று நினைக்கத் தோன்றுகிறது. அக்டோபர் 22 ஆம் நாள் துராண்ட்டின் அணிகள், நகருக்குள் நுழைந்தன. புரட்சி வீரர்கள் கோட்டையி லிருந்து கொண்டு எதிர்த்தனர்;

ஆனால், சரணடைய மறுத்தனர். வெள்ளையர்களின் தாக்குதல் தொடங்கும் முன்பே கோட்டையை விட்டு யார் கண்ணிலும் படாமல் வெளி யேறினர். மன்னனாக இருந்த சிறுவன் துராண்ட்டை வரவேற்க ஓடி வந்தான். கோட்டைத் தரை மட்டமாக்கப் பட்டது. நாடு புரட்சி வீரகளிடமிருந்து கைப் பற்றப் பட்டது. (பின்னர் மீண்டுந் தரப் பட்டது.)

அங்கிருந்து துராண்ட் வடக்கே மாண்டிச் சோரை நோக்கிப் புறப் பட்டார். அங்கிருந்து தான் இளவரசன் ஃபிரோஸ் ஷா நீமக்கை முற்றுகை யிட்டுக் கொண்டிருந்தான். வழியில் ஜாவ்ரா நவாப், துராண்ட்டை வரவேற்றான். மாண்டிச் சோரி யிலிருந்து வெள்ளைப் படைப் புறப் பட்டுக் கரோரியாவைத் (Garoria) தாக்கியது. எதிர் பாராத இந்த அபாயத்தைச் சமாளிக்க ஃபிரோஸ் ஷா நீமக் முற்றுகையைக் கைவிட்டு இங்கே வந்தான். வெள்ளையர்கள் கரோரியாவைக் கைப் பற்றியதால், மாண்டிச் சோரில் இருப்பது ஆபத் தென்று கருதி, குவாலியருக்கு ஃபிரோஸ் ஷா சென்றான். அங்கே, தான் இந்தூர் புரட்சி வீரர்களுக்குத் தலைமை ஏற்று, ஆக்ராவிற்குச் சென்றான். டிசம்பர் 15 ஆம் நாள் துராண்ட் இந்தூருக்குத் திரும்பினார். ஹோல்காரின் படைகளைக் கலைத்தார். மறு நாள், விடுமுறையை ரத்து செய்து திரும்பி வந்திருந்த ராபர்ட் ஹாமில்டனிடம் பதவியைக் கொடுத்து விட்டார். அதே தருணத்தில் தான் சர்ஹ்யூக் ரோஸ் மத்திய இந்திய படைகளுக்குத் தலைமை தாங்கி ஜான்சி வரை தம் கடும் பயணத்தை மேற் கொண்டார்.

## (ஈ) மீண்டும் இராஜபுதனம் — ஜோத்பூர் — ஆவா தாக்கூர் — கோட்டா

[ஜோத்பூர் மன்னருக்கும், ஆவாதாக்கூருக்கும் மோதல்—சிறுவனப் பிரதி நிதி மாங்க் மேசன்—ஆவார் தாக்கூர் சரணடைதல்—பிரதி நிதி பர்ட்டன்—சிற்றரசன் மகாராவ்—கோட்டா மீட்சி.]

மத்திய இந்தியாவில், மாளவத்தில் வெகு காலங் தங்கி விட்டோம். மீண்டும், இராஜபுதனத்திற்கே செல்லுவோம். (ஆஜ்மீரைப் பார்த்தோம். இனி, ஜோத்பூரைப் பார்ப்போம்.) அங்கே இராஜபுத்திர அரசர்கள் அனைவரும், ஆங்கிலேயரிடம் விசுவாசத்துடன் நடந்து கொண்டார்கள் என்பதைப் பார்த்தோம். ஆனால், அவர்களின் வீரர்கள் அடங்கிச் செல்ல

வில்லை. வெள்ளையருக்குச் சொந்தமான ஆஜ்மீரில் தோன்றிய ஆபத்துத் தவிர்க்கப்பட்டு விட்டது. ஆகஸ்ட் மாதத்தில் மேற்கே, ஜோத்பூர் வீரர்கள் விழித்தெழுந்தனர். அவர்களில் சிலர், சற்று தொலைவிலிருந்து அபு மலைக்கு ஒரு நாள் காலை அடர்ந்த மஞ்சு மூட்டத்தில் இரகசியமாகச் சென்றூர்கள். அங்குத் தூங்கிக் கொண்டிருந்த வெள்ளையர்களைச் சாரளங்களின் வழியாகச் சுட்டனர். ஆனால், யாரும் உயிரிழக்கவில்லை. ஜெனரல் லாரன்ஸின் மகன் மட்டுங் காயப் பட்டான். முயற்சிப் பலிக்காததால் புரட்சி வீரர்கள் அய்ரான்புராவிற்கு வந்தனர். அங்கே, சுதேசி படையின் பெரும் பகுதி யிருந்ததால் அவ் வீரர்கள் அனைவருங் கிளர்ந் தெழுந் தனர்.

லெப்டினென்ட் கோனொலி (Conolly) புரட்சி வீரர்களைச் சாந்தப் படுத்த முயன்றும், பலிக்காததால், பில் என்ற ஆதிவாசி அணியை, இந்து, இஸ்லாமிய வீரர்களின் மேல் ஏவினூர். அவர்களும் இணங்க மறுத்தனர். ரிசால்தார் அப்பாஸ் அலி இல்லை யென்றூல் கோனொலியும், பிற வெள்ளையரும் கொல்லப் பட்டிருப்பார்கள். புரட்சி செய்த தன் கூலிப் படை வீரர்களை மன்னித்து, வேலை நீக்கஞ் செய்யாமலிருந்தால், வெள்ளையருடன் சேர்ந்து கொள்வதாக அப்பாஸ் அலி கூறினூன். ஆனூல், நிறுவனத்தின் ஜோத்பூர் பிரதி நிதி மாங்க் மேசன் (Monck Mason) புரட்சிக் காரர்களிடம், எந்த ஒப்பந்தத்தையுஞ் செய்து கொள்ள அதிகாரம் பெற்றிருக்க வில்லை. எனவே, அப்பாஸ் அலியும், தன் கூலிப் படையுடன் புரட்சிக்காரர் களுடன் சேர்ந்து கொண்டான். பின் புரட்சி வீரர்கள் ஜோத்பூர் பகுதி வழியாக ஆஜ்மீர் நோக்கிச் சென்றூர்கள்.

ஜோத்பூரில் அவர்களுக்கு மற்றொரு உதவி கிடைத்தது, அம் மன்னருக்குக் கீழிருந்த குறு நிலத் தலைவன் குசால் சிங், ஏதோ காரணத்திற்காகக் கிளர்ந்தெழுந்தான். ஆவா, ஜோத்பூருக்குத் தென் கிழக்கே அரவல்லி மலைகளுக்குக் கீழ்ப் பகுதியில் இருக்கிறது. ஆவா தலைவனுக்கும், ஜோத்பூர் மன்னனுக்கும் சமரசம் செய்து வைக்கும் வேலையில் ஈடுபட்டு, நிறுவனப் பிரதி நிதி மாங்க் மேசன் தோல்வி யடைந்தார். ஜோத்பூர் மன்னனின் பிடிவாதத்தால், ஆவா தலைவன் புரட்சிக் காரர் களுடன் சேர்ந்து கொண்டான். புது உதவி பெற்ற புரட்சிப் படை, செப்டம்பர் 8 ஆம் நாள் ஜோத்பூர் மன்னனின் படையைத் தோற்கடித்தப் பிறகு, அது ஆவா கோட்டையில் வந்து தங்கியது. ஜோத்பூர் மன்னனுக்கு ஏற்பட்டத் தோல்வி, ஆங்கி

லேயரையும் பாதிக்கும். ஜோத்பூரின் நலனில் அவர்கள் மிகுந்த அக்கறைக் கொண்டிருந்ததால், ஆங்கிலப் பெருமையை இத் தோல்வி குறைத்து விடும். எனவே, ஜெனரல் ஜியார்ஜ் லாரன்ஸ் ஆவா, தாக்கூரையும், புரட்சிப் படையையும் உடனே முறியடிக்க வேண்டும் என்றார். ஆனால், அதற்கேற்ற படை அவரிடம் இல்லை. கோட்டைக்குள்ளிருந்த புரட்சிப் படையை வெளியே கொண்டு வந்தால் வெற்றி பெற வாய்ப்புண்டு; என்று கருதினர். எனவே, கோட்டையின் முன்பு தம் தாக்குதலைத் தொடங்கினர். அந்த நேரத்தில் ஜோத்பூரில் பிரதிநிதியாகப் பணி புரியும் மாங்க் மேசன் ஜோத்பூரிலிருந்து வெள்ளையர்களின் முகாமிற்கு வந்து கொண்டிருந்தார். முகாமை நெருங்கும் முன்பே சில புரட்சி வீரர்களிடம் சிக்கிக் கொல்லப் பட்டார். இது வெள்ளையருக்குப் பேரிழப் பாகும். ஆவா தாக்கூர் மறு நாள் மாங்க்மேசனின் பிணத்தைக் கண்டெடுத்துத் தகுந்த மரியாதையுடன் அடக்கஞ் செய்யப் பட்டது. அதன் பிறகு வெள்ளைப் படை பின் வாங்கியது.

புரட்சிப் படையின் நட்பு நெடுநாள் நீடிக்கவில்லை. ஆவா தாக்கூரைத் தனியாக விட்டு விட்டு, அவர்கள் டெல்லியை நோக்கிச் சென்றார்கள். டெல்லியைச் சேரு முன்பே அவர்கள் ஜெரார் டாலால் முறியடிக்கப் பட்டனர். 1858, ஜனவரியில் ஆவா தாக்கூர் தன் கோட்டையை விட்டு வெளியேறி மேவாருக்குச்சென்றான். அதன் பிறகு வெள்ளையரிடஞ் சரணடைந்தான். விசாரணைக்குப் பின்பு அவன் மன்னிக்கப் பட்டான். ஏனெனில்? அவன் எதிர்த்தது ஜோத்பூர் மன்னரைத்தான். வெள்ளையரை அல்ல!ஆதலால் என்க.

கோட்டா, (Kotah) சம்பல் உபநதியில், மாளவத்திற்கு வடக்கே இருக்கிறது. இதன் தலைவன் மஹாராவ் என்பவன். இங்கு நிறுவனத்தின் பிரதிநிதியாக மேஜர் பர்ட்டன் (Burton) இருந்தார். 1857 ஜூன் மாதத்தில் நீமக் தளத்தை விடுவிக்கக் கோட்டா அணியுடன் அங்கே பர்டன் சென்றிருந்தார். அங்கிருந்து கோட்டாவிற்கு அவர் திரும்பி வருவதை ஜியார்ஜ் லாரன்ஸ் விரும்ப வில்லை. ஏனெனில்? அப்பொழுது கோட்டாவில் புரட்சிக்கு அறிகுறிகள் தென் பட்டன. மேஜர் பர்ட்டன் அங்கு சென்றால், அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படலாம், என்று கருதப் பட்டது. எனவே, நீமக்கிலேயே தம்முடைய குடும்பத்தினருடன் தங்கினர். சில நாட்கள் ஆவாவிலிருந்து தளபதி லாரன்ஸ் பின் வாங்கியதும், கோட்டாவிற்குத் தாம் சென்று அதன் தலைவன் மஹாராவிற்கு உதவி

யாக இருக்கவேண்டு மென்று அவர் விரும்பினர் ஆனல், வெள்ளையர்களின் மேல் மிகுந்த வெறுப்பு அங்கே நிலவியதால் பர்ட்டன் வருவது உசிதமல்ல; என்று கோட்டா அரசனே சொல்லி யனுப்பி விட்டான். நிலைமை சற்று மாறியதும் பர்ட்டன் திரும்பி வருவது சாத்தியமா யிற்று. 21 வயதும், 16 வயதும் நிரம்பிய தம் இரு பிள்ளைகளுடன் பர்ட்டன் நீமக்கி லிருந்து புறப்பட்டார். சம்பல் நதியைக் கடந்ததும், மஹாராவின் பிரதி நிதி, மேலும். பயணத்தை மேற் கொள்ள வேண்டா மென்று பர்ட்டனிடங் கேட்டுக் கொண்டார். ஆனல், பர்ட்டனின் மகன் பிடிவாதமாகக் கோட்டாவிற்குச் செல்ல வேண்டு மென்றான். முடிவில் கோட்டாவை அவர்கள் அடைந்தார்கள். அங்குப் பதட்ட நிலை எதுவும் நிலவியதாகத் தெரிய வில்லை. மஹாராராவும், பார்டனும் அங்கே சந்தித்தார் கள். படையிலுள்ள விஷமிகளைத் தண்டிக்கும்படி பர்ட்டன் மஹாராவை வற்புறுத்தினர். அதன் பின்பு, கோட்டாவில் அபாய அறிகுறிகள் எதுவுந் தென்பட வில்லை. நகர மக்களும், வணிகர்களும் வழக்கம் போல இயங்கினர். அக்டோபர் 15ஆம் நாள் திடீரென்று மெஹ்ரப்கான், லாலா ஜெய்லால் ஆகிய இருவரின் தலைமையில் புரட்சி வீரர்கள் பர்ட்டனின் நிலையரங்கத்தைத் தாக்கினர்கள். மஹாராவ் அரண்மனையை விட்டு வெளியேருதபடித் தடுக்கப் பட்டான். பர்ட்டனைக் காக்கும்படி மஹாராவ் அனுப்பிய தூதுவன் கிளர்ச்சிக்காரர்களால் கொல்லப் பட்டான். வெள்ளை அதிகாரிகள் சிலரும், அங்கே கோல்லப் பட்டனர். பர்ட்டனும், அவருடைய இரண்டு பிள்ளைகளும் எந்த உதவியுமின்றி முடிந்தவரைப் போராடினர்கள். ஆனல், இறுதியில் மூவருமே கொல்லப் பட்டனர். ஜெய்லால், கோட்டாவின் ஆட்சியை ஏற்ருன், நடந்த நிகழ்சிகளுக்குப் பொருப்பேற்று மஹாராவிடங் கை யொப்பம் வாங்கப் பட்டது. ஜியார்ஜ் லாரன்ஸால் உடனடியாகக் கோட்டாவை விடுவிக்க இயலவில்லை. 1858 மார்ச் மாதத்தில் பம்பாயிலிருந்து மேஜர் ஜெனரல் H. G. ராபட்ஸின் உதவிப்படை வந்த பிறகு தான் கோட்டாவிற்குச் செல்ல முடிந்தது. இதற்கிடையில் மஹாராவின் நம்பிக்கைக்குரிய வீரர்கள் சிலர், கோட்டாவின் ஒரு பகுதியைத் திரும்பப் பெற்றனர். மார்ச் 30 ஆம் நாள் கோட்டா முழுவதையும் ஆங்கிலேயர் கைபற்றினர். மஹாராவ் ஆட்சி மீண்டும் நிலைநாட்டப் பட்ட பின்னர்தான், வெள்ளையர் படை அங்கிருந்து வெளியேறி நீமக்கிற்கு வந்தது.

## (உ) ஆக்ரா

[ஆக்ரா, அலிகார்—வடமேற்கு மாநிலங்கள்—துணை ஆளுநர் கால்வின்—குவாலியர், பரத்பூர் படையை எதிர்ப்பதால்—அலிகரில் கிளர்ச்சி—ஆக்ராவில் ஆயுதம் பறிமுதல்—இந்தூர் நீமக்கின் சிப்பாய்கள் ஆக்ராவை நெருங்குதல்—ஷாஹ்கஞ்ச் போரில் புரட்சிப் படை வெற்றி—ஆக்ரா கோட்டையில் வெள்ளையர்கள்—செப் 9 டெல்லி வீழ்ச்சி—கிரேட்ஹெட் ஆக்ரா வருதல்—ஃபெரோல்ஷாவின் புரட்சிப் படைத் தோல்வி.]

ஜூன் 3 ஆம் நாள் நீமக்கில் புரட்சி செய்து வெளியேறிய சிப்பாய்கள் டெல்லியை நோக்கிச் செல்லும் வழியில் ஆக்ராவை நெருங்கினார்கள். வடமேற்கு மாநிலங்களின் லெப்டினென்ட் கவர்னர் கால்வினின் தலைமையகம்தான் அக்ரா. கால்வின், நெருக்கடி நிலைக்கு ஏற்றவராகத் தெரியவில்லை. முஸ்லிம்களின் தூண்டுதலே ஆக்ராவில் புரட்சிக்குக் காரணமாக இருக்க முடியும் என்று நம்பப் பட்டதால் இந்து, முஸ்லிம் வேற்றுமையை ஆங்கிலேயர்கள் அந்நேரத்தில் பயன்படுத்த வேண்டிய அவசியமாயிற்று. மொகலாயரின் பரம்பரை வைரிகளான மராத்திய இந்து அரசர்களின் உதவியைப் பெற கால்வின் நினைத்தார். அதன்படி மராத்திய குவாலியர் அரசையும், 'ஜாத்' குல பரத்பூர் அரசையும் உதவிக்கழைத்தார். இரு மன்னர்களும் உதவி புரியத் தயங்க வில்லை. ஆனால், பரத்பூர் படைகள் பயிற்சிப் பெற்ற, ஒழுக்கமான படைகளல்ல. சீருடையும், ஆயுதங்களும் முறையாகப் பெற்றிராத கிராமவாசிகள் அடங்கிய பரத்பூர் படை மதுராவை விட்டு ஆக்ராவிற்குச் சென்றது. குவாலியர் படையைப் பற்றி அம் மன்னனுக்கே நம்பிக்கை யில்லை. ஆக்ராவில் ஆங்கில, இந்திய துருப்புகளின் அணி வகுப்பு ஒன்றை நடத்திக் கால்வின் இந்தியில் சொற் பொழிவு ஒன்று நிகழ்த்தினார். இந்தியர்களை நம்பக் கூடாது என்ற கருத்து அவர் பேச்சில் தொனித்தது. 'டெல்லியில் அயோக்கியர்கள் சிலர் பாதிரியின் மகளைக் கொன்று விட்டனர். இதை நீங்கள் மறந்து விட வேண்டாம்;' என்று வெள்ளை வீரர்களுக்கு அறிவுரை கூறினார். அத்துடன். இந்திய சிப்பாய்களின் மேல் மிகுந்த நம்பிக்கைத் தனக் கிருக்கிறது என்றுங் கூறினார். சில நாட்களாக எந்த விபரீதமும் அங்கே நடக்க வில்லை. ஆக்ராவில் வாழ்க்கை அமைதியாகவே சென்றது.

ஆக்ராவிற்கு ஆபத்து நேர் வடக்கே அலிகாரிலிருந்து வந்தது. மீரத் செய்தி, அலிகாரை எட்டியதும், சிப்பாய்கள் தங்கள் எண்ணத்தை வெளிக்காட்ட வில்லை. சில சிப்பாய்களை ஒரு பிராமணன் கிளர்ச்சிக்குத் தூண்டியதாகத் தெரிந்தது. அவனைக் கைது செய்த இராணுவத்தார் மரண தண்டனை விதித்தார்கள். தூக்குமரம் ஏறும் வரை சிப்பாய்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அவன் உடல் உயிரற்றுத் தொங்கியதும், சிப்பாய்களில் ஒருவன் உணர்ச்சி வயப்பட்டு உரக்கக் கூவினன் 'அதோ! மதத்திற்கு உயிர் ஈந்த ஒரு தியாகியைப் பார்!' இதைக் கேட்டு மெய்சிலிர்த்த சிப்பாய்கள் பொங்கியெழுந்தனர். அலிகாரில் ஆங்கில ஆட்சி முடிவடைந்தது. கிறித்துவர்கள் எவரும் உயிரிழக்க வில்லை. வெள்ளையர்கள் தப்பி ஓடினார்கள். அதில் திருமதி உட்ராமும் ஒருவர். அலிகார் கிளர்ச்சியைத் தொடர்ந்து மெய்ன்புரி, எட்டாவா ஆகிய இடங்களுங் கிளர்ந்தெழுந்தன. மெய்ன்புரி மன்னன் தேஜ்சிங் சோஹன் என்ற இரஜபுத்திர இனத்தலைவன். 1840 ல் அவனது நிலங்கள் வெள்ளையர்களால் பறிமுதல் செய்யப் பட்டிருந்தன. எனவே, அவனும் புரட்சியிலீடுபட்டான். அவனுடைய உறவினன் ராவ் பவானிசிங், தேஜ்சிங்கின் எதிரியாதலால், வெள்ளையருடன் சேர்ந்து கொண்டான். இப்புரட்சிச் செய்திகள் ஆக்ராவை எட்டியதும் நகரம் கொந்தளித்தது. வெள்ளைப் பிரமுகர்களுடைய நெருக்கடியான ஏற்பாடுகளைப் பற்றி கருத்து வேறுபாடுகள் தோன்றியது. கால்வினுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

பெரய்லியிலிருந்து கர்னல் ட்ரூப் (Troup) சிப்பாய்களினிடையே உள்ள மனக்கசப்பைப் போக்கும் வகையில், ஒரு அறிக்கைவிட வேண்டுமென்று கால்வினுக்கு அறிவுரை கூறினர். மே 25 ஆம் நாள் கால்வின் தன்னுடைய அறிக்கையை வெளியிட்டார். 'அண்மையில் கிளர்ச்சியில் நடுபட்ட சிப்பாய்கள், தங்கள் ஆயுதங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விலகிக் கொண்டால், தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப் படுவார்கள். இந்த அறிக்கைக்குப் பின்னும், ஆயுதம் ஏந்துஞ் சிப்பாய்கள் அரசாங்கத்தின் எதிரிகளாகக் கருதப்படுவார்கள்', என்று அவ்வறிக்கைக் கூறியது. இவ்வறிக்கைப் பலரால் குறை காணப் பட்டது. அடுத்துத் தலைமை ஆளுநர் அறிக்கை ஒன்றை வெளி யிட்டார். அதிகாரிகளைக் கொன்று புரட்சியைத் தொடங்கிய வீரர்களுக்கு நிபந்தனையின்றி மன்னிப்பளிப்பது இயலாது, என்று அவ்வறிக்கைக் கூறியது. இத்துடன் மதுராவிலும், ஹோடுல்லிலும் கிளர்ச்சி நடத்த

செய்திகள் வந்தன. உடனடியாக மே 31 ஆம் நாள் ஆக்ராவி லிருந்த இரண்டு சுதேசிப்படையின் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப் பட்டன. அவர்களில் பலர் தங்கள் தங்கள் கிராமங் களுக்குச் சென்றனர்.

ரோஹில்கண்ட், மாளவம். பண்டேல்கன்ட் ஆகிய இடங் களிலிருந்து கலவரச் செய்திகள் ஆக்ராவிற்குத் தினமும் வந் தன. லெப்டினென்ட் கால்வின் உடல் நிலை இந் நெருக்கடியைத் தாங்க முடிய வில்லை. ஜூலை மாதத்தில் அவருடைய அதி காரங்கள் ஒரு குழுவிற்கு அளிக்கப்பட்டன. அந் நேரத்தில் நீமக்கில் புரட்சிச் செய்த வீரர்கள் டெல்லி செல்லும் வழியில் ஆக்ராவை நெருங்கிக் கொண்டிருந்தனர். இவர்களுடன் கோட்டா வீரர்களுஞ் சேர்ந்து கொண்டனர். பதேபூர் சிக்ரிக் கருகில் புரட்சி வீரர்கள் குழுமி விட்டனர். ஆக்ராவைக் காப் பதே தம் பணியென்று திடமாக இருந்த பிரிகேடியர் போல் வெல் பலருடைய வற்புறுத்தலுக் கிணங்கி, ஆக்ராவை விட்டுத் தன் படையுடன் வெளி யேறினர், ஷாஹ்கஞ்ச் என்ற இடத்தில் புரட்சிப் படை, பரங்கிப் படையை நிர் மூலமாக் கியது. ஆனல், வெற்றி பெற்றவர்கள் பின் தொடர்ந்து ஆக்ராவிற்குள் நுழைய வில்லை. அது வரை பொறுத்திருந்த ஆக்ரா மக்கள் பொங்கி எழுந்தார்கள். உடனே சுமார் 6,000 தினுக்கும் அதிகமான ஆங்கில, இந்திய கிறித்துவர்கள் ஆக்ரா கோட்டைக்குள்ளே புகுந்து கொண்டனர். அங்கே வெள்ளையரில் பல தரப்பட்டவர்கள் இருந்தனர்.\ இத்தாலியப் பாதிரிமார்கள் இருந்தனர். அமெரிக்கக் கிறித்துவ மதத் தொண்டர்களும் இருந்தனர். ஃபிரெஞ்ச் கழைக் கூத்தாடி களும் இருந்தனர். பார்சி. வங்காள வணிகர்களும் இருந் தனர். ஆரம்பத்தில் இந்தியர்களை ஒதுக்கி வெள்ளையர்கள் மட்டுமே அங்குக் குழுமினர். அதன் பிறகு தங்களுக்குப் பணி யாற்றத் தேவையான சலவைத் தொழிலாளிகள், சமையல்கா ரர்கள் இன்னும்பிற தொழிலாளர்களையுங் கோட்டைக்குள் கொண்டு வந்தனர். பாதுகாப்பை நாடி வெள்ளையர்கள் கோட்டைக்குள் புகுந்து விட்டார்கள். சில நாட்கள் சென் றும் எந்த எதிரியும் முற்றுகையிட வில்லை. ஒரு வேலையுமின்றி எப்படி இருப்பது? மொகலாயரின் ஆட்சியில் அரிய செல்வங் கள் கோட்டைக்குள் பதுக்கப் பட்டிருக்கின்றன என்ற வதந்தி அவர்களிடையே உலவியது. உடனே அனைவரும் புதையல் தேடும் முயற்சியில் ஈடு பட்டனர். பாதாள அறைகள், இருண்ட அறைகள், சுரங்கப் பதைகள் எல்லாம் துருவப் பட்டன. கிடைத்தது புதையல் அல்ல! மனித எலும்புக் கூடு

கள்தான்! எதைத் தேடி வந்து அங்குப் பிணமானார்களோ? எந்தச் சூழ்ச்சிக்கு இரையானார்களோ? வெள்ளையருக்குப் புதையல் கிடைக்காவிடினும் பொழுது போயிற்று. சில நாட்களில் இராணுவத்திற்கும், பிற அதிகாரிகளுக்குங் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. செப்டம்பர் 9 ஆம் நாள் கால்வின் இறந்தார். நல்ல ஆட்சியாளராஞலும், நெருக்கடிக்கு அவர் உகந்தவரல்லர். அவர் இறந்ததைத் தொடர்ந்து, டெல்லி மீட்கப்பட்ட செய்தியுங் கிடைத்தது. டெல்லியில் துரத்தப்பட்ட புரட்சி வீரர்கள் ஆக்ராவிற்கு வடக்கே மதுராவில் குழுமினர். இந்தூர் புரட்சி வீரர்கள், ஆக்ராவிற்குத் தெற்கே தோல்பூரில் இருந்தனர்.

இரு புரட்சிக் கூட்டங்களும் ஆக்ராவை நெருக்கினால் கோட்டைத் தாக்குப் பிடிக்காது. மதுராவிலிருந்த புரட்சி வீரர்கள் ஆக்ராவிற்கு வரவில்லை. தோல்பூரிலிருந்த வீரர்கள் இன்னும் முன்னேறவில்லை என்று நம்பப் பட்டது. இத்தருணத்தில், டெல்லியிலிருந்து கர்னல் கிரேட்ஹெட் புரட்சி வீரர்களை விரட்டிக் கொண்டு வந்தார். ஆக்ராவிலிருந்து உதவிகோரி அவருக்குச் செய்தி அனுப்பப்பட்டது. அக்டோபர் 10 ஆம் நாள் யமுனையை அவர் கடந்தார். காரா நதிக்கு மறுகரையில் தான் இந்தூர் புரட்சி வீரர்கள் ஃபிரோஷ்ஷாவின் தலைமையில் இருக்கிறார்கள், என்றெண்ணி கிரேட்ஹெட்டும் கூடாரங்களை அமைத்தார். திடீரென்று குண்டுகள் வெடித்தன. புரட்சிப் படையும், வெள்ளையர் படையும் ஒருவருக்கொருவர் தங்களின் அருகாமையை அறியவில்லை. புரட்சிப்படைகள் விரட்டப் பட்டன. ஆக்ரா விடுபட்டது! கிரேட்ஹெட் கான்பூருக்குச் சென்றார்.

வட நாட்டின் சில பகுதிகளில் வழங்கும் பாடல் இது. 'அங்கே அண்ணியும், கொழுந்தனும் நெருங்கிய பாசத்துடன் பழகுவது மரபு. உன் கணவனின் வீரத்தை நான் கண்ணாரக் கண்டேன்' என்று தன் தங்கையிடம் கொழுந்தனைப் புகழ்ந்து பாடுகிறாள் அவள்.

---

*'புகழவும் ஒண்ணு பொன்னான கோட்டையை
அகழியும் தாண்டியே அழிக்கவே வந்தனர்
கொழுந்தன் எழுந்தனன் கோபக் கனல் மூள
விழுந்தன தலைகள் வெள்ளையர் தரப்பினில்!

கட்டிய கணவன் வீழ்த்தினான் ஒருவனை
கிட்டுமோ மற்றொரு வாய்ப்பும், அது போல்
பற்றியே இருவரை தம்பி-தன் கைகளில்
சுற்றியே எறிந்தனன்; சூறைக் காற்றாய்!

மெல்லவே சென்றேன் இளையோன் அருகே
சொல்லவுஞ் செய்தேன் சீற்றம் விடுக்கவே
அதோ அதோ அப்புறந் தன்னில்
அதிகாரக் குரல் ஒலிப்பது கேட்குது,

வெள்ளையர் சேனையும் வெருண்டு வருகுது,
தள்ளவும் செய்யுது, கோட்டையின் கதவினை;
அடடா! அடடா! இளையோன் இங்கே
ஆண்மைச் சிங்கமாய் அஞ்சாது நிற்கிறான்!

தலைகளைக் கொய்தல் தனக்கு உகந்த
கலையே போன்று கண்மணி நினைக்கிறான்
உரைப்பேன் அறிவுரை அவனிடம், சோதரி!
சிரித்தே ஏகினன் போர்க்களம் நோக்கி

வெடிக்குஞ் சத்தம் ஓய்ந்தது; இங்கே
துடிக்கும் கொழுநன் ஓய்ந்தா னில்லை!
சினமும் குறையாச் சிவந்த கண்ணினன்
கணவன் பெற்ற கண்மணித் தம்பி!'

*P. C. ஜோஷி—'Rebellion 1857—A Symposium' பக்கம் 274.

# 9. பிதூரில் பேஷ்வா

[இரண்டாவது பாஜிராவ்—ஒய்வுப் பணம்—நானா சாகேப் வாரிசாகத் தத்தெடுப்பு—ஆங்கில நண்பர்கள் ஓய்வுப் பணம் நிறுத்தப் படல்—அதன் விளைவுகள்—அசிமுல்லாகான் இலண்டனில் வழக்காடுதல்—பயனற்றுத் திரும்பல், வழியில் கிரிமியாப் போரைப் பார்த்தல் — 'டைம்ஸ்' பத்திரிகை நிருபனர் ரஸ்ஸல் — நானாவின் யாத்திரை.]

1817-ல் பேஷ்வா இரண்டாவது பாஜிராவ், ஆங்கிலேயரிடம் தோற்றுச் சரணடைந்தான். மராத்திய ஆட்சியின் ஈமச் சடங்குகளைக் கிறுவன அரசு மேற்கொண்டது. முடியிழந்த மன்னர்கள் பலர் காசியிலே வாழ்ந்து கொண்டிருந்தால், இந்துக்களின் அப் புனித தலத்தில், இன்னும் ஒரு பெருமை மிக்க மன்னர் வாழ்வாராளுல், நொந்த உள்ளங்கள் தம்முள் உறவாடிச் சூழ்ச்சியை உருவாக்கும் என்று வெள்ளையர்கள் கருதியதால், பேஷ்வா பாஜிராவ் கான்பூருக் கருகில் பிதூர் (Bithur) என்ற ஊரிலே வைக்கப் பட்டார். ஆண்டொன்றுக்கு 8 இலட்சம் ரூபாய் அவருக்கு உதவிப் பணம் வழங்கப் பட்டது. இதுவே மிக அதிகம் என்று சிலர் கண்டித்தனர்.

கிறுவன ஆட்சியில் எங்குஞ் செல்லுபடியாகும் ஆங்கில நீதி, பிதூரில் அமுல் படுத்தப் படவில்லை, பாராண்ட ஒருவரைத் திடீரென பாமரராக்க அரசு விரும்ப வில்லை; என்பதை இது காட்டுகிறது. பேஷ்வாவின் நண்பர்களும், ஆதரவாளர்களும், பணியாட்களும் அவருக்குரிய அரச மரியாதையைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே வந்தனர். ஆனால், கிறுவனமோ 'பண்ட பிரதான்' (Panta Pradhan) 'மகாராஜா' போன்ற பட்டங்களைத் தற்பொழுது அங்கீகரிக்க வில்லை. நாடிழந்ததைக் காட்டிலும், மனம் விரும்பும், செவி குளிரும் பெருமையைத் தரும் பட்டங்களை வெள்ளையர்கள் ஏற்க மறுக்

ரூர்களே என்று நினைக்க நினைக்கப் பேஷவாவிற்கு அவமான மாகத்தான் இருந்தது. குலத்தின் பெருமை குன்றிடினும், பெயர் இன்றும் இனித்தது! காலம் இந்த ஏக்கத்தையும் போக்கி விட்டது.

நேப்பாளம், பர்மா, திபேத் ஆகிய நாடுகளுடன், வெள்ளை யரை வெளியேற்ற, இரகசியச் சதித் திட்டத்தில், பேஷ்வா ஈடுபட்டதாக வதந்தி உலவியது. தான் அத்தகையவர் அல்லர்; என்பதைப் பல தருணங்களில் அவர் நிரூபித்திருந் தார். உதவிப் பணத்தில் பெரும் பகுதியைச் சேமித்து வைத்தி ருந்ததால், சில தடவைகளில் நிறுவனத்திற்குப் போர் நெருக் கடி தோன்றிய போதெல்லாம், கடன் கொடுத்தும் உதவினர்.

பாஜி ராவுக்குக் குழந்தை இல்லாததால், தன் குடும்பத் திலேயே நெருங்கிய உறவினர்கள் மூன்று பேரைத் தத்து எடுத்துக் கொண்டார். மூத்தவர் தூந்து பாந்த் நானா சாஹேப்; அடுத்தவர் சதாசிவ பாந்த் தாதா சாஹேப்; இளைய வர் கங்காதர் ராவ் பாலா சாஹேப். இவர்களில் இரண்டா மவர் பேஷ்வாவிற்கு முன்னரே இறந்து விட்டார். அவரு டைய மகன் பாண்டுரங்க ராவ் சாஹேப்பும் தத்தெடுக்கப் பட்டிருந்தார். 1839-ல் பாஜி ராவ் பேஷ்வா ஓர் உயில் எழுதி, மூத்தவர் நானா சாஹேப்பைத் தம் வாரிசாக நியமித்தார். இந் நியமனத்தை அங்கீகரிக்கும்படி நிறுவன அரசுக்கும் விண்ணப் பித்தார். பாஜி ராவின் சொத்துக்களுக்கு நானா சாஹேப் வாரிசாவதை நிறுவன அரசு எதிர்க்காது; என்று லும், பேஷ்வாப் பட்டத்திற்கும், உதவிப் பணத்திற்கும் எந்த வாரிசையும் அது ஏற்காது. பாஜிராவிற்குத் தான் உதவிப் பணமே யொழிய அவருடைய பரம்பரைக் கல்ல! அரசு இப் படிக் கூறினலும், பேஷ்வாவின் பெரிய குடும்பத்தைக் கருதி, இவ் வேண்டுகோளைப் பிற்காலத்தில் கவனிக்க முடிவு செய் தது. எனவே, நானா சாஹேப்பிற்கு உதவிப் பணம் நீடிக்கும் என்று உத்திரவாதம் இல்லை. நிறுவனத்தின் கருணை யுள்ளத் தையும், அவ் வுள்ளக் காலச் சூழ்நிலையையும் பொருத்திருந் தது அது!

பேஷ்வா, நிறுவனத்தின் இம் முடிவை, எதிர்த்து எதுவுஞ் செய்ய வில்லை; செய்யவும் இயல வில்லை! நாளடைவில் இவ் வேக்கமும் அடங்கி விட்டது. 1851-ல் தம் 77வது வயதில் இரண்டாவது பஜீராவ் இறந்தார். சுமார் 30 வயதான நானா சாஹேப் பேஷ்வாவின் சொத்துகளுக்கு வாரிசானர்.

16 இலட்சம் ரூபாய்களுக்கு அரசின் கடன் பத்திரங்களும். 10 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு நகைகளும், 3 இலட்சம் ரூபாய்க் குத் தங்க நாணயங்களும், 1 இலட்சம் ரூபாய்க்குத் தங்க, வெள்ளிப் பாத்திரங்களும் ஆக மொத்தம் 30 இலட்சம் ரூபாய்ச் சொத்துகள் அவருக்கிருந்தன.

நானாவின் இளமைக் காலத்தைப் பற்றிச் சரியாக ஒன்றுந் தெரிய வில்லை. பிதூர் மாளிகையில் நானாவும், தாத்யா தோப் பும், (ஜான்சியின் வருங்கால அரசி) இலட்சுமி பாயும் ஒன்றாய் வளர்ந்தனர்; விளையாடினர்; என்று சாவர்கர் கூறி யுள்ளார். ஆனால், இலட்சுமி, நானாவிற்கு மிக மிக இளையவள் என்பது குறிப்பிடத் தக்கது.) நானா மராத்தியப் பிராமணர் ஆனதால் தலையை மொட்டையடித் திருந்தார். அவரிடம் அரச குலத் திற்கு வழக்கமா யிருந்தத் தீய பழக்கங்கள் எதுவும் இல்லை. ஆங்கிலம் தெரியா தென்றாலும், பல ஆங்கில நண்பர்களுடன் நெருங்கிப் பழகினார், மதவெறி அவரிடம் இல்லையென்றே தெரி கிறது. வெள்ளை நண்பர்களுக்கு அவர் அளிக்கும் விருந்தில் இறைச்சி கூட அளிக்கப் பட்டது. அவருடைய மாளிகையில் வெள்ளையர்களுக்காக அடிக்கடி விருந்துகளும் நடத்தப் பட்டன. பொதுவாக, அவர் நல்ல நண்பராகப் பலருக்கும் விளங்கினார். ஆனால், அவர் நெஞ்சில் மட்டும் வேதனைகள் குடி கொண்டிருந்தன!

பேஷ்வா பாஜிராவ் இறந்ததும், எங்கும் நிலவிய ஆங்கில நிறுவன அரசின் சட்டங்கள், பிதூர் எல்லைக்குள்ளும் நீண் டன. சட்டத்தின் முன்னே மராத்திய அரசகுலம் ஒரு பாமரனின் நிலைக்குக் கொண்டுவரப் பட்டது. இதுவும் காலப் போக்கில் பழக்கமாகி விடும். ஆனால், பாஜிராவின் மரணத்தோடு, தங் கள் நிலங்களும் மறைந்ததைக் கண்ட அரச குடும்பத்தினர் திகைத்தனர்! ஒரு பேஷ்வா இறந்த பின்பு சிரார்த்தச் சடங்கின் போது, பிராமணர்களுக்குப் பரியும், கரியும், பொன்னும், அணி யும், நிலமும் அளிக்கவேண்டியது; அவருடைய வாரிசின் கடமை யும், வழக்கமும் ஆகும். நானா சாஹேப் சிரார்த்தச் சடங்கை ஆடம்பரமாக நடத்திப் பிராமணர்களுக்கு மஹாதானங்கள் அத்தனையும் வழங்கினார். நிலமளிக்க மட்டும் அவரால் இயல வில்லை. 'சாத்திரச் சம்பிரதாயப்படி நிலம் அளிக்கத் தவறக் கூடாது; மறைந்த பேஷ்வா அனுபவித்த 52 கிராமங்களடங் கிய ஜாகிர்கள் நானாவிற்குச் சொந்தமாக வேண்டும்; அந்நிலத் தைப் பெற்று நில தானஞ் செய்ய வேண்டும்' என்று நானாவின் நண்பர் ஒருவர் அவருக்கு எடுத்தியம்பினார். நங் குலத்தின்

சடங்குகளைக் கூட முறைப்படி நடத்தத் தவறி விட்டோமே என்று நானா மனம் புழுங்கினார். அக்காலச் சமூகச் சூழலில், அவருடைய கவலை நியாய மானதே.

தந்தையின் பேஷ்வா இலச்சினையை, நானா உபயோகிக்கக் கூடாது என்ற நிறுவனத்தின் தடை உத்திரவு புண்பட்ட அவர் நெஞ்சில் வேலையே பாச்சியது. கோபங் கொண்ட நானா 'பேஷ்வா பகதூர்' என்ற இலச்சினையைப் பொறித்துக் கொண்டார். இதுவும் தடை செய்யப் பட்டது. முடிவில் 'சிரிமன் நானா தூந்த் பாந்த் பகதூர்ஷா' என்ற பெயரில் அவர் சமாதானம் அடைய வேண்டியதா யிற்று. சம்பிரதாயங்களையும், சடங்கு களையும் உயிரினும் மேலாக இந்தியர்கள் கருதுவார்கள். அந்நிய அரசு இதை உணரத் தவறியது. சில விருதுகளும், சலுகைகளும் நானாவின் மனதைக் குளிர் வித்திருக்கும். இதனால், மராத்திய எழுச்சியே ஏற்படும் என்று நிறுவனம் பயந்திருக்கத் தேவை யில்லை. ஆங்கிலேயரின் தேவையற்ற இப் பிடிவாதம், நானாவின் சரிந்த நிலையைப் பறைசாற்றி, மராத்திய அரசகுலத்தை அவமானத்திற்குள்ளாக்கியது. அல்லது, அவ்வாறு தோன்றச் செய்தது! உதவிப் பணம் நிறுத்தப்படும் என்பது எதிர் பார்க்கப் பட்டதே. ஆனால், பிதூரில் வாழும் பெரும் அரச குடும்பத்தையும், பணியாட்களையும், ஆதரவாளர்களையும், எப்படிப் பராமரிப்பது? உதவிப் பணத்தில் ஒரு பகுதியாவது நீட்டிக்கப் பட்டால்தான் மேற் கண்டவைகள் யாவும் முடியுமென்று நானா நிறுவன அரசுக்குப் பணிவுடன் விண்ணப்பித்தார். மேலதிகாரிகள் சிலர் அதை அனுதாபத்துடன் கவனித்தனர். ஆனால், அப்பொழுது தலைமை ஆளுநராயிருந்த டல்ஹௌசிப் பிரபு அதை மறுத்து விட்டார். ஒவ்வொரு இடமாகத் தட்டிப் பார்த்துச் சந்தர்ப்பங் கிடைத்த போதெல்லாம் நாடுகளை விழுங்குவதும், பட்டங்களையும், விருதுகளையும் பறிமுதல் செய்வதும், அவருக்கு விருப்பமான ஒரு விளையாட்டு! அவரால் மறுக்கப் பட்டதும், இங்கிலாந்தில் உள்ள கிழக்கிந்திய நிறுவனத்தின் இயக்குநர் மன்றத்திற்கு (Court of Directions) நானா விண்ணப்பித்தார். நாடிழந்த மன்னர்களும், உரிமைகளிழந்த இளவரசர்களும் இவ்விதம் நிறுவன அரசின் மேலிடத்திற்கு முறையிடுவது அக்கால வழக்கம்.

இந்தியத் தலைமை ஆளுநரின் முடிவே சரியானது, என்று இயக்குநர் மன்றமும் தீர்மானித்து விட்டது. நானா, குலத்தின் உரிமையை, தர்ம நியாயங்களை எடுத்துக் கூறினார். இயக்கு

நர் மன்றம் ஒப்பந்தங்களின் பிரிவுகளை, வரிகளை, விளக்கங்களுடனும், ஆதாரங்களுடனும் எடுத்துக் கூறி நிராகரித்தது! சட்ட நுணுக்கங்களையும், தர்ம நியாயங்களையும் இங்கு நாம் ஆராயத் தேவை யில்லை. வந்தவன்—வென்றவன்—வெள்ளையன்—அவன் தந்ததைத் தருவதை, இந்நாட்டினராகிய இந்தியர் வாங்கிவாழ வேண்டிய இழிநிலை யன்றோ வந்து விட்டது! மாபெரும் மொகலாயர் தலை வணங்கிய பின்பு, மராத்தியர் மண்டியிட்ட பின்பு எஞ்சியது என்ன இருக்கிறது? அமெரிக்க வல்லூறு அல்ல, ஆங்கிலச் சிங்கத்தைக் கொத்திக் குதற! இது இந்தியப் பசு! இயக்குநர் மன்றததின் முடிவை அறியும் முன்னரே, நானா1853-ல் தம் பிரதிநிதி (Agent) ஒருவரை நியாயம் பெற இங்கிலாந்திற்கு அனுப்பினார். அவர் பெயர் அசீம் முல்லாகான். (Azim-ullahkhan) அவர் தம் முயற்சியால் தாழ்ந்த நிலையினின்று முன்னேறியவர். ஆங்கிலமும், ஃபிரெஞ்சும் நன்கறிந்தவர். மனங் கவர் அழகும், அறிவும் பெற்றவர். எனவே, இங்கிலாந்து மேன் மக்கள் வட்டத்தில் எளிதில் பழகி விட்டார். ஓர் இளவரசனைப் போன்ற நடை, உடை, பாவனைகள் கொண்ட அவரை, ஆங்கில நங்கையர் பலர் சுற்றி வந்தனர். இந்த அசீம் முல்லாவின் வாதத்தை ஆங்கில மேலிடம் ஏற்றுக் கொள்ள வில்லை. நானாவின் விண்ணப்பத்திற்கு அவர்கள்ஏற்கனவே முடிவெடுத்து விட்டனர். இதே விதி சதாராமராத்திய குலத்தின் வாரிசுக்கும் நேர்ந்தது. சதாரா அரச குலத்தின் சார்பில் 'ரங்கு பாபுஜி' என்ற மராத்திய பிராமணர் அற்புதமாகத் தம் வழக்கை எடுத்துரைத்தார். இரு மராத்திய குலங்களுக்கும் நல்ல தீர்ப்புக் கிடைக்கவில்லை. அப் பிராமணனும், இம் முகமதியனும் தோல்வியில் ஒன்று பட்டனர். அவர்கள் என்ன பேசிக் கொண்டார்களோ? ரங்கு பாபுஜி நேராக இந்தியாவிற்கு வந்தார்.

ஆனால், அசீம்முல்லாகான் அப்பொழுது தொடங்கிய கிரிமியாப் போரில் ஆங்கில-பிரெஞ்சு இணைப் படைகளை, ருசியர்கள் வென்று கொன்று கொண்டிருந்தனர். செய்தி கேட்டு, அதைப் பார்ப்பதற்கு நேராக இஸ்டான்புல் லிற்குச் (கான்ஸ்டான்டி நோபிள்) சென்றார். அங்கே புகழ் பெற்ற டைம் (Time) செய்தித்தாள் நிருபர் வில்லியம் ஹோவர்டு ரஸ்ஸலைச் (William Howard Russel) சந்தித்தார். அதன் பிறகு செபாஸ்டபூல் போர்களத்திற்குச் சென்று ருசியர்களின் தாக்குதலை ஓரளவு நேரில் கண்டார். ஆங்கிலப் படைகள் வெல்லற்கரியன அல்ல, என்பதை உணர்ந்தார். அவர் மனதில் என்

னென்ன எண்ணங்களோ? இந்தியர்களால் ஆங்கிலேயர்களை ஏன் வெல்ல முடியாது? பொறுப்போம்! பொழுது விடியும்!' பார்ப்போம்!

நானு சாஹேப் வழக்கம் போல் நாட்களைக் கடத்தினர். ஆங்கில இராணுவ அதிகாரிகளுக்கு விருந்துகள் நடத்தினர். கான்பூர் வெள்ளையர்கள் கொடுத்த பதில் விருந்தை அவர் ஏற்பதில்லை. அரச மரியாதைகள் அனுமதிக்கப் படாததால், அவையின்றிப் பிறர் மனை செல்ல அவருடைய அரச இரத்தம் அனுமதிக்க வில்லை. அவர் பழகும் விதம் ஆங்கிலேயருக்கு நல்லெண்ணத்தை வளர்த்திருந்தது. நானுவின் ஒத்துழைப்பும், உதவியும் அவ்வப்பொழுது அவர்களுக்குத் தேவைப்பட்டன. அரச குடும்பத்தான் ஒருவன் நானுவிற்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்ததால், ஆங்கிலேயரின் நட்பு அவருக்குந் தேவைப்பட்டது.

முந்தைய பேஷ்வா காசி, பிரயாகை, காயா போன்ற புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செல்வது வழக்கம். பிதூரும், அருகிலிருந்த கான்பூரும் சலிப்பை அளித்ததால், நானுவும் புனித யாத்திரை என்ற பெயரில் பல இடங்களுக்குச் சென்றார். புனித யாததிரைக்கு, இம் மராத்தியப் பிராமணரின் துணை யார் தெரியுமா? இஸ்லாமிய அசிம்முல்லா கான்! அவர்கள் மேற் கொண்டது தேச விடுதலைக்கான புனிதயாத்திரையோ என்று தோன்றியது. ஆங்கில அதிகாரிகளின் கழுகுக் கண்களுக்கு இது ஐயத்தை விளைவித்தது. இலக்னோவில் சர் ஹென்றி லாரன்சின் சந்தேகத்திற்கு இவர் நடமாட்டம் இடங் கொடுத்தது. அங்கே படை அதிகாரிகளுடனும், வீரர்களுடனும் நன்கு பழகினர். வீரர்களின் விளையாட்டுப் போட்டியைப் பார்வை யிட்டார். மேலும் நெடுஞ்சாலையிலிருந்த சில படைத் தளங்களுக்கும் அவர் சென்றதாகத் தெரிகிறது. வீரர்களின் உணர்வுகளை அறிந்து, புரட்சிக்கு வித்திடச் சென்றாரா? எவர் அறிவார்?

# 10. கான்பூரும் வீலரும்

[கான்பூர் அமைப்பு—படைத்தளம்—தளபதி வீலர்—ஊரில் பர பரப்பு—சிப்பாய்களும் அதிகாரிகளும் ஒருவரையொருவர் சந்தே கித்தல்—நானு, ஆங்கிலேயருக்கு உதவி—பாதுகாப்பிற்காகக் காப் பிடம் உருவாக்கப் படல்—கான்பூரில் கிளர்ச்சி ஜூன் 4—சிப்பாய் கள் டெல்லி நோக்கிச் செல்லல் — திரும்பி வருதல் — நானுவின் தலைமை—காப்பிடம் தாக்கப்படல்]

டெல்லிக்குத் தென் கிழக்கே சுமார் 270 மைல் தூரத் தில் கங்கை நதிக்கரையில் தான் கான்பூர் இருக்கிறது. கிழ வனத்தின் தலைநகரான கல்கத்தாவிலிருந்து சுமார் 650 மைல் தொலைவிலிருந்த இவ்வூர், ஒரு காலத்தில் அயோத்தி மன்ன ருக்குச் சொந்த மாயிருந்து, 1801ல் அது கம்பெனியின் கைவச மாயிற்று. தோல் தொழிலுக்குப் பெருமையாகத் திகழ்ந்த தால், கங்கை நதியில் எண்ணிறந்த படகுகள் எந்நேரமும் அங்கே இயங்கிக் கொண்டே இருக்கும். 60 ஆயிரம் மக்களைக் கொண்ட அவ்வூர் வரலாற்றுச் சிறப்புப் பெற்றிருக்க வில்லை; எனினும், பெரும் படைத்தளத்தைக் கொண்டிருந்தது. அந்த ஊரின் அமைப்பை அறிந்து கொள்ளுவது நமக்குப் பயன் படும். கான்பூர் வரை படத்தை நன்கு பாருங்கள். கங்கை நதியின் தென் கரையில் ஊர் அமைந்திருக்கிறது. ஊரின் வட மேற்கே படை வரிசைகளும், தளவாடக் கிடங்கும், (Magazine) கருவூ லமும் இருக்கின்றன. ஊருக்கும், நதிக் கரைக்கும் இடையில் கிறித்துவத் தேவாலயமும் ஒன்று இருக்கிறது. அதற்கருகில் கலை மண்டபமும், தந்தி அலுவலகமும் இருக்கின்றன. தென் கிழக்கிலும் படை வரிசைகள் இருக்கின்றன. வெள்ளையர்கள் பலர் அங்கே வாழ்ந்தனர். அவர்களுக்குத் தேவையான மேற் கத்தியப் பொருட்களும், பொழுது போக்குக்குத் தக்க வசதி களும் அவ்வூரில் போதிய அளவு இருந்தன. '57 மே மாதத்தில் 61 ஆங்கிலப் பீரங்கி வீரர்களும், சுமார் 3,000 சுதேசி சிப்பாய்களும் அங்கே நிறுத்தப்பட்டிருந்தனர்.

இக் கான்பூர்ப் படைப் பிரிவிற்குத் தளபதியாக இருந்தவர் மேஜர் ஜெனரல் சர் ஹியு வீலர் என்ற (Sir Hugh wheeler) 70 வயது கிழவர். தம் வாழ்நாளில், 50 ஆண்டுகளைப் போர்த் தொழிலில் கழித்தவர்! ஆப்கானிஸ்தானத்திலும், பஞ்சாப்பி லும் பல தீரச் செயல்கள் புரிந்து புகழ்ப் பெற்றவர். அவரு டைய மனைவி கிறித்துவ மதத்தைத் தழுவிய இந்தியப் பெண். இந்த வீலரின் உதவியைத்தான் டெல்லியில் வெள்ளை யர்கள் எதிர் பார்த்தனர். அதற்குள் நிலமை மாறி விட்டது.

'மீரட் எழுந்தது! டெல்லி வீழ்ந்தது' என்ற செய்தி மே 14 ஆம் நாள் கான்பூரை எட்டியது. தளபதி வீலர், சிப்பாய் களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவராய் இருந்து வந் ததால், உடனடியாக நடவடிக்கை எடுத்துத் தவறிழைக்க விரும்ப வில்லை. தம் மனநிலையை அவர் வெளியில் காட்டிக் கொள்ளவும் இல்லை. நான்கு நாட்களுக்குப் பிறகு கான்பூர் அமைதியுடன் இருக்கிறது' என்று தலைமை ஆளுநருக்கு அவர் தந்தி கொடுத்தா ரெனினும், மனதில் அவருக்குச் சிறிது அச் சம் இல்லாமல் இல்லை. 'பல நூறு வெள்ளையர்களையும், இந் தியக் கிறித்துவர்களையும் பாகாப்பது எப்படி? 50 ஆண்டு களாகச் சிப்பாய்களுடன் பழகி அவர்களின் குணத்தை நன்கு அறிந்திருந்தார். தாம் எடுக்கும் முயற்சிகள் சிப்பாய்களுக் குத் தெரிந்தால், அதுவே கிளர்ச்சிக்குக் காரணமாகி விடும்' என்று அவர் பயந்தார். அச் சமயத்தில் மேலிடத்து உத்தர வொன்று வந்தது. அதில் 'வரப்போகும் வெள்ளை வீரர்களுக்கு இடமளிக்க ஏற்பாடு செய்யவும். இதைச் சிப்பாய்கள் அறி யும் வண்ணமே செய்யவும்' என்று கூறப்பட்டிருந்தது. வெள் ளைத் துருப்புகள் கைவசம் இருந்தால் எந்த எதிர்ப்பையும் சமாளிக்கலாம் என்பது உண்மைதான். ஆனால், சிப்பாய் களின் மேல் வெள்ளை அதிகாரிகளுக்கு நம்பிக்கை யில்லை, என் பதை இது வெளிப்படுத்துவது போலாகும். அத்துடன், அதிகாரிகளின் மேல் ஐயத்தையும், வெறுப்பையும் இது வளர்க்கும்; தளபதி வீலருக்குக் குழப்பந் தரும் இந்தச் சிந்தனை களுக்கப்பால் சிப்பாய்கள் ஏற்கனவே சென்று விட்டனர். சுதேசி அதிகாரிகள் சிலரும், சிப்பாய்கள் பலரும் உணர்ச்சி வசமாயினர். மே 31 ஆம் நாள் தான் கிளர்ச்சிக்குக் குறிப்பிடப் பட்டிருந்தது! அதற்குள் மீரத்தும், டெல்லியும் எப்படி முந் தின? நாமும் தொடங்குவோமா? சூழ்ச்சிகளை அறிந்த சிப் பாய்த் தலைவர்கள் இவ்விதம் எண்ணினர்கள். ஒன்று மறி யாத சிப்பாய்கள் பலர் என்றும் போல் இருந்தனர்!

குதிரைப் படை அணியொன்று இருப்புக் கொள்ளாமல் நெளிந்தது! 'குதிரைகளும், ஆயுதங்களும் பறி முதல் செய்யப்பட்டு, வரப் போகும் வெள்ளைத் துருப்புகளுக் களிக்கப் படும்' என்றவதந்தி பரவியதே இதற்குக் காரணமாகும். இரகசியமாய்க் காலாட் படையின் உதவி கோரப் பட்டது. ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு விரட்டி விடுவார்களோ? சிறையிலடைப் பார்களோ?—என்று வெள்ளை அதிகாரிகளும் ஒருவருக் கொருவர் தம்முள் பயந்தனர். சந்தேகித்தனர்! ஏதோ ஒரு விபரீதம் நடக்கப் போகிறது—என்று மட்டும், இரு தரப்பினரும் உணர்ந்து விட்டனர். என்ன? எப்படி?—என்பதை யாரும் அறிய வில்லை. சிப்பாய்கள் பாய்வதற்கு முன்பு ஆயுதங்களைப் பறி முதல் செய்து விட்டால்'......இது வெள்ளை அதிகாரியின் எண்ணம்! 'ஆயுதங்களைப் பறித்துச் சிறையிலடைக்கும் முன்பு வெள்ளையரைக் கொன்று விட்டால்'...இது சிப்பாய்களின் எண்ணம்! கிளர்ச்சிக்கு வேண்டிய முன்னேற்பாட்டுடன் சிப்பாய் இருக்கிறானே—என்று அதிகாரி பயந்தார்! மீரத்தில் நடந்தது போல், காலில் விலங்கிட்டுச் சிறையில் தள்ள அதிகாரி திட்ட மிட்டிருக்கிறானோ—என்று சிப்பாய் பயந்தான்!

இதற்கிடையில் நாற்றமெடுத்த ஆட்டா மாவு, குறைந்த விலைக்குக் கடைகளில் விற்கப் பட்டது. 'பசு, பன்றியின் எலும்புகள் தூளாக்கப் பட்டு மாவில் அது கலக்கப் பட்டிருக்கின்றது; நம்மை அவமதிக்க, மதம் மாற்ற அரசு சூழ்ச்சிச் செய்கிறது' என்றவதந்தி ஊர் மக்களிடமும் பரவி விட்டது. சிப்பாய்களின் ஆத்திரமும், அச்சமும் மேலும் தூண்டப் பட்டன. 'மிரண்டவனுக்கு ஆட்டா மாவும் பேய் தான்'! இந்த நிலையில் மே 22 ஆம் நாள் இலக்னோவிலிருந்து 55 ஆங்கில வீரர்களும், 240 குதிரை வீரர்களும் வந்து சேர்ந்தனர். 'அமைதி இது வரை நிலவி யுள்ளது; அடுத்து எதுவும் நடக்கலாம்' என்று வீலர் தலைமை யகத்திற்குத் தந்தி கொடுத்தார், அத்துடன் வெள்ளையர்களின் நண்பரான நம் நானா சாஹேபின் உதவியையுங் கோரியிருந்தார். நானாவும் தம் 300 வீரர்களை வீலரின் உதவிக்கு அனுப்பினார். இனி, கல்கத்தாவிலிருந்து வெள்ளைப் படைகள் வந்தால் எல்லாம் சரியாகி விடும்.

வெள்ளையருக்குப் பாது காப்பு அளிக்க நானா, தானாக முன் வந்தாரா? அல்லது அதிகாரிகள் கேட்ட பிறகு உதவிக்கு வந்தாரா? என்பதற்குச் சரியான விடை யளிக்க முடிய வில்லை. உண்மை அறிந்தவர்கள் பின்பு நடந்த போரில் இறந்து விட்

டனர். வெள்ளைப் பெண்டிரும், குழந்தைகளும் பிதூரில் தம் மாளிகையில் பாதுகாப்பாகத் தங்கலாம்; என்று நானா உதவி செய்ய வந்தது உண்மையே. இதற்குக் காரணம் மனிதாபி மானமா? சூழ்ச்சியா?—என்பதும் தெரிய வில்லை. பல இலட்சம் ரூபாய்கள் இருந்த அரசாங்கக் கருவூலத்தைக் காவல் காக்கும் பணி ஆங்கில அதிகாரிகளால் நானாவுக்குத் தரப் பட்டது; என்பதிலிருந்து அது வரை நானாவின் மேல் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது; என்பதை நாம் அறிகிறோம்.

தளபதி வீலர், நகரின் நிலைமையையும், சிப்பாய்களின் திட்டங்களையும் அறிய ஒற்றர்களைப் பயன் படுத்தினார். வீல ருக்கு, அவ்வப் பொழுது செய்திகளையும், சிப்பாய்களுக்கு, 'நாங்கள் தான் ஒற்றர்கள்' என்பதையும் அவர்கள் அறிவித் துக் கொண்டனர். எனவே, இரகசியங்கள் இரகசியங்களாக இல்லை. மே 24ஆம் நாள் புரட்சி வெடிக்கும் என்ற வேவுச் செய்தியும் பொய்த்து விட்டது. சிப்பாய்களின் எழுச்சி மட்டு மல்ல, குஜார்க் கொள்ளைக் கூட்டத்தின் நடமாட்டமும், மக் களின் மன நிலையும் வெள்ளையருக்குத் திகிலைத் தந்தன. அமைதி யின்மையும், அச்சமும், மன உழற்சியும், மருட்சி யும், தயக்கமும், நம்பிக்கையும் மாறி மாறி ஆட் கொள்ள, சில விநாடிகள் நகர்ந்தன! நன்றோ, அன்றோ, அது விரைவில் நடக்க வேண்டும். தலைக்கு மேல் 'டெமக்கிள்ஸ் வாள்' எவ் வளவு காலந் தொங்குவது? எப் பொறியால் நெருப்பு பற் றுமோ? அப் பொறி எங்கிருந்து பறக்குமோ? அறியோம்.

அன்று 'ஆங்கில அதிகாரி ஒருவன், மது அருந்திய போதை யில் சுதேசிக் குதிரைப் படையை நோக்கிச் சுட்டான். சாவு எதுவும் நேர வில்லை தான். ஆனாலும், அவன் நடத்தைக்குத் தண்டனை கிடைக்க வில்லை. தன் நினைவு இல்லாமல் அவன் சுட்டு விட்டதாக வெள்ளை நீதிபதிகள் தீர்ப்பளித்து, அவனை விடுதலை செய்தனர். வெள்ளையனுக்கும், கறுப்பனுக்கும் இராணுவச் சட்டம் ஒன்றே. இந்த ஒரு தலைபக்ஷ விதி விலக்கு இன்று மட்டும் வெள்ளையனுக்கு ஏன்? ஒரு சுதேசி இதைச் செய்திருந்தால், அதே நேரம் தூக்கிலிடப் பட்டிருப்பான்'. என்று சிப்பாய்கள் சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தனர். வெள்ளையர்களின் ஒரஞ் சொல்லும் வஞ்சனை அவர்களுக்கு விளங்கி விட்டது. நாம் ஒதுக்கப் படுகிறோம் என்று ஆத்திர மடைந்த அவர்கள், மற்றொரு செயலைக் கண்டு கொதிப்பு அடைந்தனர். கிளர்ச்சி வெடித்தால், வெள்ளையர்கள் அனைவருக் கும் பாதுகாப்பு அளிக்க ஒரு தற்காலிகப் பாதுகாப்பி

டத்தை வீலர் உருவாக்கினர். (Entrenc hmert) என்றழைக்கப் பட்ட அப்பாதுகாப்பிடம் கான்பூருக்குத் தென் கிழக்கே படை வரிசைகளுக் கருகில் உருவாக்கப் பட்டது. ஒரு சில சிறு சிறு கட்டிடங்களும், ஒரு கிணறும் இருந்த அவ் விடத்தைச் சுற்றிலு முள்ள இடை வெளிகளை இணைத்து மண் சுவர் ஒன்று கட்டப் பட்டது. ஒரு சிறு குண்டு வீச்சைத் தாங்கும் அளவிற்கு வலி மையோ, ஒரு குதிரையின் பாய்ச்சலைக் கூடத் தடுக்கும் அள விற்கு உயரமோ அம் மண் சுவர் பெற்றிருக்க வில்லை. நான வின் அமைச்சர் அசி முல்லாகான் ஓர் அதிகாரியிடம் 'நீங்கள் கட்டுவது வெருட்சி அரண் (Fost of Despais) அல்லவா' என்று வினவினன். 'நாங்கள் அதை 'வெற்றி அரண் (Fort of Victory) என்றே அழைப்போம்.' என்று அவ் வெள்ளை அதி காரி பதிலளித்தான். வெள்ளையன் கூறியபடி அது வெற்றி அரண்எனப் பின்னர் நிரூபிக்கப் பட்டாலும், அப்பொழுது அசிமுல்லா கூறியபடி, அச்சத்தில், அவ நம்பிக்கையில், வெருட்சியில் தான் வீலர் அதை உருவாக்கினர்.

வீலர் இப் பாது காப்பிடத்தை உருவாக்க வேண்டிய அவ சியம் என்ன? புரட்சித் தோன்றியதும், கான்பூரில் உள்ள வெள்ளையர்கள் அனைவரும் பாது காப்பிற்கு அங்கே வந்து சேர வேண்டும், என்பதே அவர் எண்ணம். பாது காப்பு என்றால், ஊரின் வட மேற்குக் கோடியில் உள்ள ஆயுதக் கிடங்கு சிறந்ததாயிற்றே! கனமான சுவர்களும் கணக்கிலடங்கா ஆயு தங்களும், கருமருந்தும் தற்காப்பிற்கு மட்டுமன்றித் தாக்கு தலுக்கும் பயன்தருமே! வீலர் இதை அறியாமல் இருக்க முடி யாது. இருந்தும் அதைத் தேர்ந்தெடுக்க வில்லை. ஏன்? ஆயுதக் கிடங்கைச் சுதேசி சிப்பாய்கள் காவல் காத்தனர். அவர்களை நீக்கி விட்டு வெள்ளையர்களை நிறுத்தினல், அவர்களுக்கு ஐயமும், அச்சமும் தோன்றும். மேலும், சிப்பாய்களின் மேல், தாம் முழு நம்பிக்கைக் கொண்டிருப்பதைக் காட்டவே வெள்ளை அதி காரிகள் படை வரிசைகளில், அவர்களுக்கருகில் உறங்குவதே நன்று. எனவே, வீலர் ஆயுதக் கிடங்கைத் தேர்ந்தெடுக்க வில்லை. சிப்பாய்களுடன் உறங்கி அவர்களின் நடுவே நம்பிக் கையைக் காட்டினல், அருகாமையில் உருவாக்கப் பட்ட பாது காப்பிடம் அவ நம்பிக்கையை அறிவித்தது. அத்துடன் ஆங்கி லேயரின் அச்சத்தையும், அது பறை சாற்றிற்று. ஒற்றர் களின் கூற்றுப்படி, கிளர்ந் தெழுந்தால் சிப்பாய்கள் நேரே டெல்லிக்குத் தான் செல்லுவார்கள். அதிகாரிகளைத் தாக்க மாட்டார்கள் என்றே தளபதி வீலர் நம்பினர். மொத்தத்தில் ஆயுதக் கிடங்கை ஒதுக்கித் தற்காலிகப் பாது காப்பிடம்

ஒன்றை உருவாக்கியது வீலர் புரிந்த தவறேயாகும். தேவையான பாது காப்பை அக் காப்பிடம் தரவில்லை என்பதுடன் ஒதுக்கப்பட்ட ஆயுதக் கிடங்கு சிப்பாய்களின் தாக்குதலுக்கு உதவி செய்தது.

கான்பூர் சூடு பிடித்துக் கொண்டிருந்த அவ் வேளையில் அருகிலிருந்த இலக்னோ கொதி நிலையை அடைந்து விட்டது. அவ்வபாயத்தைச் சமாளிக்க வீலர் ஒரு அணியை இலக்னோவிற்கு அனுப்பினார். அங்கே கலகம் தோன்றாது என்ற நம்பிக்கையா? கல்கத்தாவிலிருந்து ஆங்கில உதவிப் படை வந்து கொண்டிருக்கின்றது என்ற துணிவா? எதனால்? வீலர் இவ்வுதவியைப் புரிந்தார்; என்று உறுதி செய்ய முடியவில்லை. லக்னோவில் மே 30 ஆம் நாள் கிளர்ச்சித் தோன்றியதும், கான்பூர் கொதிக்கத் தொடங்கியது. ஊரின் பதட்டநிலை வெள்ளையருக்கு நடுக்கத்தை அளித்தது. வெள்ளைக் குடும்பங்கள் பாது காப்பிடத்திற்கு அழைக்கப் பட்டன. உணவுப் பொருட்களும், பிற பண்டங்களும் குவிக்கப் பட்டன. உணர்ச்சி வசப்பட்ட சிப்பாய்கள், நிலை கொள்ளாமல் துடித்தனர். உயிர் காக்கும் ஏற்பாடுகளை, வெள்ளையர்களும் விரைந்து முடித்தனர். இரு தரப்பினரும் ஆயத்தமாகி விட்டனர். ஒன்று பாது காப்பிற்கு ஓடியது, மற்றொன்று புரட்சியை நாடியது. உதவிப் படை வந்தால் தற்காப்பிற்குப் பயன் படும் என்று வெள்ளையரும், தாக்குதலுக்குப் பலியாவோம் என்று சிப்பாய்களுங் கருதினர். வெள்ளையர்கள் தாக்கும் முன்பே நாமே அவர்களைத் தாக்கினால்......கொதிநிலை தாண்டியது! குப்பி வெடித்தது! ஜுன் 4 ஆம் நாள் பின்னிரவில் கான்பூர் புரட்சிக் குரலைக் கேட்டது! குதிரைப் படை தான் முதலில் புரட்சிக் கொடியை உயர்த்தியது. சிப்பாய்கள் குதிரைகளின் மேல் தாவி ஏறினர்; துப்பாக்கிகள் வெடித்தன; படை வரிசைகள் கல கலத்தன; காப்பிடத்தில் உறக்க மின்றிப் புரண்ட வெள்ளையர்கள் எழுந்து பீரங்கிகளை நிமிர்த்திச் சரி செய்தனர். குதிரை வீரர்களின் கூச்சலுக்கு மறுகுறல் கொடுத்தனர்; காலாட் படையினர். பல சிப்பாய்கள், வெள்ளையரின் பாது காப்பிற்கு விரைந்தனர். சில அதிகாரிகளின் மதி யீனத்தாலும் அவசரத்தாலும் காப்பிடத்தி லிருந்த பீரங்கிகள் சிப்பாய்ப் படை வரிசைகளை நோக்கிக் குண்டுகளைப் பொழிந்தன. தடுமாற்றத்திலிருந்த பல சிப்பாய்கள் இதனால் புரட்சி வீரர்களுடன் சேர்ந்து கொண்டனர். புரட்சி வீரர்கள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஆயுதக் கிடங்கிற்குப் பறந்தனர், பொழுது விடிவதற்குள் கருவூலம் கொள்ளையடிக்கப் பட்டது. சிறைச் சாலைக்


கதவுகள் உடைக்கப் பட்டுக் கைதிகள் வெளியேறினர். அது வரை அதிகாரிகளின் ஆணைகளுக்குக் கட்டுப் பட்டிருந்த தங்கள் தோழர்களின் வெற்றியைக் கண்டு மகிழ்ந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். பிறகு புரட்சி வீரர்கள் டெல்லியை நோக்கித் திட்டமிட்டபடி, எதிர் பார்த்தப்படி, புறப் பட்டனர். சிறிது தொலைவிலிருந்த கல்யாண்பூரில் அவர்கள் தங்கினர்கள். அதன் பிறகு மீண்டும் கான்பூர் நோக்கித் திரும்பினர். ஏன் திரும்ப வேண்டும்? அவர்கள் கான்பூரை விட்ட கன்றதும் என்ன நடந்தது? என்பது தெரிந்தால் தான், இதற்குப் பதில் கூற முடியும். நல்ல தலைவனின்றி டெல்லி செல்ல விரும்ப வில்லையா? நாஞ அவர்களைத் தடுத்து அழைத்தாஞ? நாஞவிற்கும் சிப்பாய்களுக்கும் இரகசிய உறவு இருந்ததாகச் சிலர் கருதுகின்றனர். சூழ்ச்சியில் அவனும் தொடக்கத்தி லிருந்து பங்கு பெற்றிருந்தால், குழப்பத்துடனும், தயக்கத்துடனும் புரட்சித் தோன்றி யிருக்காது. கிளர்ச்சியைத் தொடங்கிய பின்பு சிப்பாய்கள், நாஞவைத்தலைமை தாங்கும்படி வேண்டி யிருக்கலாம்; வற்புறுத்தி யிருக்கலாம்; அச்சுறுத்தி யிருக்கலாம்! ஆனல், சிப்பாய்களின் தயவினில் தான் இருக்க வேண்டியதாயிற்று. என்று பின்னர் நாஞ ஒரு கடிதத்தில் கூறி யிருக்கிறன். மன்னஞகி மீண்டும் ஆளலாம் என்ற ஆசையும், மறுத்தால் தமக்கு மரணம்தான் என்ற அச்சமும், சிப்பாய்களுடன் சேர்வதற்கு அவனைத் தூண்டி யிருக்கலாம். எதஞலோ! உந்தப் பட்டுப் புரட்சிக்குத் தலைமை தாங்க அவன் முடிவெடுத்து விட்டான். சிப்பாய்களுடன் தானும் டெல்லிக்குச் சென்ருல் புரட்சி நாடகத்தில் தான் ஓர் உபப்பாத்திரமாகத்தான் இருக்க முடியும். ஆனல், கான்பூரிலோ கதைத் தலைவஞகலாம். மராட்டியப் பிராமணன், மொகலாய இஸ்லாமியரின் நேரடி ஆணைக்குட் பட்டு இயங்க விரும்ப வில்லை என்ருல், அதில் வியப்பில்லை. தொடக்கத்தி லிருந்தே நாஞவின் செயல்கள் மர்மமாகவும், மாறு பட்டவையாகவே இருக்கின்றன. எப்படியோ டெல்லி நோக்கிச் சென்ற சிப்பாய்கள் இப்பொழுது கான்பூரில் நாஞவின் கீழ்க் குழுமினர்.

இம்மாற்றத்தில் ஜூன் 5ம் நாள் கழிந்தது. மறுநாள் பாதுகாப்பிடத்தை, தான் தாக்கப் போவதாகத் தளபதி வீலருக்கு நாஞ முன்னறிவிப்புக் கொடுத்தான். இதுவும், ஏன் என்று புரியவில்லை. புரட்சிப் படையின் தலைவன் என்ற ஆணவமா? போர் நெறி வழுவக் கூடாது என்ற உயர்ந்த பண்பா? கூடிப் பழகிய ஆங்கில நண்பர்கள் தப்பிச் செல்ல அளிக்கப்பட்ட காலக் கெடுவா? என்று வினவுகிருர் சென். அவருடையக் கூற்

றுப்படி, 'இதற்கெல்லாம் விடையளித்தல் கடினம். நிகழ்ச்சி களை நோக்கும்போது இரகசியத் திட்டம் முழுவதும், நானு வால்தான் தீட்டப்பட்டது; என்று உறுதியாகச் சொல்வதற் கில்லை. உண்மை கூற வேண்டியவர்கள் உயிரிழந்தனர். நானு வின் குணமும், திறமையும் வெறுப்பிற்கோ, அச்சத்திற்கோ இடமளிப்பவையல்ல. சூழ்நிலையால், நிகழ்ச்சிகளின் வேகத் தால், அவரும் இழுக்கப் பட்டார் என்றே கொள்ளலாம். புரட்சியில் யீடுபட்ட பின்பே அதில் முழுமையாகப் பங்கு கொண்டான் என்பது உண்மையே. டெல்லியை முற்றுகை யிட வெள்ளைப் படைகள் முன்னேறிய அதே நேரத்தில், இங்கே கான்பூரில், பாது காப்பிடத்தைப் புரட்சி வீரர்கள் முற்றுகை யிட்டனர். வரப் போகும் மூன்று வாரங்களும் கடுமையானவை. கான்பூர் என்றாலே, வெள்ளையர்கள் நடு நடுங்கும் அளவிற்கு அங்கே நிகழ்ச்சிகள் நடந்தன. இப்புரட்சி வரலாற்றிலேயே கான்பூர் காட்சிகள் தான் சோகமானவை!

---

# கான்பூரும் காப்பிடமும்



# 11. முற்றுகையில் மூன்று வாரங்கள்

[காப்பிடத்தின் அமைப்பு — நானா முற்றுகையிடுதல் — அடைபட்டவர்களின் அவலம் — நீர எதிர்ப்பு — முற்றுகை நிறுத்தம்— ஆங்கிலேயர் அலகாபாத்திற்குப் பாதுகாப்புடன் செல்ல நானா உறுதி மொழி.]

காப்பிடத்தின் தனி வரைப் படத்தைக் கவனியுங்கள். நடுவில் செங்கற்களால் கட்டப்பட்டத் தாழ்வாரத்துடன் கூடிய இரண்டு கட்டிடங்கள் இருக்கின்றன. ஒன்று பாழடைந்துள்ளது; மற்றொன்று கூரை வேயப்பட்டிருக்கின்றது. அருகிலே இரண்டு கிணறுகள் இருக்கின்றன. சுற்றியுள்ள சிறு கட்டிடங்களின் இடை வெளிகள் நான்கடி உயரமுள்ள மண் சுவரால் இணைக்கப் பட்டிருக்கின்றன. இடையிடையே பீரங்கிகளும் பொருத்தப் பட்டிருக்கின்றன. இம் மையத்திற்கு இடப் பக்கம் 400 கெஜத் தொலைவில் கட்டி முடிக்கப் படாத படை வரிசைகள் (Barracks) சில இருக்கின்றன. அவற்றின் மேல் வரிசைகள் புரட்சி வீரர்களின் கை வசம் இருக்கின்றன. காப்பிடத்திற்கு வட கிழக்கே அலகாபாத் சாலை செல்லுகிறது. அதற்கப்பால் நீண்ட மண் சுவர் எழுப்பப் பட்டிருக்கின்றது. இந்தப் பாது காப்பிடத்தில் தான் சுமார் ஆயிரம் உயிர்கள் அடை பட்டிருந்தன. அதில் பாதிக்கும் மேல் வெள்ளைப் பெண்டிரும், பிள்ளைகளும் ஆவார்கள். சுதேசிப் பணியாட்கள் பலரும் இருந்தனர். இந்தியக் கிறித்துவர்கள் சிலரும் இருந்தனர். நம்பிக்கைக் குகந்த சிப்பாய்கள் பலரும் இருந்தனர். பலவகைத் தொழில்களில் ஈடுபட்டவராயினும், படை அனுபவம் சிறிதும் பெற்றிராத ஆங்கிலேயர்களும் பலர் இருந்தனர். இவர்களைத் தவிர எஞ்சிய சிலரே போரிடத் தகுதியான ஆங்கிலேய வீரர்கள். போதிய துப்பாக்கிகளும், குண்டுகளும் கருமருந்தும் அங்கேஇருந்தன. தேவையான உணவும், நீரும் அங்கே இல்லை. இந்தப் பாது காப்பிடம் தான் புரட்சி வீரர்களால் முற்றுகையிடப் பட்டது. அக் கோடை

வெப்பத்தில் கான்பூர் தகித்தது. பாது காப்பிடத்தை நோக் கிக் குண்டு மழை பொழிந்தது! ஆயிரக் கணக்கான சிப்பாய் கள், அகப்பட்ட வெள்ளையர்களை இடை விடாமல் தாக்கினர். தொடங்கிய சில நாட்களிலேயே, பாது காப்பிடம் அபாய நிலையை அடைந்தது. உணவுப் பொருட்கள் குறையவே, கட்டுப்பாடு விதிக்கப் பட்டது. ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவே தரப் பட்டது. ஆடம்பரத்திலும், வசதியிலும் வாழ்ந்தவர்கள் எளிமைக்கு விரட்டப் பட்டனர். அந்த நிலையி லும், ஆங்கில இனம் என்றால் இது—தான் என்பதைப் பலர் நிரூபித்தனர். உடற்றகுதி வாய்ந்த ஒவ்வொருவரும் துப்பாக்கி ஏந்தினர்! பீரங்கியை இயக்கினர்! சிப்பாய் களின் குண்டு மாரி பலரைக் கொன்றது. கேப்டன் (Moore) மூர் ஆரம்பத்திலேயே தாக்கப் பட்டான். குண்டு பட்ட தன் கரத்தை மடக்கித் தொங்க விட்டுக் கொண்டு, அவன் ஒவ்வொரு இடமாகச் சென்று மேற் பார்வை இட் டான். அவனைக் கண்ட அளவிலேயே வீரர்களுக்குப் புது உற் சாகம் தோன்றியது. இடை விடாத அவன் நடமாட்டம், அவர்களுக்குத் தெம்பை அளித்தது. வடக்கே, மேஜர் வை பாட் (Vibart) குறி தவறாமல் சிப்பாய்களைக் கொன்று குவித் தான். தென் கிழக்கே, டெலாஃபாஸ் (Dela fosse) பீரங்கித் தாக் குதலை இடைவிடாமல் நடத்தினான். ஒரு முறை பீரங்கியைத் தாங்கிய வண்டி, குண்டு பட்டுப் பற்றி எரிந்தது. சில விநாடி கள் கழிந்தாலும் பீரங்கி வெடித்திருக்கும்! டெலாபாஸ் வண் டிக் கடியில் பாய்ந்து, வண்டியைக் கீழே சாய்த்துப் பற்றி எரியும் கட்டைகளைப் பிடுங்கி எறிந்தான். தெற்கே, கட்டி முடிக்கப்படாத படை வரிசைகளில், இருப்புப் பாதை அமைப் பாளர்கள் திடமுடன் போராடினார்கள். அவர்களின் விரைந்த இயக்கத்தால், தகர்க்கப்பட்ட சாரளங்களுக்குத் தடுப்புகள் பொருத்தப் பட்டன. பிளக்கப்பட்ட சுவர்களுக்கு மாற்றங் கள் செய்யப் பட்டன. (அங்கே போரிட்டிறந்த பொறியிய லாளர்களுக்குக் கான்பூர் தேவாலயத்தில் நினைவுக் கல் நடப் பட்டது. மாப்ரே தாம்சன் (Mowfray Thompson) இடிந்த மதில்களின் மேல் பீரங்கிகளைப் பொருத்தி, சிப்பாய்களைத் திணறடித்தார்.

புரட்சிப் படையினர் கூட்டங் கூட்டமாக வந்து தாக்கினர்; உயர்ந்த கட்டிடங்களில் மறைந்திருந்தும் தாக்கினர். பாது காப்பிடத்திலுள்ள மக்கள் மதில்களில் மறைந்து மறைந்து—தான் நடமாட முடியும். மறைவிட மின்றி, கழிவிட மின்றி, நல்ல உணவின்றி, போதிய நீரின்றி அக் கோடை வெய்யலில்

பரங்கியியர்கள் பட்டபாடு சொல்லில் அடங்குவதன்று. அவ்வப் பொழுது பாது காப்பிடத்தை நெருங்கி வரும் புரட்சி வீரர்கள் கொல்லப் பட்டனர். அத்துடன் அவர்களின் குதிரைகளும் சுட்டு வீழ்த்தப் பட்டன. அன்றிரவு அவர்களுக்கு அருமையான குதிரை சூப்! அதிர் வேட்டுகளைப் பொருட் படுத்தாது. காளை ஒன்று புல் மேய வருகின்றது. ஒரே வெட்டு. அன்றிரவு மாட்டிறைச்சி விருந்து! இப்படி வழி தவறிய மிருகங்கள் அவர்களுக்கு வாழ்வளித்தன. இவைகளைச் சுடுவது கடினமன்று. ஆனால், விழுந்த இடத்திலிருந்து எதிரியின் குண்டு மாரிக்குத் தப்பி, இழுத்து வருவது அவ்வளவு எளிதன்று. இழுக்கப் போய் இறந்தவர்கள் பலர்! இழுக்காமல் விடப்பட்ட விலங்குகள் அழுகி நாற்ற மெடுத்துப் பருந்துகளுக்கு விருந்தாயின.



தாக்குதலுக்குள்ளான பாது காப்பிடம் — கான்பூர்

கதிரவனின் கொடுமையோ தாங்க முடிய வில்லை. இந்தியாவிற்கு வந்த பிறகு, கோடைக் கேற்பப் பணிகளை மாற்றி, வெப்பத்தைத் தவிர்க்கும் வாழ்க்கை முறையை வெள்ளையர்கள் மேற் கொள்ளுவார்கள். ஆனால், அப் பொழுது வெப்பத்துடன் பல இன்னல்களையும், அவர்கள் தாங்க வேண்டியதாயிற்று. அனைவருடைய தாகத்தையும் தீர்ப்பதற்கு அங்கே நீர் இல்லை. பாது காப்பிடத்தில் இருந்த கிணற்றில் நீர் இறைப்பது எளிதல்ல. கிணற்றருகே எவரையும் நெருங்க விடாமல் சிப்பாய்கள் சுட்டுக் கொண்டிருந்தனர். தப்பித் தவறி நீர் கொண்டு வந்தாலும் அது அனைவருக்கும் போதாது. குழந்

தைகள் நாவறண்டு கத்தின......பெண்கள் சோர்வடைந்து மயங்கினர்......எச்சிலை விழுங்கிக் கொண்டு எவ்வளவு காலம் எதிர்க்க முடியும்? போர் ஓய்ந்த பின்பு இரவில் நீர் இறைக்க லாம் என்றாலோ, நீரிறைக்கும் உருளையின் சத்தம் எதிரியை எழுப்பி விடும்! நீர் இறைக்கும் முயற்சியில் பலர் உயிர் விடுவது நல்லதல்ல. எனவே, (John Mekillep) ஜான் மெக்கல்ப் என்பவன் தனியாக அப்பொறுப்பை ஏற்க முன் வந்தான். ஒவ்வொரு முறையும் அவன் நீர் மொண்டு கொண்டு வரும் போது மரணத்திற்கும் அவனுக்குஞ் சில விநாடிகளோ, சில அடிகளோதான் இடைவெளி இருந்தது. ஒரு வாரத்திற் குப் பின்பு அவனுஞ் சுடப்பட்டான். நீர் தளும்பும் வாளியை ஏந்திக் கொண்டே உயிர் விட்டான். அவனோடும்! முற்றுகை தொடங்கிய சில நாட்களில் ஒரு மாபெரும் இழப்பும் நேரிட் டது. விழுப்புண் பெற்றோரும், பிணி வாய்ப் பட்டோரும் தங்கியிருந்த வீடுகள், புரட்சிப் படையின் தாக்குதலுக் குள்ளாகி, அவைகளின் கூறை பற்றி எரிந்தன. தீயை அணைக்கும் முயற்சியில் இருவர் உயிரிழந்தனர், அந் நெருப்பில் மருந்து கள் எல்லாம் அழிந்தன! பெண்கள் நிலை குலைந்தனர். ஆண் களும் கண் கலங்கினர்... இப் பேரிழப்பை ஈடு செய்ய வழியில்லை.

கூற்றுவன் சிரிக்கச் சிரிக்கப் பிணங்களும் குவியத் தொடங் கின! குண்டு தெறித்து மேஜர் லிண்ட்சே (Lindsey) குருடா யினார். சில நாட்களில் அவர் மனைவியும் இறந்தாள். ஒரு பெண்ணுக்கு நீரளிக்கும் போது ஹெபர்டின் (Heberden) குண் டடிபட்டுக் கொடூர வேதனைக்குப் பிறகு இறந்தார். 'அதோ!' மேஜர் ஒய்ட் தன் மனைவியுடனும், இரு குழந்தைகளுடனும் மறைந்து மறைந்து ஓடுகிறார். 'விர்' என்று பாய்ந்த குண்டு ஒன்று அவரைக் கொல்லுகிறது; மனைவியின் கரங்களைப் பிய்த்து எறிகிறது. தளபதி வீலரின் மகன் அடி பட்டு வேதனையில் முணங்குகிறார். பெற்றோரும் சகோதரிகளும் அவனுக்குப் பணி விடை செய்கின்றனர். மறைவான அவ் விடத்திலும் புரட்சிக் குண்டுகள் வேகத்துடன் பாய் கின்றன. அங்கு அவ னுடைய தலை சுக்கு நூறாய்த் தெறிக்கிறது! அதிர்ச்சியில் அக் குடும்பம் ஓவென்று அலறுகிறது! அங்கே, தாழ்வாரத் தில் ஏழு பெண்கள் முடங்கிக் கிடக்கின்றனர். ஒரு பெருங் குண்டு அனைவரையும் அழிக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு நாளும் இறப்புகள் நேர்ந்தன; இழப்போ மேலுங் கூடியது! சூழ்ந்திருந்த ஆபத்தை உணராத சிறுவர்கள் தாயின் கண் காணிப்பை விட்டு நழுவும் போதெல்லாம், சுடப் பட்டுத் துடி துடித்து இறந்தனர். குழந்தை யென்றும், தாயென்றும்

குண்டுகள் வேறுபாடு காண்பதில்லை. வெள்ளை எசமானர்களுக்கு நன்றியுடன் பணி புரிய வந்த இந்தியர்கள் பலரும் இறந்தனர். 'இன்று குவிந்த பிணங்களுக்கு முறையான அடக்கங் கூட, நாளை இறப்பவர்களால் தர முடிய வில்லை.' பகலில் போர் முழக்கம் செய்த பின்பு, இரவில் பிணங்களைச் சேர்த்தனர். தீவட்டி ஒளியில் விவிலியம் படித்தனர். ஆமென்! உறவினர்கள் கண்ணீர் வடிக்க உருக் குலைந்த அப் பிணங்களைப் பாழ்ங் கிணற்றில் போட்டனர்.* பிணம் புதைக்க ஏது இடம்? ஏது நேரம்? பிண மாகாமல் காத்துக் கொள்வதே பெரும் பாடு!

ஆபத்தான சூழ் நிலையில் அழிவு மட்டும் நிகழ வில்லை. இயற்கையின் ஆட்சியில் ஆக்கமும் நிகழ்ந்தது. குண்டுகள் பொழிய, குருதி சொட்ட, கூற்றுவன் கும்மாளம் போட, கொலைக் களத்தின் நடுவிலும் குழந்தைகள் பிறந்தன. மகப் பேற்றின் வேதனையில் துடிக்கிருள் ஒரு பெண்! மகனை இழந்து தவிக்கிருள் மற்ருெருத்தி! பிறப்பை எண்ணிச் சிரிப்பதா? இறப்பை எண்ணி அழுவதா? அவ் வேளையில் பிறப்பை எண்ணி அழுவதே மேல். ஏனெனில்? பிறந்தால், பிழைப்பது உறுதியல்லவே! ஆதலால் என்க.

நாட்கள் செல்லச் செல்ல, நிலைமை பயங்கரமா யிற்று. வீரர்கள் இறந்தனர்; விதவைகள் பெருகினர்; உணவுப் பண்டங்கள் குறைந்தன! தளவாடங்கள் அருகின! கல்கத்தாவி லிருந்து உதவியும் வரக் காணேம். செய்தித் தொடர்பும் புரட்சிப் படையால் துண்டிக்கப் பட்டு விட்டது. இலக்னே விற்கு உதவி கோரி ஒருவனை மாறு வேடத்தில் தளபதி வீலர் அனுப்பினுர். ஆனுல், இலக்னேவின் நிலைமையும் சரி யில்லை. உதவிக்கு ஓரடி எடுத்து வைத்தாலும் புரட்சிப் படை சூழ்ந்து விடும். இவ் விதம் தம் நிலையை எடுத்துச் சொல்லி இலக்னே விலிருந்து சர் ஹென்றி லாரன்ஸ் பதிலனுப்பினுர். கவர்னர் ஜெனரல் வாக்களித்தபடி உதவிப் படை உடனே வராவிட்டால், நாஞ சாஹேப்பிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியே இல்லை. தளபதி வீலர் மனம் தளர வில்லை. இந்தி மொழி தெரிந்த ஆங்கிலோ-இந்தியன் ஒருவனை அலகாபாத்திற்கு உதவி கோரி அனுப்பினுர். அவன் புரட்சிப் படை வீரர்

*அப்பால், அக் கிணறு பிற் காலத்தில் மூடப் பட்டு அங்கே நினைவுக் குறிப்பாக இவ் விவிலிய வார்த்தைகள் செதுக்கப் பட்டன. "Our bones are scattered at the grave's mouth, as when one cutteth and cleareth wood upon the earth. But mine eyes are unto Thee O God the Lord."

களிடஞ் சிக்கிக் கொண்டான். செப்பர்டு (Shepherd) என்ப வரைமறு முறை தளபதி அனுப்பினார். அவன் சென்றது உதவி கோரி மட்டுமல்ல, முடிந்தால் எதிரிகளின் மத்தியில் பிளவு ஏற்படுத்தவுந் தான். பிளவிற்கு வாய்ப் பிருந்தது. முன்னே நவாப் என்ற முகமது அலிகான் செல்வாக்கு மிகுந்த வர்; ஆங்கிலேயரின் நெருங்கிய நண்பர்; சிப்பாய்களின் துன் புறுத்தலுக்குப் பயந்து, அவர்களுடன் சேர்ந்து, அவரும் இப்பொழுது பாது காப்பிடத்தைத் தீவிரமாகத் தாக்கி வந் தார். அவரைச் சந்தித்து, வெகுமதிகள் தருவதாக வாக்களித் துப் புரட்சி வீரர்களிடையே பிளவை ஏற்படுத்தும்படி தூண் டுவதற்கே செப்பர்டு சென்றான். ஆனால், அவனும் சிக் குண்டு சிறை யிலடைக்கப் பட்டான்.

புரட்சிப் படைகள் இப்போது ஒரு கட்டுக் கோப்பிற்கு வந்து விட்டன. முற்றுகையை நீடித்துக் கொண்டே, நானு சாஹேப் அரசாட்சியை ஏற்றுக் கொண்டார். புதிதாகத் தளபதிகள் நியமிக்கப் பட்டனர். நீதி மன்றம் அமைக்கப் பட்டது. அங்கே ஆங்கில நீதி முறை ஒதுக்கப் பட்டது. இந்து நீதி தான்செயல் பட்டது. இருப்பினும், தீவிர இஸ்லா மியர்களும் நானுவின் அரசவையில் இருந்தனர். நெடுங்கால மாக நீடித்த இந்து-முஸ்லிம் வேற்றுமை, பொதுவாக எதிரியை ஒழிக்கத் தற்காலிகமாக மறைந்தது. இரு தரப்பினரும் இழந்து போன தங்களின் உரிமைகளைப் பெற ஒருங் கிணைந்து போராடினர்.

காப்பிடத்தில் பண்டங்கள் அனைத்தும் அபாய நிலைக்குக் குறைந்தன. மிகச் சிக்கனமாக இருந்தாலும் இன்னும் நான்கு நாட்களுக்குத் தான் தாக்குப் பிடிக்க முடியும். கிழக்கே யிருந்து உதவிப் படையை எதிர் பார்த்துக் கண் கள் பூத்து விட்டன. ஜூன் 24ஆம் நாள் தளபதி வீலர் மீண்டும் இலக்னோவிற்கு அபயக் குரல் கொடுத்தார். 'ஆங்கில உணர்ச்சி ஒன்றே அஞ்சுகிறது. அதுவும் நீண்ட காலம் நீடிக் காது. பொறியிலகப்பட்ட எலி போல் சாவதா? முடியாது; உடனே வேண்டும். உதவி......உதவி......உதவி......' உள்ளம் நொந்து, எல்லாம் இழந்து, ஏதேனும் உதவி எதிர் பார்த்த அத் தளபதியின் இறுதிக் குரல் இது! வீலர் சோர்ந்து விட் டார்...உதவியோ, விடுதலையோ—கிடைக்காதா?—என்று.

21 நாட்கள் முற்றுகைக்குப் பின்பு இறுதியில் ஒரு நாள் குண்டு முழக்கம் நின்றது. கண் காணிப்புக் கூண்டிலிருந்த வீரன் ஒருவன் கத்தினான். 'அதோ ஒரு பெண் வருகிறாள்.

வேவு பார்க்க வருகிறாள் - என்றெண்ணி ஒரு வீரன் துப்பாக்கியை நீட்டினான். மாப்ரே தாம்ஸன் அதைத் தட்டி விட்டு உற்று நோக்கினார். கந்தலுடுத்திய ஒரு வெள்ளைப் பெண் தன் குழந்தையை மார்பில் அணைத்துக் கொண்டு வெகு தொலைவில் தள்ளாடி நடந்து வந்தாள். கையொப்பமில்லாத, ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு கடிதத்தைத் தந்தாள். 'மேன்மை மிகு அரசி விக்டோரியாவின் மக்களே! டல்ஹௌசிப் பிரபுவின் செயல்களுக்கு எவ்வித இணைப்பும் கொள்ளாதவர்கள். ஆயுதங்களைச் சரண் செய்ய விரும்புவார்கள்...அலகாபாத்திற்குப் பாது காப்பாகச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.' என்ற வாசகத்தைப் படித்த பின்னும், தளபதி வீலருக்குச் சரணடைய விருப்ப மில்லை. பெண்களும், குழந்தைகளும் படும் இன்னல்களிலிருந்து விடுதலை பெற, வேறு வழியில்லாததாலும், தாக்குதலைத் தாங்குஞ் சக்தி யில்லாததாலும், தளவாடங்களும், உணவுப் பண்டங்களும் தீர்ந்து விட்டதாலும், கண்ணியமாகச் சரணடைவதே மேல் - என்ற தீர்மானத்திற்கு வந்தார். மறு நாள் நானாவின் தளபதி ஜ்வாலப் பிரசாத்தும் (Jawala Prasad) அசிமுல்லாகானும் காப்பிடத்திற்கு வந்தனர். நிபந்தனைகள் பலவும் விதித்தனர். அதன்படிப் 'பாது காப்பிடத்தைக் காலி செய்ய வேண்டும்; வெள்ளையர்கள் பீரங்கிகளை விட்டு விட்டுத் தங்கள் துப்பாக்கிகளுடன் வெளியேறலாம்; வெளி யேற்றத்திற்கு வாகனங்கள் அனுப்பப்படும்; கங்கை நதிக் கரையில் அலஹபாத் செல்வதற்குப் படகுகளும், உணவுப் பொருட்களும் காத்திருக்கும்' என்ற இந் நிபந்தனைகளை இரு தரப்பும் ஏற்றுக் கொண்ட பின்னர், நானாவின் கையொப்பமும் பெற்று வரப் பட்டது. தம் நம்பிக்கைக்கு ஈடாக நானா புரட்சி வீரர்கள் இரு வரைப் பாது காப்பிடத்தில் நிறுத்தினார். மூன்று வெள்ளையர்கள், வெளியேறும் ஏற்பாடுகளை அறிய, கண் காணிக்க அனுமதிக்கப் பட்டனர். அவர்கள் நதிக் கரைக்குச் சென்று பார்த்தனர். நாற்பதிற்கும் மேலான நாட்டுப் படகுகள் அந் நதியில் மிதந்தன. சிலவற்றில் திருத்தங்களும், கூரைகளும் அமைக்கப்பட்டன. பல தொழிலாளிகள் இப் பணியில் விரைவாக இயங்கிக் கொண்டிருந்தனர்! 'துன்பத்தி லிருந்து விடுதலைப் பெறுவோம்; நண்பர்களை விரைவில் சந்திப்போம்; பலத்த துணையுடன் திரும்பி வந்து பழி வாங்குவோம்!' என்ற கற்பனையிலும் நிம்மதியிலும் அம் மூன்று வெள்ளையர்கள் திரும்பவும் பாது காப்பிடத்திற்கு வந்தனர்.

# 12. சிவந்தது கங்கை!

[கங்கைக் கரையில் — சாரி செளராக் கட்டடம் — அகதிகள் படகுகளில் ஏறல்—சிப்பாய்களின் திடீர்த் தாக்குதல்—ஒரு படகு தப்பித்தல் — மாப்ரே தாம்ஸன், டெலாபாஸ் பிழைத்தவர்கள் — நம்பிக்கை மோசத்தில் நானாவின் பங்கு?]

ஜூன் 27ஆம் நாள் வெள்ளையர்களுக்கு விடிந்தது. 16 யானைகளும், 70 பல்லக்குகளும் காப்பிடத்திலிருந்து கங்கை நதிக் கரைக்கு அவர்களைச் சுமந்து செல்ல வந்தன. பாழ்ங் கிணற்றில் புதைக்கப்பட்ட உறவினரையும், நண்பர்களையும் நினைத்து மீண்டும் ஒரு முறை கண்ணீர் உகுத்து விட்டு, எஞ்சிய சுமார் 450 ஆண், பெண், குழந்தைகள் ஆகியோர்கள் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். காயக் கட்டுகளுடன், காய்ச்சலுடன், சோர்வுடன், பசியுடன் வாகனங்களில் ஏறினர். முடிந்தவர்கள் நடந்தனர். கந்தல் உடையுடன் சோர்ந்து வாடிய தங்கள் எசமானர்களைக் கண்ட சிப்பாய்களில் சிலர் கண் கலங்கினர். தங்கள் பழைய அதிகாரிகள் சிலரின் இறப்பை எண்ணி வருந்தினர். அங்கே, புரட்சியைப் பற்றிய ஆர்வம் சிறிது நேரம் மறைந்து விட்டது. மேஜர் வைபாட்டைக் கண்டதும், முன்பு அவரின் கீழ்ப் பணி புரிந்த சிப்பாய்கள் மிகுந்த மரியாதையுடன் குடும்பத்தோடு அவரை வண்டியிலேற்றி நதிக் கரைக்குக் கொண்டு வந்தனர். தளபதி வீலர் தம் மனைவி, மகளுடன் நடந்தே வந்தார். அலகாபாத்திற்குச் செல்லுகின்றோம் என்ற நம்பிக்கையும், ஆவலும் அவர்களது சோர்வையும் வலியையும் சிறிது போக்கின.

அவ் வூர்வலம், ஒரு மைலைக் கடந்து நதிக் கரையை அடைந்தது. ஊர் மக்கள் ஆயிரக் கணக்கில் அந்தச் 'சாரி செளரா கட்டம்' என்ற நதித் துறையில் குழுமி யிருந்தனர். அசைவின்றி, பேச்சின்றி அனைவரும் பரங்கியர்களின் பயணத்

தைப் பார்க்கக் காத்திருந்தனர். படகுகள் கரையிலிருந்து சற்றுத் தள்ளி மிதந்தன. வாகனங்களிலிருந்து இறங்கிய வெள்ளையர்கள் நீரில் சிறிது நடந்து படகுகளில் ஏறினர். இடுப்பளவு நீரில் நின்று கொண்டு சில வீரர்கள், பெண்களை யும், குழந்தைகளையும், சிறுவர்களையும் படகில் ஏற்றிக் கொண் டிருந்தனர். பட கோட்டிகள் அமைதியாய் இதைப் பார்த் துக் கொண்டிருந்தனர். அப் போது காலை ஒன்பது மணி. மேஜர் வைபாட் கடைசியாய் ஏறிக் கொண்டிருந்தார். திடீ ரென ஏதோ ஒரு ஓசை கேட்டது. பட கோட்டிகள் நீரில் குதித் துக் கரையை நோக்கி ஓடினர். ஒரு கண நேரத்தில் படகின் கூரைகள் தீப் பற்றி எரிந்தன. கரையிலிருந்து துப்பாக்கிகள் வெடித்துச் சரமாரியாகப் பாய்ந்த குண்டுகள் படகுகளைத் தாக் கின. இடி விழுந்தாற் போல் வெள்ளையர்கள் திகைத்தனர். மறு விநாடியே கரையை நோக்கி அவர்களுஞ் சுட்டனர். பீதி யடைந்து படகி லிருந்தவர்கள் பலர் இடுப்பளவு நீரில் குதித் தனர். குழந்தைகள் வீறிட்டலறினர். சிறுமிகளின் ஆடை களும், கூந்தலும் தீப் பிடித்து எரிந்தன. என்ன நடக்கிறது? என்பதைஅறியு முன்பே பலர் பிணமானார்கள்! குண்டு மழைக் கிடையே மணற் படுகையில் நிலைத்த படகுகளை நீருக்குள் தள் ளப் பலர்முயன்றனர். ஒன்றிரண்டு நகர்ந்தன. மேலுங் கீழும் ஆடியவேகத்தில் சில படகுகள் கவிழ்ந்தன. நீருக்குள் குதித்த குழந்தைகளைக் காப்பாற்றத் தாய்மாரும் முனைந்து உயிரிழந் தனர். தாக்கவும் முடியாமல், தப்பிக்கவும் வழி யில்லாமல் அந்த வெள்ளை அகதிகள் குண்டடிபட்டு நீரில் மிதந்தனர். கரையேற முயன்றவர்களில் பலர் வாளால் வெட்டப் பட் டனர். பீறிடும் பரங்கிக் குருதியிலே சிவந்தது கங்கை நதி! மிதப்புக்கு வந்த மூன்று படகுகளில், நூற்றுக்கும் அதிகமான வர்கள் துப்பாக்கிக் குறிக்கு எட்டாமல் தப்பி விட்டனர். அவற்றில், இரண்டு படகுகள் மட்டும் மறு கரையை அடைந் தன. அவற்றிலிருந்தவர்கள் அங்கு நின்ற சிப்பாய்களால் சுடப் பட்டனர். ஒரே ஒரு படகு மட்டும் நடு நீரோட்டத்தில் புகுந்து வேகமாய் மிதக்கத் தொடங்கியது. சிறிது நேரம் வெடி யோசை நின்றது. சுமார் 125 பேர் மூச்சிரைக்கக் கரை யில் விழுந்தடித்து ஏறினர். அவர்கள் அனைவரும் கயிற்றால் கட்டப் பட்டு இழுத்துச் செல்லப் பட்டனர். அவர்களின் கதியைப் பிறகு பார்ப்போம்.

தப்பித்த படகில் குறிப்பிடத் தகுந்த வீரர்கள் அனைவரும் இருந்தனர். வைபார்ட், மாப்ரே தாம்சன், மூர், டெலாபாஸ் ஆகியோருடன் இன்னும் பலர் இருந்தனர். புரட்சி வீரர்கள்

சுட்டுக் கொண்டே இரு கரைகளிலும் ஓடி வந்தனர். பல மணி நேரம் இப் போர் நீடித்தது. மாலையில் படகு, மணலில் சிக்கியது. சிப்பாய்கள் அவர்களைத் தொடர வில்லை என்று தெரிந்ததும், இருட்டில் பெண்களையும், பிள்ளைகளையும் கரையிலிறக்கினர். (அவர்களும் பின்னர் எதிரிகளிடஞ் சிக்கி இறந்தனர்.) ஆண்கள் மட்டும் விடிந்ததும் படகை நகர்த்தி மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தனர். உணவின்றி, உறக்கமின்றித் துடுப்புத் தள்ளும் கைகள் வலித்துச் சோர்ந்தனர். பகலில் மீண்டும் சிப்பாய்கள் தொடர்ந்து வந்தனர். இரண்டு மணிக்கு மீண்டும் படகு சிக்கிக் கொண்டது. இதைப் பயன் படுத்திக் கரையிலிருந்த சிப்பாய்கள், பலரைச் சுட்டு வீழ்த்தினர். மாலையில் 60 சிப்பாய்கள் நீட்டிய துப்பாக்கிகளுடன் ஒரு படகில் இவ் வகதிகளைத் துரத்தினர். எதிர் பாராமல் அதுவும் கரை தட்டியது. தப்புவதை விட்டு விட்டுக் கரையேறித் துரத்தியவர்களையே வெள்ளையர்கள் சுட்டுக் கொன்றனர். இரவும் வந்தது. 'சோ'வென மழையும் பொழிந்தது. அந்தக் காரிருளில் திசை தெரியாமல் படகைச் செலுத்தினர். இரண்டு பகல்கள், இரண்டு இரவுகள் உணவில்லாமல், உறக்கமுமில்லாமல், உயிரைக் காக்கும் போராட்டத்தில், தப்பித்துச் செல்வதென்பதை நினைக்கவே உள்ளம் நடுங்குகிறது. பகலிலும் படகைச் செலுத்த முடியவில்லை. இரவிலுங் குறி பார்த்து அம்புகளைத் தீக் கொளுத்தி சிப்பாய்கள் எய்தனர். கரையிலிறங்கினால் சிப்பாய்களுடன் கிராம வாசிகளும் சூழ்ந்து கொள்ளுகின்றனர்; கொல்லவுஞ் செய்கின்றனர்! அப்பொழுது அப் படகில் எஞ்சியவர்கள் 13 பேர் தான். அவர்கள் யாருமில்லாத ஒதுக்குப் புறத்தில் கரை யேறி, அலகாபாத்தை நோக்கிப் பதுங்கிப் பதுங்கி நடந்தனர். திடீரெனப் பெருங் கூச்சலுடன் ஒரு கூட்டம் அவர்களைச் சூழ்ந்தது. அவர்கள் தப்பி யோடி ஒரு கோயிலை அடைந்தனர். தற்காப்புக்காக மனிதன் மூர்க்கத்தனமாகப் போரிடுவான். அவ் வெள்ளையர்கள் வெறி பிடித்து கோயிலுக் கருகே எதிர்த் தாக்குதல் நடத்திக் கும்பலைக் கலைத்தனர். அவர்களிலும் பலர் இறந்தனர். துரத்தியவர்கள் நின்று விட்டனர். எங்கும் ஒளிய இட மின்றி, மீண்டும் கங்கை நதியில் குதித்துக் கரை யோரமாக மூன்று மணி நேரம் நீந்தினர். மீண்டும் வேட்டை நாய்கள் துரத்தின. சிலரைக் கொன்றன. அப்பொழுது நால்வர் மட்டும் வெகு தொலைவில் அச்சமும், திகிலும் தம்மை வாட்ட, கரை யேறத் துணிவின்றிக் கழுத்தளவு நீரில் நின்றனர். பல மணி நேரம்! எதிர் பாராத வித

மாக நட்புக் குரல் கேட்டது. அவர்களால் நம்பமுடியவில்லை அயோத்திப் பகுதியைச் சேர்ந்த திக் விஜய சிங் என்ற ஜமீன்தாரின் ஆட்களே அக் குரல் கொடுத்தவர்கள். இரண்டு நாட்கள் பயரங்கரமான நதிப் பயணத்திற்குப் பின்பு, அந்த நால்வரும் இல்லத்திற்கு இரகசியமாய் 29ஆம் நாள் மாலை வந்தடைந்தனர். இப்படித் தான் பரங்கியர்களின் இரத்தத்தால் சிவந்தது கங்கை! மாப்ரே தாம்சன், டெலபாஸ் ஆகிய இருவர் மட்டுமே இந்தச் சோக நிகழ்ச்சியிலிருந்தும், கோர அனுபவத்திலிருந்தும் தப்பிப் பிழைத்தவர்கள். அவர்களின் கூற்றிலிருந்து தான் இந் நிகழ்ச்சியை நாம் ஆராய வேண்டியிருக்கிறது.

ஜூன் 27ஆம் நாள் கங்கை நதித் துறையில் நடந்த கோர நிகழ்ச்சிக்கு யார் பொறுப்பு? அவை திட்ட மிடப்பட்டு நடந்த கொலைகளா? அல்லது, திடீரெனத் தொடங்கிய தாக்குதலா? இதிலே நானா சாஹேப்பின் பங்கு என்ன? திட்ட மிட்டிருந்தால், பாது காப்பிடத்தை விட்டு வெள்ளையர்கள் வெளியேறியதும் அவர்களைக் கொன்று குவித்திருக்கலாமே! நதிக் கரைக்குக் கொண்டு செல்ல யானைகளும், பல்லக்குகளும் அனுப்பத் தேவை யில்லையே. முதல் நாள் இரவில் பெருஞ் செலவில் நூற்றுக் கணக்கான கூலிகள் படகுகளைச் செம்மைப் படுத்தத் தேவை யில்லையே. துப்பாக்கிகளை வெள்ளையர்கள் எடுத்துச் செல்ல அனுமதித் திருக்கத் தேவையில்லையே. நதித் துறையில் குண்டுகளுக்குத் தப்பிய குழந்தைகளையும், பெண்களையும் சிறுவர்களையும் கொல்லாமல் சிறைப் பிடிக்கத் தேவை யில்லையே. திட்டமிடப்பட வில்லை யெனில், இது எவ்வாறு நிகழ்ந்தது? நானாவிற்குத் தெரியாமல் இரத்த வெறி பிடித்த அவனின் தோழர்களும், வீரர்களும் இவற்றை யெல்லாம் புரிந்திருந்தார்களா? அப்படியும் சொல்வதற்கில்லை. முற்றுகையின் போது இரு தரப்பினரும் தங்கள் தங்களிடம் சிக்கிச் சிறை பட்ட கைதிகளைக் கொல்ல வில்லை. நானா கொடூரமானவன் அல்லன்; என்பதைப் பல ஆங்கிலேயர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர். பல ஆண்டுகளுக்குப் பின்பு புரட்சியைப் பற்றி எழுதிய பலரும், நானாவின் மேல் இக் குற்றத்தைச் சுமத்தவே இல்லை. சர் ஜான் வில்லியம் கே மட்டுமே, நானா திட்ட மிட்டு இக் கொலைகளைப் புரிந்ததாகக் கூறுகிறார். புரட்சி முடிந்து நிகழ்ச்சிகள் ஆராயப் பட்ட போது, சில இந்தியர்கள், இது நானாவின் தூண்டுதலால், இரகசியமாகச் செய்யப் பட்டது — என்று வாக்கு மூலம் அளித்தனர். புரட்சி வெற்றி பெற கொலைகளையுஞ் செய்து விட்டுத் தோல்வி யடைந்தால்,

தாம் குற்றமற்றவராகக் காட்சிதர, நானா இரு வேடம் புனைந் திருக்கலாம். அதே சமயத்தில் நானாவிற்கு எதிராக வாக்கு மூலம் அளித்தவர்கள், வெற்றி பெற்ற வெள்ளையர்களிட மிருந்து வெகுமதி எதிர் பார்த்தோ, அல்லது தண்டனைக்குப் பயந்தோ அவரைக் காட்டிக் கொடுத்திருக்கலாம். முற்றுகை நடந்த காலத்தில், அலகாபாத்தில் வெள்ளை அதிகாரிகளின் அட்டூழியங்கள் தலை விரித்தாடின. அதைக் கேள்விப் பட்ட கான்பூர் சிப்பாய்களும். பழிக்குப் பழி வாங்கத் திடீர்த் தாக்குதலை நடத்தி யிருக்கலாம். இந் நிகழ்ச்சியின் உண் மையை அறிவது சுலப மல்ல. எந்தப் புரட்சியிலும் யாரை யும் கேட்டுக் கொண்டு நிகழ்ச்சிகள் நடை பெறுவதில்லை. வர லாற்றில் முழு உண்மையைக் காண்பது கடினமே! ஆகும்.

# 13. கோடையிடி நீல்!

[காசியின் அமைப்பு, அதன் முக்கியத்துவம்—படைத் தளம்—பிரிகேடியர் பான்ஷோ பீ—ஆணையர் டக்கர்—கல்கத்தாவிலிருந்து உதவி—ஆஸாம்கர் ஊசலாடியது—காசியில் பரபரப்பு—கோரக்பூர் கருவூலம்—ஆஸாம்கர் கிளர்ச்சி-ஜேம்ஸ் நீல் காசிக்கு வருதல்-காசியின் எழுச்சி—நீலின் நடவடிக்கை—நீலின் கொடுமைகள்—ஜான்பூர் கிளர்ச்சி.]

மே 10ம் நாள் மீரட் கலகம். டெல்லி, மறு நாள் புரட்சிப் படை வசம் வீழ்ந்தது. டெல்லியை மீட்க ஆங்கிலப் படைகள் ஜூன் 6ஆம் நாள் அங்கே நெருங்கின; அதே நாள் கான்பூரில் புரட்சிப் படைகள் பாதுகாப்பிடத்தை முற்றுகையிட்டன. இதற்கிடையில் மே 30ம் நாள் திட்ட மிட்டாற் போல பல்வேறு இடங்களில் கிளர்ச்சிகள் தோன்றின. இதை மனதில் கொண்டால், ஜூன் மாதம் முழுவதும் முற்றுகைக் குள்ளாயிருந்த கான்பூர் வெள்ளையர்களுக்கு, ஏன் உதவிப் படை செல்லவில்லை என்பது விளங்கும். இவ் வியலாமையால் நூற்றுக் கணக்கானோர் பலியானார்கள். உதவிப் படைகள் உரிய நேரத்தில் ஏன் வரவில்லை? காரணத்தை அறிய நாம் காசிக்குச் செல்லுவோம்.

கல்கத்தாவிலிருந்து 400 மைல் தொலைவில் கங்கைக் கரையில் அமைந்த காசியில் 2 இலட்சம் மக்கள் வாழ்ந்தனர். அது பண்டிதர்களும், புரோகிதர்களும், பெருமளவில் வாழும் ஊர்; எண்ணற்ற கோயில்களும், மசூதிகளும் நிறைந்த ஊர்; இவை யாவற்றையும் விட, கவனத்திற்குரியன சில அங்கு உண்டு. பாட்னாவிற்கும், அலகாபாத்திற்கும் இடையே நடைபெறும் செய்திப் போக்குவரத்திற்கும் அவ் வூர்தான் தலைமையானது. அழிந்த மொகலாயப் பேரரசின் அரச குலத்தவர்கள் பலரும், இறங்கக் கண்ட இந்து அரசர்கள் பலரும், தங்கள் உரிமைகளையும், நாடுகளையும், பெருமைகளையும் இழந்து

நிறுவன அரசின் கட்டாயத்தின் பேரில், காசியில் எஞ்சிய நாட்களைக் கழித்து வந்தனர். புரட்சிப் பொறி அங்கே தெறித்து விழுந்தால் பெருந் தீ மூளும்! ஏமாந்தவர்கள் நெஞ்சில் பழி வாங்கும் உணர்ச்சித் தோன்ற ஏதுவாகும். புரட்சியால் உணர்ச்சி வசப்பட்ட மக்களையும், வீரர்களையும் பயன்படுத்திப் பறி போன உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு, இவ்வரசியல் கைதிகள் காத்திருப் பார்கள். மீரட் நிகழ்ச்சியைத் தொடர்ந்து மேற்கிலிருந்து நம்பிக்கை யூட்டும் செய்திகளை இவர்கள் எதிர் பார்ப்பதாகவும், புரட்சியின் வேகத்தை அறிய ஒற்றர்களைப் பயன் படுத்துவதாகவும் இவ் வரச குலத்தோர் சந்தேகிக்கப் பட்டனர். இதனால் தான், நிறுவனம் காசியைக் கவலையுடனும், விழிப்புடனும் கவனித்தது.

காசிக்கு மூன்று மைல் தொலைவில் அரசின் படைத் தளமும், நீதி மன்றமும், ஆட்சி மன்றமும் இருந்தன. வெள்ளையர் இல்லங்களும், பள்ளிகளும், மருத்துவ மனைகளும், மாதா கோயில்களும் அங்கே இருந்தன. பிரிகேடியார் பான்சோபி (Ponsonby) காசிப்படையின் தளபதியாகப் பணியாற்றினர். 15 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்கானிஸ்தானத்தில் தோஸ்த் முகமதுவை எதிர்த்து, அவர் புரிந்த வீரப் போர் யாவர் மனதிலும் பசுமையாகப் பதிந்து இருந்தது. ஆணையர் ஹென்றி ஹேர் டக்கரும் (Henrey Care Tucker) நீதிபதி பிரெடெக்ரிக் குபின்ஸும் (Frederick Gubbins) மீரட் கிளர்ச்சியை அறிந்ததும், நகரத்தின் நிலைமையை விழிப் புணர்ச்சியுடன் கவனித்தனர். வழக்கம் போல் தானிய விலை உயர்வானது, மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி யிருந்தது. ஆகையால், விலையைக் குறைக்கும்படி வணிகர்களிடம் வேண்டிக் கொண்டனர். குதிரைப் படையை விட்டு நகரைக் காவல் காத்தனர். ஒற்றர்கள் மூலம் நகர மக்களைப் பற்றியும், சிப்பாய்களின் மனநிலையையும் அவ் வவ்பொழுது அறிந்து வந்தார்கள். புயலின் அறி குறிகள் நீதிபதிக்கும், ஆணையருக்கும் புலப்பட வில்லை. எதுவும் நேராது, நேர்ந்தாலும் தங்களைப் பாதிக்காது என்றே அவர்கள் கருதினர். இருப்பினும், தற்காப்பு ஏற்பாடுகள் எதுவுஞ் செய்ய வில்லை. ஏன்? அவர்களும் ஆங்கில வீரர்களின் வருகையை எதிர் பார்த்தனர்,

ஏற்கனவே திட்ட மிட்டபடி, டெல்லியை மீட்கும் பொறுப்புப் பஞ்சாப் ஆணையர் ஜான் லாரன்ஸிடமும், கங்கை நதியோரப் பகுதிகளுக்கு வெள்ளைப் படைகளை அனுப்பும் பொறுப்புத் தலைமை ஆளுனர் கானிங்கிடமும் இருந்தன.

இதன்படி, கல்கத்தாவிலிருந்து அரசு அனுப்பிய முதல் ஆங்கில உதவிப் படை (44 வீரர்கள்) மே 24ம் நாள் காசியை அடைந்தது. ஒரே சமயத்தில் பல இடங்களிலிருந்தும் உதவி கோரப் பட்டதாலும், கான்பூரில் நெருக்கடி அதிகம் என்று கருதப் பட்டதாலும் அயோத்தி ஆணையர் ஹென்றி லாரன்ஸின் வேண்டுகோளுக்கிணங்கி, இம் முதல் உதவிப் படை கான்பூருக்கு அனுப்பப்பட்டது. காசியில் அபாயம் இல்லையென்பது, இதன் பொருளல்ல. அதற்கு வடக்கே 60 மைல் தொலைவில் இருந்த ஆஸாம்கார் (Azamgarh) என்ற ஊரிலிருந்த 17 வது அணி ஊசலாடிக் கொண்டுதான் இருந்தது. அங்கே, வீரர்கள் கிளர்ந்தெழுந்தால், மறுகணமே காசியில் அது எதிரொலிக்கும். இந்த நிலையில், காசிக்கு வந்த உதவிப் படையைக் கான்பூருக்கு ஏன் திருப்ப வேண்டும்? அங்கே, கிளர்ச்சியின் அறி குறிகள் அதிகமாயிருந்த அதுவே முதல் காரணம். வெள்ளை வீரர்கள் காசியில் தங்காமல் வேறிடத்திற்குச் செல்லுவதைச் சிப்பாய்களும், மக்களும் கண்டால், தங்களுக்கு எதிராகச் சதி நடக்கவில்லை; என்பதை அறிவார்கள். அதிகாரிகளின் மேல் இது நம்பிக்கையை வளர்க்கும். கிளர்ச்சிக்கு வாய்ப் பில்லாமலுஞ் செய்து விடலாம் என்பது இதன் துணைக் காரணம். ஆணையர் டக்கர், தலைமை ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் 'உதவிப் படையைத் திசை திருப்பி விட்டேன். இதனால், காசியைக் காக்க முடியாமல் போனால், என்னை மன்னிக்க வேண்டுகிறேன். ஏனெனில்? நல்ல நோக்கில் எடுக்கப் பட்டத் தவறான முடிவாக இதைக் கொள்ளல் வேண்டும்.' என்று கூறி யிருந்தார். ஆணையர் டக்கர் அசைக்க முடியாத மத நம்பிக்கையும், அஞ்சா நெஞ்சமுங் கொண்டவர். இவரிடம் மொத்தம் 50 வெள்ளை வீரர்களே இருந்தனர். தம்முடைய அச்சம் சிப்பாய்களுக்குத் துணிவைக் கொடுத்து விடும் என்றே கருதினார் அவர். ஆனால், திசை திருப்பப்பட்ட உதவிப் படை, கான்பூரைக் காக்கவில்லை; என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். காசியிலும் அபாயம் குறைந்து விட வில்லை. காசி, ஆஸாம்காரை நோக்கியது.

ஆஸாம்கார் கோரப்பூரை நோக்கியது! மே 30-ல் பல இடங்களில் தோன்றிய புரட்சி ஆஸாம்காரிலும் அத்தீயை மூட்டியது. இதற்கு எண்ணை ஊற்ற வடகிழக்கே தப்தி நதிக் கரையிலிருந்த கோரக்பூரிலிருந்து, அரசாங்கப் பணம் ரூபாய் 5 இலட்சம், தக்கக் காவலுடன் வந்து கொண்டிருந்தது. ஜூன் 3ஆம் நாள் ஆஸாம்காரிலிருந்து ரூபாய் 2 இலட்சங்களையும் சேர்த்து எடுத்துக் கொண்ட கருவூலம் காசிக்குப் புறப்பட்

டது. இதற்கு மேல் சிப்பாய்களால் பொறுக்க முடிய வில்லை! துப்பாக்கிகள் வெடித்தன. எதிர்பார்த்தது நடந்து விட்டது. என்றறிந்த வெள்ளைப் பெண்டு, பிள்ளைகள், கச்சேரியை நோக்கிப் பாதுகாப்பிற்கு ஓடினர். படை தளத்தில் இரண்டே அதிகாரிகள் தான் கொல்லப்பட்டனர். பிற வெள்ளையரைக் கொல்லாமல் விட்டதுடன், அவர்களுக்குப் பாதுகாப்பும் சிப்பாய்கள் அளித்தனர். அவர்களின் மனதை அறிவதே கடினமாக இருந்தது. பழியுணர்ச்சி ஒரு புறம், நன்றியுணர்வு மற்றொரு புறம், நன்றியுணர்வு பலமுறை வென்றது. அதிகாரிகளும் நல்ல முறையில் நடத்தப்பட்டனர். உடனே காசிக்குச் செல்லும் கருவூலத்தைக் கைப்பற்றப் புரட்சி வீரர்கள் ஓடினார்கள். ஆஸாம்கார் கிளர்ந்தெழுந்து விட்டது. என்ற செய்தி நொடிப் பொழுதில் காசிக்கு எட்டியது.

இவ்விதம் ஆஸாம்கார் பொறி காசியில் விழுந்து விட்டது. நெருப்பு பற்றும் முன்பே அதை, அணைக்க ஜேம்ஸ் நீல் (James Neil) கல்கத்தாவிலிருந்து வந்து சேர்ந்தான். டெல்லி வீழ்ச்சிக்குப் பிறகு பல இடங்களிலிருந்தும் வெள்ளை வீரர்களைத் தலைமை ஆளுநர் சேகரித்தார். அதன்படிச் சென்னையிலிருந்தும் நீலின் தலைமையில் ஒரு வெள்ளைப் படை, கல்கத்தாவை மே 23 ம் நாள் அடைந்தது. கான்பூரையும், இலக்னோவையும் பாதுகாப்பதே நீலின் குறிக்கோள். அதற்குள், காசி அவரின் தேவையை எதிர்பார்த்தது. கல்கத்தாவிலிருந்து இராணிகஞ்ச் வரைதான் நீலின் படை இரயில் பதையில் பயணம் செய்ய முடிந்தது. பின்பு, ஆங்கிருந்து மாட்டு வண்டிகளில் நெடுஞ்சாலையின் வழியே காசிக்கு அப்படை நகர்ந்தது. ஆஸாம்காரில் புரட்சித் தோன்றிய செய்தி காசியை அடைந்த அதே ஜூன் 3ம் நாள், நீல் தன்னுடையச் சென்னைப் படையுடன் (First Madras Fusiliers) காசியில் இறங்கினர்.


கிறித்துவ மதத்தின் மேல் அளவுகடந்த பற்று கொண்டவர் கர்னல் ஜேம்ஸ் நீல். கண்டிப்பிற்கும், கொடுமைக்கும் மறுபெயரே நீல்! ஆங்கிலேயர்கள் ஆளப் பிறந்தவர்கள்; என்பதில் அசையாத நம்பிக்கைக் கொண்டவர் நீல்! அவருடைய ஆற்றல், மேலிடத்தைப் பெரிதுங் கவரப் பட்டிருந்தது. அந்த நம்பிக்கை வீண்போக வில்லை. புரட்சியை அடக்கும் பணி தனக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு; என்று ஆர்வத்துடன் நீல் அதில் ஈடுபட்டார். பின்னர், புரட்சித் தீயில் எண்ணை ஊற்றியவரும் அவரே! வெள்ளையர்கள் விரைவில் பல வெற்றிகளைப் பெற்றதற்குக் காரணமும் அவரே! கிளர்ச்சியை முளையி

லேயே கிள்ளி எறிய நீல் முற்பட்டார். அவருடைய வேகத்திற்கும், கோபகத்திற்கும் பிற அதிகாரிகளால் ஈடு கொடுக்க முடியவில்லை.

ஜூன் 4ம் நாள், 37 வது அணி நகரில் உள்ள தீய சக்திகளுடன் உறவு கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்ததும், நீலின் வேண்டுகோளின்படி, காலங் கடத்தாமல், அன்றே அப் படையைக் கலைப்பதற்குப் பிரிகேடியர் பான்சோபி முடிவு செய்தார். 250 வெள்ளை வீரர்களை மட்டும் வைத்துக் கொண்டு, 2000 த்திற்கும் அதிகமான சுதேசிப் படையை அமைதியாகக் கலைப்பது என்பது கடினந் தான்; ஆனால், நம்பிக்கைக்குகந்த சீக்கியப் படை உதவிக்கு இருக்கிறது; என்ற துணிவில், அன்று மாலை அணி வகுப்பு நடத்தப் பட்டது. வெள்ளைப் படை சற்று தொலைவில் நிறுத்தப் பட்டது. அதிகாரிகளின் ஆணைப்படி 37 வது அணியிலிருந்த 400 வீரர்களும், தங்கள் துப்பாக்கிகளையும், குண்டுகளையும் உரிய இடத்தில் வைத்தனர். அது வரை நிகழ்ச்சிகள் அமைதியாகவே நடந்தன. ஆயுதங்களைக் கொடுத்த பின்னர் தான், தாங்கள் பாது காப்பு அற்றவர்கள் என்பதைச் சிப்பாய்கள் உணர்ந்தார்கள். அவர்களின் முணு முணுப்புப் படைதளத்தில் சலசலப்பை ஏற்படுத்தியது. 'நாம் ஏமாந்து விட்டோம்; ஆயுதங்களைப் பறித்துக் கொண்டார்கள்; இன்னுஞ் சிறிது நேரத்தில் வெள்ளைப்படை நம்மைச் சுட்டுக் கொல்லும்!' என்ற சிப்பாய்களின் பதட்டம் நிறைந்த இப் பேச்சைக் கேட்டுப் பிரிகேடியர் பான்சோபி நெருங்கி வந்தார். நாங்கள் எந்தத் தவறுஞ் செய்ய வில்லையே? ஏன் எங்கள் ஆயுதங்களைப் பறித்தீர்கள்?' என்று ஒரு சிப்பாய் இரைந்து கேட்க, அதற்குப் பிரிகேடியர், 'நீங்கள் தவறு செய்ய வில்லை என்பது உண்மைதான். ஆனால், பிற இடங்களில் சிப்பாய்கள் தங்கள் நம்பிக்கைப் பிரமாணத்தை உடைத்து விட்டு, வெள்ளையர்களைக் கொன்று விட்டனர். எனவே, நீங்கள் ஆயுதங்களைச் சரண் செய்வது அவசியமானது.' என்று இந்தி மொழியிலேயே பதிலளித்தார். அவர் பேசிக் கொண்டிருந்த போது சிப்பாய்கள் கூச்சலிட்டனர். இதைக் கண்டதும் சற்று தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த வெள்ளைப்படை இரண்டடி முன்னே எடுத்து வைத்தது. திடீரென வெடியோசை கேட்டதும் சிப்பாய்கள் 'திமுதிமு' வென்று ஓடித் துப்பாக்கிகளை எடுத்து அதிகாரிகளைச் சுடத் தொடங்கினர். வெள்ளைப் படையும் எதிர்த்துச் சுட்டது. சிதறி ஓடிய சிப்பாய்கள் தங்கள் குடியிருப்பு வரிசைகளில் மறைந்திருந்து தீரத்துடன் எதிர்த்

தனர். அவ் வேளையில், அங்கு வந்த சீக்கியப் படை, ஒன்றும் விளங்காமல் சிறிது நேரம் அசைவற்று நின்றது. சுதேசி சிப்பாய்களுக்கு நேர்ந்த அதே கதி தங்களுக்கும் நேருமோ! என்ற பீதி, அச் சீக்கியப் படையினரைப் பற்றியதும், குழப்பத்தில், அவசரத்தில், தன்னை நம்பிய வெள்ளையர்களை, அப் படை எதிர்த்துத் தாக்கியது. சீக்கியரின் இந் நடத்தையைக் கண்ட வெள்ளையர்கள் திகைத்தனர். நீலின் தருணம் வந்து விட்டது. சிறிது நேரத்தில், பிரிகேடியர் பான்சோபியிடமிருந்து படைத் தலைமையை அவர் பெற்றார். பான்சோபி, ஏற்கனவே உடல் நலமின்றி இருந்தது உண்மை யெனினும், நெருக்கடி நேரத்தில் இந்த அவசரத் தலைமை மாற்றம், இவ்வளவு விரைவில் எப்படி? ஏன் நிகழ்ந்தது? என்று விளங்க வில்லை; என்பது மட்டும் உறுதி. நீலின் தலைமை இப்போது உடனடியாகத் தேவை. சிறிது நேரத்தில் நீல் புயலாய்ச் சாடினார்! சில நூறு வெள்ளையர்கள், சிலமணி நேரத்தில் பல நூறு சிப்பாய்களை விரட்டி அடித்தனர்; சுட்டும் வீழ்த்தினர்; சிப்பாய்களின் குடிசைகளுக்குத் தீயும் வைத்தனர். சிதறிய புரட்சி வீரர்கள் காசி நகருக்குள் ஓடினர். காசிப் படையின் ஆயுதப் பறிப்பு மிக அவசரத்தில் முறையின்றி நடத்தப்பட்டதாகத் தோன்றலாம். இதை அதிகாரிகளின் தவறு என்று நாம் சொல்வதற்கில்லை. சூழல், இவ் வேகத்தையும், இத் தவற்றையும் அளித்திருக்கலாம். இது போன்ற விரைவான செயல்கள் சில வேளைகளில், கேடான விளைவுகளை ஏற்படுத்துவதும் வழக்கமே. அக் காட்சியில் பங்கு பெற்றவர்கள் எந்த நிர்ப்பந்தத்தில் இருந்தார்களோ? யார் அறிவார்?

அன்றிரவு, நகரம் கலகலத்தது. வெடியோசைகளும், குதிரைக் குளம்படிகளின் ஒலியும் விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தன. கிறித்துவர்களும், வெள்ளையர்களும் தங்களால் சுமக்க முடிந்த பொருள்களைத் தூக்கிக் கொண்டு நாணயச் சாலையை (Mint) நோக்கிப் பாதுகாப்பிற்கு ஓடினர். சர்தார் சுரத்சிங் என்ற சீக்கியரும், அரச ஊழியர் பண்டின் கோகுல் சந்த் என்ற பிராம்மணரும், தேவ் நாராயண்சிங் என்ற இந்து சீமானும் ஆங்கிலேயருக்கு அன்று உதவி யிரா விட்டால், கலகக்காரர்கள் காசியைப் பிடித்திருப்பார்கள். என்ன காரணத்தாலோ? அடுத்த நான்கு நாட்களுக்குக் காசியில் அமைதி நிலவியது. எதிர் பார்த்தபடி சிப்பாய்கள் வெள்ளையர்களைக் கொல்ல வில்லை. அவர்களின் இல்லங்களைக் கொளுத்த வில்லை. கரு வூலத்தைக் கவர வில்லை. சிறைச் சாலையை உடைக்க வில்லை. அதற்குப் பதில் சிப்பாய்கள் நாட்டுப்



கலகச் சிப்பாய்கள் பீரங்கியால் சுடப்படுதல்

புறங்களில் ஊடுருவினார்கள். கிராம மக்களுடன் சேர்ந்து கொண்டு பரங்கியர்களின் தயவில் வாழ்ந்த பணக்காரர்கள் பலரைக் கொன்றார்கள். இது நம் கவனத்திற்கு மிகவும் உரிய தொரு செயலாகும். வன்முறையில் சட்டம், ஒழுங்கு எல்லாம் தூக்கி எறியப் பட்டன. வெள்ளைப் பரங்கியர்களின் ஆட்சி முடிவுற்றது; என்று பல பொது மக்களும் நம்பினர். கும்மாள மிட்டனர். அப் பூனைகள் கண்களை மூடிக் கொண்டன.

ஜூன் 9ம் நாள் காசியிலும், அலகாபாத்திலும் இராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அதற்குள், வெள்ளையர் இரத்தம் சூடேறி விட்டது. பழிவாங்கக் கருவிக் கொண்டிருந்த வெள்ளை வீரர்கள் இரத்த வேட்டையாடப் புறப்பட்டார்கள். புரட்சி வீரர்களைத் தேடிப் புறப்பட்டனர்......ஊரில் கிடைத்த குற்றவாளிகள் இழுத்து வரப்பட்டனர்...பெயரளவில் இராணுவ விசாரணை நடந்தது. எண்ணற்ற தூக்கு மேடைகள் நிறுவப் பட்டன. அகப்பட்டவர்களெல்லாம் நாய்களைப் போல், நரிகளைப்போல் தூக்கிலிடப்பட்டனர். நூற்றுக் கணக்கில் பிணங்கள் தொங்கி ஆடின. வேடிக்கைக்காகப் புரட்சி முழக்கமிட்ட சிறுவர்கள் கூட இக்கொரேத்திற்கு அளானார்கள். தூக்கு மேடைகள் போதவில்லை; ஆலமரக்கிளைகளில் பாசக்கயிறுகள் வீசப்பட்டன. அதன் கீழ் நிற்கும் வண்டிகளில் வரிசையாக நிறுத்தப்பட்ட குற்றவாளிகளின் கழுத்துகளில் கயிறுகள் இறுக்கப்பட்டன. சவுக்கடியில் மாடுகள் ஓட, வண்டிகள் விலக, 'சரக்'கென்று இறங்கிய உடல்கள் துடித்தன! தொங்கிய நாக்குடன் அழுகிய பிணங்கள் அம் மரக்கிளைகளில் பல நாட்கள் ஊசலாடின. ஒன்றுமறியா அப்பாவிகள், எத்தனை பேர் இறந்தனரோ? நீல் அதை யெல்லாம் ஆராயத் தயாரா யில்லை. கறுப்பன் கலகக்காரன், தூக்கிலேற்ற அதுவொன்றே அவனுக்குப் போதும். நீலின் கொடூரம் எங்கும் எதிரொலித்தது. அவன் உமிழ்ந்த தீயில்தான், எல்லாம் எரிந்தன! நீலின் பெயர் ஒலித்த இடமெல்லாம் புரட்சியும் வெடித்தது.

இக் கொடுமைக்கு முன்னரே, காசிக் கலவரத்திற்கு மறு நாளே, அவ் விடத்திற்கு வடமேற்கே கோமதி நதிக் கரையிலிருந்த ஜான்பூர் (Janupur) கிளர்ந்தெழுந்தது. நம்பிய வீரர்களைக் காசி ஆங்கில அதிகாரிகள் மிருகத்தனமாகச் சுட்டுக் கொன்றார்கள்; என்று திரிக்கப்பட்டச் செய்தியைக் கேட்டுச் சிப்பாய்கள் வெகுண்டெழுந்தனர். ஜூன் 5ம் நாள் தங்கள் அதிகாரிகளைச் சுட்டுக் கொன்று விட்டுக் கருவூலத்தைச் சூறையாடி

னார்கள். செல்வந்தர்களைத் தாக்கினார்கள். தப்பி யோடிய வெள்ளையர்கள், ஒரு சாயப் பட்டறையில் தஞ்சம் புகுந்தனர். இங்கு நடந்த கிளர்ச்சியில் சிக்கிய வீரர்களும் கலந்து கொண்டனர்; என்பது குறிப்பிடத்தக்கது. காசியில் எதிர்பார்த்த அளவிற்குச் சேதம் விளைய வில்லை; எனினும், நீல் கொடூரமாகப் பழிவாங்கத் தொடங்கி விட்டான். ஆகவே, அங்கிருந்த ஆங்கில உதவிப் படைகள் பிற கலவரப் பகுதிக்குள் விரைந்தன. நீலின் கொடுமைகள் எட்டிய இடங்களிலெல்லாம் கலவரங்கள் தோன்றின. அப்படித் தோன்றிய இடங்களி லெல்லாம் நீலின் கருங்கிழலும் தொடர்ந்தது!

# 14. அலகாபாத் வழியாக...

[ஆலகாபாத் அமைப்பு—சீக்கியப்படை—முஸ்லிம்கள் பெரும்பான்மை—ஆணையர் டெஸ்டர்—ஊரில் பதட்டம்—ஈத் பண்டிகை தளபதி சிம்சன்—இங்கிலாந்து இளைஞர்கள்—படைத் தளத்தில் விருந்து—கிளர்ச்சி—கருவூலக் கொள்ளை—சிப்பாய்கள் வீடு நோக்கி—தாலுக்தார்களும், குடியானவர்களும் கிளர்ச்சியில் பங்கெடுத்தனர்—மௌல்வி லியாகத் அலி—நீலின் வருகை—நீல் அமைதியை நிலை நாட்டுதல்—கான்பூருக்கு உதவிப் படை செல்லுதல்.]

காசிக்கு 70 மைல் மேற்கே, கங்கையும், யமுனையும் (முன்பு சரஸ்வதியும்) சங்கமமாகும் இடத்தில்தான் பிரயாகை என்றழைக்கப்பட்ட அலகாபாத் இருக்கிறது. காசியைப் போல அழகாக இல்லையெனினும், அது ஒரு செழிப்பான ஊர். அரசியல் முக்கியத்துவம் நிறைந்திருந்ததால், அதனுடைய பாதுகாப்பு, அரசுக்குப் பெரு நன்மை பயக்கும் ஒன்றாகும். துல்லியமாய் ஓடிவரும் யமுனை நீர், அங்கே அகன்ற கங்கையுடன் கலந்து, வெள்ளமாய் கிழக்கு நோக்கி ஓடுகிறது. இரு கரைகளும் பசுமையான சோலைகளால், நிரம்பியிருக்கின்றன. கரைக்குச் சற்று தூரத்தில், கனத்த உயர்ந்த மதில்களாலான பழைய கோட்டையொன்றும் அங்கே கம்பீரமாய் நிற்கிறது. போர்த் தளவாடங்கள் நிரம்பிய அக்கோட்டைக் கருகிலேயே கருவூலமும் இருக்கின்றது.

மே 12ஆம் நாள் மீரட் கிளர்ச்சியையும், அதன் பின்பு டெல்லியின் மொகலாய மீட்சியையும் அலகாபாத் அறிந்து கொண்டது. அங்கே, நிறுத்தப்பட்டிருந்த 6-வது சுதேசிப் படையுடன் ஃபெரோஸ் பூரிலிருந்து வந்த சீக்கியப் படையும் இணைக்கப்பட்டிருந்தது. சில நாட்களுக்குப் பிறகு அயோத்தி ஆணையர் சர் ஹென்றி லாரன்ஸ் அங்கு ஒரு குதிரைப் படைப் பிரிவை அனுப்பினார். அச் சுதேசிப் படைகளில் கோட்டைக்குள் ஒரு பகுதியும், இரண்டு மைல்களுக் கப்பால் நதியோரத்தி

யிருந்த படை தளத்தில் பெரும் பகுதியும் நிறுத்தப் பட்டிருந்தது. அலகாபாத்தின் ஆணையராகச் செஸ்டர் என்பவரும், நீதிபதியாக கோர்ட் (Court) என்பவரும், இருந்தனர். படை அதிகாரிகளும், அரசு அலுவலர்களும், ஐரோப்பியப் பகுதிகளில் மலர் வனங்களால் சூழப்பட்ட பெரும் இல்லங்களில் வாழ்ந்து வந்தனர்.

காசியில் இந்துக்களைப்போல், அலகாபாத்தில் ,முஸ்லிம்கள் பெரும் பான்மையராக இருந்தனர். இவர்கள் மத்தியில் நச்சு மிகுந்த வதந்திகள் வேகமாகப் பரவி விட்டன. மீரட், டெல்லி புரட்சிகளை எதிர் பார்த்தவர்களும், ஆதரித்தவர்களும், மிகத் திறமையாகத் தீய செய்திகளைப் பரப்பினர். நகரிலும், படை தளத்திலும் வதந்திகள் பரவவே, அச்சமும் கூடவே படர்ந்தது. தங்கள் கதியும் மீரட் வீரர்களைப் போலாகுமோ? என்றஞ்சிய அலகாபாத் வீரர்கள், ஆர்வத்துடனும், பதட்டத்துடனும் இவ் வதந்திகளைக் கேட்டனர்; பரப்பினர்; யார் புரட்சியாளரின் நண்பர்கள்? யார் வெள்ளையர்களின் ஒற்றர்கள்? என்பதை அறிய முடிய வில்லை. நகர அங்காடிகளில் விலைவாசி ஏறியிருந்ததால், அன்னியரின் ஆட்சி மீது வெறுப்பு வளர ஏதுவாயிற்று. இந்த நிலையிலும், எதுவும் நேர்ந்து விடாது, என்ற நம்பிக்கை எல்லா ஆங்கில அதிகாரிகளிடமும் இருந்தது, 6-வது சுதேசிப் படையின் மேல் அவர்களுக்கு அளவு கடந்த நம்பிக்கை இருந்ததுதான் அதற்குக் காரணம். அப் படையின் தளபதி கர்னல் சிம்சனும், அதிகாரிகளும் அவ் வீரர்களைத் தங்கள் சொந்தப் பிள்ளைகளைப் போலப் பேணி வந்தனர்.

மே 22ஆம் நாள் ஆங்கில அதிகாரிகள் எடுத்த முடிவின் படி, கலகந் தோன்றினால், ஆங்கிலப் பெண்டிரும், குழந்தைகளும் கோட்டைக்குள் புகுந்து கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்; நல்ல உடல் நிலையில் உள்ளப் பிற அரசுப் பணியாளர்கள் அனைவரும் துணைப்படைப் போலப் பணிபுரிய வேண்டும்; என்று திட்டமிடப் பட்டது. மே 25 ஆம் நாள் 'ஈத்' விழா வன்று, இந்து-முஸ்லிம் வன்முறை தோன்றலாம், என்று எதிர்பார்த்ததும் நடக்க வில்லை. மே மாதம் முடியும்வரையும் எதுவும் நேரவில்லை. புரட்சியை அடக்க டெல்லி செல்லவும் 6 வது அணி வீரர்கள் முன் வந்தனர். அவர்களின் ஆர்வத்திற்கு நன்றிகூறி, தலைமை ஆளுநர் கூடக் கல்கத்தாவிலிருந்து செய்தி அனுப்பினார். அலகாபாத்தின் அந்த அமைதி, சிலருக்குத் துக்கத்தையும், பலருக்குத் துடிப்பையும் அளித்துக் கொண்டிருந்தது!

காசியிலே கலவரம் என்று, ஜூன் 4ஆம் நாள் தளபதி கர்னல் சிம்சனுக்குத் தந்தி கிடைத்ததும், உடனடியாகக் கோட்டைக் கதவுகளை மூடும்படி ஆணையிட்டார். உரிய அனுமதிச் சீட்டின்றி எவரும் உள்ளே செல்லவோ, வெளியேறவோ கூடாது என்று தடை விதித்தார். காசிப் புரட்சி வீரர்கள் எவ்வினாடியும் இதனுள் நுழையலாம் என்று கருதி, காசிச் சாலை மேலிருந்த படகு பாலத்தில் 6 வது அணியின் ஒரு பகுதியை நிறுத்தினார். பாலத்திற்கும், படை தளத்திற்கும் இடையே அயோத்தி குதிரைப் படையை நிறுத்தினார். உண்மையிலேயே 6 வது சுதேசிப்படை நம்பிக்கைக்குந்ததா? இல்லை. பல நாட்களுக்கு முன்பே புரட்சி விதைகள், அங்கே ஊன்றப் பட்டிருந்தன. உப்பிட்ட எசமானர்களை எதிர்ப்பதா? அல்லது, தம் தோழர்களுக்கு உதவப் புரட்சியில் ஈடுபடுவதா? என்று அவர்களின் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. அது ஓசையின்றி ஊசலாடியதால், அதிகாரிகள் அவ் வீரர்களைச் சந்தேகிப்பதற்கு வழியில்லை. இந்த நிலையில்தான், காசிக் கலவரத்தை அவர்கள் அறிந்தனர். காசியின் 37 வது அணிப் படை வீரர்களின் ஆயுதங்கள் முதலில் பறிக்கப்பட்டுப் பின்னர் வெள்ளை வீரர்களால் சுட்டுத் தள்ளப் பட்டனர். என்றறிந்ததும், அலகாபாத் சிப்பாய்களும் வெகுண்டனர். எக்கணத்தில் நீல் வருவானோ? உயிர் பறி போகுமோ? என்று மருண்டனர். என்ன செய்வது? காசி வீரர்கள் இங்கே வந்தால், அவர்களுடன் சேர வேண்டியதுதான்! கடந்த இரண்டு நாட்களில் வீரர்களின் மனம் மாறியிருப்பதாகத் தளபதி சிம்சன் கேள்விப் பட்டாலும், அதை அவர் நம்பவில்லை. ஜூன் 6ம் நாள் மாலை அணி வகுப்பில் ஆணையர் செஸ்டர் வீரர்களின் கடமையுணர்வையும், வீரத்தையும், நம்பிக்கையையும் பாராட்டிப் பேசினார். புகழ்ச்சியில் வீரர்கள் மகிழ்ச்சி ஆராவாரஞ் செய்ததைக் கண்டு கூடுதல் நம்பிக்கையுடன், அதிகாரிகள் இரவு படை தள விருந்தில் உற்சாகத்துடன் காணப் பட்டனர். அந்த விருந்தில், சில இளைஞர்கள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தார்கள். அண்மையில், இங்கிலாந்திலிருந்து வந்திருந்த, 18 வயதிற்கு மேற்படாத அவ் விளைஞர்கள் மலர்க் கொத்தாய் விளங்கினர். சிவந்த கன்னங்கள், குறுகுறுத்த நீல விழிகள், பெற்றோரை விட்டுப் பிரிந்த ஏக்கம், தாய் நாட்டின் வெற்றிக்கும், பெருமைக்கும், இவ் விளவயதில் பணியாற்றப் போகிறோம் என்ற பெருமிதம், இத்தனையும் அவர்களின் முகங்களில் தெரிந்தன. விருந்துக் கிடையில் தள

பதி சிம்சன் தம் அலுவல்களையும் கவனித்தார், படகுப் பாலத்தில் வைக்கப்பட்டிருந்த இரு பீரங்கிகளைக் கோட்டைக்குள் கொண்டு வரும்படி ஆணையிட்டார்.

விருந்து முடிந்தது. வீரர்களைச் சந்தேகிக்கத் தேவையில்லை. தினமும் அனுபவித்த பதட்டமும் மறைந்தது. படை அதிகாரிகளும், பிற அலுவலர்களும் மனநிறைவுடன் தத்தம் இல்லங்களுக்கு நடந்தும், குதிரைகளின் மீதும் சென்றனர். இல்லங்களை அடைந்ததும் சிலர் உறங்கினர்; சிலர் படித்தனர்; சிலர் குடும்பத்துடன் சிட்டாடிக் கொண்டிருந்தனர். ஒரு பெரும் அபாயத்திலிருந்து தப்பியது போன்ற மன நிறைவுடன், அக் கோடை நிலவின் குளுமையையும், தென்றலின் மென்மையையும் அனுபவித்துக் கொண்டே கர்னல் சிம்சன் தன் இல்லத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார். இரவு மணி 9 அடித்தது... ஊய்... ஊய்... என்ற ஒரு ஊதல் ஒலி அலகாபாத்தின் அந்த காரத்தைக் கிழித்தது! ஆங்கில நெஞ்சங்கள் இடிந்தன! இரத்தம் உறைந்தது! கவலைக்கு இட மில்லை; என்று சற்று முன்னர் தான் பெரு மூச்சி விட்டிருந்தார்கள். நொடிப் பொழுதில் கர்னல் சிம்சன் தம் இல்லத்திற்கு ஓடி, குதிரையில் தாவி ஏறி படைத் தளத்திற்குப் பறந்தார். சிறிது நேரத்தில் பிற அதிகாரிகளும் அங்கேக் கூடி விட்டனர். எதிர் பார்த்த இடி விழுந்து விட்டது...ஆம்...6 வது அணி கலகத்திலிறங்கி விட்டது!

நடந்தது இது தான். படகுப் பாலத்திலிருந்த பீரங்கிகளை அகற்ற தளபதி சிம்சன் ஆணைப்படி ஹார்வர்ட் அங்கே வந்தார். அங்கேக் காவலிலிருந்த 6 வது படையின் ஒரு பிரிவு இதைக் கண்டு அஞ்சியது. பீரங்கிகளைக் கொண்டு தான் காசியில் தங்கள் தோழர்கள் சுடப் பட்டார்கள்; என்பதை அவர்கள் அறிந்திருந்ததால், நியாயமான அச்சம் அவர்களிடையே தோன்றியது. பீரங்கிகளை அகற்றக் கூடாது என்று, அவர்கள் ஆயுதங்களை நீட்டித் தடுத்ததும், பயந்து விட்ட அதிகாரி தூரத்திலிருந்த குதிரைப் படையை ஏவினார். ஆனால், அப் படையும் சிறிது நேரம் அசைவற்று நின்று, பின்பு காலாட் படையுடன் சேர்ந்தது! சிறிது நேரச் சல சலப்பிற்குப் பிறகு ஊதல் ஒலி கேட்டது. அலகாபாத் எழுந்து நிமிரும் முன்பே, துப்பாக்கிகள் வெடித்தன. முகத்திலும், மார்பிலும் கத்திக் குத்துகளைத் தாங்கிக் குதிரைப் படைத் தலைவர் அலெக்ஸாண்டர் பிணமானார். சிறிது நேரத்தில் எல்லா அணிகளும் முன்னேற் பாடான சைகையின்படி ஒன்று சேர்ந்தன.

பீரங்கிகளை இழுத்துக் கொண்டு படை தளத்தை நோக்கி ஓடினர். தளபதி சிம்சன் தளத்தை அடையு முன்பே, கொந்தளிப்பும், கொலையுங் கட்டுக் கடங்காமல் போய் விட்டன. அதிகாரிகளின் ஆணை, பயனற்றுப் போனதுடன் அவர்கள் எதிர்த்தும் தாக்கப் பட்டனர். படை தளத்தில் குதிரைகளின் கனைப் பொலியும், பீரங்கிகளின் முழக்கங்களும், பயங்கரமாக ஒலித்தன. அதிகாரிகளில் பலர் கண நேரத்தில் பிணமாயினர். தளபதி சிம்சன் கருவூலத்தைக் காக்க விரைந்தார். அவருடைய குதிரை குண்டடிபட்டுக் குருதி கொட்ட ஓடியது. கால் இடறிய இட மெல்லாம் வெள்ளைப் பிணங்கள் சிதறிக் கிடந்தன. அந்த இளைஞர்கள்! அண்மையில் இங்கிலாந்திலிருந்து வந்தவர்கள். அதில் எழுவர் உணவுக் கூடத்திலிருந்து வெளியேறும் போது கோரமாகக் கொலை செய்யப் பட்டனர். படை தளத்தில் எஞ்சி யிருந்த பரங்கி அதிகாரிகள் தப்பி ஓடினர்.

6வது படையின் ஒரு பகுதி, கோட்டைக் குள்ளும் இருந்தது. அவ் வீரர்களும், சீக்கியர்களும் இணைந்தால் கோட்டைக் குள் ஒரு வெள்ளை உயிரும் மிஞ்சாது! தளபதி சிம்சன் கோட்டைக்குள் விரைந்து சென்று, அவ் வீரர்களின் உடனடி ஆயுதப் பறி முதலுக்கு ஆணை யிட்டார். கோட்டைக்குள் பாது காவல் பலமாக இருந்தது. உள்ளிருந்தவர்களில் எவர் கிளர்ச்சிச் செய்தாலும், கோட்டைச் சுவர்களில் பொருத்தப் பட்டிருக்கும் பீரங்கிகள் அவர்களைப் பிய்த்து சிதறடிக்கும்! அதற்கஞ்சிய சிப்பாய்கள் ஆணைக்குக் கட்டுப் பட்டுத் தங்கள் தங்கள் ஆயுதங்களை மரியாதையுடன் கீழே வைத்தார்கள். கோட்டையை விட்டு வெளியேற்றப் பட்ட அச் சிப்பாய்கள், நேராகச் சென்று கிளர்ச்சிக் கொடியை ஏந்தினார்கள். அன்றிரவு படை தளத்திலும், கோட்டையிலும் எழுந்த கிளர்ச்சிக் குரல் அலகாபாத் நகரில் பெரும் ஓசையுடன் எதிரொலித்தது. ஊர் மக்கள் திரண்டு புரட்சிக் குதவ ஓடினர்! சிறைச் சாலையைத் தாக்கி உடைத்தனர். அறுந்த சங்கிலிகள் காலில் தொங்கத் தொங்க விடுபட்ட கைதிகள் வேட்டையில் கலந்தனர். ஊரின் போக்கிரிகளுக்கு அது ஒரு சொர்க்க இரவாகியது! தந்திக் கம்பிகள் துண்டிக்கப் பட்டன; அரசு அலுவலகங்கள் தகர்க்கப் பட்டன; ஊராரும், சிப்பாய்களும் வெள்ளையர் பகுதிக்குள் நுழைந்து விட்டனர். எதிர்ப்பட்ட ஆங்கிலேயரும், ஆங்கிலோ இந்தியரும் கொலை யுண்டனர்; வெள்ளையர் இல்லங்கள் தீக் கிரையாயின; இருட்டில் சிக்கிய வெள்ளை ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும் படு கொலைக் குள்ளானார்கள். பிணங்

கள் கீறப் பட்டன;...அறுக்கப் பட்டன;...நெருப்பில் வாட்டப் பட்டன! தீ நாக்குகள் சுழன்று சுழன்று எரிய, நகரெங்கும் புகை சூழ்ந்தது. இரத்த வெறி கொண்ட அக் கூட்டம், பரங்கியரை மட்டுமன்றி வங்காள யாத்ரீகர்களையுங் கொன்றது; வணிகர்களைக் கொன்று பணத்தைக் கவர்ந்தது; வழிப் போக்கர்களைக் கொன்று சில்லரையைப் பறித்தது! எங்கெங்கு காசின் ஓசை கேட்டதோ! அங்கெல்லாம் கொடூரம் தலை விரித்தாடியது. விடியும் முன்பே கொத்தவால் சாவடியின் (காவல் நிலையம்) உச்சியில் இஸ்லாமியப் பச்சைக் கொடி பறந்தது!

அவர்களுக்கு இலட்சியம் சிறிதும் இல்லை யென்று கூற முடியாது. நாட்டுப் பற்றுல், புரட்சி என்ற புனிதப் பணியின் நினைவால் 30 லட்சம் ரூபாய்கள் இருந்த கருவூலத்தைக் கைப்பற்றியும், கொள்ளை யடிக்காமல் சிப்பாய்கள் அன்றிரவு காவல் காத்தனர். அது மட்டுமன்றி, அதை டெல்லிக்குக் கொண்டு சென்று பாதுஷாவின் காலடியில் சமர்ப்பிக்கவும், கண்ணியமான முடி வெடுத்தனர். ஆனல், பொழுது புலர்வதற்குள் புத்தி மாறி விட்டது! கிடைத்ததை ஏன் துறக்க வேண்டும்? இப் போர்த் தொழிலில் வாழ் நாளெல்லாம் உழைத்தாலும் கிடைக்காத செல்வமல்லவா இது! அருகிலிருந்து கண்ணைச் சிமிட்டுகிறது! அப் பண முடிச்சுகளைப் பார்த்துக் கொண்டே இருந்ததில் சிப்பாயிகளின் வாயில் நீர் சுரந்து விட்டது! டெல்லி, நாட்டுப் பற்று, பாதுஷா, புரட்சி எல்லாம் புகை யாயின! மனதை அடக்க முடியாமல் கருவூலக் கதவுகளைத் திறந்தனர். 1000 ரூபாய் முடிச்சுகளாகப் பணங் குவிந்து கிடந்தது. விறு விறு வென்று பைகளை இழுத்துத் தலைக்கு நான்கைந்து பைகளாகப் பகிர்ந் தெடுத்துக் கொண்டு நடையைக் கட்டினர்கள். இனிய நினைவுகளுடன், செல்வனாகி விட்டோம் என்ற பெரு மிதத்தில், புரட்சியை மறந்து, பரங்கியரை மறந்து மனைவி மக்களைக் பார்க்க, தங்கள் தங்கள் கிராமங்களை நோக்கிச் சிப்பாய்கள் ஓடி மறைந்தனர்! சுதேசி வீரன் சுயநலப் பேயாகி விட்டான். தேசியம் பொய்த்தது; விடுதலை கருகியது; இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? நாம் தான் ரூபாய் ஐயாயிரத்திற்கு அதிபதியாகி விட்டோமே! என்று எண்ணினர் போலும்.

காசியைப் போலவே அலகாபாத்திலும் குடியானவர்கள் கிளர்ந் தெழுந்தனர். ஆங்கில ஆட்சியில் உரிமை இழந்த தாலூக்தார்கள் புரட்சியைப் பயன் படுத்தி விவசாயிகளுக்குத் தலைமை தாங்கினர்கள். கங்கைக் கப்பாலும், இரு நதிகளுக்

கிடைப் பகுதி'யிலும் (The Doab – கங்கை, யமுனை நதிகளின் இடைப் பகுதி) புரட்சி, வெள்ளமாய் ஓடியது. சட்டம், ஒழுங்கு முதலியன காற்றாய்ப் பறந்தன. நிலமிழந்த முஸ்லிம் சீமான்களும், செல்வாக்கிழந்த அலகாபாத் பிராம்மணர்களும் வெஞ்சினத்துடன் புரட்சியில் கலந்தனர். வெள்ளையனை வெளியேற்றினால்—தான், தாங்கள் இழந்த உரிமைகளைப் பெற முடியும், என்பதை நன்கு புரிந்து கொண்டவர்கள் அவர்கள். சிற்றரசர்கள் பலர் நடு நிலைமையிலும், சிலர் வெற்றி பெறும் தரப்பிலும் தங்களை இணைத்துக் கொண்டனர்.

சில நாட்களில் அலகாபாத்தில் கொந்தளிப்பு அடங்கியது. அது வரை யாரும் அறிந்திராத ஒருவன் புரட்சியின் தலைவனானான். பிறப்பால் நெசவாளியாகவும், தொழிலால் ஆசிரியனாகவும் இருந்த அந்த மௌல்வி லியாகத் அலி, ஒரு புதிராக விளங்கினான். மந்திர சக்தி பெற்றிருப்பதாகவும், நீண்ட நாட்களாகப் புரட்சிக்கான சதித் திட்டங்களைத் தீட்டிச் சிப்பாய்களுடன் இரகசியத் தொடர்பு கொண்டிருந்தானெனவும் கருதப்பட்ட அவன் மக்களிடம் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தான்; என்பதில் ஐய மில்லை. இந்த மௌல்வி, டெல்லி பாதுஷாவின் பெயரில், அலகாபாத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இவனாலும் நகரில் ஒழுங்கை ஏற்படுத்த முடியவில்லை. இவனுடைய தலை யீட்டால், சில இந்திய கிறித்துவர்கள் தங்கள் மதத்தை மாற்றிக் கொண்டு உயிர் பிழைத்தார்கள். லியாகத் அலியால் அலகாபாத்தைத் திருத்தி ஆள முடிய வில்லை. வேறு முறையில் இதைச் சாதிக்க ஒருவன் விரைந்து வருகிறான்!

காசியில் கலவரத்தை அடக்கிக் குற்றவாளிகளை மரக் கிளைகளில் தொங்க விட்டு, ஜூன் 9ம் நாள் ஜேம்ஸ் நீல் அலகாபாத்தை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தார். கோடை வெய்யிலில் 70 மைல்களை வேகமாகக் கடந்து கொண்டிருந்தார். வழி யெங்கும் புரட்சியின் கோரத் தாண்டவத்தால் குடிசைகள் எரிந்தன! கிராமங்கள் எரிந்தன! வரிப் பணங் கொள்ளை! சுங்கச் சாவடிகள் தகர்ப்பு! இந் நிலையில் அங்கே ஆங்கில அதிகாரி ஒருவன் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்தான்; அவனுடைய மகளை ஜமீன்தார் ஒருவன் கடத்திச் சென்று விட்டான். நீலின் படைகளைப் புரட்சி வீரர்கள் மறைந்திருந்து தாக்கினர். இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஜூன் 11ம் நாள் உச்சி வேளையில், படகு பாலத்தில் பெரும் ஆபத்தைக் கடந்து, கோட்டைக்குள் நீல் நுழைந்தார்!

அக் கடும் கோடைப் பயணம் அவருடலைப் பெரிதும் பாதித்திருந்தது. அவரால் சில நிமிடங்கள் கூட நிற்கவே முடியவில்லை. நகரம், புரட்சிக் காரர்களிடமும், கோட்டை, ஆங்கிலேயரிடமும் இருக்கும் நிலையை உணர்ந்த நீல் ஓய் வெடுத்துக் கொண்டே போரை நெறிப்படுத்தத் தொடங்கினார். அவருடைய வரவால் வெள்ளையர்கள் புது வேகம் பெற்றனர்.

அடுத்த இரண்டு நாட்களில், நீல் சில மாற்றங்களைச் செய்தார். நதிக் கரையில் ஐரோப்பிய வணிகர்களுக்குரிய பண்டக சாலையில், மது வகைகள் ஏராளமாக வைக்கப் பட்டிருந்தன. கலவரத்தில் வாணிகம் சீர் குலைந்ததால், கவனிப் பாரற்றுக் கிடந்த அம் மதுப் புட்டிகளைக் கோட்டை குள்ளிருந்த சீக்கிய சிப்பாய்கள் சென்று கொள்ளை யடித்தனர். மீண்டும் கோட்டைக்குள்ளே வந்து வெள்ளை வீரர்களுக்குக் குறைந்த விலையில் அவற்றை விற்றுக் கொண்டிருந்தனர். கோட்டைக்குள் இரண்டு நாட்களாக மதுவின் ஆட்சி முழுமையாகச் செயல்பட்டது. வெள்ளை வீரர்களும், பிற சிப்பாய்களும் போதையில் தள்ளாடினர். நீல் நிலைமையை ஆராய்ந்தார். ஏற்கனவே, காசியில் சீக்கியரின் நம்பிக்கைத் துரோகத்தை அறிந்திருந்தாலும், தற்போது பரங்கிப் படையின் ஒழுங்கிற்கு ஊறு விளைவித்தலாலும், சீக்கிய வீரர்களைக் கோட்டையி லிருந்து வெளியேற்ற முடிவு செய்தார். பிற அதிகாரிகளையுங் கலந்து பேசினார். கொள்ளை யடிக்குஞ் சந்தர்ப்பங்கள் கிடைக்குமென்று அவர்களுக்கு ஆசை காட்டி, கோட்டைக்கு வெளியே உள்ள ஒரு காவல் நிலையத்திற்குச் சீக்கிய வீரர்கள் அனைவரையும் நீல் அனுப்பினார். நம்பிக்கைக் குலையாமலும், சந்தேகந் தோன்றாமலும் இது நிறை வேற்றப் பட்டது.

தன் தடைகளை நீக்கிய நீல், ஜூன் 15ம் நாளன்று கிறித்துவ பெண்டு பிள்ளைகளை விசைப் படகில் ஏற்றி நதி மூலம் கல்கத்தாவிற்கு அனுப்பினார். கோட்டையி லிருந்த பீரங்கிகளைக் கொண்டு, அருகிலிருந்த கிராமங்களை நோக்கிச் சுட்டார். தாக்குதலை எதிர்க்க முடியாமல், புரட்சி வீரர்கள் நாட்டுப் புறத்தில் ஓடி ஒளிந்தனர். வெள்ளையர் படை அவர்களை விரட்டி, விரட்டி வேட்டை யாடியது. ஆங்கிலச் சினத்தின் கொடூரத்தைக் கிராமப் புறம் அன்று தான் அறிந்தது! பல இடங்களில் புரட்சி வீரர்களும் கடுமையாக எதிர்த்துப் போரிட்டனர். வெள்ளையர் படை நகருக்குள்ளே ஊடுருவியதும், புரட்சி வீரர்கள் ஓட்டம் பிடித்தனர். ஜூன் 17ம் நாள் நகரிழந்த கொத்தவால் சாவடி, ஆங்கிலேயர் வசமா யிற்று. நீலின் வருகைக்குப் பிறகே நகரில் பீதி பரவியது. கோட்டை

யிலிருக்கும் பீரங்கிகளால் பரங்கியர்கள் நகரை அழிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற பொய்யான வதந்தி பரவிய தும், நகர மக்கள் அங்கு மிங்கும் ஓடினர். பிழைத்தால் போது மென்று கிடைத்த பொருட்களை எடுத்துக் கொண்டு குடும்பங் குடும்பமாக ஊரை விட்டு வெளி யேறினர். லியாகத் அலியின் வேண்டு கோளும் பலனளிக்க வில்லை. அவரும் கான் பூருக்குத் தப்பிச் சென்றார். மறு நாள் அலகாபாத் வெறிச் சோடிக் கிடந்தது. விளக்கொளி யில்லாமல் ஊர் இருண்டு விட்டது; சிறுவர்களின் கும்மாளங்கள் கேட்க வில்லை; தெரு நாய்கள் சில ஆங்காங்கே ஊளை யிட்டன! இரண்டு வார காலத்தில், அலகாபாத் ஆங்கிலேயர் வசமா யிற்று. இந்த முயற்சியில் பல உயிர்கள் பலியாயின. வண்டி வண்டியாகப் பிணங்கள் வெளி யேற்றப் பட்டன. ஜூன் மாத இறுதி வரை அலகாபாத் சோகத் துயில் கொண்டது!

காசியும், அலகாபாத்தும் நீலால் காக்கப்பட்ட அதே நேரத்தில் கான்பூரும், லக்னோவும் புரட்சியில் சிக்கி, விழி பிதுங்கித் தவித்துக் கொண்டிருந்தன. அங்கே, முடக்கப் பட்ட ஆங்கிலேயர்களை விடுவிக்கவே நீல் முயன்றார். ஆனால், அலகாபாத்தை விட்டு அவரால் உடனே வெளி யேற முடிய வில்லை. தேவையான வீரர்கள் இருந்தும், வண்டிகளும், மாடுகளும், தள வாடங்களும் போத வில்லை. கலவரத்தின் போது தள வாடங்களும், கோட்டைக் கொத் தளங்களும் கொள்ளை யடிக்கப்பட்டு விட்டன. தொழிலும், வாணிகமும் சீர் குலைந்து கிடந்தன. இராணுவத் தேவையை நிறை வேற்ற வந்த ஒப்பந்தக் காரர்கள், ஊரை விட்டே ஓடி விட் டார்கள். திரும்பி வந்த சிலரால் நெருக்கடிக் கேற்பத் தேவை களைப் பூர்த்தி செய்ய இயல வில்லை. இதே சமயத்தில் ஊரில் வாந்தி பேதி நோயும் பரவி விட்டது. அழுகிய சவங்களின் நாற்றம், கடுமையான வெய்யில், மோசமான உணவு, பழைய மது இவை அனைத்தையும் அனுபவித்தக் காரணத்தால் படை தளத்தில் அந் நோய் பரவுவதற்குக் காரண மாயின! ஜூன் 23 ம் நாள் மட்டும் 70 பேர் அந் நோய்க்குப் பலியா யினர். இவ் வதிர்ச்சியில் இரு ஆங்கிலப் பெண்கள் இறந் தனர்! மருந்துகள் போத வில்லை. எடு பிடி வேலைக்கு ஆட் கள் கிடைக்க வில்லை; விசிறி இழுக்கவும், பல்லக்குத் தூக்கவும் எவரு மில்லை. குப்பைக் கூளங்கள் குவிந்தன. இப் பணிகளை இது வரை செய்து வந்த இந்திய பாமரர்கள் தற்காப் புக்காக ஊரை விட்டே ஓடி விட்டனர். நீல் என்றால் அவ் வளவு நடுக்கம்!

நீலின் முயற்சியால் ஒரு வழியாகக் கான்பூருக்கு ஒரு உதவிப் படைப் புறப் பட்டது. 400 வெள்ளை வீரர்கள், 300 சீக்கியர்கள், 100 குதிரை வீரர்கள், சில பீரங்கிகள் அதில் அடங்கி யிருந்தன. அப் படையின் தலைமைப் பொறுப்பை மேஜர் ரெனுட்கு (Renand) அளித்து, நீல் கீழ்க் காணும் கட்டளை யிட்டான் 'புரட்சிக்கு ஆதரவு தரும் எவரையும் தூக்கி விடு! வழியில் இக் குறிப்பிட்ட கிராமங்களை அம் மக்களுடன் கொளுத்து! ஃபதேபூர் நகரைத் தாக்கி, அங்குள்ள மக்களையும் பழி வாங்கு! அவ் ஊரின் உதவிக் கலெக்டர் சிக்கினுல், அவனைத் தூக்கிலிட்டுத் தலையைச் சிவி ஊரின் மத்தியில் நட்டு வை!' நீலின் இக் கொடூர ஆணையைப் பெற்றுக் கொண்டு ரெனுட் தரை வழியே கான்பூரை நோக்கிப் புறப் பட்டார். மற்ருெரு படை கங்கை நதி வழியாகப் புறப் பட்டது. வெள்ளைக் குடும்பங்களைப் பாது காப்புடன் கொண்டு வருவதே அதன் தலையாய பணி. கான்பூரில் இப் படை காப்பாற்ற என்ன இருக்கிறது? அங்கே, கோர நாடகத்தின் இறுதிக் காட்சி நடந்து கொண்டிருந்தது!

---

# 15. கான்பூரை மீட்க

[ஹேவ்லாக் அலகாபாத் வருதல்—கான்பூருக்குப் புறப்படுதல்—வழியில் ஃபதேபூர்—நீதிபதி டக்கர்—ஃபதேபூர் கிளர்ச்சி—ஹேவ்லாக் பழிவாங்குதல்—கான்பூர் பயணம்—பாண்டு நதிக்கரையில் பாலா சாகேப்பின் படையைத் தோற்கடித்தல்—கான்பூருக்கு விரைதல்]

கான்பூர் மீட்சிக்காக அலகாபாத்திலிருந்து படை புறப்பட்ட அன்று (ஜூன் 30) காலை ஒரு புது இராணுவ அதிகாரி கல்கத்தாவிலிருந்து அங்கே வந்தார். உதவிப் படைக்குத் தலைமை தாங்குவதற்காகவே அலகாபாத்திற்கு வந்த அவர் தான் காலனெல் ஹென்றி ஹேவ்லாக் (Colonel Henry Harelock). மாட்சிமை தங்கிய அரசியின் படையில் 40 ஆண்டுகளுக்கு மேல் சேவை புரிந்தவர். ஆப்கானிஸ்தானத்திலிருந்து பர்மா வரை பல களங்களைக் கண்டவர். மராத்தியர்களுடனும், சீக்கியர்களுடனும் பொருதியவர். ஐரோப்பியப் போர்களையும், போர்க் கலையையும் நன்கு அறிந்தவர். ஏனோ இந்த 62-வது வயதில்தான், தனிப்படை ஒன்றிற்குத் தலைமை தாங்கும் சந்தர்ப்பத்தை அவர் பெற்றார். அதில் நற்பெயர் வாங்க வேண்டும் என்ற துடிப்பு அவரிடம் அதிகமாகவே இருந்தது. உதவிப்படைக்குத் தலைமை தாங்க ஹேவ்லாக் வந்ததும், நீல் சிறிது அதிர்ச்சி அடைந்தார். தன் திறமையால் காசியையும், அலகாபாத்தையும் மீட்க அவனுக்கு இது ஒரு ஏமாற்றந் தான். தனக்குக் கிடைக்க வேண்டிய தலைமையும், வெற்றியும், பெருமையும், புகழும் பறிபோகுமே என்ற மனக்கசப்புடன்தான் இதை நீல் ஏற்றான். கான்பூர் மீட்சிக்கு நீல் அதுவரை செய்திருந்த ஏற்பாடுகளை ஹேவ்லாக் ஏற்றுக் கொண்டார். கான்பூரில் சிக்கியுள்ள வீலரையும், லக்னோவில் முடக்கியுள்ள ஹென்றி லாரன்ஸையும் விடுவித்து, முடிந்தால் அவ்விடங்களைக் கைப்பற்றுவதற்காகவே அலகாபாத்திலிருந்து ஹேவ்லாக் புறப்படுகிறார். கான்பூரை நோக்கி ஏற்கனவே

புறப்பட்ட ரெனாட், நீலின் ஆணைப்படி வழியிலகப்பட்ட புரட்சிக்காரர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றார். ஒன்றும் அறியா ஏழைக் குடியானவர்களையும் மரக்கிளைகளில் பிணமாகத் தொங்கச் செய்தார். தாம் செல்லும் வழியிலெல்லாம் ரெனாட் தணலை அள்ளிக் கொட்டிக் கொண்டே சென்றார்.

தேவையான தளவாடங்களைச் சேகரிப்பது கடினமாக இருந்ததால் ரெனாட்டைத் தொடர்ந்து ஹேவ்லாக்கால் புறப்பட முடியவில்லை. முடிவில் நான்கு நாட்களுக்குப் பிறகு சுமார் ஆயிரம் வீரர்களுடன் அலகாபாத்தை விட்டுப் புறப்பட்ட அவர் ஜூலை 11ஆம் நாள் நள்ளிரவில் ரெனாட்டின் முன்னோடிப் படையுடன் இணைந்தார். இனி, கான்பூரில் அகப்பட்டுள்ள ஆங்கிலேயர்களை விடுவிப்பது எளிது என்றெண்ணி, இருபடை வீரர்களும் மகிழ்ந்தனர். நீண்ட பயணத்தினால் களைப்படைந்த வீரர்களுக்கு, ஹேவ்லாக் ஓய்வளித்தார். சில வீரர்கள் காலை உணவிற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். ஏனையோர் அசதியில் உறங்கத் தொடங்கினர். திடீரென பலத்த ஓசையுடன் முகாமின் மத்தியில் ஒரு குண்டு வீழ்ந்தது! புரட்சி வீரர்கள் முகாமை வளைத்துக் கொண்டனர். அதிர்ச்சி அடைந்த வெள்ளை வீரர்கள் களைப்பை மறந்து, உறக்கந் துறந்து துப்பாக்கிகளை ஏந்தினர். புரட்சிப் படையும், வெள்ளையர் படையும் கடுமையாகப் போரிட்டன. சிறிது நேரத்திற்குப் பின்னரே, ஹேவ்லாக்கின் புதுப்படையும் முகாமிலிருப்பதைப் புரட்சி வீரர்கள் அறிந்தனர். அறிந்ததும் அச்சம் அவர்களைப் பற்றியது. அது ஒன்றே எதிரியின் வெற்றிக்கு ஏதுவாயிற்று. ஆயுதங்களை உதறி விட்டுப் புரட்சி வீரர்கள் சிதறி அருகிலிருந்த ஃபதேபூர் நகருக்குள் ஓடினர்.

ஃபதேபூர், அலகாபாத்திற்கும் கான்பூருக்கும் இடையில் அமைந்திருந்ததால், புரட்சிக்கு எளிதில் இரையாயிற்று. அவ்வூர் முஸ்லிம்கள், ஆங்கில ஆட்சிக்கு எதிராகத் தீவிரமாகச் செயல்பட்டு வந்தனர். அங்கே, நீதிபதியாக இருந்த ராபர்ட் ட்யூடர் டக்கர் (Robert Tuder Tueker) ஓர் உண்மையான கிறித்துவர். ஊரின் நுழைவாயிலில் நான்கு தூண்களை நிறுவி, மோஸஸின் பத்துக் கட்டளைகளையும், இயேசுவின் பொன் மொழிகளையும் பொறித்து வைத்திருந்தார். இந்தியர்களைக் கிறித்துவ மதத்திற்கு மாற்றும் பணி மகத்தானதொன்று என்று அவர் நம்பினார். இருந்தும் அவருடைய சேவையைக் கண்டு சுதேசிகள் அவரை வெறுக்கவில்லை. கருணை மிக்க அவர், துன்பம் எங்கு? எவரிடங் கண்டாலும்? அதைத் துடைக்கச்

செல்லுவார். மத மாற்றம், இதுவும் ஒரு நல்ல வழியாகத் தான் இருந்தது. கடந்த மாதம் (ஜூன் 9) இங்குக் கிளர்ச்சித் தோன்றியது. எங்கும் போல், இங்கும் கருவூலங் களவாடப் பட்டது; சிறைக் கைதிகள் விடுவிக்கப் பட்டனர்; அரசாங்கப் பத்திர அலுவலகங் கொளுத்தப் பட்டது; பற்றி எறியும் தங்கள் இல்லங்களிலிருந்து பரங்கியர்கள் ஓடினர்; ஒளிந்தனர். ஆனால், நீதிபதி டக்கர்! கிறித்துவிற்கு உண்மையாய் இருந்தது போல், அரசுக்கும் அவர் உண்மையாய் இருந்தார். சாதுவாகத் தோன்றிய அவர் புலியாக மாறினார். ஊரை விட்டு வெளியேற மறுத்துச் சில உதவியாளர்களுடன் எதிரிகளைத் தாக்கினார். அவரிடம் பல உதவிகள் பெற்ற சுதேசி நீதிபதி ஹிக்மதுல்லாவின் உதவியால், சில முஸ்லிம்கள் டக்கரை சுட்டுக் கொன்றார்கள்! ஏழையின் நண்பன் இறந்ததைக் கண்டு இந்தியர் பலர் கண்ணீர் உகுத்தனர். இந்தப் ஃபதேபூரைப் பழி வாங்கத் தான் நீல் ஆணை யிட்டிருந்தான். இன்று (ஜூலை 12) அதை நிறை வேற்றத்தான் ஹேவ்லாக்கின் படை ஊருக்குள் நுழைந்தது. டக்கரின் ஓர் உயிருக்காக நூற்றுக்கணக்கானோர் அங்கே உயிரிழந்தனர். ஊர் கொளுத்தப் பட்டது. தொழிற் சாலைகள் நொறுக்கப் பட்டன; உயிருக்குத் தப்பி ஓடினார்கள் பலர்; சிக்கியவர்கள் தூக்கிலடப் பட்டனர்; 24 மணி நேரத்தில் ஊரே காலியாகி விட்டது. மரக்கிளைகளில் தொங்கும் பிணங்களைக் கழுகுகள் கொத்தின. நாய்களும், பன்றிகளும் மட்டுமே தெருக்களில் கத்திக்கொண்டு திரிந்தன. டக்கர் நின்றெதிர்த்த ஃபதேபூர் பொலி விழந்து சூன்யமாயிற்று!

ஃபதேபூரைப் பழிவாங்கியப் பின்னும், ஹேவ்லாக்கின் படை ஓய்வெடுக்க முடியவில்லை. நானா சாஹேப்பின் ஆணைப்படி அவருடைய தம்பி பாலா சாஹேப்பின் தலைமையில் ஒரு படை கான்பூரிலிருந்து வெள்ளைப் படையைத் தடுத்து முறியடிக்க வருகிறது. அப் படை நெருங்கும் முன்பே எதிரிலுள்ள பாண்டு நதியைக் கடக்க வேண்டும், என்று ஹேவ்லாக் திட்டமிட்டார். அது ஒரு சிற்றாறு என்றாலும், ஜூலை மாத மழையில் அதிலும் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. நதியைக் கடக்க ஹேவ்லாக்கும் அம் முயற்சியைத் தடுக்கப் பாலா சாஹேப்பும் விரைந்தனர். களைத்து விட்ட தம் வீரர்களை உற்சாகப் படுத்திக் கடுமையான வெய்யலில் இரண்டு மணி நேரம் நடக்க வைத்து ஹேவ்லாக் ஜூலை 15 ம் நாள் பாண்டு நதியை அடைந்தார். அதற்கு முன்பே அந் நதியின் பாலத்தைத் தகர்க்கும் பணியில் புரட்சிப் படை ஈடு பட்டிருந்தது. இரு படை

களும் இரு கரைகளிலிருந்து தத்தம் தாக்குதலைத் தொடங்கின. வெள்ளையரின் பீரங்கிகள் புரட்சிப் படையை விரட்டியது. கடும் எதிர்ப்பில் ஹேவ்லாக் நதியைக் கடந்து கான்பூர் நோக்கிப் படையைச் செலுத்தினர். இனியும் தாமதிக்க முடியாது! ஆங்கிலக் குடும்பங்கள் என்ன ஆயினவோ! ஒரு நாள் கடந்து சென்றாலும், என்ன நேருமோ? நம் எண்ணப்படி எல்லாம் நடப்பதில்லை, எதைத் தடுக்க ஹேவ்லாக் விழுந் தடித்துக் கொண்டு வந்தாரோ! அதைத் தடுக்கக் அவரால் முடிய வில்லை! ஏன்? அதற்குள் கான்பூரில் என்ன நிகழ்ந்தது?

# 16. பீபிகர் அவலம்

[சாதிச் சௌரா தாக்குதலில் எஞ்சிய ஆங்கில அகதிகளின் கதி—நானாவின் முடிசூட்டு விழா—வெள்ளையரின் படையெடுப்பு திகில் ஊட்டுதல்—பீபிகர் என்ற வீட்டில் ஆங்கில அகதிகள்—பீபிகர் படுகொலை—அதில் நானாவின் பங்கு—வெள்ளையரின் படை கான்பூரை அடைதல்—நீலின் கொடுமைகள்—நானா தப்பித்தல்—கான்பூரில் ஆங்கில ஆட்சியின் மீட்சி—ஹேவ்லாக் கங்கையைக் கடந்தல்—லக்னோ செல்லல்.]

சுமார் 20 நாட்களுக்கு முன்பு ஜுன் 27ஆம் நாள் கான்பூர் காப்பிடத்திலிருந்து கொண்டு வரப்பட்ட நூற்றுக்கணக்கான வெள்ளையர்கள் சாதி சௌரா கட்டிடத்தில் சுட்டுக் கொல்லப் பட்டுக் கங்கை சிவந்ததைக் கண்டோம் நாம். நதி வழியே தப்பியவர்கள் இரண்டு நாட்களில் பெற்ற வீர அனுபவத்தையும் நாம் அறிந்தோம். இறுதியில் தப்பிய இருவரைத் தவிர எஞ்சிய 80 வெள்ளையர்கள் சிப்பாய்களால் பிடிக்கப் பட்டுக் கான்பூருக்குக் கொண்டு வரப்பட்டனர். படகுத் துறையிலேயே தத்தளித்துக் கரையேறிய வெள்ளைப் பெண்டிரும், குழந்தைகளும், ஏற்கனவே சிறைப் பட்டிருந்தனர். கொண்டு வரப்பட்ட 80 வெள்ளை ஆடவருக்கும் ஜுன் 3 ஆம் நாள் நானா சாஹேப் மரண தண்டனை விதித்ததாகத் தெரிகிறது. வெள்ளைப் பெண்டு,பிள்ளைகளின் முன்னிலையில் இத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. தண்டனை பெற்றவர்களுள் ஒருவர், இறக்கப் போகும் தங்களுக்காகப் பிரார்த்தனை செய்து கொள்ள அனுமதி பெற்றார். சாவின் வாயிலில் நின்று கொண்டு பையிலிருந்த பைபிலை எடுத்துப் படித்தார்.

Hear my prayer, O Lord, and let my cry
Come unto thee......
For my days are consumed like smoke, and
my bones are burned as an hearth.
My heart is smitter and withred like grass...

துப்பாக்கி அதுவரை பொருமையாய் இருக்கவில்லை. வெடியோசை எதிரொலிக்க, பிரார்த்தனை ஒலி அடங்கியது! கண நேரத்தில் விதவையான பெண்களும், அனாதையான குழந்தைகளும் ஓலமிட்டு அழுதனர்.

கான்பூர் நிர்வாகத்தை தம் தளபதிகளிடம் ஒப்படைத்து விட்டு, நானா பிதூர் மாளிகைக்குச் சென்று விட்டார். மராத்திய புது எழுச்சித் தோன்றிவிட்டது. மறுநாள் (ஜுலை 1) முடிசூட்டு விழா! மொகலாயப் பேரரசர் பகதூர்ஷாவின் பெயரில், நானா சாஹேப் மராத்திய மன்னராகப் பேஷ்வாவாகத் தம்மை அரியணையில் இருத்திக் கொண்டார். நெற்றியில் மங்கலத் திலகம்; தலையில் மராத்திய மணிமுடி; வேதங்கள் ஓதப்பட, சங்குகள் ஒலிக்க, பீரங்கிகள் முழங்க நானா சாஹேப் மராத்திய பேஷ்வாவாக ஆகி விட்டார்! ஆங்கில ஆட்சி அஸ்தமனமாகி விட்டாற் போலத் தோன்றியது. சுதந்திரம் உதித்து விட்டாற் போலத் தோன்றியது. பிதூர் மாளிகை விழாக் கோலம் பூண்டது. நகைப்பிற்குரிய நிகழ்ச்சி! வீலரின் சவால்! விக்டோரியாவின் இரும்புப் பிடி தளருமா? சில நூறு வெள்ளையரின் இழப்பாலா! பிரிட்டிஷ் பேரரசு சரியும்; ஒரு நானாவின் வாளால், ஒரு கான்பூரிலா! அவ்வாங்கிலச் சிங்கம் இறக்கும்?

பிதூரில் ஆடம்பரமாய் முடி சூட்டு விழா நடை பெற்றாலும், கான்பூரின் நிலைமை வேறு விதமாகவே இருந்தது. மராத்திய நானாவின் தலைமையை, முஸ்லிம்கள் சிலர் விரும்பாததில் வியப்பில்லை. வெள்ளையரின் நண்பராக இருந்து, பிறகு புரட்சியில் கலந்து கொண்ட நன்னி சாஹேப், வெற்றியில் பங்கு பெற விழைந்தார் போலும்! இதனால், இந்து, முஸ்லிம் கலவரந் தோன்றலாம். இந் நிலையில் கான்பூரைத் தாக்க அலகாபாத்திலிருந்து வெள்ளையர் படைகள் வரும் செய்தி வேறு, நகரைக் கலக்கியது! காசியிலிருந்து வரும் வழியெல்லாம் ஆங்கிலேயர்கள் கொடூரமாகப் பழி வாங்குகின்றனர்; என்ற ஒற்றர்களின் செய்தி கான்பூரில் திகிலை ஏற்படுத்தியது! பிதூரிலிருந்து, நானாவே கான்பூருக்கு நம்பிக்கை யளிக்க வந்தார்; ஜுலை முதல் வாரத்தில், தினமும் புதுப் புது அறிக்கைகளை அவர் வெளி யிட்டார். 'ஆங்கில ஆட்சி வேரோடு அழிக்கப்பட்டு விட்டது; நம் மதங்கள் காப்பாற்றப்பட்டு விட்டன; விடுதலை கிடைத்து விட்டது; ஆங்கிலேயர் அடி பணிந்து விட்டனர். இனி, மக்கள் எக் கவலையும் படத் தேவை யில்லை.' என்றெல்லாம் நம்பிக்கை ஊட்டினார். நாட்கள் பல கடந்தன; நம்பிக்கை

யும் தளர்ந்தது. பரங்கிப் படை கான்பூரை நெருங்கிக் கொண்டிருந்தது. புரட்சி வீரர்கள் நம்பிக்கை முழுவதையும் இழக்கவில்லை. நானாவும் உறுதியோடு இருந்தார். அந்த உறுதியில் தான் அவரால் அனுப்பப்பட்டப் பாலா சாஹேப் பாண்டு நதியில் ஹேவ்லாக்கை எதிர்த்தார்.

கான்பூர் நகரப்பகுதிக்கும், கங்கை நதிக்கும் இடையில், 'பீபிகர்' என்றழைக்கப்பட்ட சிறு வீடு ஒன்று இருந்தது. ஒரு காலத்தில் ஆங்கில அதிகாரி ஒருவன் தன் மனைவிக்காக அதைக் கட்டினான். தற்பொழுது அங்கு யாரும் இல்லையென்றாலும், அப் பெண்மணியைக் குறிப்பிட்டு அவ் வீடு பீபிகர் என்றழைக்கப்பட்டு வந்தது. நானாவின் நகர இல்லமும் அதனருகில் தான் இருந்தது. நானாவின் பிடியிலிருந்த வெள்ளைப் பெண்டு பிள்ளைகள், அப்பொழுது அவ் வீட்டின் இரண்டு அறைகளில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். அதில் நான்கு ஆண்களும் இருந்தனர். ஜூன் மாதத் தொடக்கத்தில், கான்பூருக்கு வடமேற்கே யிருந்த ஃபதேகரில் (ஃபதேபூர் அல்ல) கிளர்ச்சித் தோன்றியதும், சில ஆங்கிலக் குடும்பங்கள் படகுகளில் தப்பிக் கான்பூருக்கு வந்தன. அங்கேயும் புரட்சி வெடித்திருப்பதை அவர்கள் அறியவில்லை. பாம்புக்குத் தப்பி, புலிக் குகையில் அகப்பட்டது போல, ஃபதேகர் அகதிகளும் நானாவால் கைது செய்யப்பட்டு, ஏற்கனவே நிரம்பி வழிந்த பீபிகர் வீட்டில் அடைக்கப் பட்டனர். உண்ண உணவின்றி, நீரின்றி உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இழந்து, 200 க்கும் அதிகமாக பெண்களும், பிள்ளைகளும் சோர்ந்து விட்டனர். நெரிசலிலும், அசுத்தத்திலும், தொத்து நோய் பரவியதில் 18 பேர் பலியானார்கள். ஆங்கிலப் பெண்டிர் எவரும் மானபங்கப் படுத்தப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது* ஆயினும், பல சிறுமைகளுக் குள்ளாக்கப்பட்டனர். நானாவின் வீட்டில் இரண்டு மூன்று பேராக மாவரைக்க அனுப்பப்பட்டனர். ஒருவர் வீட்டில் மாவரைப்பது என்றால், அது அடிமைத்தனத்தைக் குறிக்கும். ஆசிய நாடுகளில் இது பரவி நின்ற பழக்கம். மாட்சிமை தங்கிய அரசி, பிரிட்டானிய பேரரசின் விக்டோரியாவின் குடிமக்களைப் பல்லாயிர மைல்களுக்கப்பால் மாவரைக்க ஏவுவதற்கு, நானா எத்தகைய மனத் துணிவு பெற்றிருக்க வேண்டும்? நேற்றுவரைப் பல்லக்குகளில் பவனி


---

*வெள்ளை இளம் பெண்கள் சிலர் நானா சாஹேப்பின் தளபதிகளால் கடத்தப் பட்டனர் என்று கூறுகிறார். W. H. Fitchett—The Tale of the great Mutiny.

வந்த அந்த வெள்ளைச் சீமாட்டிகளைக் கொல்லைப் புறத்தில் வேலை வாங்க நானா எத்தகைய ஆணவங் கொண்டிருக்க வேண்டும்? இருந்த நிலைமை மாறிதான் விட்டது! அவ்வடிமைத் தொழிலிலும், பசியால் கதறிய தம் குழந்தைகளுக்காக, அத் தாய்மார்கள் சிறிது மாவு திருடிக் கொண்டுஞ் சென்றார்கள். உண்மையில் அவர்கள் நிலைமை மாறிதான் போய் விட்டது!

ஜுலை 15ல் பாண்டு நதியில் தோல்வியடைந்தப் பாலா சாஹேப் திரும்பி வந்தார். எதிரியின் முன்னேற்றத்திற்குக் கான்பூர் சாலையில் இனித் தடைகள் இல்லை. விரைந்து வரும் வெள்ளையர் படையை வெல்ல முடியுமோ? முடியாதோ? பீபி கர்ரில் அடை பட்டிருக்கும் அகதிகளைக் கொன்று ஆறுதல் அடையலாம். என்று புரட்சி வீரர்களின் சிந்தனை ஊசலாடி யது! ஆதரவற்ற பெண்களையும், பச்சிளங் குழந்தைகளையும் கொல்லுவதா? அது இந்து தர்மத்திற்கு எதிரல்லவா? போரில் தர்மமாவது! புண்ணியமாவது! ஒன்றுமறியாக் குடியான வர்களை, நீல் கொன்று குவித்தது எவ்வறத்தின்பாலது? என்று புரட்சி மனம் ஊசலாடியது! பரங்கியர்களின் மேல் இருந்த ஆத்திரமோ? அல்லது ஏதோ ஒன்றால்? உந்தப் பட்டுக் கைதி களைக் கொல்ல முடிவெடுத்தனர். நானா சாஹேப்பின் பங்கு, இக் கொலைக் குற்றத்தில் எவ்வளவு? என்பது தெரிய வில்லை. ஏனெனில்? அன்றைய நிகழ்ச்சியின் முழு விவரம் நமக்குக் கிடைக்க வில்லை, எப்படியோ! கொலை செய்ய முடிவெடுக்கப் பட்டது. நான்கு ஆண் கைதிகளை மட்டுந் தனியாக இழுத்து வந்து சுட்டுக் கொன்றனர். பிறகு பீபிகர் வீட்டின் சாரளத்தின் வழியாகவும், கதவுகளின் வழியாகவும் அடை பட்டிருந்த அகதிகளைச் சுட்டுக் கொல்ல சிப்பாய்கள் சிலரை ஏவினர். பெண்களை, அதிலும் குழந்தைகளுடன் கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் அநாதைகளைக் கொல்லுவது வீரனுக்கு அழகோ? சில முறை சுட்டு விட்டுச் சிப்பாய்கள் தயங்கினார்கள். அதன் பிறகு கடை வீதியிலிருந்து கசாப்புக்காரர்கள் சிலர் கொண்டு வரப் பட்டனர். அன்று மாலை நீண்டு, அகன்ற கத்திகளுடன் அத் தடியர்கள் வீட்டிற்குள் புகுந்து கதவுகளைத் தாளிட்டனர். வீர்ரென்று அலறிய குழந்தைகள் தாய்மாரைத் தஞ்ச மடைந் தன. மறு விநாடி நினைக்கவே குலை நடுக்க மெடுக்கும் கொலைகள் தொடங்கின! இறைச்சிக் கடையில் கூட முறையாகக் கொல்லு வார்கள்! வெறி பிடித்தக் கொலையாளிகள் கத்திகளைச் சுழற்றி னர். இரத்தம் பீறிட்டு ஓடியது. ஓடி ஒளிய இட மில்லை. நொடிப் பொழுதில் மண்டைகள் உருண்டன! நெஞ்சங்கள்

பிளந்தன! கரங்கள் துண்டித்து விழுந்தன! விரல்கள் தெறித்தன! குடல்கள் சரிந்து தொங்கின! குருதி கொட்டியது! ஐயோ! ஐயோ! என்று அபயக் குரல்கள் பயங்கரமாய் ஒலித்தன. கத்திகள் கூர் மழுங்கும் அளவிற்குக் கொன்று குவித்தனர்; அத் தடியர்கள். ஒருவனுடைய கத்தி உடைந்தே விட்டது. பிணங்களுக் கிடையே சிக்கிய சிறுவர்கள் கதறினர். சவங்களுக்கடியில் சிக்கிய குழந்தைகள் வீரிட்டழுதனர். குற்றுயிராய்க் கிடந்தவர்கள் முணங்கினர்...வேதனைத் தாளாமல் அலறினர்...அன்றிரவெல்லாம் வேதனை முணங்கல் ஒலித்துக் கொண்டே யிருந்தது...மறுநாள் காலை எட்டு மணிக்குக் குற்றுயிரும் குறையுயிருமாய் இருந்த உடல்களைச் சிப்பாய்கள் வெளியே இழுத்து வந்து அருகிலிருந்த பாழ்ங் கிணற்றில் எறிந்



ஆங்கிலேயர் படுகொலைக்குள்ளான பீபிகர்

தனர். பிணங்களுக்கிடையில் மறைந்து உயிரோடிருந்த சில சிறுவர்கள் அச்சத்தில் சித்தங் கலங்கிக் கிணற்றைச் சுற்றி அலறிக் கொண்டே ஓடினர். அவர்களையும் உயிரோடு கிணற்றில் எறிந்து கொன்றனர்! நூற்றுக் கணக்கான கான்பூர் மக்கள் இதை வேடிக்கை பார்த்தனர். இருட்டறைத் துயர நிகழ்ச்சி (Black hole of Calcutta) எம்மாத்திரம்? என்னென்ன கனவுடன் இந்தியாவிற்கு வந்தனரோ? ஆசியாவின் இக் கொடுஞ்சாவிற்கா விதிக்கப் பட்டனர்? அப்பாழுங் கிணற்றி

லிருந்து ஆங்கிலக் கண் மணிகளின் வேதனைக் குரல்கள் இன்னும் ஒலிக்கின்றன! பீபிகர் அவலத்தை அறிந்த இங்கிலாந்து பேரதிர்ச்சி அடைந்தது. இந்தியனுக்கு எத்தகைய அநீதி இழைக்கப் பட்டிருந்தால், இப்படிப் பழிவாங்க இந்தியன் துணிந்திருப்பான் என்பதற்குப் பரங்கியரே பதில் கூறட்டும். சர் கே (Sir Kaye) இதை மறுப்பது ஏனோ?

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு இந் நிகழச்சியைப் பற்றி சர் ஜார்ஜ் ஃபாரஸ்ட் (Sir Geoge Forest) கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார். 'நூற்றுக்கணக்கான சாட்சிகள் விசாரிக்கப் பட்டனர்; அரசாங்க அறிக்கைகளும், இரகசியக் கடிதங்களும், பத்திரிகைளும் ஆராயப்பட்டன. புரட்சியை அடக்கி வென்ற ஆங்கிலேயரின் வெஞ் சினத்திற்குத் தப்பவும், வெகுமதி கிடைக்கு மென்ற பேராசையாலும் பலர் இந் நிகழ்ச்சியைப் பெரிதாக்கி இருந்திருக்கின்றனர்.' இது ஓரளவு உண்மையே. புரட்சியின் போது, உணர்ச்சி வசப்பட்டு எழுதப் பட்ட இவ் வனைத்தும், உண்மைகள் ஆகி விடமாட்டா. பீபிகர் அவலத்திற்கு நானா சாஹேப் தான் பொறுப்பா? அதையும் புரிந்து கொள்ள முடிய வில்லை. இந் நிகழ்ச்சி நடை பெற்றது நானா கான்பூரிலிருந்து பிதூருக்கு சென்ற பிறகா! அல்லது முன்னதா! என்பதும் தெரிய வில்லை. நானா வெளிச்சத்திற்கே வருவதில்லை. அவருடைய நடவடிக்கைகளின் உண்மையை அறிவது கடினமாகவே இருக்கின்றது. நானா, இதைத் தெரிந்தே செய்திருக்கலாம். அல்லது மூர்க்கத்தனமான புரட்சி வீரர்கள், ஆட்டு வித்தபடியே ஆடியும் இருக்கலாம்.

ஹேவ்லாக் கான்பூரை நெருங்குவதை அறிந்தே அவசரமாக இப் பீபிகர் படுகொலைகள் நடத்தப்பட்டன. பரங்கிப் பிணங்களைக் கிணற்றில் வீசி எறிந்து விட்டு, வெள்ளையர் படையைத் தடுத்து முறியடிக்கப் புரட்சிப் படை புறப்பட்டது. கான்பூருக்கு வெளியே, டெல்லி நெடுஞ்சாலைக் கருகில், தகிக்கும் வெய்யலில் இரு படைகளும் மோதின. பெற்ற விடுதலையைப் பேண, மராத்தியப் பேரரசின் மறுபிறவியைக் காக்க, புரட்சிப்படை புயலெனச் சாடியது! காசியிலிருந்து கான்பூர் வரை வழியெல்லாம் பழி தீர்த்து வந்த வெள்ளையர் படை, தங்கள் பெண்டு பிள்ளைகளைக் 'காப்பாற்றக்' கடுமையாகத் தாக்கியது. பல மணி நேரப் போருக்குப் பிறகு புரட்சிப் படை சிதறி ஓடியது. வெற்றிக் களிப்பில், அகதிகளை விடுவிக்கத் துடிப்புடன் ஊருக்குள் நுழைந்தனர் வெள்ளையர். யாரைக் காப்பாற்ற விரைந்து வந்தனரோ, அவர்கள் மீளாத

மறு வுலகிற்குச் சென்று விட்டனர்! ஆங்கிலேயரின் ஆத்திரம். எப்படி யிருந்திருக்கும்? பல மைல் கணக்கில் நீடித்தப் பயணம்; ஓய்வில்லா ஓட்டம்; ஒழிவில்லாப் போர்; இவற்றை யெல்லாங் கடந்து வந்தவர்களுக்கு இச் செய்தி இடி போல விழுந்தது. வீரர்கள் கடை வீதியில் நுழைந்து, மதுப் புட்டிகளைக் கைப் பற்றி வெறியேறும் மட்டுங் குடித்தனர். உடனே ஹேவ் லாக் வீரர்களுக்குக் கிடைக்காதபடி மதுவகைகளைக் கைப் பற்றினர்.

காப்பிடத்தைக் கண்ட வெள்ளையர்கள் வியப்படைந்தனர். இந்த எளிய அரணிலிருந்து கொண்டு, அத்தனை நாள் முற்றுகையை வீரத்துடன் எதிர்த்த நண்பர்களை நினைத்துப் பெருமைப் பட்டனர். பீபிகர் வீட்டைப் பார்த்த வெள்ளையர்களின் உள்ளங்கள் குமுறின! சுவரெல்லாம் பீறிட்டிருந்த இரத்தக் கறைகள்! தரை முழுவதும் தோய்ந்திருந்த இரத்தச் சேறு! ஆங்காங்கே இரத்தம் தோய்ந்த கிழிந்த ஆடைகள்! வெட்டித் தெரித்து விழுந்த விரல்கள்! உடைந்த பொம்மைகள்......கிழிந்த தொப்பிகள்! அருகே பாழுங் கிணற்றில், பேதைப் பெண்கள்! பால் மணம் மாறாச் சிறுவர் பலர் புதையுண்டு கிடந்ததைக் கண்டு வெள்ளையரின் நெஞ்சங்கள் வெடித்தன. விழிகள் கண்ணீரைப் பெருக்கின*

வெறிகொண்ட வெள்ளை வீரர்கள் தெருக்களில் பாய்ந்து கண்ணில் பட்ட ஒவ்வொரு இந்தியனையுங் குத்திக் கொன்றனர். கண்ணை மூடிக்கொண்டு, தப்பிக்க வழியில்லாத பாமரர்களின் மீது ஊழித் தாண்டவம் ஆடினார்கள்! அதில் நூற்றுக் கணக்கான கான்பூர் மக்கள் மாய்ந்தனர். இது படைக்குப் படை நடந்த போர் அல்ல. இனத்திற்கு இனம் நடந்த கொலைகளே ஆகும்! இயேசுவின் பெயரால், இங்கிலாந்தின் பெயரால், அரசி விக்டோரியாவின் பெயரால் நடந்த கோரக் கொலைகள்! என்று சர் ஜான் கே, இக் கொடுமைகளுக்குச் சமாதானம் அளிக்க முயன்றிருக்கின்றார். நீல் கொடூரமானவன் அல்லவாம்; கான்பூரில் பாமர மக்கள் கொல்லப் பட்டது, நியாமான ஆங்கில ஆத்திரத்தின் விளைவாம். ஆனால், சாதி சௌராவும், பீபிகரும் இந்தியரின் இருண்ட இதயங்கள் திட்ட மிட்டுச் செய்த படுகொலைகளாம்! கழுத்திலும், காலிலும்விலங்கு பூட்டி, நீக்ரோக்களை அடிமைகளாக அமெரிக்கா

*பீபிகர் பிற்காலத்தில் ஒரு மலர் வனம் ஆக்கப்பட்டது. பளிங்காலான ஒரு தேவதையின் சிலை அங்கே வைக்கப்பட்டது.

விற்குக் கொண்டு சென்றது, ஆங்கிலேயர்களுக்கு நேர்மையாகப்பட்டால், அடிமைத் தளையை உடைத் தெரியும் போராட்டத்தில், எதிரிகளைக் கொடுமையாகப் பழி வாங்குவது, இயல்பாகவே நடக்கும் நிகழ்ச்சிகளே யாகும். ஆங்கில ஆட்சியில், நன்மைகள் கிட்டின என்பதை, நாம் மறுக்க வில்லை. நூற்றுக் கணக்கான ஆண்டுகள் நம்மைப் பிடித்தப் பல வியாதிகள் அவர்களால் விரட்டப் பட்டது உண்மையே. ஆயினும், அந்நிய ஆட்சி நன்றோ அன்றோ அதை எதிர்க்கும் உரிமை எல்லா அடிமைகளுக்கும் உண்டு; என்பதையும் மறக்கக் கூடாது. அத்தகைய எதிர்ப்பில் பிற்கால காந்தியைப் போல அஹிம்சையைக் கடைப் பிடித்தே ஆக வேண்டும் என்பதில்லை. 1857-ல் நடந்த ஆயுதக் கிளர்ச்சி, இரண்டாம் உலகப் போரின் போது இந்தியர்களால் மேற்கொள்ளப் பட்டிருந்தால், பிரிட்டானியப் பேரரசு அப்போதே சிதறுண்டு போகவும், அது ஒரு காரணமா யிருந்திருக்கலாம். காசியிலும், கான்பூரிலும் வெள்ளையர்கள் புரிந்தது நியாயமெனில், மீரத்திலும், டெல்லியிலும் இந்தியர்கள் செய்ததும் நியாயமே! ஆகும். நியாயங்களை விட்டு நடப்பிற்கு வருவோம்.

கான்பூரில் வெற்றியை நழுவ விட்ட நானா சாஹேப் எல்லாம் இழந்து, இனி என்ன செய்வதென்று திகைத்தார்? ஹேவ்லாக், நகரை நெருங்கிய அன்றிரவே, நானா தம் குடும்பத்துடன் கங்கையில் தற்கொலை செய்து கொள்வது போலப் போக்குக் காட்டி விட்டுப் படகேறி ஃபதேகரை நோக்கிச் சென்றார். இத் தற்கொலை நாடகத்திற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை? ஆங்கிலேயர், கான்பூர் கொத்தவால் சாவாடியைப் பிடித்து (ஜூலை 17) மீண்டுந் தங்கள் ஆட்சியைப் பிரகடனப்படுத்தினர். புரட்சியால் பொருள் நட்டம் ஏற்பட்டவர்களுள், தப்பியோடிய வணிகர்கள் திரும்ப வந்து மகிழ்ச்சியுடன் தங்கள் பழைய வாடிக்கைக்காரர்களை, எசமானர்களை வரவேற்றனர். வணிகர்கள், என்றுமே கிளர்ச்சிகளை விரும்புவதில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் வியாபாரம் நடக்க வேண்டும். இலாபம் குவிய வேண்டும். வாடிக்கையாளன் கருப்பாயிருந்தாலென்ன? வெளுப்பாயிருந்தாலென்ன? நானா மறைந்து விட்டான். பெரும்படையுடன் மீண்டும் போரிட வருவானோ? இதை அறிய அருகிலிருந்த பிதூருக்கு, மேஜர் ஸ்டீபன்சன் தலைமையில் ஒரு சிறுபடை அனுப்பப்பட்டது. பிதூரில், புரட்சி வீரர்கள் எவருமில்லை. நானாவின் மாளிகை வெறிச்சோடிக் கிடந்தது. பெரும் மதிப்புள்ள தன் குடும்ப நகைகளை நானா கடத்தி விட்டான். நாணய மூட்டை

கள் எங்கோ ஒளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. அடுத்து என்ன செய்ய? பேஷ்வாக் குலத்தின் கடைசி மாளிகை இடித்து நொருக்கப்பட்டது..........?.........போலத் தோன்றிய மராத்திய ஆவி அலறி ஓடியது.

தளபதி ஹேவ்லாக்கின் உடல்நிலை தற்போது அவ்வளவு சரியில்லை. அலகாபாத்திலிருந்து கான்பூர் வரையில், அவர் பெற்ற வெற்றிகளை அறிந்து, கல்கத்தா மேலிடம் ஒரு புது ஆணையைப் பிறப்பித்தது. அதன்படி ஹேவ்லாக், பணி புரிய முடியாத அளவிற்குப் பலவீனமடைந்திருந்ததால், அலகாபாத்திலிருக்கும் நீல், உடனே கான்பூருக்குச் சென்று, அவருடைய பொறுப்புகளை ஏற்க வேண்டும். நீல், தன் கீழதிகாரிகளிடம் அலகாபாத்தை ஒப்படைத்து விட்டு, ஜூலை 20ஆம் நாள் கான்பூரை அடைந்தான். கான்பூரில், தாம் தலைமை ஏற்று இருக்கும் வரை, நீல் தனியாக ஆணைகள் எதுவும் இடக் கூடாது; என்று, ஹேவ்லாக் கூறி விட்டார். நீலின் பணிகள் எவை? என்பதைக் குறிக்கப் பட்டன. அவருடையத் தனித் தன்மையைக் காட்ட வேண்டாமா? கான்பூரில் முடிக்க வேண்டிய கணக்கு இன்னும் இருக்கிறது! புரட்சிக்கு ஆதரவளித்ததாகக் கருதப் பட்டப் பலர் தேடிக் கண்டு பிடிக்கப் பட்டனர்; உயிரைத் துச்சமென மதித்து, நெஞ்சம் கலங்காமல், நிலை குலையாமல், தூக்கு மேடைக்கு அப் புரட்சி வீரர்கள் சென்ற காட்சி அற்புதமாக இருந்தது. பழி வாங்கும் படலத்தில், நீல் வழக்கம் போலத் தம் முத்திரையைப் பதிப்பித்தார். தூக்கிலேற்றப் படும் முன்பே, சில குற்றவாளிகளைப் பீபிகர் வீட்டிற்குக் கொண்டு சென்று, இரத்தக் கறையை அழிக்கச் செய்தார். கசையடியைத் தாங்கிக் கொண்டே அவர்களும் துடைத்தனர். ஒரு முஸ்லிம் இதற்கு மறுத்ததால், நீல் அவனுடைய தலையை அழுத்தித் தரையிலிருந்த இரத்தக் கறையைத் தன் நாவால் நக்கித் துடைக்கும்படிச் செய்தார்!

கான்பூரில், ஜூன் 4ஆம் நாள் தோன்றிய புரட்சி, ஆறு வாரங்களுக்குப் பிறகு ஜூலை 18 ம் நாள் அடக்கப் பட்டது. கான்பூர் மீட்சியில் மட்டும் புரட்சி அடங்குவதில்லை. லக்னோ ஆபத்திலிருக்கிறது! ஆக்ரா முற்றுகையி லிருக்கிறது! டெல்லி புரட்சிக் காரர்களிட மிருக்கிறது! இன்னும் பல இடங்கள் கொதிக்கின்றன. இங்கெல்லாம் ஆங்கிலப் படைகள் உதவிக்குச் செல்ல வேண்டும். கான்பூரை நீலிடம் ஒப்படைத்து விட்டுத் தன் பணியைத் தொடர ஹேவ்லாக் துணிந்து விட்டார். உறங்குவதற்கு இது தருணமல்ல! ஓய் வெடுக்கவும்

இது நேரமுமல்ல! கான்பூர் மீட்சி வெற்றியின் தொடக்கமே. படகு பாலம் அழிந்து விட்டதால், கங்கையைக் கடப்பது ஒரு பிரச்சனையா யிற்று. நாட்டுப் படகுகளைச் செலுத்த ஆட்களுங் கிடைக்க வில்லை. சாதி சௌரா நதித் துறையில் நடந்த கொலை களுக்கு உடந்தையாக இருந்த பட கோட்டிகள் உயிருக்குப் பயந்து ஊரை விட்டே ஓடி விட்டனர். கிடைத்த பட கோட்டி களும் தமக்குப் பாது காப்பு வாக்குறுதியும், முன் கூலியும் பெற்றுக் கொண்டே தொழிலுக்கு வந்தனர். தம் பணி பெரி தாக இருந்தும், கான்பூரின் பாது காப்பிற்காக 300 வெள்ளை வீரர்களை நீலிடம் நிறுத்தி விட்டு, ஹேவ்லாக் புறப் பட்டார். 1,500 வீரர்கள், 10 பீரங்கிகள், தளவாடங்கள் ஆகியவற்றுடன் பெரும் முயற்சியில் ஜூலை 25ம் நாள் ஹேவ்லாக்கின் படை, கங்கையைக் கடந்தது. நதியின் அக் கரையிலிருந்து தான் அயோத்தி மாநிலந் தொடங்குகிறது. மூன்றாவது நாள் மங்கள் வார் என்ற ஊரை அடைந்ததும் பெருத்த மழை பெய்தது. முகாமிற்குத் தேவையான முழு ஏற்பாடுகள் அவர் பெற்றி ருக்க வில்லை. கொட்டும் மழையில், வீசுங் காற்றில் ஹேவ்லாக் மனந் தளர வில்லை. முறியடிக்கப்பட்ட பகைப் படை தமக் குப் பின்னால்! முற்றுகையில் கிடக்கும் லக்னோ தமக்கு முன்னால்! துணிவிற்கும், வீரத்திற்கும், ஆற்றலுக்கும் இது பெருஞ் சவால்! எதிர்ப்பாலே—தான் வீரம் துலங்குகின்றது!

———

# 17. அயோத்தியில் வாஜீத் அலி

[முன் கதை—மன்னர் வாஜித் அலி ஷா—கலைகளில் ஈடுபாடு—நிர்வாகக் கேடு — நிலையர் ஸ்லீமென் — உட்ராம் நிலையராதல் — பதவி துறக்கும்படி மன்னரைத் தூண்டுதல் — அயோத்தி இணைப்பு—நியாயமானதா?—உட் ராம் முதல் ஆணையர் ஆதல் — விடுமுறையில் செல்லல் — அடுத்து கவர்லி ஜாக்சன் — ஆங்கில ஆட்சியில் நிலைமை சீராக வில்லை — தாலூக்தார்களும் குடியானவர்களும்.]

கான்பூருக்கு வட கிழக்கே, 45 மைல் தொலைவில், கோமதி நதிக் கரையில் அமைந்திருப்பது லக்னோ என்ற இலட்சுமணபுரி என்பது. அதுவே, அயோத்தியின் தலை நகரம். 'இராமனின்' அவ் வயோத்தி தான் முஸ்லிம்களுக்குக் கை மாறி விட்டது. பாரசீகத்தைத் தாயகமாகக் கொண்ட, ஷீயா மதப் பிரிவைச் சார்ந்த அயோத்தி நவாப்புகள், மொகலாய ஆட்சிக்குப் பெருந் துணையாக இருந்த காரணத்தால், அவர்களே பேரரசின் வஸீர்களாக (தலைமை அமைச்சர்களாக) நியமிக்கப்பட்டு வந்தார்கள். 1739 ல் நாதிர் ஷாவின் இந்தியப் படை யெடுப்புக்குப் பிறகு, ஆடிக் கொண்டிருந்த மொகலாயப் பேரரசு, அழிவிற்கு விரைந்தது. அதைப் பயன்படுத்திய அயோத்தி நவாப்புகள், அதன் பின்னர் பெயரளவிற்கே பேரரசனுக்குக் கட்டுப் பட்டனர். மொகலாய இளவரசர் ஷாஆலம், தம் தந்தையை எதிர்த்துப் பீகாரைக் கைப்பற்ற முனைந்த போது, அவருக்கு உதவி செய்யும் அளவிற்கு அயோத்தி நவாப் சூஜா – உத் - தௌலா துணிவு பெற்றிருந்தார். இந்த இளவரசரையும் அயோத்தி நவாப்பையும் 1764ஆம் ஆண்டு பக்ஸார் போரில் கம்பெனி நிறுவனத்தின் படை தோற்கடித்தது. அதைத் தொடர்ந்து 'இராபர்ட் கிளைவ்' மொகலாயப் பேரரசனுடனும், அயோத்தி நவாப்புடனும் அலகாபாத் உடன்படிக்கைச் செய்து கொண்டார். இந்த உடன் படிக்கையின்படி, பேரரசர் வங்

காளம், பீஹார், ஒரிஸா ஆகிய மொகலாயப் பகுதிகளுக்குக் கிழக் கிந்தியக் கம்பெனியைத் திவானக நியமித்தார். ஆங்கிலேயரைத் தவிர, வேறு எவருடனும் அரசியல் ஒப்பந்தம் செய்து கொள்வதில்லை; என்று அயோத்தி நவாப் ஒப்புக் கொண்டார். இவ்விதம் வங்காளமும், அயோத்தியும் நிறுவனத்தின் பிடிக்கு வந்து விட்டன. குரங்கு ஆப்பம் பகிர்ந்த கதை தான்; இவ் வுடன்படிக்கை. இதன்படி பிற்கால நாவப்புகள் நாணயமாகவும், கம்பெனியின் நண்பர்களாகவும் உறவு கொண்டிருந்தனர். மேலும், நிறுவனத்தின் படை வலிமையை உணர்ந்து, தங்களின் பாது காப்பிற்காக அவர்களின் படை ஒன்றை அயோத்தியில் நிலையாக நிறுத்திக் கொள்ள ஏற்பாடு செய்தனர். இவ் விதம், 1801 ல் வெல்லெஸ்லி பிரபு அயோத்தியினிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு, அந் நாடு நிறுவனத்தின் பாது காப்பில் இருக்கத் தக்கச் சுதந்திர நாடகக் கருதப் பட்டது. அத்துடன் உள் நாட்டு நிர்வாகம் நவாப்பிடமும், பாது காப்பும், வெளி யுலகத் தொடர்பும் நிறுவனத்திடமும் இருந்து நீடித்தன. இதனுல், அயோத்தி நவாப் பெயரளவில் அதிகாரம் மட்டும் பெற்ருரே ஒழிய, பொறுப்பு அதிகம் பெற வில்லை.

1819 ல் ஹேஸ்டிங்ஸ் பிரபு அயோத்தி நவாப்பிற்கு, மன்னர் என்ற பட்டத்தை அளித்தார். தனக்கென நாடு, மக்கள், வருமானம் ஆகியவற்றைப் பெற்று மகிழும் மன்னர், நாட்டின் நிர்வாகத்தில் கருத்தைச் செலுத்த வில்லை. ஏழை விவசாயிகள் கசக்கிப் பிழியப் பட்டனர். அரசவை ஆடம்பர சொர்க்கமாயிற்று. விருந்துகளும், வேடிக்கைகளும், ஆடல் அழகியர்களின் அணைப்புகளும் அரசரின் அன்ருடத் தேவையும், தொழிலும் ஆயின. இந்த ஒழுங்கற்ற நிர்வாகத்துடன், பிறிதொரு கேடும் விளைந்தது. அது இராஜபுத்திர இனத்தைச் சார்ந்த அயோத்தியின் பெரு நிலக் கிழார்கள், 'தாலூக்தார்கள்' என்றழைக்கப் பட்டனர். இவர்கள் குடியானவர்களைப் பிழிந்து செல்வம் திரட்டியும், அவ்வப் போது மன்னனின் அதிகாரிகளையும், வீரர்களையும் எதிர்த்துப் போராடியும் வந்தனர். இதனுல், பாமர மக்களின் பரிதவிப்புக் கூடிற்று. மன்னரோ, இக் கேடுகளைக் களைய முற்படாமல், கேளிக்கைகளில் காலங் கடத்தினர்! முந்திய நவாபுகள் ஆட்சித் துறையைச் சீர் திருத்தி, மக்களின் நல் வாழ்வில் கருத்தைச் செலுத்துவதாக வாக்களித்திருந்ததால், அதன் வழி நடக்கும்படி 1831-ல் பெண்டிங் பிரபுவும், 1847 ல் ஹொர்டிஞ்ச் பிரபுவும், மன்னரை வற்புறுத்தினர். மன்னரோ சிறிதுஞ் செவி சாய்த்தானில்லை.

1847ல் மன்னரான வாஜீத் அலி ஷாவும், தம் மூதாதையர்களைப் போலவே உதவாக் கரையாக இருந்தார். இசையிலும், கவிதையிலும் நாட்டங் கொண்ட அவர், தம் குலத்தின் வரலாற்றைக் கவிதையில் வடித்தார். சிறு வயது முதல் கீழ்த்தர பாடகர்களுடனும், நாட்டியக்காரிகளுடனும் அவர் பழகி வந்ததால், மன்னர் ஆன பின்பும், அவருடைய நடத்தையில் கண்ணியத்தைக் காணவே முடியவில்லை. ஆட்சிப் பணி குறித்து, அமைச்சன் ஒருவன் அரசனை சந்திக்க வேண்டிய அவசிய மேற்பட்டால், ஒரு பாடகனின் இல்லத்திலோ, அல்லது ஒரு நாட்டியக்காரியின் மஞ்சத்திலோ தான் சந்திக்க முடியும். நாட்டின் நிர்வாகத்தைப் பற்றி தெரிந்ததாக அவர் நடிப்பது கூட இல்லை! இதனால், வாஜீத் அலியைச் சுற்றியிருந்த இழி கும்பல் அரசவைப் பதவிகளையும், உரிமைகளையும் விற்றுச் செல்வந் திரட்டியது. அயோத்தியின் மன்னன், லக்னேவின் நெரிசலான வீதிகளில் நாட்டிய காரிகளைத் தேடி அலைந்து கொண்டிருந்தான். என்றால், அந் நாட்டின் எதிர் காலத்தைக் கூறவும் வேண்டுமோ! சலங்கையின் ஒலியில், வாத்தியங்களின் நாதத்தில், அந்தப் புறத்தின் காம விளையாட்டில், மதுவின் போதையில் பேரின்பங் காணும் மன்னரை அழிக்க; அவன் நாட்டைக் கூறு வைக்க ஆங்கிலேயர் வரத் தேவையில்லையே. ஒரு சம்பல் பள்ளத் தாக்குக் கொள்ளைக்காரனே போதுமே!

1851-ல் நிலையராகப் (Resident - நிறுவனத்தின் பிரதிநிதி) ஸ்லீமன் (Sleeman) தம் அறிக்கையில், அயோத்தியின் நிர்வாகம் மிகவும் மோசமாகி விட்டது, என்று கூறினார். 1854 ல் ஜேம்ஸ் உட்ராம் நிலையராக நியமிக்கப் பட்டார். அயோத்தியின் நிலைமையை எவ்வித மேனும் மாற்றும் பொறுப்பு அவருக்கு இருந்தது. அயோத்தியின் நிலை அநீதியின் எல்லைக்கே சென்று விட்டது; என்று உட்ராமும் அறிக்கை அனுப்பினர். தலைமை - ஆளுநர் டல்ஹௌசியே அயோத்தியின் நிர்வாகத்தை நிறுவனமே எடுத்துக் கொண்டு, வாஜீத் ஷாவிற்குப் பதவி, பட்டம், அரசவை, உதவிப் பணம் ஆகியவற்றைக் கொடுக்கலாம்; என்று கருதினர். இங்கிலாந்து மேலிடமும் இதை யோசித்தது. இதை எப்படிச் சாதிப்பது? மன்னர் தானுக முடி துறக்க வேண்டும், அல்லது அவரைப் பலவந்தமாக வெளியேற்ற வேண்டும். நிலையர் உட்ராம், வாஜீத் அலியைப் பதவியைத் துறக்கும்படித் தூண்டினர்; ஆசை காட்டினர்; அச்சுறுத்தினர். வாஜீத் அலி மறுத்தார்; மன்றாடினர். பதவியைத் துறக்க முடியாது என்ற பிடிவாதத்தை

நிறுவனம் மேலும் பொறுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. இங்கிலாந்து மேலிடம் ஒப்புதல் அளித்ததும், வாஜீத் அலி பதவியி லிருந்து நீக்கப் பட்டார். 1856-ம் ஆண்டு ஃபிப்ரவரி 13ம் நாள் அயோத்தி கிழக் கிந்திய நிறுவன ஆட்சியுடன் இணைக்கப் பட்டது. நிறுவனத்திற்குத் தவறெதுவும் புரியாத நெடு நாளைய நண்பன் ஒருவன், ஆங்கில ஆட்சியின் சூழ்ச்சிக் குப் பலியானன்!

அயோத்தியின் இந்த இணைப்பு நியாயமானதா? அதில் பல சிக்கல்கள் அடங்கி யிருந்தன. மொகலாயப் பேரரசின் மாநிலமாக இருந்த அது, ஆங்கிலேயரால் தான் எல்லை குறு கிய ஒரு நாடாக மாற்றி யமைக்கப் பட்டது. ஆங்கிலேயர்கள் அதை வென்றவர்களாதலால் நிபந்தனைகள் விதித்தனர். 1801 ல் ஏற்பட்ட ஒப்பந்தம், அயோத்தியில் நிர்வாக சீர் திருத் தம் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று கூறியது; 1837-ல் ஏற்பட்ட ஒப்பந்தம் அவசியமானல், ஆட்சித் துறையை நிறு வனத்திற்கு மாற்றும் உரிமையை அளித்தது. இந் நிபந்தனை யின்படி, சீர் திருத்தங்களை நிறை வேற்ற வேண்டிய பொறுப்பு மன்னனுக்கு இருந்தது. ஆனல், துணைப் படைத் திட்டத் தினல், நாட்டைப் பாது காக்கும் பொறுப்பைக் கை கழுவி விட்ட இந்திய மன்னர்கள் பலரும் சோம்பித் திரிந்து, கேளிக் கைகளில் ஈடுபட்டு, எதையுஞ் சாதிக்கும் திறனில்லாதவர் களாகி விட்டனர். அதிலும், அயோத்தி என்றாலே, அநீதி என்னுமளவிற்கு ஊழல் மிகுந்து விட்டது. அயோத்தியை இணைத்துக் கொள்ளும் உரிமையை எந்த ஒப்பந்தத்தினலும் நிறுவனம் பெற்றிருக்க வில்லை; என்பது உண்மையே. சட்ட நுணுக்கம் எப்படி இருப்பினும், ஒரு தனி மனிதனுக்காக 50 இலட்சம் அயோத்தி மக்கள் அவதிப்படுவதை, ஆங்கில நிறுவனம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. இந்த நாட் டில், அரசோச்சும் உரிமை சட்டபடி ஆங்கிலேயருக்கு இல்லை தான். எனினும், அவர்களால் தான் ஒரு மொகலாய மாநில மான அயோத்தித் தனி நாடா யிற்று. அவர்கள் அதை உரு வாக்கியதால், அவர்களே அதனுடன் அரசியல் ஒப்பந்தங்கள் செய்து வந்திருப்பதால், அந் நில மக்களின் நலனுக்காக, அதன் அரசியலில் தலையிடும் உரிமை மட்டு மன்றி, கடமை யையும் ஆங்கிலேயரே பெற்றிருந்தனர். 'ஆயிரம் உண்டிங்கு சாதி; அதில் அந்நியர் புகல் என்ன நீதி?' என்று கேட்கலாம் வல்லவன் அனுமதிக்காகக் காத்திருப்பதில்லை. அதிலும், அயோத்தியில் அவர்களுடைய தலையீடு தேவையாயிற்று.

நிறுவன ஆட்சியுடன் அயோத்தி இணைக்கப் பட்டதும் சர் ஜேம்ஸ் உட்ராம் முதல் - ஆணையர் (Chief - Commissioner) ஆக நியமிக்கப் பட்டார். ஆங்கில எசமான் வந்ததும், நல் வாழ்வு கிட்டு மென்று மக்கள் எதிர் பார்ப்பது இயல்பே. ஆனால், பல்லாண்டு நிலைத்து விட்ட ஊழல்களை மாற்றி புது வாழ்வு அளிப்பது அவ்வளவு எளிதல்ல. புது ஆட்சியில் அரசின் உயர் பதவிகள் சுதேசி சீமான்களுக்கு அளிக்கப் படவில்லை. முன்னாள் மன்னரின் 60,000 வீரர்கள் படையிலிருந்து நீக்கப் பட்டனர்! மன்னனைச் சுற்றி, கருவூலத்தை உருஞ்சி உண்டு பருத்த அரசவையினர், ஆடலழகிகள், இசை வாணர்கள் ஆகியோர் விரட்டப் பட்டனர்! மன்னரின் ஆடம்பர வாழ்க்கையில் தங்கள் தொழில்களை வளர்த்த அனைவரும் வேலையின்றித் திரிந்தனர்! களை எடுக்கப்பட்ட பிறகு, உரமிட வேண்டிய தருணத்தில், உட்ராம் விடுமுறையில் சென்று விட்டார்.

ஆக்க வேலைகள் அவசரமாகத் தேவைப்படும் அயோத்திக்கு அடுத்து வந்த முதல் ஆணையர் கவர்லி ஜேக்சன் (Coverley Jackson) ஏற்றவரல்ல. அரச குடும்பத்திற்குச் சொந்தமான சத்தர் மன்ஸில் (Chattar Manzil) என்னும் மாளிகைக்குத் தம் இருப்பிடத்தை மாற்றி யமைத்தற்காக மேலிடம் அவரைக் கண்டித்தது. கோதம் ரஸுல் (Qadam Rasul) என்ற இடம் முஸ்லிம்களுக்குப் புனிதமானது. அக் கட்டிடத்தில் உள்ள ஒரு கல்லில் நபிகள் நாயகத்தின் பாதச் சுவடு பதிந்திருப்பதாக அவர்கள் நம்பினர். அவ் விடத்தை ஆயுதச் சாலையாக ஆணையர் மாற்றியது முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தியது. இணைப்பு ஒப்பந்தப்படி, அரச குடும்பத்தைச் சார்ந்தவரென்று சொல்லப்பட்ட பலருக்கு, வாக்களிக்கப் பட்ட உதவிப் பணம் கொடுப்பதிலும் கால தாமதமாயிற்று... நாட்கள் பல கடந்தன......நன்மைகளைக் காணோம்!

பல வரிகள் நீக்கப் பட்டாலும், புதுத் துறைகளில் வரிகள் புகுத்தப் பட்டன. தபால் தலை, விண்ணப்பங்கள், உணவுப் பொருள்கள், உறை விடங்கள் ஆகியவற்றிற்கு வரிகள் விதிக்கப் பட்டன. அயோத்தி மக்கள் அதிகமாக உட்கொள்ளும் அபினிக்கும் வரி விதிக்கப் பட்டது. அதிக விலை கொடுத்து அபினை வாங்க முடியாத சிலர், தங்கள் தொண்டைகளையும் அறுத்துக் கொண்டார்கள். மன்னனை இழந்ததைத் தவிர, மக்கள் வேறெந்த மாற்றமுங் காண வில்லை, தளபதி மக்லியோ இன்ஸ் (Mchod Inns) இதைக் குறிப்பிட்டு

'வாக்களித்தபடி சீர்திருத்தங்கள் செய்ய நாம் தவறி விட்டோம். அயோத்தியின் நிர்வாகம் நம்பிக்கை துரோகமாகும்' என்று கூறினர். இவ் விடத்தில் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். காவல் துறையையும், நிதித் துறையையும் சீர்திருத்துவதென்பது, அவ்வளவு எளிதாக இல்லை. பழைய அலுவலர்களைத் திடீரென நீக்கவும் முடியவில்லை. அவர்களால் தங்கள் பழைய ஊழல்களைத் திடீரென நிறுத்தவும் முடியவில்லை.

அயோத்தியில், நிலங்களின் அதிபதிகளாக நெடுங் காலம் இருந்து வருபவர்களே தாலூக்கதார்கள். தங்கள் வாள் வலியால் தலைவர்களாகிப் பெரும் நிலக் கிழார்களாக அவர்கள் அப்போது விளங்கி வந்தனர். அவர்களுடைய நிலங்களில் தான் குடியானவர்கள் பயிரிட்டு, அவர்களுக்கும் ஒரு பகுதியைக் கொடுத்து வந்தனர். மன்னனுக் கெதிராக அவர்கள் போர் தொடுத்தால், குடியானவர்களும் அவர்களுக்கு உதவுவார்கள். நாட்டுக்கு மன்னன் தலைவனென்றாலும், தங்களுக்குத் தாலுக்தார்களே தலைவர்கள் என்று, மக்கள் கருதி வந்தனர். இடைக் காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய படை மானியம் அல்லது நிலமானிய முறையைப் போன்றதுவே இதுவும். தாலுக்தார் எந்த அட்டூழியம் புரிந்தாலும், கொடுமைப் படுத்தினுலும் அவனுக்கும், குடியானவனுக்கும் இருந்த பிணைப்பு மிகவும் நெருக்கமானது. ஜமீன்தார் விசுவாசத்தை நாம் அறிவோம். இந்த உறவையும், உணர்வையும் புரிந்து கொள்ளாமல் நிறுவன ஆட்சிப் புது நிலச் சட்டம் ஒன்றுங் கொண்டு வந்தது. அதன்படி, தாலுக்கதார்கள் தங்கள் நிலங்களுக்குச் சட்ட பூர்வமான பத்திரங்கள் பெற்றிருக்க வேண்டு மென்று புது ஆட்சி வற்புறுத்தியது. தலைமுறை தலைமுறையாக அனுபவித்த உரிமைகளுக்குச் சாசனங்கள் பெற்றிராததால், நூற்றுக்கணக்கான தாலுக்தார்கள் தூக்கி எறியப்பட்டு, ஒரு நொடியில் பாமரர்களாக்கப் பட்டனர்! இதனால், குடியானவன் நன்மை பெறுவான் என்று கருதப் பட்டது. ஆனால், உடனடியாக நேர்ந்த விளைவு வேறு. கம்பெனி ஆட்சிக்குப் பல தாலுக்தார்கள் எதிரிகளானார்கள்! 'மிகவும் மோசமான ஆங்கில ஆட்சியாயினும் சுதேசியின் ஆட்சியை விட அதுச் சிறந்தது; மக்கள் அதை வரவேற்பார்கள்;' என்று பலர் கருதினர். அதில் ஓரளவு உண்மையும் இருந்தது. ஆனால், அயோத்தியைப் பொருத்த மட்டில் அது பொய்த்து விட்டது.

# 18. லக்னோவில் ஒரு லாரென்ஸ்

[ஹென்றி லாரன்ஸ் முதல் ஆணையர் ஆதல்—சீரமைப்பு மேற்கொள்ளல்—காலம் தவறிய நடவடிக்கை—வங்காளப் படையில் அயோத்தி வீரர்கள்—இலக்னோ படை தளம்—ஊர் அமைப்பு — நிலைய ரகம் — கொழுப்புக் குண்டு வதந்திகள் — லாரென்ஸ் விபரீதத்தை உணர்தல்—சிப்பாய்கள் குண்டுகளைப் பெற மறுத்தல்—ஆயுதப் பறிமுதல் — லாரென்ஸின் தர்பார் சொற்பொழிவு —மீரத் நிகழ்ச்சிக்குப் பிறகு தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்தல்—நிலையரகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள்—லக்னோவில் கிளர்ச்சி—அயோத்தியின் உள் மாநிலங்களில் கிளர்ச்சிகள்.]

ஓராண்டுக்குள் அதிகம் சாதிக்க முடியாவிடினும், ஓரளவாவது புரிந்திருக்கலாம். அதுவும் நடக்கவில்லை. இந்த நிலையில், 1857 மார்ச்சித் திங்களில் சர் ஹென்றி லாரன்ஸ் முதல் ஆணையர் ஆனார். இதற்கிடையில் தலைமை - ஆளுநர் டல்ஹௌசிப் பிரபு, தம்மை அறியாமல் புரட்சிக்கு விதைகளைத் தூவி விட்டு, இங்கிலாந்திற்குக் கப்பலேறி விட்டார். ஹென்றி லாரன்ஸ், அயோத்தியின் புண்களை ஆற்ற முற்பட்டார். உதவிப் பணங்கள் ஒழுங்காகத் தரப் பட்டன; தாலுக்தார்களின் குறைகள் கவனத்துடன் கேட்கப் பட்டன; சீரமைப்புகள் தொடங்கின. ஆனால், காலங் கடந்து விட்டது! கொழுப்புக் குண்டுகள் தத்தம் வேலையைத் தொடங்கி விட்டன. வெள்ளையரின் எந்தச் சிறு தவறும் வெறுப்பை வளர்ப்பதற்கு மக்களிடம் வதந்திகளாக உரு வேற்றன! அயோத்தியில் மட்டும் எந்த வதந்தியானலும் விதைத்ததும் பலனைத் தரும். அதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது.

ஆங்கில நிறுவனத்தின் புகழ்ப் பெற்ற வங்காளப் படையில், ஐந்தில் மூன்று பகுதிகள், அயோத்தி வீரர்களைக் கொண்டது. வங்காளத்தில் நடப்பது எது வென்றாலும்? இவ் வீரர்களின் மூலமாகவே அயோத்திக்கு எட்டி விடும். கொழுப்புக் குண்டால் மார்ச் மாதத்தில் பர்ஹாம்பூரில் ஏற்பட்ட கலவரம்


விரைவில் அயோத்தியை அடைந்து விட்டது. விடுமுறைக்கு அயோத்திலிருக்குந் தங்கள் கிராமங்களுக்குச் சென்ற வீரர் கள் இகழப் பட்டனர். சாதியி லிருந்து பலர் விலக்கப்பட் டனர். இதைத் தொடர்ந்து லக்னோ படை தளம் விழித் துக் கொண்டது. அங்கே, 7,000 சுதேசி சிப்பாய்களும் 700 ஆங்கில வீரர்களும் இருந்தனர். இந்தப் பின்னணியில் தான். அயோத்தி நாடகந் தொடங்குகிறது. லக்னோ முதல் காட்சி!

கோமதி நதியின் தென் கரையில் (வலது கரையில்) மூன்று மைல் நீளத்திற்கு அந் நகரம் பரவி யிருந்தது. நகருக் கும், நதிக் கரைக்கும் இடையில் நிலையரகம் (Resiclency) இருக் கிறது. அதற்கு மேல் புறம் மச்சி பவனும், கீழ்ப் புறம் மோதி மஹால், ஷா மன்சில், ஃபர்ஹத் பக்ஷ் (Farhcct Bakhsh) மாளிகைகள் இருக்கின்றன. நிலையரகத்திற்குத் தென் கிழக்கே அயோத்தி மன்னரின் பெரிய மாளிகை 'கெய்சர் பாக்' இருக்கிறது; நேர் தெற்கே நான்கு மைல் தொலைவில் ஆலம்பாக் (Alam Bagh) என்ற மதில் தோட்டம் ஒன்றுஇருக் கிறது. நதியை ஒட்டியும், ஊரின் விளிம்பிலும் தான் இவை யனைத்தும் இருக்கின்றன.

நிலையரகத்தை ஒரு முறை நன்கு சுற்றிப் பார்ப்போம். அயோத்தியின் இணைப்புக்கு முன்பு நிலையரின் இருப்பிடமாக அது இருந்தது. இணைப்புக்குப் பின்பு முதல் ஆணையரின் தலைமை யகமாக அது விளங்கியது. மிகவும் பரந்த அப் பகுதியில், மாளிகைக் கருகில் தெரிபவை மருத்துவ நிலையம், தபால் நிலையம், கருவூலம் ஆகியவைகள். ஆங்காங்கே ஆங்கில உயர் அதிகாரிகளின் இல்லங்களும் தென்படுகின்றன. கரு வூலத்தை ஒரு சுதேசிப் படை காவல் காக்கின்றது. கிழக்கே யுள்ள நுழை வாயிலைப் பெய்லி கார்டு (Baille Gaurd) என்று அழைக்கப்படும். நிறுவன ஆட்சியின் உயிர் நாடியான இந்த நிலையரகத்தின் ஒரு மாளிகையில் - தான், முதல் ஆணையர் சர் ஹென்றி லாரன்ஸ் தங்கி யிருந்தார்.

1857 — ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் படை மருத்துவர் வெல்ஸ் (Wells), மருத்துவ மனையிலிருந்து ஒரு புட்டியை எடுத்து வாய் வைத்துக் குடித்ததை வீரர்கள் சிலர் பார்த் தனர். வேண்டு மென்றே மருந்தை எச்சில் செய்து, இந்து மத ஆச்சாரத்திற்குக் கேடு விளைவித்து விட்டார்; என்று அவர்கள் கூச்சலிட்டனர். தீட்டுப் பட்டதால், மனையிலிருந்த எம் மருந்தை யும் நோயாளிகள் குடிக்க மறுத்து விட்டனர். கண்டனத்திற்

குள்ளான டாக்டர் வெல்ஸ், வீரர்களின் கண்களின் முன்னே அப் புட்டியை உடைத்தும், அவர்களின் ஆத்திரம் அடங்க வில்லை. ஏற்கனவே, கொழுப்புக் குண்டு வதந்தியில் பீதிக் குள்ளாயிருந்தவர்களாதலாலே, அடங்கா ஆத்திரத்தில் துப் பாக்கியை எடுத்துச் சுட்டனர். டாக்டர் வெல்ஸ் உயிர் தப் பினர். அதனுல், சிப்பாய்களின் வெறுப்பின் அளவு எவ்வளவு? என்பது இந் நிகழ்ச்சியிலிருந்து தெரிந்து விட்டது!



சர் ஹென்றி லாரன்ஸ்

நிகழ்ச்சியின் போக்கைப் புரிந்து கொண்ட முதல் ஆணையர் ஹென்றி லாரன்ஸ், சுதேசி அதிகாரிகளிடமும், சிப்பாய்களி னிடமும் கலந்து பேசினர். அவர்களுக்குக் கடமையை நினை வுறுத்தினர்; நன்றிக்கடனைச் சுட்டிக் காட்டினர்; கட்டுப்

பாட்டை மீறினால் ஏற்படப்போகும் கடும் விளைவுகளையும், தண்டனைகளையும் கோடிட்டுக் காட்டினார். சிப்பாய்கள் இந்த உபதேசத்தையும், உருட்டல் மிரட்டல்களையும் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. சிப்பாய்களின் மனம் விடமாகி விட்டது; அவர்கள் தவறான பாதையில் அடி எடுத்துவைக்க முனைகின்றனர்; என்பதையும் லாரன்ஸ் எளிதில் புரிந்து கொண்டார். சில ஆயிரம் ஆங்கிலேயருக் கெதிராக 20 கோடி மக்களின் கோபம் விரைவில் தூண்டி விடப்படும்; என்பது, அவருக்கு விளங்கியது; நன்றியுடன் ஒரு நூற்றாண்டளவு சேவைபுரிந்த சிப்பாய்களின் மத்தியில், ஒரு நச்சரவம் நெளிவது அவருக்குத் தெரிந்தது! அவர்கள் விழித்தால்...வெகுண்டெழுந்தால்......ஹென்றி லாரன்ஸ் விழித்துக் கொண்டார்! பரக்பூரும், பர்ஹான்பூரும், கொழுப்புக் குண்டும், மருந்துப் புட்டியும், அவருக்குக் கெட்ட கனவுகளை ஏற்படுத்தின போலும்! ஏப்ரல் மாதத்திலேயே, மீரட் வெடிப்பதற்குச் சிறிது முன்பே, ஆபத்தை எதிர்க்க, முன்னெச்சரிக்கையுடன் ஹென்றி லாரன்ஸ் செயல்பட்டார். லாரன்ஸின் சிறப்பியல்பு இதுவே! ஏதோ அபாயம் காத்திருக்கிறது, என்று அவருடைய உள்ளுணர்வு சொல்லியிருக்க வேண்டும்!

நிலையரகத்தைச் சுற்றியுள்ள பல குடிசைப் பகுதிகளை அகற்றினார்; தடங்கலின்றி நீர் கிடைக்க ஏற்பாடு செய்தார்; உணவுப் பொருள்களை அங்கேக் குவித்தார்; வெடி மருந்தும், ஆயுதங்களுஞ் சேகரித்து முடக்கினார். இந்த ஏற்பாடுகள் அனைத்தும் இரகசியமாகச் செயல்பட்டன. தம் சந்தேகத்தையும், பயத்தையும் சிறிதுகூட அவர் வெளிக்காட்டவில்லை. கிளர்ச்சியைச் சிப்பாய்கள் பலர் விரும்பியோ, அல்லது திட்டமிட்டோ, ஒத்துழைத்தோ, எதிர்பார்த்தோ இருந்திருக்கலாம். ஆனால், அதிகாரிகளில், ஹென்றி லாரன்ஸ் போன்ற ஒரு சிலரே, கிளர்ச்சித் தோன்றுமானால் அது சிறிதாக இருக்காது என்று உணர்ந்தனர்.

லாரன்ஸின் கணிப்புப்படி நிகழ்ச்சிகள் தலை எடுத்தன. ஊருக்கு வெளியே மூசாபாக்கில் நிறுத்தப்பட்டிருந்த 7வது அணியினர் ஏப்ரல் 30ம் நாள் பயிற்சியின்போது, குண்டுகளை வாங்க மறுத்தனர். அவை பழைய குண்டுகளே என்று உறுதி கூறப்பட்டும், மறு நாள் அவற்றைக் கடிப்பதற்கு மறுத்து விட்டனர்; தொடுவதே தீட்டு! கடிப்பதென்றால், சாதியை அழிக்கச் சதி நடக்கிறது என்பது, அச் சிப்பாய்களுக்கு உறுதியாகப் பட்டு விட்டது. இதற்கு முடிவு கட்ட, கடந்த

பல நாட்களாக அவர் திட்டமிட்டிருக்க வேண்டும். அதிகாரி களைக் கொன்றுவிட அவர்களெடுத்த முடிவு, அதிகாரிகளுக்கே தெரிந்து விட்டது! 7வது அணியின் உண்மை நிலைமை அறிய லாரன்ஸ் இரு அதிகாரிகளை அனுப்பினர். குண்டுகளைக் கடிக்க முடியுமா? முடியாதா? என்ற கேள்விகளுக்குச் சிப்பாய் கள் சிறிது தயக்கத்திற்குப் பின்னரே சரியென்று பதிலளித் தனர். இனியும் 7வது அணியை நம்பிப் பயனில்லை, என்பது லாரன்ஸுக்குப் பட்டது. மே 3 ம் நாள் மாலை, அவ் வணியின் ஆயுதங்களைப் பறிக்க லாரன்ஸ் ஒரு படையுடன் பயிற்சித் தளத்திற்குச் சென்றார். எதிரில், சிவந்த கண்களுடன் லாரன் ஸும், இமைப் பொழுதில் பாய்வதற்குக் காத்திருந்த வெள் ளையர் படை அவரருகிலும் நிற்பதைக் கண்ட சிப்பாய்கள், ஓட முயற்சித்தனர். பலாத்காரம் பயன்படுத்தப் படமாட்டாது, என்ற உறுதி தரப்பட்ட பின்பு, சிப்பாய்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தனர். மறு நாள் அவ் வணியின் தீய சக்திகளை, லாரன்ஸ் விசாரணைக்குட் படுத்தினர். தொடர்ந்து, பல படைப் பிரிவுகளுக்கிடையே, நடந்து வந்த இரகசிய கடிதப் போக்குவரத்துச் சில சிப்பாய்களின் உதவியால் கண்டு பிடிக் கப் பட்டது. அத்துடன், சதியில் தன்னை இழுக்க முயன்ற லக்னோ நகரத்தார் மூவரை ஒரு சிப்பாய் பிடித்து, அதிகாரி களின் முன்னே நிறுத்தினன்.

ஆயுதப் பறிமுதல் மூலம் சிப்பாய்களை அதிகாரிகள் நம்ப வில்லை, என்பது தெரிந்து விட்டது. இந் நிலையில் நகரில் உலவும் சதிகாரர்களின் வலையில் சிப்பாய்கள் விழுவதற்கு வாய்ப்பு கள் அதிகமாகி விடும். இதைத் தடுக்க நினைத்த லாரன்ஸ், இரகசியக் கடிதங்களையும், சதிகாரர்களையும் ஒப்புவித்தச் சிப்பாய்களுக்குப் பரிசளிக்க முடிவு செய்தார். அடிக்குங் கையில் தான் அணைக்கவும் வேண்டும்; எப்படியும் சிப்பாய் களின் அச்சம் மறைய வேண்டும்; அவர்களுக்கு நம்பிக்கை வளர வேண்டும்; இப் பரிசளிப்பின் மூலம் கடமைக்கும், சூழ்ச்சிக்கு மிடையில் ஊசலாடும் மனம் மாறி, உண்மையுட னும், நன்றியுடனும் நடப்பார்கள்என்று லாரன்ஸ் கருதினர். அதன்படியே மே 12ம் நாள் ஆடம்பர தர்பார் ஒன்று நடத்தப் பட்டது. அம் மாலையில், தர்பார் மன்றத்தில், படை அதிகாரி கள், அரசாங்கப் பணியாளர்கள், நகரச் சீமான்கள், சிப்பாய் களில் குறிப்பிட்டவர்கள் ஆகிய அனைவரும் சீருடையில் குழுமி யிருந்தனர். பரிசளிப்பு விருதுகள் ஒரு பக்கம் பளபளத்தன! சர் ஹென்றி லாரன்ஸ் தன் சொற்பொழிவை இந்தி மொழி யிலேயே ஆற்றினர்!

'மொகலாய ஔரங்கசீப் இந்துக்களை வெறுத்தான்; சீக்கிய இரஞ்சித்சிங் முஸ்லிம்களை ஒறுத்தான்; ஆங்கில கிறித்துவர்களின் ஆட்சியில்தான் எல்லா மதங்களும் பொறுத்துக் கொள்ளப்படுகின்றன. கடந்த ஒரு நூற்றாண்டில், இந்தச் சிப்பாய்களின் முன்னோர்கள், நன்றிமிக்க போர் வீரர்களாக, அரசுக்குப் பணியாற்றி யிருக்கிறார்கள். இந்தியரின் நல் வாழ்வுக்காகவே இந்த அரசு பாடு படுகிறது. சிலருடைய சூழ்ச்சியில் சிக்கி, நற் பெயரிழந்து, நல்வாழ்விழந்து, நன்றி மறந்து யாரும் அரசுக்கு எதிரியாக வேண்டாம். இங்கிலாந்து! இது மாபெரும் வல்லரசு! கடல்கள் தோறும் அதன் படைக் கலங்கள்! கண்டங்கள் தோறும் அதன் படைத்தளங்கள்! இங்கிலாந்தை முறியடிக்க எவரும், எந் நாளும் முயன்றதில்லை. முயன்றாலும் வெல்வதில்லை.' இக் கருத்துக்களைக் கொண்ட லாரன்ஸின் உரை இந்தியரின் அறிவுக்கும், நன்றிக்கும், அச்சத்திற்கும், நேர்வழிக்கும் விடப்பட்ட வேண்டுகோளாகும். இந்த நெப்போலிய சொற்பொழிவு கரவொலியை எழுப்பியது. கண நேரத்தில், தர்பார் கலைந்ததும், வேதாளம் மீண்டும் மரத்திலேறியது! லாரன்ஸ் அஞ்சியபடி, சிப்பாய்கள் என்றோ பாதை 'தவறி'ப் போய் விட்டார்கள்! ஆம் 'அடிமை'ப் பாதையை தவறி, இரண்டு நாட்களுக்கு முன்பே, புரட்சிப் பாதையில் மீரட் வீரர்கள் சென்று விட்டனர்!

மே 10ஆம் நாள் மீரட்டில் கலவரம்; மே 12ஆம் நாள் லக்னோவில் தர்பார். இரண்டு நாட்களுக்குப் பின்னரே தந்தி மூலம் டெல்லி வீழ்ச்சியை லாரன்ஸ் அறிந்தார். தம் அச்சத்தை அவர் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. உண்மையில் அவர் அஞ்சவும் இல்லை. உடனடியாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை நிறைவு செய்தார். ஓய்வு பெற்ற சிப்பாய்களை வரவழைத்தார்; அணிகளை முறையாக நிறுத்தினார். கோமதி நதியின் மேலிருந்த படகு பாலத்தை நகர்த்தி, நிலையரகத்திற் கருகில் அமைத்தார். பழைய மாளிகையான மச்சிப் பவனில் தளவாடங்களைக் காவல் காக்க வீரர்களை நிறுத்தினார். சிப்பாய்களின் மேல், தாம் கொண்டிருந்தச் சந்தேகத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல், அதே நேரத்தில் இரகசியமாக, அவர்களின் செயல்களைக் கண்காணித்தார். மீரத் கிளர்ச்சியைப் பெரிது படுத்தாமல், தாம் இருப்பதாகவே காட்டிக் கொண்டார். தாக்குதலைச் சமாளிக்கவும் ஏற்பாடுகளைச் செய்து முடித்தார். நெருக்கடியை முன்னிட்டு, நிர்வாக அதிகாரத்துடன் தமக்கு இராணுவ அதிகாரம் தரும்படியும், சீனா இலங்கை முதலிய இடங்களிலிருக்கும் ஆங்கில வீரர்களையும், நேப்பாள

கூர்க்கா படையையும் உதவிக்கனுப்பக் கோரியும், தலைமை ஆளுநருக்கு லாரன்ஸ், அவசர வேண்டு கோள் விடுத்தார். மே 19ம் நாள் தலைமை ஆளுநர் கேனிங் இராணுவ அதிகாரத்தையும் லாரன்ஸுக்குக் கொடுத்தார். இவ் வாணை கிடைத்ததும், லக்னோவில் இருந்த ஆங்கிலக் குடும்பங்கள் அனைத்தையும் நிலையரகத்திற்கு லாரன்ஸ் கொண்டு வந்தார். அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும், அவசரப் படைப் பயிற்சி அளிக்கச் செய்தார். உணவுப் பொருள்களும், தளவாடங்களும் குவிக்கப் பட்டன. நான்கைந்து மாதங்களுக்கு எந்த முற்றுகையையும் சமாளிக்கலாம், தாக்குவதற்கு லக்னோவும், தாங்குவதற்கு லாரன்ஸும் தயாரானார்கள். அதற்கு முன்பே ஓர் அவசர ஏற்பாடு: லக்னோவின் வெளிப் புறங்களில் கிளர்ச்சிக்கு அறிகுறிகள் தென்பட்டால், சந்தேகத்திற்குரிய அணிகள் நகரில் இருப்பது நன்றன்று; என்று கருதியததால், 7வது அணியின் ஒரு பகுதியையும், ஆங்கில அணியையும், சுற்றுப் புறங்களில் அமைதியை நிலை நாட்ட லாரன்ஸ் அனுப்பினார். மே 27ஆம் நாள் இப் படை லக்னோவை விட்டு, அயோத்திப் பகுதியின் வட எல்லையை நோக்கிச் சென்றது. அடுத்த இரண்டு நாட்களில் லக்னோவில் காற்று கனத்தது! சூழ்ச்சிக்காரர்கள் சுறு சுறுப்பாயினர். இரு தரப்பு ஒற்றர்களும் வேகமாக இயங்கினர். அடுத்து என்ன நேருமோ?

அன்று மே 30ஆம் நாள், இரவு ஒன்பது 9 மணிக்கு புரட்சித் தொடங்கும் என்ற இரகசிய திட்டத்தை ஒரு சிப்பாயின் மூலம் அறிந்த அதிகாரி, லாரன்ஸிடம் கூறி இருந்தார். அன்றிரவு, தம் சக அதிகாரிகள் சிலருடன் லாரன்ஸ் உணவருந்திக் கொண்டிருந்தார். சரியாக ஒன்பது மணிக்கு நேரத்தை அறிவிக்கப் பீரங்கிகள் முழங்கின. சில விநாடிகள் எங்கும் ஒரே அமைதி! லாரன்ஸ் அந்த அதிகாரியைத் திரும்பிப் பார்த்தார்......ஏளனப் புன்னகையுடன் வினவினார். ‘உன் நண்பர்கள், குறித்த நேரம் காப்பதில்லையோ? ... ... டுமீல், டுமீல் அவர் சொல்லி முடித்ததும் துப்பாக்கி வெடியோசை வானைப் பிளந்தது......அமைதியைக் கெடுத்தது. சிப்பாய்கள் நேரம் தவறவில்லை! உணவை நிறுத்தி விட்டு, லாரன்சும் அதிகாரிகளும் வாயிலுக்கு விரைந்தனர். எதிரில் சற்று தூரத்தில் வெள்ளை அதிகாரியின் வீடு ஒன்று குபு குபு வென்று பற்றி எரிந்து கொண்டு இருந்தது...மறு விநாடியே சரக் சரக் கென்று சிப்பாய்ப் படையொன்று அணிவகுத்து நிலையர் மாளிகை முன் நின்றது! லாரன்ஸ்ஸும், அதிகாரிகளும் துணுக் குற்றனர்......தீப்பிழம்புகளின் ஒளியில், மாளிகையின் வாயிற் படி

களுக்கு மேல், அந்த ஆங்கிலச் சிங்கங்கள் அசைவற்று நின்றன! அணி வகுத்துக் கீழே நின்றவர்கள், நிலையரகத்தைக் காவல் காக்கும் சுதேசி சிப்பாய்கள். அவர்களில் சில துரோகிகள் இருந்திருந்தால்!......அதிகாரிகள் தப்பிக்க முயற்சித்திருந்தால்! சர் ஹென்றி லாரன்ஸ், மேஜர் பேங்க்ஸ், கர்னல் இங்கிலீஷ், அயோத்தி நிர்வாகத்தின் அடிப்படையான இம் மூன்று தூண்களும் அன்றே சாய்ந்திருக்கும்! லக்னோ, மறு விநாடியே புரட்சியின் வசமாகியிருக்கும். அதிகாரிகள் அசைவற்று நின்றனர். அவர்களின் கலங்காத நெஞ்சங்கள், பதராத உடல்கள் நிலைமையைக் காத்தன. ஆங்கிலேயரின் உப்பைத் தின்ற அச்சிப்பாய்கள் நன்றி மறக்கவில்லை. மாறாக, தம் தோழனை, விடுதலை வீரன் அழிப்பதற்கு ஆணையை எதிர் பார்த்து நின்றனர். ஆணைகள் பறந்தன. தயாராய் நின்றிருந்த புரவிகளில் ஏறி, அதிகாரிகள் புரட்சித் தீயை அணைக்கப் பறந்தனர். சிறிது நேரத்தில், படை அதிகாரிகள் சிலரைக் கொன்று வெள்ளையர் இல்லங்களுக்கு தீ வைத்து விட்டுப் புரட்சி வீரர்கள் அங்குமிங்கும் ஓடினர். முறையான திட்டமும், முன்னெச்சரிக்கையும் இல்லாததால், கிளர்ந்தெழுந்து விட்ட சிப்பாய்களுக்கு என்ன செய்வதென்றுந் தெரியவில்லை. மேலும் லாரன்ஸ் சுறு சுறுப்பாக இயங்கி, நகரின் நெடுஞ் சாலையைத் தடுத்துக் காவல் வைத்து விட்டதால், சிப்பாய்களின் நடமாட்டங் குறைக்கப் பட்டது. கிளர்ச்சிச் செய்த அணிகளின் ஒரு பகுதி, அதில் ஈடு படாமல் ஆங்கிலப் படையுடன் சேர்ந்து கொண்டன. செய்வதறியாத புரட்சி வீரர்கள், பொழுது விடிவதற்குள் ஊரை விட்டே வெளியேறினர். மறு நாள் 10 மைல் தூரந் துரத்திச் சென்ற பரங்கிப் படை, 60 க்கும் மேற்பட்ட புரட்சி வீரர்களைப் பிடித்துக் கொண்டு வந்து, இராணுவ விசாரணைக்குப் பிறகு, மச்சிப் பவனுக்கு முன்பு, தூக்கிலிட்டுக் கொன்றது. தப்பியோடிய புரட்சிக்காரர்கள் டெல்லியை நோக்கிச் சென்றனர்.

புரட்சியில் ஈடு படாத சிப்பாய்களை என்ன செய்வது? நிலையரகத்தைக் காவல் புரியும் 500 சுதேசிச் சிப்பாய்களை நம்பி ஆங்கிலக் குடும்பங்கள் அங்கே வாழ்வது ஆபத்து; எனவே, சுதேசி சிப்பாய்கள் அனைவரையும் நீக்கி வெளியேற்றுவதே நல்லது என்று நீதி ஆணையாளர் மார்டின் குபின்ஸ் (Financial Commissioner, Martin Gubbins) வற்புறுத்தினார். ஹென்றி லாரன்ஸ் அதை விரும்பவில்லை. உண்மையான சிப்பாய்களைச் சந்தேகித்து வெளியேற்றினால், அவர்களும் எதிரிகளுடன் சேர்வதற்கு நாமே காரணமாவோம்; அது மட்டுமன்றி மிகச்சிறிய

வெள்ளையர் படை மட்டும் வரப்போகும் தாக்குதலைச் சமாளிக்க முடியாது; ஓரளவாவது சிப்பாய்களை நம்பித்தான் தற்காத்துக் கொள்ள முடியும். குபின்ஸின் அச்சம் நியாயமானதெனினும், லாரன்ஸின் இக் கருத்திலும் உண்மை இருக்கிறது. நிலையரகத்திலிருந்த சிப்பாய்கள் நீக்கப்பட வில்லை.

மே 30 ஆம் நாள் லக்னோவில் கிளர்ச்சித் தோன்றியதும் அயோத்தியின் உள் மாநிலங்களில் உள்ள பல ஊர்களில், அது எதிரொலித்தது. படையுடன் ஒவ்வொரு அணியும், ஒவ்வொரு பிரிவும், தன்னிச்சைப்படிக் கிளர்ச்சியிலிறங்கியது. புரட்சி வீரர்களிடையே முறையான, வகுக்கப்பட்ட திட்டங்கள் இல்லை; சதியிலீடுபடாத சில அணிகள், அதிகாரிகளின் சந்தேக நடவடிக்கைகளைத் தொடர்ந்து எதிரிகளாயின. லக்னோவில் தொடங்கி, வலது இடமாக அயோத்தியில் ஒரு வலம் வந்தோமானால், ஒன்றன் பின் ஒன்றாகக் கண்ணிகள் வெடிப்பதைப் போலப் புரட்சி வெடிப்பதை நாமுங் காணலாம்.

(இதற்கிடையில், சுற்றுப் புறத்தில் அமைதியை நிலைநாட்ட லாரன்ஸ் அனுப்பிய படை, லக்னோவிற்கு மேற்கே 32 வது மைலில் சாந்திலா (Sandila) என்ற இடத்தை ஜூன் முதல் நாள் அடைந்தது. லக்னோ கிளர்ந்தெழுந்ததை அறிந்ததும் அச் சிப்பாய்கள் உடன் வந்த சில படை அதிகாரிகளைக் கொன்று விட்டு டெல்லியை நோக்கிச் சென்றனர்.)

# 19. அயோத்தியைச் சுற்றி...

[சீதாப்பூர்—ஆணையர் கிறிஸ்டியன்—கிளர்ச்சி—முகம்தி ஆணையர் தோமாஸன் — தளபதி பாட்ரிக் ஓர்—மிதௌலி சிற்றரசரின் உதவி—கிளர்ச்சி—ஔரங்காபாத் பயணம்—பாரெய்க் ஆணையர் விங்ஃபீல்ட்—சிக்ரோரா, கோண்டா படைத்தளங்களில் கிளர்ச்சி—பலராம்பூர் சிற்றரசனின் உதவி — லக்னோவை நோக்கிச் செல்லல்.]

அயோத்தியின் வட மேற்கு மாநிலம் கெய்ராபாத்தின் (Khairabad) தலை நகரான சீதாபூர், லக்னோவிற்கு 50 மைல் தொலைவில் கோமதி-கோக்ரா நதிகளுக்கிடையே இருக்கிறது. அங்கே நிறுத்தப்பட்டிருந்த 41 வது சுதேசி அணியின் நடத்தையில் ஆணையர் கிறிஸ்டியன் (Commissioner Mr. Christian) பெரும் நம்பிக்கைக் கொண்டிருந்தார். ஆனால், எங்கும் போல் இங்கும் ஆங்கிலேயர் மேல் வெறுப்பு வளர்ந்திருந்தது. இருப்பினும், சிப்பாய்கள் அதை வெளியில் காட்டிக் கொள்ள வில்லை. ஏன்? ஜூன் முதல் நாள் கூட லக்னோ புரட்சி வீரர்கள் அவ்வழியே டெல்லி நோக்கிச் சென்ற போது, அதிகாரிகளின் ஆணைக் கேற்ப, அவர்களை நோக்கிச் சுட்டனர். ஆனால், மறு நாளே உணவுக்காகத் தரப்பட்ட ஆட்டா மாவில், எலும்புத் தூள் கலக்கப் பட்டிருக்கிறது; என்று கூச்சலிட்டு ஆர்ப்பாட்டஞ் செய்தனர். அவர்களைத் திருப்திப் படுத்த அம்மாவு ஆற்றில் கொட்டப் பட்டது. தங்கள் கை ஓங்கி யிருப்பதைக் கண்ட அச் சிப்பாய்கள், வெள்ளையர் இல்லங்களில் நின்ற மரங்களில் ஏறி பழங்களைப் பறித்துக் கொள்ளை யடித்தனர். அவர்களின் நடத்தையைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. அதிகாரிகளுக்கு ஐயம் வலுத்தது. அபாயத்தை உணர்ந்த ஆணையர் கிறிஸ்டியன், ஆங்கிலக் குடும்பங்களைத் தம் இல்லத்திற்கு வரவழைத்துப் பீரங்கி வீரர்களைக் காவலில் நிறுத்தினர். அதிகாரிகள் தங்களின் மேல் நம்பிக்கை உடையரா

யில்லை என்பதை அறிந்து கொண்ட சிப்பாய்கள் ஆத்திர மடைந்தனர். ஜூன் 2ம் நாள் காலை 8 மணிக்குச் சிப்பாய்களில் சிலர் திடீரென கருவூலத்தைக் கைப்பற்ற ஓடினர். பிறர் ஆயுதங்களுடன் ஆணையர் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டனர். அதிகாரிகள் செயலிலிரங்கு முன்பே புரட்சி வலுத்தது. பல அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆணையர் இல்லத்தி லிருந்து பின்புற முள்ள ஆற்றில் குதித்து வெள்ளைக் குடும் பங்கள் தப்பின. அவ்வாற்றைக் கடக்கு முன்பே ஆணையரும், அவர் மனைவி மக்களுஞ் சுட்டுக் கொல்லப் பட்டனர். மேலும் 24 பேர்கள் மொத்தத்தில் கொல்லப் பட்டனர். பல திசை களிலுந் தப்பிச் சென்ற வெள்ளையர்களில் சிலர் லக்னோவை அடைந்தனர்; சிலர் ராம்கோட் ஜமீன்தாரிடம் தஞ்சம் புகுந் தனர்; சிலர் கிராம வாசிகளிடம் அடைக்கலம் பெற்றனர். சிலர் நேப்பாள எல்லைக்கே ஓடி விட்டனர்; பல மாதங்களாக மறைந்து வாழ்ந்து வந்த சிலர், மீண்டுஞ் சிப்பாய்களிடம் சிக்கினர். சீதாப்பூர் கிளர்ச்சியில் தப்பிப் பிழைத்தவர்கள் மிகச் சிலரே யாவர். வெற்றி பெற்ற 41வது அணி ஃபருக்கா பாத்திற்குச் சென்றது. அவ் ஊரும் புரட்சியின் ஒரு மையமே ஆகும்;

அயோத்தியின் வட எல்லையிலிருந்த முகம்தி மாவட்டத் தில் உதவி ஆணையராக இருந்தார் தோமாசன் (Thomason) அவருக்கு உதவியாகக் கேப்டன் பாட்ரிக் ஆர் (Patrick Orr) இருந்தார். மேற்கே யிருந்த ஷாஜஹான்பூரில் கலவரந் தோன் றியதால், தப்பி ஓடிவரும் வெள்ளை அகதிகளுக்கு உதவி செய்யும்படிச் செய்தி வந்ததும், முகம்தியிலிருந்து இவ் விரு அதிகாரிகளும் பாது காப்பு ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கி னர். முதலில் கேப்டன் பாட்ரிக் ஆரின் மனைவியையும், குழந் தைகளையும் தக்கத் துணையுடன் வெளி யேற்றினர். திருமதி பாட்ரிக்கும், குழந்தைகளும் ஜூன் முதல் நாள் மிதௌ லியை (Mitauli) அடைந்தனர். அவ்வூர் சிற்றரசன் தன் கோட்டையில் புகலிடம் அளிப்பது கடினம் என்று கூறி, அருகி லுள்ள காட்டில் ஒளிந்து கொள்ளும்படிக் கூறினான். அவ் வாறே, அவர்களும் இரண்டு மணி நேரம் நடந்து சென்று, அக் காட்டையை அடைந்து, மண் கோட்டை ஒன்றில் தங்கினர். அன்று மாலையே மிதௌலி சிற்றரசன் அங்கு வந்து பார்த்து விட்டுச் சென்றான். அது வரையில் முகம்தியிலிருந்த சிப்பாய்கள் அமைதியாகவே யிருந்தனர். ஆணையரும், கேப்டனும் அடுத்து ஷாஜஹான்பூர் அகதிகளை ஏற்கத் தயாரானார்கள். அகதிகளை ஏற்றி அனுப்ப ஒரு வண்டி தேவை யென்று சீதாபூருக்குச்

செய்தி யனுப்பினர் தோமசன். வண்டியுடன் வந்தவர்கள் புரட்சி என்ற விஷக் காற்றையுங் கொண்டு வந்தனர். 'லக்னோ வில் கிறித்துவ மதத்திற்கு மாற மறுத்த நம் 13 தோழர்களை ஆங்கில அதிகாரிகள் கொன்று விட்டனர்.' என்று அவ் வீரர் கள் சொல்லக் கேட்டு, முகம்தி வீரர்கள் கொதிப் படைந்தனர். ஜூன் 4ம் நாள், அதிகாரிகளையும், அகதிகளையுங் கொல்ல மாட் டோம் என்று வாக்குறுதியளித்து விட்டு, முகம்தி சிப்பாய்கள் கிளர்ந்தெழுந்தனர். கருவூலத்தைக் கைப்பற்றி, சிறைக் கைதி களை விடுவித்து விட்டு, ஔரங்காபாத்தை நோக்கிச் சென்ற னர். அத்துடன், பரங்கிக் குடும்பத்தினர் சிலரை, வண்டிகளில் ஏற்றி நடத்திக் கொண்டே சென்றனர். கேப்டன் பாட்ரிக்— ஒரும் அவர்களில் ஒருவன். சிப்பாய்கள் சூழ்ந்துவர, அகதிகளைச் சுமந்த வண்டிகள் 13 மைல்களைக் கடந்து சென்ற பின்பு நின்றன. 'நீங்கள் இனி, எங்கு வேண்டுமானாலுந் தப்பித்துச் செல்லலாம்' என்று வெள்ளை அகதிகளுக்கு அனுமதி கொடுத்து விட்டுச் சிப்பாய்கள் கலைந்து சென்றனர். அவ் வகதிகளும், ஔரங்கபாத்தை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தனர். வண்டிகளைத் தள்ளிக் கொண்டே மெதுவாக ஊரை நெருங்கினர். திடீரென சிப்பாய்கள் வண்டிகளை நாற் புறமுஞ் சூழ்ந்து கொண்டு சுட்டுத் தள்ளினர். குதித் தோடிய பெண்களும், சிறுவர்களும் துடி துடித்து வீழ்ந்து பிணமானார்கள். நன்றி மிக்க ஒரு வீரனின் உதவியால் காப் டன் பாட்ரிக் மட்டுந் தப்பி விட்டார். அதிகாரிகள் பலரும், எட்டுப் பெண்களும், நான்கு குழந்தைகளும் அங்கே நம்பிக்கை மோசம் போனார்கள்.

பாட்ரிக் ஓர் இருளில் மறைந்து தப்பி விட்டார். சீதாப் பூரில் கிளர்ச்சிக்குத் தப்பிய அகதிகள் சிலருடன் அவருஞ் சேர்ந்து, அனைவரும் மிதௌலி சிற்றரசனிடந் தஞ்சம் புகுந் தனர். அனைவரும் ஒரே இடத்தில் இருப்பது ஆபத்து, என்று அவ் வரசன் கூறியதால், காப்டன் பாட்ரிக்கும், அவர் மனைவி மக்களும் காட்டின் உட்பகுதிக்கு ஓடினர். முட்புதரும், புதை சேரும் நிரம்பிய அக்காட்டில், கடும் புலியும், ஓநாயும் உலவின! சிற்றரசனால் அனுப்பப்பட்ட சிறிது உணவுப் பொருட்களைக் கொண்டு, அக்கொடுங் காட்டில் பாட்ரிக் குடும்பம் பல நாட் களைக் கழித்தது. காட்டிலிருந்த மண் கோட்டையில் மறைந்து வாழ்ந்த சீதாப்பூர் அகதிகள் சொல்லொணாத் துன்பத்திற்கா ளானார்கள். பசியாலும், நோயாலும் பல நாட்கள் வாடினர். ஆறு மாதங்கள் தலைமறைவாய் வாழ்ந்து, மீண்டும் புரட்சிக் காரர்களிடஞ் சிக்கி, லக்னோவிற்குக் கொண்டு செல்லப் பட்டு,

நவம்பர் மாதம் சுட்டுக் கொல்லப் பட்டனர். சிக்காமல் தப்பிய பாட்ரிக்கின் குடும்பமும், இன்னுஞ் சிலரும் சில மாதங்களுக்குப் பிறகு, கூர்க்கா வீரர்களால் காப்பாற்றப்பட்டு, ஆங்கிலேயரின் முகாமிற்கு உயிரோடு வந்து சேர்ந்தனர்.

அயோத்தி நாட்டின் நடுவில் கோக்ரா நதி ஓடுகிறது. அந் நதிக்கு மேற்கில் சீதாப்பூரும், முகம்தியும் இருக்கின்றன. கிழக்கிலிருந்த பாரைய்க் (Bahraich) மாவட்டம் நேப்பாள எல்லையை ஒட்டியிருக்கிறது. அதன் ஆணையராக இருந்த சார்லஸ் விங்ஃபீல்டு (Charles Wingfield) பரந்த மனப்பான்மை கொண்டவர். அயோத்தியை நிறுவன ஆட்சிக்குள் இணைத்தது தவறென்றும், சிரமைப்பு முயற்சியில் நிலக்கிழார்கள் அழிக்கப்படுவது அநீதியென்றும், அவர் கருதினார். இந்தியர்களின் மன நிலையை அறிந்து சீர்திருத்தங்களில் ஈடுபட வேண்டும் என்றும், ஆங்கில ஆட்சியின் இலட்சியத்திற்குக் கிடைத்த நேரடி விடைதான் மீரட் கிளர்ச்சி யென்றும், அவர் கருதினார். சிப்பாய்களின் மன நிலையில், கிளர்ச்சிச் செய்யும் அளவிற்கு ஆங்கிலேயர் ஆட்சியை அவர்கள் வெறுக்கக் காரணமுண்டென்றும், அவர் நம்பினார்.

பாரைய்க்கைத் தவிர, அதற்குத் தெற்கில் சிக்ரோரா (Sikrora) என்ற இடத்திலும், தென்கிழக்கில் கோண்டா (Gondah) என்ற இடத்திலும் படை தளங்கள் இருந்தன. ஜுன் மாதத் தொடக்கத்தில் லக்னோவிற்குச் சென்று வந்த அதிகாரி ஒருவர், வீசும் புயலின் வேகத்தை அளவிட்டுச் சிக்ரோராவிற்குத் திரும்புயதும், ஆங்கிலக் குடும்பங்கள் அனைத்தையும் பாதுகாப்புடன் லக்னோவிற்கு அனுப்பி விட்டார். இந்த நிலையில் அங்குள்ள சிப்பாய்கள், கிளர்ச்சிக்குத் திட்டமிட்டிருக்கின்றனர்; என்பதை அறிந்த அதிகாரி ஒருவர் ஜுன் 8 ம் நாள் இரவில் பீரங்கிகளைச் சிப்பாய்களின் குடியிருப்பை நோக்கி நிறுத்தி வைத்தார். தூங்கும் பொழுது தங்களைக் கொல்லச் சதி நடக்கிறதென்று கலவரமடைந்த சிப்பாய்கள் ஆர்ப்பாட்டஞ் செய்தனர். அதிகாரிகள் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. உடனே தங்கள் துப்பாக்கிகளுக்குக் குண்டுகள் கொடுத்தால்தான் அதிகாரிகளை நம்ப முடியும், என்று பிடிவாதம் செய்து வாங்கிக் கொண்டார்கள். ஃபைஸாபாத் என்ற ஊரில் தோன்றிய கலவரச் செய்தியைச் சிக்ரோராவும் கேட்டது. ஆணையர் விங்ஃபீல்டு, அபாயத்தை உணர்ந்து கோண்ட பிறகு தளத்திற்குச் சென்றார். பிற அதிகாரிகள் முன்னேற்பாட்டின்படி பலராம்பூர் சிற்றரசனின் மாளிகையில் தஞ்சம் புகுந்தனர். லெப்டினென்ட் போன்ஹாம் (Bonham)

மட்டும் தன் அணியின் மேல் இருந்த நம்பிக்கையை மாற்ற மறுத்து அங்கேயே தங்கினர். ஆனால், குதிரைப்படை வீரர்களின் தூண்டுதலின் மேல் ஜூன் 9ஆம் நாள் புரட்சித் தோன்றியது. கருவூலங் கொள்ளை போயிற்று. போன்ஹாமின் வீரர்கள், அவரை அணுகிச் சிறிது பணமும், குதிரையுங் கொடுத்துத் தப்பிச் செல்லும்படி மன்றாடி கேட்டுக் கொண்டனர். பைராம்காட் வழியாகச் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கையுஞ் செய்தனர். நெடு நாள் பழகிய நட்பும், பணிவும் அவ்வீரர்களிடமிருந்து மறைந்து விடவில்லை. கனத்த இதயத்துடன், போன்ஹாம் சிக்ரோராவிலிருந்து வெளியேறி, பின்பு லக்னோவை அடைந்தார்.

சிக்ரோரா கிளர்ச்சியை அறிந்து மறு நாள் கோண்டா சிப்பாய்களும் கிளர்ந் தெழுந்தனர். அதற்கு முன்னரே ஆணையர் விங்ஃபீல்டும், பிற ஆங்கிலக் குடும்பத்தினரும் பலராம்பூர் சிற்றரசனிடந் தஞ்சம் புகுந்தனர். எஞ்சியப் படை அதிகாரிகளைத் தப்பிச் செல்லும்படியும், சிப்பாய்கள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். கண்ணீருடன் வந்து, சிறிது நேரந் தங்கி யிருந்து, வணக்கஞ் செலுத்தி, அதிகாரிகளை வழியனுப்பினர்;

சிக்ரோராவிலும், கோண்டாவிலுங் கிளர்ச்சி நடந்ததைக் கண்ட ஃபாரைய்க் சிப்பாய்களும் கிளர்ந்தெழுந்தார்கள். இதை எதிர்பார்த்த படை அதிகாரிகள், 22 மைல் தொலைவிலிருந்த, ஒரு சிற்றரசனின் உதவியை எதிர்பார்த்துத் தப்பிச் சென்றனர். அவன் உதவ மறுத்து விடவே, மீண்டுங் குதிரைகளைத் திருப்பி லக்னோவை நோக்கிப் பயணஞ் செய்தனர். பைராம்காட் வழியாக அவர்கள் வந்த போது, சிப்பாய்களின் நடமாட்டத்தைக் கண்டு அஞ்சினர். ஏற்கனவே இந்தியர்களைப் போலத் தங்கள் நிறத்தை மாற்றி வேடமணிந்திருந்த அவர்கள், அது வரைத் தப்பி விட்டனர். கோக்ரா நதியைக் கடக்கக் குதிரைகளுடன் அவர்கள் பரிசிலேறிய போது, கரையிலிருந்த சிப்பாய்களின் பார்வையில் அவர்கள் தென்பட வில்லை. பரிசில் பாதி தூரத்தில் சென்று கொண்டிருந்த போது, சிப்பாய்கள் கத்தினார்கள். வெள்ளையர்களின் வேடம் வெளிப்பட்டு விட்டது; கரையிலிருந்து துப்பாக்கிகள் வெடித்தன; பரிசலோட்டிகள் ஆற்றில் குதித்து விட்டனர். குதிரைகள் மிரண்டன! நீர்ச் சுழலில் இழுக்கப்பட்டுப் புறப்பட்ட கரைக்கே பரிசில் வந்து விட்டது. அதற்குள் குண்டடிபட்டு இருவர் இறந்து விட்டனர். கரையில் பிடிபட்ட ஏனையோர் இரண்டு நாட்களுக்குப் பிறகு கொல்லப்பட்டனர்.

சிக்ரோராவிலும், கோண்டாவிலும், விடுதலைப் பற்றால் உந்தப்பட்டுக் கிளர்ச்சி செய்த வீரர்கள், அதிகாரிகளை நன் முறையில் நடத்தியது குறிப்பிடத் தக்கது. அங்கே, நெஞ்சம் கலங்க, விழிகள் நீர் உகுக்க வீரர்கள் நின்றனர்! அதிகாரிகளோ அச்சத்தின் விளிம்பில், அன்புள்ளங்களை நினைத்து, அசை வற்று நின்றனர்! பல்லாண்டு பழகியவர்கள், பல போர்களில் துணைநின்றவர்கள், இன்று இந்திய நாட்டின் ஒதுக்க முடியாத வினையால், விலகி நின்றனர்! நட்பிற்கும்; பாசத்திற்கும் அப் பால்; கடைமைக்கும், நன்றிக்கும் அப்பால்; தாய் நாட்டின் குரலுக்குச் செவி மடுக்க வேண்டிய கால கட்டம் இருவருக்கும் வந்து விட்டது! ஒருவன் பறிக்கப் பட்டதைப் பெறவும், மற்றொருவர் பறித்ததைக் காக்கவுங் கடமை பட்டிருக்கின் றான்; மனிதன்! இவற்றின் மத்தியில் வீரமும், போர் நெறியும் செத்துவிட வில்லை. அதற்குச் சிக்ரோராவும், கோண்டாவுமே சாட்சி!

---


# 20 அதோ அஹமதுல்லா!

ஃபைசாபாத் கோட்டம்—மௌல்வி அஹமதுல்லாவின் ஆங்கில எதிர்ப்பு—சிறையில் அடைக்கப்படல்—தாலுக்தார் மான்சிங்—கிளர்ச்சி—ஆங்கிலேயர் கோக்ரா நதிவழியே தப்பித்தல்—அயோத்தி கிராமம்—சுல்தான்பூரில் கிளர்ச்சி—சயோனியில் கிளர்ச்சி—தாருபூர் தாலுக்தார் ஹனுமந்த்சிங்.]

அயோத்தியின் கிழக்குக் கோட்டம் ஃபைஸாபாத். (Faizabad) இதில் மூன்று மாவட்டங்கள் அடங்கி யிருந்தன. ஃபைஸாபாத், சுல்தான்பூர், சயோனி ஆகிய இம்மூன்று பகுதிகளுக்கும் ஆணையர் கர்னல் பிலிப் கோல்ட்னே (Philip Goldney) அங்கிருந்த சுதேசிப் படையின் தளபதி கர்னல் லெக்னுக்ஸ் (Lennox). 1857, ஃபிப்ரவரி மாதத்தில் ஒரு முஸ்லிம் மௌல்வி ஃபைஸாபாத்திற்கு வந்தான். அஹமத்துல்லா என்ற இம் மௌல்வி சென்னைக் கருகிலுள்ள ஆர்க்காட்டைச் சேர்ந்தவன். என்று தெரிகிறது. 'பரங்கியை வெளியேற்ற ஒரு புனிதப் போர் (ஜிஹாத்) நடத்த வேண்டும். அனைவரும் திரளுங்கள்' என்று கொட்டை எழுத்தில் எழுதப்பட்ட தட்டிகள் ஜனவரி மாதத்தில் சென்னையில் வைக்கப் பட்டன. இந்த மௌல்வியோ! அல்லது, அவனது ஆதரவாளர்களோ! இதை வெளியிட்டிருக்க வேண்டும். அதன் பிறகு வட இந்தியாவில் பல இடங்களில் இவனது போர் முழக்கங் கேட்டது. லக்னோவில் பெரும் ஆயுதப்போரில் ஈடு பட்ட இவன், ஆதரவு திரட்டி யிருக்கின்றான். ஃபைஸாபாத்திற்குள் இவன் வந்த போது, ஆயுதம் தரித்த சீடர்கள் பலர் உடனிருந்தனர். புரவிகளும், ஒட்டகங்களும், பிற பரிவாரங்களும் புடைசூழ அவன் வலம் வந்ததைக் காண ஊரே திரண்டது. இம் மௌல்வியின் இடைவிடாதத் தீய பிரசாரத்தைக் கண்ட அதிகாரிகள், இவனை எச்சரித்தனர். அவனோ இதைப் பொருட்படுத்தாமல் பிரசாரத்தைத் தொடர்ந்ததால், அதிகாரிகள் அவனையும், அவன் கூட்டத்தையுங் கைது செய்ய ஒரு சிறு படையை அனுப்

பினர். மௌல்வி கடுமையாக எதிர்த்துப் போரிட்டான். அவனையும், இரு சீடர்களையும் தவிர, மற்ற அனைவரும் கொல்லப்பட்டார்கள். பலத்த காயத்துடன் மௌல்வியைக் கைது செய்தனர். இத்தகைய பயங்கரக்கலகக்காரனைச் சாதாரணச் சிறையில் வைக்கக் கூடாதென்று கூறி, இராணுவச் சிறையில் தள்ளினர்.

## லக்னோவும் நிலையரகமும்




மீரத் கலவரத்தை அறிந்ததும், ஃபைஸாபாத் அதிகாரிகள் தற்காப்பு ஏற்பாடுகளைக் கவனித்தனர். அரசின் நிலச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட நிலக்கிழார்கள் பலர் இப் பகுதியில்—தான் இருந்தனர். ஏதோ நம்பிக்கையில், இவர்களின் உதவியைப் பெறுவதற்கு அதிகாரிகள் முடிவு செய்தனர். ஜூன் மாதத் தொடக்கத்தில் தோன்றிய புரட்சியின் கொடுமையைக் கேள்விப்பட்ட அதிகாரிகள், இப்பொழுது தற்காப்பை விட்டுத் தப்பிச் செல்ல முடிவெடுத்தனர். ஆனால், லக்னோவிற்குச் செல்ல முடியாதபடி வழி யெங்குங் கலவரம் பரவி விட்டது. தங்களின் குடும்பங்களை எப்படிக் காப்பது? என்று திகைத்த அதிகாரிகளுக்கு மற்றொரு வழி புலப் பட்டது. அப் பகுதியின் தாலுக்தார்கள், கலவரத்தைப் பற்றி அவ்வப் பொழுது சில செய்திகள் கொடுத்து உதவி யிருந்ததால், அவர்களிடமே

அடைக்கலம் புக அதிகாரிகள் முடிவு செய்தனர். அத் தாலுக்தார்களில், மான்சிங் என்ற பிராமணனும் ஒருவன். அவ னுடைய தந்தை, அயோத்தி மன்னரின் சேவையில் வரி வசூ லிக்கும் அதிகாரியாக இருந்து, பெருஞ் செல்வமும், நிலமும் சேர்த்து வைத்திருந்தார். அயோத்தி இணைப்புக்குப் பிறகு மான் சிங்கும் தன் நிலங்களை இழந்தார். இதனால், வெறுப் படைந்த அவர், அமைச்சர் ஒருவருடன் சேர்ந்து ஆங்கில ஆட்சிக்கு எதிராகச் சதி செய்ததாகச் சந்தேகிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டார். இவருடைய விடுதலைக்காக, ஆங்கில அதிகாரி ஒருவர் பாடுபட்டதால், அந்த நன்றி யறிதலை எதிர் பார்த்துப் பைஸபாத் அதிகாரிகள் அவரிடம் பாது காப் புக் கோரினர். ஆண்கள் தன்னிடம் இருப்பது சந்தேகத்தை அளிக்கும் என்பதால், வெள்ளைப் பெண்களையும், குழந்தைகளை யுங் காப்பாற்ற அவர் முன் வந்தார்.

ஜூன் 7ஆம் நாள் இரவு ஃபைஸாபாத் சிப்பாய்கள் கிளர்ச் சியைத் தொடங்கினர். பிற இடங்களைப் போல, இங்குள்ள சிப்பாய்கள் தங்கள் குறைகளையும், ஐயங்களையும் முன் வைக்க வில்லை. பரங்கியரை அடித்து விரட்டுவதே தங்களின் குறிக் கோள் என்று, பகிரங்கமாக அறிவித்தே கிளர்ந் தெழுந்தனர். சுதேசி அதிகாரி ஒருவன், வெள்ளை அதிகாரிகளைக் கொலை செய்யத் தூண்டிய போதுங் கூட, அதற்கு மறுத்து விட்டனர். அடிமைத் தளையைப் போர்க்களத்தில் உடைக்க நினைத்த அவ் வீரர்கள், மறைவாக ஆங்கிலேயரின் உயிரைக் குடிக்க விரும்ப வில்லை! அக் கணத்திலேயே நான்கு படகுகளைக் கொண்டு வந்து, அதிகாரிகளை வெளியேறும்படிக் கேட்டுக் கொண்டனர். அத்துடன், அவர்களுக்குப் பணமுங் கொடுத்தனர். 9ஆம் நாள் காலைப் பொழுது புலரு முன்பே பரங்கியரைச் சுமந்து சென்ற படகுகள் கோக்ரா நதியிலே, கங்கையை அடைவதற்கு ஊர்ந்து சென்றன. இச் சிப்பாய்களின் பெருந் தன்மையை எண்ணி மகிழ்ந்த பரங்கியர்கள் வெகு தூரஞ் சென்று விட் டனர். எதிர் பாராமல் எங்கிருந்தோ வெடி யோசைக் கேட் டது. அதைத் தொடர்ந்து, திடு' திடு' வென்று குதிரைக் குளம் படி ஓசையும், டுமீல்' டுமீல்' என்று துப்பாக்கிகளின் வெடி யோசையும் வெள்ளையரின் இரத்தத்தை உறையச் செய்தன. ஆஸம்கரில் கொன்று போட்ட அதிகாரிகளின் குருதி உலரு முன்பே, இங்கே வந்த சிப்பாய்கள், ஆடிய வேட்டை தான் இது! படகிலேயே பாதி பேர் பிணமானார்கள். எஞ்சி யவர்கள் நதியில் குதித்து, உயிர்த் தப்பினர். ஃபைஸாபாத் சிப்பாய்களின் இரகசிய திட்டப்படி தான் நடுப் பயணத்

தில், வெள்ளை அதிகாரிகள் தாக்கப் பட்டனர். என்று சர் J. W. கே கூறுகிருர். அவர்களைக் கொல்ல நினைத்திருந்தால், மிக எளிதில் ஃபைஸாபாத்திலேயே சிப்பாய்கள் அதைச் செய்திருப்பார்கள். பாது காப்புடன் படகில் அனுப்பிப் பழி வாங்கத் தேவை யில்லை!

நீரில் நீந்தித் தப்பிய சிலர் வயலோரங்களில் ஓடினர்; தோப்புகளில் ஒளிந்தனர்; புதர்களில் மறைந்தனர்; பலர் கிராம மக்களிடஞ் சிக்கிக் கொலை யுண்டனர். ஓரிருவரைத் தவிர பிறர் கதி என்ன வென்றே தெரிய வில்லை! ஃபைஸாபாத்திலிருந்து புறப் பட்ட நான்கு படகுகளில் ஒன்று மட்டும், வழியில் ஓரிடத்தில் நின்றது. சோர்வு மிகுதியால் பட கோட்டிகள் சிலரைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டனர். அது தான் அயோத்தி கிராமம். புனித இராமன், புராண இராமன், காவிய இராமன் அவதரித்த திருத்தலமான அயோத்தி அது! படகோட்டிகள் துடுப்புகளை வலித்தனர். தட்டிகளையும், தழைகளையும் வைத்து மறைத்துக் கொண்டு, அகதிகள் கண்ணயர்ந்தனர். நாட்டுப் பாடல் ஒன்றைப் பாடிக் கொண்டே, படகோட்டிகள் படகுகளை இயக்கினர். எவ்வித ஆபத்துமின்றி அவ் வெள்ளை அகதிகள் தானுபூரை அடைந்தனர். ஃபைஸாபாத்தில் இன்னும் சிலர் எஞ்சினர். மேஜர் மில்ஸ் படகுப் பயணத்தில் கொல்லப் பட்டான். அவனுடைய மனைவி தன் மூன்று குழந்தைகளுடன், சிப்பாய்களுக்குத் தப்பி மறைந்து திரிந்தாள். நல்ல உணவின்றி, உறக்க மின்றி அஞ்சி, அஞ்சிச் சில நாட்கள் வாழ்ந்தாள். வெப்பத்தைத் தாங்காமல், உணவு இல்லாமல் ஒரு குழந்தை இறந்தது, இவளுடைய அவல நிலையை எப்படியோ? அறிந்த தாலுக்தார் மான் சிங், அவளையுங் குழந்தைகளையும் பாது காப்புடன் கோராக்பூருக்கு அனுப்பினுன். கர்னல் லெனுக்கம், குடும்பமும் ஒரு முஸ்லிம் தாலுக்தாரின் பாது காப்பில், குடிசை ஒன்றில் ஒன்பது நாட்கள் மறைந்து வாழ்ந்து, பிறகு கோரக்பூரை அடைந்தனர். மான்சிங் அப்பொழுது புரட்சி வீரர்களுடன் இணைந்து விட்டதால் தன்னிடம் தஞ்சம் புகுந்த அகதிகளைக் கோரக்பூருக்குப் பாதுகாப்புடன் அனுப்பினுன்.

ஜான்பூர் புரட்சி வீரர்களின் தூண்டுதலால், சுல்தான்பூர் சிப்பாய்களும், ஜூன் 8ம் நாள் கலகத்திலிறங்கினர். படைதளத்திற்கு விரைந்த கர்னல் ஃபிஷர் (Fisher) முதுகிலே சுடப்பட்டு வீழ்ந்தான். அவனைத் தாங்கிப் பிடித்த அதிகாரியுஞ் சுட்டுக் கொல்லப்பட்டான். ஆணையர் பிளாக் (Block) தன்

உதவியாளர்களுடன் தப்பியோடி, ஒரு சிறு வீட்டில் ஒளிந்த போது கொல்லப்பட்டனர். சுல்தான்பூர், கருவூலத்தையும் இவ்விதங் கைப்பற்றிய புரட்சி வீரர்கள் லக்னோவை நோக்கிச் சென்றனர்.

ஃபைஸாபாத்தின் மற்றொரு மாவட்டம் சலோனி. சுல்தான்பூர் கலவரச் செய்தி எட்டியதும், ஜுன் 10ம் நாள் இங்குஞ் சிப்பாய்கள் கிளர்ந்தெழுந்தனர். அதிகாரிகளைக் கொல்லாமல் விட்டதால், அவர்கள் தப்பிச் சென்று தாருபூர் சிற்றரசனிடந் தஞ்சம் புகுந்தனர். தாருபூர் தாலுக்தார் ஹனுமந்த்சிங்— சலோனி அதிகாரிகளைப் பாது காப்புடன் தன் கோட்டைக்குள் கொண்டு சென்றான். 15 நாட்கள் புகலிடங் கொடுத்து, பிறகு அலகாபாத்திற்கு அனுப்பினர்; ஆங்கில அகதிகளை வழியனுப்பக் கங்கைக் கரைக்கு வந்த அவரிடந் தளபதி, பார்ரோ (Barrow) கலகத்தை அடக்க அவரும் அரசுக்கு உதவி செய்ய வேண்டும்; என்று வேண்டினர். அந்த இராஜபுத்திர தாலுக்தார் நீண்ட பெரு மூச்சு விட்டுக் கூறினர். 'சாஹேப்! நீங்கள் இந்த நாட்டிற்கு வந்து எங்கள் மன்னரை விரட்டினீர்கள்; எங்கள் நிலங்களின் ஆதாரப் பட்டயங்களைச் சோதிக்க உங்கள் அதிகாரிகள் வந்தார்கள், நினைவிற்கப்பாற்பட்ட காலந் தொட்டு அனுபவித்து வந்த, எங்களுடைய குடும்பச் சொத்துகளை ஒரே நிலையில் பறித்தீர்கள்! நானும் பணிந்தேன். இன்றோ உங்களுக்குக் கேடு சூழ்ந்து விட்டது! எம்முடைய மக்கள் உங்களுக்கெதிராக எழுந்து விட்டனர்! என்னை அழித்த நீங்களே என்னிடம் வந்தீர்கள். நானும் உங்களைக் காப்பாற்றி விட்டேன். ஆனால், இனி...இந் நாட்டை விட்டு உங்களை விரட்ட, என் வீரர்களுடன் லக்னோ செல்கிறேன்.!'

தளபதி பார்ரோ சிலையானார்! அவர் வருகையில் எல்லாம், இழந்தானோ? எவரை விரட்ட புரட்சித் தோன்றியதோ? அவர்களுக்கே புகலிடம் அளிக்கிறான் ஹனுமந்த்சிங்! இரு இனங்களுக்கிடையே நடக்கும்போர் இது! தனி மனிதர்கள் எதிரிகளாயினும், தஞ்சம் கேட்டு வந்தவர்கள்; அவர்களைக் காப்பது தான் ஒரு வீரனின் கடமை; அது தான் இராஜபுத்திரனின் இரத்தத்தில் கலந்தது. அவன் தன் ஈட்டிக் குறி தவறுவதும் இல்லை! அவன்போரில் நெறி தவறுவது மில்லை.*

---

*புரட்சியை அடக்கிய பிறகு பறிக்கப்பட்ட ஹனுமந்த்சிங்கின் சொத்துகளை ஆங்கில அரசு திருப்பிக் கொடுத்து விட்டது.

அயோத்தியின் உட் பகுதியில் நடந்தவை இவைதான். மே 31ம் நாள் லக்னோவில் புரட்சி வெடித்து வீரர்கள் வெளியேறினார்கள். நாமும், அன்றே லக்னோவை விட்டு வெளியேறி, அயோத்தி நாட்டிற்குள் சீதாப்பூர், முகம்தி, சிக்ரோரா, கோண்டா, ஃபாரைய்க், ஃபைஸாபாத், சுல்தான்பூர், சலோனி ஆகிய ஊர்களில் தோன்றிய கிளர்ச்சிகளைப் பார்த்து விட்டு இன்று ஜூன் 12ஆம் நாள் லக்னோவிற்கே வந்து சேருகிறோம். இந்த பனிரெண்டு நாட்களில் அயோத்தி முழுவதும் புரட்சித் தீ பற்றி விட்டது. லக்னோவைத் தவிர எல்லா இடங்களும் புரட்சி வீரர்களின் வசமாயிற்று! தாலுக்தார்கள் பலர் பரங்கியர்க்கெதிராக வாளெடுத்து விட்டனர்! லக்னோவில் மட்டும் ஆங்கிலேயருக்குத் துணையாக 500 சுதேசி சிப்பாய்கள் நன்றியுடன் இருக்கின்றனர். முதல் ஆணையர் ஹென்றி லாரன்ஸ் நிலையரகத்தில் தற்காப்பு ஏற்பாடுகளுடன் காத்திருக்கின்றார். முதிர்ந்த வயதில் பெருஞ் சவாலுக்குள்ளாகி யிருக்கும் அவரை, நாம் சற்று நிதானித்துப் பார்ப்போம்.

———

# 21. நிலையரக முற்றுகை.

[ஹென்றி லாரன்ஸ் உடல்நிலை—லக்னோவை புரட்சி வீரர்கள் சூழ்தல், லாரன்ஸ் அனுப்பிய முன்னேடிப்படை—சின்கத் என்ற இடத்தில் தோல்வி அடைதல்—நிலையரகம் முற்றுகைக்கு உள்ளாதல்—அங்கு அடைக்கப்பட்டவர்கள் — சேமிக்கப்பட்ட பொருள்கள்—லாரன்சின் மரணம்—நிலையரகத்துள் துன்பங்கள்—சிறந்த அதிகாரிகளின் இறப்பு—வெளித் தொடர்பு கொள்ள ஒற்றர்கள்.]

சர் ஹென்றி லாரன்ஸ் ஏற்கனவே உடல் நலங் குன்றியவர். நிறுவன அரசின் சேவையில் தம் வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்தவர். வயது முதிர்ச்சியும், கடும் உழைப்பும் உடலைப் பாதித்திருந்ததால், ஓய்வெடுத்துக் கொள்ள ஐரோப்பா செல்ல வேண்டுமென எண்ணியிருந்தார். அயோத்தியின் நிர்வாகத்தைச் செப்பனிட அவரே தகுதி யென்று கருதித் தான், தலைமை ஆளுநர் கானிங், அப் பணியை, அவருக்கு அளித்தார். நெருக்கடி நேரத்தில் கடமையை ஒதுக்க மனமின்றி, லாரன்சும் அப்பணியை ஏற்றுக் கொண்டார். வட நாட்டின் வெம்மையும், ஓய்வில்லா உழைப்பும், நலமில்லா அவர் தம்முடல் மேலும் நலிந்தது. அத்துடன் வரப் போகும் கிளர்ச்சியைச் சமாளிக்க, கடந்த ஒரு மாத காலமும், இடை விடாத பணிகளை மேற் கொண்டிருந்தார். அதனால், உடல் தளர்ச்சியும், மன உழைப்பும் அதிகமாகி வருவதை உணர்ந்த அவர், தலைமை ஆளு நருக்குக் கொடுத்தத் தந்தியில், ‘எனக்கு ஏதாவது நேருமானல், அயோத்தியின் முதல் ஆணையராக மேஜர் பேங்க்ஸையும், (Banks) படை தளபதியாக கர்னல் இங்லீஸையும் நியமிக்க வேண்டும். பணியில் அவர்களுக்கு முந்தியவர்கள் இருப்பினும், நெருக்கடி நிலைமைக்கு அவர்களை நியமிப்பதே சிறந்தது’. என்று அதில் கூறியிருந்தார். எதிர் பார்த்தப்படி ஜூன் 9 ம் நாள் லாரன்சின் உடல் நிலை மோசமானது. உடனடியாக அவசர காலப் போர்க்குழு ஒன்று அமைக்கப்பட்டது. (ஜூன் 9) நீதித்துறை ஆணையாளர் மார்ட்

டின் குபின்ஸ் (Martin Gublins) தலைவராகவும், மேஜர் பேங்ஸ், கர்னல் இங்லீஸ், மேஜர் ஆண்டர்சன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப் பட்டனர். தொடக்கத்திலிருந்தே சிப்பாய்களின் நடத்தையில் நம்பிக்கை யில்லாத மார்ட்டின் குபின்ஸ் இப்பொழுது போர்க்குழுவின் தலைவரானதும், பலருடைய விருப்பத்திற்கும் எதிராக சிப்பாய்களை வெளியேற்றினுர். ஹென்றி லாரன்ஸ் தம் உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் உடனே அதிகாரத்தைத் தானே ஏற்று போர்க் குழுவைக் கலைத்தார். நீக்கப்பட்ட சிப்பாய்களையும் உடனே திரும்பும்படி ஆணையும் இட்டார். அத்துடன், ஓய்வு பெற்ற சிப்பாய்களையும் வரவழைத்து அவர்களில் தகுதியுள்ள 170 பேரை வைத்து ஒரு அணியையும் உருவாக்கினுர்.

முற்றுகையை எதிர்க்க ஏற்கனவே எடுக்கப் பட்டிருந்த ஏற்பாடுகளுடன், பாது காப்பிற்குத் தேவையான பிற பணிகளையும் லாரன்ஸ் மேற் கொண்டார். நிலையரகத்தில் சிதறியிருந்த வீடுகளில் சுவர்கள் எழுப்பப் பட்டன; பழைய சுவர்கள் வலுப்படுத்தப் பட்டன; மேடுகள் தகர்க்கப் பட்டன; வெளிப் புரத்தில் உயர்ந்து நின்ற மரங்கள் யாவும் வெட்டப் பட்டன; காவலரண்கள் புதிதாக அமைக்கப் பட்டன, மச்சிப் பவனிலிருந்த வெடி மருந்துகளும், ஆயுதங்களும் நிலையரகத்திற்குக் கொண்டு வரப் பட்டன. இத்துணைப் பணிகளையும் லாரன்ஸே நேரடியாகக் கவனித்தார். இரவு வேளைகளில் மாறுவேடத்தில் நகருக்குள் சென்று நிலைமையை நன்கு அறிந்தார். இப் பணிகளை முடித்து விட்டு, நடு இரவிலும் கூட காவல் அரணுக் கருகில் லாரன்ஸ் தனியாகப் படுத்திருந்து, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி யிருப்பதை அடிக்கடிக் காணலாம். அவர் மனதில் எத் துணையோ காட்சிகள் வந்து சென்றன! அயோத்தியில், எல்லா ஊர்களையும் புரட்சி வீரர்கள் பிடித்து விட்டார்கள். எஞ்சியது தலைநகர் லக்னோ ஒன்றே! என்பதும், ஒரு பெரும் விதி அதற்குக் காத்திருக்கிற தென்பதும் அவருக்குத் தெரியும்.

ஜூன் மாதத்தில் பாதி கரைந்து விட்டது. ஒவ்வொரு நிமிடமும் லக்னோவிற்கு நேரப்போகும் ஆபத்தை, லாரன்ஸ் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். அச் சமயத்தில் கான்பூரில் நானுசாகிப்பின் வீரர்களால் காப்பிடத்தில் முற்றுகைக்குள்ளாகியிருந்த தளபதி வீலர் லாரன்ஸ்ஸிடம், உதவி கேட்டு ஆள் அனுப்பியிருந்தார். கான்பூரை மீட்கச் சென்ருல், லக்னோ வீழ்வது மட்டு மன்றி, கங்கையைக் கடக்கு முன்பே

புரட்சிப் படை உதவியைத் தடை செய்ய வரும், அதனால், தம் இயலாமையை மிக்க வருத்தத்துடன் லாரன்ஸ் வீலருக்குத் தெரிவித்துக் கொண்டார். எதிர்பார்த்தப்படி கான்பூர் பரிதாப மாகவே வீழ்ந்தது!

லாரன்ஸ் எண்ணியது சரியாகி விட்டது. அயோத்தி முழு வதும் கிளர்ந்தெழுந்த புரட்சி வீரர்கள், லக்னோவிற்குச் சில மைல் தொலைவில் முகாமிட்டனர். அப்புரட்சி வீரர்களின் முன்னோடிப் படையொன்று, லக்னோவிற்கு மிக அருகில் சின் ஹத் (Chinhat) என்ற இடத்திற்கு வந்து விட்டது. லாரன்ஸ் சிந்தித்தார், 'கான்பூர் வீழ்ந்து விட்டதால், நானாவின் படை லக்னோவைத் தாக்க வரும். எதிரிகளின் கூட்டுத் தாக்கு தலுக்கு இலக்காவதைவிட, லக்னோவை நோக்கி வரும் முன் னோடிப் படையைத் தனியாக முறியடித்தால், கலகக்காரர்கள் ஆங்கில வீரத்தைக் கண்டு பயந்து துணிவிழப்பார்கள். அத் துடன் நம் படையும் ஊக்கம் பெறும்; எதிரியின் அச்சமே நமக்குப் பாதி வெற்றி யாகும்.' என்ற லாரன்சின் இத் திட்டம் மெச்சத் தகுந்ததே. அவருடைய இந்த முடிவும், முயற்சியும் போர்க் கலையிலும், அரசியல் கலையிலும் அவர் அனுபவம் பெற்றுச் சிறந்தவ ரென்பதையே காட்டுகிறது. இத் திட்டத் தின் படி ஜூன் 30 ஆம் நாள் அதிகாலையில் லாரன்ஸின் படை கள் லக்னோவை விட்டுப் புறப் பட்டன. சில மைல்கள் சென்ற தும் எதிரிகளைக் காண வில்லை; என நினைத்துத் திரும்பியபோது திடீரெனப் புரட்சி வீரர்கள் புயலெனச் சூழ்ந்தனர். ஏற் கனவே பெற்ற வெற்றியால் ஊக்கம் பெற்றிருந்த அந்தப் புரட்சிப் படை, பயங்கரத் தாக்குதலை நடத்தி வெற்றி கண் டது. பின் வாங்கிய பரங்கிப் படையின் இழப்பு மிக அதிகமே ஆகும். மூன்று அதிகாரிகளும், நூற்றுக்கு மேற்பட்ட வீரர் களுங் கொல்லப்பட்டனர். சின்ஹத்தில் பெற்ற தோல்வி பரங்கி யின் திட்டத்தில் விழுந்த இடி! இத் தோல்வியைக் கேட்ட ஆங் கிலக் குடும்பங்கள் அதிர்ச்சியடைந்தன. நிலையரகத்தை நோக்கி யாவரும் விரைந்தனர். கிடைத்த ஆயுங்களைத் தாங்கி ஆண் களும், குழந்தைகளை இழுத்துக்கொண்டு பெண்களும் பீதியில் ஓடினர். பழி வாங்க சிப்பாய்கள் பறந்து ஓடி வருகின்றனர்; என்று, லக்னோ வெள்ளையர்கள் கலகலத்த வேளையில், வெற்றிக் களிப்பில், புரட்சி வீரர்கள் முட்டாள்களாகி விட் டார்கள். தொடர்ந்து துரத்தி யிருந்தால், லக்னோவைச் சூறை யாடி யிருக்கலாம். இத்தகைய அரிய சந்தர்ப்பத்தைச் சிப்பாய் கள் நழுவ விட்ட இதனால், கிடைத்த அவகாசத்தை, ஆங்கிலே யர்கள் நன்கு பயன் படுத்திக் கொண்டனர்.

நிலையரகத்துள் வெள்ளையர் நுழையவும் சிப்பாய்கள் ஊரை நெருங்கவுஞ் சரியாக இருந்தது. அருகிலிருந்த கட்டடங்களின் மேல் ஏறி நின்று, சில சிப்பாய்கள் தாக்குதலை ஆரம்பித்தனர். சில காவலரண்களில் பாதிவேலை இன்னும் மீதியிருந்தது. முழுத்தாக்குதல் இன்னும் ஆரம்பமாகாததால் கிடைத்த நேரத்தில், அவசர அவசரமாகக் கட்டட வேலைகள் செய்யப்பட்டன. இரவும், பகலுமாக வேலை நடந்தது. எதிரியின் துப்பாக்கிச் சூட்டுக் கிடையே வேலை செய்ய கொத்தர்கள் அஞ்சினர். இரண்டு அணு கூலி வாங்கிய சாதாரண கூலியாள் கூட, ஒரு இரவுக்கு இரண்டு ரூபாய் வாங்கிக் கொண்டு வேலை செய்தான்! முற்றுகை பலத்ததும், இவர்களும் ஓடி விட்டனர். ஆங்கிலக் குடும்பங்களுக்கே தங்கு மிடம் போதவில்லை யாதலால், அவர்களின் பணி யாட்கள் அச்சத்துடன் வெளித் திண்ணைகளில் வசிக்கத் தொடங்கினர், இப் பணியாட்கள் பெரும்பாலோர் சென்னையைச் சார்ந்த கிறித்துவர்கள். ஓரளவு ஆங்கிலம் பேச அவர்கள் அறிந்திருந்ததால் புதிதாக இந்தியாவிற்கு வரும் ஆங்கிலேயர்கள், அவர்களையே வீட்டு வேலைக்கு அமர்த்துவது வழக்கம். அவர்களின் சொந்த ஊர்கள் வெகு தூரத்தில் இருந்ததால் புரட்சியின் போது தங்களின் எஜமானர்களின் கூடவே தங்கி விட்டனர். அயோத்தியைச் சேர்ந்த பணி யாட்களோ புரட்சித் தோன்றியதும் தங்கள் தங்கள் வீடுகளுக்கு ஓடி விட்டனர்.

நிலையரகத்தில் முற்றுகைக் குள்ளானவர்கள் மொத்தம் சுமார் 3000 பேர்கள். அதில் சரிபாதி இந்தியர்கள்; ஆவார்கள். போரில் ஈடுபட்ட 1700 பேரில், 700 பேர் இந்தியர். எஞ்சியவர்கள், போர்புரிய தகுதியற்ற பெண்களும், குழந்தைகளும், பல் வேறு பணியாட்களும் ஆவார்கள். அங்கேக் குடும்பங்கள் தனித்தனியே வாழ முடியாதாகையால், பெண்களுங் குழந்தைகளும் பாதாள அறைகள் சிலவற்றில் தங்கினர். அங்குதான் எதிரியின் குண்டு வீச்சுக்கு ஓரளவு தப்ப முடியும். பல குடும்பங்கள் நிலையரகத்துள் இருந்த அதிகாரிகளின் வீடுகளில் தங்கினர். நீதி ஆணையர் மார்ட்டின் குபின்ஸ் முற்றுகையை எதிர்பார்த்துத் தம் வீட்டில் ஏராளமான உணவுப் பண்டங்களைக் குவித்து வைத்திருந்தார். கோதுமை 500 மணங்கு, பருப்பு 100 மணங்கு, சர்க்கரை 5 மணங்கு, புகையிலை 1 மணங்கு, அரிசி மூட்டைகள் பல. நெய் டின்கள் பல அங்கே சேகரித்துவைக்கப் பட்டிருந்தன. தேவையான மது பானங்களும், தேயிலையும், விறகும், கரியும் இருந்தன. சிலர் கோழிகள் வைத்திருந்தனர். குழந்தைகளுக்குப் பால் கொடுக்

கச் சிலர் பசுக்களையும், ஆடுகளையும் இழுத்து வந்திருந் தனர். இறைச்சிக்கான மாடுகளும், அவற்றிற்கான தீனிகளும் அங்கேச் சேகரித்து வைக்கப் பட்டிருந்தன.

முற்றுகைக்கு உள்ளான வெள்ளையர்கள் அரசாங்க ஊழி யர், வணிகர், மருத்துவர், பாதிரி ஆகிய பல வகையினரும், ஒரு ஃபிரெஞ்சு வீரனும், ஒரு இத்தாலியனும் அங்கே இருந்தனர். சில இந்திய அரச குடும்பத்தினர், முன்னெச்சரிக்கையாக அங்குக் காவல் வைக்கப் பட்டிருந்தனர். இவர்களைப் புரட்சிக் காரர்கள், தங்கள் முயற்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளுவார் களோ! என்று அதிகாரிகள் அஞ்சியதால், இவ்விதஞ் செய் தனர். நிலையரகச் சுற்றுக்குள் கருவூலம், அஞ்சல் நிலையம், மாதா கோயில், மருத்துவ நிலையம், சில வெள்ளையர் வீடுகள் ஆகியவைகள் அமைந்திருந்தன. அதற்குப் பின்புறம் சற்று தூரத்தில் கோமதி நதி ஓடியது. அதற்கு மேற்கே தான் நக ரத்தின் பெரும் பகுதி இருந்தது. அங்கிருந்த உயர்ந்த கட்டிடங் களின் மேல் தளங்களி லெல்லாம் பீரங்கிகள் பொருத்தப் பட் டிருந்தன. சுற்றிலும் புதிதாகக் கட்டப்பட்டக் காவல் அரண் களிலும் பீரங்கிகள் ஏற்றப் பட்டிருந்தன. நிலையரகத்திற்கு வெளியே யிருந்த சில உயர்ந்த கட்டடங்களைச் சிப்பாய்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். வெளியே யிருந்த மசூதி களும் தாக்குதலுக்கு ஏற்ற அளவு புரட்சிக் காரர்களுக்கு உதவி செய்தன. ஊருக்குள் நுழைந்த சிப்பாய்கள் அனை வரும் முற்றுகையில் தீவிரமாக ஈடுபட வில்லை. கடை வீதி களில் பலர் கொள்ளை யடித்து அனுபவிக்க, சிலர் மட்டுமே நிலையரகத்திற்கு மேற்கே யிருந்த மச்சி பவனைத் தாக்கினர். அங்கிருந்த வீரர்கள் லாரன்ஸின் ஆணைப்படி, நள்ளிரவில் சிப்பாய்கள் அசந்த வேளையில் உயிரிழப்பு எதுவுமின்றி வெளி யேறி நிலையரகத்திற்குள் வந்தனர். எதிரிக்குப் பயன்படா மல் இருக்கும் பொருட்டு, மச்சிப் பவனி லிருந்த 240 பீப்பாய் வெடி மருந்துகளும், ஆயிரக் கணக்கான துப்பாக்கிக் குண்டு களுந் தீ வைக்கப்பட்டு, லக்னோவே அதிரும்படி மச்சிப் பவன் வெடித்துச் சிதறியது! இது நடக்காமல் இருந்திருந்தால் சிப்பாய்களுக்குப் பெரும் பயன் அளித்திருக்கும்.

முற்றுகை தொடங்கிய முதல் நாள் இரவிலேயே லாரன் ஸின் அறையில் குண்டு ஒன்று விழுந்து மயிரிழையில் அவர் உயிர் தப்பினார். வேறு அறைக்கு உடனே மாறும்படி உதவி யாளர்கள் வற்புறுத்திய போதும், மறு நாள் காலை செல்வதாக லாரன்ஸ் கூறி விட்டார். விடிந்ததும் சில அவசர ஏற்பாடு

களைச் செய்து விட்டு, லாரன்ஸ் தம் அறைக்கு வந்து படுக்கையில் சிறிது சாய்ந்து கொண்டே கேப்டன் வில்ஸனிடம் உணவுப் பங்கீடு அறிக்கையை விளக்கிக் கொண்டிருந்தார். ஒரு இந்தியப் பணியாள் தரையில் பங்கா (விசிறி) இழுத்துக் கொண்டிருந்தான். திடீரென எதிரியின் குண்டு இம் முறையும் அதே அறையில் வீழ்ந்தது! அவர்கள் அதிர, பங்கா அறுந்து விழ, நாற்காலிகள் சிதற, அறை முழுவதும் புகையும், தூசியுஞ் சூழ்ந்தன. தடுமாறி எழுந்த கேப்டன் வில்ஸன் உற்றுப் பார்த்தார். பங்கா இழுத்த பணியாளின் ஒரு கால் சிதைந்து எறியப் பட்டு கிடந்தது. இரத்தஞ் சொட்டச் சொட்ட சர் ஹென்றி லாரன்ஸ் அவ் வீடு இடிந்த இடிபாடுகளுக்கிடையே முணகிக் கொண்டிருந்தார். மருத்துவரின் இல்லத்திற்கு உடனடியாக லாரன்ஸ் கொண்டு செல்லப் பட்டார். இறப்பது உறுதி என்று அவருக்குத் தெரிந்து விட்டது. கடமை இன்னும் உயிரை நிறுத்தியது. அந்த நிலையிலும் ஈனக் குரலில் ஆணைகள் இட்டார். 'மேஜர் பேங்க்ஸை' தம் பதவியில் அமர்த்தினர். உணவுப் பங்கீடு, இரவுக் காவல், தலைமையகத் தொடர்பு, செலவுகளில் சிக்கனம், இன்னும் இவை போன்ற பலவற்றைப் பற்றிக் குறிப்புகள் கொடுத்து, அதன்படி செயலாற்றும்படிக் கேட்டுக் கொண்டார்.' இரண்டு நாள் வேதனையில் துடித்த பிறகு ஜூலை 4 ஆம் நாள் தம் கடமையை ஆற்றி விட்டு 'சர் ஹென்றி லாரன்ஸ்' உயிர் துறந்தார். அவர் விருப்பப்படி உடல் அடக்கம் எளிமையாகச் செய்யப் பட்டது. அவருடைய இழப்பில் வெள்ளையர்கள் பெருந் துயர் அடைந்தனர். சில நாட்கள் வரையில் அவருடைய இறப்பு இரகசியமாகவே வைக்கப் பட்டிருந்தது.

புரட்சி வீரர்களின் கடுமையான இந்த முற்றுகையை ஆங்கிலேயர் தாக்குப் பிடிக்க முடிந்தது என்றால், அதற்கு லாரன்ஸின் ஏற்பாடுகளே அடித்தள மாகும். புரட்சியின் வருகையை யாவர்க்கும் முன்பு அவரே உணர்ந்தார். வெள்ளையர்களின் உயிரைக் காக்கத் தற்காப்பு ஏற்பாடுகளை உடனடியாகவே செய்தார். முற்றுகையை எதிர்பார்த்துப் பெருமளவு உணவுப் பொருட்களையும், யுத்த தளவாடங்களையுங் குவித்தார். எதிரிக்குக் கிடைக்காமல் பல இடங்களில் இருந்த கருவூலப் பணத்தை ஒன்று திரட்டி, நிலையரகத்தில் இரகசியமாகத் புதைத்து வைத்து, அதன் மேல் காவலரண்களைக் கட்டினர். இவ்வளவு செயல்களையும் பல அதிகாரிகளின் விருப்பத்திற்கு எதிராகவே செய்து முடித்தார். இந்த முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளை அவர் செய்திருக்கா விட்


டால், விளைவுகள் பயங்கரமாகவே இருந்திருக்கும். இந்த ஏற்பாடுகள் ஆங்கிலேயர்களைக் காத்ததுடன், லக்னோவின் நீண்ட முற்றுகை, புரட்சி வீரர்களின் அரிதான நேரத்தையும் அபகரித்தது. முற்றுகை தீவிரமாகியது. நிலையரகத்திற்கு வெளியே இருந்த தனியார் வீடுகளையும், பிற மதத்தினருடைய புனித இடங்களையும் அகற்றுவதற்கு லாரன்ஸ் மறுத்து விட்டதால், அவ் விடங்களில் இருந்து கொண்டு புரட்சி வீரர்கள் தாக்குதலை நடத்துவது எளிதாகி விட்டது. ஆயிரக் கணக்கான சிப்பாய்கள் துப்பாக்கிகளையும், கைக் குண்டுகளையும், பீரங்கிகளையுங் கொண்டு இடை விடாமல் நிலையரகத்தைத் தாக்கினர். ஜூலை 3ஆம் நாள் நீதித் துணை ஆணையர் ஒமானே (Ommaney) குண்டு பட்டு இறந்தார். எட்டுத் திக்குகளி லிருந்தும் குண்டுகள் பாய்ந்து பல உயிர்களைக் குடித்தன. தினமும் சுமார் 15 பேர் இறந்தனர், சாளரங்களில் கனமான புத்தகங்களையும், காலி டின்களையும் அடுக்கித் தடுத்தனர். மரப் பெட்டிகளை வைத்து இறுக்கினர். குண்டுகள் இவற்றை யெல்லாம் பொருட்படுத்துவதில்லை. அடுக்கப்பட்ட கலைக் களஞ்சியத்தில் 100 பக்கங்களைத் துளைத்துக் கொண்டு ஒரு குண்டு ஊடுருவிச் சென்றது! அறிவைப் பெருக்க வந்த இலக்கியமும், வரலாறும் உயிர்களைக் காத்து நின்றன. 8ஆம் நாள் உணவுக் கூடத்தில் அமர்ந்திருந்த மேஜர் ஃபிரான்ஸிஸ் குண்டடிபட்டு இறந்தார். குண்டுகள் குறைந்ததும், பீரங்கி வாயில் இரும்புக் குண்டுகளையும், செப்புத் துண்டுகளையும் வைத்துச் சிப்பாய்கள் சுட்டனர். அதைத் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் பெரும் மழை பொழிய ஈரத்திலும், குளிரிலும் குழந்தைகள் அழுதனர். இடை விடாத மழையிலும் இரவெல்லாம் ஆண்கள் காவலைத் தொடர்ந்தனர். அங்கே, அடைபட்டவரின் அல்லல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. உணவுப் பங்கீடு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதால், கிடைத்ததில் நிறைவு பெற வேண்டியதாயிற்று. ஜூலை மாத இறுதிக்குள் உணவுப் பொருட்கள் குறைந்து விட்டதால், இரண்டு வேளை உணவே பெற முடிந்தது. பீரும், பிராந்தியும் அரிதாகியால் வீரர்கள் மிகவும் சிரமப் பட்டனர். முழுசாகப் புகைத்த சுருட்டுகளைக் கூட இப்பொழு தெல்லாம் அணைத்துப் புகைக்க ஆரம்பித்தனர். பெண்களும், குழந்தைகளும் மட்டுமே ஓரளவு, அதுவும் நிம்மதியற்ற உறக்கங் கொண்டனர். மூட்டைப் பூச்சிகள் தூங்க விடாமல் கடிக்க, பெருச்சாளிகள் மேலே விழுந்து ஓட, கொசுக்கள் முகத்தைச் சுற்றி இசை பாடின. அடை பட்டவர்கள் தற்காப்பில் மட்டும் ஈடுபடவில்லை, குண்டு வீச்சு நிற்கும்

போதெல்லாம் இங்கு மங்கும் பொருட்களைக் கொண்டு செல்ல வும், தளவாடங்களை மாற்றி அமைக்கவும், பிற ஏற்பாடுகளைக் கவனிக்கவுஞ் செய்தனர். இந்தத் துன்பங்களுடன் நிலையரகச் சுற்றுக்குள் திரிந்த சில ஆடு, மாடுகள் நாவறட்சியால் நீர் தேடிக் கிணற்றில் விழுந்து குடிநீரைக் கெடுத்தன! அவற்றில் சில எதிரிகளின் குறி தவறிய தாக்குதலால் இறந்து, அழுகிக் காற்றைக் கெடுத்தன. இறந்த வீரர்களுடன், அவ் வப் பொழுது இவற்றையும் புதைக்க வேண்டியதா யிற்று. வெள் ளையர்களின் பீரங்கிகளும் இடை விடாது முழங்கிச் சுற்றி யிருந்த வீடுகள் பலவற்றைத் தகர்த்தன. உயர்ந்த வீடு களிலிருந்து தாக்கும் அனுகூலத்தை இதனால் இழந்த புரட்சி வீரர்கள், தரையில் நீண்ட குழிகளை வெட்டி, அவற்றில் மறைந் திருந்து, தங்களின் சிறு பீரங்கிகளை இயக்கினர். நெருங்கி வந்து தாக்குவதும், பரங்கியர் எதிர்த்துச் சுட்டால் குறிக்கு எட்டா மல் தப்புவதும் புரட்சி வீரர்களுக்கு எளிதாக இருந்தது.

எண்பத்தேழு நாட்கள் நீடித்த இம் முற்றுகையில் நிலைய ரகத்திற்குள் நுழையுந் திட்டத்தில் ஒருமித்த, நீடித்த, உக்கிர மான தாக்குதலை நான்குமுறை புரட்சி வீரர்கள் நடத்தினர். ஜூலை 20 ஆம் நாள் நடந்த முதல் தாக்குதலில் முன்னேற்பா டாகச் சுரங்கங்களைக் குடைந்து, நிலையரகக் காவல் அரண் களில் ஒன்றிற்குக் கீழே வெடிகுண்டுகளை வைத்திருந்தனர். அன்று காலை 9 மணிக்குக் குண்டு வெடித்து சுவர் பிளந்ததும், எங்கும் புகை சூழ, திட்ட மிட்டபடி ஆயிரக்கணக்கான புரட்சி வீரர்கள் ஒரு முகமாக அக்காவலரணைத் தாக்கிப் பிளவுகளுக் கிடையே நுழைந்தனர். சுற்றிலும் உயரத்திலிருந்த வீரர்கள், சட சட வென்று குண்டுகளைப் பொழிந்து நுழைய முயன்ற சிப் பாய்களைக் கொன்று குவித்தனர். அன்று மாலை 4 மணி வரை நடந்த இடை விடாத இத் தாக்குதலில், நூற்றுக்கணக்கான வீரர்கள் இறந்து பட்டனர். நிலையரகத்தில் நேர்ந்த 25 பேர் இறப்பில் 15 பேர் வெள்ளையர்கள். மறு நாள் நிலையரகத்தில் உடைந்த சுவர்கள் பழுது பார்க்கப்பட்டு, அழிந்த பகுதிகள் மீண்டுங் கட்டப் பட்டன; தாக்குதலும், எதிர்த் தாக்குதலும் நடந்து கொண்டிருக்கும் போதே இப் பணிகளும் மேற்கொள் ளப் பட்டன. இதை மேற் பார்த்துக் கொண்டிருந்த புதிய ஆணையர் மேஜர் பேங்ஸ் தலையில் குண்டு துளைத்து அவர் தம் உயிரைக் கவ்வியது! போர் நெருக்கடியில் ஆணையர் பதவிக்கு எவரும் நியமிக்கப்பட வில்லை. ஆதலால், பிரிகேடியார் இங்கிலீஸ் எல்லா அதிகாரத்தையும், பொறுப்பையும் அவரே ஏற்றுக்கொண்டார்.

முற்றுகையின் தொடக்கத்திலேயே வெளித் தொடர்புக்குத் தேவையான ஒற்றர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தனர். லியரகத்திற்குள் நுழைவதோ, வெளியேறுவதோ அவ்வளவு எளிதல்ல. புரட்சி வீரர்கள் களைத்து இரவில் ஓய்வு எடுக்

# உத்தரப்பிரதேசம்




கும் போதுதான் ஒற்றர்கள் வெளியேற முடியும். அப்படியும் மாறுவேடத்தில் அலகாபாத்திற்கு உதவிபெற வெளியேறிய மேஜர் கால் (Goll) சிப்பாய்களிடம் அகப்பட்டுக் கொலையுண்டார். உள்ளிருந்த சில சுதேசி சிப்பாய்கள் கட்சி மாறி வெளி

யேறுவதுஞ் சில சமயங்களில் நேர்ந்தது! அப்படிக் கட்சி மாறியது போல நடித்து உளவு பார்க்கச் சென்ற ஒரு சிப்பாயின் கதி என்னவென்றே தெரிய வில்லை? நடிப்பதற்குப் பதில் ஒருவேளை உண்மையிலேயே கட்சி மாறி விட்டான் போலும்! இது போலவே நகர சீமான்களின் உதவி பெற அனுப்பப்பட்ட ஒரு கிழவியுந் திரும்ப வில்லை. புரட்சி வீரர்கள் மிக விழிப்புடன் இருந்து, சிக்கிய ஒற்றர்களிடமிருந்து கடிதங்களைப் பறித்து, அதன்படியே தங்கள் திட்டங்களை மாற்றி அமைத்துக் கொண்டனர். ஆனால், அவர்களின் கண்களிலும் மண்ணைத் தூவ இருவர் இருந்தனர். அஃகாடு தெவேரியும், (Augard Tewan) கனோஜிலாலும் (Kanoujilal) லக்னோவின் மிகச் சிறந்த ஒற்றர்கள்! இவ் விருவர் தான்.

# 22. ஹேவ்லாக்கை எதிர்பார்த்து...

[ஹேவ்லாக்கின் உதவிச்செய்தி—எதிர்பார்த்து ஏமாறுதல்—ஹேவ்லாக் ஏன் வரவில்லை?—கான்பூருக்கும் லக்னோவிற்கும் இடையில் ஹேவ்லாக்கின் தொல்லைகள்—நீலின் செருக்கான கடிதம்—ஹேவ்லாக் புது உதவியை எதிர்பார்த்தல்—நிலையரகத்துள் பற்றுக்குறை—அயோத்தி பேகம் ஹஸரத் மஹாலின் சார்பு ஆட்சிப் பிரகடனம்—சிப்பாய்களின் தீவிரத் தாக்குதல்—ஹேவ்லாக்கின் உறுதி மொழி—நிலையரக நிலை — லக்னோவின் வெளிப்புரத்தில் ராஜ மான்சிங்—சிப்பாய்களின் துரோகம்—உட்டாமின் உதவிச் செய்தி.]

முற்றுகைக்கு முன்பே கான்பூருக்குச் சென்றிருந்த ஒற்றன் அன்காட் ஜூலை 22 ஆம் நாள் தந்திரமாக நிலையரகத்திற்குள் வந்து சேர்ந்தான். தளபதி ஹேவ்லாக், நானா சாகேப்பை வென்று விரட்டி விட்டதால், விரைவில் உதவியை எதிர்பார்க்கலாம் என்று அன்காட் சொன்னதைப் பலர் நம்ப வில்லை. மீண்டுங் கான்பூருக்குச் சென்று ஒரு கடிதத்துடன் அவன் திரும்பினான். 'கங்கையைக் கடந்து விட்டோம்; எதிரியை முறியடிக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்; இன்னும் ஐந்தாறு நாட்களில் லக்னோவிற்கு வருவோம்,' என்ற மகிழ்ச்சிக்கரமான அச் செய்தியை அறிந்து நிம்மதிப் பெரு மூச்சும் விட்டனர்; அன்காட் மீண்டும் அனுப்பப் பட்டான். எதிரிகளின் தளவாட நிலைமை, தாக்குதல் கோணங்கள் ஆகியவற்றைத் தளபதி இங்கிலீஸ் குறித்தனுப்பினார். அத்துடன், உதவிப் படை லக்னோவை நெருங்கியதும், அன்றிரவு எட்டு மணிக்குச் சில ஏவுகணைகளை வானத்தில் விட்டு, வருகையைத் தெரிவிக்க வேண்டுமென்றுங் கேட்டுக் கொண்டார்.

இரண்டு மூன்று நாட்கள் மெதுவாகக் கழிந்தன. இரவு 8 மணிக்கு அனைவரும் அண்ணாந்து பார்த்தனர். ஏவுகணைகளின் ஒளியைக் காணோம்! மறுநாள்...பெண்கள், குழந்தைகளுடன் தாழ்வாரத்தில் கூடினர்! வீரர்கள் சுருட்டை அணைத்

துவிட்டு உற்று நோக்கினர்! கழுத்துங் காலும் வலிக்க நெடு நேரம் நின்றனர்...ஏவுகணையைக் காணோம்! மறு நாள் தோன் றும் என்ற நம்பிக்கையில் சிலரும், வரமோ வராதோ? என்ற அச்சத்தில் சிலருஞ் சேர்ந்து உறங்கச் சென்றனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதமாகத் தென் பட்டது! ஒரு நாள் எங்கி ருந்தோ ஒரு மயில் வந்து சிறகு விரித்தது. வீரர்களின் நாக் கில் நீர் ஊறியது. அவ் வேளையில், ஒரு அதிகாரி தடுத்திரா விட்டால், சில வீரர்கள் மயில் கறி வருவல் சுவைத்திருப்பார் கள்! மயிலின் வரவு நல்ல சகுனம்; உதவிப் படையின் வருகையை அது குறிக்கின்றது என்று கூறி, அதிகாரி அதை விரட்டி விட்டார். மயில் பறந்தது...உதவி வரவில்லை. இப் படியே ஒவ்வொரு நாளும், நூற்றுக்கணக்கான விழிகள் வானத்தை நோக்கி ஏமாந்தன! ரீஸ் (Rees) என்பவர் எழுது கிறார். '27 ஆம் நாள் கழிந்தது. துருப்புகள் வர வில்லை... 28ஆம் நாளும் உதவி வர வில்லை 29...30...31...இல்லை...இல்லை. ஒரு சைகையும் தென்பட வில்லை...எங்கள் இதயங்கள் அழிந் தன! பலர், ஏமாற்றத்தில் இடிந்து அமைதி யாயினர். பல ருக்கு வாழ்வு மேல் நம்பிக்கையும் யில்லை. வாழ்வே சுமையாகி விட்டது...ஒவ்வொரு மாலையும் புதைக்கப்படும் பிணங்களைக் கண்டு பலர் பொறாமைப் பட்டனர்!'

ஜூலை முடிவிற்குள் நோயாளிகளும், காயம் பட்டோரும் பெருகி விட்டனர். தொத்து நோயும், அம்மையும் பலரைக் கொள்ளை கொண்டன. நிலையரக மாளிகையின் விருந்து மண் டபம் மருத்துவ மனையாக மாற்றப் பட்டது. நோயாளிகளை மிக்க அக்கரையுடன் ஆங்கிலப் பெண்டிர் பேணினர். இதற் கெல்லாம் விடிவே இல்லையா? என்று மனமொடிந்த பலருக்கு ஊக்கமளிக்க ஒன்றே ஒன்று இருந்தது. அது தான் நிலையர் மாளிகையின் உச்சியில் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்த யூனியன் ஜாக் கொடி! தாய் நாட்டை நினைவுறுத்தித் தியா கத்தைச் சுட்டிக் காட்டித் தளர்ந்த நெஞ்சங்களை அக் கொடி தான் நிமிர்த்திப் பறந்தது.

மீட்சிப் படை ஏன் வர வில்லை? ஹேவலாக்கிற்கு என்ன நேர்ந்தது? அவர்தான் ஜூலை 17 ஆம் நாள் நானாவை கான் பூரிலிருந்து விரட்டி விட்டுக் கங்கையைக் கடந்து, ஜூலை 26 ஆம் நாள் மங்கள்பாரில் முகாமிட்டிருந்தாரே? இனி 30 மைல் களைக் கடந்தால் லக்னோவை அடையலாமே? உண்மைதான்! ஆனால், முடிய வில்லை. ஹேவலாக்கின் படைகள் உனோ என்ற சிற்றூரில் சிப்பாய்களால் தாக்கப்பட்டது. அவர் களை முறியடித்து மேலும் முன்னேறினர். சில மைல்களுக்கப்

பால் பசிராத்கஞ்ச் என்ற இடத்தில் மீண்டும் புரட்சி வீரர்கள் பாய்ந்தனர். மிகக் கடுமையாகப் போரிட்டுப் பெரும் இழப் பிற்குப் பின்னர்தான், புரட்சி வீரர்களைத் துரத்த முடிந்தது. இவ்விரு இடங்களிலும் நடந்த போர்களில் 400 புரட்சி வீரர் கள் இறந்தனர். என்றாலும், 100 வெள்ளையர்களும் இறந்த னர்; என்பது மீட்சிப் படைக்குப் பலத்த அடியாகும். இந்த நிலையில், மேலும் முன்னேறுவதா? கான்பூருக்கே திரும்பலா மென்றால், நானாவினால் அனுப்பப்பட்ட குதிரைப் படை தடுப் பதற்குக் காத்திருந்தது. புதிதாக வெள்ளையர் துருப்புகள் இல்லாமல் லக்னோ செல்ல முயன்றால், எல்லாமே உருக் குலைந்து விடும். இந் நிலையில், ஜூலை 30 ஆம் நாள் மீண்டும் மங்கள் வாருக்கே ஹேவ்லாக் பின் வாங்கினார். அங்கிருந்து கொண்டு, '1000 வெள்ளை வீரர்களாவது இருந்தால்தான் முன் னேற முடியும்' என்று கான்பூரிலுள்ள நீலுக்குச் செய்தி அனுப்பினர். நீல் அகம்பாவமும், வேகமுங் கொண்டவன். ஹேவ்லாக் பின் வாங்கியதை யறிந்து, கோபத்துடன் அதைக் கண்டித்துப் பதிலெழுதினான். 'நீங்கள் பின் வாங்கியது மிக்க வருத்தத்திற்குரியது. எதிரியிடம் தோற்று உதவி பெற வந்தி ருப்பதாக, இங்குள்ள மக்கள் கேவலமாகக் கருதுகிறார்கள். கைப் பற்றிய எதிரிகளின் ஆயுதங்களைக் கூட நீங்கள் கொண்டு வர வில்லை. உடனே முன்னேறுங்கள்! எத் தடையையும் எதிர்த்து லக்னோவை மீட்க விரையுங்கள்! அலகாபாத்தி லிருந்து உதவி வந்தால்தான், நான் உங்களுக்கு உதவ முடியும். அது வரையில் காத்திருந்தால், லக்னோவும் கான்பூரின் கதி யையே அடையும். நீங்கள் பின் வாங்குவது எதிரிக்குத் தெரிந் தால், எங்கும் நாம்பிழைக்கவே முடியாது! லக்னோவை மீட்டு விட்டு உடனடியாக இங்கு வாருங்கள். ஆக்ராவும், டெல்லி யும் அபாயத்தி லிருக்கின்றன.' இக் கடிதம் எப்படி? தனக்குக் கீழ் பணிபுரியும் ஒரு அதிகாரி இப்படி எழுதத் துணிந்ததைக் கண்ட ஹேவ்லாக்கின் விழிகளில் சிவப் பேறின. கடுமையா கவே நீலைக் கண்டித்து அவர் ஒரு கடிதம் எழுதினார். 'நீ என்னை இயக்க முயல்வதை நான் அனுமதிக்க முடியாது. என் முடிவு களில் ஏற்படும் விளைவுகளுக்கு நானே பொறுப் பேற்பேன். இந்த நெருக்கடி நிலையில், எங்கும், எப் பணியும் தடைபடக் கூடாது; என்ற ஒரே காரணத்தினால் தான், உன்னைக் கைது செய்யாமல் விடுகின்றேன்! எனக்கு நீ ஆணை யிடுவதை உடனே நிறுத்தும்படியும் எச்சரிக்கின்றேன்!' புரட்சியை அடக்கும் வேகமும், வெறியும் நீலின் அதிகார எல்லையை மீறும்படிச் செய்து விட்டது.

ஆகஸ்டு 3 ஆம் நாள் சிறிது உதவி கிடைத்ததும் மீண்டும் ஹேவ்லாக் முன்னேறினர். இம் முறையும், புரட்சி வீரர்கள் விடவில்லை. இங்கும் ஹேவ்லாக் வெற்றி பெற்றாரெனினும், லக்னோவை மீட்கத் தம் படை போதாது, என்பது அவருக்குப் விளங்கி விட்டது. மேலும் தம் படை ஒரு முறை



சர் ஹென்றி ஹேவ்லாக்

தோற்றாலும் லக்னோவின் முடிவு பரிதாபமாகி விடும் என்பதும் அவருக்குப் புரிந்தது. 'எதிரி தவறு செய்யும் வரையில் காத்திருப்போம். பின்னர் லக்னோவை மீட்போம்...' ஹேவ்லாக்கின் இம் முடிவு சிறந்ததேயாம்!

நிலையரகம், ஹேவ்லாக்கின் உதவியை எதிர் பார்க்கிறது. ஹேவ்லாக்கோ, புது வெள்ளைத் துருப்பின் வருகையை எதிர் பார்க்கிறார்! ஹேவ்லாக்கால் பொறுத்திருக்க முடியும். ஆனால், நிலையரகத்தால் தாங்கிக் கொள்ள முடியாது! கான்பூரிலிருந்து லக்னோ வரையில் பல இடங்களில், பல போர்களில் ஹேவ்லாக் வெற்றி பெற்றார்; என்று ஒற்றர்கள் கூறினார்கள். வெள்ளையரும் மகிழ்ந்தனர். ஆனால், வென்றவர் இங்கே ஏன் வரவில்லை? முற்றுகை யிடும் புரட்சி வீரர்களோ ஹேவ்லாக்கைத் துரத்தி விட்டோம், என்ற ஆரவாரஞ் செய்து கூத்தாடினர். இதைக் கண்ணுற்ற நிலையரகப் பரங்கியரின் நெஞ்சங்கள், ஆட்டங் கொடுத்து விட்டன. முற்றுகையை எதிர்த்து நின்று மாதம் ஒன்றுக்கும் மேலாகி விட்டது. இனியும் காவலரண்கள் தாங்குமோ? இனியும் பிளவுபட்ட மதில்கள் நிலைக்குமோ? வீரர்கள் குறைந்தனர்; வெடி மருந்து குறைந்தது; உணவுப் பண்டங்களுங் குறைந்தன!

நிலையரகத்தின் உணவு நிலையோ, மிகவும் மோசமாகி விட்டது. சிக்கனமாக இருந்தாலும் 20 நாட்களுக்குக் கூடப் போதாது. சப்பாத்தியும், பருப்பும் தரத்திலும், அளவிலுங் குறைந்து விட்டன. அழுக்கேறிய பணியாட்கள் பரிமாற, நாற்றத்தைச் சகித்துக் கொண்டு, பசியைப் போக்க ஏதோ ஒன்றை உண்டனர். பல மணி நேர இடைவெளிக்குப் பின்னர்தான், ஒரு துண்டு சுருட்டைப் புகைக்க முடியும்; பசியடைத்த ஒரு சில ஆங்கிலேயரைத் தவிர, மற்றவர்கள் கிடைத்ததைக் கொண்டுத் திருப்தி அடைய வேண்டியதாயிற்று. சில முக்கியத் தேவைகளைத் தவிர. பிற பொருட்களைப் பிறரிடமிருந்து விலைக்குத் தான் வாங்க வேண்டும். நல்ல உணவின்றி, கண்டவற்றை உண்டு, வாந்தி பேதியிலும், வயிற்றுப் போக்கிலும் பல குழந்தைகள் இறந்து விட்டன. சீக்கிய வீரர்கள் சிலர் திருட்டுத்தனமாய் வெளியிலிருந்து அபினைக் கொண்டு வந்து கொள்ளை விலைக்கு விற்றனர். அந்த அதிக விலை கொடுத்து அபின் வாங்கி அனுபவிக்க முடியாத சில சுதேசி கிறித்துவ சிப்பாய்கள் மனமுடைந்து கட்சிமாற வெளியேறினர். ஆனால், புரட்சி வீரர்கள் அவர்களைக் கொன்று விட்டனர்.

இதற்கிடையில் அயோத்தியின் பல ஊர்களிலிருந்தும், ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் லக்னோவை அடைந்தார்கள். ஹேவ்லாக் பின்வாங்கியது அவர்களுக் கெல்லாம் பெரும் ஊக்கத்தை அளித்திருந்தது. வெற்றி அறிகுறிகள் தென்பட்ட

தும் தாலுக்தாரர்கள் பலர் தங்கள் படைகளோடு, புரட்சி வீரர்களுடன் சேர்ந்து கொண்டனர். ஆகஸ்டு 6 ஆம் நாள் வாஜின் அலியின் மகனை மன்னனாகப் புரட்சி வீரர்கள் பிரகடனப்படுத்தினார்கள். (அயோத்தி மன்னன், அப்பொழுது கல்கத்தாவில் அரசாங்கக் காவலில் இருந்தான்.) அரியணை ஏறியதை முன்னிட்டுப் பீரங்கிகள் முழங்கின; லக்னோ நகரம் மகிழ்ச்சியில் திளைத்தது; சிப்பாய்கள் புது ஊக்கம் பெற்றனர்; அரசி பேகம் ஹஸ்ரத் மஹால் (Hazrat Mahal) தன் மகனின் சார்பில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றாள். இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பதவிகள் சமமாக வழங்கப் பட்டன. டெல்லிப் பேரரசருக்குக் கீழ்தான், அயோத்தியில் இந்த ஆட்சி ஏற்கப் பட்டது. அயோத்தித் தனி நாடல்ல; மொகலாயப் பேரரசுக்குக் கட்டுப் பட்டதே இது; என்பதைக் குறித்தது. அத்துடன் புரட்சியின் அரசியல் இலட்சியத்தையும் இது காட்டியது. ஆனால், அயோத்தியின் அரச பதவிக்குப் போட்டிகள் இல்லாமல் இல்லை. அரச குடும்பத்தில் பல இளவரசர்களை ஆதரிக்கப் பல கூட்டங்கள் இயங்கின. எப்படியோ? புரட்சி வீரர்கள் ஊக்கமுடன் செயல்பட, தீரமுடன் போரிட, ஒரு தலைமை, ஒரு மையம், ஒரு ஒற்றுமை உணர்வு ஆகியவைகள் தற்போது கிடைத்து விட்டன.

புதிதாக ஆயிரக்கணக்கில் வீரர்கள் வந்து சேர்ந்ததால், மீண்டும் ஒரு தீவிரத் தாக்குதலைப் புரட்சி வீரர்கள் மேற்கொண்டனர். நிலையரகத்தின் வெளி அரண் வரை இரகசியமாகச் சுரங்க பாதைகள் அமைத்தனர். இதை எதிர்த்துச் சந்தேகப்படும் இடங்களி லெல்லாம் கேப்டன் ஃபல்டன் (Foulton) நாய் போலக் காத்திருந்தான். ஆகஸ்டு 10 ஆம் நாள் சுரங்க வெடிகள் சுவர்களைப் பிளந்தன. ஒரு நொடியில் நூற்றுக்கணக்கான புரட்சி வீரர்கள் பிளவுகளில் நுழைந்தனர்; சுவர்களில் ஏறினர்; அசாத்திய வேகத்திலும், துணிவிலும் பரங்கியரும் சளைத்தவர்களல்லர். குண்டுகளைப் பொழிந்து, ஈட்டிகளால் குத்தி, உள்ளே நுழைய முற்பட்ட ஒவ்வொரு சிப்பாயையுங் கொன்றனர். நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் மதிலோரத்தில் கொன்று குவிக்கப்பட்டனர்.

மறு நாள் தாக்குதலில் நிலையரகத்தின் ஒரு பெருங் கட்டிடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து 12 வீரர்களை நசுக்கியது. எதிரியின் குண்டு வீச்சுக்கும் அஞ்சாது, இடிபாடுகளுக்கிடையே அடிபட்டவர்களை மீட்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அப் பணியில் ஒருவனே பிழைத்தான். தினமும் இறப்பி

ஞல் ஏற்படும் இழப்போடு, சுதேசி வீரர்களின் கட்சிமாற்றம் அதிகக் கவலையைத் தந்தது. நிலையரகத்துள் இருந்த எந்தச் சுதேசி வீரர்களையும் நம்பவே முடியவில்லை. எதற்கும் விழிப்புடன் இருக்க முடிவு செய்து, சந்தேகிக்கப்பட்ட வீரர்களைச் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே காவலுக்கு நிறுத்தினர். தப்பிக்க முயற்சித்தால், சுட்டுத் தள்ளுவதற்கும், வெள்ளை வீரர்கள் சில இடங்கிகளில்' நிறுத்தப்பட்டிருந்தனர். இதைச் சுதேசி வீரர்கள் அறிய வில்லை. நிலையரகத்தில் இப் பொழுது 700 வீரர்களே போரிடும் நிலையிலிருந்தனர். இந்த வேளையில் முற்றுகையிடும் புரட்சிப் படையின் எண்ணிக்கை 30,000 க்கும் அதிகமாகி விட்டது. இனி ஒரு தீவிரத் தாக்குதலை மேற்கொண்டால், புரட்சி வீரர்கள் நிலையரகத்துள் நுழைந்து விடுவார்கள்!

இது சபலப் போரல்ல. ஆயிரக்கணக்கான சிப்பாய்களின் தாக்குதலை, நூற்றுக் கணக்கிலிருந்து நிலையரக வீரர்கள் எவ்விதம் எதிர்த்துத் தாக்குவர்? ஆங்கில வீரமும், உணர்வும் எவ்வளவு நாள் நீடிக்கும்? ஒற்றன் அன்காட், நேரில் ஹேவ்லாக்கைச் சந்தித்துக் கடிதத்துடன் ஆகஸ்டு 29 ஆம் ஆம் நாள் திரும்பி வந்தான். 'நான் எதுவுஞ் செய்ய இயலாமல் இருக்கிறேன். ஒன்று மட்டுங் கூறுவேன், சரணடைய எண்ணி விடாதே! அதைவிட போரிட்டு இறப்பதே மேல்...இங்கிலாந்திலிருந்து சர் காலின் காம்பெல் (Sir Collin Cambell) படையுடன் வருகின்றூர். இன்னும் 20 அல்லது 25 நாட்களில் எல்லா ஏற்பாடுகளுடன் முதலில் உன்னை வந்து விடு விக்கிறேன்.' என்ற, ஹேவ்லாக்கின் இக் கடிதத்தைக் கண்ட கர்னல் இங்கிலீஷ் சோர்ந்து விட்டார். இன்னும் எத்தனை நாட்கள்? அதற்குள் என்ன ஆகுமோ?

செப்டம்பர் பிறந்தது. நம்பிக்கையளிக்குஞ் செய்திகள் கிடைத்தாலும், நிலையரகத்தின் துயரம் இன்னுந் தீர வில்லை. அது ஒரு சிற்றூர் போன்றது. பொருட்களைப் புதிதாகப் பெற வழி யில்லை, இருக்கும் பொருட்கள் குறையக் குறைய, விலைகள் விஷம் போல் ஏறி விட்டன. வாங்குங் கூலி அனைத்தும் செலவாகியும், தேவைகளில் பாதி கூட பூர்த்தியாக வில்லை. ஒரு நூற்றூண்டுக்கு முன்பிருந்த நாணய மதிப்பை வைத்துக் கணக்கிட்டுப் பார்த்தால், நிலையரகத்தின் இப் போதைய விலை உயர்வைக் கண்டு திகைக்கச் செய்யும், ஆட்டா மாவு சேர் 1 ரூபாய்; சர்க்கரை 16 ரூபாய்; நெய் 10 ரூபாய்! புகையிலை ஒன்று 2 ரூபாய்! 12 பிராந்தி பாட்டில் 150 ரூபாய்!

12 பீர் பாட்டில்கள் 70 ரூபாய்! ஒரு பாட்டில் ஊறுகாய் 20 ரூபாய்! ஒரு கட்டிச் சோப்பு 7 ரூபாய்! ஒரு பவுண்டு காப்பிப் பொடி 3 ரூபாய்! தேயிலை 8 ரூபாய்! ஒரு துணிக்குச் சலவைக் கூலி 1 ரூபாய். இந் நிலையில் பெரும்பாலோர் வாரக் கணக்கில் துணிகளைக் கழற்றுமலேயே இருந்தனர். கர்னல் இங்லீஷ் இரவில் கூட தம் உடையைக் கழற்றியதில்லை. உள்ளிருந்த வீரர்களால் புகை பிடிக்காமல் இருக்க முடியவில்லை. பீடியும், சுருட்டும் எளிதிற் கிடைக்கவும் இல்லை. வேப்ப இலையும், கொய்யா இலையையும் அவ்வப்போது சுருட்டிப் புகைத்தனர்! இக்கடின வாழ்க்கைக்குப் பயந்தே பல சிப்பாய்கள் கட்சி மாற முயன்றிருந்தால் அதில் வியப்பென்ன?

ஒரு வாரம் கடந்தது. பெண்டு பிள்ளைகள் தங்கிய அறைகள் தகர்ந்து விழுந்ததால், மேஜை நாற்காலிகளில், தாழ்வாரங்களில் படுத்துறங்கினர். உறக்கமும் நிம்மதியானதல்ல... நீண்டதல்ல...புரட்சி வீரர்கள் புத்திசாலிகள். சில சமயங்களில்! பகலெல்லாம் போர் செய்து, களைத்துச் சாயும் நிலையரக வீரர்களுக்கு, இரவிலும் ஓய்வளிப்பதில்லை. நள்ளிரவில் ஏதாவது ஒரு அரணைத் தாக்க வருவது போலவே ஒலியை எழுப்புவார்கள். உடனே பரங்கியர்கள் பதறியடித்து அத்திசைக்கு ஓடுவார்கள். பீரங்கிகள் இழுக்கப் படும்; வெடி மருந்து பீப்பாய்கள் உருட்டப் படும்; இருளில் மோதி அடித்துக் கொண்டு அங்கு மிங்கும் பறப்பார்கள். தாக்குதலை எதிர் பார்த்து வெகுநேரம் விழிப்புடன் காத்திருப்பர், எதிரியின் நடமாட்டமே இருக்காது. அயர்ந்து சாய்ந்தால் இன்னொரு திசையிலிருந்து மீண்டும் போர்க் குரல் கேட்கும். விழுந்தடித்துக் கொண்டு அங்கே சென்றால், தாக்குதல் நடக்காது! இப்படிப் பல முறை, பல இரவுகள் தாக்குவது பொலவே நடித்து வெள்ளையரைக் கடுஞ் சோதனைக்கும், களைப்புக்கும், ஏமாற்றத்திற்கும் புரட்சி வீரர்கள் உள்ளாக்கினார்கள். அடைபட்டவர்களின் நிலை எப்படி இருக்கும்? வீரர்களின் விழிப்பிலே தான் நிலையரகத்தின் பாதுகாப்பு இருந்தது. வீரன் ஒருவன் சோர்ந்தாலும், வீழ்ச்சி உறுதி. ஆங்கில இனத்தின் ஆற்றலுக்கெல்லாம் அம் முற்றுகை மாபெருஞ் சவால்!

செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் தாலுக்தார் ராஜா மான்சிங், தன் பெரும் படையுடன் லக்னோவின் வெளிப்புறத்தில் முகாமிட்டிருந்தான். யார் தரப்பில் அவன் சேரப்போகின்றான் என்பது, அது போதுந் தெரியவில்லை. வெள்ளையருடன் சேர்ந்தால், முற்றுகையைத் தாக்குப் பிடித்து, எதிரியை முறி

யடிக்கலாம். புரட்சி வீரர்களுடன் சேர்ந்தால், நிலையரகம் சுக்கு நூறாகி விடும்! இந் நிலையில் மான்சிங்கின் முகாம், அச்சத்தையும், நம்பிக்கையையும் அளித்துக் கொண்டிருந்தது. இதே சமயத்தில், நிலையரகத்தைக் காத்திருந்த பெரும் பெரும் வீரர்களில் ஒருவனான கேப்டன் ஃபல்டன் (Fulton) குண்டு வீச்சுக்குப் பலியானான்.

நிலையரகத்தில் இருந்த சிப்பாய்களில் சிலர், புரட்சி வீரர்களுடன் உறவாடிக் கொண்டிருந்தது, வெள்ளையருக்குப் பெருங் கவலையைத் தந்தது. அங்கே நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும், திட்டங்களையும், இந்த சிப்பாய்கள் புரட்சி வீரர்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். வெள்ளையருடன் இனியும் இருப்பது, தங்களுக்குப் பெரும் ஆபத்தாகும் என்று அவர்கள் நினைத்ததே இதற்குக் காரணம். சிப்பாய்களின் இத் துரோகச் செயல், வெள்ளையரின் தளர்ச்சியையும், அச்சத்தையும் அதிகமாக்கியது. டெமிக்கிள்சின் வாள் தலைக்கு மேல் தொங்குகிறது! எக்கணமும் மதில்கள் உடைக்கப் படலாம்! மானமும் உயிரும் காற்றில் பறக்கலாம்! இவ்வளவு தியாகமும் வீண்தானா? இவ்வளவு முயற்சியுந் தோல்விதானா?

இல்லை! செப்டம்பர் 23 ஆம் நாள், ஒற்றன் அன்காட் ஒரு கடிதங் கொண்டு வந்தான். அது ஹேவ்லாக்கால் எழுதிய தன்று. இம் முறை சர் ஜேம்ஸ் உட்ராம் எழுதியிருந்தார். ‘பெரும் படையுடன் நேற்று கங்கையைக் கடந்து, லக்னோவை நோக்கி முன்னேறுகின்றோம். நாங்கள் நெருங்க நெருங்க, எதிரிகள் உங்களைக் கடுமையாகத் தாக்குவார்கள். எனவே, எச்சரிக்கையாக இருந்து, உங்கள் பாதுகாப்புக்கு ஊறு எதுவுமின்றி, நாங்கள் எதிரியுடன் போரிடுவதைப் பார்த்த பிறகு, நீங்களும் பின்புறத்தில் எதிரியைத் தாக்கவும்.’ என்ற அச் செய்தியைப் படித்த நிலையரக வெள்ளையர் உள்ளங்கள் சிலிர்த்தன! சோர்வு பறந்தது; புத்துணர்வு புகுந்தது. மறு நிமிடமே தாக்குதலுக்குத் தேவையான ஏற்பாடுகளைக் கவனித்தனர். செப்டம்பர் 23 நாள். தொலை தூரத்தில் பீரங்கிகள் முழங்கும் ஓசை கேட்டது; ஆம்! மீட்சிப் படை வந்து விட்டது...உட்ராம் சொன்னபடியே வந்து விட்டார்!

———


# 23. உட்ராமின் வருகை.

[மீண்டும் இந்தியாவிற்கு உட்ராம்—ஹேவ்லாக்கிற்கு மேல் உட்ராம் அமர்த்தப்படல்—உட்ராம் கான்பூரை அடைதல்—நேப்பியர்—இருவரும் லக்னோவை நெருங்குதல்—ஆலம்பாக்கில் வெற்றி—டெல்லி மீட்சி பற்றிய செய்தி—வெள்ளையர் துருப்புகள் லக்னோவிற்குள் ஊடுருவுதல்—ஜேம்ஸ் நீல் கொல்லப் படல்—உட்ராமும், ஹேவ்லாக்கும் நிலையரகத்துள் நுழைதல்—அங்கே புது நெருக்கடி—கான்பூரின் ஆபத்தை உட்ராம் அறிதல்—தலைமைத் தளபதி கேம்பனுக்குக் கடிதம்.]

அயோத்தியின் இணைப்புக்குப் பிறகு முதல் ஆணையராகப் பணியாற்றிய ஜேம்ஸ் உட்ராம் விடுமுறையில் சென்றிருந்தார். புரட்சித் தோன்றிய சமயத்தில் பாரசீகத்திலிருந்த அவர், அரசின் அவசர அழைப்பை ஏற்று, கப்பலேறி பம்பாய், இலங்கை வழியாக ஜூலை 31 ஆம் நாள் கல்கத்தவை அடைந்தார். இதற்கிடையில், நாட்டின் பல பகுதிகளில் கிளர்ச்சிப் பரவி விட்டது, கான்பூருக்கும், லக்னோவிற்கும் இடையில் பல வெற்றிகள் பெற்றும், பல வீரர்களை இழந்தும் தற்போது 700 வெள்ளை வீரர்களுடன் ஹேவ்லாக் சிக்கியிருக்கிறார். அவருக்கு 2,000 வெள்ளை வீரர்கள் உடனடியாகக் கிடைத்தால், ஆக்ராவிற்கோ, டெல்லிக்கோ முன்னேறுவார். அதற்கு முன்பு, குவாலியர்ப் புரட்சி வீரர்கள் கான்பூரை நெருங்கினால், அதையும் இழந்து, ஹேவ்லாக் அலகாபாத்திற்குப் பின்வாங்க நேரிடும். ஆங்கிலேயர்கள் ஒவ்வொரு அடியையும் எச்சரிக்கையாக எடுத்து வைக்க வேண்டும். அவர்களின் திட்டத்தில் மயிரிழைத் தப்பினாலும், புரட்சி வீரர்கள் இந்தியாவைப் பறித்து விடுவார்கள்! குவாலியர் சிப்பாய்களின் அச்சுறுத்தலை, அதனால் கான்பூர் அடையப் போகும் கதியை, லக்னோ அறியவே இல்லை. தற்பொழுது நிலையரகத்தின் அவலத்தைக் களைவதே தலையாய கடமையெனினும், கான்பூரின் பாதுகாப்பை

உறுதியாக்கிக் கொள்ள வேண்டியதும், இன்றியமையாத ஒன்றாகும். எனவே, முதலில் லக்னோ செல்வலற்குப் பதில், கான்பூருக்கு உட்ராம் விரைந்தார்.

உட்ராமின் தலைமை, ஹேவ்லாக்கிற்கு ஏமாற்றத்தை அளித்தது. நெடுநாள் காத்திருந்து, தலைமைப் பதவிப் பெற்று, கான்பூரில் பெரும் வெற்றி கண்ட ஹேவ்லாக்,



சர் ஜேம்ஸ் உட்ராம்

தொடர்ந்து லக்னோவை மீட்கும் பெருமை தமக்கே கிடைக்க வேண்டும் என்று கனவு கண்டதில் தவறில்லை. தமக்கு எட்டியும், எட்டாமலும் இருக்கின்ற லக்னோவின் வெற்றியில்

உட்ராம் பங்கு கொள்வாரோ! என்று அவருள்ளம் வேதனை அடைந்ததில் வியப்பொன்று மில்லை. உட்ராமின் புதுத் தலைமையானது, ஹேவ்லாக்கின் ஆற்றலில் மேலிடத்திற்கு நம்பிக்கை யில்லை; என்பதை வெளிப்படுத்துவது போலாகும். ஒரு மாவீரனுக்கு இதுவே ஒரு பெரும் அவமானமாகும்.

உட்ராம் இதைப் புரியாதவரல்லர், முன்பு பாரசீகத்தில் தனக்குக் கீழ்ப் பணிபுரிந்த ஹேவ்லாக்கின் மன நிலையை அறிவது அவருக்குக் கடினமல்ல. ஆகையால், கல்கத்தாவிலிருந்து விசைப் படகில் காசிக்கு வந்ததும், ஹேவ்லாக்கிற்கு ஒரு தந்தி கொடுத்தார். 'உதவிப் படையுடன் அங்கு நான் வருகிறேன். லக்னோவை மீட்பதற்கான முயற்சியில் பெரும் இன்னல்களை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். அதனால், அதை மீட்கும் பெருமையும் உங்கட்கே சேரட்டும். ஆணையர் (Commissioner) அதிகாரத்தை மட்டும் நான் மேற்கொண்டு, இராணுவ அதிகாரம் அனைத்தையும் உங்களிடமே ஒப்புவிக்கிறேன். உடனே லக்னோவில் கர்னல் இங்கிலீஷுடன் தொடர்பு கொள்ளவும்.' என்பது அச் செய்தி. வீரனை வீரன் அறிவான். உட்ராமின் இச் செயல் பெருந் தன்மை வாய்ந்ததே. செப்டம்பர் 15 ஆம் நாள் உட்ராம் கான்பூரை அடைந்தார். அவருடன் மாவீரர் நேப்பியரும் (Napier) வந்திருந்தார். 18-ஆம் நாள் கங்கையைக் கடக்க மிதக்கும் பாலம் ஒன்று கட்டப் பட்டது. மறுநாள் லக்னோவை நோக்கி அவர்கள் முன்னேறினர்கள். உட்ராம், ஹேவ்லாக், நெப்பியர், நீல், இந் நான்கு வீரர்களும் தலைமை தாங்கி, அம் மீட்சிப் படையில் சுமார் 2,800 ஆங்கில வீரர்களும், 400 சுதேசி சிப்பாய்களும் (பெரும்பாலும் சீக்கியர்கள்) இருந்தனர். கொட்டும் மழையில் மங்கள்வாரை அடைந்ததும் அவர்களைப் புரட்சிப் படை சூழ்ந்து கொண்டது. அதைச் சிதறடித்து விட்டு மேலும் முன்னேறினர். பின்வாங்கி ஓடிய புரட்சி வீரர்கள் 'பாண்ணிப் பாலத்தைத் தகர்க்காமல் விட்டது பெருந் தவறாகும். இதனால், பரங்கிப் படையின் முன்னேற்றம் தடைப்படவே இல்லை. செப்டம்பர் 23ஆம் நாள் லக்னோவின் வெளிப்புறத்திலிருந்த ஆலம்பாக்கை அடைந்து விட்டனர். அங்கேயும் புரட்சிப் படை ஒன்று தீரத்துடன் எதிர்த்து நின்றது. அப் பயங்கர எதிர்ப்பைச் சமாளிக்கப் பரங்கி பீரங்கிகள் முழங்கின; இந்த ஒலியைக் கேட்டுத்தான் நிலையரகம் மீட்சிப் படையின் வருகையை அறிந்தது; அகம் மகிழ்ந்தது; ஆலம்பாக் வெற்றியில் மகிழ்ந்து அவர்கள் நிலையரகத்தை மீட்கத் திட்ட மிட்டுக் கொண்டிருந்த அவ் வேளையில், ஒருவன் அவ்

வெள்ளையர் முகாமிற்கு வந்து, அவசரக் கடிதம் ஒன்றைக் கொடுத்தான். செய்தி இது தான், டெல்லியை மீட்டு விட்டோம்'! புரட்சியின் சிறகுகளை ஒடித்து விட்ட நிகழ்ச்சியது!

ஆலம்பாத்திற்கு நேர் வடக்கே மூன்று மைல் தூரத்தில் லக்னோ இருக்கிறது. வரை படத்தைப் பார்த்தால், ஊரின் தெற்கு விளிம்பில், ஒரு கால்வாய் நெளிந்து வட கிழக்கே கோமதி நதியில் சேருகிறது. ஆலம்பாக்கி லிருந்து கால் வாயைக் கடக்கும் இடத்தில் 'சார்பாக்' பாலம் ஒன்று இருக்கிறது. அதைக் கடந்து, ஊருக்கும் கால்வாய்க்கும் இடையில் கிழக்கே செல்லுந் தெரு வழியே சென்று, வடக்கே திரும்பிய, பிறகு மேற்கு நோக்கிச் சென்றால், நிலையரகத்தை அடையலாம். ஊருக்குள் ஊடுருவுவதை இதன் மூலம் தவிர்த்தாலும், ஊரின் விளிம்பிலும், நிலையரகத்திற்கு முன்னும் கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டி இருக்கும். (உட்ராம் தேர்ந்தெடுத்த வழி, வரை படத்தில் அம்பு குறியில் காட்டப் பட்டிருக்கிறன்து.)

பரங்கிப் படை கால்வாயை நெருங்கியது! உடனே புரட்சிப்படை தாக்குதலைத் தொடங்கியது. சிப்பாய்களின் ஆற்றலும், தீரமும் அன்று திறம்பட வெளிப் பட்டன. வெள்ளை வீரர்கள் கடுமையான சோதனைக்குள்ளானார்கள். வீட்டுக் கூரைகள், சாளரங்களில் மதில் புறத்தி லெல்லாம் மறைக்கப்பட்டிருந்த புரட்சிப் படையின் பீரங்கிகள் அனலைக் கக்கின! சில மணி நேரத்தில் பிணங்கள் குவிந்து விட்டன. சார்ஜென்ட் மேஜர் லேமான்ட் வயிற்றில் 6 பவுண்டு குண்டு விழுந்தது. 'ஐயோ! கடவுளே' என்று அலறி விழுந்தான். சார்ஜென்ட் கிர்னென்னின் தொடைகள் பிய்த்தெறியப் பட்டன. இன்னொரு பெயர் தெரியாத வீரன்......வாளை உருவி ஓங்குகினான். ஒரு பெருங் குண்டு அவன் தலையைத் துண்டித்துச் சிதைத்தது. கையில் வாளுடன் சில வினாடிகள் வெறும் முண்டம் மட்டும் நின்றது, பின்னர் அதுவுஞ் சாய்ந்து வீழ்ந்தது! அயர்லாந்திலிருந்தும், ஸ்காட்லாந்திலிருந்தும் வந்து, இங்கிலாந்திற்காக இவ் வீரர்கள் இந்தியாவில் புரிந்த தியாகம் அற்புதமானதே ஆகும். ஊர் விளிம்பில் எண்ணற்றோர் பிணமாயினர். முடிவில், பரங்கிப் படை சத்தர் மன்சில் மாளிகைக்கருகில் நின்று ஓய்வெடுத்தது. நிலையரகத்திற்கு இனி சுமார் முக்கால் மைல் தூரம் உள்ளது. மேலும் அது வரை முன்னேறுவது அவ்வளவு எளிதல்ல. அந்தக் குறுகிய தெருவின் இரு மருங்கிலும், புரட்சி வீரர்கள் இடை வெளி யில்லாமல் காத்து நின்றனர். பரங்கிப் படை முன்னேறத் தொடங்கி

யதும் தாக்குதல் மிகப் பயங்கரமாயிற்று, அங்கங்கள் பறந்தன; இரத்தம் பீரிட்டடித்தது. இரு தரப்பினரும் நெருங்கிக் கலந்து போரிட்டனர். நீல் அஞ்சா நெஞ்சத்துடன் ஆணையைப் பிறப்பித்துக் கொண்டே முன்னேறினான். ஒரு நுழைவாயிலின் வளைவுக் கருகில், நீல் குதிரையிலமர்ந்து போரை நெறிப் படுத்திக் கொண்டிருந்தான். அவ் வளைவினில் மறைந்திருந்த ஒரு சிப்பாய்த் துப்பாக்கியை நீட்டி, மிக நெருக்கத்திலிருந்து நீலின் தலையில் சுட்டான். அக் கணத்திலேயே நீல் உயிரைத் துறந்து குதிரையி லிருந்து கீழே சாய்ந்தான். சுமார் 500 வெள்ளை வீரர்களை இழந்த பிறகே, உட்ராம் நிலையரகத்தை நெருங்கினர். இந்த இழப்பை யெல்லாம் விட நீல் இறந்தது தான் பெரும் இழப்பாகும். நீல் ஆங்கிலப் படையின் கண்மணி! புரட்சி வீரர்களின் சிம்ம சொப்பனம்!*

பெரும் இழப்புக்குப் பின்னரே உட்ராமும், ஹேவ்லாக்கும் நிலையரகத்துள் நுழைந்தனர். எதிர்பட்ட தடைகளையும், மேற்கொண்ட குறிக்கோளையும் கருதினால் இவ் விழப்பு அதிகமல்ல என்றே கூற வேண்டும். இவர்களின் வருகை எவ் வினாடியும் எதிர்பார்க்கப் பட்ட ஒன்றாகும். இனியும் முற்றுகையைத் தாங்குஞ் சக்தி, அவ்விதயங்களுக்கோ, மதில்களுக்கோ இல்லை! மீட்சிப் படை வரவில்லை யெனில், கான்பூரின் கோர நாடகம் மீண்டும், லக்னோவில் புரட்சி வீரர்களால் நடத்தப் பட்டிருக்கும். அல்லது, நிலையரக வெள்ளையர்கள் திட்ட மிட்டிருந்தபடி, பெண்டு பிள்ளைகளை அவமானத்திலிருந்துங் காப்பாற்ற, பீரங்கிகளுக்குப் பலி கொடுத்து விட்டு, இறுதி வரைப் போர் புரிந்து, நிலையரக இடிபாடுகளில் அவர்களும் புதை யுண்டிருப்பார்கள்! மீட்சிப் படை உள்ளே வந்து விட்டது. அங்கிருந்த பண்டங்களை வைத்துக் கொண்டு இவ்வளவு பேரும் எவ்வளவு நாள் உண்ண முடியும்? இந் நெருக்கடியை உணர்ந்த உட்ராம், மீண்டும் நிலையரகத்தை விட்டு வெளியேறி புது உதவியுடன் வர நினைத்தார். அது கடினமானது மட்டு மல்ல; அதற்கு அவசியமும் இல்லாமல் போய் விட்டது. நிலையரகத்தின் தற்காப்புக்கு, அவ்வளவு ஏற்பாடுகளையுஞ் செய்து இறந்த ஹென்றி லாரன்ஸ், அதையும் மறக்கவில்லை. யாருக்குந் தெரியாமல் சிறு நீச்சல் குளமொன்றில், தானிய மூட்டைகள் பலவற்றைச் சேமித்து மறைத்து வைத்திருந்தார். அத்தனைக் கட்டிடங்களும், வீதிகளும் இருந்த நிலையரகச் சுற்றுக்குள், பெரும் முயற்சிக்குப் பிறகே அது கண்டு

---

*சென்னையில், நீலுக்கு வைக்கப் பட்டிருந்த சிலை, சுதந்திரப் போராட்டக் காலத்தில், எதிர்ப்புக்குப் பின்பு அகற்றப் பட்டது.

பிடிக்கப் பட்டது. முற்றுகையி லிருந்து இப்போதைக்கு விடு படுவது முடியாது. ஒரு இலட்சம் புரட்சி வீரர்கள் லக்னோ வில் இருக்கின்றனர்! மேலும், இரண்டு மாத முற்றுகையை எதிர் பார்த்து உட்ராம் சிக்கனமாக உணவு வினியோகத்தைக் கடை பிடித்தார். உணவு அளவில் அப்பொழுதும் மாற்றம் இல்லை. நாளொன்றுக்கு நான்கு சப்பாத்திகள் தான் ஒவ் வொருவருக்குங் கிடைத்தது. பசியைத் தாங்க முடியாத வீரர் கள், ஒரு ரூபாயை விட்டெறிந்து, ஒரு சப்பாத்தியைப் பறித் துக் கொண்டு ஓடுவது வழக்கமா யிற்று. வீரர்களின் பசி வெறியை அறிந்து, அப்பொழுதெல்லாம் மயில்களும், அங்கே வருவது கிடையாது! ஆனால், குருவி வேட்டைகள் மட்டுஞ் சில சமயம் நடந்தது! கட்டுப்பாடு உணர்வு அங்கே மிகுந் திருந்ததால் தான், இக் கொடூரத் துன்பத்திலுங் கூட ஒழுக் கமும், அமைதியும் நிலையரகத்தில் நிலவியது.

லக்னோவிற்கு வெளியே முகாமிட்டிருந்த மான்சிங், இன் னும் எந்த முடிவும் எடுக்க வில்லை. யார் கை ஓங்குகிறதோ அவர்களுடன் சேர்ந்து கொள்ள விரும்பினான். வெள்ளையரு டன் சேர ஆசை யிருந்தாலும், பிற தாலுக்தார்களின் உதவி கிடைக்காததால், லக்னோவை விட்டு வெளி யேறினான். உட் ராம் உடனடியாகத் தம் பாது காப்பு எல்லையை விரிவு படுத் தினார். நிலையரகத்திற்கு வெளியே இருந்த சில கட்டிடங் களைக் கைப்பற்றியதால், எதிரியின் குறியிலிருந்து பலருந் தப்ப முடிந்தது. அடுத்து ஒற்றர்களின் மூலம் வெளித் தொடர்பை மேற் கொண்டார், ஒற்றர்களின் கூற்றுப்படி, கான்பூருக் கப்பால், கால்வி என்ற இடத்தில், நானாவின் படைகளுடன் குவாலியர் புரட்சி வீரர்கள் இணைகிறார்கள்; என்று கேள்விப் பட்ட உட்ராம், கான்பூருக்கு நேரப் போகும் ஆபத்தை உணர்ந் தார். உடனே இந்தியப் படையின் தலைமைத் தளபதிக்கு, கான்பூரைப் பாது காத்து, அதன் பிறகு லக்னோவிற்கு உதவும் படிச் செய்தி அனுப்பினார். அக்டோபர் 26 நாள் முற்றுகை சிறிது தளர்ச்சி அடைந்திருந்தாலும், சிக்கன உணவுப் பங் கீட்டால், நவம்பர் மாத இறுதி வரை நிலையரகந் தாக்கு பிடிக் கும்; என்ற நம்பிக்கையாலும், உட்ராம் இப்படிச் செய்தி அனுப்பினார். அதுவரையில் காத்திருக்கத் தேவை யில்லாமற் போய் விட்டது. நவம்பர் 7-ஆம் நாள் கான்பூரிலிருந்து ஒரு முக்கியச் செய்தி வந்தது. 'தலைமைத் தளபதி சர் காலின் காம் பெல் (Commander-in-chief Sir Colin Campel) அவர்கள் பெரும் படையுடன் இன்னும் மூன்று நாட்களில் லக்னோவை அடை வார்கள்' என்று உறுதி கூறப்பட்டது.

# 24. தலைமைத் தளபதி சர் காலின் கேம்பல்

[இங்கிலாந்து அரசு, தலைமைத் தளபதியாக கேம்பலை நியமித்தல்—அவர் கல்கத்தாவை அடைதல்—படை யெடுப்பு ஏற்பாடுகளைக் கவனித்தல்—கான்பூரை அடைதல்—குவலியர் புரட்சி வீரர்கள் கான்பூரைக் கைப்பற்ற வருதல்—கான்பூரின் பாதுகாப்பிற்கு விற்தாம் நிறுத்தப் படுதல்—கேம்பல் லக்னோவிற்குச் செல்லல்—டெல்லி வீழ்ச்சிக்குப் பிறகு ஹோப் கிராண்டும் அங்கு வருதல்—தலைமைத் தளபதிக்கு உதவி செய்ய ஒற்றர்கள் கடும்போருக்குப் பிறகு நிலையரகத்துள் நுழைதல்—ஹேவ்லாக் மரணம்—அகதிகளுடன் லக்னோவை விட்டுக் கேம்பல் வெளியேறல்—ஆலம்பாக்கில் உட்ராமை நிறுத்தி விட்டுக் கான்பூருக்குச் செல்லல்—கான்பூருக்கு ஆபத்து.]

கேம்பலுக்கு அப்பொழுது வயது 65. 16 வயதில் பிரிட்டிஷ்ப் படையில் சேர்ந்து,' நெப்போலியனின் புகழ்ப் பெற்ற தீபகற்பப் போரில் பங்கு பெற்றிருந்தார். மேற்கு இந்தியத் தீவுகளிலும், சீனவிலும் நெடுங் காலம் போர் அனுபவம் பெற்று 1846–ல் இந்தியாவில் பணியாற்ற வந்தார். தலைமை ஆளுநர் டல்ஹௌசிப் பிரபுவினிடங் கொண்ட கருத்து வேற்றுமையால், பாதி ஊதியத்தின் பணியி லிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். கிரிமியாப் போருக்காக மீண்டும் இங்கிலாந்து அரசு, அவரை அழைத்துக் கொண்டது. இங்கே புரட்சித் தோன்றியதும் இந்தியப் படையின் தலைமைத் தளபதியாக இங்கிலாந்து அரசு அவரை 1857 ஜூலை 11ஆம் நாள் நியமித்தது. மறு நாளே புறப்பட்ட அவர் ஒரு மாதத்திற்குப் பிறகு கல்கத்தாவை அடைந்தார். வந்ததும் அவர் போர்க் களங்களுக்குச் செல்வதற்குப் பதில், படை யெடுப்புக்குத் தேவையான தளவாடங்கள், கூடாரங்கள், வெடி மருந்துகள், வண்டிகள் ஆகியவற்றைச் சேகரித்தார். நெருக்கடி நிலைக்கேற்ப நிர்வாகத்தைச் சீர் படுத்தினர். இங்கிலாந்தி லிருந்து வீரர்கள் வந்து இறங்கியதும், உடனடியாக உதவத் தேவைப் படும் இடங்களுக்கு அவர்களை அனுப்பினர்.

அக்டோபர் 27 ஆம் நாள், கல்கத்தாவை விட்டுப் புறப் பட்ட கேம்பல், அலகாபாத்துக்குச் செல்லும் வழியில் புரட்சி வீரர்களின் பிடிக்கு மயிரிழையில் உயிர் தப்பினார். அலகாபாத்தை அடைந்ததும், லக்னோவிலிருந்து உட்ராம் அனுப்பிய செய்தியைப் பெற்றுக் கொண்டு, நவம்பர் 3ஆம் நாள் கான்பூரை அடைந்தார். இதற்குள், குவாலியரிலிருந்து வேறு புரட்சி வீரர்கள் கால்பியை அடைந்து விட்டனர். நானாவின் படைகள், கால்பிக்கு வந்து விட்டதால், இரு படை களும் ஒன்றிணைந்து கான்பூரைத் தாக்க வரலாம்; இதனால், தலைமைத் தளபதி முடிவெடுக்கத் தயங்கினார். முன்னேறி குவாலியர் படையை முறியடிப்பதா? அல்லது, முதலில் லக்னோவை விடுவிப்பதா? கான்பூருக்குத் தேவையான வீரர் களை நிறுத்தி விட்டு, லக்னோ சென்றும் பலனில்லை. அங்கேச் செல்லா விட்டால் அறைப் பட்டினி கிடக்கும் ஆங்கில வீரர் களால் தாக்குப் பிடிக்க முடியாது. இறுதியில் லக்னோவை விடுவிப்பதே முதல் பணி என்று முடிவெடுத்தார். கான்பூரில் விந்தாம் (Windham) தலைமையில் ஒரு சிறு படையை நிறுத்தி, எதிரி நெருங்கினாலுங் கூட இடத்தை விட்டு வெளியேறாமல், தற்காப்புப் போரில் மட்டும் ஈடுபட வேண்டும் என்று உத்திர விட்டார்.

நவம்பர் 9ஆம் நாள் கேம்பல் தம் படைகளை லக்னோவை நோக்கிச் செலுத்தினார். செப்டம்பர் மாதத்தில் டெல்லி மீட்கப் பட்டதால், அங்கிருந்தும் இரண்டு அணிகள் பிற தளங்களை மீட்க விரைந்தன. அதில் ஒரு அணி, ஆக்ராவில் இந்தூர் புரட்சி வீரர்களை அடித்து விரட்டி விட்டுக் கான்பூருக் குப் புறப் பட்டது. வழியில் கர்னல் ஹோப் கிராண்ட் (Hope Grant) அதன் தலைமையை ஏற்று அக்டோபர் இறுதி யில் கான்பூரை அடைந்தார். கேம்பலின் ஆணையின்படி அங் கிருந்து, லக்னோவிற்கு அவரும் புறப் பட்டார். பண்டேரா (Bantera) என்னுமிடத்தில் எதிர்ப்பட்ட சிப்பாய்களை முறி யடித்து, அவர் அங்கே முகாமிட்டிருந்தார். விரைவில் கேம் பலும் தம் படையுடன் அங்கே வந்து சேர்ந்தார். அப் பொழுது அந்த மீட்புப் படையில் சுமார் 4,500 வெள்ளையர்கள் இருந்தனர். ஸ்காட் லாந்தின் மிகச் சிறந்த வீரர்களும், கிரிமி யாப் போரில் விருதுகள் பெற்ற வீரர்களும் அதில் நிறைந்திருந் தனர். எண்ணிக்கையில் குறைந் திருந்தாலும், ஆற்றலில் மிகச் சிறந்த படை அது. தலைமைத் தளபதி வெகு விரைவில் லக் னோவை விடுவித்து உடனே திரும்ப வில்லையென்றால், கால்பியி லிருந்து வரும் புரட்சிப் படை கான்பூரைக் கைப்பற்றி விடும்.

லக்னோவைச் சுற்றி இருக்கும் புரட்சி வீரர்களை எப்படி ஏமாற்றி முன்னேறுவது? அப் பகுதிகளை நன்கறிந்த ஒருவன் இருந்தால்தான், தம் வேலை எளிதாகும்; என்று கேம்பல் நினைத்தார். அவருக்கு ஏற்ற ஒருவன் நிலையரகத்தில் இருந்தான். அவன் ஹென்றி காவனு (Henry Kavanagh) என்ற அரசாங்க ஊழியன், லக்னோவில் நீண்ட நாள் பணி புரிந்தவன். தளபதிக்கு வழி காட்டியாக இருக்க அவன் முன் வந்த பொழுது, உட்ராம் அவனுக்கு எளிதில் அனுமதித் தர வில்லை. ஏனெனில்? புதிய ஒற்றன் கனோஜி லால் காவனுவைத் தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்ப வில்லை. நெடிது வளர்ந்த, நீல விழிகளைக் கொண்ட அவனை எதிரிகள் எளிதில் அடையாளங் கண்டு கொண்டால், தனக்கு ஆபத்து ஏற்படும்; என்று கனோஜிலால் அஞ்சினன். முடிவில் எப்படியோ சம்மதித்தான் உடலுக்குக் கருப்பு மையைத் தடவி, ஒரு லக்னோ போக்கிரியைப் போல முண்டாசும், சட்டையும் அணிந்து கொண்ட காவனுவை, உட்ராம் கூட அடையாளங் கண்டு கொள்ள முடிய வில்லை. நிலையரகத்தை விட்டு, இரவில் இருவரும் வெளியேறினர். நேர் சாலையையும், தெரு விளக்குகளையும் ஒதுக்கிக் குறுக்கு வழியில் இருவரும் நடந்தனர். வழியில் ஒரு கிராமத்தில் நாய்கள் குரைத்தன; துறத்தின. மூச்சு வாங்க ஓடி இருட்டில் எங்கோ ஒரு ஏரியில் முழங் காலளவு நீரில் மாட்டிக் கொண்டு, இரண்டு மணி நேரம் அதிலேயே நடந்தனர். பின்னர், ஒரு குடியானவப் பெண்ணின் உதவியால் நேர் வழியைக் கண்டு பிடித்துப் பயணத்தைத் தொடர்ந்தனர். புரட்சி வீரர்கள் ஓரிருவரின் சந்தேகப் பார்வைக் கெல்லாந் தப்பி தலைமைத் தளபதியின் முகாமை அடைந்த பொழுது, போது விடிந்து விட்டது.* நிலையரக மீட்சிக்கு இவ் வொற்றர்கள் தான் சரியான வழி காட்ட வேண்டும்.

கேம்பல் நவம்பர் 13-ஆம் நாள் ஆலம்பாக்கை விட்டுப் புறப்பட்டார். நெரிசலான நகர வீதிகளில் புகுந்தால், புரட்சி வீரர்கள் பரங்கிப் படையைச் சிதறடித்து விடுவார்கள்.

---

*இத்துணிகரச் செயல்களுக்கு நல்ல சன்மானம் வழங்கப் பட்டது. புரட்சி முடிந்த பிறகு கவானுவிற்கு விக்டோரியா கிராஸ் விருதும், துணை ஆணையர் பதவியும், 20 ஆயிரம் ரூபாயும் கிடைத்தது] கனோஜிலாலுக்குத் தாசில்தார் பதவியும், 5,000. ரூபாயும், சில கிராமங்களும் அளிக்கப் பட்டன; அன்கார்டு ஒவ்வொரு உளவுப் பயணத்திற்கும் அவ்வப் போது பணம் பெற்றுக் கொண்டான். கடைசி பயணத்திற்கு மட்டும் அவனுக்கு 5,000 ரூபாய் கொடுக்கப் பட்டது. புரட்சிக்குப் பிறகு இவனுக்குச் சில கிராமங்களுந் தரப்பட்டன.

எனவே, நகரைச் சுற்றி கிழக்கே யுள்ள தில்குஷா தோட்டத்தின் வழியாக, வடக்கே திரும்பி, கோமதி நதிக் கரையின் வழியாகச் சிக்கந்தர் பாக்கை அடைந்து, அங்கிருந்து மோதி மஹால் வழியாக நிலையரகத்துள் நுழைய கேம்பல் முற்பட்டார். தலைமைத் தளபதியின் முன்னேற்றத்தைக் கணக்கிட்டு, நிலையரகத்திலிருந்த உட்ராமும் தம் தாக்குதலைத் தொடங்கினர். சிக்கந்தர் பாக்கில் ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் பரங்கியரின் மேல் விழுவதற்குக் காத்திருந்தனர். பேகம் கோத்தியை அடைவதற்குள் போர் கடுமையாகி விட்டது. 'மாரோ ஃபிரிங்கி' தீன்! தீன்! என்று கூச்சலிட்டுக் கொண்டே சிப்பாய்கள் அசுர வேகத்தில் தாக்கினர். கேம்பலின் பூத பீரங்கிகள் 2,000 புரட்சி வீரர்களைக் கொன்றன. எஞ்சிய சிப்பாய்கள் பின் வாங்கித் தங்களுடைய காவல் நிலையங்களின் கதவுகளை மூடினர். பரங்கிப் படையில் இருந்த சீக்கிய சிப்பாயொருவன் கேடயத்துடன் தன் கையை கதவிடுக்கில் விட்டுக் கதவுகள் இணையாதபடி தடுத்தான். கை குத்தப் பட்டது. அதை எடுத்துக் கொண்டு வலது கையை நுழைத்தான்......இம் முறை கை துண்டிக்கப் பட்டது...... அப்படியும் விடாமல் கதவைத் திறந்தான், அச்சீக்கிய வீரன்*! திமு திமு வென்று நுழைந்த பரங்கிப் படை நூற்றுக்கணக்கில் புரட்சி வீரர்களை மிதித்துக்கொன்று குவித்து முன்னேறியது!

நவம்பர் 17 ஆம் நாள் தலைமைத் தளபதி சர் காலின் கேம்பல், சில நூறு வீரர்களை இழந்து பெய்லிகாட் வழியாக உள்ளே நுழைந்ததும், நிலையரகம் மலர்ந்தது! மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டது! கேம்பல் நிறைய உணவும், மதுவும், பத்திரிகைகளும், கடிதங்களுங் கொண்டு வந்திருந்தார். வறண்ட தொண்டைகளுக்கு மதுவின் சுவை இனித்தது! பசித்த வயிறுகளுக்கு ரொட்டியின் சுவை கூடியது! ஏங்கிய நெஞ்சங்களுக்கு, உறவினரின் கடிதங்கள் இலக்கியமாயின! ஆனால், மகிழ்ச்சி அனைவரையும் தழுவது இல்லையே! அங்கே சோக விழிகள் பல இரத்தக் கண்ணீரை வடித்தன. கணவனை இழந்த விதவைகள், மக்களை இழந்த பெற்றோர்கள், அகதிகளான குழந்தைகள், இவர்களுக்கெல்லாம் லக்னோ மீண்டென்ன? அது மாண்டென்ன? தங்களுடைய இழப்பில் தான், ஆங்கில ஆட்சி இந்தியாவில் நீடிக்க வேண்டுமா? அது

---

*முகாரப் கான் என்ற அச்சீக்கிய வீரனின் துணிவைப் பாராட்டிப் பிற்காலத்தில் Order of Meirt விருது வழங்கப் பட்டது. Victoria Cross விருது வெள்ளையருக்கு மட்டுமே வழங்கப் படும்.

தேவையா? என்றெல்லாம் எண்ணியிருக்கும் அவ்விருண்ட இதயங்கள்! ஆங்கிலேயரும் மனிதர்கள் தானே! பிரிவும், இழப்பும் மனத்தைத் துவளச் செய்வது இயற்கைதானே!

இவ்வளவிற்கும் நடுவில், மாவீரன் ஹேவ்லாக் மரணப் படுக்கையிலிருந்தான்! ஓய்வில்லாப் போர்கள், ஒழிவில்லாத தடைகள் அவருடைய குன்றிய நலத்தை மேலும் நசித்தன. வயிற்றுப் போக்குங் காய்ச்சலும் அவரைச் சாய்த்து விட்டது. நிலையரகத்திற்குள் வந்ததும் கேம்பல் அவ்வீரரைக் காணச் சென்றார். அவருடை சேவையையும், தீரத்தையும் பாராட்டி இங்கிலாந்து அரசியும், மக்கட் சபையும், 'கமான்டர்ஷிப் ஆப் தி பாத்' (Commandership of the Bath) என்ற விருதையும், ஓய்வுப் பணத்தையும் குழப்பத்திற்குச் சில நாட்களுக்கு முன்புதான் அளித்தனர். நவம்பர் 24-ஆம் நாள் மேஜர் ஜெனரல் சர் ஹென்றி ஹேவ்லாக் Bart K. C. B., லக்னோவைக் காத்த நிம்மதியில் தம் கடமையை ஆற்றிவிட்டு உயிர் துறந்தார்! லக்னோவிற் கருகிலிருக்கும் ஆலம்பாக் வனத்தில் ஒரு மாமரத்தின் அடியில் அவர் புதைக்கப் பட்டார்.

நிலையரகத்தில் இனியும் தங்கியிருக்கத் தேவை யில்லை. புரட்சி வீரர்கள் எண்ணிக்கையில் குறைந்து, இதயந் தளர்ந்து, சோர்ந்து விட்டனர். இதைப் பயன் படுத்திக் கொண்டு எல்லோரையும் வெளி யேற்ற கேம்பல் முடிவு செய்தார். அன்றிரவு புரட்சி வீரர்களின் கண்களில் மண்ணைத் தூவ, கெய்சர்பாக் அரண்மனைப் பக்கம் போர் நடப்பதாகக் கேம்பல் போக்குக் காட்டினார். சிப்பாய்களின் கவனம் அங்கே திருப்பப் பட்டது. வேண்டுமென்றே, நிலையரக அறைகளில் விளக்குகளை எறிய விட்டு விட்டு, நள்ளிரவில் அனைவரும் பலத்தப் பாது காப்போடு வெளி யேறினர். இதை யறியாதப் புரட்சி வீரர்கள் சிலர் வெற்றிடத்தைத் தாக்கிக் கொண்டிருந்தனர். இருளில் ஓசை யின்றி அனைவரும் வெளி யேறிக் கொண்டிருந்த பொழுது, கேப்டன் வாட்டர்மேன் (Waterman) களைப்பில் எங்கோ ஒரு மூலையில் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவன் விழித்தபோது எங்கும் அமைதி குடிகொண்டிருந்தது. தன் தனிமையை உணர்ந்ததும், அவன் இரத்தமே உறைந்து விட்டது! மருண்டு இங்குமங்கும் ஓடினான்...... உடல் வியர்த்தது .....புரட்சி வீரர்கள் சூழ்ந்தால்?......பிடிப் பட்டால்?...நினைக்கவே நெஞ்சு நடுங்கியது. திடு திடுவென்று ஓடினான். எவ்வளவு நேரம்......எவ்வளவு தூரம் ஓடினான் என்று அவனுக்கே தெரியாது. வெகு தூரம் ஓடி, தன் கூட்

டத்தினரை யடைந்து, மூச்சிறைக்கக் கீழே விழுந்தான்...... அந்த இரவும், அமைதியும், தனிமையும், எதிரியும் தந்த அதிர்ச்சியில் சில நாட்கள் அவன் சித்தங் கலங்கியிருந்தது! காவல் வைக்கப் பட்டிருந்த அரச குடும்பத்தினரில் இருவர் முற்றுகையின் போதே இறந்து விட்டனர். துளசிப்பூர் மன்னன், போகும் வழியிலே இறந்தான். ஆலம்பாக் வனத்தில் ஜேம்ஸ் உட்ராமை ஒரு படையுடன் கேம்பல் நிறுத்தினான். 'லக்னோ நகர் முழுவதையும் கைபற்றி, அங்கே ஆங்கில ஆட்சியை மீண்டும் நிலை நாட்டுவதே எங்கள் குறிக்கோள்' என்பதைப் புரட்சி வீரர்களுக்கு அறிவிக்குஞ் செயலே அது. நிலையரக உயிர்களைக் காப்பாற்றி விட்ட அவருக்குக் காத்திருக்க நேரமில்லை. கான்பூர் என்ன வரயிற்றோ? பாதி வழியைக் கேம்பல் கடந்து கொண்டிருந்த போதே, பீரங்கி முழக்கம் எதிரொலித்தது! அப்படியானல், கான்பூர்...ஆம்! எதிர்பார்த்த அபாயம் சூழ்ந்து விட்டது. குவாலியர் புரட்சிப் படை கான்பூரைத் தாக்கிக் கொண்டு இருந்தது! கான்பூரின் விதியை அறியு முன்பே டெல்லியை மீட்டுத் திரும்புவோம்.

# 25. 'டெல்லி சலோ!'

[வெள்ளையர் துருப்புகள்—பட்லி - கி - பாய் என்ற இடத்தில் புரட்சிப் படையைத் தோற்கடித்தது—தளபதி பர்னுட்—பெஷாவரிலிருந்து உதவிப் படை—புரட்சிப் படை மறுதாக்குதல்—பிளாசி நூற்றாண்டு விழா—பெரெய்லி புரட்சிப் படை டெல்லிக்கு வருதல்—சிப்பாய்களின் அட்டூழியம்—தளபதி பர்னுட் மரணம்—தளபதி ரீட்—இந்துராவ் இல்லத்திற்கு அருகில் போர்—தளபதி ஆர்ச்டேல் வில்சன்—ஈத் பண்டிகை—இந்து-முஸ்லிம் மோதல்களை எதிர்பார்த்தல் — புரட்சிக்குத் துரோகம்—ஹக்கிம் அஷானுல்லா—ஆங்கிலேயருடன் இரகசியத் தொடர்பு—சிப்பாய்களின் ஆத்திரம்—வணிகர்கள் நடத்தை.]

அம்பாலாவிலிருந்தும், மீரட்டிலிருந்தும், டெல்லியை மீட்க வந்த ஆங்கிலேயத் துருப்புக்களை ஜூன் 8-ஆம் நாள் பட்லி கி சேரய் (Badli Ki Serai) என்ற இடத்தில் நிறுத்தி விட்டுப் பிற இடங்களில் நடந்த கிளர்ச்சிகளைக் கவனிக்க நாம் சென்றோம், அன்றே, அவ்விடத்திலேயே வெள்ளைப் படைகளுக்கும், புரட்சிப் படைகளுக்கும், ஒரு பெரும் போர் நடந்தது. எண்ணிக்கை அதிகமிருந்தும், பழக்கப் பட்ட இடமாக இருந்தும் புரட்சிப் படை ஆங்கிலேயரின் தேர்ந்த போர்த் திறனுக்கு முன்னே பணிந்து ஓடியது. 26 பீரங்கிகளை இழந்தாலும், புரட்சி வீரர்கள் மட்டுந் துணிவில் குறைந்து விடவில்லை. ஆனால், போருக்குத் துணிவு மட்டும் போதாது. அன்று மாலையே ஆங்கிலத் துருப்புக்கள் டெல்லிக்கு வடக்கேயிருந்த நீள் வரை மேட்டை ஆக்ரமித்தனர். இந்த மேட்டுக்கருகிலிருந்த இந்துராவ் இல்லம் என்று அழைக்கப் பட்ட கல் வீட்டையும் வெள்ளையர் பிடித்தனர்.

எல்லாம் ஆயிற்று; டெல்லியைத் தாக்க வேண்யடிது தானே? டெல்லி வீழ்ச்சி, புரட்சியைப் பிற இடங்களில் தலையெடுக்க விடாமல் செய்து விடும்; என்பதைத் தளபதியும் உணர்ந்தவர் தானே. பின்னேன் தயங்க வேண்டும். தளபதி

பர்னுட் தயங்கியதற்குக் காரணம் உண்டு. ஒருவேளை தாக்கு தல் தோல்வி யடைந்தால்......ஆங்கில வீரமும், துணிவும். திறமையும் சந்தேகத்திற்கு இடமானால்......அக் கணமே புரட்சிப் புதுத் தெம்பு பெற்று விடும். டெல்லியைத் தாக்கு வது கடின மல்ல. அதைக் கைப்பற்றி அங்கே நிலைப்பது தான் கடினம். இதைக் கருதித்தான் புது உதவிக்காகத் தள பதி பர்னுட் காத்திருந்தார்.

மறு நாள் புரட்சி வீரர்கள் இந்துராவ் இல்லத்தைத் தாக் கினர். நல்ல வேளையாக அன்று காலைதான் சுமார் 600 மைல் தொலைவில் இருந்த பெஷாவாரிலிருந்து ஒரு உதவிப் படை அங்கு வந்து சேர்ந்தது. அது வராமலிருந்தால் வெள்ளைப் படை சிதறடிக்கப் பட்டிருக்கும். அன்றிலிருந்து இரு தரப் படைகளுந் தொடர்ந்து போரிட்டன. புரட்சி வீரர்களுக்கு ஆற்றல்கள் பல இருந்தும், அவர்களை நெறிப் படுத்தத் தகுந்த தளபதிகள் இல்லாததால், வெற்றி காணப் பல அறிய சந்தர்ப் பங்களை இழந்தனர். ஜூன் 19 ஆம் நாள், ஆங்கிலேயரைச் சுற்றி வளைத்த புரட்சி வீரர்கள், முழு முயற்சி எடுத்து இருந் தால் வெற்றி பெற்றிருப்பார்கள். இதனால், ஆங்கில முகாமிற் கும், பஞ்சாபிற்கும் இருந்த தொடர்பையே அவர்கள் துண் டித்திருக்கலாம். ஜூன் 23ஆம் நாள், புரட்சிப் படை மீண் டுந் திரும்பி வந்து உக்கிரமாகத் தாக்கியது. அவர்களுடைய பீரங்கிகள் அனலைக் கக்கின......வாட்கள் சுழன்று மின்னின... பரங்கிப்படை கதி கலங்கியது! சிப்பாய்களின் வீரஞ் சொல்லி முடியாது. என்றுமில்லா இப்புது ஆவேசம் இன்று மட்டும் ஏன்? அன்று தான் பிளாசிப் போரின் 100-வது ஆண்டு நாள். கிளைவினால், வங்காளத்தில் பெறப் பட்ட அப் பிளாசி வெற்றியே பிரிட்டானிய இந்திய பேரரசின் அடிக் கல்! ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, அன்னிய ஆதிக்கம் முடி வடையுமென்று, ஆருடம் இருப்பதாகக் கடந்த பல ஆண்டுக ளாகப் பல இந்தியர் நம்பி வந்துள்ளனர். அந்நாளும் அன்று வந்தது. ஆவேசம் மூண்டது.........ஆருடத்தை மெய்ப்பிக்கக் கொடூரமாகப் போரிட்டனர், புரட்சி வீரர்கள். ஆனால், ஆருடம் பொய்த்து விட்டது! 400 க்கும் மேற்பட்ட சிப்பாய்களைக் கொன்று ஆங்கிலேயரே அன்றும் வெற்றி பெற்றனர்!

ஜூன் 24ம் நாள் நெவில் சேம்பர் லெயின், பஞ்சாப்பி லிருந்து டெல்லி வந்ததும், வெள்ளையர் முகாமில் புது உற் சாகம் பிறந்தது. அவருடன் பொறியியல் வல்லுநர் லெப்டி னென்ட் அலெக்ஸாண்டர் டெய்லரும் வந்திருந்ததால், டெல்லி

மேல் திடீர்த் தாக்குதல் திட்டம் மீண்டும் உருவானது. பஞ்சாபிலிருந்து உதவிப்படை சிறிது சிறிதாக வந்து ஜூன் மாத முடிவிற்குள், ஆங்கிலப் படையின் எண்ணிக்கை 6500 க்கும் மேலாயிற்று. இதற்கிடையில் புரட்சிப் படையின் எண்ணிக்கையும் அதிகமாயிற்று. ஜூன் மாதத் துவக்கத்தில் பெரெய்லி (Barielly) யிலிருந்து பக்த்கான் தலைமையில் புரட்சி வீரர்கள் டெல்லியை அடைந்தனர். அவன் தன் வீரர்களுக்கு ஆறு மாதச் சம்பளத்தை முன் பணமாகக் கொடுத்திருந்த தால், மன்னரும் அவன் சேவையை ஏற்றார். இளவரசன் மிர்சா மோகலுக்குப் பதில் பக்த்கான் புரட்சிப் படையின் தளபதியாக நியமிக்கப் பட்டான்.

டெல்லி பாதுஷாவிற்குப் பண முடையைத் தவிரப் பிற இன்னல்களும் பெருகின. ஜூன் 23-ஆம் நாள் ஏற்பட்ட தோல்வியைக் கண்ட டெல்லி வணிகர்கள், பீதியடைந்து கடைகளை மூடினர். இதனால், வீரர்களின் நடத்தை மிகவும் மோசமாயிற்று. அதிக விலைக்குப் பொருட்கள் விற்கப்பட்ட ஒரு கடையைச் சிப்பாய்கள் சூறையாடினர்; பணங் கொடுக்காமலேயே பல கடைகளில் நுழைந்து பண்டங்களைப் பறித்தனர். சிப்பாய்களின் நடத்தையைத் தாங்க முடியாத வணிகர்களும், மக்களும் மன்னருக்கு விண்ணப்பஞ் செய்தனர். அவர்களைக் கட்டுப் படுத்த மன்னராலும் இயல வில்லை. அவர்களின் வருகையால், தம் டெல்லி மக்களுக்கு நேர்ந்த அல்லல்களை நினைத்து வருந்ினார். அரச குல இளவரசர்கள் சிலர், சுய விருப்பு வெறுப்புகளுக்காகப் பலமுறை இழிவாக நடந்ததால், மன்னர் அவர்களின் விருதுகளைப் பறித்தார். சிப்பாய்களின் முறை கேடான நடத்தைக்குக் கிராமப்புற மக்களும் இலக்கானார்கள். அவர்களின் தானியங்கள் பறிமுதல் செய்யப் பட்டன; பொருட்கள் களவாடப் பட்டன. இப் புரட்சிக் காற்றைப் பயன் படுத்திக் குஜார் இனத்தவரும், நாட்டுப் புறங்களில் கொள்ளையடித்தனர். ஒரு புரட்சியில் கட்டுப் பாடில்லாச் செயல்களும், சுயநல சூழ்ச்சிகளும் அவ்வவ்போது தோன்றுவது வழக்கமே. டெல்லியிலுஞ் சுற்றுப் புறத்திலும் அமைதியையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட மன்னர் முயற்சி எடுத்தார். ஆனால், பகதூர்ஷா பாபர் அல்லவே! மேலும் ஜூன் 23 ஆம் நாள் போரில் புரட்சிப் படை வெற்றி பெற்றிருந்தால், அமைதியை நிலைநாட்டுவது எளிதாக இருந்திருக்கும். தோல்வியடைந்த காரணத்தால், நகருக்குள் ஒருவரையொருவர் சந்தேகிக்க ஆரம்பித்தனர். யார் ஆங்கிலேயரின்

நண்பன் என்பது, எவருக்குமே தெரிய வில்லை. ஒவ்வொரு வரும் தத்தம் பாது காப்பின்மையை உணரத் தொடங்கி ஞர்கள்!

டெல்லியை விட ஆங்கில முகாமில் ஓரளவு நல்ல சூழ்நிலை இருந்து வந்தது. என்ருலும், அங்கும் இடர்பாடுகள் இல்லா மல் இல்லை. டெல்லிக்குள் செல்லும் புரட்சி வீரர்களின் எண் ணிக்கை அதிகமாக, அதிகமாக வெள்ளையர்கள் கலங்கிஞர் கள். புரட்சிப் பல இடங்களிலும் பரவி, ஆங்கில ஆட்சிச் சாய்க்கப் படுகின்றது; ஆங்கிலேயர் கொல்லப் படுகிருர்கள் என்ற செய்தி தங்கட்கு வர வர நடுங்கிஞர்கள். உடனிருக் குஞ் சுதேசி சிப்பாய்கள், அவ்வப்போது புரியும் துரோகச் செயல்களைக் கண்டு அஞ்சிஞர்கள். கான்பூரிலிருந்து வீலர் பெரும்படையுடன் உதவிக்கு வருவார் என்று நம்பி, ஆறுத லடைந்தார்கள். 'ஆங்கிலோ சாக் சானியர்கள் (Anglo-Saxon) ஆசியர்களை எந்த நிலையிலும் தோற்கடிக்கலாம்' என்ற கருத் துப் பொய் என்பதைத் தளபதி பர்ஞட் உணர்ந்திருந்தார். அசட்டுத் துணிவில் இந்தியாவையும், மானத்தையும் இழக்க அவர் தயாராயில்லை. முதிர்ந்த வயதில் கொடூரமான வெப் பத்தில் இரவும், பகலுமாக உழைத்த வேகத்தால் தம் உள்ளந் தளர்ச்சி யடைந்தது. ஜூலை 5-ஆம் நாள் வாந்திபேதி நோயால் தாக்குண்டு பர்ஞட் உயிர் துறந்தார். அச்சத்தில் தற்கொலை செய்து கொண்டார் என்றுங் கூட அரசவையில் பேசப் பட் டது. அவருடைய பதவிக்கு ஜெனரல் ரீட் (General Read) வந்தார். ஆஞல், நெருக்கடி நிலையைச் சமாளிக்கும் ஆற்றல் அவருக்கும் இல்லை!

ஜூலை 9-ஆம் நாளும், 14-ஆம் நாளும் புரட்சி வீரர்கள் பயங்கரத் தாக்குதலை நடத்திஞர்கள். இந்துராவ் இல்லம் குண்டுகளால் துளைக்கப் பட்டது. வெள்ளைப் படையிலுள்ள சுதேசி வீரர்களைத் தங்கள் பக்கஞ் சேரும்படிப் புரட்சி வீரர்கள் தூண்டிஞர்கள். எங்கே சேர்ந்து விடுவார்களோ? என்றஞ் சிய வெள்ளையர்கள், சுதேசியின் மீது நம்பிக்கை இழந்தனர். இந்த ஆத்திரத்தில் நன்றி மறந்து மிருகத்தனமாக ஒன்று மறி யாதத் தங்களுடைய சுதேசிப் பணியாட்களையே பரங்கியரின் அதிகாரிகள் கொன்றனர்! ஜூலை 16ஆம் நாள் ஜெனரல் ரீட் பதவியிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டார். மூன்று படைத் தளபதிகளின் தொடர்ந்த இழப்பு, எந்தப் படைக் கும் பேரிடியாகத் தான் இருக்கும். இருப்பினும், ஆங்கிலே யர்கள் மனந் தளர வில்லை. ஆர்ச்டேல் வில்சன் (Archdale

Wilson) புதிய தளபதியானதும், திடீர் தாக்குதல் ஒத்தி வைக்கப் பட்டது. கான்பூரில், பாது காப்பிடத்தில் வீலர் முடக்கப் பட்டார். என்ற செய்தி அப்பொழுது – தான், டெல்லிக்கு எட்டியது. வேறு உதவி புதிதாக வந்தால் – தான், ஒரு பெருந் தாக்குதல் முறையாக நடத்தலாம் என்று ஏற்கப் பட்டது.

டெல்லிக்குள் நிலைமை மேலும் சீர்குலைந்தது. போர் காலக் குழு உறுப்பினர்களுக்கும், படை அதிகாரிகளுக்கும் உறவு சரியில்லை; புரட்சிப் படைக்குள்ளே ஒற்றுமை யில்லை; கருவூலத்தில் பணமும் இல்லை. கூலி கிடைக்கத் தாமதம் ஆனதால், சிப்பாய்கள் கடைகளைச் சூரை யிட்டனர். இந்த நிதி நிலைமையைச் சீராக்க, மன்னர் வணிகர்களிடங் கடன் வாங்க முயற்சிச் செய்தார். பல டெல்லி வணிகர்கள் மறைமுகமாக ஆங்கிலேயருக்குக் கடன் கொடுத்தும், டெல்லி மன்னரையும் அவ்வப் பொழுது திருப்தி படுத்தினர்கள். இந்தச் சூழ் நிலையில், வரப் போகும் 'ஈத்' (Id) விழா இந்து – முஸ்லிம் கலவரத்தை உருவாக்கு மென்று வேறு எதிர் பார்க்கப் பட்டது. வழக்கம் போலவே ஜும்மா மசூதியில் தங்களின் 'ஈத்' விழாவிற்கு ஒரு பசுவைக் கொல்ல முஸ்லிம்கள் ஏற்பாடு செய்தனர். டெல்லியில் இந்து சிப்பாய்கள் அதிகமிருந்ததால் அவர்களைப் பகைத்துக் கொள்ள மன்னர் விரும்ப வில்லை. மருத்துவர் அஷானுல்லாவோ, நீண்ட நாள் நிலவி வந்துள்ள இப் பசுக் கொலையை நிறுத்துவதற்கு விரும்ப வில்லை. மன்னர் முடிவில், 'ஈத் விழாவில் எவரும் பசுவைக் கொல்லக் கூடாது; இதை எந்த முஸ்லிமாவது மீறினல், அவன் பீரங்கியால் சுடப் படுவான்'. என்று அறிவித்தார். இந்து, முஸ்லிம் கலவரத்தால் டெல்லி பிளவு படும்; அதைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று காத்திருந்த கிறித்துவர்கள் ஏமாந்தனர். ஆகஸ்ட் 1 முதல் நாள் எந்தக் கலகமுமின்றி 'ஈத்' விழா நடந்தேறியது. நீண்ட காலப் பூசலை மறந்து இந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டு வெள்ளையரைக் கடுமையாக எதிர்த்தனர். புதிதாகப் புரட்சி வீரர்கள் வந்து சேர்ந்ததால், புரட்சி வீரர்களின் தாக்குதல் பலத்தது. ஆனல், கூடுதல் எண்ணிக்கைப் பலனை அளிப்பதற்குப் பதில் குழப்பத்தையே அதிகரித்தது. இம் முறையும் பலத்த சேதத்துடன் புரட்சிப் படை தோற்றுப் பின் வாங்கியது. தங்களின் மத்தியில் சில துரோகிகள் இருப்பதால் தான், தங்களுக்குத் தோல்வி நேருகிறது; என்று சிப்பாய்கள் சந்தேகித்தனர். இச் சந்தேகம் பொய்யான தன்று. அப்படி யென்ருல், யார் அந்தத் துரோகி?

முதல் துரோகி மருத்துவர் அஷானுல்லா தான்! தொடக்கத்திலிருந்தே அவர் புரட்சியை ஆதரிக்காததால், சிப்பாய்களுஞ் சந்தேகத்துடனேயே அவரைப் பார்த்து வந்தனர். அன்று வெடி மருந்துக் கிடங்கிற்கு அவர் சென்று வந்த சிறிது நேரத்தில் அது வெடித்தது... ஆங்கிலேயருக்கு எழுதிய கடிதங்கள் சில சிப்பாய்களிடம் அன்று சிக்கி விட்டன...பரங்கியரின் ஒற்றர்கள் டெல்லியில் நடுமாடுவதே இவருடைய உதவியால்தான் இருக்கக் கூடும்...சிப்பாய்களின் சந்தேகத்திற்கும், சீற்றத்திற்குஞ் சிக்காமல் அவரைப் பாதாள அறை ஒன்றில் மன்னர் மறைத்து வைத்திருந்தார். மருத்துவர் மட்டு மல்ல, மன்னரும் ஒரு துரோகி தான்! ஜுன் மாதத்திலேயே வெள்ளையருடன் இணக்கமாவதற்கு முயற்சி செய்தார்; என்று நம்பப் பட்டது. மன்னரால் தங்களுக்குக் குறிப்பிடத் தகுந்த உதவி கிடைக்காது, என்று வெள்ளையர் கருதியதால், அவ் விணக்கம் ஏற்படவில்லை போலும். துரோகிகளின் முதலிடம் அரசி ஜுனத் மஹாலுக்குத் தான் கிட்டும். ஏனெனில்? புரட்சியால் நேரடியாகப் பாதிக்கப் பட்டவள் அவள் தான். தன் மகன் ஜாவன் பக்த்தை வாரிசாக்க, வெள்ளை யதிகாரிகளை வயப் படுத்தும் அவளுடைய திட்டங்கள் சிதைந்தன. பிற மொகலாய இளவரசர்களின் நிலை வேறு. மிர்ஸா மொகல் போன்றவர்களுக்குப் புரட்சியில் சேர்ந்து வெற்றி பெற்றால், புகழும், வாரிசாகுஞ் சந்தர்ப்பமுங் கிட்டலாம். புரட்சித் தோல்வி யடைந்தால், இழப்பதற்கு அவர்களிடஞ் சொந்தமாக எதுவு மில்லை. புரட்சி வெற்றி யடைந்தால், தன் மகன் எந்த நன்மையும் பெற மாட்டான்; என்று சரியாகக் கணித்த அரசி, ஜுனத் மஹால் ஆங்கிலேயருக்கு உறவுக் கரம் நீட்டியதில் வியப்பில்லை. அரசனும், அரசியும் எடுத்த முயற்சிகள் கல்கத்தா வரை எட்டியது. அரச குடும்பத்துடன் எவ்வகையான உடன்பாட்டையும்? எந்த அதிகாரியும்? தற்சமயம் மேற்க் கொள்ளக் கூடாது, என்று தலைமை – ஆளுநர் அறிவித்து விட்டார். இணக்கத்திற்கும் வழி யில்லை......எதிர்க்கவுஞ் சக்தி யில்லை! நாளடைவில் பரங்கியர்களை முறியடிக்க முடியாத புரட்சிப் படையின் ஆற்றலில், மன்னர் நம்பிக்கை இழந்தார். மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் நிலைத்த மொகலாயப் பேரரசை, மூன்றே மாதங்களில் இப்படி அனாதை ஆக்கி விட்டார்களே; என்று புரட்சி வீரர்களின் மேல் மன்னருக்கு வெறுப்பு வேறு தோன்றியது. மருத்துவர் அஷானுல்லாவைச் சிப்பாய்கள் கைது செய்த போது, அதைக் கண்டித்துத் தானும் தற்கொலை செய்து கொள்ளுவதாக மன்னர் அச் சுறுத்தினர்; சிப்பாய்களிடஞ் சிக்கி மக்கள் சீரழிவதைக் கண்டு தம் அரச பதவியைத்

துறக்கப் போவதாகக் கூறினர். இத் தொல்லைகளை விட்டு வெளியேறி மெக்காவிற்குச் சென்றுவிடவுங் கூட திட்ட மிட்டார். இளவரசர்களால் ஒதுக்கப்பட்டு, வீரர்களால் கேவலப் படுத்தப்பட்டு, வாளெடுக்கவுந் துணிவின்றி மக்களை வழிப் படுத்தவும் வகை யின்றி, அம் மொகலாயர் குழப்பத்தில் மூழ் கினர்; கவிதையில்......புலம்பினர்; சோகத்தில்......

"Clothed in my burial sheet, I shall spend
my remaining days in the seclusion of some garden."

மன்னனால், நடந்த பாதையில் திரும்ப முடியாது! விழுங்கி யதைத் துப்ப முடியாது!'

துரோகிகளில் வணிகர்கள் ஒரு ரகம். நீள் வரை மேட்டி லிருந்த வெள்ளை முகாமிற்குத் தேவையான பலவற்றை டெல்லி வணிகர்களே விற்பனை செய்தனர். பீர், பிராந்தி, சோடா, ஆகியவற்றை 10 மடங்கு அதிகவிலைக்கு விற்றுப் பொருளீட் டினர். ஊறுக்குள் சிப்பாய்களின் கொள்ளைக்குத் தப்பிச் சென்று வெள்ளை வீரர்களைக் கொள்ளையடித்தனர்! சோரம் போன மக்களுக்கு ஏது வீரதந்திரம்? குண்டடி பட்டுத் தன் நாட்டான் செத்துவிழ, கொன்ற பரங்கிக்கு பீர் தருகிறான். ஒரு இந்தியன்; நீயே எங்கள் மன்னனென்று உயிர் கொடுக்க புரட்சி வீரன் ஓடிவருகிறான். இரகசிய தூதனுப்பி அன்னி யனுடன் இணைவதற்கு அவனைத் தேடிச் செல்கிறார்; அந்தப் பகதூர் ஷா! என்ன மக்கள்? என்ன மன்னன்? சுழலின் வேகத்தில் தவறிழைத்துப் பலியான ஃபிரெஞ்ச் மன்னன் 16 ஆம் லூயி எவ்வளவோ மேல்!

# 26. எரிமலை நிக்கல்சன் !

[ஜான் நிக்கல்சன் டெல்லிக்கு வருதல் – டெல்லியின் நிலச் சீர்குலைவு – பஞ்சாபில் இருந்து 'முற்றுகைத் தொடரின்' வருகை – முற்றுகைக்கான ஏற்பாடுகள் – டெல்லி மதில்கள் பிளக்கப்படல் – தளபதி வில்சனின் தடுமாற்றம் – டெல்லிக்குள் போர் – நிக்கல்சன் மரணம்.]

ஆகஸ்ட் 14 ம் நாள் டெல்லியைத் தாக்க ஒரு எரிமலை மனித உருவில் வந்தது! அதுதான் பிரிகேடியர் ஜெனரல் ஜான் நிக்கல்சன்! (Jhon Nickolsun) வெறியும், துடிப்பும் கொண்ட மணமாகாத இளைஞன், கொடூரமும், துணிவும் ஒருங்கே அமைந்தவன்! இந்திய நாட்டின்மேல் வெறுப்பும், கிறித்துவ மதத்தின்மேல் வெறியுங் கொண்ட மூர்க்கன்! சில ஆண்டுகளாக, வடமேற்கு, ராவல்பிண்டி பகுதியில் பயங்கரச் சூறுவளியாய்ச் சுற்றி வந்தவன். அவனுடைய அஞ்சா நெஞ்சத்தையும், அசுர சக்தியையும், அற்புதமாய் போரிடும் ஆற்றலையுங் கண்ட எல்லைப்புற முஸ்லிம் மூர்க்கர்களே கிடுகிடுத்தனர்! அவனைப் போன்ற ஒரு மாவீரனை அவர்கள் அதுவரை கண்டதே இல்லை! அவனுடைய குதிரையின் குளம்படிகள் பட்ட அப்பள்ளத் தாக்குகள் பாலையாயின! எண்ணிச் சில ஆண்டுகளில் அவன் எல்லைப்புற எதிர்ப்பின் முதுகெலும்பை ஒடித்து விட்டான். நாளடைவில் அம் மக்கள் நிக்கல்சனை வீர வணக்கத்திற் குறியவனுக்கி விட்டார்கள். நிக்கல்சன்......... நிக்கல்சன் என்று வடமேற்கே மலைகள் எதிரொலித்தன! அந்த நிக்கல்சன் தான் 2500 வீரர்களுடனும், பீரங்கிகளுடனும் வாயு வேகத்தில் பயணம் செய்து டெல்லிக்கு வந்து சேர்ந்தான். வெள்ளையரின் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?

நிக்கல்சன் உடனடித் தாக்குதலுக்குத் துணிந்தவனே. எனினும், முற்றுகைத் தொடரின் உதவியுடன்தான் தாக்குதல் முழுமையான வெற்றியைத் தரும். தளபதி வில்சன்

இன்னுந் தடுமாற்றத்திலிருந்தார். பஞ்சாபிலிருந்து, சீக்கியர்களின் முழு உதவி இன்னுங் கிட்டவில்லை. மகிஷா சூரனின் ரத்தத் துளிகளைப் போலவே, மீரட்டைத் தொடர்ந்து எங்கும் புரட்சித் தோன்றி கொண்டே இருக்கின்றது! வெள்ளை வீரர்களிலிருந்து இந்தியா மெல்ல நழுவிக் கொண்டே இருக்கிறது. 9000 வீரர்களைக் கொண்டு, டெல்லிக்குள் இருக்கும் 40000 வீரர்களை எதிர்த்து வெற்றி பெற முடியுமா? புரட்சி படையில், பரங்கியர்க்கு நண்பர்கள் இருந்ததைப் போலவே, வெள்ளை முகாமிலும் புரட்சியின் நண்பர்களும் இருக்கின்றனர். ஒரு பீரங்கியை இயங்காமல் செய்ய முற்பட்டிருந்ததாக இரு சிப்பாய்கள் தூக்கிலிடப் பட்டனர். நகரின் நிலை மட்டும் என்ன? அங்கும் மன்னன் என்னென்னவோ முயற்சிகள் எடுத்தும் பலனில்லை. செல்வந்தர்களிடம் கடன் எழுப்பியதும், எதிர் பார்த்த பலனைத் தரவில்லை; இதனால், பலவந்தமாக நன்கொடை பறிக்கப் பட்டது; வரிப் பளுவுங் கூடியது. பல சீமான்கள் அதிகாரிகளுக்குக் கையூட்டு அளித்து நன்கொடையி லிருந்து தப்பினர்! யார்? யாரிடம்? நன்கொடை வசூலிப்பது என்ற முறையே கிடையாது. புரட்சி நீதி மன்றம், சிப்பாய்கள், இளவரசர்கள், தளபதிகள் ஆகியோர் அனைவருந் தனித் தனியாக நிதி கேட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்தனர். முடிவில் புரட்சி நீதி மன்றம் மட்டுமே, நிதி வசூலிக்கலாம், என்று உத்திரவிடப் பட்டது. சலீம்கர் கோட்டைக் கருகில் புதையல் இருப்பதாக ஒரு வதந்தி இருந்ததால், சில சிப்பாய்கள் இரவும், பகலும் அங்கேப் பல இடங்களைத் தோண்டிக் கொண்டிருந்தனர். பொதுவாகப் புரட்சியின் வெற்றிக்கு என்னென்ன தீய சக்திகள் கூடாதோ, அவை யெல்லாம் டெல்லியில் இருந்தன; என்னென்ன தேவையோ? அவை யெல்லாங் கிடைக்க வில்லை. குண்டுகள் செய்ய கரு மருந்துங் கிடைக்க வில்லை; உணவுப் பொருட்கள் சரியாகக் கிடைக்க வில்லை; சாக்குப் பைகள் கிடைக்க வில்லை; கூடாரந் தைக்க ஆள் இல்லை, வாகனங்களை இழுக்க எருமைகள் இல்லை; நகருக்குள் அனைத்தும் உண்டென்றாலும் எதையுஞ் சேகரிக்கும் ஆற்றலும், அமைப்பும் புரட்சிக் காரர்களிடம் இல்லை. ஏனெனில்? புரட்சிப் படையிடம் ஒழுங்கும் இல்லை; ஒற்றுமையும் இல்லை!

இங்கிலையில், முற்றுகைத் தொடர் வெள்ளைமுகாமிற்கு வந்து கொண்டிருக்கிறது. அது வந்து சேர்ந்தால், மிக எளிதில் டெல்லியை வெள்ளையன் பிடித்து விடுவான்! அதைத் தடுத்துக் கைப்பற்ற ஆகஸ்ட் 24ம் நாள் புரட்சி வீரர்கள் விரைந்தனர். நிக்கல்சன் அச் சிப்பாய்களை விரட்டி அனுப்

பினுன் 30 பீரங்கிகளையும், வண்டிகளையும் இழுத்துக் கொண்டு பல யானைகளும், வெடிமருந்து, தளவாடங்கள் ஆகியவற்றைச் சுமந்து கொண்டு பல ஒட்டகங்களும், பல குதிரை வீரர்களும் அடங்கிய, அம் முற்றுகைத் தொடர், பாதுகாப்புடன் செப்டம்பர் 3ம் நாள் வெள்ளை முகாமை வந்தடைந்தது.

முற்றுகைத் தொடர் வந்து சேர்ந்ததும், ஆங்கிலேயர்கள் சுறுசுறுப்பாக இயங்கினர். டெல்லியின் பிறமதில்களை உடைத்துப் பிளப்பதற்கேற்ப. பீரங்கித் தளங்கள் கட்டப்பட்டன. இக்கட்டிடப் பணிகளுக்கெல்லாம், இந்தியக் கூலிகளே பயன் பட்டனர். இதைத் தடுப்பதற்க்காகப் புற மதில்களில் மறைந்து நின்று புரட்சி வீரர்கள் குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்தனர். வெடிக்காத குண்டுகளைப் பொறுக்கி எடுத்து. வெள்ளையர்களுக்குக் கொடுத்தால் காசு கிடைக்கும். பசியில் தேசியத்தை யறியாத அப் பாமர மக்கள் உயிரைப் பொருட் படுத்தாமல் கட்டிட வேலையிலும், குண்டு பொறுக்கு வதிலும் உயிரிழந்தனர்! சுதந்திரப் பசியால் ஒரு இந்தியன் சுட, வயிற்றுப் பசியால் மற்ருெரு இந்தியன் மாய்கிருன்! ஆங்கிலேயர் துறக்கும் ஒவ்வொரு உயிரும், பேராசை உரு வாக்கும் செங்கல் ஆகிறது! ஆனுல், இந்திய உயிரோ!.....

பீரங்கித் தளங்கள் கட்டி முடிக்கப் பட்டதும், தாக்குதல் தீவிரமாகியது. இடை விடாத குண்டு வீச்சில், நகரமே அதிர்ந் தது. செப்டம்பர் 13ம் நாள் புறமதில் இரண்டு இடங்களில் பிளவுண்டது. அதற்குள் நுழைவது எளிதல்ல, திட்ட மிட்டுத் தீவிரமாகத் தாக்கி, மொத்தமாகப் பாய்ந்தால்தான் முடியும். நிக்கல்சனுக்கும், ஏற்ற தருணம் வந்து விட்டது! மறு நாள் தாக்குதலுக்காக வெள்ளைப் படைகள் நான்காகப் பிரிக்கப்பட்டன, ஒவ்வொரு படைத் தலைவனுக்கும் டெல்லி நகர வரைபட மொன்றுங் கொடுக்கப் பட்டது. அன்றிரவு வெள்ளை முகாம் சுறு சுறுப்பாக இருந்தது. அதிகாரிகளின் கூடாரங்களில் இரவு முழுவதும் விளக்குகள் எரிந்துக் கொண் டிருந்தன. அவர்கள் மெதுவான குரலில் விவாதித்துக் கொண் டிருந்தனர். தளபதி வில்சன் தடுமாற்றம் பலருக்கும் ஆத்திர மூட்டியது. ஒரு வழியாக எல்லாம் முடிந்து விட்டது. வீரர்கள் மதில்களின் மேல் ஏறித் தாவுவது எப்படி என்று? ஒருவருக் கொருவர் விளக்கங் கூறிக் கொண்டனர். நள்ளிரவில் ஊது குழல் ஒலித்ததும், வீரர்கள் வரிசையில் நின்றனர், தாக்குதல் ஆணை, மங்கிய விளக்கொளியில் அவர்களுக்குப் படிக்கப்பட் டது. 'தாக்குதலின் போது எந்த அதிகாரியோ, வீரனே காய

மடைந்து வீழ்ந்தால், அவனுக்கு உதவி செய்ய யாரும் போகக் கூடாது. ஏனெனில்? இடைவெளி கொடுக்கவோ, பதிலான் அமர்த்தவோ நம்மால் இயலாது, தாக்குதல் வெற்றியடைந்ததும், காயம் பட்டவர்களுக்கு உதவிகள் விரைந்து அனுப்பப்படும். இல்லையேல் அவர்கள் எதையுந் தாங்கிக் கொள்ள வெண்டியதுதான். புரட்சிக்காரர்கள் எவரையுங் கைது செய்யக் கூடாது. ஏனெனில்? அவர்களுக்குக் காவலிருக்க நம்மிடம் போதிய வீரர்கள் இல்லை. அத்துடன் எந்தப் பெண்ணையும், குழந்தைகளையுந் தாக்கக் கூடாது'. இந்த ஆணை படிக்கப் பட்டதும், எல்லோருந் தங்கள் வாட்களின் மேல் உறுதி கூறினர். ஒரே தாக்குதல்! ஒரே அடி! எத்தனை பேர் இறப்பினும் சரி! ஊருக்குள் நுழைந்து விட வேண்டும்! இந்த வைராக்கியம் வெள்ளை முகாமிலிருந்த அனைவரையும் பற்றி யிருந்தது. ஊருக்குள் சிப்பாய்கள் தூங்கிக் கொண்டிருக்க வில்லை. தீவட்டிகளை ஏந்தி, இரவெல்லாம் புறமதில்களில் தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்தனர். மதில் பிளவுகளில் மணல் மூட்டைகளை வைத்து அடைத்தனர். நுழை வாயில்களில் சிப்பாய்கள் நிறுத்தப் பட்டனர். ஈட்டிகளையும், வாட்களையுந் துப்பாக்கிகளையும் ஏந்திய புரட்சி வீரர்கள் உள்ளே நுழையும் பரங்கியரை வெட்டிச் சாய்க்க, சுட்டுத் தள்ள தயாராக காத்திருந்தனர்! இதற்குள் விடிந்து விட்டது!

நகரின் வடக்கே, நீள்வரை மேட்டில், வெள்ளைத் துருப்புகள் நான்காகப் பிரிக்கப்பட்டு நிற்கின்றன. அந்த ஆழ்ந்த அமைதியை, குதிரைகளின் கனைப்பு அவ்வப்பொழுது கலைத்தது. நிக்கல்சன் தன் அணியின் முன்னே கம்பீரமாய் நின்றான். அவனுடைய வலது கரம் உயர்ந்து, தாழ்ந்தது! சா...ர்...ஜ் கூச்சலிட்டுக் கொண்டே துருப்புக்கள் புறமதிலை நோக்கி ஓடின. காத்திருந்த சிப்பாய்கள், ஒவ்வொரு மூலையிலிருந்தும், பீரங்கியால் சுட்டனர். மதில் பிளவுகளில் பயங்கரப் போர் நடந்தது. ஏணிகளைச் சாய்த்து ஆங்கில வீரர்கள் ஏற, ஏற புரட்சி வீரர்கள் அவர்களைச் சுட்டுத் தள்ளினார்கள். காஷ்மீர் வாயிலில், பிளவு ஏற்படாததால், பொறியியல் வீரர்கள், ஒரு வெடிப்பை உண்டாக்க வேண்டியதாயிற்று. விடாது தெறிக்குங் குண்டுகளிடையே வெடி மருந்து வைத்துப் பிளவு உண்டாக்கியதில், பல வீரர்கள் உயிரிழந்தனர். அவர்களின் துணிவு பலரையும் வியப்பிலாழ்த்தியது. நூற்றுக் கணக்கான வீரர்களை இழந்து, வெள்ளைத் துருப்புகள் காஷ்மீர் வாயிலுக்குள் நுழைந்து விட்டன! காஷ்மீர் வாயிலைக் கடந்ததும், உள்ளே திறந்த வெளியை ஒட்டி ஒரு மாதா கோயில், ஒரு மசூதி, ஒரு

இந்து கோயில் ஆகியவைகள் இருந்தன. பல ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலப் படையைச் சார்ந்த ஜேம்ஸ் ஸ்கின்னர் (James Skinner) என்ற வீரனொருவன் கட்டியவை தான் இம் மூன்றும். அந்தக் கிறுத்துவனின் அன்னை இந்து; மனைவி முஸ்லிம்! ஒரு போரில் பலத்த காயமடைந்த அவன், தான் பிழைத்தெழுந்தால் ஒரு மாதா ஆலயமும், ஒரு மசூதியும், ஒரு இந்து



ஜான் நிக்கல்சன்

கோயிலுங் கட்டுவதாக நேர்ந்திருந்தான். அக் கட்டிடங்களிலிருந்த திறந்த வெளியைப் பயன்படுத்திக் கட்டுக் குலைந்த துருப்புகள் சீராக்கப்பட்டன. லாகூர் வாயிலை, அவ்வளவு எளிதில் வெள்ளையர்களால் கடக்க முடியவில்லை. மேஜர் ரீட், திக்கு முக்காடி விட்டார். வாயிலை நெருங்க, நெருங்க புரட்சி வீரர்கள் படு பயங்கரமாகத் தாக்கினார்கள். அவர்கள் கை

யில் கிடைத்ததெல்லாம் ஆயுதங்கள்தான்! அந்த நெருங்கிய கை கலப்பில், புரட்சி வீரர்கள் காட்டிய துணிவு கொஞ்ச நஞ்சமன்று. இறக்கிறோம்......எண்ணிக்கையில் குறைகிறோம் என்ற எண்ணமெல்லாம், அன்று அவர்களிடம் இல்லை. பரங்கியரை ஒரு கை பார்த்து விடவே முடிவு கட்டினர் போலும்! லாகூர் வாயிலில் பல நூறு வீரர்களைப் பலி கொடுத்தே வெள்ளைத் துருப்புகள் உள்ளே வர முடிந்தது! நகரின் வடக்கே ஒரு சிறு பகுதி வெள்ளையரின் வசமா யிற்று. லாகூர் வாயிலிலிருந்துதான் 'சாந்தினி சௌக்' என்ற பிரதான கடைவீதித் தொடங்குகிறது. அதன் மறு கோடியில் செங்கோட்டை இருக்கிறது. லாகூர் வாயிலைக் கடந்த பின் வெள்ளைத் துருப்புகள் ஒரு குறுகிய வீதியில் மாட்டிக் கொண் டன. புறமதிலை ஒட்டிச் சென்ற, அகலம் குறைந்த அந்தச் சந்தின்ஒரு புறமிருந்த வீடுகளில், புரட்சி வீரர்கள் பரங்கி யரைத்தாக்க தயாராயிருந்தனர். டெல்லி மீட்சியிலேயே ஒரு பயங்கரப் போர், இங்கேதான் நடந்தது. இத்தகைய தாக்கு தலை வெள்ளையர்கள் எதிர் பார்க்கவே இல்லை. வெள்ளைப் படை உள்ளே நுழைந்ததும் சிப்பாய்கள் புலியெனப் பாய்ந் தார்கள்; தீன்! தீன்! ஹர ஹர மஹா தேவா! மாரோ: பீரிங்கி! சிப்பாய்களின் போர் ஒலி வானைப் பிளந்தது! வெள்ளையர் படை கதி கலங்கியது. ஒரு நூற்றாண்டின் கணக்கு அங்கே சரிபார்க் கப் பட்டது. எரி மலையாய்ப் பொங்கி, நூற்றுக் கணக்கான வெள்ளையர்களைச் சுட்டுக் குவித்தனர். நிக்கல்சனின் தலையீட் டில், நிலைமை சிறிது மாறியது. அவனுடைய தோற்றமும், குரலும் போர்க் களத்தில் துல்லியமாய் வெளிப்பட்டன. சந் தின் ஓரத்திலிருந்து ஆணையிட்டுக் கொண்டிருந்த நிக்கல்சனை, எங்கிருந்தோ வந்த புரட்சிக் குண்டு சாய்த்து வீழ்த்தியது. 37 வயதில், அச் சூரவளி ஓய்ந்தது!*

அறுபத்தாறு அதிகாரிகளையும், 1100 வீரர்களையும் ஒரே நாளில் இழந்து வெள்ளைப்படை நகரின் வட பகுதியைப் பிடித்து விட்டது. காயம் படாமல் 4000 வீரர்களே எஞ்சி யிருக்கின்றனர். இவர்களை வைத்துக்கொண்டு 40,000 வீரர்கள் இருக்கும் டெல்லி முழுவதும் கைப்பற்ற முடியுமா? தளபதி

---

* அவனுடைய சிறப்பைக் கேள்விப்பட்ட மலைவாசிகள் கண்ணீர் பெருக்கினர். அவனை மாபெரும் வீரனாகக் கொண்டு வணங்கிய அம் மக்க ளுக்கு இச் செய்தி அதிர்ச்சியாய் இருந்தது- நிக்கல் சின்......நிக்கல் சின் என்று அன்புடனும், மரியாதையுடனும், அச்சத்துடனும் வீர வணக்கஞ் செலுத்திய அம்மக்கள் வாழும் பகுதியில் அவன் நினைவாக ஒரு நடுக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

வில்சன் வழக்கம்போல் தடுமாறினார்............நீள்வரை மேட்டிற்கே திரும்பி விடலாமா என்றுகூடக் கருதினார். நல்ல வேளை ......ஆரம்பத்திலிருந்தே தளபதி வில்சனின் திட்டங்களைப் பிற அதிகாரிகள் எதிர்த்து வந்ததுடன், துணிந்து செயல் பட்டு நல்ல பலன் பெற்றனர். நிக்கல்சன், நீல்போன்ற வீரர்கள், வில்சனைப் போன்ற தளபதிகளை நெருக்கடி நேரத்தில் சுட்டுக் கொல்லக்கூடத் துணிந்து விடுவார்கள். இறுதியில், தொடர்ந்து முன்னேற முடிவெடுக்கப் பட்டது. வெள்ளைத் துருப்புகள், சாந்தினி சௌக் வழியாக ஜும்மா மசூதி, டெல்லி வங்கிப் பக்கமாக முன்னேறினர். வழி யெல்லாம் போர் நடந்தது. வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் வெள்ளை வீரர்கள், மதுபானங்களைக் கைப்பற்றி, மிதமிஞ்சிக் குடித்தாடினர். இதனால், அதிகாரிகள் கலக்கமும், ஆத்திரமும் அடைந்து, எஞ்சிய புட்டிகளை உடைத்தெறிந்தனர். மறுநாளும் (செப்டம்பர் 16) போர் நீடித்தது. செங்கோட்டையை வெள்ளையர் நெருங்கினர். கோட்டையின் ஒரு பகுதியான சலீம்கரை நோக்கி குண்டுகள் பறந்தன !

———

# 27. அந்த மொகலாயர்! அந்த டெல்லி!

[செங்கோட்டையில் எதிர்ப்பு — அரச குடும்பம் தப்பித்தல் — ஹுமாயூன் சமாதி—காப்டன் ஹாட்சன் — மன்னனைச் சிறை பிடித்தல் — அடுத்து இளவரசர்களை பிடித்து கொலை செய்தல் — காவலில் பகதூர்ஷா — டெல்லி பழிவாங்கப் படல்.]

வெள்ளைத் துருப்புகள் நகருக்குள் நுழைந்ததும், அரண் மனை காலியாகி விட்டது. அரச குடும்பமும், அரசவையினருந் தப்பித்து விட்டனர். காவலர்கள் மட்டுந் தங்களின் கடமையி லிருந்து வழுவ விரும்ப வில்லை. உருவிய வாளுடன் ஒரு காவல் வீரன், மேலுங் கீழுமாக இயந்திரம் போல் நடந்து கொண் டிருந்தான். எந்த அபாயத்தையும் அவன் உணர்ந்ததாகத் தெரிய வில்லை. மற்றொரு இடத்தில், ஒரு சிப்பாய் துப்பாக்கியை இடுப்பில் தாங்கி அசையாமல் நின்றிருந்தான். வெள்ளைப்படை நெருங்கியதும். அவர்களை நோக்கிச் சுட்டான். அதிலும் பய னில்லை. எதிரிகள் நெருங்கிச் சூழ்ந்தும், அவன் ஓட வில்லை; உடனே தன் வாளை உருவிச் சுழற்ற ஆரம்பித்தான். தான் ஒரு ஆள் என்ன செய்ய முடியும்? என்றுந் தயங்காமல், இறுதி வரைப் போராடி இறந்தான். இன்னும் பல காவலர்கள், சாவை எதிர் நோக்கி அசையாமல் நின்று போரிட்டனர். யார் காவல் காத்து என்ன பயன்? செப்டம்பர் 20 ம் நாள் செங் கோட்டை அரண்மனையை வெள்ளையர் ஆக்ரமித்தனர். தள பதி வில்ஸன், தலைமை முகாமை அரண்மனைக்கு மாற்றினர். வெற்றிக்களிப்பில், எழில் மிக்க, மொகலாய அரசவையான 'திவானி காஸில்' வெள்ளையர் இரவு விருந்துண்டனர். என்ன இழப்பில் இவ்விருந்து? டெல்லி மீட்சிக்காக இறந்த 4000 வீரர்களில், நூற்றுக்கணக்கானோர் நன்றிமிக்க கூர்க்காக்களும், சீக்கியர்களும் ஆவார்கள்.

தப்பிச் சென்ற மன்னர், தம் வீரர்களுடன் டெல்லிக் கப்பால் 7 மைல் தொலைவிலுள்ள, ஹுமாயூன் சமாதியில் தஞ்சம் புகுந்தார். இதையறிந்த குதிரைப்படை யதிகாரி

கேப்டன் ஹாட்சன் (Hodson) மன்னரைப் பிடித்துவர தளபதியிடம் அனுமதி கேட்டான். மன்னர் தம் உயிருக்கு எந்த ஆபத்துமின்றி, உத்திரவாதம் அளித்து, மன்னரைப் பிடித்துப் வர தளபதி அனுமதித்தார். தன்னணியில் தேர்ந்தெடுக்க பட்ட 50 குதிரை வீரர்களுடன், ஹாட்சன் புறப்பட்டான். சில ஆயிரம் வீரர்களுடனும், அரசவையினருடனும் அப் பெருஞ் சமாதி அறைகளில் மறைந்திருக்கும் மன்னரைப் பிடிக்க, 50 குதிரை வீரர்களுடன் செல்லத் துணிந்தானென்றால், அவன் நெஞ்சுரத்தை என்னென்று சொல்வது? ஹுமாயூன் சமாதியைச் சுற்றி, ஹாட்சனின் குதிரைப் படை கம்பீரமாக நின்றது. சமாதியின் சாரளங்களி லிருந்தும், கதவிடுக்களி லிருந்தும் பல ஆயிரம் விழிகள் பரங்கியர் குதிரைப் படையை உற்றுப் பார்த்தன. ஆனால், ஒரு துப்பாக்கியும் அசைய வில்லை! இரண்டு மணி நேரம் ஹாட்சனுக்கும், பகதூர் ஷாவிற்கும் இடையே ஆள் மூலம் செய்திகள் மாறி மாறிச் சென்றன. இறுதியில் மன்னர் வெளியே வந்தார். ஹாட்சன் அவரை நெருங்கியதும் 'நீங்கள் தானே ஹாட்சன் பகதூர் என்றும், என் உயிருக்கு உத்திரவாதம் அளிக்கிறீர்கள் அல்லவா?' என்றும் மன்னர் கேட்டு, ஹாட்சன் வாயாலேயே வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டு புறப் பட்டார். ஹாட்சன் வாக்குறுதியைக் கொடுத்து விட்டு ஒரு எச்சரிக்கையும் விடுத்தார். 'என்னிடமிருந்து மன்னரை மீட்க யாராவது முயற்சித்தால், மன்னரையே சுட்டு விடுவேன்' என்று கூறி, தன் வீரர்களை மன்னரின் பல்லக்குக்கும், அவருடைய சிப்பாய்களுக்கும் இடையில் நிறுத்தினான். ஹாட்சனின் இத் துணிகரச் செயலை, அச்சத்துடன், இமைக்காமல் பல ஆயிரம் வீரர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். நகரை அடையும் போது, புரட்சிப் படை கலைந்து விட்டது. சாந்தினி சௌக் வழியாக மன்னரின் பல்லக்கு, ஹாட்சனின்முன்னே சென்று செங் கோட்டையை அடைந்தது. தாம் கைப் பற்றிய அரிய பொருளை, அதிகாரிகளிடம் ஹாட்சன் ஒப்புவித்தான். செப்டம்பர் 21ஆம் நாள், செங்கோட்டையிலிருந்த வீரர்கள் வெற்றி முழக்க மிட்டனர்! டெல்லி மீட்சியை அது அறிவித்தது!

கேப்டன் ஹாட்சனுக்கு மற்றொரு பணி காத்திருந்தது. மன்னர் சரணடைந்ததும், மூன்று மொகலாய அரசர்கள், 6000 புரட்சி வீரர்களுடன் ஹுமாயூன் சமாதிக்கு வந்து சேர்ந்தனர். மிர்ஸா மொகல், மிர்ஸா கேஜி சுல்தான், மிர்ஸா அபூபக்கர் ஆகிய மூன்று இளவரசர்களும் எங்கோ தப்பிச் சென்றவர்கள். இங்கே ஏன் வந்தார்கள் என்றே தெரிய

வில்லே? சரணடைந்தால், உயிருக்குப் பாது காப்புக் கிடைக் கும் என்று அவர்கள் நம்பி யிருக்கலாம். இப் பொழுது நூறு குதிரை வீரர்களுடன் ஹாட்சன் புறப்பட்டார். சமாதி வாயி லில் குதிரைப் படையை நிறுத்தி, அம் மூன்று இளவரசர்களை யும் சரணடையும்படிக் கேட்டு ஆள் அனுப்பினுன். இளவர சர்கள் உயிருக்கு உத்திரவாதங் கேட்டனர். ஹாட்சன் இம் முறை மறுத்து விட்டான். அதை மேலிடந் தான் முடிவு செய்ய வேண்டும் என்று கூறி விட்டான். ஆத்திரமடைந்த சில புரட்சி வீரர்கள், ஹாட்சனைத் தாக்க அனுமதி தரும் படிக் கூச்சலிட்டார்கள். இறுதியில், மூன்று இளவரசர்களை யும் சுமந்து கொண்டு ஒரு வண்டி வெளியே வந்தது. அதன் பின்னல் 3000 புரட்சி வீரர்களும் வந்தனர். ஹாட்சன் முன்னே சென்று, தன் குதிரை வீரர்களைச் சிப்பாய்களுக் கும், வண்டிக்கும் இடையில் நிறுத்தினுன். ஆயுதங்களைக் கீழே வைக்கும்படி அவன் ஆணை யிட்டதும், சிப்பாய்கள் தயங்கினர்; முணு முணுத்தனர்; முடிவில் பணிந்தனர். வண்டி யோடு வெள்ளை வீரர்களும் நகர்ந்தனர். சிறிது நேரம் சென் றதும், மக்கள் வண்டியைச் சூழ்ந்தனர். நெருக்கி யடித்துக் கொண்டு ஒரு பெருங் கூட்டம் பின் தொடர்ந்தது. 100 குதிரை வீரர்களை மட்டும் வைத்து, எந்த எதிர்ப்பும் இல்லாமல், ஹாட்சன் மூன்று இளவரசர்களையுங் கொண்டு வந்து விட் டான். ஊரின் புற மதிலை நெருங்கும் போது கூட்டம் மிகப் பெருகி விட்டது. எந்த விநாடியும், ஒரு கலவரந் தோன்றும் போலவே தெரிந்தது. ஹாட்சன் என்ன நினைத்தானே? இள வரசர்களின் உடைகளைக் களையும் படி ஆணை யிட்டான். அருகி லிருந்த வீரனிடமிருந்து துப்பாக்கியை வாங்கினுன்...... சுற்றி யிருந்த மக்கள் கூட்டத்திற்குக் கைதிகள் யார்? என்ன குற்றஞ் செய்தார்கள்? என்பதை நொடிப் பொழுதில் உரக்க அறிவித்தான்...மறு விநாடியே அம் மூன்று இளவரசர்களையுஞ் சுட்டுக் கொன்ருன்! மக்கள் திகைத்து நின்றனர்! ஒருவர் கூட விரலை உயர்த்த வில்லை...... தங்கள் கண்களின் முன்னே இளவரசர்களைச் சுட்டுக் கொன்ற ஹாட்சனின் தோற்றமே அவர்களை அசைவற்று நிற்கச் செய்து விட்டது! ஹாட்சனின் இவ் வெறித்தனமான செயல் பலத்த கண்டனத்திற் குள்ளா கியது. அச் சூழ் நிலையில் அவன் நடந்து கொண்டது சரியே என்று சொல்பவர்களும் உண்டு. பல வெள்ளையர்களின் சாவுக்கு இவ் விளவரசர்கள் காரணமாக இருந்திருப்பினும், கைது செய்த பிறகு, முறையான விசாரணை யின்றி, மேலிடத் தின் அனுமதியுமின்றி, ஊருக்கு வெளியே, நாயைச் சுடுவது

போல் ஹாட்சன் அவர்களைச் சுட்டுக் கொன்றது தவறு, என்று தான் சொல்ல வேண்டும். என்ன சமாதானங் கூறினலும், ஒரு அதிகாரி இவ்விதம் நடந்திருக்கத் தேவையில்லை. ஹாட்சன் ஒரு சிறந்த வீரன். நிராயுதபாணிகளை அவன் கொன்றது சுத்த வீரனுக்கு அழகும் அல்ல!

அரச குடும்பத்தைச் சார்ந்த மற்ற 21 பேர்களும், அரசருக்கு உதவியதாகக் கருதப்பட்டச் சில சிற்றரசர்களும், அவசர விசாரணைக்குப் பின்னே தூக்கிலிடப் பட்டனர். மாட்டு வண்டியில் பிணங்கள் யாவும் ஏற்றப்பட்டு, ஊருக்கு வெளியே கொண்டு சென்று கொட்டப் பட்டன! எஞ்சியிருப்பது மன்னர் - தான் அவருடைய கதி என்ன? தம் அரண்மனையில், ஆங்கிலேயர்கள் கொல்லப் படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாரே! எல்லாம் வல்ல கிழக்கிந்திய ஆட்சிக் கெதிராகப் போர்க் கொடி உயர்த்தினரே! மன்னரின் இக் குற்றங்கள் மன்னிக்கப் படுமா? சூழலின் வற்புறுத்தலில்—தான் தவறிழைத்தேன். என்று சொல்லித் தப்பிக்க முடியுமா? கூண்டிலே ஏற்றும் வரை அவரைக் காவலில் வைத்தனர். மொகலாய மாமன்னர்கள், கொலு வீற்றிருந்து, கோலோச்சிய செங்கோட்டை அரண்மனையின் ஒதுக்குப் புறத்தில், ஒரு சிறு அறையில் மன்னர் பகதூர் ஷாவும், ராணி ஜூனத் மஹாலும், இளவரசன் ஜவான் பக்த்தும் காவலில் வைக்கப்பட்டனர். அரச அலங்காரங்கள் எதுவுமின்றி, அரசர் ஒரு கட்டிலில் சாய்வாக அமர்ந்து, ஹுக்காப் பிடித்துக் கொண்டிருக்கிறார். அருகில், இருவர் நின்று சாமரம்......அல்லா......அல்லா விசிறி வீசிக் கொண்டிருக்கின்றனர். ஒரு திரைக்கப்பால் அரசி ஜூனத் மஹால் இருக்கின்ருள். உருவிய கத்திகளுடன் இரு வீரர்கள் அங்கே காவல் காக்கின்றனர். 90 வயதாகி விட்டதால், மன்னரின் உடல் தளர்ந்து விட்டது. ஆனல், அவ் வளைந்த புருவங்களில், கூரிய மூக்கில் மொகலாய அச்சு நன்கு வெளிப் பட்டது. ஏதோ கனவுலகில் இருப்பது போல், அமர்ந்த நிலையிலேயே, மன்னரின் உடல் முன்னும் பின்னுமாக அசைகிறது. எழில் மிக்க திவானி காஸ் மண்டபத்திலிருந்து, இவ் விருண்ட சிறு அறைக்கு எப்படி வந்தோம்? என்று எண்ணிப் பார்க்கிருர் போலும்! ஆங்கில ஆண்களும், பெண்களும், நினைத்த நேரத்தில், அங்கு வந்து திரையை எட்டிப் பார்க்கின்றனர். ஹுக்கா பிடித்துக் கொண்டே சலாமிடுகிருர் அரசர்......பார்வையாளர்கள் சிறிதளவு கண்ணியங் கூட இன்றி, அவரிடம் நடந்து கொள்கிருர்கள்: அவர்களின் விழிகளில் வெறுப்பு!

அருவருப்பு! அவர்களின் இதழ்களில் ஏளனப் புன்னகை! தைமூரின் வழி வந்த அவருக்கு ஒரு அரசியல் கைதிக்குரிய மரியாதைகள் கூடவா தரக் கூடாது? யாரை நொந்து என்ன பயன்? இத் தள்ளாத வயதில், வெள்ளையரிடம் அவர் உயிர்ப் பிச்சை கேட்டதே மிக இழிந்த செயல். மரணத்தை ஏற்றிருந்தால் தம் உடலில் மத்திய ஆசியாவின் இரத்தம் ஓடுகிறது என்பதை நிரூபித்திருக்கலாம்! உயிர் பிரிந்தாலும் புகழ் நிலைத்திருக்கும்! அன்று செல்வாக்குக்கு ஆசைப்பட்டுப் புரட்சியைத் தழுவிய பகதூர் ஷா இன்று உயிருக்கு ஆசைப் பட்டுப் பரங்கியரின் காலைத் தழுவி விட்டார்! மொகலாயப் பேரரசின் இறுதி வேந்தர்......இந்துஸ்தான் சக்கரவர்த்தி...... புவனம் வென்றவர்...பாபரின் வழியினர்...காஜி! ஷா இன்ஷா! பகதூர் ஷா! அதோ! உடல் குறுகி, உள்ளம் நொந்து, செங்கோட்டையின் இருண்ட அறை ஒன்றில் திரைக்கப் பால் முடங்கிக் கிடக்கின்றார்! விழிகளுள் நீரைத் தேக்கி...விரல் களில் கரித் துண்டேந்தி, சுவரிலே கவிதை எழுதுகின்றார். மூன்று நூற்றாண்டுகள், முப்பத்தியோராண்டுகள் இந்துஸ் தானத்தில் இணையற்றுப் பறந்த அம் மொகலாயக் கொடி அன்று இறக்கப்பட்டது!!

செங்கோட்டையிலிருந்த வெள்ளையரின் பார்வை நகர் பக்கந் திரும்பியது. தலைநகர் நடு நடுங்கியது. முஸ்லிம் வெற்றியின் சின்னமாக ஒன்பது நூற்றாண்டுகள் டெல்லி நிலைத்து விட்டதல்லவா? பெண்களையுங் குழந்தைகளையும் துன்புறுத்தக் கூடாது, என்று தளபதி வில்சன் ஆணையிட்டிருந்தாலும், வெற்றி வெறியில் எந் நாட்டு வீரர்கள், நெறியைக் காத்திருக்கிறார்கள்? வெள்ளைப் படையிலிருந்த சீக்கியர் களுக்கு, மொகலாயத் தலைநகரில் ஆற்ற வேண்டிய நேர்த்திக் கடன் வேறு இருக்கிறது! சீக்கியரைக் கொடுமைப் படுத்திய முஸ்லிம்களின் தலைநகரல்லவா டெல்லி! குரு அர்ஜுன் சிங் கொலைக்குப் பழிவாங்க வேண்டாமா! 'டெல்லி ஒரு நாள் சாம்பலாகும்' என்று குருவின் சீடர்கள் சொன்ன சோதிடத்தை மெய்பிக்க வேண்டாமா? பழி வாங்கும் உணர்வு சீக்கியர்களுக்கே இவ்வளவு இருந்தால், வெள்ளையர்களுக்கு எவ்வளவு இருக்கும்? வெள்ளைப் பெண்டு பிள்ளைகள் எங்கெங்கோ கோரமாகக் கொல்லப் பட்டதைக் கேள்விப் பட்டிருந்த டெல்லி வெள்ளை வீரர்கள், பழிவாங்கக் கருவிக் கொண்டிருந்தனர்!

செப்டம்பர் 21 ஆம் நாள்! டெல்லி வீதிகளில் நடமாட்டமே இல்லை; கடைகள் மூடிக்கிடந்தன; சிப்பாய்களின் பிணங்களும், மக்களின் பிணங்களும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன உடமைகளற்றோர் பலர் ஓடி விட்டனர். எஞ்சியவர்கள் உயிருக்கஞ்சி வீடுகளில் அடைபட்டுக் கிடந்தனர். வென்றவர்களுக்குச் சொர்க்கப்பாதை திறந்து கிடந்தது! சீக்கியரும், வெள்ளையரும் ஊருக்குள் புகுந்தனர். கதவுகளை இடித்து, கடைகளில் புகுந்து சூறையாடினர்; வீடுகளில் புகுந்து மறைந்திருந்த பலரைக் கொன்று கொள்ளையைத் தொடங்கினர்; புரட்சித் தோன்றியத் பிறகு, செல்வங்கள் மறைக்கப் பட்டன; சுவர்களும் தளங்களும் இடிக்கப் பட்டன; மாடிப் படிகள் நொறுக்கப்பட்டன; கடவுளரின் சிலைகள் பெயர்க்கப் பட்டன. ஒன்றும் வீண் போக வில்லை. அக் கொள்ளைக் காரர்கள் தொட்ட இட மெல்லாம் நகைகளும், கணக்கற்ற பணமும் இருந்தன. சட்டப்படி அப் பொருள்கள் அனைத்தும் பிரைஸ் ஏஜென்ட் (Prize Agent) என்ற அதிகாரியிடம் ஒப்புவிக்கப் பட வேண்டும். இந்த நேர்மையை யெல்லாம் யார் கடைபிடிப்பது! இலட்சக் கணக்கான மதிப்புள்ள பொருள்களும், பணமும் களவாடப் பட்டு வீரர்களால் பகிர்ந்து கொள்ளப் பட்டன. சில ஆண்டுகளுக்குப் பிறகு, இவ் வீரர்கள் யாவரும் இங்கிலாந்தில் செல்வந்தர்களாக உலவினர்களாம்!

வெள்ளையர் கண்களுக்கு கருப்பரெல்லாம் எதிரிகள்தான் புரட்சியில் ஈடுபட்டவனா? ஆங்கிலேயரின் நண்பனா? ஒன்றுமறியா அப் பாவியா? இந்தக் கேள்விகளுக்கே அங்கு இடமே இல்லை. சந்து பொந்துகளில், இருட்டறைகளில் மறைந்து வாழ்ந்தவர்களை எல்லாம் பிடித்துக் கொன்றனர். தாய்மார்கள், தவழுங் குழந்தைகள், தள்ளாடுங் கிழவர்கள் ஒருவரும் மிஞ்சவில்லை! அவ் வப்போது விசாரணை நாடகம் நடத்தப் பட்டுக் குற்றவாளிகளென நியமிக்கப்பட்டுத் தூக்கி லேற்றப் பட்டனர். குவிந்த பிணங்கள் யமுனையில் கொட்டப் பட்டன. காலிழந்து, கரமிழந்து, விழி யிழந்து பல குற்றுயிர்கள் தப்பின. கற்பிழக்க நேரிடும் என்றஞ்சிய பெண்கள் பலர் தத்தம் குழந்தைகளுடன் கிணற்றில் குதித்து உயிர் விட்டனர்! புற மதிலோரத்தில் 14 பெண்களின் கழுத்தறுபட்ட பிணங்கள் இருந்தன. மானபங்கத்திற்கஞ்சி, மனைவிகளை இவ்விதங் கொன்று, கணவர்கள் தற்கொலை செய்து கொண்டனர். விஜய நகரமும், சோமநாத புரமும் மறக்கப்பட வில்லை. ரோமானியர்கள் கார்தோஜ் நகரை அழித்து, முள்ளும் முளைக்காத படி உப்பிட்டு, அத்தரையை உழுதார்களாம்! டெல்லியை

அக் கதிக் காளாக்க ஒரு அதிகாரி கூறினன். எப்படியோ அவ் வழகிய நகர் இம் முறையும் அவ் விதியிலிருந்து தப்பி யது! சில நாட்களில் டெல்லி, மாயான அமைதியில் ஆழ்ந் தது! அங்கே கழுகுகள் வட்ட மிட்டன! தெரு நாய்கள் ஓல மிட்டன! டெல்லியில் யாருக்கும் இனி வேலை யில்லை. உற்ருர் மாண்டனர்! உறவினர் ஓடினர்! அச் சோக நாடகத்தில் பங்கு பெற்ற புகழ் மிக்க உருதுக் கவி காலிப் இதோ பாடு கிருர்!

'நண்பர் ஆயிரம் இறந்து பட்டனர்......

யாரை நினைவில்வைப்பேன்? யாரிடம் முறையிடுவேன்?

இன்று நான் இறப்பின் எவர் விழிகள் நீர் உகுக்கும்?'

ஆங்கில மிருக வெறிக்கு அவ்விதிகாச நகர் ஆளான அவலக் கதைதான் இது!

**பகதூர் ஷா விசாரணை :**

மொகலாய குலத்தின் இறுதி வேந்தன் பகதூர் ஷா 1858 ஜனவரி 27 ஆம் நாள், டெல்லி அரண்மனையின் திவானி காஸ் அவையில் பிரிவு கவன்சிலின் முன்னே விசாரணைக்குக் கொண்டு வரப் பட்டார். அவர் மேல் நான்கு குற்றங்கள் சாட்டப் பட்டன. ஆங்கில அரசின் உதவிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, புரட்சிக்குத் தம் ஆதரவை அளித்தது: தம் மகனுக்கும், பிற மாநிலங்களில் இருந்த தம் ஆதரவாளர் களுக்கும் புரட்சி செய்வதற்குத் தூண்டு கோலாய் இருந்தது; இந்தியாவின் மன்னன் என டெல்லியில் பிரகடனப் படுத்தி யது; மே 16 ஆம் நாள் டெல்லியில் 49 வெள்ளையர்கள் கொலை செய்யப் படுவதற்குக் கரணமாய் இருந்தது.—40 நாட்கள் இவ் விசாரணை நீடித்தது. முடிவில் மன்னர் பகதூர் ஷா குற்ற வாளி யென்று தீர்ப்பளிக்கப் பட்டுப் பர்மாவிற்கு நாடு கடத் தப் பட்டார். அங்கேதான் தன் இறுதி நாட்களைக் கழித்தார்.

# 28 இவன்தான் தாத்யா!

[குவாலியர்ப் புரட்சி வீரர்களின் கால தாமதம்—சிந்தியாவின் பிடி தளர்தல்—தாத்யா வீரர்களைத் தம் பக்கம் இழுத்தல்—யார் இந்த தாத்யா? — பிதூரில் தாத்யா—தாத்யா குவாலியருக்குச் செல்லல்—குவாலியர் வீரர்களுடன் கால்பிக்கு வருதல்—தாத்யா கான்பூரை நெருங்குதல்—விந்தாம் கான்பூரை விட்டு வெளியேறிய தவறு—பாண்டு நதிப் போரில் விந்தாமின் படை சின்னாபின்ன மாதல்—தாத்யா அவனை விரட்டுதல்—விந்தாம் காப்பிடத்தில் முடக்கப் படல்—லக்னோவை மீட்டுக் கேம்பல் திரும்புதல்—அகதிகளை அலகாபாத்திற்கு அனுப்புதல்—நாஞ, தாத்யா கேம்பலை எதிர்த்தல்—தோல்வி யடைந்து பிதூருக்கு ஓடுதல்—ஹோப் கிராண்ட் பின் தொடருதல்—கிணற்றுக் குள்ளிருந்த நாஞவின் செல்வம்— லக்னோவையும், கான்பூரையும் தலைமைத் தளபதி காப்பாற்றி விட்டார்.]

கான்பூரைத் தாக்கிக் கொண்டிருக்கும் இக் குவாலியர் புரட்சி வீரர்கள், இதுநாள் வரை என்ன செய்தார்கள்? ஜுன் மாதத்திலேயே கிளர்ச்சியி லீடுபட்டவர்கள் இத்தனை நாள் ஏன் உறங்கினார்கள்? காரணங்கள் பலவிருந்தன. குவாலியர் மன்னன் சிந்தியாவும், அவனது அமைச்சர் சர் திங்கர் ராவும் தங்கள் வீரர்களைச் சாமர்த்தியமாக இது வரை அடக்கி வைத்திருந்தனர். குவாலியரின் பெரும் படை, புரட்சிக்கு ஆதரவாக உடனே முடிவெடுத்திருந்தால் ஆங்கிலேயர்கள் பெரும் நெருக்கடியில் சிக்கி யிருப்பார்கள்; என்பதில் ஐய மில்லை. நல்ல தலைமை யில்லாத ஒரே காரணத்தால், இப் பெருந் துணையைப் புரட்சிப் படை இழந்தது. குவாலிய வீரர்கள் முனைந்திருந்தால், டெல்லிக்கு விரைந்திருக்கலாம்! ஆக்ராவை முற்றுகை யிட்டிருக்கலாம்! கான்பூரை வளைத்திருக்கலாம்! அங்கே உதவிப் படையை எதிர் பார்த்து லக்னோ சாலையில் அச்சத்துடன் முகாமிட்டிருந்த ஹேவ்லாக்கின் படையையும் அழித்திருக்கலாம்! இதுவரை எதையுஞ் செய்யத் தவறிய அக் குவாலியர் படை, அக்டோபர் மாதத்தில்

தான் துணிவுடன் புரட்சிக் கொடி யேந்திப் புறப்பட்டது. செப்டம்பரில் டெல்லியை ஆங்கிலேயர்கள் மீட்டதை யறிந்து, அவர்களது நெருங்கிய நட்பாஞ் சிந்தியா சிறிது கண்ணயர்ந்து தன் பிடியைத் தளர விட்டதால், இது சாத்தியமாகி யிருக்க லாம், என்று G. B. மேலகன் கருதுகிறார். அதுவே காரண மல்ல. ஊசலாடிய குவாலியர் புரட்சி வீரர்களின் மனதைத் திசைத் திருப்பிய பெருமை ஒருவனுக்குண்டு. அவன்தான் தாத்யா தோப் என்ற இராமச்சந்திர பாண்டு ரங்கன்!* அவருடைய தந்தை பாண்டு ரங்கன் காலஞ் சென்ற பேஷ்வா பாஜி ராவின் தயவில், பிதூர் அரச சபையில் வாழ்ந்தவன். 'தேசாய்த்' பிராமண வகுப்பைச் சார்ந்த தாத்யாவின் வயது சுமார் 45. பேஷ்வா நானு சாஹேப்பின் கையாள். உயரம் சுமார் 5½ அடி; தாழ்ந்த நெற்றி; அகலமான நாசி; கோண லான காவியேறிய பற்கள். இதுவே அவன் தோற்றம். நானு வின் அரசவையில் ஒரு இடைநிலை ஊழியனாக இருந்த இவன், முறையான போர்ப் பயிற்சியைப் பெற்றிருக்க முடியாது. அக்கால பிற இளைஞர்களைப் போல, அவனும் ஓரளவு போர் முறைகளை அறிந்திருப்பான், ஆனால், அப் பிராமணனுக்கு மராத்திய முன்னோரின் கொரிலாப் போர் முறை கை வந்த கலை, என்பதை விரைவில் நாம் காண்போம்!

முன்பொரு சமயம் ஜூலை 16 ஆம் நாள் ஹேவ்லாக்கின் படை, பீபிகர் அகதிகளைக் காப்பாற்ற கான்பூருக்கு விரை வதை யறிந்து, நள்ளிரவில் நானு சாஹேப், அவன் சகோத ரன் பாலா சாஹேப்பின், ஒன்று விட்ட தம்பி ராவ்சாஹேப் தாத்யா தோப் ஆகியோர், பிதூரிலிருந்து ஃபதேபூருக்குச் சென்றனர். அங்கே, சௌத்ரி போபால் சிங், அவர்களை உப சரித்தான். அங்கிருந்து, நானுவின் ஆணைப்படி ஏற்கனவே கிளர்ச்சியி லீடுபட்டிருந்த சிவராஜ்பூர் வீரர்களை (42 வது அணி) அழைத்துக் கொண்டு, தாத்யா மீண்டும் பிதூருக்கு வந்தார். அச் சமயத்தில் லக்னோவிற்குச் செல்ல முடியாத நிலையிலிருந்த ஹேவ்லாக், நீலின் வேண்டுகோளின்படி ஆகஸ்டு 13 ஆம் நாள் கான்பூருக்கே திரும்பி வந்து, மூன்று நாட்களுக் குப் பிறகு அதே பிதூரை நோக்கித் தம் படைகளைச் செலுத் தினார். மறைந் திருந்த தாத்யாவின் 4000 வீரர்களும் குபீரெ னப் பாய்ந்தனர்! பரங்கிப் படை திக்கு முக்காடியது. என் பீல்டு துப்பாக்கிகளும், உயர்ந்த தளவாடங்களுந்தான் அன்று அவர்களைக் காத்தன. புரட்சிப் படையின் அஞ்சா நெஞ்சத்

*தாந்தியா தோபி என்று அழைக்கப் படுவான்.

தையும், ஆற்றலையும் ஜெனரல் ஹேவ்லாக்கே தன் அறிக்கையில் புகழ்ந்து எழுதினர். (தாத்யாவை விரட்டி விட்டு, ஹேவ்லாக் கான்பூருக்குத் திரும்பிய பின்னர்தான், அவருக்கு மேல் உட்ராம் நியமிக்கப் பட்டிருக்கின்றார்; என்ற செய்தி கிடைத்தது.)

பிதூரிலிருந்து மீண்டும் பதேபூருக்கே தாத்யா சென்றார். புரட்சியைத் தொடர்ந்து நடத்த உடனடியாக வீரர்கள் தேவை! இச் சமயத்தில்தான் குவாலியர் வீரர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தனர். நானாவின் ஆணைப்படி, தாத்யா குவாலியர் சென்றான். அந் நகரின் கொத்வாலாகப் பிதூர்வாசி யொருவன் இருந்தான். அத்துடன் தாத்யாவின் மருமகனும் குவாலியர் வாசி. இதனால், தாத்யா இரகசியமாகக் குவாலியருக்கு வந்து செல்வது எளிதாயிற்று. பல முறை வந்து விடாமுயற்சி எடுத்ததின் பயனாகக் குவாலியர் வீரர்கள் சோம்பலைக் குறித்து, நானாவின் தலைமையில் புறப்பட முடிவில் இணங்கினர். உடனடியாக, அப் படையைக் கொண்டு கான்பூரைக் கைப்பற்ற தாத்யா முனைந்தான். குவாலியர் வீரர்களும், நானாவின் வீரர்களும் இணைவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடந்தான் கால்பி! குவாலியருக்கு நேர் கிழக்கில், யமுனை நதியின் வடகரையில் அது அமைந்திருக்கிறது. அதன் வடகிழக்கில், 46வது மைலில் கான்பூர் இருக்கிறது. குவாலியர் வீரர்களுடன் நவம்பர் 9ஆம் நாள் தாத்யா கால்பியை அடைந்தான். அன்றுதான் தலைமைத் தளபதி சர் காலின் கேம்பல், மேஜர் ஜெனரல் விந்தாமைக் கான்பூரில் நிறுத்தி விட்டு, லக்னோவை மீட்கப் புறப்பட்டிருந்தார். இதைப் பயன்படுத்தித் தாத்யா விரைந்து கான்பூரை யடையத் தவறி விட்டான். நவம்பர் 17ஆம் நாள் லக்னோ நிலையகத்துள் கேம்பல் நுழைந்தத் தருணத்தில், தாத்யா கான்பூருக்கப்பால் 15 மைல் தொலைவிலிருந்தான். தாத்யா அரிய காலத்தை இழந்தாலும், ஆற்றலை இழக்கவில்லை. கான்பூருக்கு மேற்கே தன் அணியிலொன்றை நிறுத்தி, விந்தாமின் தொடர்பைத் துண்டித்தான். தாத்யா, தம்மைச் சூழ்கிறார் என்பதை ஒற்றர்கள் மூலமாக விந்தாம் அறிந்தார். அவருக்கு என்ன செய்வ தென்றே விளங்கவில்லை. எக்காரணத்தினாலும், கான்பூரை விட்டு வெளியேறித் தாக்குதல் போரை மேற்கொள்ள வேண்டாம் என்று, வேறு தலைமைத் தளபதி ஆணை யிட்டுச் சென்றிருக்கிறார். தற்காப்பை விட, தாக்குதல் போரில்தான் ஆசியப் படைகளைச் சிதறடிப்பது சிறந்த வழி யென்று பலரைப் போலவே விந்தாமுங் கருதினர். தம்முடைய 1700 வீரர்களைக் கொண்டு, தாத்யாவின் ஒரு அணியைத் தாக்கி விரட்டி

ஞல்மட்டும்போதும்; மீதமுள்ள எதிரிகள் 12000 பேரும், அச்சத்தில் சிதறி ஓடி விடுவார்கள்; என்றும் விந்தாம் நம்பினர். எனவே, சூழ்நிலைக் காரணமாகக் கேம்பலின் ஆணையை மீற வேண்டியதாயிற்று.

கான்பூரை விட்டுச் சென்ற விந்தாமின் படை, கால்பி சாலையில் ஒரு கால்வாய்க்கருகில் முகாமிட்டது. இதைச் சவாலாகக் கருதிய தாத்யாவின் படையும் முன்னேறிற்று. நவம்பர் 26ஆம் நாள் இரு படைகளும் பாண்டு நதிக் கரையில் மோதிக்கொண்டன. தொடக்கத்தில், புரட்சிப் படை இரண்டு பீரங்கிகளை இழந்தது. சோதனைக்காகத்தான் இத் தாக்குதலைப் பரங்கி நடத்தி யிருக்கிருன்; என்பதைத் தாத்யா புரிந்து கொண்டான்! 'நாம் ஏமாந்துவிடக் கூடாது; சந்தர்ப்பத்தை இழக்கக் கூடாது!' என்று உணர்ந்த தாத்யா மறைத்து நிறுத்தப்பட்டிருந்த தன் அணிகளை ஏவினுன். புரட்சி வீரர்கள் புயலாய்ச் சாடினர். அவர்களின் துணிவும், ஆத்திரமும் பிரமிக்கும்படி இருந்தன. விந்தாம் கலங்கி விட்டார். சில மணி நேரத்திற்குள்ளாக வெள்ளைப் பிணங்கள் குவிந்து விட்டன. கதி கலங்கிய பரங்கிப் படை புறங் காட்டி ஓடியது. மகத்தான வெற்றி மகிழ்ச்சியில் தாத்யாவும் பரங்கிப் படையை விடாமல் துரத்தினுன். கான்பூர் நகருக்குள் தாத்யா நுழைந்ததும், விந்தாம் பதறி யடித்துச் சென்று காப்பிடத்தில் தம் வீரர்களுடன் புகுந்து கொண்டார்! ஐந்து மாதங்களுக்கு முன்பு வீலர் அகப்பட்டதைப் போலவே இன்று விந்தாமும் அகப்பட்டுக் கொண்டான்! எக்காளமிட்ட புரட்சி வீரர்கள் தாக்குதலைத் தொடங்கினர். டுமீல்....டுமீல்....பீரங்கிகள் முழங்கின. இந்த முழக்கத்தின் எதிரொலியைத்தான், லக்னே நிலையரகத்தைக் காப்பாற்றித் திரும்புந் தலைமைத் தளபதி காலின் கேம்பல் கேட்டார்.!

அவரால் உடனே போரிட முடியாது. அரும்பாடு பட்டு லக்னேவிலிருந்து மீட்டு வந்த பெண்டு பிள்ளைகளைத் தாத்யாவின் கோரப் பசிக்கு இரையாக்க முடியாது. நவம்பர் 30ஆம் நாள், வெள்ளையர் அனைவரும் படகுப் பாலத்தைக் கடந்தனர். டிசம்பர் 3ஆம் நாள் நள்ளிரவில், ஆங்கிலப் பெண்டு பிள்ளைகள் பலத்த காவலில் அலஹாபாத்திற்கு அனுப்பப்பட்டனர். எதையுமே இழக்காதவர்கள் அவ்வகதிகளில் எவருமே இல்லையென்றே கூறலாம்! அன்பு மழலையை இழந்தோர்......ஆசைக் கணவனை இழந்தோர்...நெருங்கிய உறவினரை இழந்தோர்... நீண்ட நட்பினை இழந்தோர்......பொருளிழந்தோர்......புன்ன

கையை இழந்தோர் அனைவரும் இதயச் சுமையுடன் அவ்விருட்டில் அலஹாபாத்திற்கு மெள்ள மெள்ள ஊர்ந்தனர்! அப்பொழுதும் கேம்பல், தாக்குதலைத் தொடங்கவில்லை. தன்னுடைய தாக்குதலினால், சிதறி ஓடும் புரட்சி வீரர்கள் பயணத்திலிருக்கும் ஆங்கில அகதிகளை, வழி மறித்துக் கொன்று விடுவார்களோ! என்ற அச்சந்தான் அதற்குக் காரணம். இக்கூரிய மதியும், முன்னறிவும், திட்டமும் கேம்பலுக்கு.......ஏன் பெரும்பாலான ஆங்கிலேயருக்கும் இருக்குமோ! என்று எண்ணத் தோன்றுகிறது.

அகதிகளை அனுப்பும் முயற்சியில் கேம்பல் ஈடுபட்டிருந்த போது, புரட்சிப் படைகள் ஒரு முழுத் தாக்குதலை நடத்தியிருந்தால் ஒரு நல்ல பலன் கிட்டியிருக்கும். தாத்யா அதைச் செய்யத் தவறி விட்டான். அப்பொழுது, காப்பிடத்திற்குங் கங்கைக் கரைக்கு மிடையில் இரு படைகளும் நின்றன. கேம்பலின் படையில் 5000 காலாட்களும் 600 குதிரை வீரர்களும் இருந்தனர். அத்துடன் 35 பீரங்கிகளும் இருந்தன. புரட்சிப் படையில் 14000 வீரர்களும்; பயிற்சிப் பெறாத பொதுமக்கள் சில வாயிரம் பேரும் இருந்தனர். காலாட் படை, குதிரைப் படை, பீரங்கிப் படை அனைத்தும் இதில் அடங்கும். நானாவின் வீரர்கள், மத்திய இந்தியா, ஜான்சி, பண்டேல் கண்ட் புரட்சி வீரர்கள், பல நிலக் கிழார்கள் ஆகியோரும் இப் புரட்சிப் படையில் இருந்தனர். கான்பூர் நகர் முழுவதும் புரட்சிப் படையின் கைவசம்; காப்பிடத்தில் விந்தாம் முடக்கப் பட்டிருக்கிறார். தாத்யா தன் அணியுடன் நகரின் வெளிப் புறத்தில் இருக்கிறான். அவனுக்கு இடப் பக்கம் நானாவின் தலைமையில் ஒரு அணி நிற்கிறது. வலப் பக்கம் குவாலியர் அணி நிற்கிறது. அதன் அருகில்தான் புரட்சிப் படையின் கூடாரங்களும், தளவாடங்களும் இருக்கின்றன. விந்தாமை வெற்றி கண்ட களிப்பில் புரட்சி வீரர்கள் இருக்கின்றனர். 'நடுவி லிருக்கும் தாத்யாவையோ, இடப் பக்கம் இருக்கும் நானாவையோ, தாக்கினால் எதிர்ப்புங் கடுமையாக இருக்கும்; இழப்பும் அதிகமாகும்; வெற்றி கிடைப்பதும் உறுதி யல்ல.' என்று கருதிய கேம்பல், வேறு திட்ட மிட்டார். டிசம்பர் 6ஆம் நாள், காலை 9 மணிக்குத் திட்ட மிட்டபடி, புரட்சிப் படைகளுக்குப் பின்னால் காப்பிடத்தி லிருந்த விந்தாம், இடப்பக்க மிருந்த நானாவின் அணியைத் தாக்கினார். இதனால், புரட்சிப் படையின் கவனம் இடப் பக்கத்திற்குத் திருப்பப்பட்டது. கேம்பலும் அத் திசையில் தாக்கினார். இரு தரப்புப் பீரங்கிகளும் இடி முழக்கஞ் செய்தன! கங்கைக் கரை சோலை

களிலிருந்த பறவைகள் கிறீச்...கிறீச்...என்று இரைந்து பறந்தன! கான்பூர் வீடுகளில் கதவுகள் நடு நடுங்கின! இடப் பக்கம் போர் நடந்து கொண்டிருக்கும் போதே, திடீரென வெள்ளையரின் குதிரைப் படைகள், வலப்பக்கமிருந்த முகாமிற்குள் புகுந்தன! காலை உணவு தயாரித்துக் கொண்டிருந்த குவாலியர் வீரர்கள் கதி கலங்கினர்! அடுப்பில் சப்பாத்திக் கருக, பீரங்கி இழுக்கும் மாடுகள் மிரள, போட்டது போட்ட படியே ஆயிரக் கணக்கான குவாலியர் வீரர்கள் தட்டுத் தடுமாறினார்கள். கண்ணிமைக்கும் நேரத்தில், பல நூறு குவாலியர் வீரர்கள் பிணமானார்கள். தப்பிய சிப்பாய்கள் பிதூரை நோக்கிப் பறந்தனர். எதிர்பாராத இவ்வடி புரட்சிப் படைக்கு அதிர்ச்சியைத் தந்தது. கான்பூர் இன்றும் தாத்யாவின் கையில்தான் இருக்கின்றது. ஆனால், தளவாடங்களை இழந்து, வலது அணியைப் பறிகொடுத்துத் தொடர்ந்து போரிட இயலாமலோ, விரும்பாமலோ, தாத்யாவும், நானாவும் அன்றிரவே தங்கள் வீரர்களுடன் கான்பூரை விட்டகன்றனர். கேம்பலின் திட்டம் நல்ல வெற்றியைக் கொடுத்தது. எதிரி விரட்டப் பட்டான். ஆனால், அழிய வில்லை! இதைக் கேம்பல் நன்கறிவார். இப்போரைப் பற்றி G. B. மேலெசன் கூறுகிறார். 'இடப்பக்கத்தில் படைகளைக் குவித்த, கேம்பல்லின் தவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தாத்யா தோப் தவறி விட்டான். ஒரு நெப்போலியனோ, ஒரு ஃபிரெடிரிக்கோ, இத் தவறைப் பயன் படுத்திக் கேம்பலை முறியடித்திருப்பார்கள். தாத்யா, நெப்போலியனும் அல்ல ; ஃபிரெடரிக்கும் அல்ல ; அவர் நடத்திய வீரர்கள் பிரஷ்யர்களும் அல்ல,' மாலெசனின் இக் கூற்றுச் சிறிதும் பொருந்துவதாக இல்லை. வாழ்நாள் முழுவதையும், போர்க்களங்களிலேயே கழித்த நெப்போலியன், ஃபிரெடரிக், கேம்பல் போன்றவருடன் காத்யாவை ஒப்பிடுவது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஒரு சாதாரண பிராமணன், ஒரு அரசவை ஊழியன் வெள்ளையர்களுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்ததே தாத்யாவின் வீரத்திற்குச் சான்று ஆகும். போர் முறைகளை அவன் அறிந்தவனும் அல்ல. அவனுடைய துணிவும், போர் முறையும் இயற்கையானவை. மேலெசன் எதிர்பார்க்கும் போர் முறைகளை, யுக்திகளை, அனுபவத்தாலோ பயிற்சியாலோ தாத்யா பெற்றிருந்தானென்றால், புரட்சியின் கடுமையும், காலமும் இன்னும் பன்மடங்கு கூடியிருக்கும்; அவனைப் போன்றவர்கள் இன்னுஞ் சிலர் இருந்திருந்தாலோ, புரட்சிப் படைக்கு வெற்றியே கிடைத்திருக்கும்! இதை நாம் சந்தேகிக்கத் தேவையில்லை.

புரட்சிப் படையின் ஒரு பகுதி, கால்பி சாலையில் தப்பி விட்டது. மற்றொரு பகுதி கங்கையைக் கடந்து அயோத்திப் பகுதிக்குள் நுழைய முற்பட்டது. இவர்களைத் தடுத்து முறியடிக்க சர் ஹோப் கிர்ராண்ட் (Sir Hope Grrant) அனுப்பப் பட்டார். மறுநாள் காலையில் சரியான தருணத்தில் அவர் எதிரிகளைக் கண்டுபிடித்தார். பீரங்கிகளைப் பரிசில்களில் அப்பொழுதுதான் அவர்கள் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். ஹோப் கிர்ராண்ட் சமயத்தை நழுவ விடாமல் தாக்கினார். எதிர் பாராமல் சிக்கிய தாத்யா வீரர்கள் சிலரை இழந்து, பீரங்கிகளை விட்டு விட்டு நதியைக் கடக்காமல் பிதூருக்குத் தப்பி ஓடினான். இவ்விரு போர்களிலும் புரட்சிப் படை 32 பீரங்கிகளையும், நூற்றுக்கணக்கான வீரர்களையும் இழந்தது. தாத்யா அடிபட்ட வேங்கையானான். 'குவாலியரிலிருந்து ஓடோடி வந்தும், கான்பூரைக் கைப்பற்றியும் அதை இழந்தேனே...... காலம் வரும்......பழி வாங்குவேன்' என்று கருவிக் கொண்டே தாத்யா பிதூரை அடைந்தான்.

தாத்யாவை விரட்டிக் கொண்டு, ஹோப் கிர்ராண்ட்டும் பிதூருக்குச் சென்றார். (டிசம்பர் 11) முதல் நாளிரவிலேயே நானாவும், தாத்யாவுந் தம்பி விட்டனர். கேம்பல் அளித்திருந்த அனுமதியின்படி, பேஷ்வாவின் மாளிகை தகர்க்கப்பட்டது. அங்கிருந்த ஆலயங்கள் இடிக்கப்பட்டன. பேஷ்வாவை நினைவூட்டும் எதுவும் அங்கே இருக்கக் கூடாது என்பதுதான் இதற்குக் காரணம். மற்றொரு மகிழ்ச்சியான பணி அங்கே ஹோப் கிர்ராண்ட்டிற்கு இருந்தது. முன்பொருமுறை ஹேவ்லாக்கிடம் தோற்றுத் தப்பிய நானா (ஜுலை 17) நேரே பிதூருக்கு வந்தான். சுமந்து செல்ல முடியாத தன் செல்வத்தை எல்லாம், மாளிகையிலிருந்த ஒரு கிணற்றில் அமிழ்த்தி விட்டுத் தங் குடும்பத்துடன் ஃபதேகருக்குச் சென்றான். அச்செல்வத்தை எடுக்க வெள்ளை வீரர்கள் சுறுசுறுப்பாகக் கிணற்றில் இறங்கினர்; தங்களுக்கும் பங்கு கிடைக்கும் என்ற ஆர்வத்தில், விறு விறு வென்று வாளிகளில் மொண்டு, மொண்டு நீரைக் காலி செய்தனர். அடியில் பெரும் மரத் தூண்கள் குறுக்கு வாக்கில் கிடந்தன, அவற்றை அகற்றியதும் வெள்ளிப் பாளங்கள். சகதியில் கருப்பேறித் தென்பட்டன. அவற்றை நீக்கிப் பல வெள்ளிச் சாமான்களையும், பேஷ்வாவின் வெள்ளி அம் பாரத்தையும் வெளியே எடுத்தனர்! அதற்குக் கீழே, தங்க நகைகளுந் தகடுகளும் மின்னின! அவற்றுக்குங் கீழே, பல மரப் பெட்டிகள் நிறைய நாணயங்களும், பொற் காசுகளும் இருந்தன! மிகப் பழமையான இவ் வணிகலன்களனைத்தும்

மராத்திய அரச குடும்பத்தின் பரம்பரைச் சொத்துகளாகும்! பல இலட்சங்கள் பெறுமான இச் செல்வம் அப்படியே வெள்ளை அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது; வீரர்கள் ஏமாந்தனர்.

தலைமைத் தளபதி சர் காலின் கேம்பலின் பணிகளில் இரண்டு முடிந்து விட்டன. லக்னோ விலிருந்து ஆங்கில அகதிகளைப் பாதுகாப்புடன் அகற்றி விட்டார். தாத்யாவின் தாக்குதலிலிருந்து கான்பூரைக் காப்பாற்றி விட்டார். டெல்லியிலிருந்து கல்கத்தாவரை பல இடங்கள் இன்னும் கொந்தளிப்பிலிருக்கின்றன. அவரின் அடுத்த இலக்கு எது?

# 29. பதேகர் வளைக்கப்படுகிறது

[ஃபரூக்காபாத் முரட்டு இஸ்லாமியர்கள்—தளபதி ஸ்மித்—தரம் பூரின் ஹரிதேவ் பக்ஷ் — சீதாப்பூர் வீரர்கள் ஃபதேகர் வீரர்களைத் தூண்டுதல் — ஃபதேகர் கிளர்ச்சிக்குப்பின் சிப்பாய்கள் வீடு நோக்கிச் செல்லல் — அவ்வூர் கோட்டையில் ஆங்கிலேயர் — நதி வழியே தப்பித்தல்—பீபிகர் அலுவலத்திற்கு உள்ளாதல்—ஃபதே கரைக் கைப்பற்ற தளபதியின் திட்டம் — வால்போல், சிட்டன், கேம்பல் என்னும் மூன்று திசைகளில் ஃபதேகரை வளைத்தல் — மீரான்-கி-செராயில் இணைத்தல் — காளி நதிப் போர்—புரட்சிப் படை தோல்வி — பதேகரைக் கைப்பற்றல் — முஸ்லிம்கள் தண் டிக்கப் படல்.]

கேம்பல், ஃபதேகருக்குக் குறி வைத்தார். இந்தப் படைத் தளம் ஆக்ராவிற்குக் கிழக்கே, கங்கை நதியின் வடகரையில், ஃபருக்காபாத்தை ஒட்டி இருக்கிறது. கான்பூர்—ஆக்ரா சாலையில் அது மிக முக்கியமான இடம். ஒரு காலத்தில் அயோத்தியின் ஆட்சிக் குட்பட்டிருந்த ஃபரூக்காபாத், 1801-ல் ஆங்கிலேயரின் வச மாயிற்று. அவ்வூரின் நவாப், ஆண்டிற்கு 10 ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டு, நிர்வாகத்தைக் கிழக்கிந்திய நிறுவனத்திடம் ஒப்புவித்தான். அங்கு முஸ்லிம்கள் சிறுபான்மையோர் என்றாலும், மிக மூர்க்கர்களாய் இருந்தனர். பிற மதத்தினரைக் கொலை செய்வதும், கொள்ளையடிப்பதும் அவர்களின் வழக்கமா யிற்று. கம்பெனி ஆட்சியின் சட்ட திட்டங்களும், கட்டுப்பாடுகளும் அவர்களின் சுதந்திரப் போக்கிற்கு இடையூறாக இருந்ததால், அந்நியத் தலையீட்டை வெகு நாட்களாக அவர்கள் வெறுத்தே வந்தனர். அங்கிருந்த சுதேசிப் படை (10வது அணி) பெரும் நம்பிக்கைக்குகந்ததாக இருந்தது. காரணம், அவ் வீரர்கள் பர்மியப் போருக்காகக் கடல் கடந்தவர்கள். ஜூன் 3-ஆம் நாள் அங்கிருந்த பெரெய்லி, ஷாஜஹான் பூர், ரோகில் கண்ட் ஆகிய இடங்களில் நடந்த கிளர்ச்சிகள், ஃபதேகரையும் பாதித்தன. ஆபத்தை எதிர் பார்த்து, கர்னல் ஸ்மித், அங்கிருந்த 170 வெள்ளைப் பெண்களையும், பிள்ளை

களையுங் கான்பூருக்கு அனுப்பினர். மறு நாள் பயணத்தின் போது கிடைத்த வதந்திகளைக் கேட்டு, அவ் வகதிகள் இரு பிரிவுகளாகப் பிரிந்தனர். ஒரு கூட்டம், தரம்பூர் பெரு நிலக் கிழார் ஹரிதேவ் பக்ஷ் என்பவரிடம் தஞ்சம் புகுந்தது. சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் ஃபதேகரை அடைந்தது. மற்ற வர்கள் கான்பூரை நெருங்கியதும், நானாவின் ஆட்களால் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்!

ஃபதேகர் சிப்பாய்கள் எளிதில் கிளர்ச்சியில் ஈடுபட வில்லை. ஜுன் 16ஆம் நாள் சீதாப்பூர்ப் புரட்சி வீரர்களின் சுபேதார் இவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்று கண்டு பிடிக் கப் பட்டது. 'நாங்கள் பதேகரை நெருங்கி விட்டோம். நீங்கள் உடனே பரங்கியரைக் கொன்று, கருவூலத்தைக் கைப்பற்றிய பிறகு எங்களுடன் சேரவும்.' என்பது அக் கடி தத்தின் வாசகம். 'நெடு நாள் ஆங்கில நிறுவனத்தின் உப்பைத் தின்ற நாங்கள் கிளர்ச்சியில் ஈடுபட மாட்டோம். அத்துடன் சீதாப்பூர் வீரர்களையும் இங்கு வர அனுமதிக்க மாட்டோம்' என்று வெள்ளை அதிகாரிகளுக்குப் பதிலளித்ததுடன், அவர் கள் அதற்குச் சான்றாகப் படகு பாலத்தையும் தகர்த்தனர். இடையில் என்ன நேர்ந்ததோ? மறு நாளே சிப்பாய்கள் மாறி விட்டனர். 'உங்கள் ஆணையை இனி நாங்கள் ஏற்க மாட் டோம். கோட்டைக்குள் சென்று உங்களைப் பாது காத்துக் கொள்ளுங்கள்' என்று அதிகாரிகளிடம் அவர்கள் கூறி விட் டனர். வெள்ளையர் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். உடனே சிப்பாய்கள் தங்கள் பழைய நவாப்பை தலைவனாக் கிக் கொண்டு, கருவூலத்தைக் கொள்ளை யடித்தனர். படகு களில் கங்கையைக் கடந்து பதேகருக்கு வந்த சீதாபூர் வீரர் கள் கொள்ளையில் பங்கு கேட்ட போது, ஃபதேகர் வீரர் கள் மறுத்ததுடன், பணத்தைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு, தங்கள் தங்கள் கிராமங்களுக்கு ஓடி விட்டனர்! இதனால், எஞ்சிய சில ஃபதேகர் வீரர்களுக்கும், சீதாபூர் வீரர் களுக்கும் மோதல் ஏற்பட்டு இரு தரப்பிலும் பலர் உயிரிழந் தனர். அதன் பிறகு அவர்களுக்கிடையே சமாதானம் ஏற் பட்டு, வெள்ளையர் தங்கி யிருந்த கோட்டையை முற்றுகை யிட் டனர். ஒரு வாரத்திற்கும் மேல் முற்றுகை நீடித்தது. அதற்கு மேல் வெள்ளையர்களால் தாங்க முடிய வில்லை. அச் சமயத்தில் பெய்தப் பெரு மழையின் காரணமாகக் கங்கை வெள்ளங் கோட்டை மதிலைத் தழுவி ஓடியது. அதைப் பயன் படுத்திக் கொண்டு, ஜுலை 3ஆம் நாள் நள்ளிரவில் மூன்று படகுகளில் ஏறி, வெள்ளையர்கள் தப்பிச் சென்றனர். அவ் விரவிலுஞ்

சிப்பாய்கள் அவர்களைக் கண்டு பிடித்துக் கரை வழியே ஓடி, ஓடித் தாக்கினார்கள். மறு நாள் சிங்காரம்பூர் எனுஞ் சிற்றூருக்கருகில் வெள்ளையர் பாழடைந்த சுக்கானைச் செப்பனிட்டுக் கொண்டிருக்கும் போது, திடீரென கிராமவாசிகள் துப்பாக்கிகளால் அவர்களைச் சுட்டனர். படகிலிருந்து குதித்துக் கரையேறிய ஐந்து ஆங்கிலேயர்கள் பதிலுக்கு ஆவேசத்துடன் தாக்கியதில் பல கிராம வாசிகள் உயிரிழந்தனர். பயணந் தொடர்ந்தது. சிறிது தூரஞ் சென்ற பிறகு, ஒருபடகு மணல் மேட்டில் தரை தட்டி நின்றது. சிக்கிக் கொண்ட வெள்ளையர்களை நோக்கி இரு படகுகள் பின் தொடர்ந்து வந்தன. காலிப் படகுகள் என்றெண்ணினர். ஆனால், நெருங்கிய அப்படகுகளில் மறைந்திருந்த சிப்பாய்கள், கண நேரத்தில் பல வெள்ளையர்களைச் சுட்டுத் தள்ளினர். பலர் நதியில் குதித்து வெள்ளத்தில் அமிழ்ந்தனர். பலர் உயிரோடு புரட்சி வீரர்களால் பிடிக்கப் பட்டனர். சிலர் மட்டும், படகை அசைத்து எப்படியோ நகர்த்திப் பயணத்தைத் தொடர்ந்தனர். இருள் கவியும் நேரத்தில் அவர்கள் ஒரு கிராமத்தை அடைந்தனர். அவ் வூர் மக்கள் அவ் வகதிகளுக்கு நல்ல பணி விடைகள் செய்தனர். சப்பாத்தியும், எருமைப் பாலுங் கொடுத்தனர். மறு நாள் புறப்பட்ட அவர்களின் விதி வேறாகி விட்டது. கான்பூரின் நிலையை அவர்கள் அறிய வில்லை. நானாவின் கொடி அங்கே பறந்து கொண்டிருந்தது. கான்பூர் சிப்பாய்களிடம், இந்த ஃபதேகர் அகதிகளுஞ் சிக்கினர். பீபிகர் படுகொலைக்கு இவர்களும் பலியானார்கள்! ஃபதேகரிலிருந்த 170 வெள்ளையர்களில் ஒரு சிலரே உயிர் பிழைத்தனர்!

இந்தப் ஃபதேகரை நோக்கித்–தான் தலைமைத் தளபதி கேம்பல் தம் பார்வையைச் செலுத்தினார். இதைக் கைப் பற்றி விட்டால், அலஹாபாத்திலிருந்து டெல்லி வரையிலுள்ள யமுனை–கங்கை நதிகளின் இடைப் பகுதியில் (the Doab) மீண்டும் ஆங்கில ஆட்சியை நிலை நாட்டி விடலாம். எப்படியெனில்? மேலே டெல்லி, செப்டம்பரில் மீட்கப்பட்டு விட்டது; அருகிலுள்ள ஆக்ரா தாக்குப் பிடிக்கிறது; கீழே அலஹாபாத்தும், கான்பூரும் கை வசம் இருக்கின்றன. அவர்கள் மேற்கொண்டுள்ள முதல் பணி, கங்கை நதியின் மேற் பாகத்திலுள்ள அயோத்தி, ரோகில் கண்ட் பகுதிகளில் கிளர்ச்சிகளை அடக்கி, ஆங்கில ஆட்சியை நிறுவ வேண்டும், என்பதே ஆகும். அதற்கு ஃபதேகரைக் கைப் பற்றுவது இன்றியமையாதது. அவரால், உடனடியாக அங்கேச் செல்ல முடிய வில்லை. போக்குவரத்திற்குத் தேவையான வண்டிகள் அவரிடம் அப்

பொழுது இல்லை. லக்னோவைக் கைப்பற்ற, ஆலம்பாக் வனத்தில் நிறுத்தப் பட்டிருக்கும் உட்ராமிற்குப் பல வண்டிகள் கொடுக்கப் பட்டிருந்தன. லக்னோ அகதிகளை அலஹாபாத்திற்குக் கொண்டு சென்ற வண்டிகள் டிசம்பர் 26ஆம் நாள் வரை திரும்ப வில்லை. அவை வரும் வரை, ஃபதேகர் படையெடுப்புக்குத் தேவையான பிற ஏற்பாடுகளைக் கேம்பல் கவனித்தார். எந்த அளவிற்கு எச்சரிக்கை உணர்வும், கூரிய மதியும் கேம்பல் கொண்டிருந்தார் என்பதை இதோ அவர் திட்டமே உணர்த்தும்!

அப்பொழுது வரை படத்தின் உதவி நமக்குத் தேவை. கர்னல் வால்போல், ஒரு படையுடன் கான்பூருக்குத் தென் மேற்கே உள்ள அக்பர்பூருக்குச் செல்ல வேண்டும். அங்குள்ள புரட்சிக்காரர்களை விரட்டி யடித்துக் கொண்டு, வட மேற்கே யமுனை நதிக் கரையிலுள்ள எட்டாவா வழியாக, மெய்ன் புரியை அடைய வேண்டும். இதற்கிடையில், டெல்லி மீட்சிக்குப் பிறகு, அலிகார் வந்திருந்த கர்னல் சிட்டன், தன் படையுடன் நேரே மெய்ன்பூருக்கு வந்து காத்திருக்க வேண்டும். அங்கிருந்து வால்போலும், சிட்டனும் ஃபதேகருக்குச் செல்ல வேண்டும். தலைமைத் தளபதி, கான்பூரிலிருந்து நேரே அங்கு வந்து விடுவார். இத் திட்டப்படி ஃபதேகரை முற்றுகையிடுவதற்கு, இம் மூன்று படைகளும் எப்படி இணைந்தன? என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

கர்னல் சிட்டன், டிசம்பர் 9 ஆம் நாள் டேல்லியை விட்டுப் புறப்பட்டான். அவருடைய படையில் 500 குதிரை வீரர்களைக் கொண்ட ஹாட்சனின் அணியும் இருந்தது. இந்த ஹாட்சனை நினைவிருக்கிறதா? டெல்லி மீட்சியின் போது, மொகலாய இளவரசர்களை நகரின் நுழை வாயிலில் சுட்டுக் கொன்றானே! அவன்தான் இவன். சிட்டனின் இப் படை அலிகாரில் கிளர்ச்சியை அடக்கி, கடும் எதிர்புக்கிடையே காஸ்கஞ்சைப் பிடித்து, இப் பயணத்தில், ஹாட்சனின் குதிரை வீரர்கள், இயலாதவற்றை யெல்லாஞ் செய்து முடித்தனர். காற்றாய்ப் பறக்கும் அவ் வெள்ளை அராபியப் புரவியின் மேல், கம்பீரமாய் அமர்ந்திருக்கும் ஹாட்சனைக் கண்ட புரட்சி வீரர்கள் சிட்டாய்ப் பறந்தனர். ஃபருக்காபாத் நவாப்பின் தளபதியை ஹாட்சன் தன் கையாலேயே கொன்றது; அவனுடைய கை வாள். யானை, வெள்ளி அம்பாரம் ஆகியவற்றைக் கைப் பற்றினான், ஓய்வுப் பணம் பெற்று வந்த பழைய சுதேசி அதிகாரி, ஜோவார்சிங்கும். அவனுடைய மகனும் வெள்ளைப் படையை

வழி மறித்தனர். ஹாட்சன் தன் குதிரைப் படையுடன் சென்று அம் மகனைக் கொன்று, தந்தையைக் கைது செய்து கொண்டு வந்தான். அன்று மாலையே அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, அவன் பீரங்கி வாயில் கட்டிச் சுடப்பட்டான். சிட்டனின் படைகள் நெருங்க நெருங்க, மெய்ன் புரியின் இந்து சிற்றரசன் தேஜ்சிங், தன் வீரர்களுடன் சூழ்ந்தான். அவனையும் விரட்டிக் கொண்டு சிட்டன் முன்னேறினன் (டிசம்பர் 27) அவன் நினைத்தபடி புரட்சிக் காரர்கள் அழிந்து விட வில்லை. அவர்கள் தோல்வியில் துவளவும் இல்லை. எங்கெங்கேப் பரங்கியர்களின் சல சலப்புக் கேட்டதோ, அங்கெங்கெல்லாம் புரட்சியானது, தன் கொலை வாளை வீசியது. இக் கொடூர எதிர்ப்பைச் சமாளிக்கத் தலைமைத் தளபதியுடன் தொடர்பு கொண்டால்தான் முடியும், என்ற நிலைமை ஏற்பட்டது. அவர் 55 மைல்களுக்கப்பால் மீரான்-கி-சராய், என்ற இடத்தில் முகாமிட்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. காவற் படையுடன் அங்கே செல்லுவது அவ்வளவு எளிதல்ல. படைகளின் இணைப்புக்குத் தேவையான திட்டக் குறிப்புகளை அறிந்து வர அவரிடம் ஹாட்சன் அனுப்பப் பட்டான். அவனைத் தவிர வேறு எவராலும் அப்பயணத்தை மேற்கொள்ளவே முடியாது. வழி யெங்குஞ் சிப்பாய்கள் வேட்டை, அவர்கள் நாய்களைப் போலத் திரிந்து கொண்டிருந்தனர். ஒரே நாளில் 55 மைல்களுக்கு மேலும் பயணஞ் செய்து, எதிரிகளுக்குத் தப்பி, மீரான்-கி-சராயில் தளபதி கேம்பலைக் கண்டு, தேவையான குறிப்புகளுடன் ஹாட்சன் திரும்பினன். டிசம்பர் 31 ஆம் நாள் மெய்ன்புரிக் கருகே, பேசுவார் எனும் இடத்தில், சிட்டன் முகாமிட்டு, வால் போலுக்காகக் காத்திருந்தான்.

வால்போல் கான்பூரை விட்டு டிசம்பர் 18 ஆம் நாள் தன் படையுடன் புறப்பட்டான். எட்டாவை அடையும் வரையில் புரட்சி வீரர்கள் தென்படவே வில்லை. எட்டாவா, புரட்சியின் தொடக்கத்திலேயே சிதைந்து விட்டது. நீதி மன்றமும், மாதா ஆலயமும், வீடுகளும், இடிந்து கிடந்தன. வால்போல் வருகிறன், என்று கேள்விப் பட்ட அவ்வூர் மக்கள் ஓடி விட்டனர். சில வீரர்கள் மட்டும், உயிரின் மேல் சிறிதும் பற்றின்றி பரங்கியரைக் கொன்றே தீருவோம்; என்று காத்திருந்தனர். வால்போல் ஊருக்குள் நுழைந்ததும், இடிபாடுகளில் மறைந்திருந்து புரட்சி வீரர்கள் சுட்டனர். நெடுநேரப் போருக்குப் பிறகு, வால்போல் வெடி குண்டுகளை விட்டெறிந்து இடிபாடு

களில் அழுத்திச் சிப்பாய்களைக் கொன்றான். (டிசம்பர் 29) வேறு எதிர்ப்பு எதுவுமின்றி ஜனவரி 3 ஆம் நாள் சிட்டனுடன், வால்போல் இணைந்து கொண்டான்.

தலைமைத் தளபதி கேம்பல், டிசம்பர் 24 ஆம் நாள், கான்பூரிலிருந்து புறப்பட்டு, டிசம்பர் 30 ஆம் நாள் மீரான்-கி-சராயை அடைந்தார். அங்கே தன்னை நாடி வந்த ஹாட்சனுக்குப் போர்க் குறிப்புகள் கொடுத்து விட்டு, மறு நாள் 'குருகஹா கஞ்ச்' என்ற ஊரை யடைந்தார். அங்கேதான் புரட்சி வீரர்கள் பெரும் அளவில் கூடியிருந்தனர். இவ் வூருக்கருகே பாயுங் காளிநதி, சற்றுத் தொலைவில்தான் கங்கை நதியுடன் கலக்கிறது. கர்னல் வால்போல் ஒரு புறம்; பிரிகேடியர் சிட்டன் மறு புறம்; ஜெனரல் கேம்பல் மற்றொரு புறம்; இம் மூவரும் நெருங்கியதால், பீதி யடைந்த புரட்சி வீரர்களுக்கு ஒரே ஒரு வழிதான் திறந்திருந்தது. காளி நதியின் சிதலடைந்த மரப்பாலத்தைக் கடந்து, ஃபதேகருக்கு ஓடுவது தான் அது! கேம்பல், பாலத்தை நெருங்குவதற்கு முன்பே, சிப்பாய்கள் தப்பி விட்டனர். ஆனால், வழக்கம் போல், முட்டாள் தனமாகப் பாலத்தைத் தகர்க்காமல் விட்டுச் சென்றார்கள். கேம்பல், உடனே பாலத்தைச் செப்பனிடும் வேலையிலிறங்கினார். மறு நாள் காலை (1858 ஜனவரி 1) பாலப் பணி முடிந்து, பரங்கியர்கள் அழுக்கேறிய துணிகளை ஆற்றில் அலசிக் கொண்டிருந்தனர். திடீரென வெடி யோசை கேட்டது. பீரங்கிக் குண்டுகள் அருகே விழுந்தன. பாலத்தைக் கடந்த புரட்சி வீரர்கள் சிதறி மறைய வில்லை. ஓடி ஒளிவதற்காகிளர்ச்சி? அவர்கள் ஓடுவது உயிருக்காக அல்ல. தப்பி மறைந்து கொள்ளத்தான் தப்புவது உயிர் வாழ்வதற்காக அல்ல! மீண்டும் பரங்கியரின் மேல் பாய்வதற்கே! ஆம். கண நேரத்தில் காளி நதியில் வெள்ளையர்கள் பிணமாய் மிதந்தனர். பாலத்தின் வேலை நடந்த போது தாக்கி யிருந்தால், இன்னும் பலரைக் கொன்றிருக்கலாம், பாலத்தையுந் தகர்த்திருக்கலாம். ஆனால், இப்போது......சிறிது நேரத்தில் வெள்ளையர்கள் அதிர்ச்சியிலிருந்து மீண்டு, பாலத்தைக் கடந்து மறு கரையை அடைந்து விட்டனர். பரங்கிப் படை சிறியது! புரட்சி வீரர்கள் மீண்டும் ஓட்டம் பிடித்தனர். இம் முறை தப்பிக்க முடியாது. வெள்ளை குதிரை வீரர்கள் விரட்டி விரட்டிச் சுட்டனர். வழி நெடுக புரட்சி வீரர்களின் உடல்களும், அங்கங்களுஞ் சிதறிக் கிடந்தன! காயம் பட்டோர் ஓடினர்... பல்லக்குகள், பீரங்கிகள், வெடி மருந்துகள் அனைத்தையும் விட்டு விட்டே ஓடினர், மூச்சிரைக்க ஃபதேகரை நோக்கி

ஓடினர்......ஓடினர். அங்கும் நொடிப் பொழுதில், தங்கள் கூடாரங்களில் எடுக்க முடிந்த பொருட்களைத் தூக்கிக் கொண்டே ஓடினர். புரட்சி மறந்து......வீரம் மறந்து...... தியாகம் மறந்து......விடுதலை மறந்து கங்கையைக் கடந்து ரோகில் கண்ட் திசையில் தலைதெறிக்க ஓடினர்!

வாகை சூடி, சினந் தணிந்து குதிரைப் படை, கேம்ப லின் முகாமை அடைந்ததும், மகிழ்ச்சி ஆரவாரம் ஒலித்தது. வீரர்கள் தலைமைத் தளபதிக்கு 'மும்முறை வாழ்த்து' (Three Cheers) கூறினர். கரவொலி எழுப்பினர். ஈட்டிகளைத் தூக்கி மேலே எறிந்து பிடித்தனர். கைப் பற்றியப் புரட்சிக் கொடிகளைக் காற்றில் பறக்க விட்டு, வேடிக்கை பார்த்தனர். கேம்பல் தம் தொப்பியைக் கழற்றி, சிரந் தாழ்த்தி, அவர் களைப் பெருமைப் படுத்தினர்.

ஜனவரி 3 ஆம் நாள், எவ்வித எதிர்ப்பு மின்றி, வெள்ளை யர்கள் ஃபதேகரைப் பிடித்தனர். வெற்றி பெருவோம்; என்று புரட்சி வீரர்கள் தீவிர ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். பீரங்கி களும், வண்டிகளுஞ் செய்ய ஏராளமான சாமான்கள் அங்கே குவிக்கப் பட்டிருந்தன. வெடிமருந்து பீப்பாய்களும், துப் பாக்கிகளும் நூற்றுக் கணக்கில் அங்கே இருந்தன. தப்பிக்கும் அவசரத்தில் இம் முறையும் புரட்சி வீரர்கள் பெருந் தவ றைப் புரிந்தனர், இத் தளவாடங்களை அழிக்காமல் விட்டது வெள்ளையருக்குச் சாதகமா யிற்று. படகு பாலத்தைத் தகர்க் காமல் விட்டது, எதிரிகள் கங்கையை விரைவில் கடக்க உதவி செய்தது. இதனால், வெள்ளையர் பலம் ஓரளவு அதிகரித்தது. ஃபதேகரில் நின்ற கேம்பலின் படையில் அப்பொழுது 10,000 வீரர்கள் இருந்தனர்.

ஃபதேகரைச் சுற்றிலும் அமைதியை நிலை நாட்ட வெள் ளைத் துருப்புகள் அனுப்பப் பட்டன. ஒவ்வொரு கிராமத் திலும் குற்றவாளிகள் பிடிக்கப் பட்டனர். ஆங்காங்கே விசா ரணைகள் நடத்தப் பட்டது. மூர்க்கத்தனமான அம் முஸ்லிம் கள் நூற்றுக்கணக்கில் ஊர் நடுவில் நின்ற ஆல மரக் கிளை களிலே தூக்கிலிடப் பட்டனர். பீரங்கி வாயில் கட்டிச் சுடப் பட்டனர். ஃபதேகர் பகுதி அமைதியாயிற்று!

———

# 30. ரோகில் கண்டா? அயோத்தியா?

[புத்தாண்டு — குளிர் காலம் — தலைமைத் தளபதி ரோஹில் கண்ட் படை யெடுப்பிற்கு முதலிடம் — மேலிடம் அரசியல் காரணங்களுக்காக அயோத்தித் தாக்குதலுக்கு முதலிடம் தருதல்—அயோத்தி படை யெடுப்பு — கான்பூர் வழியாக லக்னோவிற்கு—மிகப் பெரும் உனோமுகாம்—நேப்பாள உதவி—கோரக்பூரில் முகம்மது ஹசன் புரட்சித் தலைவன் — வடக்கிலிருந்து கூர்க்காப் படையும் — தெற்கிலிருந்து ஃபிராங்ஸின் படையும் அயோத்தி நோக்கி முன்னேறுதல் — பண்டா ஹசன், மெஹிந்தி ஹசன் தோல்வி — ஃபிராங்ஸ் தலைமைத் தளபதியுடன் இணைதல்—கூர்க்காப் படை காண்ட்த் கோக்ரா, நதிகளைக் கடத்தல்—தலைமைத் தளபதி முகாமை அடைதல்.]

புரட்சித் தொடங்கி ஏழு மாதங்கள் ஆகி விட்டன. புத்தாண்டும் (1858) பிறந்து விட்டது. சர் காலின் கேம்பல், லக்னோ அகதிகளைக் காப்பாற்றி, கான்பூரைக் கைப்பற்றி, மூன்றாவதாக ஃபதேகரையும் மீட்டு விட்டார். அங்கிருந்து ரோஹில் கண்ட்டுக்குச் செல்லுவதா? அயோத்திக்குச் செல்லுவதா? 'குளிர் காலத்தில் போரிடுவது வெள்ளையர்களுக்கு எளிதாகையால், உடனே ரோகில் கண்ட்டின் மேல் படையெடுக்க வேண்டும்; சூடு ஆறுவதற்கு முன்பே புது வெற்றிகளைப் பெற வேண்டும்; சுற்றியுள்ள பகுதிகள் மீட்கப்பட்டு விட்டால், புரட்சி வீரர்கள் அயோத்தியில் முடக்கப்படுவார்கள்; அவர்களை அடக்க 30,000 வீரர்கள் கொண்ட பெரும் படை யொன்று தேவைப்படும்; எனவே, ரோகில் கண்டிலிருந்து எதிரிகளைக் கீழ் நோக்கி அயோத்திக்குள் விரட்ட வேண்டும்' என்று தலைமைத் தளபதி திட்ட மிட்டார். ஆனால், மேலிடத்தில், தலைமை ஆளுநர் கானிங்கும், பிற உயர் உறுப்பினர்களும் வேறு விதமாகத் திட்ட மிட்டனர். அவர்களுக்கு ரோகில் கண்டை விட அயோத்தியே முக்கியமானது. அதுவும் உண்மைதான். 'டெல்லியைப் போலவே லக்னோவும்

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததே யாகும். மூலை முடுக்கு களிலிருந் தெல்லாம் புரட்சி வீரர்கள், அங்கு தான் வருகிறார் கள். அயோத்தியை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டது, புரட்சிக்கு ஒரு பெருங் காரணமாகக் கருதப்பட்டதால்தான். அதன் எழுச்சியும், மீட்சியும், புரட்சியைத் தூண்டும்; அல்லது அணைக்கும். அயோத்தியில் மீண்டும் யூனியன் ஜாக் கொடி ஏற்றப்படும் வரையில், ஆங்கில வெற்றிகள், வெற்றி களாகக் கருதப்பட மாட்டாது. அத்துடன் அயோத்தியில் புரட்சிப் படையினருக்கு நேரப் போகும் விதியைப் பொருத்தே தான், ரோகில் கண்ட்டின் விளைவுகள் ஏற்படும். அயோத்தி வீழ்ந்தால், அதுவுஞ் சேர்ந்தே விழும். இக் காரணங் களைத் தவிர, அயோத்திக்கு மேல் புறத்திலுள்ள நேப்பாள (இந்து) நாட்டின் அமைச்சர் ஜாங் பகதூர், தம் பதினாயிரம் கூர்க்கா வீரர்களுடன் அயோத்தி மீட்புக்கு உதவக் காத்திருக் கிறார். அவர்களைக் காக்க வைப்பது, ஒரு நட்பு நாட்டின் உதவியை உதாசீனஞ் செய்வது போலாகும். இந்தச் சூழலில், அயோத்தி மீட்புக்கே முதலிடம் அளிக்க வேண்டும்' என்று மேலிடம் வற்புறுத்தியது. அரசியல் காரணங்களுக்காக இராணுவ யுக்திகளை ஒதுக்கி விட்டு, அயோத்தியின் மேல் படை எடுக்கச் சர் காலின் கேம்பல் முடிவெடுத்தார். இத் தகைய முடிவுகளில் - தான், ஒரு பேரரசின் விதியே பிணைக்கப் பட்டிருக்கிறது; என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அயோத்திப் படை யெடுப்புக்கு, வழக்கம் போல் எச்சரிக் கையுடன் கேம்பல் ஏற்பாடுகளை மேற் கொண்டார். பதே கரையும், அதன் சுற்றுப் புறங்களையும் பாதுகாக்க கர்னல் சிட்டனை அமர்த்தினார். ஆக்ராவி லிருந்து முற்றுகைத் தொடரை வர வழைக்க ஏற்பாடுகள் செய்தார். தன்னுடைய அடுத்த இலக்கு ரோகில் கண்ட்டே தான், என்று அங்குள்ள புரட்சி வீரர்கள் நம்பும்படிச் சிறு படை யொன்றை அத் திசையில் அனுப்பினார். அத்துடன், வட மேற்கி லிருந்து தாக்கி ரோகில் கண்ட் வீரர்களின் கவனத்தை அப் பக்கம் ஈர்க்கும்படிப் பஞ்சாபின் தலைமை ஆணையர் சர் ஜான் லாரன் ஸைக் கேட்டுக் கொண்டார். இவ்விதம் முன்னெச்சரிக்கை யான ஏற்பாடுகளைச் செய்து விட்டு, (1858) ஃபிப்ரவரி முதல் நாள் ஃபதேகரை விட்டுப் புறப்பட்டு, நான்கு நாட்களில் கான்பூரை அடைந்தார். அங்குச் சில நாட்கள் தங்கி, பெரும் படை யெடுப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு, லக்னோ சாலையில் உன்னோ என்ற இடத்தில் ஃபிப்ரவரி 23ஆம் நாள் முகா மிட்டார். அவருடைய திட்டத்தின்படி தளபதி

களும், வீரர்களும், (தளவாடங்களுடன்) அங்கே வந்து சேர்ந்தனர். இந்தியாவில் ஆங்கிலேயர் மேற்கொண்ட மிகப் பெரும் போர் ஏற்பாடுகளில் இதுவும் ஒன்று.

கேம்பல், கூர்க்காப் படையையும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார். நேப்பாள அமைச்சர் ஜாங் பகதூர் ஐரோப்பாவிற்குச் சென்று வந்தவர். பிரிட்டானியப் பேரரசின் செல்வாக்கையும், வலிமையையும் நன்கு உணர்ந்தவர். காலத்தில் தாஞ் செய்த உதவிக்கு ஆங்கிலேயர்கள் என்றென்றுங் கடமைப் பட்டிருப்பார்கள்; என்று கருதித்தான், புரட்சித் தோன்றியதும் அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தார். (1857) ஜூலை மாத இறுதியில், 3000 கூர்க்கா வீரர்கள், தங்களின் தெற்கு எல்லையைத் தாண்டி, ஆங்கில ஆட்சிப் பகுதியான கோரக்பூருக்கு வந்தனர். பல விடங்களில் அவர்கள் ஆங்கிலேயருக்கு உதவினர். கோரக்பூர், ஆசாம் நகர், ஜான்பூர், காசி ஆகிய ஊர்களை வடக்குத் தெற்காக இணைக்கும் பகுதியே வட மேற்கு மாநிலங்களின் ஒரு பகுதியாகும். இப் பகுதிக்கு மேற்கில் அயோத்தியும், கிழக்கில் பீஹாரும் உள்ளன. இவ் விரண்டிற்கும் இடைபட்ட அப் பகுதியிலுள்ள புரட்சி வீரர்களை அடித்துத் துரத்தி, கிழக்கு முகமாக அயோத்திக்குள் கூர்க்காப் படை நுழைய வேண்டும்; என்பது ஏற்பாடு. முன்பு அயோத்தி மன்னரின் பிரதிநிதியாகக் கோரக்பூரிலிருந்த முகமது ஹசன் என்பவன், இப்பொழுது புரட்சியிலீடுபட்டு, அப் பகுதியில் ஒரு தனி ஆட்சியையே ஏற்படுத்தி யிருந்தான். இவனை அடக்குவதில் - தான், கூர்க்காப் படை முதலில் பயன்படுத்தப் பட்டது. (1857) டிசம்பர் 21ஆம் நாள் நேப்பாள அமைச்சர் ஜாங் பகதூர் தலைமையில் 10,000 கூர்க்கா வீரர்கள் தெற்கு நோக்கி முன்னேறினர். அப் படையை நடத்திச் செல்ல ஜெனரல் மக்கிரேகர் (Macgregor) அனுப்பப் பட்டிருந்தார். அதே சமயத்தில், காசியின் பாது காப்பை அனுசரித்து, ஜான்பூரில் பிரிகேடியர் - ஜெனரல் பிராங்ஸின் (Franks) தலைமையில் ஒரு படை நடத்தப் பட்டிருந்தது. இவ்விதம் வடக்கி லிருந்து கூர்க்காப் படையும், தெற்கிலிருந்து பிராங்ஸின் படையும் புரட்சி வீரர்களை நெருக்கின. இவ் விரு படைகளும், மேற்கே யுள்ள அயோத்திக்குள் நுழைய வேண்டும்.

பிராங்ஸ் முதலில் முன்னேறினர். ஃபிப்ரவரி 19 ஆம் நாள் சாண்டா என்னுமிடத்தில் பண்டா ஹசன், மேந்தி ஹசன் ஆகிய இருவர் தலைமையி லிருந்த புரட்சிப் படையைக் கடும் போருக்குப் பின்பு, ஃபிராங்ஸ் தோற்கடித்தார். புத்தாயன்

என்னுமிடத்தில் மீண்டும் ஒரு முறை, மேந்தி ஹசன் தோற் கடிக்கப் பட்டான். சுல்தான்பூரில் காபர்பேக் என்ற அயோத் திப் புரட்சித் தலைவன் பெரும் படையுடன் எதிர்த்தான். ஏராளமான வீரர்களையும், ஆயுதங்களையும் இழந்து, அவ னும் தோற்றான். இவ்விதம் 13 நாட்களில், 130 மைல்கள் கடந்து, புரட்சி வீரர்களைச் சிதற அடித்து விட்டு, மார்ச்சு 4 ஆம் நாள் பிரிகேடியர் ஜெனரல் ஃபிராங்ஸ், லக்னோவிற்கு 8 மைல் தொலைவி லிருந்த தலைமைத் தளபதி கேம்பலின் முகாமை அடைந்தார்.

இதற்கிடையில், கூர்க்காப் படை, டிசம்பர் 30 ஆம் நாள் காண்டக் நதியைக் கடந்து கோரக்பூரில் புரட்சியை அடக் கியது! ஃபிப்ரவரி 25 ஆம் நாள் கோக்ரா நதியைக் கடந்து ஆம்பர்பூர் கோட்டையை மீட்டது! பின்பு கோமதி நதியைக் கடந்து தலைமை தளபதியின் முகாமை மார்ச் 11 ஆம் நாள் அடைந்தது! இவ்விதம் கிழக்கு முகமாகப் ஃபிராங்ஸூம், ஜாங் பகதூரும் அயோத்திக்குள் நுழைந்து விட்டனர்!

———

# 31. ஆலம்பாக்—உட்ராம்—அஹமதுல்லா

[உட்ராம் — ஆலம் பாக்கில் நிறுத்தப் படல் — 3 மாதங்களில் அவர் நிலை—ஆலம் பாக் சோலை — அஹமதுல்லா, பேகம் ஹஸரத் மஹால் உட்ராமைத் தாக்குதல் — முதல் முயற்சி — பண்டங்கள் ஏற்றிய வண்டிகளை வழி மறித்தல் — உட்ராம் வெற்றி — புரட்சிப் படை மீண்டுந் தாக்குதல் (பிப். 15) — தோல்வி யடைதல் — புரட்சிப் படை இறுதித் தாக்குதல் — தோல்வி யடைதல் — கேம்பல் ஆலம்பாக்கிற்கு வருதல் மார்ச் 1 — லக்னோ தாக்குதல் திட்டம்.]

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் லக்னோ நிலையரகத்திலிருந்து வெள்ளையரைக் காப்பாற்றிய தலைமைத் தளபதி ஊருக்கு வெளியே, ஆலம்பாக்கில், 4000 வீரர்களைச் சர் ஜேம்ஸ் உட்ராமின் தலைமையில் நிறுத்தி வைத்து விட்டு, கான்பூரைமீட்கச் சென்றதை நாம் பார்த்தோம்! கான்பூரையும் ஃபதேகரையும் மீட்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு, அவர் மீண்டும் லக்னோவை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். இந்த இடைக் காலத்தில் உட்ராமின் நிலை என்ன?

ஆலம்பாக் என்றால் அகிலத்தின் சோலை என்று பொருள். அரச குலத்திற்குச் சொந்தமான இவ் வனம், லக்னோவிலிருந்து மூன்று மைல் தொலைவில் தான் இருந்தது. மிகப் பெரிய இவ் வனத்தைச் சுற்றி 9 அடி உயரச் சுவர் நின்றது. இதற்குள்ளும், அருகிலும் உட்ராம் தம் 4000 வீரர்களுடன் முகாமிட்டிருந்தார். ஆங்கிலேயரின் பிடியிலிருந்து, அயோத்தி முழுவதுமே நழுவி விடவில்லை என்பதைப் புரட்சிக் காரர்கள் அறிந்து கொள்ளவே உட்ராமின் இந்த முகாம் நிறுத்தப் பட்டிருந்தது. லக்னோவில் குவிந்து வரும் புரட்சிக்காரர்கள், உட்ராமை முறியடிக்கப் பல முறை முயன்றனர். இம் முறியடிப்புக்குத் தலைமை தாங்கியவன் அந்த ஃபைஸாபாத் மர்ம

மௌல்வி அஹமதுல்லா! அயோத்தி அரசி பேகம் ஹசரத் மஹாலும், அஹமதுல்லாவும் இணைந்தே இம் முயற்சியினை மேற்கொண்டார்கள்.

முதல் முயற்சி டிசம்பர் 22ஆம் நாள் மேற் கொள்ளப் பட்டது. உட்ராமின் கான்பூர்த் தொடர்பைத் துண்டித்துத் தாக்க, ஆலம்பாக்கிற்கப்பால் புரட்சிப் படை இரகசியமாக ஊடுருவியது. ஒற்றர்களின் மூலம் அவர் தம் நிலையை அறிந்த உட்ராம், புரட்சிப் படைக்கும், லக்னோவிற்கும் தொடர்பில் லாதபடி, தம் படைகளை நிறுத்தினார். அன்று நடந்த போரில், புரட்சிப் படை தோற்றுப் பின் வாங்கியது. அதைத் தொடர்ந்து, பல நாட்கள் வரையில் எதுவும் நேர வில்லை. ஆனால், பரங்கியரின் ஒவ்வொரு அசைவையும், அஹமதுல்லா ஒற்றர்களின் மூலம் அறிந்து வந்தான். புத்தாண்டு பிறந்த சில நாட்களுக்குப் பின்பு, முகாமிற்குத் தேவையான பண்டங் களைக் கொண்டு வரப் பல வண்டிகளைக் கான்பூருக்கு உட்ராம் அனுப்பினார். பண்டங்களைப் பாதுகாப்புடன் கொண்டு வர 500 வீரர்களும், வண்டிகளுடன் அனுப்பப் பட்டனர். பரங்கி யரின் படை பலம் குறைந்திருக்கும் இத் தருணத்தைப் பயன் படுத்திக் கொண்டு ஜனவரி 12ஆம் நாள் சுமார் 30,000 வீரர்களுடன் புரட்சிப் படை ஆலம்பாக்கை வளைத்தது. இம் முறையும் உட்ராம் அவர்களைத் தோற்கடித்து விரட்டினார்.

புரட்சி வீரர்கள் மனந் தளர வில்லை; ஓய்வும் எடுக்க வில்லை. 'கான்பூரிலிருந்து பண்டங்கள் ஏற்றி வரும் வண்டி களை வழி மறித்து முறியடித்தே மீள்வேன்' என்று அஹம துல்லா சூளுரைத்தார்! ஜனவரி 12 லிருந்து 20 ஆம் நாள் வரை எட்டு நாட்கள், பரங்கியரை வெளியேற்ற நல்ல நாட் கள்; என்று லக்னோ சோதிடன் ஒருவன் கணித்த ஆரூடத் தைப் புரட்சி வீரர்கள் நம்பித்தான், இவ்வளவு விரைவில் மறு தாக்குதலை மேற் கொண்டனர். என்றுஞ் சொல்லப்படுகிறது. ஆனால், பண்டங்கள் ஏற்றிய வண்டிகளின் வருகைதான் முக் கிய காரணமாக இருந்திருக்கும். ஜனவரி 16 ஆம் நாள்! கான் பூரை நோக்கிப் புழுதிப் புயல் பயங்கரமாக வீசிக் கொண்டி ருந்தது! வரப்போகும் ஆபத்தை யறியாத வண்டிகள் ஆலம் பாக்கை நோக்கி மெள்ள நகர்ந்து கொண்டிருந்தன. ஆனால், அஹமதுல்லாவின் திட்டத்தை ஒற்றர்களின் மூலம் உட்ராம் அறிந்தார். அதன் பிறகு அனுப்பப்பட்ட வெள்ளை வீரர்கள் குறுக்கிட்டதால், வண்டிகள் பத்திரமாக வந்து சேர்ந்தன. ஆனால், முகாமில் மூட்டைகளைப் பிரித்துப் பார்த்துக்

கொண்டிருந்த போது, திடீரென புரட்சிப் படை சூழ்ந்தது, பிராமணச் சிப்பாய் ஒருவன் அனுமார் வேட மிட்டு, புரட்சிப் படைக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தான். கூச்சலிட்டுக் கொண்டே சிப்பாய்கள் பயங்கரமாகத் தாக்கினர். இம் முறையும் வெள்ளையர்களின் சாமர்த்தியத்தால் தாக்குதல் முறியடிக்கப் பட்டது. அஹமதுல்லா காயத்துடன் உயிர் தப்பினர்! இதன் பின்பு புரட்சிப் படை மனம் தளர்ந்தது. நேரடி தாக்குதலை நிறுத்திச் சிறு சிறு உராய்வுகளில் மட்டும் ஈடுபட்டது. ஃபதேகர், வெள்ளையரிடம் வீழ்ந்ததைக் கேட்டுப் புரட்சி வீரர்கள் மேலும் ஊக்கங் குன்றினர். பேகம் ஹஸ்ரத் மஹாலுக்கும், மௌல்வி அஹமதுல்லாவுக்குங் கருத்து வேறுபாடு தோன்றியது. மீண்டும் ஒரு முறை ஃபிப்ரவரி 15ஆம் நாள் மௌல்வி படை யெடுத்துத் தோற்றுப் பின் வாங்கினர்.

இதற்கிடையில் உட்ராமிற்கு உதவிகள் குவிந்தன. கேம்பல் லக்னோவிற்கு விரைகிறார்! இன்னும் நான்கைந்து நாட்களில், உட்ராமை முறியடிக்கா விட்டால், எல்லாம் பறி போகும், என்ற அச்சம் புரட்சிப் படையைப் பற்றியது. உடனே, ஒற்றர்களின் மூலம் செய்திகள் சேகரிக்கப் பட்டன; பெருந் தாக்குதலுக்குத் திட்டந் தீட்டப் பட்டது. ஃபிப்ரவரி 21 ஆம் நாள் ஞாயிறு காலை உட்ராம் தன் வீரர்களுடன் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் போது தாக்குதல் தொடங்கியது. அன்றும், மாலைக்குள் நூற்றுக்கணக்கான வீரர்களை இழந்து, புரட்சிப் படை பின் வாங்கியது. ஃபிப்ரவரி 25 இதுவே இறுதி முறை! பேகம் ஹஸ்ரத் மஹாலே போர் யானை யொன்றில் அமர்ந்து, அமைச்சர், பரிவாரங்களுடன், புரட்சிப் படையைத் தொடர்ந்து வந்து ஊக்கம் அளித்தாள். 30,000 சிப்பாய்கள் ஆலாம்பாக்கை முற்றுகை யிட்டனர். உட்ராம் சிறிது கூட அசைய வில்லை. பரங்கியரின் பீரங்கிகள் புரட்சிப் படையைச் சிதற அடித்தன.

சிறு படையுடன் இந்த ஆறு தாக்குதலையும் முறியடித்த உட்ராம் திறமைசாலி தான். அவருடைய ஆற்றலில் பாதி கூடப் பெற்றவர்கள் எவரும் புரட்சிப் படையில் இல்லாத தால் தான், பெரும் படை யிருந்தும் அவர்கள் தோற்றார்கள். புரட்சிப் படைக்குத் தலைமை இல்லை – தான்; ஆனால், துணிவும், விடா முயற்சியுமே இருந்தன. இத்தனைத் தோல்விகளுக்குத் துவளாமல், உயிரையும் பொருட்படுத்தாமல், தீரமுடன் தாக்குதலை நடத்திய அவர்களின் வீரம் பாறையில்

ஊற்றிய நீர் ஆயிற்று. இனி உட்ராம் தனியாகத் தவிக்க வேண்டிய தில்லை. மார்ச் 1 முதல் நாள் சர் காலின் கேம்பல் தம் பெரும் படையுடன் ஆலாம்பாக்கிற்கு வந்து சேர்ந்தார். தற்போது அவரிடம் 20,000 வீரர்களையும், 180 பீரங்கிகளையுங் கொண்ட ஒரு பெரும் படை அப்போது இருந்தது. தலைமைத் தளபதி கேம்பலும், பிரிகேடியர் நேப்பியரும் லக்னோ படையெடுப்பிற்குத் திட்டந் தீட்டி விட்டனர்.

# 32. லக்னோ மீட்சி

[ஊரின் அமைப்பு—புரட்சிப் படையின் தற்காப்பு ஏற்பாடு—எத் திசையில் ஊருக்குள் நுழைவது?—வெள்ளைத் துருப்புகள் நகருதல்—'ஹோப் கிராண்டின்' குதிரைப் படை ஊருக்குக் கிழக்கே கோமதியைக் கடத்தல்—பேகம் கோத்தி மாளிகையைத் தாக்குதல்—600 புரட்சி வீரர்கள் இறப்பு—ஹாட்சன் பலியாதல்—இமாம்பாரா அருகில் கடும் போர்—பல புரட்சி வீரர்கள் தப்பித்தல்—கெய்சர்பாக் அரண்மனைத் தாக்குதல்—வெள்ளைத் துருப்புகளின் அட்டூழியம்—நகர மக்கள் வெளி யேறுதல்—கேனிங்கின் அறிக்கை.]

கோமதி நதியின் தென் கரையில், கிழக்கு மேற்காக 5 மைல் நீளத்திலும், $1\frac{1}{2}$ மைல் அகலத்திலும் அந் நகர் அமைந்திருக்கிறது. நகரின் கிழக்கிலுந், தெற்கிலும் ஆழமான வாய்க்கால் ஒன்று ஓடுகிறது. தென் கிழக்காகப் பாய்ந்து வருங் கோமதி நதி, ஃபரத் பக்ஷ் (Faraht Baksh) என்ற பழைய அரண்மனைக்கு நேரே வளைந்து வட கிழக்கே அது திரும்புகிறது. நகரின் மேற்கிலிருந்து ஒவ்வொரு இடமாகப் பார்ப்போம். மேற்கே நதிக் கரையை ஒட்டி 'ஷீஷ் மஹால்' என்ற கண்ணாடி மாளிகை; அதற்கருகில் 'ஜமானியா பாக்' என்ற தோட்டம்; அதற்குக் கிழக்கே 300 அடி நீளமும், 160 அடி அகலமுங் கொண்ட அழகிய கம்பீரமான 'பெரிய இமாம் பாரா' என்ற மசூதி ஒன்றும் இருக்கிறது; அதை ஒட்டியிருக்கும் மச்சிப் பவன் என்ற மீன் மாளிகை தான், நிலையரகமாக, முற்றுகையின் போது வெடி மருந்துகளுடன் தகர்க்கப் பட்டது; அம் மாளிகைக்குக் கிழக்கே நகரத்தின் நெரிசலான தெருக்களும், அத் தெருக்களில் நிறைந்த வீடுகளும் இருக்கின்றன; அவற்றைத் தாண்டிச் சென்றால் முன்பு முற்றுகைக்குட்பட்டிருந்த நிலையரகம் இருக்கின்றது; அதற்குத் தென் கிழக்கே இருக்கும் 'பரத் பக்ஷ்' என்னும் மாளிகையில் - தான் 1850 வரை அயோத்தி மன்னர்கள் வாழ்ந்து வந்தார்கள்; இதற்குத் தெற்கே நிற்பது - தான் பிரம்மாண்டமான எழில்

மிக்க 'கெய்சர் பாக்' அரண்மனை! அயோத்தியின் கடைசி மன்னன் 'வாஜித் அலிஷா' வால் பெரும் பொருட் செலவில் கட்டப்பட்ட அவ் வரண்மனையில், நந்த வனங்களும், நீர்த் தடாகங்களும், பளிங்கு மண்டபங்களும் நிறைந்திருக் கின்றன. பழைய அரண்மனைக்குத் தென் கிழக்கில் சிறிய 'இமாம்பாராவும்', 'பேகம் கோத்தியும், உள்ளன. கால்வாய்க் கப்பால் 'மார்ட்டினேர்' என்ற கட்டிடம் ஒன்றும், அதற் கப்பால் முக்கால் மைல் தொலைவில் பரந்துள்ள மான் சோலை யில் கட்டப்பட்ட 'தில்குஷா' மாளிகை ஒன்றும் இருக்கின்றன.


ஃபரத் பக்ஷ் என்ற பழைய அரண்மனைக்கு நேரே, கோமதி நதி வளைந்து வட கிழக்கே பாய்கின்றதல்லவா? அத் திசையில், அந் நதிக் கரையில், முதலில் தெரிவது 'மோதி மஹால்' என்ற முத்து மாளிகை. அதற்கருகிலிருக்கும் 'ஷா மன்சில்'லில் முன் பெல்லாம் அயோத்தி நவாப்புகளுக்குப் பிடித்தமான பயங்கர விலங்குகளின் சண்டைகள் நடக்கும். இதற்குத் தெற்கிலுள்ள 'தாரா கோத்தி' (தாரகைக் கொத் தளம்) என்ற வான் ஆராய்ச்சிக் கூடத்தைத் – தான், மர்ம மௌல்வி அஹமதுல்லா, தன் தலைமை யகமாகக் கொண்டு செயல்பட்டான். அதற்கப்பால் 'காடம்ரஸூல்' என்ற செங்கல் கட்டிடத்தில் தான், நபிகள் நாயகத்தின் பாதம் பட்டதாக நம்பப்பட்ட 'கல்' ஒன்று இருக்கின்றது. இதற் குங் கிழக்கே 'சிக்கந்தர்பாக்' என்ற வனம் உள்ளது. இவை கள்தான், நகரின் முக்கிய இடங்கள். கோமதி நதியைக் கடக்க நிலையகத்திற் கருகில் இரும்புப் பால மொன்றும், மச்சி பவனுக்கப்பால் கற் பாலம் ஒன்றும் இருக்கின்றன.

புரட்சி வீரர்கள், நகருக்குள் மூன்று தற்காப்புத் தொடர் களை ஏற்படுத்தி யிருந்தனர். கிழக்கே கால்வாய் வழியாக ஒன்றும், நதி யருகிலிருந்த மோதி மஹாலிலிருந்து பேகம் கோத்தி வரையில் ஒன்றும், கெய்சர்பாக் அரண்மனையைச் சுற்றி யொன்றும் அமைத்திருந்தனர். நிலையகத்தில் முற்று கைக் குள்ளாயிருந்த வெள்ளையரைச் சில மாதங்களுக்கு முன்பே கேம்பல் விடுவித்துக் கொண்டு சென்ற பிறகு, நகரின் பெரிய தெருக்களி லெல்லாம், முக்கிய இடங்களி லெல்லாம் மண் சுவர்களை எழுப்பி யிருந்தனர். உயர்ந்த இடங்களி லெல் லாம் பீரங்கிகளை ஏற்றி யிருந்தனர். மறைந்திருந்து சுடுவதற் குக் கட்டிடங்களி லெல்லாம் துளைகளிட்டுத் துப்பாக்கிகளை வைத்திருந்தனர். இவ்வளவு பாது காப்புடன் பல்லாயிரக் கணக்கான புரட்சி வீரர்கள் லக்னோவில் இருக்கின்றனர்.

எப்படி ஊருக்குள் புகுவது? எப்படி அவர்களை முறியடிப்பது? நகரின் மேற்குப் பகுதியில் நெரிசலான கட்டிடங்களுந் தெருக் களும் இருக்கின்றன. அப் பக்கம் நுழைந்தால், இழப்பு அதிக மாகும். கிழக்கு முகமாக நுழைந்து அரண்மனையைப் பிடிக்க திட்டமிடப் பட்டது. வெள்ளையரின் இத் திட்டத்திற்கு வழி செய்தவர்கள் புரட்சி வீரர்களே தான்! எப்படி என்ருல்? முன்பு, நிலேயரக மீட்சிக்காக, ஹேவ்லாக்கும், உட்ராமும் தெற்கே 'சார்பாக் பாலத்தின்' வழியாக நுழைந்தனர். அதன் பிறகு, தலைமைத் தளபதி கேம்பலும் கிழக்கே சிக்கந்தர்பாக் வழியாக நுழைந்து, வெள்ளையரை மீட்டுச் சென்றார்! எதிரி எப்பொழுதும் ஒரே வழியாகத்தான் வருவான்; என்று முட் டாள் தனமாக நம்பிய புரட்சி வீரர்கள், இவ் விரு பகுதிகளி லும் பாது காப்பைப் பலப்படுத்தித் தாக்குதலுக்குக் காத் திருந்தனர். நகரின் வட பகுதியான கோமதி நதிக் கரை பாது காக்கப்பட வில்லை; என்பதைக் கேம்பல் அறிந்து கொண் டார். அவருடைய திட்டம், ஊருக்குக் கிழக்கே கோமதி நதி யைக் கடந்து, மேற்கே முன்னேறி, மீண்டும் நதியைக் கடந்து வடக்குப் புறத்தில் நுழைய வேண்டும் என்பதே யாகும்!

கேம்பலின் ஆணையின்படி, வெள்ளைப் படையின் ஒரு பிரிவு மார்ச்சு 2 ஆம் நாள் ஊரின் கிழக்கே யிருந்த 'தில்குஷாச் சோலையை' அடைந்தது. சிப்பாய்களின் கவன மெல்லாம் எதிர்ப் புறத்தில் தான் இருந்தது. மூன்று நாட்களில், காலி பீப்பாய்களை வரிசையாகக் கட்டி, மரப் பலகைகளை வைத்து மூடி, ஒரு பாலத்தை வெள்ளையர்கள் கட்டி முடித்தனர். அன்றிரவே, அம் மிதப்புப் பாலத்தை நீட்டி, நதியின் மறு கரையை இணைத்தனர். விடிவதற்குள், ஓசையும், வெளிச்ச மும் இன்றி, அவ் வீரர்கள் மறு கரையை அடைந்தனர். ஹோப் கிராண்ட்டின் குதிரைப் படை முன்னே செல்ல, அவ் வணி நகரை நோக்கி முன்னேறியது. மார்ச்சு 9 ஆம் நாள் சிப்பாய்களின் முதல் தற்காப்புத் தொடரை, உட்ராம் தாக்கி முன்னேறினர். மார்ட்டினேர் பகுதியிலிருந்து தலைமைத் தள பதியும் முன்னேறினர். பேகம் கோத்தி தான், பலத்தத் தாக்கு தலுக் குள்ளாயிற்று. பல மணி நேரக் குண்டு வீச்சுக்குப் பின்னர்தான் அரசியின் அம் மாளிகைச் சுற்றுச் சுவர் பிளந் தது. போரிசை ஒலிக்க, வெள்ளை வீரர்களும், சீக்கியர்களும் உடைந்த சந்துகளி லெல்லாம் ஊடுருவிச் சென்றனர். உள் ளிருந்த ஆயிரக்கணக்கான புரட்சி வீரர்கள் போர்க் கூச்ச லிட்டுக் கொண்டே எதிரிகளின் மேல் பாய்ந்தனர். ஆனால், வெடி மருந்துகளும், குண்டுகளும் முற்றங்களையும், அறை

களையும் பெயர்த்துப் பல நூறு சிப்பாய்களைக் கொன்றன. இரண்டு மணி நேரப் போருக்குப் பிறகு, பேகம் கோத்தி மாளிகை முற்றத்தில் மட்டும் 600 புரட்சி வீரர்கள் இறந்து கிடந்தனர்! வெள்ளைப் படை ஒரு சிலரையே இழந்தது. அவருள் ஒருவன் ஹாட்சன்! குதிரைப் படை ஹாட்சன்! டெல்லி இளவரசர்களைச் சுட்டுக் கொன்ற ஹாட்சன்! அஞ்சா நெஞ்சன்! பேகம் கோத்தி மாளிகையின் இருட்டறையில், புரட்சி வீரர்களை அவன் தேடிச் சென்ற போது குண்டடி பட்டு இறந்தான். அவனுடைய சவப் பெட்டி, குழியில் இறக்கப்பட்ட போது தலைமைத் தளபதியே கண் கலங்கி விட்டார்!



தாக்குதலுக்குள்ளான ஒரு அரண்மனை - லக்னே

மார்ச் 14 ஆம் நாள் இமாம்பரா வீழ்ந்தது. அதற்கருகில் புரட்சிப் படைக்கும், வெள்ளைப் படைக்கும் கடுமையான போர் நடந்தது. ஆங்கிலேயருஞ் சீக்கியருஞ் சேர்ந்து கொடூரமாகத் தாக்கினர். இதற்குத் தப்பி ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் இரும்புப் பாலத்தின் வழியாக ஓடினர். மற்றும் பலர் கெய்சர் பாக் அரண்மனைக்குள் ஓடினர். அவர்களைத் தொடர்ந்து வெள்ளையரும், சீக்கியரும் அருகிலிருந்த சிறு மாளிகையி லிருந்து புரட்சி வீரர்களைத் தாக்கினர். கெய்சர் பாக் அரண்மனைதான் புரட்சிப் படையின் மையம். அதைக் கைப்பற்றி விட்டால் போதும், வெற்றி பெற வெள்ளைப் படையின் தாக்குதல் வேகமாகியது. இங்கே, முடக்கப்பட்ட


புரட்சி வீரர்கள் தீரத்துடன் எதிர்த்து நின்றனர். அரண்மனைக்குள் நுழைந்ததும் இருதரப்பு வீரர்களுக்கும் நேரடிக் கை கலப்புத் தொடங்கியது. அதிலும் நூற்றுக்கணக்கில் புரட்சி வீரர்கள் தப்பி விட்டனர். அரண்மனைத் தாழ்வாரங்கள், நந்த வனங்கள், மண்டபங்கள் எங்கும் பிணக் காடு தான்! அதன் பிறகு, கெய்சர்பாக் அரண்மனை சூறையாடப் பட்டது; அழகிய சிலைகள் உடைக்கப்பட்டன; எழில் மிக்க சித்திரங்கள் அழிக்கப் பட்டன. தங்க நகைகள், வெள்ளித் தட்டுகள் களவாடப் பட்டன. முரசுகள், இசைக் கருவிகள், ஓவியங்கள் பிய்த்தெறியப் பட்டன. தங்கச் சரிகைகள் தீயிலிடப்பட்டு, உருகிய தங்கம் சுரண்டி எடுக்கப் பட்டது! மாணிக்கம் பதித்த வாட்கள், வைரங்கள் ஜொலித்த கிரீடங்கள், தங்கப் பெட்டிகள், அதற்குள்ளிலிருந்த அழகிய அணிகலன்கள் அனைத்துமே பறிபோயின! சீக்கியரும், வெள்ளையரும் வெறியாட்டம் ஆடினார்கள். சுவர்கள் சரிகின்றன! திரைச் சீலைகள் எரிகின்றன; பிணங்கள் நாறுகின்றன! இவ்வளவிற்கும் இடையில் கொள்ளை வேறு நடந்து கொண்டிருந்தது. அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட பத்திரங்களும், பிற செல்வங்களும் பிரைஸ் ஏஜெண்ட் என்ற அப் பணிக்குரிய அதிகாரிகளிடம் ஒப்புவிக்கப் பட்டன. ஆங்கிலேயர்களில் ஒரு சிலரால், நவாப்பிடம் அடகு வைக்கப்பட்டிருந்த நில அடமானப் பத்திரங்களும் அதில் இருந்தன. இவற்றைத் திருடிய பலர் இங்கிலாந்தில் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு செல்வந்தர்கள் ஆனார்கள். அதிகாரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டப் பல லட்சக்கணக்கான மதிப்புள்ள செல்வங்கள் என்ன வாயிற்று? என்பதே தெரிய வில்லை. பல ஊழியர்கள் மேலதிகாரிகளுக்கு முறையான கணக்கே காட்ட வில்லை. அரண்மனை புறாக்களும், கோழிகளுங் கூட அவ் வீரர்களுக்குத் தப்ப வில்லை. கூண்டில் அடைக்கப்பட்டிருந்த புலி யொன்றைச் சுட்டுத் தோலை உரித்துக் கொண்டனர். சுருக்கமாகச் சொன்னால், எழில் மிக்க கெய்சர்பாக் அரண்மனை கற்பழிக்கப் பட்டதென்றே கூறலாம்.

இதற்கிடையில் இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட புரட்சி வீரர்கள் நகரை விட்டுத் தப்பிச் சென்று விட்டனர். தலைமைத் தளபதியின் தவறால் இது நேர்ந்தது, என்று சொல்லப்படுகிறது. தப்பிய வீரர்களை வழி மறித்துத் தாக்க! சீதாப்பூர், ஆலாம்பாக் சாலைகளில் வெள்ளை வீரர்கள் அனுப்பப் பட்டனர். ஆனால், புரட்சி வீரர்கள் பாய்ஸாபாத் சாலையில் தப்பி விட்டனர். மார்ச் 18 ஆம் நாளுக்குள்ளே நகரின் முக்கிய

இடமெல்லாங் கைப்பற்றப் பட்டன. பேகம் ஹசரத் மஹால், நான்கு மைல்களுக்கப்பால் முஸாபாக்கிலிருந்து கொண்டு எதிர்த்துப் பின் வாங்கினாள். மௌல்வி அஹமதுல்லா அவ் வளவு எளிதில் பின் வாங்க மாட்டான். மார்ச் 22 ஆம் நாள் வரை அவனுடைய வீரர்கள் நகரின் வெளிப் புறத்தில் தாக்குதலை நடத்திக் கொண்டு இருந்தனர். கடுமையாகப் போரிட்டுப் பரங்கியர் பலரைக் கொன்ற பின்னர்தான், அம் மௌல்வி வெளியேறினான்! அரச குடும்பத்தினர் அனைவருந் தப்பவே முடிய வில்லை. அந்தப் புரப் பெண்கள் சிலர் சிறை பட்டனர். பல பெண்கள் தற்காப்பின் காரணமாய் உயிரிழந் தனர். லக்னோ வீழ்ந்த சில நாட்களுக்குப் பிறகு, இரும்புப் பாலத்திற் கருகில் ஒரு கிழவி இறந்து கிடந்தாள். அவள் கையினருகில் பாதி அணைந்த திரி யொன்றும், துளையுள்ள மூங்கிற்கழி யொன்றுங் கிடந்தன. அருகே சுரங்கம் ஒன்று தோண்டப்பட்டுக் குப்பைக் கூளங்களால் அது மறைக்கப் பட்டிருந்தது. எப் பழியைத் தீர்க்க அக் கிழக்கரங்கள் நெருப் புந் திரியும் ஏந்தியவோ? அத் தளத்தைத் தகர்க்கத் திட்டமிட் டிருந்தாளோ? என்னவோ! அதை எவரும் அறிய முடியாது!

பரங்கிப் படையின் வெறித் தனத்தில், நகர மக்கள் சிதறி ஓடினர். மீண்டுந் திரும்பி வந்தால், பீரங்கி வாயில் கட்டப்பட்டுச் சுட்டெறியப் படுவோம்; என்ற பீதி அவர் களுக்குத் தோன்றி விட்டது. உட்ராம் பாது காப்பு நட வடிக்கைகளை மேற்கொண்ட பின்னரே, சிறிது சிறிதாக மக்கள் நகருக்குத் திரும்பினர். லக்னோ மீட்சிக்குப் பிறகு, தலைமை ஆளுநர் கேனிங், ஓர் அறிக்கை வெளி யிட்டார். அவ் வறிக்கை மக்களுக்குச் சிறிது பயத்தைத் தருவதாகவே இருந் தது. உட்ராம் அதில் சில விதிகளை மாற்றிப் புரட்சியை அடக்க உதவி புரிந்தவர்களுக் கெல்லாம் பரிசளிக்கப்படும்; என்று அறிவித்தார். தலைமை ஆணையரின் தேவை யற்ற, அவசர அறிக்கையானது, குழப்பத்தையும், அச்சத்தையும் மக்களிடம் தோற்றுவித்தது. மேலும் அது அயோத்தியில் கிளர்ச்சி நீடிக்கக் காரணமாயிற்று. 'சரணடைந்தால், இழந்த

நிலங்கள் கிடைக்குமென்ற நம்பிக்கையும் இல்லை; பிடிபட்டால் உயிரிழிக்கவும் நேரிடும்' என்ற இந்த நிலையில் தொடர்ந்து போரிடப் பல தாலுக்தார்கள் முடிவெடுத்தனர். எனவே, லக்னோ மீட்சிக்குப் பின்னும் அயோத்தியில் கிளர்ச்சி நீடித்தது!



முற்றுகைக்குள்ளான நிலையரகம் - லக்னோ

இலக்னோ அழிந்த கதையை மக்கள் பாடிப் புகலுவது:—

'அழகிய மாளிகை 'ஆலம் - பாக்' தன்னில்
அற்புதத் தோட்டா மழை பொழியுது
மற்றொரு இல்லம் 'மச்சி - பவன்' — அதன்
சுவர்களில் எதிரொலிக்கும் பீரங்கிகள்

'பைலி - காட்' தாங்கும் கத்திகள் — தொடர்ந்து
மேகத்தை மறைக்கும் அம்பு மழை
தடுமாறும் வீரர் நெடுமரமாய் நிற்க
தட்டாமாலை ஆடுகிறார் தந்திர வெள்ளையர்

அரண்மனை அரசியர் கூந்தல் கலைந்து
ஆற்றாத் துயருடன் அழுவது கேட்குது!
துடிக்கும் துப்பாக்கித் தூங்குது அங்கே
இடிக்கும் அஞ்சா யானைகள் மருளுது

புவியை வெல்லும் எம்மரசன் புரவிகள்
இழிவாய்த் தெருவில் எங்கோ திரியுது!
எஞ்சியது ஒன்றும் எமக்கில்லை — இனிய
நண்பரும் இங்கே மிஞ்சவுமில்லை.'

---

'INDIAN ANTQUARY' — Songs of the Mutiny வில்லியம் க்ருக் (William Crooke) என்ற ஐ. சி. எஸ். அதிகாரியால் சேகரிக்கப்பட்ட நாடோடிப் பாடல் இது.

# 33. பீஹாரில்......

[வஹாபி இயக்கம் — தாருப்பூர் படைத்தளம் — தளபதி லாயிட் — ஆணையர் டெய்லர் — ஆயுதப் பறிமுதல் ஏன் இல்லை? தலைவர்கள் காவலில் — புத்தக வியாபாரி — ஊர்வலம் — தலைவர்களுக்குத் தூக்கு — ஆயுதப் பறி முதல் உத்தரவு — கிளர்ச்சி — சிப்பாய்கள் அராவிற்குச் செல்லல் — தன்பார் பின்தொடர்தல் — தோல்வி அடைதல் — அராவில் நிகழ்ந்ததென்ன?]

வங்காளத்தையும், பீஹாரையும் இணைத்துக் 'கீழ் மாநிலங்கள்' (Lower Provinces) என்றழைப்பார்கள். பீஹார் வழியாகக் கங்கை நதி பாயுமிடங்கள் செழிப்பாக இருந்ததால், பல ஆங்கிலச் சீமான்கள், இப்பகுதிகளில் இலாபமிக்கத் தொழில்களில் ஈடுபட்டுப் பொருளீட்டி வந்தனர். அபினி வாணிகம் அப் பகுதியில் பரவலான ஒன்று. பீஹாரின் தலைநகர் பாட்னு, பழைய மௌரியப் பேரரசின் தலை நகரான பாடலிபுத்திரமாகும். கங்கையின் வலது கரையில், கல்கத்தாவிலிருந்து சுமார் 375 மைல் தொலைவில், காசிக்குச் செல்லும் வழியில் பாட்னு அமைந்திருக்கிறது. அதன் அப்போதைய மக்கள் தொகையான 1,58,000 பேரில் 38,000 பேர் இஸ்லாமியர்கள். அதிலும், தீவிர இஸ்லாமியப் பிரிவான வஹாபி இயக்கத்தின் தலைமை யகமாகப் பாட்னு திகழ்ந்தது. பாட்னுவிற்கு மேற்கே, தானுப்பூர் என்ற இடத்தில் ஒரு மாபெரும் இராணுவத் தளமிருந்தது. கல்கத்தாவிலிருந்து லக்னோ வரையில், இந்த ஒரே இடத்தில் தான் இராணுவத் தளம் இருந்த தென்பது குறிப்பிடத்தக்கது. இத் தளத்தின் உயர் அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் லாயிட் (Lloyd) நான்காண்டுகளுக்கு முன்பு சந்தால் கொள்ளைக்காரர்களை அடக்கிப் புகழ் பெற்றவர். பாட்னுவின் ஆணையராக இருந்த வில்லியம் டெய்லர் ஆற்றலும், துணிச்சலும் மிக்கவர். பிறரின் அறிவுரைகளைக் காட்டிலும், தம் உள்ளுணர்வு காட்டும் வழியிலேயே நடப்பவர். அவருடைய நிர்வாகத்தில், ஆங்கில

நிலச்சுவான்தார்கள் நல்ல பாதுகாப்பும் அமைதியும் பெற்றவர்களாயிருந்தனர். பாட்னாவில் கிளர்ச்சிக்கான சதி நடப்பதை டெய்லர் அறிவார். அதற்கு வஹாபியரே காரணம், என்பதையும் அவர் அறிவார். அவருடையப் பார்வைக்கு ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு அதிகாரியாகவே தோற்றமளித்தான். இருந்தும், அவரது வலதுகையாக இருந்து அவருக்குத் துணை புரிந்தவன் 'மாவ்லா பக்ஷ்' என்ற முஸ்லிம்தான். 1857ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே, பரக்பூர், பர்ஹாம்பூர் நிகழ்ச்சிகள்தான் கலகத்தின் அபாய அறிகுறிகள், என்பதை டெய்லரின் உள்ளுணர்வு அறிவித்து விட்டது.

மீரத் செய்தி வந்ததும், ஆணையர் டெய்லர் அபாயத்தைச் சமாளிக்கத் தயாரானார். மே மாத இறுதியில் பல இடங்களில் கிளர்ச்சிகள் தோன்றியும், பாட்னா அமைதியாகவே இருந்தது. அக்கிளர்ச்சிச் செய்திகள் ஒவ்வொன்றாக வரத்தொடங்கியதும், ஜூன் 7-ஆம் நாள் கானப்பூர்ச் சிப்பாய்கள் உணர்ச்சி வயப்பட்டனர். அந்தச் சிப்பாய்கள், தம்முடைய இல்லத்தைக் காவல்காக்குஞ் சிப்பாய்களுடன் இரகசியக் கடிதப் போக்குவரத்துக் கொண்டிருந்ததை அறிந்த ஆணையர், ஒரு சீக்கியப் படையை அவசரமாக வரவழைத்தார். இந்த நிலையில், பிற பல தளங்களைப் போலச் சிப்பாய்களின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய ஆணையர் ஏன் முயலவில்லை? இந்த முயற்சியில் ஈடுபட முடியாமல் அவருடைய கைகள் கட்டப்பட்டிருந்தது. இதற்கு முதற் காரணம், அவருடைய மேலதிகாரியாக, கல்கத்தாவிற்கும் லெப்டினென்ட் கவர்னர் ஃபிரெடெரிக் ஹேலிடே (Frederic Halliday) நெருக்கடியை உணர்ந்து இவருடன் ஒத்துழைக்கவில்லை என்பதும் மற்றொரு காரணம். இவர் தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் சிப்பாய்களுடனிருந்தே கழித்தவர். அவர்களுடைய நன் நடத்தையையும், நன்றி மிக்கச் சேவையையும் பல இடங்களில் நேரில் கண்டவர். ஆயுதப் பறிமுதல் செய்வது, சுதேசி சிப்பாய்களுக்கு இழைக்கப்படும் அவமானமென்று பல இராணுவ அதிகாரிகளைப் போன்றே இவருங் கருதினார். பல தளங்களில் கிளர்ச்சிகள் தோன்றியிருக்க, தம் வீரர்கள் மட்டும் அமைதியாக இருப்பதை எண்ணி அவர் மகிழ்ந்தார். இவரைத் தவிர தலைமை ஆளுநர் கேனிங்கும் ஆயுதப் பறிமுதலை விரும்பவில்லை என்றே தெரிகிறது.

பாட்னா நகரிலோ, தானப்பூர்ப் படைத் தளத்திலோ கிளர்ச்சிக்கான அறிகுறிகள் இல்லாமல் இல்லை. அன்று ஜூன் 7-ஆம் நாள் சீக்கிய வீரர்கள் ஊருக்குள் வந்த போது, மக்களே அவர்

களை இகழ்ந்தனர்; துரோகிகள் என நினைத்தனர். சீக்கியக் குருவோ, கோயிலுக்குள் அவர்களை அனுமதிக்க மறுத்து விட்டார். நள்ளிரவில், நகரின் பல இடங்களில், புரட்சித் தலைவர்கள் இரகசியமாகக் கூடிப் பேசினர். அவ்விடங்களைக் கண்டு பிடிப்பதோ! அத் தலைவர்கள் யாவரென அறிந்து கொள்ளுவதோ? மிகக் கடினமாகவே இருந்தது. காசியிலும், வடமேற்கு மாநிலங்களிலும், மத்திய இந்தியாவிலும் புரட்சித் தோன்றி வெற்றி நடை போடுகிறது; என்ற செய்திகள் தினமும் பாட்னாவிற்கு வந்து கொண்டிருந்தன. அபாயத்தை எதிர் பார்த்துப் பீஹாரின் பல இடங்களிலிருந்தும், ஆங்கிலேயர்கள் பாட்னாவிற்கு வந்து விட்டனர். ஆணையர் வில்லியம் டெய்லரின் ஒற்றர்கள், ஒவ்வொரு நாளுந் திடுக்கிடுஞ் செய்திகளைக் கொண்டு வந்தனர். இரகசியக் கொலை திட்டங்களும், தீ வைக்குந் திட்டங்களும் வெள்ளையருக்குத் திகிலை ஏற்படுத்தின. மேலும், நகரத்திற்கும் படைத் தளத்திற்கும் இரகசியத் தொடர்பு இருந்தது. முதலில் கிளர்ச்சியில் இறங்குவது பாட்னாவா? அல்லது படைத் தளமா? யார் தொடங்கினாலும், உடனே புரட்சியில் சேருவதற்குச் சுற்றுப்புற ஜமீன்தார்களும் காத்திருந்தனர். அதையும் ஒற்றர்கள் ஆங்கில அதிகாரிகளுக்கு அறிவித்தனர். ஆங்கிலப் படையுந் தங்கையிலின்றி, ஆயுதப் பறிமுதலுக்கும் வழியின்றி, ஆணையர் டெய்லர் என்ன செய்வார்? பீஹார் முழுவதிலும் பரவியிருந்த பல நூறு ஆங்கிலேயர்கள், பல அரசாங்கக் கருவூலங்கள், பல லட்ச ரூபாய் மதிப்புள்ள அபினி இத்தனையும் பாதுகாக்கப்பட வேண்டும்! தற்காப்பைவிடத் தாக்குதலே கிளர்ச்சியை அடக்க நல்ல வழி என்று ஆணையர் கருதினார்.

டெய்லரின் பார்வை வஹாபியர் மேல் விழுந்தது. செல்வாக்கும், மதவெறியும்மிக்க அவ் வியக்கத்தின் தலைவர்களாக விளங்கிச் சில மௌல்விகளைக் கைது செய்ய அவர் நினைத்தார். பலர் அறியக் கைது செய்தால், ஆபத்து நேரிடுமென்று கருதி முக்கிய மூன்று மௌல்விகளுடன், பிற தலைவர்களையும் ஜூன் 19-ஆம் நாள், ஆணையர் ஆலோசனைக் கழைத்தார். கூட்டம் முடிந்ததும், அனைவரையும் அனுப்பி விட்டு, அம் மூவரை மட்டும் நிறுத்தி வைத்தார். நெருக்கடி நிலையை யொட்டித் தம் மேற்பார்வையில் அவர்கள் இருக்க வேண்டுமென்றுங் கூறியதை அவர்களும் ஏற்றுக் கொண்டனர். ஆணையர், தங்களைக் கைதுதான் செய்திருக்கிறார்; என்பதை அவர்களும் அறிவார்கள்! இதை யெல்லாம் எதிர்பார்த்துப் புரட்சிக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யாமலா இருந்திருப்பார்கள்?

ஏற்கனவே, கான்பூர் போன்ற இடங்களில் புரட்சிக் கொழுந்து விட்டெரிந்தது. பாட்னு, புரட்சிக்காரர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்திருந்தது. தங்களின் தலைவர்களைக் காவலில் வைக்கப்பட்டதை அறிந்த மக்களும், வீரர்களும் வியப்பும், வெறுப்பும், வேகமுங் கொண்டனர். மறு நாளே, துணை நீதிபதியாக இருந்த ஒரு மௌல்வியுங் கைது செய்யப்பட்டார். ஆணையர் டெய்லர் இத்துடன் நிற்கவில்லை. ‘24 மணி நேரத்திற்குள் மக்களனைவருந் தங்கள் தங்கள் ஆயுதங்களைச் சரண் செய்ய வேண்டும்; இரவு 9 மணிக்கு மேல் அதிகாரம் பெற்றவர்களைத் தவிர மற்ற எவரும் வெளியில் நடமாடக் கூடாது’ என்றும் ஆணையிட்டார். இவ் ஊரடங்கு சட்டம் ஓரளவு பதட்டத்தைக் குறைத்தது. என்பது உண்மையே. ஆனால், விஷமாகி விட்ட நெஞ்சங்கள் அடங்குவதாகவே இல்லை; பரங்கியரின் மேல் வெறுப்புங் கோபமும் அவர்களுக்குப் பன்மடங்கு பெருகியது. இனியுங் காலந்தாழ்த்தினுல் பயனில்லை! என்று ஜூலை 3-ஆம் நாள் பாட்னு புரட்சிக் களத்தில் குதித்தது!

அன்று, பீர் ஹலி என்ற புத்தக வியாபாரி, இஸ்லாமியப் பச்சைக் கொடியைத் தூக்கினுன்! முரசுகள் ஆர்ப்பரிக்க, பெரும் ஊர்வலம் ஒன்று ஆரவாரஞ் செய்து கொண்டு, ஊர் மையத்திலிருந்த ரோமன் கத்தோலிக் ஆலயத்தை நோக்கி விரைந்தது. வழியில் டாக்டர் லயால் (Dr. Lyall) என்ற வெள்ளையன் தம் குதிரையை நிறுத்திக் கோபத்துடன் அக்கூட்டத்தைப் பார்த்தான். தம்மைக் கண்டதும் கிளர்ச்சிக்காரர்கள் பயந்து ஓடி விடுவார்கள் என்ற இறுமாப்பில் தங் குதிரையை ஊர்வலத்தை நோக்கிச் செலுத்தினுன். நெருங்க, நெருங்க துப்பாக்கிக் குண்டுகள் அவன் பார்வையைத் துளைத்தன! தடாலென்று அவன் வீழ்ந்ததும், அவனது உடலிலிருந்து இரத்தம் வழிந்தோடியது. பரங்கியின் இரத்தத்தைக் கண்டதும், கலகக்காரர்களுக்கு உற்சாகம் பிறந்து விட்டது. ஓடிச் சென்று துடித்துக் கொண்டிருந்த டாக்டரின் தலையை வெட்டி எடுத்து அடையாளந் தெரியாதபடி அதைக் கொத்திச் சிதைத்தனர்! கூச்சலிட்டுக் கொண்டே வெளியேறிய புரட்சி வீரர்கள் மேலும் முன்னேறினர். எதிரே சற்றுத் தொலைவில், 150 சீக்கிய குதிரை வீரர்கள் அணி வகுத்து நின்றனர். சீக்கிய குதிரை வீரர்களும், முஸ்லிம் புரட்சிக்காரர்களுஞ் சிறிது நேரம் அசையாமல் நின்றனர். மூன்று நூற்றுண்டுகளாகக் கீரியும், பாம்புமாகச் சீக்கியரும் முஸ்லிம்களும் இருந்தனர் அல்லவா? ஒருவருக்கொருவர் செய்த கொடுமைகள் அவர்களிருவர் மனதிலும் பசுமையாக நின்றன. இனியென்ன? மறுவினுடியே அவ்விரு

இனங்களும் பயங்கரமாக மோதிக் கொண்டன! ஊர்வலஞ் சிதறி ஓடியது! ஆங்கிலேயன் கொடுத்து வைத்தவன். எதிரிக்கு எதிரி இந்தியாவிலேயே இருக்கிறன். அவனை நண்பனுக்கிக் கொள்ள அவனுக்காச் சொல்லித் தர வேண்டும்?

அடுத்த இரண்டு நாட்களில் கலகத் தலைவர்கள் பிடிக்கப் பட்டனர். அவசரமாக விசாரணையும் நடத்தப்பட்டு 19 பேர் தூக்கிலிடப்பட்டனர். சந்தேகமின்றி புத்தக வியாபாரியான பீர் அலிதான் கிளர்ச்சிக்குத் தலைவன்! விசாரணையின் போது ஆணையர் டெய்லர் அவனைப் பார்த்து 'உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, அரசாங்கத்திற்கு ஏதாவது சூழ்ச்சியைப் பற்றிச் செய்திகள் தரமுடியுமா?' என்று கேட்டார். அதற்குப் பீர் அலி, நிதானமாகவும், கண்ணியமாகவும், பெருமிதத்துடனும் அளித்த பதில் இது:—'உயிரைக் காத்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் சில உள்ளன. ஆனல், சில தருணங்களில் உயிரைத் துறப்பதேமேல். நீங்கள் என்னையோ, என் போன்றோரையோ தினமும் தூக்கிலிடலாம்! ஆனல், என் இடத்தை நிறப்ப ஆயிரமாயிரம் வீரர்கள் வருவர். உங்களின் இலட்சியம் மட்டும் என்றும் ஈடேறுது!' என்று கூறிய அவன் ஓர் இலட்சியபரந்த வீரன். இந்துஸ்தானத்தில் இஸ்லாமியப் பிறைக் கொடியானப் பச்சைக் கொடி மீண்டுங் கம்பீரமாகப் பறப்பதைத் தன் மனக்கண்ணல் அவன் கண்டான்!

எப்படியோ? பாட்னவில் அப்போதைக்குக் கிளர்ச்சித் தவிர்க்கப்பட்டது. 'தானப்பூர் சிப்பாய்களின் மேல் இனியும் நம்பிக்கைக் கொள்ளலாமா? மேஜர் ஜெனரல் லாயிட் அவர்களை நம்பத் தயாராயிருக்கிறர். ஆனல், பீஹாரில், தொழில், வாணிகத் துறைகளிலீடுபட்டிருந்த ஆங்கிலேயர்கள் நம்ப மறுத்தனர். இவர்களில் பலர் கல்கத்தாவில் வசித்து வந்தனர். தானப்பூர் சிப்பாய்கள் கிளர்ந்தெழுந்தால், பீஹாரில் உள்ள தங்கள் நலன்கள் அனைத்தும் பாதிக்கப்படும்; அங்கிருக்கும் ஆங்கில ஊழியர்களுக்கும் ஆபத்து ஏற்படும்; என்றஞ்சிய இவர்கள், தானப்பூர் சிப்பாய்களின் ஆயுதப் பறிமுதலுக்கு, அரசாங்கத்தை வற்புறுத்தினர்கள். ஜூலை 15ஆம் நாள் ஜெனரல் லாயிட்சுக்கு அரசாங்க உத்தரவு கிடைத்தது. 'ஆயுதப் பறிமுதலில் ஈடுபட வேண்டிய சூழ் நிலையிலிருக்கிறது; என்று நீங்கள் நினைத்தால், அவ் வழியே கலவரப் பகுதிகளுக்குச் செல்லும் ஆங்கிலப் படைகளை உதவிக்கு வைத்துக் கொண்டு பணியிலிறங்கவும். பறிமுதல் முடிந்ததும், வெள்ளை வீரர்களைச் சிறிதும் அங்கே நிறுத்தாமல் அனுப்பி

விட வேண்டியதும் மிகவும் முக்கியம். பறிமுதலுக்கு முன்பே சிப்பாய்களின் வீணான அச்சத்தைப் போக்கவும். அவர்களின் நன்மைக்காகவும், ஒரு சில கயவர்களின் சூழ்ச்சியில் அவர்கள் விழுந்துவிடாமல் தடுப்பதற்காகவுமே, ஆயுதப் பறிமுதல் மேற்கொள்ளப் படுகிறது; என்பதை அவர்கள் உணரும்படிக் கூற வேண்டியது அவசியமாகும். இதன் கருத்தென்ன? இது ஆணையா? அறிவுரையா? அரசாங்கம் துணிவிழந்து முட்டாளாகி விட்டது. தளபதி லாயிட்சுக்குத் திட்டவட்டமான ஆணை பிறப்பிக்காமல், பொறுப்பை மட்டும் அவர் தலையில் சுமத்தி விட்டது! தானப்பூருக்குத் தெற்கே பல தளங்களில் ஆயுதப் பறிமுதல் செய்யப்பட்டு விட்டது! அதற்கு வடக்கே சிப்பாய்கள் கிளர்ச்சியிலீடுபட்டு விட்டனர். அருகிலிருந்தபாட்னாவிலோ, அதிருப்தி உச்சநிலையை அடைந்து விட்டது. இந்நிலையில், பீஹாரின் விதி ஜெனரல் லாயிட்சின் தலையில் சுமத்தப்பட்டது. இது அரசாங்கத்தின் பெருந் தவறாகும். ஏனெனில்? அவருக்குக் கிடைத்தது ஆயுதப் பறிமுதல் அனுமதியேயன்றி, ஆணையல்ல! தன் நடவடிக்கைகளின் விளைவுகளுக்குத் தானே பொறுப்பேற்க வேண்டுமென்றிருந்ததால், அரசைப் போல, அவரும் தம் பொறுப்பைத் தட்டிக் கழித்தார்; அல்லது, தடுமாறினார்; என்றே கூற வேண்டும். ஜுலை 22ஆம் நாள் தானப்பூர் வழியே சென்ற ஆங்கிலப் படையைப் பயன்படுத்தி ஆயுதப் பறிமுதல் செய்யவுந் தவறினார். அவர் மனதில் குழப்பம் அதிகரித்து விட்டது. ஆயுதங்களைப் பறிக்காமல் விட்டால், நேரப்போகும் புரட்சிக்குத் தாமே உதவி செய்ததாகும்! பறித்தாலோ, புரட்சியைத் தாமே முடுக்கி விட்டதுமாகும். இந்நிலையில் அவருக்கு ஒரேவழிதான் புலப்பட்டது. சிப்பாய்களை அவமானத்திற்குள்ளாக்காமல், ஆங்கிலேயரையும் ஆபத்திற் குள்ளாக்காமல் ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தார். சிப்பாய்களின் துப்பாக்கிகளைப் பயனற்றதாக்கிவிட, குண்டுப் பொறுத்தப்படுஞ் செப்புக்குப்பிகளை (Percussion-cups) மட்டும் நீக்கிவிட முடிவு செய்தார். அப் பணிக்காக, அவ்வழியே செல்லும் ஓர் ஆங்கிலப் படையை உதவிக்கு நிறுத்திக் கொண்டார்.

ஜுலை 25ஆம் நாள் இராணுவப் பண்டக சாலையிலிருந்து, துப்பாக்கிக் குண்டுக் குப்பிகளை அகற்ற, சில வீரர்கள் இரண்டு வண்டிகளுடன் சென்றனர். திரும்பும் வழியில், சிப்பாய்களின் குடியிருப்பைத் தாண்டிதான் வண்டிகள் வரவேண்டும். குண்டுக் குப்பிகளுடன் வண்டிகள் அவ் வழியே வருவதை அறிந்த சில வீரர்கள், கூச்சலிட்டு வழி மறித்தனர். சில வீரர்கள் கூச்சலிடுகின்ற தன் சக வீரர்களைக் கட்டுப்படுத்தவுஞ் செய்த

னர். அதிகாரிகள் சிரமப்பட்டு, வீரர்களைச் சமாதானப் படுத்தித் தங்களை விடுவித்துக் கொண்டு வண்டிகளுடன் வந்து விட்டனர். அசம்பாவிதம் எதுவும் நேராமல் தாம் நினைத்தது நடந்ததைக் கண்டு லாயிட் மகிழ்ந்தார். இந்த மகிழ்ச்சியில் அறிந்தோ! அறியாமலோ! மீண்டும் ஒரு தவற்றினைச் செய்தார். அன்று பகல் ஒரு மணிக்கு, ஆயுதங்களின்றி ஒரு அணி வகுப்பு நடத்தி சிப்பாய்களின் உபயோகத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த துப்பாக்கிக்களி லிருந்த குண்டுக் குப்பிகளையும் அகற்ற திட்டமிட்டார். விளைவுகளை எதிர்பார்த்தோ, என்னவோ, தங் கீழதிகாரிகளுக்கு முறையான விளக்கங்கள் தராமல், அணி வகுப்பை நடத்தும்படிக் கூறி விட்டு, வேறு வேலையாக நதிக் கரைக்குச் சென்று விட்டார். அந்த நேரத்தில் ஆங்கில வீரர்கள் உணவருந்திக் கொண்டிருந்தனர். சில ஆங்கில அதிகாரிகளும், சுதேசி அதிகாரிகளும் அணி வகுப்பை நடத்தினார்கள். அடுத்துச் சிப்பாய்களின் நன்மைக்காகத் தான் குப்பிகளை அகற்றுகின்றோம், என்று சமாதானங் கூறும்படிச் சுதேசி அதிகாரிகளிடம், ஆங்கில அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். சுதேசி அதிகாரிகள் சிப்பாய்களிடம் என்ன முணு முணுத்தார்களோ? தம்மைக் கொல்லுவதற்காகத்தான் சதி நடக்கின்றது; என்று பீதியடைந்த சிப்பாய்கள், திடீரெனக் கலைந்து சென்று, துப்பாக்கிகளை எடுத்து அதிகாரிகளை நோக்கிச் சுடத் தொடங்கினார்கள். லாயிட் ஏற்கனவே அறிவித்திருந்தபடி, அருகிலிருந்த மருத்துவமனைக் காவலர்கள், வானத்தில் இரு முறை சுட்டு, அபாய அறிவிப்பை அறிவித்தனர். லாயிட் அப்பொழுதுதான் நதிக் கரையில் விசைப் படகில் ஏறி யிருந்தார். இங்கே படைத் தளத்திலிருந்த வெள்ளை வீரர்கள் உடனே புறப்பட்டார்கள். தளபதி எந்த முடிவான அதிகாரத்தையுந் தங் கீழதிகாரிகளுக்கு அளித்துச் செல்லவில்லை யாகையால், என்ன செய்வதென்று விளங்காமல்? அவர்கள் தத்தளித்தனர். வெள்ளை வீரர்கள் அணி வகுப்புத் திடலுக்கு வரும் முன்பே எல்லாம் முடிந்து விட்டது. தங்களை எதிர்க்க ஆள் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட சிப்பாய்கள், துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு குண்டுகளைப் பைகளில் நிரப்பிக் கொண்டு குதிரைகளில் ஏறி தப்பி விட்டனர்!

ஆணையர் டெய்லரின் எச்சரிக்கை உண்மையாயிற்று; தளபதி லாயிட்சின் நம்பிக்கைப் பொய்த்து விட்டது! தப்பித்த சிப்பாய்களைத் தொடராதது மேலும் ஒரு தவறாயிற்று. புரவிகளில் பறந்த புரட்சி வீரர்கள், எத்திசையில் சென்றார்கள்? என்பதே தெரிய வில்லை. பாட்னாவிற்கும் வரவில்லை. தெற்கே

காபாவிற்குச் சென்றிருப்பார்களோ? என்றால் அதையுஞ் சரியாக அறிய முடியவில்லை. மேற்கே அராவை நோக்கிக் கவனஞ் சென்றது. பாட்னாவிற்கும், அராவிற்கும் இடையில் சோன் நதி பாய்கின்றது. தானாப்பூரிலிருந்து அந் நதியைக் கடந்து தான் அராவிற்குச் செல்ல முடியும். புரட்சி வீரர்களைத் துரத்தி வழி மறிக்கவும் முடியா விட்டால், அராவிலிருக்கும் ஆங்கிலேயரைக் காப்பாற்ற விசைப் படகுகள் அனுப்பப் பட்டன. அனுப்பப்பட்ட விசைபடகுகள், இரு முறையும் மணற் பகுதிகளில் சிக்கிக் கொண்டன. முடிவில், ஜூலை 29ஆம் நாள் கேப்டன் டன்பாரின் (Dunbar) தலைமையில் வெள்ளையர், சீக்கியர் அடங்கிய சுமார் 450 வீரர்கள் புறப்பட்டனர். புரட்சி வீரர்கள் துரத்திப் பிடிக்கப்படுவார்கள்; துக்கிலிடப் படுவார்கள்; என்ற மகிழ்ச்சியில் வெள்ளையரில் பலர் இப் படையை உற்சாகமாக வழி யனுப்பினர்.

அராவை நெருங்கும் வரை எதிரியின் கண்ணுக்குப் புலப்பட வில்லை. ஊரை நெருங்க, நெருங்கப் பயங்கரம் நெருங்கியது. திடீரென வேட்டுச் சத்தங்கள்! மாந் தோப்பில் பதுங்கி இருந்த புரட்சி வீரர்கள் சட சடவெனச் சுட்டுப் பரங்கியர் உடல்களைத் துளைத்தனர்! செத்து வீழ்ந்தார் கேப்டன் டன்பார். பரங்கிப் படை அத்தகைய தொரு எதிர்ப்பை என்றுமே கண்டிருக்காது! இமைக்கும் நேரத்தில் வெள்ளைப் பிணங்கள் குவிந்து விட்டன! சுமார் 200 வீரர்களை இழந்த பரங்கிப் படையானது ஓட்டம் பிடித்தது! வெற்றிச் செய்தியை எதிர் பார்த்துக் காத்திருந்த வெள்ளையர்கள் அடிபட்டு, உருக்குலைந்து திரும்பிய வீரர்களைக் கண்டு திகைத்தனர். ஜெனரல் லாயிட்சின் உடல் ஆடியது! ஆணையர் டெய்லர் சிலையானார்!*

அராவில் அப்படி நிகழ்ந்ததென்ன? பீஹாரில் நிலவிய அமைதி யின்மையை உணர்ந்து, அராவிலிருந்த ஆங்கிலேயரின் மனைவி மக்கள் தானாப்பூருக்கு முன்பே அனுப்பப்பட்டு விட்டனர். இரயில் பாதைப் பொறியியலாளர் பாயிலின் (Boyle) வீடு, தற்காப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. இச்

---

*இத்தோல்வியைத் தொடர்ந்து, டெய்லர் கிழக்கு வங்காளத்தில் ஒரு மாவட்ட நீதிபதிப் பதவிக்கு மாற்றப்பட்டார். தம் நடவடிக்கைகளைக் குறைத்து மதிப்பிட்டதாகக் கருதிய டெய்லர், அப் பதவியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். அதன் பிறகு அரசாங்கத்தைக் கண்டித்து அவர் கொடுத்த அறிக்கைக்குப் பலர் ஆதரவு அளித்தனர்.

சதுர ஒற்றை மாடி வீட்டைச் சுற்றிலும் சுவர் இருந்தது. இன்னுஞ் சில இடங்களில் சுவர்கள் எழுப்பப்பட்டன. துப்பாக்கிகளை நுழைக்கத் துளைகள் போடப்பட்டன. கரு மருந்து, ஈயம், உணவுப் பொருள்கள் அனைத்துஞ் சேர்க்கப் பட்டன. மாடி விளிம்பில் மணல் மூட்டைகள் அடுக்கப் பட்டன. அங்கே 15 வெள்ளையரும், 50 சீக்கிய வீரர்களும், ஒரு முஸ்லிம் உதவிக் கலெக்டரும் ஒளிந்துக் கொண்டனர்.

ஜூலை 26 ஆம் நாள் தானப்பூர்ப் புரட்சி வீரர்கள் சோன் நதியைக் கடந்து விட்டார்கள். மறு நாள் 'அரா' ஊருக்குள் நுழைந்த புரட்சி வீரர்கள், பாபு குன்வர்சிங்கின் தலைமையில் தாக்குதலைத் தொடங்கினர்கள்!

———

# 34. ஜகதீஷ்பூர் இராஜபுத்திரன்

[குன்வர்சிங்—கடனாளியாதல்—சிக்கலை அவிழ்க்க அரசாங்கத்தால் முடியவில்லை—கிளர்ச்சியில் சேர்தல்—அரா முற்றுகை—தன்பாரைத் தோற்கடித்தல்—வின்செண்ட் அயர் அபாவை விடுவித்தல் — ஜகதீஷ்பூரைத் தாக்குதல் — குன்வர் பண்டா நவாப்புடன் இணைதல்—நானா சாகேப், தாத்யா ஆகியோருடன் குன்வர்—அயோத்தியில் சில வெற்றிகள் — அலகாபாத்தில் தலைமை ஆளுநர்—குன்வரின் துணிகர திட்டம்.]

பீஹாார்ப் பகுதியில் ஷாஹாபாத் மாவட்டத்தில், ஜெகதீஷ்பூர் தாலுக்தாராக பாபு குன்வர்சிங் இருந்தான். 70 வயதைத் தாண்டிய அவன், அப் பகுதியிலே மிகுந்த செல்வாக்குப் பெற்றவன். எத்தனையோ கிராமங்கள் அடங்கிய ஜாகிர்களை வழிவழியாக அந்த இராஜபுத்திர குலம், ஆண்டு அனுபவித்து வந்தது. குன்வர்சிங் இரக்க குணம் மிக்கவன்; வறியவர்க்கு வாரி வழங்கியவன். அவ் வட்டார மக்கள் அவனைத் தங்களின் அரசனாகவே வழிபட்டார்கள். ஆங்கிலேயர் பலர் அவனுக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். அவனுடைய தரும குணத்தைப் பயன் படுத்திப் பல ஆதரவாளர்கள் கொழுத்து விட்டனர். தான், பரம்பரையாகச் செய்து வந்த தான தர்மங்களைச் செலவுகளைக் குறைக்க முடியாமல், கடன் வாங்கும் அளவிற்கு அவன் வந்து விட்டான். ஆங்கிலேயரின் புது நிலத் தீர்வையின் முறையால் மேலும் அவன் வருவாய் பாதிக்கப் பட்டது. கடன் 13 லட்சம் ரூபாயாகி விட்டதால், வட்டி கட்டுவதே அவனுக்குக் கடினமாக இருந்தது. ஆங்கில நண்பர்கள் சிலர் கடனிலிருந்து அவனை விடுவிக்கச் சில முயற்சிகள் எடுத்தனர். அரசாங்கமே அவனுடைய நில புலன்களைப் பராமரித்து வரவும், கடனைத் தீர்க்கவும் வழிகள் மேற்கொள்ளப் பட்டன. அரசாங்கத்தின் வருவாய்த் துறை கடைசி நேரத்தில் கையை விரித்து விட்டது.

குன்வர்சிங்கே மொத்தமாக 10 இலட்சம் ரூபாய் கடன் வாங்கி, இருக்கின்ற கடனை அடைத்தால் தான், அவனுடைய நில புலன்களை ஏற்று அவனை மீட்க முடியும்; என்று வருவாய்த் துறை கூறி விட்டதும், நிலைமை மிகவும் மோசமாயிற்று. அவ்வளவு தொகையை உடனடியாக அவனால் எழுப்ப முடிய வில்லை. 1857 ல் குன்வர்சிங் கடனில் அமிழ்ந்து விடும் நிலையிலிருந்தான். அப்போது தோன்றியுள்ள கிளர்ச்சியைப் பயன்படுத்தினால் ஆங்கிலச் சட்ட திட்டங்களுக்குத் தப்பி, தன் பழைய நிலையை மீண்டும் அடையலாம்; என்று அவன் எண்ணி யிருக்கலாம். குன்வர்சிங் திட்டமிட்டு, ஒரு சுதந்திரப் போரைப் பீஹாரில் நடத்தினான்; என்ற கூற்றை ஏற்றுக் கொள்ள முடிய வில்லை. புரட்சித் தலைவர்களுடன் எந்த அளவு இரகசிய உறவு அவன் கொண்டிருந்தான்? என்பதும் விளங்க வில்லை. அவன் ஆங்கிலேயரின் நெருங்கிய நண்பனாகவே இருந்தான்; என்பதில் ஐயமில்லை. ஆணையர் டெய்லரின் அரசாங்கக் கடிதங்கள் பல இதை நிரூபிக்கின்றன. கடன் சுமையிலிருந்து விடுபட அவன் முயற்சி எடுத்தான்; என்பதிலும் ஐயமில்லை. உடல் நலமின்றிக் கிடந்த குன்வர்சிங் எந்தச் சதியிலும் ஈடுபட்டிருக்க முடியாது? என்று ஆணையர் டெய்லரும், பிற அதிகாரிகளும் நம்பினர். புரட்சி வீரர்களின் பலவந்தத்திற்குட்பட்டே இதில் ஈடுபட்டார் என்று, குன்வர்சிங் நண்பன் நிஷான்சிங் பிற்காலத்தில் கூறினான்· குன்வர்சிங் சுதந்திரப் போருக்குத் திட்டம் வகுத்திருந்தால், பீஹாரில் இவ்வளவு காலங் கடந்து புரட்சித் தோன்றி யிருக்க நியாய மில்லை. ஏறிய கடனிலிருந்து தப்ப, இழந்த செல்வாக்கை நிலை நாட்ட, பிற இடங்களில் தோன்றிய கிளர்ச்சிகளும் வெற்றிகளும் ஆசையைத் தூண்ட, குன்வர்சிங்கும் கிளர்ச்சியில் பங்கு பெற்றான்; தலைமை தாங்கினான்; என்பதே தெளிவாகின்றது. அவனுக்காகத் தம் உயிரைப் பலி கொடுக்கப் பல்லாயிரம் இராஜபுத்திரர்கள் துடித்தார்கள்; அவனைக் கிளர்ச்சியி லீடுபடும்படிச் சில பிராமணர்களுந் தூண்டினார்கள்; என்பதுவுங் காரணமாக இருந்திருக்கலாம். எப்படியோ நிகழ்ச்சிகளின் வேகமும்? அழுத்தமும், குன்வர்சிங்கைப் புரட்சிக் கொடி ஏந்தச் செய்தன; ஏந்திய பின்பு அக் கிழச் சிங்கம் புத்துயிர் பெற்றது! ‘இராஜபுத்திர வீரஞ் செத்துவிட வில்லை; முஸ்லிம்களை மட்டுமல்ல, கிறித்துவரையும் அது எதிர்க்கும்’ என்பதையுங் காட்டிற்று!



'அராவில்' சிப்பாய்களின் முற்றுகை

தானப்பூர்ப் புரட்சி வீரர்கள் அராவை அடைந்த அன்றே (ஜூலை 27) ஜெகதீஸ்பூரிலிருந்து குன்வர்சிங்கும் தன் வீரர்களுடன் அங்கு வந்தான். புரட்சி வீரர்கள் வழக்கம் போல் சிறை கைதிகளை விடுவித்தனர்; கருவூலத்தைக் கைப்பற்றினர். 20 ஆங்கிலேயரும் 50 சீக்கியருந் தங்கியிருந்த அவ் வீட்டைத் தாக்கினர். 'சீக்கியர் மட்டும் இல்லாவிடில், நாங்கள் புரட்சிக்காரர்களின் காலை உணவிற்குப் பயன் பட்டிருப்போம்; என்று டாக்டர் ஹால்ஸ் கூறினர். சீக்கியரையுந் தங்கள் பக்கம் இழுக்கப் புரட்சிக்காரர்கள் முயற்சி செய்தனர். அவர்களை ஏசினர்; எள்ளி நகையாடினர்; மதத்தின் பெயரால் அழைத்தனர்; சுதந்திரத்தின் பெயரால் அழைத்தனர்; ஆளுக்கு 500 ரூபாய் தருவதாகவும் ஆசை காட்டினர்! ஆனல், சீக்கியர்கள் ஆங்கிலேயரைக் கை நழுவ விடவில்லை. இரண்டே நாட்களில் குடி நீர் தீர்ந்தது. உடனே வீட்டிற் குள்ளேயே 18 அடி ஆழத்தில் கிணறு ஒன்று வெட்டினர்! அவ் வீட்டைச் சுற்றி குப்பைக் கூளங்களையும், மிளகாய் வற்றலையுங் கொட்டித் தீயை வைத்து, எதிரிகளை வெளி யேற்றப் புரட்சி வீரர்கள் முயன்றனர். ஆனல், காற்றுத் திசை மாறி அடித்து வெள்ளையரையும், சீக்கியரையுங் காப்பாற்றியது. அந்தச் சமயத்தில் தான் தானப்பூரிலிருந்த கேப்டன் தன்பார் தலைமையில் வந்த பரங்கியரின் படை, குன்வர்சிங்கின் வீரர்களால், மாந்தோப்பில் தோற்கடிக்கப்பட்டு, நிர்மூலமாக்கப் பட்டது. தங்களுக்கு உதவ வந்த படையின் கதியைச் சில நாள் கழித்தே அடைபட்டோர் அறிந்தனர். ஒரு சிறு வீட்டிலிருந்து கொண்டு 70 பேர் ஒரு பெருந் தாக்குதலைச் சமாளித்து வருவது திரமிக்க செயல்தான். ஆனல், உதவி விரைவில் கிடைக்கா விட்டால், நிலைமை மோசமாகி விடும்.

எதிர்பாராமல் அவர்கட்கு உதவி கிட்டியது. கல்கத்தாவிலிருந்து அலகாபாத்திற்குச் சென்று கொண்டிருந்த ஒரு வெள்ளைப் படை, தானப்பூரைத் தாண்டி ஜூலை 28 ஆம் நாள் பக்சாரை அடைந்திருந்தது. தானப்பூர் கிளர்ந்தெழுந்ததை அறிந்ததும், அப் படைத் தலைவர் மேஜர் வின்சென்ட் அயர் (Vincent Ayre), நெருக்கடி நிலையில் ஆங்கிலேயர் எங்கிருந்தாலுங் காப்பாற்ற வேண்டும்; என்று எண்ணி, உயர் அதிகாரிகளின் அனுமதியைப் பெற நேரமில்லாமல், உடனே அராவிற்கு விரைந்தார். வழியில் - தான் கேப்டன் தன்பாரின் தோல்வியை அறிந்தார். அயர் அராவிற்குள்ளே நுழைய, குன்வர்சிங் விடவில்லை. ஊருக்கு வெளியே பரங்கியர்ப் படையை வழி மறித்தார். கடுமையான போருக்குப்

பின்பு வெள்ளையரின் போர் முறையும், என்பீல்டு துப்பாக்கி களும் புரட்சிப் படையைச் சிதற அடித்தன. நான்கு நாட் கள் முற்றுகைக்குப் பிறகு, ஆகஸ்டு 4ஆம் நாள் அரா விடு விக்கப்பட்டது. குன்வர்சிங் தன் வீரர்களுடன் ஜெகதீஸ் பூருக்குப் பின்வாங்கினன். பின் வாங்குதல் தோல்வியின் அறி குறியல்ல. மறு தாக்குதலுக்கு இப்போது தப்பித்தல்! என்பது நினைவிருக்கட்டும்! குன்வர்சிங் ஓர் இராஜபுத்திரன்!

மேஜர் அயர் 8 நாட்கள் அராவில் தங்கி அப் பகுதியில் ஒழுங்கை நிலை நாட்டினர். இந்த இடை வெளியைப் பயன் படுத்திக் குன்வர்சிங்கும், தன் நிலையைப் பலப் படுத்தினன். அராவி லிருந்து ஜெகதீஸ் பூருக்குச் செல்லும் வழியில், ஒரு காட்டில் பரங்கிப் படையைப் புரட்சிப் படை தாக்கிற்று. இம் முறையும் குன்வர்சிங் பின் வாங்கினன். ஆகஸ்டு 14ம் நாள் ஜெகதீஸ் பூரை அடைந்த மேஜர் அயர், குன்வர்சிங்கின் மாளி கையையும், பெரும் செலவில் அவன் கட்டிய கோவிலையும் இடித்துத் தரை மட்ட மாக்கினர். காயமடைந்த இராஜ புத்திரப் புரட்சி வீரர்கள் பலரைத் தூக்கு மேடையில் நிறுத் தினர். அந்த இராஜபுத்திரர்களின் தோற்றமும் பேச்சும் அவரை மெய்ச் சிலிர்க்க வைத்தன! தூக்கு மேடையில் நின்று கொண்டு அவர்கள் வெள்ளையனிடங் கேட்ட தென்ன தெரி யுமா? தூக்குக் கயிற்றைத் தாங்களே மாட்டிக் கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும் என்பதே யாகும்! மேஜர் அயர் இந்துக் கோவிலை இடித்ததைத் தலைமைத் தளபதி கண்டித்து எழுதினர். அத்துடன் அவரை உடனே அலகாபாத்திற்கு விரையும்படித் தானபூரிலிருந்து ஆணை வந்தது. ஏனெனில்? லக்னேவை மீட்கும் பணியில் ஹேவலாக் ஆங்கில உதவிப் படையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மேஜர் அயர் அராவை விட்டு ஆகஸ்டு 20ஆம் நாள் வெளியேறினர்.

தோல்வி அடைந்து, தலை நகரை இழந்து மன உறுதி மட்டும் இழக்காமல், ஜெகதீஷ்பூர் காடுகளை விட்டுக் குன்வர் சிங், ரோத்தாஸ் மலைப் பகுதிக்குச் சென்றான். இனி சிறு சிறு போர்களில் ஈடுபட்டுப் பலனில்லை. உறுதியான பெரும் எதிர்ப் பைப் பரங்கிக்குத் தர வேண்டும். இங்கே, தனியாகப் போரிட் டுப் பலனில்லை. கங்கைக்கு மேற்புறத்தில் - தான் வெற்றி தோல்விகள் நிச்சயிக்கப் படுகின்றன. இந்த எண்ணத்தில், மேற்கே அருகிலிருந்த ரேவா சிற்றரசுக்குள்ளே குன்வர்சிங் வந் தான். அச் சிற்றரசன் அவனுடைய உறவினனுக இருந்தும், ஆங்கில அரசுடன் பல உடன்பாடுகளுக்கு உட்பட்டிருந்ததால்

குன்வர் சிங்கை எதிர்த்தான். செப்டம்பர் மாதம் முழுவதும் ஷாஹாபாத், மிர்ஸாபூர்க் காடுகளில், அக்கிழச் சிங்கத்தின் உறுமல் எதிரொலித்தது! ரேவா விலிருந்து குன்வர்சிங் பண்டாவிற்குச் சென்றான். பண்டா நவாப் ஏற்கனவே புரட்சியிலீடுபட்டிருந்ததால், இருவருங் கை கோர்த்துக் கொண்டனர். இதற்கிடையில் டெல்லி, வெள்ளையரால் மீட்கப்பட்டு விட்டது; (20 செப்டம்பர் 1857) இதற்கேற்ப தன் திட்டங்களை மாற்றியகுன்வர்சிங், நானா சாஹேப்பின் வேண்டுகோளின்படி கால்பியை அடைந்தான். லக்னோ நிலையரகத்தை மீட்டு விட்டுத் தலைமைத் தளபதி காலின் கேம்பலுக்கு வந்து கொண்டு இருந்த போது, குவாலியர் வீரர்களுடன் தாத்யா கான்பூரை வளைத்துக் கொண்டிருந்தான் அல்லவா? (நவம்பர் 30). அப்போது குன்வர் சிங்கும் அங்கே இருந்ததாகத் தெரிகிறது. கேம்பல் புரட்சிப் படையைத் தோற்கடித்துக் கான்பூரை மீட்டார். தாத்யாவும் நானாவும் கால்பிக்குத் தப்பி ஓடினர். ஆனால், குன்வர்சிங் மட்டும் அது போதும் புரட்சிக் கொடி பறந்து கொண்டிருக்கும் இலக்னோவிற்குச் சென்றான். அங்கே அவனுக்கு நல்ல வரவேற்புக் கொடுக்கப்பட்டது. கான்பூரில் தோல்வியடைந்த பின்பு, தாத்யா கால்பிக்குச் செல்லும் போது, குன்வர்சிங் மட்டும் ஏன் லக்னோவுக்குச் செல்ல வேண்டும்? இந் நிகழ்ச்சியில், புரட்சித் தலைவர்கள் சிலரிடையே கூடுவதற்குத் திட்டமும், ஒத்துழைப்பும் இல்லை; என்பது புலனாகின்றது. பொதுவாக, ஜெகதீஸ்பூரிலிந்து வெளியேறிய குன்வர்சிங், லக்னோ அடையும் வரையில் மேற் கொண்ட செயல்களைப் பற்றிய உண்மைகளை உறுதிபடுத்தவும் முடிய வில்லை. அவனுடைய நடமாட்டம் பற்றிய செய்திகள் ஒன்றுக் கொன்று முரணாகவே இருக்கின்றன.

கேம்பல் ஃபதேகரை மீட்டு, லக்னோவைக் கைப்பற்ற பெரும் முயற்சிகளி லீடுபட்டிருந்ததை நாம் அறிவோம். நேபாளத்திலிருந்து கூர்க்காப் படையும், கான்பூரிலிருந்து ஃபிராங்ஸின் படையும் புரட்சி வீரர்களை அடித்து விரட்டி விட்டுக் கிழக்கு முகமாக அயோத்திக்குள் நுழைந்தன. சிதறிய புரட்சி வீரர்கள் அனைவரும், அப்பொழுது குன்வர் சிங்கின் தலைமையில் ஒன்று திரண்டனர். காசிக்கு நேர் வடக்கே ஆசாம்கரிலிருந்து 20 மைல் தொலைவில், அட்ரோலி என்ற கிராமத்தில், குன்வர்சிங் மார்ச் 18ஆம் நாள் முகாமிட்டான். அவனிடம் ஒரு துணிகர திட்டம் இருந்திருக்கிறது. புரட்சி வீரர்களின் நெருக்கத்தை அறிந்த ஆசம்கர், தளபதி கர்னல் மில்மென் (Milman) தம் படையுடன் அட்ரோலிக்கு

வந்தார். மார்ச் 22ஆம் நாள் குன்வர்சிங்குடன் மோதி வெற்றி பெற்ருர். அடுத்து அருகிலிருந்த மாந்தோப்பில் பரங்கிப் படை ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. காலை உணவிற்கு வீரர் கள் அமர்ந்தனர். திடீரென்று ஏதோ அலரல் கேட்டது. வர்சிங் தன் வீரர்களுடன் மாந்தோப்பைச் சூழ்ந்து கொண் டான்! பரங்கி வீரர்கள் பதறி அடித்துக் கொண்டு துப்பாக்கி களைத் தூக்கிஞர்கள். சிறிது நேரத்தில் மாங்காடு சுடுகாடாகி விட்டது. இராஜ புத்திர வெறிக்கு வெள்ளையர்கள் பலியா யினர். உணவை விட்டுத் தளவாடங்களை விட்டுப் பரங்கிப் படை ஆசம் கரை நோக்கி ஓட்ட மெடுத்தது. எங்கே குன்வர் சிங் தொடர்வானே? என்ற அச்சம் பற்றியதால், ஆசம்கரி லிருந்து உதவி தேடி மூலைக்கு ஒரு தூதுவன் ஓடினுன்! காசி, லக்னே......எங்கெங்கு ஆங்கிலேயர் இருந்தனரோ, அங்கெங் கெல்லாம் அபயக் குரல் எட்டியது! அதே சமயத்தில் தான் வெள்ளைப் படை லக்னேவை முழுவதுமாக மீட்டது. இந்த லக்னே படை யெடுப்பை முன்னிட்டுத் தலைமை ஆளுநர் கேனிங்கே அலகாபாத்தில் முகாமிட்டிருந்தார். (மார்ச் 27), அவர் குன்வர்சிங்கின் நெஞ்சுரத்தை நன்கு அறிந்தவர். அவனு டைய துணிகரத் திட்டத்தை ஒரு நொடியில் புரிந்து கொண் டார். ஆசம்கரைக் கைப்பற்றி, 80 மைல் தொலைவைப் புயல் போலக் கடந்து, பெரும் படையைக் கொண்டு காசியை முற்றுகை யிடுவதுதான் குன்வர்சிங்கின் அற்புத திட்டம்! இது நிறைவேறி விட்டால், லக்னேவில் இருக்குந் தலைமைத் தளபதியும், அலகாபாத்தில் இருக்குந் தலைமை ஆளுநரும் தலைநகர் கல்கத்தாவிலிருந்து துண்டிக்கப்படுவார்கள்! பிரிட் டானியப் பேரரசின் ஆணிவேரையே வெட்டும் பயங்கரத் திட்டமிது; நினைக்கவே கேனிங் பதறினுர்!!

---

## 35. ஓபாபு! ஓகுன்வர்!

[மார்க்கெர் பிரபு ஆசாம்கருக்குச் செல்லுதல் — குன்வர்சிங் வழிமறித்தல் — டக்ளஸ் அலைக்கழிக்கப்படல் — குன்வர் கங்கையைக் கடத்தல்—லாகிராண்ட் வழி மறித்தல் — குன்வர் ஜகதீஷ் பூரை அடைதல்.]

குன்வர் சிங்கைத் தடுத்து நிறுத்தா விட்டால், எல்லாம் பறி போகும். கேனிங்கின் ஆணைப்படி, மார்க்கெர் பிரபு (Lord) Morkker) அலகாபாத்திலிருந்து கிழக்கே காசிக்குச் சென்று அங்குள்ள படைகளையுஞ் சேர்த்துக் கொண்டு வடக்கே ஆசாம்கரை நோக்கிப் படை எடுத்தார். அவ்வூருக்கு எட்டு மைல் தொலைவில் உள்ள ஓர் இடத்தில், ஏப்ரல் 5 ஆம் நாள் முகாமிட்டார். மறு நாள், அப் பெரும் படை நகர்ந்தது. தளவாடங்களை ஏற்றிக் கொண்டு, யானைகளும், ஒட்டகங்களும், வண்டிகளும் மெல்ல மெல்ல ஊர்ந்தன. தொலைவில் ஏதோ புழுதி உயர்ந்தது. என்னவென்று அறிவதற்குள்? வெள்ளை புரவி ஒன்றில் கம்பீரமாய் அமர்ந்தபடி குன்வர்சிங் அவர்களை நெருங்கி விட்டான்! இந்தத் தள்ளாத வயதில் அவனை எந்த இலட்சியம் இயக்கியதோ? முன்னே செல்லும் வெள்ளைப் படை திரும்புவதற்குள், போர்ப் பறை முழங்க, சங்கு ஒலிக்க, பேரிரைச்சலுடன் குன்வர் சிங்கின் வீரர்கள் தளவாடங்களைச் சுற்றி வளைத்துத் தாக்கினுர்கள். யானைகள் மிரண்டன! ஒட்டகங்கள் சிதறின! வண்டிகள் தீப்பற்றி எரிந்தன! வண்டி ஓட்டிகள் ஓடி ஒளிந்தனர். மார்க்கெர் பிரபுவும் நெஞ்சுரம் பெற்றவர். உருகுலைந்திருந்த தம் படைகளைத் துணிவுடன் செலுத்திப் புரட்சி வீரர்களை வளைத்தார். அவர் சிறிதேனுந் தயங்கி இருந்தாலும் விபரீதம் ஏற்பட்டிருக்கும். புரட்சிப் படையின் போர் முறை சரியில்லை. ஒவ்வொருவருந் தத்தம் விருப்பம் போல் ஆணைகள் இட்டனர். விளைவு தோல்வி தான்! புரட்சிப் படை பின் வாங்கியது. இலக்னோவி

லிருந்து வந்த வீரர்களுடன் மீண்டும் ஏப்ரல் 20ஆம் நாள் குன்வர்சிங், பரங்கிப் படையைத் தேடி வந்தான். கங்கை நதிக்கருகில், காஜீபூர் மாவட்டத்தில், மனோகர் என்ற இடத்தில் பொருதிப் பின்வாங்கினான். குன்வர்சிங், துணிவில் சிங்கம்! தந்திரத்தில் நரி! பரங்கியர் தாக்கும் போதெல்லம் அவனுடைய வீரர்கள் வெவ் வேறு திசையில் பின்வாங்குவார்கள். திட்ட மிட்டபடி பிறிதொரு இடத்தில் மீண்டுஞ் சேர்ந்து பரங்கியரைத் தாக்குவார்கள்! இதனால், ஆற்றல் மிக்க ஆங்கிலேயரில் பலர் உயிரிழந்தனர். பிரிகேடியர் டக்ளஸ் அலைக்கழிக்கப்பட்டார். கலைந்து செல்லும் புரட்சி வீரர்கள் இரவில் எங்கே இணைகின்றார்கள்? என்பதை அவரால் கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஆனால், வெள்ளையரின் ஒவ்வொரு அசைவையும் ஒற்றர்களின் மூலம் குன்வர்சிங் நன்கறிந்தான். மனோகரில் பின்வாங்கியப் புரட்சி வீரர்கள் எங்கே சென்றார்கள்? என்பதே தெரிய வில்லை.

வெள்ளைப் படையை ஏமாற்றி விட்டு, ஏப்ரல் 21ஆம் நாள் நள்ளிரவில் சிவபுரியை அடைந்து, பொழுது புலரும் போது கங்கையைக் குன்வர்சிங் கடந்தான். அதே சமயத்தில் வெள்ளைப் படை அங்கு வந்து, விரைந்து செல்லும் படகுகளை நோக்கிச் சுட்டது. குன்வர் சிங்கின் ஒரு கை குண்டு பட்டுச் சிதைந்தது. அக்கணமே தன் மறு கரத்தால் வாளை உருவி சிதைந்த கரத்தைத் துண்டித்துக் கங்கையி லெறிந்தான்!*

எட்டு மாதங்களுக்குப் பிறகு அத்தள்ளாத வயதில் காடு, மலை, நதியெல்லாஞ் சுற்றியலைந்து, வெள்ளையரின் கனவுகளில் எல்லாம் பேயாய்த் திரிந்து, ஒரு கையையும் இழந்து பாபு குன்வர்சிங் தன் இனிய ஜெகதீஸ்பூருக்குத் திரும்புகின்றான். அக்கிழச் சிங்கத்தை எதிர்ப்பதற்கு லா கிராண்ட் (Le Grand) என்பவன் ஒரு படையுடன் அராவில் இருந்தான். தளவாடங்

---

*குன்வர்சிங்கின் வீர தீரச் செயல்களைப் பற்றிச் செவி வழிப்போந்த பல கதைகள் இருக்கின்றன. இதுவும் ஒரு கதையாக இருக்கலாம். அராவைச் சார்ந்த ஒரு குடியானவன், 1914ல் நடந்த முதல் உலக யுத்தத்தின் போது, பாபு குன்வர் சிங் இன்னும் உயிரோடிருக்கிறா ரென்றும், ஆங்கிலேயரை எதிர்க்க நிச்சயம் வருவார் என்றும் கூறினானும்! அரை நூற்றாண்டுக்குப் பின்னும் இக் கதைகள் அவ் வட்டாரத்தில் உலவின. அவனே தன் கையைத் துண்டித்தானா? அல்லது ஜெகதீஸ்பூரில் மருத்துவர் துண்டித்தாரா? என்பது தெரிய வில்லை. எனினும், தன் கையைத் தானே துண்டித்துக் கொள்ளுவது ஒரு இராஜபுத்திரனுக்குப் பெரிதல்ல!

கள் இழந்து, ஆயுதங்களின்றி வெறுந் துணிவுடன் மட்டும் வரும் குன்வர்சிங், அப்பொழுதும் போரிடத் தயங்கவில்லை. அடர்ந்த அக் காட்டில், தன் குலத்திற்கே உரிய முறையில் போரிட்டுப் பரங்கிப் படைகளைச் சிதறடித்தான். இராஜபுத்திர வீரர்களின் வாட்கள் அங்கே சுழன்றன. கேப்டன் லாகிராண்ட் பல நூறு பிணங்களில் ஒரு பிணமானான். முதிர்ந்த வயதில் எட்டு மாதம் இடைவிடாது போரிட்டு, இறுதியில் வெற்றி வீரனாகத் தன் இனிய குடிமக்களிடம் இழந்த ஜெகதீஷ்பூருக்கு வந்தடைந்தான். புரட்சியைத் தொடர்ந்து நடத்தும்படித் தன் தம்பி அமர்சிங்கிக்கு ஆணையிட்டு விட்டு, சிதைந்த தன் மாளிகையில் இறுதி மூச்சை விட்டான். தாத்யாவைப் போலவும் மௌல்வி அகமதுல்லாவைப் போலவும், பாபு குன்வர்சிங்கும் வெள்ளையருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய மாவீரன் ஆவான். அதோ! பீஹார் தாய்மார்கள் தொட்டிலை ஆட்டிக் கொண்டே பாடுகின்ற தலாட்டு ஷாஹாபாத் காடுகளில் இன்றும் எதிரொலிக்கிறது! கேளுங்கள்!

*"கண்ணுறங்கும் கண்மணியே
கேட்டிடுவாய் நங்கதையை,
விண்ணுலகம் சென்றிட்ட
உன்பாட்டன் வீரத்தை!
பொன்னையும் பொருளைத்தும்
உன்அன்னை என்னையுந்தான்
கண்ணேபோல் காத்துவந்த
கடவுளர்தம் சிறப்பினையும்

திண்ணமுடன் காத்திடவே
தீவிரமாய் முடிவெடுத்தான்
கண்மணியே உன்பாட்டன்
கத்தியேந்தி நின்றிட்டான்!
வாழ்நாள்தான் முழுவதுமே
வீரரென்றே வாழ்ந்திட்டான்
வீழ்நாள்தான் வந்திடினும்
வாளேந்திச் சென்றிட்டான்!

கண்மணியே கேட்டிடுவாய்
கனிவாக ஒருவார்த்தை,
கண்டிப்பாய் அழியாது
காலத்தால் சிலர்வாழ்க்கை.
மாவீர மராட்டியரும்
மண்டியிட்டுப் பணிந்தனரே!
சாஹூரைச் சீக்கியரும்
சீக்கிரமே அடைந்தனரே!

ஆற்றலிலாப் பேஷ்வாக்கள்
அயலானின் அடிமைகளாய்,
போற்றுகின்ற தில்லிநகர்ப்
பேரரசர் வறியவராய்,
கைநீட்டி யாசகராய்க்
கதியற்று நின்றனரே!
மெய்வாடி முகம்வாடி,
மாமன்னர் மனம்வாடி,

நின்றிட்ட நெடும்போதில்
சென்றிட்டான் உன்பாட்டன்
சொன்னாலே பெருமைதரும்
அவர்செய்த வீரமெல்லாம்.
மானத்தைக் காத்தற்கே
வாளேந்திச் சென்றிட்டான்,
வானுலகும் எய்திட்டான்
வாடாத புகழ்வீரன்!

———

*[குன்வர்சிங் தலைமுறையைச் சார்ந்த துர்கா சங்கர் பிரசாத் சிங் என்பவர் மூலம் சேகரிக்கப்பட்ட நாடோடிப் பாடல் இது.]

# 36. அருமைத் தம்பி அமர்சிங்

[ஷஹாபாத் வட்டாரத்தில் தனியாட்சி—மக்களின் ஆதரவு —வெள்ளைத் தலைகளுக்கு விலை — ஜகதீஷ்பூர் வளைக்கப்படல் — அமர்சிங்கின் கொரில்லா தாக்குதல்கள் — அடவிக்குள் ஆங்கிலத் துருப்புக்கள்—அமர்சிங் தப்பித்தல்—மக்களின் வேட்டை—ஆங்கில ஆட்சிக்கு பீஹார் சிற்றரசுகளின் உதவி.]

குன்வர்சிங் இறந்ததும், ஷாஹாபாத் புரட்சிக்கு, அவன் தம்பி அமர்சிங் தலைமை ஏற்றான். முறையான போர்ப் பயிற்சி அவனுக்கு இல்லை யெனினும், இராஜபுத்திரத் துணிவும், ஆற்றலும் வேண்டிய மட்டும் அவனிடம் இருந்தன. போரிடச் சில ஆயிரம் வீரர்களுஞ் சுற்றுப்புறக் குடியானவர்களின் ஆதரவும் இருந்ததால், ஷாஹாபாத் வட்டாரத்தில் ஒரு தனி அரசாட்சியையே அமர்சிங் ஏற்படுத்தினான். நிர்வாகத் துறைகள் பலவும் ஏற்படுத்தப் பட்டன. நீதிபதிகள் நியமிக் கப்பட்டனர். இந்த ஆட்சிக்குப் பல சிறு ஜமீன்தார்களும் ஆதரவு அளித்தார்கள். தங்கள் குலத்தவன் ஒருவன் தங் களை ஆள்வதை அம் மக்களும் விரும்பினர். அவ் வாட்சியில் கண்ணியமும், நேர்மையும் இருந்தன. வெள்ளையர்கள் கூட பயமின்றி அப் பகுதிகளில் நடமாடலாம். ஆனால், புரட்சிக் காரர்களைப் பிடிப்பதற்கு வர முயலும் எந்த வெள்ளையர்களை யும் அவர்கள் அனுமதிக்க வில்லை. அம் மக்கள் தங்கள் குலத் திற்காகவும், அதன் நலத்திற்காகவும் போரிடுந் தங்கள் உறவினர்களையும், நண்பர்களையுங் காட்டிக் கொடுக்க வில்லை ஷாஹாபாத் பகுதியில் ஒரு விடுதலைப் போருக்குரிய அத் துணை ஏற்பாடுகளும் அமைந்திருந்தன.

புரட்சித் தொடங்கி ஓர் ஆண்டு முடிந்து விட்டது. சிறந்த குன்வர்சிங்கிற்கு வைத்தது போலவே அமர் சிங்கின் தலைக்கும் வெள்ளையர் ஆட்சி விலை வைத்தது. ஆனால், அமர்சிங்கோ, உயர் பதவிகளில் இருக்கும் பல ஆங்கிலேயரின் தலைகளுக்கு விலை

வைத்தான்! தம் ஐயாயிரம் வீரர்களுடன், அவன் ஒரு பெரும் வெற்றியைப் பெற்று விட முடியாது. ஏனெனில்? குன்வர்சிங்கைத் தொடர்ந்த டக்ளஸ் ஜெகதீஷ்பூரை நோக்கித் தானுப்பூரிலிருந்து வருகிருர். எட்வர்ட் லுகார்ட் (Edward Lugard) ஆசம்கரிலிருந்து வருகிருர். கானெல் கோர் பீல்டு (Core field) தெற்கே சசாராமிலிருந்து வருகிருர். பரங்கிப் படைகளின் இம் மும்முனைத் தாக்குதலை, அமர்சிங்கால் சமாளிக்க முடியாதாகையால், அடர்ந்த காடுகளில் மறைந்து வாழ்ந்து, கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றினுன். மிர்ஸாப்பூர்க் காடுகளில் அமர்சிங்கின் வீரர்கள் மறைந்து வாழ்ந்தார்கள். இருண்ட காடுகளிலிருந்து எந்நேரம்? எப்படி பாய்கிருர்கள்? என்பதைச் சொல்லவே முடிய வில்லை. எட்வர்டு லுகார்டின் முயற்சிகள் அத்தனையும் பயன் அளிக்காததால், அவருடைய உடலும் உள்ளமும் தளர்ந்தன. ஜுன் மாதம் முழுவதும் வெள்ளைப் படைகள் பல வகையான இன்னல்களுக் குள்ளாயின. இனியும் தம்மால் தாக்குப் பிடிக்க முடியாது; என்று அறிந்த லுகார்டு, தம் பதவியிலிருந்து விலகி இங்கிலாந்திற்கே சென்று விட்டார். அடுத்துத் தலைமை ஏற்ற பிரிகேடியர் டக்ளசாலும் அமர்சிங்கைப் பிடிக்க முடிய வில்லை. முன்றே மாதங்களில் அமர்சிங்கின் வீரர்கள் சுற்றுப்புறத்தைச் சூரையாடி விட்டனர். அராவும், கயையும் நடுநடுங்கின! புரட்சிக்கு எதிரிகளாயிருந்த சில ஜமீன்தார்களின் வீடுகள் தாக்கப்பட்டுக் கொள்ளை அடிக்கப்பட்டன. சிறைச் சாலைகள் திறந்து விடப்பட்டன. பல இடங்களில் புரட்சிப் படைகளை வெள்ளைப் படைகள் தாக்கின. ஆனுல், சிதறிய அவர்கள் குறிப்பிட்ட நாட்களில், குறிப்பிட்ட இடங்களில் மீண்டும் இணைந்து தம் தாக்குதலைத் தொடர்ந்தனர். வெள்ளை அதிகாரிகள், காடுகளுக்குள் சாலைகள் போட்டுப் படைகளையுந் தளவாடங்களையும் அங்குக் கொண்டு சென்றனர், ஆனுல், அமர்சிங்கின் மாயவீரர்கள் நொடிப் பொழுதில் மறைந்து விடுவார்கள். இருண்ட அடவிகளில் சில தடயங்களைக் கொண்டு, பல முறை வெள்ளை வீரர்கள் தொடர்ந்து சென்றிருக்கின்றனர். அவர்களுடைய சல சலப்பு ஓசையைக் கேட்டதும் புரட்சி வீரர்கள் பறந்து விடுவார்கள்.

1858 ஆக்டோபர் மாதம். இன்னும் அமர்சிங்கைக் கண்டு பிடிக்க முடிய வில்லை. இறுதியில் மேஜர் ஹென்றி, டக்ளஸிடம் ஒரு திட்டந் தந்தார். அதன்படி பெரும் படைகளுடன் காடுகளை ஊடுருவி அமர்சிங்கைப் பிடிக்க முடியாதாகையால், சில பீரங்கிகளுடன் சில குதிரை வீரர்கள் சென்ருல், எதிரியைக்

கொல்லுவது எளிதாகும். இவர்களைப் பின் தொடர்ந்து பிற அணிகளுஞ் சென்றால், எதிரியைச் சுற்றி வளைக்கலாம். என்ற இத் திட்டம் நல்ல பலன் அளித்தது. வெள்ளைப் படையின் குதிரை வீரர்கள் காட்டுக்குள் புகுந்து புரட்சி வீரர்களை மூலைக்கு மூலை விரட்டினர். பல முறை அமர்சிங் மயிரிழையில் உயிர் தப்பினார். பல நூறு வீரர்கள் அகப்பட்டு உயிரிழந் தனர். பெரும் படைகள் ஆறு மாதங்களில் சாதிக்க முடி யாததைச் சில குதிரை வீரர்கள் சில நாட்களில் சாதித்தனர். ஐந்து இரவுகளிலும், ஐந்து பகல்களிலும் 200 மைல்களைச் சுற்றிப் புரட்சி வீரர்களை அலக்கழித்தனர். தப்பித்தப் புரட்சி வீரர்கள் மேற்கே பாஹல் கண்டில் மெய்மர் மலை களில் ஓடி ஒளிந்தார்கள். அடுத்த மாதம் டக்ளஸ் அங்கேயுஞ் சென்று அவர்களை விரட்டியடித்தார். அங்கே ஒளிந்திருந்த நிஷான்சிங், கரிகிஷன்சிங் என்ற இரண்டு புரட்சித் தலைவர் களையும் பிடித்துக் கொண்டு வந்து, விசாரணைக்குப் பின்பு தூக்கிலிட்டனர். அமர்சிங் தலை மறைவாயினார். (1859 அக் டோபரில் நேபாளத்தில் பதுங்கிய புரட்சி வீரர்களை ஒன்று சேர்க்க அமர்சிங் முயன்றதாகத் தெரிகிறது. அதன் பின்பு அவன் என்ன ஆயினானோ!

பீஹாரின் விடுதலைப் போரில் பல ஜமின்தார்களும், சிற்றர சர்களும் ஈடுபட வில்லை. தர்பங்கா, தும்ரோம்ஹத்வா ஆகிய மஹாராஜாக்கள் ஆங்கிலேயருக்குப் படையும், பொருளுங் கொடுத்து உதவினர். ஷாஹாபாத் மாவட்டத்தைப் போல, பீஹாரின் பிறபகுதிகள் கிளர்ந்தெழ வில்லை. குன்வர்சிங்கும், அமர்சிங்கும் இலட்சத்தில் இருவர். அவர்களைப் போல இருப தின்மர் இருந்திருந்தால், பரங்கிப் படை புழுதியாக்கப் பட் டிருக்கும். குன்வர்சிங்கும், அமர்சிங்கும் இன்னும் மக்களின் நினைவில் நாடோடிப் பாடல்கள் மூலம் வாழ்கின்றனர்.

# 37. ஜான்சியும் இராணி இலட்சுமியும்.

[வரலாறு—உடன்படிக்கைகள்—கங்காதர் ராவ் வாரிசின்றிக் காலமாதல்—ஜான்சி இணைப்பு—தளபதி டன்லப்—இராணியின் தூண்டுதல்—ஜோக்கன்பரக் படுகொலை—அரியணைப் போட்டி—சதாசிவராவ்—இராணியிடஞ் சிப்பாய்கள் பணம் பறித்தல்—துத்யா, ஓர்ச்சா அரசர்கள் படையெடுப்பு, இராணி ஆங்கிலேயரின் உதவியைக் கோருதல்—பன்பூர் மன்னனின் உதவி—பல மாதங்களாகியும் ஆங்கில உதவி கிட்ட வில்லை—கிளர்ச்சியி லிறங்குகிறான்.]

இந்தியாவின் மத்திய பகுதி அக்காலத்தில் 'பண்டேல் கண்ட்' என்றழைக்கப்பட்டது. இங்கே ஒரு காலத்தில் ஆட்சி புரிந்த ஓர்ச்சா மன்னன் சத்ரசால், முஸ்லிம் ஆக்கிரமிப்பிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள பேஷ்வா முதலாவது பாஜிராஜாவின் துணையைப் பெற்றிருந்தான். (1740) அவ்வுதவிக்காக பண்டேலா நாட்டின் ஒரு பகுதியைப் பேஷ்வா எடுத்துக் கொண்டான். அப்பகுதி மூன்றாகப் பிரிக்கப்பட்டு, அதில் ஒரு பகுதியான ஜான்ஸியின் ஆட்சி உரிமை ரகுநாத் ஹரி நவேல்கரின் குடும்பத்திற்குப் பேஷ்வாவால் தரப்பட்டது. இந்தச் சுபேதார் நவேல்கர், தன் தம்பி சிவராம் பாவே என்பார்க்கு ஜான்ஸியைத் தந்து விட்டான். சிவராம் பாவே 1804ல் ஆங்கிலேயருடன் ஓர் ஒப்பந்தஞ் செய்து கொண்டார். ஆனால், 1817ல் மராத்தியப் பேஷ்வா 2-வது பாஜிராவ் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டதால், மராத்தியப் பகுதியான ஜான்ஸி கிழக்கிந்திய நிறுவனத்தின் கீழ் வந்தது. அப்பொழுது ஜான்ஸியை ஆட்சி புரிந்த (சிவராம் பாவேயின் பேரன்) இராமச்சந்திரராவ் நிறுவன அரசுக்குக் குறிப்பிட்ட திறை செலுத்தி, அதன் பாதுகாப்பில் இருக்க ஒப்புக் கொண்டதால், ஜான்ஸியின் ஆட்சி உரிமையை, அவனுடைய குடும்பத்திற்குப் பரம்பரையாக அளிக்கப்பட்டது. 15 ஆண்டுகளுக்குப் பின்பு அவனுடைய நடத்தையில் திருப்தி யடைந்த

ஆங்கில அரசு, சுபேதார் என்ற பட்டத்தை நீக்கி 'ராஜா' என்ற பட்டத்தை அளித்தது. 1835-ல் ராஜா ராமச்சந்திரராவ் சந்ததியற்றுக் காலமானன். அவன் குடும்பத்திற்கும் அரசுரிமை இருந்ததால், விதவையான அரசி தன் சகோதரியின் மகன் கிருஷ்ணராவைத் தத்தெடுத்துக் கொண்டாள். வேறு ஒரு குடும்பத்தைச் சார்ந்தவனுக்கு வழி யுரிமை இல்லை யென்பது, அப் பகுதி மக்களின் வழக்கமாக இருப்பதால், கிருஷ்ணராவின் ஆட்சி உரிமை எதிர்க்கப் பட்டது. எனவே, இறந்த இராமச்சந்திரராவின் சிற்றப்பனை (சிவராம் பாவே யின் மற்ருெரு மகன்) இரகுநாதராவிற்கு ஜான்ஸி அரசுரிமையை நிறுவன அரசு அளித்தது.

இந்த இரகுநாதராவ், ஆட்சித் திறன் ஒரு சிறிதுங் கூட இல்லாதவன். மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு அவனுஞ் சந்ததி யற்றுக் காலமானன். சீர் கெட்ட ஜான்சியின் ஆட்சியைச் சீர் திருத்த அரசு எண்ணி வந்தது. அப்பொழுது தோன்றிய வாரிசுரிமைப் போட்டியுஞ், சிக்கலுந் தீர்ப்பதற்குக் கடினமாக இருந்தாலும், முடிவில் இரகுநாதராவின் சகோதரன் கங்காதரராவிற்கு அரசுரிமை அளிக்கப்பட்டது. இவனும் ஒழுங்காக ஆட்சியை நடத்தவில்லையாதலால், குறிப்பிட்ட தொகையை இவனுக்கு அளித்து விட்டு, ஜான்ஸியின் நிர்வாகத்தை நிறுவன அரசே மேற்கொண்டது. நிர்வாகம் சீரமைக்கப்பட்ட பின்னரே, அவன் ஆளுவதற்கு அனுமதிக்கப் படுவான் என்றும் அரசு கூறி விட்டது, அதன்படியே 1843-ல் ஜான்சியின் ஆட்சி மீண்டுங் கங்காதரராவிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. 11 ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகு 1853 நவம்பர் மாதத்தில் அவனும் வாரிசின்றியே காலமானன்! முன்பு 1817-ல் வெள்ளை அரசு இராமசந்திரராவுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி அவனுடைய குடும்ப வழி முறைக்கு மட்டுமே ஆட்சி யுரிமை உண்டு. ஆனல், கங்காதரராவிற்குப் பிறகு அக் குடும்பத்தில் வாரிசு எவரு மில்லை. டல்ஹௌசியின் நாடிழக்குங் கொள்கையின்படி வாரிசு இல்லாத நாடு நிறுவன ஆட்சியில் இணைந்து விடும்.

கங்காதர ராவ் இறப்பதற்கு முதல் நாள் தன் குடும்பத்தின் பிறிதொரு கிளையிலிருந்து ஒருவனைத் தத்து எடுத்தார். பல சீமான்களை வைத்து நிறுவனத்தின் அரசியல் பிரதிநிதியின் முன்னிலையில், தன் மனைவியையும், வளர்ப்பு மகனையும் அவன் அரசிடம் ஒப்புவித்தான். தன் விசுவாசமான நடத்தையைக் கருதி, தன் வளர்ப்பு மகன் சார்பில் தன் மனைவி

ஆட்சி புரிய அரசு அனுமதிக்க வேண்டுமென்றுங் கேட்டுக் கொண்டான். அரசின் பிரதிநிதி மேஜர் எலிஸ், இதை ஆதரித்து, மேலிடத்திற்கு அவ்வறிக்கையை அனுப்பினர். டாட்டியா, ஓர்ச்சா ஆகிய பகுதிகளில் வளர்ப்புப் பிள்ளைகளுக்கு அரசுரிமை இருப்பதையும், அதை நிறுவன அரசு அங்கீகரித்திருப்பதையுஞ் சுட்டிக் காட்டி, ஜான்சியின் விதவை இராணியுந் தலைமை ஆளுநருக்கு விண்ணப்பித்தாள். அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. 'அந்த நாடுகளெல்லாஞ் சுதேசி மன்னர் தங் குலங்களால் பரம்பரையாக ஆளப்பட்டு வருகின்றன. ஜான்சியோ நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட நாடாகையால், அதன் ஒப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டது' என்று தலைமை ஆளுநர் கூறி விட்டார். ஜான்ஸியின் முன்னேற்றத்தைக் கருதியும், அதன் இராணுவப் புவியமைப்பைக் கருதியுந் தலைமை ஆளுநர் மார்ச் 1854-ல் ஜான்சியைத் தம் ஆட்சியில் இணைத்துக் கொண்டார்! ஓய்வுப் பணம் ஆண்டு ஒன்றுக்கு 60,000 ரூபாயும், ஜான்சியிலிருந்த ஒரு மாளிகையும் இராணிக்குத் தரப்பட்டன. தனியாக ஆதரவாளர்களை வைத்துக்கொள்ள அனுமதியும், அரசின் சட்டங்களிலிருந்து விதிவிலக்கும் இராணிக்கு அளிக்கப்பட்டன. கருவூலத்திலிருந்த ஆறு இலட்சம் ரூபாய் வளர்ப்பு மகன் தாமோதர் ராவிற்குச் சேர வேண்டியதால், அதற்கு அரசாங்கமே பாதுகாப்பாக இருந்து, அவனுக்குத் தக்க பருவம் வந்ததும் அதைத் திருப்பித்தர முடிவு செய்தது. ஜான்சி பறிபோனது இராணிக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்ததால், ஓய்வுப் பணத்தை ஏற்க முதலில் மறுத்து விட்டாள். சிறிது காலத்திற்குப் பின்னர்தான் அதை ஏற்றுக் கொண்டாள்.

வெந்த புண்ணில் வேல் பாய்ந்தாற் போன்று, நிறுவன ஆட்சி, ஜான்சியில் பல தவறுகளை இழைத்தது. இராணியின் குல தெய்வமான மகாலட்சுமி கோயில் நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. ஓய்வுப் பணத்தில், இறந்த மன்னனின் கடனைக் கழித்துங் கொண்டது. ஆட்சியை ஏற்றுக் கொண்ட நிறுவனம், கடனை மட்டும் ஏற்றுக் கொள்ளாதது தவறேயாம். அதன் பாதுகாப்பிலிருக்குந் தொகையிலிருந்து வளர்ப்பு மகனின் உபநயனச் செலவிற்கு இராணி கேட்ட ஒரு இலட்சம் ரூபாயை நிறுவனம் தர மறுத்தது. தன்னை அவமானப் படுத்துவதுடன், அந்நியன் மோசடியுஞ் செய்கின்றான்; என்று இராணி குமுறினாள். அதுவரை ஜான்சியில் நிலவிய அந்தண ஆட்சியில், பசுவதை அனுமதிக்கப்படவில்லை. வெள்ளையர் ஆட்சியில் இத் தடை நீக்கப்பட்டது

இது இந்துக்களின் மனத்தைப் புண்படுத்தியது. ஜான்சிக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் துடைக்க, அதாவது, இணைப்பு நியாயமற்றது என்று வதாட, பாதிக்கப்பட்ட பிற அரச குடும்பத்தினரைப் போலவே, இராணியும் இலண்டனில் உள்ள நெறியாளர் குழுவிற்கு ஒரு பிரதிநிதியை அனுப்பினாள். இதற்கே பெருந் தொகை செலவாயிற்று. தலைமை ஆளுநர் ஏற்கனவே எடுத்த அம் முடிவை இங்கிலாந்து மேலிடம் மாற்ற மறுத்து விட்டது.

ஜான்சியின் இராணி இலட்சுமிபாய் எளிய குடும்பத்தில் பிறந்தவள்தான். அவளுடைய தந்தை மோராபந்த் தாம்பே, பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் உறவினரான 'சிம்னாஜி அப்பா'வின் உதவியாளனாகக் காசியில் வாழ்ந்து வந்தான். அங்கே, அவனுடைய இரண்டாவது மனைவி பகீரதி பாய்க்குப் பிறந்தாள் மனிகர்னிகா. சிம்னாஜி அப்பாவின் மறைவிற்குப் பின்பு, மோராபந்த் தன் மனைவி மகளுடன் பித்தூரிலிருந்த பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் அரசவையை அண்டினான். அங்கே நானாவும், தாத்யாவும் மனிகர்னிகாவுந் தோழர்களாக விளங்கினார்கள்; என்று சொல்லப்படுகிறது. நானாவிற்கும் அவளுக்கும் மிகுந்த வயது வேறுபாடு இருந்ததால், இந்தத் தோழமையை நம்புவது கடினந்தான். ஜான்சியின் அரசன் கங்காதரராவை, மனிகர்னிகா இரண்டாவது தாரமாக மணந்தபின்பு அவள் இலட்சுமிபாய் என்றழைக்கப்பட்டாள். இலட்சுமியின் இளமைக் காலத்தைப் பற்றிச் சரியான விவரங்கள் கிடைக்கவில்லை. 1857 புரட்சிக்குப் பின்பு இவளைப் பற்றியும், பிற தலைவர்களைப் பற்றியும் ஏராளமான கதைகள் உண்டாயின. அவைகள் எல்லாவற்றையும் அப்படியே நம்புவதற்கில்லை. ஒரு பெயர் பெற்ற கொலைக்காரனையோ, கொள்ளைக்காரனையோ, அவ் வட்டார மக்கள் பல கட்டுக்கதைகளோடு இணைத்துப் பாடுவது, ஒருதலைமுறைக்கு முன்புகூட நம்நாட்டில் மிகவும் பரவலாக இருந்து வந்த பழக்கந்தான்.

'இராணி இலட்சுமி பாய்க்கு அப்பொழுது 30 வயதிருக்கலாம். நடுத்தர உடம்பு; உணர்ச்சிகளைத் தெளிவாக வெளிப்படுத்தும் வட்ட முகம்; ஒளிவிடுங் கண்கள். மென்மையான மஸ்லீன் ஆடை உடலை இறுகச் சுற்றியிருக்கும். காதில் தொங்கும் தங்க வளையங்களைத் தவிர வேறு அணிகலன்கள்

எவையுமில்லை. அவளுடைய குரலில் அவ்வளவு இனிமை இல்லை.' இதுதான் இராணியின் சட்ட ஆலோசகர் ஜான் லாங் அவளைப் பற்றி வெளியிட்டுள்ள வருணனை.

ஆங்கில நிறுவனத்தின் பிரதிநிதி மேஜர் எலிஸ், ஜான்சியின் இணைப்பை இராணியிடம் அறிவித்ததும், அவள் விழிகள் சிவந்தன! இதழ்கள் துடித்தன! 'மேரே ஜான்சி நஹி தூங்கி'! 'என் ஜான்சியை நான் கொடுக்க மாட்டேன்'! என்று இரைந்தாள். உணர்ச்சியில் உதிர்ந்த அவ் வார்த்தைகள் காற்றோடு கலந்து விட்டன! ஜான்சி, நிறுவன ஆட்சியுடன் இணைக்கப்பட்டது. கோட்டையை விட்டு வெளியேறி, தனக்களிக்கப்பட்ட மாளிகையில் இராணி வாழ்ந்தாள். ஒரு இந்து விதவையின் வழக்கமான வாழ்வுக்கு, அவளும் பழக்கமாகி விட்டாள். ஜான்சியின் துருப்புகள் கலைக்கப்பட்டு, நிறுவனத்தின் படை அங்கே நிறுத்தப்பட்டது. இந்திய வரைபடத்தில் ஜான்சியின் எல்லைகள் அழிக்கப்பட்டன! மராத்திய மாமன்னன் பேஷ்வாவே பிதூரில் முடக்கப்பட்டான் என்றால், ஜான்சியின் விதவை இராணி வெள்ளையனிடம் என்ன எதிர்பார்க்க முடியும்! உள்ளங்கள் குமுறுகின்றன! பாரதத்தின் அரசுகளை ஆக்கவும், அழிக்கவும் இந்தப் பரங்கிக்கு என்ன உரிமை? இந்திய அரசுகளின் நிர்வாகக் கேடுகளைக் களைய இவன் யார்? வாணிகஞ் செய்ய வந்தவனுக்கு அரசியல் சதுரங்கம் ஏன்? இந்து, முஸ்லிம் நெறிகளையுஞ் சட்டங்களையும், மாற்றியமைக்க இக்கிறித்துவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? உள்ளங்கள் குமுறுகின்றன! இது இயற்கையான ஆத்திரந்தான். ஆனால், நியாய அநியாயங்கள் வரலாற்றின் திசையைத் திருப்புவதில்லை! இஸ்லாமியரான மொகலாயருக்கு நாடு பிடிக்கும் ஆசை இருக்கும் போது, கிறித்துவ ஆங்கிலேயருக்கு அவ்வாசை இருக்கக் கூடாதா? மொகலாயர்கள் இந் நாட்டின் குடிமக்களாகி விட்டார்கள். ஆங்கிலேயர்கள் அப்படியல்லவே என்று கூறலாம். ஆங்கிலேயருக்கு இருந்ததைப் போலவே, அவர்களுக்கும் மத்திய ஆசியாவில் வலிமை மிக்க தாயகம் இருந்திருந்தால், இந்தியாவை ஒரு மாநிலமாகத்தான் மொகலாயர்களும் ஆட்சி செய்திருப்பார்கள். நாடு பிடிக்க வந்த மொகலாயர்கள் அந்நியர்கள் அல்ல; வாணிகஞ் செய்ய வந்த ஆங்கிலேயர்கள்தான் அந்நியர்கள் என்ற வாதத்தை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களை அந்நியர்களாகக் கருதி, எதிர்த்து அதன் பிறகு அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் இந்துக்கள். ஆங்கிலேயர் அண்மையில் வந்தவர்கள் அந்

மியர்களாகக் கருதப் படுகின்றனர். முஸ்லிம்கள் நீண்ட நாட்கள் குடியிருந்து. வீட்டிற்குச் சொந்தக்காரராகி விட்டனர்! கிறித்துவர் புதுக் குடித்தனக்காரர்கள் அவ்வளவு தான். எதிர்ப்பில்லாமல் சில நூற்றூண்டுகள் கழிந்திருந்தால், அவர்களுக்கும் இவ் வீடு சொந்தந்தான். அன்று முஸ்லிமை, இந்து எதிர்த்தான். இன்று முஸ்லிம், இந்துவும் இணைந்து கிறித்துவனை எதிர்க்கின்றனர். காரணம்.—? இருவரையுங் கிறித்துவன் வென்று விட்டான். வலியவன் வெல்கிறுன்! இதுவே வரலாற்றின் விதி! வலியற்றவர்கள் ஏமாந்தவர்கள், அடங்கிச் செல்லுவார்கள்; வாய்ப்புக் கிடைத்தால் அதில் சிலர் கிளர்ந்தெழுவார்கள். இதுவும் வரலாற்றின் விதியே யாம்! அந்நிய ஆதிக்கம் என்பது, யாருடைய அனுமதியின் பெயரிலும் நடைபெறுவ தில்லை. நாடுகளுக்கிடையே கடைபிடிக்கப்படுவது, பெரும்பாலும் முடிகின்ற இடத்தில் அறவழி! முடியாத இடத்தில் மறவழி! மாக்கியவெல்லி கூறியது போல் 'முடிவே முக்கியம்; வழிகள் அல்ல!' எனவே, தர்ம நியாயங்கள், பிறப்புரிமைகள், மரபுரிமைகள் போன்றவைகளை அந்நியரின் ஆட்சியில் ஒதுக்கப்படுவது கண்டு, மிதிக்கப்படுவது கண்டு, உள்ளங்கள் குமுறலாம். ஆனால், யாரையுங் கூண்டில் நிறுத்தி நாம் விசாரிக்க முடியாது. அந்நியனின் ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டிய சூழல் உருவானல், வாய்ப்புக் கிடைத்தால், அதைப் பயன் படுத்திக் கொள்ளுவதே அடிமை நாடுகளுக்குக் கிடைக்கும் ஒரேவழி.

மதிலால் சூழப்பட்ட ஜான்சி ஊருக்குள் ஒரு கோட்டையும், ஊருக்கப்பாலிருந்த படைத் தளத்திற்கருகில் ஒரு சிறிய கோட்டையும் இருக்கின்றன. கருவூலமும், ஆயுதங்களும் வைக்கப்பட்டிருந்த ஒன்று, விண்மீன் கோட்டை என்றழைக்கப் பட்டது. படைத்தளத்திலிருந்த சுதேசிப் படைக்குத் தளபதியாகக் கேப்டன் டன்லப் என்பவரும், ஜான்சியின் நிர்வாகத்தைக் கவனிக்க, கேப்டன் அலெக்ஸாண்டர் ஸ்கென் என்பவரும் இருந்தனர். 1857 மே மாதத்தில், கொழுப்புக் குண்டுகளைப் பற்றிய வதந்திகள் இங்கும் வழக்கம் போல் பரவியிருந்தன. மீரத் செய்தி வந்ததும் வீரர்களிடையேயும், மக்களினிடையேயுஞ் சலசலப்புத் தோன்றி விட்டது. ஆனல், ஆங்கில அதிகாரிகள் எதுவும் நடக்காதென்றுதான் நம்பினர்கள். மூன்று வாரங்கள் ஓடி விட்டன. இதற்கிடையே நடந்த நிகழ்ச்சிகளும், கிளர்ச்சித் தோன்றியதுந் தொடர்ந்த நிகழ்ச்சிகளும் மிக்கக் குழப்பத்திற்கிடமளிக்கின்றன, வரலாற்றுசிரியர்கள் பலவித முடிவுகளைத் தந்துள்ளார்கள். நூலின் இறுதியில்

நாம் விவாதிக்கலாம். G. B. மேலகனின் கூற்றுப்படி, இராணி இலட்சுமிபாய், தன்னுடைய ஒற்றர்களை அனுப்பி, வெறுப்புக்குள்ளாகி யிருந்த சிப்பாய்களின் மனத்தை விஷமாக்கினாள். ஆங்கில அதிகாரிகளின் அனுமதிபெற்று, தனக்கு மெய்க் காவல் ஏற்பாடுகளைச் செய்வது போல், முன்பு கலைக்கப்பட்ட தன் வீரர்களை யெல்லாம் வரவழைத்துத் தனிப்படை யொன்றும் அமைத்துக் கொண்டாள். அத்துடன் தன் கணவனின் காலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு பெரும் பீரங்கிகளை இரகசியமாகத் தோண்டி எடுத்தாள். பின்பு ஜூன் 5-ஆம் நாள் அவளே புரட்சி ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கினாள். ஜான்சியின் கிளர்ச்சிக்கு இராணியே முழு திட்டந் தீட்டினாள்; என்று சில ஆங்கிலேயர்கள் எழுதி யிருக்கின்றனர். இதன் உண்மைமையை ஆராயுமுன்பு நடந்தவற்றைப் பார்ப்போம்.

ஜூலை 5-ஆம் நாள் பிற்பகலில், ஒரு சுதேசி அதிகாரியின் தலைமையில் சிப்பாய்கள் விண்மீன் கோட்டையினுள் புகுந்து 4½ இலட்ச ரூபாயைக் கைப்பற்றித் தங்கள் எழுச்சியை வெளிப்படுத்தினர். கேப்டன் டன்லப் அஞ்சலகத்திற்குச் சென்று திரும்பும்போது சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்குள், கொந்தளிப்பை அறிந்து, ஜான்சியிலிருந்த ஆங்கிலக் குடும்பங்கள் (மொத்தம் 55 பேர்) ஊருக்குள்ளிருந்த கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். புரட்சி வீரர்கள் அக் கோட்டையைச் சூழ்ந்தனர். மறுநாள் இராணியுடன் நேரடியாகப் பேசி மனைவி மக்களைப் பாதுகாப்புடன் வெளியே அனுப்ப அனுமதி கோரி, மூன்று அதிகாரிகள் கோட்டையை விட்டு வெளியேறினார்கள். அவர்களைச் சிப்பாய்கள் பிடித்து இராணியின் மாளிகைக்குக் கொண்டு சென்றனர். முன் விரோதங் காரணமாக மூவரில் ஆண்ட்ரூஸ் என்பவரை ஒருவன் மாளிகை வாசலில் குத்திக் கொன்றான். இராணி என்ன சொன்னாளோ, பிற இருவர் நகருக்கு வெளியே அனுப்பப்பட்டனர். ஜூன் 8-ஆம் நாள் காலையிலிருந்து கோட்டை மேல் தாக்குதல் தொடங்கியது. துப்பாக்கிச் சூட்டில் கேப்டன் கார்டன் இறந்தார். கோட்டைக்குள்ளே அடைபட்டவர்கள் எதிர்பாராமல், அங்கே தஞ்சம் புகுந்திருந்ததால், அவர்களிடந் தேவையான உணவுப் பொருட்களோ, வெடி மருந்தோ இல்லை. இங்கிலையில் உள்ளிருந்த சில சுதேசிப் பணியாட்களுந் துரோகமிழைக்க முற்பட்டனர். கோட்டையில் இருந்து நகருக்குச் செல்லும் இரகசிய சுரங்கப் பாதையைத் திறக்கும் முயற்சியில் இரு இந்தியப் பணியாட்கள் ஈடுபட்டி

ருந்ததைக் கண்ட ஒரு வெள்ளை அதிகாரி, அவர்களில் ஒரு வனைச் சுட்டுக் கொன்றார். தப்பிய மற்றொருவன், அவ் வெள்ளை அதிகாரியைச் சுட்டுக் கொன்றான். அவ் விந்தியனை மற்றொரு வெள்ளை அதிகாரிப் பழி வாங்கினான். அருகிலுள்ள தளங்களுக்குச் சென்று உதவி கோர மாறு வேடத்தில் கோட்டையிலிருந்து வெளியேறிய இரண்டு ஆங்கிலோ இந் தியர்களுஞ் சிப்பாய்களினிடஞ் சிக்கிக் கொலையுண்டனர்.

கோட்டைக்குள்ளிருந்த வெள்ளையர்கள் தாக்குப் பிடிக்க முடிந்ததைக் கண்டு புரட்சியாளர்கள் மனம் தளர்ந்தனரோ? அல்லது, தங்களிடந் தாக்குவதற்கு ஏற்ற ஆயுதங்கள் இல்லை யென்று கருதினார்களோ? அல்லது, இராணிதான் பரங்கியைப் பழி வாங்கச் சூழ்ச்சிச் செய்தாளோ? எப்படியோ? உடன்பாடு ஏற்பட்டுக் கோட்டையை விட்டு ஆங்கிலேயர்கள் வெளியே வந்தனர். அவர்கள் அனைவரையுங் கயிற்றினால் கட்டி ஜோகன் பாக் என்ற தோட்டத்திற்குச் சிப்பாய்கள் கொண்டு சென்ற னர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று மூன்று வரி சையில் அவ் வகதிகள் நிறுத்தப்பட்டனர். சிறைக் காவலன் பக்ஷிஸ் அலி தன் வாளால் கேப்டன் ஸ்கென்னைக் குத்தி வீழ்த்தினான். இச் சமிக்ஞை கிடைத்ததும், சிப்பாய்கள் அனை வரும் திமு திமு வென்று பாய்ந்தனர். ஐயோ! ஐயோ! என்ற அலறல்கள் கேட்டன! சிறிது நேரத்தில் இரத்த வெள்ளத்தில் குற்றுயிருங் கொலைக் களமுமாக அந்த நிராயுதபாணிகள் துடி துடித்து மாண்டனர். ஒரு சிறு குழந்தைகூட மிஞ்ச வில்லை! உடைகளும், அணிகலன்களுங் களவாடப்பட்டன. மூன்று நாட்கள் அவ் வெள்ளைப் பிணங்கள் அங்கேயே சிதறிக் கிடந்தன!

இக் கொலைகளில் இராணியின் பங்கு என்ன என்பதுந் தெரியவில்லை எப்படியோ? பரங்கியின் ஆட்சி ஜான்சியில் அகற்றப்பட்டது. இனி ஜான்சியை யார் ஆள்வது? அவ் வளவு எளிதில் இலட்சுமிபாய் அரியணையில் அமர முடியாது! அவளுடைய கணவன் இறந்ததுமே, அவளுடைய உறவினர் சதாசிவராவ் என்பவன் ஜான்சியின் வாரிசுரிமைக்காகப் போட்டி யிட்டான். ஜான்சியே ஆங்கிலேயருக்குச் சென்று விட்டதால், அவனுடைய உரிமைக்கு அன்று மதிப்பின்றிப் போயிற்று. இப்பொழுது, அதுச் சுதந்திர நாடாகி விட்டதால் அவன் தன் உரிமையை நிலை நாட்டச் சில ஆதரவாளர்களுடன் காத்திருந்தான். இந்தச் சிக்கலைப் பயன்படுத்திக் கொண்டச் சிப்பாய்கள், இலட்சுமிபாயினிடம் வற்புறுத்திப் பணம்

பெற்றுக் கொண்டு, அவளையே இராணியாகப் பிரகடனப் படுத்தினார்கள்; என்று தெரிகிறது. அவளை விட்டு விட்டுப் புரட்சி வீரர்கள் மட்டும் டெல்லிக்குச் சென்ற செய்தி இதை நாம் நம்பும்படிச் செய்கிறது. இராணியும், ஆங்கில அதிகாரிகளுக்கு எழுதிய கடிதத்தில், 'வற்புறுத்தலுக்குப் பணிந்து தான், ஆட்சிப் பொருப்பைத் தான் ஏற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதாகவும்' விளக்கங் கூறியிருக்கின்றாள். அவர்களும் நெருக்கடியில் இதை அனுமதித்தது போல் தெரிகிறது.

இலட்சுமிபாய் அறிவும் ஆற்றலும் மிக்கவள். மக்களையுந் தலைவர்களையுங் கவருந்தன்மை பெற்றவள். ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், மக்களுக்கு அவளிடம் அன்பும், மதிப்புங் கூடின. இந்தச் செல்வாக்கே அவளின் பிற்காலச் சாதனைகளுக்குக் காரணமாயிற்று. அரியணை ஏறி விட்டாலும், அவளால் நிம்மதியாய் ஆட்சி செய்ய முடியவில்லை. சதாசிவராவ் தன்னை மன்னன் என்று பிரகடனப் படுத்திக் கொண்டு, தன் வீரர்களுடன் ஜான்சியின் எல்லையில் அட்டுழியங்கள் பல புரிந்தான். ஒரு முறை இராணியின் வீரர்கள், அவனைத் தோற்கடித்தனர். மறுமுறையும், அவன் புதுப் படையுடன் வந்து போரிட்டான். இம் முறை அவன் கைது செய்யப்பட்டு ஜான்சி கோட்டையில் அடைக்கப்பட்டான். (ஆங்கிலேயர் ஜான்சியை மீட்டதும், இவனைத் தூக்கிலிட்டார்கள்). இன்னல்கள் இத்துடன் நிற்கவில்லை. ஜான்சிக்குத் தெற்கே இருந்த ஓர்ச்சாவும், வடக்கே இருந்த டாட்யாவும் இராஜபுத்திரப் பிரிவைச் சார்ந்த பண்டேல நாடுகள். தங்கள் பகுதியில் மராத்திய ஜான்சி நாடு இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இதற்காக ஜான்சியுடன் அவ்வப்பொழுது சிறு சிறு உராய்வுகளில் இப் பண்டேலாக்கள் ஈடுபட்டு வந்தனர். அப்பொழுது புரட்சித் தோன்றியதும் ஓர்ச்சாவும் டாட்டியாவும் அதைப் பயன்படுத்தத் திட்ட மிட்டன. வெள்ளையருக்கு உதவி புரிய வேண்டும் என்ற அக்கறையைக் காட்டிலும், ஜான்சியில் ஆதாயந் தேடவே இவ்விரு நாடுகளும் முயன்றன. ஓர்ச்சாப் படைகள் ஜான்சியின் வாசலை நெருங்கிய போது, இராணியிடம் போதிய படைபலம் இல்லை. அவளுடைய கோரிக்கைக்கு, நிலச்சுவான்தார்கள் உதவ முன் வந்தனர். அச் சமயத்தில் தான் இராணி முதன் முதலாகத் தன் வீரர்கள் மத்தியில் தோன்றி, அவர்களை ஊக்குவித்தாள். ஓர்ச்சா படைகள் விரட்டியடிக்கப்பட்டன. வெள்ளையனுக்காவது ஜான்சியைத் திருப்பித் தரலாம்! தன் பரம்பரை எதிரி

களான பண்டேலாச் சிறுவர்களுக்கா விட்டுக் கொடுப்பது? அதனால் தான், இராணி ஆங்கில மேலிடத்தின் உதவியைக் கோரினாள்.

இதற்கு ஜபல்பூர் ஆணையர், உதவிவரும் வரை ஜான்சியை நிர்வகிக்கும்படி இராணிக்குப் பதிலனுப்பினார். ஜான்சியைச் சுற்றிலும் பண்டேலா வீரர்கள் சூழ்ந்து விட்டனர். அப்பண்டேலா சிற்றரசர்களோ! ஆங்கிலேயரின் சார்பில் ஜான்சியைத் தாக்குவதாகக் கூறி, வேறு நடித்துக் காட்டினர். இந் நிலையில் வெள்ளை அரசு என்ன முடிவெடுக்கும்? ஜான்சியில் நடந்த கொலைகளின் இரத்தக்கறை வேறு இன்னும் இராணியின் மேல் படிந்திருக்கிறதே! ஆங்கிலேயரின் உதவி உடனே கிடைக்காததில் இராணி மனந் தளரவில்லை. சில மாதங்களுக்குப் பின்பு, பன்பூர் மன்னனின் உதவி பெற்றாள். புது வீரர்களை உருவாக்கினாள்; போர்க்கருவிகளைச் செய்தாள்; கருமருந்துஞ் சேர்த்தாள்; வெடிகுண்டுகளைச் செய்தாள்; பீரங்கிகள் வார்த்தாள். ஓர்ச்சாப் படைகளை மீண்டும் முறியடித்தாள். இதில் வேடிக்கை என்னவென்றால்? இராணிக்கு உதவியவர்கள் அனைவருமே, புரட்சியில் ஆதாயந் தேட முயன்று, ஆங்கில ஆட்சியை எதிர்த்தவர்கள். எனவே, இராணியின் போக்கை நிறுவன மேலிடம் நம்பத் தயாராயில்லை. 1858-ஜனவரியில் ஆங்கிலேயரின் உதவியைக் கேட்டாள். பிப்ரவரியில் கூட உதவி கிடைக்காததால், தன் இலட்சியத்தை உருவாக்க வேண்டியவளானாள். பரங்கியரை எதிர்க்க ஆதரவு வலுத்தது. மதியாதவனிடம் ஜான்சியைத் திருப்பித் தருவதைவிட, எதிர்பதிலே எல்லாம் போயினும் மானமாவது மிஞ்சும்! என்றெண்ணிய இலட்சுமிபாய் தன்மானம் மிக்கவள். இம்முடிவிற்கு அவள் வந்ததில் வியப்பில்லை.

ஜான்ஸி இராணி எவ்விதம் தன் படையை உருவாக்கினாள்? என்பதைப் போற்றும் நாடோடி பாடல்:

*கல்லையும் மண்ணையும் மெல்லிய புல்லையும்
கொல்லும் படையாய் கொற்றவை மாற்றினாள்!
மரமென்று மக்கள் சொல்லிய பொருளையும்
சிரத்தினைச் சீவிடும் வாளாய்ப் படைத்தனள்!!
குறுகிய குன்றினை புரவியாய் மாற்றியே
குவாலியர் நகரினை இலக்காய் ஏகினள்!!

---

*மகேஸ்வத பட்டாச்சார்யா அவர்கள் வங்காள மொழியில் எழுதிய 'ஜான்சி இராணி' என்ற நூலிலிருந்து எடுத்து மொழி பெயர்த்தது.

# 38. சர் ஹியு ரோஸ்

[இந்தூரில் பிரதிநிதி ராபர்ட் ஹாமில்டன்—பம்பாயிலிருந்து ஹியுரோஸ்—'மோ' படை தளம்—கால்பியை நோக்கி இருபடைகள்—ஹியுரோஸின் படையெடுப்பு—போபால் உதவி—பன்பூர் மன்னர்—சாகர் மீட்சி—மதன்பூர் கணவாயில் எதிர்ப்பு—சங்தேரி வீழ்ச்சி—அடுத்த இலக்கு ஜான்சி.]

இது வரை கல்கத்தாவிலிருந்து சென்ற உதவிப் படைகள், தலைமைத் தளபதி சர் காலின் கேம்பலின் கீழ்ப் போரிட்டுக் கங்கை, யமுனை நதிகளின் மேல் பாகத்தில், கிளர்ச்சிகளை அடக்குவதையும், நகரங்களைக் கைப்பற்றுவதையும் பார்த்தோம். இப்பொழுது, மத்திய இந்தியாவில், முதலாவதாக ஜான்சி கிளர்தெழுந்ததைக் கண்டோம். ஜான்சியைக் கைப்பற்றுவதில் முழுபங்கு பெற்ற இருவரில் ஒருவர் சர் ராபர்ட் ஹாமில்டன். நிறுவனத்தின் அரசியல் பிரதிநிதியாக (Political Agent) முன்பு இந்தூரில் பணியாற்றியவர். விடுமுறையில் இங்கிலாந்து சென்றிருந்த அவர், புரட்சித் தோன்றியதும், உடனே பணியில் சேருவதற்குப் புறபட்டு 1857 ஆகஸ்டில் இந்தியாவை அடைந்தார். மத்திய இந்தியாவில் நீண்ட காலம் வாழ்ந்தவராதலால், அதன் மூலை முடுக்குகளையும், அம் மக்களின் பழக்கங்களையும், பண்புகளையும் அவர் நன்கறிந்திருந்தார். எனவே, மத்திய இந்தியாவின் புரட்சியை அடக்குவதற்கு, மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை ஒன்று தரும்படி, அரசு அவரைக் கேட்டுக் கொண்டது, அவர் அனுப்பியத் திட்டப்படி, மேற்கே பம்பாயிலிருந்து ஒரு படை, வடகிழக்கே கால்பியை நோக்கி முன்னேற வேண்டும். வழியிலுள்ள ஜான்சியை அப்படையே கைப்பற்ற வேண்டும். மற்றொரு படை தெற்கே சென்னையிலிருந்து புறப்பட்டு, மத்திய இந்தியாவில், ஜபல்பூரைத் தளமாகக் கொண்டு, நேர் வடக்கே பண்டேல்கண்ட் பகுதியில்

நுழைந்து பண்டாவை அடைய வேண்டும். கால்பி யமுனைக் கரையிலும், பண்டா அதற்குத் தென்கிழக்கேயும் அமைந் திருக்கின்றன.

இராபர்ட் ஹாமில்டனின் இத்திட்டப்படி, பம்பாயி லிருந்து புறப்படவிருக்கும் படையின் தளபதியாக மேஜர் ஜெனரல் சர் ஹியுரோஸ் (Sir Hugh Rose K. C. B.) நியமிக்கப் பட்டிருந்தார். 1840–ல் எகிப்திய பாஷாவை முறியடிக்க இவர் மேற்கொண்ட பணி பெரும் புகழையும், K. C. B. (Knight of the Compani on ship of Bath) என்ற விருதையும் இருவருக் குப் பெற்றுத் தந்தது. அதன் பிறகு, துருக்கியை விழுங்க உரு சியா (Russia) முயன்ற போது கான்ஸ்டான்டி நோபில் தூது வரகத்தில் செயலாளராகவும், பின்னர் அங்குத் தூதுவராக வும் இவர் பணி புரிந்தார். புரட்சித் தோன்றிய நான்கு மாதங்களுக்குப் பின்பு, தம் புதுப் பொறுப்பை மேற் கொள்ள சர்ஹியுரோஸ் (செப்டம்பர் 19ல்) பம்பாய் வந்தார். பின்னர், ராபர்ட் ஹாமில்டனுடன், இந்தூருக்குச் சென்று, அருகி லிருந்த மோ (Mhow) என்ற இடத்தைத் தளமாக ஆக்கிக் கொண்டார். இந்தப் பம்பாய்ப் படையையும், ஜபல்பூரைத் தளமாகக் கொண்ட வெள்ளையர் படையையும் மத்திய இந்தியப் படை (Central India Field Fore) என்றழைக்கப் பட்டது. இப் படையின் தலைமைப் பொறுப்பை டிசம்பர் 17-ஆம் நாள், சர்ஹியு ரோஸ் ஏற்ருர். பம்பாய்–டெல்லி நெடுஞ்சாலையில், நர்மதைக்கப்பால், இந்தூருக்கருகில் மோ படை தளம் இருந்திருக்கிறது. அங்கிருந்த துருப்புகள் இரண் டாகப் பிரிக்கப்பட்டன. இணை கோடுகளாக, வடகிழக்குத் திசையில் அவை முன்னேறின. ஒரு அணி புகழ்ப் பெற்ற சந்தேரிக் கோட்டை வழியாகவும், மற்றொரு அணி, ராத்கர் வழியாகவுஞ் சென்றன. 1858 ஜனவரி 6-ஆம் நாள், மோ விலிருந்து புறப்பட்ட ஹியுரோஸ், வழியில் போபால் நாட்டுப் பேகமின் வீரர்களையுஞ் சேர்த்துக் கொண்டு ஜனவரி 24–ஆம் நாள் ராத்கரை நெருங்கினர்.

காடு மலைகள் சூழ்ந்த இராத்தகர் கோட்டைச் செங்குத் தான பாறையில் அமைந்திருந்தது. அங்கிருந்து கொண்டு புரட்சி வீரர்கள் வெள்ளைத் துருப்புகளைக் கடுமையாகத் தாக் கினர்கள். வெள்ளையர்கள் சற்றுப் பின் வாங்கும் அளவிற்குப் புரட்சி வீரர்களின் தற்காப்புப் போர் இருந்தது. பீரங்கித் தாக்குதலைத் துவக்கிய ஆங்கிலத் தளபதி ரோஸ், கோட்டை யைக் கைப்பற்றுவதற்கு முன்னே, வேறு அபாயம் நெருங்கி

யது. வடக்கேயிருந்து பன்பூர் மன்னன் மர்தான்சிங் புரட்சி வீரர்களுக்கு உதவி செய்ய ஓடி வந்தான். அவனுக்குப் புரட்சி மீது காதல் இல்லை. வெள்ளையர் மீது கொண்ட ஊடல், புரட்சியை இணையும்படிச் செய்து விட்டது. பன்பூர் வீரர்கள் போர்க் கொடியை உயர்த்திப் போர்ப் பறையை ஒலித்துச் சங்குகளை ஊதி, ஆரவாரத்துடன் பாய்ந்து வந்தனர். வெள்ளையரின் சில நூறு குதிரை வீரர்கள், அப் படையைத் தடுத்து நிறுத்தித் தாக்கினர். தங்களுக்கு உதவ வந்த பன்பூர் வீரர்கள் தோல்வியைத் தழுவியதைக் கண்ட கோட்டைக்குள்ளிருந்த இராத்கர் சிப்பாய்கள் நம்பிக்கை இழந்து, நடு இரவில் கோட்டையை விட்டு வெளியேறினர். அவர்கள் வெளியேறிய பாதை மிகவும் ஆபாத்தானது. கோட்டைச் சுவரிலிருந்து ஒரே சாய்வாகச் சரியும் அப்பாறையின் மேல் நின்று பார்த்தாலே தலை சுற்றும்! நடு இரவில் எப்படி? அப்பாறை வழியே புரட்சிக்காரர்களுஞ் சில பெண்களுந் தப்பினர்; என்பதை நினைத்தாலே நெஞ்சு நடுங்கும்! அடிவாரத்தில் சிதறிக் கிடந்த சில பிணங்களே சான்று காட்டும். அவர்கள் எத்தகைய பயங்கரப் பாதையில் இறங்கித் தப்பித்தனர் என்பதைக் காட்டுவதற்கு இராத்கர் புரட்சி வீரர்கள் வெளியேறிய பின்பு சர் ரோஸின் வேலை எளிதானது. இனி ஆபத்தின்றி, சாகர் நோக்கிப் படை எடுக்கலாம். 25 மைல் தொலைவிலுள்ள சாகர் எட்டு மாதங்களாக முற்றுகைக்குள்ளாகி யிருக்கிறது!

ஃபிப்ரவரி 3-ஆம் நாள் ரோஸ் சாகரை அடைந்த போது, பல நாட்கள் இன்னல்களுக்குள்ளாகி யிருந்த, அவ்வூர் மக்கள் மகிழ்ந்தனர்; என்று சொல்லப் படுகிறது. பின்னர், கரோ கோட்டா என்ற கோட்டையைக் கைப்பற்றி, ஃபிப்ரவரி 17 ஆம் நாள் மீண்டுஞ் சாகருக்கு ரோஸ் வந்தார். இனி அடுத்த இலக்கு ஜான்சி! ஆனால், ஜபல்பூரை விட்டுச் சென்னைப்படை புறப்பட்ட செய்தி இன்னுங் கிடைக்கவில்லை. அதற்குள் காலத்தை வீணாக்காமல், வரப்போகும் பெரும் போருக்காக ஹியு ரோஸ் ஏற்பாடுகளைச் செய்தார். ஆடு, மாடுகள், தானியங்கள், தேயிலை, சோடா, இன்னும் பிற பொருட்களைச் சேகரித்தார். போபால் பேகம் இதற்குப் பெரும் உதவி புரிந்தார். சென்னைப் படை புறப்பட்டச் செய்தியுங் கிடைத்தது. ஃபிப்ரவரி 26–ஆம் நாள் சர் ரோஸ், ஜான்சியை நோக்கிப் புறப்பட்டார். வழியிலிருந்த மதன்பூர்க் கணவாய்ப் புரட்சி வீரர்களால் மறிக்கப் பட்டிருந்தது. இரு மருங்கிலும், உயர்ந்த மலைகளிலுஞ் சூழ்ந்திருந்த அடர்ந்த வனங்களிலும் பீரங்கிகளை மறைத்து வைத்துப் புரட்சி வீரர்கள் சுட்டார்கள். தளபதி

யின் குதிரை குண்டடிபட்டு வீழ்ந்தது. வெள்ளைத் துருப்பு கள் மருண்டு சற்றுப் பின் வாங்கின. ஆனால், வழக்கம் போல், விடா முயற்சியுங் கலங்கா நெஞ்சமும் நிலைமையைச் சரி செய்தன. வெள்ளையர்ப் படை புரட்சி வீரர்களை விரட்டி, மதன் பூரைக் கைப்பற்றி முன்னேறியது.

மோவிலிருந்து புறப்பட்ட மற்றொரு அணி, சந்தேரியை அடைந்தது. அதே இடத்திற்கு ரோஸின் தாக்குதலுக்குத் தப்பிய சிப்பாய்களும் வந்து குழுமினர். இச் சந்தேரி புகழ் பெற்ற ஊராகும். 'வீடுகளெல்லாம், மாளிகைகளாக உள்ள ஊரைப் பார்க்க வேண்டுமென்றால், சந்தேரிக்குச் செல்லுங் கள்' என்று ஒரு காலத்தில் கூறுவார்கள். பேரரசன் அக்பர் காலத்தில், மாளிகைகளும், மசூதிகளும், அங்காடிகளும் நிரம்பி யிருந்த அவ் ஊரின் பெருமை, மராத்தியர் காலத்தில்தான் குறைந்து விட்டது. சந்தேரியின் பழம் புகழ் மங்கினாலும், அவ்வூர்க் கோட்டையின் கம்பீரங் குறையவில்லை. உயர்ந்த மலையிலமைந்த பிரம்மாண்டமான அக் கற்கோட்டை, வெகு தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்குக் கூட அச்சத்தை விளை விக்கும். அக் கோட்டையில் தஞ்சம் புகுந்த புரட்சி வீரர்கள் இரண்டு வாரங்கள் வெள்ளைப் படையை எதிர்த்தனர். கடுமையானப் போருக்குப் பிறகு, பிப்ரவரி 17 ஆம் நாள் கோட்டைப் பிடிபட்டது. புரட்சி வீரர்கள் தப்பினர். சந்தேரி மீட்சியை அறிந்ததும், ஹியூரோஸ் தன் படைகளை ஜான் சியை நோக்கிச் செலுத்தினார். ஜான்சிக்கு 14 மைல் தொலை வில் வெள்ளைத் துருப்புகள் முகாமிட்டன!

---

# 39. கால்பிக்கு - ஜான்சி வழியாக...

[ஜான்சியை நெருங்குதல்—மேலிட அவசரச் செய்தி—இராணி யின் தற்காப்பு ஏற்பாடு— ஜான்சி முற்றுகை—பெரும் படை யுடன் தாத்யா—பெட்வா நதிக் கரையில் தோல்வி—கால்பிக்குத் தப்பித்தல்—ஜான்சிக்குள் போர்—வெள்ளையர் பழிவாங்குதல்— இராணி தப்பித்தல்—ஹியு ரோஸ் பின் தொடர்தல்—தாத்யா மீண்டும் எதிர்த்தல்—ஹியு ரோஸ் கால்பியை அடைதல்.]

எல்லாம் ஆயிற்று! தாக்குதலைத் தொடங்குவதற்கு முன்பே ஜான்சியின் பலவீனங்களை ஹியுரோஸ் ஆராய்ந்து கொண்டிருந்தார். அச் சமயத்தில் தலைமை ஆளுநர் கேனிங் கிடமிருந்தும், தலைமைத் தளபதி கேம்பல் இடமிருந்தும் எதிர்பாரத அவசரச் செய்திகள் வந்தன. ஜான்சிக்குக் கிழக்கே 80 மைல் தொலைவிலுள்ளச் சார்காரி (Charkhari) என்ற பண்டேலா நாட்டைத் தாத்யா தோப் தாக்கிக் கொண்டிருக்கிறான். ஆங்கில ஆட்சிக்குப் பக்கபலமாக விருந்து உதவி புரியும், அந் நாட்டு மன்னனை உடனே ஹியு ரோஸ் சென்று விடுவிக்க வேண்டும். இத் திடீர்த் திருப்பத்தைத் தளபதி ரோஸோ, இராபர்ட் ஹாமில்டனோ எதிர்ப் பார்க்க வில்லை. ஜான்சியிலே சிந்தப்பட்ட வெள்ளையரின் இரத்தம் இன்னுந் துடைக்கப்பட வில்லை. அந்தப் பழியைத் தீர்க்கத்தான் இவ்வளவு ஆவலுடன் அவர்கள் வந்திருக்கின்றனர். ஜான்சியின் வீழ்ச்சியிலே தான் ஆங்கில நிறுவனத்தின் பெருமையும், மத்திய இந்தியாவின் அமைதியும் அடங்கி யிருக்கின்றன. மேலதிகாரிகள் இதை நன்கு உணர்ந்தவர்கள் தான். இருந்தும், ஏன் இந்த மாற்றம்? இராணுவ அதிகாரிகளின் திட்டங்களும், ஆட்சித் தலைவர் களின் எண்ணங்களும் அடிக்கடி மோதிக் கொள்ளுவதும் உண்டு. அன்று தலைமைத் தளபதியின் ரோகில்கண்ட் இலக்கு, அயோத்திக்கு மாற்றப்படவில்லையா? இங்கும் நிலைமை அது தான். 14 மைல் தொலைவில் எதிரே தெரிகின்ற ஜான்சியை

வென்று முன்னேறுவது தான் எத் தளபதிக்கும் எளிமை யான, இனிமையான பணியாகும். 80 மைல் தொலைவிலுள்ள சார்காரியைப் பாதுகாக்கச் செல்லுவதிலே, பெற்ற வெற்றி களும் பறிபோகுமே, என்ற கலக்கந் தோன்றுவது இயற் கையே. ஆனால், மேலிட ஆணையை ஏற்பதுவே ஒரு தளபதி யின் கடமை. ஹியுரோஸின் இக்கட்டான நிலையை அறிந்து சிக்கலை அவிழ்க்க ராபர்ட் ஹேமில்டன் முன் வந்தார். 'ஜான் சியை முதலில் தாக்கினால், தாத்யா சார்காரி முற்றுகையை விட்டு இங்கு வருவான். சார்காரியைப் பாதுகாக்கச் சென் றால், அது பெரும் ஆபத்தில் முடியலாம். எனவே, ஜான்சியே தளபதியின் முதல் இலக்காக இருக்கட்டும். எந்த விளைவுக் கும் நான் பொறுப் பேற்கிறேன்' என்று ஹேமில்டன் மேலி டத்திற்குப் பதிலனுப்பித் தளபதிக்குப் பச்சைக் கொடி காட் டினார். தளபதி ரோஸ், பிப்ரவரி 21-ஆம் நாள் காலை 9 மணிக்கு ஜான்சியின் முன் முகாமிட்டார்.

சுமார் 4½ மைல் சுற்றளவு கொண்ட ஜான்சியை 10 அடி அகலமும், 20 அடி உயரமுங் கொண்ட நீண்ட பெருஞ் சுவர் பாதுகாத்தது. அந்தச் சுவரில் பல தாக்குத் தளங்களும், துப் பாக்கித் துளைகளும் இருந்தன. ஊருக்குள்ளிருந்த கோட்டைப் பெரும் பெருங் கருங்கற்களால் கட்டப்பட்டது. பீரங்கித் தாக் குதலைச் சமாளிக்கும் அளவுக்கு, அக் கோட்டையின் சுவர் 20 அடி அகலத்திற்கு இருந்தது. அக் கோட்டையிலுங் காவல ரண்களும், பீரங்கித் தளங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்தப் பல கோபுரங்களில் உயர்ந்த ஒன்றினது உச்சியில் ஜான்சி இராணி இலட்சுமிபாயின் மராத்தியக் கொடிக் கம் பீரமாகப் பறந்தது! வெள்ளைப் படையின் முகாமுக்கும், ஊருக்கும் இடைப்பட்ட தோப்புகளுக்கு மத்தியில் சில கோயில் களும், அருகே வெள்ளையர் முன்பு வாழ்ந்திருந்த வீடுகள் நொறுங்கியும் இருந்தன. நட்சத்திரக் கோட்டையும், சிப்பாய் களின் குடியிருப்புகளுங் காலியாகக் கிடந்தன. ஊரின் ஒரு பக்கம் நீண்டிருந்த மலைத்தொடரின் திசையில் கால்பி, ஓர்ச்சா சாலைகள் சென்றன. ஊருக்குள்ளே பதினோராயிரம் பேர் போர்க் கோலம் பூண்டிருந்தனர். அவர்களுக்குத் தலைமை யேற்றுத் தற்காப்பு ஏற்பாடுகளைச் சரி பார்த்துக் கொண்டிருந் தாள் இராணி இலட்சுமிபாய். நெஞ்சுரம் மட்டுமன்றி, நுண் ணறிவும் பெற்றவள் அவள். பரங்கியின் முற்றுகையை எதிர் பார்த்து, ஜான்சியின் சுற்றுப் புறங்கள் அனைத்தையும் ஏற் கனவே அவள் சுட்டுப் பொசுக்கி விட்டாள். குவாலியர் மன்

னன் சிந்தியாவும், ஓர்ச்சா மன்னனும் தக்க சமயத்தில் உதவியிராவிட்டால், தளபதி ஹியுரோஸ் தம் முகாமைச் சில நாட்களுக்குக் கூட அங்கே நீடித்து வைக்க முடியாது.

1858 பிப்ரவரி 22-ஆம் நாள் நள்ளிரவு! வெள்ளை முகாமி லிருந்த பீரங்கிகள் வாய்களைத் திறந்தன! ஜான்சி புரட்சிப் படையும் எதிர்த் தாக்குதலைத் தொடங்கியது. நில நடுக்கம் போல இரு தரப்புப் பீரங்கிகளும் ஓசை யிட்டன. வெள்ளையர் கள் விடாமல் தாக்கினர். ஒன்றல்ல...இரண்டல்ல...பதினேழு நாட்கள் தாக்கினார்கள். ஆங்கிலத் தளபதிகள் உடைகளைக் கூட மாற்ற வில்லை; குதிரைக் கடிவாளங்கள் நீருக்காக மட் டுமே கழற்றப்பட்டன! இவ்வளவு கொடூரத் தாக்குதலையும் ஜான்சி தாங்கியது! அந்த ஊரே திரண்டு இயங்கியது. பெண்களுஞ் சிறுவர்களும் சாரி சாரியாகக் கல்லும், மண் ணுஞ் சுமந்தனர்; வண்டிகளை இழுத்தனர். உடைப்பட்ட பகு திகளை உடனுக்குடன் செப்பனிட்டனர். போரிடும் வீரர் களுக்கு உணவும், நீரும் ஊர்மக்கள் கொண்டு வந்து கொடுத் தனர்! மாலை வேளைகளில் இராணி இலட்சுமிபாய் புறமதி லோரத்தில் நடந்து சென்று, தன் வீர மொழியால் வீரர்களை உணர்ச்சி வயப்படுத்தி ஊக்குவித்தாள்! மக்களும், வீரர்களும் இராணியின் சூளுரையைக் கேட்டு, வேகமும் துடிப்பும் பெற் றனர்! 'எம் முயிரினும் இனிய ஜான்சியைப் பறி கொடுக்க மாட்டோம்' என்று சொல்வது போல் இருந்தது, அம் மக் களின் உழைப்பும் இயக்கமும்!

மார்ச் 31-ஆம் நாள், எதிர்பார்த்த உதவி நெருங்கியது. ஜான்சியின் உதவிக்காகத் தாத்யா தோப் வந்து கொண்டி ருந்தான். நான்கு மாதங்களுக்கு முன்பே தலைமைத் தளபதியால் கான்பூரிலிருந்து விரட்டப்பட்ட, அடிபட்ட வேங்கைதான் அவன். தன் தலைவர்களின் உத்திரவின்பேரில், சார்காரிபைக் கைப் பற்றி விட்டு, ஜான்சிக்கு உதவ வருகின்றான்! அவனு டைய படையில் 20,000 வீரர்கள் அப்பொழுது இருந்திருக்கின் றனர்; அதுவறிந்தத் தளபதி ஹியுரோஸ் திடுக்கிட்டார்! தாத் யாவை எதிர்க்கத் திசை மாறினால், இராணி இலட்சுமிபாய் நம் இயலாமையை அறிந்து கொள்ளுவாள்; புது வேகமும் உணர்வும் பெற்று விடுவாள். இதற்கு இடங் கொடுக்காமல் ஒரு புறம் ஜான்சி முற்றுகையைத் தீவிரமாக்கிக் கொண்டே மற்றொரு படையுடன் தாத்யாவை வரவிடாமல் மறுக்கவுந் திட்ட மிட்டார். தாத்யாவின் வருகை, வெள்ளைத் தளபதி அச்சத்துடனும், ஜான்சி வீரர்கள் ஆர்வத்துடனும் எதிர்

பார்த்தனர்! ஆங்கிலத் துருப்புகளின் பரிதவிப்பை ஜான்சி வீரர்கள் கைதட்டிச் சிரித்து ரசித்தனர்! ஆனல், ஹியு ரோஸ் நிலே கலங்க வில்லே; நிதானமும் இழக்க வில்லே; தாத்யா தன் பெரும் படையுடன் நெருங்கும் முன்னரே, திடீரெனப் பாய்ந்து, எதிரியின் பேட்வா நதி ஓரத்தைத் தாக்கினர். இத் துணிச்சலானத் தாக்குதலில், புரட்சிப் படை அரண்டது! தாத்யா சற்று மருண்டு விட்டான். பெட்வா நதி யோரத்தில் இரு தரப்பினரும் பயங் கரமாக மோதிக் கொண்டனர். தன் படை சரிவதைக் கண்ட தாத்யா, சற்றுப்பின் வாங்கினன். வெள்ளேயர் தன்னேத் தொடராமலிருக்கக் காட்டுப் புதர்களுக்கும், மரங்களுக்குந் தீ வைத்துத் தடுத்தான். உடனே நல்ல இடத்தில் முகாமிட்டுப் படைகளேச் சரி செய்ய வேகமாகப் பின் வாங்கினன். ஆனல், இந்த நெருப்புக் கெல்லாம் வெள்ளேயர் அஞ்சவில்லே. பற்றி எரியும் நெருப்பிலும், சுழன்றெழும் புகையிலுங் குதிரைகளேச் செலுத்திப் பாய்ந்தனர். புரட்சிப் படை திக்குமுக்காடியது. சில மணி நேரத்தில் 1500 புரட்சி வீரர்கள் கொல்லப்பட்டனர். எஞ்சிய வீரர்களுடன் தாத்யா கால்பிக்குப்பின் வாங்கினன். இம்முறையும் அவ் வேங்கை அடிபட்டது! சுடுபட்டது! தப்பியது! உறுமிக் கொண்டே அது ஓடியது!!

பெட்வா நதிப் போரில் தாத்யா தோல்வி யடைந்ததால், தமக்கு உதவி கிடைக்க வில்லேயே என்று ஜான்சி வீரர்கள் சோர்ந்து விட வில்லே. வெள்ளேயனின் குண்டு வீச்சை மார்தட்டி எதிர்த்தனர். அவர்களின் பீரங்கிகள் குண்டுகளே மட்டுங் கலக்க வில்லே, கரு மருந்திட்ட மண் சட்டிகள், மரக் கட்டைகள், இரும்புத் துண்டுகள், இன் னுங் கிடைத்த பொருட்களே யெல்லாம் நிரப்பிச் சுட்டனர். வெள்ளேயரின் கடுமையான குண்டு வீச்சுக்குப் பிறகு, ஜான்சிப் புற மதிலின் ஓரஞ் சிறிது தளர்ந்தது. உடனே தளபதி ஹியுரோஸ், மேற்குப் புறத்தில் போலித் தாக்குதல் ஒன்றைத் தொடங்கிப் புரட்சி வீரர்களின் கவனத்தை அங்கே திருப்பினர். அதே நேரத்தில் மறைத்து வைக்கப்பட்ட பீரங்கிகளால், தளர்ந்த மதிலில் இடை விடாமல் தாக்கி, விண்ட சுவரைப் பிளந்தார். அப்போது இரவு மணி மூன்று! 1858 ஏப்ரல் மாதத்தின் மூன்ரும் நாள்! மறுபுறம் போரிட்டுக் கொண்டிருந்த புரட்சி வீரர்கள் தீப்பந்தங்களே ஏந்திக் கொண்டு, பிளவுண்ட மதிலே நோக்கி ஓடோடி வந்தனர். அதற்குள் நூற்றுக்கணக்கான பரங்கி வீரர்கள் ஏணி களேச் சாத்தி மதில் மேல் ஏறிவிட்டனர். மிக்க நெருக்கத்தில் இரு தரப்பினருங் கொடூர மாகக்

கைகலந்தனர். தொலை விலிருந்து குண்டு வீச்சும் நடந்தது; ஜான்சி அதிர்ந்தது; நெருப்பும், புகையுஞ் சூழ்ந்து கொண்டன. ஜோகன் பாக் படுகொலைக்குப் பழிவாங்க வெள்ளையன் ஊடுருவினான். ஜான்சியிலிருந்த ஒவ்வொரு வீரனும் ஒரு தாத்யாவைப் போலவே போரிட்டான். கற்கள் பறந்தன! கட்டாரிகள் சிவந்தன! உயர்ந்த அம் மதிலிலிருந்து உயிரைத் திரணமாய் மதித்து வெள்ளையர்கள் குதித்தனர். போனல் என்பவன் பாறையில் விழுந்து இறந்து கிடக்கிறான்; பாக்ஸ் என்பவன் கழுத் தொடிந்து துடிக்கின்றான்; டிக்ஸ் என்பவன் வாளால் கிழிக்கப்பட்டுச் சாய்கின்றான்! இந் நிலையில் இரத்தஞ் சொட்டச் சொட்ட ஆங்கிலப்படை ஜான்சிக்குள் நுழைந்து விட்டது.

அரண்மனைக்குச் செல்லும் வழி யெல்லாங் கடுமையான போர் நடந்தது. இருமருங்கிலும் வீடுகள் தீப் பற்றி யெரிந்தன. நெருப்பிலும், புகையிலும் ஊடுருவி இரு தரப்பினரும் வெறி கொண்டு போரிட் டனர். ஜான்சியின் ஒவ் வொரு தெருவும், ஒவ்வொரு வீடும் பரங்கியைக் கடுமையாக எதிர்த்தது! ஜான்சியின் ஒவ்வொரு பிடி மண்ணும் புரட்சியில் கொந்தளித்தது; கால் வைக்க இடமில்லாதபடிப் பிணங்கள் கிடந்தன. அங்கே சாவு ஏளனஞ் செய்யப்பட்டது! அரண்மனைக்குள்ளும், வெள்ளைத் துருப்புகள் நுழைந்து விட்டதே என்று எவரும் வெளியேறி விடவில்லை. உயிரைக் கொடுத்து ஒவ்வொரு அறையையுங் காத்தனர். 'எல்லாம் இழந்து விட்டோம்...இறக்கும் முன்னே எதிரிகள் சிலரை யாவது கொன்று மறு உலகிற்குத் துணையாகக் கூட்டிச் செல்லலாம்' என்றே புரட்சி வீரர்கள் போரிட்டனர்!! குதிரை லாயத்தைக் காவல் காத்த வீரர்கள், உடைகளில் தீப்பற்றி எரிந்த போதிலும் அவர்கள் பின் வாங்கவே இல்லை. ஆனல், எந்த எதிர்ப்பும் பரங்கியின் நுழைவைத் தடை செய்யவுங்கூடவில்லை. அரண்மனை வீழ்ந்தது! ஜான்சியும் பணிந்தது!!

மறுநாள் பகல் முழுவதும் ஜான்சி சூறையாடப் பட்டது. கண்ணில் பட்ட கருத்தவரெல்லாங் கொல்லப்பட்டனர். ஒன்று மறியாதவர் களெல்லாம், ஜான்சியைத் தாயகமாகக் கொண்டதால் உயிர் துறந்தனர். பரங்கியின் கொடுமை யிலிருந்துத் தப்ப முடியாத பலர், மனைவி மக்களைக் கிணற்றில் தள்ளிவிட்டுத் தாங்களும் உயிர் விட்டனர். வட மொழி நூல் நிலையம் கொளுத்தப் பட்டது. மாளிகைகள் நொறுக்கப் பட்டன; ஆலயங்கள் இடிக்கப் பட்டன; இருட்டறைகளைத் துருவினர்; நகைகளைத் திருடினர்; விக்கரகங்களைக் கவர்ந்தனர்! ஜோகன்

பாக்கில் வெள்ளையர்கள் சிந்திய இரத்தந் துடைக்கப்பட்டு விட்டது! ஊரே இடி விழுந்தாற்போல் கருகி விட்டது! ஒரா யிரம் பிணங்கள் எரிக்கப் பட்டன. புதைக்கப்பட்டன. அவ் வழகிய ஊர் கற்பழிக்கப்பட்டு, அலங் கோலமாய்க் கிடந்தது. பண்டைய அஸீரியத் தலைநகர் நினுவேயின் விதியை மராத்திய ஜான்சி அன்று தழுவியது!! வெள்ளை யனின் இரத்தத்தைச் சுவைக்க யாராவதுத் துணி வார்களே யானால்...இதோ இந்த ஜான்சி ஒரு எச்சரிக்கை!! அக் கொடூரக்காட்சி அதைத்தான் அறிவித்தது.

முதல் நாள் இரவிலேயே, சில வீரர்களின் பாதுகாப்பில் இராணி இலட்சுமி பாய் தன் தந்தையுடனும், வளர்ப்பு மக னுடனுந் தப்பி விட்டாள். இருட்டில் வழி தவறிய அவரு டைய தந்தை, எங்கெங்கோ அலைந்து, அணைத்து வெள்ளை வீரர்களிடஞ் சிக்கினார்; அவர் ஊருக்குள் கொண்டு வரப்பட்டு, அதே ஜோகன் பாக்கில் தூக்கிலிடப்பட்டார். இராணியோ அன்றிரவே பல மைல்களைக் கடந்து விட்டாள். துரத்திச் சென்ற வெள்ளை வீரர்களால் இராணியின் வீரர்கள் பலரைக் கொல்ல முடிந்ததே தவிர, அவளைப் பிடிக்க முடியவே இல்லை. குதிரை யேற்றத்தில் தேர்ந்திருந்த அவள், சிட்டாய்ச் சிறகடித் துப் பறந்து விட்டாள். அவள் செல்லுமிடம் வட கிழக்கே யமுனை நதிக் கரையிலுள்ள கால்பி! நான்கு நாட்களுக்கு முன்னே தளபதி ஹியு ரோஸ் அவர்களால் விரட்டப்பட்ட தாத்யாவுந் தன் வீரர்களுடன் கால்பிக்குத்தான் சென்றான். அவன், அவ் வூரை நெருங்கும் போதுதான் இராணி இலட்சுமி பாயும் அங்குச் சேர்ந்து விட்டாளென்றால், என்ன வேகத்தில் அவள் குதிரைச் சவாரி செய்திருக்க வேண்டும்? கால்பியில் தான் தலைவர்கள் ஒன்று கூடுகிறார்கள். புரட்சி என்ற சுழற் காற்று அவ்விடத்தைத் தான் அப்பொழுது மையமாகக் கொண்டிருந்தது!

ஜான்சி யிலிருந்து சுமார் 100 மைல் தொலைவில் கால்பி இருக்கிறது. நானாவின் உறவினன் ராவ் சாகேப், தாத்யா தோப், இராணி இலட்சுமிபாய், மற்றும் பல சிற்றரசர்கள் அங்கே ஒருங்கு குழுமி நிலைமையை ஆராய்ந்தனர். இலட்சு மிபாயின் வேண்டுகோளின்படி, தாத்யாவின் தலைமையில் ஒரு படையை ராவ் சாஹேப் உருவாக்கினார். ஜான்சி சாலை யில் 42-வது மைலில் கூஞ்ச் (Koonch) என்ற ஊருக்கு இப் படையுடன் தாத்யா வந்தான். சோலைகளுங் கோயில்களும் நிரம்பிய அவ்விடம் தற்காப்பிற்கு ஏற்றதாக இருந்ததால், அங்

கேயே தங்கி வெள்ளையர்த் துருப்புக்களை மறிக்க முடிவு செய்தான். 19 நாட்கள் ஜான்சியில் ஓய்வெடுத்த பின்பு, போருக்கு வேண்டிய ஏற் பாடுகளைச் செய்து கொண்டு, தளபதி ஹியு ரோஸ் கால்பியை நோக்கிப் புறப்பட்டான். தாத்யா மறைந்து காத்திருப்பதை அறிந்து, தம் படையைச் சிறிது நிறுத்தினான், அன்று காலை உணவுக்குப் பின்பு, கடுமையான வெய்யலில், இருபடைகளும் மோதின. தீரத்துடன் போர் புரிந்த புரட்சிப் படை பின்வாங்க நேரிட்டது. இம் முறையும் புரட்சி வீரர்கள் பின்வாங்கினர். தாத்யா அந்த அளவிற்குத் தேர்ந்து விட்டான். புரட்சி வீரர்களின் ஒரு வரிசை சுட்டு விட்டுப் பின் சென்று குண்டுகளை நிரப்பும் போது, மற்றொரு வரிசைச் சுட்டது. இவ்விதம் மாற்றி மாற்றிச் சுட்டுக் கொண்டே அதிக இழப்பின்றிப் புரட்சிப் படை பின்வாங்கியது. ஆனால், கால்பியை நெருங்கியதும் அனைவரும் கலைந்து தாறுமாறாக ஓட ஆரம்பித்தனர். வெள்ளைத் துருப்புகளால் துரத்தக் கூட முடிய வில்லை. அவர்களும் மிகவுஞ் சோர்ந்து விட்டார்கள். கால்பியில் ஏற்பட்ட இத் தோல்விக்குப் பிறகு, புரட்சி வீரர்கள் ஒருவர் மீது ஒருவர் பழியைப் போட்டனர்; என்று தெரிகிறது. பழி கூறுவதும், சந்தேகிப்பதும் எல்லாப் புரட்சி களிலும் தோன்றுஞ் சாதாரண நிகழ்ச்சிகளே. வெள்ளையர் கால்பியை நெருங்கியதும், புரட்சி வீரர்கள் தப்பி விட்டனர். உயிருக்குப் பயந்தல்ல... மறுபடியுந் தாக்குவதற்காகத்தான்! பண்டா நவாப்பின் படை வந்ததும், தாத்யா மீண்டும் அனைவரையும் ஒன்று சேர்த்தான். முதலில் சிறு சிறு உராய்வுகளில் ஈடுபட்டாலும், முடிவில் பெருந் தாக்குதல் ஒன்றைத் தாத்யா நடத்தினான். கால்பிக்குள் நுழைய விடாமல் பரங்கியை விரட்டியடித்தான். பரங்கிப் படை இத் தாக்குதலில் நிலை குலைந்து விட்டது. ஒட்டகங்களைப் பயன் படுத்தாமல் இருந்திருந்தால், அவர்கள் சின்னா பின்னமா யிருப்பார்கள். இறுதியில் வழக்கம் போல் வெள்ளையனுக்கே வெற்றி கிட்டியது. கால்பிக்குள் வெள்ளையர் நுழைந்ததும், புரட்சித் தலைவர்களும் வீரர்களுந் தப்பி ஓடினர். இராணி இலட்சுமிபாய் அன்றிரவு எங்கோ மரத்தடியில் உறங்க நேரிட்டது. இவ்விதம் மேற்கு 'மோ'விலிருந்து புறப்பட்ட மேஜர் ஜெனரல் சர் ஹியு ரோஸ் நான்கு மாதங்களில், ராத்கர், சாகர், ஜான்சி ஆகிய இடங்களில் புரட்சியை அடக்கி விட்டு, வெற்றிகரமாகக் கால்பியை அடைந்து விட்டார். புரட்சித் தொடங்கி அப்போது ஓராண்டாகி விட்டது. ஜான்சி தாக்குதலிற் உயிரிழந்த ஒரு இஸ்லாமியப் பீரங்கி வீரன் சாகும் முன் தன் தோழனுக்கு உரைத்ததை அடுத்துள்ள நாட்டுப் பாடலில் காண்போம்.

*ஒருநாள் இறப்பது திண்ணம் தம்பி!—அத்
திருநாள் இன்றே அமையட்டும் என்பேன்.
உயிரினும் மேதகு அரசியின் உள்ளத்
துயரினைப் போக்கிட உயிரையுந் தருவேன்!
வெள்ளையர் தலையினை வீழ்த்துவேன் வாளினால்;
உலகுள்ளவுஞ் சொலும் என்பெயர் தனையே.

———

*இது மகேஸ்வத பட்டாச்சார்யா அவர்கள் வங்காள மொழியில் எழுதிய 'ஜான்சி இராணி' என்ற நூலிலிருந்து எடுத்து மொழி பெயர்த்தது.

# 40. சிந்தியாவும் குவாலியரும்.

[ஜெயாஜிராவ் சிந்தியா — ஆங்கிலேயரின் நண்பன்— பிரதிநிதி மெக்பர்சன் அறிவுரை—அமைச்சர் திங்கர் ராவ்—சிந்தியா தன் வீரர்களைத் தங்க வைத்தல்—தாத்யா தன் பக்கம் இழுத்தல்—புரட்சித் தலைவர்கள் குவாலியருக்கு வருதல் — சிந்தியாவின் தோல்வி—குவாலியர் புரட்சிப் படையின் வசம்—ஹியு ரோஸ் விரைதல்—தளபதி ஸ்மித்—கோட்டா-கி-சராய் போர் --ஜான்சி இராணியின் வீர மரணம்.]

1843-ல் மற்றொரு மராத்திய நாடான குவாலியர் ஆங்கிலேயருக்கு வீழ்ந்தது. அப்பொழுது தலைமை ஆளுநராக இருந்த எல்லன்பரோ (Ellenborough) பிரபுவிற்குக் குவாலியரின் விதியை நிர்ணயிக்கும் பொறுப்பு இருந்தது. நிறுவன ஆட்சியுடன் அதை இணைத்துக் கொள்ளவோ, பெருந் தொகையைப் போர் இழப்பீடாகப் பெறவோ அவர் விரும்ப வில்லை. மாறாகப் பொறுமை மிக்க அம் மராத்திய அரசு, பிரிட்டானியா ஆட்சிக்குத் துணை நிற்கும் என்று நம்பி, அதைச் சுதந்திரமாக விட்டு வைத்தார். ஆனால், குவாலியரின் படையை மட்டுங் கலைத்து விட்டு, ஆங்கிலேயரின் மேற்பார்வையில் புதுப் படை ஒன்றை உருவாக்கி அங்கே நிறுத்தினார். அத்துடன் அங்கே, ஒரு நிலையரையும் அமர்த்திச் சிறு வயது மன்னனின் சார்பில் ஆட்சியைக் கண் காணிக்கவும் ஏற்பாடு செய்தார். எல்லன்பரோவின் நம்பிக்கை வீண்போக வில்லை. தக்க பருவம் வந்ததும், ஜெயாஜிராவ் சிந்தியா தான் ஆங்கிலேயருக்குப் பட்டிருக்கும் நன்றிக் கடனை உணர்ந்து, தன் மேலோர்க்கு இன்னல் ஏற்பட்டிருக்கும் இவ் வேளையில் துணைபுரிய முன் வந்தான்.

புரட்சித் தொடங்கியதும், அதைத் தூண்டுபவர்கள் யார்? அதற்குத் துணை போகிறவர்கள் யார்? என்பதைப் பற்றிப் பலரும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தனர். வட

மேற்கு மாநிலங்களின் துணை ஆளுநரான (Lieutinent Governor) கால்வின் மொகலாய அரசவைக்குள் நடக்கும் சூழ்ச்சிகளே கிளர்ச்சிக்குக் காரணம் என்று கருதினர். அந்த மொகலாயர்களின் பரமவைரிகளான பிற இந்து மன்னர்களின் துணை நமக்குக் கிடைத்தால், சிப்பாய்களின் மனதில் கலந்திருக்கும் விஷயத்தைக் குறித்து விடலாம்; என்று நம்பிய அவர் ஆக்ராவிற்கு அருகிலுள்ள குவாலியர், பரத்பூர் ஆகிய மன்னர்களின் உதவியைக் கோரினர். குவாலியர் மன்னன், நிலைமையை நன்கு புரிந்து கொண்டான். சிப்பாய்களின் கொதிப்பை அவன் பல நாட்க்களாகவே அறிந்திருந்தான். தன்னுடைய வீரர்களே கிளர்ச்சியிலீடு பட்டாலும், வியப்பதற்கில்லை என்று தன் அரசவையில் இருந்த ஆங்கில அரசப் பிரதிநிதி (Political Agent) மெக்பெர்சன் (Macphuson) அவர்களிடம் அப்பொழுது சிந்தியா கூறி வந்தான். கால்வினின் இவ் வேண்டுகோளுக்கிணங்கி, மெக்பர்சனின் அறிவுரைப் படி, தன் படையிலிருந்த மராத்திய வீரர்களை மட்டும் ஆங்கிலேயருக்கு உதவி செய்ய அனுப்பினன். அம் மராத்திய வீரர்களும் புரட்சியில் நாட்டங் கொண்டவர்களே என்பதைப் பின்னைய நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டும். வீரர்களுக்கு இருக்கும் உணர்வுகூட மன்னனுக்கு இல்லையா? உணர்ச்சி மட்டும் இருந்து என்ன பயன்? நிலைமை இடங் கொடுக்க வேண்டாமா? ஆங்கிலேயரின் பாது காப்பு இல்லை யென்றால், மராத்திய ஆட்சியின் குரல் வளையை நெருக்க ஜாத்களும், பண்டேலாக்களும், இராஜபுத்திரர்களும் என்றோ முனைந்திருப்பார்கள்; வெற்றியும் பெற்றிருப்பார்கள். அண்மையில் கல்கத்தாவிற்குச் சென்றிருந்த சிந்தியா, பிரிட்டானியா ஆட்சியின் மேன்மையையும், ஆடம்பரத்தையும், படை பலத்தையுங் கண்டு பிரமித்திருந்தான். அவர்களைச் சார்ந்தால்தான் தம் அரசு நிலைக்கும் என்ற நம்பிக்கையும், எதிர்த்தால் கவிழ்க்கப் படுவோம் என்ற அச்சமும் அவன் மனதில் ஆழப்பதிந்து விட்டன! குவாலியரின் அமைச்சர் தின்கர் ராவ், பிரிட்டானிய வல்லமையில் உயர்ந்த நம்பிக்கையும், உறவில் மிகுந்த அக்கறையுங் கொண்டிருந்தார். இக்காரணங்களால்தான் மன்னன் ஆங்கிலேயரை ஆதரித்தான்.

குவாலியர் படை அந் நாட்டின் பாதுகாப்பிற்காக, அம் மன்னரின் செலவில் உருவாக்கப்பட்டிருந்தாலும், ஆங்கிலேயரின் பயிற்சிக்கும், தலைமைக்கும் உட்பட்டிருந்தது. கொழுப்பும், எலும்பும் எங்கும் போல் அங்கும் அதிருப்தியையும், அச்சத்தையும், அதனல் ஆத்திரத்தையும், விளைவித்து விட்டன.

மீரத் நிகழ்ச்சிக்குப் பின்பு படை தளத்திலிருந்த ஆங்கிலே யரின் மனைவி மக்கள் பாதுகாப்பிற்காக நிலையர் மாளிகைக் குக் கொண்டு வரப் பட்டனர். (மே 28.) இப் பாதுகாப்புப் பணியும், மன்னன் தன் மெய்க்காவல் வீரர்களுக்கேத் தரப் பட்டது. அதிகாரிகள் தங்களை நம்ப வில்லை, என்பதைப் படை வீரர்கள் புரிந்து முணு முணுத்தனர். சில அதிகாரி களின் கண்டனத்திற்குப் பின்பு, நிலையர் மாளிகை யிலிருந்து ஆங்கிலக் குடும்பங்கள் மீண்டும் படை தளத்திற்குக் கொண்டு வரப்பட்டனர்.

ஜூன் தொடங்கியதும், குவாலியர் மேல் கரு மேகங்கள் சூழ்ந்தன! கிளர்ச்சி செய்திகள் அலை அலையாய் அங்கங்கே மோதின! அஜ்மீர்... நசிராபாத்... ரோகில் கண்ட்... ஜான்சி ஆகிய இடமெல்லாம் போர் பறை முழங்கியது. கான்பூரிலும், இலக்னோவிலும், அலகாபாத்திலும் என்ன நடக்கிறதென்று தெரிய வில்லை? அடுத்த புரட்சி எங்கே? அடுத்த கொலை எங்கே? நண்பன் யார்? எதிரி யார்? என்றுந் தெரியாமல் குவாலியரில் வாழ்ந்த பரங்கிக் குடும்பங்கள் தவித்தன! திருமதி கூப்லண்ட் (Mrs. Coopland–A Lady's escape from Gwalior) கூறுகிறார். 'என் கணவர் ஆடைகளைக் களை வதே இல்லை. நானும் எவ் விநாடியுந் தப்பிப்பதற்குத் தயாரா கவே யிருந்தேன். துப்பாக்கிகளில் குண்டுகள் நிரப்பப் பட்டே இருந்தன. குண்டு நிரப்பவுஞ் சுடவும் நானும் பயிற்சியும் பெற்றேன். போரிடாமல் சாவதற்கு நாங்கள் விரும்ப வில்லை. மரண தண்டனை பெற்ற கைதிகூடத் தன் சாவை நிச்சயமாக எதிர் நோக்கி இருப்பான். ஆனால், எங் களுக்கோ? எனில் வாழ்வும் உறுதியில்லை. சாவும் எப்போ தென்பதுந் தெரிய வில்லை?'

அந்த ஐயத்திற்கு இனி இட மில்லை. எதிர் பார்த்தது நடக்கப் போகிறது. ஜூன் 14–ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆங்கிலேயர் அனைவரும் இயேசுவின் அபய கரத்தை நாடி ஆலயத்திற்குச் சென்றனர். சிப்பாய்களில் பலர் குவாலியர் கடைத் தெருக்களில் சுற்றித் திரிந்தார்கள். ஜான்சி எழுந்து விட்ட செய்தி நகரில் பரவிக் கொண்டிருந்தது. அன்று பக லில் ஒரு வெள்ளை அதிகாரியின் இல்லந் தீப்பற்றி எரிந்தது. இது தீ விபத்தல்ல. வரப் போகும் புரட்சிக்குச் சைகை! வீரர்கள் விழிப்பாக யிருக்கக் கொடுக்கப்பட்ட அறிவிப்பிது! திருமதி கூப்லண்ட் தன் கணவருடன் மாலை உலாவச் சென் றாள். எதிரில் தென்பட்டச் சிப்பாய்கள் எவரும் வழக்கம்

போல் வணக்கஞ் செலுத்த வில்லை. இனி யென்ன சந் தேகம்? கிளர்ச்சி நடக்கப் போகிறது......ஆனால், என்று?...... அன்றே தான். இரவு 9 ஒன்பது மணிக்கு நேரம் அறிவுக்கும் பீரங்கிகள் முழங்கியதும், குடிசைகளிலிருந்து சிப்பாய்கள் வெளி யேறினர். சிறிது நேரத்தில் துப்பாக்கிகள் வெடித் தன. படை தளத்தில் தீப் பிடித்தது. அதை நோக்கி, குதிரைகளிலேறி வெள்ளை அதிகாரிகள் விரைந்தனர். அதற் குள் நிலைமை முற்றி விட்டது. கேப்டன் வில்லியம் ஸ்டுவர்ட் சுடப்பட்டுத் துடித்துக் கீழே வீழ்ந்தார். வெறும் குதிரைத் திரும்பியதைக் கண்டு அவர் மனைவியும் மகனும் அலரி அழு தனர். அங்கு வந்த சிப்பாய்கள் அவ் விருவரையுங் கொன் றனர். பின்னர் வெள்ளையர் இல்லங்களில் புகுந்து பலரைக் கொன்றனர். டாக்டர் கிர்க் (Krik) தங் குடும்பத்துடன் ஓடி ஒரு சிறு வீட்டில் ஒளிந்தார். மனைவிக் கதறக் கதற அவள் கண் முன்னே டாக்டர் பிணமானார். 'என்னையுஞ் சுடுங்கள் என்று டாக்டர் மனைவி இறைஞ்ச,' இல்லை உன் கணவனைக் கொன்றதிலேயே நீயும் இறந்தாய். ஆண்களை மட்டுமே நாங் கள் கொல்லுவோம்' என்று சிப்பாய்கள் பதலளித்தனர். அவருடைய நான்கு வயது மகன் நீண்டு, சுருண்ட தலைமுடி யுடன் இருந்ததால், அவனைப் பெண் என்று நினைத்து, விட்டு விட்டனர். கூப்லாண்ட் குடும்பத்தினர் பலருடன் சேர்ந்து ஒரு இருண்ட குடிசையில் ஒளிந்திருந்தனர். கூரையைப் பிரித் தெறிந்த சிப்பாய்கள் அங்கிருந்த ஆண்களை மட்டும் பிரித்துத் தனியாகச் சுட்டுக் கொன்றனர். லெப்டினென்ட் பியர்சன், நன்றி மிகுந்த சில சிப்பாய்களால் காப்பாற்றப் பட்டார். பிரதி நிதி மெக்பர்சன் பெண்களுடன் ஆக்ராவிற்குத் தப்பி விட்டார். குவாலியர் புரட்சி மறு நாளே ஆக்ராவை எட்டியது.

தன் வீரர்களை நம்ப முடியாது என்று மன்னன் சிந்தியா சொல்லியது பலித்து விட்டது. அடுத்த நடவடிக்கை என்ன? கலகக்காரர்களை என்ன செய்வது? ஆங்கிலேயர் அதற்கும் ஒரு அருமையான திட்டந் தந்தனர். அதன்படி தன் வீரர் களால் ஆங்கிலேயருக்கு உதவி கிடைக்காவிடினும், இடை யூறு எதுவும் நேராமல் பார்த்துக் கொள்ள சிந்தியா முன் வந்தான். தான் வெள்ளையரின் இரகசிய நண்பன் என்பதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், புரட்சிக்குத் தலைமைத் தாங்க முடிவான மறுப்பு எதுவுங் கூறாமல், அதே நேரத்தில் தன் வீரர்கள் அனைவருக்குங் காலந் தாழ்த்தாமல், ஒழுங்காகக் கூலி கொடுத்து வந்தான். இது மிகவும் கடினமான ஒன்றா கும். பரங்கியின் இரத்தத்தைச் சுவைத்த வீரர்களை, ஏதே

ததோ கூறி நான்கு மாதங்கள் பிடித்திழுத்து வைப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. 1857 - செப்டம்பர் மாதம் டெல்லி ஆங்கிலேயரால் மீட்கப் பட்டதும், மனம் மகிழ்ந்த சிந்தியா தன் பிடியைச் சிறிது தளர்த்தியதும், படைக்குள் நச்சரவம் புகுந்து விட்டது. தாத்யா இரகசியமாக உள்ளே நுழைந்து, குவாலியர் வீரர்களைத் தடுமாற்றத்திலிருந்து மாற்றிப் புரட்சி போதையை மீண்டும் ஊட்டினன். சோம்பல் முறித்தெழுந்த வீரர்களில், பாதி பேர் தாத்யாவின் தலைமையில் கால்பிக்குச் சென்று, அங்கிருந்து அக்டோபர் இறுதியில் கான்பூரை முற்றுகை இட்டக் கதை நமக்குத் தெரியும். அங்கே, தலைமைத் தளபதியால் முறியடிக்கப்பட்டு, அவர்கள் சிதறிய முடிவும் நமக்குத் தொரியும்.

இவ்விதம் நன்கு பயிற்சிப் பெற்றிருந்த ஒரு பெரும்படை சிந்தியாவால் குவாலியரில் இழுத்துப் பிடிக்கப் பட்டிருந்ததால், ஆங்கிலேயர் கடுமையான எதிர்ப்பிலிருந்து தப்பினர். குவாலியர் புரட்சி வீரர்கள் தொடக்கத்திலேயே பிற புரட்சி வீரர்களுடன் சேர்ந்திருந்தால், ஆக்ரா, டெல்லி, கான்பூர் போன்ற இடங்களின் விதி மாற்றப் பட்டிருக்கும். அவர்களின் சோம்பலால், இயக்கமற்ற நிலையால், யமுனை, கங்கை நதிகளின் வடக்கே புரட்சியை அடக்கிவரும் ஆங்கிலேயரின் முயற்சி ஓரளவுக்கு எளிதாக்கப் பட்டது. ஆனல், மன்னன் சிந்தியாவும், அமைச்சர் திங்கர் ராவும் ஆங்கில மேன்மையில், வெற்றியில், வைத்திருந்த நம்பிக்கையைக் குவாலியரில் பிற தலைவர்கள் வைக்கவில்லை. மாறாக அரசவையில் பலர் புரட்சியில் நம்பிக்கை வைத்தனர். பரங்கியால் தங்களின் மதத்திற்கும், நாட்டிற்கும், பண்பாட்டிற்கும் ஆபத்துச் சூழ்ந்து விட்டது என்பதை உணர்ந்தனர். பரங்கியை விரட்டி அடிக்க வேண்டியது தங்களின் கடமை என்றும் வாதிட்டனர். இதனல் மன்னனுக்குந் திவானுக்குந் தெரியாமல் குவாலியரில் விஷவித்துகள் ஊன்றப்பட்டன. மராத்திய மேன்மையின் தலைமைப் பீடம் என்றோ பேஷ்வா குலத்திலிருந்து நழுவி விட்டது. இன்றைய மராத்திய மன்னர்களில், ஆங்கிலேயர்களுக்கு உட்பட்டிருந்தாலும், குவாலியர் சிந்தியாதான் உயர்ந்திருந்தான். அவனுடைய தலைமை சரியான தருணத்தில் கிடைத்திருந்தால் புரட்சி வெற்றி பெற்றிருக்கும்; என்று நம்பலாம். தலைமைதான் கிடைக்கவில்லை யென்றால், சிந்தியாவின் வீரர்களாவது ஆரம்பத்திலிருந்தே ஒத்துழைத்திருந்தால், ஆங்கிலேயருக்கு எதிர்ப்பு முனைகள் பலவாயிருக்கும். பலமாயும் இருக்கும். அவர்கள் காலந் தாழ்ந்து புரட்சியில் ஈடு பட்டதால்

தான் சில வெற்றிகள் பெற்ற வேகத்தில் புரட்சியை அடக்கு வது ஆங்கிலேயருக்கு எளிதாயிற்று. மாதங்கள் பல கடந்து விட்டன. புரட்சித் தொடங்கி ஓராண்டு ஆகிவிட்டது. குவா லியர் யார் பக்கம்?

இப்பொழுதும் நிலைமை மிஞ்சி விடவில்லை. சிந்தியா இசைந்தால் புரட்சித் தலைவர்கள் புரட்சியின் திசையைத் திருப்பி, தராசின் நிலையைத் தங்களுக்குச் சாதகமாக மாற் றிக் கொள்ளலாம். சிந்தியா இணங்க வேண்டும்! மறுத்தால் அவனை ஆட்சியிலிருந்து இறக்க வேண்டும்! முன்னதே சிறந் தது. ஏனெனில்? மராத்தியத் தலைவர்களான சிந்தியாவும் நானாவும் ஒன்று சேர்ந்தால் பரங்கி அஞ்சுவான். பிற சிற்றர சர்களும் பரங்கியர்க்கு எதிராகத் திருப்பப்படுவார்கள். கால் பியில் சர்ஹியூ ரோஸால் தோற்கடிக்கப்பட்டப் புரட்சித் தலை வர்கள் இதற்கானச் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்தனர்.

கூஞ்ச் போரில் தோல்வியுற்ற தாத்யா, நேராக அருகி லுள்ள தன் சொந்தக் கிராமத்திற்குச் சென்றான். கால்பி வீழ்ச்சியின் போது அவன் அங்கு இல்லை. கால்பியில் தோல் வியுற்ற புரட்சித் தலைவர்கள் இராவ் சாகிப்பும், இலட்சுமி பாயும், தெற்கில் ஜான்சிக் அருகே யிருந்த கோபால்பூருக்குச் சென்று விட்டார்கள். இவர்கள் அங்கிருப்பதை அறிந்து தாத்யாவும் அங்கே சென்றான். அடுத்து என்ன செய்வது? என்பதை அவர்கள் ஆலோசித்தார்கள். கிழக்கிலும், மேற்கி லும், தெற்கிலும் வெள்ளைப் படைகள் சூழ்ந்து கொண்டன. இனி வடக்கே தான் செல்ல வேண்டும்! அத்திசையில் தான் குவாலியர் இருக்கின்றது. குவாலியர் வீரர்களில் பலர், தாத்யா வின் தலைமையில் முன்பொரு முறை வெளி யேறியவர்கள் தான். எஞ்சிய வீரர்களை ஏன் நம் பக்கந் திருப்பக் கூடாது? தாத்யாவின் மருமகன் அங்கேதான் இருக்கிறான். அவ்வூரின் கொத்தவால் அதிகாரி கூட பிதூரைச் சேர்ந்தவர்தான், மீண்டும் ஒரு முறை இரகசிய மாக குவாலியருக்கு என்றே புரட்சிக்கு ஆதாரந் திரட்டினார் தாத்யா.

தாத்யாவின் பணியைச் சிந்தியாவே எளிதாக்கி விட் டான். ஆங்கில அதிகாரிகளின் அறிவுரையின்படி மராத்திய வீரர்களைத் தவிர, பிற இன வீரர்களைத் தன் படையிலிருந்து சிறிது சிறிதாக நீக்கினார். சுதேசி அதிகாரிகளும், வீரர்களும் தம்மை வேலையிலிருந்து நீக்கி விடுவார் என எதிர்பார்த்தனர். மன்னனுக்குத் தான் பிறந்த நாட்டின் மீது பற்றில்லை. பாமர

மக்களுக்கு மத உணர்வு உயிராயிற்று! மராத்திய குலத் தலைவனை பேஷ்வா நானு சாகிப்பே பரங்கியை எதிர்க்கும் போது, பேஷ்வா முதலாம் பாஜிராவின் காலணியை ஏந்திப் பிழைத்த ரனோஜி சிந்தியாவின் (Ranoji Scindira) வழி வந்த இன்றைய சிந்தியா மட்டும் பரங்கியைத் தாங்குவதேன்? தழுவுவதேன்? பேஷ்வாக்கள் தயவால் உருவாகியது தானே இன்றைய குவாலியர் நாடு! சிந்தியாவின் இரட்டை வேடம், பாமர வீரர்களுக்கு ஆத்திர மூட்டியது. இராவ்சாகிப், இலட்சுமி பாய், தாத்யா ஆகிய தலைவர்களுடன் புரட்சிப் படை 1858 மே 30-ம் நாள் குவாலியரை நெருங்கியது. சரியாக ஓராண்டுக்கு முன்பு இதே நாளில் தான் பல இடங்களில் புரட்சித் தோன்றியது. குவாலியரும் அன்றே புரட்சிக் கொடி ஏந்தியிருக்க வேண்டும். அன்று தவறிய சிந்தியா இன்றுந் தவறினன். ஆங்கிலேயரின் வெற்றியில் அவனுக்கு அசையாத நம்பிக்கை அன்றும் இருந்தது. இன்றும் அது மேலும் வலுப் பட்டிருக்கிறது. மேலுந் தன்னை ஆபத்திலிருந்து காப்பாற்ற ஆங்கிலேயர்கள் வருவார்கள்; என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அதற்குள் தனியாகப் புரட்சிப் படையைத் தாக்கினுல், என்ன ஆகுமோ என்று அவனுக்குத் தோன்றியது போலும். தன் அரசவையினர் பலர் இதை விரும்ப வில்லை. என்பதும் அவனுக்குத் தெரியும். தன் வீரர்கள் புரட்சியை ஏற்கனவே சுவைத்தவர்கள்; என்பதுந் தெரியும். இருந்தும், தன் பரங்கிப் பக்தியைக் காட்ட மறு நாளே உற்சாகத்துடன் படையைச் செலுத்தினுன். ஆங்கில நண்பருக்காக அவன் வாளெடுத்திருக்கிறுன். எதிரி பிரெஞ்சுக் காரனல்ல! சொந்த நாட்டான்! இந்திய நாட்டான்! அவனொரு மராத்தியன்! எனவே, இந்துஸ்தானம் பல நூற்றுண்டுகள் அடிமை நாடாக இருந்ததில் வியப்பில்லை தான்!

1858 ஜூன் முதல் நாள் குவாலியர் மன்னன் தன் படையுடன் களத்திற்கு வந்தான். படையின் சங்கொலி, மெய்யைப் புல்லரிக்கச் செய்தது. சில நாழிகைக்குள் போர் ஒலி குறைந்தது. என்ன மாயம்? சிந்தியாவின் வீரர்களில் பெரும் பாலோர் ஆரவாரஞ் செய்து புரட்சிப் படையுடன் சேர்ந்து கொண்டனர். அவர்களனைவருந் தாத்யாவால் வசியம் செய்யப்பட்டவர்களே ஆவார்கள். சிந்தியா தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஆக்ரா சாலையில் குதிரை யேறிப் பறந்தான்.

இராணி இலட்சுமிபாயின் திட்டத்தில் இது முதல் வெற்றி. அடுத்து மன்னனில்லாத் தலைநகர், குவாலியரின் புரட்சிப் படை வசஞ் சிக்கியது. ஆனால், இங்கு வீரர்கள் கொள்ளை அடிக்கவில்லை. அட்டூழியம் எதுவுஞ் செய்யவில்லை. கோட்டையைக் கைப்பற்றினர். கருவூலத்திலிருந்த சுமார் 20 இலட்சம் ரூபாய், வீரர்களுக்குக் கூலியாகவும், தங்களுக்குப் பரிசாகவும் பகிர்ந்து கொண்டனர். நானா சாகிப் பேஷ்வாவாகப் பிரகடனஞ் செய்யப் பட்டான். இராவ் சாகிப் குவாலியரின் ஆளுநராக நியமிக்கப் பட்டான். சிந்தியாவில் சிறுமைக் குள்ளாகிச் சிறைப்பட்டிருந்த சில மராத்தியத் தலைவர்கள் விடுவிக்கப்பட்டு, அவர்கள் புரட்சிக்கு வீரர்களைத் திரட்ட நாட்டுப் புறம் நோக்கி அனுப்பப் பட்டனர். குவாலியருக்குள்ளே தாத்யா ஒரு படையுடன் நிறுத்தப் பட்டார். ஊர்ப் புறத்தே பெரும் படை ஒன்றினுக்கு இராணி இலட்சுமிபாய் காவல் காத்து நின்றாள். தப்பிச் சென்ற அரச குலச் சீமாட்டிகளுடன் இராவ்சாகிப் தொடர்பு கொண்டார். அவர்களின் ஆதரவை அந் நிலையிலுந் திரட்ட முயன்று தோல்வியுற்றார். குவாலியரில் தொடர்ந்து தங்க முடியாதகையால், தக்கோணத்தில் புரட்சியைத் தொடங்கலாம் என்று இராவ் சாகிப் திட்ட மிட்டிருந்தார்; எனத் தெரிகிறது. ஆனால், அவர் இயங்குவதற்கு முன்னே ஹியுரோஸ் இயங்கி விட்டார்.

கால்பியை விட்டுத் தப்பியோடிய புரட்சி வீரர்கள் எங்கே சென்றார்கள்? என்பதை அறிய இரு அணிகளை ஹியு ரோஸ் அனுப்பி யிருந்தார். குவாலியருக்குப் புரட்சி வீரர்கள் செல்லுகின்றனர். என்பதை அறிந்ததும், அவர் மகிழ்ந்தார். அழிவைத் தேடியே செல்லுகின்றனர்; என்று சிறிது ஆறுதல் அடைந்தார், அவருடைய மகத்தான வேலை முடிந்து விட்டது. மேற்கே இந்தூரிலிருந்து புறப்பட்டு, 5 மாதங்களில் திட்ட மிட்டபடி முடிந்தால், உடல் நிலைக் காரணமாக ஓய்வெடுக்க அனுமதிகோரி விண்ணப்பமுஞ் செய்து விட்டார். அச்சமயத்தில், ஜூன் 4ஆம் நாள் அதிர்ச்சித் தரும் செய்தி ஒன்று வந்தது. சிந்தியாவின் தோல்வியும், குவாலியரின் வீழ்ச்சியும் அவர் கனவைத் தவிடு பொடியாக்கியது. சற்று அயர்ந்தால், பெரும் மராத்திய எழுச்சி ஏற்படும்! உடனே கால்பியை விட்டுப் புறப்பட்டார். பலவந்தப் பயணத்தில் படைகளை நடத்தி 16 - ஆம் நாள் மோவார் (குவாலியருக் கருகிலுள்ள படை தளம்), அருகில் வந்து சேர்ந்தார். அத்துடன் புரட்சிக்காரர்கள், தெற்கே தப்ப முடியாதபடி தடுக்க ஒரு அணியை அனுப்பி விட்டார். குவாலியருக்கு 5 மைல் தென் கிழக்கே

உள்ள கோட்டா - கி - சராய் (Kotah-ki-Sarai) என்ற இடத்திற்கு வந்து சேரும்படிச் சந்தேரிலிருந்த பிரிகேடியர் ஸ்மித்திற்குங் கட்டளை யிட்டார். அதன்படி ஸ்மித் மறு நாள் (ஜூன் 17-ஆம் நாள்) காலை அவ் விடத்திற்கு வந்து சேர்ந்து விட்டார்.

அங்கேதான் இராணி இலட்சுமிபாயின் படைக்கும் பரங்கிப் படைக்குங் கடுமையான போர் நிகழ்ந்தது. ஆணுடை தரித்து, புரவியிலிருந்து, போர் களத்தின் மத்தியில் அவ் வீரப் பெண் காட்டிய துணிச்சலும், ஆற்றலும் மறக்க முடியாதவை! போர்க் களம் முழுதுஞ் சென்று தம் வீரர்களை ஊக்குவித்தாள். ஸ்மித்தின் குதிரைப் படை திடு திடு வென்று நுழைந்த போதும், இலட்சுமிபாய் தளரவில்லை. ஜான்சியே பறி போன பிறகு இவ் வுயிர் எதற்கு? சூறுவளியாய்ச் சுற்றிஞள்! மின்னலாய் விளங்கிப் போரிட்டாள். அவளுடைய குதிரை கால்வாய் ஒன்றைத் தாண்டும் பொழுது அடிப்பட்டுக் கீழே விழுந்தது. இராணியின் மேல் குண்டு பாய்ந்தது! மின்னல் வேகத்தில் அங்கு வந்த பரங்கிக் குதிரை வீரன், கீழே விழுந்த இராணியைத் தாக்கிஞன். தலைவியை இழந்த வீரர்கள் செயலற்றனர். வேதனையில் துடித்த ராணி இலட்சுமிபாயை, அருகிலிருந்த பூல்பாக் (Phool Baugh) என்ற தோட்டத்திற்குப் பல்லக்கில் தூக்கிச் சென்றனர். இராவ் சாகிப் உடனிருந்தார். (எனத் தெரிகிறது) 20 நிமிடங்களில் ஜான்சியின் இராணி இலட்சுமிபாயின் ஆவி பிரிந்தது! அருகிலிருந்த மரங்களின் நிழலில் சிதை எரிக்கப்பட்டது. எரிந்து கொண்டிருந்த போதே, பரங்கியர் நுழைந்து விட்டனர். ஆற்றில் அஸ்தியைக் கூட கரைக்க முடிய வில்லை. ஜான்சியை இழந்து, குவாலி யரை வென்று, இராணி இலட்சுமிபாய் கண்மூடி விட்டாள். சுதந்திரக் கனவுகள் தொடர்ந்தன; அவளின் அமர நித்திரையில்!

துணிவிலும், ஆற்றலிலும், மதியிலும் அவள் சிறந்தவள்; என்பதில் ஐயமில்லை! ஆங்கிலேயரால் சிறுமைக்குள்ளாக்கப் பட்டாள்; என்பதிலும் ஐயமில்லை! புரட்சித் தோன்றியதும் கொலை பாதகத்தில் இறங்கிஞள் என்கின்றனர் சிலர். பல வந்தமாகப் புரட்சியில் இழுக்கப்பட்டாள் என்கின்றனர். சிலர். பண்டேலாக்களை எதிர்க்க ஆங்கிலேயரின் உதவியை எதிர்பார்த்து, ஏமாந்த பின்னரே புரட்சியில் ஒரு மனதுடன் ஈடுபட்டாள்; என்கின்றனர் இன்னுஞ் சிலர். எப்படி இருப்

பினும்? இறங்கியபின் ஒரு புயலாக உலவினாள்...நெருப்பாகச் சூழன்றாள்... எண்ணற்ற மக்கள் கதறியழப் பகைப் பலத்தின் நடுவில் வீராங்கனையார் உயிர் நீத்தாள்! அதில் சிறிதும் ஐயமே மில்லை!

———

# 41. ரோகில் கண்ட் வளைக்கப்படல்

[கான் பகதூரின் 11-மாத ஆட்சி — தளபதியின் அடுத்தபணி— இலக்னோ மீட்சிக்குப் பின்பு அஹமதுல்லாவின் எதிர்ப்பு — ரோகில் கண்டை வளைக்க கேம்பலின் திட்டம் — பென்னி முன்னேறுதல் — வழியில் திடீர்த் தாக்குதல் — வால்போல் முன்னேறுதல் — ஜோன்ஸ் முன்னேறுதல் — மொராதாபாத்தில் பெரோஸ்ஷா — கேம்பல் முன்னேறுதல் — மௌல்வி தப்பித்தல் — முப்படைகளும் மிரான்பூர் கத்ராவில் இணைதல் — பெரெய்லி முற்றுகையும், வீழ்ச்சியும் — ஷாஜஹான்பூரை அஹமதுல்லாபிடித்தல் — அங்கே கேம்பலின் வருகை — அஹமதுல்லா தப்பித்தல் — போறெயின் சிற்றரசனின் துரோகம் — அஹமதுல்லா கொல்லப்படல்.]

சுமார் 11 மாதங்களுக்கு ரோகில் கண்டில் வெள்ளைய ராட்சி மறைந்து கிடந்தது. கான்பகதூர் கான் பெரெய்லியிலிருந்து கொண்டு ஆட்சி புரிந்தான். 1857, அக்டோபர் மாதத்தில் இந்த முஸ்லிம்களின் ஆட்சிக் கெதிராக இந்துக்களைத் தூண்டும் முயற்சியில் வெள்ளையர் இறங்கினர். கேப்டன் கோவன் (Gowan) இதற்காக 50,000 ரூபாய் வரையில் செலவிட்டார். ஆனால், இராஜபுத்திர தாக்கூர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. கான் பகதூரிடஞ் சுமார் 40,000 வீரர்கள் இருப்பதைக் கண்டு தயங்கினார்களோ? என்னமோ! மத இன பிரிவுகளைப் பயன்படுத்தி எதிரிகளை வெற்றி கொள்ளுவது வெள்ளையரின் இரத்தத்தில் ஊறிப்போன ஒன்று. மாக்கிய வெல்லியின் (Mac-hvia vellie) அறிவுரைகளை ஏற்பவர்கள், இச் செயலை வெறுக்க வேண்டிய தில்லை. போரிடுவதில் விருப்பமுள்ளவர்கள். இந்த மாறுபட்ட சூழ் நிலையில். இவ் வழிகளைக் கடைப் பிடிப்பது இயற்கை, பெரும் படை தங்கள் கைவசம் இருந்தால்? வெள்ளையர் இம் முறையை விரும்பி யிருக்க மாட்டார்களோ, என்னவோ?

ஆங்கிலத் தளபதிகள் பெரும் அபாயங்களைக் கடந்து விட்டார்கள். இப்பொழுது ரோகில் கண்டைச் சூழ்ந்து புரட்சிக்காரர்களை அடக்க வேண்டும். இப் பொறுப்புத் தலைமைத் தளபதி சர்காலின் காம்பெல்லுக்கு இருந்தது. லக்னோ பிடிபட்டவுடன், புரட்சி வீரர்கள் தப்பி ஓடினார்கள். 1858 மார்ச் 22 ஆம் நாள் கடுமையான போருக்குப் பின்பு மர்ம மௌல்வி அஹமதுல்லாவும், பிற முக்கிய புரட்சித் தலைவர்களுந் தப்பினார்கள். புரட்சித் தலைவர்கள் அனைவரும் ஆயிரக் கணக்கான சிப்பாய்களுடன் அப்பொழுது ரோகில் கண்டிற்குச் சென்று வெள்ளையரை எதிர்க்க முயன்றனர். தலைமைத் தளபதி காலின் கேம்பலின் ஆணைப்படியே சர்ஹோப் கிராண்ட், ஏப்ரல் 9ஆம் நாள் லக்னோவை விட்டுப் புறப்பட்டார். புரட்சிப் படைகள் 30 மைல்களுக்கு அப்பால் பாரி (Bari) என்ற இடத்தில், மௌல்வியின் தலைமையில் மீண்டும் எதிர்ப்பதற்குக் காத்திருந்தன. அத் துறவியின் அருமையான இரகசிய திட்டஞ் செயல் படுத்தப்பட்ட போது, சில வீரர்களின் தவறுதல்களால் அது குலைந்தது. மௌல்வி மீண்டும் பின் வாங்கினான். நேப்பாள கூர்க்காப் படைகள், தங்கள் நாடு திரும்பும் வரையில் இருந்து விட்டு. ஷோப் கிராண்ட் லக்னோவிற்கு மே 16ஆம் நாள் வந்து சேர்ந்தார்.

கோடை காலம் முடிந்த பின்னர், ரோகில் கண்டை வளைக்கக் கேம்பல் திட்டமிட்டிருந்தார். ஆனால், புரட்சி வீரர்களை இலக்னோவிலிருந்து தப்பி ஓட விட்டு விட்டார். அதனால், உடனே ரோகில் கண்டில் அவர் நுழைவது அவசியம் என்று தலைமை—ஆளுநர் வற்புறுத்தினார். அதற்கேற்ப கேம்பல், தன் திட்டத்தைத் தீட்டினார். அதைப் புரிந்து கொள்ள மீண்டும் வரை படைத்தைப் பார்ப்போம்.

ஒன்று :—மேஜர் ஜெனரல் பென்னி மேற்கே மீரட்டிலிருந்து புரப்பட்டுக் கங்கையைக் கடந்து ஷாஜஹான்பூருக்கு மேற்கே 20மைல் தொலைவிலுள்ள மீரான்பூர் கத்ரா (Miranpur katra) என்ற இடத்தை அடைய வேண்டும்.

இரண்டாவது :—ஃபிரிகேடியர் ஜெனரல் வால்போல் கிழக்கே லக்னோவிலிருந்து புறப்பட்டு அதே இடத்திற்கு வர வேண்டும்.

மூன்றாவது :—பிரிகேடியர் ஜெனரல் ஜோன்ஸ் வடக்கே, மீரத்திற்கும் வடக்கே ரூர்க்கியிலிருந்து ரோகில்கண்டிற்குள் நுழைய வேண்டும்.

நான்காவது:—மேஜர் ஜெனரல் சிட்டன் ஃபதேகரிலிருந்து கொண்டு எதிரிகளை மறிக்க வேண்டும்.

சிட்டன் மிக விழிப்புடன் இருந்தான். ஏப்ரல் 6 ஆம் நாள், மெயின்புரி மன்னன் தேஜ்சிங்கின் தூண்டுதலால் ஃபதே கருக்கருகில் முகாமிட்டிருந்த புரட்சி வீரர்கள் முன்னேறிச் செல்ல விடாமல் சிட்டன் அவர்களைத் தோற்கடித்தான்.

பென்னி, மீரத்திலிருந்து தம் படையுடன் புலந்த்கர் வழி யாக முதலில் ஃபதேகருக்கு வந்து, தளபதி கேம்பலை ஏப்ரல் 24 ஆம் நாள் சந்தித்து, பின்பு அங்கிருந்து கங்கையைக் கடந்து, ரோஹில்கண்ட் திசையில் சென்றார். பியூடோனுக்குச் செல் லுவதில் அபாயமில்லை யென்று அறிந்து, ஏப்ரல் 30 ஆம் நாள் இரவில் தம் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார். காக் ராலா என்ற குக்கிராமத்தைக் கடக்கும்போது நடுநிசி! எதிரி கள் எவரும் அவ் வட்டாரத்தில் இருப்பதாகவே தெரிய வில்லை. சிறிது தூரத்தில் மங்கலான வெளிச்சம் மட்டுந் தெரிந்தது. இலேசான மனித நடமாட்டமும் அங்கே புலப்பட்டது. பென்னி கண்களைக் கசக்கிப் பார்த்தார்...மறு விநாடியே டுமீல் ...டுமீல் என்ற ஓசை கேட்டது! கண்ணிமைக்கும் நேரத்தில் முஸ்லிம் காஜிகள். பரங்கிப் படையின் அதிகாரிகள் பலரைக் கொன்று குவித்தனர்! காஜிகளின் வீரத்திற்கும், துணிவிற்கும் அதுவே சான்று. மதத்திற்காக உயிர் இழப்பதைப் புண்ணி யம் என்று கருதுபவர்கள் அவர்கள். கடுமையான போருக்குப் பிறகு அக்காஜிகள் பின் வாங்கினர். பொழுது விடிந்ததும் குண்டுங் கத்தியும் பாய்ந்த அலங்கோலமான பிணம் ஒன்று தேடிக் கண்டெடுக்கப் பட்டது. அது மேஜர்—ஜெனரல் பென்னியின் பிணம்! தலைவனை இழந்த அப்படை மே 3 ஆம் நாள் திட்டமிட்டபடி மீரான்பூர் கத்ராவை அடைந்தது.

வால் போலின் படை ஏப்ரல் 7 ஆம் நாள் லக்னோவை விட்டுக் கிளம்பியது. வால் போல் ஒரு சிறந்த வீரர் தான். ஆனால், படைக்குத் தலைமை தாங்கும் ஆற்றல் அவரிடமில்லை. G.B. மேலசன் மிகக் கடுமையான மொழியில் வால்போலைக் குற்றஞ் சாட்டியுள்ளார். 'திடமில்லாத மனதும், துணிவில் லாதவீரமுங் கொண்ட வால்போலிடம் மிகக் குறைந்த அளவு சமயோசிதங் கூட இல்லை.' என்று கூறியுள்ளார். பிற் காலத் தில் K.C.B. விருது அவருக்குக் கொடுக்கப்பட்டதைக் கூட வெறுத்துள்ளார். மேலெசன் கண்டனத்திற்கு வால் போல் உள்ளாக வேண்டிய காரணம் இது தான். 'எந்தத் திறமையுங்

தேவைப்படாத ஒரு பயணத்தில், எந்த எதிர்ப்பும் இல்லாத ஒரு தருணத்தில், தேவையின்றி சிக்கலில் மாட்டிப் பல உயிர்களைப் பறி கொடுத்தார். வால்போல்' என்பதே ஆகும். லக்னோவிலிருந்து புறப்பட்ட வால்போல், 50 மைல் தொலைவிலிருந்த ருயா (Ruya) என்ற இடத்தை ஏப்ரல் 16 ஆம் நாள் நெருங்கினார். அவ்வூருங் கோட்டையும் நர்பத்சிங் என்ற பெரும் நிலக்கிழார் ஒருவருக்குச் சொந்தம், அவரும் ஒரு புரட்சிக்காரர். அவருடைய சில நூறு வீரர்கள் அக் கோட்டைக்குள்ளே இருந்தனர். அவரிடஞ் சிக்கிய போர்க் கைதி ஒருவன், அங்கிருந்துந் தப்பி, வால்போலின் முகாமை யடைந்தான். அவ் வீரனின் கூற்றுப் படி நர்பத்சிங் இலேசான எதிர்ப்பை மட்டுங் காட்டி விட்டுக் கோட்டையையும் விட்டு வெளியேற திட்ட மிட்டிருந்தான். ருயா கோட்டையின் அமைப்பையோ, புரட்சி வீரர்களின் எண்ணிக்கையையோ அளவிட வால்போல் முயற்சி யெடுத்திருக்கலாம். மாறாக 1500 வீரர்கள் கோட்டைக்குள் இருக்கின்றனர். என்ற வதந்தியை நம்பினார். அத்துடன் கோட்டையின் வழிகளைக் கூட ஆராயவில்லை. கோட்டையின் இருபக்கங்களில் அடர்ந்த மூங்கில் காடுகள் இருந்தன. மற்ற பக்கங்களில் பாதுகாப்பும் அதிகம் இல்லை. வால்போலின் அவசர முடிவால், தவறான இலக்குகளில் பரங்கிப் படை தாக்குதலைத் தொடங்கியது. சிலமணி நேரத்தில் ஏராளமான வீரர்கள் உயிரிழந்தனர். எதிர்பாராமல் கிடைத்த வெற்றியில் மகிழ்ந்த நர்பத்சிங் போரை நீடித்துப் பலரைக் கொன்றான். பிற அதிகாரிகளின் அறிவுரைகளை ஏற்றுவது வால்போல் தம் தவறுகளைத் திருத்திக் கொள்ளவில்லை. அதன் விளைவாகக் கர்னல் ஆட்ரியன் ஹோப் என்ற சிறந்த அதிகாரி உயிரிழந்தார், பலத்த உயிர்ச்சேதத்துடன் வால்போல் முகாமிற்குத் திரும்பினார். எல்லாப் புரட்சித் தலைவர்களைப் போலவே, நர்பத்சிங்கும் நல்ல இத் தருணத்தைப் பயன்படுத்தத் தவறினான். அன்றிரவே அவனுந் தன் வீரர்களுடன் கோட்டையை விட்டு வெளியேறினான். வால்போலின் படை ஷாஜஹான்பூர் வழியாக மீரான்பூரை மே 3 ஆம் நாள் அடைந்தது. பென்னியை இழந்த அப் படையும் அங்கே வந்து சேர்ந்தது.

ரூர்க்கியிலிருந்து புறப்பட்ட ஜோன்ஸ் புனித ஹரித்துவாரத்திற்கருகில் கங்கையைக் கடந்தார். அவருடைய படையில் முல்தானி குதிரை வீரர்களும் இருந்தனர். அப் படை பாக்னிவாலாக் (Bhagniwala) காடுகளை நெருங்கி வந்த போது, மறைந்திருந்தப் புரட்சி வீரர்கள் பாய்ந்தனர். முல்தானிக் குதிரை வீரர்கள் பாய்ந்தனர். முல்தானி குதிரை வீரர்கள்

கடிய வேகத்துடன் புரட்சி வீரர்களைச் சாடினர்கள். புரட்சிப் படை தலைவனில்லாது மூட்டை முடுச்சுகளைப் போட்டு விட்டு பின் வாங்கியது. பலர் துரத்திக் கொல்லப்பட்டனர். அவ் வட்டார மக்களின் நினைவில் பல்லாண்டுகள் இந் நிகழ்ச்சிப் பசுமையாக நிலைத்து இருந்தது. பாக்னிவாலாக் காடுகளில் அன்று இறந்த வீரர்களின் ஆவிகள் இன்னும் உலவுகின்றன. என்றும், இரவில் அவர்களின் வேதனை அலறல் கேட்கிற தென்றும் அவர்கள் பேசிக் கொள்வார்களாம். மறுநாள் முல் தானி குதிரைப்படை ஜமேதார் இமாம் பாசக்ஷாகான், தன் தனிப்பட்ட முயற்சியில் தப்பியோடிப் புரட்சி வீரர்களைத் தேடினன். அருகிலிருந்த கோட்டையில் மறைந்திருந்த புரட்சி வீரர்களைத் தன் வீரர்களைக் கொண்டு அச்சுறுத்திச் சரணடை யச் செய்தான். அத்துடன் அக் கோட்டையின் நவாபைக் கைது செய்து கொண்டு வந்தான். பின்னர் அதை விட்டு முன்னேறிய ஜோன்ஸின் படை வரும் வழியில் பிஜ்னோரைக் கைப்பற்றினன்.

கடந்த ஆண்டு 1857 அக்டோபர் மாதத்தில் ஆக்ராவிற் கருகே விரட்டப்பட்ட இந்தூர் புரட்சிப் படையின் தலைவன் இளவரசன் ஃபிரோஷ் ஷா '58 ஏப்ரல் 21ஆம் நாள் முராதா பாத்திற்கு வந்தான், அங்கே, அவனல் எதையுஞ் சாதிக்க முடிய வில்லை. இச் சமயத்தில் தான் ஜோன்ய்சின் படை ஏப்ரல் 2 ஆம் நாள் அங்கு வந்தது. பல புரட்சித் தலைவர்கள் மறைந்து இருக்கிருர்கள் என்ற செய்தி கிடைத்ததால், நகருக்கு வெளியே முல்தான் குதிரை வீரர்களைக் காவலுக்கு வைத்து விட்டு, ஜோன்ஸ் மட்டும் உள்ளே சென்ருர். குறிப்பிட்ட சில விடுகள் சோதனையிடப் பட்டன. அங்கே மறைந்திருந்த பல புரட்சி வீரர்கள் தீவிரமாக எதிர்த்தனர், 21 புரட்சிக் காரர்கள் பிடிக்கப்பட்டனர். பலர் கொல்லப்பட்டனர். தப் பியவர்களில் இளவரசன் பிரோஷ்ஷாவும் ஒருவன். இறுதி யாக ஜோன்ஸின் படை மே 6 ஆம் நாள் மீர்கஞ்சை அடைந் தது. அங்கிருந்து பெரெய்லிக்கு 14 மைல் தூரந் தான்.

தலைமைத் தளபதி காலின் கேம்பல் பதேகரிலிருந்து புறப் பட்டு ஏப்ரல் 30.ஆம் நாள் ஷாஜஹான்பூரை யடைந்தார். அந் நகரம் அதுவரை மௌல்வியின் கையிலிருந்தது. அவனுடன் நாஞ சாஹேபும் தன் வீரர்களுடன் இருந்ததாகத் தெரிகிறது. நாஞவின் ஆணைப்படி அங்கிருந்த முக்கிய அரசாங்கக் கட்டிடங் கள் பல வெள்ளையருக்குப் பயன்படாதவாறு இடிக்கப்பட்ட தாகத் தெரிகிறது. அதன் பின்பு மௌல்வியும், நாஞவும் தப்பி

விட்டார்கள். முக்கிய தலைவர்களைப் பிடிக்க முடியாததற்காகக் கேம்பல் வருந்தினார். பின்னர், அங்கிருந்து புறப்பட்டு மீரான்பூர் கத்ராவை மே 3-ஆம் நாள் அடைந்தார். மறுநாள் பென்னி. வால்போல், காம்பெல் ஆகியோரின் படைகள் ஃபரீத்பூரை அடைந்தன. அங்கிருந்து பெரெய்லிக்கு ஒரே நாள் பயணம்!

பெரெய்லியின் பிரதான வீதி இரண்டு மைல் நீளமானது. அதன் இருபுறங்களிலும் சில கிளை வீதிகள் இருந்தன. ஊரின் தென்புறத்தே, நாத்யா நதி என்ற சிற்றாறு ஒன்று ஓடுகிறது. பெரெய்லியின் தலைவன் கான் பகதூர் கான் தன் நிலையை புரிந்து கொண்டான். ஒரு புறம் ஜோன்ஸின் படையும், மறு புறம் தளபதி கேம்பலின் படையும் பெரெய்லியை நெருங்கு கின்றன; என்பதை அறிந்தான். தப்பிக்க வழியில்லாமலில்லை. ஆனால், வீர ரோகில்லா இரத்தம் அதைத் தடுத்தது. எதிர்க் காமல் தப்பிச் செல்ல அவன் விரும்பவில்லை.

மே 5-ஆம் நாள் அதிகாலையில் தளபதி கேம்பல் ஃபரீத் பூரிலிருந்து பெரெய்லிக்கு வந்து சேர்ந்தார். ஊரை நெருங்கும் முன்பே எதிரிகளின் நிலையை அவருக்கு ஒற்றர்கள் அறிவித் தனர். வெள்ளைப் படை ஊரை நெருங்கியதும், புரட்சி வீரர் களின் பீரங்கிகள் வெடித்தன. சிறிது நேரத்தில் காஜிகள் புலி யெனப்பாய்ந்தனர். இக்காஜிகள் தாடி வளர்த்து, பச்சைத் தலைப்பாகை அணிந்திருந்தனர். அவர்கள் அணிந்திருந்த வெள்ளி மோதிரங்களில் கொரான் மொழிகள் பொறிக்கப் பட்டிருந்தன. வேற்று மதத்தினரைக் கொன்றால் சுவர்க்கத் திற்குச் செல்லலாம் என்பதில் அளவு கடந்த நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இஸ்லாமிய மதத்திற்காக உயிர் துறப்பதே புண்ணியம் என்று கருதுபவர்கள் அவர்கள். கேடயத்தால் உடலை மறைத்துக் கொண்டு, தலைக்கு மேல் வாளைச் சுழற்றி, தீன்! தீன்! என்று கூக்குரலிட்டுப் பாய்ந்தனர்; இக் காஜிகள்! வெள்ளைப் படையைச் சேர்ந்த சீக்கிய வீரர்கள் பலர், இக்காஜி களுக்கு இரையானார்கள். வெள்ளைக் கிறித்துவர்களும் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். பல நூற்றாண்டுகள் நீடித்த அக் கிறித்துவ இஸ்லாமியப் போர்கள் இன்னும் முற்றுப் பெறவில்லை. மதப் பற்று, நாட்டுப் பற்றை விடக் கொடியது; நீடிப்பது. வெள்ளையரின் பதில் தாக்குதலுக்கு அக்காஜிகள் பின் வாங்கவில்லை. இறப்பதற்கே வந்திருப்பதால், எதிரிகளைக் கொன்றும், எதிரிகளால் கொல்லப்பட்டும், அக் கொலைக் களத்தில் வீர மரணம் அடைந்தனர். அக்காஜிகளில் ஒருவன்

கூட பின்வாங்கவில்லை; யென்பது குறிப்பிடத் தக்கது. மேற்காசிய மதங்கள் இரண்டும் இந்தியத் துணைக் கண்டத்தில் அன்று பலத் தேர்வில் குதித்தன. பகதூர் கானின் குதிரைப் படை பீரங்கியைச் சுற்றி வளைத்தது. தளபதி கேம்பல் போரை நிறுத்திச் சற்றுப்பின் வாங்கினர். இதைப் பயன்படுத்திப் புரட்சி வீரர்கள் தப்பி விட்டனர். கான் பகதூர் கான் அன்றிரவே பெரெய்லிக்கு வடகிழக்கே 33 மைல் தொலைவிலிருந்த பிலிபித்திற்குத் தப்பிச் சென்று விட்டான். மே 7-ஆம் நாள் பெரெய்லியின் இரு திசைகளிலிருந்துந் தாக்குதல் நடத்தி வந்த ஜோன்ஸின் படையுங் கேம்பெலின் படையும் இணைந்தன.

பெரொய்லி வெள்ளையரின் வசமாயிற்று. ஆனல், புரட்சித் தலைவர்களைத் தளபதி காலின் இப்பொழுதும் நழுவ விட்டார். ஏற்கனவே ஷாஜஹான் பூரிலிருந்து மௌல்வி தப்பினன். இன்று பெரெய்லியிலிருந்து கான் பகதூருந் தப்பினன். நேப்பாள எல்லைக்கு ஆங்கிலத் தளபதியின் நேரடிப் போர்களில் தாம் இந்த இரு இழப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன! மௌல்வி எங்குச் சென்றான்?

பெரெய்லியில் ஆங்கிலப் படைகள் போரிட்டுக் கொண்டிருந்த காலத்தை மௌல்வி பயன்படுத்திக் கொண்டான். ஷாஜஹான் பூரிலிருந்து காலின் கேம்பல் மே 2-ஆம் நாள் பெரெய்லிக்குச் சென்றதும், முஹம்தி மன்னனின் உதவியைப் பெற்ற மௌல்வி ஷாஜஹான் பூரைக் கைப்பற்ற விரைந்து வந்தான். இவ்வபாயச் செய்தி, அங்கிருந்த கர்னல் ஹேல் (Hale) லுக்கு இந்திய ஒற்றர்களால் தெரியப்படுத்தப்பட்டது. நகருக்கு வெளியே ஆங்கிலத் துருப்புகள் இருந்தன. மௌல்வி ஒரே மூச்சில் நகரைக் கைப்பற்றினன். அவ்வூர் மக்களிடங் கட்டயமாகப் பணம் வசூலித்தான். அங்கிருந்து கொண்டு மே 11-வரை ஆங்கில முகாமைத் தாக்கி வந்தான். பெரெய்லியிலிருந்த தளபதி கேம்பலுக்கு இச் செய்தி மே 7-ஆம் நாளே, எட்டியது. அன்று தான் அவர் பெரெய்லியைக் கைப்பற்றி யிருந்தார். ஷாஜஹான்பூர் புரட்சிக்காரர்களின் வசம் மீண்டுஞ் சிக்கியது, கவலைக்கிடமளித்தது. ஆனல், மௌல்வியைப் பிடிக்க மற்றொரு சந்தர்ப்பங் கிடைத்தது; என்று அகமகிழ்ந்தார். தளபதி கேம்பல் உடனே பிரிகேடியர் ஜோன்ஸைப் படையுடன் அனுப்பினர். மே 11-ஆம் நாள் ஜோன்ஸ் ஷாஜஹான்பூரை நெருங்கினன். நகரின் பிரதான வீதிகளில் உள்ள வீடுகளில் புரட்சி வீரர்கள் மறைந்திருந்து சுடுவதற்குத் துளையிட்டிருந்தார்கள்.

நேரடியாக நகருக்குள் நுழைந்தால் மீள முடியாது. உதவிப் படைவரும் வரை ஜோன்ஸ் காத்திருந்தார். மூன்று நாட்கள் இவ்விதங் கழிந்தன. உதவிப் படையை எதிர்பார்த்து ஜோன்ஸும், பழைய நண்பர்களை எதிர்பார்த்து மௌல்வியுங் காத்திருந்தனர். சிதறிய வீரர்களும், அதிருப்தியடைந்த நிலக்கிழார்களும், கொள்ளைக்காரர்களும் மௌல்விக்கு ஆதரவாக ஷாஜஹான்பூரில் குழுமினர். அது மட்டு மல்ல, புரட்சிக்கதையின் நாயகர்களும் அங்கே வந்தனர். அயோத்தி பேகம் வந்தார்! இளவரசர் ஃபிரோஷ் ஷா வந்தார். நானாவின் படை வீரர்கள் வந்தனர்; நானா வருவதாக வதந்தி உலவியது; ஆனால், அவர் வரவில்லை! உயிருக்குப் பயந்தா? ஆங்கிலேயரை எதிர்க்க முடியாமலா? ஆங்கிலேயர் வெற்றி பெற்றால், தன்னைப் பழி வாங்குவார்கள் என்ற அச்சமா? எப்படியோ? கான்பூருக்குப் பின்னே, குவாலியருக்கு பின்னே நானாவை நாம் அடிக்கடிப் பார்க்க முடிவதில்லை. இந்த மர்மம் புரிய வில்லை!

மே 15-ஆம் நாள் மௌல்வி தாக்குதலைத் தொடங்கினான். இரு தரப்பினருங் கடுமையாக மோதிக் கொண்டனர். ஜோன்ஸ் எளிதில் வெற்றி பெற்று, மௌல்வியைப் பிடித்து விடுவார்; என்று தளபதி கேம்பல் அதிக நம்பிக்கைக் கொண்டார். எனவே, ரோகில்கண்ட் மீட்கப்பட்டதால், படைகளைப் பிரித்து வேறு வேறு திசைகளுக்குச் செல்லப் பணித்தார். ஜெனரல் வால் போல், ரோகில்கண்டைப் பாதுகாக்க நிறுத்தப் பட்டார். மீரத்திற்கு ஒரு படை அனுப்பப்பட்டது. லக்னோவிற்கு மற்றொரு படை சென்றது. பிரிகெடியர் கோக்கை, கான் பகதூர் கான் தப்பிச் சென்ற பிலிபத் திசையில் தளபதி அனுப்பினார். மே 15-ஆம் நாள் அவரும் ஃபதேகரை நோக்கிப் புறப்பட்டார். ஜோன்ஸுக்கு ஏற்பட்ட ஆபத்தை மறுநாள் கேள்விபட்டு மீண்டும் ஷாஜஹான்பூருக்கேத் திரும்பினார். அவர் வருவதற்குள்ளாக மௌல்வி முகம்தி சாலையில் பின் வாங்கி விட்டான். இம் முறையும் அவன் தப்பி விட்டான்! ரோகில்கண்ட் மீட்கப்பட்டு விட்டது; ஆனால், புரட்சித் தலைவர்கள் தப்பி விட்டார்கள்! அயோத்தியில் நிறைய வேலையிருக்கிறது. அப் பகுதி முழுவதும் அடக்கப்பட வில்லை. தப்பிய அஹமதுல்லா என்ன ஆனார்?

அவன், தோல்வியால் துவள்பவன் அல்ல. தான் இறக்கும் வரை அந்நியனை எதிர்ப்பான். புரட்சி தலைவர்களில் பெரும் மதிப்பிற்குரியவன் அவனே. சர் தாமஸ் சிட்டன் அவனுடைய ஆற்றலையுந் துணிவையும் மன உறுதியையும்

அழகாகப் புகழ்ந்துள்ளார். G. B. மேலெசென் கூட அவனைப் புகழ்ந்துள்ளார். 'புரட்சிக்கு இரகசியமாக விதை விதைத்தவன்; இந்தியா முழுவதும் பல இடங்களில் மக்களையுந் தலைவர்களையும் தூண்டினவன்; அயோத்தி பேகமுடனும், அரசகுலத்துடனும் நெருங்கிய இரகசிய உறவு கொண்டிருந்தவன்; அயோத்தியில் பரங்கியரின் ஆட்சிக்கு எதிராக துண்டு பிரசுரங்கள் விநியோகித்தவன்; காவலர்களால் அவனைப் பிடிக்க முடியவில்லை. படையின் உதவி அதற்குத் தேவைப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்டு அவன் சிறையிலிருந்த போதும் புரட்சித் தோன்றியது.' மேற்கண்டவற்றை மேலெசன் ஒப்புக் கொள்ளுகிறார். மௌல்வி பார்வைக்குக் கம்பீரமாக இருந்தான். நல்ல உயரம், கூரிய மூக்கு, கட்டான உடல், உள்ளடங்கிய விழிகள், போரிடுவதில் சிறந்தவன்; என்பதில் சந்தேகஞ் சிறிதும் இல்லை. பயிற்சிப் பெற்ற தளபதிகளை ஏமாற்றிச் சென்றவன்! தளபதி கேம்பலையே இரு முறை ஏமாற்றி மறைந்தவன் அவன்.

பொவெய்ன் ஷாஜஹான்பூரிலிருந்து வடகிழக்கே 18 மைல் தொலைவில், ரோகில்கண்ட்-அயோத்தி எல்லையில் இருக்கிறது. பொவெய்ன் சிற்றரசனுக்கு ஓரளவு செல்வாக்கும் இருந்தது. ஆதரவாளர்களும் அங்கிருந்தனர். அவனுக்குத் தன் வருகையைத் தெரிவிக்கத் தூதுவன் ஒருவனை அனுப்பி விட்டு, ஜூன் 5ஆம் நாள் மௌல்வி ஒரு சிறுபடையுடன் அங்கே சென்றார். பொவெய்ன் மன்னன் ஜெகந்நாத்சிங் வெள்ளையருக்கு எதிராக இயங்க விரும்பாதவர். எனவே, மௌல்விக்கு உதவ அவன் முன் வரவில்லை. என்றாலும், பேட்டி கொடுக்க அவன் சம்மதித்தான். ஆனால், மௌல்வி அங்கே சென்றபோது கோட்டைக் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. மதில் மேல் வீரர்கள் ஆயுதந் தாங்கி நின்றனர். அரசனும், அவன் தம்பியுங் கோட்டைக் கதவுகளைப் பார்த்தவாறு சுவரின்மேல் நின்றிருந்தனர். இக்கோலத்தில் அவர்கள், தன்னை வரவேற்பதைக் கண்ட மௌல்வி அஹமதுல்லா திகைத்தான். யானையின் மேல் அமர்ந்திருந்த அவனுக்கும், கோட்டைக் காவலரண் மேலிருந்த சிற்றரசன் ஜெகந்நாத் சிங்கிற்கும் பேட்டித் தொடங்கியது. உரக்கப் பேசுவதிலும், மன்னன் நம்பும்படிப் பேசுவதிலும் பயன் கிட்டாது; என்று அஹமதுல்லா நினைத்தான். தன் வலிமையை மன்னன் உணர்ந்தால்தான் தனக்கு வேண்டிய உதவி கிடைக்கும் என்று அவனுக்குப் பட்டது. உடனே தன் யானையை ஏவி கோட்டைக் கதவை இடிக்கச் செய்தான்! கதவு உடைந்த ......அதற்குள் மன்னனின் தம்பி பதட்டமடைந்தான். அருகி

லிருந்த துப்பாக்கியை எடுத்து யானைமேல் எடுப்பாக வீற்றிருந்த மௌல்வியைக் குறிபார்த்துச் சுட்டு வீழ்த்தினன்! மறு விநாடியே மௌல்வியின் வீரர்கள் சிதறி ஓடினர். மௌல்வியின் பிணம் மன்னன் முன் கொண்டு வரப்பட்டுத் தலை துண்டிக்கப் பட்டது! அத்தலையைத் துணியில் சுற்றி எடுத்துக் கொண்டு ஜெகந்நாத்சிங்கும், அவன் தம்பியும் தம் வீரர்களுடன் ஷாஜஹான்பூருக்கு விரைந்தனர். அங்கே நீதிபதியின் இல்லத்தில் வெள்ளையர்கள் விருந்துக்காகக் குழுமியிருந்தனர். அவர்களின் காலடியில் மௌல்வியின் தலை உருட்டப்பட்டது! மறு நாள் ஊர் நடுவே கொத்வால் சாவடியில் மௌல்வியின் தலை கயிற்றில் கட்டித் தொங்க விடப்பட்டது, ஃபைஸாபாத் மௌல்வி அஹமதுல்லாவின் சூறுவளி வாழ்க்கை முற்றுப் பெற்றது! சிறந்த பரங்கித் தளபதிகளின் கண்களில் மண்ணைத் தூவிய அம் மாவீரன், ஒரு சிற்றரசனை நம்பி மோசம் போனுன்! காட்டிக் கொடுத்த ஜெகநாத்சிங்கிற்கு ஆங்கில அரசு ரூ. 50,000 பரிசாகக் கொடுத்தது.

மேற்கின் சார்பில் வரலாற்றை எழுதிய மேலேசனுல் கூட மௌல்வியைப் புகழாமலிருக்க முடியவில்லை. சுதந்திர உணர்வுடன் போரிட்டவர்களுள் மௌல்வியே முதன்மையானவன். அவனிடம் அரசு இல்லை, பணயம் வைக்க; ஓய்வுப் பணம் பெறவில்லை, துறப்பதற்குச் செல்வமுமில்லை, இழப்பதற்கோ! இந்த வேள்வித் தீயிலே அவன் பெறுவதற்கோ! எந்த நன்மையும் இல்லை. இருந்தும் அத் தீயில் குதித்தான்! கருகினுன்! ஓ மௌல்வி! ஓங்குக நின் புகழ்! என வாழ்த்துவம்!

## விக்டோரியா அரசியின் பிரகடனம்

ரோகில்கண்ட் அடக்கப்பட்டு விட்டது. புரட்சி வீரர்கள் பலர் தப்பி விட்டனர். அயோத்தியில் இறுதி வேலை மேற்கொள்ளப்பட வேண்டும். புரட்சித் தலைவர்கள் அகப்படவும் மாட்டார்கள்; எளிதில் சரணடையவும் மாட்டார்கள். இந் நிலையில் மக்களுக்கு மீண்டும் நம்பிக்கை யளிக்கவும், ஒழுங்கை நிலை நிறுத்தி வரிகளை வசூலிக்கவும், மன்னிப்பு அளிப்பதன் மூலம் பலரின் எதிர்ப்பை கட்டுப் படுத்தவும் ஆங்கில அரசு முடிவு செய்தது. புரட்சியை அடக்கிய வேகத்தில், ஆறுதல் அளிக்கும் உறுதி மொழிகள், இன்னல்களைக் குறைக்குமென்று அரசு நம்பியது. 1858 ஆகஸ்ட் 2 ஆம் நாள் இங்கிலாந்தின் பாரளுமன்றம் நிறைவேற்றிய சட்டத்தில் அரசி விக்டோரியா கையெழுத் திட்டார். அதன்படி கிழக்

இந்திய வணிக நிறுவனத்தின் ஆட்சியை, இங்கிலாந்து அரசி மேற் கொண்டார். நவம்பர் முதல் நாள் அலகாபாத்தில் நடந்த ஆடம்பரமான தர்பாரில், மாட்சிமை தங்கிய அரசியின் பிரகடனம் வெளியிடப் பட்டது. இந்திய மொழிகள் பலவற்றிலும் அவ்வறிக்கை மொழி பெயர்க்கப் பட்டது. படை தளங்களிலும், பெரும் பெரும் நகரங்களிலும் ஒரே சமயத்தில் வெளியிடப் பட்டது. கல்கத்தா, சென்னை, பம்பாய், இலாகூர், ஆக்ரா, அலகாபாத், டெல்லி, இரங்கூன், இலக்னோ, மைசூர், கராச்சி நாக்பூர் போன்ற நகரங்கள் அனைத்திலும், அப் பிரகடனம் வெளியிடப் பட்டது. இந்தியத் துணை கண்டத்தில் இருந்த அரசர்கள் அனைவருக்குந் தெரிவிக்கப் பட்டது. அப்பிரகடனத்தின் சாரம் இது தான்:— 'இந்திய அரசர்களின் உரிமைகளும், மரியாதைகளும், சலுகைகளும் காப்பாற்றப்படும். பிரிட்டானிய அரசு இனி மேல் தன்னுடைய எல்லைகளை விரிவாக்காது. ஆங்கில நிறுவனத்தின் ஆட்சியில் அரசர்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் யாவும் தொடர்ந்து கௌரவிக்கப்படும். அந் நிபந்தனைகளைச் சுதேசி அரசர்களும் மீறக் கூடாது. அறியாமையினால் கலகத்திலீடு பட்டவர்கள் மன்னிக்கப்படுவார்கள். வெள்ளையரைக் கொன்றவர்களும், கொல்ல உடந்தையாக இருந்தவர்களுந் தவிர மற்றவர்கள் எக் காரணத்தால் கலகத்தில் ஈடுபட்டிருப்பினும் வரும் ஜனவரி (1859) முதல் நாளுக்குள் சரணடைந்தால் மன்னிக்கப் படுவார்கள், கண்ணியமாகவும் நடத்தப் படுவார்கள். இந்திய மக்களின் சாதி, மத உணர்வுகளுக்கு புறம்பாக அரசு ஒரு போதும் நடக்காது. ஒவ்வொருவருக்குந் தங்கள் தங்கள் மத, சாதிகளைப் பேணுவதற்கு உரிமை யுண்டு. திறமையை அடிப்படையாகக் கொண்டு சாதி, மத, இன வேறுபாடின்றி இந்தியர்கள் அரசாங்கப் பதவிகளில் இடம் பெறலாம். இந்திய மக்களின் வளத்தில் தான் நம்முடைய பலம் இருக்கிறது; அவர்களின் திருப்தியில் தான் நம்முடைய பாது காப்பும் இருக்கிறது. மக்களின் நல்வாழ்விற்கும், மேற்கொள்ளப் போகும் பணிகளுக்கும் இறைவன் அருள் புரியட்டும்'.

இந்தப் பிரகடனத்தை நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் இந்திய மக்கள், இந்து, முஸ்லிம், பார்சிகள் ஆகிய அனைவரும் வரவேற்றனர்; என்று மேலெசன் கூறுகிறார். இப்பிரகடனத்தின் உண்மையை அயோத்திப் பேகம் ஹஸ்ரத் மஹால் சந்தேகித்தாள். தன் மகனின் சார்பில் அவள் ஒரு எதிர்ப் பிரகடனம் வெளியிட்டாள். ஆங்கிலேயர்கள் இது

வரை கொடுத்த வாக்குறுதிகள் பல முறை மீறப்பட்டு விட்டன. இனியும் இதை நம்பினால், என்ன கதி நேரும்? என்றுங் கூற முடியாது. இந் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய ஆங்கிலேயர்கள், பிரகடனம் மூலம் அரசர்களையும், மக்களையும் ஏமாற்றுகிறார்கள்' என்று அவ்வறிக்கைக் கூறியது. அரசியின் பிரகடனத்தில் தனக்கும், தன்னைப் போன்ற தலைவர்களுக்கும் மன்னிப்பில்லை; மரணம் நிச்சயம். என்று அந்த பேகத்திற்குத் தெரிந்து விட்டது! அதனால்தான் இப் பதில் பிரகடனம் வெளியிட நேர்ந்தது.

# 42. இறுதி வேட்டை!

[கேம்பலின் திட்டம்—பேனி மாதவ் சிங்கின் எதிர்ப்பு—நேப்பாளத் 'தேரை'யில் புரட்சித் தலைவர்கள்—நானு தப்பித்தல்—பல புரட்சித் தலைவர்கள் சரணடைதல்—முகம்மது ஹசனின் கடிதம்—நேப்பாளம் துருப்புக்களை ஏவுதல்—தலைவர்கள் பலரின் முடிவு—பாலா சாகேப்பின் விண்ணப்பம்—நானுவின் இறுதிக் குரல்—பேகம் ஹஸரத் மஹால்—கான் பகதூர் கான்.]

பிரகடனத்திற்கு முன்பே, அயோத்தியில் சர் ஹோப் கிராண்ட் சுல்தான்பூரைக் கைப்பற்றினுர். பிரகடனம் அறிவிக்கப்பட்ட நேரத்தில், தளபதி சர் காலின் கேம்பல் இறுதிப் படை யெடுப்பில் கவனத்தைச் செலுத்தினுர். மறு நாள் (நவம்பர் 2) காலின் கேம்பல் அலகாபாத்திலிருந்து அயோத்திக்குப் புறப்பட்டார். அப்பொழுது அவர் கிளைட் பிரபுவாகப் பதவி உயர்த்தப்பட்டிருந்தார் (Lord Glyde of Clydesdale). அவருடைய அப்போதைய திட்டம் புரட்சி வீரர்களை நெருக்கி, நேப்பாள எல்லையில் முடக்கி அழிப்பதே ஆகும். அழிக்க முடியா விட்டால், அவர்களை அக் கொடுங் கானகத்தில் கொள்ளை நோய்களுக்கும், பட்டினிக்கும், விலங்குகளுக்கும் இரையாக்கி அழிய விட்டு விடல் வேண்டும். நேப்பாள கூர்க்காக்காள் புரட்சியை அடக்க அயோத்தியில் போர் புரிந்தவர்கள் என்பதை நன்கு அறிந்திருந்தும், அந் நாட்டில் தங்களுக்கு உதவியோ, புகலிடமோ கிடைக்கும் என்று புரட்சித் தலைவர்கள் நம்பினுர்கள். தப்பிச் செல்ல நேப்பாளம் ஒன்றுதான் அருகிலுள்ளது. எனவே, அங்கே செல்லுவதோ, உதவி கேட்பதோ, எதிர் பார்க்க வேண்டிய ஒன்றுதான். இந்து, முஸ்லிம்கள் பரங்கியரிடம் பட்ட, படுகின்ற துன்பங்களை எடுத்துக் கூறி, நாட்டையும் மதத்தையுங் காக்க நேப்பாளம் உதவிக் கரம் நீட்ட வேண்டு மென்று புரட்சித் தலைவர்கள் கடிதம் அனுப்பினுர்கள். நேப்பாள மன்னர் ஜங் பக

தூர், வீரரென்றாலும் முட்டாள் அல்ல. வெள்ளையரின் வலி மையைக் கண்ணால் கண்ட பின்னும், அவர்களை எதிர்க்க முன் வருவாரா? அப்படி இருந்தும் புரட்சித் தலைவர்கள் நேப் பாள உதவியில் நம்பிக்கை இழக்க வில்லை.

தளபதியின் திட்டப்படி மேற்கே ஃபதேகர், ஷாஜகான் பூரிலிருந்து இருபடைகள் முன்னேற வேண்டும்; கிழக்கே ஆஸாம் கரிலிருந்து மற்றொரு படை முன்னேற வேண்டும்; தெற்கே அலகாபாத்திலிருந்து தாமே முன்னேற வேண்டும்; வழியில், இன்னும் எதிர்ப்பிலீடுபட்டிருக்கும் இராஜபுத்திரத் தலைவர்களை ஒவ்வொருவராக அடக்கிச் செல்லல் வேண்டும். அதன்படி, அலகாபாத்திலிருந்து நேர் வடக்கே படைகள் சென்றன. வெதராரும், ஹோப் கிராண்ட்டும், கன்பூரியா என்ற இராஜபுத்திர இனத்தின் தலைமை இடமான ராம்பூர் காசியாவை சில நாட்களில் கைப்பற்றினார்கள். தளபதி கேம் பல் வடக்கே அமோதிக்குச் சென்றார். அவ் வூர் சிற்றரசன் லால் மாதவ்சிங், புரட்சியின் தொடக்கத்தில் வெள்ளை அகதி களுக்குப் புகலிடம் அளித்தவன். அதன் பின்பு அவனும் புரட் சியில் தீவிரப் பங்கு கொண்டான். தளபதி கேம்பல் அவ னைத் தளவாடங்களுடனும், வீரர்களுடனும் சரணடையும் படிக் கேட்டுக் கொண்டார். ஆனால், அவனுடைய கோட் டைக்கு வந்திருந்த புரட்சி வீரர்கள் அதை எதிர்த்தனர். இலால் பாதவ் சிங் வேறு வழியின்றி, இரகசியமாகக் கோட் டையை விட்டு வெளியேறித் தலைமைத் தளபதி கேம்பலின் முகாமிற்கே வந்தான். புரட்சி வீரர்கள் பலரும் அவனை மறு நாள் பின் பற்றினார்கள். எதிர்ப்பும் இழப்பும் இன்றி அமோதி வீழ்ந்து விட்டது!

அடுத்த இலக்கு சங்கர்பூர். தீரமிக்க பய்ஸ்வாரா (Baiswara) அது இராஜபுத்திரர்களின் இருப்பிடம். அதன் தலைவர் பேனி மாதவ்; ஆங்கிலத் துருப்புக்களுக்குப் பல முறை தப் பித்தவர். தளபதியின் வேண்டுகோளுக் கிணங்கிச் சரண டைய மறுத்தார். வெள்ளைப் படைகளால் அவருடைய இருப் பிடத்தைக் கண்டு பிடிக்கக் கூட முடிய வில்லை. ஒரே நேரத் தில் அவர் தங்கி யிருக்குஞ் செய்திகள் பல இடங்களிலிருந் தும் வந்தன. நவம்பர் 24-ல் வெள்ளையர் படை அவரைத் தோற்கடித்தது ஆனால், அவர் சிக்காமல் தப்பினார். வேட்டை நாய்கள் போல வெள்ளையர்கள் துரத்தினார்கள். அவர் கோமதியைக் கடந்தார்; கோக்ராவைக் கடந்தார்! வீரர்கள் பலரை இழந்தும் அவர் சரணடைய வில்லை. சுமார்

5,000 வீரர்களுடன் பாரெல்க் நோக்கிச் சென்றார். அவர் தாய்நாட்டிற்கு மீண்டும் வரவில்லை; யென்றாலும், வெள்ளையர்களால் அவரைப் பிடிக்கவே முடிய வில்லை. அவருடைய நாட்டில் இன்றும் ஹோலிப் பண்டிகையின் போது பேனிமாதவ்வின் துணிச்சலும் வீரமும் பாடப்படுகின்றது!

புரட்சித் தலைவர்களைப் பிடிக்க முடியவில்லை; யென்றாலும், அவர்களை வடக்கே பின் வாங்கும்படி தளபதி செய்து விட்டார். பேனிமாதவ், (கோண்டா) தேவிபக்ஷ், முகமது ஹசன், மேந்தி, யுசன், அமர்சிங், கான்பகதூர் கான், பேகம் ஹஸரத் மஹால், மம்முகான், நானாசாஹெப், பாலாசாஹெப், ஜவாலா பிரசாத் (நானாசாகிப்பின் தளபதி) ஆகியோர், துரத்தப்பட்டு, நேப்பாள எல்லைக்குள் நெருக்கப்பட்டு விட்டனர். இளவரசன் பிரோஷ்ஷா இதில் சிக்க வில்லை. 2,000 வீரர்களுடன் கங்கையைக் கடந்து, யமுனை நதிக்கரையில் இட்டாவாவை நெருங்கி, அதன் பிறகு இராவ் சாகேப், தாத்யா ஆகியோருடன் அவர் சேர்ந்து கொண்டார். பின் அவர்களை விட்டும் பிரிந்தார்.

புரட்சித் தலைவர்கள் நேப்பாள எல்லையில் துளசிப்பூர் அருகே இருந்தனர். தன்னந்தனியாகத்தான் அத்திசைக்கு அவர்கள் சென்றனர். ஒருவருக் கொருவர் அடுத்த நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகள் பரிமாறிக் கொண்டனர்.

தளபதி கேம்பல் நவம்பர் 17-ஆம் நாள் பாரெய்க்கை அடைந்தார். அவர் நம்பியபடி நானாவும், பேகம் ஹஸரத் மஹாலும் அங்கு இல்லை. தப்பி விட்டனர்! அங்கேயே 5 நாட்கள் தளபதி தங்கினார். இதற்குள் புரட்சித் தலைவர்கள் சிலர் சரணடைவதற்கு வாய்ப்புகள் இருக்கிறதென்று நம்பினர். சரணடைந்தால் மன்னிப்புக் கிடைக்கலாம் என்ற சூழ்நிலையை வெள்ளை அதிகாரிகள் உருவாக்கினார்கள். இனியும் எதிர்ப்புகளை அனுமதித்துப் பொருட் செலவு, காலம் ஆகியவற்றை வீணாக்க அதிகாரிகள் விரும்ப வில்லை. பேகம் ஹஸரத் மஹாலுக்காக, அயோத்தி அரச குலத்திற்காகப் போரிட்டதால், பேனி மாதவ் தம் தலைவி சரணடைந்தால்தான், அவனுஞ் சரணடைவான். நானா சாஹெப்பின் நிபந்தனையோ வேறுவிதமாக இருந்தது. அரசி விக்டோரியாவோ, அரசப் பிரதிநிதியோ அவனுடைய உயிருக்கு உத்தரவாதம் அளித்து, மூன்றாவது நாடு ஒன்று அதற்குச் சாட்சியாக இருந்தால்தான், சரணடைய சம்மதிப்பான்!

வெள்ளைப் படைகள் தேடுதலை நிறுத்த வில்லை. பலராம்பூர் மன்னரின் உதவி அவர்களுக்குக் கிடைத்தது. அடர்ந்த காட்டுக்குள்ளிருந்த நான்பரா கோட்டையிலிருந்து கொண்டு, பேனி மாதவ் எதிர்ப்புக் கொடுத்தான். டிசம்பர் 29—ஆம் நாள் பாரெய்க்கிற்கு நேர் வடக்கு ரப்தி நதிக்கரையிலிருந்த பங்கி (Banki) என்ற இடத்தில் நானாவும் பேனிமாதவ்வுந் தங்கி இருந்தனர். தளபதி கேம்பல் நடு இரவில் தம் படைகளை ஏவினர். புரட்சி வீரர்கள் ஏமாறவில்லை. போரிட்டுக் கொண்டே பின் வாங்கினர். நானா, நதியைக் கடந்து சென்று விட்டான்.

பங்கிப் போரில் புரட்சிப் படையின் தோல்வி, பல விளைவுகளுக்கு வித்திட்டது. அதிலே நம்பிக்கையிழந்த பலர், நேப்பாளத்திற்குள் நுழைந்து விட்டனர். எஞ்சியப் பல புரட்சித் தலைவர்கள், ஆங்கிலத் துருப்புகளிடம் சரணடைந்தார்கள். 1859 ஜனவரி 7—ஆம் நாள் ஃபருக்காபாத் நவாப் டஃபாசல் ஹீசேய்ன் (Taffazzal Hussain) மேஜர் பரோவிடஞ் சரணடைந்தான். ஃபருக்காபாத்தில் வெள்ளையர் பலர் கொலையுண்டதற்குக் காரணமாக இருந்தான் என்பதற்காக டஃபச்சல் ஹீசெய்னுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், சரணடையும் முன்பே. மேஜர் பரோ வாக்குறுதி அளித்திருந்ததால், மரண தண்டனை மாற்றப்பட்டு அரேபியாவிற்கு அவர் நாடு கடத்தப் பட்டார்.) மொஹீந்தி ஹீசேய்னும் சில தலைவர்களும் அன்றே சரணடைந்தனர். (அயோத்தி அரசரின் ஊழியனாக இருந்ததால், அரச குலத்தின் சார்பில் போரிட்டப் பின்பும் பலனில்லை; என்று தெரிந்ததும், அவன் சரணடைந்து விட்டான்: தளபதியின் கருணையின் பேரில் மாதம் 200 ரூபாய் உதவிப் பணம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அவனுடைய சொந்த ஃபைசாபாத் வட்டாரத்திற்குச் செல்ல மட்டும் அனுமதிக்கப்பட வில்லை.)

மெய்ன்புரி சிற்றரசன் தேஜ்சிங் 1858 ஜூன் மாதத்திலேயே சரணடைந்து விட்டான். அக்டோபர் 57-ல் தோற்கடிக்கப்பட்ட அப்புரட்சித் தலைவரின் நாடு, அவனுடைய மாமன் ராம்பவானி சிங்கிற்கு அளிக்கப்பட்டது. தேஜ்சிங் மீண்டும் தன் பகுதியைக் கைப்பற்றினான். அவனுடைய படை பலஞ் சிறுத்ததும், வேறொரு தலைவனின் உதவியை நாடினான். அவருடைய அறிவுரைப்படி தேஜ்சிங் சரணடைந்தான். ஆனால், தம் உயிருக்கோ, மானத்திற்கோ எவ்வித ஊறும் ஏற்படக்கூடாது, என்ற நிபந்தனையை அவன் விதித்திருந்ததால், அதன்படி மாதம் 250 ரூபாய் உதவிப்பணம் அளிக்

கப்பட்டுக் காசியில் வைக்கப்பட்டான். அவனுடைய நிலங்கள் பவானி சிங்கிற்குத் தரப்பட்டன. புரட்சித் தலைவருள் ஒருவன் சையத் முகமது ஹசன்கான். அயோத்தி மன்னனின் நாஸீம் அல்லது ஆளுநராக கோரக்பூரை (அயோத்தி இணைப்பிற்கு முன்) ஆண்டு வந்தான். புரட்சிக்குப் பின்னே அவனுந் தன் மன்னன் சார்பில் பரங்கியை எதிர்த்தான். அப்பொழுது வெள்ளையரின் ஆட்சியில் அப்பகுதியின் துணை மாஜிஸ்டிரேட்டாக இருந்த ஷேக் கைருதின், முகமது ஹஸன்கானுக்கு '58 நவம்பரில் ஒரு கடிதம் எழுதினான். அதில் புரட்சியைக் கைவிட்டு உடனடியாக சரணடைந்தால் மன்னிப்புக் கிடைக்கும் என்றும், இங்கிலாந்தின் வலிமை பெரிதென்றும் குறிப்பிட்டதுடன், பிற தலைவர்களையுஞ் சரணடையத் தூண்டும்படிக் கேட்டிருந்தான். இதற்கு முகம்மது ஹஸன் கான் அனுப்பிய பதில், அயோத்தியின் நிலையை, புரட்சியின் துடிப்பை, தன் மையை, குறிக்கோளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. முகம்மது ஹஸன் புரட்சியின் தொடக்கத்தில் வெள்ளையருக்கு அபயம் அளித்து, அவர்களைப் பாதுகாப்புடன் கோரக்பூரில் சேர்த்திருந்திருக்கிறான். இருந்தும் அரசியின் பிரகடனத்தைச் சாதகமாக்கிக் கொள்ள அவன் விரும்பவில்லை. தன் அரசனே எதிர்ப்பைத் தொடரும் போது, தான் மட்டும் பணிய வேண்டுமா? என்று மட்டும் அவன் எண்ணவில்லை. அதற்கு மேலும் அவன் வாக்குவாதஞ் சென்றது. அவனுடைய நீண்ட கடிதம் நேர்மையையும், துணிவையும், நம்பிக்கையையும் சோகத்துடன் கூறுகின்றது. நாமும் அதைக் கேட்போம். 'ஆங்கில அதிகாரிகள் ஒன்றுமறியாத ஏழைகளை, குருடர்களை, தாய்க்குலத்தை, பச்சிளங் குழந்தைகளைக் கொன்று உடமைகளைப் பறித்து விட்டனர். நான் வெள்ளை இனத்தவர் எவரையுங் கொல்லவில்லை. நான் பிடிபட்டாலும் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில்? பிரகடனப்படி நான் குற்றவாளியல்ல. நான் போரிட்டு இறந்தாலோ, பிடிபட்டுக் கொல்லப் பட்டாலோ அஞ்சமாட்டேன். என் மதத்திற்காக, என் உரிமைக்காக, என் அரசனுக்காக நான் இறந்தால் சொர்க்கத்திற்குச் செல்லுவேன்! வலியவனை வீழ்த்துவதும், எளியவனை ஏற்றுவதும் அல்லாவின் திருச் செயல். இதில் நாம் முடிவு செய்வதற்கு எதுவுமில்லை. வெள்ளையர்கள் வாக்குறுதிகளை மீறப் பழகி விட்டார்கள். அயோத்தி என்ன தீங்கிழைத்தது? அதை ஏன் அபகரிக்க வேண்டும்? வெள்ளை ஆட்சியுடன் கைகோர்த்துச் சென்றதற்காக அல்லவா, அதை இழக்க நேரிட்டது. அயோத்தி இணைக்கப்படவில்லை என்றால், இப்புரட்சித்

தோன்றி யிருக்காது. இந்துஸ்தான் மன்னர்களும், மக்களும் இராணுவப் புரட்சி அளித்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அயோத்தியின் இணைப்பு நடைபெறவில்லை யென்றால், இரத்தக் களறி ஏற்பட்டிருக்காது. ஏனெனில்? தலைவர்கள் கலகக்காரர்களை அடக்கியிருப்பார்கள். (கவனிக்க!) அயோத்தியை உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும். அயோத்தி அரச ஊழியர்களான நாங்கள், எம் நாட்டில் எதிரிகள் வேரூன்றுவதைத் தடுத்தால்தான் இகபர லோகங்களில் மேன்மை பெற முடியும். எதிர்க்கத் தவறினால், நாங்கள் துரோகிகள் ஆவோம். இரு உலகங்களிலும் எங்கள் முகங்கள் இருண்டு விடும்!'

உதவி மாஜிஸ்டிரேட் கெய்ருதீன் வன்மையாக இக்குற்றச் சாட்டுக்களை மறுத்து பதிலெழுதினார். இனி 40 நாட்கள்தான் எஞ்சியுள்ளன. அதற்குள் சரணடையும்படி முகம்மது ஹசனைக் கேட்டார். அவன் அசைய வில்லை. எல்லாம் வல்ல இறைவனின் பாதுகாப்பு இருந்தால், எந்த எதிரியும் என்னை எதுவுஞ் செய்ய முடியாது. அது இல்லை என்றால், எந்த வலிமையும் என்னைக் காத்திடவும் இயலாது.' ஹஸன் ஓரே வாக்கில் தன் நம்பிக்கையை வெளிப்படுத்தி விட்டார்! (பல நாட்களுக்குப் பின்பு அவருஞ் சரணடைந்தார். வெள்ளை அரசு மாதம் 200 ரூபாய் உதவிப்பணம் அளித்து வேறு பகுதியில் அவரை அமர்த்தியது, சில அதிகாரிகள் அவருக்கு உரிய தண்டனையை வாங்கித் தர முயற்சித்தனர்.)

புரட்சித் தலைவர்களுடன் நேப்பாள நாட்டுக்குள் சில ஆயிரம் வீரர்களும் சென்றிருந்தனர். நேப்பாள ஜங்பகதூரின் உதவி கிடைக்குமென்று அவர்கள் அதுபோதும் நம்பியதாகத் தெரிகிறது. அயோத்தி பேகத்தின் வேண்டுகோளுக்கு ஜங் பகதூர் திட்டவட்டமாகப் பதிலளித்தார். (ஜனவரி 1859). 'ஆங்கில அரசிற்கும், நேப்பாள அரசிற்கும் நெருங்கிய உறவுண்டு. இரு நாடுகளும் உடன்படிக்கைகளுக்குக் கட்டுப்பட்டவை. ஒருவர் எதிரியை, மற்றவர் பிடித்துக் கொடுக்க வேண்டியது; அதில் ஒரு நிபந்தனை. என் நாட்டு எல்லைக்குள் நீங்கள் இருப்பதோ, உதவியை எதிர்பார்ப்பதோ அபாயத்தில் தான் முடியும். கூர்க்கா வீரர்கள் உங்களை எங்குக் கண்டாலும் எதிர்ப்பார்கள். உங்களுக்கு எவ்விதத்திலும் நாங்கள் உதவி செய்யத் தயாரா யில்லை. நம்பிக்கை யின்றி, நன்றி மறந்து, ஆங்கிலேயரின் உப்பைத் தின்று விட்டு அவர்களையே எதிர்க்கும் உங்களை, நாங்கள் அனுமதிக்கவே முடியாது.' இவ்விதம் முடிவான பதிலளித்தது.

நேப்பாள அரசு. வெள்ளை இனத்திற்கு எவ்வளவு மரியாதை! எவ்வளவு பக்தி. நேப்பாளம் அருமையாக தர்மம் பேசுகிறது; புரட்சித் தலைவர்கள் பணங் கொடுத்தோ, விலையுயர்ந்த அணி கலன்களை அளித்தோ நேப்பாளத்தின் கருணையைப் பெற முயற்சித்தனர். அதற்கும் பலன் கிட்ட வில்லை. அதற்கு முற்றிலும் மாருக முடிந்தால் சமாதானமாக, தேவைப்பட்டால் பலவந்தமாகப் புரட்சித் தலைவர்களைச் சரணடையும் படிச் செய்ய வேண்டும்; என்று நேப்பாள அரசு தீர்மானித்த தாகத் தோன்றுகின்றது.

அவ்வரசியல் அகதிகள் நேப்பாளத்தில் அங்குமிங்கும் அலைந்தனர். புரட்சி வீரர்கள் தங்கள் துப்பாக்கிகளை விற்றுங் கூட உணவு பெற்றனர். கூர்க்கா குடியானவர்கள் அதிக விலைக்கு அரிசி கொடுத்தனர். காய்ச்சலும், அலைச்சலும், வயிற்றுப் போக்கும் பலரைப் பலி கொண்டன. நேப்பாள அரசு, தன் வீரர்களை யனுப்பி விரட்டி விரட்டிப் புரட்சி வீரர்களுக்குத் தொல்லை கொடுத்தது. டாங், பள்ளத்தாக்கில் கூர்க்காப் படையை எதிர்த்துப் போரிட்டுத் தன் வீரர்களுடன் மரணமடைந்தான். அம் மாவீரன் பேனி மாதவ்! அவனுடைய இளவல் ஜோக்ராஜ்சிங்கும் கொல்லப்பட்டான். (அவனுடைய மனைவியும், மகனும். மற்றொரு தம்பியும், நேப்பாளத்தில் டிசம்பர் 1859 வரை இருந்தனர். அவர்களை மன்னித்து மாதம் 500 ரூபாய் வருவாய் உள்ள நிலமளித்து, மகனைச் சீதாப்பூரில் கற்பதற்கு வெள்ளை அரசு ஏற்பாடு செய்தது.) நாஞவின் நண்பன் அசிமுல்லாகான் அக்டோபர் 1859ல் இறந்தார். பண்டியின் சீமான் ஹரிதத்சிங்கும் இறந்தார். கோண்டா சிற்றரசர் தேவி பக்ஷ்ம், பிஸ்வாத் தலைவர் குலாப் சிங்கும் எந்த சூழ் நிலையில் இறந்தார்கள்? என்றே தெரியவில்லை. நவாப் மம்முகான், பெரெய்லித் தலைவன், கான் பகதூர் கான், நாஞவின் தளபதி ஜ்வலா பிரசாத், மற்றும் பல தலைவர்கள் பிடிபட்டு ஆங்கிலேயரின் வசம் ஒப்புவிக்கப்பட்டனர். நாஞவின் சகோதரன் பாலா சாகேப் மலேரியா நோயால் இறந்தான்.

1859, ஏப்ரலிருந்தே நாஞவும், பாலாவும் ஆங்கில அதிகாரிகளுடன் கடிதத் தொடர்பு கொண்டனர். போக்கிடமின்றி. புகலிடம் நாடுவதற்கு அவர்கள் முயன்றும் பலனளிக்கவில்லை. சில நிபந்தனைகளுடன் தான் சரணடைய விரும்பினர்கள். பாலா சாகேப்பின் விண்ணப்பம், அதிர்ச்சித் தருவதாக இருந்தது. தன் சகோதரன் நாஞவே கலகத்திற்குக் காரணமென்று

இவன் பழி போட்டான்! 'கலகக்காரர்கள் என்னையும் விட வில்லை. என் சகோதரன் சொன்னபடி நான் கேட்க நேரிட் டது. நானும் ஒரு ஆங்கிலச் சிறுமியைக் காப்பாற்றி என் குடும் பத்துடன் மறைத்து வைத்துப் பாதுகாப்புடன் ஒப்படைத் திருக்கிறேன். நீங்கள் என்னை எதுவுஞ் செய்து கொள்ளலாம்.' என்று தன் விண்ணப்பத்தில் சுமையை வேறொருவன் தலையில் ஏற்றி விட்டுத் தன் நன்னடத்தைக்குச் சான்றுங் காட்டிக் கடிதம் எழுதி யிருந்தான். வெட்கக்கேடான செய்தி இது!

நானா இங்கிலாந்து அரசிக்கு ஒரு இஷ்தார் (அரச கடிதம்) எழுதினான். நானாவின் தலைக்கு வெள்ளையர்கள் ஒரு லட்சம் ரூபாய் விலை வைத்தனர். வெள்ளையர்கள் எவரையும் நான் கொல்ல வில்லை என்று வாதிட்டதுடன், கருணையை அவன் எதிர்பார்க்கவில்லை என்பதையும் காட்டிக் கொண்டான். எவர் செய்த தவற்றையும் மன்னித்தீர். நேப்பாள மன்னர் உங் கள் நண்பர். என்னைத் தனியாக நிறுத்தி அனைவரையும் உங்கள் பக்கஞ் சேர்த்துக் கொண்டீர்கள். என்னுடன் இருக்கும் வீரர் கள் என்ன சாதிக்க முடியும் என்பதை இனி நீங்கள் பார்ப்பீர் கள். நாம் சந்திப்போம்! முழங்கால் அளவிற்கு (உங்கள்) குருதி ஆறாக ஓடச் செய்வேன். நான் சாகத் துணிந்து தான் இருக்கிறேன்.' என்பது அக் கடிதம். இது இயலாத நிலையில் ஒலிக்குங் குரலா? இன்னும் வளையாத நெஞ்சத்தின் எதிர்ப்பா? நானாவைப் புரிந்து கொள்ளவே முடிய வில்லை.

இதற்குப் பதிலளித்த மேஜர் ரிச்சர்டுசன் 'அரசியின் பிர கடனம் யாவருக்கும் பொதுவானது. நீர் குற்ற மிழைக்க வில்லை யென்றால், பயமின்றிச் சரணடையலாம். பிற தலைவர்கள் என்ன நிபந்தனையில் இருக்கின்றனரோ, அதுவே உமக்கும் பொருந்தும்,' என்று குறிப்பிட்டார். இவ்வளவு தாழ்ந்து மேன்மையுடன் பதில் எழுதக் கூடாது, என்று அவ்வதிகாரியை மேலிடங் கண்டித்தது. நானாவோ அவ் அதிகாரிகள் எதிர் பார்த்தபடி சரணடையச் சம்மதிக்க வில்லை. 'இங்கிலாந்து அரசி தன் முத்திரையுடன் எழுதிய கடிதத்தைப் பிரெஞ்சு தளபதி ஒருவர் கொண்டு வந்தால், அதை நம்பி நான் சரணடை யத் தயார்' என்று கூறிவிட்டான். அவனுடைய ஆத்திரம் இன் னும் அடங்க வில்லை! 'இந்துஸ்தானத்தில் கொடுமைகள் புரிந்த உங்களுடன் ஏன் நான் சேர வேண்டும்? என்றோ ஒரு நாள் வாழ்வு முடியத்தான் போகிறது. பின் நான் ஏன் அவமானப் பட்டுச் சாகவேண்டும்? என்னைக் கொன்றாலும், தூக்கிலிட் டாலும், சிறையிலடைத் தாலும், என் வாழ்வு முடியும் வரை

உங்களுக்கும், எனக்கும் போர் தொடரும். நான் என்ன செய்தாலும்? அதை வாளால்தான் செய்வேன்.' இவ்விதம் மீண்டும் பதிலளித்தான். நானு ஒரு புதிர் தானே?...கான்பூர் கிளர்ச்சியில் அவன் பின்னணியில்தான் இருந்தான். அங்கிருந்து, பித்தூர் சென்றான். பின் ஃபருக்கா பாத்திற்கும், அங்கிருந்து பெரெய்லிக்குச் சென்றான். பின்பு அங்கிருந்து மீண்டு பெரெய்க்கு வந்தான். இப்பொழுது நேப்பாள தேரெய் காடுகளில் அலைகின்றான். நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவன் குரல் ஒலிக்கின்றது! இக்கால தாமதம் ஏன்? இப்புதுக் குரல், போர்க் குரல் இறுதி நாட்களில் மட்டும் ஏன் ஒலிக்கின்றது? நானு சாஹேப்பைப் பற்றி அதன் பிறகு எச்செய்தியும் இல்லை. காய்ச்சலில் இறந்தானா? அல்லது கானகத்தில் கிழவனாகி மரித்தானா? விலங்குகளுக்கு இரையானானா? தெரியவில்லை. (எஞ்சிய பேஷ்வா குலப் பெண்கள்—2 வது பாஜிராவின் இரு விதவைகள், நானுவின் விதவை மனைவி, பாலா சாஹேப்பின் விதவை மனைவி ஆகியோர் – நேப்பாளத்தில் வாழ அனுமதிக்கப்பட்டனர். பாஜிராவின் கடைசி மகள் ஒருத்தி மட்டுஞ் சில காலத்திற்குப் பின்பு தன் கணவனுடன் குவாலியரில் வாழ அனுமதிக்கப் பட்டாள்.

பேகம் ஹஸரத் மஹால் தன் மகளுடனும் சில பணியாட்களுடனும் நேப்பாளத்தில் வாழ விரும்பினாள். அவளுக்கும் அவளுடைய மகனுக்கும் முறையான ஒய்வுத் தொகையும், உரிய மரியாதைகளுந் தருவதாக ஆங்கிலேயர் உறுதி மொழி கூறினர். அதை ஏற்பதின் மூலம் தன் நாடும், வாரிசு உரிமையும் தன் மகனுக்கு இல்லையென்பது சட்டப்பூர்வமாகி விடுமென்று கருதி, இந்தியாவிற்கு வர அவள் மறுத்து விட்டாள், தன் கணவனை விட வீரமும், நெஞ்சுரமும் பெற்றவள் அவள். அவளின் ஒவ்வொரு சொல்லுக்கும் உயிர் கொடுக்க அயோத்தி முன் வந்தது! அயோத்தியின் புரட்சி நெருப்புக்கு அப்பெண் மணியே நெய் வார்த்தவள்!

பெரெய்லித் தலைவன் கான் பகதூர் கான், தான் சரணடைந்ததே குற்றமற்றவன் என்பதை நிரூபிக்குஞ் செயல்; என்று வாதிட்டுப் பார்த்தான். வழக்கு தோற்றது......விசாரணைக்குப் பின்னே அவன் தூக்கிலிடப் பட்டான். மொகலாயப் பேரரசரும், ஜான்சி இராணியும், அயோத்தி பேகமும் தங்கள் தங்கள் நாட்டுக்காக, உரிமைக்காகப் போரிட்டனர். ஆனால், பகதூர் கான் ஆங்கில ஆட்சிப் பகுதியின் குடிமகன். அவன் அரசை எதிர்த்தது குற்றமென்று கூறி, ஆங்கில அரசு தன் கறை

யைச் சட்டத்தால் துடைத்துக் கொண்டது! கான் பகதூரின் நிதியமைச்சர் சோபாராம் ஆயுள் தண்டனை பெற்றார். ஜ்வலா பிரசாத் 1860 மே 3-ஆம் நாள் கான்பூரில் அதே கங்கைக் கரையில், அதே 'சாதி சௌர் கட்டிடத்தில்' தூக்கிலிடப்பட்டான்! நேப்பாள அரசு 2,000 புரட்சி வீரர்களை ஆங்கிலேயரிடம் ஒப்புவித்தது. எஞ்சித் தப்பிய வீரர்கள் கிராமங்களுக்குச் சென்றனர். தங்களின் அனுபவங்களைக் கதை கதையாகப் பேசினர்.

---

# 43. தாத்யாவை விரட்டி...

[குவாலியருக் கருகில் புரட்சித் தலைவர்கள் தோல்வி—தாத்யா, இராவ் சாகிப் தப்பித்தல்—டோங்க் வீரர்கள் இணைதல்—பில்பாராவில் தோல்வி—பானுஸ் நதிக் கரையில் ராபர்ட்டிடந் தோல்வி—ஜால்ரா பதான் தாத்யாவிற்குப் பணிதல்—மான்க் ரௌலியில் தோல்வி—நர்மதையைக் கடத்தல்—இதன் விபரீத விளைவு—நர்மதையை மீண்டுங் கடத்தல்—சோட்டா உதயப்பூரில் தோல்வி—கேசரி சிங்கின் உதவி—மான்சிங் இணைதல்—பிரிதல்—ஃபேரோஸ்ஷா இணைதல்—வெள்ளையர் துருப்புகள் சுற்றி வளைத்தல்—தியோசாவில் தோல்வி—தலைவர்கள் பிரிந்து தப்பித்தல்—மான் சிங்கின் பாதுகாப்பில் தாத்யா—ராவ் சாஹேப்பின் முடிவு—ஃபேரோஸ் ஷாவின் முடிவு—மான்சிங்கின் துரோகம்—தாத்யா தூக்கிலிடப் படல்.]

குவாலியர் சர்ஹியூ, ரோஸால் கைப்பற்ற பட்டதை முன்பு கண்டோம். தாத்யா, ராவ்சாஹேப், பண்டாநவாப் ஆகியோர் குவாலியரிலிருந்து ஜாவ்ரா அலிப்பூருக்குச் சென்றார்கள். அங்கே 1858 ஜூன் 22ஆம் நாள் புரட்சிப்படை தோற்கடிக்கப்பட்டது. அன்று தொடங்கி பல மாதங்களுக்குத் தாத்யா எங்கெங்கோ அலைந்தான். வெள்ளைத் துருப்புகள் அவனை விரட்டுவதும், அவன் துணிகரமாய்த் தப்புவதும் அற்புத காட்சிகள். அதைக்காண இராஜபுதனத்திற்கும், மாளவத்திற்கும் மீண்டுஞ் செல்வோம்.

ஜாவ்ரா அலிப்பூரிலிருந்து தாத்யாவும், நண்பர்களும் புரட்சிப் படையுடன் சாம்பல் நதியைக் கடந்து, வடமேற்கே ஜெப்பூருக்குச் செல்ல முனைந்தனர். தங்களின் வரவை அறிவித்துத் தங்களுடன் சேருமாறு தாத்யா ஜெய்ப்பூருக்கு அனுப்பியச் செய்தி, நசிராபாத்திலிருந்த ஜெனரல் ராபர்ட்ஸுக்குத் தெரிந்தது. எனவே, தாத்யாவிற்கு முன்னரே இராபர்ட்ஸ் ஜெய்ப்பூரை அடைந்து விட்டார். இதனால், தாத்யா தெற்கே திரும்பி டோங்கிற்கு வந்தான். டோங்க்

நவாப் வசீர் முகமதுகான் தாத்யாவின் தோல்விப் படலத்தில் இணைய விரும்ப வில்லை. நவாப், கோட்டைக் குள்ளிருந்தான். வெளியே காவலுக்கு வைக்கப்பட்டிருந்த வீரர்கள் தாத்யா வுடன் சேர்ந்து கொண்டனர்! அவர்களையுந் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, தாத்யா டோங்க்கை விட்டு வெளியேறி னான். அவனை இரு வெள்ளைத் துருப்புக்கள் விரட்டின. ஒன்று கர்னல் ஹோம்ஸின் படை. மற்றொன்று அதற்குப் பின்னால் வரும் ஜெனரல் ராபர்ட்டின் படை. தாத்யா ஓடுவதையும் ஆங்கிலப் படைகள் துரத்துவதையுந் தடை செய்ய மழை காலந் தொடங்கி விட்டது. பானஸ் நதிக்குஞ், சாம்பால் நதிக்கும் இடையில், வழியிலிருந்த பண்டியின் மஹாராவ் ராம் சிங் விரட்டப்படும் தாத்யாவிற்கு உதவுந் துணிவுபெற வில்லை. எனவே, தெற்கே சென்றான். அப்பொழுது தாத்யா மேவார் நாட்டில் நசிராபாத்—நீமச் சாலையின் நடுவில் பில்வாராவி லிருந்தான்.

1858ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் நாள், நீமக்கை நோக்கிச் சென்ற இராபர்ட்ஸ் பில்வாராவில் புரட்சிப் படைகளைத் தோற்கடித்தார். ஆனால், தாத்யா தன் படையுடன் தப்பித் துச் சென்றான். அவன் சென்ற இடம் பில்வாராவிலிருந்து தென் மேற்கே ஆரவல்லி மலையை நோக்கி...கான்கிரௌலி என்ற இடத்திற்குத் தாத்யா நதிக்கரையில் முகாமிட்டிருந்ததை இராபர்ட்ஸ் அறிந்தார். (தாத்யாவின் நடமாட்டத்தை அறிவ தற்கு அவர் கையாண்ட முறை இது: பலூச் குதிரை வீரர் களுடன், இராஜபுத்திர குதிரை வீரர்கள் சிலரையுஞ் செய்தி யறிய அனுப்புவார். இவர்கள், சிறு சிறு குழுக்களாக வழி நெடுக நின்று செய்தித் தொடர்பை முழுமையாக்குவார்கள். முன்னால் செல்லும் வீரர்கள், கிராமவாசிகளிடங் தாத்யாவின் நடமாட்டத்தைக் கேட்டு அறிவார்கள். பலூச் வீரர்கள் புரட்சி அனுதாபஞ் சிறிதும் இல்லாதவர்கள். அவ் வட்டார மொழியையும் நன்கு அறியாதவர்கள். இராஜபுத்திர வீரர் கள், கிராமவாசிகளுடன் நன்கு நெருங்கிப் பழகலாம். கிராம மக்கள் அவ்வளவு எளிதில் தாத்யாவைப் பற்றிக் கூறிவிட மாட்டார்கள். இராஜபுத்திர வீரர்கள் யாராலுஞ் சந்தேகிக்க முடியாத முறையில் தேவையான செய்திகளைப் பெற முடியும். இராஜபுத்திரர்கள் வெள்ளையரின் முழு நம்பிக்கைக்கும் உரியவர் களாக இல்லாததால் பலூச் வீரர்களும் உடன் அனுப்பப்பட் டனர்).

தாத்யா சிறந்த பக்திமான். இந் நிலையிலும் நதிக்கரைகயி லிருந்த நாத்துவாரா ஊர்க் கோயிலுக்குச் சென்று திரும்பி ளுன். நடு இரவில் அவன் முகாமிற்குத் திரும்பிய போது, வெள்ளைப்படை தன்னை நெருங்குகின்றது என்ற செய்தி கிடைத்தது. உடனே வெளியேற அவன் நினைத்தான். ஆனல், அவனுடைய வீரர்கள் களைப்புண்டு இருக்குந் தங்களால் ஓரடிகூட இப்பொழுது எடுத்து வைக்க முடியாது என்று கூறி விட்டார்கள். எனவே, அன்று தாத்யாவின் படை அங்கேயே தங்கியது. மறு நாள் காலை (1858 ஆகஸ்ட் 13), ராபர்ட்ஸின் படை அவர்களைத் தாக்கியது. தோல்வியுற்ற புரட்சி வீரர்கள் சில யானைகளையும், பல வீரர்களையும் இழந்து தப்பித்தனர். 17 மைல் தூரம் வெள்ளையர்ப் படை துரத்தியது. அப்போதும் தாத்யா துணி விழுக்க வில்லை. கடும் வேகத்தில் கிழக்கே வந் தான். சாம்பல் நதியில் வெள்ளங் கரை புரண்டு ஓடியது. அதைக் கடப்பது எளிதல்ல; என்ருலும், பெரும் முயற்சியில் தாத்யா கடந்து விட்டான். துரத்தி வந்த வெள்ளையர் படை யினர் இக் கரையில் சில உதவாக் குதிரைகள் மட்டும் நின்றிருந்ததைக் கண்டனர். தாத்யா இம் முறையுந் தப்பி விட்டான்.

சாம்பல் நதிக்குக் கிழக்கே 30 மைல் தொலைவிலிருந்த ஜால்ரா பதானை அவன் நெருங்கினுன். ஜெய்ப்பூர் மாதிரியில் கட்டப்பட்ட அழகிய ஒருசிறு ஊர் அது. அந்த ஜலாவார் நாட் டின் ராணு பிரிதிசிங் வெள்ளையரின் நெருங்கிய நண்பன். இவன் தாத்யாவை எதிர்க்கத் துணிந்தான். ஆனல், அவ னுடைய வீரர்கள் தாத்யாவுடன் சேர்ந்து கொண்டார்கள்! உடனே தாத்யா ராணுவின் தளவாடங்களையும், வாகனங்களை யுங் கைப்பற்ற 25 லட்ச ரூபாய் வேண்டுமென்ருன். இராணு வால் 5 லட்சம் தான் தர முடிந்தது. தனக்கு நேர்ந்த அவ மானத்தையும், முறை கேடான நடத்தையையும், அவனுல் தாங்க முடிய வில்லை. அன்றிரவே கோட்டையை விட்டுத் தப்பித்துச் சென்ருன். புரட்சி வீரர்களால் அவமானத்திற் குள்ளாகும் சூழ் நிலை ஏற்பட்டால், தற்கொலை செய்து கொள்ளும்படித் தன் மனைவி மக்களுக்குக் கூறி விட்டு, இரகசி யமாய் வெடி மருந்துந் துப்பாக்கியும் அவர்களுக்குக் கொடுத்து விட்டுச் சென்ருன்! அவன் இராஜபுத்திரன் அல்லவா?

தாத்யா இராணுவிடம் பறித்த பணத்தில்தான் தன் வீரர் களுக்குக் கூலி கொடுத்தான். அதன் பின்பு தாத்யாவும். ராவ் சஹேப்பும், பண்டா நவாப்பும் ஒரு துணிகரத் திட்டத்தை

ஆலோசித்தனர். ஜால்ரா பாதன்னிலிருந்து நேர் மேற்கே விந்திய மலைகளுக்கருகிலிருக்கும் இந்தூரைக் கைப்பற்றிய ஹோல்காரின் வீரர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளுவதே அத் திட்டம்! அது நிறைவேறி யிருந்தால் வெள்ளையருக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கும். ஆனால், அங்கே மாளவத்தின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல், மைக்கேல் உஜ்ஜயினியிலிருந்து ஒரு படையை அனுப்பி, இந் தூரைப் பாதுகாத்தார். '58 ஆகஸ்ட் மாத இறுதியில் இது நடந்தது.

செப்டம்பர் வந்தும் பருவமழை விட்டபாடில்லை. மாளவத்தின் பருத்தி மண் கருஞ்சகதியாக மாறியிருந்தது. படைகளைச் செலுத்துவது மிகக் கடினமாகவே இருந்தது. செப்டம்பர் 15ல் பியோவாரா என்ற இடத்தில் மைக்கேல் தாத்யாவைத் தோற்கடித்தான். இத் தோல்விக்குப் பின்பு, தாத்யா தன் படைகளைப் பிரித்தான். அருகிலிருந்த பண்டேல்கண்ட் அவனுடைய அடுத்த களமாயிற்று. இராவ் சஹேப்பின் தலைமையில் ஜான்ஸிக்கு ஒரு படையும், தாத்யாவின் தலைமையில் சந்தேரிக்கு மற்றொரு படையுஞ் சென்றன. புகழ் பெற்ற சந்தேரிக் கோட்டைக் குவாலியர் சிந்தியாவிற்குச் சொந்தமானது. தாத்யா அதைக் கைப்பற்ற மூன்று நாள் முயன்று, பிறகு பெட்வா நதியின் மேற்குக் கரையோரமாகச் சென்றான். சந்தேரிக்குத் தெற்கே 20 மைல் தொலைவிலிருந்த மான் கிரௌஸிதான் அவன் இலக்கு. அங்கே வெள்ளைப் படைகள் காத்திருப்பதை அவன் அறியவில்லை. இங்கேயும் மேஜர் ஜெனரல் மைக்கேல் அவனைத் தோர்கடித்தார் ('58 அக்டோபர் 10).

தாத்யா உடனே பெட்வா நதியைக் கடந்து வட கிழக்கில் இல்லித்பூருக்குச் சென்றான், மைக்கேலும் அவனைத் தொடர்ந்தார். காடுகள் நிரம்பிய அப்பகுதியில் எதிர்ப்பட்ட ராவ் சாஹேப்பையுந் தோற்கடித்தார். ராவ்சாஹேப் தப்பி இல்லித்பூர் சென்று தாத்யாவைச் சந்தித்தான். வடக்கே தாங்கள் விரட்டப்பட்டால் ஆபத்து அதிகமென்று முடிவு செய்தார்கள். பெட்வாவிற்குக் கிழக்கே, மிகுந்த துணிவுடன் பல முறை போராடி, பல முறை தப்பித்து, பலவற்றையும் இழந்து விந்திய மலைகளையுங் கடந்து, நர்மதி நதியை அக்டோபர் இறுதியில் தாத்யா கடந்தான். ஆகவே, தாத்யாவும், இராவ் சாஹேப்பும் நர்மதையைக் கடந்தனர்; என்பதே திகிலூட்டுஞ் செய்தி! பண்டைய மராத்தியத் தாயகத்தை அவர்கள் எட்டியிருக்கிறார்கள். கங்கைக் கரையில் மராத்தியத்திற்காகப் போராடியவர்களில் இருவர் இன்று தாயகத்திற்கே மீண்டிருக்கிறார்கள்! சிவாஜி

யின் புகழும், மேன்மையும், பேஷ்வாக்களின் எழுச்சியும், வீழ்ச்சியும், மராத்தியப்பேரரசின் உயிர் துடிப்பும் ஒருக் கணந் தோன்றி மறைகின்றது! இங்கே தாத்யாவிற்கு ஆதரவு கிடைப் பது உறுதி இல்லையா? அருகிலிருக்கும் நிஜாமின் நாட்டில் இருப்பவர்களில் பெரும்பாலோர் இந்துக்களே. அமைச்சர் சலார்சிங்கின் அறிவுரையின்படி நிஜாம் வெள்ளையரிடம் நட் புடன் நடந்து, பெருமளவில் அவர்களுக்கு உதவி அளித்தா லும், அங்குள்ள இந்துக்கள் தாத்யாவிற்கு ஆதரவு தரமாட் டார்களா? நிஜாமின் எல்லையில் புரட்சிப் பொறி தெறித்து விழுந்தால், தென்னகமும் அதற்கு இரையாகாதா? இல்லை. தாத்யாவின் கனவுகள் சிதைக்கப்பட்டன! தொலைவிலிருந்த இராஜபுதனத்திலும், குவாலியரிலும் கிராம மக்கள் பெரு மளவில் மனமுவந்து, தாத்யாவிற்குத் தேவையான பண் டங்களைக் கொடுத்தனர். சில இடங்களில் மட்டுந் தாத்யா கொள்ளை யடிக்க வேண்டி யிருந்தது. ஆனால், மராத்திய நாட்டில் மக்கள் தங்கள் ஆதரவைத் தாத்யாவிற்கும், ராவ் சாஹேப்பிற்குங் கொடுக்க வில்லை. வற்புறுத்தலில், பணம் பெற்றுக்கொண்டே உதவிகள் செய்தனர்.

வெள்ளையர் துருப்புகள் தொடர்கின்றன. சூழ்கின்றன! ஏமாற்றமடைந்த தாத்யா நாக்பூர் பக்கஞ் சென்று, பின்பு தப்தி நதிக்கருகில், சாத்பூரா மலைகளிலிருந்த ஆஸீர்களுக்கு வந்தான். அங்கும் எதிர்ப்பு இருந்ததால், குர்கோவனுக்குச் சென்றான். அங்கிருந்த இந்தூர் ஹோல்காரின் துருப்புகள் அவனுடன் சேர்ந்தன. பிறகு புரட்சிப் படை மேற்கே சென்றது. வழியில் பம்பாய்—ஆக்ரா நெடுஞ்சாலையில் வெள்ளையர்களுக்கு அனுப் பப்பட்ட பண்டங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அச்சாலையி லிருந்த தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. விடாமல் துரத்திய வெள்ளைத் துருப்புக்களை ஏமாற்றி நர்மதையை மீண்டுந் திரும் பக் கடந்தான். அங்கிருந்து மேற்கே யிருந்த (குஜராத்) பரோடாவிற்குச் செல்ல முயன்றான். பரோடா கெய்க்வாரும் ஒரு மராத்திய சிற்றரசனே! நர்மதையைத் தாத்யா மீண்டுங் கடந்தது மிகவும் துணிகரச் செயலேயாகும். புரட்சிப் படை யின் விரைவு பயணத்தை G. B. மேலசன் புகழ்ந்திருக்கின்றார். ‘உலகத்தின் எந்தப் படையும் இந்தியர்களின் விரைவுப் பய ணத்தை மிஞ்சவே முடியாது; என்று கூட நான் கூறுவேன்’ அன்று பகல், இரவு முழுவதும் நடந்து, மறு நாள் அதே விரை வில் புரட்சிப் படை நர்மதையைக் கடந்தது. தாத்யா பரோ டாவை நெருங்கும் முன்பே மைக்கேல் அனுப்பிய பார்க்கின் படை இடை மறித்தது, 9 நாட்களில் 249 மைல்களைக் கடந்து,

கடிய வேகத்தில் அவ் வெள்ளைப்படை அங்கு வந்தது. சோட்டா உதயபூருக்கு அருகிலிருந்த அடர்ந்த காடுகளைக் கடந்து டிசம்பர் முதல் நாள், (தாத்யா அங்கு வந்த சிலமணி நேரத்தில்) அவ் வெள்ளைப் படையும் வந்தது. தாத்யா அங்கே பெற்ற தோல்வி அவன் திட்டத்தையே மாற்றியது. இம்முறை, இராஜபுதனத்தின் தெற்கிலிருந்த பன்ஸ்வாரா காடுகளில் தாத்யா நுழைந்தான். அக் காடுகளில்தான் 'பில்' என்ற காட்டு வாசிகள் வாழ்ந்தனர். கொள்ளையடிப்பதே அவர்களின் தொழில். தெற்கே நர்மதைக் கப்பால் புகழிடம் பெறமுடியவில்லை! மேற்கே குஜராத்தில் ராபர்ட்ஸ் விழிப்புடன் காவலிருக்கிறான்! வடக்கேயும், கிழக்கேயும் எளிதில் கடக்க இயலாத மலைத்தொடர்கள் இருக்கின்றன! இப்பொழுதாவது சரணடையலாம். ஆனால், தாத்யாவும், இராவ் சாஹேப்பும் நெஞ்சுரமும், பிடிவாதமும் கொண்டவர்கள். (பண்டா நவாப் பிரகடனச் சலுகையை நம்பி நவம்பர் மாதமே சரணடைந்து விட்டான்). அவ் விருவரும் நிதானமாகவும், தீரமுடனும் எதிர்ப்புகளை ஏற்றனர். தாத்யா இனி தப்பவே முடியாது; என்று வெள்ளையர்களும் நம்பினர். வெள்ளையர்களின் எதிர்ப்புடன், பில் என்னும் காட்டு வாசிகளின் தொல்லையும் அவனுக்கு இருந்தது. 'காயம் பட்ட முயல்களைத்து விழுவதை எதிர்பார்த்துக் கழுகு துரத்துவதைப் போல, அவர்களுந், தாத்யாவைத் துரத்தினர். (G. B. மேலசன்) எஞ்சிய தன் சில வீரர்களுடன் தாத்யா பன்ஸ்வாராவை அடைந்தான். வழியில் ஒட்டகங்களில் ஆங்கிலேயருக்குக் கொண்டு செல்லப்பட்டப் பண்டங்களைக் கொள்ளையடித்தான். அங்கும் அவனுக்கு ஓய்வில்லை; கர்னல் சோமர்செட்' தன்னை வளைப் பதையறிந்து மீண்டும் மேவார் நாட்டிற்குச் சென்றான்.

பன்ஸ்வாராவிலிருந்து வடமேற்கே உதய்பூர் இருக்கின்றது. வழியிலிருந்த, ஆரவல்லி மலைகளால் சூழப்பட்ட சலும்பார்க்குக்குத் தாத்யாவும், ராவ் சாஹேப்புஞ் சென்றனர். சலும்பாரின் தலைவன் கேசரிசிங், மேவார் ராணாவுடன் பகை கொண்டிருந்தான். கேசரிசிங் தாத்யாவிற்கு ஓரளவு பொருளுதவியுஞ், செய்தான். அங்கிருந்து உதய்பூரை மீட்கத் தாத்யா தீட்டிய திட்டம், மேஜர் ராக்கால் (Rocke) மாற்றப்பட்டது. தாத்யா வட கிழக்கே திரும்பி அடர்ந்த காடுகளுக்குள் பில்வாரா என்ற இடத்திற்குச் சென்றான். அங்கே இரு தலைவர்களுஞ் சரணடைய யோசித்ததாகத் தெரிகிறது. ஆனால், மான்சிங்கும், இளவரசன் பிரோஸ்ஷாவும் தங்களுடன் விரைவில் இணைவார்கள் என்ற நம்பிக்கையால், சரணடையும் எண்ணத்தைக் கை விட்டார்கள் என்றும் மேலசன் கூறியுள்ளார். அக்கான

கத்தை ஊடுருவி, எதிரிகளுக்குத் தப்பி வடக்கே பிராதாப் கருக்கு '58 டிசம்பர் 25ஆம் நாள் மாலை 4 மணிக்கு வந்து சேர்ந்தனர், அங்கே, மேஜர் இராக்கின் வலையில் சிக்காமல் எதிர்ப்பை முறியடித்தப் பின்பு அங்கிருந்து மூன்றே நாட்களில் ஜிராபூருக்குச் சென்றனர். களைத்திருந்த அவர்களுக்கு அன்றே சோதனை ஏற்பட்டது. பென்சன் தன் படையுடன் அங்கே வந்து சேர்ந்தான், போரிட இயலாமல், சில யானைகளை விட்டு விட்டுத் தாத்யா வடக்கே பரோட்டுக்குச் சென்ருன், அங்கே மற்ருெரு அதிர்ச்சி! தளபதி சாமர்-செட் 70 மைல்களை 48 மணி நேரத்தில் கடந்து தாத்யாவை வழி மறித்தான், அங்குந் தப்பி 1859 ஜனவரி தொடக்கத்தில், கோட்டா எல்லைக்குள் தாத்யாவும், ராவ் சாஹேபுஞ் சென்றனர். அங்கே, அவர்களுடன் மற்ருெருவன் இணைந்தான். யார் அவன்? குவாலியர் சிந்தியாவிற்குக் கீழிருந்த நார்வாரின் சிற்றரசன். இராஜபுத்திர குலத்தைச் சேர்ந்த மான்சிங்கே அவன். அவனுடைய பகுதிகளைச் சிந்தியா அபகரித்துக் கொண்டான். என்பதால், அவனுடன் மான்சிங் போரிட்டுக் கொண்டிருந்தான். 1858 ஆகஸ்ட் மாதத்தில் பயோரி கோட்டையைக் கைப்பற்றிஞன். சிந்தியாவின் பகுதியில், அமைதியை நிலை நாட்டும் பணியில் ஆங்கில அரசு ஈடுபட்டிருந்ததால், மான்சிங்கின் இச் செயல்கள் அவர்களுக்கு இடைஞ்சலாயிற்று. தனக்கும், ஆங்கிலேய அரசுக்கும் எந்தப் பகையுங் கிடையாதென்றும், புரட்சிக்குந் தனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்றும், தனக்கேற்பட்ட அநீதிக்குச் சிந்தியாவின் மேல் போர்த் தொடுப்பதாகவும், அவன் வாதிட்டான். ஆனல், ஆங்கிலேயர்கள் அமைதிக்கு ஊறு விளையும் எனக்கருதி, மான்சிங்கைப் போரிட்டு வெளியேற்றினர். ஜெனரல் நேப்பியரால் தோற்கடிக்கப்பட்ட மான்சிங், அப்பொழுது முன்னேற்பாட்டின்படி, சில ஆயிரம் வீரர்களுடன் தாத்யா ராவ்சாஹேப் ஆகியோருடன் கோட்டா பகுதியில் வந்து சேர்ந்தான். என்ன விதிக்கோ? மூவருஞ் சம்பால் நதிக்கரையை அடைந்ததும், ஏதோ காரணத்தால் மான்சிங் பிரிந்து சென்ருன். 1859 ஜனவரி 13ஆம் நாள் இந்திராகர் என்னுமிடத்திற்குத் தாத்யாவும், இராவ்சாஹேப்பும் வந்தனர். அங்கே, எதிர்பார்த்தபடி இளவரசர் ஃபிரோஸ்ஷா வந்து சேர்ந்தான், எப்படி?

ஜெனரல் நேப்பியர் 1858, அக்டோபர், நவம்பர் மாதங்களில் குவாலியருக்கருகில் அமைதியை நிலை நாட்டிக் கொண்டிருந்தார். டிசம்பர் மாதம் அங்கே இளவரசர் ஃபிரோஸ்ஷா வந்ததால், புது அபாயந் தோன்றியது. ரோகில் கண்டில்

தலைமைத் தளபதி கேம்பலின் நடவடிக்கைகளில் புரட்சித் தலைவர்கள் சிதறுண்டு நேப்பாள எல்லையை நாடிச் சென்ற போது, ஃபிரோஸ்ஷா மட்டும் அங்கிருந்து தப்பினார். அயோத்தியில் தன் முயற்சிப் பலனளிக்காததால் அங்கிருந்தும் வெளியேறினார். சம்பால், நர்மதை நதிகளுக்கிடையில் தான் நடத்தும் போராட்டத்தைத் தாத்யா அவ்வப்பொழுது அயோத்திக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தான். அதை யறிந்த ஃபிரோஸ்ஷா தாத்யா தனக்கேற்ற தோழன், என் றெண்ணி 58 டிசம்பரில் கங்கையைக் கடந்து மேற்கு நோக்கி வந்தான். வழியில் வெள்ளையரின் வலையில் சிக்காமல் யமுனை யைக் கடந்து ஜான்ஸியை நோக்கி விரைந்தான். இதைக் கேள் விப்பட்ட ஜெனரல் நேப்பியர் ரனேட்டுக் கருகில் ஃபிரோஸ் ஷாவை மறித்துத் தோர்கடித்தார். பலஹீனமான தன் சிறிய படையுடன் ஃபிரோஸ்ஷா அரோனிக் காடுகளில் தஞ்சமடைந் தான். அங்கும் வெள்ளையர் படை நெருக்கியதால், அதை விட்டு வெளியேறினான். இறுதியில் '59 ஜனவரி 13-ஆம் நாள் இந்திரா கரில் தாத்யாவுடன் சேர்ந்தான். அப்பொழுது அப்புரட்சித் தலைவர்களிடம் இருந்த மொத்த வீரர்கள் இரண்டாயிரத் திற்குங் குறைந்த அளவினரே ஆம்.

பரங்கித் துருப்புகள் அப்பொழுது அவர்களை நாற்புறமுஞ் சூழ்ந்தன! வட கிழக்கே ஜெனரல் நேப்பியர்; வட மேற்கே ஷோவர்ஸ்; கிழக்கே சோமர்செட்; தென்கிழக்கே ஸ்மித்; தெற்கே மைக்கேலும், பென்சனும்; தென்மேற்கே ஹோனர்; மிகச் சிறந்த இப்பெரிய வலைவிலிருந்து தப்ப முடியாதா? ஏன் முடியாது? தாத்யாவும், இராவ்சாஹேபும், பிரோஸ்ஷாவும் சாதாரண மானவர்கள் அல்லவே! அவர்களின் ஆற்றலும், நெஞ்சுரமும் இன்னும் அழிந்து விடவில்லையே! களைப்பும், வேட்கையும் அவர்களின் ஓட்டத்தைத் தடுக்க முடியவில்லை.

வட மேற்கே ஷோவர்ஸ் இருப்பதை அறியாமல் புரட்சித் தலைவர்கள் ஜெய்ப்பூருக்கும், ஃபரத்பூருக்கும் நடுவே யிருந்த தயோசாவிற்குச் சென்றனர். அவர்கள் சற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று அங்கே நடந்து விட்டது. ஷோவர்ஸ் தம் வீரர் களுடன் அங்கே புகுந்து விட்டார். அன்று நடந்த போரில் 200க்கும் அதிகமான புரட்சி வீரர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், அதிசயமாகத் தலைவர்கள் மட்டுந் தப்பி விட்டனர். நேராக ஜெய்ப்பூர்ப் பகுதிக்குள் நுழைந்து விட்டனர்! கர்னல் ஹோம்ஸ் நசிராபாத்திலிருந்து 24 மணி நேரத்தில் 54 மைல் தூரமான மணற்பாங்கான பகுதியையுங் கடந்து, ஜனவரி

21–ஆம் நாள் அவர்களைச் சிக்கர் என்ற இடத்தில் சந்தித்தார். இந்த அதிர்ச்சியில் குதிரைகள், ஒட்டகங்கள் பலவற்றையும் விட்டு விட்டுப் புரட்சி வீரர்கள் சிதறினர். சுமார் 600 வீரர்கள் டாக்கானிர் மன்னனிடம் சரணடைந்தார்கள்.

சிக்காரில் ஏற்பட்ட தோல்விக்குப் பின்பு புரட்சித் தலைவர்கள் மன முடைந்தனர். ஒன்ருகச் சேர்ந்து ஓடுவதில் இனி பலனில்லை. தனித்தனியாகத் தப்பித்தால் தான் எதிரிகளிடஞ் சிக்காமலிருக்க முடியும். எந்த உதவியுமின்றி, பலமுமின்றி பரங்கியை எதிர்ப்பது இனி இயலாது. என்பதைத் தாத்யா உணர்ந்து கொண்டார். எனவே, மூவரும் பிரிந்து சென்று தப்பிக்க முடிவு செய்தனர்.

தாத்யா சில குதிரைகளுடனும், சில பணியாட்களுடனும் பாரான் காடுகளில் மான்சிங்கின் பாதுகாப்பிற்குச் சென்ருன்; பாம்பிற்குப் பயந்து புலிக்குகைக்குச் சென்றது போல! ராவ் சாஹேபும் ஃபிரோஸ்ஷாவும் மேற்கே சென்று, பிறகு தெற்கேத் திரும்பினர். ஹோனர் 4 நாட்களில் 145 மைல்கள் விரைந்து சென்று ராவ்சாஹேபின் படையைத் தோற்கடித்தார். அங்குத் தப்பியவர்கள் சதுர்பூஜ் கணவாய் வழியாகச் சிரோன்ச் காடுகளுக்குள் புகுந்தனர். வெள்ளை வீரர்கள் அப் பகுதியை அடி அடியாகத் துழவினர். பரங்கியரின் கால்கள் படாத இடமே அக் காட்டில் இல்லை. புதர்கள் நீக்கப்பட்டன; செடிகள் சீவப்பட்டன. வேட்டை நாய்கள் போல் மோப்பம் பிடித்துச் சென்றனர். இதற்குள் புரட்சி வீரர்கள் பலர் தப்பியோடி மறைந்து விட்டனர். தத்தமக்குத் தோன்றிய வழிகளில் தங்கள் தங்கள் ஊர்களை நோக்கித் தலைமறைவாகச் சென்றனர். சிரோன்ச் காடுகளில் தலைவர்கள் சிக்கவில்லை. அங்கிருந்தும் நழுவி விட்டார்கள். பரங்கிப் படைகள் புரட்சித் தலைவர்களை விரட்ட முடிந்ததே தவிர, பிடிக்க முடிய வில்லை. எத்தகைய கடும் விரட்டல்! மத்திய இந்தியாவிலிருந்து ராஜபுதனம்; அங்கிருந்து பண்டேல் கண்ட், அங்கிருந்து நர்மதை நதி, அங்கிருந்து குஜராத்! அங்கிருந்து மீண்டும் இராஜபுதனம்! எத்தனை நதிகள்? எத்தனை மலைகள்? சாம்பலும், நர்மதையும், பானுவும், பெட்வாவும் கடக்கப்பட்டன! விந்திய, ஆரவல்லி மலைகள் ஊடுருவப்பட்டன! இருள் சூழ்ந்த அடவிகளிலிருந் தெல்லாம் புரட்சி முகாமின் புகை எழும்புகின்றன! காட்டு விலங்குகள் வேறிடங்களுக்குப் பெயர்கின்றன! நாட்டுப்புற மக்கள் மிரண்டு

ஒதுங்குகின்றனர்! வெள்ளை வேடன் துரத்துகின்றான். ஓடுவதுமான் அல்ல...புலி! காலொடிந்த புலி!...உறுமுவதற்குக் கூட இயலாத புலி!

நான்கு தூக்குக் கயிறுகள் தாத்யா, இராவ்சாஹேப், மான் சிங், ஃபிரோஸ்ஷா ஆகியோரின் உயிரைக் குடிக்கக் காத்திருக் கின்றன! சரணடைந்தால் உயிர்த் தப்பலாம், என்ற ஆசை இல்லாமல் இல்லை. 1859 பிப்ரவரி 19-ஆம் நாள் புரட்சித் தலை வர்களின் தூதுவர்கள் என்று கருதப்பட்ட இருவர் நீமக்கிற்கு அருகில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து இரண்டு கடிதங்கள் கைப்பற்றப் பட்டன. அவைகளில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒன்று, முன்பு ஆக்ராவில் துணை மருத்து வராகப் பணியாற்றிய வஸீர்கான் என்பவரால் நீமக் இராணுவ அதிகாரிக்கு எழுதப்பட்டது. மற்றொன்று இது பாரசீகத்தில் எழுதப்பட்டிருந்தது. நாளும், முகவரியும் இல் லாத அக் கடிதம் சையத் ஜஹூர் அலி என்பவரால், தம் சக அதிகாரிகளின் சார்பில் எழுதப்பட்டிருந்தது. புரட்சியிலீடு பட்டிருந்த ஆங்கில அரசின் முன்னாள் அதிகாரிகளான இவ்விரு வருஞ் சூழ்நிலையால் புரட்சியிலீடுபட வேண்டிய திருந்த தென்று சமாதானங் கூறிச் சரணடையும் வாய்ப்பைப் பயன் படுத்தத் தாங்கள் விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அத் துடன், இளவரசர் ஃபிரோஸ்ஷாவிற்கும், இராவ் சாஹேபிற் கும் மன்னித்துச் சரணடைய வாய்ப்பளிக்கும்படியுங் கோரி யிருந்தார்கள். அத் தலைவர்களின் உயிருக்குப் பாது காப்பு உத் திரவாதம் அளிக்கப்பட்டால், பிற கலகக்காரர்களும் அடங்கி விடுவார்கள் என்றுங் குறிப்பிட்டிருந்தார்கள். சரணடையும் நிபந்தனைகளைப் பேச சிர்மஸ்த்கான், அப்துல் கரீம் என்ற இரு 'வக்கில்'களை அனுப்பி யிருப்பதாகவுங் குறிப்பிட்டிருந் தார்கள். நீமக்கின் அதிகாரிகளில் ஒருவரான கேப்டன் டெனிஸ் அரசியின் பிரகடனத்தின்படி ஒப்புக் கொள்ளப் பட்ட சலுகைகள் தலைவர்களுக்கும், வீரர்களுக்கும் அளிக் கப்படும். அதில் எவருக்கும், எந்த விதி விலக்குங் கிடையாது; என்று பதிலனுப்பி விட்டான்.

மாளவத்தில் சிந்தியாவின் அதிகாரியாக விருந்த பழைய பேஷ்வா பாஜிராவின் மருமகன் பாபாசாஹேப் ஆப்தேவைப் புரட்சித் தலைவன் இராவ் சாஹேப் தன் வழக்கை எடுத் துரைக்க அனுப்பியதாகத் தெரிகின்றது. பாபா சாஹேப் ஆப்தே சிந்தியாவிற்கும், அதனால், ஆங்கிலேயருக்கும் உண்மை யுடன் நடக்கும் ஊழியன், இராவ் சாஹேப்புடன், பாலா சாஹேபிற்கும், நானா சாஹேபிற்குஞ் சேர்ந்து அவர் பரிந்

துரைத்தார் என்றுந் தெரிகிறது. மத்திய இந்தியப் பிரதிநிதி ராபர்ட் ஹாமில்டன் இதற்குப் பதலளிக்கையில் 'ராவ் சாஹேப் சரணடைந்தால், அவருடைய உயிருக்கு ஆபத்து நேராது. அவரை விலங்கிடவோ, சிறையிடவோ மாட்டோம். வேறு எவ்வித அவமானத்திற்கும் உட்படுத்தவும் மாட்டோம். அத்துடன், தகுதிக்குந் தேவைக்கும் ஏற்ப ஓய்வுப் பணமும் அளிக்கப்படும். ஆனால், அரசு தேர்ந்தெடுக்கும் இடத்தில் தான் அவர் வாழ வேண்டும். இவ் வாக்குறுதிகள் அனைத்தும், ஆங்கிலேயர்களைக் கொல்லாமல், கொல்லுவதற்குத் துணை செய்யாமல், மற்றவர்களைத் தூண்டாமல் இராவ் சாஹேப் இருந்தால்தான், இது செல்லுபடியாகும்!' என்று கூறி விட்டார். கடைசி நிபந்தனைக் கடுமையான ஒன்று. இராவ் சாஹேப் இச் சலுகைகளைப் பயன்படுத்திச் சரணடையவில்லை. சலுகைகளுக்குப் பின்னால் விஷக் கொடுக்கு இருக்கின்றதே! என்று ராவ் சாஹேப் ஓடினார்......பரங்கிப் படை விரட்டியது. சிரோன்ஜ் அடவியிலிருந்து உஜ்ஜயினிக்கும், அங்கிருந்து உதய்ப்பூருக்குஞ் சென்றார். அங்கே தம்முடன் சேர்ந்த மனைவி, குழந்தையுடன் டெல்லிக்குச் சென்றார். மக்கள் நெருக்கம் மிகுந்த நகரமாதலால், எவரும் அறியாமல் திரியலாம் என்று நம்பினார் போலும். பிறகு, தானேஸ்வரத்திற்கும், ஜ்வால முகிக்கும். காங்ரா பகுதிகளுக்கும் அவர்கள் சேர்ந்தே சென்றனர். அங்கிருந்து வடக்கே ஜம்முப் பகுதியில் செனான் என்ற இடத்தில் யாத்ரிகர் போல் சிறிது காலம் மறைந்து வாழ்ந்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 1862-ல் ஒரு மாராட்டியன் காட்டிக் கொடுக்க, சியால் கோட்டின் துணை ஆணையர் மெக்ரூப் அவ் வீர மராத்தியரைக் கைது செய்தார். உயிர் பிழைக்க அவர் நினைத்ததில் வியப்பில்லை. நானா சஹேப், பாலா சாஹேப் ஆகியோரைப் பற்றிப் பழி கூறித் தப்பிக்க முயன்றார். ஆங்கில உயிர் எதையும் தான் போக்கவில்லை என்றும் மன்றாடினார்! கான்பூர் கோரக் கொலைகளை கர்னல் வில்லியம்ஸ் விசாரணை செய்தபோது, சாட்சி சொன்ன 61 பேர்களில் ஒருவர் கூட ராவ் சாஹேப்பின் கரங்கள் இரத்தக் கறை படிந்தது என்று கூறவே இல்லை. மத்திய சிந்தியாவிலும் அவர் அத்தகையச் செயல்களில் ஈடுபடவில்லை. ஆனால், பீபிகர் இல்லத்திலிருந்து வேதனை முணங்கல் வெள்ளையரின் செவிகளில் இன்னும் ஒலிக்கின்றதே! புது சாட்சியங்கள் கொண்டு வரப்பட்டன. பாண்டு ரங்க சதாசிவா எனப்படும் இராவ் சாஹேப் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு 1859 ஆகஸ்ட் 20-ஆம் நாள் தூக்கிலிடப்பட்டார்!

*

இளவரசர் ஃபிரோஷ் ஷாவின் மொகலாய இரத்தம் இந்த சலுகைகளை ஏற்க மறுத்தது. அவருடைய நடமாட்டங்களை கட்டுப்படுத்தக் கூடாது; அவருடைய துணைவர்களின் ஆயுதங் கள் பறிக்கப்படக் கூடாது. இது மட்டு மல்ல, இன்னும் பல நிபந்தனைகளை அவர் விதித்தார். நிபந்தனைகளைத் தாங்கிய மடலை, அவர் அனுப்பிய விதம் அரச குலத்திற்கே உரிய ஒன்று. அவர் அனுப்பிய பர்வானுவின் சாரம் இதுதான்:— 'மண்ணுலகின் மானிடத்தின் தலைவனும், இயலுக இறை வனின் மகனுமான மிர்ஸா முகமது ஃபிரோஷார் பகதூரிட மிருந்து தம் அந்தரங்க ஊழியன் மௌல்வி முகமது வசிகா னுக்கு 1275, ஜில்காப், 3-ஆம் நாளில் (4, ஜூன், 1859) உன்னு டைய விண்ணப்பம் வரப்பெற்று, செய்தியறிந்து, இந்நிபந் தனைகளை எழுதுகிறேன். இவைகள் ஏற்கப்பட்டு, உறுதி மொழி தரப்பட்டால், இணக்கத்திற்கு வர எனக்கு மறுப் பில்லை. முதல் நிபந்தனை:—என் செலவுகளுக்கு என்ன ஏற் பாடு செய்யப்பட்டிருக்கிறது? இரண்டாவது:-எந்த விதத் தொல்லையும் இன்றி என் விருப்பம் போல் ஓரிடத்தில் தங்கவோ வேறிடஞ் செல்லவோ சுதந்திரம் அளிக்கப் படவேண்டும். மூன்றாவது:– என்னுடைய 10 அல்லது 20 துணைவர்களின் ஆயுதங்கள் சரண் செய்யப்படமாட்டாது. இந்த நிபந்தனை களுக்குப் பதில் தெரிந்து செய்தியை எனக்கனுப்பவும். இங் தூருக்கு நான் முன்பு அனுப்பியவனைப் பற்றிய செய்தியையுந் தெரிந்து அறிவிக்கவும்.'

என்ன செருக்கு இருந்தால் இத்தகைய பர்வானுவை அனுப்பத் துணிவான்? மத்திய இந்தியாவின் தற்போதைய அதிகாரி ரிச்சர்டு சேக்ஸ்பியர் கொதிப்படைந்தார்! பர்வானு என்பது ஒரு அரசனால் தனக்குக் கீழுள்ள ஊழியனுக்கு இடப் படும் கட்டளைத் தாங்கிய செய்தி. மாட்சிமை தங்கிய அரசி யின் சார்பில் ஆட்சி புரியுந் தமக்கு ஒரு பர்வானு மூலம் கேவ லம் ஒரு கலகக்காரன், நிபந்தனைகளை அறிவிக்கின்றான்; என்ற றிந்த ஷேக்ஸ்பியர் ஆத்திரமடைவது இயற்கையே. ஆங்கில அரசு, ஃபிரோ ஷாவைச் சுதந்திரமாகத் திரிய நிச்சயம் அனு மதிக்காது! இளைஞனை இளவரசன் ஃபிரோஷ் ஷா இக் கட்டுப்பாடுகளை ஏற்கமாட்டான்! முடிவில் ஃபிரோஷ் ஷா பரங்கியின் நிபந்தனைப்படி சரணடையவில்லை. ஃபிரோஷ் ஷா இந்தியாவிலிருந்து தப்பித்தான். புரட்சிக்கு முன்பு எங்கெல் லாஞ் சுற்றித் திரிந்தானோ அங்கெல்லாம் மீண்டுஞ் சென்றான்! சில ஆண்டுகளுக்குப் பின்பு 1860-ல் பாரசீகக் கிழக்கெல்லை யான காண்டகாரில் இருந்தான். அயல் நாட்டிற்கு ஆங்கிலக்

கரம் எட்டாது என்றாலும், கண்கள் விழிப்புடன் இரகசிய மாய் அவனுடைய நடமாட்டத்தைக் கவனித்தன! 1871-ல் வடக்கே பொகாரோவிற்குச் சென்றான். போதிய பணமின்றி முஸ்லிம் இளவரசர்களின் தயவில் சிறிது காலம் வாழ்ந்தான். மறு ஆண்டு டெஹ்ரானுக்குச் சென்றான். பிரிட்டானிய அரசு, அயல் நாட்டில் ஊடுருவிச் சென்று அவரைக் கைப்பற்று வதை விரும்ப வில்லை.

அடுத்த சில ஆண்டுகளில் ஹுரத், பொக்காரா பகுதிகளில் வாழ்ந்தான். 1868ல் இந்திய எல்லையான ஸ்வாத் பள்ளத்தாக் கிற்கருகில் வந்தான். சிறிது அயர்ந்திருந்தாலும், வெள்ளையர் கையில் சிக்கியிருப்பான். பிறகு காபூலுக்குச் சென்றான். அந்நாட்டு அமீருக்குத் தர்மசங்கடமாகி விட்டது. ஆங்கிலே யரைப் பகைத்துக் கொள்ள விரும்பாமல், தன் விருந்தாளி யைப் படக் ஷானுக்கு அனுப்பினார். அங்குச் சில காலந் தங்கிய இளவரசன், சாமர்கண்டிற்குச் சென்றான். தம் மூதாதையன் முதல் மொகலாயன் பாபர் வாழ்ந்து போரிட்டு இழந்த பகுதி கள் அவை! இவ்விறுதி இளவரசன் எதைத் தேடி அங்கே சென்றான்? இஸ்லாமிய அரசுகளிடம் உதவி பெற்று மீண்டும் ஆங்கிலேயனை எதிர்க்கவா? ஆனால் பாரசீகத்திலோ, ஆப்கா னிஸ்த் தானத்திலோ, மத்திய ஆசியாவிலோ இம்முயற்சிக்கு உதவி செய்யும் துணிவும் வலிவும், எவருக்கும் இல்லை!

துருக்கியத் தலைநகரமான கான்ஸ்டான்டி நோபிளில் பல அரசியல் அகதிகள் வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஒருவராக ஃபிரோஷ் ஷா இருப்பதாக 1872 அக்டோபர் மாதம் பிரிட்டா னியத் தூதுவர் தெரிவித்தார். வெள்ளை வெறுப்புக் கொண்ட இந்திய முஸ்லிம்கள் பலர் அங்கே இருந்தனர். வறுமை, ஓயாத அலைச்சல், கவலை அனைத்துஞ் சேர்ந்து ஃபிரோஷ் ஷாவைக் குன்றச் செய்து விட்டன. இளம் வயதிலே கிழவனாகி விட்டார்! 1875 ஜூன் மாதம் மெக்காவிற்குச் சென்றார். 45 வயதில் குருடாகி, முடமாகி அவர் தடுமாறுவதைக் கண்டதாகச் சிலர் கூறினர். மெக்காவின் உயர் தலைவர் (High Sheriff) கொடுத்த உதவியிலும், அங்கு வாழ்ந்த இந்தியர் சிலரின் உதவியிலும் அவ்விளவரசர் தன் இறுதி நாட்களைக் கழித்தார். 1877 டிசம்பர் 17-ஆம் நாள் புனித மெக்காவில் பல இஸ்லாமியர் களுக்குக் கிட்டாத பெரும் பேறு பெற்றார்! பொருளும், படையுமின்றி இந்தியா வந்த அந்த இளைஞர் வியக்கத்தகும் வண்ணம் பெரும் படையை உருவாக்கித் திடமுடன் போரிட் டார். அவருடைய கரம் நெறியில்லாமல், இரத்தம் சிந்த

வில்லை. ஒன்றுமறியாப் பெண்களையும், குழந்தைகளையும் அவர் கொல்ல வில்லை. அவ்விழிச் செயலை வெறுத்தார். அவற்றை வன்மையாகக் கண்டித்தார். 1858 பிப்ரவரி 17ல் அவர் தன் பிரகடனத்தில் 'தலைவர்களின் ஒப்புதல் இன்றி பெண்களையுங், குழந்தைகளையுஞ் சிலர் கொல்லுவதில் ஆங்கிலேயரைத் தோற் கடிப்பது பாதிக்கப்படுகிறது. இச் செயல்களை நிறுத்தி நாம் புனிதப் போர் புரிவோம்,' என்றும் அறிவித்தார். அவரு டைய குலப்பெருமையும், இளமையும், நாட்டுப் பற்றும், கட மையுணர்வும் அவர் ஒரு மாவீர மகனாகவேத் தோன்றச் செய்தது. மெக்காவில் அவர் இறந்தது மிகப் பொருத்தமே! (ஃபிரோஷ் ஷாவின் விதவை மனைவி ஆங்கில அரசுக்கு உதவிப் பணங் கேட்டு விண்ணப்பித்தாள். 1881 நவம்பரில் மாதம் 5 ரூபாய் வீதம் உதவிப் பணம் உத்திரவாகியது. ரிப்பன் பிரபு இச் சிறிய தொகையை 100 ரூபாயக மாற்றித் தொடக்கத் திலிருந்து அளிக்க ஏற்பாடு செய்தார். இந்த உதவிப்பணம் அந்த பேகமிற்கு மட்டுமேதான்; அவள் சந்ததியருக்கு இல்லை.)

மொகலாயக் குலக் கொழுந்து, ஊர் இன்றி, உறவின்றி கடமையை ஆற்றி விட்டு இறந்த போது அழுவதற்கு யாரு மில்லை! இன்றும் நினைப்பவர் எவருமிமில்லை. நன்றி கெட்ட நாடு இது!

மான்சிங்கிற்குச் சொந்தமான நார்வார் பகுதியில் தான் பரோன் காடுகள் இருந்தன. மான்சிங்கின் ஆட்கள் எவரும் ஒளிந்திருக்கும் புரட்சித் தலைவர்களை நிச்சயங் காட்டிக் கொடுக்கமாட்டார்கள். மான்சிங்கைத் தம் வலைக்குள் இழுத்து விட்டால், தாத்யாவும் அதில் சிக்கி விடுவானென்று சர் ராபர்ட் நேப்பியர் நினைத்தார். அது எப்படி முடியும்? மான்சிங் உயர்ந்த இராஜபுத்திர குலத்தில் பிறந்தவன். பெரும் நிலப் பகுதியை ஆண்டவன். இன்று எல்லாம் இழந்து ஒளிந்திருக் கிறான். சிந்தியாவையும் அவனால் வெல்ல முடிய வில்லை. புரட்சியால் அவனுக்கு இலாபமும் இல்லை. அவனுடைய செயல்களை மன்னித்து, உயிருக்கு உத்தரவாதம் அளித்துச் சிந் யாவிடம் பரிந்துரைத்து, அவனுடைய உரிமைகளைப் பெற்றி ருந்தால்......? இவ்வெண்ணத்தில் நேப்பியர் தளபதி, மீட்டை (Meade) சிர்ஸிமோ என்ற இடத்திற்குக் கலகக்காரர்கள் இருந்ததால், விரட்டுவதற்கு அனுப்பினர். சமயங் கிடைத்தால் மான்சிங்கையும், தாத்யாவையுங் தாக்குவதற்கும் உத்திரவிட் டார். சிர்ஸிமோவிற்கு மீட் வந்தார். (1859 மார்ச் 3) சில நாட்களில் காட்டிற்குள் புகுவதற்குப் பாதை அமைத்தார்.

பிறகு அவ் ஊரின் தாக்கூர் நாராயணசிங் என்ற அவ் வட்டாரத்தில் செல்வாக்கும், மான்சிங்கின் தொடர்பும் பெற்றவரை மெல்ல மெல்ல தம் நம்பிக்கைக்கு இழுத்தார். நாராயண்சிங் இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் மான்சிங்கின் திவானை அழைத்து வர முயல்வதாக உறுதி கூறிச் சென்றார்.

அதன்படியே ஒரு வாரத்திற்குப் பிறகு மான் சிங்கின் திவானும் மீட்டைச் சந்தித்தார். மான்சிங்கின் உயிருக்குப் பாதுகாப்பு அளித்து, அவர் குடும்பத்தினருக்கும், அவருக்கும் வாழ வகை செய்து, குவாலியர் தர்பாரில் அவமானம் நேரா வண்ணம் தான் கவனித்துக் கொள்வதாக உறுதியுங் கூறி, மான்சிங்கைச் சரணடையும்படிக் கடிதமும் மீட் எழுதிக் கொடுத்தார். சில நாட்களில் எதுவும் நடைபெறாததால், நேப்பியர் பேச்சு வார்த்தையை நீடித்துக் கொண்டே படைகளையுங் காட்டுக்குள் அனுப்பும்படி ஆணை யிட்டார். அந்த முஷைரிக் கணவாய்ப் பகுதிகளில் வாழும் கிராம மக்கள் எவருந் தங்கள் தலைவனின் இருப்பிடத்தைச் சொல்ல மறுத்ததுடன், வெள்ளையர்களை எதிர்க்கவுஞ் செய்தனர். மார்ச் 25–ஆம் நாள் மான்சிங்கின் திவான் 70 பேர் அடங்கிய அவர் குடும்பத்தினரையும், பணியாட்களையும் ஆங்கில முகாமிற்கு அழைத்து வந்தார். அவர்கள் அருகிலிருந்த சிப்ரிக்கு அனுப்பப் பட்டனர். மான்சிங்கும் சரணடைய விருப்பங் கொண்டிருப்பதாகத் திவான் அறிவித்தார். மான்சிங்கின் நிபந்தனைகள் வந்தன. அதைச் சிறிது மாற்றி மீட் அவரை வலையில் இழுத்தான். அதன்படியே 1859 ஏப்ரல் 2 ஆம் நாள் மான்சிங் வெள்ளை முகாமில் தகுந்த மரியாதையுடன் சரணடைந்தான். உயிருக்குப் பாதுகாப்புக் கிடைத்து விட்டது. உடமைகளும், சுதந்திரமும், தர்பாரும் இல்லாமல் ஒரு சிற்றரசர் தன் வாழ் நாளைப் போக்க முடியுமா? மான்சிங்கின் ஆசையை மீட் தூண்டி விட்டான். வெள்ளை அரசிற்கு நினைவில் கொள்ளத்தக்க ஒரு பணியாற்றினால், இழந்ததைப் பெறலாமே என்று மீட் ஊசலாடும் மான்சிங்கின் மனதிற்குப் போதையூட்டினான்!

அடுத்த சில நாட்களில் பரோன் காடுகளில் தான் தாத்யா ஒளிந்திருக்கிறான் என்று மான்சிங் வாயால் சொல்லும்படி உரையாடல் இழுத்துச் சென்றது. காட்டிக்கொடுக்க இராஜ புத்திர மனம் முடிவு செய்து விட்டது! அதே நேரத்தில் ஃபிரோஷ் ஷாவிடம் இணைவதற்குத் தாத்யா துணிந்தால் காட்டிக் கொடுக்குஞ் சந்தர்ப்பமும், அதனால் விளையும் நன்மை

களும் போய் விடுமென்று மான்சிங் அலேமோதினர். செய்வதை விரைந்து செய்ய வேண்டும். இல்லேயேல் தாத்யா நழுவி விடுவான். இழந்த தன் பகுதிகளில் சிலவற்றையாவது பெறுவதற்கு வெள்ளே அரசு சிந்தியாவுடன் ஏற்பாடு செய்யுமென்று மீட் அளித்த வாக்குறுதியை நம்பிக் காட்டிக் கொடுக்க மான்சிங் சம்மதித்து விட்டான்! நட்பாவது? நாட்டுப் பற்ருவது? இங்கே எங்கேயுள்ளது?

தாத்யாவின் ஒற்றர்கள் வெள்ளே முகாமில் இருக்கலாம் என்று சந்தேகித்த மீட் வெள்ளே வீரர்களே இப்பணிக்கு அனுப்பவில்லே, எனவே, சுதேசி வீரர்களேத் தேர்ந்தெடுத்தான். மான்சிங்குடன் அவர்கள் செல்ல வேண்டும் என்பதே கட்டளே. எதற்காகப் போகிருேம்? என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. அவ்வளவு இரகசியமாக இத் திட்டந் தீட்டப்பட்டது.

இதற்கிடையில் தாத்யா மான்சிங்கின் ஒத்துழைப்புடன் பிற புரட்சி வீரர்களின் நடமாட்டத்தை ஒற்றர்களின் மூலம் செய்திகள் பெற்றிருந்தான். அவ் வீரர்களின் அழைப்பின் படி அவர்களுடன் சேர விரும்பினுன். மான்சிங் சரணடைந்தது தாத்யாவிற்கு நன்கு தெரியும். பல காரணங்களுக்காகப் பலர் சரணடைவார்கள். சூழ்நிலேயால், தான் சரணடைந்தாலும் தன் நண்பர்களேக் காட்டிக் கொடுப்பது வெகு அபூர்வம். மான்சிங்கின் உதவியால்தான், தான் உயிருடன் வாழ முடிகிறது. தன் நண்பன் மேல் இந்த அளவுக்கு நம்பிக்கை வைத்திருந்ததால், தாத்யா வெள்ளே முகாமிலிருந்த மான்சிங்கிற்குச் செய்தி அனுப்பினுன். காட்டை விட்டு வெளியேறி பிரோஷ் ஷாவுடன், தான் சேரப் போவதைப் பற்றி மான்சிங்கின் கருத்து என்ன என்று வினவி யிருந்தான்! மான்சிங் 'முரிந்த பால்' என்பதை தாத்யா அறிவாஞ?

இன்னும் இரண்டு நாட்களில், நான் நேரே அங்கு வருகிறேன் அப்பொழுது அதைப் பற்றிப் பேசலாம் என்று மான்சிங் பதிலனுப்பினுன். 1859 ஏப்ரல் 7-ஆம் நாள் இருட்டிய பின் மான்சிங் காட்டிற்கு வந்தான். ஓசைப்படாமல் வீரர்கள் பின் தொடர்ந்தனர். (இதற்காக குதிரை வீரர்களேக் கூட அழைத்து வரவில்லே) தன் நண்பன் தாத்யாவை அழைத்துக் கொண்டு வழக்கமாகச் செல்லும் ஒரு பாறையிடுக்கில் இருவரும் அமர்ந்து வெகு நேரம் உரையாடினர். நள்ளிரவைத் தாண்டியதும் தாத்யா கண்ணயர்ந்தான்! மான்சிங் சைகை செய்ததும் மறைந்திருந்த வீரர்கள், தாத்யாவின் மேல் பாய்ந்து அவனேக்

கயிற்றால் கட்டினார்கள். அவனிடம் ஒரு வாளும், குக்ரீ கத்தியும் தான் இருந்தன. திமிற முடியாமல் மான்சிங்கே தாத்யாவின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டான். அவனுடைய பையில் 3 தங்கக் காப்புக்களும். 118 தங்க நாணயங்கள் மட்டுமே இருந்தன. சற்று தூரத்தில் நின்றிருந்த சமையல்காரர்கள் இருவரும் தலைதெறிக்க ஓடினர்! மறுநாள் அம்மராத்திய பிராமணன் வெள்ளை முகாமிற்குக் கொண்டு வரப்பட்டு சிப்ரிக்கு அனுப்பப்பட்டார். (ஒவ்வொரு அணியும் தானே தாத்யாவைப் பிடித்த பெருமை பெறவேண்டும் என்ற ஆர்வத்தில் தங்களுக்குள் செய்திகளைச் சரிவரப் பறிமாறிக் கொள்ளவில்லை). ஏப்ரல் 15-ஆம் நாள் இராணுவ விசாரணை நடந்தது. ஆங்கில அரசுக்கு எதிராக போரிட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டான். தாத்யா குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது. கொலைக் குற்றம் அவன் மேல் சாட்டப்பட வில்லை. இது குறிப்பிடத் தக்கது. ஆங்கில ஆட்சியை அவன் எதிர்த்தது நிச்சயம் குற்றமாகாது. சட்டப்படிப் பார்த்தால், அவன் பிரிடானிய இந்திய குடிமகன் அல்ல. பேஷ்வா பாஜிராவின் சுதந்திர ஆட்சியில் பிறந்தவன். அப்பேஷ்வாவின் வாரிசு நானாவிற்குப் பணிபுரிபவன். தன் தலைவனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் போரிட்டான். இரண்டாவது பாஜிராவின் இறப்பிற்குப் பின்னரே அவன் பிரிட்டானிய இந்தியாவின் குடிமகனாகிறான். ஏனெனில்? நானாவே அப்பொழுது உதவிப் பணம் பெற்று வாழ்கின்றான். (இவ்வாதம் நடைமுறைக்கு ஒவ்வாது) கான்பூர் கொலைகளுக்கு அவனுங் காரண மென்று குற்றஞ் சுமத்தப்பட வில்லை. ஆனால், கான்பூர் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்த லான்ஸ் இக்குற்றத்திற்குக் கான்பூர் நீதி மன்றத்தில் ஆதாரங்கள் உள்ளன என்றும், சாதி சௌரா கட்டிடத்தில் தன் வீரர்களை மறைத்து வைத்துச் சரியான தருணத்தில் சுடுவதற்கு அவனே ஆணையிட்டான் என்றுங் கூறி யுள்ளார். எக் குற்றத்திற்காகத் தண்டனைப் பெற்றாலும், தாத்யாவின் குறிக்கோள் ஒன்றே. அந்நியனை வெளி யேற்றுவது. அதற்காகப் போரிட்டதில் என்ன தவறு இருக்க முடியும்? ஆனால், வரலாறு இதை யெல்லாங் கவனிக்காது. குறிக்கோள் நன்று, அன்று என்பதில் அதற்கு அக்கரை யில்லை. அங்கே வென்றவர் சொல்லுவது குறிக்கப்படுகிறது. தோற்றவரின் குரல் என்றோ எப்போதோ எதிரொலிக்கும்!

தாத்யா சிறந்த வீரன் என்பதில் ஐயமில்லை. இந்தியரின் வீரத்தை எழுதத் தயங்கும் G. B. மேலசனின் எழுதுகோலும் இங்கே சற்றே இளகி விடுகிறது. 'ஒன்பது மாதங்களாக

ஆங்கிலேயரின் வலைவீச்சுக்குத் தப்பினான். இடங்களைத் தேர்ந் தெடுப்பதிலும், விரைந்து முன்னேறுவதிலும் மிகச் சிறந்து விளங்கினான். ஆனால், எதிரியின் தவறுகளை நன்கு பயன்படுத் திக் கொள்ளத் தவறியதால், வெற்றி வாய்ப்புகள் பல வற்றை இழந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் களத்தி லிருந்துத் தப்பி விடுவான். எதிரியின் தளவாடங்களைப் பாழ் படுத்த தவறி விட்டான். எதிரிகள் ஆங்கிலேயர் என்பதே அவனைப் பலமுறை அச்சுறுத்தி விட்டது. (இக்கூற்றை ஏற்க முடியாது). முறைப்படி போர் புரிய அவனுக்கு முடியவில்லை.'– பேஷ்வாவின் அரசவையில் எழுத்தாளனாக இருந்த அவனிடம் பயிற்சியும், அனுபவமிக்க தளபதி நேப்பியருக்கு இணையான திறமையையோ, போர் முறையையோ மேலசன் எதிர்பார்க்க வேண்டாம்.

அவனைப் பிடிப்பதற்கு எவ்வளவு முயற்சிகள்? எவ்வளவு கடுமையானப் பயணங்கள்? பிரிகேடியர் பார்க் 240 மைல்களை 9 நாட்களில் கடக்கிறான். பிரிகேடியர் சாமர் செட் 230 மைல் களை 9 நாட்களிலும், 70 மைல்களை 2 நாட்களிலும் கடக்கிறார். கர்னல் கோம்ஸ் 54 மைல் மணல் வெளியை 24 மணி நேரத்தில் கடக்கிறார். ஹோனர் 145 மைல்களை 4 நாட்களில் கடக்கிறார். '58, ஜூன் இருபதிலிருந்து, '59 மார்ச் ஒன்று வரை புரட்சித் தலைவர்கள் 3000 மைல்கள் சுற்றினர். மைக்கேல் இதில் 1700 மைல்களும், பார்க் 2000 மைல்களும் துழாவினர். கூடா ரங்கள் இன்றி பல நாட்கள் கடத்தப்பட்டன. அச்சாமான்கள் தொடர்ந்து வந்தாலும் தாத்யாவின் நடமாட்டத்திற்குத் திடீர் திருப்பங்களைத் துருப்புகள் மேற்கொள்ளும். இதனால், கூடாரச் சாமான்கள் வருவதற்கு மேலும் சில நாட்கள் ஆகும். அப் பொழுதெல்லாம் மரநிழலில்—தான் உண்டனர்; உறங்கினர்.

இத்தனைக் காலத்திற்குப் பின்பும், சோதனைக்குப் பின்பும், துரோகத்திற்குப் பின்புந் தான் தாத்யா சிக்கினான். 1859 ஏப்ரல் 18–ஆம் நாள் சிப்ரியில் அவன் தூக்கிலிடப் பட்டான். அவன் அரச பக்தி மிக்கவன். மராத்திய கொரில்லாப் போர் முறைகளில் வல்லவன். மத்திய இந்தியக் காடுகளிலும், இராஜ புதனக் குன்றுகளிலும் அவனுடையப் பாதச் சுவடு படாத இடமே இல்லை. அவனைப் பிடிக்கும் வரை வெள்ளையருக்கு நிம்மதி என்பதே இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பரக்பூரில் மங்கள் பாண்டே தொடுத்தப் புரட்சி அம்பு இன்று தாத்யாவின் உயிரைக் குடித்து நின்றது! (அவன் இறுதி யாக அணிந்திருந்த கம்பளி மேலாடை இலண்டன் காட்சிச் சாலையில் உள்ளது).

தாத்யாவைத் தூக்கிலிடும் முன்னரே, பெரும்பாலான இடங்களில் சட்டமும், ஒழுங்கும் நிலைநாட்டுப்பட்டு விட்டன. பின்னர் இம்மாபெருங் கிளர்ச்சி ஏன் தோன்றியது? என்பதை அரசு அறிய முற்பட்டது. முக்கிய நிகழ்ச்சிகள் நடந்த இடங்களி லெல்லாம் விசாரணைகள் நடத்தப்பட்டன. நூற்றுக்கணக்கில் சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டு, பலர் தண்டிக்கப்பட்டனர். புரட்சி ஏன் தோன்றியது? என்பதற்குப் பலர் பல காரணங் கள் கூறினர். அக் கருத்துகளில் தவறுகள் இருக்கலாம். உள் நோக்கம் எதுவுமில்லை. உணர்ச்சி வயப்படாமல், பாகுபாடுங் காட்டாமல், நடந்தவற்றை ஆராய்ந்தால், இப்புரட்சியின் உண்மையான தன்மையை அறியலாம்.

———

மூன்றும் பகுதி

# 1. புரட்சியின் தன்மைகள்

இந்திய வரலாற்றிலேயே மிகுந்த கருத்து வேறு பாடு களுக்குள்ளான நிகழ்ச்சி; 1857–ல் நிகழ்ந்த பெருங் கிளர்ச்சி. இதைச் சாதாரண சிப்பாய்க் கலகமெனச் சிலரும், திட்ட மிட்டு நடத்தப்பட்ட விடுதலைப் போர் என்று வேறு சிலரும் எண்ணுகின்றனர். இக் கிளர்ச்சியின் தேசியத் தன்மையை மறைப்பதற்காக, வேண்டுமென்றே இதைப் படைக்கலக மெனவுந் திரித்து, மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் எழுது கிறார்கள்; என்றும் பல இந்தியர்கள் நினைக்கின்றார்கள். ஆனால், இது உண்மை அல்ல. அக் காலத்திலேயே இதைப் படைக் கலகமென்று சில இந்தியர்கள் ஒதுக்கி யிருக்கிறார்கள்; மக்கள் கிளர்ச்சி யென்று சில ஆங்கிலேயர்கள் ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள். இதிலிருந்து முரண்பாடான கருத்துகளுக்கு இன வேறுபாடு காரணமல்ல என்பது புலனாகிறது. இக் கருத்து வேறுபாடுகளை வகைப்படுத்திப் பார்ப்போம்.

இங்கிலாந்துப் பொது மக்கள் சபையில் பேசிய சாலிஸ்பரி பிரபு, 'கொழுப்புக் குண்டுகளுக்காக இவ்வளவு பெரிய கிளர்ச்சி நடந்திருக்கும் என்று நான் நம்பத் தயாராயில்லை' என்றார். அக் காலத்தில் வாழ்ந்த ஜான் புரூஸ் நார்ட்டன் (John Burce Norton) என்பவர் இது மக்களின் கிளர்ச்சிதான் என்பதைத் தம் நூலில் விளக்கமாக எடுத்துக் கூறி யிருக் கிறார்.—('Topics for Indian Statesman'). உயர் கல்வி கற்ற இந்தியருடன் நெருங்கிப் பழகிய டாக்டர் அலெக்ஸாண்டர் டஃப் (Dr. Alexandu Duff—'Indian Relellion') கிளர்ச்சிகள் தோன்றிய வேகத்தையும், அது எந்த அளவிற்குப் பரவியது என்பதையும் அழகாக எடுத்துக் கூறி, இதை மக்கள் கிளர்ச்சி என்றே வருணிக்கிறார். சார்லஸ் பால் (Charles

Ball). G. B. மேலசன், J. W. கே ஆகியோரும் வெள்ளையனை வெளியேற்றத் திட்டமிட்டு நடத்தப்பட்ட கிளர்ச்சியே இது என்று கூறுகிறார்கள். பெரும்பாலும் இவர்களுடைய கருத்துகளை வைத்துத்தான் V. D. சாபர்கார், பண்டிட் சுந்தர் லால், அசோக் மேத்தா போன்ற பல இந்தியர்கள் இதை விடுதலைக் கிளர்ச்சியென்றே எழுதியிருக்கிறார்கள். மேலசன், கே போன்றவர்கள் புரட்சித் தலைவர்களிடையே சூழ்ச்சி இருந்ததை ஒப்புக்கொண்டாலும், மற்றபடி இதைப் படைக்கலகம் என்று தான் அழைக்கின்றார்கள்.

சில இடங்களில் மக்கள் கிளர்ச்சியாகத் தோன்றினாலும், முக்கியமாக இது ஒரு படைக்கலகந் தான் என்று அச் சமயத்தில் ஆக்ராவில் நீதிபதியாக இருந்த சார்லஸ் ரெய்க்ஸ் பல விளக்கங்கள் கொடுத்து எழுதினார்—('Notes of the Revolt In North—Westeen Piovinces of India') பஞ்சாப்பின் முதல் ஆணையர் சர்ஜான் லாரன்ஸ் இக் கிளர்ச்சித் திட்டமிடப்பட வில்லை; என்று உறுதியாக நம்பினார். அக் காலத்தில் வாழ்ந்த சையத் அகமத்கான், கேசரி சந்த்மித்ரா ஆகியோரும் இதே கருத்தைக் கொண்டிருந்தனர். சர்ஜான் சீலியும் (Sir John Seelay) இது படைக்கலகம் என ஒதுக்கி யுள்ளார்.

படைக்கலகம், விடுதலைப் போர் ஆகிய இரண்டைத் தவிர வேறு சில கருத்துகளும் உண்டு. இந்துக்களின் அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்ட இஸ்லாமியர்களின் எழுச்சி என்றும், பிராமணர்களுடைய சூழ்ச்சி யென்றும், நிலமானிய எழுச்சி யென்றும் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இனி இது இந்தியாவின் விடுதலைக்காக மேற் கொள்ளப்பட்ட போர் என்ற வாதத்திற்கான சான்றுகளை வகைப்படுத்துவோம்.

1. புரட்சித் தலைவர்களான பகதூர் ஷா, நானாசாஹேப் ஜான்சி இராணி, அயோத்தி பேகம் ஆகியோர் ஆங்கிலேயரை வெளியேற்றுவதற்காகப் பல்வேறு சூழ்ச்சிகளில் ஏற்கனவே ஈடுபட்டிருந்தார்கள். இதற்காகப் பல இந்திய அரசர்களின் ஆதரவையும், பாரசீகம், ருஷ்யா போன்ற வெளி நாடுகளின் உதவியையும் எதிர்பார்த்தனர்.

2. மீரத் சிப்பாய்கள் டெல்லிக்கு வந்ததும், அங்கிருந்த சிப்பாய்களுடன் இணைந்து, வெள்ளையரைக் கொன்று நகரைக் கைப்பற்றியதும், சிப்பாயின் மத்தியில் ஒரு திட்டம் இருந்தது; என்பதை நிரூபிக்கிறது. ஒரு குறுகிய கால இடை வெளிக்குள்

ஏறத்தாழ ஒரே மாதிரியாக, எல்லாப் படை தளங்களிலும் கிளர்ச்சிகள் தோன்றின. சிப்பாய்களுக்கிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்தும், இரகசியத் திட்டமும் இருந்தன என்பதை உறுதி செய்கின்றது.

3. கிளர்ச்சிக்கு முன்பே மௌல்வி அகமதுல்லா போன்றவர்கள் நாட்டின் பல பாகங்களில் ஆங்கில எதிர்ப்புப் பிரச்சாரஞ் செய்து மக்களின் ஆதரவைத் திரட்டினார்கள். பக்கிரிகளும், பரதேசிகளும் சிப்பாய்களைத் தூண்டியதுடன் ஒற்றர்களாகவும் நடமாடினர்.

4. வரப்போகும் பெருங் கிளர்ச்சியை அறிவிக்கக் கிராமந் தோறும் 'சப்பாத்திகள்' விநியோகிக்கப்பட்டன.

5. முகலாயப் பேரரசின் தலைமையிலும், பெயரிலுந் தான் எல்லா இடங்களிலும் கிளர்ச்சிகள் தோன்றின. பகதூர் ஷாவின் பிரதிநிதிகளாகத்தான் நானா சாஹேப், அயோத்தி பேகம், ஜான்சி இராணி, கான் பகதூர் கான் ஆகியோர் தங்கள் தங்கள் பகுதிகளில் ஆட்சி புரிந்தார்கள் (கிளர்ச்சித் தோன்றிய பின்னர்).

6. படை தளங்கள் இல்லாத இடங்களில் கூடக் கிளர்ச்சிகள் தோன்றின. இது, பொது மக்களின் பங்கைக் குறிக்கிறது. ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டது, துப்பாக்கி ஏந்திய சிப்பாய்கள் மட்டுமல்ல. எத்தனையோ இடங்களில் ஈட்டியும் வில்லும் ஏந்திய பலர் வெள்ளைத் துருப்புகளை எதிர்த்தனர். இதுவும் மக்களின் ஈடுபாட்டையே காட்டுகின்றது.

7. தப்பியோடிய ஆங்கில அகதிகள் பல இடங்களில் பொது மக்களால் துன்புறுத்தப்பட்டனர். பகற் போதிலிலும், நெடுஞ்சாலைகளில் கூட நடமாடுந் துணிவு அவர்களுக்குக் கிடையாது. தண்ணீர் அருந்துவதற்குக் கூடச் சில கிராமங்களை அவர்களால் அணுக முடியவில்லை.

8. குறு நிலத் தலைவர்களும், சிற்றரசர்களும், தங்கள் தங்கள் ஆதரவாளர்களைத் திரட்டி அரசாங்கத் துருப்புக்களை எதிர்த்தனர். குறிப்பாக வடக்கு மாநிலங்களில் ஜமீன்தார்களும், சிற்றரசர்களும் மீண்டுந் தங்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்கள், சுதந்திர மன்னர்களாகத் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்ட இவர்களுக்கு, மக்கள் எவ்வித எதிர்ப்புங் காட்டவில்லை.

9. கலகஞ் செய்த சிப்பாய்களுக்கு எதிராக ஓர் இடத்தில் கூடப் பொது மக்களைத் திரட்டுஞ் சக்தி ஆங்கில அதிகாரிகளுக்கு இல்லை,

10. அயோத்தியைப் பொறுத்த மட்டில் அங்கிருந்த மக்களனைவருமே ஆங்கிலேயரின் எதிரிகள்தான். முழு கிராமங்கள் பல எரிக்கப்பட்டதும், பாமரர்கள் கொல்லப்பட்டதும் இதற்குச் சான்றுகளாகும்.

11. இது மக்கள் கிளர்ச்சி என்பதால் தான் அதை அடக்கும் முயற்சியில் ஆரம்பத்தில் சிறிதளவு பயனையே அரசு பெற்றது.

12. யார் கலகக்காரர்கள்? என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு, மக்களின் எதிர்ப்பு இருந்ததால் தான், சில குறிப்பிட்ட கிராமங்கள் முழுவதையுமே தண்டிக்கும்படித் தளபதிகளும், மாஜிஸ்டிரேட்டுக்களும் ஆணை யிட்டனர்.

13. உத்தரப் பிரதேசம் முழுவதிலும், மத்தியப் பிரதேசம் பீகார் ஆகியவற்றின் சில பகுதிகளிலும் ஆங்கில ஆட்சியே செயல்பட வில்லை.

14. பீகார்ப் பகுதி மக்கள் கலகக்காரர்களைப் பற்றித் தவறான செய்திகளை அளித்து, வெள்ளையர்களை அடிக்கடி அலைக்கழித்தனர். அயோத்தி மக்களோ புரட்சிக்காரர்களுக்கு உணவும், பொருட்களும் தந்தனர்.

15. பஞ்சாப்பிலிருந்த பெரும் பணக்காரர்கள் பலர் நெருக்கடி நிலையை யொட்டி அரசாங்கம் கேட்ட நிதி உதவியைச் செய்ய மறுத்து விட்டனர்.

16. பெரும் புரட்சி முடிந்து எடுக்கப்பட்ட கணக்குப்படி ஓர் இலட்சம் சிப்பாய்களும், ஓர் இலட்சம் பொது மக்களும் இதில் உயிரிழந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

17. இறந்தவர் பட்டியலில் சிப்பாய்களுடன் பொது மக்கள் பெயர்களும் மாறி மாறி வருகின்றன. இம் மக்களெல்லாம் தங்கள் குறைகளைப் போக்கிக் கொள்ளப் புரட்சியில் ஈடுபட வில்லை.

18. இலக்னோவில் புரட்சிக்காரர்களை அடக்க அரசாங்கம் 36,000 வீரர்களைப் பயன்படுத்தியது. ஆனால், செபாஸ்ட்ட பூல் போர்க் களத்தில் (கிரிமியாப் போர்) ருஷ்யர்களை எதிர்க்க 26,000 ஆங்கில வீரர்களே பயன்படுத்தப்பட்டனர். இந்த விகிதமே புரட்சியின் அளவையும், தேசியத் தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது.

19. மீரத், அலிகார் போன்ற இடங்களில், மக்கள் தான் சிப்பாய்களைக் கிளர்ச்சிக்குத் தூண்டினர். பாட்னா போன்ற இடங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்தவர்களை மக்கள் தம் சாதியிலிருந்து நீக்கி விட்டனர்.

20. அரசாங்கத்தை நேரடியாக எதிர்க்க முடியாத பலர் அதனுடன் ஒத்துழைக்க மறுத்தனர். கான்பூரில் தளபதி ஹேவ்லாக் கங்கையைக் கடக்கும் முயற்சிக்குத் தேவையான படகோட்டிகளைச் சேர்க்க முடியவில்லை. வெள்ளையர் முகா மிலிருந்து இரவில் சுதேசிப் பணியாட்கள் தப்பிவருவது அடிக் கடி நடைபெறும் ஒன்று.

21. புரட்சியின்போது நிலவிய இந்து முஸ்லிம் மத ஒற் றுமையே அதன் தேசியத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. ஆங்கிலேயரின் பிரித்தாளுஞ் சூழ்ச்சி இம் முறை வெற்றி பெற வில்லை.

22. டெல்லியில் பகதூர்ஷாவும், பெரெய்லியில் கான் பக தூரும், பசுவதையைத் தடைசெய்து இந்துக்களின் ஆதரவைப் பெற்றனர்.

23. முகலாயப் பேரரசனின் பிரதிநிதியாகத் தான் மாரத் திய நானா சாகேப் ஆட்சி செய்தான். அவனுடைய அமைச்சன் கூட அசிமுல்லாகான் என்ற முகமதியன்தான். இதே போல், ஜான்சியில் இந்து இராணிக்குக் கீழ்ப் பல முகம்மதிய அதிகாரிகள் இருந்தனர். டெல்லியிலும், பெரெய்லியிலும் பல இந்துக்கள் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.

24. டெல்லியிலும், லக்னோவிலும் அமைக்கப்பட்ட அரசு களில் ஜனநாயகத் தன்மைகள் காணப்படுகின்றன. ஆட்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் அரச அதிகாரிகள், குறுநிலத் தலைவர்கள் ஆகியோருடன் சிப்பாய்களால் தேர்ந்

தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளும் பங்கு பெற்றனர். நாறு சாகேப்பின் இராணுவ அமைப்பில் ஊதிய விகிதங் கூட அதிகமாக இல்லை.

இதைப் பெரும் மக்கள் கிளர்ச்சி, அல்லது விடுதலைப் போர் என்று அழைப்பவர்களின் வாதம் இந்த 24 சான்றுகளுக்குள் ஏறத்தாழ அடங்கும், ஒரு விடுதலைப் போருக்குத் தேவை யான எல்லாத் தன்மைகளும் பொதிந்து இருப்பதாகக் கருதப் படும் இச்சான்றுகளை, நாம் மூன்று பகுதிகாளகப் பிரிக்கலாம். (1) ஆங்கிலேயரை வெளியேற்றுவதற்காக ஒரு சூழ்ச்சி உரு வாக்கப்பட்டது. (2) பொது எதிரியை ஒழிப்பதற்காக அனை வரும் மத இன வேற்றுமைகளை மறந்தனர். (3) பொது மக் கள் பெரு மளவில் நேரடியாகப் புரட்சியில் பங்கு கொண்ட னர். இனி இக்கூற்றுக்களின் உண்மைகளை நாம் தனித் தனி யாக ஆராய்வோம்.

———

## 2. பகதூர் ஷா சூழ்ச்சியில் ஈடுபட்டரா?

மன்னர் பகதூர் ஷா பாரசீக மன்னருடன் இரகசியத் தொடர்பு கொண்டிருந்ததாகக் கே, டஃப், நார்ட்டன், மேலசன் ஆகியோர் கருதுகிறார்கள். இக் கருத்துக்கு ஆதார மாக இருக்கும் நான்கு பேருடைய கூற்றை நாம் பார்ப்போம்.

1. பகதூர் ஷா விசாரணையில் அவருடைய செயலாளர் முகுந்லால் கூறியது: 'கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்ன ருக்குத் வெள்ளையர் மேல் வெறுப்பு அதிகாமாயிருந்தது. இலக்னோவிலிருந்து சில மொகலாய இளவரசர்கள் டெல்லிக்கு வந்து பாரசீக ஷாவிற்குக் கடிதம் எழுதும்படி மன்னரைத் தூண்டினார்கள். அதன்படி, எழுதப்பட்ட கடிதம் சிபி கம்பார் என்பவர் மூலம் பாரசிகத்திற்கு அனுப்பப்பட்டது.'

2. முகமது தார்வாஷ் என்பவனின் கூற்று: 'பாரசீக மன்னர் அப் பகுதியிலுள்ள பல கிறித்துவர்களைத் தோற் கடித்து விட்டார். அப்பாரசீகப் படை காண்டஹார், கபூல் வழியாக விரைவில் டெல்லிக்கு வரும். இச்சமயத்தில் பாரசீக மன்னருடன் கடிதத் தொடர்பை அதிகரிக்கும்படி ஹசன் அங்காரி என்பவன், மன்னர் பகதூர் ஷாவை வற்புறுத் தினன். டெல்லி அரண்மனையில் பாரசீகரின் வருகையைப் பற்றி, இரவு பகலாகப் பேசிக் கொண்டார்கள். பாரசீக மன்னர் இங்குவந்து, ஆங்கிலேயரை வெளியேற்றி, மொகலாய மன்னரை மீண்டும் பழைய நிலையில் வைப்பார்.'

3. 1857, ஏப்ரல் மாத இறுதியில், திருமதி ஃபிளமிங் (Mrs. Flemming) என்பவள் இளைய ராணி ஜீனத் மஹாலின் மாளிகைக்குச் சென்றிருந்தாள். அவளுடைய மகள் திருமதி ஸ்கல்லி (Mrs. Scully) இளவரசன் ஜாவன் பக்த்துடன் பேசிக் கொண்டிருந்தாள். அவளிடம் இளவரசன், 'வெகு விரைவில்

ஆங்கிலேயர்களை எங்கள் காலடியில் மிதித்து, இந்துக்களையுங் கொல்லுவோம்.' என்று கூறியிருக்கிறான். திருமதி ஸ்கல்லி அந்த இடத்திலேயே தன் தாயிடம் இதைப் பற்றி புகார் செய்தாள். திருமதி ஃபிளமிங் இளவரசனை என்னவென்று வினவ? 'நான் விளையாட்டுக்காக அப்படிச் சொன்னேன்.' என்று அவன் பதில் கூறினான். 'நீ சொன்னது உண்மையாக இருக்குமானால், உன் தலைதான் முதலில் உருளும்; என்று திருமதி ஃபிளமிங் எச்சரித்தாள். அதற்கு இளவரசன் 'பாரசீகர்கள் டெல்லிக்கு வருகிறார்கள். அச் சமயத்தில் நீங்கள் என்னிடம் வந்தால் நான் உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறேன்.' என்று பதில் சொன்னான்.

4. பாரசீகத்திலிருந்து தூதுவர், இந்தியத் தலைமை—ஆளுநர் கேனிங்கிற்கு எழுதிய கடிதத்தில் காணப்படும் செய்தி: 'வட இந்திய முஸ்லிம் சீமான்களைக் கிளர்ச்சியில் ஈடுபடும்படித் தூண்டுங் கடிதங்களைத் தாம் எழுதியதாக, இங்கேயுள்ள ஒரு பாரசீக அதிகாரி ஒப்புக் கொண்டுள்ளார்.'

5. பாரசீக மன்னர் பெரும் படையுடன் இந்தியாவிற்கு வருகிறார்; அவருடைய வெற்றிக்கு முகமதியர்கள் அனைவரும் உதவ வேண்டும்.' என்று எழுதப்பட்ட சில அறிக்கைகள் டெல்லி நகர சுவர்களில் ஒட்டப்பட்டிருந்தன.

பாரசீகம் மட்டுமன்றி, ருஷ்யாவுடனும் பகதூர் ஷா தொடர்பு கொண்டிருந்தார்; என்று ஜான் எவரெட் (John Everett) என்ற ஆங்கிலோ இந்திய ரிசால்தார் சாட்சியுங் கூறியிருக்கிறார். 'ஆறு மாதங்களுக்கு முன்பு பகதூர் ஷா ருஷ்யாவிற்குத் தூது அனுப்பியிருந்தார். ஓர் இலட்சம் வீரர்களுடன் ருஷ்யர்கள் இந்தியாவின் மேல் படையெடுக்கப் போகிறார்கள்; என்று புரட்சிக்குச் சில வாரங்களுக்கு முன்பே சிப்பாய்கள் பேசிக் கொண்டனர். மேற்கண்ட செய்திகளிலிருந்து பாரசீகத்துடனும், ருஷ்யாவுடனும் தொடர்பு கொள்ள சில முயற்சிகள் நடந்ததாகவுந் தெரிகிறது. அன்றைய அகில உலக அரசியல் நிலை இத்தகைய ஒரு சூழ்ச்சிக்குச் சந்தர்ப்பம் அளிக்குமா? என்பது ஒரு கேள்வி. இந்த இரண்டு நாடுகளும், உதவிக்கு வரும் என்று சிலர் எதிர்பார்த்திருந்தால், அது நியாயமானதே. கிரிமியாப்போரும், பாரசீக இங்கிலாந்து உறவும் சிலருக்கு இவ்விதம் எண்ண இடமளித்திருக்கலாம். பகதூர் ஷா அனுப்பியதாகச் சொல்லப்படுங் கடிதங்கள் உரிய இடங்களை அடைந்தனவா? அவற்றிற்குப் பதில் கிடைத்தனவா? என்பதுந் தெரிய

வில்லை. அயோத்தி மன்னர் (முகமதிய மதத்தில்) ஷியாப் பிரிவைச் சார்ந்தவர், பாரசீக நாடும் ஷியாப் பிரிவைச் சார்ந்ததே. மொகலாய மன்னர் பகதூர் ஷாவை ஷியாப் பிரிவிற்கு மாற்றிப் பாரசீகத்துடன் தொடர்பு கொள்ளும்படிச் செய்யச் சிலர் முயன்றதாகச் சொல்லப்படுகிறது. எப்படியிருப்பினும் மன்னர் பகதூர் ஷா இந்த இரண்டு நாடுகளுடனும் எந்த இரகசிய அரசியல் ஒப்பந்தத்திலும் ஈடுபடவில்லை; என்பது மட்டும் உறுதியாகிறது.

சிப்பாய்களுடன் புரட்சிக்கு முன்பு பகதூர் ஷா இரகசியத் தொடர்பு கொண்டரா? மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, டெல்லியில் நிறுத்தப்பட்டிருந்த அரசாங்கப் படையின் சில சிப்பாய்கள் அவ்வப்பொழுது அரண்மனைக்குச் சென்று அரசருடைய ஆசியைப் பெற்று வருவது வழக்கமாக இருந்திருக்கின்றது. வேறு எந்தவிதமான நோக்கமும் இந்தச் சந்திப்புகளில் இல்லை. நாளடைவில் அப்பழக்கமும் நிறுத்தப்பட்டது. இதைத் தவிர, பகதூர் ஷா சிப்பாய்களுடன் ஆங்கிலேயருக்கு எதிராக எந்தச் சதியிலும் ஈடுபட வில்லை. பல வரலாற்று ஆசிரியர்களே இதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். மே 11 ஆம் நாள் மீரத் சிப்பாய்கள் டெல்லி வந்த போது மன்னர் நடந்து கொண்ட விதமே இதை ஏற்கும்படிச் சொல்லுகிறது. மன்னரின் செயலாளர் முகுந்லால் தம் சாட்சியத்தில் 'மீரத் கிளர்ச்சிக்கு நான்கு நாட்களுக்கு முன்பு—சிப்பர்ய்கள் விரைவில் கிளர்ச்சியிலீடுபடுவார்கள்; டெல்லிக்கு வந்து மன்னரைப் பழைய நிலையில் அமர்த்துவார்கள்; என்று அரண்மனைக் காவலர்கள் பேசிக் கொண்டார்கள்;' 'என்று கூறியுள்ளார். சிப்பாய்த் தலைவர்கள் மத்தியில் ஒரு சூழ்ச்சி உருவாகியிருந்தாலும் அதற்கும், பகதூர் ஷாவிற்குந் தொடர்பு கிடையாது. புரட்சிக்கு முன்பு சுதேசி அரசர்களுடன் பகதூர் ஷா இரகசியத் தொடர்பு கொண்டார் என்பதற்கும் ஆதாரங்கள் இல்லை.

# 3. நாஞு சாஹேப் சூழ்ச்சியில் ஈடுபட்டாரா?

நிறுவன அரசு ஒய்வுப் பணத்தையும். பேஷ்வா பட்டத்தை யும் நிராகரித்து விட்டதால், நாஞு சாஹேப் தன் வழக்கை எடுத்துரைக்க அசி முல்லா கானை இங்கிலாந்திற்கு அனுப்பி ஞர். அங்கு எந்தப் பயனும் கிட்டாததால், அசி முல்லா கான் வெறுங் கையுடன் திரும்பி வந்தான். வரும் வழியில் கிரிமியாப் போரில் ஆங்கிலேயர் ருஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டதை நேரில் கண்டான். இந்தியா வந்த பின்பு, நாஞுவும், அசி முல்லா கானும் ஆங்கிலேயரை வெளியேற்ற ஒரு சூழ்ச்சியிலீடுபட் டனர். இந்தியாவிலுள்ள எல்லாச் சுதேசி அரசர்களுக்கும், நாஞு இரகசியத்தூது அனுப்பித் தன் சூழ்ச்சிக்கு ஆதரவு திரட்டினர். இவ்வாறு J. W. கே. நாஞு சாஹேப்பின் மேல் குற்றஞ் சுமத்துகிருர். V.D. சாவர்காரும் 'பெரும்' புரட்சியைச் சுதந்திரப் போராகக் கொள்வதற்கு இந்தச் சூழ்ச்சியை ஆதார மாகக் கொள்கிருர்.

நாஞு சூழ்ச்சியிலீடுபட்டார் என்பதற்கு முக்கிய ஆதார மாக இருப்பது சீதாராம் பாவாவின் சாட்சியம். 1858 ஜனவரி மாதத்தில் மைசூர் நீதித்துணை ஆணையர் H. B. தேவரூ (H. B. Devereux) என்பவர் நடத்திய விசாரணையில், சீதாராம் பாவா என்ற இந்து பரதேசி ஒருவன் இந்த விளக்கத்தைக் கொடுத் தான். அவனுடைய கூற்றுப்படி, '20 ஆண்டுகளுக்கு முன்பே குவாலியர் இந்தியாவின் விதவை ராணி பய்ஜா பாய் ஆங்கிலே யரை வெளியேற்ற ஒரு சதியில் ஈடுபட்டாள், அதன் பின்பு நாஞு இதைத் தொடர்ந்தார்; நாஞுவின் குருதாசா பாபா தான் (Dassa Baba) இந்தச் சூழ்ச்சிக்கு மூல காரணம், தன் குருவின் அறிவுரைப்படி இந்தியாவிலுள்ள எல்லா அரசர்களுக்கும் கிளர்ச்சியில் சேரும்படி நாஞு தூதனுப்பினர்; இக் கடிதப்

போக்குவரத்து 1853 ஆம் ஆண்டிலிருந்தே நடந்து வந்தது; திருவாங்கூர் மன்னர் இதற்குச் சம்மதிக்கவில்லை; மைசூர் மன்னர் ஆதரவு அளித்தார்; அயோத்தி இணைப்பிற்குப் பின்பு (1856) பல சுதேசி அரசர்கள் பதிலனுப்பினர்கள்; ஜம்மு மன்னர் படையும், பணமும் அளிக்கச் சம்மதித்தார்; ஹைதராபாத் நிஜாம் தம்மிடம் பொருள் இல்லையென்றும், ஆதரவை மட்டுந் தருவதாகவும் வாக்களித்தார்; இது இந்துக்களின் சூழ்ச்சி தான். அயோத்தி இணைப்புக்குப் பின்பு தான் இச் சூழ்ச்சியில் முகமதியர்கள் சேர்ந்தனர்; நாஞவின் குரு தாசா பாபா தான், இப்பெருந் திட்டத்தின் தலைவர் போன்றவர்; அவருக்கு 125 வயது; அவருக்கு இணையாக இந்தியாவில் எவருமில்லை! இவ்வகையில் ஒரு குறிப்பிட்ட நாளில் ஆங்கிலேயர்களைக் கொல்லத் திட்டமிடப் பட்டது. முதலில் காசியைக் கைப்பற்றிய பின்பு கல்கத்தாவை அடைவது தான் ஏற்பாடு. உஜ்ஜெயினியிலிருந்த பய்ஸா பாயின் திட்டத்தையும், நாஞ சாஹேப்பின் திட்டத்தையுங் குரு தாசா பாபாதான் இணைத்தார், நாஞ ருஷ்யாவிற்குந் தூது அனுப்பினர். நாஞ டெல்லியைக் கைப்பற்றி விட்டால், அடுத்து உதவி தருவதாக ருஷ்யா கூறியது. நாஞ சிறிதுந் தகுதியில்லாதவர். தாசா பாபா இல்லையென்றால், அவர் வெறும் பூஜ்யம் தான். கம்பெனி சர்க்கார் அவருடைய தந்தையின் பணத்தை எடுத்துக் கொண்டதால், அதை மீண்டும் பெறுவதற்காக நாஞ கிளர்ச்சியில் ஈடுபட்டார்.' சிதாராம் பாவா அளித்த சாட்சியத்தின் சாரம் தான் இங்குக் கூறப்பட்டுள்ளவை.

'இவையெல்லாம் நீ எப்படி அறிந்தாயென்று சிதாராம் பாவாவைக் குறுக்குக் கேள்வி கேட்டபோது, அவர் சொன்ன பதில்: 'எல்லோரும், குறிப்பாக ஒவ்வொரு பிராமணரும் இதை அறிந்திருப்பர். கல்கத்தாவிலுள்ள 'பாபு'களும் இக் கடிதப் போக்குவரத்தை நன்கறிந்தவர்கள்தான்' இந்தப் பதிலில் தான் அவன் அளித்த சாட்சியத்தின் உண்மை அடங்கியிருக்கிறது. எல்லோரும் இந்த இரகசியங்களை அறிந்திருப்பார்களென்றால், அது வெறும் ஊர் வதந்தி தான்! இந்த வதந்திகளிலிருந்து, தாம் அறிந்தவற்றை அவன் கூறியிருக்கிறன். எந்தப் பயங்கர நிகழ்ச்சி நடந்தாலும், அதன் தோற்றத்திற்காகப் பல விசித்திர விளக்கங்கள் பலரால் தரப்படும். அதுவும் அக்காலத்தில் உண்மைகளை உறுதிப் படுத்திக் கொள்ள கல்வியறிவும், பத்திரிகைத் தொடர்புகளுஞ் சரியாக ஏற்படாத நிலையில் வதந்திகளுக்கு எவ்வளவு சக்தி இருந்திருக்க வேண்டும், என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். நாஞவின்

நடத்தையில் குற்றங் காணத் துடித்த, அவர் சதிகாரன் என்பதை உறுதிப்படுத்த முயன்ற, பல ஆங்கில அதிகாரிகளே சீதாராம் பாவாவின் இக்கட்டுக் கதைகளை நம்பவில்லை.

கான்பூரில் நானா தோற்கடிக்கப்பட்டு வெளியேறிய பின்பே அவனுடைய பிதூர் மாளிகையை ஆங்கிலேயர்கள் சோதனை யிட்டார்கள். இரண்டு பெட்டகங்கள் நிறைய இருந்த கடிதங் களில் கிளர்ச்சிக்கு ஆதரவு தந்து சுதேசிச் சிற்றரசர்கள் எழுதிய கடிதம் ஒன்று கூட ஆங்கில்லை. (இங்கிலாந்து சென்று திரும்பிய அசி முல்லா கானுக்கு ஆங்கில மங்கையர் எழுதிய காதல் கடிதங்கள் பல அங்கே இருந்தன!) இது நாள் வரை நானா சாஹேப்பிற்கும், பிற அரசர்களுக்கும் இரகசியக் கடிதப் போக்குவரத்துகள் இருந்ததாக நிரூபிக்கப் படவில்லை. மருத் துவர் அஷா னுல்லாவும் பகதூர் ஷா விசாரணையில், நானா சாஹேப்புடன் மொகலாய மன்னருக்கு ஆரம்பத்தில் தொடர்பு எதுவும் இருந்ததாகவுங் கூறவில்லை.

நானா சாஹேப் சூழ்ச்சியில் ஈடுபட்டிருந்தார் என்பதற்கு மற்றொரு ஆதாரமாக நானக் சந்த் என்பவரின் நாட் குறிப்பு எடுக்கப்படுகிறது. இவருடைய நாட்குறிப்பைத் தழுவித்தான் கான்பூரில் நடந்த கோரமான, சோகமான நிகழ்ச்சிகளை உணர்ச்சிமிக்க மொழியில் (பிற ஆதாரங்களுடனும்) சர் ஜியார்ஜ் ட்ரிவிலியன் (Sir George Trevelyan) எழுதினார். ரைஸ் ஹோம்ஸ௱ம் (Dr. Rice Haomes) இந்த நாட் குறிப்பைப் பல இடங்களில் ஆதாரமாகக் கொண்டுள்ளார். நானக் சந்த்தின் கூற்றுப்படி, ‘நானா ஏற்கனவே சிப்பாய்களிடம் இரகசியத் தொடர்பு கொண்டிருந்தார். மே 23 ஆம் நாள் (கான்பூர் கிளர்ச்சிக்கு 10 நாட்களுக்கு முன்பே) சிப்பாய்கள் அவருடன் சேர்ந்து கொண்டனர். நானா தம் வெள்ளை நண்பர்களை நயவஞ்சகமாக ஏமாற்றிக் கொலை செய்தார்.’

நானக் சந்த்தின் நாட்குறிப்பில் காணப்படும் செய்திகள் உண்மையாயென்பதை அறியு முன்பு அவருடைய தகுதியைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளுவோம். கான்பூரில் வழக்கறிஞ னாகவும், வணிகனாகவும் இந்த நானக் சந்த் அப்போது வாழ்ந்து வந்தான். நானா சாஹேப்பின் குடும்பத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு வாரிசு உரிமைப் போட்டி தோன்றிய போது, அவருக்கு எதிராக (நானாவின் உறவினன் சார்பில்) இந்த நானக் சந்த் வழக்காடி இருக்கின்றான். சில காலமாகவே நானா சாஹேப்பின் எதிரியாக இந்த நானக் சந்த் இருந்திருக்கின்றான். புரட்சித்

தொடங்கிய போதும், நானுவிற்கு எதிரான ஒரு வழக்கில் இவன் சம்மந்தப்பட்டிருந்தான். நானு தன்னுடைய எதிரி தான் என்பதை நானக் சந்த் கூறுவதற்குத் தயங்கவில்லை. நானுவை 'அர்தப் பத்மாஷ்' (அந்தப் போக்கிரி) என்றே தன் நாட் குறிப்பில் எழுதி யுள்ளான்.

நானுவின் எதிரி என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒருவனுடைய நாட்குறிப்பை எந்த அளவு நம்புவது? நானக் சந்த், என்பவன்தான் ஆங்கில ஆட்சியின் ஆதரவாளன் என்று கூறிக் கொள்கிறான். மேலும் கான்பூரில் நடக்கும் கிளர்ச்சிச் செய்திகளைத் தொகுத்துக் கொடுத்தால், தனக்கு அரசாங்கத்தின் வெகுமதி கிடைக்கும் என்பதை அறிந்தே தினமும் குறிப்பு எழுதியதாகவும், அவனே ஒப்புக் கொண்டுள்ளான். மேற் கண்ட பின்னணியில் இந்த நாட்குறிப்பின் உண்மையை நாம் ஆராய வேண்டும். 'நானக் சந்தின் நாட் குறிப்பு முன்னுக்குப் பின் முரணாகவும் இருக்கிறது; ஓர் இடத்தில் இருந்து கொண்டு ஒரே சமயத்தில் பல இடங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளை எந்த அளவு உண்மையுடன் அவன் எழுத முடியும்? பொதுவாக, அவ்வப் பொழுது இந்த நாட் குறிப்பு எழுதப்பட்டதாகவே தெரியவில்லை. ஆங்கிலேயரிடமிருந்து ஆதாயம் பெறுவதற்காகப் பல கட்டுக் கதைகளையும், நானுவிற்கு எதிரான வதந்திகளையும் வைத்துத் தன் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப இந்த நாட் குறிப்பு எழுதப்பட்டிருக்கின்றது.' இவ்வாறு S.N. சென்னும், R. C. மஜும் தாரும் நானக் சந்த் நாட்குறிப்பை ஒதுக்கித் தள்ளி யுள்ளார்கள்.

சிப்பாய்களுடன் அவர் சூழ்ச்சியில் ஈடுபட்டிருந்தால், கான்பூர் வெள்ளையதிகாரிகளின் வேண்டுகோளுக் கிணங்கித் தன் வீரர்களையனுப்பிக் கருவூலத்தையும், தளவாடத்தையும் பாதுகாக்க நானு முன்வர வேண்டியதில்லை. அங்கே கிளர்ச்சித் தோன்றியதும், அவரும், சிப்பாய்களும் டெல்லியை நோக்கிச் சிறிது தூரஞ் சென்று பின் கான்பூருக்குத் திரும்பத் தேவையில்லை. கால்பி, லக்னோ, அம்பாலா ஆகிய படை தளங்களுக்குக் கிளர்ச்சிக்கு முன்பு அவர் சென்றதை மட்டும் ஆதாரமாகக் கொண்டு, சூழ்ச்சியில் அவருடைய பங்கை நாம் தீர்மானிக்க முடியாது. சீதாராம் பாவா, நானக் சந்த் ஆகிய இருவரின் கூற்றுகளும் முழுவதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல.

சூழ்ச்சியில் அவர் பங்கு பெற்றிருப்பார் என்பதைப் பின்ஞல் நடந்த நிகழ்ச்சிகளும் நிருபிக்கவில்லை. புரட்சித் தோன்றும் வரை ஆங்கிலேயரின் நெருங்கிய நண்பராகக் காட்சியளிக்கிருர். மீரத் நிகழ்ச்சிக்குப் பின் தன் வீரர்களை அனுப்பி அவர்களுக்கு உதவுகிருர். கிளர்ச்சிக்குப் பின் டெல்லிப் பயணம் நிறுத்தப்படுவது அவர் சிப்பாய்களுக்குத் தலைமை தாங்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. மொகலாயப் பேரரசரின் சார்பில் பேஷ்வாவாகப் பட்டஞ் சூட்டிக் கொள்ளுகிருர். ஆனுல், பகதூர் ஷாவும், நாஞ சாஹேப்பும் ஒரு முறைகூட சந்தித்துக் கொள்ளவில்லை! முக்கியமாக, சிப்பாய்கள் தாம் அவரைப் பலவந்தமாகப் புரட்சிக்குத் தலைமை ஏற்கும்படிச் செய்தார்கள் என்பதற்கு ஓரளவு ஆதாரம் உண்டு. நாஞவைத் தங்கள் கைப்பொம்மையாகக் கான்பூர் சிப்பாய்கள் ஆட்டிப் படைத்தனர்; என்றே தாத்யா தோப்பின் வாக்கு மூலத்தில் அறியப்படுகிறது.

———

# 4. ஜான்ஸி இராணி சூழ்ச்சியில் ஈடுபட்டாளா?

1857-ல் பெருங் கிளர்ச்சியைப் பெற்றெடுத்தத் தலைவர்களில் போர்க் களத்தில் வீர மரணம் எய்தியவள். இராணி இலட்சுமிபாய் ஒருத்தியே! அவள் தன் வளர்ப்பு மகனை வாரிசாக ஏற்க மறுத்ததுடன் அவளுடைய இனிய ஜான்சியையும் ஆங்கிலேயர்கள் அபகரித்துக் கொண்டது மன்றி, இந்த ஏமாற்றத்திலிருந்து விடுபடும் முன்னரே ஜான்சி மக்களின் மனம் நோகும்படியும் நடந்து கொண்டனர். இங்கிலாந்திற்குக் கொண்டு செல்லப்பட்ட இராணி இலட்சுமியின் முறையீடுந் தள்ளுபடி செய்யப் பட்டது. அவள், தன்மானம் மிக்கவளாதலால், தனக்களிக்கப்பட்ட ஒய்வுப் பணத்தையும் வாங்க மறுத்து விட்டாள். கடந்த சில ஆண்டுகளாக ஆங்கிலேயர்களின் மேல் அவள்கொண்டிருந்த ஆத்திரம் வளர்ந்து விட்டது. இந்தப் பின்னணியில் தான் புரட்சியில் ஜான்சி இராணி மேற் கொண்ட பங்கை வரலாற்றாசிரியர்கள் தீர்மானிக்கின்றார்கள். ஆங்கில ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அவள் சூழ்ச்சியில் ஈடுபட்டாள் என்பது G. B. மேலசனின் குற்சச்சாட்டு. இவ் வழக்கை நாம் ஆராய்வோம்.

மீரத் நிகழ்ச்சிக்குப் பின்பு, ஜான்சியிலிருந்த சிப்பாய்களைத் தூண்டி விட்டு, அக் கிளர்ச்சிக்கு அவள் தலைமை தாங்கினாள்; அங்கிருந்த ஆங்கிலேயருக்குப் பாதுகாப்பு அளிப்பதாக ஆசை காட்டி, நயவஞ்சகமாக அவர்களைக் கொலை செய்தாள்; அதன் பிறகு 57 ஜூன் 9-ஆம் நாள் தன்னை ஜான்சியின் இராணியாகப் பிரகடனப் படுத்திக் கொண்டாள். மேலசனின் இந்தக் குற்றச்சாட்டை ஆராயுமுன்பு ஒன்றை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். பின் நிகழ்ச்சிகளைக் கொண்டு ஒருவருடைய முன் குணத்தை மதிப்பிடுவது அனைவருக்கும் பொதுவான குணம்.

நானு சாஹேப், ஜான்சி இராணி ஆகிய இருவருடைய பின் நடத்தையை வைத்துத்தான் அவர்கள் சூழ்ச்சியில் ஏற் கெனவே ஈடுபட்டிருந்தனர்; என்று பல வரலாற்ருசிரியர்கள் தீர்மானித்திருக்கிருர்கள். இராணியைப் பற்றி இம் முடிவிற்கு வர ஆங்கில வரலாற்ருசிரியர்கள் ஆதாரமாகக் கொள்ளும் நிகழ்ச்சிகள் இவை.

1. 1857-ஆம் ஆண்டு '57 ஜூன் 6-ஆம் நாள் இராணியின் தலைமையில் ஓர் ஊர்வலம், ஜான்சி நகரத்திலிருந்து படை தளத்திற்குச் சென்றது. அசூர் அலி என்பவன் (சிப்பாய் கலைத்) தொழுகைக்கு அழைத்தான். உடனே அவர்கள் கிளர்ந்தெழுந்து தங்கள் அதிகாரிகளை நோக்கிச் சுட்டார்கள்—J. W. கே.

2. மறுநாள் கோட்டைக் குள்ளிருக்கும் ஆங்கிலேயர்கள் பாதுகாப்புடன் வெளியேறும் அனுமதியை இராணியிட மிருந்து பெற, கேப்டன்ஸ்கென் (Skene) மூன்று அதிகாரிகளை அனுப்பி வைத்தான். இராணி அவர்களைச் சிப்பாய்களிடம் ஒப்புவித்து விட்டாள். சிப்பாய்கள் அவர்களைக் கொன்றனர்—J. W. கே. (இச்சமயத்தில் 'அந்த ஆங்கிலப் பன்றிகளிடம் எனக்கென்ன இருக்கிறது?' என்று இராணி கூறியதாகவுஞ் சொல்லப்படுகிறது.)

3. ஜான்சி மன்னரின் மரணத்திற்கு முன்பு புதைக்கப் பட்ட இரண்டு பீரங்கிகளை அப்பொழுது இராணி தோண்டி எடுக்கச் செய்தார். அவைகளைக் கொண்டு ஆங்கிலேயர் புகுந் திருந்த கோட்டையைத் தாக்கிஞள்—G. B. மேலசன்.

4. இராணி தன் தூதுவர்களை அக் கோட்டைக்கு அனுப் பிஞள். இராணிக்குக் கோட்டை மட்டுந் தான் தேவை யென்றும் ஆங்கிலேயர்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத் துச் சரணடைந்தால் ஆபத்து எதுவுமின்றி வேறிடஞ் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும், அத்தூதுவர்கள் கூறிஞர் கள். வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டபின்பு கேப்டன் ஸ்கென் இதற்கு ஒத்துக்கொண்டான். இராணியின் வாக்குறு தியை நம்பி வெளியே வந்த ஆங்கில அகதிகளைச் சிப்பாய்கள் பிடித்து ஜோக்கன்பாக் தோட்டத்திற்குக் கொண்டு சென்று கொலை செய்தார்கள்.

—G. B. மேலசன்.

முதலாவதாக, இராணி ஊர்வலத்தில் கலந்து கொண்டாள். என்ற தன் கூற்றிற்கு ஜான்சியின் ஆணையராக இருந்த கேப்டன் பிங்க் நேயின் அறிக்கையை 'கே' ஆதாரமாகக் கூறுகிறார். இலண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் (Sndia Office Liberary) இருக்கும் இந்தப் பிங்க்நே அறிக்கை, ஊர்வலத்தில் இராணி தலைமை தாங்கியதாகக் கூறவில்லை; என்கிறார். மஜீம்தார் (R. C. மஜீம்தார் பக்கம் 136). ஃபாரஸ்டின் (G. W. Forrest) ஆவணத் தொகுப்பில் காணப் பெறும் P. G. ஸ்காட்டின் அறிக்கையும் இராணி ஊர்வலத்தைத் தலைமை தாங்கியதாகக் கூற வில்லை. ஜான்சி கிளர்ச்சியைப் பற்றி முதன் முதலில் அதிகாரப் பூர்வமாக வந்த கார்டனின் (Gorden—Dy. Supt of Jhansi) கடிதத்திலும் இதைப் பற்றி அவர் கூறிவிட வில்லை.

அடுத்த மூன்று வாதங்களும் கேப்டன் P. G. ஸ்காட் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டவையே. அவர் அறிக்கையை ஆதாரமாக ஆங்கிலேயர் கோட்டைக்குள் தங்கி இருந்த பெயர் தெரியாத ஒருவனையும், ஜான்சி சுங்கவரி அலுவலகத்தில் பணிபுரியும் வங்காள எழுத்தன் ஒருவனையும், சாலதீன் என்ற பணியாள் ஒருவனையும், திருமதி மட்லோவையுஞ் சாட்சிகளாகக் கொண்டிருக்கிறார். இவர்கள் அனைவருடைய சாட்சியங்களும் பல குழப்பங்களை விளைவிக்கின்றன. மேலசன், கே. ஹோம்ஸ் போன்ற ஆசிரியர்கள் கூட இவர்களின் கூற்றை நன்கு ஆராய்ந்து பார்க்காமல், கேப்டன் ஸ்காட்டின் அறிக்கையை அப்படியே ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள்; என்று மஜீம்தார் கருதியுள்ளார். இராணியின் சூழ்ச்சியையும், நய வஞ்சக நடத்தையையும் இவர்களின் கூற்றுகள் சுட்டிக் காட்டுகின்றன. என்பது உண்மைதான். ஆனால், சிப்பாய்களின் வற்புறுத்தலில் தான் இராணி கிளர்ச்சியில் ஈடுபட்டாள் என்ற இவர்களின் கூற்றையும், மேற்கத்திய ஆசிரியர்கள் முழுமையாக எடுத்துக் கொள்ளவில்லை. என்று மஜீம்தார் கூறியுள்ளார்.

மத்திய இந்தியாவில் தலைமை—ஆளுநரின் பிரதிநிதியாக இருந்த சர்ராபர்ட் ஹாமில்டன் அதிகாரப் பூர்வமான விசாரணைக்குப் பின்னே ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த அமீன்கான் என்றொரு ஜான்சி சிப்பாயின் கூற்றை ஆதாரமாகக் கொண்டு, கலகக்காரர்களுக்கும் இராணிக்கும் ஏற்கனவே தொடர்பு இருந்திருக்க முடியாது; என்று அவர் நம்பியுள்ளார். அந்தச் சிப்பாயின் கூற்றுப்

படி கலகக்காரச் சிப்பாய்கள் தங்கள் தோழர்களை அச்சுறுத்தித் தங்களுடன் சேர்த்துக் கொண்டு அதன் பின் இராணியையும் வற்புறுத்தி, கருமருந்துந் துப்பாக்கிகளும் பெற்றுக் கொண்டனர் என்றுந் தெரிகிறது. (S. N. சென் பக்கம் 277).

1857-ஆம் ஆண்டு ஆகஸ்டு 18-ல் எழுதப்பட்ட அரசாங்கக் கடிதத்தில் 'இராணி கோட்டையைத் தாக்கும்படிச் சிப்பாய்களைத் தூண்டினாள்; என்று பொதுக் கருத்து நிலவுகிறது; என்றுங் குறிப்பிடப்பட்டுள்ளது. கிளர்ச்சித் தோன்றி இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இராணி சூழ்ச்சியில் ஏற்கனவே ஈடுபட்டிருந்தார்; என்பதற்கான திட்டவட்டமான ஆதாரங்கள் அரசாங்கத்திற்குக் கிடைக்க வில்லை; என்பது இதன் மூலந் தெரிகிறது. கிளர்ச்சித் தோன்றிய பின் ஜூன் 12-ஆம் நாள் சிப்பாய்கள் டெல்லிக்குச் சென்றனர். அன்றும், அடுத்த இரண்டு நாட்களுக்குப் பின்னும், சாகர் கோட்டத்திலிருந்த ஆங்கில அதிகாரிக்கு இராணி இரண்டு கடிதங்கள் எழுதினாள். (கைத்தடியில் மறைத்து அக்கடிதங்களைத் தூதுவர்கள் கொண்டு சென்றார்கள். அந்த அளவிற்கு அவ் வட்டாரத்தில் வன்முறை பெருகி இருந்தது.) இக் கடிதங்களில் சிப்பாய்கள் தன்னைப் பலவந்தப் படுத்தியதையும், தன்னிடம் பணம் பறித்ததையும் இராணி குறிப்பிட்டு, ஜான்சியில் அமைதியையும், ஒழுங்கையுங் காப்பாற்ற அரசாங்கம் தனக்கு உதவ வேண்டும் என்று கேட்டிருக்கிறாள். (S. N. சென் பக்கம் 277.)

இலட்சுமிபாய் சூழ்ச்சியில் ஈடுபட்டாள் என்பதற்கு முடிவான ஆதாரங்கள் கிடைக்கவில்லை; என்பதுடன், பின் நிகழ்ச்சிகள் இதற்கு எதிராகவே இருக்கின்றன. ஜான்சியில் கிளர்ச்சித் தோன்றியதும், அரச பதவிக்குப் போட்டியுந் தோன்றி விட்டது. சதாசிவராவ் என்பவன் தன்னை மன்னனாகப் பிரகடனப் படுத்திக் கொண்டான். ஜூன் 9-ஆம் நாள் ஜான்சியின் மகுடம் இலட்சுமி பாய்க்கா? அல்லது, சதாசிவ ராவிற்கா? என்ற முடிவு எடுக்கப்பட்டது. அவளிடம் இருந்த பணத்தை வற்புறுத்திப் பெற்றுக் கொண்ட பின்னரே சிப்பாய்கள் இலட்சுமி பாயை ஜான்சியின் இராணியாக ஏற்றுக் கொண்டனர்! பின்னர் ஜூன் 11-ஆம் நாள் சிப்பாய்கள் டெல்லிக்குப் புறப்பட்டார்கள். இராணி இலட்சுமிபாய் சிப்பாய்களுடன் சேர்ந்து ஏற்கனவே ஒரு சூழ்ச்சியில் ஈடுபட்டிருந்திருந்தால், மகுடத்திற்காக, ஒரு போட்டியே தோன்றி யிருக்கத்தேவையில்லை. இராணியும் சிப்பாய்களுக்குத் தான் பணங் கொடுத்ததை மறுக்க வில்லை. கலகக்காரர்களுக்கு, அவளுடைய

தலைமை ஒருபொருட்டல்ல. இலட்சுமி பாயிடம் பணத்தைப் பறித்துக் கொண்டு அவளை இராணியாக்கி விட்டு, ஜான்சி எக்கேடு கெட்டால் என்ன என்று டெல்லிக்கு நடையைக் கட்டினார்கள்! [The fact that the sepoys left Jhansi immediately after, shows that they only cared for the loot and murder, and were supremely unconcerned about Jhansi or its ruler. For if the Rani of Jhansi had even then throught of rebelliry against the British, it would undoubtedly have been to her interest to keep the sepoys at Jhansi, so that they might help her against the British in the forth coming struggle. The more we think of the whole affair the more does it appear that the mutiny of the sepoys at Jhansi early in June, 1857, was purely an act of the sepoys and the Rani had no hand in it, and she was only used as a milch cow by the mutinous sepoys.—R. C. மஜீம்தார்.]

V. D. சாவர்கார், 'விடுதலைப் போரை நடத்துவதற்காக ஒரு சூழ்ச்சி உருவாகியதென்றும், அதில் இராணி இலட்சுமியுங் கலந்திருந்தாள்' என்றுங் கூறியுள்ளார். எப்படி? 'ஜான்சியில் கிளர்ச்சித் தோன்றும் முன்பே சில கடிதங்கள் ஆங்கில அதிகாரிகள் கைக்குச் சிக்கின. அதன்படி இராணியின் சேவையிலிருக்கும் இலட்சுமண் ராவ் என்ற பிராமணன், ஒரு புரட்சியை ஏற்பாடு செய்து, அதற்கு முன்னோடியாக வெள்ளை இராணுவ அதிகாரிகளைக் கொல்லத் திட்டமிட்டிருப்பதாகவும் அறியப்பட்டது. 'சாவற்கார் தந்துள்ள இச்செய்தியை 'கே,' 'மேலசன்' போன்ற எந்த வரலாற்றாசிரியருங் குறிப்பிடவில்லை. கேப்டன் ஸ்காட்டின் அறிக்கையில் காணப்படும். ஆரம்ப வாக்கியங்களைத்தான், தனக்கு ஆதாரமாக V. D. சாவர்கார் கொண்டிருக்க வேண்டும்; என்று சந்தேகிக்கும் மஜீம்தார், அத் தொடக்கப் பகுதியில் காணப்பெறும் செய்தியைத் தந்துள்ளார். ஜான்சியில் பணி புரிந்த கேப்டன் ஸ்கென், கேப்டன் கார்டன் ஆகியோர் தனித் தனியாக விசாரித்து அறிந்ததில், இராணியின் பணியாள் இலட்சுமண்ராவ் என்பவன் சிப்பாய்களைத் தூண்டிவிடும் முயற்சியில் இருந்திருக்கிறான், என்பதை அறிந்திருக்கிறார்கள். அவனுடைய முயற்சிக்கு இராணியின் அனுமதி இருந்ததா? என்பதுந் தெரியவில்லை. என்று ஜான்சியில் இருந்த கேப்டன் டன்லப் கூறியுள்ளான். (R. C. மஜீம்தார்—பக்கம் 149.) இதில் டன்லப்பின் சந்தேகம் குறிப்பிடத் தக்கது. அக் காலத்தில் ஒரு பணியாளனின் செய்கை எசமானரைக் கட்டுப்படுத்துவதாக அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை. இலட்சுமண்ராவின் செயலை வைத்து,

இராணி சூழ்ச்சியில் ஈடுபட்டாள் என்று வெள்ளை அதிகாரிகளே அச் சமயத்தில் நம்பவில்லை; என்பது புலனாகின்றது; பிற இடங்களில் கிளர்ச்சித் தோன்றிய பின்னர், இலட்சுமண்ராவ் ஜான்சி சிப்பாய்களைத் தூண்டி யிருக்கலாம். இராணியின் அனுமதியின் பெயரில்தான் அது நடந்தது; என்று நாம் எடுத்துக் கொள்ளத் தேவை யில்லை.

கிளர்ச்சியில் அவளுடைய பங்கைப்பற்றி அரசாங்கமே நீண்ட நாட்களாக எந்த முடிவிற்கும் வரவில்லை. கிளர்ச்சித் தோன்றி ஏழு மாதங்களுக்குப் பின்பு (1859 ஜனவரி) தனக்கு உதவி செய்யும்படி இராணி மீண்டும் அரசுக்குக் கடிதம் எழுதினாள். அவளுடைய நாட்டை விழுங்க நினைக்கும் துத்தியா, ஓர்ச்சா ஆகிய மன்னர்களின் படை யெடுப்பி லிருந்து காப்பாற்றிக்கொள்ள ஆங்கில அரசாங்கத்தின் உதவியை அக் கடிதத்தில் இராணி வேண்டி யுள்ளாள்! [' Under these circumstances I can never expect to get rid of these enemies, and to clear myself of the heavy debts without the assistance of the British Government............You will give me your support in the best way you can and thus save myself and the people who are reduced to the last extremity and are not able to cope with the enemy.'—R. C. மஜீம்தார்] இக் கடிதத்திற்குத் தலைமை ஆளுநரின் பிரதிநிதி ராபர்ட் ஹாமில்டன் பதில் அனுப்ப வில்லை. இரண்டு மாதங்கள் கழித்து ('58 மார்ச்சு) மேலிடத்திலிருந்து இவருக்கு ஒரு கடிதம் வந்தது. கிளர்ச்சி யின் போது இராணி நடந்து கொண்ட விதத்தைப் பற்றி ஆதாரங்கள் சேகரிக்கும்படி அக் கடிதங் கோறி இருந்திருக்கின்றது. இது வரையிலும் அவள் பங்கு என்ன? என்பது முடிவாக வில்லை.

எப்பொழுதிருந்து ஆங்கிலேயரின் எதிரியாக அவள் மாறினாள்? என்பதையும் உறுதியாகக் கூற முடிய வில்லை. 'சாகர்' வட்ட ஆணையரிடமிருந்தும், பிரதிநிதி ராபர்ட் ஹாமில்டனிட மிருந்தும் உதவியோ பதிலோ வரவில்லை. என்பதிலிருந்து ஜான்சியின் நிகழ்ச்சிகளுக்கு அரசு தன்னைக் குற்றவாளி ஆக்குகிறது. என்பதை இலட்சுமிபாய் புரிந்து கொண்டிருப்பாள்! அரசின் ஐயத்தைத் தன்னால் போக்க முடியவில்லை; என்று அறிந்த பின்னர், அவள் மனதில் எதிர்க்கும் எண்ணம் உருவாகி யிருக்கும். அந்த முடிவிற்கு வந்தபின்பே இவளும் கிளர்ச்சிக் கடலில் நீர் வழிப்பட்ட புணையானாள்; இறுதி வரை வீரத்துடனும், தீரத்துடனும் போரிட்டு உயிர் நீத்தாள்.

ஜான்சியில் அப்பொழுது பணி புரிந்த கர்னல் T. A. மார்டின் புரட்சி முடிந்து 22 ஆண்டுகளுக்குப்பின்னே (20-8-1889) இராணி இலட்சுமியின் வளர்ப்பு மகன் தாமோதர ராவிற்கு ஒரு கடிதம் எழுதினார். அக் கடிதத்தில் 'உன்னுடைய அன்னை முறையற்றும், கொடூரமாகவும் நடத்தப்பட்டு விட்டாள். அவளைப் பற்றிய உண்மையை என்னைத் தவிர வேறு யாரும் அறிந்திருக்க முடியாது, அன்று நடந்த படுகொலைகளுக்கு அவள் காரணமல்ல. ஆங்கிலேயருக்கு உணவளித்ததுடன் தப்பித்துச் செல்லவும் வழி கூறினாள். அவள் நிச்சயமாக எந்தத் தவறுஞ் செய்ய வில்லை' என்றும் மார்டின் குறிப்பிட்டுள்ளார்.

ஜான்சி இராணியின்மேல் உள்ள வெறுப்பில், ஆத்திரத்தில் கிளர்ச்சிக்கு முன் அவர் சூழ்ச்சியில் ஈடுபட்டார்; என்று நிரூபிக்க மேற்கத்திய ஆசிரியர்கள் முயன்றிருக்கிறார்கள். அந்தச் சூழ்ச்சியைப் 'சுதந்திரப் போருக்கு' ஆதாரமாக்க இந்தியர் சிலர் முயல்கின்றனர். திட்டமிட்டுச் சுதந்திரப் போரை நடத்தினாள். என்பதை எந்த ஆதாரங்களின் மூலம் ஒப்புக் கொள்ளுகிறோமோ, அதே ஆதாரங்களின் மூலம் அவள் நயவஞ்சகி, அவள் ஏமாற்றுக்காரி, அவள் கொடுமைக்காரி என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். [To regard her as determined from the very beginning of the outbreak, or even before it, to fight with the British for the recovery of Jhansi which rightly belonged to her, no doubt appeals as a more suitable picture to those who look upon her as a huoic and patriotic lady placiry herself in the vanguard of the war for the indepence of India,—and the number of such men is lesion. They would naturally consider the above hypothesis as hardly hefitting the Rani such as they conceive her to be. But their conception not only ignous positive evidence but also involves the assumption that the Rani was guilty of such a systematic and deliberate course of hypocrisy, treachery, and framdulence in her dealings with the English, as is quite incompatible with a true nobility of soul and integirty of character with which we clothe her blessed memory. Besides, it should be remembered that her real greatness lies in her heroic conduct after she decided to fight against the English, which has secured her a high place in the history of India, and we need not rely on something unsupported by any testimony and opposed to reliable evidence, to establish or buttress her claim to greatness.—R. C. மஜீம்தார்.

சிப்பாய்களுக்குப் பணமளித்து, தன்னை இராணியாக்கிக் கொண்ட அவள், தன் எதிரிகளை முறியடிக்க அரசாங்கத்திடம் உதவி எதிர்பார்த்த அவள், ஒன்பது மாதங்கள் எதிர்பார்த்து, ஏமாந்து, பின் புரட்சிப் பாதையில் வேறு வழியின்றி ஏகிய அவள், சூழ்ச்சியில் ஈடுபட்டாள்; என்பதை நம்புவதற்கில்லை.

---

# 5. சிப்பாய்கள் சூழ்ச்சியில் ஈடுபட்டார்களா?

சிப்பாய்களின் இரகசிய இயக்கத்தைப் பற்றி அதிகமாக ஒன்றுந் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில்? அவர்கள் தலைமறைவாகச் சட்டத்திற்குப் புறம்பாக இயங்கியதால், தங்களுடைய இயக்கத்தைப் பற்றிய நடவடிக்கைகளையும், நிர்வாக அமைப்பையும் எழுத்துப் பூர்வமான ஆதாரங்கள் எதுவும் வைத்துக் கொள்ள வில்லை; என்று கூறப்படுகிறது. அவர்களின் இயக்கத்தைப் பற்றிக் கீழ்க்கண்ட செய்திகள் அறியப்படுகின்றன.

1. ஒவ்வொரு சிப்பாய் அணியிலும் மூன்று பேர் அடங்கிய குழு ஒன்று செயல்பட்டது. முக்கியமான திட்டங்களையும், கடிதப் போக்குவரத்தையும் இக்குழுவே மேற்கொண்டது. (Lt. Gen Wilson-defence of Lueknow).

2. சிப்பாய்கள் இரவில் இரகசியமாகக் கூடினார்கள், அக்கூட்டங்களில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இவை மிகக்கண்டிப்புடன் பின்பற்றப்பட்டன. (Savarkar).

3. இந்த இரகசியக் கூட்டங்களுக்கு வருஞ் சிப்பாய்கள் கண்கள் மட்டுந் தெரியும்படி முகத்தை மறைத்துக் கொண்டு வருவார்கள். இரகசியங்களை யாரும் வெளியிட்டால் அவர்கள் உடனே கொல்லப்படுவார்கள். (C. T. Matcalfe).

4. திருவிழாக் காலங்களில் பிற அணிகளுக்கு அழைப்பு அனுப்பித் தங்களுக்கிடையே சிப்பாய்கள் செய்திகள் பரி மாறிக் கொண்டனர். சிப்பாய்த் தலைவர்கள் சுபேதார் வீடு

களில் கூடிப் பேசினர். முக்கிய முடிவுகள் அதிகாரிகளால் எடுக்கப்பட்டன. (J. W. Kaye–From-Narrative of the Indian Mutiny by Anon).

5. சிப்பாய்கள் தங்கள் கடிதங்களில் இரகசிய மொழியைக் கையாண்டார்கள். சைபர், கோடு, எண் ஆகியவைகளால் கடிதங்கள் எழுதப்பட்டன. பெயர்கள் தவிர்க்கப்பட்டன. (Innes).

மேற்கண்ட செய்திகளிலிருந்து சிப்பாய்களின் இரகசிய இயக்கத்தைப் பற்றி ஓரளவு அறிய முடிகிறது. இச் செய்திகளின் உண்மையை நாம் இப்பொழுது ஆராய்வோம். பகதூர்ஷா விசாரணையில், அவருடைய அந்தரங்க மருத்துவன் அஷானுல்லா கூறியதாவது :—'டெல்லியிலிருந்த 38 வது அணியின் சிப்பாய்கள் கிளர்ச்சித் தோன்றுவதற்கு முன்பே மீரத் சிப்பாய்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். இம் மீரத் சிப்பாய்கள், பிற தளங்களிலிருந்த சிப்பாய்களுடன் ஏற்கனவே கொண்டிருந்தத் தொடர்பின்படி, அவர்கள் டெல்லி வருகையை எதிர் பார்த்தார்கள். கிளர்ச்சிக்குப் பின்னல் டெல்லிக்கு வந்த சிப்பாய்கள், பிற சிப்பாய்களுக்கு எழுதிய கடிதத்தில்,— 'நாங்கள் எல்லோரும் இங்கு வந்து விட்டோம், நீங்களும் உறுதி கூறியபடி இங்கே விரைந்து வரவும்.'—என்று குறிப்பிட்டிருந்தனர்; பெண்கள் குழந்தைகள் உட்பட ஐரோப்பியர் அனைவரையுங் கொன்று விட அவர்கள் திட்டமிட்டிருந்திருக்கின்றனர்; ஆனால், கிளர்ச்சிக்கான நாள் எதையுங் குறிப்பிட்டு முடிவு செய்ததாகத் தெரியவில்லை; மீரத் நிகழ்ச்சி நடக்காமல் இருந்திருந்தால், கலகக்காரர்களின் திட்டம் இன்னுஞ் சீராகவே யிருந்திருக்கும்; மீரத் சிப்பாய்கள் சிறிது அவசரப்பட்டிருக்க வேண்டும். அல்லது, அரசாங்கம் அவர்களிடங் கடுமையாக நடந்து கொண்ட அதுவே, அக் கிளர்ச்சிக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். மீரத் நிகழ்ச்சி விரைவு படுத்தப்பட்டதற்கு இதுவே காரணமாகும்.'

ஜாத்மல் என்பவனுடைய கூற்றுப்படி:—'கிளர்ச்சிக்குச் சில நாட்களுக்கு முன்பு, டெல்லி அரண்மனைக் காவலர்கள் பேசிக் கொண்டதிலிருந்து கொழுப்புக் குண்டுகள் சிப்பாய்களின் மீது திணிக்கப்பட்டால், மீரத் சிப்பாய்கள் டெல்லிக்கு வந்து இணைய வேண்டும்; என்பது ஏற்பாடு; சிபபாய் அணிகளின் சுதேசி அதிகாரிகள் மீரத்திற்குச் சென்ற பொழுது இத்திட்டம் ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது.'

டெல்லியில் அப்பொழுது வாழ்ந்த முன்ஷி மோஹன் லாலின் கூற்று :—'மீரத் கலகக்காரர்கள் டெல்லிக்குச் செல்ல வேண்டும் என்ற திட்டம் பெற்றிருக்கவில்லை; என்பதை இரு சிப்பாய்களின் மூலம் நான் அறிந்தேன். ஆரம்பத்தில் ரோஹில் கண்ட் செல்வதற்கே அவர்கள் விரும்பி யிருக்கின்றனர்.' பஞ்சாப் ஆணையர் சர் ஜான் லாரன்ஸ் இதை ஏற்றுக்கொண் டுள்ளார். டெல்லிக்கு வந்த மீரத் சிப்பாய்களில் பலர் மறு நாளே அங்கிருந்து வெளியேறியது உண்மையே.

சிப்பாய்த் தலைவர்களுக்கிடையே இரகசியத் திட்ட மொன்று இலேசாக உருவாகியிருந்தது போலத்தான் தோன்று கிறது. ஆனால், சாதாரண சிப்பாய்கள் பெரும்பாலோர் அதை அறிந்ததாகத் தெரியவில்லை. தங்களுடைய அதிகாரிகளுக் கிடையே ஒரு திட்டம் உருவாக்கப் படுகிறது என்ற அளவிற்கு மட்டுமே அறிந்திருந்த சில சிப்பாய்களும், அத்திட்டத்தைப் பற் றிய முழு விவரங்களை அறியவில்லை; யென்பதைப் பின்பு நடந்த நிகழ்ச்சிகள் தெளிவாக்குகின்றன. மீரத் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு பல தளங்களில் தோன்றிய புரட்சிகள் ஒரே மாதிரித் தொடங்கவில்லை. சில சமயம் திடீர் உந்துதலினாலும், சில சமயம் சிப்பாய்த் தலைவர்களின் தூண்டுதலினாலும், சில சமயம் எதிர்பாராத திருப்பங்களினாலும் கிளர்ச்சிகள் நடந்தன; என் பதை நாம் பார்த்தோம். ஓரளவு உருவாகிய இந்த இரகசியத் திட்டம் எப்படிச் செயல்பட்டது? என்பதைக் கீழ் வரும் கடி தங்கள் காட்டுகின்றன.

1857 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் நாள் (பல இடங்களில் கிளர்ச்சித் தோன்றிய பின்னே) அமிர்த சரஸைச் சேர்ந்த நுந்த் சிங் என்பவன், ராவல் பிண்டியிலிருக்கும் நிகால் சிங்கிற்கு எழு திய கடிதத்தில் காணப்படும் செய்தி இது : -'கலைக்கப்பட்ட பரக்பூர் சிப்பாய்களுக்குக் கர்னல், மீரத் சிப்பாய்கள் பல விதத்தில் உறவினர்கள் ஆவார்கள். சேவையிலிருந்து நீக்கப் பட்ட அப் பரக்பூர் சிப்பாய்கள், தங்களுடைய (மீரத்) சிப்பாய் உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களில், 'இங்கே நடந்த வற்றையெல்லாம் நாங்கள் கண்ணாரக் கண்டோம்; நீங்களும் அறிய வேண்டும்; என்பதற்கே இதை எழுதுகிறோம். கொழுப் புக் குண்டுகளையோ, கலப்புத் திருமணத்தையோ, சேர்ந்து உண்ணும் முறையையோ நீங்கள் ஏற்றுக் கொண்டால், நம் மிருவருக்கும் இடையேயுள்ள தொடர்பு அற்றுப் போகட்டும்.' மேற்கண்ட கடிதங்கள் சிப்பாய்களை உணர்ச்சி வசப்படுத்திக் கிளர்ச்சிக்குத் தூண்டியிருக்கலாம்.

ஜான்ஸியிலிருந்த ஒரு சிப்பாயின் மகன் அமீன் கான் என்பவன் கிளர்ச்சித் தொடங்கிய பின்பு அங்கு வந்த கடிதத்தைப் பற்றிக் குறிப்பிட்டான் :— 'இங்குள்ள சிப்பாய்களுக்குத் தெரிந்த ஒருவன் டெல்லியிலிருந்து ஒரு சீட்டுக் கொண்டு வந்து கொடுத்தான். வங்காளப் படை முழுவதுங் கிளர்ச்சியில் இறங்கி விட்டது; ஜான்ஸியில் இருக்கும் நீங்கள் மட்டும் இதில் சேராததால், நீங்கள் சாதியிலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள் ஆவீர்கள்; என்று எழுதப்பட்ட அச் சீட்டுக் கிடைத்ததற்குப் பின்பு ஜான்ஸி வீரர்களுங் கிளர்ச்சியிலீடுபட்டார்கள்.'

மேற்கண்ட கடிதங்களிலிருந்து சிப்பாய்கள் அனைவருமே சதி திட்டத்தை அறிந்திருக்கவில்லை; என்றே நம்ப வேண்டியிருக்கின்றது. கொழுப்புக் குண்டுகள் புகுத்தப்பட்டால், கிளர்ச்சியில இறங்க வேண்டும்; என்று பரவலாகத் தங்களுக்குள் சிப்பாய்கள் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால், அக் கிளர்ச்சி எப்படியிருக்க வேண்டும்? என்று முடிவு செய்யப் படவில்லை; என்று தெரிகிறது. மீரத் சிப்பாய்கள் கிளர்ச்சிச் செய்ய ஒரு சர்ந்தர்ப்பம் நேர்ந்திருக்கா விட்டால், ஒரு பெருங் கிளர்ச்சிக்கான சதி திட்டம் முழு அளவில் மேற்கொள்ளப் பட்டிருக்குமோ? என்பதையே சந்தேகிக்க வேண்டி யிருக்கிறது. ('It does not appear that any definite plan or organisation was concieved, far less finalised. Indeed, it may will be doubted, whether, if the sepoys of Mirat were not suddenly provoked to rise against their officers, the plan of the mutiny would have matured at all. This is proved by the some what halting manner in which the sepoys rose at different pleces at dlfferent dates and under different circumstances, as noted above'—R. C. Majumdar–Page 200). ஆனால், இவ்வளவு பரந்த பகுதிகளில் ஒரிரண்டு மாதங்களுக்குள் பல அணிகள் கிளர்ச்சியில் இறங்கியது, ஓரளவுச் சதித் திட்டம் இருந்திருக்கிறது; என்பதையே நம்பச் செய்கிறது. ('At the same time we should remember that the very fact that the sepoys extending over such a wide area rose at all into mutiny within a month or two, indicates some sort of previous negotiations or understanding, at least among the leaders of different cantonments. That such understanding had not progressded very far seems to be proved by the absence of any definite plan of Campaign or the selection of one or more leaders to be placed incharge of it. Thus the evidence available to us does not indi-

eate anything more than the initial stage of a Conspiracy, or in other words, some sort of loose talks and a Vague understanding. R. C. Majumdar-Page 200)

சிப்பாய்கள் மத்தியில் முளை விடும் நிலையிலிருந்த ஒரு சதித் திட்டத்தைப் பிறர் பயன்படுத்தினர்; என்றுஞ் சொல்லப்படுகிறது. கல்கத்தாவில் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருந்து வந்த முன்னாள் அயோத்தி மன்னர் மேல் கிராண்ட் (P. J. Grant) என்பவர் குற்றஞ் சுமத்தியுள்ளார். அயோத்தியின் முன்னாள் அமைச்சர் அலி நுக்கிகான் என்பவன், இதற்கு மூல காரணம் என்றுஞ் சொல்லப்படுகிறது. அயோத்தி மன்னரும், அமைச்சரும் கிளர்ச்சித் தோன்றிய ஒரு மாதத்திற்குள் கைது செய்யப் பட்டனர். இருப்பினும், அரசாங்கம் அவர்களை விசாரிக்கவில்லை. அமைச்சன் அலி நுக்கிகான் இதில் ஈடுபட்டிருக்க முடியாது, ஏனெனில்? அவன் ஆங்கிலேயனின் நெருங்கிய நண்பனானதால் தன் மன்னரையே பதவியைத் துறக்கும்படி (அயோத்தி இணைப்புக்கு முன்பே) வற்புறுத்தி யிருக்கிறான்; என்று அபுல் கலாம் ஆசாத் கூறுகிறார். அயோத்தி மன்னர் நிச்சயமாகச் சிப்பாய்களைத் தூண்டி விட்டார், என்று முதலில் ஏற்றுக் கொண்ட J. W. கே பின்பு மறுத்து விட்டார். தாலுக்தார் மான்சிங் கல்கத்தாவிலிருந்து அயோத்தி அரச குடும்பத்துடன் இரகசியத் தொடர்பு கொண்டான்; என்று தாம் கருதியதையும், கே. மாற்றிக் கொண்டார்.

அயோத்தி நவாபைத் தவிர, சிப்பாய்களைத் தூண்டுவதற்கு வேறு யார் இருந்திருக்கிறார்கள்? மௌல்வி அஹமதுல்லா, நானா சாஹேப், ஜான்ஸி ராணி, மான்சிங் ஆகியோர்கள் இதில் ஈடுபட்டனர்; என்ற கருத்து நிலவுகிறது. நானா சாஹேப் தூண்டினான் என்பதற்குச் சரியான ஆதாரங்கள் எதுவுமில்லை. ஜான்ஸி ராணியின் நிலையும் அதுவே. மௌல்வி அஹமதுல்லாவை G. B. மேலசன் குற்றஞ் சாட்டியுள்ளார். கொழுப்புக் குண்டு வதந்தியைச் சிப்பாய்களிடையே பரப்பி அவர்களைத் தம் பக்கம் அஹமதுல்லா இழுத்தான்; என்று அவர் கூறியுள்ளார். இதற்குஞ் சரியான ஆதாரம் இல்லை. சிப்பாய்களுடன் அஹமதுல்லா தொடர்பு கொண்டான்; என்பதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், அவன் தான் கொழுப்புக் குண்டுவதந்தியைப் பரப்பினான்; என்பதை ஏற்க முடியாது. கொழுப்புக் குண்டுகள் யாருடைய தூண்டுதலும் இல்லாமலே சிப்பாய்களிடம், பெருங் கொந்தளிப்பைத் தூண்டுஞ் சக்தி வாய்ந்தது என்பதில் ஐயமில்லை.

வெளியார்கள் சிப்பாய்களைத் தூண்டி விட்டார்கள்; என்று பலர் கருதுவதற்குக் காரணம், சீதாராம் பாவா என்ற இந்துப் பரதேசியின் கூற்றை நம்புவதால் தான். 'கலகத்தில் ஈடுபடுவதற்குச் சிப்பாய்கள் எப்படித் தூண்டப்பட்டார்கள்?' என்ற குறுக்குக் கேள்விக்குச் சீதாராம் பாவா அளித்த பதில் இது: 'அயோத்தி இணைப்பிற்குப் பின்னால், கொழுப்புக் குண்டுவதந்திக் கிளம்புவதற்கு முன்னால் (1856–57), தாலுக்தார் மான்சிங் ஆங்கிலப் படை ஒவ்வொன்றிலும், நான்கைந்து பூர்பியாச் சிப்பாய்களைச் சேரும்படிச் செய்தான். அவர்கள் சிப்பாய்களைக் கிளர்ச்சிக்குத் தூண்டினார்கள். பூர்பியா, இந்துஸ்தானி முகமதியச் சிப்பாய்கள் அனைவருடைய ஆதரவைப் பெற்றாலும், தமிழ், தெலுங்கு மற்றும் பிற இந்து சிப்பாய்களின் ஆதரவைப் பெற, முயற்சி எடுக்கப் படவில்லை. அவை பலன் அளிக்காது, என்று கருதப் பட்டது. தென்னிந்திய இந்துக்கள், வட இந்திய இந்துகளிட மிருந்து வேறுபட்டவர்கள். ஆனால், முகமதியர்கள் என்றால் அவர்கள் இந்தியா முழுவதும் ஒன்று படுவார்கள். கிளர்ச்சிக்கு ஒரு நாள் குறிக்கப்பட்டது. கருவூலத்தையும், தளவாடங்களை யுங் கைப்பற்றி ஆங்கில அதிகாரிகளைக் கொல்ல முடிவு செய்யப் பட்டது. ஆங்கிலப் பெண்களையுங் குழந்தைகளையுந் துன் புறுத்தத் திட்டமிடப் படவில்லை. ஆதரவில்லாத அக்குழந்தை களையும், பெண்களையும் பிராமணச் சிப்பாய்கள் கொல்லவில்லை. (இதைச் சொல்லும் பொழுது, சீதாராம் பாவா உணர்ச்சி வசப்பட்டார். அவரும் ஒரு பிராமணர் என்பதால் இருந்திருக்க லாம்) கிராம வாசிகளும், முரடர்களும், மான் சிங்கும், அவனு டைய பூர்ப்பியாச் சிப்பாய்களுந்தான் உங்கள் (ஆங்கிலப்) பெண்களையும், குழந்தைகளையுங் கொன்றார்கள். நானா சாஹேப் இக் கொலைப் பாதகத்தைச் செய்யும்படித் தன் சிப்பாய்களுக்கு உத்தரவிடவில்லை.' சீதாராம் பாவாவின் இக் கூற்றை முழுதும் உண்மையாக ஏற்க முடியாது, கடைத்தெரு உரையாடல் களையுந் திண்ணை வதந்திகளையும் வைத்துக் கொண்டே இச் செய்திகளைச் சேகரித்ததாகத் தெரிகிறது. வேறு எந்த ஆதார மும் அவன் இதற்குத் தரவில்லை. இதை நம்புவதானால், சிப்பாய்களைப் பற்றி மிகத் தாழ்வான அபிப்பிராயந்தான் தோன்றுகிறது. அவர்கள் மத்தியில் ஒற்றுமை உணர்வோ, கட்டுப்பாடோ இல்லை; என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

சீதாராம் பாவாவின் கூற்றுக்கு நேர் மாறாக மருத்துவன் அஷா நுல்லாவின் சாட்சியம் இருக்கிறது. அவனுடைய கூற்று இது:— 'சுதேசித் தலைவர்களுக்குஞ் சிப்பாய்களுக்குமிடையே கிளர்ச்சிக்கு முன்பு எந்தத் தொடர்பும் இல்லை. அப்படி இருந் திருந்தால், சரியான தருணத்தில் அந்தந்தத் தலைவர்களுக்குக் கீழ் அவர்கள் போரிட்டிருப்பார்கள். கலகஞ் செய்த சிப்பாய்கள் மக்களின் ஒப்புதலைப் பெறவில்லை. பெற்றிருந்தால், கிளர்ச்சி யின் போது மக்களைக் கொடுமைக்கு உள்ளாக்கி யிருக்கமாட் டார்கள். டெல்லி முஸ்லிம் மக்களிடஞ் சிப்பாய்கள் நல்ல உறவை ஏற்கனவே ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அந்த நட்பைப் பெற்றிருந்தால் டெல்லி முகமதியர்களை அந்த அளவு சிப்பாய்கள் துன்புறுத்தியிருக்க மாட்டார்கள். மன்னரின் அந்தரங்க மருத்துவனாகவும், ஆலோசகனாகவும் அஷானுல்லா இருந்ததால், பலவற்றை நேரடியாகச் சிப்பாய்களிடமிருந்து அறிவதற்கு வாய்ப்புப் பெற்றிருந்தான். மேலும், பகதூர் ஷா விசாரணையில் சாட்சி கூறிய இந்தியர்களில், அஷானுல்லா ஒருவனே விபரந் தெரிந்தவனாகவும், அறிந்தவற்றை நேரடி யாகச் சொல்லுபவனாகவும் இருந்தான். அவனுடைய கூற்று பெரும்பாலும் நம்பத் தகுந்ததே என்று R. C. மாஜும்தார் கருதியுள்ளார்.

அஷானுல்லாவின் சாட்சியத்தின்படிச் சிப்பாய்களைப் பற்றி மூன்று முக்கியக் கருத்துகள் வெளிப்படுகின்றன.

1. மத, அரசியல் உணர்ச்சிகளால் மட்டுஞ் சிப்பாய்கள் தூண்டப்பட்டிருந்தால், பொது மக்களைக் கொள்ளையடித்துக் கொடுமைக்குள்ளாக்கியிருக்க மாட்டார்கள்.

2. சிறிதாக முளை விட்ட சூழ்ச்சி ஒன்று சிப்பாய்கள் மத்தியில் தான் அடங்கியிருந்தது. வேறு தலைவர்கள் எவரும் இச் சதியைத் தூண்டிவிடவில்லை.

3. மக்களின் ஆதரவைச் சிப்பாய்கள் பெற வில்லை. இந்து சிப்பாய்களுக்கும், டெல்லி முஸ்லிம் மக்களுக்கும் இணக்கம் இல்லை.

இம் மூன்று கருத்துகளுக்கும் ஆதாரமாகப் பகதூர் ஷாவின் வாக்கு மூலமும் இருக்கிறது. இவைகளை வைத்துச் சிப்பாய்களைப் பற்றி எவ்விதம் உயர்வாக எண்ணுவது?

(' This lurid picture of the sepoys, drawn by an eminent contemporary who had ample opportunities of knowing the truth, no doubt gives a rude shock to our Cherished sentiments. But it is fully corroborated by the conduct of the sepoys at Delhi during the long period of more than four months (from May 11 to September 20, 1857) When they were absolute masters of the city.'' R. C. Majumdar-Page 205)

மொராதாபாத் மாஜிஸ்ட்ரேட் கிராக் ரோஃப்ட் வில்சன் (Craeroft wilson) பலரிடங் கேட்டு அறிந்தபடி—' 1857 மே 31 ஞாயிற்றுக்கிழமை தான் இப்பெருங் கிளர்ச்சிக்காகச் சதிகாரர்களால் குறிக்கப்பட்ட நாள்! இரகசியத் திட்டத்தைச் செயலாக்க, ஒவ்வொரு அணியிலும் மூவர் அடங்கிய குழுக்கள் இருந்தன. ஆனால், பெரும்பாலான சிப்பாய்கள் இதைப் பற்றி அறிந்திருக்க வில்லை'—இக் கூற்றையும் பலர் ஏற்றுக் கொள்ளவுமில்லை. பஞ்சாப் ஆணையர் சர்ஜான் லாரன்ஸ் போன்றோர், மிகத் திட்டவட்டமாக இதை மறுத்துள்ளனர். அவருடைய கருத்துப்படிச் 'சதிகாரச் சிப்பாய்களால் எழுதப்பட்டு, அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட ஏராளமான கடிதங்களில் எதுவும் இத் திட்டத்தைப் பற்றி இலை மறைக் காயாகக் கூடக் குறிப்பிடவில்லை. நம்பக்கம் உள்ள நன்றி மிக்க சிப்பாய்களில் எவனும், நம்மால் பிடிக்கப் பட்டுத் தண்டனை அனுபவிக்கும் (ஆனால், உண்மையைக் கூறி விடுதலை பெறத் துடிக்கும்) எவனும் இதைப்பற்றி ஒன்று கூட கூறவில்லை.' உண்மை தான் ! புரட்சி முடிந்தபின்பு நடந்த விசாரணையில் நூற்றுக்கணக்கான சாட்சிகள் விசாரிக்கப் பட்டனர். அதில் ஒருவர் கூட 'மே 31 தான் கிளர்ச்சிக்காகக் குறிக்கப்பட்ட நாள்; கிளர்ச்சிக்காக இரகசியத் திட்டம் இருந்தது' என்றுங் கூற வில்லை. ஆதாயத்தை நாடியோ, தண்டனையிலிருந்து தப்பவோ ஒரு சிலராவது உண்மையைக் கூறி யிருப்பார்கள். சதியைப் பற்றி அவர்கள் அறிந்திருந்தால்...அத்தகைய சதி ஒன்று இருந்திருந்தால்! ஜான் லாரன்ஸ் மேலும் வினவுகின்றார். 'மீரத் நிகழ்ச்சிக்குப் பின்னே அவர்கள் உடனே கிளர்ச்சியிலீடுபட வேண்டியது தானே! எதுவுமே சில நாட்களுக்கு நடைபெறாததின் காரணம் என்ன? அந்த இடைவெளியில் ஆங்கிலேயரின் சக்தியின்மையை அறிந்து கொண்ட பின்னரே, சிறு கலவரத்தைப்

பெரிதாக்க முனைந்திருக்கின்றார்கள்.*' ஜான் லாரன்ஸின் இவ்வாதம் நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. மே 11 லிருந்து 31 வரை பல அணிகளுக்கிடையே மேற்கொள்ளப் பட்டிருந்த (?) செய்தித் தொடர்பு முழுவதையும் அறிந்தால்தான் இப் புதிருக்கு நாம் விடை காண முடியும்.

ஒரே சமயத்தில் கிளர்ந்தெழுவதற்கான திட்டஞ் சிப்பாய்களிடம் இல்லையென்று சர் சையத் அகமத் கானுங் கூறுகிறார். கிளர்ச்சியில் பல வெள்ளையர்கள் கொல்லப்பட்டிருப்பதால் அரசு இனி, தங்களை நம்பாது என்றோ, கிடைத்த முதல் சந்தர்ப்பத்தில் தங்களை அழிக்க அரசு முயலும் என்றோ அஞ்சிய பல விசுவாச மிக்க சிப்பாய்கள் கலகக்காரர்களுடன் இணைந்து கொண்டார்கள். ('Thousands of loyal sepoys joined the mutineers, for they knew that the Government would have no longer any faith in their fidelity and would annihilate them at the first oppartunity—as Englishmen had been put to death. Accordingly they all turned unfaithful and corps after corps mutinied.' —R. C. Sir Syed Ahmad).

சிப்பாய்களிடம் ஒரு திட்டம் இருந்திருந்தால், அதன்படி மே 31 குறிக்கப்பட்ட நாளென்றால், மீரத் நிகழ்ச்சிக்குப் பின்னராவது, அந்த நாளை மாற்றியமைப்பதற்குத் தலைவர்கள் முயற்சித்திருக்கலாம். அதுவும் மேற் கொள்ளப்படவில்லை; என்றே தெரிகிறது. மே 10 ஆம் நாளிலிருந்து ஜூலை மாத இறுதி வரையில் பல இடங்களில், பலவேறு நாட்களில் கிளர்ச்சிகள் தோன்றின. மீரத் நிகழ்ச்சிக்குப் பின்பும், பல தளங்களில் சிப்பாய்கள் விசுவாசத்துடன் இருந்திருக்கிறார்கள்.

---

*'Not one of the numberous letters which had been intercepted, written by the sepoys, Contained so much as a hint of such a plot, and that none of the faithful sepoys, none of the condemned mutineers who might have saved their lives by disclosing it, if it existed knew anything of it'—

'How is it that the people or soldiers did not rise simultaneously in insurrection? I am told that the time fixed for it was aniticipated by the Meerut outbreak. But if such was the case, how came it then that the news of that out break was not followed by immidiate insurrection? No preparation was necessary. But nothing of the kind occurred, It was only when the native troops saw how powerless we were that they resolved to convert what was a mere combination against what they faucied to be a gross oppression into a struggle for empire.'—Sir John Lawrence.

அதன் பின்னர், உணர்ச்சி வசப்பட்டோ (அலிகார்), பிற சிப்பாய்களின் தூண்டுதலினலோ (ஜான்சி), ஆயுதப் பறி முதல் அச்சத்தினலோ (பஞ்சாப், தானாபூர்) சிப்பாய்கள் கிளர்ச்சியில் இறங்கி யிருக்கின்றனர். S. N. சென் இதை அழகாக விவரித்திருக்கிருர்:— 'சிப்பாய்கள் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக நடந்து கொள்ள வில்லை. தப்பிக்க வழியில்லாத சமயங்களில் சில அணிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டன. நீமச், நசிராபாத், ஜலம், சியால்கோட், அலஹாபாத், பதேபூர், பய்ஸாபாத், சிக்ரோரா போன்ற இடங்களில் வெள்ளைத் துருப்புகளின் வருகைக்கு அஞ்சியோ, இன்னும் பல இடங்களில் ஆயுதப் பறிமுதலைத் தொடர்ந்தோ கிளர்ச்சிகள் தோன்றின. ஆயுதப் பறிமுதல் அச்சத்தை விளைவித்தது; அச்சம் கலகத்தைத் தோற்றுவித்தது.' செப்டம்பர் மாதம் இறுதி வரை கூட சில சிப்பாய்கள் ஏன் கிளர்ச்சியில் இறங்கவில்லை? என்ற கேள்விக்கு ஒரு இந்தியனின் பதில்:— 'நாங்கள் எந்தத் திட்டமும் வகுக்க வில்லை. சில படைகளைக் கலைப்பதோடு அரசு திருப்தி அடையும்; என்று சிப்பாய்கள் நம்பினர்கள். ஆனல், ஆங்கிலத் துருப்புகளின் வருகைகாகத்தான் அரசாங்கம் காத்திருந்தது. அவை வந்ததும், வங்காளப்படை முழுவதையும் கலைத்துவிடும்; அல்லது பீரங்கி வாயில் சுட்டுப் பொசுக்கிவிடும்; என்று தோன்றிய பின்னரே, எஞ்சிய சிப்பாய்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.' புரட்சியின் ஆரம்பத்தில் அகப்பட்ட சிப்பாய்கள் அனைவரும் தண்டிக்கப்பட்டனர். தப்பிய ஒரு சிப்பாய் பின்னர் விசாரணையின் போது கூறியது:— 'நான் எங்கே போவேன்? ஆங்கில ராஜ்யம் முடிந்து விட்டது. என்று எல்லோருஞ் சொன்னர்கள். வீட்டிற்கு ஓடி விடுவது தான் எனக்கு நல்லதாகப் பட்டது.' இவ்வாறு ஒன்றுமறியாத சிப்பாய்கள் பலர் கிளர்ச்சியிலும் ஈடுபடாமல், ஆங்கிலேயர் பக்கமுஞ் சேராமல் ஒதுங்கி விட்டனர். அரசாங்கமே பல இடங்களில் கிளர்ச்சிகளுக்குக் காரணமாக இருந்திருக்கிறது' என்று கூறியுள்ளார் சென். 'But precautionary and punitive measures and open manifestation of distrust on the part of the officers left the sepoys no alternative but to rise in arms.' S. N. Sen—Page 403)

சிப்பாய்களிடங் கிளர்ச்சிக்கான கருத்து ஒற்றுமையும், ஓரளவுக்குக் கடிதப் போக்குவரத்தும் இருந்திருக்கலாம். ஆனல், வேறு தலைவர்களால் அவர்கள் தூண்டப்படவில்லை. அப்படித் தூண்டப் பட்டிருந்தால் நிகழ்ச்சிகள் விரைவாகவும், ஓரளவு முறையாகவும் நடந்திருக்கும். அந்தத் தலைவனுக்குக் கீழ்ச்

சிப்பாய்கள் குழுமியிருப்பார்கள். ஆனால், புரட்சித் தலைவர்கள் என்று கருதப்படும் பகதூர் ஷா, நானா சாஹேப் இலட்சுமி பாய், குன்வர்சிங் ஆகியோர் மீரத் நிகழ்ச்சிக்குப்பின்னே, அதுவும் நீண்ட இடைவெளிக்குப்பின்னே, பெரும்பாலும் வற்புறுத்தலின், அல்லது பலாக்காரத்தின் மூலந் தலைமை பூண்டனர்; என்றே தோன்றுகிறது. மேலும் இவ்வளவு பெரும் புரட்சியில் சிப்பாய்களின் மத்தியிலிருந்து ஒரு தலைவன் கூட வரவில்லையே என்று R. C. மஜூம்தார் வியப்பெய்துகிறார். 'Nothing is more surprising in the whole history of the Mutiny than that this great revolutionary movement did not throw up a single leader from the rank of the sepoys themselves. This is a severve indictment on the organisation, if there were any, and its ideals and abjectives, but most probably it Indicates the loose character of the organisation and the absence of any noble ideal or inspiration behind the. movement.'—R. C. Majumdar–Page 207)

முடிவாக, சிப்பாய்த் தலைவர்களுக்கிடையே கடிதப் போக்குவரத்து இருந்தது; மௌல்வி அஹமதுல்லா அவர்களுடன் அவ்வப்பொழுது இரகசிய உறவு கொண்டான்; பல இடங்களில் அதிக இடைவெளியில்லாமல் கிளர்ச்சிகள் தோன்றின; வெள்ளையர்களைக் கொல்லுவதும், கருவூலத்தைக் கைப்பற்றுவதும், சிறைக் கைதிகளை விடுவிப்பதும் ஓரளவு ஒரே மாதிரியாகப் பல தளங்களில் சிப்பாய்களால் பின்பற்றப்பட்டன; பல இடங்களிலிருந்துங் கிளர்ச்சியிலிறங்கிய சிப்பாய்கள் டெல்லியை நோக்கிச் சென்றார்கள். மேலே கூறியவற்றின் மூலம், ஓரளவு ஒற்றுமையைக் காண்கிறோம். குறிப்பிட்ட இலட்சியத்திற்காக, முடிவான திட்டத்துடன் முறையான, திறமையான ஓர் இயக்கஞ் சிப்பாய்களிடம் இருந்தது; என்பதை, நிரூபிக்கச் சரியான ஆதாரங்கள் கிடைக்காவிடினும், ஒரு பெருங் கிளர்ச்சியை நோக்கி அடி எடுத்து வைக்கும் அளவிற்கு, ஓரளவு கருத்து உடன்பாடும், இரகசியச் செய்திப் பரிமாற்றங்களுஞ் சிறிய முறையில் சிப்பாய்களால் மேற் கொள்ளப்பட்டன; என்பதற்குச் சில ஆதாரங்களும் இருக்கின்றன. இந்தச் சூழ்ச்சியின் தன்மையை, விரிவை, கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு புரிந்து கொள்ள முடியவில்லை.

———

## 6. 'மாய சப்பாத்திகள்'

புரட்சித் தோன்றுவதற்கு முன்னே, நான்கு மாதங்களாக வட இந்தியாவின் பெரும்பாலான கிராமங்கள் தோறும் 'சப்பாத்தி'கள் சுற்றி வந்தன. சில இடங்களில் சிவப்புத் தாமரைகளுஞ் சுற்றி வந்தன. வரப்போகும் பயங்கர நிகழ்ச்சியை மக்களுக்கு அறிவிக்கப் புரட்சித் தலைவர்களால் இந்த இரகசிய முறை மேற்கொள்ளப் பட்டது; என்று, பலர் கருதுகின்றனர். இதன் உண்மையை அறிவதற்கு நாம் சிலவற்றை ஆராய வேண்டும். இச் 'சப்பாத்தி ஊர்வலம்' எப்படி நடத்தப்பட்டது? இது எங்கிருந்து புறப்பட்டது? இதன் உட்பொருள் யாது? இதற்கு முன்னே இப்படி நடந்ததுண்டா?

இச் சப்பாத்தி ஊர்வலம் கீழ்க்கண்ட முறையில் நடந்தது. 'ஒரு கிராமத்தின் சௌக்கிதார் அடுத்த ஊருக்குச் சென்று, அவ்வூர்ச் சௌக்கிதாரிடம் இரண்டு சப்பாத்திகளைக் கொடுத்து அவை போல மேலும் 10 சப்பாத்திகள் செய்து, அருகிலிருக்கும் 5 ஊர்களுக்கு அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளுவான். அதன்படிச் சப்பாத்திகளைப் பெற்ற அந்தந்த 5 ஊர்ச் சௌக்கிதார்களும் இதைத் தொடரும்படி வேண்டப்படுவார்கள். இம் முறையில் மிகச் குறுகிய காலத்தில் ஆயிரக்கணக்கான கிராமங்களுக்குச் சப்பாத்திகள் விநியோகிக்கப்பட்டன. வட இந்தியா முழுவதும், ஏன் பம்பாய், ஹைதரபாத் பகுதிகள் வரைக்குங்கூட இச் சப்பாத்திகள் சென்றிருகின்றன. 1856 ஆம் ஆண்டு இவைத் தோன்றினலும், 1857 ஆம் ஆண்டு ஜனவரி மாதந்தான் பலருடைய கவனத்தையும் ஈர்க்குமளவிற்கு இவை நடமாடின. இவை யாரல்? எங்கிருந்து? ஏன் அனுப்பப்பட்டன?' என்பவையே அடுத்த கேள்விகள்.

கர்னல், பானிபாட், பண்டேல் கண்ட், நாக்பூர், இன்ன பிற இடங்களிலிருந்து இது ஆரம்பிக்கப்பட்டதாகப் பலர் கருதினர். இதன் நோக்கம் யாது என்பதற்கும்? பல்வேறு கருத்துகள் உண்டு :—

(1) மைசூரில் நடந்த விசாரணையின் போது இந்து சாமியார் சீதாராம் பாவா கூறியது: 'புரட்சிக்கு மூலகாரணமாகயிருந்த தாசா பாபா, தன் சீடன் நாஞ சாஹேப்பிற்குக் கொடுத்த அறிவுரையின்படி, இச் சப்பாத்தி விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. தாமரைத் தண்டினுல் சிறு உருவங்கள் செய்யப்பட்டு, அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சப்பாத்தியின் மேல் வைக்கப்பட்டன. எவ்வளவு தொலைவிற்கு இத்தகைய சப்பாத்திகள் செல்கின்றனவோ, அவ்வப் பகுதிகளிலுள்ள மக்கள் புரட்சியின் போது நாஞவின் பக்கஞ் சேருவார்கள், என்று தாசாபாபா கூறினுன். எனவே, புரட்சியைத் திட்ட மிட்ட நாஞ சாஹேப்பால் தான், இச் சப்பாத்தி 'ஊர் வலம்' தொடங்கப்பட்டது'

(2) மீரத்தின் தளபதியாக இருந்த வேலஸ் டன்லப் (Wallace Dunlop) கூறியது; 'அரசாங்க உத்திரவால் இவை அனுப்படுவதாக ஒவ்வொரு ஊர்த் சௌக்கிதாரும் நினைத்துக் கொண்டனர் 57 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் மீரத் பகுதியில் இவை தோன்றின. பரவி வரும் ஒரு பெருந் தொற்று நோய் தங்கள் ஊரைப் பீடிக்காமலிருக்க இது மேற் கொள்ளப்படுகிறது; என்று இந்துக்கள் கருதினுர்கள். வட மேற்கு மாநிலங்களில் ஓராண்டுக்கு முன்பு தோன்றிய காலரா நோய் இன்னுஞ் சில இடங்களில் நீடித்தது. அதிலிருந்து தப்புவதற்காக இம் மூடப்பழக்கங் கையாளப்பட்டது. C. T. மெட்கேஃப் (Sir Theophilus Metcalfe) என்பவரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார்.

(3) மன்னர் பகதூர் ஷாவின் விசாரணையில் சாட்சி சொன்ன ஜாத்மால் என்பவன் கூறியது: 'தங்கள் ஊர்களில் சப்பாத்தித் தோன்றியதும், மக்கள் இதைப் பற்றிப் பலவிதமாக நினைத்தார்கள். பெரும் பயங்கரத்தைத் தவிர்ப்பதற்காக மேற் கொள்ளப்படும் ஒரு பரிகாரமென்று, சிலர் நினைத்தார்கள். கிறித்துவர்களுடைய உணவு முறைக்குப் பிற மதத்தினரையுங் கொண்டு வருவதற்காக அரசாங்கம் மேற் கொண்டுள்ள நடவடிக்கை யென்றுஞ் சிலர் நினைத்தார்கள்.'

(4) சர் சையத் அஹமத் கானின் கருத்து: பல இடங்களில் காலரா பரவியிருந்ததால் இப்படிச் செய்வதன் மூலம் அந் நோய் தங்கள் ஊரை அண்டாது என்று மக்களில் சிலர் நினைத்தார்கள்.'

(5) நிமாரில் தளபதியாக இருந்த கேப்டன் கீட்டிங் (Keating) தன் கடிதத்தில் எழுதியது: 'இந்தூர்ப் பகுதியி லிருந்து எங்கள் பகுதிக்கு இச் சப்பாத்திகள் வந்தன. இந் தூரில் அப்பொழுது காலரா பரவி யிருந்ததால், சப்பாத்தி களின் மேல் மந்திரஞ் செபித்து, அந் நோயை அங்கிருந்து விரட்டுவதற்காக இம் முறையைக் கையாளுகிறார்கள்' என்று நிமார் மக்கள் கருதுகிறார்கள்.'

6. மதுராவில் கலெக்டராக இருந்த மார்க் தான்ஹில் (Mark Thornhill) கூறியது: 'இவ்வதிசயத்தைக் கண்டதும் இதைப் பற்றி அரசாங்க அதிகாரிகள் ஆராயத் தொடங்கினர். ஆனால், எவ்வளவு முயற்சி எடுத்தும், ஒன்றும் புரிந்து கொள்ள முடிய வில்லை. 9 நாட்கள் பலராலும் வியப்புடன் பேசப்பட்டுப் பின்பு மறைந்து விட்டது. ஆனால், சிலர் மட்டும் வேலூர்க் கலகத்திற்கு (1806) முன்பு சென்னை மாநிலத்தில் இச்சப்பாத்தி விநியோகம் நடந்ததாக நினைவில் கொண்டிருந்தனர்.'

(7) பியூடோன் மாவட்டத்தில் கலெக்டராக இருந்த வில்லியம் எட்வர்ட்சின் கருத்து: என் பகுதியிலிருந்த கிராம மக்களால் இதைப்பற்றி எந்த விளக்கமுங் கொடுக்க முடிய வில்லை.'

(8) மன்னர் பகதூர் ஷாவின் விசாரணையில் மருத்துவர் அஷானுல்லா கூறியது: 'இச் சப்பாத்திகளைப்பற்றி யாராலும் எதுவுங் கூற முடியவில்லை. டெல்லி அரண்மனையில் வாழ்ந்த அனைவரும் இந்த மர்மம் என்னவென்று? வியந்து கொண்டார் கள்.'

(9) 'மௌல்வி அஹமதுல்லா தான் இதை ஆரம்பித்திருக்க வேண்டும்' என்று G. B. மேலசன் கருதியுள்ளார்.

(10) 'சிப்பாய்களால்தான் இது ஆரம்பிக்கப்பட்டது; என்ற கருத்தும் நிலவியது.

(11) சிப்பாய்களோ (சிலர்), இதை அரசாங்கம் தான் செய்தது' என்றும் நம்பினர்.

(12) சில இடங்களில் சப்பாத்தியுடன் ஆட்டிறைச்சியும் வந்ததாகத் தெரிகிறது. எனவே, 'இது முகமதியரின் தூண்டு தலே' என்றுஞ் சிலர் கருதினர்.

இவ்வாறு அக்காலத்திலேயே இச் சப்பாத்திகளைப் பற்றிப் பலவிதக் கருத்துகள் நிலவின. எவ்வளவோ முயன்றும் இந்த மர்மத்தை அரசாங்கத்தால் கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஒரு பெருங் கிளர்ச்சியை, அல்லது ஆபத்தை மக்களுக்கு அறிவிக்கவே இம்முறை கையாளப்பட்டது. என்று சிலர் கருதுவதற்குக் கீழ்கண்ட முன்னோடிகள் இருந்தன.

1. 1803-ஆம் ஆண்டு வட இந்தியாவின் மேல் மராத்தியர்கள் படை யெடுக்கும் முன்பே பல கிராமங்களுக்குச் சப்பாத்திகள் விநியோகிக்கப்பட்டன.

2. 1806-ஆம் ஆண்டு வேலூர்க் கலகத்திற்கு முன்பு இச் சப்பாத்தி விநியோகம் நடைபெற்றது.

3. 1855-ஆம் ஆண்டு சந்தால் கிளர்ச்சிக்கு முன்பு சால் மரக்கிளை யொன்று ஒவ்வொரு கிராமந்தோறும் அனுப்பப் பட்டது.

எனவே, 'ஒரு கிளர்ச்சிக்கு முன்பு இத்தகைய முறையில் மக்களுக்கு இரகசியச் சைகைக் கொடுப்பது ஒரு பொதுவான பழக்கம்' என்று அவர்கள் கருதி இருந்தார்கள். அப்படி என்றால் புரட்சி நடந்து கொண்டிருக்கும் பொழுது இவை ஏன் தோன்ற வேண்டும்?

1. 1858-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பீரார்ப் பகுதியில் ஆட்டாமாவால் செய்யப்பட்ட உருண்டைகள் பல கிராமங்களுக்கு விநியோகஞ் செய்யப்பட்டன. அவை பம்பாய்ப் பகுதியிலிருந்து ஆரம்பிக்கப் பட்டதாகவும், நானாவே அதைத் தொடங்கியவன் என்றும், ஓர் ஆங்கில அதிகாரி சந்தேகித்தார்.

2. சிந்த்வாரா மாவட்டத்தில் 1858 அக்டோபர் மாதத், தில் காவி நிறத்திலான இரண்டு கொடிகளும், வெற்றிலைப் பாக்குத் தேங்காய்களும் ஒவ்வொரு கிராமமாகக் கொண்டு செல்லப்பட்டன. இதுவும் நானாவால் தொடங்கப்பட்டது; என்று சிலர் சந்தேகித்தனர். ஆனால், இக் கருத்துகளை ஏற்றுக் கொள்ள இயலாது. புரட்சித் தோன்றிய பின் இத்தகைய செயல்களுக்கு நானாவைக் காரணமாக்குவது மிக எளிது. ஏனெனில்? அப்பொழுது ஒரு புரட்சித் தலைவனாக அவன் மாறி யிருந்ததை அனைவரும் அறிவார்கள்.

இச் சப்பாத்திகள் ஆயிரக்கணக்கான ஊர்களில் வலம் வந்தும், அதைப் பற்றிய முழு விவரங்களை ஒருவர் கூட விசாரணையின் போது தர இயலவில்லை, என்பது வியப்பிற்குரியதே. தோற்றம் என்ன? என்பதைப் புரிந்து கொள்ள முடியா விட்டாலும், அது பரவிய முறை மிக எளிதான ஒன்று, என்பது விளங்குகின்றது. தனக்கு இடப்பட்ட கட்டளைப்படித் தானுஞ் சப்பாத்தி செய்து பிற ஊர்களுக்கு அனுப்பா விட்டால், தனக்கு ஏதாவது கேடு சூழும், என்ற மூட நம்பிக்கையும், அச்சமுமே அது வேகமாகவும், எளிதாகவும் பரவுவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். R.C. மஜூம்தாரின் கருத்துப்படிச் சப்பாத்தி விநியோகத்திற்குப் பலர் பலவிதக் காரணங்களைச் சொன்னலும், ஆரம்பத்தில் அதை ஓர் அரசியல் கிளர்ச்சியுடன் அரசாங்கமோ, மக்களோ இணைக்கவில்லை. சிலர் கூறுவதைப் போன்று, கிளர்ச்சிக்கான சைகையென்பதை நாம் ஒப்புக் கொண்டாலும், அச்சமயத்தில் அந்த உள்நோக்கம் மக்களுக்கு நிச்சயமாகப் புரியவில்லை. ('All available evidence indicates that whatever might have been the views of a few individuals, here and there, the distribution of chapatis was not at first associated with any idea of political revolution either by the Government or by the people at large. So much so, that even if we take for granted that the chapatis were deliberately designed by some as a signal for the out break. we may safely assert that it was certainly not understood by the people in that light—R. C. Majumdar-Page–208). ஒரு சதித்திட்டம் இத்தகைய விளங்காத முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்குமா! என்று சந்தேகிக்கும் S. N. சென், சப்பாத்தி விநியோகத்திற்கு அரசியல் காரணங்கள் இருந்திருக்குமானல், அரசாங்கஞ் சில ஆதாரங்களையாவது உறுதியாகக் கண்டு பிடித்திருக்கும், என்று நம்பியுள்ளார். (A Conspiracy is not conducted through such an unintelligible and uncertain medium of communication when it did not demand much ingenuity to find a more effective device. The Government would not have failed to discover some evidence it chapatis had a political motive behind them.'—S. N. sen-Page 399.)

# 7. மத இன உறவுகள்

இப்பெரும் புரட்சியில் இந்துக்களும், முஸ்லிம்களும் தங்கள் வேற்றுமைகளை மறந்து, வெள்ளையர்களை வெளியேற்ற இணைந்து போராடினார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால், சமகால ஆங்கிலேயர் பலர், இது முகமதியர்களின் சதி திட்டம் என்றுங் கூறியிருக்கிறார்கள். ஆக்ராவிலிருந்த சார்லஸ் ரெய்க்ஸ் அப்பகுதியில் இந்துக்களும் முஸ்லிம்களும் புரட்சியின் போது எப்படி நடந்து கொண்டனர்? என்பதைக் கூறுகிறார்: 'முகம் மதிய அதிகாரிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்த துடன், கலகக்காரர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். ஆனால், இந்துக்களோ ஆங்கிலேயரின் சொத்துகளைப் பாதுகாக்க முன் வந்தார்கள். வடமேற்கு மாநிலங்களைப் பொறுத்த வரையில் ஒரு கலகக்காரனுக்கு மறுபெயர் 'முகமதியன், என்பது.' (And so it was all over the North—Western Piovinces; a mohammaden was another word for a rebell.) ரெயக்ஸின் இக் கருத்தை, ராபர்ட்ஸும் (பிற்கால ஃபீல்ட் மார் ஷெல் ராபர்ட்ஸ்), கொண்டிருந்தார். 'இறைவனின் துணையில், இந்தியாவை ஆள்பவர்களாக ஆங்கிலேயர்கள்தான் இருக்கப் போகிறார்கள்; என்பதை இந்த அயோக்கிய முஸல்மான் களுக்குக் காட்ட வேண்டும்' என்று கூறியிருக்கிறார். (show these raschlly musalmans that, with god's help, English men still be master's of india. திருமதி கூப்லண்ட், 'இது ஒரு முகமதிய எழுச்சி யாதலால், வாரணசி இந்துக்களைப் பற்றி அஞ்சத் தேவையில்லை' என்றார். சர் சையத் அகமதும் இந்துக் களைவிட முகம்மதியர்களே அதிக அதிருப்தியைப் பெற்றிருந் தனர்; என்றும், அதனால் பல இடங்களில் ஓரளவு அவர்களே அதிக வேகத்துடன் எதிர்ப்புக் காட்டினர்; என்றுங் கூறியிருக் கிறார். முகமதியத் தலைவர்களும் அப்புரட்சின் முதல்வர்கள் தாங்களேதான் என்பதை மறைமுகமாக அறிவிப்பது போன்ற

பிரகடனங்களை வெளியிட்டனர். பெரெய்லியின் கான் பகதூர் கான், 'இந்துக்களும் முகம்மதியர்களுடன் இணைந்து ஆங்கிலேயர்களைக் கொன்றால், அவர்களுக்குப் பரிசாகப் பசுவதைத் தடுக்கப்படும்; என்று அறிவித்தார். டெல்லியில் இந்துக்களுக்கு எதிராகச் சில முகம்மதியர்கள் புறப்பட்டபோது, மன்னர் அதைத் தடுத்து நிறுத்தினார். அதற்கு முக்கிய காரணம், டெல்லியில் இருந்த சிப்பாய்கள் பலர் இந்துக்கள் என்பதே ஆகும். தங்களுக்கெதிராக 'ஜெஹாத்' ஒன்று தொடுக்கும் முயற்சி இருக்கிறது; என்று சில இந்துக்கள், மன்னரிடம் முறையிட, 'அதை நான் தடை செய்து விட்டேன்' என்று மன்னர் சமாதானங் கூறினார். அத்தகைய முயற்சி எதுவும் இல்லையென்று அவர் மறுக்கவில்லை; என்பது குறிப்பிடத் தக்கது, '57 ஜூன் 14-ஆம் நாள் தலைநகருக்கு வெளியே ஆங்கில முகாமிலிருந்த மேஜர் ஜெனரல் ரீட், பஞ்சாப் ஆணையருக்கு எழுதிய கடிதத்தில் 'டெல்லி இந்துக்களுக்கெதிராக முகமதியர்கள் சிலர் முயற்சியெடுக்கிறார்கள்' என்று ஒற்றர்கள் மூலந் தமக்கு வந்த செய்தியைக் குறிப்பிட்டார். டெல்லியில் நடந்த நிகழ்ச்சிகளை அவ்வப்பொழுது எழுதிவந்த ஜீவன் லால், சன்னி லால் ஆகியோரும் இந்நிலையைக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

காசியில் ஓர் இந்து கோயிலின் மேல் சில முகமதியர்கள் இஸ்லாமியக் கொடியை ஏற்ற முயற்சித்த போது, இதைத் தடுக்கும்படி அவ்வூர் இராஜபுத்திரர்களை, ஓர் ஆங்கிலேயர் தூண்டி விட்டிருக்கின்றார். காசியில் கிளர்ச்சித் தோன்றிய ஜூன் 4-ஆம் நாள் இந்நிகழ்ச்சி நடந்திருக்கின்றது உத்தரப் பிரதேசத்தில் பெரெய்லி, பிஜ்னௌர், மொராதாபாத் ஆகிய இடங்களில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கடும் மோதல்கள் ஏற்பட்டிருந்தன.

டெல்லியிலும் அயோத்தியிலும் இந்துக்களுடன் சேர்ந்து செயல்பட வேண்டும்; என்ற பிரகடனங்கள் வெளியிடப்பட்டது. இது உண்மையென்றாலும், பசுவதையைச் சில முகமதியத் தலைவர்கள் தடுத்தனர்; என்பது உண்மை ஆனாலும், இந்து–முஸ்லிம் வேறுபாடுகளைப் பயன்படுத்திக் கொள்ள வெள்ளையர் முயன்று தோல்வியடைந்தனர்; என்றாலும், இந்த இரண்டு இனங்களுந் தோளோடு தோள் நின்று, இந்தியாவின் விடுதலைக்காகப் போரிட்டனர். என்று ஏற்றுக் கொள்வதற்கில்லை. மோதல்களைத் தடுக்குமளவிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டாலும், வேற்றுமைகளை மறக்குமளவிற்கு அவர்கள்

இணைந்து செல்லவில்லை. புரட்சி வெற்றி பெற்று ஆங்கிலேயர் வெளியேற்றப் பட்டிருந்தால் மொகலாயப் பகதூர் ஷாவிற்குக் கீழ் மராத்திய நாஞ சாகேப் இருந்திருப்பாஞ! என்பது சந்தேகந் தான். பொதுவாக இந்து முஸ்லிம் மோதல்கள் சில இடங்களைத் தவிர வேறெங்கும் நடைபெறவில்லை. இருவருக்கும் பொதுவான எதிரியாக ஆங்கிலேயர் இருப்பதால், இருவருமே அடிமைகளாக இருப்பதால், இப்புரட்சியின் போது மோதலுகான வாய்ப்புகள் அதிகமில்லை. இந்த இரு இனங்களுமே குறிப்பிடத் தகுந்த வெற்றிகள் எவையுந் தனித்தனி முயற்சியில் பெறுவதற்கும் வழி யில்லை. இறுதியாக, இந்து—முஸ்லிம் மோதல்கள் இல்லை யென்று அறுதியிடவும் முடியாது. ஆஞல், அதே நேரத்தில் இவ்விரு இனங்களும் நன்கு இணைந்து செயல்பட்டார்கள் என்றும் உறுதி கூறவும் முடியாது. பட்டும் படாத இம்மத உறவுகளைத் தவிர, இனவேறு பாடுகளும் அங்கே முளைத்தன.' என்று பகதூர் ஷா பேரரசராகப் பிரகடனப் படுத்தப் பட்டாரோ அக்கணமே சீக்கியர்களின் ஆதரவு புரட்சிக்குக் கிடைக்கும்; என்ற நம்பிக்கைத் தளர்ந்தது. 'பரம்பரை எதிரிகளான முகலாயர்களைப் பழி வாங்க உங்களுக்குப் பொன்ஞன வாய்ப்புக் காத்திருக்கிறதென்று,' நல்ல தருணத்தில் தூபமிட்டுத்தான், ஆங்கிலேயர்கள் சீக்கியர்களின் ஆதரவைப் பெற்றனர். மொகலாயப் பகதூர் ஷாவின் கடிதங்களுக்கு, இராஜபுத்திர மராட்டிய சிற்றரசர்கள் பதில் அனுப்பாதது, இந்த வேறுபாடுகளின் காரணமாகத்தான். இதையும் ஆங்கிலேயர் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

# 8. புரட்சியின் விரிவு

இப்பெரும் புரட்சியின் தன்மையை அறிவதற்கு அதன் விரிவையும் ஆராய வேண்டியது அவசியமாகிறது.

1. இப்பொழுது உள்ள உத்தரப் பிரதேசத்திலும் (வட பகுதி நீங்கலாக) அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுங் கிளர்ச்சிகள் விரிவிலும், வேகத்திலும், கடுமையிலும் அதிக அளவில் இருந்தன. சிப்பாய்களைத் தவிர வேறு பலரும் எதிர்ப்பில் கலந்து கொண்டனர். புரட்சியின் மையம் என்று கூட இப் பகுதியை நாம் கொள்ளலாம்.

2. பஞ்சாபில் பல இடங்களில் சிப்பாய்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டாலும், அவற்றை அடக்குவது எளிதாகவே இருந்தது. கிழக்குப் பஞ்சாப்பில் கொள்ளையடிக்கும் நோக்கத்திலும், சிப்பாய்களைப் பிடித்துக் கொடுத்து வெகுமதி பெறும் ஆசையிலும், மக்களில் பலர் ஈடுபட்டனர். இந்துஸ்தானத்தில் கொள்ளையடிக்க வாய்ப்பு இருந்ததைக் கண்ட ஆப்கானிய மலைவாசிகள், ஆங்கிலேயரின் படையில் சேர்ந்தனர். பாட்டியாலா, நாபா, ஜின்த் ஆகிய அரசர்களின் உதவியையும் ஆங்கிலேயர்கள் பெற்றுக் கிளர்ச்சிகளை அடக்கினர்.

3. கிழக்குப் பீகாரிலும், வங்காளத்திலுஞ் சில தளங்களில் இருந்த சிப்பாய்கள் கிளர்ச்சிச் செய்தனர். பொது மக்கள் இப் பகுதிகளில் அமைதியாகவே இருந்தனர். இங்கே கிளர்ச்சிகள் எளிதில் அடக்கப்பட்டன. அக் கிளர்ச்சிக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பு பெருங் கிளர்ச்சியில் ஈடுபட்ட சந்தாலர்கள் மீண்டும் இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர்.

4. இராஜபுதனும், மத்திய இந்தியா ஆகிய பகுதிகளில் கிளர்ச்சி வேறு விதமாக இருந்தது. நசிராபாத், நீமக் ஆகிய தளங்களில் கிளர்ச்சியில் ஈடுபட்ட சிப்பாய்கள் டெல்லி

நோக்கிச் செல்லும் பொழுது, வழியில் உள்ள கிராமங்களைக் கொள்ளையடித்துக் கொண்டும், வீடுகளைத் தீக்கிரையாக்கிக் கொண்டுஞ் சென்றனர். ஜோத்பூர் மன்னரது உதவியால் அங்கு ஒழுங்கு நிலை நாட்டப்பட்டது. இந்தூர், மாண்டிசோர், தார் ஆகிய இடங்களில் கிளர்ச்சிச் செய்த சிப்பாய்களுக்கு மக்களாதரவு இல்லை. ஜான்சி கிளர்ச்சிக்குப் பின் பல பண்டேல்கண்ட் சிற்றரசர்கள் புரட்சியில் பங்கு கொண்டனர். சாகர்ப் பகுதியிலும் பல சிற்றரசர்கள் இதில் ஈடுபட்டனர். பொதுவாக இப் பகுதியின் குறுநிலத் தலைவர்கள் (தக்கூர்கள்) கிராமங்களைக் கொள்ளையடித்தும், தங்களுக்குள் போரிட்டும் பயனடைய முயற்சித்தனர். கிராமங்களுக்கிடையேயும் மோதல்கள் ஏற்பட்டன. விவசாயிகள் அரசுக்கு வரி செலுத்துவதை நிறுத்திக் கொண்டனர். ஓர்ச்சா மன்னரைப் போன்ற பல சிற்றரசர்கள் ஆங்கிலேயருக்கு உதவி செய்தனர்.

5. நாக்பூர், ஹைதராபாத் ஆகிய இடங்களில் கிளர்ச்சிக்கான முயற்சிகள் நடந்தன. ஆனால், உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், அவைகள் தவிர்க்கப்பட்டன. பம்பாய்ப் பகுதியில் சில இடங்களில் மட்டுங் கிளர்ச்சிகள் நடந்தன. பொதுவாக இப்பகுதிகளில் பெரும் அளவில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

கிளர்ச்சியில் பங்கு பெறாத பகுதிகளையும், ஆங்கிலேயருக்கு ஆதரவளித்தவர்களையும் வரும் பகுதியில் பார்ப்போம்:

1. சிற்சில எழுச்சிகளைத் தவிர வங்காளம், அஸ்ஸாம், கிழக்குப் பீகார், ஒரிசா, கிழக்குத் தக்காணம், தமிழ்நாடு ஆகிய பகுதிகள் புரட்சியால் பாதிக்கப்படவில்லை.

2. கெய்க்வார் (பரோடா), மைசூர், திருவாங்கூர் ஆகிய நாடுகளுங் கிளர்ச்சியில் பங்கு பெறவில்லை.

3. கிளர்ச்சிகள் நடந்த பகுதிகளிலேயே ஆங்கிலேயருக்கு ஆதரவு கிடைத்தது. குவாலியர்; இந்தூர், இராஜபுதனச் சிற்றரசுகள், பாட்டியாலா, ஜிந்த், கர்நால் ஹைதராபாத் ஆகியவற்றின் அரசர்கள் ஆங்கிலேயருக்கு உதவி புரிந்தனர்.

4. சிப்பாய்களில் சீக்கியரும், கூர்க்காக்களும் கிளர்ச்சியை அடக்க முன் வந்தனர். S. N. சென்னின் கூற்றுப்படி, 70,000 சிப்பாய்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 30,000 சிப்பாய்கள் ஆயுதப்பறி முதல் செய்யப்பட்டுக் கலைக்கப்பட்டனர். 30.000 சிப்பாய்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்தனர். இவ்

வெண்ணிக்கையின் விகிதத்தை அறுதியிட்டுக் கணிக்க முடியாதெனவும் அவர் கூறுகிறார். ['It Should be noted that the army as a whole did not join the revolt but a considerable Sec'ion actively fought on the side of the Government. Its actual Strength is not easy to Compute. Every disarmed regiment was not necessarily disloyal and every deserter was not a mutinur.'— S. N. Sen., Page 405].

5. சிப்பாய்கள் கிளர்ச்சி செய்ததும், உடனடியாகப் பொது மக்கள் அதில் பங்கு பெறவில்லை. அதன் பின்னர், வேறு பல காரணங்களுக்காக மக்கள் ஈடுபட்டனர். குறிப்பாக, உத்தரப் பிரதேசத்தில் மட்டும் இவர்களின் பங்கு அதிகம். அதற்குஞ் சிறப்புக் காரணங்கள் இருந்தன. பிற பகுதிகளில் மக்கள் நடுநிலைமையாகவோ, ஆங்கிலேயர்களின் நண்பர்களாகவோ விளங்கினார்கள். ஆங்கிலக் கல்வி பெற்ற இந்தியர் அனைவரும் பொதுவாக அரசாங்கத்திற்கே ஆதரவளித்தனர். குறிப்பாக வங்காளிகள் பல முறை சிப்பாய்களின் வன்முறைக்கு ஆளானார்கள்.

6. பொது மக்களனைவரும் திரண்டெழுந்திருந்தால் உறுதியாக ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றிருக்க முடியாது. மக்களின் ஆதரவோ, எதிர்ப்பின்மையோ இருந்ததால் தான், அவர்கள் வெற்றிபெற முடிந்தது. 'இலண்டன் டைம்ஸ்' பத்திரிகை நிருபர் ரஷ்சல் இந்த நிலைமையை அழகாக எடுத்து விளம்பியுள்ளார், 'இந்தியப் பணியாட்களின் ஒத்துழைப்பு மட்டும் இல்லாமலிருந்தால் ஆங்கிலத் துருப்புகள் பல தொல்லைகளுக்கு உள்ளாகி இருப்பார்கள்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ['Yet it must be admitted that with all the Courage they (the British) Would have been quiet extuminated if the natives had been all and altogether hostile to them......Look at us all, here in camp, at this moment! Our outposts are native troops, natives are Cutting grass for our houses and Siooming them, feeding the elephants, managing the transport, Supplying the Commissariat which feeds us, Cooking our Soldier's food, clearing their camp, Pitching and carrying their tents, Waiting on our officer's and lending us their money. The Soldier who acts as my amanuensis declares that his regiment would not have lived a weak but for the regimental Servants, Dak bearers, hospital men and other depentants'. —Russell, TheTimes.]

இதுவரை புரட்சியினின்றும் ஒதுங்கிய பகுதிகளையும், புரட்சிக்கு ஆதரவளித்தவர்களையும், புரட்சியில் முழுதும் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் நாம் கண்டோம். இராஜஸ்தான், மகராஷ்டிரம் ஆகிய பகுதிகளில் ஆங்கிலேயரின் மேல் வெறுப்புக் கொண்டவர்கள் பெருமளவில் இருந்தனர்; என்பது உண்மை. புரட்சியை ஆதரிக்கவும் பலர் அங்கே இருந்தாலும், நேரடியாக அதில் ஈடுபட்டு அவர்கள் வன்முறையில் இறங்கவில்லை. பஞ்சாபிலும், மத்திய பிரதேசத்தின் பெரும் பகுதியிலும் சிப்பாய்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்து நிலவிய குழப்பத்தைப் பயன்படுத்திப் பலர் கொள்ளையடித்தனர். உத்தரப்பிரதேசத்தின் பெரும் பகுதி, மத்தியப்பிரதேசத்தில் சிறு பகுதி, மேற்குப் பீகார் ஆகிய இடங்களில் சிப்பாய்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்து, ஒரு பொதுப் புரட்சியுந் தோன்றியது. குழப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளையடிக்கப் பலர் இருந்தாலும், வேறு காரணங்களுக்காகப் புரட்சியில் கலந்தவர்கள் இங்கு அதிகமான அளவில் இருந்தனர். பட்டம் பதவிகளை இழந்தவர்களும், ஓய்வுப் பணத்தை இழந்தவர்களும், நிலங்களை இழந்தவர்களும், பொதுவாக அண்மையில் அனுபவித்த இன்பங்களை இழந்தவர்களும் இப் பகுதியில் இருந்தனர், தாங்கள் இழந்தவற்றைப் பெறுவதற்காக இவர்களும் புரட்சியில் பங்கேற்றனர். சிப்பாய்களின் கிளர்ச்சி மக்களின் புரட்சியாக இப் பகுதிகளில் தான் மாறியது. இப் பெரும் புரட்சியின் தன்மையை அறிவதற்கு இந்த மாற்றம் எப்படி நடந்தது? என்பதை நாம் ஆராய வேண்டும்.

# 9. மக்கள் கிளர்ச்சி

உத்தரப் பிரதேசம் முழுதிலும் (வட பகுதி நீங்கலாக). அதன் சுற்றுப் புறத்திலும், மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளிலும், மேற்குப் பீகாரிலும் சிப்பாய்களின் கிளர்ச்சி களைத் தொடர்ந்து மக்களும் அதில் பங்கெடுத்தனர். J. B. நார்ட்டன், அலெக்ஸாண்டர் டஃப் ஆகியோர் இப்பகுதிகளில் நடந்த நிகழ்ச்சிகளை ஆதாரமாக வைத்துத்தான், 'இது வெறுஞ் சிப்பாய்க் கலகமல்ல; மக்களின் கிளர்ச்சியும் ஆகும்; என்று' கூறியிருக்கிறார்கள். இப்பொழுது சிப்பாய்களின் கிளர்ச்சி எப்படி மக்களின் கிளர்ச்சியாக உருவெடுத்தது? என்பதைப் பார்ப்போம்.

உத்திரப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் இந்த மாற் றம் எப்படி நிகழ்ந்த தென்பதை ஆக்ராவில் அப்பொழுது நீதிபதியாக இருந்த சார்லஸ் ரெய்க்ஸ் (Charles Raiks) சான்று களுடன் விளக்கி எழுதினார். புரட்சித் தோன்றிய சமயத்தில் மக்களின் நிலை எப்படி இருந்தது? என்பதற்கு இரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறார், 1857 மே, ஜுன் மாதங்களில் பிலிப்ஸ், பிராம்லி, ஆகிய இரு அதிகாரிகள் நான்கு குதிரை வீரர்களை மட்டுந் துணையாகக் கொண்டு, கங்கை யமுனை நதி யிடைப் பகுதியிலும், ரோஹில் கண்டிலும் பல கிராமங்கள் வழியாகச் சுற்றி வந்தனர். ஆக்ரா திரும்பி வந்து 'சில முகமதி யர்களைத் தவிர கிராம வாசிகள் அனைவரும் அரசாங்கத்தின் பக்கந்தான்' என்று கூறினார்கள்- அதே ஜுன் மாதத்தில் (பல இடங்களில் புரட்சித் தோன்றிய பின்) மெய்ன்புரி நீதிபதி ஆர்தர் கோக்ஸ், அலிகார் மாஜிஸ்டிரேட் வாட்சன் ஆகியோர் சில வீரர்களின் துணையை மட்டுங் கொண்டு தங்கள் தளங் களில் (அலிகார் கிளர்ச்சிக்குப் பின்) தாக்குப் பிடித்தனர், பல தளங்களில் கிளர்ச்சிச் செய்த சிப்பாய்கள் டெல்லியை நோக்கி நெடுஞ்சாலை வழியாகச் சென்றுக் கொண்டிருந்த வேளையில்,

வழியிலுள்ள இப்பகுதிகளில் இது நடந்தது. அப்பகுதி மக்கள் ஆங்கிலேயருக்கு எதிரியாக இல்லாததால் தான். இது சாத்தியமாயிற்று. ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் கூட இந்நிலை சில இடங்களில் நீடித்திருந்தது. கீழ்த்தர முகமதிய சிப்பாய்கள் எங்கெங்கு இல்லையோ, அங்கங்கெல்லாம் ஆங்கிலேயர் பாதுகாப்புடன் இருக்க முடிந்தது. கொள்ளைக்கார இனங்கள் இருக்கும் கிராமங்களும் ஆங்கிலேயரை எதிர்த்தன. டெல்லி வீழ்ச்சிக்குப் பிறகு அலங்கோலத்தையும், அட்டூழியத்தையுஞ் சில காலம் அனுபவித்த பின்பு மக்களில் பெரும் பாலோர் வெள்ளையரின் வருகையையும், சீரமைப்பையும் விரும்பினர்.

சார்லஸ் ரெய்கஸ் கொடுக்குஞ் சான்றுகளிலிருந்து கிளர்ச்சித்தொடங்கிய வுடனே மக்கள் அதில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்று அறிய முடிகிறது. ஆனால், மக்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவளித்தார்கள்; என்று கூறிவிட முடியாது. ஆங்கில ஆட்சியின்மேல் வெறுப்பு இருந்தாலும், உடனே அவர்கள் கிளர்ச்சியில் குதித்து விட வில்லை. இதுவரை எதிர்ப்பு எதுவுங் காட்டாதவர்கள், பின் எப்படிச் புரட்சியில் பங்கெடுத்தனர்? அதையுஞ் சார்லஸ் ரெய்க்ஸ் விளக்குகிறார். வட மேற்கு மாநிலங்களில் உள்ள ஒரு கோடி அறுபது லட்சம் மக்களில், இருபதில் ஒரு பகுதி கூட ஆங்கில வீரர்கள் நிறுத்தப்பட்டிருக்கும் மாவட்டத் தலைநகரங்களில் வாழவில்லை. கிராமப் புறங்களில் வாழ்ந்த பெரும் பகுதி மக்கள் ஆங்கிலேயரின் உயர்ந்த வலிமையை ஒப்புக் கொண்டதுடன், அந்த வலிமை வங்காள சுதேசிக் காலாட் படையின் வாள் முனையில்தான் இருக்கிறன்றது; என்பதையும் அறிந்தவர்கள் தான். நாடு முழுவதுமுள்ள கோட்டைக் கொத்தளங்களையும், கருவூலங்களையும், தளவாடங்களையும் அந்தச் சுதேசி சிப்பாப்பாய்கள் தான்; காவல் காக்கின்றனர். என்பதையும் அறிந்திருந்தனர். இன்று அந்தச் சிப்பாய்கள் கிளர்ந்தெழுந்து, அரசாங்க அலுவலகங்களை எரித்துச் சிறைச் சாலைகளை உடைத்து ஆங்கில அதிகாரிகளைக் கொன்று விசுவரூபம் எடுத்திருப்பதை மக்கள் கண்ணாரக் கண்டனர். இங்கிலாந்தின் வலிமையைப் பற்றிச் சிறிதளவே அறிந்த அதைப் பற்றி எண்ணவும் மறந்த இம் மக்கள் ஆங்கில ஆட்சிக்குத் தீர்ப்பு நாள் வந்து விட்டது; என்று முடிவு செய்து விட்டார்கள். அந்த நிலையில் முடிவும் பொருத்தமானதே. கொள்ளை அடிப்படையே தொழிலாகக் கொண்ட குஜார் மேவாட்டி இனத்தவர்கள் பொன்னான வாய்ப்புத் தங்களுக்குக் கிட்டியிருப்பதை உணர்ந்தார்கள். தங்கள் தொழிலுக்கு இடையூறாக இருக்கும் ஊர் மாஜிஸ்டிரேட் சிப்பாய்

களால் விரட்டப்பட்டு ஓட ஓடக் கொல்லப்பட்டதைக் கண்டனர். மனம் மகிழ்ந்த அவர்கள், உடனே ஆயுதங்களை ஏந்தித் தடை நீக்கியக் காரணத்தால், சிறை நீங்கிய பறவையென சிறகடித்துப் பறந்தனர். கொள்ளையடிப்பதில் அவர்களுக்கு எந்த இனப் பாகுப்பாடும் இல்லை. உயிர் தப்பி ஓடி வரும் ஆங்கில அகதிகளைக் கொள்ளையடித்தனர். கருவூலப்பணத்தைக் கொள்ளையடித்து, ஊரை நோக்கி ஓடுஞ் சிப்பாய்களையும் வழிமறித்தனர். ஆங்கில ஆட்சித் திரும்ப வருவதையுஞ் சட்டம் ஒழுங்கு மீண்டும் நிலைநாட்டப்படுவதையும் இக்கொள்ளைக் காரர்கள் விரும்பாததில் வியப்பில்லை.

இஸ்லாமியப் பிறைக் கொடி டெல்லியில் ஏற்றப்பட்டதும் முகமதிய நெஞ்சங்கள் கிளுகிளுத்தன. மொகலாய ஆட்சியின் மீட்சியில் இழந்த தங்களின் பண்டைய உரிமைகளையும், சலுசககளையும் மீண்டும் பெறலாம் என்று நம்பி முகமதியர்கள் புரட்சியில் தீவிரப் பங்கு கொண்டனர், வேளாண்மைத்தொழிலில் ஈடுபட்ட பெரும் இனங்களான 'ஜாத்'க்கள். பிராமணர், இராஜபுத்திரர் ஆகியோர் ஆங்கிலேயரின் ஆட்சியில் அமைதியும், நன்மையும் பெற்றிருந்தனர். கிளர்ச்சியைத் தொடர்ந்த ஒழுங்கின்மையைக் கண்டு ஆரம்பத்தில் அவர்கள் வருந்தினர். அதனுல், வழிதவறிய வெள்ளை அகதிகளுக்கு உதவி செய்தனர். சிப்பாய்களிடமிருந்துங் குண்டர்களிடமிருந்தும் அவர்களைக் காப்பாற்றினர். இந்த உதவிகளைத் தங்கள் உயிரைக் கூடப்பொருட் படுத்தாமல் செய்தனர். ஆனுல், சில நாட்களுக்குப் பின்பு அவர்களும் மாறினர். நீதி முறை; வரி வசூல், ஊர்க்காவல் ஆகிய அனைத்தும் விரைவில் செயலற்றுப் போனதும், இம்மாற்றம் நிகழ்ந்தது. அதற்கு முக்கியச் காரணம் வரிசுமை யில்லை; என்ற நிம்மதியே. இந்தக் குடியானவர்களே அதிக வரிச்சுமையை இது வரைச் சுமந்து வந்தனர். இனி மேல் நிலத் தீர்வை கட்ட வேண்டியதில்லை என்ருல், இந்த ஆட்சி மாற்றம் ஏற்படட்டுமே, என்று கருதி விட்டனர். வரியிலிருந்து தப்ப நினைப்பது அனைவருக்கும் பொதுவான குணம். வரி வசூல் அதிகாரி மறைந்து விட்டதில் இக்குடியானவர்கள் மகிழ்ந்தனர். ஆனுல், இம் மகிழ்ச்சி அதிக நாள் நீடிக்கவில்லை. நிலைமை கட்டுமீறியது. கொள்ளையும், வன்முறையும் பெருத்தன. ஊர் புறத்தில் திரியும் ஒவ்வொரு போக்கிரியிடமிருந்து தத்தம் சொத்துகளைக் காப்பாற்ற தினமும் போரிட வேண்டி இருக்கின்றதே; என்று நிலக்கிழார்கள் அஞ்சினர். நில வரியைக் கொடுத்து நிலையான ஆட்சியில் தம்முடைய சொத்துக்களுக்குப் பாதுகாப்புப் பெறுவதே மேல் என்று நினைக்கத்

தொடங்கினர். டெல்லி மீட்சிக்குப் பின்பு கங்கை, யமுனை பகுதிகளிடையே இருந்த நிலக்கிழார்கள் ஆங்கில ஆட்சியை ஆவலுடன் எதிர் பார்த்தனர்.

சில காலம் அரசாங்கஞ் செயலற்றதால், வட்டிக்குப் பணங் கொடுத்துக் கொழுத்த பணக்காரர்களின் பாடு ஆபத்தாயிற்று. பல நிலக்கிழார்கள் தங்கள் நிலங்களை அடமானம் வைத்து இவர்களிடம் பணம் வாங்கி இருந்தார்கள். கடனை அடைத்து நிலத்தை மீட்க முடியாமல் பலர் தவித்தனர். சட்டமும், ஒழுங்கும் மறைந்து விட்டதால், அவை மீண்டுந் திரும்பும் முன்பே இந்தக் கடன்காரர்களைத் தீர்த்துக் கட்ட முயற்சிகள் எடுக்கப் பட்டன! கடன் பத்திரங்களும், அடமானப் பத்திரங்களும், பாதிக்கப்பட்டவர்களால் எரிக்கப் பட்டதுடன், கடன்காரர் களில் பெரும்பாலோர் கொல்லப் பட்டனர்! உயிர் பிழைத்த ஒரு சிலர்ஆங்கில ஆட்சியின் மீட்சியை எதிர்பார்த்தனர். இது போல் சிப்பாய்களின் கிளர்ச்சியைப் பயன்படுத்திச் சொந்தச் சிக்கல்களை அவிழ்க்கப் பலர் முயன்றனர். வன்முறையைப் பயன்படுத்தி இலாபம் அடையப் பலர் முயன்றனர். இவர்கள் அனைவருமே சிப்பாய்களுக்கு ஆதரவளிப்பதாகத் தோற்றம் அளிப்பது இயல்பு. தன்னலம் விரும்புவோர் தவிர, திருடனைத் தவிர, சிப்பாயைத் தவிர, பிறர் அனைவரும் ஆங்கில ஆட்சி விரைவில் நிலை நாட்டப் படுவதையே எதிர்பார்த்தனர்!

'சார்ல்ஸ் ரெய்க்ஸின் இவ்விளக்கஞ் சிப்பாய்க் கலகத்திற்கும், மக்கள் கிளர்ச்சிக்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்துகிறது. ஆக்ராவிற்கு அருகில் மட்டுமல்லாமல் பிற பல பகுதிகளிலும் இதுதான் நிலை. ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருப்பினுஞ் சிப்பாய்களின் கிளர்ச்சி மக்களின் கிளர்ச்சியாக எப்படி மாறியது? என்பதை நம்பும் அளவிற்கு இவ்விளக்கம் அமைந்திருக்கிறது' மாற்றம் எப்படி நிகழ்ந்தது? என்பதைப் பார்த்த நாம் அது ஏன் நிகழ்ந்தது? என்பதையும் ஆராய வேண்டும். எங்கெங்கு மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்களோ, அங்கங்கெல்லாம் அவர்களின் அதிருப்திக்குக் காரணங்கள் யாவை? என்பதை அறிந்தால் இப்பெரும் புரட்சியின் தன்மையை மேலும் நன்கு புரிந்து கொள்ளலாம்.

மக்களின் கிளர்ச்சிக்கு அவர்களின் அதிருப்தி தான் காரணம் என்று சொல்லிவிடுவது எளிது. ஆனால், அதிருப்தியெல்லாங் கிளர்ச்சியில்தான் முடிய வேண்டும்; என்பது நியதியல்ல. கிளர்ச்சித் தொடர்ந்ததை வைத்து அதிருப்தி தான்

அதைத் தொடங்கி இருக்க வேண்டும்: என்று நாம் கருதத் தேவை யில்லை. அடிதளத்தில் அதிருப்திகள் நிலவினுங் கிளர்ச்சியில் இறங்கும்படி மக்களைத் தூண்டும் உடனடிக் காரணங்களாக அவை இருக்க வேண்டுமென்பதுங் கட்டாய மல்ல. எனவே, அடிப்படைக் காரணங்களையும், துணைக் காரணங்களையும், உடனடிக் காரணங்களையும் இப்பொழுதும் நாம் ஆராய்வோம்.

புரட்சி முடிந்த பின்பு ஆங்கில அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, டெல்லி முன்ஷி மோகன்லால் புரட்சிக்கான காரணங்களைப் பற்றிக் கொடுத்த விளக்கம் இது: 'ஆங்கில ஆட்சி தன் எல்லைகளை விரிவுபடுத்தியது. சுதேசி மன்னர்களுக்குப் பதட்டத்தைக் கொடுத்தது. இணைக் கப்பட்ட நாடுகளில் அரசவை இன்பங்களை அனுபவித்த ஆதர வாளர்கள் இதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்டனர். கலைக்கப் பட்ட மன்னரின் படை வீரர்கள் ஊர்ப் புறத்தில் வேலை யின்றித் திரிந்து மக்கள் மத்தியில் தீய செய்திகளைப் பரப் பினர். கிரிமியாப் போரில் ருசியர்கள் ஆங்கிலேயர்களைத் தோற் கடித்தது பற்றியும், பாரசீகர்களின் வருகையைப் பற்றியும், சந்தாலர்களின் கிளர்ச்சியைப் பற்றியும் வதந்திகள் பெரிது படுத்தப்பட்டன. ஆங்கில ஆட்சியின் நன்மைகளை இந்தியர் பலர் உணர்ந்திருந்தாலும், அவர்கள் சுதேசிகளை நடத்தும் முறை மிக இழிவாக இருந்ததால், அவமானத்தையும், அதனால் வெறுப்பையும் ஏற்படுத்தியது. தங்களை இழிவு படுத்திய வெள்ளை எசமானர்கள், சுதேசி சிப்பாய்களிடம் அடிவாங்கு வதைக் கண்டு பல இந்தியர் மனம் பூரித்தனர். அயோத்தி இணைப்பிற்குப்பின்பு கலைக்கப்பட்ட அரசவையினர், ஆங்கிலே யருக்கு எதிராகக் கலவரங்களை ஏற்படுத்த முயற்சி எடுத்தனர். இங்கிலாந்தின் உண்மையான பலத்தை இந்தியர்கள் அறியா ததும் புரட்சிக்கு ஒரு காரணம்.' என்று முன்ஷி மோகன்லால் கூறி முடிக்கிறான். பல காரணங்கள் அதிருப்தியின் சூழ்நிலை களே யன்றிப் புரட்சியின் உடனடிக் காரணங்களாகக் கொள்ள முடியாது. சர் சையத் அகமத் புரட்சிக்கான பல காரணங்களைத் தொகுத்துத் தருகிறார்: உயர்ந்த பதவிகளுக்கு இந்தியர்கள் அனுமதிக்கப் படாதது; ஜமீன் தாரின் நிலங்களை ஏல விற்பனை செய்தல்; அதிக நிலத் தீர்வை; (அயோத்தியில்) தாலுக்தாரர்களின் நில உரிமை களையப்பட்டது; நீதி மன்றச் செலவுகள்; ஆங்கிலேயரின் செருக்கான நடத்தை; மக்களின் உணர்வுகளை அரசு மதிக்க மறுத்தல்; மக்களின் ஏழ்மை; அவர்களின் மாறும் எசமான விசுவாசம்; அரசாங்கத்தின்

மத மாற்ற முயற்சி ஆகிய காரணங்களில் இரண்டை மிக முக்கியமாகச் செய்து அகமத் குறிப்பிடுகிறார்: மக்களின் ஏழ்மை ஆட்சி மாற்றத்தை அவர்கள் விரும்பும்படிச் செய்யும். அந்த அளவு ஏழ்மையில் இருந்ததால்தான், ஓரிரு அணுக்கள் கூலிக்குக் கூடக் கிளர்ச்சிக்காரர்களிடம் அவர்கள் பணிபுரியச் சென்றனர். மதமாற்ற முயற்சியே தலையாய காரணம்; என்கிறார் அவர். படித்தவனோ, பாமரனோ, உயர்ந்தவனோ தாழ்ந்தவனோ, அரசாங்கம் கிறித்துவ மதத்தையும், மேற்கத்திய பழக்க வழக்கங்களையும் புகுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது; என்று உண்மையாக நம்பினர்.

மேற்கூறப்பட்ட காரணங்களனைத்தும் வெள்ளையர் மேல் மக்களுக்கு உள்ள வெறுப்பை வளர்த்து விட்டன; என்ற உண்மையைக் காட்டுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பேயும் (1824) பிஷப் ஹீபர் இவ்வாறு எழுதினார்: 'இந்தியர் நம்மை விரும்பவில்லை. ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தால் (குறிப்பாக முகமதியர்கள்) நம்மை எதிர்ப்பதற்குத் தயங்க மாட்டார்கள்; இவ்வாறு இந்தியர்கள் வெறுக்கிறார்கள்; என்பதைப் பல ஆங்கிலேயர்கள் உணர்ந்திருந்தார்கள். இருப்பினும், இந்தியர்களின் அதிருப்தியும் வெறுப்பும் மட்டுமே ஒரு கிளர்ச்சியைத் தோற்றுவித்தல் இயலாது. அவைகளை வெளிப்படுத்துவதற்குச் சரியான வாய்ப்புக் கிடைக்க வேண்டும். அது இப்பொழுது கிடைத்து விட்டது. ஆங்கில ஆட்சியின் முதுகெலும்பான சிப்பாய்ப் படை, கிளர்ச்சியில் ஈடுபட்டுத் தொடக்கத்தில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கும், அக்கணம் அருமையான தருணம்! இத்தருணங் கிடைத்த பின்னர்தான் அதிருப்தி அடைந்தவர்கள் தங்கள் தன்னலத்திற்காகப் புரட்சியில் பங்கு பெற்றார்கள்! இப்பெருங் கிளர்ச்சியை மக்கள் கிளர்ச்சி என்று வருணித்த J. B. நார்ட்டனும் இதே கருத்தைக் கொண்டிருந்திருக்கிறார். 'முகமதியர்களின் சூழ்ச்சி, பிராமணர்களின் சூழ்ச்சி, மத ஊடுருவல், ருஷ்யர்களின் சதி, இந்தியப் பெண்களுக்கு நேர்ந்த அவமானம் போன்றவைகளில் சில புரட்சியின் வளர்ச்சிக்கும், வெற்றிக்குஞ் சாதகமான சூழ்நிலைகளேயன்றி அதற்குக் காரணங்களாகா,' என்று நார்ட்டன் கூறியிள்ளார்.

முகலாய மன்னர் குலத்தின் மீதிருந்த பக்தி; 100 ஆண்டுகளுக்குப்பின் ஆங்கிலேயரின் ஆட்சி முடியும் என்ற ஆரூடம், புது ஆட்சியில் நல்ல பதவிகளும், ஜாகீர்களும் அளிக்கப்படும் என்ற உறுதி மொழி, அரசாங்கக் கருவூலத்தையும், ஆங்கிலேயரின் சொத்துகளையுங் கொள்ளை அடிக்கலாம் என்ற வதந்தி

ஆங்கில ஆட்சியில் கிட்டாத மேன்மையும், சலுகையுங் கிடைக்கும் என்ற சிப்பாய்களின் நம்பிக்கை, வெள்ளைத் துருப்புகள் பற்றாமை, இன வெறுப்பு ஆகிய காரணங்களனைத்துங் கிளர்ச்சியின் வளர்ச்சிக்கும், வெற்றிக்குங் காரணமாகலாமே தவிர, அதன் தொடக்கத்திற்கல்ல. கிறித்துவ மத ஊடுருவலும், அயோத்தி இணைப்புமே பலராலும் முக்கியமான காரணங்களாகக் கருதப்பட்டன. சிப்பாய்களின் கிளர்ச்சி மக்கள் கிளர்ச்சியாக மாறுவதற்கு, இவை பெருந்துணையாக இருந்தன; என்பது உண்மை. குறிப்பாக அயோத்தி இணைப்பு ஒரு முக்கியமான துணைக்காரணம்; என்பதில் ஆங்கிலேயருக்கோ, இந்தியருக்கோ கருத்து வேறுபாடில்லை. அப்பகுதியில்தான் பெருமளவில் மக்கள் கிளர்ச்சி நடந்தது; என்பதை நாம் கவனிக்க வேண்டும். அயோத்தியின் நிர்வாகம் எவ்வளவு சீர் கெட்டு இருந்தாலும், ஆங்கிலேயர் அதை அபகரித்ததை அம் மக்கள் விரும்பவில்லை. அரச பக்தி அந்தளவிற்கு இந்தியாவில் நிலவியது. அயோத்தி இணைப்பு அநியாயம், என்பதுடன் அதைத் தொடர்ந்த ஆங்கிலேயரின் நடவடிக்கைகளும் வெறுப்பை ஏற்படுத்தும் அளவில்தான் இருந்தன. இணைக்கப்பட்டு ஓராண்டாகியும், குறைகளைப் போக்கும் முயற்சிகள் முறையாக மேற்கொள்ளப்பட வில்லை. நன்றிக்கும், நம்பிக்கைக்கும் பெயர் பெற்ற அந்தச் சுதேசி அரசின் இணைப்பிற்குப் பின்னால், மறைந்திருந்த பயங்கரத்தை ஆங்கிலேயர் அறியவில்லை. ஆங்கிலேயரின் பாசக் கயறு, அடுத்து யார் கழுத்தில் விழப்போகிறதோ என்று சுதேசி அரசர்கள் அஞ்சினர்...ஒதுங்கினர்! பணிவுடன் நடந்தும், பண உதவி அளித்தும் பரங்கியின் பசியைப் போக்க முடிய வில்லையே, என்று அரண்டனர்! புது ஆட்சியில் தூக்கி யெறியப்பட்ட தாலுக்தார்கள், தங்கள் சொத்துகளை இழந்ததால் ஆத்திர முற்றனர். அயோத்தி அரசவையை நம்பிப் பிழைத்த முகமதியப் பெருமக்கள் குமைந்தனர். கலைக்கப்பட்ட மன்னரின் படை வீரர்கள் குடும்பச் செலவிற்குத் திண்டாடினர், இவர்களைத் தவிர, ஆங்கிலேயரின் வங்காளப் படையில் அயோத்தியைத் தாயகமாகக் கொண்டவர்கள் பெருமளவில் இருந்தனர். பழைய அயோத்தியின் நிர்வாகக் கொடுமையிலிருந்து தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றிக் கொள்ள இந்தச் சிப்பாய்கள் சில சலுகைகளை அங்கிருந்த ஆங்கிலப் பிரதிநிதியின் மூலம் பெற்று அனுபவித்தனர். இணைப்பிற்குப் பின்னே இத் தனிச்சலுகையை இழந்ததுடன், ஆங்கில ஆட்சியின் கேடுகளுக்கும் அவர்கள் உள்ளாயினர்கள், தாலுக்தார்களின் பிடியிலிருந்து குடியானவர்கள்

அப்பொழுது மீட்கப்பட்டாலும் அன்றாடத் தேவைகளுக்குக் கூட ஆங்கில அட்சியில் வரி செலுத்த வேண்டி யிருப்பதை அவர்கள் வெறுத்தனர். ஆங்கிலேயரின் மேற்கொண்ட நல்ல செயலும், உடனடியாகப் பலன் தராததால், நிறுவனம் வெறுப்பிற்குள்ளாகியது. ஆங்கில ஆட்சியில் அபினிமேல் அதிக வரி விதிக்கப்பட்டதால், அதை அதிகமாக நுகரும் ஏழைகள் பாதிக்கப்பட்டனர். நீதி முறைக்கு உட்படாத சட்டத்தால் தண்டிக்கப்படாத வன்முறையில் ஈடுபட்டே பழக்கப்பட்ட வர்கள், ஆங்கில ஆட்சியின் சட்ட திட்டங்களும், நீதிமன்றங் களும், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு காட்ட மறுத்ததையுங் கண்டு வெறுத்தனர்! அதிருப்தி யடைந்த பல வர்க்கத்தினரும், இக்கிளர்ச்சியை ஒரு வாய்ப் பாகக் கொண்டனர். தங்கள் மன்னர் மேல் பக்தி யிருப்பினும், அவருக்காக மட்டுமே ஒரு பெருஞ் சுதந்திரப் போரை அம் மக்கள் மேற்கொண்டார்கள் என்று சொல்வதிற்கில்லை. குறிப்பாக, தாலுக்தார்களின் தடுமாற்றமும், மனமாற்றமும், அவர்களுக்கிடையே நிலவிய உட்பூசலும் அவர்களின் தன்ன லத்தையே பறை சாற்றியுள்ளன. அயோத்தியை இணைத்த பின்னே வெறுக்கத்தக்க நடவடிக்கைகளை ஆங்கிலேயர்கள் மேற் கொள்ளாமல் இருந்திருந்தால், இவர்கள் எல்லாந் தங்கள் மன்னருக்காகப் போராடியிருப்பார்களா? சிப்பாய்க் கிளர்ச்சி மக்களின் கிளர்ச்சியாக உருமாறிய உத்தரப் பிரதேசத்திலும், தன்னலந்தான் தலை தூக்கியதே தவிர, விடுதலை வேட்கையின் எழுச்சியல்ல. உத்தரப் பிரதேசத்தின் நிலையே அவ்வா றென்றால், பிற பகுதிகளைப்பற்றி என்ன சொல்ல .......!

---

# 10. தோல்விக்கான காரணங்கள்

இப்பெருங் கிளர்ச்சித் தோல்வியடைந்ததற்கான காரணங்களைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆங்கிலேயருக்கு அனுகூலமான சூழ்நிலை, புரட்சிப் படையினர் நழுவவிட்ட வாய்ப்புகள், புரட்சியில் பொதிந்திருந்த குறைகள் ஆகியவற்றைக் காரணங்களாக நாம் சுட்டிக் காட்டலாம்.

கிளர்ச்சித் தொடங்கிய அவ்வாண்டு ஆங்கிலேயர்களுக்குத் தொல்லைகளில்லாத காலம். கிரிமியாப்போரும், சீனப்போரும் அப்போது தான் முடிந்திருந்தன. நல்ல நிலையில் இருந்ததங்கள் துருப்புகளைக் கொண்டு கிளர்ச்சியை அடக்க இங்கிலாந்து பயன்படுத்துவதற்கு வசதியாக இருந்தது. அவ்வாண்டின் தொடக்கத்தில் தான் பாரசீகம் தோற்கடிக்கப்பட்டு, ஆப்கானியர்களுடன் நட்பு உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது. இவ்விதம் எல்லைப்புறத்தில் எதிர்ப்புகள் இல்லாமல் அவர்கள் வைத்திருந்தனர். ஆங்கிலேயரின் கடலாதிக்கங் கிளர்ச்சியை அடக்க அருந்துணையாயிற்று. பல போர் முனைகளுக்குச் சென்று திரும்புங் கப்பல்கள், அவசரச் செய்தி கிடைத்ததும், இந்தியக் கரையை அடைந்தன. கிளர்ச்சிகள் வெடித்ததும், ஆங்கிலேயர் வழக்கமாகக் கையாளும் பிரித்தாளும் முறையில், சீக்கியர்களின் முகமதிய வெறுப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். கூர்க்கா வீரர்களும் உடனடியாக ஆங்கிலேயருக்கு உதவ முன் வந்தனர். பல ஒப்பந்தங்களால் பிணைக்கப்பட்டிருந்த சுதேசி அரசுகள் பல, ஆங்கிலேயரின் வலிமையை அறிந்ததாலோ, சிப்பாய்களின் வெற்றியில் நம்பிக்கை யிழந்ததாலோ ஆங்கிலேயருக்கு உதவி செய்தனர். சுதேசி நாடுகளில் அமைச்சர்களாக இருந்தவர்களும், நிறுவனத்தின் பிரதிநிதிகளாக இருந்தவர்களும் அம்மன்னர்களை நெறிப்படுத்தி, ஆங்கில ஆட்சியின் பக்கம் அவர்களைச் சாயும் படிச் செய்தார்கள். 'கிளர்ச்சியில் சிந்தியா இணைகிறுன் என்

ருல், என் மூட்டை முடிச்சுகளை எடுத்துக் கொண்டு நானேயே நான் புறப்பட வேண்டும்;' என்று தலைமை — ஆளுநர் கேனிங்கே கூறி யிருக்கிறார். அரசாங்கத்தின் நிதி நிலைமை போர்ச் செலவுகளுக்கு ஈடு கொடுத்தது. பல ஆயிரக்கணக் கான இந்தியர்கள் உடனடியாகப் படையில் சேர்க்கப்பட்ட னர்; உயர்ந்தரக என்ஃபீல்டு துப்பாக்கிகளும், நல்ல பீரங்கி களும், தேவைக்கும் அதிகமான கருமருந்தும், அரசாங்கத் திடம் ஏராளமாக இருந்தன. புரட்சியாளர்களுக்குக் கிட் டாத நவீன சாதனமொன்றும், அரசாங்கத்திடம் இருந்தது. அது தான் தந்தித் தொடர்பு. 'டைம்ஸ்' பத்திரிகை நிருபர் ரஸ்ஸல் இத் தந்தியின் மகத்தான சேவையை இவ்விதம் புகழ்ந் துள்ளார்: 'மின்தந்தி கண்டு பிடிக்கப்பட்ட காலத்திலிருந்து தற்பொழுது இந்தியாவைப் போன்று வேறெங்கும் அருமை யான, துணிகரமான பணியை அது ஆற்றியதில்லை. இதன் உதவியில்லா விட்டால், தலைமைத் தளபதி தம் பலத்தில் பாதியை இழந்தவராவார். அவருடைய வலது கரத்தை விட இதுவே அவருக்கு நல்ல பணியை ஆற்றியது. புரட்சிக் காரர்களின் திட்டங்களை உடனுக்குடன் அறிந்து, அதற்கேற்ற வாறு போர் புரிய இது ஆங்கிலேயருக்கு வாய்ப்பளித்தது. இதனால் தான், தந்தி முறையைத் தங்களின் கழுத்தை நெரிக்க வந்த கம்பி' யென்று சிப்பாய்கள் கூறினர்.' இவ்வகையில் அவரால் பாராட்டப்பட்டுள்ளது. மீரத் நிகழ்ச்சிக்குப் பின்பு கிடைத்த இருபது நாட்கள் இடைவெளியானது, பாது காப்பு ஏற்பாடுகளை ஆங்கிலேயர்கள் துரிதப்படுத்திக் கொள்ளு வதற்கு அனுமதித்தது. இவற்றிற் கெல்லாம் மேலாக நன்கு பயிற்சி பெற்ற, அனுபவ அறிவு மிக்க, திறமையான தளபதி களின் தலைமை ஆங்கிலத் துருப்புகளுக்குக் கிடைத்தது. அதே போல் நிர்வாகத்தில் தலை சிறந்த அதிகாரிகளும் புரட்சிக் கொடுத்த ஆட்டத்திலும் அசையாத தூண்களாக நின்றனர். இவ்வளவு அனுகூலங்கள் இருப்பினும் இந்தியக் கோடையின் வெம்மை அவர்களுக்குப் பெரும் எதிரியாக இருந்தது. குறிப் பாக அப்பொழுது தான் தாயகத்திலிருந்து வந்த ஆங்கில வீரர் கள், இம் மாறுபட்ட வெப்ப நிலையால் அவதிக்குள்ளாயினர். கிளர்ச்சிகள் தோன்றியதும் நல்ல கோடை காலத்தில் தான். இவ் வெம்மையைத் தவிர்ப்பதற்காக ஆங்கிலத் தளபதிகள் திட்ட மிட்ட படை யெடுப்புக்களைப் பல முறை மாற்றி யமைக்க வேண்டியதாயிற்று. புரட்சியை அடக்கிய ஆங்கிலத் துருப்புகளில் பெரும்பாலோர் இந்தியச் சிப்பாய்களே என் பதை இங்கு நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

புரட்சிக்காரர்களுக்குஞ் சில அனுகூலங்கள் இருந்தன. எண்ணிக்கையில் புரட்சிப் படையினர், ஆங்கிலத் துருப்புகளை விட அதிகமாகவே இருந்தனர். பல இடங்களில் மக்களின் ஆதரவும் அவர்களுக்கு இருந்ததால், அவர்களின் துணையையும் பெற முடிந்தது. பல்வேறு கிளர்ச்சிகளிலும் தாக்கும் நேரத்தைத் தேர்ந்தெடுக்குஞ் சந்தர்ப்பம் சிப்பாய்களுக்கே இருந்தது. கிளர்ச்சியின் தொடக்கத்தில், அரசாங்கஞ் செயலற்று நின்ற சமயத்தில் தங்கள் வெற்றிகளை நிலை நிறுத்தும் வாய்ப்பும் அவர்களுக்கே இருந்தது. இந்த வாய்ப்புகளை நழுவ விட்டதற்குப் புரட்சியில் பொதிந்துள்ள பல குறைகளே காரணமாகும். அக் குறைகள் யாவை ?

புரட்சிக்காரர்களிடம் ஒரு குறிப்பிட்ட திட்டமோ, இயக்க நெறிகளோ இல்லை. கிளர்ச்சிக்கு முன்பு முறையான, முழுமையான சூழ்ச்சியை உருவாக்கி இருந்தால், கிளர்ச்சிக்குப் பின் அவர்களின் நடவடிக்கைகளிலும், படையெடுப்புகளிலும் ஒரு கோர்வையை நாம் காணலாம். ஆனால், எந்த உயர்ந்த குறிக்கோளும் அவர்களை இணைக்காததால், ஒற்றுமையுங் காணப்படவில்லை. புரட்சித் தலைவர்களான பகதூர்ஷாவும், நானாசாகேப்பும், ஜான்சி இராணியும், அயோத்தி பேகமும், அகமதுல்லாவும், குன்வர்சிங்கும், பெரோஸ் ஷாவும் மிக நெருங்கிச் செயல்படவில்லை. அந்தந்தப் பகுதிகளில் தங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே அவரவர்கள் போரிட்டார்களேயொழிய, திட்டமிட்டு ஆங்கிலத் துருப்புகளை முறியடிக்க அவர்கள் ஒன்றுசேரவில்லை. ஒரு பகுதியில் பெற்ற வெற்றியைப் பயன் படுத்தவோ, மறு பகுதியில் அடைந்த தோல்வியில் பாடம் கற்கவோ அவர்கள் சேர்ந்திருக்கவில்லை! இந்து முஸ்லிம் மோதல்கள் சிறிதளவே நடைபெற்றாலும், ஆங்கிலேயரை விரட்டியடிக்கத் தேவையான அளவு அவ்விரு இனங்களும் கை கோர்க்கவில்லை. புரட்சித் தலைவர்களின் தன்னலத்தைப் போல சிற்றரசர்களும், நிலக்கிழார்களும் தங்கள் தங்கள் நலன்களை மையமாகக் கொண்டே புரட்சியில் பங்கேற்றனர். குடியானவர்களைத் தவிர பிற எல்லா வர்க்கத்தினருக்கும் புரட்சிப் பிரகடனங்கள் அழைப்பு விடுத்தன. அக் குடியானவர்களின் முழு ஆதரவும் புரட்சிக்குக் கிடைக்காதது தோல்விக்கு ஒரு காரணம்; என்றுஞ் சொல்லப்படுகிறது.

புரட்சிப் படையின் போர்த்திறமை மிகக் குறைந்தது என்பதில் ஐயமில்லை. எண்ணிக்கையில் கூடியிருந்தும், ஆங்கில அதிகாரிகளால் பல்லாண்டு பயிற்சி அளிக்கப் பட்டும், சிப்பாய்ப் படைகள் குறிப்பிடத்தக்க வெற்றிகள் எதையும் அடையவில்லை. புரட்சித் தளபதிகளிடையே போர் முறைகளிலும், படையெடுப்புக்களிலும் எந்த உடன்பாடும், நல்ல முறையில் இருந்ததாகவுந் தெரியவில்லை. கான்பூரிலும், லக்னோவிலும் முடக்கப்பட்ட வெள்ளையர்களைக் காப்பாற்ற, மிகத் திறமையுடன் எதிர்ப்புகளைச் சமாளித்து, ஆங்கிலத் துருப்புகள் வந்து சேர்ந்தன, ஆனால், டெல்லியை முற்றுகையிட்ட ஆங்கிலப் படையை முறியடிக்கும் ஒரு படையெடுப்பைப் புரட்சித் தலைவர்கள் முயற்சிக்கவுங் கூடவில்லை. நல்ல திட்டம் புரட்சித் தலைவர்களால் வகுக்கப்பட்டிருந்தால், டெல்லி முற்றுகைக்குப் பஞ்சாபிலிருந்து சென்ற உதவியைத் தடுத்திருக்கலாம். கனத்த அவர்களால் டெல்லி பாதுகாக்கப் பட்டிருந்தது. அங்கே 40,000 வீரர்களுக்கு மேல் இருந்தும், நான்கு மாத முற்றுகைக்குப் பின்பு வெள்ளைத் துருப்புகள் உள்ளே நுழைந்து விட்டன! ஆனால், கான்பூரிலோ முற்றுகை யிட்ட சிப்பாய்களின் எண்ணிக்கை 3,000; முடக்கப்பட்ட அகதிகளோ சுமார் 400 பேர் தான். நான்கடி உயர மண் சுவரால் உருவாக்கப்பட்ட அக் காப்பிடத்தில் சுமார் 300 ஆங்கில வீரர்கள் மூன்று வாரங்களாக இப்பெரும் முற்றுகையைத் தாக்குப் பிடித்தனர்! இதே போல், லக்னோவில் 3,000 அகதிகள் நிலையரகச் சுற்றுக்குள் இருந்தனர். அதில் போரிடத் தகுதி வாய்ந்தவர்கள் 2,000த்திற்குங் குறைவே. பல்லாயிரக்கணக்கான புரட்சி வீரர்கள் ஒன்பது மாதங்கள் முயன்றும் நிலையரகம் சரணடையவில்லை! மாறுகத் தளபதிகள் ஹேவ்லாக்கும், உட்ராமும் சுற்றியிருந்த புரட்சிப் படையை ஊடுருவி, நிலையரகத்துள் சென்று தம் தோழர்களுக்கு உதவி செய்தனர். இந்த இரு முற்றுகைகளின் போதும், ஆங்கிலேயர்கள் காட்டிய வீரம் அவர்களின் இனத்திற்குப் பெருமை ஊட்டுவதே ஆகும். உணவுப் பற்றுக்குறை, உதவி கிட்டாமை ஆகிய துன்பங்களுடன் உடனிருக்குஞ் சுதேசி வீரர்கள், எந்தநேரத்தில் எந்தத் துரோகம் இழைப்பார்களோ, என்ற அச்சத்துடனே தான் அவர்கள் வாழ வேண்டியிருந்தது. 'அரா'வில் 50 சீக்கியர்களும், 18 ஆங்கிலேயர்களும் குன்வர்சிங்கின் ஒருவார முற்றுகையைத் தாக்குப் பிடித்தனர். அப்பொழுதும் முற்றுகையிட்ட புரட்சிப் படையின் எண்ணிக்கை 2,000. இந்த நான்கு இடங்களிலும் ஆங்கிலேயரின் ஆயுத பலத்தை விட மன வலியும், ஒருங்கிணைந்த

போர் முறையும், கட்டுப்பாடும், தியாக உணர்வும் அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தன; என்பதை நாம் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். புரட்சிப் படைகளும் சில இடங்களில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் பெற்றன. இலக்னோவிலிருந்து, லாரன்ஸ் அனுப்பிய முன்னோடிப் படைகள், சின்கத் என்ற இடத்தில் புரட்சி வீரர்களால் சிதறியடிக்கப் பட்டனர். 'அரா'விற்கு அருகில் தன்பார் மாந்தோப்பில் குன்வர்சிங் வெள்ளைப் படைகளைச் சின்னா பின்னமாக்கினான். கால்பியிலிருந்து வந்த தாத்யாவின் படைகள் விந்தாமை அடித்துத் துரத்திக் கான்பூரில் முடக்கின. குன்வர்சிங், தாத்யா தோப் ஆகிய இருவரே புரட்சி தந்த சிறந்த வீரர்கள். போர் அனுபவம் எதுவுமின்றி, அவர்கள் பெற்ற வெற்றிகள் பெருமைக்குரியவை. கொரில்லாப் போர் முறையில் ஆங்கிலத் துருப்புகளுக்குத் தொல்லை தருவதில் புரட்சி வீரர்கள் சிறந்து விளங்கினார்கள். உயர்ந்த ஆயுதங்களும், உரிய தளவாடங்களும் பெற்றிருந்தால் அவர்கள் மேலுஞ் சில வெற்றிகளை அடைந்திருக்கலாம். ஆனால், ஐரோப்பியத் தளபதிகளைப் பெற்றிராத இந்தியத் துருப்புகள், வெற்றிகளைப் பெறுவதென்பது எளிதான காரியமல்ல வென்பது விளங்குகின்றது. நிக்கல்சனும், நீலும்; உட்ராமும், ஹெவ்லாக்கும்; ஹியுரோஸும், காலின் கேம்பலும் இல்லை யென்றால், பிரிட்டானிய இந்தியப் பேரரசு மறைந்திருக்கும்! ஜான்லாரன்ஸ், ஜியார்ஜ்லாரன்ஸ், ஹென்றி லாரன்ஸ், இராபர்ட்ஹாமில்டன், ஹெர்பர்ட் எட்வர்ட்ஸ், மாக்பர்சன் போன்ற அதிகாரிகளின் அருஞ்செயல்களும் இவ்வெற்றிக்கு அடித்தள மென்றால் மிகையாகாது.

இப்பெரும் புரட்சியில் பங்கெடுத்த தலைவர்களுக்கும், சிப்பாய்களுக்கும், மக்களுக்கும் நாட்டுப் பற்றும் விடுதலை உணர்வும் நாம் நினைக்கும் அளவிற்கு இல்லை யென்பது தோல்விக்கு ஒரு முக்கிய காரணம். ஆங்கில ஆட்சியால் ஏற்பட்ட அதிருப்தியும், அவர்கள் மேலிருந்த வெறுப்பு மட்டுமே வெற்றியைத் தேடித்தராது. திட்டமும், கட்டுப்பாடும், தலைமையும், ஒற்றுமையும் அற்ற அவர்கள் ஆங்கிலேயரை எதிர்த்து வெற்றி காண நினைப்பது வீண்கனவே! இத்தனை குறைகள் இருப்பினும் 'இப்பெருங் கிளர்ச்சிக் கொடுத்த அதிர்ச்சியில் ஆங்கில ஆட்சி ஆட்டங் கண்டது என்பதை மறுக்க முடியாது. தங்களின் ஆட்சி மயிரிழையில்தான் தொங்குகிறது என்பதை ஆங்கிலேயரும் அறிந்திருந்தனர். 'ஹைதராபாத்தின் விரலசைவைத் திருவல்லிக்கேணி முஸல் மான்கள் ஒவ்வொரு வினாடியும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்! ஹைதரா

பாத் 'வெள்ளை வீசியிருந்தால்' தென்னகம் முழுமையும் கொந்தளித்திருக்கும்! நேப்பாள மன்னர் நண்பராக இல்லையென்றால், நிலைமை வேறு விதமாய் இருந்திருக்கும்,' இவ்வாறு J. B. நார்ட்டன் கூறியுள்ளார். அந்தளவிற்கு இந்தியா முழுதும் அதிருப்தி நிலவியிருந்தும், அதை முறையான எதிர்ப்பாக, எழுச்சியாக உருவாக்கக் கிடைத்த வாய்ப்பு நழுவி விட்டது. காலங்கடந்த நாட்டுப் பற்றே இவ்விழப்பிற்குக் காரணம். காலங் கடந்த நாட்டுப் பற்றிற்கு இந்திய வரலாறே ஒரு காரணம்!

# 11. விளைவுகள்

இப்பெருங் கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கும் பொழுதே இதுவரை பெயரளவில் நீடித்து வந்த முகலாயப் பேரரசுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அத்துடன் அச்சாதனையைப் புரிந்த கிழக்கிந்திய வணிக நிறுவனத்திற்கும், முடிவு கட்டப் பட்டது. இருநூற்றைம்பது ஆண்டுகளாக நிலைத்து இங்கிலாந்தின் மேன்மைக்கு அருஞ்சாதனை புரிந்த அவ் வணிக நிறுவனம் முற்றுப் பெற்றே ஆகவேண்டும்; என்ற அளவிற்குச் சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இங்கிலாந்து அரசின் இம் முடிவை மிகக் கண்ணியமான முறையில் அவ்வணிக நிறுவனம் எதிர்த்தது. புகழ் பெற்ற அறிஞர் ஜான்ஸ்டூவர்ட்மில் என்பவரின் துணையால் தயாரிக்கப்பட்ட ஒரு விண்ணப்பம், நிறுவனத்தின் சார்பில் அரசிக்கு அனுப்பப்பட்டது. 'இப்பெருங் கிளர்ச்சிக்குத் தம்மைப் பலியாடாக ஆக்குவது உகந்ததல்ல. ஏனெனில்? இந்தியத் துணைக் கண்டத்தில் நேர்ந்த தவறுகளுக்கு, இங்கிலாந்து அரசும் ஓரளவு பொறுப்பேற்க வேண்டும். இக்கோளத்தின் மறு பகுதியில், இங்கிலாந்து அமெரிக்காவை இழந்த அந்நேரத்தில், ஆசியாவில் ஒரு பேரரசை உருவாக்கிய பெருமையில் பெரும் பங்கு தமக்கே உண்டு' என்ற நிறுவனத்தின் முறையீடுகளுக்குப் பாராளுமன்றஞ் செவி சாய்க்கவில்லை. புரட்சி நடந்து கொண்டிருக்கும் பொழுதே அரசி விக்டோரியாவின் பேரறிவிப்பின் மூலம் வணிக நிறுவனத்தின் கையிலிருந்த இந்தியா, இங்கிலாந்து அரசின் நேரடி ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டது. உண்மையான மாற்றம் முன்னமேயே நிகழ்ந்து விட்டதால், இது பெயரளவில் ஏற்பட்டதொரு மாற்றமே,' என H. S. கன்னிங்ஹாம் கூறியுள்ளார். ஏனெனில்? இவ்வணிக நிறுவனத்தின் 'இயக்குனர் குழு' பெற்றிருந்த உண்மையான அதிகாரங்கள் பலவும் அரசால் ஏற்படுத்தப்பட்ட 'மேற்பார்வைக் குழு'விற்குச் சென்றுவிட்டன. 1858-ல் நடந்த மாற்றத்தின்படி மேற்பார்வைக் குழுவின்

தலைவர் நீக்கப்பட்டு இந்தியாவிற்கென்று அரசுச் செயலர் (Secretary of State) ஒருவர் நியமிக்கப் பட்டார். அச்செயல ருக்கு ஆலோசனை வழங்கப் பதினைந்து உறுப்பினர்கள் அடங் கிய மன்றம் ஒன்று அமைக்கப் பட்டது. இந்தியாவில் ஏற்பட்ட இப்புது ஆட்சியின் அரசப் பிரதிநிதியாகத் (Viceroy) தலைமை—ஆளுநர் கேனிங் நியமிக்கப் பட்டார்.

புரட்சி நடந்து கொண்டிருந்த அப்பொழுதே தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக இந்தியர்களைப் பழி வாங்குவதில் கேனிங் மிதமாக இருந்தார்; என்று இங்கிலாந்தி லும், இந்தியாவிலும் பல ஆங்கிலேயர்கள் கூக்குரலிட்டனர். கிளர்ச்சியை அடக்குவதில் போதிய வேகம் காட்டவில்லை; என்பதாலும், தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கினர்; என்பதாலும் பல ஆங்கிலேயர் இவ ரைக் 'கருணைமிகு கேனிங்' ('Clemency Canning') எனக் கிண்ட லாக அழைத்தனர். ஆனால் அவர் மேற்கொண்ட நிதானப் போக்கு தான் புரட்சியின் பிற்பகுதியில் எதிர்ப்பைக் குறைத் தது. அவர் காட்டிய மன்னிப்பு மனப்பான்மை வழியில்தான் புதிய ஆட்சியில் சில இந்திய வர்க்கங்களின் ஆதரவைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

அம் முயற்சிகளில் முதலாவதாகக் கிளர்ச்சியை அடக்க ஆதரவளித்தப் பல சுதேசி அரார்களுக்குச் சில எல்லைச் சலுகை கள் அளிக்கப்பட்டன. எல்லை விரிவாக்கத்தில் அரசு இனி ஈடுபடாது என உறுதி மொழியும், தங்கள் அரியணைக்கு வாரிசாக தத்தெடுத்துக் கொள்ளும் உரிமையும் சுதேசி அரசர் களுக்கு வழங்கப்பட்டன. அரசர்களுடன் நிலக்கிழார்களின் ஆதரவுந் தனக்கு உறுதியாக இருந்தால்தான், பிற்காலத்தில் கிளர்ச்சி எதுவும் நடக்கவிடாமல் தடுக்கலாம்; என்று புதிய ஆட்சி உணர்ந்து செயல்பட்டது. அயோத்தி தாலுக்தார்கள் அனைவருமே மன்னிக்கப்பட்டு, அரசின் கண்காணிப்பில் பழைய தகுதியில் வைக்கப் பட்டனர். இந்தியர்கள் உயிரெனப் போற்றுஞ் சாதி சமயப் பழக்க வழக்கங்களுக்கு, ஊறு விளை விக்கும் எந்தவொரு சீர்திருத்தத்தையும் மேற்கொள்ளக் கூடா தெனப் புதிய அரசு முடிவு செய்தது. இந்த நல்லெண்ண நம்பிக்கை மொழிகள் மட்டுமே தங்கள் ஆட்சி நிலைபெற உதவி செய்யும் என்று ஆங்கிலேயர்கள் கணக்கிடவில்லை. எவ்வித எதிர்ப்பையுஞ் சமாளிக்கத் தேவையான அளவில் இந்தியப் படையமைப்பில் மாறுதல்கள் செய்தனர். இந்திய சிப்பாய் களை நம்பக் கூடாதென்றும், ஓர் ஆப்பிரிக்க நீக்ரோ படையை

வைத்து இந்தியாவை ஆளல் வேண்டும், என்றும் ரிக்கட்ஸ் (Ricketts) என்பவர் கூறினர். பம்பாய்க் காவலாணையர் ஃபோர்ஜெட் (Forjett—Commissioner of Police) என்பவர் ஓர் ஆங்கில—இந்தியக் கலப்பு இனக் குடியேற்றத்தை உருவாக்கி அவ் வீரர்களைக் கொண்டமைக்கப்பட்ட படையின் மூலம். இந்தியாவை ஆளல் வேண்டும்; என்று கருதினர். பெஷாவரில் ஆணையராக இருந்த ஹெர்பர்ட் எட்வர்ட்ஸ் இந்தியா முழுவதையுங் கிறித்துவ மதத்திற்கு மாற்றுவது சிறந்ததென்றார். ஏனெனில்? கிளர்ச்சியின் போது கிறித்துவர்கள் அனைவரும் அரசாங்கத்திற்கு ஆதாரமாக இருந்தார்கள். இவை எல்லாம் மேற்கொள்ளுவதற்கு எளிதான அறிவுரைகள் அல்ல; படையில் இந்தியருக்கும், ஆங்கிலேயருக்கும் உள்ள விகிதத்தைக் குறைப்பதுவே சிறந்ததெனக் கருதப்பட்டது. புரட்சிக்கு முன்னே 2,38,000 இந்திய வீரர்களுக்கு 45,000 ஐரோப்பிய வீரர்கள் இருந்தனர். புரட்சிக்குப் பின்னே மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு 14,000 இந்திய வீரர்களுக்கு 65,000 ஐரோப்பிய வீரர்கள் என்றாக்கப்பட்டது. வங்காளப் படையில் ஒன்றுக்கு ஒன்றாகவும்; சென்னை, பம்பாய்ப் படைகளில் இரண்டுக்கு ஒன்று விகிதத்திலும், வெள்ளை வீரர்கள் அமர்த்தப்பட்டனர். முக்கியப் பகுதிகளிலுங் கோட்டைக் கொத்தளங்களிலும் பெருங் கருவூலங்களிலும், வெள்ளைத் துருப்புகளே காவலுக்கு நிறுத்தப்பட்டனர். பீரங்கிப் படை முழுவதிலும், ஓர் இந்திய வீரன்கூட அமர்த்தப்பட வில்லை. இவ்விதம் பிற்காலத்திற்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செவ்வனே ஆங்கிலேயர்கள் செய்து கொண்டனர். அத்துடன், சிப்பாய்கள் ஒன்றிணைவதற்கான வாய்ப்புகள் குறைக்கப் பட்டன. சுதேசிப் பத்திரிகைகளைச் சிப்பாய்கள் படிப்பது கூட தடை செய்யப் பட்டது. பொது மக்கள்ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்குங் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இப்பெருங் கிளர்ச்சி நடை பெற்றது ஒரளவு நன்மைக்காகத்தான் என்று சர்லெபல் கிரிப்பின் (Sir Lepel Griffin) கூறினார். இதன் பின்னர்தான், ஆங்கில ஆட்சியின் நிர்வாகத்தில் இருந்த பல குறைகள் களைந்தெடுக்கப்பட்டன. 'அகல உழுவதைக் காட்டிலும் ஆழ உழுவதே சிறந்த தென்பதற் கேற்ப, எல்லை விரிவாக்கத்தை நிறுத்திக் கொண்டு தமக்குக் கிடைத்துள்ள பகுதியில் தங்களின் முழு கவனத்தையும் ஆங்கிலேயர் செலுத்தினர். இதன் விளைவாக ஒரு திட்டமிட்ட பொருளாதாரச் சுரண்டல் தொடர்ந்தது. அசோக்

மேத்தாவின் கூற்றுப்படி, இந்தியாவில் ஆங்கிலேயரின் வாணிகம் 360 விழுக்காட்டிற்கு விரிந்தது. விரிவாக்கப்பட்ட இங்கிலாந்து—இந்தியத் தொடர்பும், விரிவாக்கப்பட்ட இரயில் பாதை, சாலைப் போக்குவரத்துகளும், இவ் வாணிகத், தொழில் வளர்ச்சிக்குப் பின்னணியாக இருந்தன.

புரட்சியின் போதும், புரட்சிக்குப் பின்பும் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் முகமதியர்களே ஆவார்கள். இந்துக் களைவிட முகமதியர்களே அதில் தீவிரமாகப் பங்கு கொண்டனர். இது முகமதியரின் சூழ்ச்சி என்று நம்புமளவிற்கு அவர்களின் பங்கு கிளர்ச்சியில் இருந்ததால் தான், ஆங்கிலேயரும் அவர்களை அதிகமாகப் பழி வாங்கினார்கள். பல முகமதிய உயர்குடிமக்களின் சொத்துகளும், பதவிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இதன் காரணமாக அவர்களுக்கிருந்த ஆங்கில வெறுப்பு மேலுங் கூர்மையாகியது. புரட்சிக்குப் பின்னே ஆங்கிலேயருடன் எவ்விதத்திலுந் தொடர்பு கொள்ள அவர்கள் மறுத்தனர். இதனால், புரட்சிக்கு முன்னே தொடங்கப்பட்ட முகமதிய மறு மலர்ச்சித் தடைபட்டதுடன், நீண்ட காலம் எந்தத் துறையிலும் அவர்கள் முன்னேறாமல் பின் தங்கினர். ஆனால், மேலைக் கல்வியை விரும்பிக் கற்ற இந்துக்களோ அதிக அளவில் அரசாங்கப் பதவிகளில் அமர்ந்தனர். இதனால், இந்துக்களுக்கும், முகமதியர்களுக்கும் உள்ள பிளவு விரிவடைந்து இந்தியப் பிரிவினைக்கு வித்திட்டது.

ஒரு வகையில் இந்தியச் சமுதாய முன்னேற்றத்திற்கு இப் பெருங் கிளர்ச்சி முட்டுக்கட்டை யாயிற்று. இந்திய முற்போக்கு வாதிகள், ஆங்கிலேயச் சீர்திருத்த வாதிகளுடன் அனுபவித்தத் தேனிலவு முற்று பெற்றது. அன்று நிறுத்தப் பட்ட சீர் திருத்தச் சிந்தனைகள், இருபதாம் நூற்றாண்டில் தான், மீண்டும் மலர்ந்தன! சமுதாய விழிப்புத் தடை பட்டாலும், அரசியல் எழுச்சிக்கு இப்பெருங் கிளர்ச்சித் துணை செய்தது. அடுத்த அரை நூற்றாண்டில் தோன்றிய விடுதலை இயக்கத்திற்கு இம் மாபெரும் புரட்சியின் நினைவலைகள் உணர்சியூட்டி, ஊக்க மளித்தன.

———

# முடிவுரை

இப் பெரும் புரட்சியின் தன்மைகளை ஆராய்ந்ததில், நமக்குக் கிடைத்த முடிவென்ன? இதை வெறுஞ் சிப்பாய்க் கலகமென்று ஒதுக்கித் தள்ளுவதா? அல்லது, விடுதலைப் போர் என்று உயர்த்திப் போற்றுவதா? நிச்சயமாக இதைச் சிப்பாய்க் கலகமென்று ஒதுக்கவே முடியாது. எப்படியெனில்? ஒரு விடுதலைப் போரின் தன்மைகளை இங்கு நாம் காண முடிகிறதா? விடுதலை என்ற ஒரு சிறந்த இலட்சியத்தை அடைய வேண்டிச் சில தலைவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம், அதற்கு மக்களின் ஆதரவு, அவ் வியக்கத்தில் கட்டுப்பாடு, ஒத்துழைப்பு, ஆகிய சிறப்புத் தன்மைகளையும் நாம் காண நேரிட்டால், அதை விடுதலைப் புரட்சி என்று ஐயமின்றி ஏற்றுக் கொள்ளலாம். இத் தன்மைகள் அனைத்தும் இல்லாவிடினும், இயக்கத்தின் ஆழத்தில் இலட்சியத்தை நோக்கி இழுத்துச் செல்லுஞ் சூழல் ஒன்று இருக்க வேண்டும்; என்பது மிக மிகத் தேவையான ஒன்று. 1857இன் பெருங் கிளர்ச்சியி லிருந்து நாம் காண்பதென்ன?

நடந்த நிகழ்ச்சிகளை நம் மனக்கண்முன் மீண்டுங் கொண்டு வந்து நிறுத்துவோம். அவற்றை மூன்று கட்டங்களாக நாம் பிரிக்கலாம். (1) '57 ஜனவரி மாதத்திலிருந்து ஏப்ரல் இறுதி வரையிலான நான்கு மாத நிகழ்ச்சிகள். (2) மே 1-லிருந்து 11-ஆம் நாள் இரவு வரையில் நடந்தவை. (3) மே 12-லிருந்து 31-வரையிலுந் தொடர்ந்தவை.

'57-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொழுப்புக்குண்டு வதந்தியானது படைத் தளங்களெங்கும் பரவத் தொடங்கியது. சாதியைக் கெடுத்து நம்மையுங் கிறுத்துவர்களாக்க அரசு முயல்கின்றது, என்று சிப்பாய்கள் அஞ்சினர். பிப்ரவரி மாதத்தில் மர்ம மௌல்வி அகமதுல்லா, ரோஹில் கண்ட் பகுதியில் ஆங்கில எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டான். கடந்த இரண்டு மாதங்களாக வட இந்தியாவின் பல பகுதிகளில் பலருடைய கவனத்தையும் ஈர்க்கும் அளவிற்குச் சப்பாத்திகள் மாய வலம் வந்தன. இதே பிப்ரவரி இறுதியில், பர்ஹாம்பூர் சிப்பாய்கள் கொழுப்புக் குண்டுகளைத் தொட மறுத்துப் படையின் கட்டுப்பாட்டை மீறினர். அச் சிப்பாய்த் தலைவர்களான சில சுதேசி அதிகாரிகள் தண்டனைக்குள்ளான செய்தி பரவியது. அச் சிப்பாய்களைத் தண்டிக்க அரசு ஏற்பாடுகள் செய்தது. மார்ச் மாத இறுதி

யில் பர்ஹாம்பூர்ச் சிப்பாய்களுக்கு நேரப்போகும் அவலத்தை யெண்ணி ஆத்திரமடைந்த, பரக்பூர் படைத் தளத்தைச் சேர்ந்த மங்கள் பாண்டே என்ற பிராமண சிப்பாய் தன்னந் தனியாய் கலகஞ் செய்தான். அவனுடன் சேரவோ, அவனை அடக்கவோ பிற சிப்பாய்கள் முன் வரவில்லை. அனைவரும் ஒன்று சேர்ந்து கலகத்தில் ஈடுபடுமளவிற்கு, அச் சிப்பாய்கள் அப்பொழுது துணிவு பெற்றிருக்க வில்லை; என்பதுந் தெளிவு. இதன் பின்பு, பர்ஹாம்பூர் அணி கலைக்கப்பட்டதும், பரக்பூரில் மங்கள் பாண்டே தனிக் கலகத்தில் ஈடுபட்டதும் எங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது. அரசு மதத்தைக் கெடுக்க முயற்சி எடுக்கிறது, என்று மக்களும் அஞ்சத் தொடங்கினர். கலைக்கப்பட்ட பர்ஹாம்பூர் அணியின் சிப்பாய்கள், தங்கள் கிராமங்களுக்குத் திரும்பச் சென்று அரசின் இச் 'சதி'யை நன்கு விளம்பரப் படுத்தி இருப்பார்கள். கொழுப்புக் குண்டு கள் பற்றிய சிப்பாய்களின் ஐயத்தை உணர்ந்த அரசு, அதைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டது; அது உண்மை என்றாலும், அதற்கான ஆணைகள் சரியான முறையில் செயல்படுத்தப்பட வில்லை. இதற்கிடையில் எல்லாப் படைத் தளங்களுக்கும் வதந்திகள் பரவி விட்டன. அல்லது பரப்பப்பட்டன. ஏப்ரல் மாதத்தில் அம்பாலா துப்பாக்கிப் பயிற்சி தளத்தில், சிப்பாய் களின் அமைதியின்மை இலேசாக வெளிப்பட்டது. முதல் கட்டமான நான்கு மாத நிகழ்ச்சிகள் இவை தான். கொழுப் புக் குண்டு வதந்தி, சப்பாத்தி விநியோகம், அஹமதுல்லா வின் ஆங்கில எதிர்ப்புப் பிரசாரம் ஆகிய மூன்றும், ஒன்றுக் கொன்று தொடர்பு பெற்றிருந்தன; என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் இல்லை. கோர்வையும், இடை வெளியுமின்றி இவை நடந்திருக்கின்றன; என்பது கவனத்திற் குரியது. சப் பாத்தி விநியோகத்திற்கான உண்மையான காரணம், இது வரையிலுங் கண்டு பிடிக்கப்பட வில்லை. மௌல்வி அஹம துல்லா, சிப்பாய்களோடு இரகசியத் தொடர்பு கொண்டிருந் தான்; என்பது உண்மை. அவன் ஆற்காட்டைச் சார்ந்தவன்; என்பது உண்மை யெனில், 50 ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்த வேலூர்ச் சிப்பாய் கலகத்தைப் பற்றிய கதைகளை நன்கு அறிந் திருப்பான். இப் பின்னணியுடன் நோக்கும் பொழுது இயற்கையான வெள்ளையர் வெறுப்புணர்ச்சியுடனும், எதிர்ப் பிரச்சாரத்துடனும், இப்போதைய கொழுப்புக் குண்டு வதந் தியை ஆங்கிலேயருக்கு எதிராகப் பயன்படுத்த அவன் முயற் சித்திருக்கலாம்; தீவிரமாக இதைப் பரப்பத் தொடங்கியும் இருக்கலாம். ஆனால், பிப்ரவரி மாதத்திலேயே அஹமதுல்

லாவை அதிகாரிகள் கைது செய்து ஃபைசாபாத் இராணுவச் சிறையில் அடைத்து விட்டனர். ஆகக் கொழுப்புக் குண்டு வதந்தியும், அஹமதுல்லாவின் ஆங்கில எதிர்ப்பு இயக்கமும், தொடர்பு கொண்டதாகத் தோன்றினாலும், சப்பாத்தி விநி யோகம் தற்செயலான ஒரு ஒற்றுமையோ! என்று தான், சந் தேகிக்க வேண்டி யிருக்கின்றது. இந் நான்கு மாத நிகழ்ச்சி களில், நம் கவனத்திற்குரியது மற்றொன்று. கொழுப்புக் குண்டு வதந்தியைத் தொடர்ந்து, சிப்பாய்கள் படை கட்டுப் பாட்டை மீறுதலும், அதற்காக தண்டனை பெறுதலும், பணியிலிருந்து விலக்கப்பட்டு ஊர்ப் புறங்களுக்குச் சென்று மதத்தை அழிக்க அரசு சதி செய்கிறது என்று விமர்ச்சிப்ப தும், தங் குறைகளை விளம்பரப் படுத்துவதும், அரசின் மேல் வெறுப்பை வளர்த்துக் கொள்ளுதலும் ஆகிய இவைகள் கோர்வையுடன் நடந்திருக்கின்றன. இதை நன்கு கவனிக்க ..

இரண்டாவது கட்டத்தில் (மே 1–இல் இருந்து 11 வரை) நிகழ்ச்சிகள் வேகமுடன் நடந்திருக்கின்றன. மே 3–ஆம் நாள் கொழுப்புக் குண்டுகளை வாங்கிக் கொண்டு, ஆனால், அவற்றைக் கடித்துப் பயன்படுத்த மறுத்த இலக்னோ குதிரைப் படைச் சிப்பாய்களை விரட்டிக் கலைத்து விட்டிருந்திருகின்றார் ஆணையர் சர்ஹென்றி லாரன்ஸ். அடுத்த சில நாட்களில் மங்கள் பாண் டேயின் 'அத்து மீறிய அக்கிரமத்தை'ப் பார்த்துக் கொண்டி ருந்த ஆனால், அதிகாரிகளுக்குத் துணை புரியாமலிருந்த, பரக் பூர் சிப்பாய்களின் ஆயுதங்களும் சீருடையும் பறிக்கப்பட்டன. பணியிலிருந்து விலக்கப்பட்டப் பிராமண, இராஜபுத்திர முஸ் லிம் சிப்பாய்கள் தங்கள் அவமானத்தை ஊர் மத்தியில் வைத்து புலம்பச் சந்தர்ப்பங் கிடைத்தது. பரக்பூர் படைக் கலைப்பு எங்கும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கும் என்பது உறுதி. இதைத் தொடர்ந்து மே. 9–ஆம் நாள் கொழுப்புக் குண்டுகளைத் தொட மறுத்த 85 மீரத் சிப்பாய்களுக்குப் பல் லாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இருப்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, இருண்ட சிறைகளில் அவர் கள் தள்ளப்பட்டனர். அன்றிரவுதான் சிப்பாய்கள் மத்தியில் அத் துணிகரத் திட்டம் உருவாகி யிருந்திருக்கிறது. தண்டனை பெற்ற நண்பர்களைக் காப்பாற்ற உங்களால் இயல வில்லையா? என்ற மீரத் நகர விபசாரிகள் கூட சிப்பாய்களை நேரில் ஏளனம் செய்யுமளவிற்கு, மக்கள் மத்தியில் அச் சிப்பாய் களின் அவல நிலை அறியப்பட்டது. அவர்களுக்கு அரசாங்கத் தின் 'சதி'யும் விளங்கியது. மறுநாள் மாலையில் (மே 10) மீரத் சிப்பாய்கள் பொங்கி யெழுந்தனர்; அதிகாரிகளைக் கொன்றனர்;

டெல்லிக்குத் தப்பிச் சென்றனர். அங்கிருந்த சிப்பாய்களுங் கை கொடுத்தனர். பகதூர் ஷா பேரரசராகப் பிரகடனப் படுத்தப் பட்டார். புரட்சியின் இத்தொடக்கம் அற்புதமான நாடக பாணியில் அமைந்திருக்கிறது. வேறு எங்குக் கிளர்ச்சி தோன்றி இருப்பினும், வேறு எவர் மன்னராக்கப் பட்டிருந்தாலுங் கதையின் ஜீவன் குன்றியிருக்கும்; கதையே தொடாராமல் இருந்திருக்கும். டெல்லிக் கருகில் மீரத் இருப்பதும், டெல்லி சிப்பாய்கள் உதவி கரம் நீட்டியதும், உடனே மொகலாய மீட்சி ஏற்பட்டதும் ஏதோ திட்ட மிட்டு நடத்தப்பட்ட ஒரு சூழ்ச்சியாகத்தான் தோன்றுகிறது. சூழ்ச்சி இருந்தது; என்பதை ஒப்புக் கொண்டால், கிளர்ச்சியைத் தொடங்குவதற்கு மீரத்தே சரியான இடம். ஆனல், 85 சிப்பாய்களுக்குத் தண்டனை விதிக்கப்படாமலிருந்தால்.........மீரத்தில் கிளர்ச்சியே தோன்றியிருக்காது! அத் தண்டனையும், அதைத் தொடர்ந்த கிளர்ச்சியுந் தற்செயலாக நடந்தவை என்றுதான் தோன்றுகின்றன. அடுத்து, டெல்லி சிப்பாய்கள் மீரத் சிப்பாய்களுடன் கை கோர்த்தது ஒரு திட்ட மிட்டச் சூழ்ச்சியையும், ஒத்துழைப்பையுங் காட்டுகின்றன; என்றுல், பகதூர் ஷாவின் தயக்கமும், துரோகமும் அத் திட்டத்திற்கு அவன் உடந்தையல்ல என்பதையும், அதில் அவனுக்கு விருப்ப மில்லை என்பதையுங் காட்டுகின்றன. ஆகவே, இந்த இரண்டாவது கட்டத்தில், நம் கவனத்தை மிகவும் ஈர்க்குஞ் செயல் மீரத் சிப்பாய்களை டெல்லி சிப்பாய்கள் வரவேற்று இணைத்தது. இவ்விரண்டு அணியின் சிப்பாய்களும் ஒரு சூழ்ச்சியில் ஒன்றிணையத் தயாராய் இருந்தது போல் தோன்றுகிறது.

மூன்ருவது கட்டத்தில் (மே 11-ந் தேதி முதல் 31-ந் தேதி வரையில்) முதலில் நிலவிய நீண்ட அமைதியும், அதைத் தொடர்ந்த பல கிளர்ச்சிகளும் அச்சத்துடன் சிக்கலையுந் தருகின்றன. முகலாய மீட்சியைத் தொடர்ந்த 15 நாட்களில் ஒன்றுமே நடக்க வில்லையே; ஏன்? இவ்விடை வெளியில் தான் அமைதியான ஒரு மாறுதல் நடைபெற்றது. மீரத் கிளர்ச்சியும், மொகலாய மீட்சியும் ஒரு சில நாட்களில் வடஇந்தியா முழுவதும் பரவி விட்டன. ஆங்கில அதிகாரிகள் எச்சரிக்கையாயினர். ஏறக்குறைய எல்லா படைதளங்களிலுந் தற்காப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மீரத்தில் நடந்தது போல் அதிகாரிகள் தங்களுக்குத் தண்டனை அளிப்பார்களோ! என்று சிப்பாய்களும், சிப்பாய்கள் தங்களைக் கொலை செய்வார்களோயென அதிகாரிகளுஞ் சந்தேகிக்கத் தொடங்கினர். ஒருவரின் ஐயமும், மற்ருருவரின் அச்சமும் மாறி மாறிக்

காரண விளைவுகளாயின. இதனால், பஞ்சாப்பில் பல இடங்களில் ஆயுதப் பறிமுதல் நடந்தது. அச்சமே சிப்பாய்களைக் கலகத்திற்கு இழுத்தது; ஐயமே அதிகாரிகளை ஆயுதப் பறிமுதலுக்குத் தூண்டியது. அதிகாரிகள் தற்காப்பில் ஈடுபட்ட அதே வேகத்தில் சிப்பாய்களுங் கலகத்திற்கு ஆயத்தமானார்கள். இந்த இடைக் காலத்தில்தான், சிப்பாய்த் தலைவர்களுக்கு இடையே முளைய விட்ட திட்டம் ஏனைய சாதாரண சிப்பாய்களால் ஓரளவு அறியப்பட்டிருக்கலாம். இந்த இடைக் காலத்தில் தான், மொகலாய மீட்சியானது நாட்டின் பிற பகுதிகளில் உணர்ச்சியையும், பரபரப்பையும், ஓரளவு துணிவையும் ஊட்டியிருக்கலாம். இந்த இடைக்காலத்தில் தான் ஆங்கிலத் துருப்புகளின் இயங்காமையானது, பிறதளங்களில் உள்ள சிப்பாய்களுக்குப் பெருமளவு துணிவையும் அளித்திருக்கலாம். முடிவில் மே 31-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை புரட்சிக்காகத் திட்டமிடப்பட்ட நாள்; என்ற வாதத்தை மெய்ப்பிக்கும் வகையில், பல முக்கிய தளங்களில் அன்று கலகங்கள் தோன்றின. சிப்பாய்த் தலைவர்களுக்கிடையே ஓரளவு இரகசிய திட்டம் இருந்ததால்தான், இது சாத்தியமாயிற்று; என்று நம்ப வேண்டியிருக்கிறது. ஆனால், பெரும்பாலான சிப்பாய்கள், இத்திட்டத்தை அறிந்திருக்கவில்லை என்பது உறுதி. ஏனெனில்? பல படைத்தளங்களில் அச்சம், தூண்டுதல், ஆசைஆகியவை கிளர்ச்சிகளுக்குக் காரணமாய் இருந்தன. என்பதுடன் பல சிப்பாய்கள் கிளர்ச்சியில் ஈடுபடத் தயங்கினர்; தடுமாறினர்; அதிகாரிகளைக் கொல்லவும் மறுத்தனர். பல இடங்களில் கிளர்ச்சிகள் தோன்றிய விதமும் பல அணிகளின் நடத்தையும், இரகசிய சதித்திட்டத்தையும் அவர்கள் அறிந்திருக்க வில்லை, என்பதைத் தெளிவாக்குகின்றன. அப்படி அறிந்திருந்தாலும், மனதார அவர்களில் பலர் கிளர்ச்சிக்கு ஆதரவு தர முன் வரவில்லை; என்பதுந் தெளிவாகின்றது. அது மட்டுமன்றி; அதிகாரிகளால் பிடிக்கப்பட்ட கலகச் சிப்பாய் எவனும், அரசாங்கத்திற்கு ஆதரவாகப் போரிட்ட 'நல்ல சிப்பாய்' எவனும் நிலவியதாகச் சொல்லப்படும் சூழ்ச்சியை அறிந்திருக்கவில்லை; என்பது விசாரணையில் தெரிய வந்தது.

இந்த மூன்று கட்டங்களுக்குப் பின்னே தொடர்ந்த நிகழ்ச்சிகளுக்கு விளக்கங் கொடுப்பது எளிது. மே 31க்குப் பிறகு இரண்டு வாரங்களில் பெரும்பான்மையான இடங்களில் கிளர்ச்சிகள் தோன்றின. ஜூலை மாதத்தில் கூட எஞ்சிய சில அணிகள் கிளர்ச்சிச் செய்தன. மீரத்திலிருந்து தப்பிய சிப்பாய்

களை ஆங்கிலத் துருப்புகள் பின் தொடரத் தவறிய மாபெருங் குற்றம், ஊசலாடிய சிப்பாய்களின் உள்ளங்களை நிலைப்படுத்தி விட்டது. அத்துடன் டெல்லியை மீட்பதற்கு உடனடியாக அவர்கள் விரையாதது, சிப்பாய்களுக்குத் துணிவை அளித்து விட்டது. இதனால், மொகலாய மீட்சி உண்மைதான், அந்நிய ஆட்சி இனி அகலும், என்பதும் உண்மைதான்;' என்ற நம் பிக்கை வலுப்பட்டு மே-31 இல் இருந்து கிளர்ச்சிகள் தொடர்ந்து ஏற்பட்டன.

அடுத்து புரட்சியில் முன் நின்ற ஊர்களையும் தலைவர்களை யும் பார்ப்போம். ஜூன் 4-ஆம் நாள் கான்பூர் கிளர்ச்சிச் செய்தது. மீரத் நிகழ்ச்சிக்குப் பின்னே அங்கிருந்த ஆங்கில அதிகாரிகள் மேற் கொண்ட தற்காப்பு ஏற்பாடுகளுக்கு நானு சாஹேப் அன்று வரை துணை நின்றான்; என்பதில் ஐயமில்லை கான்பூர் கிளர்ச்சிக்கு அவன் காரணமாக 'வில்லை; என்பதை நம்பும்படிச் சில நிகழ்ச்சிகள் அங்கே நடந்தன. கலகத்தில் ஈடு பட்ட கான்பூர் சிப்பாய்கள், அன்றே டெல்லியை நோக்கிச் சென்றதும், பின்னர் மறுநாள் பயணத்தை நிறுத்திக் கான்பூர் திரும்பியதுங் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சிகள். நானு, சிப்பாய் களின் கைப்பொம்மை என்பதையும், புரட்சிக்கான, முறை யான திட்டமெதுவும் அங்கே வகுக்கப்பட வில்லை, என்பதை யும் இந் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. தாத்யா தோப்பின் வாக்கு மூலமும், கிளர்ச்சிக்கு நானு காரணம் அல்ல, என்று தான் காட்டுகின்றது. பேரரசன் பகதூர் ஷா சிப்பாய்களு டன் ஏற்கனவே எந்த உறவுங் கொண்டிருக்க வில்லை யென்பது மட்டுமன்றி, அவர் நானு சாஹேப்புடனும் எந்த விதமான இணைப்பும் முன்கூட்டியே வைத்திருக்க வில்லை; என்பதும் உறுதி. கான்பூர் சிப்பாய்கள் டெல்லி பயணத்தை நிறுத்திக் கொண்டதும், பகதூர் ஷாவும், நானுவும் ஒருவரை யொருவர் புரட்சிக்கு முன்போ, பின்போ சந்தித்துக் கொள்ள வில்லை யென்பதும் சதி திட்டத்தில், இத் தலைவர்களுக்குப் பங்கில்லை என்பதையே காட்டுகின்றன. இருவருமே சுய நலத்தால் பலவந்தத்தால் புரட்சிக்குத் தலைமை பூண்டார்கள் என்பதை எளிதில் மறுக்க முடியாது. பகதூர் ஷா முழு மனதுடன் தலைமை தாங்க வில்லை; என்பதுடன் ஆங்கிலேயருடன் இணங் கிச் செல்ல முயன்றிருக்கிறார். நானு சாஹேப், தலைமை ஏற்ற பின் பின்வாங்க வில்லை. ஆனால், சாரிச்சௌரா, பீபிகர் கொலைகளுக்குத் தான் பொறுப்பாகாமல் தப்பித்துக் கொள் கிறான். ஆங்கிலேயரின் நண்பன் போல் நடித்துத் துரோக மிழைத்தான்! என்று அவனைக் குற்றஞ் சாட்டவும் முடிய

வில்லை; நாட்டின் விடுதலைக்காகப் பெருஞ் சூழ்ச்சியிலும், விடு தலைப் போரிலும் ஈடுபட்டுத் தியாகியானுன்; என்று அவ னுக்கு மாலை சூட்டவும் முடிய வில்லை. புரட்சிக்கு முன் நெடுஞ்சாலையி லிருந்த சில படை தளங்களுக்குச் சென்று சிப்பாய்களுடன் பழகினுன் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு அவன் விடுதலைப் போருக்காகத் திட்டமிட்டான்; என்று அறுதியிட்டுக் கூறவும் முடியாது.

அடுத்தது ஜான்சி: இப்பெரும் புரட்சிக்கு முன்பே ஜான் சியையும், இலட்சுமிபாயையும் சில நூறுமைல்களுக்கு அப் பால் உள்ளவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆங்கிலேயரை வெறுக் குமளவிற்கு ஜான்சியில் நிகழ்ச்சிகள் நடந்தன என்பதுண்மை யென்ருலும், அவர்களை எதிர்க்கு மளவிற்கு இலட்சுமிபாய் எந்த சூழ்ச்சியிலும் ஈடுபட வில்லை. பிற சிப்பாய்களின் தூண்டுதலில் தான் ஜான்சி சிப்பாய்கள் கிளர்ந்தெழுந்தனர். ஜான்சி அரியணைப் போட்டியைப் பயன்படுத்திப் பணமும்; ஆயுதங்களும் வற்புறுத்திப் பெற்றுக் கொண்டே (ஜூன் 7) அச் சிப்பாய்கள் இலட்சுமியை ஜான்சிக்கு இராணியாக்கினர். அதன் பின்னர் ஜான்சி இராணி எக்கேடு கெட்டாலென்ன? என்று அவர்கள் டெல்லிக்கு விரைந்தனர். அரியணை ஏறிய இலட்சுமிபாய்க்கு, அண்டை நாடுகளான ஓர்ச்சா, டட்யா ஆகிய மன்னர்களிடமிருந்து ஆபத்துச் சூழ்ந்தது. ஜான்சி யில் நடந்த ஜோகன் பாக் படுகொலைகளுக்கும் இராணிக்குந் தொடர்பிருக்கிறதோ என்று சந்தேகித்ததால், அவளுக்கு உதவி செய்ய ஆங்கிலேயர்கள் உடனே முன்வர வில்லை. ஆங்கிலேயரின் உதவி கிடைக்கும் என்று 9-மாதங்கள் காத் திருந்து, ஏமாந்து, ஜோகன் பாக் கொலைப் பழி தன்னைத் தொடர்கிறது என்பதை உணர்ந்த பின்னரே, அவள் எதிர்ப் புக்குத் துணிந்தாள். ('58 மார்ச்) துணிந்த பின்னர் தான் இறுதி வரை வீரத்துடன் போரிட்டாள். ஆங்கிலேயரை அவள் எதிர்த்தது சுமார் 3 மாதகாலமே, அதுவும் புரட்சி தோன்றி நீண்ட இடைவெளிக்குப் பின்னே தான். அந்த இடைவெளியிலும் ஆங்கில மேலிடத்தின் அனுமதியில் தான், ஜான்சியின் ஆட்சிப் பொறுப்பைத் தான் ஏற்றிருப்ப தாகக் கூறிக் கொண்டாள். சிப்பாய்கள் தன்னைப் பலவந்தப் படுத்திப் பணம் பறித்தனர்; என்பதை அவளே ஒப்புக் கொண்டிருக்கிருள். ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கினுள்; பீரங்கிகளை மறைத்து வைத்துப் போரில் பயன்படுத்தினுள்; என்பனவற்றை யெல்லாம் நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. போர்க்களத்தில் ஆணுடை தரித்து, ஆங்கிலேயரை எதிர்த்த

மரண மடைந்ததை மட்டும் வைத்து, அவளை வீரநாயகியாகப் போற்றுகிருர்கள். இந்நாட்டின் விடுதலைக்காகத் தொடக்கத்தி லிருந்தே அவள் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள் என்று எவரும் எண்ண வேண்டாம்.

ஜுலை மாதத்தில் தான் பாபு குன்வர்சிங் புரட்சியில் ஈடு பட்டான். மீள முடியாத கடனில் மூழ்கியிருந்த அவனுக்குப் பீகாரில் இருந்த ஆங்கில அதிகாரிகள் பலர் நெருங்கிய நண்பர் கள்தான். அவனைக் கடனிலிருந்து மீட்கும் முயற்சியில் ஈடு பட்ட அரசின் வருவாய்த்துறை, பின்னர் கைவிரித்து விட்ட தால், அவனுக்குங் கிளர்ச்சியைத் தவிர வேறு வழியில்லை. கிளர்ச்சியில் ஈடுபட்டு இழந்தவற்றைப் பலர் பெறுகின்றனர்; என்பதைக் கண்ட அவனும், அக் கிளர்ச்சியில் சேர்ந்தான். 1858-ஏப்ரல் இறுதி வரையில் சுமார் 10 மாதங்கள் ஆங்கிலே யரை மிகத் தீரமுடன் அவன் எதிர்த்தான். ஜகதீஷ்பூர் சுற்று வட்டாரத்தில் செல்வாக்கு மிகுந்த அவன், சிற்றரசன் போல் வாழ்ந்தவன். அதனுல், அப் பகுதி இராஜபுத்திரர்கள் அவன் வழியே இறுதி வரை ஆங்கிலேயரை எதிர்த்தனர். கிளர்ச் சிக்கான சூழ்ச்சி எதிலும் குன்வர்சிங் தொடர்பு பெற்றிருக்க வில்லை. திடீரென வந்த ஒரு தருணத்தைச் சுய நலத்திற்காக அவன் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தான். ஈடுபட்ட பின் கடுமையாகச் சாகும் வரையில் ஆங்கிலேயரை எதிர்த் தான். இந்திய விடுதலைப் புரட்சி என்ற இலட்சியம் எது வும் அவனை உந்த வில்லை. அவனும் ஒரு சந்தர்ப்ப வாதியே ஆவான்.

இளவரசன் பெரோஸ் ஷா ஜுன் மாதத்தில் மாளவத்தில் புரட்சிக்கு ஆதரவு திரட்டினுன். நீமக், மாண்டிசோர் ஆகிய இடங்களை அச்சுறுத்திஞன். இந்து சிற்றரசர்கள் பலர் அவன் தலைமையில் ஒன்று கூட மறுத்து விட்டனர். இருந்தும் பல்லாயிரம் வீரர்களைத் திரட்டி மாளவம், இராஜபுதனம், ரோகில் கண்ட் ஆகிய பகுதிகளில் எதிர்ப்புகள் கொடுத்தான். இரண்டாண்டுகளுக்குப் பிறகு புரட்சியடக்கப்பட்டுத் தலைவர் களை விரட்டும் பணி தொடர்ந்தது. நிபந்தனை யின்றி சரண டைய விரும்பாமல், பெரோஸ் ஷா இந்தியாவை விட்டு வெளி யேறினுன். வடமேற்கே எங்கெங்கோ அலைந்து, மேற்காசியா வில் திரிந்து, மெக்காவில் 18–ஆண்டுகளுக்குப்பின்னே அழுவா ரின்றி, அனுதையாக இறந்தான். அவனும் விடுதலைப் போருக்

கான சூழ்ச்சியில் ஈடுபட வில்லை. கிடைத்த தருணத்தைப் பயன் படுத்திய அவனுடைய இலட்சியத்திலும், நடத்தையிலும் மாசு காண முடியாது.

பேகம் ஹசரத் மஹால் அயோத்தியின் அரசி. ஓராண்டுக்கு முன்னே நாட்டை இழந்த ஆத்திரத்தில் புரட்சியில் தீவிரப்பங்கு பெற்றாள். அவளுடன் ஒத்துழைத்தவன் மௌல்வி அஹமதுல்லா. அவன் புரட்சித் தோன்றுவதற்கு முன்பிருந்தே ஆங்கில எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தான். அதற்காகச் சிறைத் தண்டனையும் பெற்றான். சிப்பாய்களுடன் இரகசிய உறவு கொண்டிருந்தான்; என்பதும் உண்மை. ஒரு விடுதலைப் போரை நடத்திய அளவிற்கு அவனுடைய வாழ்க்கை அமைந்திருந்தது. தனிப்பட்ட முறையில் ஆங்கில ஆட்சியால் அவன் பாதிக்கப்பட்டவன் அல்ல. இஸ்லாமிய மதத்தைத் தூக்கி நிறுத்த, அந்நியனை வெளியேற்ற, ஊர் ஊராய்ச் சுற்றி அலைந்தான். படைத்தளங்களுக்கு இடையே இரகசியச் செய்திப் பறிமாறலுக்கும், அவன் காரணமாய் இருந்திருக்கலாம். ஆங்கிலேயரை வெளியேற்ற பகிரங்கப் பிரசாரத்தில் ஈடுபட்டான்; சிப்பாய்களுடன் நெருங்கிய உறவு கொண்டான்; இறுதிவரை தன் இலட்சியத்திற்காக வீரப்போர் புரிந்தான். புரட்சியின் வெற்றியில் அவனுக்குக் கிடைப்பது எதுவுமில்லை. 1858 ஜூன் மாதத்தில் போவெய்யன் சிற்றரசனால், அவன் தலை கொய்யப்படும் வரையில் ஒரு இம்மியளவும் தன் இலட்சியத்திலிருந்து வழுவாத மாவீரன்; அம் மௌல்வி.

தாத்யா தோப்பிற்கென்று தனிப்பட்ட குறிக்கோள்களோ ஆதாயமோ இங்கு இல்லை. நானா சாஹேப்பின் ஆணைப்படி அவன் இயங்கினான். முறையான போர்ப் பயிற்சிப் பெற்றிருக்க வில்லை; யென்றாலும், கொரில்லாப் போர் முறையில் வல்லவன் என்பதை அவன் நிரூபித்தான். அவன் மாபெருங் கடமை வீரன். 59 ஏப்ரல் 18-ஆம் நாள் தூக்கிலேறி புரட்சிக்கு முற்றுப் புள்ளியானான்.

புரட்சித் தலைவர்களில் மௌல்வி அஹமதுல்லாவைத் தவிர போற்றிப் புகழுமளவிற்கு வேறு எவருமில்லை; என்பதைத் துணிந்து கூறலாம். பகதூர் ஷா, நானா சாகேப் ஆகியோர் இந்திய விடுதலைக்காகச் சூழ்ச்சியிலீடுபட்டனர்; என்று நிரூபிக்கச் சரியான ஆதாரங்கள் இல்லை. பகதூர் ஷாவின் பாரசீக, ருசிய தூதுசெயல்களும், நானாவின் படைத்தளப் பயணங்களும், சீதாராம் பாவாவின் கதைகளும், சப்பாத்தி ஊர்வலங்

களும், மே 31–ஆம் நாள் புரட்சிக்காகக் குறிக்கப்பட்ட நாள் என்பதும், புரட்சியின் பரபரப்பும், கடுமையும் விடுதலைப் போருக்கான ஒரு திட்டம் இருந்தது; என்று நாம் ஐயப்படும் அளவிற்கு அமைகின்றன. இந்த ஐயத்தின் பலனை, வேண்டு மென்றால், பகதூர்ஷாவிற்கும், நானாவிற்கும், இலட்சுமிக்கும் தரலாமே யொழிய, விடுதலை என்ற இலட்சியத்திற்காகச் சூழ்ச் சியிலீடுபட்டதாக ஏற்றுப் பேசமுடியாது. இவர்கள் மூவருஞ் சிப்பாய்களின் வற்புறுத்தலில் தான், புரட்சியில் பங்கு பெற்ற னர். இவர்கள் மூவரும் புரட்சியில் பங்கு பெறுவதால் எந்த நாட்டையும் இழக்கப்போவதில்லை. ஆனால், வெற்றி பெற் றாலோ இழந்தவற்றைப் பெறலாம். இந்தச் சுயநலந்தான் சிப்பாய்களின் வற்புறுத்தலுக்கு அவர்களை இணங்கச் செய் தது. சுயநலத்திற்காகச் சிப்பாய்களின் வற்புறுத்தலில் புரட்சி யிலீடுபட்ட இவர்களை, எப்படி விடுதலை வீரர்களென்பது? தலைவர்களாக விளங்கியவர்கள் புரட்சியைத் தோற்றுவிக்க வில்லை; என்பதுடன் தயக்கத்துடனும், வற்புறுத்தலாலும், சுயநலத்தாலுந் தான், அவர்கள் தலைமை பூண்டிருந்தனர்; என் பதை மறுப்பதற்கில்லை.

அடுத்தது என்றுமில்லா மத ஒற்றுமை நிலவியதால், இதை விடுதலைப் போர் என்னலாம், என்கின்றனர். உண்மையில் நடந்தது என்ன? இந்துக்களுக் கெதிராக டெல்லியிலும், ரோகில் கண்டிலும் சில முஸ்லிம்கள் சூளுரைத்தனர். அது தடுக்கப்பட்டது. இந்துக்களின் ஆதரவு இல்லை யென்றால், நாம் தனியாக வெற்றிபெற முடியாது, என்பதை உணர்ந்த தால் தான், டெல்லியிலும், ரோகில் கண்டிலும் பசுவதை தடுக் கப்பட்டது. இது பெருந்தன்மையுடன் இந்துக்களுக்கு அளிக் கப்பட்ட பரிசல்ல. சூழ்நிலை வற்புறுத்தியதால், ஏற்றுக் கொள்ளப்பட்ட விதி விலக்கு. வேறுன்றியிருந்த அவர்களின் வேற்றுமையைப் பயன்படுத்த ஆங்கிலேயர் நினைத்தனர்; முயன்றனர்; ஆனால், பலன்பெற முடியவில்லை. இதனால்தான், இந்து முஸ்லிம் ஒற்றுமை நிலவியது; என்றுங் கூறுவதற் கில்லை. புரட்சியில் முஸ்லிம்கள் முன்னோடியாக விளங்கினர். பொது எதிர்ப்பை முறியடிக்கவே தங்கள் வேற்றுமை களைத் தற்காலிகமாக இவ்விரு பிரிவினரும் மறந்தனர் அல்ல. ஆனால், மறைத்தனர்; இது எந் நாட்டிலும், எக்காலத்திலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சி தான். படையில் முஸ்லிம்களும், உயர் சாதி இந்துக்களும் ஓரளவு சம பலத்துடன் இருந் தாலும், இரு மதங்களின் பிரதிநிதி களாகப் பகதூர்ஷா வும், நானா சாஹேப்பும் இருந்தாலும், இரு மதத்தினரும்

ஒரே அளவு ஆங்கில ஆட்சியால் பாதிக்கப்பட்டதாலும், நெருங்க வேண்டியது தேவையான ஒன்றாயிற்று. இப்படிப் பட்ட ஒரு நிலைமையை இந்து—முஸ்லிம் ஒற்றுமை என்பதை விடத் தற்காலிகக் கலவரமின்மை என்றே குறிப்பிட வேண்டும். இருப்பினும், ரோகில் கண்டில் இம்மதப்பூசல் தான் குரூபத் தலையைத் தூக்கிற்று. பரதம் ஆண்ட நம் இனம் தாழ்வதா? என்ற பொருமல் கிளர்ச்சிக்கு முன்பும் பின்பும் முஸ்லிம்களை உறுத்தியது. இவ்விரு மதத்தினரும் இணைந்து வாழ்ந்ததாக வரலாறு கிடையாது! இணைப்பிற்கான முயற்சிகள் பலவுந் தோல்வி அடைந்திருக்கின்றன! ஒரு பகுதி இந்துக்களும் முஸ்லிம்களும் கிறித்துவ ஆங்கிலேயரை விரட்டத் துணிந்தனர்; உண்மை! பிறிதொரு பகுதி இந்துக்களும் முஸ்லிம்களும் ஆங்கிலேயருக்கு ஆதரவு அளித்தனர்; அதுவும் உண்மை! சுருக்கமாகச் சொன்னால், ஆங்கிலேயர்களால் பாதிக்கப்பட்ட இந்துக்களும் (உ. ம். நானாசாஹேப், ஜான்சி இராணி, குன்வர் சிங்க்), முஸ்லிம்களும் (உ. ம். பகதூர் ஷா) அயோத்தி பேகம், ரோகில் கண்டில் கான் பகதூர் கான், ஆங்கிலேயரை எதிர்த்தனர். பாதிக்கப்படாத இந்துக்களும் (உ. ம். குவாலியர், இராஜபுத்திரர்கள், திருவாங்கூர், மைசூர்), முஸ்லிம்களும் (ஹைதராபாத், போபால்) ஆங்கிலேயருக்கு உதவி செய்தனர். எனவே, கிளர்ச்சியி லீடுபட்ட இந்துக்களும் முஸ்லிம்களும் ஓரளவு தங்கள் பூசல்களை மறைத்துக் கொண்டு, பொது எதிர்ப்பை எதிர்த்தனர்; என்பதால், இந்தியாவின் இந்துக்களும் முஸ்லிம்களும் தேச விடுதலைக்காக தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றிணைந்தனர்; என்று எப்படிக் கூறமுடியும்? பெருங் கிளர்ச்சி வெற்றி பெற்றிருந்தால் ஒருவேளை இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பெரும் உள்நாட்டுப் போர் ஏற்பட்டிருக்கலாம்.

சூழ்ச்சியுமில்லை; திட்டமும் இல்லை; ஒற்றுமையும், ஒத்துழைப்பும் இல்லை. பின் எவ்வாறு குறுகிய காலத்தில் பரந்ததொரு கிளர்ச்சியாக இது நடந்தது? தலைவர்கள் சூழ்ச்சியி லிடுபட வில்லை; என்பதை நாம் ஏற்றுக் கொண்டாலும், சூழ்ச்சியே சிறிதளவு கூட இல்லை யென்று கூறவும் முடியாது. சிப்பாய்களுக்குள் ஏதோ ஒரு இரகசியத் திட்டம் உருவாகி இருந்திருக்க வேண்டும். இல்லை யென்றால், இத்தனை தளங்களில் மே. 30-லிருந்து ஓரிரண்டு வாரங்களுக் குள்ளாகப் பல இடங்களில் கிளர்ச்சிகள் தோன்றி யிருக்கவே முடியாது. ஆம்! ஓரிரு நாட்கள் இடை வெளியில், நூற்றுகணக்கான மைல்கள் தொலைவிலுள்ள இடை வெளியில் இருந்த படை

தளங்கள் கிளர்ந்தெழுந்தன. (நசிராபாத் மே, 28ல் இலக்னே வில் மே. 30—ஃபெரெய்லி மே 31ல் நீமக்ஜீன் 3—காசிஜீன் 4). இராஜபுதனத்தில் நசிராபாத்தும், ரோகில் கண்டில் பெரெய்லியும், அயோத்தியில் இலக்னேவும் முத்திசைகளில் தொலை தூரத்திலிருப்பினும், சில நாட்கள் இடை வெளியில் இவையும், இவற்றைச் சுற்றியுள்ள தளங்களுங் கிளர்ந்தெழ வேண்டுமெனில், ஏதோ இரகசியத் தொடர்பானது படைத் தளங்களுக்கிடையே இருந்திருக்க வேண்டும். கொழுப்புக் குண்டு வந்ததிலிருந்தே, மங்கள் பாண்டே வாளை உயர்த்திய விருந்தே, பரக்பூர் சிப்பாய்கள் பணி நீக்கத்திற் குள்ளான திலிருந்தே, ஒரு திட்டம் உருவாகி யிருக்க வேண்டும்; மீரத் கிளர்ந்தெழுந்ததும் மொகலாயத் தலைமை கிடைத்ததும், டெல்லியைக் கைப்பற்ற ஆங்கிலேயர் தவறியதும், அரசு சில இடங்களில் ஆயுதங்களைப் பறித்ததும், திட்டத்தை விரைவு படுத்தி யிருக்க வேண்டும். ஆனால், மீரத் நிகழ்ச்சிக்குப் பின் இருபது நாட்களில் கிளர்ச்சிச் செய்யும் எண்ணம், வேக மடைந்த அளவிற்கு, இத் திட்டம் தெளிவு பெற வில்லை. தெளிவும் இல்லை. இதனால், எல்லா சிப்பாய்களும் இத் திட்டத்தை நன்கு அறிய வில்லை என்பதும், கிளர்ச்சிகள் நடந்த விதத்திலிருந்து தெரிகிறது. தயக்கத்துடன், அச்சத்துடன் பலர் ஈடுபட்டிருந்திருகின்றனர். பலர் விசுவாசத்துடன் இருந்திருகின்றனர். பலர் தங்கள் அதிகாரிகளுக்கு...செய்திரு கின்றனர். பலர் பொது மக்களை கொள்ளை அடித்திருகின் றனர். பலர் கிராமங்களுக்கு நடையைக் கட்டியிருகின்றனர். பலர் ஊதியமின்றிப் போரிட மறுத்தும் இருந்திருக்கின்றனர், அரசாங்கத்தின் பழி வாங்கும் வெறி, நிரபராதிகளைக் கூட ஒதுக்க வில்லை; என்பதை அறிந்த பின்னரே, நல்ல சிப்பாய் களும் கிளர்ச்சியி லிறங்கினர். அதிகாரிகள் தங்களை நம்பத் தயாராயில்லை; என்றறிந்த பின்பே அவர்கள் தங்கள் தோழர் களுடன் சேர்ந்ததில் வியப்பில்லை. நல்ல நடத்தைக்கு வெகு மதி யிருப்பதாயுந் தெரியவில்லை. பின் ஏன் கிளர்ச்சியில் சேரக் கூடாது? ஒரு வேளை கிளர்ச்சி வெற்றி பெற்றால் உரிய வெகுமதி கிடைக்கலாம். சும்மா இருந்து தண்டனை பெறு வதைவிட கலகஞ் செய்து இறப்பதே மேல்; என்பது நியாய மான வாதமே. மேலுங் கருவூலத்தைக் கொள்ளை யடிக்கலாம்; கடை வீதியைச் சூறையாடலாம். இவற்றைவிட கிளர்ச்சியில் சேரா விட்டால் சாதி விலக்கம் ஏற்படும் என்ற பயமும் வேறு. இத்தனை ஆசைகளும், அச்சங்களும் சேர்ந்து கிளர்ச்சிக்கு ஆள் பிடித்தன.

இக் கிளர்ச்சியில் மக்களின் பங்கு என்ன என்று? காண் போம். பஞ்சாப், மத்திய இந்தியா பகுதிகளில் சிப்பாய்களை மக்கள் காட்டிக் கொடுத்திருக்கின்றனர்; பல கிராமங்களில் ஆங்கில அகதிகளுக்கு ஆதரவும் அளித்திருக்கின்றனர். அதே போலப் பல இடங்களில் ஆங்கில வெறுப்பு அதிக மிருந்தது. கிராம வாசிகளால் ஆங்கிலேயர்கள் கொலை செய்யப் பட்டிருக் கின்றனர். குறிப்பாக இன்றைய உத்தரப் பிரதேசத்திலும், அதைச் சுற்றிய பகுதிகளிலும் மக்கள் கிளர்ச்சியில் பங்கு கொண்டனர். ஆனால், அங்குஞ் சிப்பாய்கள்தான் கிளர்ச்சி யைத் தொடங்கி யிருக்கின்றனர். சட்டமும், ஒழுங்குங் கண் முன் மறைந்து சென்றதைக் கண்டு அதைப் பயன் படுத்திக் கொள்ள பொது மக்கள் பலர் முயன்றனர். கடனாளிகள் லேவாதேவிக்காரர்களைக் கொலை செய்தனர். அரசாங்க ஆவ ணங்கள் தீக்கிரையாக்கப்பட்டன; மேலும் பலர் உண்மை யாகவே ஆங்கிலேயரை எதிர்த்தனர். அதற்குந் தனிப்பட்ட காரணங்கள் இருந்தன. பணியிலிருந்து நீக்கப்பட்ட சிப்பாய் கள் கிராமங்கள் தோறுந் தங்கள் குறைகளைக் கூறி யிருப்பார் கள். ஆங்கிலேயன் தொலைந்தால் விடிவுகாலம் வரலாம், என்று அவர்கள் நம்பியதற்கு ஒரு முக்கிய காரணம்: வெள்ளைத் துரை யென்றால் வரி வசூலிப்பவன். அல்லது குற்றங்களுக்குத் தண்டனை யளிப்பவன். என்ற எண்ணமே இருந்தது. ஆங்கில ஆட்சி நீங்கினால் வரியிலிருந்து தப்பலாம். குற்றங்களிலிருந்து தப்பலாம் என்று அவர்கள் கணக்கிட்டார்கள். மாஜிஸ்டிரேட் டும், கலெக்டரும் சிப்பாய்களால் விரட்டப்பட்டுக் கொல்லப் படுவதைக் கண்டு, ஆங்கிலேயர் திரும்ப வராததைக் கண்டு, சுதேசி மன்னர்களின் பிரகடனங்களைக் கண்டு மேலும் அவர் கள் துணிவு பெற்றனர். உள்ளூர்க்காரன் காரணமில்லாமலா கலகஞ் செய்கின்றான்? அவனுக்கு ஏன் உதவக் கூடாது? என்ற மனப்பான்மையானது இம்மாதிரியான நேரங்களில் மக்களிடந் தோன்றுவது இயற்கை. சிப்பாய்களின், மேலும், தங்களின் பழைய மன்னர்களின் மேலும் ஏதோ ஒரு பற்று இருப்பது இயற்கையே. அதனால் தான், அயோத்தி தாலூக்தார்களின் கீழே மக்களுந் திரண்டனர். இந்த தாலுக்தார்கள் அயோத்திச் சுதந்திர நாடாக இருந்த காலத்தில், மக்களைக் கசக்கிப் பிழிந்த வர்கள். தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டே இருந்த வர்கள். அயோத்தி இணைப்பினால் தங்கள் நில புலன்களையும் இழந்தவர்கள். கிளர்ச்சித் தோன்றியதும், அதில் சேராமல் மதில்மேல் பூனையாக இருந்தனர். ஆரம்பத்தில் ஆங்கில அகதி கள் பலருக்கு உதவியும் அளித்தனர். சுதேசிகளின் பக்கம்

வெற்றி கிடைக்கும் என்று தெரிந்ததும், அரசாங்க பிரகடனம் தங்களுக்கு எதிராக இருப்பதை அறிந்ததும், கிளர்ச்சியிலீடு பட்டனர். அப்போதும் தங்களின் பழைய நிலப் பகுதிகளைப் பெறுவதற்குப் போரிட்டு விட்டுப் பின்னரே அரசாங்கத்தை எதிர்த்தனர். அயோத்தி இணைப்பிற்குப் பின்பு, ஓராண்டாகியும் ஆங்கில ஆட்சியில் நன்மை பெறாத மக்கள், மாறாகப் புது வரிகளுக்குட்பட்ட அம் மக்கள், வேலையின்றித் திரிந்த பழைய அரசு ஊழியர்கள், வருவாயின்றித் திரிந்த அரச வினைஞர்கள் அனைவருங் கிளர்ச்சியில் பங்கு பெற்றனர். இவர்களனைவரும் இணைப்பினால் பலன் அடையாதவர்கள். குறிப்பாக வங்காளப் படையின் பெரும் பகுதி வீரர்கள், அயோத்திக் கிராமங்களிலிருந்து சென்றவர்கள். எனவே, இப் பகுதி மக்கள் கிளர்ச்சியில் பங்கு பெற்றனர். எனவே, மக்களனைவரும் ஏதோ இலட்சியத்தால் உந்தப்பட்டுக் கிளர்ச்சிகளில் பங்கு பெற்றனர்; என்று நாம் கொள்ளத் தேவை யில்லை.

ஆக, சிப்பாய்கள் தங்களின் தனிப்பட்ட குறைகளைப் பின்னணியாகக் கொண்டு தொடங்கிய ஒரு சூழ்ச்சியானது, மீரத் நிகழ்ச்சியில் அவசர முடிவுக்குள்ளாகி, அரசாங்கத்தின் இருபது நாட்கள் அமைதியிலும், ஆயுதப் பறிமுதலிலும் விரைவாக்கப் பட்டுப் பாதிக்கப்பட்ட சிலரின் அவசரத் தலைமையைப் பலவங்கத்தில் பெற்று, கோர்வையும், ஒழுங்கும், கட்டுப்பாடுமின்றி தோன்றிய இக் கிளர்ச்சி, இறுதியில் ஆங்கிலேயனை வெளியேற்ற நடத்தப்படும் விடுதலைப் போராகத் தோற்றமளித்திருக்கின்றது. ஆனால், உண்மை வேறு. அங்கே, பல்வேறு இலட்சியங்கள், பேராசைகள், சூழ்நிலைகள் ஒன்று கூடின. அவர்களைப் பொறுத்த வரையில் அது விடுதலைப் போர்தான். ஆனால், இந்தியாவைப் பொறுத்த வரையில்...பெரும்பகுதி அமைதியாகவே இருந்தது. இப்பெரும் புரட்சியில் அதிகப் பங்கு பெற்றவர்கள் சிப்பாய்கள் தான். இதற்கு முன்பும், பல முறை தங்களுக்கு ஏற்பட்ட அநீதிகளின் காரணமாக அவர்கள் கலகங்களில் ஈடுபட்டவர்கள்தான். இப்பொழுதும், அவ்வநீதிகள் இருந்தன. அத்துடன் தங்கள் மதங்களுக்காகவும், அவர்கள் போராட வேண்டியது அவசியமாயிற்று. இந்திய நாட்டின் விடுதலைக்காக அவர்கள் போரிட்டார்கள்; என்று கூறவும் முடியாது. உலகாதாயங்களுக்காக அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்; என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. டெல்லியில் பொது மக்களிடங் கொள்ளை யடித்தனர். ஒரு முறை உரிய ஊதிய மின்றிப் போரிட மறுத்தனர். பல இடங்களில் கொள்ளை யடித்த பிறகு தங்கள் கிராமங்களுக்கு

நடையைக் கட்டினர். மேலும் பல இடங்களில் அச்சுறுத்தலுக்கும், சாதி விலக்கத்திற்கும் பயந்தே கிளர்ச்சியிலீடுபட்டிருந்திருக்கின்றனர். சிப்பாய் தலைவர்கள் சிலரிடையே இலட்சியநோக்கு இருந்திருப்பினும், பெரும்பாலான சிப்பாய்கள் அதைப் பெற்றிருந்ததாகக் கூறமுடியாது. தங்கள் குறைகளுக்காகத்தான், இதற்கு முன்பும் பலமுறை படையின் கட்டுப்பாட்டையும் மீறியிருக்கின்றனர். இப்பொழுது குறைகளுடன் மதமாற்றம் என்ற பயங்கர அநீதி முக்கிய காரணமாயிற்று. அவர்களுக்கு விடுதலை இலட்சியம் என்றும் இருந்ததில்லை என்பதை நிரூபிக்க R.C. மஜீம்தார் முந்தைய நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டி இருக்கிறார். இப்பெருங் கிளர்ச்சிக்கு 8 ஆண்டுகளுக்கு முன் (1849) சிலியன்வாலா போரில் ஆங்கிலேயரைக் கடுமையாக எதிர்த்துப் போரிட்டார்கள் சீக்கியர்கள். ஆங்கிலேயரின் சார்பில் சீக்கியருக்கு எதிராக அப்பொழுது போரிட்டவர்கள்தான் இந்த சிப்பாய்கள். விடுதலை தாகம் அவர்களுக்கு இருந்திருந்தால், அன்றே சீக்கியர்களுடன் இணைந்து அதைத் தணித்திருக்கலாம். இந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டவர்களில் இறுதியானவர்கள் சீக்கியர்களே. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இன்றைய புரட்சித் தலைவர்கள் எவரும் அன்னியனுக்கு எதிராக ஒரு விரலைக் கூட உயர்த்தவில்லை. இந்தச் சிப்பாய்களும் சீக்கியனைத் தன் சகோதரனாக எண்ணவில்லை. 8 ஆண்டுகளுக்கு முன் நிலைமை இப்படி இருக்க இன்று மட்டும் விடுதலை உணர்ச்சி எங்கிருந்து வந்தது? இந்த 8 ஆண்டு காலத்தில் தான், டல்ஹௌசி ஆட்சி புரிந்தார். இதே காலத்தில்தான், இன்றைய புரட்சித் தலைவர்கள் (பகதூர் ஷா. நானா சாஹேப் ஜான்ஸி ராணி ஆகியோர்) பாதிக்கப்பட்டனர், இதே காலத்தில்தான் மேற்கத்திய விஞ்ஞான புதுமைகளான இரயில், தந்தி போன்றவை இந்தியாவில் புகுத்தப்பட்டன. இதே காலத்தில்தான் முற்றுப் புள்ளியின்றி ஆங்கில ஆட்சியின் விரிவாக்கம் நடைபெறுகிறது என்பதை சுதேசி அரசுகள் உணரத் தொடங்கின. இந்த இடைவெளியில் பலரும் பல விதத்தில் பாதிக்கப்பட்டனர். எனவே, கிளர்ச்சியில் பங்கு பெற்றனர். சீக்கியர்களும், கூர்க்காக்களும் ஆங்கிலேயருக்குத் துணை நின்று சிப்பாய்களின் கலகத்தை அடக்கியதால், இவர்களை இந்திய தேசியத்தின் துரோகிகள் என்று அழைக்கிறார்கள், இவர்களை வெல்லுவதற்காக ஆங்கிலேயர்கள் பயன்படுத்தியது இந்திய சிப்பாய்களைத் தானே. தன்னை முறியடிக்க முன்வந்த அதே சிப்பாயின் கலகத்தை அடக்குவதற்கு இன்று சீக்கியனுங் கூர்க்காவும் முன் வந்தது தவறா? 'ஒரு

இந்தியனைக் கொண்டு, மற்றொரு இந்தியனை வென்ற ஆங்கிலேயன் ஒரு இந்தியப் பேரரசைப் பரிசாகப் பெற தகுதி பெற்றவன் தான்' என்கிறார் மஜூம்தார்.

ஆங்கிலேயரை வெளியேற்றுவதற்காகத் தலைவர்கள் பிரகடனங்கள் வெளியிட்டது விடுதலைப் போரின் தன்மையைக் குறிக்கிறது; என்றுஞ் சொல்லப்படுகிறது. ஆனால், இந்தப் பரங்கியின் வெறுப்பும் எதிர்ப்பும் புதிதான ஒன்றல்ல. பொருதார, சமய, சுயநலக் காரணங்களுக்காக இந்தியாவின் பல இடங்களில், பல்வேறு தருணங்களில், முந்தைய ஒரு நூற்றுண்டு காலமாகவே எதிர்ப்புகள் இருந்து வந்திருக்கின்றன. வாரணாசி மன்னன் சேய்த்சிங், பண்டேல் கண்டில் இலட்சுமண் தாவா, பாஞ்லாங் குறிச்சியில் கட்டபொம்மன், விஜயநகரத்தில் ராஜா விஜயராவ்ஜீ, கோட்டயத்தில் பிச்சே ராஜா, திருவிதாங்கூரில் வேலுத்தம்பி, ஹரியானாவில் ஜாத்கள், ராஜ்மாஹாலில் சந்தாலர்கள், வடமேற்கே வஹாபிகள், வங்காளத்தில் சன்யாசிகள் ஆகியோர் ஆங்கிலேயரை எதிர்த்திருக்கின்றனர். இது போலவே முகமதிய ஆட்சியையும் முற்காலத்தில் பலர் எதிர்த்திருக்கின்றனர். அது மட்டுமன்றி, சிப்பாய்களின் ஆதரவின்றியே, தன்னந் தனியாக ஆங்கிலேயரை எதிர்க்குந் துணிவை அவர்களெல்லாம் பெற்றிருந்தனர். அன்று அவர்களுக்கு உதவியளிக்க பிற மன்னர்களுஞ் சிப்பாய்களுஞ் செல்ல வில்லை. அன்றும் கிளர்ச்சியிலீடுபட்ட சிப்பாய்களுக்கும், தலைவர்களுக்கும் ஆதரவளிக்கப் பல மன்னர்களும், பல பிரிவினரும் முன்வரவில்லை. அத்தகைய தேசியத் தன்மையை, ஆங்கிலேயர் வந்தபொழுதோ! அல்லது இப்பெருங் கிளர்ச்சியின் போதோ! நாம் எதிர் பார்க்கத் தேவையில்லை. ஏனெனில்? இந்தியா இன்றும் ஒரு நாடாகத் தன்னைக் கருத வில்லை. அன்றைய சிறு எதிர்ப்புகளைப் போன்றேதான் இக் கிளர்ச்சியும்: அளவிலும், கடுமையிலுங் கூடுதலான ஒன்று என்பதைத் தவிர, வேறு சிறப்புத் தன்மைகள் எதையும் இது பெற்றிருக்க வில்லை.

1857 பெருங்கிளர்ச்சியில் நாம் காண்பது இதுதான். அங்கே பாதிக்கப்பட்ட சிப்பாய்கள் கிளர்ச்சியைத் தொடங்கினார்கள்! அங்கே பாதிக்கப்பட்டத் தலைவர்கள் வற்புறுத்தலில் தலைமை தாங்கினார்கள்! அங்கே பாதிக்கப்பட்ட குறுநிலத் தலைகள் மீண்டுந் தங்கள் நாட்டாண்மையை நிலைநாட்ட கிளர்ச்சியில் இறங்கினார்கள்! அங்கே பாதிக்கப்பட்ட ஒரு பகுதி, பொது மக்கள் ஆங்கிலச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப, ஆவணங்

களைக் கொளுத்தினார்கள்! அங்கே கொள்ளையடித்த சிப்பாய்கள் கிளர்ச்சியை மறந்து ஊருக்குச் சென்றார்கள்! அங்கே கிளர்ச்சி செய்த சிப்பாய்களை மக்கள் பிடித்துக் கொடுத்துப் பரிசும் பெற்றனர்! அங்கே கிளர்ச்சியை அடக்க இந்தியர்கள் பயன்படுத்தப்பட்டனர்! அங்கே இலட்சியத்திற்கு இடமில்லை. சுயநலங்கள் ஒன்று கூடின. அதற்கு நாம் இலட்சியப் போர்வையை போர்த்துகின்றோம். அது வடகிழக்கு இந்தியாவின் விடுதலைப் போராகத் தோன்றுகிறது. மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னே, தடி எடுத்தவனெல்லாந் தலைவன்; என்ற நிலைமை தான் நீடித்தது. ஆங்கில ஆட்சி, தன் கரங்களை நீட்டிய இடங்களிலெல்லாம், இத் தலைவர்களின் எதிர்ப்புகள் இருந்தன. முடிவில் ஆங்கில எல்லை விரிவாக்கமும், கலாச்சார வேரூன்றலும் அளவு கடந்ததால், பாதிக்கப்பட்ட அனைவருஞ் சிப்பாய் கிளர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டனர். அச் சுயநலமிகள் இதில் வெற்றி பெற்றிருந்தால், அது இந்தியாவின் சாபக் கேடாகி யிருக்கும். ஏனெனில்? கிளர்ச்சியில் பங்கு பெற்றவர்கள் தங்களின் பண்டைய நிலையைக் காப்பாற்றவே முனைந்தனர். சமுதாயத்தின் உயர் பிரிவினருக்குப் பழைய உரிமைகளையுந் தகுதியையும் பெற்றுத் தருகிறோம்; என்று தான் அத் தலைவர்கள் பிரகடனங்களை வெளியிட்டனர்! ஏற்றத் தாழ்வு நிலைப்பதற்கே அறை கூவல் விடுத்தனர்! சாதியைக் காப்பாற்ற, உயர் குடியைக் காப்பாற்ற, பழைய இந்தியாவைத் தூக்கி நிலை நிறுத்த எடுக்கப்பட்ட இறுதி முயற்சி தான், இப் புரட்சி! இம் முயற்சியில் அவர்கள் வெற்றி பெற்றிருந்தால், சாதிக்கட்டுகள் இறுகி யிருக்கும். உயர் குடியின் சலுகைகள் விரிந்திருக்கும். சட்டத்தின் முன் அனைவருஞ் சமம் என்ற ஆங்கில முற்போக்கு முயற்சி விரட்டப்பட்டிருக்கும். சிதையேறல் நீடிக்கப்பட்டிருக்கும். மேற்கத்திய கல்வி, மூளையிலேயே கிள்ளப்பட்டிருக்கும். விஞ்ஞான புதுமைகள் கழட்டி எறியப்பட்டிருக்கும். ஆனால், கிளர்ச்சிக்காரர்கள் தோற்றதால் மட்டும் சமுதாயப் பலன் கிட்டிவிட வில்லை.

ஒரு விதத்தில் இக்கிளர்ச்சித் தோன்றியதே நவீன இந்தியாவிற்கு முட்டுக் கட்டையாயிற்று. கிளர்ச்சியை அடக்கி விட்டாலும் இது தோன்றுவதற்கான காரணங்கள் என்ன என்று? ஆராய்ந்த ஆங்கிலேயர், அதிருப்தி அடைந்த பிரிவினர்களைத் தட்டிக் கொடுக்கத் தொடங்கினர். இதனால், சிற்றரசர்கள், நிலக்கிழார்கள், உயர் குடியினர், பழமை வாதிகள் அனைவருந் தோல்வியிலும் பலனடைந்தனர். இந்திய சமுதாயத்தைச் சீர்திருத்த முயன்று, தம் கடைக்காலே ஆட்டங் கண்டு விட்ட

தைக் கண்ட ஆங்கிலேயர் எச்சரிக்கையாயினர். புதுமைகளைப் புகுத்தி எதிர்ப்பை வளர்ப்பது ஏன்? இந்தியரின் சமுதாய நிலை எப்படி இருந்தால் என்ன? இந்தியாவில் பெற வேண்டியது தொழில், வாணிக இலாபந்தான்; என்று தங் கருத்தையும், முயற்சியையுந் திருப்பிக் கொண்டனர்.

இது 'இந்தியாவின் முதல் விடுதலைப் போர்' என்பது உண்மையானால், இதைத் தொடர்ந்து உடனடியாக தேசியத் தலைவர்களோ, விடுதலை இயக்கமோ ஏன் உருவாக வில்லை? என்பது புதிராகவே இருக்கிறது. எல்லாப் பிரிவினரையும் ஓரளவு ஒன்றிணைத்து விடுதலை பெற வேண்டும்; என்ற அரசியல் இலட்சியத்துடன் இந்தியா ஈடுபட்டது, பெருங் கிளர்ச்சிக்கு அரை நூற்றாண்டுக்குப் பின்பு தான். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய மேற்கத்திய கல்வி பெற்ற தலைவர்கள் தான், மேற்கத்திய விடுதலை இயக்கங்களின் மூலம் உணர்ச்சி பெற்றனர். உண்மையான விடுதலைப் போரின் தன்மைகளை, இதற்குப் பின்புதான் நாம் காண்கிறோம். இச் சமயத்தில் தான், இந்திய விடுதலை உணர்ச்சி இலட்சியமாக உரு வெடுத்திருக்கிறது. இத்தாலியில் மாஜினியும், ஹங்கேரியில் கோசத்தும் நம் விடுதலைத் தலைவர்களுக்கு முன்னோடிகளாகி இருந்திருக்கின்றனர். அயர்லாந்து மாதிரியில் மறியல்கள் நடந்திருக்கின்றன. ருசிய மாதிரியில் இரகசிய சங்கங்களுந் தோன்றி யிருந்திருக்கின்றன. வெடி குண்டும் கைத் துப்பாக்கியும் ஏந்தி இரஞ்சித் சிங்கும், வாஞ்சிநாதனும் வெள்ளை யதிகாரிகளை வேட்டையாடி இருந்திருக்கின்றனர். இத்தனை சிறப்புத் தன்மைகள் இருந்தும் விடுதலைப் போரில் பெருமளவில் மக்கள் ஈடுபட்டது, காந்தியின் வருகைக்குப் பின்னரேயாம். மேலும் இக் கட்டத்தில் தான், அரசியல் விடுதலை என்ற இலட்சியத்தோடு, சமுதாயப் புரட்சியும் இணைந்து நின்றது. ஆனால், 1857 பெரும் புரட்சியின் நிலைமை வேறு. அப்போது இந்தியர்கள் வெற்றி பெற்றிருந்தால், அது அரசியல் விடுதலையைத் தந்திருக்கலாம். ஆனால், ஏற்றத் தாழ்வில்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்க மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டிருக்கும், அக் காலச் சூழ்நிலைக் கேற்ப முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள் பெருகி யிருக்கும். ஏனெனில்? 1857 பெரும் புரட்சிப் பழமையையும், ஏற்றத் தாழ்வையும் நிலைநாட்ட விடுக்கப் பட்ட அழைப்பே யாகும்.

———

## காலத் தொகுப்பு

### 1857

| | | |
|---|---|---|
| ஜனவரி | — | டம்டம் தொழிற்சாலையிலிருந்து கொழுப்புக் குண்டு வதந்தி பரவுகிறது. |
| பிப்ரவரி | — | பர்ஹாம்பூர் சுதேசி அணியின் எதிர்ப்பு. |
| மார்ச் | — | பர்ஹாம்பூர் அணி கலைக்கப்படல், பரக்பூரில் மங்கள் பாண்டேயின் கலகம். |
| ஏப்ரல் | — | அம்பாலாவில் அமைதி யின்மை. |
| மே | — | இலக்னோவில் ஹென்றி லாரன்ஸ் குதிரைப் படையைக் கலைத்தல் (3), பரக்பூர் அணி கலைக்கப்படல் (6), 85 மீரத் சிப்பாய்களுக்குக் கடுங்காவல் தண்டனை (9). |
| 10 | — | மீரத்தில் கிளர்ச்சி. |
| 11 | — | டெல்லி வீழ்ச்சி, பகதூர் ஷா பேரரசராதல். |
| 13 - 31 | — | கிளர்ச்சிகள் :— பெரோஸ்பூர், அலிகார், மெய்ன்புரி, எட்டாவா, ரூர்க்கி, நசிராபாத், பெரெய்லி, ஷாஜஹான்பூர். படைக் கலைப்பு :— இலாகூர், பெஷாவர், மார்தான், ஆக்ரா, இலக்னோ. |
| ஜூன் | — | கிளர்ச்சிகள் :— சீதாப்பூர், ஆசாம்கர், ஜான்சி, நீமக், குவாலியர், கோரக்பூர், பதேகர், பதேபூர். |
| 5 | — | கான்பூரில் நானா சாஹேப் காப்பிடத்தை முற்றுகையிடல், ஜான்சி கிளர்ச்சி, இலட்சுமி இராணியாதல், பட்லி - கி - செராய் போர், டெல்லி முற்றுகை. |
| 25 | — | சார்செளரா படுகொலைகள் - கான்பூர். |

ஜூலை — கிளர்ச்சிகள் :— இந்தூர், சாகர், தானுப் பூர், ஆக்ரா, இலக்னேவில் நிலையரக முற்றுகை ஆரம்பம், ஹெவ்லாக்கின் கான்பூர் படை எடுப்பு, பீபிகர் படுகொலைகள், கான்பூரில் குன்வர் சிங்கின் அரா முற்றுகை.

ஆகஸ்ட் — கிளர்ச்சிகள் :— சாகர், நர்மதாப் பகுதிகள், ஜெகதீஷ்பூரில் குன்வர் சிங்கின் தோல்வி, தாத்யா பிதூரில் தோல்வியடைதல்.

செப்டம்பர் — கேம்பல் தலைமைத் தளபதி யாதல், டெல்லி முற்றுகையும் மீட்சியும், உட்ராம் நிலையரகத்துள் நுழைதல்.

அக்டோபர் — பீஹார் அமைதி யின்மை, கோட்டாக் கிளர்ச்சி.

நவம்பர் — கேம்பல் நிலையரகத்தை விடுவித்தல், தாத்யா விந்தாமைத் தோற்கடித்தல் - கான்பூரில்.

டிசம்பர் — தாத்யா, ராவ் சாஹேப் கான்பூரில் கேம்பலால் தோற்கடிக்கப்படல், கேம்பல் பதேகரை விடு வித்தல்.

## 1858

ஜனவரி — ஹியு ரோஸின் மத்திய இந்தியப் படை எடுப்பு, இலக்னேவைப் பிடிக்க, கேம்பல் முயற்சி; கூர்க்காப் படைகளின் உதவி.

பிப்ரவரி — சாகர் விடுவிக்கப் படல்.

மார்ச் — இலக்னே மீட்சி, அயோத்தியில் குன்வர் சிங்.

ஏப்ரல் — ஹியு ரோஸ் தாத்யாவைத் தோற்கடித்தல்-பெட்வா.

3 ஜான்சி தாக்குதல்,

| | | |
|---|---|---|
| 6 | | ஜான்சி மீட்சி-இராணி தப்பித்தல், ஹியு ரோஸ் கால்பியை அடைதல், குன்வர் சிங் மரணம். |
| மே | — | பெரெய்லி மீட்சி, ஜெகதிஷ்பூர் மீட்சி, மொகமதியப் போர்—ரோகில் கண்டில் இறுதி எதிர்ப்பு, தாத்யா, இலட்சுமி குவாலியருக்குச் செல்லல். |
| ஜூன் | — | குவாலியர் புரட்சித் தலைவர்களுக்குப் பணிதல், ஹியுரோஸ் குவாலியருக்கு வருதல், கோட்டா-கி-சாரய் போர்—ஜான்சி இராணி மரணம், குவாலியர் மீட்சி. |
| ஆகஸ்ட் | — | கிழக்கிந்திய வணிக நிறுவனம் முடிவு பெறுகிறது, விக்டோரியா அரசியின் பிரகடனம். |
| அக்டோபர் | — | அமர்சிங் ஜெகதீஷ்பூரில் தோல்வி, மத்திய இந்தியாவில் தாத்யாவை விரட்டுதல். |

## 1859

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | — | மான்சிங் தாத்யாவைக் காட்டிக் கொடுத்தல். |
| 18 | | தாத்யா தூக்கிலிடப்படல். |

# மேற்கோள் நூல்கள்

## (REFERENCE BOOKS)


1. J. W Kaye and G. B. Malleson — History of the Indian Mutiny, 6 vols.
2. T. R. E. Holmes — A History of the Indian Mutiny
3. Charles Ball — The History of the Indian Mutiny—2 vols.
4. G. W. Forrest — A History of the Indian Mutiny—3 vols.
5. W. H. Fitchelt — The Tale of the Great Mutiny
6. Surendra Nath Sen — Eighteen Fifty Seven
7. R. C. Majumdar — The Sepoy Mutiny and Revolt of 1857
8. V. D. Savarkar — The Indian War of Independence 1857
9. Ashoka Mehto — 1857, The Great Rebellion
10. Srivastava — The Revolt of 1857 in Central India-Malwa
11. Ed. by P. C. Joshi — Rebellion 1857, A Symposium
12. Bharatheya Vidhya Bhavan — British Paramountacy and Indian Rennaissance
13. Pereival Spear — The Oxford History of Modern India
14. P. E. Roberts — History of British India
15. Thompson and Garret — Rise and Fulfilment of British Rule in India

# கலைச்சொற்கள்

## பொது

| | | |
|---|---|---|
| நிறுவன அரசு | — | (East India) Company's government |
| சிப்பாய் | — | Indian Soldier |
| பரங்கி | — | European (Feringhi-Frank French) |
| 'தீன் தீன்' | — | Muslim war cry |
| கொழுப்புக் குண்டு | — | Greased catridge |
| படை கலைப்பு | — | Disbandment of the Regiment |
| ஆயுதப் பறிமுதல் | — | Disarning of the soldiers |
| முற்றுகைத் தொடர் | — | Siege-Train |

## பதவி

| | | |
|---|---|---|
| தலைமை-ஆளுநர் | — | Governor-General |
| துணை-ஆளுநர் | — | Lt. Governor |
| முதல் ஆணையர் | — | Chief Commissioner |
| நிலையர் | — | Resident |
| தலைமைத் தளபதி | — | Commander in-chief |
| அரசியல், நிறுவனப் பிரதிநிதி | — | Political Agent |
| ரிசால்தார் | — | (Indian) Caralry officer |
| சுபேதார் | — | (Indian) Infantry officer |

## இடம்

| | | |
|---|---|---|
| படை தளம் | — | Contnment |
| ஆயுத, வெடி மருந்து கிடங்கு | — | Magazine |
| நீள்வரை மேடு | — | The Ridge (near Delhi) |
| காப்பிடம் | — | Entrenchment (at Kanpur) |
| நிலையரகம் | — | Resideney |
| படகு பாலம் | — | Bridge of Boats |
| சிப்பாய்க் குடியிருப்பு வரிசை | — | Sepoy Lines |

# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

★

பின்வரும் பொருள்களில்

பட்டப்படிப்பிற்குரிய நூல்கள்

விரைவில் வெளிவரும்

---

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | — | 41 | நூல்கள் |
| இயற்பியல் | — | 28 | ,, |
| வேதியியல் | — | 39 | ,, |
| தாவரவியல் | — | 30 | ,, |
| விலங்கியல் | — | 40 | ,, |
| பொறியியல் | — | 50 | ,, |
| வரலாறு | — | 45 | ,, |
| அரசியல் | — | 34 | ,, |
| பொருளாதாரம் | — | 83 | ,, |
| வணிகவியல் | — | 36 | ,, |
| புள்ளியியல் | — | 16 | ,, |
| உளவியல் | — | 8 | ,, |
| புவியியல் | — | 18 | ,, |